காவேரி மகளிர் கல்லூரி ( தன்னாட்சி )

மற்றும்

புனித சிலுவை கல்லூரி ( தன்னாட்சி )

திருச்சிராப்பள்ளி



# தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள்

தமிழ்ப்பதிப்பகம்

பதிப்பாசிரியர்
பேரா.முனைவர் ச.இராமலட்சுமி

தொகுப்பாசிரியர்கள்
முனைவர் ப.சசிரேகா
முனைவர் அ.யசோதா
முனைவர் அ.ஜெஸிந்தாராணி
முனைவர் ம.பிரேமா
முனைவர் ஞா.எலிசபத்ராணி

# தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள்

**பதிப்பாசிரியர்**

பேரா. முனைவர் ச. இராமலட்சுமி

**தொகுப்பாசிரியர்கள்**

முனைவர் ப. சசிரேகா
முனைவர் அ. யசோதா
முனைவர் அ. ஜெஸிந்தாராணி
முனைவர் ம. பிரேமா
முனைவர் ஞா. எலிசபத்ராணி

**பதிப்பாசிரியர்**

**பேரா. முனைவர் ச. இராமலட்சுமி**
துணைமுதல்வர் & தலைவர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி

**தொகுப்பாசிரியர்கள்**

**முனைவர் ப. சசிரேகா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

**முனைவர் அ. யசோதா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

**முனைவர் அ. ஜெஸிந்தாராணி**
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

**முனைவர் ம. பிரேமா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

**முனைவர் ஞா. எலிசபத்ராணி**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி

**தலைப்பு**: **தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள்**

முதற்பதிப்பு: செப்டம்பர் 2021

9 789390 853526

ISBN NO.: 978-93-90853-52-6 (eBook)

**காப்புரிமை: பதிப்பாசிரியர், ஆசிரியர்கள்**

**நூல் பார்வைக்கு:** http://cauverycollege.ac.in/Admin/FileFolder/DeptPDF/1115.pdf

தமிழ்ப்பதிப்பகம்,
தமிழாய்வுத்துறை, காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 620018

Licence No: https://creativecommons.org/licenses/by-nc/4.0/

**Cite this book:** S. Ramalakshmi. (2021) Tamil Identities in Tamil Literature. Edited by Sasireha P, Yasodha A, Jesintharani A, and Prema P., Elizabethrani G., Vol. 1. Cauvery College For Women, Trichy.

# அணிந்துரை

**‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’**

ஆதியில் பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் மக்களிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கென உருவானது மொழி. மக்களின் எண்ணம், சிந்தனை, செயல்பாடுகள் மாற மாற மொழியும் வளம் பெற்றது. மக்களின் மனவளத்திற்கேற்ப வளர்ச்சி பெற்ற மொழி, அவர்களின் அனுபவங்களை, எண்ணங்களை, உணர்வுகளைப் பதிவு செய்து வைக்கும் கருவியாகவும் மாறியது. அம்மாற்றத்தின் காரணமாக அனுபவப் பெட்டகங்கள் இலக்கியங்களாக உருப்பெற்றன. அந்த இலக்கியங்கள் காலப்போக்கில் மக்களின் வாழ்வையும் வரலாற்றையும் பிற்காலத்தவர்களுக்கு எடுத்துரைக்கும் கருவூலங்களாக விளங்கின.

குறிப்பாக தமிழ் இனத்தின் பதிவு தமிழ் மொழியில் மிகப் பழமையான இலக்கியங்களாக விளங்குகின்றன. தமிழினம் வாழ்வுக்கே இலக்கணம் வகுத்த இனம். அதனால் தான் தமிழ் இலக்கியத்திலும் ‘பொருள் இலக்கணம்’ வழிகாட்டியாகத் திகழ்கிறது. உலகில் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த ஒரே இனம் தமிழ் இனம். காலப்போக்கில் அந்த இனம் பேசிய மொழியில் தோன்றி வளர்ந்த இலக்கியங்கள் காலம் கடந்தும் நிலைத்திற்கும் கருவூலங்கள் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற சாதிமதமற்ற பண்பாட்டு விழுமியங்கள் தன்னகத்தே கொண்டது. உலகிற்கு உதாரணமாக விளங்கும் தமிழ் இனம் வீரம், கொடை, விருந்தோம்பல், கலை, விளையாட்டு, பண்பாடு, நடை, உடை, உணவு, நட்பு, நாகரிகம், குடும்ப அமைப்பு என்று அதன் பெருமையைப் பறைசாற்றும் அடையாளங்கள் பல உள்ளன.

ஒரு மொழியின் அடையாளம் இலக்கியம், இலக்கியத்தின் அடையாளம் மக்கள், மக்களின் அடையாளம் அவர் மொழி சார்ந்த இலக்கியம். எனவே மக்கள் வேறு; இலக்கியம் வேறு என்று பிரிக்க இயலாது. தமிழ் இலக்கியங்கள் கடலென விரிந்து, கருத்துப்பெட்டகமாக காலம் உள்ளவரை நிலைத்திருக்கும் கற்பக விருட்சமாகும். (அறிவு) தேடியது கிடைக்கவும், தெளிவடையவும், ஐயங்களை அகற்றி கொள்ளவும், வாழும் வழிமுறையை அறியவும் பலரும் நாடி வரும் இடம் நம் தமிழ் இலக்கியங்களே.

அத்தகைய இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு **‘தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள்’** என்ற பொருண்மையில் காவேரி மகளிர் கல்லூரி தமிழாய்வுத்துறையும், புனித சிலுவை கல்லூரி தமிழாய்வுத்துறையும் இணைந்து ‘இணைய வழியில்’ பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்த திட்டமிடப்பட்டு. அக்கருத்தரங்கில் பல்வேறு துறைகளைச் சார்ந்த

பேராசிரியர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், ஆய்வு மாணவர்கள் என பலரும் கட்டுரை வழங்கியுள்ளனர். கட்டுரைகள் அனைத்தும் மிகவும் பாராட்டத்தக்க வகையிலும், பொருளாழத்துடனும் அமைந்துள்ளது. இக்கட்டுரைகளை 'மின்நூலாக' காவேரி மகளிர் கல்லூரி இணையதளத்தில் வெளியிடய உள்ளோம். முயற்சிக்கு துணைநின்ற, காவேரி மகளிர் கல்லூரியின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும், முதல்வர் முனைவர் வெ.சுஜாதா அவர்களுக்கும், புனித சிலுவை கல்லூரியின் முதல்வர் முனைவர் அருட்சகோதரி கிறிஸ்டினா பிரிஜிட் அவர்களுக்கும், ஆசிரியர் பெருமக்களுக்கும், அனைத்து நிலைப் பணியாளர்களுக்கும் எமது நன்றி கலந்த நல்லுணர்வைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆன்றோர் உலகு இம்மின்நூலினை வரவேற்று மகிழ வேண்டுகிறேன்.

இவண்

**பேரா. முனைவர் ச. இராமலட்சுமி**
**துணை முதல்வர் & தலைவர்**
**தமிழாய்வுத்துறை**
**காவேரி மகளிர் கல்லூரி**
**(தன்னாட்சி)**
**திருச்சிராப்பள்ளி**

# பொருளடக்கம்


1. தொல்காப்பியப் புறத்திணையியலில் தொல்தமிழரின் பண்பாட்டு அடையாளங்கள் 1
- முனைவர் மு.சங்கர்
2. தேவநேயப் பாவாணரின் சமுதாய பண்பாட்டு ஆய்வுகள் 10
- ப.ரதிதேவி
3. தொல்காப்பியத்தின் மேம்பட்ட தர நிறுவல் 15
- முனைவர் மா.ஆசியாதாரா
4. பொருள் மொழிக் காஞ்சித்துறைப் பாடல்களில்; தமிழர்களின் வீர அடையாளங்கள் 19
- முனைவர் து.நீலாதேவி
5. முல்லைக்கலி காட்டும் தமிழ்ப்பண்பாட்டு அடையாளம் –ஏறுதழுவல் 25
- முனைவர் எம் எஸ் ஸ்ரீ லக்ஷ்மி
6. பெண்தெய்வ வழிபாடு: தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக்கொண்ட ஓர் ஆய்வு 32
- பகீரதி மோசேஸ்
7. இலக்கியங்கள் காட்டும் திருமண வாழ்க்கை 39
- சைவப்புலவர் பால. இந்திரக்குருக்கள்
8. சங்க இலக்கியங்களில் பெண் புலவர்கள்: ஓர் ஆய்வு 46
- முனைவர் எஸ். மோசேஸ்
9. சங்க கால தமிழர் உணவுப் பண்பாடு 52
- முனைவர் .பூ.சு.கணேஷ்மூர்த்தி
10. மலைபடுகடாம் காட்டும் தமிழர் வாழ்வியல் அடையாளங்கள் 56
- வின்சென்ட் பிரபு. அ
11. முல்லைப்பாட்டில் தமிழர் அடையாளங்கள் 68
- ரா.கார்த்திக்
12. பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள் 74
- ம.ராஜா
13. மருதநில மக்களின் வாழ்வியல் விழுமியங்களில் பண்பாட்டு அடையாளங்கள் 83
- முனைவர் ரெ. நல்லமுத்து
14. புறநானூற்றில் தமிழரின் அடையாளங்கள் 88
- முனைவர் சு.சத்தியா
15. சங்க இலக்கியத்தில் போர் மரபுகள் 93
- முனைவர் தே. அனித்தா மேரி
16. சங்கப் புறப் பாடல்கள் சுட்டும் வீர மகளிர் 97
- சி.பானுமதி
17. விருந்தோம்பலும் தமிழரும் 100
- மு.முத்துலெட்சுமி
18. சங்க இலக்கியத்தில் நடுகல் வழிபாடு 104
- முனைவர் தா.லதா
19. மதுரைக்காஞ்சியில் தமிழர் அடையாளங்கள் 109
- முனைவர் அ. அருள் சகாய அனிட்டா
20. புறநானூற்றில் புகழ் 116
- முனைவர் அ. அனுடயானா

21. பத்துப்பாட்டுப் பகரும் தமிழர் அடையாளங்கள் 122
- முனைவர் மா. சங்கீதா
22. ஆற்றுப்படை இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள் 128
- முனைவர் சு. சீனிவாசன்
23. இலக்கியங்களில் ஏறுதழுவுதல் 136
- முனைவர் வெ.பிரேமலதா
24. நற்றிணையில் பெண்கள் விளையாட்டுகள் 143
- முனைவர் ஆ.தேவதா
25. தமிழ் இலக்கியங்களில் தெய்வ வழிபாடு 149
- முனைவர் கு. டாலி ஆரோக்கிய மேரி
26. ஔவையார் பாடல்களில் பண்பாட்டுச்சிந்தனைகள் 153
- முனைவர் பா.இமாகுலேட்
27. ஏறு தழுவுதல் - அன்றும் இன்றும் 158
- முனைவர் வி.கவிதா
28. மறம் போற்றும் மானுடம் 162
- முனைவர் மு.அனு
29. குறுந்தொகையில் மன்னராட்சி 169
- முனைவர் க.ராதிகா
30. புறநானூற்றில் பண்பாட்டு அடையாளங்கள் 173
- முனைவர் க. அகல்யா
31. சங்க இலக்கியத்தில் வழிபாட்டு முறைகள் 178
- திருமதி. பொ. அபிராமி
32. தமிழர் கலைகளே தமிழரின் அடையாளங்கள் 183
- முனைவர் வ.ஹரிஹரன்
33. நற்றிணையில் சங்க காலப் போர்க் கருவிகள் 187
- முனைவர் இரா. வனிதா
34. சங்க கால மகளிர் விளையாட்டுகள் 192
- முனைவர் ச.கௌசல்யா
35. புறநானூற்றில் ஆடைகள் 200
- முனைவர் பா.கவிதா
36. புறநானூற்றில் புழங்கு பொருட்கள் 208
- முனைவர் தெ.அகிலா
37. தமிழ் இலக்கியங்களில் தமிழர்அடையாளங்கள் - கைவினைப்பொருள்கள் 214
- முனைவர் க.சுஜாதா
38. அகநானூற்றில் இசையும் இசைக்கருவிகளும் 220
- முனைவர் ம. அரும்பு
39. சங்க இலக்கியங்களில் தமிழர் அடையாளம் – உறவுகள் 226
- முனைவர் ஆ.ஷர்மி
40. அகப்பொருள் கூறும் வாழ்வியல் 234
- முனைவர் க. ஆனந்தி
41. குறுந்தொகையில் இயற்கை 238
- முனைவர் தி. மணிமொழி
42. அக இலக்கிய மரபுகளும் நாட்டுப்புற காதல் பாடல்களும் 247
- முனைவர் இரா. பபித்ரா
43. புற இலக்கியங்களில் ஆளுமை அடையாளங்கள் 252
- முனைவர் ஜெ. ஜெயபிரியா

44. சங்க இலக்கியங்களில் பழக்கவழக்கங்கள் 256
- க. கௌரி
45. இலக்கியங்கள் காட்டும் பழந்தமிழர் உணவியல் அடையாளங்கள் பற்றிய அறிவியல் விமர்சனங்கள் 261
- பேரா. ந. செல்லம்
46. ஊழ்வினைக் குறித்துத் திருவள்ளுவரின் சிந்தனைகள் ஒரு பார்வை 269
- முனைவர் கார்த்திகேஸ் பொன்னையா
47. ஆசாரக் கோவை விளம்பும் தமிழர் வாழ்வியல் 274
- முனைவர் துறைமுத்து சுப்ரமண்யம்
48. திருக்குறள் உணர்த்தும் இல்லறப் பண்பாடு 287
- ச.அம்பிகா
49. பாவேந்தரின் குடும்ப விளக்கில் தமிழரின் அடையாளங்கள் 292
- கு. திலகவதி
50. பழமொழி நானூறு தடத்தில் வேளாண் அறிவியல் சிந்தனைகள் 298
– முனைவர் ம.மணிமேகலை, முனைவர் செ.இராதிகா
51. நாலடியார் காட்டும் தமிழர் அடையாளங்கள் 304
- வை. வனிதா
52. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தமிழர் அடையாளங்கள் 308
- முனைவர் செ.நான்சி
53. திருக்குறளில் வாழ்வியல் அறங்கள் 313
- ப.ஆனந்தி
54. இனியவை நாற்பது உணர்த்தும் வாழ்வியல் அறங்கள் 320
- திருமதி க.வெண்ணிலா
55. நாலடியாரில் உணவு 325
- முனைவர் சு.மகேஸ்வரி
56. ஆற்றுப்படை நூல்களின் கட்டமைப்பும் பாடுபொருளும் 331
- முனைவர் வி.சத்யவதி
57. திருக்குறளில் மருத்துவம் 339
- முனைவர். மே.க. வசந்தி
58. பொருட்பாலில் திருவள்ளுவரின் பன்முகத்தன்மை 344
- குறள். கோ.பங்கயம்
59. தலைக் காப்பியம் காட்டும் தமிழர் தடங்கள் 350
- முனைவர் பெ. வைரமூர்த்தி
60. இஸ்லாமிய இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள் 354
- முனைவர் மீ.தௌலத் பேகம்
61. சிலப்பதிகாரத்தில் தமிழர்களின் அடையாளங்கள் 362
- முனைவர் த.அமுதஜோதி
62. திருக்குறளில் தமிழர் அடையாளங்கள் 366
- முனைவர்.ஆ.இரா.பாரதராஜா
63. கம்பராமாயணம் புலப்படுத்தும் போர் நெறிகள் 374
- முனைவர்.கோ.விஜயலெட்சுமி
64. நம்மாழ்வார் பாசுரங்களில் தமிழ்ச்சொல்லும் பொருளும் 380
– முனைவர் வ.கோபாலகிருஷ்ணன்
65. பெரியபுராணத்தில் தமிழர் அடையாளங்கள் 388
- முனைவர் சு.அனுலெட்சுமி
66. பெண்ணடியார்களின் பக்தியுணர்வு 393
- முனைவர் மு.ஜெயலெட்சுமி

67. சிவவாக்கியர் பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள் 400
- திருமதி செ.புனிதா

68. சித்தர்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் 405
- முனைவர் இர.கீர்த்தனா

69. காப்பியங்களில் கடிதம் 411
- முனைவர் இரா.குணசேகரன்

70. கம்பராமாயணத்தில் தசரதனின் ஆட்சிக்கோட்பாடு 415
- முனைவர் அ. மலர்விழி

71. ‘கிறிஸ்து மொழிக் குறள்’ கூறும் மானுட அடையாளங்கள் 419
- முனைவர் ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்

72. ஆண்டாளின் பக்தி நெறி 425
- முனைவர்.அ. இரா.கோமதி

73. தமிழர்களின் அடையாளம் காட்டும் திருமந்திரம் 431
- முனைவர் கு. புஷ்பாவதி

74. தமிழன் மறந்த வளரி 437
- முனைவர். க. கரும்பாயி

75. பக்தி இலக்கியங்களில் பண்பாட்டு அடையாளங்கள் 441
- முனைவர் ம. மணிமேகலை

76. வலங்கை மாலையில் காணலாகும் இடம்பெயர்தலும், சமகால இடப்பெயர்வும் 445
- முனைவர். சி. ஜஸ்டின் செல்வராஜ்

77. முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் பழமொழிகளின் ஆளுமை 453
- முனைவர் ச.புனிதா

78. பாரம்பரியம் போற்றும் பாட்டி வைத்தியம் 464
- ச.சந்திரா மேரி

79. நாட்டுப்புற இலக்கியம் காட்டும் தமிழர் அடையாளங்கள் 470
- Mrs. Rajane Uthayasegaran

80. புகலிட நாடுகளில் ஈழத்து தமிழர்களின் அடையாளங்கள் 473
- தமிழ் மணி புலவர் முனைவர் நிர்மலா சிவராசசிங்கம்

81. தமிழிலக்கியத்தில் முல்லைத்திணை பொருளாதார வாழ்வில் பாலின வேறுபாடு: சு.தமிழ்ச்செல்வியின் ‘கீதாரி’ நாவலை முன்வைத்து 477
- வே. சிவக்குமார்

82. மலேசியத் தமிழர்களின் வாழ்வியல் சிறுகதைகளின் ஊடாக.... 482
- ஐ.ஜான்சிராணி

83. ஈழத்தமிழர்களின் துயர வாழ்வை புலப்படுத்தும் வ.ஐ.ச.ஜெயபாலனின் ஈழத்து மன்னும் எங்கள் முகங்களும் 489
- சு.செல்வகுமாரன்

84. தாலாட்டுப் பாடல்களும் தாய்மை உணர்வும் 497
- முனைவர் ப.விக்னேஸ்வரி

85. குடும்ப விளக்கு காட்டும் மனையறம் 501
- முனைவர் ந . சுபா

86. ஆபிரகாம் பண்டிதரின் ஆதித் தமிழிசை ஆய்வு மீட்டெடுப்புகள் 505
- முதுமுனைவர் மு.ஐயப்பன்

87. தமிழ் இலக்கியங்களில் சிறுகதையின் மொழி ஆளுமைப் பண்புகள் 515
- மா. மணி, முனைவர் திருமதி. பரமேஸ்வரி

**முனைவர் மு.சங்கர்,**
உதவிப்பேராசிரியர்,
தமிழியல் துறை,
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி),
சிவகாசி - 626130.

# தொல்காப்பியப் புறத்திணையியலில் தொல்தமிழரின் பண்பாட்டு அடையாளங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழரின் பண்பாட்டு அடையாளமாகக் கருதப்படும் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இது எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று அதிகாரங்களைக் கொண்டு, தொல்காப்பியரால் இயற்றப்பட்டது. இதில் எழுத்தும் சொல்லும் மொழியின் அமைப்பையும் பொருள் தமிழரின் வாழ்வியல் ஒழுக்கங்களையும் கவிதை புனையும் நெறிகளையும் பேசுகின்றது. தொல்காப்பியப் பொருளதிகாரம் 9 இயல்களைக் கொண்டது. இதில் இரண்டாவது இயலாக அமைவது புறத்திணையியல். இது பண்டைத் தமிழரின் போரியல் வாழ்க்கையைப் பறைசாற்றும் பெட்டமாகத் திகழ்கின்றது. அவ்வியலில் காணலாகும் தொல்தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை இனங்காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**<u>திறவுச்சொற்கள்:</u>** தொல்காப்பியம், புறத்திணையியல், பண்பாட்டு அடையாளங்கள்.

**தோற்றுவாய்**

பழந்தமிழர் பண்பாட்டை அகம், புறம் என்றவாறு பகுத்துப் புறத்தார்க்குச் சொல்ல இயலாதவற்றை அகம் என்றும் புறத்தார்க்குச் சொல்லக் கூடியதாக உள்ள வீரம், கொடை, புகழ் உள்ளிட்டவற்றைப் புறம் என்றும் அழைத்தனர். இவற்றை நன்கு அறிய தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் துணைநிற்கின்றன. தொல்காப்பியரின் புறத்திணையியல் பண்டைய காலப் போர் முறைகளையும் அதனால் உண்டான புகழையும் கொடையையும் கூறுகின்றது. தொல்காப்பியர் புறத்திணையியலை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், காஞ்சி என்று ஏழு திணைகளாகப் பகுக்கின்றார். இத்திணைகள் ஏழும் தொல்தமிழரின் பண்பாட்டை அறிய உதவும் வகையில் தொல்காப்பியரால் படைத்தளிக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரை, தொல்தமிழரின் பண்பாட்டு அடையாளங்கள் தொல்காப்பியப் புறத்திணையியலில் எங்ஙனம் பதிவாகியுள்ளன? எனும் சிக்கலை மையமாகக் கொண்டும் பழந்தமிழர் அகப்பண்பாட்டையும் புறப்பண்பாட்டையும் மிகுதியும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டும் இவ்வாய்வு நிகழ்த்தப்படுகின்றது.

**முன்னாய்வுகள்**

தொல்காப்பியப் புறத்திணையியல் பற்றிய ஆய்வுகளுள் புலவர் குழந்தையின் தொல்காப்பியர் காலத் தமிழர், கா.சுப்பிரமணியத்தின் சங்க காலச் சமுதாயம், க.கைலாசபதியின் தமிழ் வீரநிலைக் கவிதை, கதிர். மகாதேவனின் ஒப்பியல் நோக்கில் சங்க காலம், கி.பாண்டுரங்கனின் பண்டைத் தமிழரின் போரியல் வாழ்க்கையும் தற்காலப் போர் நடவடிக்கையும், கு.வெ.பாலசுப்பிரமணியனின் சங்க இலக்கியத்தில் புறப்பொருள், ராஜ் கௌதமனின் ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும் உள்ளிட்ட ஆய்வுகள் இவண் சுட்டிக்காட்டத்தக்கவை.

**அகம் - புறம் ஒற்றுமை**

தொல்காப்பியர் புறத்திணையியலை அகத்திணையியலுக்குப் புறனாகக் கருதுகின்றார் என்பதை,

> **புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது**
>
> **அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே**
>
> **(தொல்.பொருள்.58),**
>
> **அகத்திணை மருங்கி னரிற்ப வுணர்ந்தோர்**
>
> **புறத்திணை யிலக்கணந் திறப்படக் கிளப்பின்**
>
> **(தொல்.பொருள்.59)**

என்ற நூற்பாக்கள் வழி அறியலாம். இவற்றிலிருந்து அகத்திணைக்கு உரியனவெல்லாம் புறத்திணைக்கும் பொருந்தும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**புறத்திணையியலும் போரியலும்**

தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள புறத்திணை ஒழுகலாறு என்பது பெரும்பாலும் போரியல் வாழ்க்கையாகவே அமைந்துள்ளது. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய ஐந்து புறத்திணைகளும் பழந்தமிழரின் போர் அடிப்படையிலான வாழ்க்கை நெறிகளைக் கூறுவனவாக அமைந்துள்ளன. தொல்காப்பியரின் புறத்திணையியலைப் போரியல் நூலாகவே கருதலாம். புறத்திணையியலில் கூறப்படும் திணைகளும் துறைகளும் அக்காலப் போர் வகைகள் பற்றியும் ஒவ்வொரு வகைப் போரிலும் அமைந்த பல்வேறு படிநிலைகளையும் (துறைகள்) விளக்குவனவாக உள்ளன. வெட்சி, கரந்தைத் துறைகள் காலாட் படையின் சிறு பிரிவுகளிடையே நடைபெறும் போர்களைப் பற்றிய விளக்கமாக அமைந்துள்ளன. வஞ்சி என்பது நாற்படைகளும் பங்கேற்கும் பெரும் போர்களைப் பற்றிய விளக்கமாக உள்ளது. உழிஞை என்பது மதிலை வளைத்துக் கைப்பற்றும் போர் விளக்கமாக உள்ளது. தும்பை என்பது முழு வலிமையையும் புலப்படுத்திய நாற்படைகளும் போர்க்களத்தில் ஆற்றும் கடும்போர் பற்றிய விளக்கமாக உள்ளது. வாகை என்பது வெற்றி பெற்ற மக்கள் நிலையை, வெற்றி விழாவைச் சித்தரிக்கின்றது. காஞ்சி என்பது உள்ளத்துத் தோன்றும் நிலையாமை உணர்ச்சியையும் போரால் ஏற்பட்ட அழிவுகளையும் விளக்கமாகக் குறிப்பிடுகின்றது. பாடாண் திணை என்பது போர்க் காலத்திலும் அமைதிக் காலத்திலும் சிறந்து விளங்கிய தலைவர்களின் சிறப்பையும் கடமையையும் விளக்கிக் கூறுகின்றது. இவை அனைத்தும் அன்றைய சமுதாயத்தில் போர்முறைகள் எத்துணைச் செம்மையாக இருந்திருந்தன என்பதைக் காட்டுகின்றன.

**போரியல் ஒழுக்க நெறிகள்**

தொல்காப்பியரின் புறத்திணையியலை நோக்கும்போது தொல் தமிழரின் போரியல் வாழ்க்கையைத் தெளிவாக உணரலாம். மேலும், அவர்கள் போர் வாழ்க்கையில் சில ஒழுக்க நெறிகளையும் பின்பற்றிருந்தனர் என்பதையும் அறியலாம். அரச அமைப்புத் தோன்றுவதற்கு முன்பே தோன்றிய போர்முறைதான் ஆநிரை கவர்தல். இதுவே தொல்காப்பியர் காலத்தில் வெட்சிப் போராக உருக்கொண்டது. ஆநிரைகளைக் கவரும் போதும் அவற்றைக் கவர்ந்து வரும்போதும் எந்தத் துன்பமும் அவற்றிற்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். இதனைத் தொல்காப்பியம் 'நோயின்றி உய்த்தல்' (தொல்.பொருள்.61) என்கின்றது. மேலும் தொல்காப்பியம், 1. போர் செய்யும் ஆற்றல் அற்றவர்கள் மீது அம்பு எய்யாமை 2. புதல்வர்களைப் பெறாதோர் போர் செய்ய இயலாது 3. போரில் விழுப்புண் ஏற்படுவது உயர்ந்ததாகவும் புறப்புண்படுவது இழிவானதாகவும் கருதப்படல் 4. ஆநிரைகளைப் பாதீடு செய்தல், 5. அரசன் வீரர்களுக்குப் பொருட் சிறப்புச் செய்தல் 6. வீரர்களுக்குப் பெருஞ்சோறு கொடுத்தல் முதலானவற்றைப் போரியல் ஒழுக்க நெறிகளாகக் குறிப்பிடக் காணலாம்.

**சமய வாழ்க்கை**

பண்டைய காலத்தில் சிவபெருமானும் திருமாலும் வணங்கப்பட்டு வந்தாலும் சைவம், வைணவம் எனும் சமயங்கள் உருவாகவில்லை. ஆனால் இவை உருவாவதற்கு முறையான கோட்பாடுகள் அன்று தோன்றியிருந்தன. பண்டைய காலத்தில் நடுகல் வழிபாடும் வெறியாட்டும் (சடங்கியல் முறை) கொற்றவை வழிபாடும் சிறப்புப் பெற்றிருந்தன என்பதைத் தொல்காப்பியம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**நடுகல் வழிபாடு**

தொல் தமிழரிடம் வேரூன்றி இருந்த வழிபாடுகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது இறந்தார்க்கு நடப்பட்ட கற்களை வணங்கும் நெறியாகும். இவ்வழிபாடு பற்றி ராஜ் கௌதமன் கூறுகையில், "நடுகல் வழிபாடு என்பது ஆதி சமூகங்களில் மனிதர்கள் இறந்தோரைக் கவனமாக, அக்கறையோடு அடக்கம் செய்த ஈமச்சடங்கிலும் இறந்தோரை வழிபடுவதிலும் இடம்பெற்ற முறைகளில் ஒன்றாகும்" (ராஜ்கௌதமன், 2012:105) எனக் குறிப்பிடுகின்றார். இதிலிருந்து, போரில் இறந்த வீரர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவர்களின் பெருமைகளையும் பொறித்துக் கல் நட்டு வணங்கும் மரபு தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும், சி.இலக்குவனார் இது பற்றிக் குறிப்பிடுகையில், "மாண்ட வீரர் பொருட்டு கல் நட்டு வழிபடும் முறை பண்டைத் தமிழகத்தில் வீரர் வழிபாடு மிகவும் சிறந்தோங்கி இருந்தது. இவ்வீரர் வழிபாடுதான் கோயில்களின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணம் என்பர் ஆராய்ச்சியாளர்கள். போரில் மாண்ட வீரர்களுக்குக் கல்நட்டு வழிபாடு செய்த மக்கள் வீர மங்கையர்க்கும் கல் நட்டனர். பின்னர் புகழெய்தி மாண்டோர்க்கெல்லாம் அவர் பீடும் பெருமையும் எழுதிக் கல் நட்டனர். அக்கல் நடுவிழாவே இன்று இறந்து போனவர்க்குப் பத்தாம் நாள் அல்லது பதினாறாம் நாளில் கல்லிடும் சடங்காக மாறுதல் பெற்றுள்ளது" (சி.இலக்குவனார், 2011:164,165) என்கின்றார். இதனைத் தொல்காப்பியம் வெட்சித் திணையின் ஒரு கூறாக அல்லது துறையாகக் குறிப்பிடுகின்றது.

**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்**

**சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று**

**இருமூன்று மரபின் கல்லொடு புணர**

**(தொல்.பொருள்.63)**

என்று நடுகல் நடுவதற்கான ஆறு முறைகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இந்நூற்பா வெட்சித்திணையுள் இடம்பெறுவதால், ஆநிரைகளை மீட்கும் முயற்சியில் உயிர்த் துறந்த வீரர்களுக்கே நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அறியலாம்.

**வெறியாட்டு**

பழந்தமிழரின் வழிபாட்டு முறையில் மிகப் பழமையானது வெறியாட்டு என்பதாகும். இதனை 'வெறிக்கூத்து' என்றும் அழைப்பர். மனிதன் மேல் தெய்வம் ஏறி வருவதுண்டு என்ற நம்பிக்கையில் இருந்து உருவானதே இவ்வழிபாடு. இதனைக் கிராமத்தார் 'ஆவேசம்' என்று கூறுவர். சங்க காலத்தில் முருகனோடு தொடர்புடையதாக இவ்வெறியாடல் நிகழ்த்தப்பட்டுள்ளது. முருகனுக்குரிய வேலினைக் கையில் ஏந்தி ஆடியவனை 'வேலன்' என்று அழைத்தனர். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே வெறியாட்டுச் சிறப்புப் பெற்றிருந்தது என்பதை,

**வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**

**வெறியாட்டு அயர்ந்த காந்தளும்**

**(தொல்.பொருள்.63)**

என்ற அடிகளின் மூலம் அறியலாம். இவ்வெறியாட்டுச் சடங்குத் திணைக்குடி மக்களின் வழிபாட்டுச் சடங்காக நிகழ்த்தப்பட்டுள்ளமையைச் சங்கக் கவிதைகள் வழி அறியலாம்.

**கொற்றவை வழிபாடு**

கொற்றவை பழந்தமிழரின் போர்த் தெய்வமாவாள். வெற்றித் தாயாகிய இவளை வணங்குவதனைக் கொற்றவை நிலை எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இளம்பூரணர் குறிஞ்சித்திணைக்கு முருகனே அன்றிக் கொற்றவையும் தெய்வமாக வழிபடப்பட்டாள் என்று குறிப்பிடுகின்றார். இதனைக் "கொற்றவை நிலை என்றதனானே, குறிஞ்சித்திணைக்கு முருகவேளே யன்றிக் கொற்றவையும் தெய்வம் என்பது பெற்றாம்" என்ற வரிகளின் வழி அறியலாம். இவ்வழிபாட்டினைத் தொல்காப்பியர் திணை அடிப்படையில் குறிப்பிடவில்லை. போர் நிலைகளில் ஒன்றாகவே குறிப்பிட்டுள்ளார் என்பது இவண் சிந்திக்கத்தக்கது. சங்கப் பண்பாட்டின் வழிபடு தெய்வமாக இருந்த கொற்றவை சிலப்பதிகாரக் காலத்தில் பெரும் வளர்ச்சி பெறுகின்றாள். சிலப்பதிகாரத்தில் வேட்டுவரின மக்களின் தெய்வமாகப் பார்வதியின் அம்சமாக வழிபடப்படுவதைக் காணலாம்.

**முச்சுடர் வழிபாடு**

கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்றையும் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவற்றை,

**கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற**

**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**

**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே**

**(தொல்.பொருள்.85)**

என்ற சூத்திரத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இம்மூன்றும் தேவர்களைப் போலப் பிறக்கும் பிறப்பில்லாதவை என்பது நச்சினார்க்கினியர் கருத்து (தொல்.பொருள்.88). இதனைக் "கொடிநிலை - கீழ்த்திசைக்கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம், கந்தழி - ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள், வள்ளி - தண்கதிர் மண்டிலம்" என்ற வரிகளில் காணலாம். இளம்பூரணர் இச்சூத்திரத்திற்குப் புறப்பொருள் வெண்பா மாலையில் இருந்தும் திருமுருகாற்றுப்படையில் இருந்தும் மேற்கோள் காட்டுகின்றார். 1. கொடிநிலை - மூவர் கொடியுள்ளும் மன்னவன் கொடியைப் புகழ்தல் 2. கந்தழி - திருமாலைப் பற்றியது 3. வள்ளி - வேலனைப் பற்றியது.

**பிறந்த நாள் விழாவும் முடிசூட்டு விழாவும்**

பண்டைய காலத்தில் அரசனின் பிறந்த நாள் விழாக்களும் முடிசூட்டும் விழாக்களும் கொண்டாடப்பட்டன. இவற்றைத் தொல்காப்பியம்,

**சிறந்த நாளிணிற் செற்றம் நீக்கிப்**

**பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்**

**சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும்**

**(தொல்.பொருள்.88)**

என்ற அடிகளில் பதிவு செய்யக் காணலாம். வெள்ளணி விழா என்பது அரசனுக்கு நடைபெறும் முடிசூட்டு விழாவாகும். மண்ணு மங்கலம் என்பது அரசனின் பிறந்த நாள் விழாவாகும். இதிலிருந்து அரசன் முடிசூட்டிக் கொள்ளும்போதும் ஆண்டுதோறும் முடிசூட்டு நாளிலும் புண்ணிய நீராடலை மேற்கொள்வான் என்ற செய்தி பெறப்படுகின்றது. இது பற்றிச் சிலம்பு நா.செல்வராசு கருத்துரைக்கையில், "பாடாண் திணை உணர்த்தும் செய்திகள் ஒரு வளர்ந்த சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. எனவே, மண்ணுமங்கலத்தின் தொல் வடிவத்தைக் குழு வாழ்க்கைச் சமூகத்தில்தான் தேட வேண்டியுள்ளது" என்கின்றார். மேலும், "தொல்குடித் தலைவர்கள் புனித கயங்களில் நீராடியமை இனக்குழுக்களிலும் குறுநில

அமைப்புகளிலும் இருந்தது" (சிலம்பு நா.செல்வராசு, 2009:103) என்கின்றார். ஆக, அரசன் நீராடுவது தொல் சமுதாயப் பொருண்மை வாய்ந்தாகவே கருதப்படுகின்றது.

**உண்டாட்டு**

பழந்தமிழர் உணவில் கள்ளும் புலாலும் முக்கிய உணவாகக் கருதப்பட்டுள்ளன. ஆநிரைகளைக் கவர்ந்த மகிழ்ச்சியால் மழவர்கள் கள் உண்டு களித்தனர். இதனைத் தொல்காப்பியர் குறிப்பிடும் 'உண்டாட்டு' (தொல்.பொருள்.61) என்னும் துறை வாயிலாக அறியலாம். குறிப்பாக, ஆநிரைகளைக் கவரும் போரில் கள் உண்ணல் நிகழ்ந்தமையைக் காணலாம். வெட்சி வீரர்கள் கொள்ளையிட்டு வந்த ஆநிரைகளைத் தமது குழுவினர்களுக்குள் பகிர்ந்து, கள் குடித்து உண்டு ஆடும் கொண்டாட்டமே உண்டாட்டு என ராஜ் கௌதமன் (ராஜ்கௌதமன், 2018:18) குறிப்பிடுவதிலிருந்து இனக்குழு மக்களின் பண்பாட்டு அடையாளமாக உண்டாட்டு விளங்குவதை அறியமுடிகின்றது (காண்க: பெ.மாதையன், 2019:72).

**கொடையும் ஆற்றுப்படையும்**

அரசர்களின் கொடை, புகழ், வீரம் ஆகியவற்றைப் பாடாண் திணை என்ற பெயரில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழ் அரசர்கள் கொடையில் சிறந்து விளங்கினர். தனக்குப் போரில் வெற்றி பெற உதவிப் புரிந்த அனைவருக்கும் கொடை வழங்கப்பட்டுள்ளது. ஆநிரைக் கவர்தலில் 'கொடை' என்பது ஒரு துறையாகும். கிணையன், துடியன், பாணன் உள்ளிட்ட கலைஞர்களுக்கு ஆநிரைகளைக் கொடுத்துள்ளனர். இதனை இளம்பூரணர் சிலப்பதிகார வேட்டுவ வரியில் இருந்து காட்டும் சான்றுகள் வழி அறியலாம். தொல்காப்பியம் குறிப்பிடும் ஆற்றுப்படையின் இலக்கணம் அரசர்களின் கொடையைக் கூறுகின்றது. குறுநில மன்னர்களும் சிற்றரசர்களும் கொடையில் சிறந்து விளங்கினர் என்பதைச் சங்கப் புறக்கவிதைகள் வழியாக அறியலாம்.

**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**

**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**

**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்**

**(தொல்.பொருள்.88)**

ஆற்றுப்படைக்குரிய கலைஞர்கள் வாழ்க்கை முறையிலும் தொழில் முறையிலும் சிற்சில வகைகளில் வேறுபட்டவர்கள். ஆனால், அவர்கள் அனைவரும் கலையையே தொழிலாகக் கொண்டவர்கள். கூத்தர், பாணர், பொருநர், விறலி உள்ளிட்ட கலைஞர்கள் வறுமையில் இருந்துள்ளனர். அவர்கள் அரசர்களையும் வள்ளல்களையும் தேடிச் சென்று கொடை பெற விரும்பியுள்ளனர். அவ்வாறு அவர்கள் கொடை பெறச் செல்லும் வழியில் விருந்தோம்பும் மக்களை ஆற்றுப்படை நூல்கள் வழி அறியலாம்.

**கையறுநிலை**

கையறுநிலை என்பது புறப்பொருள் துறைகளுள் ஒன்றாகும். தொல்காப்பியர் புறத்திணைகளுள் ஒன்றான காஞ்சித்திணையில் இத்துறையை அடக்குகின்றார். நிலையாமையைப் பொருளாகக் கொண்ட காஞ்சித்திணையுள் தொல்காப்பியர் இறப்பை எண்ணி வருந்தும் நிலையை விளக்கும் துறைகளாகப் பூசல் மயக்கம், ஆனந்த பையுள், மூதானந்தம், முதுபாலை, கையறுநிலை, தபுதாரநிலை, தாபதநிலை, பாலைநிலை, தலைப்பெயல் நிலை, காடு வாழ்த்து ஆகியவற்றைக் கூறுகின்றார். இவற்றுள் பெரும்பாலானவை போரில் ஏற்பட்ட இறப்பை எண்ணிப் புலம்புவனவாகவே உள்ளன. யாரேனும் ஒருவர் போரில் இறந்துபட எஞ்சியுள்ளோர் புலம்பும் நிலையை கையறுநிலை என்னும் துறை விளக்குகின்றது. இதனைத் தொல்காப்பியம்,

**கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ**

**ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்**

**(தொல்.பொருள்.77)**

என்ற அடிகளில் குறிப்பிடக் காணலாம். இக்கையறுநிலையை மையமாகக் கொண்ட கவிதைகள் தமிழிலும் ஜெர்மனியிலும் காணப்படுவதைக் கதிர். மகாதேவன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார் என்பதும் (கதிர்.மகாதேவன், 2009:139-148) சுட்டிக்காட்டத்தக்கது. இக்கவிதைகள் புலவரின் உள்ளத்து உண்மையையும் அனுபவ ஆற்றலையும் வெளிக்காட்டி நிற்கின்றன எனலாம்.

**துயிலெடைநிலை**

அரசனைத் துயில் எழுப்புவதற்காகச் சூதர், மாகதர், வேதாளிகர் ஆகியோர் அமர்த்தப்பட்டனர் என்பதைத் தொல்காப்பியம்,

**தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**

**சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்**

**(தொல்.பொருள்.88)**

என்ற அடிகளில் பதிவு செய்கின்றது. இதுவே, பிற்காலத்தில் திருப்பள்ளியெழுச்சியாக நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பின்பற்றப்பட்ட நிலைமையைச் சோ.ந.கந்தசாமி குறிப்பிடுகையில், "சங்க காலத்தில் மன்னரைப் போற்றுவதற்கு உரியதாக விளங்கிய இத்துறை, பக்தி இலக்கியம் மலர்ந்த பல்லவர் காலத்தில் இறைவனுக்குரிய பள்ளியெழுச்சியாக மாற்றமும் வளர்ச்சியும் பெற்றுள்ளது" (சோ.ந.கந்தசாமி, 2005:118) என்கின்றார்.

**சமூக அமைப்பு : நால்வகை இனத்தார்**

தொல்காப்பியர் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் என நால்வகை இனத்தவரைக் குறிப்பிடுகின்றார். இவர்கள் தொல்காப்பியர் காலம் முதலாக வழிவழியாக வந்தவர்கள் என்பதை அறியமுடிகின்றது. இதனை,

**அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்**

**ஐவகை மரபின் அரசர் பக்கமும்**

**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்**

**(தொல்.பொருள்.74)**

என்ற அடிகளின் வழி அறியலாம். நால்வகை வருணத்தாருக்குமுரிய கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுவதாக இளம்பூரணர் உரை வரைந்துள்ளார். பார்ப்பனருக்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய கடமைகளும் அரசர்க்கு ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடிகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட கடமைகளும் வணிகருக்கு ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிபம், ஆநிரைகளைப் பாதுகாத்தல் ஆகிய கடமைகளும் வேளாண் மாந்தருக்கு உழவு, உழவைத் தவிர்த்த பிற தொழில்கள், விருந்தோம்பல், பகடு புறந்தருதல், வழிபாடு, வேதம் ஒழிந்த கல்வி முதலிய கடமைகளும் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. இக்கடமைகளை இவர்கள் தொடர்ந்து செவ்வனே செய்து வருவதால் தொல்காப்பியர் வாகைத்திணையில் அடக்கியுள்ளார் போலும். இந்நால்வகைப் பிரிவுகள் தொழில் அடிப்படையில் இருந்தனவே ஒழிய சாதி அடிப்படையிலோ, வருணாசிரம தர்ம அடிப்படையிலோ இருந்திருக்கவில்லை என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

**அறத்திற்குரிய செயல்கள்**

தொல்காப்பியப் புறத்திணையியலில் தொடங்கும் 'கூதிர் வேனில்' என்ற வாகைத் திணையோடு தொடர்புடைய நூற்பாவில் அறத்திற்குரிய செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை:

1. பிறர் மனை நயவாமை - கடிமனை நீத்த பாலின் கண்ணும் (தொல்.பொருள்.75).
2. அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, வெஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை என்பன பொருந்தியவர்கள் அவையில் உறுப்பினராக இருத்தல் - எட்டுவகை நுதலிய அவையகத் தானும் (தொல்.பொருள்.75).
3. இடையின்றி தமக்குப் புகழை நல்கும் கொடை - இடையில் வண்புகழ்க் கொடையி னானும் (தொல்.பொருள்.75).
4. தமக்குத் தீங்கு செய்தோரைப் பொறுத்தருளும் சிறப்பு - பிழைத்தோர்த் தாங்கும் காவலும் (தொல்.பொருள்.75).
5. உண்மையான பொருளைப் பற்றி ஆராயும் திறம் - பொருளொடு புணர்ந்த பக்கமும் (தொல்.பொருள்.75).
6. இவ்வுலக வாழ்க்கையில் நிகழும் துன்பத்தை உணர்ந்து அதன்கண் பற்று நீங்கி அருள் உணர்வோடு மேற்கொண்ட துறவு வாழ்க்கை - அருளொடு புணர்ந்த அகற்சி (தொல்.பொருள்.75). அதாவது கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை ஆகியவற்றைத் துறத்தலே துறவு வாழ்க்கை.
7. ஆசையைத் துறந்தல் - காமம் நீத்த பாலி னானும் (தொல்.பொருள்.75). இவற்றின் மூலம் தொல்தமிழரின் பண்பாட்டு உயர்வையும் நாகரிகச் சிறப்பையும் தெற்றென அறியலாம்.

**நம்பிக்கைகள்**

பழந்தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த வாழ்க்கையில் நம்பிக்கைகள் சில தோன்றியுள்ளன. தொல்காப்பியம் நாள் பற்றியும் புள் நிமித்தம் பற்றியும் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். இன்றும் ஏதாவது நல்ல காரியத்திற்குச் செல்லுகையில் காகம் இடப்பக்கத்தில் இருந்து வலப்பக்கமாகச் செல்லுவதை நன்னிமித்தமாகக் கருதுகின்றனர். மேலும், தொல்காப்பியம் வெட்சித் திணையுள் விரிச்சி, உன்னநிலை ஆகிய இரு துறைகளைக் குறிப்பிடுகின்றது. இவ்விரு துறைகளும் பழந்தமிழரின் போர்த் தொடர்பான நம்பிக்கைகளாக இனங்காணப்பட்டுள்ளன. இவை குறிப்பிட்ட திணைக்குடி மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன எனலாம். குறிப்பிட்ட இன மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கு இந்நம்பிக்கைகளும் படிக்கற்களாகத் திகழ்வதைச் சு.சக்திவேல் (சு.சக்திவேல், 2010:188) எடுத்துக்காட்டியுள்ளார்.

**ஆட்டக்கலைகள்**

போர்க்களத்தில் படைவீரர்களை உற்சாகப்படுத்துவதற்காகக் ஆட்டக் கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. தொல்காப்பியப் புறத்திணையியலில் வாகைத்திணைக்குரிய துறைகளைக் குறிப்பிடும்போது, முன்தேர்க்குரவை பற்றியும் பின்தேர்க்குரவை பற்றியும் எடுத்துரைக்கக் காணலாம். இதனைத்,

**தேரோர் வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்**

**ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும்**

**(தொல்.பொருள்.75)**

என்ற அடிகளின் வாயிலாக அறிந்துகொள்ளலாம். இவ்விரு குரவைகளும் வென்ற வேந்தன் வெற்றிக் களிப்பில் போர்ப்படைத் தலைவர்களுடன் கையிணைந்து குரல் எழுப்பியவாறு ஆடுகின்ற ஆட்டமாகும். இவையே பழந்தமிழரின் போரியல் சார்ந்த ஆட்டக்கலைகளாக இருந்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளரின் முடிபு.

**ஆரிய நெறியும் நிலையாமையும்**

சங்க காலத்தில் வேத வழிப்பட்ட ஆரிய சமயம் நன்கு வேரூன்றி இருந்தது என்பதைச் சான்றுகள் வழியாக நிறுவலாம். தொல்காப்பியத்தில் அந்தணர்க்குரிய

கடமைகள் கூறப்படுகின்றன. அவை ஓதல், ஓதவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பனவாகும். அந்தணர்கள் ஆகவனீயம், தக்கினாக்கினியம், காருகபத்தியம் ஆகிய மூன்று வகையான தீக்களை வளர்த்தனர். மேலும், போர்க்காலங்களில் அந்தணர்களுக்குப் பாதுகாப்பும் அளிக்கப்பட்டன. நிலையாமையை உணர்த்துவதே அறவுணர்வை வளர்ப்பதற்குரிய அடிப்படைத் தேவையாகும். இதனையே தொல்காப்பியர் 'காஞ்சி' எனக் குறிப்பிடுகின்றார்.

**காஞ்சி தானே பெருந்திணைப் புறனே**

**பாங்கருஞ் சிறப்பின் பின்னெறி யானும்**

**நில்லா உலகம் புல்லிய நெறித்தே**

**(தொல்.பொருள்.76)**

இந்நிலையாமையை இளம்பூரணர் மூன்றாகக் கூறுகின்றார். அவை: 1. இளமை நிலையாமை 2. செல்வம் நிலையாமை 3. யாக்கை நிலையாமை என்பன. தொல்காப்பியம் காஞ்சித்திணைக்குரிய 20 துறைகளைக் குறிப்பிடக் காணலாம். அவை: 1. பெருங்காஞ்சி 2. முதுகாஞ்சி 3. மறக்காஞ்சி 4. பேய்க்காஞ்சி 5. மன்னைக்காஞ்சி 6. வஞ்சினக்காஞ்சி 7. தொடாக்காஞ்சி 8. ஆஞ்சிக்காஞ்சி 9. மகட்பாற்காஞ்சி 10. தலையொடு முடிதல் 11. பூசல் மயக்கம் 12. துன்பக்காஞ்சி 13. மூதானந்தம் 14. முதுபாலை 15. கையறுநிலை 16. தபுதாரநிலை 17. தாபதநிலை 18. மாலைநிலை 19. தலைப்பெயல் 20. காடு வாழ்த்து என்பன. இத்துறைகள் யாவும் போரினால் ஏற்படும் அவலங்களையே எடுத்துக் காட்டுகின்றன.

**நிறைவாக,**

பண்டைத்தமிழரின் பண்பாட்டு அடையாளமாகப் புறத்திணையியல் விளங்குகின்றது என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், தொல்காப்பியர் புறத்திணையியலை அகத்திணைக்குப் புறனாகவே படைத்துள்ளார். ஆநிரைகளைக் கவர்தலும் மீட்லும் பழந்தமிழரின் போர்முறைகளுள் ஒன்றாக இருந்துள்ளது. அப்போரில் இறந்துபட்டவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. இனக்குழு மக்கள் ஆநிரைகளைக் கவர்ந்த வெற்றிக் களிப்பில் கள் குடித்து மகிழ்ந்தனர். தொல் தமிழரின் வழிபாட்டில் குறிப்பாகப் புறம் சார்ந்த வழிபாட்டில் வெறியாட்டு, கொற்றவை வழிபாடு, முச்சுடர் வழிபாடு ஆகியவை இடம்பெற்றிருந்தன. விரிச்சி, உன்னநிலை ஆகிய இரண்டையும் பழந்தமிழரின் நம்பிக்கைகளாகத் தொல்காப்பியம் குறிப்பிடக் காணலாம். தமிழ் அரசர்கள் கொடையில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதை விளக்கும் விதமாக ஆற்றுப்படை எனும் துறை அமைகின்றது. ஆரியப் பண்பாடு தமிழர் பண்பாட்டோடு கலந்திருப்பதைக் காஞ்சித்திணையில் அமைந்துள்ள சில துறைகள் சுட்டுகின்றன. இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் தொல்காப்பியப் புறத்திணையியல் தொல்தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தன்னகத்தே கொண்டு ஒரு போரியல் நூலாகத் திகழ்வதை உணரலாம்.

## துணை நின்ற நூல்கள்


1. இளம்பூரணர் (உ.ஆ), **தொல்காப்பியம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்**, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 2004 (மறுபதிப்பு).
2. இலக்குவனார், சி., **தொல்காப்பிய ஆராய்ச்சி**, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2011 (முதற்பதிப்பு).
3. கணேசையர் (ப.ஆ), **தொல்காப்பியம் பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007 (இரண்டாம் பதிப்பு).

4. கந்தசாமி, சோ.நா., **திருமுறைகளில் இலக்கிய வகை**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2005 (முதற்பதிப்பு).
5. சக்திவேல், சு., **நாட்டுப்புறவியல் ஆய்வு**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010 (பத்தாம் பதிப்பு).
6. செல்வராசு, சிலம்பு நா., **சங்க இலக்கிய மறுவாசிப்பு - சமூகவியல், மானிடவியல் ஆய்வுகள்**, காவ்யா, சென்னை, 2009 (இரண்டாம் பதிப்பு).
7. மகாதேவன், கதிர்., **ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம்**, செல்லப்பா பதிப்பகம், மதுரை, 2009 (முதற்பதிப்பு).
8. மாதையன், பெ., **சங்க காலம் உணவும் சமுதாய மாற்றமும்**, பாவைபப்ளிகேஷன்ஸ், சென்னை, 2019 (முதற்பதிப்பு).
9. ராஜ் கௌதமன், **பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்**, தமிழினி, சென்னை, 2012 (இரண்டாம் பதிப்பு).
10. ராஜ் கௌதமன், **ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும்**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2018 (முதற்பதிப்பு).

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Shankar M., (2021) Objectiveness of Ancient Tamilian in Tholkappiyam and Cultural Identity, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:1-9. Cauvery College For Women, Trichy.

**ப.ரதிதேவி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீராமசாமிநாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி,
சாத்தூர்.

# தேவநேயப் பாவாணரின் சமுதாய பண்பாட்டு ஆய்வுகள்

**ஆய்வுச்சுருக்கம்**

தேவநேயப் பாவாணர் தமிழ்ப் பண்பாடு சிறந்தது என்பதில் உறுதியான கொள்கையுடையவர். சமுதாயம் என்பது மக்களின் தொகுப்பாகும். ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் வாழ்க்கை நடத்தும் முறையே பண்பாடு ஆகும். கூட்டுடைமை எனும் அரசியல் கொள்கை ஆட்சியால் பண்பாட்டை நிலை பெறச் செய்யலாம் என்பது பாவாணரின் கொள்கை இவ்வாய்வின் நோக்கமாகும். பாவாணர் ஆய்ந்தது தமிழர் பண்பாடேயாகும். நாவலந்தேயத்திலும் தமிழ்நாடே பண்பாட்டில் சிறந்ததாகும். ஆரியர் முன் தமிழர் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த நாகரிமும் பண்பாடும் உரியவராய் இருந்தனர் என்பது பாவாணர் கூற்று. இந்து மதம் என்று தமிழர் கூறாது. தென்மதம் என்றே கூறுதல் வேண்டும் என்பது பாவாணரின் கருத்தாகும். மாந்தர் எல்லாரும் ஒரு குலம். பிறப்பால் சிறப்பில்லை என்பது தமிழர் பண்பாடு தமிழர் பண்பாட்டுக் கூறுகள் பலவற்றையும் பாராட்டிச் சொல்லும் பாவாணர் எதிர் காலத்தில் தமிழர் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாடு பற்றியும் அறிவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

“அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது” என்பது ஔவையின் வாக்கு. தமிழுலகம் பெற்ற அரிதான மாமணி தேவநேயப் பாவாணரைப் பலரும் வேர்ச்சொல் ஆராய்ச்சியறிஞராகவும், சொற்படைப்புச் செம்மலாகவும் அறிந்திருக்கின்றனர். ஆனால் அவர் ஒரு சிறந்த வரலாற்று ஆராய்ச்சியாளர் மட்டுமல்ல. சமுதாய பண்பாட்டு துறைகளில் ஆய்வு செய்துள்ளார். இக்கட்டுரையில் அவரின் ஆய்வுப்போக்குகளை பற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

**சமுதாயம்**

சமுதாயம் என்பது மக்களின் தொகுப்பாகும். மக்கள் கூட்டத்தையும் கூட்டத்துக்குள் தனித்தனியே அடையாளப் படுத்திக் கொண்ட குழுக்களையும் சமுதாயம் என்று கூறலாம். ஒரு சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, மொழி பொருளியல், அறிவு வளர்ச்சி முதலியன அச்சமுதாயத்தின் நிலையை உயர்த்துவனவாகும். (1)

**பண்பாடு**

பண்படுவது பண்பாடு. பண்படுதல் சீர்ப்படுதல் அல்லது திருந்துதல். பண்பாடு பல பொருட்கு உரியதாகினும் நிலமும் மக்கள் உள்ளமும் பண்படுதலே பண்பாடு ஆகும். (2)

ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் வாழ்க்கை நடத்தும் முறையே பண்பாடு ஆகும். பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம்” என்று பாவாணர் கூறுவார். பண்பாடு நாகரிகம் இவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளையும் அவர் குறித்துள்ளார்.

| பண்பாடு | நாகரீகம் |
| --- | --- |
| 1.திருந்திய ஒழுக்கமாகும். | 1.திருந்திய வாழ்க்கையாகும். |
| 2.எல்லாப்பொருள்களையும் தமக்கும் பயன்படுத்துவது. | 2.எல்லாப் பிறர்க்கும் பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவது. |
| 3.உள்ளத்தின் செம்மை. | 3.உள்ளத்துக்குப் புறம்பானவற்றின செம்மை. |

**அஃறிணைப்பண்பாடு**

ஆறறிவுள்ள உயர்திணையாகிய மாந்தனுக்கு மட்டுமே பண்பாடு உரிமையுடையதாகாது. அது அஃறிணைக்கும் பொருந்தும். நன்றியுள்ள தாய், ஒரே பேடையுடன் வாழும் வானப்பறவை, இனத்துடன் உண்ணும் காக்கை முதலியன நாகரிகமற்றவை எனினும் மாந்தரைக் காட்டிலும் பண்பாடு உடையவை.

**நாகரிகம் எனுஞ்சொல்**

நாகரீகம் எனுஞ்சொல் சிலவிடங்களில் பண்பாடு எனும்பொருளில் பயன்படுத்தப்படுவதுண்டு.

**"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**

**நாகரிகம் வேண்டு பவர்"**

எனும் குறள் இதற்கு சான்று பகர்வனவாகும்.

**தமிழர் பண்பாடு**

பாவாணர் ஆய்ந்தது, தமிழர் பண்பாடேயாகும். நாவலந்தேயத்திலும் தமிழ்நாடே பண்பாட்டில் சிறந்ததாகும். (3)

பண்பாடு இருவகையாக ஆயப்படுகிறது.

1.பொதுப்பண்பாடு **2.மக்கட் பண்பாடு.**

மொழித்துறை, வாழ்வியல், உயிர் இரக்கம், குலம், அரசியல், குணம் முதலியவற்றை முதற்பிரிவிலும் அந்தணர், பார்ப்பார், அரசர், வேளாளர், கள்வர், பெண்டிர் முதலிய மக்களின் பண்பாடுகளையெல்லாம் இரண்டாம் பிரிவிலும் ஆய்வு செய்துள்ளார் பாவாணர்.

**மொழித்துறை**

இடக்கரடக்கல், மங்கலவழக்கு, படர்க்கைச் சொல்லாற் குறித்தல் முதலியன மொழித்துறை பண்பாடாகும்.

**வாழ்வியல் பண்பாடு**

ஏழைகளுக்கு விருந்தளித்தல், தண்ணீர் மோர்ப்பந்தல்கள் அமைத்தல், விலங்குகட்கு நீர்த்தொட்டியமைத்தல், தெருந்திண்ணையமைத்தல், ஊர்மடங்களைக் கட்டுதல், அரிசிமாக்கோலம் போடுதல் முதலியன வாழ்வியல் பண்பாடாகும்.

**உயிர் இரக்கம்**

அஃறிணையிடம் அன்பு, மாட்டுப் பொங்கல் வைத்து தம்பிள்ளைகள் போல் மதித்ததால் அவற்றுக்கும் பிள்ளை என்றே தமிழர் பெயர் வைத்தனர். காளை, ஆவு முதலியவற்றிற்கு மக்கட் பெயர்களையே இட்டனர்.

**குலம்**

மாந்தர் எல்லாரும் ஒரு குலம். பிறப்பால் சிறப்பில்லை என்பது தமிழர் பண்பாடு.

**அரசியல்**

குடவோலை முறையில் ஒழுக்கமுடையோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**மக்கட் பண்பாடு**

**அந்தணர்**

இறைவனுக்கு உண்மை, அறிவு, இன்பம் முதலிய பிற பண்புகளும் வடிவாகும். அந்தணர் கல்வித்தொழில் புரியும் இல்லற வகுப்பார். புலவர், ஆசிரியர், பூசாரியார், கணியர், ஓதுவார், கணக்கர் எனப்பல்வேறு பெயர்பெற்று வாழ்பவர் பார்ப்பனர் என்பது பாவாணர் கருத்து.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறம் 192)**

**"மண்கெழு தாளை ஒண்பூண் வேந்தர்" (புறம் 197)**

**"ஈயென இரத்தல் இழிந்தன் றதனெதிர்" (புறம் 204)**

**"காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே" (புறம் 184)**

**"மல்லல் மூதூர் வயவேந்தே" (புறம் 18)**

முதலிய புகழ்பெற்ற உயிர்நாடியான பாக்களையெல்லாம் பாடியவர் பார்ப்பனரே என்பது பாவாணர் கருத்தாகும்.

**அரசர் பண்பாடு**

தமிழரசர் தம்மை மக்களின் தந்தையர் என்றே கருதினர். துன்பங்களிலிருந்து குடிகளைக் காத்தனர். காட்சிக்கு எளிமை, கடுஞ்சொல் சொல்லாமை, வாய்ச்சொல் தவறாமை முதலிய குணங்கள் அரசர்க்கிருந்தன. அரசனின் நடுநிலைத்தீர்ப்பும் நகர்வலத்தால் மக்கள் மனம் அறிதல், ஆராய்ச்சிமணி கட்டியிருத்தல் போன்ற உயர்குணங்களும், புறப்புண்நாணல், இரவில் போர் நிறுத்தம் முதலிய போர் அறங்களும், நல்லாட்சி கொடுப்பதைப் பண்டைய அரசர் உயிர்க்கடமையாக இருந்தது என்பதும் தெரியவருகிறது.

**வணிகர் பண்பாடு**

நடுவுநிலை கடைப்பிடித்த வணிகர் பொதுமக்களுக்கான பல அறப்பணிகளைச் செய்தனர். விருந்தோம்பல் வேளாரின் சிறந்த பண்பாடாக விளங்கியது.

**கள்வர் பண்பாடு**

கள்வர்கள் தமிழ்நாட்டில் தெய்வ வணக்கம் எளியார் பொருளைக் கவராமை புலவரையும் முனிவரையும் விருந்தோம்பல், அரசப்பற்று,ஈகையாளரைக் காத்தல் முதலிய பண்புகளோடு இருந்ததாக பாவாணர் தம் நூல்கள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

**பெண்டிர் பண்பாடு**

கணவன் பெயர் சொல்லாமை, சொல் தட்டாமை அவன் குற்றத்தை மறைத்தல், பின்னுண்டல், பின்தூங்கி முள்ளெழுதல், விருந்து மிகவரினும் சலியாமை, மறுமணம் செய்யாமை, கணவனில்லாக் காலத்துத் தன்னை அணி செய்யாமை, உடன்கட்டை ஏறல் முதலியன கற்புடை மனைவியர் பண்பாட்டுக் குணங்களாகும். மறக்குடி மகளிர், மறப்பண்பு, தன்மானம், அரசப்பற்று, நாட்டுப்பற்று முதலிய பண்புகளைப் பெற்றிருந்தனர்.

**தனித்தன்மை**

தமிழ்ப்பண்பாடு முதன்மையானது. ஆரியர் முன் தமிழர் எல்லாத் துறைகளிலும் தலைசிறந்த நாகரிகமும் பண்பாடும் உடையவராய் இருந்தனர் என்பது பாவாணர் கூற்று. (4)

**பாவாணரின் ஆய்வுமுறை**

பாவாணர் நடுநிலையாக ஆய்வுசெய்து தான் கண்ட உண்மைகளை சான்றுகளுடன் வெளிப்படுத்தியுள்ளார். அவற்றுள் பெரும்பான்மையானவை இலக்கியச் சான்றுகள். அவர் பண்டைத் தமிழர் பண்பாடு பற்றிச் சொல்லும்போது கால எல்லையை வரையறை செய்து கொள்வது இல்லை என்பது இராமலிங்க அடிகளாரின் பாட்டை மேற்கோளாகக் காட்டும்போது தெரிகிறது. (5)

தமிழர் அன்பு நெறியை விரும்புவர் என்பதற்குச் சான்றுகளாகத் தொல்காப்பியம், திருமந்திரம், திருக்குறள் முதலியவற்றைக் காட்டும் அவர் ‘அன்பெனும் பிடியுகைப்படு மலையே’ எனும் பாடலையுங் குறித்துள்ளார். தமிழர் பண்பாட்டுக் கூறுகள் பலவற்றையும் பாராட்டிச் சொல்லும் பாவாணர் அத்துடன் அமையாமல் எதிர்காலத்தில் தமிழர் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாடு பற்றியும் கூறியுள்ளார். குறிப்பாக மதத்துறையில் பண்பாடு பலவகைகளில் மாற வேண்டும் என்பது பாவாணரின் எதிர்பார்ப்பு.

1. தமிழர் இருவகைச்சடங்குகளையும், கோவில் வழிபாட்டையும் தமிழிலேயே நடைபெறச் செய்ய வேண்டும்.
2. பலவகுப்புகளையும் சேர்ந்த துப்புரவானவர் கோவிற்பூசகராக இருத்தல் வேண்டும்.
3. எல்லார்க்கும் உருவிலா வழிபாடே உயர்ந்தது.
4. இந்துமதம் என்று தமிழர் கூறாது அதனைத் தென்மதம் என்றே கூறுதல் வேண்டும் என்பது பாவாணரின் கருத்தாகும்.

கிறிஸ்த்தவரான பாவாணர் அம்மதத்தை வலியுறுத்தாமல் உயர்த்திப் பேசாமல்

பொதுக்கூட்டங்களில் அம்மையப்பன் திருவடி போற்றி என்று வலியுறுத்தியது ஒன்றே அவர் எத்துணைச் சிறந்த உயர்பண்பாளர் என்பதைக் காட்டும். (6)

**தாழாத பண்பாட்டுக்கு வழி**

மக்கட்பண்பாடு தாழாமல் இருக்க வேண்டுமானால் பாத்தூணறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். ஆறுவகையான உயர் பண்பாடுகள் நிலைபெறல் வேண்டும் என்கிறார் அவர்.

1. ஒவ்வொருவரும் தன்னுயிர் போலவே மன்னுயிரைக் கருதுதல் வேண்டும்.
2. அடிப்படைத் தேவை அனைவர்க்கும் பொது என உணர வேண்டும்.
3. செல்வத்தின் பயன் அஃதில்லாதவர்க்கு ஈதல்.
4. இறக்கும்போது செல்வம் உடன்வராது.
5. ஒருவரையொருவர் புகழ்தலும் இகழ்தலும் கூடாது.
6. மக்கட்பிறப்பு பண்பாட்டையே பெரிதும் தழுவியது. (7)

இத்தகைய பண்பாடு வாழவேண்டுமானால் அதற்குரிய வழி யாது? அதற்குக்

கூட்டுடைமை ஆட்சியே வழியாகும். ‘கூட்டுடைமை ஆட்சியே உன்னைப்போல் பிறரையும் நேசி’ என்பதை நிறைவேற்றுவதால் அஃதொன்றே பண்பாட்டில் தலைசிறந்தது என்று வலியுறுத்தியுள்ளார் பாவாணர்.

**முடிவுரை**

இக்கட்டுரையின் வாயிலாக தமிழ்ப்பண்பாடு சிறந்தது என்பதில் பாவாணர் உறுதியான கொள்கையுடையவர் என்பதும் பண்பாட்டறிவு அயலாரால் ஏற்பட்டது என்பதும், அதை மீட்கும் கொள்கையாளர் அவர் என்பதும் கூட்டுடைமை எனும் அரசியல் கொள்கை ஆட்சியால் பண்பாட்டை நிலைபெறச் செய்யலாம் என்பது பாவாணரின் கொள்கை என்பதை நாம் அறிய முடிகிறது.

## துணை நூல்கள்

1. ஞா.தேவநேயப் பாவாணர் - பழந்தமிழ் நாகரிகமும், பண்பாடும் (தமிழ்மண் பதிப்பகம்)
2. ஞா.தேவநேயப் பாவாணர் - தமிழர் மதம் (தமிழ்மண் பதிப்பகம்)
3. ஞா.தேவநேயப் பாவாணர் - மண்ணில் விண் அல்லது வள்ளுவக் கூட்டுடைமை (தமிழ்மண் பதிப்பகம்)

## அடிக்குறிப்புகள்

1. ஞா.தேவநேயப் பாவாணர் - மண்ணில் விண் (அல்லது) வள்ளுவர் கூட்டுடைமை, பக்.6
2. ஞா.தேவநேயப் பாவாணர், பழந்தமிழ் நாகரிகமும் பண்பாடும், பக்.6,7
3. மா.இராசமாணிக்கனார் - தமிழர் பண்பாடும் நாகரிகமும் பண்பாடும்.
4. ஞா.தேவநேயப் பாவாணர் - பழந்தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக்.192
5. ஞா.தேவநேயப் பாவாணர் - பழந்தமிழர் நாகரிகமும், பண்பாடும், பக்.173
6. ஞா.தேவநேயப் பாவாணர், தமிழர் மதம், பக்.142, 143, 144
7. ஞா.தேவநேயப் பாவாணர், மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை, பக்.42.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Rathidevi P., (2021) Devaneya Paavanar’s Socio – cultural Research, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:10-14. Cauvery College For Women, Trichy.

**முனைவர் மா.ஆசியாதாரா,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
காவேரி மகளிர் கல்லூரி, திருச்சி.

# தொல்காப்பியத்தின் மேம்பட்ட தர நிறுவல்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழரின் தனித்த அடையாளமான 'ஆழ்ந்த அறிவுப் பரப்பின்' ஒரு கூறாக ஒரு நூல் அதன் முந்து நூலைவிட மேம்பட்ட தரத்தை உடையது என்ற நிறுவல் தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலேயே நிகழ்த்தப்பட்டுள்ளது. இச்சிறப்புப் பாயிரத்தில் உள்ள 'முறைப்பட எண்ணி' 'மயங்கா மரபின்' என்ற தொடர்கள் தொல்காப்பியம் கொண்டுள்ள முந்து நூல்களைவிட மேம்பட்ட தர நிலையை நிறுவ பனம்பாரனரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. இம்மேம்பாடு வாசிப்பாளரை எண்ணத்தில் கொண்டு நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்ற உரையாசிரியர் கருத்து தொல்காப்பியப் பனுவலின் சிறப்பை மேலும் மிகுவிக்கிறது.

தொல்காப்பியம் நமக்குக் கிடைக்கும் முதல் தமிழ் இலக்கண நூலாக இருப்பினும் அது முந்து நூல்களையும் முன்னோர் அறிவினையும் உட்செரித்தே படைக்கப்பட்டிருக்கிறது. ஒரு துறை குறித்த நூல்கள் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள சூழலில் புதிதாக எழுகின்ற ஒரு நூல் முந்தை நூல்களின் தரத்திலிருந்து ஏதோவொரு விதத்தில் மேம்பட்டதாக இருந்தால்தான் நின்று நிலைக்க முடியும். அந்நூல் குறித்து அறிமுகப்படுத்துவோர் அம்மேம்படுத்தப்பட்ட தரம் குறித்த தகவலை முன்னிலைப்படுத்தி உரைக்க வேண்டும். தமிழரின் தனித்த அடையாளமான 'ஆழ்ந்த அறிவுப் பரப்பின்' ஒரு கூறாக இவ்உரைத்தலானது தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலேயே நிகழ்த்தப்பட்டுள்ளது. பனம்பாரனாரின் சிறப்புப் பாயிரம் தொல்காப்பியம் என்னும் பனுவலின் உருவாக்கம் குறித்த கருத்துக்களைக் கூறுகிறது. இச்சிறப்புப் பாயிரத்தில் உள்ள 'முறைப்பட எண்ணி' 'மயங்கா மரபின்' என்ற தொடர்கள் தொல்காப்பியம் கொண்டுள்ள முந்து நூல்களைவிட மேம்பட்ட தர நிலையை நிறுவ பனம்பாரனரால் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**மயங்கா மரபு**

தொல்காப்பியம் தனக்கு முன்பு உருவாக்கப்பட்ட நூல்களில் காணப்பட்ட மயங்கிய நிலையினைக் களைந்திருக்கிறது என்பது 'மயங்கா மரபின்' என்ற தொடர்வழி உணர்த்தப்பட்டுள்ளது. முந்து நூல்களில் மயங்கிய அல்லது கலந்த நிலையில் இருந்தன எவையென்ற கருத்தில் வேறுபட்ட சிந்தனைகள் காணப்படுகின்றன.

1. இலக்கணக் கூறுகள் கலந்திருந்தமை
2. முத்தமிழ்க் கூறுகள் கலந்திருந்தமை
3. மேற்கண்ட இரண்டுடன் பிற கூறுகளும் கலந்திருந்தமை

தொல்காப்பியம் 'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' தனித்தனி அதிகாரங்களாக வகுத்துப் படைக்கப்பட்ட நூல். ஆனால் இம்முறையான வைப்புமுறை முந்து நூல்களில் கைக்கொள்ளப்படாமையால் அவ்இலக்கணக் கூறுகள் கலந்திருந்திருக்கின்றன. அக்கலத்தல்,

1. எழுத்து, சொல் இலக்கணங்கள் கலந்திருந்தமை
2. எழுத்து, சொல், பொருள் இலக்கணங்கள் கலந்திருந்தமை

என்னும் நிலைகளில் காணப்படுகிறது.

இளம்பூரணர் 'மயங்கா மரபு', 'முறைப்பட எண்ணி' என்ற இரு தொடர்கள் வழியாக, முந்தைய நூல்களின் எழுத்து, சொல் மயக்கநிலை என்னும் வழுக் களைந்த உருவாக்கம்தான் தொல்காப்பியம் என்ற கருத்தை முன்வைக்கிறார்.

"அம்முந்து நூல்களில் ஒன்றற்குரிய இலக்கணத்தினை ஒன்றன் இலக்கணத்தோடு ஆராய்ந்தாற்போல ஆராயாது முறைப்பட ஆராய்ந்து" (1955:7)

"அவ்வெழுத்தும் சொல்லும் செய்கின்றுழி முன்னை நூல்போல எழுத்திலக்கணம் சொல்லுட் சென்று மயங்காத முறைமையானே" (1955:6)

என்று சொல்லிலக்கணத்துள் எழுத்திலக்கணம் மயங்கிவந்த வழு தொல்காப்பியத்தில் களையப்பட்டுள்ளது என்று கூறுகிறார்.

இளம்பூரணர் இக்கருத்தைத் தொல்காப்பிய உருவாக்கத்திற்கான முக்கியக் காரணமாகவும் அதன் இன்றியமையாமை இதன்வழி உணரப்பட வேண்டும் என்றும் கருதியிருக்கிறார். எனவேதான் முந்து நூல்களுடன் தொல்காப்பியத்தை ஒப்பிட்டுக் கூற வாய்ப்பு கிடைத்த இரு இடங்களிலும் இக்கருத்தைக் கூறியதுடன் சிறப்புப் பாயிர உரையை முடிக்குமிடத்தும்,

" 'எழுத்தும் சொல்லும் பொருளும்' என வைத்துப் பின்னும் 'மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி' என்றது, பிறநூல் போலச் சொல்லுள் எழுத்தினை மயக்கிக் கூறாது, வேறு சேரக் கூறினாரென்ற தென்பது" (1955:8)

என மூன்றாவது முறையாகவும் இதே கருத்தை வலியுறுத்திக் கூறி முடிக்கிறார்.

இளம்பூரணர் இம்மயக்க நிலையில் பொருளிலக்கணத்தைக் கொண்டு வரவில்லை. ஆனால் நச்சினார்க்கினியர் முந்து நூல்களில் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றும் கலந்திருக்கிறது என்கிறார்.

"அம் மூவகை யிலக்கணமும் மயங்கா முறைமையால் செய்கின்றமையின் எழுத்திலக்கணத்தை முன்னர்க் காட்டிப் பின்னர் ஏனை இலக்கணங்களையும் தொகுத்துக் கூறினான்," (2017:41).

நச்சினார்க்கினியர் முந்து நூல்களாக அகத்தியம், மாபுராணம், பூதபுராணம், இசைநுணுக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு இந்நூல்களில் கூறிய இலக்கணங்களாக "எழுத்துச் சொற் பொருள் யாப்பும் சந்தமும் வழக்கியலும் அரசியலும் அமைச்சியலும் பார்ப்பனவியலும் சோதிடமும் காந்தருவமும் கூத்தும் பிறவுமாம்" (2017:43) ஆகியவற்றைக் கூறுகிறார். 'எழுத்து சொற் பொருள் யாப்பு' ஆகியவற்றை ஒன்றிணைத்து முதலாவதாகக் கூறியுள்ளதை அகத்தியத்திற்குரியதாக நிரல்நிரையாகத் தொடர் வரிசையை நோக்குவதின்வழி பொருள் கொள்ள முடியும். இங்கு, நச்சினார்க்கினியர் அகத்தியத்தை மட்டும் முந்துநூலாகக் கொள்ளவில்லை. பிற நூல்களையும் இணைத்தே கூறியுள்ளார். அகத்தியத்தில் இலக்கணக் கூறுகள் மயங்கியிருந்தன என்றும் நச்சினார்க்கினியர் நேரடியாகக் கூறவில்லை.

ஆனால் முந்து நூலில் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ்க் கூறுகள் கலந்திருந்தன என்றும் அம்மயக்கம் தொல்காப்பியத்தில் களையப்பட்டிருக்கிறது என்றும் கூறும் பிற்கால உரையாசிரியரான சிவஞான முனிவர் அம்முந்துநூல் அகத்தியம்தான் என்று முடிவாகி,

"அகத்தியத்துள் முத்தமிழும் விரவக் கூறப்பட்டன. அவற்றுள் இயற்றமிழை வேறு பிரித்து வழிப்படுத்தார் தொல்காப்பியர் முதலாயினோர்" (1946:16) என்கிறார். இவ்வாறே அகத்தியத்திலிருந்து இசைத்தமிழ் பிரிக்கப்பட்டு பெருநாரை, பெருங்குருகு என்னும் நூல்களாயின எனவும், நாடகத்தமிழ் பிரிக்கப்பட்டு முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்னும் நூல்களாயின எனவும் கூறுகிறார். அதற்கேற்ப, 'எழுத்து முறை காட்டி' என்ற தொடரில் உள்ள எழுத்து என்பதை அவர் இயற்றமிழாகத்தான் கொள்கிறார்.

அரசஞ்சண்முகனார் இவ்விருவிதமான கலப்புகளுடன் சோதிடம், காந்தருவம், கூத்து, வரி முதலாயினவும் முந்துநூல்களில் கலந்திருந்திருக்கின்றன என்னும் கருத்தினை உடையவராகயிருக்கிறார் (1905:177).

இக்கருத்துக்களை இணைத்துப் பார்த்தால் முந்துநூல்களிலிருந்து,

1. எழுத்து சொல் பொருள் என்னும் இலக்கண முதன்மை உட்பிரிவுகளைச் சரியானபடி பிரித்தெடுத்து பனுவலாக்குதல்
2. இயற்றமிழைப் பிரித்தெடுத்துப் பனுவலாக்குதல்

என்னும் இருவகையினதாகக் கூறப்படும் தொல்காப்பியப் பனுவலாக்கத்தில் முதற்கருத்தே தொல்காப்பியத்தின் தர மேம்பாட்டினைச் சுட்டிக்காட்டும் கருத்தாகிறது. காரணம், தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல். இயற்றமிழைப் பிரித்தெடுத்துப் பனுவலாக்குதல் என்பது சிறப்பாயினும், ஓர் இலக்கண நூல் அதன் உட்கூறுகளை வகைப்படுத்தியும் அவற்றிற்கிடையேயான கலப்புகளைக் களைந்தும் உருவாக்கப்படுதல் என்பதுதான் மேம்பட்ட நிலையை உணர்த்துகிறது.

**முறைப்படுத்துதல்**

தொல்காப்பியம் முந்து நூல்களிலிருந்து மேம்பட்ட தன்மையை ‘முறைப்பட எண்ணி’ உருவாக்கிய தன்மை அடையாயளங் காட்டுகிறது. தொல்காப்பியத்தில் முறைப்படுத்தப்பட்டன,

1. உட்பொருள்
2. அமைப்பு
3. வாசிப்பாளர் நோக்கிற்கானவை

என்னும் மூன்று நிலைகளில் அமைகின்றன. ஒரு இலக்கணத்துள் மயங்கியிருக்கும் மற்றொரு இலக்கணத்தைப் பிரித்து சரிசெய்திருப்பது (1955) உட்பொருள் அடிப்படையிலான முறைப்படுத்தலாக அமைகிறது. அவற்றைச் சரிசெய்து ‘முதலில் எழுத்து கூறி’ (2017) தொடங்கி, அதிகார அமைப்பில் பனுவல் அமைக்கப்பட்டிருப்பது அதன் அமைப்பு நிலை அடிப்படையிலான முறைப்படுத்தலாகிறது.

அதிகாரங்கள், இயல்கள், நூற்பாக்கள், சொற்கள், அகம்புறம் போன்றவற்றின் வைப்புமுறை, திணை பால் வகுப்புமுறை, எழுத்துக்களை வரையறைக்கு உட்படுத்துதல் ஆகியன அனைத்தும் ‘முறைப்பட எண்ணி’யவாறு என்கிறார் ஆ.சிவலிங்கனார் (1980:74-75).

இவ்அதிகார அமைப்பு ஏற்படுத்தியதற்கான காரணமாக நச்சினார்க்கினியர் கூறும்போது,

“அவ் விலக்கணங்கள் எல்லாம் சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுனோர்க்கு அறியலாகாமையின் யான் இத்துணை வரையறுத்து உணர்த்துவல்..”(2017:40)

என்கிறார். இது பனுவலை வாசிப்பாளர் நோக்கில் முறைப்படுத்தலை மேற்கொண்ட அடுத்த நிலை செயல்பாட்டினைக் குறிக்கிறது. இச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோர் என்போர் மாணாக்கர் என்று வருவிக்கிறார் சிவஞான முனிவர்.

எனவே வாசிக்கும் பிற்காலத்தவரைக் (1946:105) கவனத்தில் கொண்டு நூலை முறைப்படுத்தியிருத்தல் அதன் தரமேம்பாட்டினை உணர்த்தக்கூடிய முக்கிய கூறாகிறது.

**முடிவுரை**

தொல்காப்பியம் என்னும் பனுவல், போக்கறு பனுவலாக உருபெற்றிருப்பதற்கு ‘மயங்கா மரபு’, ‘முறைப்பட எண்ணி’ என்னும் இரு கூறுகளும் இவற்றின்வழி பெறப்படும் கருத்துக்களும் காரணங்களாகக் கூறத்தக்கன. இதே தளத்தில் எழுதப்பட்ட முந்தைய நூல்களின் மயங்கிய நிலை மற்றும் முறைப்பட எண்ணாதிருத்தல் என்னும் வழுக்கள் களையப்பட்டு தொல்காப்பியப் பனுவல் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்நிலை தொல்காப்பியத் தர மேம்பாட்டு

செயல்நிலையைக் குறிக்கிறது. இம்மேம்பாடு வாசிப்பாளரை எண்ணத்தில் கொண்டு நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்ற உரையாசிரியர்களின் கருத்து தொல்காப்பியப் பாயிரம் உணர்த்தும் அதன் சிறப்பை மேலும் மிகுவிக்க உதவி புரிகிறது. ஒரு துறையில் வரிசையாக எழும் நூல்களின் தரப் படிநிலைகளைக் கவனத்தில் கொண்ட தொல்தமிழரின் ஆழ்ந்த அறிவுப் பரப்பின் அடையாளமாக இதனைக் கொள்ளமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. அரசஞ் சண்முகனார், பாயிர விருத்தி, ஸ்ரீவித்ய விநோதினி முத்திரா சாலை, தஞ்சை, 1905.
2. அறவேந்தன், இரா., லோகேஸ்வரன்,ம., (ஆய்வு), தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, 2017.
3. இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் எழுத்ததிகாரம், கழக வெளியீடு, 1955.
4. சிவஞான முனிவர், கோவிந்தராச முதலியார்.கா.ர., (விளக்கக் குறிப்பு), தொல்காப்பியச் சூத்திர விருத்தி, 1946.
5. சிவலிங்கனார்.ஆ., (தொ.ஆ.), தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, மு.ப.1980, மீள்பதிப்பு 2015-2016.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Asiathara M., (2021) Advanced Quality Installation in Tholkappiyam, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:15-18. Cauvery College For Women, Trichy.

**முனைவர் து.நீலாதேவி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனிதசிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சி -2

# பொருள் மொழிக் காஞ்சித்துறைப் பாடல்களில் தமிழர்களின் வீர அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

புறநானூற்றில் காணும் பொருள்மொழிக்காஞ்சித்துறைப் பாடல்களின் மொத்த எண்ணிக்கை பதினாறு. இப்பாடல்களில் மூன்றனுள் மட்டும் பாட்டுடைத் தலைவர்களாக மூவர் அறியப்படுகின்றனர். பாடிய பதினாறு புலவர்களில் அறுவர் அரசர்கள் ஆவர், இப்பாடல்கள் அனைத்தும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு காணப்படுகின்றன. புறநானூறு, வேந்தர்களின் வீரப்பண்பினையும் கொடைப்பண்பினையும் விவரிக்கும் நூல் என்ற எண்ணத்தை மாற்றும் வகையில் இத்தகைய பாடல்கள் அமைந்துள்ளன. எட்டுத்தொகையில் இடம்பெற்ற புறநூலான பதிற்றுப்பத்தில் இவை போன்ற சிறந்த செய்யுட்கள் இல்லாமை அறியத்தக்கதாகும்..

**கலைச்சொற்கள்;**

| | | | |
|---|---|---|---|
| **1. காஞ்சி** | **- நிலையாமை** | **2. சான்றோர்கள்** | **- பண்புடையவர்கள்** |
| **3. ஈதல்:** | **- கொடை** | **4. திரை** | **- கடல்** |

**முன்னுரை**

எட்டுத்தொகை நூல்களில் புறப்பொருள் பற்றி நானூறு தனிப்பாடல்களை கொண்ட ஒரு தொகை நூல் புறநானூறு ஆகும். இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலுக்கும் திணை, துறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவ்வகுப்பு முறை தொல்காப்பியப் புறத்திணையியல் கூறும் திணை, துறைகளைப் பின்னொற்றியதாகக் இல்லாமல், புறப்பொருள் வெண்பாமாலையின் திணை, துறைகளைப் பின்பற்றியதாகக் காணப்படுகிறது. இதனுள், காஞ்சித்துறைப் பாடல்கள் மொத்தம் 25 ஆகும். இப்பாடல்கள் பொருள்மொழிக்காஞ்சி, முதுமொழிக்காஞ்சி, வஞ்சினக்காஞ்சி, பொதுமொழிக்காஞ்சி என்னும் நான்கு காஞ்சித்துறைகளுக்கு உரியனவாக அமைந்துள்ளன. இவற்றுள் முதற்கண் பொருள்மொழிக்காஞ்சித்துறைப் பாடல்களின் தன்மைகளை ஆராய்வதே ;நோக்கமாகும்.

**வாழ்க்கை இன்பம்:**

மாங்குடி மருதனார், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் அவைக்களத் தலைமைப் புலவராவார். இது,

“ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவனாக”**1**

என வரும் பாடலடிகளால் புலப்படும்.

இவர் அவனுக்கு நிலையாமையைச் செவியறிவுறுத்தி, ‘மதுரைக்காஞ்சி’ என்னும் நீண்ட பாட்டை அவன் மீது பாடினார். இப்பாட்டுப் பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ளது. எப்பொழுதும் பல போர்களில் ஈடுபட்டுத் தன் வாழ்நாளில் பெரும்பகுதியைப் பாண்டியன் கழிப்பதைக் காணும் இப்புலவர், அவன் வாழ்க்கை இன்பத்தை இழந்து நின்றதற்காக வருந்துகிறார். ஆகவே, உலகத்தில் தோன்றிய பலர் வாழ்க்கை இன்பத்தை நிரம்ப நுகராது வீணே வாழ்ந்து மறைந்தனர். இதனால், அவர்கள் வாழ்க்கையைச் செவ்வன வாழ்ந்தவர்களாகக் கருதப்படார்.

அத்தகையவருள் ஒருவனாய் நீயும் ஆகாமல், வீரர்கள் உன் தாள்களை வாழ்த்த இரவலர்கள் உன் கொடைச்சிறப்பைப் பாராட்ட, மகளிரோடு மகிழ்ச்சியோடு கூடி வாழ்க்கையை இனிதாய் நுகர்வாயாக இத்தகைய வாழ்க்கை வாழ்பவர்கள்தாம் வாழ்ந்தவர்களாகக் கருதப்படுவர்.4 என நிலையாமைப் பொருளைத் நன்னெறிப்படுத்துகின்றார்.

**சான்றோர் பண்புகள்:**

இளம்பெருவழுதி, பாண்டிய மன்னன் ஆவான். இவன் கவி இயற்றும்; புலவனுமாவான். இவன் யாது காரணத்தாலோ கடலில் தன்னுயிரை இழந்ததனால், 'கடலுள் மாய்ந்த' என்று அடைமொழி கொடுக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டான். இவன் தன் பாட்டில் கூறும் பொருள்மொழிக்காஞ்சி, 'சான்றோர்களின் பண்புகள் இன்னின்னவை' என்பதாகும்.

"அன்ன மாட்சி யனைய ராகித்

தமக்கென முயலா நோன்றாள்

பிறர்க்கென முயலுந ருண்மை யானே

உண்டா லம்மவிவ் வுலகம்"2

என்று பாட்டின் முடிவில் உலகம் நிலைபெற்று வருவதற்கான காரணத்தைத் தெரிவிக்கின்றான். இவன் கூறிய பொருளையே திருவள்ளுவரும் தம் திருக்குறளில்,

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்

மண்புக்கு மாய்வது மன்"**3**

கூறுதல் அறியத்தக்கது.

1.தேவர்களின் உணவாகிய உயர்ந்த அமிழ்தமே தமக்குக் கிடைக்கப் பெற்றாலும், 'இனியது' என்று கூறித் தாம் மட்டும் தனித்து உண்ணமாட்டார்கள்.2.யார் மீதும் கோபமும் வெறுப்பும் கொள்ளமாட்டார்கள். 3.சோம்பலை மேற்கொள்ள மாட்டார்கள். 4.அஞ்சக்கூடியவற்றிற்கு அஞ்சுவர் 5.புகழ் வருவதென்றால் அதன் பொருட்டுத் தம் உயிரும் கொடுத்து அப்புகழை நிலைநிறுத்துவர். 6.பழி வருவதென்றால் உலகமே தமக்குப் பரிசாகக் கிடைத்தாலும் அப்பழியை ஏற்காது புறக்கணிப்பர் (பழி உண்டாகக் கூடி செயல்களைச் செய்யமாட்டார்கள்)7.மனத்தளர்ச்சி அடையமாட்டார்கள்.8.தங்கள் நன்மைக்கென்று முயற்சி செய்யாது, பிறரது நன்மைக்கென்று முயற்சி செய்வர்.**4**

இப்பண்புகளில் ஒன்றுகூட அமைய பெறாதவர்களே உலகத்தில் அதிகம் உள்ளனர். இத்தகு பண்புகள் தாம் ஒருவரைச் சான்றோர் என்று அறிவதற்குரிய அடையாளங்களாம். சான்றோர்களாகிய இச்சிலரால்தாம் உலகம் நிலைப்பெற்றுச் சான்றோர்கள் அல்லாத பலருக்காகவும் தொடர்ந்து இயங்கிக்கொண்டு வருகிறது.

**கல்விப்பெருமை:**

பாண்டியர்களில் நெடுஞ்செழியன் என்று பெயர் பெற்றவர்கள் பலராவர். அவர்களில் ஒருவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனாவான். இவன் அரசனே அன்றிக் கவி இயற்றும் புலவனுமாவான். கல்வி கற்றலின்; நன்மையைக் குறித்து இவன் பாடிய பொருள்மொழிக்காஞ்சித்துறைப் பாடல் புகழ் பெற்றது.

**"உற்றுழி யுதவிய முறுபொருள் கொடுத்தும்**

**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" 5**

**எனக் கல்வி கற்குமுறை,**

**" பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளம்**

**சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்"6**

**எனக் கல்வி கல்லாமையினால் நேரும் இழிவு,**

**“ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**

**மூத்தோன் வருக வென்னா தவருள்**

**அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்”7**

**எனக் கல்வி கற்றவனை அரசரும் மதிக்கும் இயல்பு,**

**“வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்**

**கீழ்ப்பா லொருவன் கற்பின்**

**மேற்பா லொருவனு மவன்கட் படுமே”8**

எனக் கல்வி கீழ்க்குலத்தவனையும் உயர்த்துவது ஆகியன இப்பாடலில் நிரல்பட இவனால் எடுத்தியம்பப்படுகின்றன.

**கற்றலின் நன்மைகள்:**

ஓர் ஆசிரியனிடத்திருந்து கல்வி கற்கும்போது அவ்வாசிரியனுக்கு உற்ற சமயங்களில் பல உதவிகள் புரிந்தும், தன்பாலுள்ள பொருள்களை அவனுக்கு வேண்டுமளவு கொடுத்தும், எப்பொழுதும் அவன் பின்னேயே நிற்கும் நிலைமையை வெறுக்காதும் ஒருவன் கல்வி கற்பது சிறப்பாகும். ஒரே வயிற்றில் உடன்பிறந்தவர்களிலும், கல்வி கற்பவன் எவனோ அவனைக் கொண்டாடிக் கல்வி கற்காதவன் எவனோ அவனைப் புறக்கணித்தல் பெற்ற தாயிடத்தும் நிகழும். ஒரு குலத்தில் பிறந்த பிள்ளைகளுள் பலருள் கல்வி பயிலாத மூத்தவனைப் புறந்தள்ளிக், கல்வி பயின்று அறிவுடைய இளையவர்களில் ஒருவனை அரசனும் விரும்பியேற்றுத் தன்னருகில் அமர்த்திக் கொள்வான்.

தொழில் வேறுபாடு அறியப்பட்ட அந்தணர். அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு சாதியருள்ளும், கீழ்ச்சாதி வேளாளன் ஒருவனும் கல்வி கற்றால் கல்வி கல்லாத மேல்சாதி அந்தணனும் கல்வி பயின்ற அவ்வேளாளனிடத்தே சென்று தாழ்ந்து நிற்பான். இங்ஙனம் கல்வி கற்பதால் விளையும் நன்மைகளைப் பாண்டியன் நெடுஞ்செழியன் விரித்துரைக்கின்றான். இப்பாட்டில் தான் கண்டு தெளிந்த செம்பொருளின் சிறப்பை உலகத்தவர் அனைவருக்கும் பொதுவாகக் கூறி அறிவுறுத்தியதால் பொருள்மொழிக்காஞ்சி ஆயிற்று.

**மன்னனே நல்லுயிர்**

மன்னர்களை புகழ்ந்து பாடிச் பரிசில் பெற்று வாழ்ந்த மோசிகீரனார் என்னும் புலவர், எந்த மன்னனையும் சுட்டாமல் பொதுவாக எல்லா வேந்தருக்குரிய கடனை ஒரு பாட்டில் பொருள் மொழிக்காஞ்சியாக வைத்து வலியுறுத்தியுள்ளார். ‘இவ்வுலகில் வாழும் மக்களுக்கு நெல்லும் உயிரன்று: மன்னன் யாவனாயினும் அவன் தன்னை உலகிற்கு உயிராகும் தன்மையை அறிந்து செங்கோல் வழுவாது, குடிமக்களை வருந்தாது அரசு புரிய வேண்டும்’ என்கிறார். இது,

**“நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே**

**மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்**

**அதனால், யாயினும் ரென்ப தறிகை**

**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே”9**

என்னும் பாடலாக வெளிப்படுகிறது. ‘நெல்லும் நீரும் உலகிற்கு உயிர்களானாலும் அவை அற்ப உயிர்களாம். மன்னன் ஒருவனே அதற்குப் பெரிய உயிராவான்’ என்பது இப்பாட்டில் புலவர் கண்டறிந்து தெளிந்துரைத்த செம்பொருளாகும். இதனைப் திருத்தக்கத்தேவரும் சீவகசிந்தாமணியில் எடுத்துரைத்துள்ளார்.

**“நெல்லுயிர் மாந்தர்க் கெல்லாம் நீருயிர் இரண்டும் செப்பிற்**

**புல்லுயர் புகைந்து பொங்கு முழங்கழல் இலங்கு வாட்கை**

**மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்**

**நல்லுயிர் ஞாலந் தன்னுள் நாமவேல் நம்பி என்றான்"10**

**என்பது சீவகசிந்தாமணிப் பாடலாகும்.**

**செல்வத்துப்பயன் ஈதல்:**

சங்கச் சான்றோருள் பெரும்புலமை வாய்ந்தவர் நக்கீரர் ஆவார். இவர் மதுரைக்கணக்காயனார் என்ற புலவரது மகன் ஆவார். பல அகப்பாட்டுக்களையும் புறப்பாட்டுகளையும் பாடியவர். பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையும் நெடுநல்வாடையும் இவர் இயற்றினவாம். இவர் மூவேந்தர்களோடும் குறுநில மன்னர்களோடும் நெருகிப் பழகியவர். அங்ஙனமே சாதாரண குடிமக்களின் இயல்புகளையும் நன்கறிந்தவர். ஒருவனுக்கு ஊழ்வினையால் எண்ணிறந்த செல்வங்கள் குவிந்தாலும் அச்செல்வம் அத்தனையையும் அவனால் தன் வாழ்நாளில் அனுபவித்து மகிழ முடியாது.அவையெல்லாம் பல வழிகளில் அவனிடமிருந்து கைவிட்டுப் போகவே செய்யும் ஆகவே, அச்செல்வங்களைப் பிறருக்கும் கொடுத்து அவற்றை அவர்களும் நுகர்ந்து பயன்பெறுமாறு செய்யவேண்டும்.**11**

"காரணம், மக்களில் உயர்ந்த நிலையில் இருப்பவர்களும் நாழியளவே உணவு உண்பர். அவர்கள் உடுப்பவையும் மேலாடை, கீழாடை என்னும் இரண்டு மட்டுமேயாம். அவ்வாறே தாழ்ந்த நிலையில் இருப்பவர்களும் நாழியளவே உணவு உண்பர். அவர்கள் உடுப்பவையும் மேலாடை, கீழாடை என்னும் இரண்டு மட்டுமேயாம். மற்ற நிகழ்வுகளும் இரு பிரிவினருக்கும் சம அளவிலேயே நிகழும்"12 ஆதலின், செல்வவத்தைப் பாதுகாத்து வைத்து தம் நுகர்ச்சிக்கு மட்டும் அதைப் பயன்படுத்தினால் அச்செல்வமே அவர்களுக்குத் தீங்காக முடியும். ஆகவே, தேவைக்கேற்ப அதனை நுகர்ந்து எஞ்சியவற்றை மற்றவர்களுக்கு அளித்து மகிழ வேண்டும். இங்ஙனம் தாம் கண்டறிந்த செம்பொருளை ஈயாத உலோபிகளுக்கு ஒரு பாட்டில் எடுத்துரைத்துத் தெளிவித்து அவர்களை நன்னெறிப்படுத்துகின்றார் நக்கீரர்.

எத்தகையோர்க்கும் உயிர் வாழ்வதற்குச் சிறிதளவு உணவும் குறைந்த அளவிலான ஆடைகளும் போதும் என்று வலியுறுத்துவதன் வாயிலாத் தனியுடைமையைப் பொதுவுடைமையாக்குமாறு மக்களுக்கு இப்புலவர் அறிவுறுத்துகின்றார். இக்காலத்துப் பொதுவுடைமைக் கருத்து மூலம் சங்ககாலத்துப் புறப்பாட்டில் காணப்படுவதால் இங்குச் சிறப்பாக உணரத்தக்கது.'பொதுமை' என்ற சொல்லும் பாட்டில் இடம்பெற்றுள்ளது.

**ஊக்கமுடையார் நட்பு:**

சோழ மன்னருள் நல்லுருத்திரன் என்பவனும் ஒருவனாவான். இவன் புறநானூற்றில் பொருள்மொழிக்காஞ்சித்துறையாகப் பாடிய ஒரு பாடல் ஆழ்ந்த கருத்துடையது. இப்பாட்டில் எலி, புலி என்னும் இரண்டு விலங்குகளின் செயல்களை ஒப்பிட்டுச் சுட்டியுணர்த்தி, எலி போன்ற ஊக்கம் இல்லாதவருடைய நட்பு வேண்டத்தக்கது அன்று என்றும், புலி போன்ற ஊக்கம் உள்ளவருடைய நட்பே வேண்டத்தக்கது என்றும் தெளிவுபடுத்தியுள்ளான். எலியானது பிறர் முயற்சியில் விளைந்த முற்றிய பயிர்களை மிக எளிதாக வருத்தமின்றித் தான் கவர்ந்து தன் வளையில் வைத்துப் பாதுகாத்து உணவாக்கிக் கொள்ளும். மறவர் உழைப்பினால் உண்டான பயனைத் தான் நுகரும் எலியின் அவருக்கத்தக்க இச்சிறிய முயற்சி விரும்பத் தக்கதன்று.

"**விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்**

**வல்சி கொண்டளை மல்க வைக்கும்**

**எலிமுயன் றனைய ராகி யுள்ளதாம்**

**வளன்வலி யுறுக்கு முளமி லாளரொ**

**டியைந்த கேண்மை யில்லா கியரோ"13**

ஆனால், புலியோ வேட்டையாடுகையில் தன்னால் தாக்கப்பட்ட பன்றி தனக்கு இடப்பக்கம் வீழ்ந்ததனால் அதனை உண்ணாது அன்று பசியோடு இருக்கும். மறுநாள் முயற்சியோடு கூடி ஒரு பெரிய ஆண்யானையை வேட்டையாடி அதனைத் தனக்கு வலப்பக்கம் வீழுமாறு செய்து அதன் உடலைத் தின்று தன்பசி தீரப் பெறும். இவ்வாறு தன் கடுமையான உழைப்பினால் உண்டான பலனை மட்டும் தான் நுகரும் புலியின் பாராட்டத்தக்க இப்பெரிய முயற்சியே விரும்பத்தக்கது.

**"கடுங்கட் கேழ லிடம்பட வீழ்ந்தென**
**அன்றவ ணுண்ணா தாகி வழிநாள்**
**பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்**
**திருங்களிற் றொருத்த னல்வலம் படுக்கும்**
**புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்**
**துரனுடை யாளர் கேண்மையொ**
**டியைந்த வைக லுளவா கியரோ"14**

இங்ஙனம் இவ்விரு உயிர்களின் வேறுபட்ட செயல்பாடுகளின் வாயிலாகத் தான் கண்டு தெளிந்த செம்பொருளைச் சோழன் உலகத்தவருக்குத் தெரியப்படுத்தி அறிவுறுத்தியதனால் இப்பாட்டுப் பொருள்மொழிக்காஞ்சி ஆயிற்று.

**செம்மை வாழ்க்கை:**

பிசிராந்தையார் என்னும் பாண்டியநாட்டுப் புலவர் மன்னர்களாலும் மற்றப் புலவர்களாலும் மதிக்கப்பட்டவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் அன்பும் அருளும் அஞ்சாமையும் நிரம்பியவர். கோப்பெருஞ்சேழனுக்கு உயிர் நண்பர். தம் காலத்துபுலவர்களில் மூத்தவராய் ஆண்டுகள் பல சென்றும் நரைதிரை விகாரங்கள் இன்றி இளமைத்தோற்றத்தவராய் அவர்களுக்குக் காட்சியளித்தார். இவர்தம் உருவப்பொலிவைக் கண்டு வியப்புற்ற சோழநாட்டுப் புலவர்கள் இவரிடம் அதற்கான காரணத்தை வினவுகின்றனர். அவ்வினாவிற்கு இவர், 'தம் அகவாழ்க்கையும் புறவாழ்க்கையும் செம்மையாக அமைந்தமையால் உண்டான இடைவிடாத மகிழ்ச்சிதான் தமக்கு இதுவரை நரைதிரை தோன்றாமைக்கான காரணம் என்று விடை கூறுகின்றார்.

**வாழ்க்கை நுட்பம்:**

நற்குணங்களில் மேம்பட்டுக் கீழ்படிந்து ஒழுகும் மனைவி, பிள்ளை பணியாட்களால் தம் அகவாழ்;க்கையும்,15 கொடுங்கோன்மை புரியாத மன்னன்,சான்றோர் ஆகியோரால் தம் புறவாழ்க்கையும் 16 சிறந்தன என்று கூறும் ஆந்தையார், இரு வாழ்க்கைகளாலும் தமக்கு எவ்விதமான மனத்துன்பமும் நிகழாமையின் தமக்கு நரைதிரை விகாரங்கள் தோன்றவில்லை என்று குறிப்பாகத் தெளிவுபடுத்துகின்றார். தாம் கண்டு தெளிந்த துன்பமில்லாத இன்ப வாழ்க்கையின் நுட்பத்தை அனைவரும் அறிய எடுத்துரைத்ததனால், இவை பற்றிய பாடல் பொருள்மொழிக்காஞ்சி ஆயிற்று.

**புலவர்கள் பெருமை:**

'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்னும் தொடர் இன்று அனைவராலும் பெருமிதத்துடன் பேச்சிலும் எழுத்திலும் கையாளப்படுகிறது. இவ்வழகிய தொடர், கணியன்பூங்குன்றன் என்னும் புலவர் பாடிய புறநானூற்றுப் பாடலின்"26 முதல் அடியாகும். இப்பாடலில், தன்மையொத்த புலவர்களிடத்து விளங்கிக் காணப்படும் அரிய குணங்களைப் புலவர்களின் பெருமையை அறியாத சிறுமைக்குணம் படைத்த மன்னர்களுக்குப் பூங்குன்றனார் விளங்க எடுத்துரைக்கின்றார்.

'புலவர்களுக்கு எந்த ஊரும் சொந்த ஊராகும். அவ்வூரில் வாழும் மக்கள் அனைவரும் அவர்களுக்கு உறவினராவர். தீமையும் தன்மையும் அத்தகையோர்க்கு நேரும் வருத்தமும் மகிழ்ச்சியும் கூட மற்றவர்கள் காரணம் ஆகார். இறப்பை இதற்கு முன்னர் ஒவ்வொரு பிறவியிலும் அவர்கள் அனுபவித்து அறிந்தவர்களாதலின், அஃது அவர்களைப் பொறுத்தவரையில் புதியது அன்று இனிமை மிக்க வாழ்க்கை

அமைந்ததற்காக மகிழ்ச்சியடைய மாட்டார்கள் வெறுப்பை விளைவிக்கும் இனிமையற்ற வாழ்க்கை அமைந்ததற்காக மகிழ்ச்சியடைய மாட்டார்கள். வெறுப்பை விளைவிக்கும் இனிமையற்ற வாழ்க்கை அமைந்ததற்காக துன்பமும் அடையமாட்டார்கள்.

ஆற்றுநீரோடும் வழியில் தானும் செல்லும் தெப்பத்தைப் போல, உயிரானது ஊழ்வினைக்கு உட்பட்டு நடக்கும் என்பதைத் தெளிந்தவர்கள். ஆகவே, குணங்களால் மாட்சிமைப்பட்ட பெரியோர்களை வியப்போடு நோக்கமாட்டார்கள்.குணங்களால் மாட்சிமைப்படாத சிறியோர்களை இகழ்ச்சியோடு எக்காலத்திலும் உள்ளத்துச் சமநிலை தவறாத வாழ்க்கை வாழ்பவர்களாகப் புலவர்கள் திகழ்வதைச் சுட்டியுணர்த்தி அவர்கள் பெருமையை உலகறியச் செய்கின்றார்.

**தொகுப்புரை:**

புறநானூற்றில் திணை, துறை வகுப்புமுறை தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பாக்களின் வழி அமையாது, புறப்பொருள் வெண்பாமாலையின் கொளுச்சூத்திரங்களைப் பின்பற்றியதாக உள்ளது. புறநானூற்றில் பொருள்மொழிக்காஞ்சித்துறைப் பாடல்கள் பதினாறனுள், ஆறு பாடல்களை அரசர்கள் மட்டுமே பாடியுள்ளனனர்.வேந்தர்கள் மீது புலவர்கள் பாடிய பொருள்மொழிக்காஞ்சிப் பாடல்களில் அம்மன்னர்களை நெறிப்படுத்தும் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**சான்றெண் விளக்கம்**

1. புறம்.பா.எண்.121
2. மேலது,பா.எ.182:7-9:1.
3. திருவள்ளுவர்,திருக்குறள்,குறள் எண்.996.
4. புறம்.பாடல்எண்.182:1-9.
5. மேலது,பா.எ.183:1-2.
6. மேலது,பா.எ.183:3-4
7. மேலது,பா.எ.183:5-7
8. மேலது,பா.எ.183:8-10
9. மேலது,பா.எ.186.
10. திருத்தக்கத்தேவர், சீவகசிந்தாமணி,பா.எ.2908.
11. மேலது,பா.எ.189:7-8
12. மேலது,பா.எ.189:1-6
13. மேலது,பா.எ.190:1-5
14. மேலது,பா.எ.190:6-12
15. மேலது,பா.எ.191:3-4
16. மேலது,பா.எ.191:4-7

**பார்வை நூல்கள்**


1. ஐயனாரிதனார் — புறப்பொருள்வெண்பாமாலை, கழகவெளியீடு, சென்னை-18, இரண்டாம்பதிப்பு 2004
2. துரைச்சாமிப்பிள்ளை,ஔவை,சு., — புறநானூறு மூலமும் உரையும், கழகவெளியீடு, சென்னை-18, மறுபதிப்பு 2007



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Neeladevi D., (2021) Tamil Heros Ralour identities in Porul Mozhi Kanji Thurai Songs, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:19-24. Cauvery College For Women, Trichy.

**முனைவர் எம் எஸ் ஸ்ரீ லக்ஷ்மி,**
மேனாள் விரிவுரையாளர்,
சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்

# முல்லைக்கலி காட்டும் தமிழ்ப்பண்பாட்டு அடையாளம் – ஏறுதழுவல்

## ஆய்வுச்சுருக்கம்

ஏறுதழுவல் என்னும் வீரவிளையாட்டு தமிழர் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகச் சங்க இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தொன்மை வாய்ந்த இதற்கு ஏறுகோள், விடைகோள் என்னும் பெயர்களும் உண்டு. இதுகுறித்த நச்சினார்க்கினியரின் கருத்தும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. முல்லைநில மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றான இதனைப்பற்றி முல்லைக்கலியின் ஏழு பாடல்களைக் கொண்டு இக்கட்டுரை ஆய்வுநோக்கில் எழுதப்பட்டுள்ளது. ஏறுகளின் வகைகள்,அவற்றின் வருணனைகள்,முல்லைநில மக்களாகிய ஆயர்குல ஆடவர்கள் ஏறுதழுவித் தலைவியை மணம் செய்யச்சபதம் எடுத்தல், ஆயமகள் கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மணக்க விழையாமை, ஏறு தழுவி வெற்றிபெற்ற வீரனுக்குக் குரவை அயர்தல், பெற்றோரும் சுற்றமும் தலைவனின் வீரம் கண்டு தலைவியை அவனுக்கு மணம்செய்விக்க இசைதல்,முல்லைநில உரிப்பொருள்கள் முதலிய பல செய்திகள் இக்கட்டுரையில் பேசப்பட்டுள்ளன. திருமண நிமித்தமாக மட்டுமின்றிக் காளைகளின் இயல்பான வாழ்க்கைக்கும் ஏறுதழுவுதல் அவசியமானதாகக் கூறப்பட்டுள்ளது.

## முன்னுரை

காலச்சுழற்சியில் ஓர் இனத்தின் பண்பாட்டு அடையாளங்கள் அதிகாரவர்க்கங்களாலும் இயற்கைச்சீற்றங்களாலும் அழிக்கப்பட்டாலுங்கூட அவற்றையும் கடந்துநின்று இனப்பெருமையை உலகிற்கு உணர்த்திநிற்கும் வல்லமை கொண்டவை. அவ்வகையில் தமிழர் இனத்தொன்மையை ஏற்கெனவே உலகிற்குச் சொன்ன சிந்துசமவெளி நாகரிகமும் இன்றும் உலகிற்கு உணர்த்திநிற்கும் கீழடி அகழ்வாராய்ச்சி முடிவுகளும் ஒவ்வொரு தமிழரையும் பெருமிதம் கொள்ளச்செய்வன ஆகும். இவை தவிர தமிழர் இனமாண்பினைப் புலப்படுத்திநிற்கும் இலக்கியச்சான்றுகளும் சங்க இலக்கியம் என்னும் சுரங்கத்தில் பொதிந்து கிடக்கின்றன. தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றான ஏறுதழுவல் என்னும் வீரவிளையாட்டுக் குறித்த இலக்கியப்பதிவுகள் முல்லைக்கலி என்னும் சங்கப்பனுவலில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

## வீரமும் வெளிப்பாடும்

வீரமும் காதலும் பழந்தமிழர் வாழ்வின் கண்ணெனத் திகழ்ந்தவை. இவ்விரண்டும் ஒன்றோடொன்று கொண்டுள்ள நேரடித்தொடர்புக்கு விளக்கமாக அமைவது ஏறுதழுவல் என்னும் வீரவிளையாட்டு. ஏறுதழுவியவனையே முல்லைநிலத் தலைவி மணக்க விழைவதும் தன்னுடைய வீரத்தை வெளிப்படுத்தி முல்லைநிலத் தலைவன் முல்லைநிலத் தலைவியை மணப்பதும் என ஒன்றின் தொடர்ச்சியாக மற்றொன்று நிகழ்கிறது. கொல்லேறு தழுவுதல், விடைகோள் என்னும் பெயர்களில் இவ்வீரவிளையாட்டு இடம்பெறுகிறது.கொல்லக்கூடிய காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் 'கொல்லேறு தழுவுதல்' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

இந்தியத் தலைநகரில் அமைந்துள்ள தேசியக் கண்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற சிந்துவெளிநாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் காளை ஒன்றின் உருவமும் அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும்

உயிரோட்டமான விதத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளதை நோக்க ஏறுதழுவுதல் என்னும் இவ்வீரவிளையாட்டின் தொன்மையை அறியலாம். கி.மு. 2000 ஆண்டு அளவிலேயே ஏறுதழுவல் வழக்கத்தில் இருந்தது என்று ஐராவதம் போன்ற அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர் (இணையத்தளத்தில் பெறப்பட்ட தகவல்)என்பதையும் நாம் இவண் நினைவுகூர்தல் பொருத்தமாகும்.

**ஏறுதழுவுதலும் உரையாசிரியர் கருத்தும்**

அன்பின் ஐந்திணையுள் முல்லைத்திணையில் முல்லைநில மக்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான ஏறுதழுவும் நிகழ்வினை முல்லைக்கலியின் ஒரு சில பாடல்களை அடியொற்றிக் கைக்கிளைத்திணை என்னும் ஒருதலைக்காமம் என உரையாசிரியரான நச்சினார்க்கினியர் துறை வகுத்து எழுதுவர் (கலித்தொகை, கோவிலூர் மடாலயப் பதிப்பு). அவர், தம் கூற்றுக்குச் சான்றாகக் காட்டுவது முல்லைக்கலியின் முதற்பாடல் ஆகும். இப்பாடலில் ஏறுதழுவும் ஆடவர் பலருள் ஒருவனைக் கண்டு தலைவி காதல் கொள்வதால் அவர் இம்முடிவிற்கு வந்துள்ளதோடு இதனைச் சிறப்பில்லா ஆசுரம் என்னும் வடமொழிமரபாகவும் கூறுகிறார். வடமொழியில் உள்ள எண்வகை மணங்களுள் ஒன்று ஆசுரம் என்பதாகும். தலைவன் தலைவியர் பலராக வரும் வழக்கம் கைக்கிளை, பெருந்திணை என்னும் திணைகளில் உண்டு என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும்.பொருளதிகாரத்தில் இடம்பெறும் "நாடக வழக்கினும்" என்னும் சூத்திரத்தில் "பாடல் சான்ற புலனெறி வழக்கினும்" என்ற அடியில் பாடல் சான்ற என்னும் சொற்றொடருக்கு ஏறுதழுவும் நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுவர். அவ்வகையில் ஆயர்குல ஆடவர் ஏறுதழுவியதைத் தோழி தலைவிக்குக் காட்டி , இன்னின்ன ஏறுகளை இன்னின்னார் தழுவினர் என்று சுட்டிக்காட்டிக் குரவை பாடும் மரபு உண்டு எனக் கூறுகிறார். முல்லைக்கலி நான்காம் பாடலை இவ்வாறு எடுத்துக்காட்டி விளக்குவர்.

**முல்லைக்கலியும் ஏறுதழுவுதலும்**

முல்லைக்கலியில் நமக்கு இன்று கிடைத்துள்ளவை பதினேழு பாடல்கள் மட்டுமே. இவற்றுள் முதல் ஏழு பாடல்கள் ஏறுதழுவுதலைப் பற்றி விரிவாகப் பேசுகின்றன. சோழ அரசனாகிய நல்லுருத்திரன் தம் புலமைத்திறத்தால் நாடகநயம்தோடுப் பாடிய பாடல்கள் கொண்டுகூட்டிப் பொருள்கொண்டு இலக்கிய இன்பம் துய்க்கத்தக்கவை. தோழி கூற்றாக நான்கு பாடல்களும்( 101,103,104,105 ) ,சுற்றத்தார் கூற்றாக ஒரு பாடலும் (102) கண்டோர் கூற்றாக ஒரு பாடலும் (106) , தலைவி கூற்றாக ஒரு பாடலும் (107) அமைந்துள்ளன. இப்பாடல்கள் ஐம்பது அடிகள் சிற்றெல்லையாகவும் எண்பது அடிகள் பேரெல்லையாகவும் கொண்டவை. தலைவன், தலைவி, தோழி, பாங்கன், சுற்றத்தார், கண்டோர் ஆகிய நாடக மாந்தர்களைக் கூற்றுகள் வழி நாம் சந்திக்கிறோம். இவை பல்வகை மெய்ப்பாடுகள் பாங்குற அமையப் பாடப்பட்டவை.

**மழைக்கால மலர்களும் மனங்கவர் வருணனையும்**

முல்லை நிலத்தின் கருப்பொருள்கள் சிறப்புற அமைந்து அந்நில மக்களாகிய ஆயர், பொதும்பர் ஆகியோரின் வாழ்வியலைப் பேசுகின்றன. மழைக்காலம் தொடங்கத் தலைப்பெயலாம் முதல் மழையில் பல்வகை மலர்கள் மலர்ந்துள்ளன. நல்லுருத்திரனின் நயமான வருணனைகள் வழி அம்மலர்கள் நம் கண்முன் மலர்கின்றன.

புறத்தே முள்களை உடையதும் மழைபெய்யுமுன் காய்ந்து கிடந்ததுமான பிடவஞ்செடி அடிப்பக்கம் முதலாகத் தழைத்து மலர்ந்தது. காந்தட்செடிகளோ துடுப்புப்போல அரும்புகள் கோர்த்து நிற்க, கள் குடித்தவனைப்போல அசைந்து ஆடி, தீக்கடைகோலால் உண்டாக்கிய தீச்சுடர்களை அடுக்கிவைக்கப்பட்டதுபோல மலர்ந்தன. காயாம்பூக்களோ நீலமணி நிறத்தில் மலர்ந்தன என முதற்பாடலில் பூக்களின் அமைப்புடன் மலர்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இரண்டாம் பாடலில் தண்நறும் பிடவம், தவழ்கொடித் தளவம், வண்ண வண்தோன்றி, வயங்கிணர்க்

கொன்றை ஆகிய மலர்களை ஆயர்கள் தழை, இழை , கோதை என்னும் வகைவகையான மாலைகளைத் தொடுத்துச் சூடியிருந்தனர் என வருணிக்கிறார் புலவர். மூன்றாம்பாடலில் மலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. மலையிலும் காட்டிலும் பூக்கின்ற பலவகை மலர்களுடன் புல் இலை வெட்சி, குல்லை, குருந்து, கோடல், பாங்கர் ஆகிய மலர்களையும் சூடி ஆயர் மகளிர் ஏறுதழுவும் காட்சியைக் காணப் பரணில் அமர்ந்திருக்கின்றனர். இவ்வாறு சங்ககால மலர்களை முல்லைக்கலி நெடுகிலும் மணம்கமழச்செய்கின்றார் புலவர்.

**ஆயர்குடியின் அருமையும் பெருமையும்**

தோழி கூற்றாக அமையும் நான்காவது பாடலில்

" மலிதிரை ஊர்ந்து மண்கடல் வெளவலின்

மெலிவின்றி மேற்சென்று மேவார்நாடு இடம்படப்

புலியோடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை

வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்

தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய

நல்லினத்து ஆயர்"

என ஆயர்குடி பாண்டியர்குடியுடன் தோன்றிய தொன்மைச்சிறப்புக் கொண்டது எனச் சோழமன்னன் பாடியிருப்பது அவரின் பொறையுணர்வுக்கும் பொதுமை போற்றும் பெருந்தன்மைக்கும் தக்கதோர் எடுத்துக்காட்டாகும்.

**ஏறுகளின் எழிலும் தொன்மங்களாம் உவமைகளும்**

முல்லைக்கலிப் பாடல்கள் சங்ககாலத்தே மக்கள் வளர்த்த ஏறுகள்பற்றி அறிய, அரிய கருவூலங்களாக அமைந்துள்ளன. காளைகள் பார்ப்பதற்குக் கம்பீரமாகக் காட்சி அளிப்பன. திமிலைச் சிலுப்பிக்கொண்டு அவை நடக்கும் மிடுக்கான காட்சி சொற்களுக்குள் அடங்கும் தன்மையது அன்று. ஆகவேதான் "ஏறுபோல் பீடுநடை " என வள்ளுவர் வருணித்தார். காளைகளின் பெயர்களும், அவற்றைப் போட்டிக்காக முல்லைநில மக்கள் அழகுபடுத்தும் திறமும், அவற்றின் கண்கவர் வனப்பும் எல்லாப் பாடல்களிலும் வருணிக்கப்படுவது தனிச்சிறப்பு வாய்ந்த பகுதியாகும். இது நாடகக்காட்சியாக நம் கண்களின் முன்னிற்கும் தகைமைத்தாகும்.

தோழி கூற்றாக அமையும் முதற்பாடலில் பறக்கும் உலண்டு(பட்டுப்பூச்சி) போன்ற சாம்பல் நிறம் கொண்ட காளை பாடப்படுகிறது. கூரிய பார்வை வாய்ந்த அக்காளைக்கு அஞ்சாமல் அதனைத் தழுவ முற்பட்ட பொதுவனைத் தன் கொம்புகளால் அவன் உயிர்பிரியும் அளவுக்குக் குத்திக் குலைக்கிறது எனத் தோழி தலைவிக்குக் காட்டுகிறாள். பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றி இழுத்த துச்சாதனன் போலும், பகைவர் மத்தியில் நெஞ்சைப்பிளந்து தன் சபதத்தை முடித்த வீமனைப்போலும் காட்சியளிகிறது என இக்காட்சிக்குப் புலவர் மகாபாரதத் தொன்மங்களை உவமையாக்கிக் காட்டுவர். அடுத்து, சந்திரன் என்னும் சுடர்விரிந்தன்ன சுழியைக் கொண்ட காரி என்னும் காளை பொதுவனின் குடல் சரியும்படி அவனைக் குத்திகுலைக்கும் காட்சிக்கு ஊழிமுடிவில் உயிர்களுக்கு இறப்பு என்னும் துன்பத்தைத் தருகின்ற எருமையேற்றினை ஊர்தியாகக் கொண்ட எமனை நெஞ்சைப்பிளந்து கொன்று குடலைப் பேய்களுக்கு இரையாக்கிய உருத்திரனை உவமை கூறிக் காட்சிப்படுத்துகிறார்.

காதுகளுக்குப் பின்புறத்தில் செம்புள்ளிகளை உடைய வெள்ளை என்னும் காளையின் கோபத்தைக் கண்டும் அதற்கு அஞ்சாமல் பொதுவன் மீது பாய்ந்து அவனைத் தன் கொம்பால் குத்தி அழிக்கும் காட்சிக்குப் பாரதப்போரில் அசுவத்தாமன் தன் தந்தையாகிய துரோணரைக் கொன்ற சிகண்டியை நள்ளிருளில்

சென்று போரிட்டு அவள் தலையைத் திருகிக் கொன்றதைப்போல உள்ளது எனத் தொன்மச்செய்தியைக்கொண்டு உவமை கூறியுள்ளார்.

தோழி கூற்றாக அமையும் 103 ஆம் பாடலில் காளைகளைப் பற்றிய வருணனை முதற்பாடலில் காட்டப்படும் வருணனையிலிருந்து சற்றே வேறுபடுகிறது. “மணிவரை மருங்கின் அருவி போல வெண்ணிறக்கால்களைக் கொண்ட அளவற்ற அழகுகொண்ட காரி என்னும் கருநிறக் காளை, கதிரவன் மறையவும் விண்மீன்கள் பூத்த அந்தி வான் விசும்பு போலச் சிவந்த உடலில் வெண்புள்ளிகளுடன் விளங்கும் செவலைக்காளை, அழித்தற்கடவுளாம் உருத்திரன் சூடிய குழவித் திங்கள் போன்று வளைந்து தோன்றும் வளமான கொம்புகளைக் கொண்ட செவலைக்காளை ஆகியவை உள்ளிட்ட பல காளைகள் போட்டிக்கெனக் கொண்டுவந்து நிறுத்தப்படுகின்றன.இவை ஒருங்க்குகூடி நிற்கும் அந்தத் தொழு கொடிநறையாகிய மணப்புகை சூழ்ந்து காட்சியளிக்கிறது. அக்காட்சி போர்க்களத்தைத் தோழிக்கு நினைவூட்டுகிறது. ஆகவே அவள் ,

“அரிமாவும் பரிமாவும் களிறும் கராமும்

பொருமுரண் முன்பின் புகலேறு பலபெய்து

பெருமழை விடரகத்து ஒருங்குடன் குழீஇப்

படுமழை ஆடும் வரையகம் போலும்”

என வருணிக்கிறாள்.இந்த ஏறுகள் தங்களைத் தழுவ வந்தவர்களைக் குத்திக் காயப்படுத்தின. அவற்றின் கொம்புகளில் குருதிதோய்ந்த குடர்கள் சுற்றியுள்ளன. மழு என்னும் ஆயுதத்தைக் கையில் ஏந்திய சிவபெருமானின் தலையில் சூடிய பிறையில் செந்நிற மாலைகள் கிடப்பதுபோன்று காட்சி அளித்தன என்கிறாள். இச்சித்திரிப்பில் கொல்லேறுகளின் காட்சிக்குத் தொன்மைக்காட்சிகள் உவமிக்கப்படுகின்றன. ஆயின் முந்திய பாடலில் ஏறுதழுவிய வீரர்களுக்குத் தொன்மங்கள் உவமிக்கப்பட்டன. வைத்தகண் வாங்காமல் மெய்ம்மறந்து ஏறுதழுவும் களத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் தலைவியிடம் “காற்றுப்போல் வரும் கதழ்விடைக் காரியைக் ” காட்டுகிறாள் தோழி.

தோழி கூற்றாக அமையும் 104 ஆம் பாடலில் காளைகள் தெய்வங்களைப் போலக் காட்சி அளிப்பதாகத் தோழி கூறுகிறாள். ஏறுகளுக்கு முல்லைநிலக் கடவுளரை உவமிக்கிறாள் தோழி.

“ வானுற ஓங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப்

பால்நிறவண்ணன் போல் பழிதீர்ந்த வெள்ளை”

வெள்ளைக்காளைக்குப் பலதேவன் உவமையாகிறான். பொன்னாலான சக்கராயுதமும் பகைவரோடு இகலில் மேம்பட்டவனும் திருமகள் கேள்வனுமாகிய திருமால்போல் போர்த்திறம் கொண்டவை கருமைநிறம் கொண்ட காரிக்காளைகள் எனத் திருமாலின் நிறமும் போர்த்திறமும் காளைகளுக்கு உவமையாகின்றன. செஞ்சடையும் பிறை சூடிய நெற்றியும் முக்கண்ணும் கொண்ட சிவபெருமானை ஒப்பத் திகழ்வன குரால் என்னும் காளைகள், “மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர் வேல்வல்லானாம் முருகப்பெருமான்போலவெருவந்த தோற்றம் கொண்ட செவலைக்காளைகள் எனப் பலவகைக் காளைகள் ஏறுதழுவும் களத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன என்கிறாள் தோழி.

தோழி கூற்றாக அமையும் மற்றொரு பாடலில் (105) நேமியான் வாய்வைத்த வளை போலச் சுரி நெற்றிக் காரி, பலதேவனின் சிவப்பு மாலை போல் சிவந்த மச்சத்தை உடைய வெள்ளை ஏறு, “பெரும்பெயர்க்கணிச்சியோன் மணி மிடற்று அணி போலும்” சர்ச்சரை உடைய கழுத்தினைக் கொண்ட திமில் அமைந்த குரால் காளை; வச்சிரப்படை உடைய இந்திரனின் ஆயிரம் கண்களை ஒக்கும் பல புள்ளிகளைக் கொண்ட புகர்வகைக் காளை; வேலவன் அணிந்த வெண்ணிற ஆடை போன்ற வெண்ணிறக் கால்களைக் கொண்ட செவலைக்காளை எனப் பல

காளைகளை அடுக்கிக் கூறுகிறாள். இவை அனைத்தும் தெய்வங்களுடன் ஒப்பிடப்படுகின்றன. முல்லைநிலக் கடவுளர் மட்டுமின்றி ஏதேனும் ஒரு வகையில் சிவன், முருகன், இந்திரன் முதலிய தெய்வங்களுடன் தொடர்புபடுத்தியே காளைகளை ஒப்பிடுகிறாள் தோழி. "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்னும் தொல்காப்பிய நூற்பாவின்படி உயர்வு காரணமாகக் காளைகள் தெய்வங்களுடன் ஒப்பிடப்படுகின்றன.

**ஏறுதழுவும் ஆயர்களும் காளைகளின் தாக்குதலும்**

இக்காலத்தில் காற்பந்து ,கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை நேர்முக வருணனை செய்வது போன்று கொல்லேறு தழுவுதலைச் சோழன் நல்லுருத்திரன் பாடல்களின்வழி படம்பிடித்துள்ளார். அக்காட்சிகள் நம் கண்முன் நிகழ்வனபோல் சொல்லப்பட்டுள்ளன. காட்சிப்படுத்தும் கலையில் கேதேர்ந்த புலவராக நல்லுருத்திரன் முல்லைக்கலிப் பாடல்கள் மூலம் வெளிப்படுகிறார்.தோழி கூற்றாக அமையும் முதற்பாடலில் காளைகள் மீது பாய்வதற்கு இளைஞர்கள் எதிரே செல்ல, அக்காளைகளும் கொன்று குவிக்கும் வில்லைப்போல அவர்களைக் கொல்வதற்கு அளவற்ற சினம்கொண்டு கொடுமையாகப் பாய்கின்றன. அதனால் எங்கும் தூசி எழக் காளைகளின் கொம்புகளைத் தம் மார்பில் ஏற்க இளைஞர்கள் தயாராய் நிற்கின்றனர். அவர்களைக் கீழே தள்ளி அவர்களின் மார்பில் தம் கொம்புகளைத் தாழ்த்துகின்றன. கண்டோர் நெஞ்சு நடுக்குறும் இந்தக் காட்சியை விரைவாகச் சொல்ல நல்லுருத்திரன் கையாண்ட யாப்பு வடிவமும் உணர்ச்சிச்செறிவோடு சொல்கிறது.

" எழுந்தது துகள்

ஏற்றனர் மார்பு

கவிழ்ந்தன மருப்பு

கலங்கினர் பலர் "

இந்த இளைஞர்களுள் ஒருவன் தன் நீண்ட கரிய கரங்களால் காளையின்கழுத்தை இறுகத் தழுவிச் சில நொடிகள் அதன் கழுத்தருகே மறைந்திருந்து சட்டென அதன் திமில் மீது ஏறிப் போரிட்டு அதனை அடக்கி விடுகிறான். இருவருக்கும் நடந்த போரில் பெரிதும் துன்புற்றது காளை. அது கண்டு ஆற்றாத அதன் உரிமையாளர் சினத்துடன் எழுந்தார். இவ்விடத்தில் சோழன் நல்லுருத்திரன் "எவன்கொலோ ஏறுடை நல்லார் பகை " என் வினவுகிறார். கொல்லேற்றை நேற்றும் ஒருவன் அடக்கியது கண்டும் இன்று மீண்டும் இளையர் அதனோடு போரிட்டு அடக்கலாம் என்று பறையறைந்த ஆயர்கள் அறியாமை உடையோரே என்று எண்ணவைக்கிறார் நல்லுருத்திரன்.

மற்றொரு பாடலில் (103) பொதுவர்கள் வேகமாகத் தொழுவினுள் நுழைய அவர்களை வேகமாகக் குத்துகின்றன காளைகள். இக்காட்சியின் வேகத்துக்கேற்பச் சோழன் நல்லுருத்திரனின் சொற்களும் பாடலில் விழுகின்றன ( பாடலடிகள் 22-24.) கொல்லேற்றை அடக்கிய வீரன் தனது குடலைக் காளையின் கொம்பிலிருந்து எடுத்துத் தன் வயிற்றுக்குள் மீண்டும் இடும்போது அவன் எவ்வளவு பெருமிதத்துடன் காணப்படுகிறான் என்று தோழி தலைவிக்குக் காட்டுகிறாள்.அவ்விடத்தில் சோழன் நல்லுருத்திரன் அக்காட்சியை மிகவும் அழகாக வருணிக்கிறார்.

" செந்நூற் கழிஒருவன் கைப்பற்ற அந்நூலை

முந்நூலாக் கொள்வானும் போன்ம்"

எனப் புனிதம் வாய்ந்த முப்புரி நூலாகப் பாடுகிறார். மற்றோர் ஆயன் தான் அடக்கிய ஏற்றின்மேல் ஏறி வீற்றிருந்து வெற்றிக்களிப்புடன் அதனைச் செலுத்துகிறான். அக்காட்சி மூலம் தெப்பத்தில் அமர்ந்துகொண்டு தெப்பத்தை ஆற்றில் செலுத்துபவன் ஒப்பிடப்படுகின்றான். ஏற்றினை அடக்கிய மற்றொரு வீரனைச் சிவனுக்கு ஒப்பபிடுகின்றாள் தோழி. அவன் ஏற்றினை அடக்கிய திறம் கண்டு மாயோன் என்று தன் நெஞ்சு உட்கியதாகத் தோழி கூறுகிறாள். இவ்வாறு பலபடக்

கொல்லேறு அடக்கிய வீரனைப் புகழ்கிறாள் தோழி. முல்லைக்கலியின் ஏழு பாடல்களும் வெவ்வேறு கூற்றுகள் வாயிலாக ஏறுதழுவும் வீரர்களின் வீரச்செயலைத் தெய்வங்களின் போர்த்திறத்துடனும் மகாபாரதத் தொன்மங்களுடனும் ஒப்பிட்டுக் கூறுவது புனைந்துரையாக அமையாமல் உண்மையில் தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றுவதாக உள்ளது.

**ஏறுதழுவலும் குரவை அயர்தலும்**

ஆயர்கள் ஏறுதழுவும் மரபைக்குரவைப்பாடல் மூலமாகத் தலைவனுக்கு எடுத்துக்காட்டி அதன்படி அவனும் ஏறுதழுவித் தலைவியை மணம் செய்து கொள்ளும்படித் தூண்டுவதற்குத் தோழி முயற்சி மேற்கொள்வாள். ஆயர்குலப் பெண்கள் பரண்மீதிருந்து ஏறு தழுவும் விழாவில் ஆடவர் நிகழ்த்தும் வீரச்செயல்களைக் கண்டு அவருள் தம் மனம் விரும்புபவரைக் கணவராக அடைய முயல்வர். அது மட்டுமில்லாமல் இயற்கைப்புணர்ச்சியில் தலைவி சந்தித்த தலைவன் ஏறுதழுவினால் அவன்மீது தான் கொண்ட காதல் நிறைவேறவேண்டும் என்று தலைவி விழைவாள். அதற்காக அவள் தெய்வம் பராவுவாள்.சோழன் நல்லுருத்திரன் குரவை அயர்தலின்போது பாடப்படும் பாடல்களில் ஆயர்குலப் பெண்கள் வீரத்துக்குக் கொடுக்கும் மதிப்பினையும் வீரனை மணக்க விரும்பும் விழைவையும் வெளிப்படுத்துகிறார்.

" கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள் "

" அஞ்சார் கொலையேறு கொள்பவர் அல்லதை
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர்துறந்து
நைவாரோ ஆயமகள் தோள்"

எனப் பாடுகிறார். பாடல் 104 இல் ஆயர்குல ஆடவர் ஏறுதழுவுதலாகிய நிகழ்ச்சியைத் தலைவிக்குத் தோழி காட்டி இன்னின்னார் இன்னின்ன ஏறுகளைத் தழுவினர் என்று குரவை பாடும் மரபு உள்ளதைச் சுட்டிக்காட்டி அதைப்போன்ற ஒரு குரவைப்பாட்டில் தலைவனைக் குறித்துப் பாடுவதற்குத் தலைவியை அழைக்கிறாள் தோழி. மரபுவழியாகப் பாடப்படும் குரவைப்பாட்டில் அவனுடைய பண்பை அமைத்துப் பாடினால் ஊராருக்குத் தெரியாது என்று தோழி நினைக்கிறாள். தலைவி அதற்கு இசைந்து ஊராரின் பழிச்சொல்லுக்குத் தான் அஞ்சவில்லை எனவும் தலைவன் தன்னை வருத்தினான் எனவும் பொருண்மை கொண்டு பாடப்படும் குரவைப்பாட்டில் கலந்துகொள்கிறாள். அதன் பின்னர்த் தோழி "நம் சுற்றத்தார் உன்னைத் தலைவனுக்கு மணமுடித்துக் கொடுக்க இசைந்தனர்" என்று கூறுகிறாள்.

**ஏறுதழுவுதலும் திருமணமும்**

முல்லைக்கலியின் முதல் ஐந்து பாடல்களும் திருமணம் நிகழ்வதற்கு ஏறுதழுவுதல் ஒரு காரணமாக அமையும் போக்கினைக் காட்டுகின்றன. முதல்பாடலில்

"அணிமாலைக் கேள்வன் தரூஉமார் ஆயர்
மணிமாலை ஊதும் குழல்" எனவும்

" ஏற்றை நீ கொள்குவை ஆயின் படாஅகை
ஈன்றன ஆயமகள் தோள்" எனவும்

"கொல்லேறு சாட இருந்தார்க்குஎம் பல்லிரும்
கூந்தல் அணைகொடுப்பேம் யாம்" எனவும்

தலைவன் தலைவி திருமணத்திற்கு நிமித்தமாக ஏறுதழுவுதல் இடம்பெறுகிறது. ஆனால் ஆறாம் பாடல் ஏறுகளை அவற்றின் இயல்பான வாழ்க்கையில் செலுத்துவதற்காக ஏறுதழுவுதல் நிகழ்வதைக் குறிக்கிறது)

முல்லைநில மக்களாகிய ஆயர்கள் தம் குடியில் பெண்மகவு பிறந்ததும் காளைக்கன்றை வளர்க்கத் தொடங்குவர். அப்பெண் பருவம் எய்தும்பொழுதில் காளையும் வளர்ந்துநிற்கும். அதனை அடக்குபவனுக்கே அப்பெண் மாலை சூட்டுவாள் எனப் பறையறைந்து ஏறுதழுவுதல் நிகழ்வை நடத்தத் தொடங்குவர். அவ்விழாவின் இறுதியில் ஏற்றைத்தழுவிய ஆடவனின் வீரத்தைப் பாராட்டிக் குரவை அயர்வர். பின்னர்த் தம் மகளை அவனுக்கு மணம் செய்விப்பர் என முல்லைநில மக்களின் வாழ்வியல் கூறாக, பண்பாட்டு அம்சமாக ஏறுதழுவுதல் அமைகிறது.

ஆயர்குல மகளிர் தம் கணவர் வீரமிக்கோராய் விளங்குவதையே விரும்பினர் என்பதை

" கொல்லேறு கொண்டான் இவள்கேள்வன் என்றுஊரார்

சொல்லும்சொற் கேளா அளைமாறி யாம்வரும்

செல்வம்எம் கேள்வன் தருமோஎம் கேளே"

எனச் சோழன் நல்லுருத்திரன் பதிவுசெய்கிறார். ஆகவே ஏறுதழுவுதல் என்னும் வீர்விளையாட்டு வீரம் மிக்க ஆடவரை அடையாளம் காண உதவியது. முல்லைநில மக்களின் வாழ்வியலில் உள்ள பண்பாட்டுக் கூறாகவும் திகழ்ந்தது.

சங்ககாலத்தில் களவொழுக்கத்தில் மலரும் காதல் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் திருமணத்தைப் பெற்றோரும் சுற்றத்தாரும் முடிவுசெய்யும் வழக்கம் இருந்தது. பெண்ணின் காதலை அறிந்த பின்னரும் அந்த ஆடவனைப்பற்றி விசாரித்த பின்னரே முடிவு செய்தனர் என்பதை முல்லைக்கலியின் ஏழாம்பாடல் வழி அறிகிறோம். ஏறுதழுவுதல் இப்பாடலில் தோழி அறத்தொடு நிற்க உறுதுணையாய் அமைந்தது. இப்பாடல் தோழிக்கும் தலைவிக்கும் இடையே நடைபெறும் உரையாடலாகவும் அமைகிறது.

**முடிவுரை:**

தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இயைந்த பண்பாடு மிக்க வாழ்க்கை. அதன் அடையாளங்களாக பல நிகழ்வுகள்,செயல்கள் போன்றவை இன்றும் தொடர்கின்றன. பெயர் மாற்றத்துடனோ அல்லது வேறு சில மாற்றங்களுடனோ நிலவுகின்றன. அவை இன்னும் வழக்கில் இருப்பதன் மூலம் நாம் நம் பண்பாட்டுப்பெருமையின் நீட்சிக்குக் காரணமாகிறோம்.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Sri Lakshmi M. S., (2021) Mullaikali's Tamil Cultural Identity – bull fighting, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:25-31. Cauvery College For Women, Trichy.

**திருமதி. பகீரதி மோசேஸ்**
முதுநிலை பேராசிரியர்
சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை
கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

# பெண்தெய்வ வழிபாடு: தமிழ் இலக்கியங்களை அடிப்படையாகக்கொண்ட ஓர் ஆய்வு

**ஆய்வுச்சுருக்கம்:**

இனக்குழுச் சமுதாயத்தின் தொடக்கக் காலந்தொட்டுச் செழுமையின் அடையாளமாகவும் வலிமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டதால் பெண் வணங்குவதற்கும் வழிபாட்டிற்கும் உரியவளானாள். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வப் பெயர்களும் பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் நிறைந்து காணப்படுகின்றமை இதற்கு சான்றாகும். இன்றைய சூழலிலும் பெண் தெய்வங்கள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. நாட்டுப்புறத் தெய்வங்களில் பெண்தெய்வங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. அதனால், பெண்தெய்வங்கள் முதன்மை நிலையில் வைத்து வழிபடப்படுகின்றன. இவ்வாறானதொரு வரலாற்று நோக்கில் ஆராயும்போது பெண்தெய்வ வழிபாட்டினைப் பற்றிய ஆய்வின் அவசியம் உணரப்படுகிறது. அதன்காரணமாக இதனை ஆய்வுப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளதே இவ்வாய்வு. ஆய்வின் நோக்கத்திற்கேற்ப இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு தலைப்பானது உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கேற்ப தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதனூடாக பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் விடயங்கள் கலந்தாராயப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** பெண்தெய்வம், வழிபாடு, சமயம், இலக்கியம், வரலாறு.

**அறிமுகம்:**

பண்டைய வரலாறுகள், தத்துவங்கள் மற்றும் தமிழ் இலக்கியங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது சிந்துவெளி நாகரிகம் முதல் இன்று வரை பெண்தெய்வ வழிபாட்டினை காணமுடிகிறது. தாய்த் தெய்வங்கள் மற்றும் கன்னித் தெய்வங்கள் என பெண் தெய்வங்களை வழிபடும் போக்கு தமிழரிடையே காணப்படுகிறது. மனித உயிர்கள் அனைத்தையும் பெற்றெடுத்தவள் என்ற அடிப்படையில் தாயாகவும், என்றும் மாறாத, அழியாத கன்னித் தன்மையுடையவள் என்ற அடிப்படையில் கன்னியாகவும் பெண் தெய்வங்களை வழிபடும் மரபாக இதனைக் காணமுடிகிறது. உலகின் பல்வேறு நாடுகளிலும் கூட இம்மரபு இருந்து வருவதனை அவதானிக்கலாம். தமிழர்களின் பண்பாட்டு வரலாற்றைக் கட்டமைப்பதில் பெரும்பங்காற்றுவன பழந்தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் ஆகும். பழந்தமிழர் வழிபாட்டு வரலாற்றை எழுதுவதிலும் இந்நூல்களே தக்க ஆதாரங்களாக உள்ளன. அவற்றினடிப்படையிலான பழந்தமிழ் இலக்கியச் சான்றுகளைக் கொண்டு பழந்தமிழர் சமய வழிபாட்டுக் குறிப்புகளைத் திரட்டுவதில் நாம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டியது காலத்தின் தேவையுமாகும். சிவ வழிபாட்டுக்குரிய சின்னங்கள் சிந்துவெளி நாகரிகத்திலே காணப்பட்டாலும், சிந்துவெளி நாகரிகத்திலே முதலிடம் பெற்று விளங்கியது பெண் தெய்வம் அதாவது அன்னை வழிபாடே என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. சிந்துவெளி மக்கள் வழிபட்ட தெய்வங்களை முக்கியத்துவத்தின்படி முறைப்படுத்திய மார்ல், முதலில் அன்னைத் தெய்வத்தையும், அதற்கடுத்தபடியாக மும்முகமுடைய கடவுளையும், மூன்றாவதாக இலிங்கம் அல்லது குறியையும் எடுத்துக் கூறியுள்ளமை அவதானத்துக்குரியதாகும்.

தமிழின் தொன்மை இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் என்று நாம் குறிப்பிடும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஒரே காலத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்களல்ல. சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுக்கால (கி.மு. 3ஆம் நூற்றாண்டு தொடங்கி, கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரையிலான) அகப்புற இலக்கியங்களின் தொகுப்புகளாக கொள்ளலாம். அவ்வாறாக நோக்கும்போது சங்க இலக்கியங்கள் பதிவுசெய்யும் பழந்தமிழர் வாழ்வியல் பதிவுகள் ஐநூறு ஆண்டுகாலத் தமிழர்களின் வாழ்வியலாக கொள்ளத்தக்கவை. இருந்தபோதிலும் இப்பாடல்களை நோக்குகையில் அவை உருவான சமூகத்திற்கு முந்தைய சுமார் ஆயிரம் ஆண்டுக்காலத் தமிழர் வாழ்வியலின் பதிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் பெண்தெய்வம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட வழிபாட்டு மரபுகளும் விரவிக் காணப்படுகின்றன. அதன் தொடர்ச்சியாக இன்று வரையான பெண்தெய்வம் மற்றும் வழிபாட்டு முறைகளைக் காணலாம். அதனை ஆராய்ந்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

**முடிவுகளும் கலந்தாய்வும்:**

சேகரிக்கப்பட்ட தரவுகளின் மீதான பகுப்பாய்வின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகள் கலந்தாராயப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களின் தோற்றத்திற்கு முன்னரான சிந்துவெளி நாகரிகத்திலும் பெண்தெய்வ வழிபாடு காணப்பட்டிருக்கிறது. தொன்மை இலக்கியங்களில் பெண்தெய்வ வழிபாடு அதிகமாகக் காணப்பட்டுள்ளது. இன்றைய சூழலிலும் தமிழர் மத்தியில் இப்பெண்தெய்வ வழிபாடு அதிகளவில் காணப்படுகின்றன. எனவே இவை கலந்தாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கியங்களுக்கு முன்னரான பெண்தெய்வ வழிபாடு:**

தொன்மை தமிழ் இலக்கியங்களுக்கும் முந்திய காலத்திலும் பெண்தெய்வ வழிபாடு காணப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகத்தை நோக்கும்போது, அங்கு சிவ வழிபாட்டுக்குரிய சின்னங்கள் காணப்பட்டாலும் பெண் தெய்வ அதாவது அன்னை வழிபாடே முதலிடம் பெற்று விளங்கியது. இதனை பல ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள். சிந்துவெளி மக்கள் வழிபட்ட தெய்வங்களை முக்கியத்துவத்தின்படி முறைப்படுத்திய மார்ல், முதலில் அன்னைத் தெய்வத்தையும், அதற்கடுத்தபடியாக மும்முகமுடைய கடவுளையும், மூன்றாவதாக இலிங்கம் அல்லது குறியையும் எடுத்துக் கூறியுள்ளார்.

சிந்துவெளி நாகரிகத்தை வளர்த்த மக்கள் பெண் தெய்வ வழிபாட்டை கைக்கொண்டிருந்தனர் என்பது வெளிப்படை. சிந்துவெளி நாகரிகத்துக்குச் சமகாலத்தனவான சிரியா, சின்னாசிய, எகிப்திய நாகரிகங்களிலும் பெண் தெய்வங்கள் முக்கியமானவையாக விளங்கின. மார்~ல் புதைபொருளாராய்ச்சியின் விளைவாகச் சில கருத்துக்களைக் கூறுமுன்னர் சந்தா என்பவர் இவ்வுண்மையை எடுத்துரைத்துள்ளார். ‘சிரியாவிலே அகத்தாத் என்னும் தத்துவமும், சின்னாசியாவிலே சிபெலேயும், எகிப்திலே இசிஸ் கோட்பாடும் தோன்றிய அதே சமுதாய நிலையிலேதான் இந்தியாவில் சக்தி வழிபாடு தோன்றியிருத்தல் வேண்டும்’ என்பது அவரது முடிவாகும்.

பெண்தெய்வ வழிபாடு தோன்றுவதற்கு அடிப்படைக் காரணம் அது தோன்றிய சமூகத்திலே தாய்வழிமுறை நிலவியதே என்பது ஆராய்ச்சியாளர் காட்டும் உண்மையாகும். சிரியா, சின்னாசியா, எகிப்து முதலிய இடங்களில் பெண்தெய்வ வழிபாடு தோன்றியதற்கும் இத்தகைய சமூக முறையே காரணமாகும். பண்டைய திராவிட மக்களிற் பெரும்பகுதியினர் தாய்வழி உரிமை, தாய்முறை முதலியவற்றைக் கடைப்பிடித்தனர். இதன் காரணமாகப் பெண்தெய்வ வழிபாடு திராவிட மக்களிடையே பெரு வழக்காயிருந்தது என்று சமூகவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்

சிவசம்பந்தம் உடையதாதல் பற்றியே தமிழர் மதம் சைவம் என்னும் பெயர் பெற்றது. சிவம் என்பதற்கு மங்கலம், சுகம், பாக்கியம், பேரானந்தம். என்னும் இன்பப் பொருளையெல்லாம் அடக்கும் தத்துவார்த்தப் பொருள் கூறப்படும். எனினும் பிற்காலச் சமயத்திலே சிவம் ஆண்தெய்வமாகவே வழிபடப்பட்டு வந்துள்ளது. சிவன் என்னும் ஆண்தெய்வ சம்பந்தமான சைவ சமயத்தின் தோற்றம் தேடிச் சிந்துவெளி நாகரிகத்தை அடையும் போது, அங்கு அன்னைத் தெய்வமே முழுமுதற்றெய்வமாக இருப்பதைக் காணமுடிகிறது.

கிறிஸ்துவிற்கு முன் 2,500 ஆண்டளவில் சிறப்புற்று விளங்கிய சிந்துவெளி நாகரிகம் கி.மு. 1,500ஆம் ஆண்டளவில் சீர்குலைந்து சிதைவுற்றது. சிந்துவெளி நாகரிகத்துக்கும் திராவிடருக்கும் நெருங்கிய தொடர்புண்டு எனச் சில வரலாற்றாசிரியர் கூறுவர். அக்கூற்றுக்குச் சாதக பாதகமான சான்றுகள் உள்ளன. இதனை முடிந்த முடிவான உண்மையென்று அறுதியிட்டுக் கூற முடியாது. எனினும் சிந்துவெளி நாகரிகத்தின் சிதைவிற்குப் பின்னர் வரலாற்றுத் தொடர்ச்சியானது அறுந்து காணப்படுகின்றது. கிழக்குப் பஞ்சாப்பில் உரூபர் என்னுமிடத்திலும், சௌராட்டிரத்தில் ரங்கபூர், லொதால் என்னுமிடங்களிலும் சமீப காலத்தில் அகழ்வாராய்ச்சி நடைபெற்றதன் பயனாகச் சிந்துவெளி நாகரிகத்தின் தொடர்ச்சிப் பின்னலின் சின்னங்கள் காணப்பட்டன என்பது உண்மையாயினும் தென்னிந்தியாவிலே சிந்து வெளி நாகரிகத்தின் தொடர்ச்சியோ, வளர்ச்சியோ, தொடக்கமோ இதுகாலவரை காணப்படவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது மொகஞ்சதரை, ஹரப்பா, லொதால் முதலிய இடங்களில் காணப்பட்ட நகர நாகரிகம், இதுவரை தென்னிந்தியாவில் அகழ்வாராய்ச்சியின் மூலம் புலப்படவில்லை.

வெளித் தோற்றத்திற்குப் புலப்படும் நகர நாகரிகச் சின்னங்கள் தென்னிந்தியாவிற்கும் சிந்துவெளி நகரங்களுக்கும் நேரடியான தொடர்பைக் காட்டாவிட்டாலும், சமய நம்பிக்கை சம்பந்தமான தொடர்புகள் இருப்பதையே இங்கு நாம் கவனிக்க வேண்டும்.

பெண்தெய்வ குறிப்பாக சக்தி வழிபாடும் மூலச்சிவ வழிபாடும் இருந்ததைப் பார்த்தோம். இவற்றின் பிணைப்பாக இலிங்க, வழிபாடும் நிலவியது. மொகஞ்சதரையிலும், ஹரப்பாவிலும் கணக்கற்ற, நீண்டு குவிந்த அல்லது முக்கோணக் கற்களும் களிமண் பொருள்களும் கண்டெடுக்கப்பட்டன. மார்~ல் அவற்றைச் சிவலிங்கங்கள் என எடுத்துக் காட்டினார். இலிங்க வழிபாடானது உழவுத் தொழிலை மேற்கொண்டிருந்த பல புராதன நாகரிகங்களிற் காணப்படும் வழிபாட்டு முறையாகும். நீண்டு குவிந்த கல்வடிவு ஆண்குறியின் அடையாளமாகவும், அக்கல்லைச் சூழ்ந்த வட்டக் கல்வடிவு பெண்குறியின் அடையாளமாகவுமே முன்னையோராற் கருதப்பட்டது. சிந்துவெளி நாகரிகத்திற்குச் சமமான பிற நாகரிக மக்களிடையும் இவ்வழிபாட்டு முறை நிலவியது. ஆண் பெண் குறிச் சேர்க்கையே பண்டைக் காலந்தொட்டு இலிங்க வடிவில் அமைந்தது என்பது பிற்காலச் சைவசித்தாந்த சாத்திர நூலாலும் அறியக்கிடக்கின்றது.

‘சக்தியுஞ் சிவமுமாய தன்மையிவ்வுலகமெல்லாம்

ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியுமாக

வைத்தனன் அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்

இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்’

எனச் சிவஞானசித்தியார் தத்துவ விளக்கத்தோடு உரைப்பது பண்டுதொட்டு வந்த உண்மையே யென்பதில் ஐயமில்லை. சிவனை உணர்ந்து அறிந்து வழிபடுதற்குச் சிறந்த அடையாளம் அல்லது குறி இலிங்கம் என இன்று வரை கருதப்படுவதும்

மனங்கொளத்தக்கதாகும். சைவசித்தாந்தத்தின் வளர்ச்சிக் கிரமத்தையும் படிமுறையையும் அறிந்து கொள்வதற்கும் இவ்வுண்மை அவசியமாகிவிடுகிறது.

**தொன்மை இலக்கியங்களில் பெண்தெய்வ வழிபாடு:**

அணங்குடைச் சிலம்பு, அணங்குடைச் சாரல், அணங்குடை நெடுங்கோடு, அணங்குடை நெடுவரை, சூருடைச் சிலம்பு, சூர் உறை வெற்பு, அணங்குடை முந்நீர், சூருடை நனந்தலைச் சுனை, நிறை சுனை உறையும் சூர்மகள் முதலான சங்க இலக்கியச் சொல்லாட்சிகள் மலை, மலைச்சாரல், நீர்ச்சுனை, நீர்நிலை முதலான இயற்கைப் பகுதிகளில் சூரும் அணங்கும் குடிகொண்டிருந்தன என்ற சங்ககால மக்களின் நம்பிக்கைகளுக்கான அகச்சான்றுகளாகும்.

சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள சூர், அணங்கு முதலான வருத்தம் மற்றும் அச்சத்தைத் தரும் இயற்கை இகந்த ஆற்றல்களைக் குறித்த நம்பிக்கைகளே பல்வகை வழிபாட்டுச் சடங்குகளாகப் பரிணாமம் பெற்றன. பழந்தமிழ் மக்களின் தாய்தெய்வ வழிபாட்டின் தொடக்கத்தை இத்தகு சூர், அணங்கு முதலான இயற்கை இகந்த ஆற்றல்களிலிருந்தே இனங்காண முடிகிறது.

உருவம் இனங்காண இயலா நிலையில் சொல்லப்பட்ட சூரும் அணங்கும் காலப்போக்கில் பெண்தெய்வங்களாகக் கற்பிக்கப்பட்டன. சூர் என்பது சூர்மகள், சூரர மகளிர் என்றும் அணங்கு என்பது அர மகளிர், ஆரர மகளிர், ஆரணங்கு என்றும் வழங்கப்பட்டது.

‘நம்படப்பைச்

சூருடைச் சிலம்பில் சுடர்ப்பூ வேய்ந்து

தாம்வேண்டு உருவில் அணங்குமார் வருமே .. ..’ (அகநானூறு. 158)

என்ற அகநானூற்றின் பாடல் பகுதியில் அணங்கு தான் வேண்டிய உருவெடுத்து வரும் என்றும் இப்பொழுது மலைப்பூக்களைச் சூடிக்கொண்டு அணங்கு பெண்ணாக வந்திருக்கின்றாள் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளமையை நோக்க அணங்கும் சூரும் விரும்பும் வடிவம் எடுத்து மக்களை அச்சுறுத்தும் என்ற அடுத்த காலக்கட்டத்து நம்பிக்கையை அறிந்துகொள்ள முடிகிறது.

சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள இத்தகு சூர், அணங்கு முதலான வருத்தம் மற்றும் அச்சத்தைத் தரும் இயற்கை இகந்த ஆற்றல்களே பின்னர்ப் பல கிளைகளாகக் கிளைத்துப் பல்வகை நம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டுச் சடங்குகளாகப் பரிணாமம் பெற்றன. குறிப்பாகப் பழந்தமிழ் மக்களின் தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடக்கத்தை இத்தகு சூர், அணங்கு முதலான இயற்கை இகந்த ஆற்றல்களிலிருந்தே இனங்காண முடிகிறது.

பழந்தமிழர் தாய்தெய்வ வழிபாட்டில் மிக இன்றியமையாத இடம், கொற்றவை வழிபாட்டிற்கு உண்டு. பழந்தமிழர் வழிபட்ட பல்வேறு பெண்தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் சங்க அகப்புற இலக்கியங்களில் ஆங்காங்கே விரவிக்கிடக்கின்றன. அத்தகு குறிப்புகளைத் திரட்டி ஒருங்கு வைத்து ஆய்கையில் சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பெண்தெய்வங்கள் கன்னித் தெய்வங்கள், தாய்த் தெய்வங்கள் என இருவேறு நிலைகளில் குறிப்பிடப்பட்டாலும் அவை தாய்த் தெய்வங்களாகவே மதிக்கப்படுகின்றன. இதற்கு ஆதாரமாக சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கடல்கெழு செல்வியும் (அகம். 370) கானமர் செல்வியும் (அகம். 345) என்பவற்றைக் கூறலாம். இதனை பி.எல்.சாமி,

‘தாய்த்தெய்வத்தைத் தாயாகவும் கன்னியாகவும் உருவகப்படுத்திக் கூறுவது மிகப்பழங்காலத்திலிருந்தே மரபாக உள்ளது. அவளை எல்லோரையும் பெற்ற

தாயாகக் கருதுவதும் அழியாக் கன்னியாகக் கருதுவதும் சுமேரியா, எகிப்து, அசீரியா, இந்தியா ஆகிய நாடுகளின் பழைய நாகரிகங்களில் காணப்படுகின்றது.' (பி.எல்.சாமி, தமிழ் இலக்கியத்தில் தாய்த்தெய்வ வழிபாடு, ப.34) என்ற கூற்றும் ஆதாரமாகும்.

சங்க இலக்கியங்களில் இடம்பெறும் தாய்த் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள், அத்தெய்வம் காட்டை இருப்பிடமாகக் கொண்டவள் என்ற பொருளிலேயே கையாளப் பட்டுள்ளன. பதிற்றுப்பத்தில் இடம்பெறும் அயிரை என்ற தெய்வம் மலையை இருப்பிடமாகக் கொண்டது. கடல்கெழு செல்வியைத் தவிர பிற இடங்களிலெல்லாம் காடு, மலை, மலைச்சாரல், மலைச்சுனை சார்ந்தே தாய்த் தெய்வங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவாகியுள்ளமை அவதானத்திற்குரியதாகும்.

தொன்மை இலக்கியங்களில் அயிரையும் கொற்றவையும் பற்றிய தகவல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவை பற்றிய செய்திகளை நோக்கும்போது, சேரர் இலக்கியம் என்ற பெருமைபெற்ற பதிற்றுப்பத்தில் மூன்று பாடல்கள் அயிரை என்ற தெய்வம் பற்றிப் பேசுகின்றன (பதிற்றுப்பத்து: 79, 88, 90) இரண்டு பாடல்கள் அயிரை மலையைக் குறிப்பிடுகின்றன. (பதிற்றுப்பத்து: 21, 70) சேரர்களின் அயிரை மலையில் உறையும் தெய்வம் அயிரை என்றழைக்கப்பட்டது.

'நிறம்படு குருதி புறம்படின் அல்லது,

மடைஎதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின்

கடவுள் அயிரையின் நிலைஇ,

கேடு இலவாக, பெரும! நின் புகழே!.......'(பதிற்றுப்பத்து. 79)

'.. .. குருதி

விதிர்த்த குவவுச் சோற்றுக் குன்றோடு

உருகெழு மரபின் அயிரை பரைஇ, ....'-(பதிற்றுப்பத்து. 88)

'உருகெழு மரபின் அயிரை பரவியும், -...' (பதிற்றுப்பத்து. 90)

பதிற்றுப்பத்தின் இம்மூன்று பாடல்களிலும் இடம்பெறும் அயிரை வழிபாட்டைக் கொற்றவை வழிபாடு என்றே பழைய உரைக்குறிப்பை ஒட்டி உரையாசிரியர் ஔவை துரைசாமிப் பிள்ளை எழுதுகின்றார்.

தும்பை சூடிப் பொருதலில் அமைந்த மெய்யிடத்தே யுண்டாகிய அசைவு பற்றிப் பிறந்த ஒய்ச்சலுடன்; மார்பிற்பட்ட புண்ணிடத்தொழுகும் குருதியாற் புறத்தே தெளிக்கப்பட்டாலன்றிக் கொடுக்கப்படும் படைச்சலை (பலியை) யேற்றுக் கொள்ளாத அச்சம் பொருந்திய முறைமை யினையுடைய கொற்றவை வீற்றிருக்கின்ற அயிரை மலைபோல நின் புகழ்களும் நிலைபெற்றுக் கெடாது விளங்குவனவாக (ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து உரை)

பழைய உரைக் குறிப்பைக் கொண்டு அயிரையைக் கொற்றவை என்று ஔவை அவர்கள் எழுதும் உரையின் பொருத்தம் ஆய்வுக்குரியது. அயிரையைப் பெண் தெய்வமாக அல்லது தாய்த்தெய்வமாகக் கொள்வது ஓரளவு பொருந்தக்கூடியதே. ஆனால் கொற்றவை என்று வலிந்து பொருள்கொள்வதால் தாய்வழிச் சமூகத்தின் வழிபடு தெய்வமான கொற்றவை, நிலவுடைமைச் சமூகமாகவும் பேரரசுச் சமூகமாகவும் மாறிவிட்ட சேர மன்னர்கள் காலத்திலும் அதேநிலையில் வழிபடப்பட்டது என்று பொருள் கொள்ளப்படுகிறது. கொற்றவையோடு தொடர்பு படுத்தக் கூடிய எந்தவிதக் குறிப்புமற்று கடவுள் அயிரை என்றும் உருகெழு மரபின் அயிரை என்றும் சொல்லப்பட்டதன் பின்னணி கவனிக்கத்தக்கது.

காடுகிழாள், காடுகிழவோள், கானமர் செல்வி எனப் பழந்தமிழர்களின் தாய்த்தெய்வம் அழைக்கப்பட்டாள். இனக்குழு மக்களின் வேட்டையில் வெற்றி தருபவளாக இவள் இருந்தாள். காடுகிழாள் உணவு சேகரிக்கும் காலத்தில் பயிர்த்தொழிற் தெய்வம். வேட்டையாடும் காலத்தில் வெற்றி தரும் தெய்வம். இது கொற்றவையின் தொடக்கநிலையாக காணப்படுகிறது. இவளே குறிஞ்சிநிலத் தாய்த் தெய்வம். இத்தாய்த் தெய்வமே பின்னர்க் கொற்றவை எனும் தெய்வமாக வளர்ச்சி பெறுகிறது.

முல்லை நிலத்தில் மேய்ச்சல் வாழ்க்கையும் வன்புலப் பயிர்த்தொழிலும் ஆரம்பமானபோது மாடுகள் செல்வமாயின. மாடுகளைக் கவர்வது முல்லை நிலப் போராகியது. வெட்சிக்குப் புறனாகக் கொற்றவை நிலையைத் தொல்காப்பியர் கூறுகிறார். முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலையான போது பாலைநிலத்திற்குரிய தாய்த்தெய்வமானாள் கொற்றவை. வேடர்களின், எயினர்களின், ஆறலைக்கள்வர்களின் வழிபடு தெய்வமான கொற்றவையே பிற்கால இலக்கியங்களில் பெரிதும் இடம்பெற்றாள்.

மருத, நெய்தல்நில நிலவுடைமைச் சமூகத்தில் பேரரசுகளின் காலங்களில் ஆரிய வைதீக மரபுகள் தமிழகத்துக்குள் நுழைகின்றன. முருகன் கொற்றவையின் சிறுவனானான். (திருமுருகாற்றுப் படை) கொற்றவை சிவனின் மனைவியானாள் (பரிபாடல்). தொடர்ந்து காளி துர்க்கை போன்ற தெய்வங்கள் தமிழகத்துக்கு அறிமுகமாகின்றன. தமிழரின் போருக்குரிய தெய்வமான கொற்றவையும் ஆரியரின் போருக்குரிய தெய்வமான காளியும் ஒன்றாக இணைக்கப்படுகின்றமை பின்னைய ஆய்வுகளில் வெளிப்படுகின்றன.

சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாக ஏனைய பழந்தமிழ் இலக்கியங்களிலும் பெண்தெய்வ வழிபாட்டைப்பற்றிய செய்திகளை காணலாம். மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரத்திலும் இவை பற்றிய முக்கியக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பழந்தமிழர்களின் தாய் தெய்வம் கொற்றவை என்பதும் இந்திய - ஆரிய கலப்பால் தோன்றிய தாய் தெய்வமான காளி பற்றிய செய்திகளையும் இலக்கியத்தில் காணலாம். கன்னியாகுமரியில் இருந்த குமரி தெய்வத்தையே மணிமேகலை காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் சம்பாபதி என்று வணங்கினர். கண்ணகி காளியின் அம்சமாகவும் தாய் தெய்வமாகவும் மாறியது போல மணிமேகலையும் கடல் கெழு செல்வியாக மாறி தாய் தெய்வமானதை அறியலாம். சங்க இலக்கியங்கள் தாய்த் தெய்வத்தை காட்டில் உறைபவளாகவே கூறுகிறது கானமர்செல்வி அருளலின் என்கிறது அகப் பாடல். காட்டில் வாழும் தாய் தெய்வத்தைப் பற்றி மணிமேகலை மற்றும் கலித்தொகை முதலிய பிற்கால நூல்களும் கூறியுள்ளன. ‘வலை வலந் தன்னமென்னிழன்….’ எனத் தொடங்கும் பொருநராற்றுப்படையின் 41 - 42 ஆகிய பாடல்களும் ஆதாரமாகும்.

**இன்றைய சூழலில் பெண்தெய்வ வழிபாடு:**

இன்றைய சூழலில் அம்மன் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படும் பெண் தெய்வங்கள், பெண்மை மற்றும் தாய்மைக் குணங்களை ஒருசேரப் பெற்றவையாக விளங்குகின்றன. தொடக்கக் காலத்தில் வளமை தொடர்பான சடங்குகள் பெண்களைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டதால் பின்னாளில் பெண்களே வளமையின் குறியீடாகக் கருதி வழிபடப் பட்டனர். இதுவே, தாய்த் தெய்வ வழிபாடு தோன்றி வளர்வதற்குக் காரணமாய் அமைந்தது.

‘மழையாகப் பொழிந்து மண்ணுயிர்களைக் காப்பவள் மாரியம்மர் நதியாக ஓடி நஞ்சை புஞ்சைகளைக் காப்பவள் கங்கையம்மர் தீமைகள் அண்டாதவாறு காப்பவள் எல்லையம்மா’ என்று, பெண் தெய்வங்கள் வளமையை மையமிட்டே வணங்கப் பட்டும் வழிபடப் பட்டும் வருகின்றன. காவிரி, கங்கை, யமுனை, சரசுவதி போன்ற

பெரு நதிகளைப் பெண் தெய்வங்களாகவும் தாய்த் தெய்வங்களாகவும் வழிபடுவது தமிழரின் மரபாகும்.

கிராமப்புறச் சிறுதெய்வங்களாக மாரியம்மன், காளியம்மன், முத்தாலம்மன், சீலைக்காரியம்மன், திரௌபதையம்மன், நாச்சியம்மன், பேச்சியம்மன், கண்டியம்மன், வீருசின்னம்மாள், உச்சிமாகாளி, மந்தையம்மன், சோலையம்மன், ராக்காச்சி, எல்லையம்மன், அங்காளம்மன், பேச்சி, இசக்கி, பேராச்சி, ஜக்கம்மா போன்ற பெண் தெய்வங்கள் வணங்கப்பட்டு வருகின்றன. நன்மை அளிக்கும் தெய்வங்கள், தீமை அளிக்கும் தெய்வங்கள் என்று கூட இவற்றை வகைப்படுத்துவதுண்டு. சக்தியின் அவதாரமாக, வடிவமாகப் பெண் தெய்வங்கள் கருதப்பட்டு வணங்கப் படுகின்றன. பெண் தெய்வங்களில் பெரும்பாலும் தமிழர்களால் பரவலாக வழிபடப்படுவது மாரியம்மன் எனவும் அறியமுடிகிறது.

**முடிவுரை:**

ஆய்வின் நோக்கம் மற்றும் கருதுகோள்களுக்கு அமைய எம்மால் சேகரிக்கப்பட்ட தரவுகளின் மீதான பகுப்பாய்வின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகள் கலந்தாராயப்பட்டன. தமிழ் இலக்கியங்களின் தோற்றத்திற்கு முன்னரான சிந்துவெளி நாகரிகத்திலும் பெண்தெய்வ வழிபாடு காணப்பட்டிருக்கிறது. தொன்மை இலக்கியங்களில் பெண்தெய்வ வழிபாடு அதிகமாகக் காணப்பட்டுள்ளது. தொடக்கக் காலந்தொட்டுச் செழுமையின் அடையாளமாகவும் வலிமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டதால் பெண் வணங்குவதற்கும் வழிபாட்டிற்கும் உரியவளானாள் என்பதனை எமது ஆய்வு நிரூபித்துள்ளது. அதற்கு பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வப் பெயர்களும் பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் ஆதாரமாக அமைந்துள்ளன. இன்றும்கூட தமிழர் வழிபாட்டில் பெண்தெய்வ வழிபாடு முக்கியம் பெற்றுள்ளது. ஆகவே மனித சமூக வாழ்வியலின் தொடர்ச்சியில் பெண்தெய்வ வழிபாடு தவிர்க்க முடியாததொரு அம்சமாகும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

**உசாத்துணை:**


1. இறையரசன். பா. (1993). தமிழர் நாகரிக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை,
2. சாமிநாதையர். உ.வே. (2000). குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம். சென்னை.
3. சிவத்தம்பி. கா, (2000), தமிழில் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. சுப்ரமண்யன். ந. (2010). சங்ககால வாழ்வியல் (இரண்டாம் பதிப்பு), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
5. ஞானசேகரன். தே. (1990). நாட்டார் சமயம், கிரியா பப்ளிகேசன்ஸ், சென்னை.
6. தட்சிணாமூர்த்தி. ஆ. (2005). தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு. சன்னை.
7. தொல்காப்பியர். (1975), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (மறுபதிப்பு), பேராசிரியர், கழகம், சென்னை
8. பாலசுப்பிரமணியன், சி. (1983). சங்ககால மகளிர், பாரிநிலையம், சென்னை.
9. மோசேஸ், எஸ். (2010). கலை இலக்கியக் கட்டுரைகள், கிருபா பதிப்பகம், மட்டக்களப்பு, இலங்கை.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Paheerathy Moses., (2021) Worship of Goddess : A study Based on Tamil Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:32-38. Cauvery College For Women, Trichy.

**சைவப்புலவர் பால. இந்திரக்குருக்கள்**
சிட்னி
ஆஸ்திரேலியா.

## இலக்கியங்கள் காட்டும் திருமண வாழ்க்கை

### ஆய்வுச்சுருக்கம்

மணம் என்ற சொல்லுக்குக் கூடுதல் என்பது பொருள். இதன் வேர்ச்சொல் மண் என்பதாகும். இன்று பொது நிலையில் மணம் என்பது நறுமணத்தைக் குறிப்பினும் பழங்கால வழக்கில் இச்சொல் பல பொருளை உடையதாக இருந்தது. மண்ணுதல் என்ற சொல்லின் பொருள் கழுவுதல், நெருங்குதல், கலத்தல், கூடுதல், அழகுபெறுதல் எனப்பல திருமணத்தைக் குறிக்கும் மணம் என்ற சொல் எவ்வாறு அமைந்தது என்பது தெரியவில்லை. மண் இயற்கையிலேயே மணம் உடையது. ஆதனை மண் மணம் என்பது தமிழர் வாக்கு. இல்லறத்தின் நுழை வாயிலாக அமைவதனை மணம் என்ற சொல்லால் குறிப்பிட்டதன் நோக்கம் மண்ணைப் போல பொறுமை, அமைதி எதையும் தாங்கும் வன்மை இவற்றை மணமக்கள் பெறுதல் வேண்டும் என்பதே அடிப்படை என்று கூறுவோரும் உள்ர். மனமொத்து, வாழ்வு முழுவதும் மணம் பெற்று நிகழ்வதற்கு ஏதுவான இந்நிகழ்ச்சியை மணம் என்று பெயரிட்டனர். சிறப்பான மேன்மையான ஒன்றைக் குறிப்பிட ‘திரு’ என்ற அடை கொடுத்து அழைப்பது தமிழர் மரபாகையால் இல்லற வாழ்வின் அடிப்படையாக அமையும் மணம் திருமணம் என்று அழைக்கப்படுகிறது.

### முன்னுரை

திருமணம் ஒரு சமூக, உறவுமுறை அமைப்பு ஆகும். குடும்பம், பாலுறவு, இனப்பெருக்கம், பொருளாதாரம் போன்ற பல காரணங்களுக்காக திருமணம் செய்யப்படுகிறது. இரு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மனிதர்களுக்கு இடையே திருமணம் நடைபெறுகிறது. மணம் என்பது ஒரு மனிதனும், இன்னொரு மனிதனும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தபெறும் ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் திருமணம் ஆகும். மனிதனால் மனித சமுதாயத்தின் நலன் கருதிப்படைத்துக் கொள்ளப்பட்டதோர் ஒழுக்க முறை ஆகும்.

### இலக்கியம் காட்டும் திருமண வாழ்க்கை

தமிழர் வாழ்வில் திருமணம் என்பது இன்றியமையாததொன்றாகும். இல்லறதர்மம் என்றும் இது சிறப்பாகபோற்றப்படுகிறது. இதைத்தான் வள்ளுவர்

> “இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
>
> நல்லாற்றின் நின்றதுனை”

ஆதலால் தான் அதற்கு உறுதுணையாக ஒரு பெண் இருப்பதால் இல்லாள் எனவும் சஹதர்மசாரிணிஎனவும் தர்மபத்தினிஎனவும் பெயர் பெறுவாள்.

“இல்லறமல்லதுநல்லறமன்று”என்றும்“காதலிருவர் கருத்தொருமித்துஆதரவுபட்டதே இன்பம்”என்றும் அவ்வையின் வாக்குநினைவுகொள்ளத்தக்கதே.ஒருஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கை நடத்தும் நன்னெறி முறைகள் அதன்மூலம் நல்லபிள்ளைகளைபெற்றுவாழும்வழிகள் திருமணத்தில் அடங்கும்.

மண் எனும் வேர்ச்சொல் கலத்தல், இணைதல்,கூடுதல் போன்றபொருளைத்தரும். திருஎன்பதுதெய்வத்தன்மைஎன்றுபொருள்படும்.தெய்வத்தன்பையுடன் கூடும் நிலையேதிருமணமாகும்.தொல்காப்பியத்திலே

**‘‘கற்பெனப்படுவதுகரணமொடுபுணரக்**

**கொளற்குரிமரபிற் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக்குரிமரபினர் கொடுப்பக் கொள்வதுவே’’ (140).**

என்று கற்போடு இணைத்துக் கூறுகிறது. கல்யாணம் எனும் சொல் நாலடியார் மற்றும் ஆசாரக்கோவைப்பாடல்களில் திருமணம் என்ற பொருளில் குறிப்பிடப்படுகிறது.சீவகசிந்தாமணியில் “கடிசேர் மணமும் இனிநிகழும் காலமென்க”எனும் பாடலால் கடி,மணம்எனும் சொற்களும் திருமணத்தைக் குறித்துப்பாடுகிறது.

கடி எனும் உரிச்சொல் நீக்குதல்,காப்புஎனப்பொருள்தரும். மணப்பெண்ணின் கன்னித்தன்மையை நீக்கி கற்புவாழ்வை மேற்கொள்ளும் நிலையாகக் கருதப்படும். மேலும் ‘கரணம்’எனுஞ் சொல் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. களவியலில் காணப்பட்ட தவறுகள் காரணமாகச் சடங்குமுறைகளைப் பெரியோர் வகுத்தமுறையைத் தொல்காப்பியர் சொல்லும் போது

**‘‘பொய்யும் வழுவும் தோன்றியபின்னர் ஐயர்யாத்தனர்கரணமென்ப’’**

இங்கே கரணமென்பதற்கு நச்சினார்க்கினியர் வேள்விச்சடங்குகள் கூடியமணம் என்றே குறிப்பிடுகிறார். ஆனால் கடிகரணம் எனுஞ் சொற்கள் இன்று வழக்கத்தில் இல்லை. களவுமுறை, கற்புமுறை என இரண்டுவகையான திருமணச்சடங்குபற்றிக் காணப்பட்டாலும் மணிமேகலையில் தான் உறவு(மைத்துனன்) முறைத்திருமணம் பற்றிய குறிப்புக்காணப்படுகிறது. வணிகர்கள் ஒன்றுக்குள் ஒன்றாகத் திருமணம் நடந்தது. தருமதத்தன் தன் மாமன் மகள் விசாகையைத் திருமணம் முடித்தசெய்திஅறியமுடிகிறது

தொல்காப்பியத்தில் எண் வகைத் திருமணங்கள் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. “மறையோர் தேஎத்துமன்றலெட்டனுள்” அவை மரபு வழிமணம், சேவை மணம், போர் நிகழ்த்திமணம், துணங்கையாடிமணம், பரிசம் கொடுத்து மணம், ஏறுதழுவிமணம், மடலேறிமணம்போன்றவைஅங்குகாணப்பட்டன. இவற்றோடுதொடர்புடையபலசெய்திகள் அகநானூறு,புறநானூறு,குறுந்தொகை,பெருங்கதை,சீவகசிந்தாமணி,கலித்தொகை

போன்ற பல இலக்கிய நூற்களில் காணப்படுகிறது. இலக்கியங்களில் நாள்பார்க்கும் நிகழ்வுகள், மணமேடைஅலங்காரம்,நீராட்டுதல்,சிலம்புகழித்தல்,மலர் சூடுதல்போன்ற இன்னோரன்ன நிகழ்வுகள் காணப்பட்டன. ஆரம்பத்தில் அகநானூற்றில் தான் திருமணச்செய்திகள் காணப்பட்டன. குறிப்பாக

86ம் செய்யுள் 136ம் செய்யுள் திருமணங்களை விவரிக்கிறது.

**"உழுந்து தலைப்பெய்தகொழுங் களிமிதவை**

**பெருஞ் சோற்றுஅமலைநிற்பநிரைகால்**

**தய் பெரும் பந்தர்த் தருமணல்ஞெமிரி-------மாயோளே"[86]**

இதில் முதல் நிகழ்ச்சியாக உழுந்துவடையுடன் விருந்துநடைபெற்றது.

பந்தற்கால் நட்டுப் பந்தல் போடப்பட்டு புதுமணல் பரப்பிமனையில் விளக்கேற்றி வைக்கப்பட்டது. மாலைகள் தொங்கவிடப்பட்டு வைகறைப் பொழுதில் திங்கள் ரோகிணியுடன் கூடிய நாளில் முதுபெண்டிர் மணமகளை நீராட்டுவதற் குரியநீரைக் குடங்களில் ஏந்திவந்தனர். அந்நீர்க்குடங்களில் மலரும் நெல்லும் தூவிப்பிள்ளை பெற்றமாதரசிகள் நால்வர் மணமகளை "கற்புநெறியினின்றும் வழுவாது பலநலன்களைச் செய்துகணவன் விரும்பத்தக்கமனைவிஆகுக" என்று வாழ்த்தி மணநீராட்டினர். இவை வதுவை நன்மணம் எனப்பட்டது.

அகநானூறு 136ம் பாடல் கூறுவதாவது,

"மைப்பு அறப்புழுக்கின் நெய்க்கனி வெண் சோறுவரை யாவண்மையொடு புரையோர்ப் பேணிபுள்ளுப் புணர்ந்து இனிய ஆகதெள் ஒளிஅம்கண் இருவிசும்பு விளங்க -----மறை ஒளித்தே" இறைச்சிகலந்த வெண்சோறு விருந்தாகக் கொடுக்கப்பட்து. மேற்கூறியவற்றோடு முழவும் முரசும் முழங்கின. தலைவிக்கு மணநீராட்டல் நடைபெற்றது. வாகையிலைஅறுகம் புல் மல்லிகைமொட்டும் சேர்த்து நூலில் கட்டியமாலை சூட்டப்பட்டது. இருந்தாலும் ஆரம்பத்திலே இல்லாத சில சடங்கு முறைகள் பிற்கால இலக்கியங்களில் சிறப்பாகக் கூறப்படுகின்றன. குறிப்பாக தாலிகட்டுவது பற்றிய செய்தி ஆய்வுக்குரியதாகும். சங்ககால ஆரம்பத்தில் தாலிஎனும் சொல் கையாளப்பட்டது. ஆனாலும் சிலபுலவர்கள் அதைகழுத்தில் கட்டப்படும் தாலியைக் குறிக்காது ஒரு அணிகலனாக இருப்பதாகவும் கருத்துத்தெறிவித்திருக்கின்றனர். (தமிழர்திருமணத்தில்தாலி டாக்டர்மா.இராசமாணிக்கனார் பக் 23)

"புலிப்பற் றாலிப் புதல்வர்" என்ற குறுந்தொகையிலும்,

"நின்னொடு வினைவல் கேளாய் பொன்னொடு புலிப்பற்கோத்த புலம்புமணித்தாலி" என்றுஅகநாநூறிலும்,

“முறங்கொள் வயப்புலிவாய்பிளந்துபெற்றமாலைவெணடபற்றாலி”என்றுசிலப்பதிகாரத்திலும்தாலிபற்றிசைய்திகள் வந்தாலும் புலிப்பல் மற்றும் வெண்பற்றாலிஎனுங்குறிப்புகள் நோக்கத்தக்கதே.

இதுவேபிற்காலத்தில் பொன்னோடுசேர்த்துபோடும் வழமைவந்ததாகக் கருதுகின்றனர். “நின்னொடுவினவல் கேளாய் பொன்னோடுபுலிப்பற் கோத்தபுலம்புமணித்தாலி” எனும் குறிப்புஅகநாநூற்றில்(20 கயமனார் பாடியது)காணப்படுகிறது.நெடுநல்வாடையில்
“ஆரந்தாங்கியஅலர்முலைஆகத்துபடபின்னும்நெடுவீழ்தாமுத் துணைதுறந்து” (136-7) எனஅரசியின் பிரிவின் போது கூறப்படுகிறது.

இதற்குநச்சினார்க்கினியார்
“நெடியதாலிநதணொன்னுமேதுாங்க”எனஉரையெழுதினார்.

“ஈகை அரய இழையணிமகளிரொடு” (127)பாடல்வரிகளில் சிலகுறிப்புகள் காணப்படுகிறது. மேலும் “மெல்லியல் மகளிரும் இழைகளைந்தனரே”என்றபுறநானூறு(224)செய்தி இழையணிபற்றிக் குறிப்புத்தருகிறது.

இக்கருத்துக்கள் பிற்காலசிலப்பத்காரத்திலும் காணப்படுகிறது.

**‘‘அஞ்செஞ் சீறடிஅணிசிலம்புஒழிய**

**மேன்துகில் அல்குல் மேகலைநீங்கக்**

**கோங்கைமுன்றில் குங்குமம் எழுதாள்**

**மங்கலஅணியில் பிறிதணிமகிழாள்’’**

திருமணச்சடங்கில் இன்றுகாணப்படும் தீவலம் வரும் நிகழ்வினைசிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

**‘‘நீலவிதானத்துநித்திலப் பூப்பந்தர்க்கீழ்**

**வான் ஊர் மதியம் சகடனையவானத்துச்**

**சாலியொருமீன் தகையாளைக் கோவலன்**

**மாமுதுபார்ப்பான் மறைவழிகாட்டிடத் தீவலம்**

**செய்வதுகாண்பார் கண் நோன்புஎன்னை’’**

ஆனால் அகநானூறு 86,136 பாடல்கள் சுற்றத்தார்கள் மணமகளைஅலங்கரித்துபூக்களும் நெல்லும்கலந்துவாழ்த்தும் நிகழ்வுகளேகாணப்பட்டன.

சிலப்பதிகார காலத்தின் பின் கி.பி.9ஆம் நூற்றாண்டின் தான சூளாமணியில் 8ம் பகுதி கல்யாணச் சருக்கத்தில் திவிட்டன் எனும் அரசனுக்கும் சயம்பவைஎனும் அரசமகளுக்கும் திருமணம் நடந்ததாகவும் (செய்யுட்கள் 273-280) கூறப்படுகிறது. இதில் பெண்ணின் தந்தைதாரைவார்த்தல் (கன்னிகாதானம்) தீவலம் செய்தல்,அம்மிமிதித்தல்,அருந்ததிகாட்டல்ஆகியவைநடைபெற்றசெய்திகளுண்டு. தாரைவார்த்தல் (கன்னிகாதானம்) முதன்முதலில் இங்குநடைபெற்றதாகஅறியமுடிகிறது.

கச்சியப்பரின் கந்தபுராணத்தில்(11ம்நூற்)தெய்வானையின் கழுத்தில் முருகப்பெருமான் மங்கலநாண் அணிவித்தசெய்திகாணப்படுகிறது.

**“செங்கமலத்திறைசிந்தையின் ஆற்றிஅங்கையின் ஈந்திட**

**ஆண்டகைகொண்டமங்கலநாயைமயிக்களம் ஆர்த்து**

**நுங்கைமுடிக்கோர் நறுந்தொடை சூழ்ந்தாள்” (247)**

என்பதுகந்தபுராணம்.

திருமணத்தின் போதுமங்கலநாண் எனும் தாலிகட்டப்பட்டதாகமுதன்முதல் கூறிய நூல் கச்சியப்பரின் கந்தபுராணமாகும்.

கி.பி 11ம் நூற்றாண்டில் கலிங்கத்துப்பரணியில் முதற்குலோத்துங்கன் சோழர் காலத்தில் கைப்பிடித்தலே(பாணிக்கிரகணம்)முக்கியசடங்காககருதப்பட்டது.

“அருமறையின் எறிகாட்டஅயன் பயந்தநிலமகளைஅண்டங் காக்கும் உரிமையினிற் கைப்பிடித்தஉபயகுலோத்தமனபயன் வாழ்கவென்றே” (தாழிசை-2)

பெரியபுராணத்தில் சேக்கிழார் (12ம் நூற்) (குங்கிலியக்கலையநாயனார்புராணம்) “கோதில் மங்கல நூல் தாலி”எனக்குறிப்பிடுகிறார். மேலும்சம்பந்தர்,சுந்தரர்,திருநாவுக்கரசர்(திலகவதி),மானக்கஞ்சாறநாயகார்,காரைக்கால் அம்மையார் போன்றவர்களின் வரலாறுகள் மூலமாகப் திருமணநிகழ்வுகள் பலகூறுகிறார் சேக்கிழார். குறிப்பாக

நாள்பார்த்தல்,பாலிகைபோடுதல்,கைப்பிடித்தல்,அம்பொன்தாலிமங்களநாண் எனப்படும் தாலிகட்டுதல்,அக்கினிவலம் வருதல் என்பனநடைபெற்றன. இதில் முகூர்த்தம் பார்த்தலை“பழுதில் நற்பொழுது”எனுந் தொடரால் குறிப்பிடப்படுகிறது. சம்பந்தர் திருமணத்தில் “அருட்டிருக் காப்புநாண் அணிவர்”என்றும் சுந்தரர் திருமணத்தில் “பனை ரதியம்பவாழ்த்திப் பைம் பொன் நாண் காப்புச் சேர்த்தார்”என்றம் குறிப்புகள் காணப்படுகின்றன. மேலும் “காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலஞ்செய்தருளி”எனசம்பந்தரின்திருமணம் கைப்பிடித்துவலம்வந்தசெய்தியும் “மந்திரமுறையால் உய்த்தளரிவலமாகமாதர்

தந்திருக்கையைப் பற்றித் தாமரைச் செங்கையாளன்"என்பதால் தீவலம் வந்ததும் அறியமுடிகிறது.

திருமணங்களில் மங்கல இசைமழங்கும் வழமை இருந்தது. கி.பி 12ம் நூற்றாண்டில்தோன்றியகம்பராமாயணகாலத்தில்சங்கொலி,பறையொலிஆகியனமுழங்கும் வழக்கத்தைக் காணலாம்.

**“மங்கலமுரசு இனம் மழையின் ஆர்த்தன**

**சங்குகள்முரன்றனதாரைபேரிகைபொங்கின**

**மறையவர் புகழும் நான்மறைகங்குலின் ஒலிகளும்**

**மாகடலும் போன்றதே.”-1200**

இங்குதிருமணச் சடங்குகளோடுதாரைவார்த்தல்,தீவலம் வருதல்,அம்மிமிதித்தல்,அருந்ததிபார்த்தல் போன்றவைமுக்கியசடங்காகநிகழ்த்தப்பட்டன. கைகேயியைசபிக்கநின்றகாலத்தில் தசரதன் கூறியதாககம்பர் கூறுகிறார்.

“நின் கழுத்தின் நாண்உன்மகற்குக் காப்பின் நாணாம் என்றான்” (நகர் நீங்குபடலம் 49)தாலிபற்றிசெய்தி இங்குபதிவுசெய்கிறார் கம்பர். மேலும் சுந்தரகாண்டத்திலும் “மங்கையர் மங்கலத்தாலிமற்றையோர் அங்கையின் வாங்கினார் -----”(காட்சி48)என்றும் கூறுவதுநோக்கத்தக்கதே. “கோமகன் முன் சனகன் கிரநல்நீர்

**பூமகளும் பொருளும்எனநீஎன்**

**மாமகள் தன்னொடும் மன்னுதிஎன்னா**

**தாமரைஅன்னதடக்கையின் ஈந்தான்”**

எனும் பாடல் தாரைவார்த்துக்கொடுத்தலைக் கூறுகிறது. இவ்வாறு பல திருமணச்சடங்குமுறைகள் இலக்கிய நூற்களில் இருந்துஅறியக்கூடியதாகஉள்ளது.

**முடிவுரை**

மனித இனத்தைப் பொறுத்தவரை திருமணம் என்பது ஒரு உலகளாவிய பொதுமையாக இருந்த போதிலும் வெவ்வேறு பண்பாட்டுக் குழுக்களிடையே திருமணம் தொடர்பில் வெவ்வேறு விதமான விதிகளும் நெறிமுறைகளும் காணப்படுகின்றன. திருமணம் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்,பெண் உறவுநிலையைக் குறிக்கிறது. அதோடு ஒரு புதிய சந்ததி தோன்றுவதற்குரிய ஒருவிதப் பிணைப்பாகவும் அமைகிறது. ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு அவர்களது வாழ்க்கையைக் கூட்டுப்பொறுப்பில் நடத்துவதற்குப் பலர் அறியச் செய்துகொள்ளும் செயலே திருமணம் எனப்படும்.

**துணைநூற் பட்டியல்**

திருமணச்சடங்குகளும் சம்பிரதாயங்களும் -வேங்கடவன் 1999

தமிழர் திருமணத்தில் தாலி- டாக்டர் மா.இராசமாணிக்கனார். 1955

சிலப்பதிகாரம்,கம்பராமாயணம்,பெரியபுராணம்,சங்க இலக்கியங்கள்.

மின்நூல் இலக்கியக் கட்டுரைகள்.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Indragurukal Bala., (2021) Married Life portrayed in literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:39-45. Cauvery College For Women, Trichy.

**முனைவர் எஸ். மோசேஸ்**
உதவி இயக்குனர்
அரசு தேசிய தொலைக்காட்சி நிறுவனம், இலங்கை.

## சங்க இலக்கியங்களில் பெண் புலவர்கள்: ஓர் ஆய்வு

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழர் வரலாற்றின் முக்கிய குறியீடுகளாகவும் அடையாளங்களாகவும் சான்றுகளாகவும் பழங்கால இலக்கியங்கள் திகழ்கின்றன. அவற்றில் தமிழர் அடையாளங்கள் பல காணப்படுகின்றன. இது அனைத்து தமிழ் இலக்கியங்களுக்கும் பொருந்தும். தமிழில் கிடைக்கும் தொன்மை இலக்கியங்களாக சங்ககாலப் பாடல்களைக் குறிப்பிடலாம். இவற்றின் மூலம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர்களின் அடிப்படை வாழ்க்கை முறை> பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளமுடிகிறது. அப்பாடல்கள் இயற்கை நிகழ்வுகளையும் காட்சிகளையும் பின்புலமாக கொண்டிருப்பது அவற்றின் தனிச்சிறப்பாகும். இதனூடாக தமிழரின் பல்வேறுபட்ட அடையாளங்களையும் அறிந்துகொள்ளலாம். அந்தவகையில் சங்க இலக்கியங்களின் ஊடாக பெண்புலவர்கள் பற்றிய அடையாளங்களை அறிந்து கொள்ள இவ்வாய்வு முனைகிறது. ஆய்வின் நோக்கத்திற்கேற்ப பெண்புலவர்களின் எண்ணிக்கை, சங்க காலத்தில் வேறு துறைகளில் பெண் புலவர்களின் நிலை> பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அகம் எவ்வாறு வெளிப்படுகிறது ஆகிய விடயங்களை பகுப்பாய்வு செய்து கலந்துரையாடுவதாகவும் முடிவுகளை உரைப்பதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** அடையாளங்கள்> சங்ககாலம்> பெண்புலவர்கள்> இலக்கியம்.

### அறிமுகம்:

தமிழில் கிடைக்கும் தொன்மை இலக்கியங்களான சங்ககால இலக்கியங்களினூடாக அக்கால பெண்புலவர்களின் பன்முக விடயங்களை அறிந்துகொள்ள முடிகிறது. அவற்றில், பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை தெளிவின்மை காணப்படுகிறது. சங்க காலத்தில் சகல துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்கியிருக்கிறார்கள். ஆண்புலவர்களையும்விட பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அகம் பற்றிய பாடல்கள் சிறப்பாக காணப்படுகின்றன. எனவே அவற்றினைப்பற்றி ஆராய்ந்துரைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதற்கேற்ப இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு> அவற்றின் அடிப்படையில் கருதுகோள் முன்வைக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட முடிவுகளை கலந்தாய்வு செய்து விடயங்களை வரன்முறைப்படுத்தி இவ்வாய்வு உரைக்கிறது.

### முடிவுகளும் கலந்தாராய்வும்:

பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை தெளிவின்மை> சங்க காலத்தில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய பெண் புலவர்கள், பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அகம் ஆகிய தலைப்புகளில் கலந்தாராய்வு இடம்பெறுகிறது.

### பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை தெளிவின்மை:

பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் நமக்குக் கிடைத்துள்ள சங்கநூல்கள் ஆகும். அவற்றில் தற்போது கிடைத்துள்ள சங்கப்பாடல்கள் 2381. அவற்றுள் 2279 பாடல்களுக்கு மட்டுமே அவற்றைப் பாடிய புலவர்களின் பெயர்கள் தெரியவருகின்றன. ஏனைய பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை. ஆனால் அவற்றின் நடை> உத்தி> சொல்லாடல்களும் மிகச்

சிறப்பானவை. பத்துப்பாட்டு நூல்கள் தொகுப்பில் உள்ள ஒவ்வொன்றும் தனித்தனி நூல். இந்தத் தொகுப்பு முழுமைக்கும் அவற்றுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை கடவுள் வாழ்த்தைப் போல முதல் நூலாக வைத்துப் பத்து என்று எண்ணப்பட்டுள்ளது. எட்டுத்தொகை நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை நூல் தொகுக்கப்பட்ட காலத்தில் சேர்க்கப்பட்டவை. அவற்றையும் சேர்த்துதான் இக்கால பாடல்களின் எண்ணிக்கை 2381 ஆகும். மொத்தமாக கிடைக்கப்பெற்றுள்ள பாடல்களில் ஆசிரியர் பெயர் தெரிந்த 2279 பாடல்களைப் பாடிய புலவர்கள் 475 என அறியமுடிகிறது. அவற்றில்> எத்தனை பெண்புலவர்களின் உள்ளனர் என ஆராய்ந்தபோது அவ்வெண்ணிக்கையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

அதிகமானோர் 57 பெண்புலவர்கள் காணப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றனர். அவ்வாறு தெரிவிப்பவர்கள் அதற்கு ஆதாரமாக பெண்களுக்கேயுரிய 57 பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறுகின்றனர்.

1. அச்சியத்தை மகள் நாகையார்
2. ஔவையார்
3. அள்ளூரர் நன்முல்லை
4. ஆதிமந்தி - குறுந் 3
5. இளவெயினி - புறம் 157
6. உப்பை / உறுவை
7. ஒக்கூர் மாசாத்தியார்
8. கரீனா கண்கணையார்
9. கவியரசி
10. கழார் கீரன் எயிற்றியார்
11. கள்ளில் ஆத்திரையனார்
12. காக்கை பாடினியார் நச்செள;ளையார்
13. காமக்கணிப் பசலையார்
14. காரைக்காலம்மையார்
15. காவற்பெண்டு
16. காவற்பெண்டு
17. கிழார் கீரனெயிற்றியார்
18. குட புலவியனார்
19. குமிழிநாழல் நாப்பசலையார்
20. குமுழி ஞாழல் நப்பசையார்
21. குறமகள் / இளவெயினி
22. குறமகள் / குறிஎயினி
23. குற மகள் இளவெயினியார்
24. கூகைக்கோழியார்
25. தமிழறியும் பெருமாள்
26. தாயங்கண்ணி - புறம் 250
27. நக்கண்ணையார்
28. நல்லிசைப் புலமை மெல்லியார்
29. நல்வெள்ளியார்
30. நெட்டிமையார்
31. நெடும்பல்லியத்தை
32. பசலையார்
33. பாரிமகளிர்
34. பூங்கண்ணுத்திரையார்
35. பூங்கண் உத்திரையார்
36. பூதபாண்டியன் தேவியார்
37. பெண்மணிப் பூதியார்
38. பெருங்கோப்பெண்டு
39. பேய்மகள் இளவெயினி
40. பேயனார்
41. பேரெயென் முறுவலார்
42. பொத்தியார்
43. பொன்மணியார்
44. பொன்முடியார்
45. போந்தலைப் பசலையார்
46. மதுவோலைக் கடையத்தார்
47. மாற்பித்தியார்
48. மாற்பித்தியார், இயற்பெயர் பித்தி
49. மாறோக்கத்து நாப்பசலையார்
50. முள்ளியூர் பூதியார்
51. முன்னியூப் பூதியார்
52. வரதுங்க ராமன் தேவியார்
53. வருமுலையாருத்தி
54. வில்லிபுத்தூர்க் கோதையார்
55. வெண்ணிக் குயத்தியார்
56. வெள்ளி வீதியார்
57. வெறிபாடிய காமக்கண்ணியர்

வேறுசில ஆய்வாளர்கள் 32 பெண்புலவர்கள் காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் குறிப்பிடும் பெயர்கள் மேலுள்ள பெயர்ப்பட்டியலில் காணப்படுகின்ற பெயர்களாகவே உள்ளன. பேரா. ஔவை. நடராஜன் அவர்களோ, இவர்களின் எண்ணிக்கை 41 என்று குறிப்பிட்டுள்ளார். பேரா. ந.சஞ்சீவி அவர்கள் தமது,சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணையில் 36 பெண்பாற் புலவர்களைக் குறிப்பிட்டுள்ளார். ஔவையாரைத் தவிர ஏனையோர் அகப் பாடல்களையே அதிகம் எழுதியுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பிற்காலத்தில் பெண்பாற் புலவர்களின் பெயர் எவ்வாறு சுட்டப்பட்டதெனின், அவர்கள் எழுதிய இலக்கியங்களில் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட சொற்களிலிருந்தே அவர்களுக்கு பெயர் வைக்கப்பட்டது என்பதே உண்மை. எடுத்துக்காட்டாக செம்புலம் பற்றி ஒரு புலவர் பாடுகிறார். அவர் பெயர் ஆய்வாளர்களால் அறியப்படவில்லை. ஆயினும் கவிதை இரசம் கொட்டுகிறது. எனவே அப்புலவருக்கு செம்புலப்பெயனீரார் என்று பெயர் சூட்டினர்.

சங்ககாலத்துப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தளவில் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. பெரும் பேரா. உ.வே.சா அவர்கள்> சங்கப் பெண்பாற் புலவர்கள் கிட்டத்தட்ட ஐம்பது பேர் என்றும்> மற்ற புலவர்களின்சொற்களுக்கு எவ்வளவு சிறப்பு உண்டோ> அவ்வளவு சிறப்பு இவர்களுடைய செய்யுட்களுக்கும் உண்டு எனக்குறிப்பிட்டுள்ளார்.

சிறந்த பல தனிப்பாடல்களை> தொகுப்புக்களை இப்பெண்பாற் புலவர்கள் தமிழ் உலகுக்கு ஈந்தபோதும் அவர்களின் இயற்பெயர் அத்தொகுப்புக்களிலோ> தனிப்பாடல்களிலோ ஈண்டு குறிப்பிடப்படவில்லை என்பதை இலக்கியங்களை ஆராயும்போது தெளிவாகிறது.

இவ்வாறான குழப்பங்கள் பெண்பாற் புலவர்கள் சார்ந்து மட்டுமில்லாது ஆண்புலவர்கள் சார்ந்தும் காணப்படுகிறது. நற்றிணை ராஜம் பதிப்பு இத்தொகைநூல் பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 192 என்று காட்டுகிறது. வையாபுரிப்பிள்ளை 175 என்று குறிப்பிடுகிறார். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பதிப்பும் 175 எனக் காட்டுகிறது. இந்த வேறுபாடுகளுக்குக் காரணம் ஒருசில புலவர்களின் பெயர்களுக்குள்ள அடைமொழிகள் வேறுபட்டிருப்பதே ஆகும். மேலும் புலவர்ளின் பெயர்களில் காணப்படும் பாட வேறுபாடுகளும் காரணமாகும். குறுந்தொகை 79 ஆம் பாடலைப் பாடிய புலவர் பெயர் குடவாயில் கீரனத்தன் என்றும், குடவாயில் கீரத்தனார் என்றும் உள்ளன. குறுந்தொகை 131 ஆம் பாடலைப் பாடிய புலவர் பெயர் ஓரேர் உழவன் என்பதற்குப் பதிலாக நக்கீரன் என்றும் குறுந்தொகை 315 ஆம் பாடலைப் பாடிய புலவர் பெயர் மதுரை வேளாத்தத்தன் என்பதற்குப் பதிலாக தும்பிசேர் கீரனார் என்றும் பதிப்புகள் புலவர் பெயர்களை மாறுபாடுகளுடன் காட்டுகின்றன.

இவ்வாறாக ஆய்வாளர்கள் கூறுவனவற்றின் ஊடாக பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை தெளிவற்றவையாக உள்ளமை வெளிப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் ஒப்பீட்டளவில் ஆண்பாற் புலவர்களின் எண்ணிக்கையை நோக்குகையில் பெண்பாற் புலவர்கள் எண்ணிக்கை அளவில் குறைவானவர்களாகவே காணப்படுகின்றமை எமது ஆய்வினூடாக வெளிப்பட்டுள்ளது.

**சங்க காலத்தில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய பெண் புலவர்கள்:**

எண்ணிக்கை அடிப்படையில் பெண்பாற் புலவர்கள் குறைந்தளவில் காணப்பட்டிருந்தாலும் பண்டைய தமிழக பெண்கள் சமுதாயத்தில், கல்வியில் உயர்ந்த நிலையில் இருந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என சித்திரிக்கப்படும் சங்ககாலத்தில் ஆண் புலவர்களுக்கு நிகராக பெண் புலவர்கள்

இலக்கியத்தில் திறன் மிக்கவர்களாக இருந்துள்ளமை ஆய்வுகளில் வெளிப்பட்டுள்ளன.

பெண் புலவர்களின் பாடல்களிலிருந்து கல்வியில் சிறந்து விளங்கினார்கள் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது. இவர்கள் கல்வியில் சிறந்தோங்கியது மட்டுமல்லாமல் அரசவைகளிலும் அங்கம் வகித்தனர். ஆண் புலவர்களுக்கு நிகராகப் புலமை பெற்றிருந்தார்கள். அரசனுக்கு ஆலோசனைகள் கூறும் மந்திரியாகவும், தூது சென்று வெற்றியுடன் திரும்பும் மதிநுட்பம் கொண்ட தூதுவராகவும், புலமையுடன் சமுதாயத்தைத் திருத்தும் ஆளுமைத்திறன் கொண்டவராகவும் இருந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியம் தெளிவாக எடுத்துரைக்கிறது.

சங்ககாலத்தில் பெண்கள் கல்வியிலும் மேம்பட்டிருந்தனர். அவ்வையார், காக்கைப்பாடினியார், நக்கண்ணையார், வெள்ளி வீதியார், நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார், மதுரை ஒலைக்கடையத்தார், காவற்பெண்டு, ஆதிமந்தி முதலானோர் புலவர்களாக இருந்து இலக்கியத் தொண்டாற்றி உள்ளனர்.

பல வீரப் பெண்மணிகளும் வாழ்ந்துள்ளனர். பொன்முடியார் நாட்டுப்பற்றுடைய வீரம் செறிந்த கருத்துகள் நிறைந்த பாடல்களைப் பாடியுள்ளார். அவ்வை பாடிய பாடல்கள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. அவை, சிறந்த நீதி கூறுவதாக உள்ளன. அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு போன்றவைகளில் பெண்பால் புலவர்களின் பாடல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

பெண்களை குறிப்பிடும் வகையில் சங்ககாலப் புலவர்கள் பயன்படுத்திய சொற்கள் வியப்பைத் தருகின்றன. மாதர், பெண், நல்லார், ஆயிலை, அணியிழை, மென்சாயலர், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை போன்ற பெயர்கள் இலக்கியங்களில் விரவிக் காணப்படுகின்றன.

**பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அகம்:**

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனச் சித்தரிக்கப்படும் சங்க காலம் தமிழ்ப் புலவர்கள் நிறைந்து வழிந்த காலம். அக்காலத்தில் ஆண்பாற் புலவர்களுக்குச் சளைக்காமல் பெண்பாற் புலவர்களும் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாகக் காணப்பட்டுள்ளனர். சங்க காலத்தில், பெண் புலவர்களால் எழுதப்பட்ட பாடல்களில் அவர்களின் காதல், வீரம், தனிமைத் துயர், கைம்மை, புலவர்களைப் புகழும் பெருந்தன்மை, வரலாற்றறிவில் சிறந்திருந்தமை, அவர்களின் சுயமரியாதை, காதலை வெளியிடுவதில் அவர்களுக்கிருந்த தயக்கம், பரத்தமை, வெறுப்பு போன்ற பல்வேறு தகவல்களும் விரவிக் காணப்படுவதனூடாக இதனை உணர முடிகிறது.

சங்க காலப் பெண்பாற் புலவர்களில், ஒளவையார் முதன்மையானவராவார். வெள்ளி வீதியாரும், நன்முல்லையாரும் அடுத்தநிலையில் வைத்து எண்ணத்தக்கவர்களாவர். கழார்க் கீரன் எயிற்றியார், கச்சிப்பேட்டு நன்னாகையார், நச்செள;ளையார், ஒக்கூர்மாசாத்தியார், வெண்ணிக்குயத்தியார், மாற்றோக்கத்து நப்பசைலயார், வெறிபாடிய காமக்கண்ணியார், நக்கண்ணையார்,பொன்முடியார், நல்வெள்ளையார், தாயங்கண்ணியார், குறமகள் இளவெயினியார், பாரிமகளிர், ஆதிமந்தி, காவற்பெண்டு,பெருங்கோப்பெண்டு போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

அகத்திணையியல் முதல் சூத்திரத்திற்கு உரையெழுத வந்த நச்சினார்க்கினியர், ஒத்த அன்பான் ஒருவனும், ஒருத்தியும் கூடுகின்றகாலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாகஇவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம்என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்பது ஓர் ஆகுபெயராம் என்று

விளக்கமாக கூறியுள்ளார். எனவே அகத்திணை என்ற சொல்லில் உள்ள அகம் என்ற சொல் வீடு, இல், மனை அல்லது குடும்பத்தையே குறிக்கிறது. அக்குடும்பத்தில் வசிக்கும்தலைவன்-தலைவியின் வாழ்க்கையைக் குறிக்கிறது எனக் கொள்ளலாம்.

சங்க காலப் பெண்பாற் புலவர்கள் காதலை மிகவும் சிறப்புடன் எவ்விதமான பூச்சுக்களும் இல்லாமல் பாடி இருக்கின்றனர்.தலைவி, தலைவன், தோழி எனக் கூற்று யாருடையதாக இருப்பினும் வெளிப்படையாகவே நிகழ்கிறது. காதலில் தவிக்கும் தலைவியின் மன நிலையை ஔவையின் பாடலொன்று அற்புதமாகப் கூறுகிறது. தலைவி காதல்நோயால் தகித்துக் கொண்டிருக்க, தென்றல் வீசி அந்நோயை அதிகமாக்குகிறது. ஊரோ அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கிறது. தன் துயரத்தை உணராமல் உறங்கிக் கொண்டிருக்கிறது. அதனை,

முட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்

ஓரேன் யானும்ஓர் பெற்றி மேலிட்டு

ஆஅ ஒல்எனக் கூவு வேன்கொல்

அலமரல் அசைவலி அலைப்பஎன்

உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே (குறு: 28. ஔவை)

தலைவன் ஒருவனை காலை, பகல், மாலை, யாமம், விடியல் என எல்லாப் பொழுதும் காதல்ஃகாமம் வருத்திக் கொண்டிருக்கிறது.நினைவெல்லாம் பொழுதெல்லாம் அவளை நினைத்துக் கொண்டிருக்கும் அவன் தனது காதலே உண்மைக் காதல் என்கிறான்.

காலையும் பகலும் கையறு மாலையும்

ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றுஇப்

பொழுதிடை தெரியின் பொய்யே காமம்

என்கிறது அள்ளூர் நன்முல்லையாரின் (குறு. 32) பாடல். தன் மன விருப்பத்தையே நன்முல்லையார் நாணம் காரணமாக தலைவன் மேல் ஏற்றிக் கூறினார் என்று கொள்ளலாம்.

தலைவன் இல்லாத சமயத்தில் பெண்கள் அழகுபடுத்திக் கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. இதனை கச்சிப்பேட்டுநன்னாகையாரின் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

ஈங்கே வருவர் இனையேல் அவர்என

அழா அற்கோ இனியே நோய்நொந் துறவி!

மின்னின் தூவி இருங்குயில் பொன்னின்

உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை

நறுந்தாது கொழுதும் பொழுதும்

வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே! (குறு: 162)

என்பது பாடல். பொருளீட்டச் சென்ற தலைவன் விரைவில் திரும்பி வருவார் என ஆறுதல் கூறும் தோழிக்கு தலைவி, நான்எவ்வாறு அழாமல் இருக்க முடியும்? தலைவன் இல்லாத காரணத்தினால் இந்த இளவேனில் காலத்திலும் மலர் இல்லாமல் வறிதாக இருக்கும் கூந்தலைத் தடவுகிறேனே என வருந்திக் கூறுகிறாள்.

**முடிவுரை:**

தமிழில் கிடைக்கும் தொன்மை இலக்கியங்களான சங்ககால இலக்கியங்களினூடாக அக்கால பெண்புலவர்களின் பன்முக விடயங்களை அறிந்துகொள்ள முடிந்துள்ளது. குறிப்பாக, பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை தெளிவின்மை காணப்படுகின்றமையும் அதற்கான காரணங்களும் கண்டறியப்பட்டுள்ளன. சங்க காலத்தில் சகல துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்கியிருக்கிறார்கள் என்பதும் எவ்வெவ் துறைகளில் சிறந்து விளங்கியுள்ளார்கள் என்பதும் பெறப்பட்டுள்ளன. ஆண்புலவர்களையும்விட சிறப்பாக பெண்பாற் புலவர்களின் பாடல்களில் அகம் எடுத்துரைக்கப் பட்டுள்ளன என்பதை பாடல்களின் துணையோடு காட்டப்பட்டுள்ளன.

**உசாத்துணை:**


ஆனந்தன். நாஞ்சில். (1999). சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள், கண்மணி பதிப்பகம். திருச்சிராப்பள்ளி.

சாமிநாதையர். உ.வே. (2000). குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம். சென்னை.

சிவத்தம்பி. கா. (2000). தமிழில் இலக்கிய வரலாறு நியூ செஞ்சுரி புக் கவுஸ், சென்னை.

ஞானசேகரன். தே. (1990). நாட்டார் சமயம் கிரியா பப்ளிகேசன்ஸ், சென்னை.

தட்சிணாமூர்த்தி. ஆ. (2005). தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு. சன்னை.

தொல்காப்பியர். (1975), தொல்காப்பியம் - பொருளதிகாரம் (மறுபதிப்பு), பேராசிரியர், கழகம், சென்னை

மோசேஸ், எஸ். (2010). கலை இலக்கியக் கட்டுரைகள், கிரு~p பதிப்பகம், மட்டக்களப்பு, இலங்கை.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Moses S., (2021) Female poets in Sangam Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:46-51. Cauvery College For Women, Trichy.

**முனைவர் .பூ.சு.கணேஷ்மூர்த்தி MA;Ph.D**
உதவிப்பேராசிரியர்
தமிழ்மொழி மற்றும் மொழிப்பெயர்ப்பியல் துறை
திராவிடப்பல்கலைக்கழகம்,
சீனிவாசவனம் குப்பம்,
சித்தூர் மாவட்டம் ஆந்திரமாநிலம்
அஞ்சல் குறியிட்டு எண் -517 426

# சங்க கால தமிழர் உணவுப் பண்பாடு

**ஆய்வு சுருக்கம் :**

கல்தோன்றி மண் தோன்றாக்காலத்தை வாளொடு முன் தோன்றிய மூத்த சான்றோர்கள் வாழ்ந்த தமிழகத்திலிருந்து தான் நாகரீகம்,பண்பாடு , கலாச்சாரம் போன்றவை பிற இடங்களுக்கு சென்றதை நாம் அறியலாம். உணவு சார்ந்த கலாச்சாரம் உணவையே மருந்தாக பயன்படுத்தியது கூட தமிழர்களின் வாழ்வியல் அடையாளங்களாக இருப்பதை சங்ககால இலக்கியங்களில் அறியமுடிகிறது. பண்டைக் காலத்தில் தோன்றிய மூல நூல்களுக்கு பல நூற்றாண்டுகள் கழித்து உரைகள் தோன்றியதை காணமுடிகின்றது. உரைகள் தோன்றிய பல நூற்றாண்டுகள் கழித்து நாம் உரைகளின் மூலமாக மூல நூலை படிக்கின்றோம். அவ்வாறு படிக்கும் சமயத்தில் உரைகளின் மீதும் மூல நூல்கள் சமகாலக் கோட்பாடுகளின் நிலையை காண்பது இயல்பானதாகும். இந்நிலையில் தமிழ் இலக்கியங்களில் இயற்றுப்பட்டுள்ள சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழர்களின் உணவு பண்பாட்டினை குறித்தும், அக்காலத்தோரின் உணவு மரபினை இக்கால மக்கள் விளங்கிகொள்ளவும் ஏதுவாக இக்கட்டுரை அமைகின்றது.

**சங்கக்கால தமிழரின் வாழ்வு**

சங்கக்கால மானிடரது வாழ்வியல் அடையாளங்களில் அவர்கள் கைக்கொண்ட உணவுப்பழக்கம் உயர்ந்த இடத்தைப்பெறுகின்றது.உண்ணுதல் என்பது ஓர் உடல் சார்ந்த தேவையாக இல்லாமல் சமூகத்தை சார்ந்த செயலாக்கமாக அக்காலத்தில் இருந்துவந்ததை அறியமுடிகிறது. அக்காலகட்டத்தில் வருகை தரும் விருந்தினருக்குக்கொடுக்கபட்ட முதன்மையும், குடும்பம் ஊர் சார்ந்த நிகழ்ச்சிகளில் உணவு பெற்றிருந்த முக்கியத்துவத்தை நம்மால் அறியமுடிகிறது.

**உணவு வரையரை**

உண்,ஊன்,உணவு போன்ற சொற்களின் வேர்ச்சொல் " உள்" என்பதை உட்கொள்ளுதல் என்ற செயலலிருந்து பிறந்ததே இந்த வேர்ச்சுல் என ஆய்வறிஞர்கள் கூறியுள்ளதை அறியலாம். மனித குலத்தின் உணவு தொடர்பான தேடலே அவர்களது பண்பாட்டு வலர்ச்சிக்கு வழி வகுத்தது என்பர். சங்க காலத்தோரின் வெகுவாக வளர்ந்த வளர்ச்சியில் உணவுப்பாரம்பரியத்தின் பங்கு முக்கியமான ஒன்றாக இருந்துள்ளதை காணமுடிகிறது. மனிதனது உணவுத்தேவையானது இருப்பின் தேவையை நிறைவு செய்த போதும் அது இனம் சார்ந்த பண்பாட்டாலும் நாம் வாழ்கின்ற சுற்றுப்புற சூழல்களாலும் வரையறுக்கப்படுகின்றது.

**சங்க இலக்கியங்களில் உணவு**

நெருப்பைக் கண்டறிந்து அதைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பிறகே சமையல் முறை தொடங்கியதை அறியமுடிகிறது. நெருப்பு மூட்டிச்சமைக்கும் அடுப்புகள் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. சங்கக்காலத்தில் சமையல் செய்வதற்கான அடுப்புகள்

பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அடுப்பு என்ற சொல் அக்காலத்திலிருந்தே வழக்கிலிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அடுப்பை குறித்து காணும்போது

**" முத்தலை அடுப்பு "** (புறம் – 28.6), "

**ஆடுநனிமறந்த கோடுயர் அடுப்பு**" புறம்.164) என்றும்,

**"ஆண்டலை அணங்கடுப்பு "** (மதுரை .காஞ்சி) யிலும், "

**முரியடுப்பு "(**பெரும்பாணாற்றுப்படை) ,

**"களிபடுக்குழிசி கல்அடுப்பு** " (நற்றினை) யிலும் இருப்பதை அறியமுடிகிறது.

அடுப்புகளை விடவும் வேட்டைக்கு செல்பவர்கள் தீயை எரித்து இறைச்சியை வேகவைத்து உண்ணும் பழக்கம் இருந்ததை அறியமுடிகிறது.உணவு பண்பாட்டு வளர்ச்சியின் உயர்ந்த நிலை வீடு தோறும் அமைந்துள்ள சமையல் அறைகளை குறிப்பிடலாம். மனிதன் வாழ்ந்த வீடுகளில் சமையலறை இருந்துள்ளது குறிப்பிடதக்கதாகும்.

மேலும் சமையல் அறையை அகநானூறு குறிப்பிடும்போது ""உதியனட்டில் போல் ஒலியெழுத்து அருவியார்க்கும் " மேலும் சிறுபாணாற்றுப்படையில் " புளிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில் என்றும், பட்டினப்பாலையில் குறிப்பிடுகையில் "அறநிலை இய அகனட்டில் " என சமையல் அறைகளை பற்றி விவரிக்கபட்டுள்ளது.

**சங்கத்தமிழரின்பல்வேறு வித சமையலும் உண்ணும் முறையும்.**

தமிழர்கள் பல்வேறு விதமான சமையல் முறைகளை பயன் படுத்தியுள்ளதை அறியலாம். நீரிலிட்டு அவித்தல் , அவித்து வேகவைத்தல், வறுத்து அவித்தல் , சுடுதல் , வற்றல் செய்தல் , நெய்யில் பொரித்தல் ,வேகவைத்து ஊரவைத்தல் போன்ற சமையல் முறைகள் இலக்கியங்களில் இருப்பதை அறியமுடிகிறது. அதே போன்றே உணவு உண்ணும் முறைகளைத்தமிழர்கள் 12 ஆக பிரித்துள்ளனர். அவை கீழ் வருமாறு

1) அருந்துதல் - மிக குறைவான அளவில் உட்கொள்ளல்.

2) உண்ணுதல் - பசி தீர சாப்பிடுதல்

3) உரிஞ்சல் - வாயைக்குவித்துக்கொண்டு நீரியற் பண்டத்தை ஈர்த்து உட்கொள்ளல்.

4) குடித்தல் - நீரியல் உணவை கூழ் கஞ்சி கொஞ்சம் கொஞ்சமாக பசி நீங்க சாப்பிடுதல்.

5) தின்றல் - தின்பண்டங்களை சாப்பிடுதல்.

6) துய்த்தல் - சுவைத்து மகிழ்ந்து உட்கொள்ளுதல்.

7) நக்கல் – நாக்கினால் துலாவி சுவையை ரசித்து சாப்பிடுதல்.

8) நுங்கள் – முழுவதையும் ஒரே சமயத்தில் உறிஞ்சி சாப்பிடுதல்.

9) பருகல் – நீரியற் பண்டத்தை சிறுக்குடிப்பது (நீர் , தேநீர், பாணகம்)

10) மாந்தல் – பெருவேட்கையுடன் விரைவாக உண்ணுதல்.

11) மெல்லல் - கடினமான பண்டங்களை பல்லினால் கடித்து உண்ணுதல்.

12) விழுங்கல் – பல்லுக்கும் நாக்குக்கும் தொண்டைவழியாக சாப்பிடுதல்.

இவ்வாறாக சங்கதமிழர் வாழ்விடமெல்லாம் பலதரபட்ட உணவு முறைகள் இருந்திருப்பதை அறியலாம்..

**சோறு**

அக்காலகட்டத்தில் இருந்தே சோறு என்ற சொல் வழக்கிலிருந்ததை அறியமுடிகிறது. சோறு தான் அன்றும் முதன்மை உணவாக இருந்துள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அரிசியின் பயன்பாட்டை அறிந்துள்ளனர். பழங்கால தமிழரது வாழ்வை வெளிப்படுத்தும் சான்றுகளாகத்திகழும் ஆதிச்ச நல்லூர் தொல்பொருட்கள் தமிழரது அரிசியின் பயன்பாட்டை புலப்படுத்துவதை அறியலாம். தோலோடு இருப்பின் நெல், குற்றி எடுத்தால் அரிசி, வேகவைத்த பின் சோறு என பயன்படுத்தபட்ட சொல் வழக்கங்களே அரிசியின் பயன்பாட்டின் சிறப்பை வெளிப்படுத்துவதை அறியலாம். நெல்லில் இருவகை 1. வெண் நெல் , 2. செந்நெல் என வகைப்படுத்தியதை காணமுடிகிறது. அது மட்டுமின்றி நெல்லுக்கு வரி, செஞ்சாலி,செந்நெல், சொல் இயவை ஐவனம் என்ற பெயர்களும் ஆங்காங்கு புழக்கத்தில் இருப்பதை குறிப்பிடப்பட்டுள்ளது.

சோறு என்பதற்கு அடிசில், அழினி,கூழ், அவிழ்,கொன்றி, நிமிரல்,புழுங்கள் ,பொம்மன்,மிதவை, பருக்கை, பிசி, அன்னம், என்ற பெயர்கள் பொதுவாக தென்னிந்தியாவில் அதுவும் திராவிடமொழிகளான தமிழ்,தெலுங்கு, கன்னடா, மலையாலம் ,போன்ற மொழிகளில் வழக்கில் இருப்பதை அறியலாம். பச்சரிசியால் பொங்கபட்ட சோற்றை பொங்கல் என்றும், புழுங்கல் அரிசியால் பொங்கபட்ட சோற்றைப்புழுங்கள் என்றும் அழைக்கபட்டதை அறியமுடிகிறது.

ஆக்கிய சோறுடன் பிற உணவுப் பொருட்களை க் கலந்து சாப்பிட்டுள்ளனர். கலக்கபட்ட பொருட்களுக்கு ஏற்ப பல பெயர்களால் அவை கிழே வருமாறு

ஊன் சோறு - ஊனும் சோறும்

கொழுஞ்சோறு – கொழுப்பு நிணம் கலந்து ஆக்கியது

செஞ்சோறு – சிவப்பு அரிசிச்சோறு

நெய்ச்சோறு – நெய் கலந்த சோறு

புளிச்சோறு – புளிக்குழம்பு கலந்த சோறு

பாற் சோறு – பால் கலந்த சோறு

வெண் சோறு – வெள்ளிய அரிசிச்சோறு

அரிசியை மூன்று ஆண்டுக்காலம் பாதுகாக்கும் முறை பற்றிய தொழில்நுட்பம்பற்றிப் பழந்தமிழர்கள் பின்பற்றி வந்ததை அறியலாம்.

**தமிழரின் உணவு**

பண்டைக்கால தமிழர்கள் வாழ்ந்த நிலத்திற்கேற்பவும், குலத்திற்கேற்பவும் தமிழர்களிடையே உணவுகள் மாறுபடுகின்றன. தமிழர்கள் சோறும் , மரக்கறியும், புலால் உணவும், மதுவும் விரும்பி உண்டதை அறியமுடிகிறது. கடுகு இட்டுக்காய்கறிகளை தாலிப்பது பசு வெண்ணெயில் பொரிப்பது , முளிதயிர் பிசைந்து தயிர் குழம்பு வைப்பது, மோரில் ஈயலை ஊற வைத்து புளிக்கறி சமைப்பது போன்ற பழந்தமிழர் சமையல் வழிமுறைகளை ஆய்வியல் அறிஞர்கள் வழி அறியமுடிகிறது.

**பலவகை பலகாரம்**

பொதுவாக வீட்டிற்கு விருந்தினரோ அல்லது சுபநிகழ்ச்சிக்கு வாழை இலையில் கீழ் காணும் பல வகை பலகாரங்கள் முறையே,

1. உப்பு
2. ஊறுகாய்
3. சட்னிபொடி
4. தேங்காய் சட்னி
5. சித்ரண்ணம்,
6. பப்படம்

7. இட்லி
8. சாதம்
9. பருப்பு
10. தயிர் வெங்காயம்
11. ரசம்
12. பச்சடி
13. கத்தரிக்காய் பொரியல்
14. கூட்டு
15. பொரியல்
16. அவியல்
17. சாம்பார்
18. இனிப்பு'
19. வடை
20. காரபொரியல்
21. தயிர்
22. மோர்
23. பாயசம்

மேற்கண்ட பலகாரமெல்லாம் தமிழரின் முக்கிய நிகழ்வுகளுக்கு பயன் படுத்துவதை அறியலாம்.

**முடிவுரை**

இவ்வாறு தமிழர்களால் போற்றபட்ட உணவு பண்பாடு இயற்கையுடனுடன் கால நிலைகளுடன் இணைந்து கிராம சூழலில் தொடங்கி இன்று அபார வளர்ச்சியடந்துள்ளதை அறியமுடிகிறது. வேக வேகமாக வளர்ந்து வரும் இந்நிலையில் சரியான உணவு பயன்படுத்தவில்லை எனில் பல நோய்கள் தாக்கும் அபாயம் காத்துகொண்டிருக்கிறது. ஆகவே நம் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற உணவை சாப்பிட்டால் அனைவரும் நோயற்ற வாழ்வு வாழ ஏதுவாக இருக்கும்.

**துணை நூற்பட்டியல்**

1.உ.வே.சாமிநாத ஐயர் நல்லுரைக்கோவை இரண்டாம் பாகம்

2.மாத்தலை சோமு வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்

3.மு.வரதராசன் தமிழ் இலக்கிய வரலாறு .

4.அ.தட்சணாமூர்த்தி தமிழர் நாகரீகமும் பண்பாடும்

5.பொ.வெ. சோமசுந்தரனார் குறுந்தொகை

6. உ.வே.சாமிநாத ஐயர் பரிபாடல்

7.கந்தையாபிள்ளை ந.சி செந்தமிழ் அகராதி

8.கதிரைவேற் பிள்ளை .நா தமிழ் மொழி அகராதி

9.வாழ்வியற்களஞ்சியம் தமிழ்ப்பல்கலைகழகம் வெளியீடு

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Ganeshmoorthy P. S., (2021) Food Culture in Ancient Tamil, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:52-55. Cauvery College For Women, Trichy.

**வின்சென்ட் பிரபு. அ**
தமிழாசிரியர்
தூய மரியன்னை மேனிலைப்பள்ளி
மதுரை

# மலைபடுகடாம் காட்டும் தமிழர் வாழ்வியல் அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாய்த் திகழ்கிறது. அதனில் மலைபடுகடாம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள மலைவளம், வேளாண்திறன், விருந்தோம்பல் பண்பு நாட்டுவளம், நன்னனின் படைச்சிறப்பு, வீரம் கொடைச் சிறப்பு ஆகியன உரைக்கப்படவுள்ளது.

கூத்தர்கள் நவிர மலையை நோக்கிப்பயணம் செய்கையில், தோற்கருவி உள்ளிட்ட நால்வகைக் கருவிகளையும், தோளின் இருபுறமும். காவடி போலச் சுமந்து செல்கின்றனர். அது மலையில் உள்ள மிகப்பெரிய பலாமரம் எல்லாப் பக்கங்களிலும் காய்த்துத் தொங்குவதை ஒத்திருக்கிறது.

நெடும் பயணம் செல்லும் கூத்தர்கள் வழியிடையே, மலைவாழ் மக்கள் தம் குடியிருப்புகளில் தங்கிச் செல்கின்றனர். அப்போது அவர்கள் தங்கள் நிலத்தில் விளைந்த, பொருட்களால் செய்யப்பட்ட உணவையும், வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சிகளையும் சுவையுடன் சமைத்துப் பரிமாறுவது, இன்முகத்துடன் உபசரிப்பது யாவும் மனங்கவரும் வகையில் அமைகிறது.

நவிர மலைக்குச் செல்லும் வழி முழுவதும் உள்ள காடுகளும் மலைகளும் அன்றைய தமிழர்களின் முயற்சியால் பண்படுத்தப்பட்டு நல்விளைச்சல் தருகின்றன. அங்கே வெண்ணெல், கரும்பு, இஞ்சி, கிழங்கு, வாழை போன்றன, செழித்து வளர்ந்து நாட்டை வளமுடன் திகழச் செய்கின்றன.

பயணம் கடுமையானால் வாழ்வு இனிமையாகும். கூத்தர்களின் பயணத்தில் மலைச்சரிவுகள், பள்ளத்தாக்குகள், வழுக்கும் நிலம் கூரிய கற்கள் நிறைந்த பாதைகள் ஆகியன நிறைந்துள்ளன. மேலும் கொடிய விலங்குகள்,பாம்புகள், ஆரணங்குகள், ஆகியவற்றுக்கு அஞ்சியவாறே பயணிக்க வேண்டியுள்ளது. இன்னல்களை எதிர்கொண்டவாறே நன்னனை அடையும் இலக்கை நோக்கிப் பயணிக்கின்றனர்.

மலையிடத்தில் பல்வேறு விதமான ஓசைகள் எழுகின்றன. பூ விரியும் ஒலி, அருவி கொட்டுதல், விளைநிலத்தைப் பாதுகாக்க கானவர்கள் எழுப்பும் ஒலி, விலங்குகளால் துன்புற்று அடையும் அவலம், மகளிரின் வள்ளைப்பாட்டு, கரும்பு பிழிதல், இதுபோன்ற எண்ணற்ற ஒலிகள், மலையிடத்தில் எழுகின்றன.

குறிஞ்சி - மலையினின்று புறப்படும் கூத்தர்கள், முல்லை - காடு தாண்டி மருத நிலம் அடைகின்றனர். செல்வ வளம் மிக்க மருத நிலம், எழில்மிகு பொழில்களும், வயல்களும், சூழ்ந்துள்ளன. வீட்டில் பராமரிக்கும் காட்டு விலங்குகள் விளைந்த விளைபொருட்கள் ஆகியன மலைபோல் குவிந்து நிற்கின்றன.

கூத்தர்கள் தாங்கள் காண விழைந்த நன்னனைக் கண்டதும் பேருவகை கொள்கின்றனர். கொண்டு சென்ற இசைக்கருவிகளை உரிய வகையில் மீட்டி விறலியரின் அசைவுகளுடன் பொருந்தும் வகையில் செவிக்கும், காட்சிக்கும், கருத்துக்கும் விருந்து பரிமாறுகின்றனர்.

கடையெழு வள்ளல்களுடன் ஒப்பு கூறத் தக்க வகையில் நன்னனின் கொடைத்திறம் விளங்குகிறது. பொன்னும் அணிமணியும், குதிரையும் தேரும் வழங்கி, வருகைதரும் யாவரின் வறுமைத் துயர் தீர்க்கும் மனதுடனும், நிறைந்த வளமுடனும் ஆட்சி செய்கின்றான் நன்னன். பழமரம் நாடும் பறவை போல் தேடிவருபவர்களின் வறுமையைப் பசியைப் போக்கும் உற்ற துணைவனாக நன்னன் விளங்குகிறான்.

இவ்வாறு கூத்தர்களின் பாங்கு அவர்கள் வழியிடைப் பயணத்தில் காண்பவை, விருந்தோம்பலை எதிர் கொள்ளுதல், நன்னனின் நாட்டுவளம், கொடைத்திறம் ஆகியன இங்கே எடுத்தாளப் பெற்றுள்ளன.

**முன்னுரை :**

தொல் பழந்தமிழரின் அடையாளங்களை கண்டெடுக்க வேண்டுமாயின் நாம் இந்தியப் பெருங்கடலின் அடியாழத்தில் சென்று தேட வேண்டும். ஆனால் லெமூரியாத் தமிழனை இன்றைய இணையத் தமிழன் கண்டடைய அவ்வளவு பெரு முயற்சி தேவையில்லை. காலத்தின் கண்ணாடியாய், கருவூலப் பெட்டகமாய் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றை அறிந்து கொள்ள நம் சங்க இலக்கியங்கள் பேருதவி புரிகின்றன. இருபதாயிரம் ஆண்டு கால மனித வரலாற்றில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மொழி வரலாற்றினைத் தன்னகத்தே உடைய இலக்கியங்கள் பதினெண் மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்களாகப் பகுக்கப்படுகின்றன.

பதினெண் மேற்கணக்கு நூல்கள் பாட்டும் தொகையுமாக அமைந்துள்ளன வரலாற்றுக்கு முந்தைய காலத்தை அறிந்து கொள்ள, இவை பயன்படுகின்றன. பாட்டு-பத்துப்பாட்டு தனிப்பெரும் புலவர்கள் பதின்மரால் இயற்றப்பட்ட தனித்தனி நூல்கள். இறுதியாக வகைப்படுத்தபட்ட மலைபடுகடாம்' ஆற்றுப்படை நூல்களுள் ஐந்தாவதாக அமைந்துள்ளது. கூத்தர்களை கூத்தர் ஆற்றுப்படுத்தும் பாங்கில் அமைந்தது.

**ஆற்றுப்படை**

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்”[1]

(தொல்.புறத்திணையியல்.88)

பரிசில் பெற்று, தன் வறுமை நீங்கிய கலைஞன் தன்னைப் போன்ற மற்றொருவனை புரவலரிடத்தே சென்று பாடி பரிசில் பெற்று வறுமைத்துயர் நீங்கிட வழிகாட்டுவதே ஆற்றுப்படை இலக்கியம் ஆகும்.

**மலைபடுகடாம் (அ) கூத்தராற்றுப்படை**

இன்றைய தமிழ் நிலப் பகுதியில் திருவண்ணாமலை அருகில் செங்கம் அடுத்த மலைப்பகுதி அன்று நவிரமலை எனப்பட்டது. அதனை ஆட்சி செய்த செங்கண் மாத்து வேளிடம் - நன்னனிடம் பரிசில் பெற்றுத் திரும்பும் கூத்தன் மற்ற கூத்தர்களிடம் அவன் இல்லத்தின் வழியைக் காட்டுவதாக இந்நூல் அமைந்துள்ளது. வெண்பா யாப்பு

விரவி வருவதாக, ஆசிரியப்பா யாப்பில் 583 அடிகளில் பாடப்பட்ட இவ்விலக்கியம் சங்ககால வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதனை இரணியமுட்டத்தை - இன்றைய நீலகிரியைச் சேர்ந்த பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் தமிழ் கூறும் நல்லுலகுக்குப் படைத்தளித்துள்ளார்.

**கூத்தர்களின் இசைக்கருவிகள்**

தமிழ் இசை மிகத்தொன்மை வாய்ந்தது. குரல், துத்தம், உழை, இளி, விளரி, தாரம், கைக்கிளை என்பனவாக ஏழு இசைகளும், தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, என்றவாறு நால்வகைப் படுத்தப்பட்ட கருவிகளும், தமிழரிடையே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளன. கலைஞர்களையும், கூத்தர், பாணர், பொருநர், விறலி என்றவாறு வகைப்படுத்தியுள்ளனர். இலக்கியங்களிலும் பதிவு செய்துள்ளனர். இதனை. இந்தக் கூத்தராற்றுப்படை எண்பித்துக் காட்டியுள்ளமையைப் பின்வருமாறு காணலாம்.

"விண்ணதிர் இமிழிசை கருப்பு பண்ணடைத்துத்
திண்வார் விசித்த முழவொடு ஆகுளி
...... ...... ....... .......
...... ...... ....... .......
கடிகவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப"[2]

நல்ல செழுமை மிக்க மழைக்காலத்திலே மலையிலே நிற்கும் பலா மரம் எல்லாப் பக்கங்களிலும் காய்த்துத் தொங்குவது போல, மலை வழியே, வேடுவர் வாழும் காட்டினில் செல்லும் கூத்தர்கள் தங்கள் இசைக் கருவிகளைச் சுமந்து செல்கிறார்கள். மத்தளம், சிறுபறை, கஞ்சதாளம், நெடுவங்கியம், தூம்பு, குழல், தட்டைப்பறை, தாளம், சல்லி முதலான இசைக் கருவிகளைக் 'காவடி' தூக்குவது போல, இருபுறமும் தோளில் சுமந்து செல்கின்றனர்.

இவ்வாறு, பல்வேறு இசைக்கருவிகளைத் தங்கள் வாழ்க்கையின் அடையாளமாக - பிழைப்பின் அடையாளமாகச் சுமந்து செல்வதைப் பெரும் பேறாகக் கருதினர், அன்றைய கூத்தர்கள்.

**வளம் மிகுந்த நாடு**

நாடு! ஆளுகின்ற ஆட்சியாளர்களால் ஒரு போதும் சிறப்பு அடைவதில்லை. அந்நாட்டின் மக்கள், அரண், வளம், இயற்கைச் சூழல், அறம் கூறும் சான்றோர் இவர்களால் மட்டுமே! இவர்களைக் கொண்டே அரசனால் வளமும் நலமும் மிக்க ஆட்சியை நடத்த இயல்கிறது. 'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்' என்ற முதுமொழிக் கேற்ப நாட்டின் வளத்தை அறிந்தாலே மக்களின் வாழ்க்கைத் தரத்தை அறியலாம். நன்னன் ஆட்சி செய்யும் நவிரமலை நாடு, எத்தகைய வளம் மிகுந்தது என்பதை உணர்வோம்.

"வாலிதின் விளைந்தன ஜவன வெண்ணெல்
வேல் ஈண்டு தொழுதி இரிவுஉற் றென்னக்
...... ...... ....... .......

...... ...... ....... .......

காழ்மண்டு எஃகம் களிற்றுமுகம் பாய்ந்தெனக்

ஊழ்மலர் ஒழிமுகை உயர்முகம் தோயத்"[3]

தினைப்புனங்களில் கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும் ஐவனநெல்லும் வெண்நெல்லும் விளைந்து முற்றி இருக்கும். வேல்படை கொண்ட வீரர்கள் விழுந்து கிடப்பதைப் போல, காற்றில் தலை சாய்ந்து கரும்புகள் வெட்டப்பட்டு, ஆலைக்குச் செல்லும் நிலையில் இருக்கும்.மேட்டு நிலங்களில் வெண்கடுகு விளைச்சல் மிகுந்திருக்கும். நெய்தல் பூக்கள் நெடுவயல் நிறையப் பூத்திருக்கும். அழகுற இஞ்சி வளர்ந்து முதிர்ந்திருக்கும். கவலை கிழங்குகள் மாவாகும், பதத்தில் முற்றியிருக்கும் குத்தும் அங்குசம் போலக் கூரிய முனை உடைய வாழைப் பூக்கள் பக்கத்தில் உள்ள பாறையில் மோதித் தொங்கும்.

"சுரம்செல் கோடியர் முழவின் தூங்கி

முரஞ்சு கொண்டு இறைஞ்சின

-அலங்குசினைப் பலவே

...... ...... ....... .......

வெறிக்களம் அடுக்கும் வியல் அறை தோறும்"[4]

கூத்தர்கள் கொண்டு செல்லும் மத்தளம் போல, நெடுமலைச் சாரல்களில் மழைவளம் மிகப் பெற்றதால் வளர்ந்துள்ள பலா மரத்தில் காய்கள் தொங்கிக் கிடக்கும். மேலும் இறைச்சித் துண்டு எனச் செங்காந்தள் மலர்களைக் கவ்விச் சென்ற பருந்துகள், பூவெனத் தெரிந்ததும் அவற்றை விட்டெறிந்தன. அவை சிதறிக் கிடந்த இடம் யாவும் வெறியாட்டு களம் போலத் தோன்றியது.

இவ்வாறு, வளமையும் செழுமையும் மிகுந்திருந்த, நம் தாய்த் தமிழ் நிலம் இன்று வளத்திற்காக ஏங்கும் நிலையில் உள்ளது கண்கூடு. தொடர் சூழலியல், நகர் மயமாதல், மக்களடர்த்தி என்று இவையாவுமே நம் நிலத்தின் வளமையைக் கேள்விக்கு உட்படுத்துகிறது.

**நெய்ச் சோற்று விருந்து**

பழந்தமிழ் வீடுகளின் முற்றமும் திண்ணையும், விருந்தினர்க்கான அடையாளம் - விருந்தோம்பலுக்கான அடையாளம் ஆகும். வந்தவர் எவராயினும் அவர்தம் களைப்பு தீர்த்து, பசி தீர்த்து; அன்புமொழி பேசி உபசரிப்பதே! தமிழர் உணர்வின் - பண்பாட்டின் வெளிப்பாடு. தலைவாழை இலைப்போட்டு அறுசுவையுடன், பலவித பண்டங்களுடன் விருந்தளிக்கும் பாண்மை நம் தமிழர்க்கும், தமிழ் நிலத்திற்கும் உரிய ஒன்றாகும்.

அலங்குகழை நரலும் ஆரிப் படுகர்ச்

சிலம்புஅடைந்திருந்த பாக்கம் எய்தி

மான விறல்வேள் வயிரியம் எனினே

...... ...... ....... .......

பரூஉக் குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு

குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்"[5]

மலைச்சாரலில் வசிக்கும் வேடர்கள் வாழும் இடத்தை அடைந்தால் அவர்கள் மலைகளில் எடுத்த தேன், காடுகளில் தோண்டிய கிழங்கு, மற்றும் வேட்டையாடிய பன்றித் தசை ஆகிய உணவுகளைக் கூத்தர்களின் களைப்பு தீர உண்ணத் தருவார்கள். அன்றைய பொழுதை, அங்கேயே தங்கிக் கழிக்கலாம். அங்கிருந்து புறப்பட்டு மூங்கில் மரங்கள் உராய்ந்து ஒலி எழுப்பும் மலைச்சாரலில் அருகிலுள்ள சிற்றூரை அடையலாம். அங்கு சென்று போரிடாமலே பயந்தோடிய பகைவர்களை வென்ற பெருமை உடைய நன்னனை. நாடிச் செல்லும் கூத்தர்கள் என்று கூறினால் அவர்கள் களைப்பு தீர, உறவினர்கள் போல பழகுவார்கள். அவர்கள் தருகின்ற நெய்யில் வறுத்த தசையோடு, வேகவைத்த தினைச் சோறும் தருவர். உண்டு களைப்பு தீர்ந்து மகிழலாம்.

இவ்வாறு தங்களிடம் இருப்பதை, வருகை தரும் விருந்தினர்க்கு மனமுவந்து அளிப்பதைத் தம் வழக்கமாக்கிக் கொண்டனர், நம் முன்னோர்கள் என்று அறியலாம்.

**வீடுகள் தோறும் விருந்து**

யாரேனும் ஒருவர் மட்டுமல்ல! அங்கு வாழும் ஒவ்வொருவரும் விருந்தினர்களை, எதிர்நோக்கிக் காத்திருந்து, அவர்களைக் கண்டதும் முகமலர்ந்து, அன்புடன் உபசரிக்கும் வழக்கமுடையவர்களாக, விளங்கினர் தமிழர்

"வேய்ப்பெயல் விளையுள் தேக்கள் தேறல்

வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை

முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை

பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ

குறமகள் ஆக்கிய வாலவிழ் வல்சி

மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்"[6]

மேலும் அந்த மலைச்சாரலில் தேன், தினை, இறைச்சி, மூங்கில் குழாயில் நீண்ட நாள் சேகரித்து, கள்போன்று புளிக்க வைத்த தேன், நெல்லரிசியில் செய்த கள், பலாக்கொட்டை மாவு, புளி சேர்த்த மோர்க்குழம்பு, மூங்கிலரிசிச்சோறு, கடமான்கறி, நாய் கவ்வி வந்த உடும்புக்கறி ஆகியனவற்றைக் குறிஞ்சி நிலத் தலைமகளான குறமகள் தந்து, உறவு முறை சொல்லி உபசரிப்பாள். இது போன்ற விருந்து முறை அங்கிருக்கும் எல்லா வீடுகளிலும் நிகழும்.

இதனையே வள்ளுவனும்

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"[7]

என்று உரைக்கிறான். விருந்தினரை முகமலர்ந்து வரவேற்கும் பண்பு இருந்தது என்பதை வள்ளுவமும் நிறுவுகிறது.

**துன்பம் நிறைந்த இரவுப் பயணம்**

இலக்கை நோக்கிய பயணம் எல்லோருக்கும் இன்றியமையாதது. இலக்கற்ற பயணம், துடுப்பற்ற படகு போலச் சுழலில் சிக்கி சிதைந்துவிடும். பயணம் துன்பம் நிறைந்ததாக அமைந்தால், எதிர்வரும் வாழ்வு இன்பம் தருவதாக அமைந்திடும், என்ற எதிர்நோக்கு எல்லோரிடமும் இருக்கும். அதையே, அன்றைய கூத்தர்களும் உணர்ந்து தங்கள் வறுமைத் துயர் நீங்குவதற்கான பயணத்தைத் தொடர்ந்தனர்.

"நிரையிகழ்க் குவளை கடிவீ கொடினும்
வரையறை மகளிர் இருக்கை காணினும்
விளைபுனம் நிழத்தலின் கேழல் அஞ்சிப்
புழைதொறும் மாட்டிய இருங்கல் அடர்அர்
கரந்து பாம்பு ஒடுங்கும் பயம்புமார் உளவே
பகல்நிலை தவிர்க்கும் கவணுமிழ் கருங்கல்"[8]

மலைச்சாரலில் இரவு நேரப் பயணம் இடர் நிறைந்தது. அதனைத் தடுக்க, பின்வருவனவற்றை அறிந்திருத்தல் அவசியமான ஒன்று. தெய்வம்சூடும் குவளைப் பூவினைப் பார்க்கக் கூடாது. தினைப்புனத்தில் பன்றிகள் நுழைவதைத் தடுக்கப் பொறிகள் அமைக்கபட்டிருக்கும். மேலும் பொடிக்கற்கள் நிறைந்த குழிகள், பாறை இடுக்குகளில் பாம்புகள் பதுங்கியிருக்கும். முற்றிய கதிர் விளைந்த திணைப்புனம் காக்க, உயர்ந்த பரண்களிலிருந்து யானைகளை விரட்டுவதற்காகக் கவண்கல் எறிவர் அது உயிர் போகும் அளவுக்கு வலிமை மிகுந்திடும்.

"வழும்புகண் புதைத்த நுண்ணீர் பாசி
முழுநெறி பிணங்கிய நுண்கோல் வேரலோடு
எருவை மென்கோல் கொண்டனிர் கழிமிக"[9]

யானை விழுங்கிப் பள்ளங்கள், இருட்டாகக் காட்சி தரும் பள்ளத் தாக்குகள், நீர் ஒடிய நிலம் வழுக்கும் காட்டாறு, கடந்து செல்ல தடித்த, மரங்களில் படிந்த வேர்க்கொடிகளைப் பிடித்தபடி செல்ல வேண்டும். விழுந்தால் மீண்டு வர முடியாத குளங்களும், வழுக்கும் பாசி, படர்ந்த இடங்களும் உண்டு எனவே ஊன்றுகோல் ஊன்றி பாதுகாப்பாகப் பயணம் செய்தல் வேண்டும்.

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்"[10]

வள்ளுவனும் இவ்வாறே, ஒழுக்கமுடைய சான்றோர்களின் அறிவுரையைப் பின்பற்றி நடப்பதனை வழுக்குகின்ற சேற்று நிலத்தில் ஊன்றுகோல் ஊன்றி நடப்பதைப் போன்றது என்று வரையறுக்கிறார்.

**வழி தவறினால் வாழ்வு தவறும்.**

வழிமாறிய பயணம் வாழ்க்கையை நிலைகுலையச் செய்து விடும். பாதை மட்டுமல்ல நம் பண்பும் கூடத்தான் இங்கேயும் நம் சிந்தனையை மடைமாற்றும் வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால் அவற்றில் மனதைச் செலுத்தி மயங்கி விடாமல் வாழ்வைக் காக்கும் பொறுப்பு அனைவர்க்கும் உரியதே.

"கலவை மஞ்ஞை கட்சியில் தளரினும்
நெடுங்கழைக் கொம்பர் கடுவன் உகளினும்
சூர்புகல் அடுக்கத்துப் பிரசங் காணினும்
ஞெரேரென நோக்கல் ஓம்புமின் உரித்தன்று"[11]

நவிர மலையில், ஆற்றங்கரையில் யானைப்படையயும், வில், அம்பு உடைய படைவீரர்களையும், வேலைப்பாடுடைய கோபுரத்தையும் கண்டால் இறைவனை,

இசைக்கருவிகளை முழக்காமல் வணங்கிச் செல்லுதல் வேண்டும். மேலும் தோகை விரித்தாடும் மயில்களையும், மூங்கில் மரத்தில் தாவி விளையாடும் குரங்குகளையும் மலைஉச்சியில் தேர்ச்சக்கரம் போலக் தொங்கும் தேனடைகளையும் கண்டு வேடிக்கை பார்த்தவாறே, நின்று விடாது, தொடர்ந்து செல்லுங்கள். நடந்த களைப்பு தீர இரவில் மலைக் குகைகளில் தங்குங்கள்.

தங்கும் இடங்களின் தகுதி பார்த்துத் தங்கினாலே நாம் எதிர்கொள்ளவிருக்கும் தடைகளை உடைத்து புது வழியைப் பிறக்கச் செய்யலாம் வாழ்வைச் சிறக்கச் செய்யலாம்.

**பாதைகளில் பாடும் பறவைகள்**

மனதை வருடும் பறவைகளின் குரல்மொழி அழிந்து வரும் இன்றைய சூழலில் பறவை பார்ப்பவற்றுள், பார்க்கும் வாய்ப்புகள் அரிதாகி வருகின்றன. மானுடம் காக்க, வனவளம் காக்க, பாடுபடும் ஓரினமாய் அந்த உயிரினம் விளங்குகிறது. அந்த மனதை மயக்கும், மந்த காச ஒலியில் நம் சிந்தையை நாமும் செலுத்த, இந்த 'மலைபடுகடாம்' துணை நிற்கிறது.

"கோடுபல முரஞ்சிய கோளி ஆலத்துக்

கூடுஇயத்து அன்ன குரல்புணர் புள்ளின்

நாடுகாண் நனந்தலை மென்மெல் அகன்மின்"[12]

அதிகாலை கண்விழித்து துயில் நீங்கி எழுந்ததும் நேரான காட்டுப்பாதையில் பயணம் தொடரட்டும். அவ்வாறு செல்லும்போது, வழியில் மரம் விழுந்து கிடப்பது போல மலைப்பாம்புகள் படுத்துக் கிடக்கும். அவற்றைவிட்டு விலகிச் செல்லுங்கள். அங்கே கிளைகள் நெருங்கிப் படர்ந்த, பல இசைக் கருவிகள் முழங்குவதைப் போல, பல ஒலி எழுப்பும் பறவைகள் இருந்து வாழும் ஆலமரங்கள நிறைந்த பகுதிகளைக் கடந்து செல்லுங்கள்.

**புனலின் ஓசை பூவையர் ஓசை**

மொழி பிறக்கும் முன் பிறந்த ஒலியே, இவ்வுலக வாழ்வின் ஆதாரம் கேட்கும் ஒலியில் எல்லாம், நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள். அதனை உணர-ஒலியைக் கேட்க, இசையாய் அமைந்திடும் ஓசைகளை வகைப்படுத்துகிறார்.

"அருவி நுகரும் வானர மகளிர்

தெரியிமிழ் கொண்டநும் இயம்போல் இன்னிசை

சேயளைப் பள்ளி எஃகுறு முள்ளின்

எய்தெற இழுக்கிய கானவர் அழுகை

நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென

அறல்வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்"[13]

பலாப்பழத்தைச் சுளையெடுக்கத் தேனூறும் வாசம் திசையெங்கும் வீசும், அருவிநீர் விழும்போது வரும் ஒலி, தெய்வ மகளிர் நீரில் முக்குளிக்கையில் எழும் ஒலி, தினைப் புனம் மேயும் யானையை விரட்ட பரணிலிருந்து காணவர் எழுப்பும் ஒலி, காட்டுப்பன்றியால் காய முற்றவர்கள் அழுகின்ற அழுகைஒலி, புலி தாக்கி ஏற்பட்ட விழுப்புண் ஆறப்பாடும் பாட்டின் ஒலி, வேங்கைப்பூச் சூடி பெண்கள் விளையாடி

எழுப்பும் ஆரவார ஒலி, கருவுற்ற பெண்யானையைப் புலி தாக்க, அது பிளிறித் தன் கூட்டத்தை அழைக்கும் ஒலி என்பனவாகப் பல வித ஒலிகள் எழும்புகின்றது.

**மலையின் ஓசை “ மலையடுகடாம் இசை**

மலையில் எழும் பல்வேறு ஓசைகள் இசையாய் மாறி நம் நெஞ்சை நிறைத்திடும் மாயை எவராலும் முடியாதது, இயற்கையைத் தவிர, அந்த மலையின் ஓசைக்கு நாமும் கொஞ்சம் இசைவோம்.

“உண்டுபடு மிச்சில் காழ்பயன் கொண்டர்
கன்றுகடாவு உறுக்கும் மகாஅர் ஓதை
கழைகண் உடைக்கும் கரும்பின் ஏத்தமுன்
அவலவும் மிசையவும் துவன்றிப் பலவுடன்
அலைகை தவிர்த்த எண்ணருந்திறந்த
மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப”[14]

நெற்கதிர்களைத் தாளடிப்பது போல வீட்டு முற்றத்தில் பலாச்சுளைகளின், தின்று முடித்த கொட்டைகளைச் சிறுவர்கள் கன்றுகளை விட்டு மிதித்துக் கடாவிடும் ஓசையும், ஆலைகளில் கரும்பைப் பிழியும் ஒலியும், தினை அறுக்கும் மகளிரின் வள்ளைப்பாட்டின் ஒலியும், விளைந்த கொல்லைகளில் பன்றித் தொல்லையை விரட்டக் காவலர்கள் கொட்டும் பறை ஒலியும், இவைமட்டும் அல்லாமல் இன்னும் இது போன்ற பலவித ஒலிகளும் மலைமீது மோதி எதிரொலிக்க மலையாகிய யானையின் பிளிறலாய் – மலைபடு கடாமாக ஒலிக்கக் கேட்கலாம்.

**நடுகல் வழிபாடு**

இன்றைய ஆலய வழிபாட்டிற்கு முன்னோடி நம் முன்னோர் வழிபாடு, விழுப்புண்பட்டு இறந்த வீரர்களைச் சிறப்பிக்க நடுகல் வழிபாடு நம் தமிழர் வாழ்வில் இன்றியமையாத ஒன்று.

“ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரோடு நட்ட
கல் ஏசு கவலை எண்ணுமிகப்பலவே”[15]

கூத்தர்கள் செல்கின்ற வழியில் பகைமன்னர்கள் பலரை வென்ற நன்னனின் படைத்தலைவர்கள் தலைமை ஏற்கும் காவலரர்கள் பல உண்டு. மூங்கில் புதர்களை விலக்கிச் செல்லும் காட்டு வழியில் நெருக்கி நட்ட நடுகற்கள் நிறைய இருக்கும். அவை பகை வெல்ல போரிட்டு வீரமரணம் அடைந்தவர்களின் நினைவாக அவர் பெயர் எழுதி வைத்த புகழ்க்கற்கள். அவை யாவும் புறமுதுகிட்ட பகை வீரர்களைப் பார்த்து நகைக்கும் தன்மையில் இருக்கும். எனவே அந்நடுகற்களைத் தெய்வங்களாகக் கருதி, யாழ் மீட்டி பாடி அவ்வீரர்களுக்கு வணக்கம் செலுத்திப் பயணத்தைத் தொடர வேண்டும்.

இவ்வாறு நம் முன்னோர் வழிபாட்டை மூடநம்பிக்கையால் தொலைத்து, போலி பக்தியின் பின்னால் வாழ்வை இழக்கும் நிலையிலிருந்து மாற வேண்டும்.

**தோல்படுக்கையில் தூக்கம்**

உறக்கம் கூடத் தேவைதான் ஊக்கமுடன் உழைப்பவர்க்கு அது ஒர் உபாயம்! வழியிடைப் பயணக் களைப்புதீர! தொடர் பயணத்திற்குத் துணை நிற்க! அந்தக் கூத்தர்களுக்கு உறக்கம் தேவையாக இருந்தது. சுக வாழ்வு வாழ்பவர்கள், தேக்கு மரக்கட்டில், பஞ்சணையில் உறக்கமின்றித் தவிக்கும் செல்வந்தர்களுக்கு இடையில் படுத்ததும் உறங்கும் பாமரத் தொழிலாளர்க்கு அதுவும் ஓர் வரமே!

"பல்யாட்டு இனநிரை எல்லினர் புகினே

துய்ம் மயிர் அடக்கிய சேக்கை யன்ன

மெய்யுரித்து இயற்றிய மிதிஅதள் பள்ளி"[16]

காட்டுப்பாதையில் துன்பங்கள் பலவற்றைக் கடந்து இடையர்கள் வாழும் இடத்தை அடைந்தால் அவர்கள் கூத்தர்களின் களைப்பும் வருத்தமும் தீர பாலும், பாற்சோறும் உண்ணத் தருவார்கள் மேலும் மயிர் நீக்கிய ஆட்டுத் தோலாலான படுக்கையைத் தந்து அவர்கள் உறங்க உதவுவார்கள் அங்கேயே அந்த இரவைக் கழிக்கலாம். இவ்வாறு கூத்தர்கள் தம் நெடும் பயணத்தின் துயரம் தீர ஆங்காங்கே ஒய்ந்து, உண்டு, உறங்கி தொடரும் நிலை இருந்தது. இன்று எவ்வாறு பரபரப்பான வாழ்வு ஓய்ந்திட நேரமின்றி பொருள் தேடி அலைவதிலேயே முடிந்துவிடுகிறது.

**குளிர்நீர்க் குளியல்**

உடல்தூய்மையும் உள்ளத் தூய்மையும் இணைந்த வாழ்வே சிறப்புறும் மனம் தூயமையானால் சிந்தனை தூய்தாகும். சிந்தனை தூய்மையானால் செய்யும் செயலும் தூய்மையாகும்.செயல் தூயதானால் வாழ்வு சீராகும். இத்தகைய சீருடைய வாழ்வை வாழ்ந்த பழந்தமிழர் வாழ்வைத் திரும்பிப் பார்த்தல் இன்றியமையாதது.

"தளிரொடு மிடைந்த காமரு கண்ணி

திரங்கு மரல் நாரில் பொலியச் சூடி

முரம்பு கண் உடைந்த நடவை தண்ணென

உண்டனிர் ஆடிக் கொண்டனிர் கழுமின்"[17]

வளைந்தவில் ஏந்திய வேடர்கள் கூறும் வழியில் சென்று பயணத்தைத் தொடர வேண்டும். வெண்கடம்பு பூவும், 'யா' மரப்பூவும், கற்றாழை நாரில் முடிந்து அழகாகச் சூடிக்கொண்டு குளிர்ந்த நீரைப் பருகியும் வழிப்பயணத்துக்கான குடிநீரையும் எடுத்தும் செல்லலாம். மேலும் தினைப்புல் வேய்ந்த குடிசைகளில் வாழும் மக்கள், மூங்கில் அரிசி உணவு, நெல்லரிசி உணவு, அவரைவிதை புளிக்கறி, நெய்யும் திணை மாவும் கலந்து செய்த உணவு ஆகியவற்றைத் தருவார்கள். அவற்றை உண்டு மகிழலாம். கூத்தர்களின் பயணத்தின் இடையே மேற்காணும் நிகழ்வுகள் யாவருக்கும் மனத்தூய்மை நோக்கி உந்தித்தள்ளும்

**மகிழ்ச்சி மலர் தூவும் மருதநிலம்**

"புல்லரைக்காஞ்சிப் புனல்பொரு புதவின்

பண்ணுபெயர்த் தன்ன காவும் பள்ளியும்

நன்பல உடைத்து அவன் தன்பணை நாடே"[18]

அழகிய புலரியில் பறவை கூறும் நல்லொலி கேட்டு, பயணம் தொடர்ந்தால் காஞ்சி மரங்களும், வயல்களும், சோலைகளும் நிறைந்த நன்னனுடைய மருத நிலப்பகுதியை அடையலாம். அங்கே பகல் பொழுதினில் நெல்லரிசிச் சோறு, வாளைமீன்கள், விரால் மீன் துண்டுகள், நண்டுக்கறி ஆகியனவற்றோடு கள்ளையும் உண்ணத் தருவார்கள்.

இவ்வாறு மருத நிலச் சூழல், ஆங்கு திகழும் சோலைகள், பாடும் பறவைகள், உயிர்காற்று உற்பத்தி செய்யும் மரங்கள், உணவினைப் பயிர்செய்து தரும் வயல்கள் என்றவாறு பொலிவுடன் விளங்கிய மருத நில வாழ்வில் இன்று கேள்விக்குறி? மட்டுமே எஞ்சி நிற்கிறது.

### வீட்டு முற்றத்தில் நாட்டுவளம்

நவிரமலையில் செழித்துக் கிடந்த நாட்டு வளம் வீட்டுமுற்றத்திலும் கொட்டிக் கிடக்கும் இன்றைய நவ நாகரிக உலகில் இந்நிலையாவும் வெறும் கனவாக மட்டுமே நிலைத்திருப்பது நிதர்சனமான உண்மை.

"உடம்புணர்பு தழீஇய ஆசினி யனைத்தும்

குடமலை பிறந்த தண்பெருங் காவிரி

கடல்மண்டு அழுவத்துக் கயவாய் கடுப்ப"[19]

நன்னனுடைய அரண்மனை முற்றத்தில் மராமர நிழலில் மான்குட்டி யானைக்கன்று, கரடியின் சிறுகுட்டி, மலையாடு, மரையான் குட்டி, பாம்பு பிடிக்கும் கீரி, பாறைஉடும்பு, மயில், காட்டுக்கோழி, சேவல், போன்ற உயிரினங்களும், முழவு போன்ற பலாவும் சுவைச்சாற்று மாங்கனியும், நூறைக்கிழங்கும், பளிங்குபோன்ற பல்உரு மணிகளும், யானைத் தந்தங்களும், கற்பூரம் புன்னைமலர், யானைத் தந்தம், சந்தனம் மிளகு, தெளிந்தகள் தோய்ந்ததயிர், இறால் எனப் பலவகையின யாவும் புகழ் ஒலிக்கும் காவிரி கழிமுகம் போல நிறைந்திருக்கும்.

### இசைக்குரல் இணைந்த பாடல்

கூத்தர்களின் இலக்கு நிறைவடைகிறது. மன்னன் முன் தம் கலையைக் காண்பித்துப் பரிசில் பெற்று மகிழ்வு கொள்ளும் அந்தச் சூழல் இனிமையானதாக அமைகிறது.

" மழையெதிர் படுகண் முடிவுகண் இகுப்ப

கழைவளர் தூம்பின் கண்ணிடம் இமிர

மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்

தொன்றொழுகு மரபின் தம் இயல்பு வழாஅது

கொடைக்காண் இறுத்த செம்மலோய் என"[20]

இடிமழை போல் மத்தளம் முழங்க, பெருவங்கியம் என்னும் குழல் இசை தவழ, சிறிய யாழ் நரம்பின் இசைஒலி மிகாமல் மருதப்பண்ணைப் பாடும் முறைப்படி பாட வல்ல விறலியர், குன்றாப்புகழ் படைத்த சான்றோர் குடிப் பிறந்த நன்னனை வாழ்த்தி இசையும் பாடலும் இணைந்து வெற்றிப் புகழைப் போற்றிப் பாடுகின்றனர்.

### மழை எனப் பொழியும் கொடை

வானத்திலிருந்து எவ்விதப்பாகுபாடும் இல்லாது எல்லோருக்கும் சமமாகப் பொழியும் மழை போல, எந்தவித மறு நோக்கும் இன்றி கொடுப்பதை மட்டுமே தம்

வாழ்வின் இலக்காகச் செயல்பட்டவர்கள் ஏராளம். அவர்களாலேயே அன்று புலவர்கள் ஓரளவாவது தம் வறுமைத் துயர் நீங்கி வாழ்ந்து வந்தனர்.

" இழை மருங் கறியா நுழைநூற் கலிங்கம்
நீர் இயக்கன்ன நிரைசெலல் நெடுந்தேர்
நிலம்தனக் கிடந்த நிதியமொடு அனைத்தும்
மழைசுரந்தன்ன ஈகை நல்கிக்
குன்று சூழ் இருக்கை நாடு கிழவோனே"[21]

நுட்பமாக நெய்த வெண்ணிற ஆடையை உடுத்தத் தருவான் விலங்குகளின் கொழுத்த தசையை வேகவைத்து வெண்ணிற நெல் அரிசிச் சோற்றுடன் தருவான். பொன்மாலை அணிவித்து விறலியர் சூடிக் கொள்ள, அணிமணிகளும், அளிப்பான். தேன்போன்ற யானைகளும், வலிமை வாய்ந்த குதிரைகளும், மண்ணில் விளைந்த வளமைகள் பலவற்றையும், வறுமையில் துயரடைந்த புலவர்களின் வாழ்வில் வளம் செழிக்க, மூங்கில் தழைத்து வளரும் நவிர மலையில் மழை பொழிவது போலக் கொடை வழங்கி கூத்தர்களை ஊர் திரும்ப விடுபவன், நவிரமலையினை ஆட்சி செய்யும் மன்னன் ஆவான். இவ்வாறு சிறப்புடன் கொடைத்திறம் படைத்து, வாழ்ந்த நன்னன் போன்ற எண்ணற்ற புரவலர்கள் வாழ்வதாலேயே "உண்டாலம்ம இவ்வுலகம்" என்னும் புறநானூற்றுத் தொடர் நிரூபனம் ஆகிறது.

**முடிவுரை:**

செங்கண் மாத்துவேள் நன்னன் என்று அறியப்படும் நவிரமலையை ஆட்சி செய்த நன்னனை காணச் செல்லும் கூத்தர்களின் நெடும் பயணமும், அவர்கள் வழியிடைக் கண்ட வளமிக்கச் காட்சிகளும் உணர்த்தப் பட்டுள்ளன. மலையின் தோற்றம்,அங்கே வாழ்ந்த மக்களின் நிலை, அவர்களின் விருந்து உபசரிக்கும் முறை, அங்கே இயற்கையாகவும், செயற்கையாவும், விளைந்த-விளைவிக்கப்பட்டவை. யாவும் உய்த்துணரப்பட்டது. அங்கே வாழும் விலங்குகள், வழியிடை நிலங்களில் பல்வேறு வித மக்களின் குடியிருப்புகள் அவர்களின் உணவுப் பழக்கம் ஆகியனவும் உரைக்கப்பட்டுள்ளன. மேலும் நூற்தலைப்பை ஒட்டிய, மலைவாழ் விலங்கினங்கள் மற்றும் காட்சிகளிலிருந்து எழும் ஒலிகள், கூத்தர்கள் நன்னை வாழ்த்திப்பாடும்-இசை மீட்டும் முறை, நன்னனுடைய படைமறம், கொடை மறம் ஆகியனவும் இங்கு தெளிவுப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு சஙகாலக் குறிஞ்சி, முல்லை, மருத வாழ்வை முழுமையாக உணர்ந்த மனநிறைவை இதன்மூலம் அடைகின்றோம்.

### சான்றெண் விளக்கம்


1. தொல்காப்பிய எளியவுரை கருணாநிதி.ந.,உ.ஆ., ப.69
2. பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும், ஞா மாணிக்கவாசகன், உ.ஆ.ப.385
3. மேலது ப.314
4. மேலது ப.396
5. மேலது ப.398
6. மேலது ப.400
7. திருக்குறள் உரைவளம் பொ.வேல்சாமி உ.ஆ. ப. 127
8. பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும் மா ப.402
9. மேலது ப.404

10. திருக்குறள் உரைவளம் பொ.வேல்சாமி உ.ஆ. ப. 84
11. மேலது ப.405
12. மேலது ப.408
13. மேலது ப.410,411
14. மேலது ப.414
15. மேலது ப.418
16. மேலது ப.420
17. மேலது ப.422
18. மேலது ப.424
19. மேலது ப.430
20. மேலது ப.431
21. மேலது ப.434,435

**துணைநூற் பட்டியல்:**


1. மாணிக்கவாசகன்.ஞா.உ.ஆ., பத்துப்பாட்டு மூலமும் விளக்கமும் உமா பதிப்பகம், சென்னை -5.
   மூன்றாம் பதிப்பு மார்ச் – 2016
2. கருணாநிதி.ந.,உ.ஆ., தொல்காப்பியம் மாணவர் எளிய உரை
   வசந்தா பதிப்பகம், ஆலத்தூர்,
   இரண்டாம் பதிப்பு -2006. தொகுதி 2.
3. வேலுச்சாமி.பொ..உ.ஆ.,
   திருக்குறள் உரைவளம், கீழைக்காற்று வெளியீட்டகம்,
   எல்லீஸ் சாலை, சென்னை – 2.
   டிசம்பர் - 2001



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Vincent Prabu A., (2021) Malaipadukadam’s portrayal of identities of Tamilian’s, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:56-67. Cauvery College For Women, Trichy.

**ரா.கார்த்திக். எம்.ஏ., எம்.பிஃல்.,**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை 600 004.

# முல்லைப்பாட்டில் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

முல்லைப்பாட்டில் முல்லைத்திணை ஒழுக்கம் சிறப்பித்து கூறப்பட்டுள்ளது. பெருமுது பெண்டிர் நற்சொல் (விரிச்சி) கேட்டல், பாசறை அமைப்பில் நடைபெற்ற நிகழ்வுகள், யானை மொழியை கற்கும் பாகர், முக்கோல் அந்தணர், அரசனின் கூடாரத்தில் மதிலாக அமைக்கப்பட்ட துணி கண்டம், பாசறையில் வீரமங்கையர், பெருமூதாளர் (Body Guards), நாழிகைக்கணக்கர், கோட்டைக்காவலராய் யவனர், பள்ளியறையில் காவலராக மிலேச்சர், எழுநிலை மாடம் போன்றவை இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

**முன்னுரை**

இலக்கியங்களில் பண்டைய தமிழரின் அடையாளங்கள் மிகுந்து காணப்படுகின்றன. தமிழர் வாழ்வில் வீரம், கொடை, பண்பாடு, வாழ்வியல் நெறிகள், சடங்குகள், மரபுகள் போன்ற எண்ணற்ற அடையாளங்களை நாம் காணமுடியும். சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டில் தமிழர் அடையாளங்களைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

**முல்லைப்பாட்டின் குறிப்பு**

பத்துப்பாட்டுள் மிகச்சிறியது. 103 அடிகளை உடையது. காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. முல்லைதிணைக்குரிய ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது. முல்லைப்பாட்டின் தலைவி நெஞ்சை ஆற்றுபடுத்தி நிற்பதால் நெஞ்சாற்றுப்படை என்றும் பெயர் பெறும். கார் காலத்தில் மாலைக்கால நிகழ்ச்சிகள், பாசறை அமைப்பு, பாசறை காட்சிகள், கார்காலத் தொடக்கத்தில் முல்லை நிலத்து வளம், சங்ககாலத் தமிழ் மக்கள் பழக்க வழக்கங்கள் ஆகிய செய்திகளைக் கூறுகின்றது.

**முல்லைத்திணை ஒழுக்கம்**

**வஞ்சி தானே முல்லையது புறனே** **தொல். பொருள். நூ.64**

முல்லை அகவொழுக்கத்தோடு இயைபு உடைய புறவொழுக்கம் வஞ்சி. ஒரு அரசன் நாட்டை கைப்பற்ற படையெடுத்து செல்வது வஞ்சி. இருத்தலும் இருத்தல் நிமித்தமும் உரிப்பொருளாக உடையது முல்லை. முல்லைத்திணைக்குரிய தெய்வம் திருமால். பெரும்பொழுது கார்காலம். சிறுபொழுது மாலை. திருமால் அவதாரத்துடன் ஆரம்பிக்கிறது. பின்னர் கார்காலத்தில் மாலைப்பொழுதில் பெண்கள் விளக்குகளை ஏற்றி வழிபடுவதையும் முல்லைப்பாட்டு வழி காணமுடிகிறது.

**காரும் மாலையும் முல்லை** **தொல். பொருள். நூ.6**

**கூதிர் வேனில் என்றிரு பாசறைக்**

**காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்** **தொல். பொருள். நூ.75**

வாடைக்காலத்தும் வேனிற்காலத்தும் அரசர்கள் போர்மேற்கொண்டு பாசறைக்கண் இருப்பது பண்டைக்காலத் தமிழ்நாட்டு வழக்கமாம் என்று தொல்காப்பியர் கூறுகிறார். முல்லைப்பாட்டில் தலைவன் போருக்கு செல்வதும், தலைவி தலைவனுக்காக காத்திருப்பதும் திணை ஒழுக்கத்தை சிறப்பிக்கிறது.

**பெருமுது பெண்டிர் நற்சொல் (விரிச்சி) கேட்டல்**

ஒரு அரசன் மற்றொரு நாட்டின்மீது படையெடுக்கக் கருதின், முதற்கண் பகைவர் நாட்டு ஆநிரையைக் கவரத்தன் படைத்தலைவரை ஏவுவான். படைத்தலைவன் ஏவலால், நற்சொல் கேட்டற்குரியவர் சென்று ஒரு பாக்கத்தில் தங்கித்தம் அரசருக்கு வரும் ஆக்கத்தை அறிய நற்சொல் (விரிச்சி) கேட்பர். முல்லைப்பாட்டில் காவல் மிகுந்த பழைய ஊரின் பக்கத்தில் சென்று வண்டுகள் ஆரவாரிக்கும் நெல்லையும் முல்லை மலரையும் தூவி தெய்வத்தை வழிபட்டு பெரிதும் முதிர்ந்த பெண்டிர் நற்சொல் கேட்டு நிற்பர். இதேபோல் நற்றிணையில் 40.4 விரிச்சி நிற்ப என்றும், புறநானூற்றில் 280.6 விரிச்சி ஓர்க்கும் என்றும் நற்சொல் கேட்டல் குறிப்பிடப்படுகின்றது.

**பாசறை அமைப்பு**

ஒரு நாட்டின்மீது போர் தொடுக்கச் செல்லும் அரசனும் படைகளும் தங்கியிருக்கத் தந்நாட்டு எல்லைப் புறத்தில் பாசறை அமைத்தல் இயல்பு.

காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய காட்டில் இருந்த பசிய தூறுகள் வெட்டப்பட்டன. பகைப்புலத்துக்குக் காவலாய் இருந்த வேட்டுவருடைய சிறிய வாயில்களையுடைய அரண்கள் அழிக்கப்பட்டன. கடல் போலப் பரந்த அவ்விடத்தில் முள்ளால் ஆன வேலியால் மதில் அமைக்கப்பட்டது. வீரர்கள் இருக்கத் தழைக்கூரையுடைய இல்லங்கள் அமைக்கப்பட்டன. பல தெருக்கள் அமைந்தன. நாற்சந்தியான முற்றத்தில் காவலாக யானைகள் நிறுத்தப்பட்டன. படைத்தலைவர்கட்குக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. அவற்றில் விற்களைச் சேரவு+ன்றி எறிகோல்களையும் ஊன்றிக் கிடுகுகளையும் நிறையாகக் குத்தி அரண் அமைக்கப்பட்டது. இங்ஙனம் அமைந்த கரி பரி காலாட்படை விடுதிகட்கு நடுவே அரசனுக்கு இருப்பிடம் அமைக்கப்பட்டது. நீண்ட குத்துக்கோல்கள் வரிசையாக நடப்பட்டன. அவற்றைச் சுற்றி மதில் திரை வளைத்துக் கட்டப்பட்டது. இல்லத்துச் சுவர்த்துணியில் புலி சங்கிலியால் பிணைக்கப்பட்டதைக் குறிக்கும் ஓவியம் தீட்டப்பட்டிருந்தது. அந்த இல்லத்தினுள் புறவறையும் உள்ளறையும் அமைக்கப்பட்டன. உள்ளறையில் அரசன் துயில வசதி செய்யப்பட்டது

**யானைப் பாகர் செயல்**

**கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்**
**கல்லா இளைஞர் கவளங் கைப்ப அடி.35-36**

**உரவுச்சினம் தணித்துப் பெருவெளிற் பிணிமார்**
**விரவுமொழி பயிற்றும் பாகர் மலை. 326-327**

யானைப் பேச்சான வடமொழிகளைக் கற்ற பாகர், பலகாற்சொல்லிக் கவளத்தைத் தின்னும்படி கவைத்த முள்ளையுடைய பரிக்கோலால் குத்தினர். மலைபடுகடாமிலும் யானைப்பாகர் வேற்றுமொழி கற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது.

**முக்கோல் அந்தணர்**

**கல்தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான்**

**முக்கோல் அசைநிலை கடுப்ப அடி.35-36**

முக்கோல் (திரிதண்டம்) – உள்ளம் மெய் நா அடக்கியவர்கள். காவிக்கல் நிறந்தோய்க்கப் பெற்ற ஆடை உடுத்திய தவநிலைப் பார்ப்பான் தனது முக்கோலை நாட்டி துணியை காய வைப்பது போன்று போர்வீரர்கள் விற்களை ஒருசேர நட்டு அதன்மீது துணிகளை தொங்கவிட்டனர். அந்தணரைப் பற்றி பட்டினப்பாலை 78, 167 அடிகளிலும், பெரும்பாணாற்றுப்படை 119-120 அடிகளிலும், முல்லைப்பாட்டு 41 அடியிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

**அரசனின் கூடாரம்**

**நெடுங்காழ்க் கண்டம் அ.44**

கண்டம் - மதில் திரை. பாசறையில் அரசற்குக் கூடாரம் அமைக்கப்பட்டது. கூடாரத்தைச் சுற்றிலும் மதில் போல வளைத்துக்கட்ட முரட்டுத்துணி பயன்பட்டது. அதற்கு கண்டம் என்று பெயர். கண்டம் கண்டத்திரை, பல்வண்ணத்திரை எனவும் பெயர் பெறும்.

**பாசறையில் வீரமங்கையர்**

குறுந்தொடியையும் கூந்தல் அசைந்து கிடக்கின்ற அழகினையுமுடைய மங்கையர் ஒளிவீசும் வாளை இடுப்பிற்செருகியிருந்தனர். அவர்கள் இரவில் விளக்குகளுக்கு எண்ணெய் வார்த்துக் கொண்டும் அவிந்த விளக்குகளை ஏற்றிக்கொண்டும் சுறுசுறுப்பாய் இருந்தார்கள்.

**குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து**

**இரவுபகற் செய்யும் திண்பிடி ஒள்வாள்**

**விரவுவரிக் கச்சின் பூண்ட மங்கையர்**

**நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇ அடி.45-48**

பெண்கள் இங்ஙனம் அரசரோடு உடன்சென்று அவனுக்குப் பணிபுரிதல் வடமொழியிற் காளிதாசர் இயற்றிய சாகுந்தல நாடகத்திலும் இடம் பெறுகிறது.

**பெருமூதாளர் (Body Guards)**

பெருமூதாளர் - வயது முதிர்ந்த மெய்காப்பாளர். அரசன் உறங்கும்போது அவனுக்குப் பகைவரால் எந்தத் தீங்கும் நேராதவாறு அவனைச் சூழ இருந்து காக்கும் தொழிலைக் கொண்டவர் மெய்காவலர் எனபப்படுவர். சிறந்த ஒழுக்கமுடையவர்.

**துகின்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்**

**பெருமூதாளர் ஏமம் சூழப் அடி.53-54**

முல்லைப்பாட்டில் மோசி மல்லிகைக் கொடியினையுடைய சிறுதூறுகள், துவலையோடு வருகின்ற காற்றில் அசைவது போன்று பாசறையின் மெய்காவலர் உறக்க மயக்கத்தில் ஆடி அசைந்து காவல் காத்துக் கொண்டிருந்தனர்.

**நாழிகைக்கணக்கர்**

**எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்**

**குறுநீர்க் கன்னல் இனைத்தென்று இசைப்ப அடி.57-58**

குறுநீர்க் கன்னல் - குறுகிய நீரொழுகும் நாழிகை வட்டில். கன்னல் - நாழிகை அளந்தறியப் பயன்படும் கருவி. அதனை நாழிகை வட்டில் என்பர். கன்னலும் கிண்ணமும் நாழிகை வட்டில் என்பது பிங்கலந்தை சூத்திரம். சிறிய கண்ணாடிச் குடவை ஒன்றிலோ, மட்குடுவையிலோ நீரை நிரப்பி, அதன் அடிப்புறத்துள்ள சிறிய துளைவழியே துளித்துளியாய் நீர் கசிய விடுவர். அவ்வாறு கசிந்த நீர்த்துளிகளைக் கொண்டு நாழிகையைக் கணக்கிட்டு அறிவர். குறுநீர்க் கன்னல் என்று அகநானூற்றில் 43.6 அடியிலும், நாழிகைக் கணக்கர் என்று சிலப்பதிகாரத்திலும் 5.49 வரியிலும் கூறுவதால் இவ்வழக்கத்தை உணரலாம்.

**கோட்டைக்காவலராய் யவனர்**

இக்காலத்தில் தமிழகத்துப் பெரிய வணிக நிலையங்களில் கூர்க்கர் காவலராய் இருத்தலைப் போலவே சங்க காலத்தில் யவனவீரர் கோட்டைக் காவலராயும் அரசனது நம்பிக்கைக்குரிய பணியாளராயும் இருந்துவந்தனர். (யவனர் என்பவர் சோனகர் என்று நச்சினார்க்கினியர் கூறுதல் பொருத்தமுடையதன்று. 'சோனகர்' என்னும் சொல் அராபியரைக் குறிப்பது. யவனர், அயோனியர் எனப்பட்ட கிரேக்க இனத்தைச் சேர்ந்தவர். இவர் கிறிஸ்துவுக்கு முன்னும் பின்னும் கடல் வாணிகம் செய்தவர். இவ்வினத்தார் மௌரியர் காலத்திலும் பிற்காலத்திலும் மகாராட்டிரம் முதலிய பகுதிகளில் ஆண்டு வந்தனர் என்பது இந்திய வரலாறு கூறும் உண்மையாகும்.)

**மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை**

**மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து**

**வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்**

**புலித்தொடர் விட்ட புனைமாண் அடி. 59-62**

யவனர் மெய்ப்பை என்று சொல்லப்பட்ட சட்டை அணிந்திருந்தனர். (மெய் என்பது உடம்பு, அதனை மறைக்கும் சட்டை மெய்ப்பை எனப்பட்டது). ஆடைகளைச் செறித்து இறுக்கமாகக் கட்டியிருந்தனர். அதன் மேல் மத்திகை என்னும் அரைக்கச்சை அணிந்திருந்தனர். அவர்கள் வலிமை மிக்க யாக்கையைப் பெற்றிருந்தனர். அவர்களின் தோற்றம் பிறருக்கு அச்சம் தருவதாக அமைந்திருந்தது. அவர்கள் வன்கண் என்னும் முரட்டு குணம் உடையவர்களாக விளங்கினர். அரசனது பாசறையில் இவர்களுக்கும் தனி இடம் இருந்தது. அரசனுக்கு இவர்கள் புலிப்படை நடத்தி உதவிவந்தனர். பாசறையில் இவர்கள் புலியைச் சங்கிலித் தொடரால் பிணித்திருந்தனர்.

**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**

**பொன்னொடு வந்து கறியொடு பெயரும் அக. 149.8-10**

யவனர்கள் தமிழர்களுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை அகநானூற்றில் காணலாம்.

**பள்ளியறையில் காவலராக மிலேச்சர்**

மிலேச்ச தேயத்திலுள்ள ஊமைகளை வருவித்துத் தமிழ் அரசர்கள் தம் பள்ளியறைக்கு காவலாக வைத்தனர்.

**உடம்பின் உரைக்கும் உரையா நாவின்**
**படம்புகு மிலேச்சர் அடி. 65-66**

படம் - சட்டை (வடச்சொல்). மிலேச்சர் என்பவர் அயல்நாட்டார். ஆரியர்களையும் மிலேச்சர் என்றே கூறுவர். அவருள் சிலர் பாசறையில் அரசனது இருக்கையைக் காத்து வந்தவர். ஊமையராகவும், சட்டை அணிந்தும் இருந்தனர். பள்ளியறையில் நிகழும் காரியங்களை மற்றவர்க்கு அறிவிக்காமல் இருக்கவும், பேசிக்கொண்டு இருந்தால் அரசனின் உறக்கம் கலைந்து விடும் என்பதாலும் ஊமையரை காவலராகப் பயன்படுத்தினர்.

**எழுநிலை மாடம்**

**இடஞ்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து அ. 86**

அரசனது அரண்மனை பரந்த நிலத்தில் மாட மாளிகைகளோடும் கோபுரங்களோடும் கட்டப்பட்ட மிகப்பெரிய இல்லமாகும். அரண்மனையில் எழுநிலைமாடம் அமைந்திருந்தது. இதுவும் தமிழரின் அடையாளம் ஆகும்.

**முடிவுரை**

முல்லைப்பாட்டில் திணை ஒழுக்கம், நற்சொல் கேட்டல், பாசறை அமைப்பு, நாழிகை வட்டில், யவனர், மிலேச்சர், வீரமிக்க மங்கையர், எழுநிலை மாடம், கண்டம், முக்கோல் அந்தணர், பெருமூதாளர், யானை மொழி கற்கும் பாகர் போன்றவை தமிழரின் அடையாளங்கள் ஆகும்.

**சுருக்கக் குறியீட்டு விளக்கம்**

அ. – அடி.

அக. – அகநானூறு

அடி. – அடிகள்

மலை. – மலைபடுகடாம்

தொல். பொருள். நூ. – தொல்காப்பியம் பொருளதிகாரம் நூற்பா

**ஆய்வுக்கு பயன்பட்ட நூல்கள்**


1. பத்துப்பாட்டு தெளிவுரையுடன் பகுதி 1, பகுதி 2, எம். நாராயண வேலுப்பிள்ளை, முல்லை நிலையம், சென்னை 600 017, 2014.
2. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, மறைமலையடிகள், ராமையா பதிப்பகம், சென்னை 600 014, 2014.
3. பத்துப்பாட்டு ஆராய்ச்சி, மா. இராசமாணிக்கனார், சென்னைப் பல்கலைக்கழகம், 1970.

4. தொல்காப்பியம் பொருளாதிகாரம் மூலமும் உரையும் வ.த.இராமசுப்பிரமணியம்
பூம்புகார் பதிப்பகம், சென்னை 600 108, 2012.
5. நற்றிணை முதல்பகுதி புலியூர் கேசிகன் உரை, பாரிநிலையம், பிராட்வே, சென்னை 600 001, 2001.
6. புறநானூறு மூலமும் உரையும் புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை 600 014, 2010.
7. அகநானூறு களிற்றுயானை நிரை ந.மு.வேங்கடசாமி நாட்டார், சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் சென்னை, 1943.
8. அகநானூறு மணிமிடை பவளம் புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை 600 014, 2010.
9. பிங்கல நிகண்டு பிங்கல முனிவர், உரை.தி.சிவன்பிள்ளை, இந்து தியாலிஜிகல் யந்திரசாலை சென்னை, 1980.
10. சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியாருக்கு நல்லாருரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Karthik R., (2021) Tamil identities in Mullaipattu. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:68-73. Cauvery College For Women, Trichy.

**ம.ராஜா**
உதவிப் பேராசிரியர்
தூய வளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

# பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள்

**ஆய்வுச்சுருக்கம்**

நம்பிக்கைகளும் சடங்குகளும் என்னும் இக்கட்டுரையின் வாயிலாக மக்களால் மேற்கொள்ளப்படும் நம்பிக்கைகள் அவர்தம் வாழ்வில் உலாவரும் சடங்குகள், சடங்குகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் உள்ள உறவுநிலை தமிழ் இலக்கியங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளில் மனித வாழ்வியலில் கொண்டுள்ள பழக்கவழக்கங்கள் மூலம் பல்வேறு இலக்கியங்களில் பல்வேறு வகையான நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளின் வகைப்பாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு இக்கட்டுரையானது அமைகிறது.

**முன்னுரை**

பண்டைக்கால முதல் மனிதன் இயற்கையோடியைந்து வாழ்ந்து வருகிறான். இயற்கை மாறுதலுக்கேற்ப மனித மனமும் மாறுபடுகின்றது. இயற்கையோடியைந்த மனித வாழ்க்கையில் நம்பிக்கைகளும், சடங்குகளும் தோன்றலாயின. உலகெங்கிலும் வாழும் பழங்குடி சமுதாய வரலாற்றை நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். பண்டைத் தமிழரிடையே நிலவிய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழரின் நம்பிக்கைகள்**

தொல்காப்பியத்திலே **'நாளும் புள்ளும் பிறவற்றி நிமித்தமும்'**எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'புள்' எனக் குறிப்பிட்டது முன்னர் பறவையையும் பிற்காலத்தே சகுனங்களைப் பற்றியும் குறிப்பனவாக அமைந்துள்ளதை 'வாய்ப்புள், பறவாப்புள்' எனக் குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

**கூகை அலறினால் சாவு வரும்'**

என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடையேயும் இன்றும் தமிழகத்தில் நிலவி வருவதை அறியலாம். இதனைப் புறநானூறு நமக்குக் காட்டுகின்றது.

**"அஞ்சுவரு குராஅல் குரலுந் தூற்றும்"[1]**

**(புறம்.பா.எ 280)**

'காகம் கத்தினால் விருந்தினர் வருவர்' என்பது அக்கால முதல் இக்காலம் வரை தமிழரிடையே நிலவி வரும் நம்பிக்கையாகும்.

**"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை**

**அன்புடை மரபினின் கிளையோ டார"[2]**

**(குறுந்.பா.எ 391)**

ஏதேனும் நல்ல காரியத்திற்குப் புறப்படும்பொழுது காகம் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கம் செல்லுதல் நல்லது என நம்புகின்றனர். பண்டைக்காலத்தில் காட்டிடையே மக்கள் செல்லும் போது ஆறலைக் கள்வர் மிகுந்த தொல்லை கொடுத்துக் கொண்டேயிருப்பர். ஆறலைக் கள்வர் நடமாட்டத்தைக் 'கணந்துள்' என்ற பறவை சத்தம் எழுப்பி மற்றவர்கட்கு எச்சரிக்கை விடுத்த செய்தியையும் சங்க இலக்கியத்தில் காண்கிறோம்.

**"ஆற்றய லிருந்த இருந்தோட் டஞ்சிறை**

**நெடுங்காற் கணந்துள் ஆளறி வுறீஇ**

**ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்"[3]**

**(குறுந்.பா.எ 350)**

ஏதேனும் காரியத்திற்குப் புறப்படும்போது நல்ல வார்த்தை கேட்பதும் நல்ல சகுனமாகக் கருதப்பட்டது. இந்த நம்பிக்கை இன்றும் நிலவுவதைக் காணலாம். தொல்காப்பியர் இதனைப் 'பாக்கத்து விரிச்சி' எனக் குறிப்பிடுகின்றார். இதனை விரிச்சி, நிற்றல், வாய்ப்புள், பறவாப்புள், நற்சொல், வாய்ச்சொல் என்றும் வழங்குகின்றனர். இதனை அசரீரி என்றும் கூறுவர். கனவு, காணல், பல்லி சொல்லுதல், கண் துடித்தல் பற்றிய நம்பிக்கைகளையும் காண்கிறோம். உடம்பிலுள்ள ஒரு பகுதி துடிப்பது முதலியவற்றைக் கொண்டு எதிர் காலத்தைக் கணிப்பதும் உண்டு. இடது கண் துடிப்பது பெண்களுக்கு நல்லது என **எட்கர் தெர்ஸ்டன்** கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. தலைவனை எதிர்நோக்கும் தலைவிக்குக் கண் துடித்தால், தலைவன் விரைவில் வருவான் என நம்புகிறாள்.

**"நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே"[4]**

**(கலித்.பா.எ 11)**

**"நுண்ணோர் புருவத்த கண்ணு மாடும்"[5]**

**(ஐங்.பா.எ 218)**

அடியார்க்கு நல்லார் 'கனாநூல்' பற்றியும் குறிப்பிடுகின்றார். இரவில் காணும் கனவுகளுக்குப் பலன் கூறுவுதை இன்றும் காண்கிறோம்

தன்னை ஒருவர் நினைத்தால் தும்மல் வரும் என்ற நம்பிக்கையைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.

**"சென்றவர் உள்ளிய தன்மையர் போலு மடுத்தடுத்து**

**ஒள்ளிய தும்மல் வரும்"[6]**

**(ஐந்.எழு.பா. எ. 40)**

குழந்தை தும்மினால் தாய் 'நூறு' எனக் கூறுவது 'நூறாண்டு வாழ்க' என்ற பொருளில் ஆகும்.

சுப காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது விளக்கு அணைந்தால், நல்ல சகுனமாகக் கருதுவதில்லை. இந்த நம்பிக்கை இந்தியா முழுவதும் உள்ளது.

**"நெடுநகர் வரைப்பின் விளக்கும் நில்லா"[7]**

**(புறம்.பா.எ. 280)**

யாரேனும் ஒரு காரியத்திற்குப் புறப்படும்பொழுது தலைவிரி கோலமான பெண்ணைக் கண்டால் கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர்.

'**"நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கிற் றேற்றம்"[8]**

**(நற்.பா.எ 246)**

பச்சோந்தி இடமிருந்து வலம் சென்றால், நல்ல சகுனமாகக் கருதினர்.

**"நாவி சிச்சிலி யோந்திதான் – வலமாயின்**

**வழிப்பயண மாகை நன்றாம்"[9]**

**(அறப்பளிச்சதகம்)**

பெண்களிடையே கூடலிழைத்தல் இருந்தது. காதலன் வருகையை நினைத்துக் காதலி மணலில் விரலால் வட்டமிடுவாள். வட்டத்தின் இரு முனைகளும் நேராகச் சந்தித்தால் நல்ல அறிகுறி என்றும் அப்படியில்லாவிட்டால் நல்ல அறிகுறி இல்லையென்றும் சங்க கால மக்கள் நம்பினர்.

எதிர்காலத்தைக் குறி சொல்லுபவர்மூலம் அறிந்து கொண்டார்கள் தமிழர்கள். குறி சொல்லும் பெண்களைக் 'கட்டுவிச்சி' என்றும் 'அகவன் மகள்' என்றும் குறிசொல்வோனை 'வேலன்' என்றும் குறிப்பிட்டனர். குறி கேட்கும் நம்பிக்கையுள்ள மக்களை அன்று மட்டுமல்ல இன்றும் கிராமப்புறங்களில் காண்கிறோம்.

பண்டைத் தமிழர் இயற்கையோடியைந்த வாழ்க்கையை நடத்தினர் என்பதும் பறவை, விலங்குகளின் நடத்தைகளைக் கண்டுணர்ந்தனர் என்பதும் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். எனவே, நம்பிக்கை என்பது பன்னெடுங்காலமாக மக்கள் வாழ்விலே இருந்து வந்துள்ளதை நாம் அறிகிறோம். ஹெலன் ஜான்சனின் கருத்து இங்கு நினைவுகூரத் தக்கது. நம்பிக்கைகள் எழக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகள் உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். ஆனால் நம்பிக்கை இருப்பது உண்மை. அவை மெய்ப்பிக்கத் தக்கவை. அந்த அடிப்படையில் நம்பிக்கைகளை ஆராய வேண்டும்.

**பழந்தமிழரின் நம்பிக்கைகள்**

உலகில் வாழும் எல்லா இன மக்களுக்கும் அவர்கள் சமயம் சார்ந்த நம்பிக்கைகள் இருப்பது இயல்பு பழந்தமிழர்கள் தங்கள் வாழ்வில் பின்பற்றிய நம்பிக்கைகள் பலவிதமானதாகக் காணப்படுகிறது. அவற்றில் சிலவற்றை இன்றும் வழக்கொழியாமல் பாதுகாத்து பின்பற்றி வருகின்றனர். தங்களது எண்ணத்திற்குத் தக்கபடி ஏற்படுகின்ற குறிப்பினுக்குத் தக்கவாறு நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். அக்குறிப்புகள் நன்மை சார்ந்ததாகவோ அல்லது தீமை பற்றிய குறிப்பினை வெளிப்படுத்துவனவாகவோ இருப்பதாக பழந்தமிழர்கள் கருதியும் வந்துள்ளனர். அவைகள் பற்றிய பதிவுகளையும் இட்டுச் சென்றும் உள்ளனர். தமிழர்களது இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் மட்டுமல்லாது. பிற காப்பிய நூலான சிலப்பதிகாரம் உட்பட சில நூல்களிலும் இவை காணக்கிடைக்கின்றன அவை பற்றி இப்பகுதியில் காண்போம்.

**பல்லி சகுணம் பார்த்தல்**

பல்லியின் சத்தத்தைக் கேட்டு சகுனம் பார்த்தல், இன்றும் நம்மிடையே தொடர்ந்து வருவதை நாம் அறிவோம். தற்காலத்தில் அவற்றிற்கென பஞ்சாங்க நூல்கள் கூட விற்கப்படுகின்றன. அவற்றில் மேனியில் பல்லி விழுகின்ற இடத்தினைப் பொறுத்து பலன் கூறப்படுகின்றது.

சங்க கால நூல்களிலும் இவைகள் பற்றின நம்பிக்கைகளை மக்கள் கொண்டிருந்தனர் எனப் பல சான்றுகள் காணக்கிடைக்கின்றன. அவை

**"மையல் கொண்ட மதன் இருக்கையள்**

**பகுவாய் பல்லி படுதொறும் பரவி**

**நல்ல கூறுகென நடுங்கி"[10]**

**(அகம்.பா.எ 289)**

இவ்வரிகளானது தலைவனைப் பிரிந்த தலைவி. தன் அன்புக் காதலன் வரும் நாளை எதிர் நோக்கியிருக்கும் வேளையில், பல்லியானது நிலைக் கதவுகளிலும், சுவர்களின் மீதும் இருப்பதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவள், பல்லியை நோக்கி நல்ல பலன் மீதும் இருப்பதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் அவள். பல்லியை நோக்கி நல்ல பலன் கூறுதல் வேண்டும் என தன் மனதில் எண்ணிக் கொள்கின்ற விதமாக அமைந்திருப்பதிலிருந்தே அக்கால மக்களின் நம்பிக்கைகளின் ஒன்றில் முக்கியமானதாக இவை இருந்துள்ளது எனவும் அறிய முடிகிறது.

**கண்கள் துடித்தல்**

பெண்களுக்கு இடக்கண்ணும், ஆண்களுக்கு வலக்கண்ணும் துடித்தால் நன்மை என இன்றும் நம் தமிழர்களின் வழக்குகளில் இருப்பதைக் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில் இதற்குத் தகுந்த சான்று கிடைத்துள்ளது. அவை.

**"கள்ளுக நடுங்குங் கழுநீர் செங்கணும்**

**கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்**

**உண்ணிறை சுரந்தகத் தொளித்துநீர் உகுத்தன**

**எண்ணுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன**

**விண்ணவர் கோமான் விழவுநா ளதன்"[11]**

**(சிலம்பு)**

மேற்கண்ட வரிகள், கண்ணகி கோவலனைப் பிரிந்து வருத்தமுற்றிருந்தபோது, இந்திர விழாவில் கோவலனும் மாதவியும் கலந்து இன்புற்றிருக்கின்ற அவ்வேளையில் கண்ணகிக்கு வலக்கண்ணும் அதே நேரத்தில் மாதவிக்கு இடக்கண்ணும் துடித்தன என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளதன் மூலமும் பழந்தமிழர் வாழ்வில் நீண்ட பழக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும் எனினும் ஏனைய சங்க நூல்களில் இதனைப் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கவில்லை என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும் எனினும் இந்நூல் கி.பி 2ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாலும் இப்பழக்கமானது அம்மக்களிடையே தொடர்ந்து வந்துள்ளமைக்கு கால ஆதாரமே சாட்சியாக நமக்குக் கிடைக்கின்றது.

**குயிலும் காக்கையும்**

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் விரைவில் வருவான் என்று முன்னறிவிக்கும் செயலாக குயில் கூவுதல் நல்ல சகுனமாகப் பார்க்கப்பட்டிருப்பதனை அறியலாம் அவை,

**"மனைமா நொச்சி மீமிசை மாச்சினை**

**வினைமான் இருங்குயில்; பயிற்றலும் பயிற்றும்"[12]**

**(நற்.பா.எ 246)**

போருக்குச் செல்லும் வீரர்கள் சில பறவைகளின் ஒலியைக் கேட்டும் சகுனம் பார்த்திருந்தனர் எனச் சில பதிவுகளின் வாயிலாக கிடைக்கின்றது. மேலும் அவை வீரர்களுக்கு உற்சாகத்தையும் கொடுத்துள்ளன என்பதை அறிகிறோம்.

"**புள்ளிடை தட்பா"[13]**

**(புறம்.பா.எ 124)**

**"புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை"[14]**

**(புறம்.பா.எ 204)**

ஆகிய வரிகளிலிருந்தே நமக்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன.

**விரிச்சியும் உன்னமும்**

ஒரு செயலைத் தொடங்குகின்ற பொழுது பிறர் கூறும் சொற்களையே சகுனமாகக் கொள்வதாகும். இன்றைக்கும் நாம் இம்முறையைக் காண்கின்றோம். இம்முறையானது பழந்தமிழரின் வாழ்வியலில் இருந்துள்ளது எனத் தெரிகிறது. விரிச்சி என்பதன் பொருள் நற்சொல் கூறுதல் என்பதாகும்.

**"நெல்நீர் விரிச்சி யோர்க்கும்**

**சேம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா"[15]**

**(புறம்.பா.எ 280)**

ஆகிய வரிகள் நமக்கு தக்கச் சான்றாக அமைந்திருக்கின்றன. முல்லைப் பாட்டிலும் இதற்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. அவை

**"நாழி கொண்ட நறுவி முல்லை**

**அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது**

**பெருமுது பண்டிர் விரிச்சி நிற்ப"[16]**

**(முல்லைப்பாட்டு 9-11)**

இன்றைக்கும் தமிழர்களது வீட்டின் நிகழ்ச்சிகளில் முதலில் வாழ்த்துபவர்களாக முதுமை வயதான பெண்களே இருக்கின்றனர். ஒரு செயலைத் தொடங்கும் முன் பெரியோர்களிடம் ஆசிபெறுதல் இதனுடன் சேர்ந்ததாகும். இம்முறை இன்றும் வழக்கத்தில் இருந்து வருவதனையும் காண்க.

**சடங்குகள் என்பதன் வரையறை**

நம்பிக்கை அடிப்படையில் தலைமுறை தலைமுறையாகச் செயல்படும் செயல்கள் சடங்குகள் எனப்படும் மக்கள் அனைவரிடமும் சடங்குகள் பல இன்றும் காணப்படுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரையில் வாழ்வின் எல்லா நிகழ்வுகளும் சடங்குகளுடன் பின்னிப் பிணைந்துள்ளன. பழந்தமிழரிடம் இருந்ததாக அறியலாகும் சடங்குகளைப் பின்வருமாறு காணலாம்.

**மானிடவியல் அறிஞர் பார்வையில் சடங்குகள்**

சமூக முக்கியத்துவம் வாய்ந்த சடங்குகளைப் பற்றி ஆராய்ந்த டச்சு நாட்டு மானிடவியல் அறிஞரான அர்னால்டு வான் கென்னப் என்பவர்"வாழ்வியற் சடங்குகளை மிகவும் நுட்பமுடன் ஆராய்ந்து தகுதிப் பெயர்ச்சிப் சடங்குகள் என வரையறை செய்தார். ஒவ்வொரு தகுதிப் பெயர்ச்சிச் சடங்கும் மக்களை ஒரு நிலையிலிருந்து பிரித்து மறுநிலைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது என முடிவு செய்தார். சங்க காலத் தமிழர் பண்பாட்டிலும் பல தகுதி பெயர்ச்சி நிலைகள் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெண்ணிற்குரிய சடங்குகளை காண்போம்.

**திருமணச் சடங்குகள்**

**"பொய்யும் வாழ்வும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[17]**

**(தொல்.பொருள்)**

என்று தொல்காப்பியர் கூறுவதால் அவர் காலத்துக்கு முன்பே காரணம் என்ற திருமணச் சடங்குகள் இருந்தன என்று அறியலாம். பழந்தமிழரின் திருமயச் சடங்குகள் பின்வருமாறு

**"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**

**உருவு றிருத்தக் காமம் வாயில்**

**நிறையே அருளே உண்வொடு திருவென**

**முறையுறைக் கிளர்ந்த ஒப்பினத வகையே"[18]**

**(தொல்.பொருள்)**

என்று தொல்காப்பியர் கூறுதலின் பொருத்தம் பார்க்கும் சடங்கு இருந்தது எனத் தெரிகிறது பெண்ணுக்குப் 'பரிசம்' அளிக்கும் முறையும் இருந்தது.

**"கடுங்கண் கோசர் நியமம் ஆயினும்"**

**உறும் எனக் கொள்குநர் அல்லர்**

**நறுதல் அரிவை பாசிழை விலையே"[19]**

**(அகம்.பா.எ 90)**

என்பது அகநானூறு பரிசம் அன்று முலைவிலை, சிறுவிலை, பாசிழை விலை பரியம் என்றும் அழைக்கப்பட்டது. பரியம் என்ற சொல்தான் ' பரிசம்' என்று மருவி வழங்கப்படுகிறது.

**பெண்ணிக்குரிய சடங்குகளின் படிநிலைகள்**

"அந்தோணி குட் என்னும் மானுடவியல் அறிஞர் இன்றைய தமிழ்ப் பண்பாட்டின் நான்கு முக்கிய வாழ்க்கை வட்டச் சடங்குகள் மூலம் பின்வரும் நிலை மாற்றங்கள் நிகழ்கின்றன என குறிப்பிடுகிறார். அவை என்று வகைப்படுத்துகிறார். இதன் அடிப்படையில் சங்ககாலப் பெண்களின் வாழ்வானது

1.வெறியாட்டு சடங்கு – சிறுபெண்

2. திருமணவாழ்க்கை – கன்னிப்பெண்

3. குழந்தை பிறப்பு சடங்கு – மனைவி, தாய்

4. கணவனின் இறப்பு சடங்கு – கைம்பெண்

என்ற நிலையில் வகைப்படுத்தலாம்.

"காதலின் வளர்ந்த மாதர் ஆதலின்"

**வதுவைச் சடங்கு**

வதுவைச் சடங்கினை வாலாய் கருத்தியல் சடங்காகக் குறிப்பிடுகிறார். 'அந்தோணிகுட் என்பவர் வதுவைச் சடங்குகளைத் தாய்மை சார்ந்த மங்களகரமான சடங்குகளாகக் குறிப்பிடுகிறார். பெண்ணின் களவு வாழ்க்கை வதுவையின் கற்பு வாழ்க்கையாகிறது. இரு வீட்டார்களாலும், ஊர்ப்பெரியவர்களாலும் தீர்மானிக்கப்பட்டது வரைதல் அன்றயை நடைமுறைப் பண்பாட்டின் சடங்குகளாக இருந்தது.

**"நனைவினை நறவின்தேறல் மாந்தி,**
**பனைவினை நல்இல் திருமணம் குவைஇ**
**பொய்மல் ஓதி எம்மகள் மனான் என**
**வதுவை அயர்த்தினர் நமரே"[20]**

**(அகம்.பா.எ 221)**

என்ற பாடல் அடிகள் மூலம், பெண்வீட்டில் பரப்பப்பட்ட புதுமணலில் கூடிய பெரியவர்கள் தங்கள் மகளுடைய மணத்தை முடிவுசெய்து மகிழ்ச்சியில் தேறல் மாந்தி பின்னர் வதுவை என்ற சடங்கினை அயர்ந்தார்கள் என்று பாடல் கூறுகிறது.

**சிலம்புகழிச் சடங்கு**

மணமாகும் வரை பெண்கள் பாதங்களில் சிலம்பு அணிந்திருந்தார்கள். மணவினைத் தொடங்குவதற்கு முன்னதாகத் தாய் வீட்டில் அவளுக்கு சிலம்பு கழியும் சடங்கு செய்தனர். சிலம்பு கழிப்புச் சடங்கிற்குப் பின்னர் வதுவை நல்மணம் நிகழ்ந்தது. இதனை

**"நும் மனைச் சிலம்பு கழீஇ அயரினும்**
**எம் மனை வதுவை நல்மணங் கழிகெனச்**
**சொல்லின் எவனோ மற்றே வென்வேல்**
**மைஅற விளங்கிய கழல் அடி**
**பொய்வல் காளையை ஈன்றே தாய்க்கே"[21]**

**(ஐங்.பா.எ 391)**

என்ற அடிகள் கூறுவது பெண்வீட்டில் சிலம்பு கழித்தல் சடங்கு வதுவையின் போது நிகழ்த்தப்பட்டதை உணர்த்துகின்றன.

**மணமும், சிலம்புகழிதலும்**

சிலம்பு கழித்தல் பற்றி உ.வே.சா அவர்களுக்கு இருவேறுபட்ட கருத்து நிலவியுள்ளதனைக் குறுந்தொகை பதிப்பின் வாயிலாக அறியமுடிகின்றது அவர் குறுந்தொகை பதிப்பின் நூலாராய்ச்சி என்ற பகுதியில் வழக்கங்களில் ஒன்றாகச் சிலம்பு கழிதல் நோன்பினை சுட்டும் போது "மணம் செய்த பின்னர் மகளிர் சிலம்பு கழிக்கும் ஒருவகை நோன்பு பண்டைய காலத்தில் செய்யப்பட்டுள்ளது. என்று குறிப்பிட்ட பின்னர் நூற்பகுதியின் விளக்கவுரையில் மணம் புரிவதற்கு முன் மணமகளது காலில் பெற்றோர்களால் அணியப்பட்ட சிலம்பை நீக்குவதற்கு ஒரு சடங்கு செய்யப்படும் அது 'சிலம்பு கழித்தல் நோன்பு' என்பர்.

**பூப்புச் சடங்கு**

'அந்தோணிகுட் என்னும் மானுடவியல் அறிஞர் பூப்புச் சடங்கினை தீட்டு சார்ந்த மங்களமான சடங்கு என்று வகைப்படுத்துகிறார்"பெண் உடல் ரீதியாகக் குழந்தைப் பருவத்திலிருந்து கருத்தரிக்கும் தகுதியை அடைகின்ற நிலைக்கு மாறிச் செல்லுவதைக் குறிப்பதைப் பூப்பு என்கிறோம். சடங்குகளைப் பற்றி சங்க இலக்கியம் குறிப்பிடுவதாவது.

**"தோள் புதிது உண்ட பரத்தை இல் சிவப்புற**

**நாள் அணிந்து உவக்கும் கணங்கறை யதுவே**

**கேள் அணங்குற மனைக் கிளந்துள்ள சுணங்கறை**

**சுணங்கறைப் பயனும் ஊடல் உள்ளதுவே"[22]**

**(பரி.பா.எ 20)**

என்ற அடிகள் மனைவி பூப்படைந்ததை, பரத்தை வீட்டிலிருக்கும் கணவனுக்கு செவ்வணி அணிந்து குறிப்பால் உணர்த்தியதைக் காணலாம். பூப்படைந்த ஈராறு நாளில் கணங்கின்(புணர்ச்சி) முக்கியத்துவம் இங்கு உணர்த்தப்படுகிறது.

**திருமணத்திற்கு பெண் கேட்டல் சடங்கு**

பழங்காலத்தில் தலைவனே உறவினர்களுடன் சேர்ந்த தலைவியை பெண் கேட்டுப் போகும் பழக்கம் இருந்துள்ளது, இதனை

**"எந்தையும் யாயும் உணரக்காட்டி**

**ஒளித்த செய்தி வெளிப்படக்கிளர்ந்தப் பின்**

**மலைகெழு வெற்பன தலைவந்து இரப்ப**

**நன்றுபுரி கொள்கையின் ஒன்றா கின்றே"[23]**

**(குறுந் பா.எ 374)**

என்ற குறுந்தொகை பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இதே பழக்கம் இன்றளவும் தமிழ் மக்களிடம் இருக்கிறது.

மேலும் வயது முதிர்ந்தோரைப் பெண் கேட்க அனுப்பும் செய்தி இல்லற வாழ்வில் தமிழ்மக்களின் உயர்ந்த சடங்கினை உணர்த்துகிறத. பெண் கேட்க வரும்போது எல்லாம் நன்மையாக முடிய வேண்டும் கருத்தில் நன்று நன்று எனச் சொல்லிக்கொண்டே வருவார்கள். அவர்களை வரவேற்போரும் நீங்கள் வந்த நாள் "நன்னாள்" என்று சொல்லி வரவேற்பார்கள். இத்தகைய வாழ்த்தும் வரவேற்பும் அந்நிகழ்வு நிறைவேறும் என்பதற்கான அறிகுறிகளாகவே கொள்ளப்பட்டன. இதனை,

**"தண்டுடைக் கையர்; வெண்தலைச் சிதவலர்**

**நன்று நன்று என்றும் மாக்களோ**

**இன்று பெரிது என்னும் ஆங்கண வையே”[24]**

**(குறுந்.பா.எ 146)**

என்னும் குறுந்தொகைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இன்றும் வயது முதிர்ந்த நல்ல அனுபவம் நிறைந்த முதியவர்களோடு பெற்றோரும், பெண் பார்க்க முதலில் செல்கிறார்கள். அப்படி அவர்கள் செல்லும்போது பல வகையான அறிகுறிகள் அல்லது நிமித்தம் பார்த்துச் செல்கின்றனர்.

**மகப்பேறு காலச்சடங்கு**

“குழந்தைப் பிறப்பினை தீட்டு சார்ந்த மங்களகரமான சடங்கு என்கிறார். அந்தோணிகுட் பெண் கருவுயிர்த்தல் குழந்தை பெறுதல் பற்றிய செய்திகளும், அவை தொடர்பான சடங்குகளும் சங்க இலக்கியத்தில் பாடப்பட்டுள்ளன. வீட்டில் குழந்தை பிறந்தால் குழந்தை பெற்ற பெண்ணின் தலையில் வெண்சிறுகடுகைத் தடவித் தலைமுழுக்கட்டும் நிகழ்வைச் செய்தனர். இதனை,

**“திருந்து இழைமகளிர் விரிச்சிநிற்ப**

**வெற்உற விரிந்த அறுவை மெல் அனைப்**

**புனிறு நாறு செவிலியோடு புதல்வன் துஞ்ச்**

**ஐயவி அணிந்த ரெய்யாட்டு ஈராணிப்**

**பசுரெய் கூர்ந்த மென்மை யாக்கைச்**

**சீர்கேழு மடந்தை ஈர்இமை பொருந்த”[25]**

**(நற்.பா.எ 40)**

என்ற பாடலடிகள் வழி அறிய இயலும் வீட்டில் குழந்தை பிறந்தால் , பிறந்த குழந்தையைப் பெற்ற தாய் ஆகியோரைப் பேயிடமிருந்து காக்க ஐயவி பூசுதலைச் சங்ககால மக்கள் சடங்காகச் செய்தனர்.

**கைம்மைச் சடங்கு**

போர்க்களத்தில் இறந்துவிட்ட வீரனின் மனைவிக்கு அக்காலச் சமூகத்தால் விதிக்கப்பட்ட கைம்மைச் சடங்குகள் அவளைப் பாலியல் வாழ்க்கைக்குத் தடை விதிப்பதாகச் செய்யப்பட்டன. இவ்வகையிலான இறப்பு சார்ந்த சடங்கினை அந்தோணிகுட் தீட்டு சார்ந்த அமங்கலமான சடங்கு என வகைப்படுத்துகிறார். கைம்மையில் ஒரு வழக்கமாகப் பெண்ணின் கூந்தல் மழிக்கப்பட்ட செயலை.

**“விரி உளைப் பொலிந்த பரியுடை நன்மான்**

**வேந்தர் ஒட்டிய ஏந்துவேல் நன்னன்**

**கூந்தல் முரற்றியின் கொடிதே”[26]**

**(நற்.பா.எ 270)**

என்ற பாடல்கள் மூலம் அறியலாம்.

**தொகுப்புரை**

தமிழர் தம் வாழ்வில் நம்பிக்கைகளும் சடங்குகளும் முக்கியப் பங்கு வகித்தன. அவற்றை முறையே பின்பற்றி வாழ்ந்து வந்தனர். அதிலும் குறிப்பாக பெண்கள் சார்ந்த சடங்குகளை தலைமுறைகளாக பின்பற்றினர். சங்க இலக்கியத்தில் களவு, கற்பு என்று பிரிக்கப்பட்ட நிலையில் களவு வாழ்வில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வதுவைச் சடங்குகளும், கற்பு வாழ்வில் செய்து வந்த திருமணத்திற்கு பெண் கேட்கும் சடங்கு முறைகளும் தெற்றெனத் தெரிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. புறநானூறு,ஔவைதுரைசாமிப்பிள்ளை,பா.எ 280
2. குறுந்தொகை, சண்முகப்பிள்ளை.கு. பா.எ 391
3. மேலது, பா.எ 350
4. கலித்தொகை, எட்டுத்தொகை நூல், பா.எ 11
5. ஐங்குறுநூறு, சாமிநாத அய்யர், பா.எ 218
6. ஐந்திணை எழுபது, பா.எ 40
7. புறநானூறு,ஔவைதுரைசாமிப்பிள்ளை,பா.எ 280
8. நற்றிணை,வேங்கடராமன்.எச், பா.எ 246
9. அறப்பளிச்சதகம்
10. அகநானூறு, கௌமாரீஸ்வரி,எஸ். பா.எ 289
11. சிலப்பதிகாரம்
12. நற்றிணை,வேங்கடராமன்.எச், பா.எ 246
13. புறநானூறு,ஔவைதுரைசாமிப்பிள்ளை,பா.எ 124
14. மேலது, பா.எ 204
15. மேலது, பா.எ 280
16. முல்லைப்பாட்டு, வரிகள் 9-11
17. தொல்காப்பியம் (பொருளதிகாரம்)
18. மேலது
19. அகநானூறு, இரா.செயபால். பா.எ 90
20. மேலது, பா.எ 221
21. ஐங்குறுநூறு, சாமிநாத அய்யர், பா.எ 391
22. பரிபாடல், எட்டுத்தொகை நூல், பா.எ 20
23. குறுந்தொகை, சண்முகப்பிள்ளை.கு. பா.எ 374
24. மேலது,பா.எ – 146
25. நற்றிணை,வேங்கடராமன்.எச், பா.எ 40
26. மேலது,பா.எ 270

**பார்வை நூல்கள்**


1. ஔவை.துரைசாமிப்பிள்ளை,புறநானூறு (மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம், சென்னை 600 014, முதற்பதிப்பு 2015.
2. சண்முகப்பிள்ளை,கு, குறுந்தொகை (மூலமும் உரையும்), தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மறுஅச்சு 1994.
3. சாமிநாதஅய்யர்.உ.வே, ஐங்குறுநூறு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதற்பதிப்பு 1903.
4. சோமசுந்தரனார்.பொ.வே.,பத்துப்பாட்டு(முல்லைப்பாட்டு), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 600 018.
5. வேங்கடராமன்,எச்., நற்றிணை (மூலமும் உரையும்), டாக்டர் உ.வே சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை 90, முதற்பதிப்பு 1989.
6. ஆலிஸ்,ஆ., பரிபாடல்(மூலமும் உரையும்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி சிட்கோ இண்டஸ்டிரியஸ், முதற்பதிப்பு ஏப்ரல் 2004.
7. செயபால்,இரா., அகநானூறு, பாவை பிரிண்டர்ஸ்,142,ஜானி ஜான்கான் ரோடு, ராயப்பேட்டை, சென்னை 600 098, முதற்பதிப்பு 2004.
8. இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்கழகம், 154,டி.டி.கே சாலை, சென்னை – 18.


**Cite this book Chapter:** S. Ramalakshmi and Raja M., (2021) Beliefs and rituals of ancient Tamils, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:74-82. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ரெ. நல்லமுத்து,**
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 02

# "மருதநில மக்களின் வாழ்வியல் விழுமியங்களில் பண்பாட்டு அடையாளங்கள்"

**ஆய்வுச்சுருக்கம்:**

பண்பாடென்பது வாழ்க்கை முறையாகவும் வாழ்வுக்கான அர்த்தமாகவும் அமைகின்றது. பண்பாட்டின் வழியாகவே மனிதர்கள் தங்களை வெளிப்படுத்துகிறார்கள். அதன் வழியாகவே மனித மேம்பாடும் சமூக மேம்பாடும் முழுமை பெறுகின்றன. மேம்பாடு என்பது ஒரு சமூகம் கட்டமைத்திற்கும் பொருள்சார் - பொருள்சாராக் கூறுகளை உள்ளடக்கிய சமூக முழுமையின் மேல் நோக்கிய அசைவாகும். சுயபண்பாட்டு எழுச்சியும், வளர்ச்சியும் இங்கு உயர் இலக்குகளாக இருக்கவேண்டும். பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. "பண்பாடு என்பது கற்கப்படுவது"1 என்பார் ஜார்ஜ.ஃ.பாஸ்டர். அதைப்போன்று ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும், செயல்களுக்கும், நடத்தைமுறைகளுக்கும் (behavior pettern) எவை எவை அவசியமென்று கருதப்படுகின்றனவோ, அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் (values) ஆகும். மக்கள் தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும். அவ்வகையில் மருதநில மக்களின் வாழ்வியல் விழுமியங்களில் காணலாகும் அடையாளங்களை இனம் காணமுயல்வதாக இக்கட்டுரை அமைகிறது

**கலைச்சொற்கள்: -**

மருதநிலம், மருதத்திணை, வேளாண்மை, உழவு, கலப்பை, நடுதல், நீர்ப்பாசனம், அறுவடை, போரடித்தல், சூடடித்தல், பொலியில், களமர், நடுநர், கைவினை, துமித்த வினைஞர், அரணின் முற்றம், கடாவிடல், நெல்லரிதல், ஏறுதழுவுதல்

**முன்னுரை: -**

மருதம் நிலப்பகுதி என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்து ஆராயந்து அறியப்பட்ட ஐந்து வகைத் திணைகளாகும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என அழைக்கப்பட்டது. இந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் உழவுத்தொழில் புரிந்து வந்தனர். இம்மக்கள் இனக்குழுக்களாக வாழ்ந்து வந்துள்ளனர், இம்மக்களின் தலைவர்களாக வேந்தன், மள்ளர், கடையர், கடைசியர், உழவர், உழத்தியர்,மகிழ்னன், ஊரன், கிழவன் என்று தங்களை அடையாளப்படுத்தி வாழ்ந்துள்ளனர். வேளாண்மை செய்யும் பொருட்டு இவர்களை வேளாளர் என்றும் அழைக்கப்பட்டனர். மருதநில கடவுளாக இந்திரனை வழிப்படும் முறையை அறியமுடிகிறது.

மருதநிலத்தில் வாழும் மக்கள் தங்களுடைய அடையாளங்களாகவும், வாழ்வியல் விழுமியங்களாகவும் காணப்படுவனவற்றை பண்பாட்டு அடையாளமாக உள்ள அவர்களின் வாழ்வியல் நெறிமுறைகளை இக்கட்டுரை வழி ஆராயப்படுகின்றது.

**மருதநிலம்:-**

நாடோடி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது ஆற்றுப்படுகையான மருத நிலமாகும். ஆற்றுப்படுகைகளில் நிலங்களைத் திருத்தி வேளாண்மை செய்த மக்களே நாகரிகப் பண்பாடுகளைக் கட்டமைத்தவர்களாக அறிப்படுகின்றனர். நிலங்களைப் பண்படுத்தி, வேளாண்மை செய்து உழப்பை உலகிற்கு அறிமுகம் செய்த நிலமாகவும் மருதநிலத்தைக் கூற முடியும்.

"காடு கொன்று நாடாக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ"2( பட்டினப்பாலை: 283- 286)

என்னும் இலக்கிய வரிகள் மூலம் இக்கருத்தை அறியமுடிகிறது. வேட்டைச் சமூகத்திலிருந்து உணவு உற்பத்திக்கு மக்களை மாற்றியதோடு, அந்நிலம் சார்ந்த மக்களைக் கலைகளிலும், தத்துவங்களிலும் ஈடுபடச் செய்தது வேளாண்மையே. மற்ற நிலங்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருந்துள்ள மருத நிலத்தின் வேளாண்மை தனித்துவமானது. பண்டையத் தமிழர்களின் நிலங்களைத் திணையியல் நோக்கில் பகுத்தாலும், அப்பாகுப்பாட்டில் மருத நிலம் சார்ந்த வேளாண்மையும் உணவு உற்பத்தியுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதைத் தொல்காப்பியம் வகுத்துள்ள கருப்பொருட்களால் உணரலாம்.

**வேளாண்மையும் மருத நிலமும்:-**

வேட்டையாடும் தொழிலைக் கொண்டு நிலத்தை அகன்று ஆளுமை செய்தமையால் 'வேளாண்மை' என்னும் சொல்லாளுகை வந்துள்ளதை அறியமுடிகிறது. இதனை,

"வேள் +ஆள் = வேளாண்மை. வேள் என்ற சொல் பகுதியாகி, மண் என்ற பொருளையும், ஆள் என்ற விகுதியையும் பெற்று, ஆளுதல் என்ற தொழிலையும் மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. வேளாண்மை என்ற சொல் மண்ணை ஆளுதல் என்னும் பொருளைத் தருவதாகவுள்ளது"3 (வின்சுலோ.1920)

இதனையே., வேளாண்மை என்ற சொல் வெள்ளத்தை(நீரை) ஆள்பவன் என்னும் பொருளுடையது என்கிறது அபிதான சிந்தாமணி. தமிழில், வேளாண்மை. 'விவசாயம், கமம், உழவுத் தொழில், முதனிலைத் தொழில், பயிர்த் தொழில் எனப் பல பெயர்கள் வழக்கில் உள்ளதை அறிய முடிகின்றது. வேளாண்மை என்பது பயிர் உற்பத்தியை மட்டுமல்லாது, வேளாண்மை சார்ந்த கால்நடை வளர்ப்பு, உணவு சேமிப்பு, விவசாயப் பொருட்களின் உற்பத்தியையும் குறிப்பதாக உள்ளது.

**உழவு:-**

உழவே அறிவியல்களிலெல்லாம் உயர்ந்த 'அறிவியல்' என்பார் ஜான்சன். அத்தகைய உழவைத் தொழிலாகக் கொண்ட மருத நில மக்கள் நிலத்தைப் பயன்படுத்த மேற்கொண்ட முறையினை மருதப்பாடல்கள் பதிவு செய்துள்ளன. மருத நிலத்தில் வாழ்ந்த உழவர்களாகி மள்ளர்கள் நிலத்தை பலமுறை உழுது மண்ணைப் பண்படுத்தியதை,

"…….. உறுபெயல்

தண்துளிக்கு ஏற்ற பல உழு செஞ்செய்

மண்போல் நெகிழ்ந்து"4 (அகம்.பாட26)

என்னும் மருதப்பாடல் பேசுகின்றது. அறுவடைமுடிந்து வயலில் மறு வெள்ளாண்மைக்கைத் தயார் செய்யும் பொருட்டு, உழுவதற்குக் கலப்பை எடுத்துச்செல்லும் உழவன், எரு இட்டு உழுவதை வள்ளுவரின் குறள் வழி அறியலாம். உழவுத் தொழிலின் அடிப்படைச் செயல்களுள் ஒன்று எருவிடுதல் ஆகும்.

"ஏரினும் நன்றால் எருவிடுதல்"5(வள்ளுவர்.∴.1038)

எட்டுத்தொகை நூல் ஒன்றில் இச்செய்தியை அறியமுடிகிறது.

"மலை கண்டன்ன நிலை புணர்நிவப்பின்

பெரு நெற் பல்கூட்டு எருமை உழவ"6(நற்றிணை.60)

என்னும் நற்றிணைப் பாடல் பேசியுள்ளது. தாளடிப் பருவத்தில் எருமைகளைக் கொண்டு உழவு மேற்கொற்றும் உழவன் சத்தான உணவை உண்டு உழவு மேற்கொண்டுள்ளான் என்பதை இப்பழம்பாடல் எடுத்துரைக்கின்றது.

**நாற்று நடுதல்:-**

பலமுறை உழுது பண்படுத்தி நீர்ப் பாய்ச்சப் பெற்ற வயல்களில் நாற்றுகளை அழுந்த நடும் பணி 'நடுதல்' ஆகும். மருத நிலத்தில் நடவு செய்வோரை 'நடுநர்' என்று நற்றிணைக் குறிப்பிடுகின்றது. சேற்றில் அழுத்தி நடுவதை,

"நீர் உறு செறுவின் நாறு முடி அழுத்தநின்

நடுநரொடு சேறி ஆயின்"7(நற்.60:7-8)

என்னும் பாடல் வழி விளங்கிக்கொள்ள முடிகிறது. சங்க காலத்தில் நாற்றுவிட்டு, பின் நடுகின்ற வழக்கம் இருந்துள்ளமையும், நீர் வளம் நிறைந்த பகுதியில் நேரடியாக விதைக்க முடியாது, பிடுங்கி நடவேண்டும் என்ற நுட்பமும் புலனாகிறது.

**போரடித்தலும் சூடடித்தலும்:-**

வயலில் அறுத்துக் கட்டுகளாகக்கட்டி, மேட்டு நிலத்திற்குக் கொண்டு வந்து, நெல்லைத் தனியே பிரித்தெடுக்கும் இடம் 'களம்' எனப்படுகிறது. மருத உழவர்கள் நெற்கதிர்களை அறுத்து வந்து போராகக் களத்தில் குவித்து வைத்துள்ளதையும், பிறகு கடாக்களை விட்டுப் போரடித்ததையும்,

"……. போரின் முழுமுதல் தொலைச்சி

பகடுஊர்பு இழிந்த பின்றை……"8(பெரும்பாண்.237-238)

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடல்வரிகள் வழி அறியலாம், இதையே பழம்பாடல் ஒன்று 'யானைக்கட்டி போரடித்த காலம் போச்சு, களம் காய்ஞ்சு போச்சு, இப்போ ட்ராக்டர் வந்து மொத்தமும் போச்சு' என்று வாய் வழக்காற்றியல் பாடல் மூலம் அறியமுடிகிறது. போரடித்தும் உதிராத நெல்மணிகளை உதிர்ப்பதற்காக, மறுநாள் மீண்டும் போரடிப்பர். இதற்குச் சூடடித்தல் என்று பெயர். நெல்லரிந்து, போரடித்து, நெல்லை வைக்கோலினின்றும் உழவர்கள் பிரித்தெடுப்பர். களத்தில் அடித்து, பின் போரடித்துக் காற்றில் தூற்றி நெல்லைக் குவிப்பதை தூய்மை செய்தல் என்பர்.

**அரணின் முற்றம், களமர் :-**

பழங்காலத்தில் விளைந்த வரகும், தினையும் குதிர்களில் சேமிக்கப்பட்டன. சேமிக்கப்பட்ட அவை அனைவருக்கும் பொதுவாக இருந்தன. அதன் அடையாளமாக அக்குதிர்கள் பொது இடமாகிய அரணின் முற்றத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அவை யானைக் கூட்டம் போல காட்சியளினத்தன என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. நெல் விளைவிக்கப்பட்டு அந்நெல் நெற் கூடுகளில் சேமிக்கப்பட்டது. அக்கூடுகள் வளமனைகளில் தான் அமைக்கப்பட்டிருந்தன. ஏணிக்கு எட்டாத உயரமுடைய அக்கூடுகளில்'களமர்' தாம் விளைவித்த நெல்லைக் கொண்டு போய்ப் பெய்து சேமித்தனர். இதனை,

“ஏணி எய்தா நீணெடுமார்பில்
முகடு துமித் தடுக்கிய பழம்பல்லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லில்”9(பெரும்பாண்.245-247)

என்ற பெரும்பாணாற்றுப்படை வரிகள் எடுத்தியம்புகின்றன.

**முடிவுரை :-**

சங்ககால மக்களின் வாழ்க்கையில் வேளாண்மை ஐந்து நிலங்களிலும் நடந்துள்ளது என்பதை அறியலாம். ஆனால், மருத நில வேளாண்மையே செல்வ செழிப்போடும், நாகரிகம் செய்யும் தொழிலாகவும் இருந்துள்ளது. நில அமைப்போடு, நீர் மேலாண்மையும், வேளாண் தொழில் நுட்பங்களும் மருத நிலத்தில் வளர்ந்தன. உணவு தேவைக்காக வேளாண்மை செய்துள்ளனர் என்றாலும் இவர்களின் வாழ்க்கையில் கலைகளும், நாகரிகமும் மேன்மைப்பெற்றன. உணவு உற்பத்தியின் நிலமாக மருதம் அறியப்படுகிறது. இதுகாறும் கண்ட செய்திகளைத் தொகுத்து நோக்குமிடத்து தமிழர்களின் மரபுசார் உழவுத் தொழிலை மருத நில மக்களே கண்டுபிடித்தனர் என்றும், அவர்கள் வாழ்வியலில் பண்பாட்டு விழுமியங்களாக வேளாண்மை சார்ந்த தொழில்களும், கருவிகளும் அவர்களின் அடையாளமாக விளங்கிட முடிகிறது. பழந்தமிழரின் உழவியல் சிந்தனைகள் இன்றைய அறிவியல் சிந்தனைக்குப் படிக்கற்களாக இருந்துள்ளமை விளங்குகிறது. மேலும், உழவர்கள் இயற்கையோடு இயைந்த உழவுத் தொழிலையே செய்து வந்தனர் என்பது புலனாகிறது.

**சான்றெண் விளக்கம்:-**

1 .http://thoguppugal.wordpress.com.

2. இந்திய வேளாண்மை, பக் 134.

3. இந்திய வேளாண்மை, பக் 136.

4. இந்திய வேளாண்மை, பக் 138.

துணை நின்ற நூல்கள்:-


1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.2011
2. சங்க இலக்கியங்கள், எட்டுத்தொகை, மற்றும் பத்துப்பாட்டு நியுசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. 2004
3. வே. தில்லைநாயகம், இந்திய வேளாண்மை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.1988.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Nallamuthu R., (2021) Cultural identities of the people of Marudhanilam from their life residuer, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:83-87. Cauvery College For Women, Trichy.

**முனைவர் சு.சத்தியா**
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்.

# புறநானூற்றில் தமிழரின் அடையாளங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

**கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு**

**முன்தோன்றிய மூத்த குடியாகத்** - திகழும் தமிழர் மொழியாலும் பண்பாட்டாலும் உலகுக்கே அடையாளமாய்த் தொன்றுதொட்டு வாழ்ந்து வருபவர்கள் என்றால் மிகையாகா!இதனை சங்க காலம் முதல் இக்காலம் வரை பல்வேறு இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.அவ்விலக்கியங்களுள் புறநானூறு தமிழர்களின் அடையாளக் கருவூலமாகும்.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்** என்ற சமய சார்பற்ற பொதுவுடைமைச் சிந்தனையாளர்கள் தமிழர்கள் என்பதை அடையாளப்படுத்தும் விதமாக ஐ.நா.சபையில் மேற்கண்ட வாசகம் இடம்பெற்றுள்ளதே இதற்கு சான்றாகும். ஒரு மனிதனை அடையாளப்படுத்துவது அவனது மொழியும் பண்புமாகும். அவ்வகையில் சமயசார்பற்ற பொதுவுடைமை விருந்தோம்பல் ஈகை போரும் அறமும் இல்வாழ்க்கை நெறி, கல்வி, தொழில், மகளிரின் வீரம், உயரிய நட்பு, என்று பல்வேறு வாழ்வியல் சிந்தனைகளைத் தங்கள் வாழ்க்கையாக்கிய நம் முன்னோர்களின் அடையாளப்பதிவினைப் புறநானூற்று வழி வெளிக்கொணர்வதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

எட்டுத்தொகை நூல்களுள் புறம் புறப்பாட்டு என அழைக்கப்பெறும் புறநானூறு மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிவகுக்கும் வரலாற்றுப் பெட்டகமாகும்.சமயசார்பற்ற பொதுவுடைமை சிந்தனையைத் தங்கள் வாழ்வியல் அறமாக்கி வாழ்ந்துள்ள நம் பழந்தமிழரின் அடையாளங்களைப் புலப்படுத்துவதாக இக்கட்டுரை அமைவதோடு இன்றைய மக்களின் வாழ்வாதாரங்களும் பல்வேறு அகழ்வாராய்ச்சிகளும் இதனை அடையாளப்படுத்தும் பாங்கினையும் முன் வைக்கிறது.

**சமயசார்பற்ற பொதுவுடைமை**

இவ்வுலகில் உள்ள அனைத்து ஊரும் எமக்கு சொந்தமான ஊரே எல்லாரும் எம் சுற்றத்தார் கேடும் ஆக்கமும் பிறர்தர வாரா நோதலும் அது தீர்தலும் பிறரால் வருவதன்று.துன்பமும் இன்பமும் தம்மாலே விளைவதாகும் என்ற பொதுவுடைமையுடையவர்கள் தமிழர்கள் என்பதற்கு

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

**தீதும் நன்றும் பிறர் தர வாரா**

**நோதலும் தணிதலும் அவற்றோரன்ன (புறம் 192)**

எனும் பாடலே[1] சான்றாகின்றது.

**ஈகை**

மனிதனாகப் பிறந்தவர் எவராயினும் தம்மிடம் பொருள் இருக்கையில் தன்னை நாடி வருபவருக்கு உதவுவதே மேலான அறமாகும்.செல்வத்தின் பயன் ஈதலே என்பதை,

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**

**பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே**

**செல்வத்துப் பயன் ஈதல் (புறம் 189)**

இவ்வாறு உண்பது உடுப்பதுமாகிய செயல் இரண்டிலும் அரசன் முதல் ஆண்டிவரை அனைவரும் ஒன்றேயாதலால் பெற்ற செல்வத்தால் செய்ய வேண்டுவது ஈதலறமே இதனை மானிடர்கள் அறிந்து அறம் செய்ய வேண்டும் என்பதை இச்சமூகத்திற்கு அடையாளப்படுத்தியவர்கள் தமிழர்களே[2] என்றால் மிகையாகா!

**தொழில்**

பழந்தமிழர்கள் மண்ணால் செய்த பானைகளையே பயன்படுத்தியுள்ளனர்.உணவுக்கு மட்டுமின்றி இறந்த உடல்களைப் புதைப்பதற்கும் தாழிகளைப் பயன்படுத்தியதை,

**வியன் மலர் அகன் பொழில் ஈமத் தாழி (புறம்256)**

என்ற பாடல் உரைப்பதோடு இன்று ஆதிச்சநல்லூர் கீழடி அகழாய்வுகளில் மண்ணாலான பானைகள் முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டதன் வழி நம் தமிழர்களின் அடையாளங்களை[3] அறிந்துகொள்ள முடிகின்றது.

**போரும் அறமும்**

பசு முதலாகிய பலரையும் காத்தல் அரசர்கள் தங்கள் கடமையாகக் கொண்டு வாழ்ந்ததையும்; போர் முறைகளிலும் அறத்தையே கையாண்டுள்ளனர் என்பதற்கும் கீழ்கண்ட பாடலே[4] சான்றாகும்.

**ஆவும் ஆன் இயற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித் (புறம் 9)**

**மனிதநேயம்**

மகாபாரதப்போர் நடைபெற்றபோது இரு தரப்பினருக்கும் பெருஞ்சோறு அள்ளி வழங்கிய மனிதநேயப் பண்பு பெறுஞ்சோற்று உதியஞ் சேரலாதனுக்கு இருந்ததை>

**அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ**

**நிலம் தலைக்கொண்ட பொலம் பூந்தும்பை**

**ஈரைம்பதின்மரும் பொருது களத்து ஒழிய**

**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய் (புறம் 2)**

என்ற பாடல்[5] மெய்ப்பிக்கின்றது.மேலும்,

**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (புறம் 18)**

எனும் அடி பசிப்பிணிப் போக்கும் அறவாழ்க்கை முறையை இவ்வுலகுக்கு அடையாளப்படுத்துகிறது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் பண்பை உலகுக்கே பறைசாற்றியவர்கள் தமிழர்களே என்பதற்கு கீழ்க்கண்ட பாடல் சான்றாகின்றது.

**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**

**இரவல் மாக்கள் உணக்கெனத் தீர்ந்தென**

**குறித்து மாறு எதிர்ப்பை பெறாஅமையின்**

**குரல்உனங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து (புறம் 333)**

இப்பாடல் வீரனின் மனைவி ஒருத்தி தன்வசம் இருந்த உணவுக்கான தானியங்கள் நாள்தோறும் இரவலர்களுக்கு உணவிட்டு தீர்நத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையையும் குற்றித் தம்மை நாடி வந்தாருக்கு உணவளித்தாள்[6] என்பது அக்கால மக்களிடையே விருந்தோம்பல் பண்பு அறமாகப் போற்றப்படுவதை உணருவதோடு இதன் அடையாளம்தான் பெரியபுராணத்தில் இளையான்குடி மாறனாரும் அவரது மனைவியும் விதைநெல்லை வாரிவந்து குற்றி விருந்திட்ட நிகழ்வு[7] இதனை அடியொற்றியதாக அமைகிறது.

**சமூக உறவின் அடையாளம்**

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**

**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**

**தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே**

**ஒளிருவாள் அருசமம் முருக்கி**

**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் 312)**

இப்பாடல் ஒருவர் பெறும் உதவிகளையும் அவர் சமுதாயத்திற்குப் பயன்பட வாழ்தலின் இன்றியமையாமையையும் விளக்குவதோடு அதனை அவரின் கடமையாகவும் கொள்ள வேண்டும்[8] என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

**பெண்ணின் வீரமும் நாட்டுப் பற்றும்**

புறநானூறு பல்வேறு போர்ச் செய்திகளையும் வாழ்வியல் நெறிகளையும் கூறுவதோடு அக்காலப் பெண்களின் வீரத்தையும் விவேகத்தையும் விளக்கியுரைக்கிறது.சான்றாக,

**சிற்றில் நல் தூண் பற்றி நின் மகன்**

**யாண்டு உளன் ஆயினும் அறியேன் ஓரும்**

**புலி சேர்ந்து போகிய கல் அளை போல**

**ஈன்ற வயிறோ இதுவே**

**தோன்றுவதன் மாதோ போரக்களத்தானே (புறம் 86)**

எனும் பாடல் ஒரு தாய் தன் மகனைப் பெற்ற வயிறு புலி இருந்து பின் பெயர்ந்து சென்ற கற்குகை இதுவேயாகும்[9]; என்பது அப்பெண்ணின் வீரத்தையும் அவளது மகனின் வீரத்தையும் புலப்படுத்துவதாக அமைகிறது. முற்றொரு பாடல் ஒரு மகனை பெற்ற தாயிடம் உன் மகன் போர்களத்தில் புறப் புண்பட்டு வீழ்ந்தான் என்ற சொல் கேட்டு அவன் போரில் அஞ்சி இறந்தான் என்பது உண்மையாயின் அவன் பாலுண்ட என் மார்பகத்தை அறுத்தெறிவேன் என்று வஞ்சினம் கூறி வாளொடு சென்றவள் இரத்தம் படிந்த போர்க்களம் முழுவதையும் தேடினாள்.வேறு வேறாகச் சிதைந்து தன் மகன் உடல் கிடந்த நிலை கண்டு அவனைப் பெற்ற நாளில் அடைந்த மகிழ்ச்சியினும் பேருவகை கொண்டாள் என்று கூறுகிறது. இதனைக் கீழ்வரும் பாடல்; மெய்பிக்கின்றது.

**நரம்பு எழுந்து உலரிய நிரம்பா மென் தோள்**

**முளரி மருங்கின் முதியோள் சிறுவன்**

**படை அழிந்து மாறினன் என்று பலர் கூற**

**மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என்**

**முலை அறுத்திடுவென் யான் எனச் சினைஇ**

**கொண்ட வாளொடு படு பிணம் பெயரா**

**செங்களம் துழவுவோள் சிதைந்து வேறு ஆகிய**

**படு மகன் கிடக்கை காணூஉ**

**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே (புறம் 278)**

மேலும் அக்காலப் பெண்களின் வீரத்தையும் நாட்டுப் பற்றையும் அறியமுடிகிறது.[10] இவ்வாறு புறநானூறு அறம்,பொருள்,வீடுபேறு என்ற மூன்று நிலைகளில் நம் தமிழரின் அடையாளங்களை உலகுக்கே பறைசாற்றுகின்றது.

**தொகுப்புரை**

எட்டுத்தொகை நூல்களில் புறநானூறு தமிழரின் புறவாழ்வியலையும் அதில் காணலாகும் அறநெறியையும் எடுத்துரைக்கிறது.

இவ்வுலகில் மனிதனாகப் பிறந்த அனைவரும் சமம் என்ற பொதுவுடைமையை உலகுக்கே அடையாளப்படுத்திய வரலாற்றுப் பெட்டகமாகப் புறநானூறு திகழ்கிறது.

பசிப்பிணியைப் போக்க வேண்டும் என்ற உயரிய அறத்துடன் எழுந்த மணிமேகலைக்கு முன்னோடியாகத் தோன்றிய நூல் புறநானூறு என்றால் மிகையாகாது!

இவ்வாறு தமிழரின் வாழ்வியலுக்குரிய பல்வேறு அடையாளங்களைப் புறநானூற்றின் வழி அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. புறநானூறு மூலமும் உரையும் -1,பக்.464-465
2. புறநானூறு மூலமும் உரையும் -1,பக்.457-458
3. புறநானூறு மூலமும் உரையும் -2,ப. 587
4. புறநானூறு மூலமும் உரையும் -1,பக்.25-26
5. புறநானூறு மூலமும் உரையும் -1,பக்.4-5
6. புறநானூறு மூலமும் உரையும் -2,பக்.725-726
7. தமிழர் நாகரிகமும் பண்பாடும்,பக்.21-22
8. புறநானூறு மூலமும் உரையும் -2,பக்.683-684
9. புறநானூறு மூலமும் உரையும் -1,பக்.214-215
10. புறநானூறு மூலமும் உரையும் -2,பக்.622-623

**துணை நூல்கள்**


1. முனைவர் அ.மா.பரிமணம் புறநானூறு மூலமும் உரையும் -1,2,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.
2. டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி,தமிழர் நாகரிகமும் பண்பாடும்,யாழ் வெளியீடு,சென்னை.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Sathya S., (2021) Identities of Tamils in Puranaanooru, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:88-92. Cauvery College For Women, Trichy.

**முனைவர் தே.அனித்தா மேரி**
உதவிப்பேராசிரியர்
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 2

# சங்க இலக்கியத்தில் போர் மரபுகள்

**ஆய்வுச் சுருக்கம்**

போர்க்களம் என்பது மன்னனின் பேராண்மையை மட்டும் காட்டாமல் மறவர்களின் வீரத்தையும், உயிர்த் தியாகத்தையும், பெருமிதத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. அதனாலேயே மக்களின் மனம் உணர்ந்து செய்யும் போர் சிறப்பிற்குரியதாக கருதப்பட்டது. எனவே சங்கப் போர்களில் தமிழர் பின்பற்றிய மரபுகளை ஆராயும் விதமாக இந்த ஆய்வு அமைகிறது.

**முன்னுரை**

சங்ககாலப் போர்கள் அறநெறிகளுடன் நடந்தன. போரினை முறையாக அறிவித்து மக்களுக்கு இடையூறு நேரா வண்ணம் பார்த்துக்கொண்டனர். இடம், பொருள், காலம் குறித்துப் போரினை முடிவு செய்தனர். பொருட்சேதத்தையும் உயிரிழப்பையும் தவிர்க்க குறிப்பிட்ட மரபுகளை வகுத்தனர்.

**தூது**

போர் செய்வதற்கு முன் போர் குறித்த செய்திகளைப் பகை மன்னனுக்கு அனுப்புதல் புறத்தூது என்பர். புலவர்கள் தூதாகச் சென்று போரைத் தடுத்தமையை,

"இவ்வே பீலி அணிந்து மாலை சூட்டிக்

கண் திரள் நோன் காழ் திருத்தி நெய் அணிந்து

.... ..... ..... .... ..... ......................... .

அண்ணலஎம் கோமான் வைந்நுதி வேலே" (புறம். 95)

என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன.

**ஒற்று**

பகை வேந்தரின் நாட்டு நடப்புகளை அறிந்து கொள்ளவும் உள்நாட்டுச் சூழ்நிலைகளைத் தெரிந்து கொள்ளவும் ஒற்றர் அக்காலத்தில் வேந்தரால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

**வீரர்கள்**

நாட்டில் உள்ள வீரர்களைப் போருக்கு வருமாறு தண்ணுமை என்னும் இசைக்கருவியை முழக்கி போருக்கான அழைப்பை மன்னன் விடுப்பான.; இதனை

"போர்ப்புறு தண்ணுமை ஆர்ப்பு எழுந்து நுவல"(பதி.ப.84:15)

என்ற பாடல் வழியாக போருக்கு வருக என்று அழைத்ததைக் காண முடிகிறது.

**போர் அறிவிப்பு**

பண்டைய தமிழ் வேந்தர்கள் போர் தொடங்குவதற்கு முன்னால் போர்ச் செய்தியினை முரசறைந்து தெரிவிப்பர். இக்கருத்தை

"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்

பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்

எனப் புறநானூறு காட்டுகிறது.

**மாலை**

போருக்கெழும் வேந்தரும் வீரரும் அவரவர்க்குரிய மாலையினைச் சூடுதல் மரபு.

"இரும்பனம் போந்தை தோடு கடுஞ்சினை

அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்

(பொரு.படை.143 -148)

என்ற பாடல் மூவேந்தர்களும் வீரர்களும் அவர்களது மாலையைச் சூடிப் போர் தொடுக்கச் சென்றதை சுட்டுகிறது.

**காவல் மரம்**

பகைவனின் காவல் மரத்தை வெட்டுவது போர் மரபு என்றால் அம்மரத்தைக் காப்பது மானமுடைய வேந்தனின் கடமை. வேங்கை, புன்னை, வேம்பு முதலிய மரங்களைத் தமிழ் வேந்தர்கள் வெற்றியைக் குறிக்கும் மரங்களாக வைத்துப் போற்றினர்.

"கடிமரம் தடிதல் ஓம்பு – நின்

நெடு நல் யானைக்குக் கந்து ஆற்றாவே" (புறம்.57: 10-11)

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

**இசைக்கருவிகள்**

போரின் போது போரினை துவங்குவதற்கும் நிறைவு செய்வதற்கும் வெற்றியின் போதும் இசைக்கருவிகளை இசைப்பர். தடாரிப்பறை, போர்ப்பறை, முரசு போன்றவை போர்க்களத்தில் முழங்கும்.

"வெரூஉப் பறைநுவலும் பரூஉப் பெருந்தடக்கை" (பொரு.படை - 171)

என்று பொருநராற்றுப்படை தெரிவிக்கிறது.

**வீரவுரைகள்**

போருக்குச் செல்லும்முன் வேந்தரும், வீரரும் வஞ்சினம் உரைத்தல் மரபு. வேந்;தர் உரைக்கும் வஞ்சினம் படைவீரர்களை ஊக்கப்படுத்தி சிறப்பாகப் போரிடச் செய்;யும்.

"ஒன்றுமொழிக் கோசர்"(அகம். 196:10)

என்ற வரிகளால் அறியலாம்.

**உயிர் நீத்தல்**

போர்க்களத்தில் போர்செய்து பெறும் புண் விழுப்புண். முதுகில் பெறும் புண் புறப்புண் எனப்பட்டது. பெருஞ்சேரலாதன் என்ற மன்னனும் சோழன் கரிகால் பெருவளத்தானும் வெண்ணிப் பறந்தலை என்ற களத்தில் போரிட்டனர். கரிகாலன் எறிந்த வேல் சேரலாதனின் நெஞ்சைத் துளைத்து முனை முதுகின் வழி ஊடுருவிவிட்டது. அது மார்பின் வழியாகப் பெற்ற புண்தான். ஆனாலும் முதுகிலும் புண் ஆகிவிட்டதே? இது இழிவு என்று கருதியவன் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டான்.

"திண்தேர் இரவலர்க்கு ஈத்த தண்தார்

அண்டிரன் வரூஉம் என்ன ஒண்டொடி

........ ....... ....... ....... ....... ......

ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னானே" (புறம் - 241)

என்ற புறநானூற்றுப் பாடல் விவரிக்கின்றது.

**குரவைக்கூத்து**

போர் நிகழும் காலத்திலும் ஏதேனும் தீங்கு நிகழுமோ என்ற அச்சம் அலைக்கழிக்கும் வேளையிலும் பொழுது போக்கிற்காகவும் குரவைக் கூத்து ஆடப்பட்டு வந்தது. குரவைக் கூத்தினை 'மலைநடனம்' என்று அபிதான சிந்தாமணி குறிக்கின்றது. போர்க்காலத்தில் ஆடப்படும் குரவைக் கூத்தில் கோபமும், வீரமும் மிக்குத் தோன்றும். இதனைச் சினமாந்தர் வெறிக்குரவை என புறநானூறு குறிப்பிடுகிறது.

"மிசை அலங்கு உளைய பனைப் போழ் செரீஇ

சின மாந்தர் வெறிக் குரவை"(புறம் 22:21-22)

என்றும்

"தண் குரவைச் சீர் தூங்குந்து

தூவற் கலித்த தேம்பாய் புன்னை" (புறம் 24: 6-7)

என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

**முடிவுரை**

சங்ககாலப் போர்களானது உரிமை, அதிகாரம், புகழ், வேட்கை, குடி, மான உணர்வு, செல்வ மேம்பாடு, எல்லை விரிவாக்கம் போன்ற காரணங்களுக்காக நடைபெற்றுள்ளன. சில போர்கள் ஒரிரு நாட்களாகவும், சில மாதங்களாகவும், சில ஆண்டுகளாகவும் நடந்து பேரழிவை ஏற்படுத்தின. அப்பேரழிவினை தடுப்பதற்கு போர் நெறிகளைச் சான்றோர்கள் உருவாக்கினர். அந்நெறியானது மனித அழிவுகளையும், பொருள் அழிவுகளையும் குறைத்தன என்பனவற்றை எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தெளிவுபடுத்துகின்றன.

**சான்றெண்விளக்கம்**

1. 1.புறநானூறு 95:1-5
2. 2.பதிற்றுப்பத்து 84:15
3. 3.பொருநராற்றுப்படை 143-148
4. புறநானூறு 57 :10-11
5. பொருநராற்றுப்படை -171
6. அகநானூறு 196:10
7. புறநானூறு – 241
8. புறநானூறு 22:21-22
9. புறநானூறு 24: 6-7

**துணைநூற்ப்பட்டியல்**

1.சுப்பிரமணியன் .ச.வே — எட்டுத்தொகை
முலமும் தெளிவுரையும்
தொகுதி-2
(பதிற்றுப்பத்து,பரிபாடல்,கலித்தொகை)
மணிவாசகர் பதிப்பகம்
31,சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108

2.சுப்பிரமணியன் .ச.வே — எட்டுத்தொகை
முலமும் தெளிவுரையும்

தொகுதி-1
(அகநானூறு,புறநானூறு)
மணிவாசகர் பதிப்பகம்
31,சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108

3.அப்பத்துரை .கா தென்னாட்டுப் போர்க்களங்கள்
மெய்யப்பன் பதிப்பகம்
53,புதுத்தெரு,சிதம்பரம்
முதல் பதிப்பு-2010

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Anitta Mary D., (2021) War tradtions in Sangam Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:93-96. Cauvery College For Women, Trichy.

**சி.பானுமதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம்,
அரசு கலைக் கல்லூரி
பரமக்குடி - 623701

# சங்கப் புறப் பாடல்கள் சுட்டும் வீர மகளிர்

**ஆய்வுச் சுருக்கம்:**

தொன்னெடுங் காலந்தொட்டு இடையறாது தொடர்ந்து வளர்ந்து வாழ்ந்து வரும் தமிழ் இலக்கியம் , இயற்கை, பெண்மை ஆகியவற்றைச் சிறப்பித்து நிற்பதனைக் காணலாம். தொடக்க காலம் முதலே பெண்மையைப் போற்றிச் சிறப்பித்தார்கள். சங்க காலப் பெண்களின் வீரமும் , மனவலிமையும் சிறந்து விளங்கின என்பதனை பெண்பாற் புலவர்களின் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

**முன்னுரை:**

உலகப் படைப்புகளில் உயர்ந்த படைப்பு பெண்ணே.பெண்களின் பெருமையை பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிந்து கொள்ளலாம்.புராண காலத்து காரைக்கால் அம்மையார் போன்றோரும் சங்ககாலம் தழுவிய சிலம்பு. சீவக சிந்தாமணி ஆகியவற்றில் உள்ள பெண் பாத்திரங்களின் வரலாறுகள் பெண்ணிற்குப் பெருமைத்தேடி தந்துள்ளது. புறநானூற்றுப் பாடல்கள் பாடிய பெண்பாற் புலவர்கள் வாயிலாக சங்க காலப் பெண்களின் இயல்பும், வீரமும், கடமையும் பற்றி எடுத்துரைக்கப் பட்டுள்ளது

**புறப்பாடல்கள் பாடிய பெண்பாற் புலவர்கள்.**

1. ஔவையார்
2. உள்ளூர் நன்முல்லையார்
3. ஒக்கூர் மாசாத்தியார்
4. காக்கைப்பாடினி நச்செள்ளையார்
5. காவற்பெண்டு
6. காமக்கண்ணி நப்பசலையார்
7. குறமகள் இளவெயினியார்
8. தாயங்கண்ணியார்
9. நக்கண்ணையார்
10. பாரி மகளிர்
11. பொன்முடியார்
12. மாற்பத்தி
13. பூங்கறுத்திரையார்
14. பெருங்கோப்பெண்டு
15. முடத்தமாக்கண்ணியார்

**ஒக்கூர் மாசாத்தியார்:**

ஒக்கூர்மாசாத்தியார் பாடிய புறநானுற்றுப் பாடல் மறக்குடியில் பிறந்த மகள் ஒருத்தியின் துணிவையும் வீரத்தையும் விளக்குவதாக அமைந்துள்ளது. முதல் நாள் நடந்த பேரில் இவளுடைய தந்தை யானையைக் கொன்று தானும் இறந்தான். நேற்று நடந்த போரில் இவள் கணவன் பசுக் கூட்டங்களை பகைவர் கவரா வண்ணம் தடுத்து நிறுத்தி ஆங்குப்பட்டான். இன்றும் போர்ப்பறை கேட்டு தன் குடிக்குத் தன் ஒரு மகனையல்லாது வேறு இல்லாத அவனை அழைத்து வேலைக் கையிலே தந்தாள்,வெண்மையான ஆடையை அவனுக்கு உடுத்தினாள்.பரந்து கிடந்த குடுமித் தலைக்கு எண்ணெய் தடவினாள்.போர்க்களம் நோக்கிப் போய் வா என்று கூறி அனுப்பினாள் என்பதனை,

"கெடுக சிந்தை: கடுக இவள் துணி வே
மூதில் மகளிராதல் தகுமே
மேல் நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து,களத்து ஒழிந்தனனே:
..........................................................................................
..........................................................................................
ஒரு முகம் நோக்கிச் செல்க எனவிடுமே."

( புறம் - பா.எண் : 279 , ப.எண் - 624 )

மாசாத்தியாரின் பாடல் வழி சங்ககாலப் பெண்ணின் வீரமும் மனவலிமையையும் அறியமுடிகிறது.

**காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்:**

முதுமையால் நரம்பு மேலேழுந்து வற்றி மெலிந்த தோள்களை உடைய முதியவள் நின் மகன் பகைவர் படைக்கு அஞ்சிப் புறங்கொடுத்து மாண்டான் என்று பலரும் வந்து அவளிடம் கூறினர்.நெருங்கிச் செய்யும் போரில் அஞ்சி இறந்தான் என்பது உண்மையாயின் அவன் பாலூண்ட என் மார்பகத்தை அறுத்தெறிவேன் என்று சினங்கொண்டு வாளைக் கையிலேந்தி போர்க்களம் புகுந்தாள். வீழ்ந்து கிடக்கும் வீரர்களின் உயிரற்ற உடல்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டே தன் மகனை செங்குருதி படிந்த போர்க்களம் முழுவதையும் தேடினாள்.வேறு வேறாகச் சிதைந்து தன் மகன் உடல் கிடந்த நிலை கண்டு அவனை பெற்ற நாளில் அவள் கொண்ட மகிழ்ச்சியினும் பேருவகைக் கொண்டாள் என்பதனை,

"நரம்பு எழுந்து உலறிய நிரம்ப மென்தோள்
முளரி மருங்கின், முதியோள் சிறுவன்
படை அழிந்து,மாறினேன் என்று பலர் கூற
மாண்டு அமர்ந்து உடைந்தனன் ஆயின் உண்ட என்
முலை அறுத்திடுவேன், யான் எனச்சின
..........................................................................................
........... ..........................................................................................."

( புறம் - பா.எண் : 278 ப.எண் - 622 )

சங்க காலத்தில் வயது முதிர்ந்த பெண் கூட வீரம் மிகுந்து காணப்பட்டாள் என்பதனை காக்கைப்பாடினியார் பாடல் மூலம் அறியமுடிகிறது.

போரிடும் காலத்தில் பெண்களும் சிலர் வாளினை ஏந்தி புண்பட்டு கிடக்கும் மறவர்களின் புண்களுக்கு மருந்திட்ட செய்தியை காண முடிகிறது.

**பாரி மகளிர்:**

பிரான்மலை என அழைக்கப்படும் பறம்புமலை சூழ்ந்த 300 ஊர்களைக் கண்ட வள நாட்டின் மன்னனாக இருந்த பாரி மன்னன் மகளிர் இருவர். பாரி மன்னன் கொல்லப்பட்டப் பின்பு மகளிர் இருவரும் தன்னுடைய துன்பநிலையினை எதிர்த்து வாழ்ந்ததனையும். முன்பிருந்த மகிழ்ச்சியையும் ,

"அன்றைத் திங்கள் அவ் வெண் நிலவின்
எந்தையும் உடையேம்: எம் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவின்

வென்று எறி முரசின் வேந்தர் எம்

குன்றும் கொண்டார் : யாம் எந்தையும் இலமே! "

(புறம்-பா.எண்: 112 ப.எண் -263 )

பாரி மகளிர் தன் தந்தையுடன் இருந்த மகிழ்ச்சி யையும், அவர் இல்லாத துன்பத்தையும் பாடல் வழி அறிய முடிகிறது.

**காவற்பெண்டு:**

சங்ககால மகளிர் போருக்கு அஞ்சாத வீர இயல்பினை,சிறிய வீட்டில் உள்ள நல்ல தூணைப் பற்றிய வண்ணம் உன் மகன் எங்கு உள்ளானோ? என வினவுகிறான். என் மகன் எங்கிருந்தாலும் நானறியேன். புலி இருந்து பின் பெயர்ந்து சென்ற கற்குகை போல அவனைப் பெற்ற வயிறு இதுவேயாகும்.அவன் போர் நிகழும் களத்தில் தோன்றுமியல்புடையன் அவனை காண்பதற்கு அங்குச் செல் என அந்த தாய் கூறுகிறாள் என்பதனை,

"சிற்றில் நல் தூண் பற்றி, நின் மகன்

யாண்டு உளனோ? என வினவுதி: என்மகன்

யாண்டு உளன் ஆயினும் அறியேன்: ஓரும்

புலி சேர்ந்து போகிய கல் அறை போல,

ஈன்ற வயிறுஇதுவே

தோன்றுவன்மாதோ, போர்க்களத்தானே.

(புறம்-பா.எண்: 86 ப.எண்- 214 )

காவாற்பெண்டின் பாடல் வரிகளின் மூலம் போருக்கு அஞ்சாத வீர இயல்பினை அறிந்துகொள்ள முடிகிறது.

**முடிவுரை:**

சங்ககாலப் பெண்கள் வீரத்திலும்,மனவலிமையிலும் ஆணுக்கு நிகராகச் சிறந்து விளங்கினார்கள் என்பதனை பெண்பாற் புலவர்களின் பாடல்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

**பார்வை நூல்கள்:**


1. புறநானூறு ( மூலமும் உரையும் ). - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை - 600 098

2. சங்க கால மகளிர் - பாரி நிலையம் சென்னை - 600 108



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Manumathi C., (2021) Instances of Heroic women portrayed in Ancient objective Poetry, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:97-99. Cauvery College For Women, Trichy.

**மு.முத்துலெட்சுமி**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி
சென்னை
9940023685

# விருந்தோம்பலும் தமிழரும்

**ஆய்வுச்சுருக்கம்**

விருந்தோம்பல், வீரம் இரண்டையும் கண் எனக் கொண்டு வாழ்ந்தவர்கள் நம் தமிழர்கள். அவற்றுள் விருந்தோம்பல் பெறும் சிறப்பிடம் குறித்து இங்கு விளக்கப்பட்டுள்ளது. இல்லறம் நடத்தி பொருள் சேர்ப்பது விருந்தினர்க்கு என்று கருதப்பட்டது. விருந்தினர் மனம் நோகாது நடப்பதே உயர்ந்த அறம் என்கிறது குறள். கணவரோடு ஊடல் கொள்ளும் மனைவிக்கு ஊடல் தீர்க்கும் மருந்தாக அமைவது விருந்தினர் வருகை என்கிறது சிலப்பதிகாரம். பகல் பொழுது கடந்தும் இரவிலும் முகமலர்ச்சியோடு விருந்து படைக்கும் இல்லத்தரசி பற்றிக் குறிப்பிடுகிறது புறநானூறு. மேலும் பாணன் துயர் நீக்க தலைவன் வாளினைப் பணயமாக வைத்த செய்தியும் இந்நூல் வழி அறியமுடிகிறது. விருந்தோம்பலுடன் தமிழர் பின்னிப் பிணைந்திருந்த நிலையினை விளக்குவதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

பழங்காலத்தில் இல்லம் தேடி வரும் முன் பின் அறிமுகமில்லாதவர் விருந்தினர் எனப்பட்டனர். விருந்து என்பதற்கு புதுமை என்று பொருள் தருகிறது தொல்காப்பியம். அமிழ்தமே கிடைத்தாலும் விருந்தினருக்கு கொடுத்து உண்பதே தமிழர் பண்பாடாக போற்றப்பட்டது. குழந்தை பிறப்பு, பெயர் வைத்தல், காதுகுத்து, திருமண நிகழ்வு, வளைகாப்பு என எல்லாவற்றிலும் விருந்து வைத்தல் தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டை பறைசாற்றுகின்றது. பசியோடும், களைப்போடும் வருபவர்களுக்கு உணவளிப்பது உயர்ந்த புண்ணியமாகவே பார்க்கப்பட்டது. மேலும் முதியவர்கள், வறியவர்கள் போன்றோருக்கு உணவளித்தல் ஆகச் சிறந்த அறம் என்கிறது மணிமேகலை. இந்நூல் மட்டுமின்றி பிற இலக்கிய நூல்களிலும் விருந்தோம்பல் பற்றிய கருத்துக்கள் பொதிந்துள்ளன. அவற்றுள் திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு உணர்த்தும் விருந்தோம்பல் பண்புகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**விருந்தோம்பல் அறம்**

தமிழர்களின் தனித்துவமான அடையாளங்களில் முதன்மையானது விருந்தோம்பல். விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று இன்முகத்தோடு உணவிடுவது விருந்தோம்பலின் அடிப்படைப் பண்பு. தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் விருந்தோம்பலை முதன்மை அறமாக எடுத்தியம்புகின்றன அதனால் தான் ஔவையாரும் அறம் செய்ய விரும்பு என்கிறார். அறத்தின் மூலமாகவே நிலையான செல்வத்தையும் சிறப்பையும் அடைய முடியும் என்பது இலக்கியங்களின் வழி புலனாகிறது.

**திருக்குறளில் விருந்தோம்பல்**

வள்ளுவர் இல்லறத்தின் அடிப்படைப் பண்பு விருந்தோம்பல் என்கிறார். ஆணும் பெண்ணும் இணைந்து விருந்தோம்பலில் ஈடுபடுகின்றனர். இது இல்லறத்தின் கடமையாகப் பார்க்கப்பட்டது. பொருளீட்டி அதனைக் காத்து இல்லறம் நடத்துதல் விருந்தினரைப் பேணி அவர்களைப் பாதுகாப்பதற்காகத் தான் என்கிறார் வள்ளுவர்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம்  விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு"1

வந்த விருந்தினரைப் போற்றி இனிவரும் விருந்தினரை எதிர்பார்த்துக் காத்து இருக்கும் பண்பாளனை வானில் உள்ளோர் சிறப்பு விருந்தினராக ஏற்றுக்கொள்வர் என்கிறார் வள்ளுவர். இதனை பின்வரும் குறள் வழி வள்ளுவர் உணர்த்துகிறார்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு"2

சாகா மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் விருந்தினராக வந்தவரை வெளியே விட்டு தான் மட்டும் உண்பதை பண்பாளர்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள்.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"3

எனும் குறள் வழி அறியலாம். விருந்தினருக்கு முதலில் உணவு படைத்து பின் உள்ள உணவை உண்டு வாழும் பண்பாளன் நிலத்தில் விதை விதைக்க தேவையா? அவன் சிறந்த நிலை அடைவான் என்று விருந்தோம்பலின் சிறப்பை முன் வைக்கிறார் வள்ளுவர். விருந்தோம்பலில் உபசரிக்கும் பாங்கு முதன்மையானது. மலரினும் மென்மையானவர் விருந்தினர். அனிச்சம் மலர் மோந்து பார்த்த அளவில் வாடும். அதுபோல் விருந்தினரை நோக்கும் தன்மையில் மாறுபாடு ஏற்படின் அவர்கள் முகம் வாடும். இன்முக வரவேற்பு கூழாக இருந்தாலும் சிறப்பாக அமையும்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"4

சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல்

"உடன் உறவு மரீஇ ஒழுக்கொடு புணர்ந்த,

வடமீன் கற்பின், மனை உறை மகளிர்;

மாதர் வாள் முகத்து, மணித் தோட்டுக் குவளைப்

போது புறம் கொடுத்துப் போகிய செங்கடை

விருந்தினர் தீர்ந்திலது ஆயின் , யாவதும்

மருந்தும் தரும்கொல், இம்மாநில வரைப்பு? எனக் கையற்று நடுங்கும் நல்வினை நடுநாள்"5

கணவரோடு கலந்திருந்த அருந்ததி போன்ற சிறப்பினை உடைய மனைவியர் ஊடி சினந்தனர். அவ்வேளையில் விருந்தினரால் அவள் மேலும் ஊடல் பாராட்ட இயலாது வந்திருந்த விருந்தினரை உபசரித்தாள். அழகிய ஒளிபொருந்திய கண்களில் கோபத்தால் தோன்றிய கருஞ்சிவப்பு, விருந்தினரை கண்டதால் மறைந்துவிட்டது. அவளின் கோபம் நீங்காமல் போயிருந்தால் இந்த உலகில் அவள் கோபம் நீங்க வேறு ஒரு மருந்தை தர வேண்டி இருக்குமோ என கணவன்மார்கள் நடுங்கி நின்றதாக சிலப்பதிகாரம் கூறுகிறது. இதன் மூலம் விருந்தோம்பலின் சிறப்பு வெளிப்படுகிறது. மேலும் கொலைக்களக் காதையில்,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"6

என்ற பாடல் வரிகள் அறநெறி செல்வோர்க்கு உணவு ,உடை அளித்து அவர்களைப் பேணிப் பாதுகாத்தல், நல் தவவாழ்வு மேற்கொண்டவர்களை வரவேற்று உபசரித்தல், மிகச் சிறப்புடையதாகக் கருதப்படும் விருந்தினர்களுக்கு உணவளித்து

காத்தல் போன்ற விருந்தோம்பல் முறைகளை கோவலன் பிரிவினால் கண்ணகி செய்யாமலிருந்தாள் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### புறநானூற்றில் விருந்தோம்பல்

பகல் பொழுது கடந்து இரவுப்பொழுதில் தன் மனைவியுடன் வந்த முதியவரான பாணனை ஒரு இல்லத்தரசி மிகவும் இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பல் செய்வதாக புறநாநூறு கூறுகிறது .

பழம் ஜாடியில் செம்மண் நிலத்து ஊற்று நீர் உள்ளது. முற்றத்தில் தினைச் சோறும், சுட்ட முயல் இறைச்சியும் உள்ளது. அதனை தற்போது உண்ணுமாறும் தலைவன் வினை முடித்து திரும்பிய பின் நிறைய பரிசு பெறலாம் எனவும் வறுமையுற்ற பாணனிடம் கூறுவதாக பின்வரும் பாடல் வரிகள் அமைகின்றன. இவ்வரிகள் விருந்தோம்பலின் மேன்மையை பகர்கின்றது.

"முன்றில் இருந்த முதுவாய்ச் சாடி

யாம் கஃடுஉண்டெண, வறிது மாசின்று;

படலை முன்றிற் சிறுதினை உணங்கல்

புறவும் இதலும் அறவும் உண்கெனப்

பெய்தற்கு எல்லின்று பொழுதே; அதனால்,

முயல் சுட்ட வாயினும் தருவோம்; புகுந்தது

ஈங்குஇருந் தீமோ முதுவாய்ப் பாண!"7

தம்மை நாடி வந்தவரை உபசரிக்க வேண்டிய கடமை தலைவனுக்கு உள்ளதால் தன்னுடைய வாளினை பணயமாக வைத்துத் தினையைக் கடனாகப் பெற்று பாணனின் பசியைப் போக்கிய தலைவனின் விருந்தோம்பல் செயலை,

"நெருநனை வந்த விருந்திற்கு மற்றுத் தன்

இரும்புடைப் பழவாள் வைத்தனன் "8

என்ற வெண்ணாகனார் பாடல் வழி அறியலாம்.

### முடிவுரை

தம்மை நாடி வந்த புதியவர்களிடம் மென்மையான சொல் பேசி, அவர்கள் உள்ளம் கலந்து உறவாடியவர்கள் நம் முன்னோர்கள். விருந்தோம்பல் தமிழர்களுடன் ஒட்டிப் பிறந்த பண்பு என்று கூறினால் பொருந்தும். உணவு தேடி வந்தவர்களை உறவினர்களாக ஏற்றுக்கொண்டு உபசரித்தவர்கள் நம் தமிழர்கள். மாற்றாரின் பசியை உணர்ந்து அதை நீக்குவதை தங்கள் கடமையென பண்பாடெனக் கொண்டு வாழ்ந்தவர்கள். விருந்தோம்பலில் தமிழர்கள் தலை சிறந்தவர்கள் என்பதையும், தமிழ் இலக்கியங்களில் இச்சிறந்த பண்பினைக் காணலாம் என்பதையும் இக்கட்டுரை வழி அறியலாம்.

### அடிக்குறிப்புகள்

1. 1.திருக்குறள் தமிழ் மரபுரை, தேவநேயப்பாவாணர், ப-எண்- 96
2. மேலது, ப.எ- 98
3. மேலது ப-.எ-96
4. மேலது ப-.எ- 100
5. சிலப்பதிகாரம், புலியூர்க்கேசிகன் தெளிவுரை, ப.எ-82
6. சிலப்பதிகாரம், புலியூர்க்கேசிகன் தெளிவுரை, ப.எ-246
7. புறநானூறு,புலியூர்க்கேசிகன் தெளிவுரை ,ப.எ- 359
8. புறநானூறு,புலியூர்க்கேசிகன் தெளிவுரை ,ப.எ- 357

### துணைநூல் பட்டியல்

1. திருக்குறள் தமிழ் மரபுரை, தேவநேயப்பாவாணர், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், 40 பிஞ்சால சுப்பிரமணியம் தெரு ,உஸ்மான் ரோடு த.பை.எண்.1040,தியாகராய நகர், சென்னை 600017.
2. சிலப்பதிகாரம், புலியூர்க் கேசிகன் தெளிவுரை ,பாரி நிலையம், 164 பிராட்வே, சென்னை 600108
3. புறநானூறு , புலியூர்க் கேசிகன் தெளிவுரை ,பாரி நிலையம், 164 பிராட்வே, சென்னை 600108.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Muthulakshmi M., (2021) Hospitality and Tamilians, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:100-103. Cauvery College For Women, Trichy.

**முனைவர் தா.லதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனிதசிலுவைதன்னாட்சிக் கல்லூரி
திருச்சி– 2

# சங்க இலக்கியத்தில் நடுகல் வழிபாடு

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககாலத்தில் போரில் இறந்து போன வீரர்களைப் புதைக்கும் இடத்தில் நினைவிடமாக ஒரு கல் ஊன்றினர். அக்கல்லே 'நடுகல்' என்று அழைக்கப்பட்டது. விழுப்புண் பட்டு இறந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்த்வும் மரியாதை செய்யவும் வணங்கவும் அவ்விடம் பயன்பட்டது. இத்தகைய நடுகற்கள் பெருமதிப்பிற்குரியதாகக் கருதப்பட்டது. இறந்தவர்களை வழிபடும் மரபு பிற்காலத்தில் சிறு தெய்வ வழிபாட்டிற்கு முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறது. சங்க இலக்கிய நூல்களில் நடுகல் பற்றிய செய்திகள் பரவி இருக்கின்றன.

**முன்னுரை**

தமிழ் இலக்கியம் தோன்றுவதற்கு பன்னெடுங்காலம் முன்பேநடுகல் வழிபாடுதமிழகத்தில் இருந்துள்ளது. 'நடுகல்'என்பது இறந்தவர்களின் நினைவாகஎடுக்கப்படும் நினைவுக்கல் ஆகும். நினைவுக் கற்கள் எடுக்கும் வழக்கம் ஒருகுறிப்பிட்டபண்பாட்டினைச் சார்ந்தவர்களுக்குஉரியவழக்கம்; அல்ல. உலகின் பலபகுதிகளிலும் கற்காலம் முதற் கொண்டே இவ்வழக்கம் இருந்திருக்கிறது. இச்செய்திகளைதொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

தொல்காப்பியம் கூறும் நடுகல்லின் வகைகள்

தொல்காப்பியம் ஆறு நிலைகளைநடுகல் எடுக்கும் முறையாகக் கூறுகிறது.

**"காட்சிகால்கோள் நீர்ப்படைநடுகல்**

**சீர்த்தகுமரபில் பெரும்படைவாழ்த்தலென்று**

**இருமூன்றுமரபிற் கல்லொடு புணர"1**

1. காட்சி–தக்ககல்லைதேர்வுசெய்தல்
2. கால்கோள் - தேர்ந்தெடுத்தகல்லைக் கொண்டுவருதல்
3. நீர்ப்படை–கல்லைத் தூய நீராட்டுதல்
4. நடுகல் - கல்லைநடுதல்
5. பெரும்படை–நடுகல்லுக்குமிகுதியானபலியுணவுபடைத்தல்
6. வாழ்த்தல் - கல்லைவணங்குதல்,வாழ்த்தல்

சங்க இலக்கியத்தில் பெண்களுக்குநடுகல் நிறுவியதற்கானசான்றுகள் எதுவும் இல்லை.

நடுகல்லின் சிறப்பு

போரில் ஈடுபட்டு மரணமடைந்த வீரமறவனுக்கு நடுகல் நிறுத்தி சிறப்புச்செய்தனர். முகத்திலும் மார்பிலும் விழுப்புண்களை ஏற்று. வீரத்தோடு முன்னின்று போர்புரிந்து இறந்த வீரனுக்குஅவனுடைய பெயரும் பெருமையும் எழுதி நடுகற்களை நிறுவினர்.

**"நல்லமர்க் கடந்தநாணுடைமறவர்**

**பெயரும் பீடும் எழுதிஅதர்தொறம்ஷ**

**பீலி சூட்டியபிறங்குநிலை நடுகல்”**[2]

நடுகல்லின் மீது வீரனுடைய பெயரும், அவனுடைய புகழ்மிக்க வீரச் செயல்களும் பொறிக்கப்பட்டிருந்ததையும், மேலும் அந்நடுகல்லிற்கு அணிமயிற் பீலியும் மலர் மாலையும் சூட்டப்பட்டிருந்ததை அகநானூறு பாடலின் வழி அறியமுடிகிறது.

**நடுகல் அமைப்பு**

நடுகல் ஊரைவிட்டு வெகுதொலைவில் அமைந்திருக்கும். இவை மேடான பகுதியில் அமைக்கப்பட்டிருந்தன. உயர்ந்த வேங்கை மரத்தின் மலர்களைப் பனை ஓலையால் விரவித் தொடுத்து மாலையாகக் கட்டி கோவலர்கள் ஒரு வீரனுக்கு கல் நட்டதை,

**“ஊர்நனி இறந்தபார்முதிர் பறந்தலை**

**ஓங்குநிலைவேங்கைஒள்இணர் நறுவீப்**

**போந்தைஅம் தோட்டின் புனைந்தனர் தொடுத்துப்**

**பல் ஆன் கோவலர் படலை சூட்டக்**

**கல்ஆமினையே.....”**[3]

மற்றொரு வகையான நினைவிடத்தை அகநானூறு குறிப்பிடுகிறது. இவ்விடம்‘அருஞ்சுரம்’எனும் சொல்லால் குறிப்பிடப்படுகிறது.

**“பிடிமடிந் தன்னகுறும்பொறைமருங்கில்**

**நட்டபோலும் நடாஅநெடுகல்**

**அகலிடம் குயின்றபல்பெயர் மண்ணி**

**நறுவிரைமஞ்சள் ஈரம்புறம் பொலிய**

**அம்புகொண்டறுத்தஆர்நார் உரிவையிற்**

**செம்பூங் கரந்தைபுனைந்தகண்ணி**

**வரிவண் பார்ப்பச் சூட்டிக் கழற்கால்**

**இளையர் பதிப் பெயரும் அருஞ்சுரம்”**[4]

பெண் யானைபடுத்திருப்பதுபோன்றதோற்றமுடையகுன்றின் அருகில் அகன்ற இடத்தில் வீரர்கள் பலரினுடையபெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அக்கல்லை இளையவீரர்கள் மஞ்சள் நீராட்டிகரந்தைப் பூவினைச் சூட்டிவழிபட்டனர் எனும் செய்தியைஅகநானூறு வாயிலாகஅறியமுடிகிறது.

மேலும் பட்டினப்பாலையில்

**“கிடுகுநிரைத்து எஃகு ஊன்றி**

**நடுகல்லில் அரண் போல”**[5]

அதாவது வீரன் ஒருவனுக்கு நடுகல் நடப்பட்டுள்ளது. அந்நடுகல்லின் முன்னிலையில் கேடயம். ஈட்டி போன்ற போர்க்கருவிகள் அரண் போல அமைக்கப் பட்டிருந்ததைப் பட்டினப்பாலை அடிகள் விளக்குகின்றன.

**நடுகல் வழிபாடுமுறை**

நடுகற்களுக்குநாள்தோறும் தீப தூபம் காட்டிபூசைசெய்யும் வழக்கமும் ஏற்பட்டது. இச்செய்தியைபுறநானூறு மலைபடுகடாம் ஆகியபாடல்களின் வழி அறியமுடிகிறது.

**“வில் ஏர் வாழ்க்கைவிழுத்தொடைமறவர்**

**வல்ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்**

**நடுகல் பீலிசுட்டிதுடிப்படுத்து**

**தோப்பிக் கள்ளோடுதுரூஉப் பலி கொடுக்கும்**

**.............................................................”[6]**

வில்லினை ஏராகக் கொண்டு வாழும் வாழ்வினைக் கொண்ட சிறந்த அம்பினையுடைய கரந்தை வீரர்கள் பகைவர்களை போர்முனையில் வென்று ஆனிரையை மீட்டு வருகின்றனர். தம் வலிய ஆண்மைக்கு அறிகுறியான மணற் குன்றின் மேலுள்ள நடுகல் தெய்வத்தை வழிபடுவதற்காக அக்கல்லில் மயிற் தோகைகளை சூட்டினர். துடியை முழக்கி நெல்லால் குட்டியைப் பலி கொடுத்தனர் என்ற செய்தி இப்பாடலின் மூலம் கிடைக்கிறது.

மேலும் புறநானூற்றில்

**“.........அம் குடிச் சீறூர்**

**ஒலிமென் கூந்தல் ஒள்நுதல் அரிவை**

**நடுகல் கைதொழுது பரவும்”[7]**

மறக்குடியினர் வாழும் சிற்றூரில் தழைத்த மெல்லிய கூந்தலையும், ஒள்ளிய நுதலையும், உடைய அரிவை நடுகல்லில் தெய்வமாய் நின்றவனைக் கைக்கூப்பி வணங்கி துதிப்பாள் என்று கூறுவதாக அமைகிறது. இதைப்போன்று மற்றொரு பாடலில்

“பரலுடைமருங்கின் பதுக்கைசேர்த்தி

மரல் வகுந்துதொடுத்தசெம் பூங்கண்ணியோடு

அணிமயிற் பீலி சூட்டி யெர் பொறித்து

இனி நட்டனரே”[8]

பருக்கைக் கற்களைக் கொண்ட இடத்தில் மேடு அமைத்தனர். மரலைக் கீறிஎடுத்தநாரினால் சிவந்தபூக்களைக் கொண்டகண்ணியைக் தொடுத்தனர். அழகியமயிற்பீலியைச் சூட்டிப் பெயரைஎழுதி இப்பொழுதுகல்லும் நட்டனர்.

நடுகல்லுக்குநாள்தோறும் வழிபாடுசெய்துவணங்கியுள்ளனர் என்பதை,

**“இல்லடுகள்ளின் சில்குடிச் சீறூர்ப்**

**புடைநடுகல்லின் நாட்பலியூட்டி**

**நன்னீராட்டிநெய்ந்நிறைக் கொளீஇய**

**மங்குன் மாப்புகைமறுகுடன் கமழும்”**

என்ற பாடல் அடிகளின் வழி அறிய முடிகிறது. நடுகல்லுக்கு மயிற்பீலி சூட்டி இல்லங்களில் தயாரிக்கப்பட்ட கள் படைத்துநாள்தோறும் உயிரினங்களைப் பலியாகக் கொடுத்து அந்நடுகல்லை விடியற்காலையில் நன்னீராட்டி. நெய்விளக்கேற்றி வழிபட்டுள்ளதை இப்பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**நடுகல்லை வழிபட ஆற்றுப்படுத்துதல்**

பாணர்களும் வழிப்பயணம் மேற்கொள்கின்ற பொழுது, வீரர்களின் நடுகற்களைக் கண்டு வணங்கிச் செல்லுமாறு ஆற்றுப் படுத்திய நிகழ்வுகளையும் சங்க இலக்கியங்கள் நமக்கு காட்டுகின்றன.

**“பெருங் களிற்றுஅடியின் தோன்றும; ஒருகண்**

**இரும்பறை இரவல! சேறிஆயின்**

**தொழாதனைகழிதல் ஓம்புமதிவழாது**

**...........................................**

**..............................................**

**வில் உமிழ் கடுங் கணை மூழ்க**

**கொல் புனல் சிறையின் விலங்கியோன் கல்லே"[10]**

பெரிய யானையின் அடிபோலத் தோன்றும் ஒரு கண்ணினையுடைய பெரிய பறையினையுடைய இரவலனே, நீ போகின்ற போது பகைவரது வில்லில் இருந்து வெளிப்பட்ட அம்புகள் மிகுதியா கதைக்கவும் எதிர்நின்று விலக்கியவனது கல்லைத் தொழாமல் போவதைத் தவிர்ப்பாயாக! என்று கூறப்படுவது போன்ற செய்தியும;,

வழி செல்லும் பாணர்கள் வழியிடைக் காண நடுகற்களை வணங்கி யாழை வாசித்து செல்லுமாறு வழிப் படுத்தப் பட்டனர்.

**"ஒன்னாத் தெவ்வர் உலைவிடத் தார்த் தென**

**நல்வழிக் கொடுத்தநாணுடைமறவர்**

**கல்சுகவலையெண்ணுமிகப் பலவே**

**இன்புறுமுரற்கைநும்பாட்டுவிருப்பாகத்**

**தொன்றுமுகுமரபினும் மருப்பிகுத்திணைமின்"[11]**

ஏவல் பொருந்தாத பகைவர் புறமுதுகிட்ட அளவிலே தமது வெற்றி தோன்ற வீரர்கள் ஆரவாரித்தாராக அது பொறாமல் இவ்விடத்தை உயிர் கொடுத்தற்கு நல்லகாலம் என்று உயிரைக் கொடுத்த பெயர்களை எழுதி நட்டகற்கள் மிகுதியாக உள்ளன. இன்பம் மிகுகின்ற தாளத்தையுடைய உங்கள் பாட்டு அந்நடுகல்லின் தெய்வத்திற்கு விருப்பம் உடையதாதலின் நீங்கள் உங்களுடைய யாழை வாசித்து விரைந்து செல்வீர் என்று பாணர்கள் நடுகல்லைக் கண்டு வணங்கிச் செல்லுமாறு கூறப்பட்டனர்.

**நடுகல் குறித்தநம்பிக்கைகள்**

நடுகல்லை நாள்தோறும் வணங்கினால் விருந்தினர் எதிர்ப்படுவர் என்றும் போரில் கணவனுக்கும் அரசனுக்கும் வெற்றி கிட்டும் என்றும் பெண்களிடையே அரசனுக்கும் வெற்றிகிட்டும் என்றும் பெண்களிடையே நம்பிக்கைக்கும் நடுகற்களைத் தவறாது வணங்கினால் மழைமிகுதியாகப் பெய்யும். மழை பெய்தால் கொடுங்கானம் வறட்சி நீங்கிப் குளிரும். மரம் செடிகள் தளிர்த்துப் பூக்கும்,அதனால் வறட்சிமிக்க இக் கொடிய வழியில் வண்டுகள் மிகுதியும் மொய்க்கும் படியாக வளம் பெருகும் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இருந்தது. இதனையே,

**"தொழாதனைகழிதலோம்புமதிவழாது**

**வண்டுமேம்படூஉமிவ்வற நிலையாறே"[12]**

**தொகுப்புரை**

வீரமிக்க போர்வீரனின் இறப்பு நிகழ்விற்குப் பிறகு நினைவிடமாக வைக்கப்படும் நடுகற்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவிக் கிடக்கின்றன. சிறப்பாக நடுகல்லின் அமைப்பு முறை, நடுகல்லின் சிறப்பு, நடுகல்லின் வழிபாட்டு முறை, பிறரை வழிபட ஆற்றுப்படுத்துதல், நடுகல் குறித்த நம்பிக்கைகள் போன்றவற்றை அறிந்தவற்றின் மூலம் உயிரிழந்த வீரனுக்கு நடுகல் எடுக்கப் பட்டதென்றும். அவ்வீரனையே பின்நாளில் கடவுளாக வழிபட்டதையும் அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்.புறத்திணை நூ.5
2. அகநானூறு பா.எ. 67
3. புறநானூறு பா.எண்.265
4. அகநானூறு பா.எ.269
5. பட்டினப்பாலைபா.அடிகள் 78-79
6. அகநானூறு பா.எ. 35
7. புறநானூறுபா.எ. 306
8. மேலது. பா.எ.264
9. மேலது., பா.எ.329
10. மேலது,பா.எ. 263
11. மலைபடுகடாம் பா.அடிகள; 386
12. புறநானூறு பா.எ.263

**துணைநூற்பட்டியல்**


1.; தொல்காப்பியர் - தொல்காப்பியம் பொருளதிகாரம்
நச்சினார்க்கினியர் உரை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அம்பத்தூர், சென்னை 600 098

2.அகநானூறு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அம்பத்தூர், சென்னை 600 098

3. புறநானூறு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அம்பத்தூர், சென்னை 600 098

4.மலைபடுகடாம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
அம்பத்தூர், சென்னை 600 098



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Latha T., (2021) Nature worship in Sangam Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:104-108. Cauvery College For Women, Trichy.

**முனைவர் அ. அருள் சகாய அனிட்டா**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 02

# மதுரைக்காஞ்சியில் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகிய தொகுப்பு நூல்களையே "சங்க இலக்கியங்கள்" என்பர். அத்தகைய சங்க இலக்கியமான பத்துப் பாட்டினுள் ஒன்றாகத் திகழ்வது மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சி. மதுரைக்காஞ்சி நூலின் சிறப்பும், நூலாசிரியர் குறிப்பும், பாட்டுடைத்தலைவனின் மேன்மையையும், மதுரை மாநகரின் சிறப்பும் குறித்தும் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

மதுரை நகரில் நடைபெறும் விழாக்கள், ஏற்றப்பட்டுள்ள கொடிகளின் சிறப்பு, கோவில்கள் அதன் அமைப்பு, பள்ளிகள் அமைந்துள்ள விதம், அறங்கூறவையம், நாற்பெருங்குழு, வைகை நதியின் வளமை, விழாக்கள், கொடைச்சிறப்பு, பிணியில்லா வாழ்வு முறை என சங்க கால வாழ்வியல் முறைமைகள் குறித்து மதுரைக்காஞ்சியின் வழி கூறப்படுகிறது.

**முன்னுரை**

நம் தமிழ் மொழியுள் அமைந்த சங்க இலக்கிய நூல்கள் பாட்டும் தொகையுமாகும். அவற்றுள் பாட்டென்று பத்துப்பாட்டுகளின் தொகுப்பாகும். அவை அகப்பொருள் புறப்பொருள் பற்றிய நூல்களாக அமைந்துள்ளன. பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள மதுரைக் காஞ்சியின் அமைப்பு, மதுரை மாநகர் சிறப்பு, பாண்டிய நெடுஞ்செழியனின் சிறப்பியல்புகள். அவனது ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அறச் செயல்கள், மக்களின் வாழ்க்கைமுறை, வேளாண்மை போர் அறம் போன்றவற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**கொடிகள்**

பண்டைய காலத்தில் கொடிகளையே விளம்பரக் கருவிகளாகக் கொண்டிருந்தனர். இதனை

**"மைஅறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய**

' **மலாஅணி வாயில் பலர்தொழு கொடியும்"**

**-----------------------------------------------------,**

**பல்வேறு உருவின் பாதாகை நீழல்**

**செய்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பண்"**

என்னும் பட்டினப்பாலை 159-183 வரை உள்ள பாடல் வரிகள் பல்வேறு வகையான கொடிகள் மதுரைத் தெருக்களில் பறந்தமை குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. மதுரைக் காஞ்சியில் விழாக் கொடி, வெற்றிக்கொடி, வியாபார விளம்பரக்கொடி, என பலவகையான கொடிகள் மதுரை நகரில் பறந்து கொண்டிருந்தன என்னும் செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

அரசனுடைய தளபதிகள் அவன் ஆணை பெற்றுச் சென்று எதிரிகளுடன் போர் செய்து அவர்களுடைய கோட்டையைப் பிடிக்கின்றனர் அவ்வாறு பிடிக்குந்தோறும் அவ்வெற்றிகளைக் காட்டுவதற்காகப் பல்கொடிகள் பறக்க விடப்படுகின்றன.

இக்கொடிகள் பறந்து கொண்டிருக்கும் தோற்றம் பெரிய மலையிலிருந்து விழும் அருவி நீரைப் போலக் காணப்படுகின்றன. இதனை,

**"சாறு அயர்ந்து எடுத்த உருவப் பல்கொடி**

**வேறு பல் பெயர் ஆர்எயில் கொளக்கொள,**

**நாள் தோறு எடுத்த நலம்பெறு புனைகொடி**

**--------------------------------------------------------**

**பல்வேறு குழுஉக் கொடி பதாகை நிலைஇ**

**பெருவரை மருங்கின் அருவியின் நுடங்க"**

என்ற வரிகளில் மதுரையிலே பறக்கின்ற கொடிகளை நம் கண்முன்னே பட்டியலிட்டுக்காட்டுகின்றார் மாங்குடி மருதனார்.

**கோவில்கள்**

மதுரைநகரிலே இப்பொழுதும் சிறப்பாக விளங்குவது சொக்க நாதர் கோவில், இப்பொழுதிருப்பது போலவே நூலாசிரியர் காலத்திலும் சிறப்பாக விளங்கிற்று மற்றும் பல தெய்வங்களுக்கும் கோயில்கள் இருந்துள்ளன. பஞ்ச பூதங்களால் இவ்வுலகைப் படைத்த மழுப்படையையுடைய பரமசிவனைத் தலைவனாகக் கொண்டவர்கள். குற்றமற்ற ஒலியையுடையவர்கள் வாடாத மலர் மாலையையும், இமையாத கண்களையும் உடையவர்கள் மணம் வீசும் மது மாமிசங்களைப் பழியாகக் கொள்ளும் அஞ்சத்தக்க பெரிய தெய்வங்கள் அவர்களுக்குத் தவறாமல் உயிர்ப்பலி கொடுப்பதற்காக அந்திகால விழாவில் வாத்தியங்கள் முழங்கின.

**"நீரும் நலனும் தீயும், வலியும்**

**ஆக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய**

**மழுவாள் நெடியோன் தலைவனாக**

**மாசற விளங்கிய சுழ்சுடர்**

**..........................,**

**மாற்றரு மரபின் உயிர்ப்பலி கொழுமார்**

**அந்தி விழாவில் தூரியம் கறங்க"**

எனும் மதுரைக்காஞ்சியின் வரிகள் மதுரையிலே பல தெய்வங்களுக்குக் கோவில்கள் இருந்ததையும், அவைகளுக்கு மாலைக் காலத்திலே தவறாமல் பூசைகள் நடைபெற்று வந்தன எனத் தெளிவுறுத்துகின்றன.

**பள்ளிகள்**

பண்டைக் காலத்தில் இச்சொல் சமண முனிவர்கள். புத்தத்துறவிகள் வாழும் இடங்களையே குறித்தது அவர்கள் தாங்கள் வாழும் இடங்களிலிருந்து கொண்டு தங்களைக் காண வருவோர்க்கு அறிவுரைகளைப் போதித்து வந்தனர். இவ்வாறு போதனை நடைபெற்ற இடத்தைப் பள்ளிகள் என்று வழங்கியதனால் பிற்காலத்தில் கல்வி போதிக்கும் பாட சாலைகளையும் பள்ளிகள், பள்ளிக் கூடங்கள் என்ற பெயரால் வழங்கினர். மதுரையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பௌத்தப் பள்ளிகள் இருந்தன. சமணர் பள்ளிகள் இருந்தன. அவைகளிலே பௌத்தத் துறவிகளும், சமணத் துறவிகளும் வாழ்ந்தனர். அவர்கள் தங்கள் மத தர்மங்களைப் போதித்து வந்தனர். அக்காலத்திலே மதுரையிலே பௌத்த சமணப் பள்ளிகளைப் போல் அந்தணர் பள்ளி இருந்ததாகவும், இவ்வாசிரியர் கூறுகிறார். அந்தணர்கள் உயர்ந்த உலகத்தை இங்கிருந்தபடியே பெறக்கூடிய சிறந்த அறநெறியைத் தவறாமல் மேற்கொண்டவர்கள் எல்லோர்பாலும் இரக்கங்காட்டும் இளகிய நெஞ்சம்

படைத்தவர்கள் மலையை மாளிகையாகச் செய்தது போன்ற பள்ளியிலே இவர்கள் வாழ்கின்றனர். அந்தணர் பள்ளியின் உயர்வைப் பற்றி

**“சிறந்த வேதம் விளங்கப் பாடி**

**விழுநீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து**

**……………………………………,**

**பெரியோர் மேஎய் இனிதின் உரையும்**

**குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்”**

என்று மதுரைக்காஞ்சியின் வரிகள் தெளிவுறுத்துகின்றன. சைவர், வைணவர், சமணர், பௌத்தர் போன்ற பல மதத்தினர் அக்காலத்தில் மதுரையில் அவர்கள் ஒன்றுபட்டிருந்தனர் என்பதை இந்நூல் உணர்த்துகிறது.

**அறங்கூறவையம்**

அறம் என்பதற்கு தருமம், புண்ணிம், தகுதியானது, சமயம், ஞானம் எனப் பல பொருள்களைத் தருகின்றது தமிழ் லெக்ஸிகன். மனத்துக்கண் மாசிலன் ஆதல் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று என்று அறத்திற்கு பொருள் தருகிறார் திருவள்ளுவர்.

**“தொல்லாணை நல்லாசிரியர்**

**புணர்கூட்டுண்ணட புகழ்சால் சிறப்பின்**

**வியப்பும் சால்பும் செம்மை சான்றோர்**

**பலர்வாய் புகர்அறு சிறப்பின் தோன்றி”**

என்று மதுரைக்காஞ்சி அறத்திற்கு இலக்கணம் வகுக்கின்றது. பழமையான மொழிகளை ஆணைகளாகத் தருகின்ற நல்லாசிரியர்கள் உரைக்கும் மெய்யறிவின் தெளிவு, வியப்பும் சால்பும் உடைய செம்மை மிக்க சான்றோர் பலரின் குற்றமற்ற வாய்மொழிகளும் அறம் எனப்படும் என்று மதுரைக்காஞ்சி தெளிவுப்படுத்துகிறது. அறம் என்பத காலத்திற்கேற்ப மாறும் தன்மை உடையது என்றும் செம்மைத் தன்மை உடைய சான்றோர்கள் தன் வழித் தலைமுறைக்கு உரைக்கும் முறைமையது என்பதை உணர முடிகிறது.

**அரசர்க்கான அறங்கள்**

போர், வெற்றி போன்றவை நிலையில்லாதவை என எடுத்துரைத்து உலகில் என்றும் நிலைத்து நிற்கும் அறத்தினைச் செய்ய வலியுறுத்தும் விதமாக

**“பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்**

**இசைபொருது இரங்கும் சுனைஇரு முந்நீர்**

**திரையிடு மணலினும் பலரே உரைசெல**

**மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே”**

என்று வரிகளில் போர் வெற்றி பெற்ற மன்னர்கள் பலர் மண்ணாயினர் என்றும், போரில் வெற்றி பெற்று புகழ்பெற்ற மன்னர்கள் கடற்கரை மணலினும் பலர் ஆனால் அது உண்மையான புகழும் அறமும் இல்லை என்பதை எடுத்துரைக்கிறது.

**“பரந்து தோன்றா வியன்நகரால்**

**பல்யாகசாலை முதுகுடுமியின்**

**………………………………,**

**பூத்த அற்றமொடு பொலிந்து இனிது விளங்கிப்**

**பொய்யா நல்லிசை நிறுத்த”**

என்ற வரிகள் அரசர்களுக்கான அறங்களை எடுத்துரைக்கிறது. அரசன் வேள்விகள் பல செய்ய வேண்டும், சான்றோர் பலரின் நல்ல கருத்துக்களை ஏற்று அதன் படி நடக்க வேண்டும். குடிமக்களுக்குக் கிடைக்காத அரிய பொருள்களாயினும் அவற்றைத் தந்து காக்க வேண்டும், நிறைய கற்க வேண்டும், சுற்றத்தைக் காக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

**அந்தணர்க்குரிய அறங்கள்**

சங்க காலத்தில் அந்தணர்கள் மதுரை மாநகரில் அவர்களுக்குரிய அறங்களுடன் வாழ்ந்தனர் என்பதை,

**"சிறந்த வேதம் விளங்கப் பாடி**

**விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து**

**நிலம்அமர் வையத்து ஒருதாம் ஆகி**

**உயர்நிலை உலகம் இவன்நின்று எய்தும்**

**அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்**

**பெரியோர் மேஎய் இனிதின் உறையும்**

**குன்றுகுயின் அன்ன அந்தணர் பள்ளி"**

அந்தணர்கள் வாழ்ந்த இடம் அந்தணர் பள்ளி என அழைக்கப்பெற்றுள்ளது. அந்தணர்கள் வேதம் ஓத வேண்டும். அவர்களுக்கான ஒழுக்கங்களைப் பேணி வாழ வேண்டும் அறநெறி பிறழாது அன்புடை நெஞ்சத்தோடு இருக்க வேண்டும். உயர்நிலையான வீட்டுலகிணை இங்கிருந்தே, அடைவதற்கான செயல்களை செய்து ஒழுகுதல் வேண்டும் என்று எடுத்துரைக்கிறது.

**வணிகர்க்குரிய அறங்கள்**

பெருவணிகர், சிறுவணிகர் என்று குறித்துக் காட்டப்பட்டுள்ளது. பெருவணிகர்கள் மலை, நிலம், நீர்படு பொருள்களை விற்பனை செய்தனர் என்றும் அவர்களின் வீடுகள் பருந்துகள் வந்து தங்கும் அளவிற்கு வலிமையையும் பெருமையையும் உயரமும் கொண்டு விளங்கின என்றும் அவர்கள் "அறநெறி பிழையா ஆற்றின் ஒழுகி" வாழ்ந்து வந்தனர் என்றும் சிறுவணிகன் என்பவர்கள் வீடுதோறும் சென்று பூ, பண்ணியம் முதலானவற்றை விற்ற பெண்களையும் குறித்த செய்திகள் காணப்படுகிறது.

**"கைஇ மெல்லிதின் ஒழுங்கிக் கை எறிந்து**

**கல்லா மாந்தரொடு நகுவனர் திரைப்பப்**

**...............................,**

**கமழ்நறும் பூவோடு மணைமணை மறுக"**

என்றும் வரிகளில் மெல்ல நடந்து சென்று கற்காத மக்களோடு கலந்து, ஒவ்வொரு வீடாகச் சென்று பொருள் விற்றுக்கொண்டிருந்தனர் என்பதை எடுத்துரைக்கிறது. கல்லாத மாந்தருக்கும் நல்ல பொருள் விற்க வேண்டிய அறத்தின் கூறுபடு இவர்களிடம் இருந்தது என்பதை அறிய முடிகிறது. இவை தவிர பூமாலைகள், பூக்கள் கொண்டு தயாரிக்கப்பெற்ற சுண்ணம், பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு போன்ற பல பொருட்களும் அங்கு விற்கப்பெற்றன.

**வேளாளர்க்குரிய அறங்கள்**

வேளாளர் குறித்த தனித்த செய்திகள் இடம்பெறவில்லையெனினும் ஆங்காங்கே சில இடங்களில் இவர்களுக்கான அறங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

**"இருவகையாண் இசைசான்ற**

**சிறுகுடி பெருந்தொழுவர்**

**குழகழீஇய நால் நிலவோரடு**

**தொன்று மொழிந்து தொழில்கேட்ப”**

என்று வரிகளின் மூலம் வேளாளர்க்கான அறங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இருவகையான் என்பதற்கு உழவும் வாணிகமும் என்று பொருள் கொள்ளப்படுகிறது. சிறுகுடி என்பது உழவர்களையும், பெருந்தொழுவர் என்பது உழவால் விளைந்த பொருள்களை விற்பவராகவும் பொருள் சுட்டப்பெறுகிறது. இதன்மூலம் உழவரும் வணிகரும் நால்வகை நிலத்தாரும் உறவு கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகின்றது. தொன்று தொட்டு உழவுமுறைகளைச் சொல்லித் தொழில் நடத்துதல் அறமாக எடுத்துரைக்கிறது மதுரைக்காஞ்சி.

**செல்வர்களின் அறம்**

பொருள் நிலையில் ஏற்றம் பெற்று விளங்கும் செல்வர்களுக்கான அறத்தையும் மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது. அக்காலத்தில் செல்வர் பூந்தொழில அணிந்து இருந்தனர். பொன்னால் செய்த கைப்பிடியை உடைய உடைவாளினைக் கொண்டிருந்தனர். தேர் அவர்களின் வாகனமாக இருந்தது. காற்றைப் போலக் குதிரைகளை செலுத்தி செல்லும் போது அவர்களின் ஆடை தேர்த்தட்டில் பரவி இருந்தன என்றும் வீரக்கழல் அணிந்திருந்தனர். “வான வண்கை வளம்கெழு செல்வர் நாள் மகிழ் இருக்கை காண்மார்” செல்வத்தின் பயன் ஈதலே என்பதை உணர்ந்து வானம் போல வரையாது வறியவர்களுக்கு வழங்குதல் செல்வர்களுக்கான அறம் என்பதை விளக்குகிறது.

**கலைஞர்களை காக்கும் அறம்**

பாணர், பாடினியர், புலவர், கூத்தர், கலைஞர்களின் சுற்றத்தார், இரவலர் போன்ற பலரும் சமுதாய அடுக்கில் தமக்கான பகுதியில் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களைக் காக்கும்படி தேர்களை யானைகளுடன் பொருள்கள் பல வழங்கி காக்கும் முறைமை இருந்ததை அறிய முடிகிறது. கலைஞர்கள் அரசனுக்கு செவியறிவுறுக்கும் நிலையில் நன்மையான கருத்துக்களை அவ்வப்போது மென்மையாக எடுத்துரைக்க வேண்டிய பொறுப்பில் இருந்துள்ளனர். அரசனை அறம் தலைமைப்புலவர், பாணர் முதலியோர் இருந்தனர் என்றும் , அறமன்றங்களும் இருந்தன என்பதை மதுரைக்காஞ்சி விளக்குகிறது.

**“அறம்கூறு அவையம்**

**அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்**

**செற்றமும் உவகையும் செய்யாது காத்து**

**ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகிச்**

**சிறந்த கொள்கை அறங்கூறு அவையம்”**

என்னும் வரிகள் அறங்கூறு அவையத்தின் சிறப்பினைக் காட்டுவதாக உள்ளது. அறங்கூறு அவையத்தில் இருப்போர் அச்சமில்லாதவர்களாகவும், அச்சத்தை தராதவர்களாகவும் இருந்துள்ளனர். மேலும் அவலம் மற்றவர்க்கு ஏற்பட்டிருப்பின் அதனை அவலத்துடன் நோக்காது சமநிலையில் நோக்கும் குணம் அவர்களிடத்தில் இருந்துள்ளது. சினம், உவகை காட்டாது நீதி வழங்கினர் அதிலும் குறிப்பாக பற்றுள்ளம் இன்றி நீதி வழங்குவதால் வருமானம் எதுவும் தனக்கு வருமா? என்று எதிர்ப்பாக்காது துலாக்கோல் போல அறத்தோடு இருந்துள்ளனர்.

**விழாக்கள்**

அரசனின் ஒவ்வொரு வெற்றியின் போதும் வெற்றி விழா ஏழு நாள்கொண்டாடப்படும், அதற்கு ‘ஆடு துவன்று விழா’ என்று பெயர். செங்கழுநீர் பூத்த குளத்தில் வெற்றி தந்த வேல், வாள் முதலானவற்றைக் கழுவி அக்குளக்கரையில்

அந்த ‘ஆடு துவன்று விழா’ கொண்டாடப்படும். அந்த விழா நாடு முழுவதும் ஆங்காங்கே கொண்டாடப்படும். அந்த விழாவின் போது எழும் ஆரவாரம் போல மதுரை நகரத்து கடைத் தெருவில் பகல் பொழுதில் ஆரவாரம் எழுந்து கொண்டேயிருக்கும்.

சிவபெருமான் நெடியோன், அவன் நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தையும் படைத்தவன் அவனைத் தலைவனாகக் கொண்டவர்கள் இமையா நாட்டத்துப்பலர் (தேவர்) அவர்கள் உயிர்பலி பெறும் நாற்ற உணவினை விரும்புவர். அவர்களுக்குப் பலி கொடுப்பதற்காக ஒருபுறம் மக்கள் ‘அந்திவிழா’ கொண்டாடி மகிழ்வர்.

**“மாயோன் மேய ஓண நன்னாட்**

**கோணந் தின்ற வடுவாழ் முகத்த**

**சாணந் தின்ற சமந்தாங்கு தடக்கை**

**மறங்கொள் சேரி மாறுபொரு செருவில்**

**மாறா துற்ற வடுப்படு நெற்றி”**

என்னும் வரிகளில் திருவோணத் திருநாளில் யானை அணிவகுப்புத் திருவிழா நடைபெறும் என்பதை எடுத்துரைக்கிறது. மன்னன் தன் ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர் என்பதன் வெளிப்பாடே விழாக்கள் அது பாண்டிய மன்னனின் ஆட்சிக் காலத்தில் சிறப்பாக நடந்தது என்பதனை மதுரைக்காஞ்சி பாடல்கள் உணர்த்துகின்றன.

**கொடை**

சங்க காலத்தில் ஆட்சியில் இருந்த மன்னர்கள் தங்களை நாடிவரும் புலவர்களுக்கும் பாணர்களுக்கும் கொடை நல்கி சிவந்த கரமுடையவர்களாகத் திகழ்ந்தனர். என்பதை ஆற்றுப்படை நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. அவ்வகையில் மதுரைக்காஞ்சியின் பாட்டுடைத் தலைவனை பாண்டிய நெடுஞ்செழியனும் கொடையளித்தலின் போது தக்கவர் தகாதவர் என்று கைம்மாறு கருதாது கொடையறம் நிறைந்தவனாக விளங்கினான் என்று,

**“வரையா வாயில் செறாஅ அதுஇருந்து**

**பாணர் வருக! பாட்டியார் வருக!**

**யாணர் புலவரோடு வயிரியர் வருக! என**

**இருங்கிளை புரக்கும் இரவலர்க் கெல்லாம்**

**கொடிஞ்சி நெடுந்தேர் களிற்றொடு வீசி”**

என்னும் பாடல் வரிகளின் மூலம் தன்னை நாடி வரும் இரவலர்களை வாயிலில் தடுத்து நிறுத்தாமல் அனைவரையும் வருகவெனக் கூறி முறை வேண்டுநர்க்கும் , குறை வேண்டுநர்க்கும் எளிமையாய் இருந்து பாணர் வருக! பாடிணி வருக! வரியன் வருக! எனக்கூறி அழைத்து, நீர் யார் என்று வினவது தேர், களிறு உள்ளிட்டப் பொருட்களை நல்கினான் என்பதை மதுரைக்காஞ்சி விளக்குகிறது.

**பசிப்பிணி நீக்குதல்**

ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம், இதில் முதன்மையான தேவை உணவு.”தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்கிறான் பாரதி. “பசி வந்திட பத்தும் பறந்தும் போகும்” என்கிறது பழமொழி. இவ்வரிகள் பசியின் கொடுமைதனை உணர்த்துகின்றன.

பாண்டிய மன்னன் தன்னை நாடிவந்த மக்களின் பசிப்பிணியினை நீக்கினான் என்பதை

**“நோய் இகந்து நோக்கு விளங்க**

**தொடுப்பின் ஆயிரம் கிளர்ந்து விளங்க”**

என்னும் வரிகள் தன் நாட்டிலுள்ள மக்களைப் பசி, பிணி, உள்ளிட்ட எத்தகைய நோயும் அண்டாது காத்து வந்தான். என்பதை புலப்படுத்துகிறது. தனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் பல அறச்சாலைகள் நிறுவினான் என்பதை

**“-----------பலவுடன்**

**சோறும் நாற்றமும் பலவின் சுளையும்**

**வேறுபடக் கவினிய தேம் மாங்கனியும்**

**……………………………….,**

**அமிர்து இயன்றன்ன தீம் சோற்றுக் கடிகையே**

**கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்**

**இச்சோறு திருநகர் பலவின் நகர”**

என்கிறது. அதாவது மா,பலா,வாழை ஆகிய முக்கனிகளும் பல்வேறு உருவின் காய்களும் இவைகளும் கற்கண்டும்ஈ இறைச்சி சோறும், கிழங்கும், இனிய பாற்சோறும் வழங்குகின்ற அறச்சாலைகள் பல மதுரையில் இருந்தன என்பதை அறிந்துக் கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

பத்துப்பாட்டு நூல்களுள் மதுரைக் காஞ்சி முழுமையும் தமிழர்களின் பண்பாட்டு கருவூலமாகத் திகழ்கிறது. தமிழகத்தின் சங்க கால அறச்சூழலை எடுத்துரைக்கும் பனுவலாக மதுரைக்காஞ்சி விளங்குகிறது. பாண்டிய மன்னர்களுடைய வீரத்தையும், ஈகையையும் எடுத்துரைப்பதால் நல்லதொரு வரலாற்றுச் சான்றாகத் திகழ்கிறது எனில் தகும்.

**பார்வை நூல்கள்**


1. வேங்கடராமன்,கா.கோ, தமிழ் இலக்கிய வரலாறு, கலையக வெளியீடு, முதல் பதிப்பு சுலை 2001
2. நாகராசன்.வி, சங்க இலக்கியம் பத்துப்பாட்டு பகுதி-2, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பிலிமிடெட்) சென்னை
3. நாராயண வேலுப்பிள்ளை (தெ.ஆ), சண்முகம் பிள்ளை(ப.ஆ), பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும் பகுதி – 2, முல்லை நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1994
4. கி. சங்கர நாராயணன், வே. நிர்மலர் செல்வி(ப.ஆ) தமிழியல் ஆய்வுத்தடங்கள பன்னாட்டுக் கருத்தரங்க கட்டுரைகளின் தொகுப்பு தொகுதி -1, சென்னை பல்கலைக்கழகம், சென்னை -5.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Arul Sagaya Anitta A., (2021) Tamil identities in Maduraikkanchi, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:109-115. Cauvery College For Women, Trichy.

**முனைவர் அ. அனுடயானா**

உதவிப்பேராசிரியர்

தமிழாய்வுத்துறை

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 02.

# புறநானூற்றில் புகழ்

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கிய நூல்களில் ஒன்று புறநானூறு. புறப்பொருள் பற்றிய நானூறு பாக்களைக் கொண்டது இந்நூல். புறம், புறப் பாட்டு, புறம்பு நானூறு என்று வேறு பெயர்களும் இந்நூலுக்கு உண்டு. புறநானூற்றுப் பாடல்களில் வீரம், கொடை, புகழ் முறைகள் குறித்த செய்திகள் அதிகம் இடம் பெற்றிருந்தாலும் அவற்றில் இக்கட்டுரையில் புகழ் குறித்த செய்திகள் மட்டும் இக்கட்டுரையில் எடுத்தாளப்படுகிறது.

**முன்னுரை**

**'தோன்றின் புகழோடு தோன்றுக'** என்பது வள்ளுவர் வாக்கு புகழை. விரும்பாத மனிதர்கள் இவ்வுலகில் இல்லை எனலாம். பிறரால் புகழப்படுதலை மனிதனின் பொது இயல்பாகவே இருப்பதை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**புகழெனின் உயிரும் கொடுக்குவர்,பழியெனின்**

**உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர்,**

**அன்ன மாட்சி அனைய ராகித்,**

**தமக்கென முயலா நோன்தாள்,**

**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே." (புறம்.182)**

என்ற பாடலின் மூலம் இறப்பை நீக்கும் இந்திரர் அமிழ்தம் கிடைப்பினும் இனிமையாயிருக்கிறது என்று தாம் மட்டுமே தனித்து உண்ணாமல் பிறர்க்கும் அளித்தே உண்பர் யாரிடத்தும் சினமோ வெறுப்போ கொள்ளாதவர், சோம்பல் இல்லாத உழைப்பாளர், அனைவரும் அஞ்சக் கூடிய தீச்செயல்களைத் தாமும் செய்ய அஞ்சுபவர், புகழான நற்செயல் எனில் உயிரையும் கொடுத்தாயினும் அந்நல்லதையே செய்யக் கூடியவர், பழிவரும் எனில் உலகம் முழுவதையும் ஒருங்கே தரினும் ஏற்றுக்கொள்ளாதவர், துன்பத்தைக் கண்டு சோராதவர், இன்ன பிற நன் மாண்புகளை உடையவராகி, தம் நன்மைக்கு என ஒன்றும் முயலாமல், வலிய உழைப்புடன், பிறரது நன்மைக்காகவே முயன்று பாடுபடும் பெரியார்கள் ஒரு சிலராயினும் உள்ளமையால் தான், உலகம் ஓரளவாயினும் ஒழுங்காக இயங்குகிறது'.'தம் நன்மைக்கு என ஒன்றும் முயலாமல் பிறரது நன்மைக்கு மட்டுமே வலிய உழைப்புடன் முயன்று பாடுபடுபவர் உள்ளமையாலேயே உலகம் இயங்குகிறது" என்று பாடல் கூறுகிறது. பாடாண்திணையில் அமைந்துள்ள புறநானூற்றுப் பாடல்களின் மூலம் வெளியாகும் புகழை வகைப்படுத்தி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**புகழ்பாடும் துறைகள்**

செவியறிவுறூஉ, இயன்மொழி வாழ்த்து, ஆற்றுப்படை, குடை மங்கலம், வாள்மங்கலம், பரிசில்விடை, பரிசில் என்ற துறைகளில் அமைந்துள்ள பாடாண்திணைப்பாடல்கள் எல்லாம் புகழ்பாடும் பாடல்களாக இருக்கின்றன. இப்பாடல்களில் இடம்பெற்றுள்ள புகழ் மொழிகளைப் புகழ் குறித்த விழுமியம், படைப்புகழ், கொடைப்புகழ், மனைப்புகழ், சொற்புகழ், மறப்புகழ் என்று வகைப்படுத்தலாம்

**புகழ்குறித்த விழுமியம்**

புகழ் ஈட்டுதல் என்பது அக்காலச் சமுதாயத்தில் ஒரு மதிப்பு மிக்க விழுமியமாக அமைந்து இருந்தது. ஆள்விளையுடைமை அறநம்பிக்கை, கலை உணர்ச்சி, அஞ்சாமை ஆகிய பண்புகளில் அக்காலத் தமிழர்கள் உயர்பேறுகளைப் பெற்றனர்.

இளங்குமணனின் பெருமையைப் பெருந்தலைச் சாத்தனார் பின்வரும் பாடலில் விளக்குகின்றார்

**மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**

**தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே**

**துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்**

**இன்மையின் இரப்போர்க்கு ஈ யாமையின்" (புறம்.பா.165)**

எனும் பாடலின் மூலம் இளங்குமணின் புகழினைப் பெரிதும் பேசுகின்றது.

நிலையில்லா இவ்வுலகில் நிலைபெற வேண்டும் என்று எண்ணியவர் தம் புகழை நாட்டித் தாம் இறந்து போயினர். இரவலர்க்கு அளிக்கும் குற்றமில்லாத நல்ல புகழையுடைய வலிய குதிரையையுடைய அவனைப் பாடி நின்றேன் என்று சாத்தனார் உரைக்கின்றார்.

**படைப்புகழ்**

தொண்டைமான், ஔவையாரிடம் தன் படைக்கலத்தையெல்லாம் காட்டி போரில் தானே வெற்றி பெறுவேன் என்று செருக்குக் கொள்கிறான். அப்போது ஔவையார், தொண்டைமானே, உன் படைக்கருவிகள் எல்லாம் மயிலிறகு அணிந்து மாலைசூடி அழகுடன் எண்ணெய் பூசப்பெற்று அரண்மனையில் உள்ளன. ஆனால் அதியமானின் படைக்கருவிகள் போரில் பகைவரைக் குத்திக் குத்தி நுனிமுறிந்து பாழ்பட்டுக் கொல்லன் உலைக்களத்தில் உள்ளன என்று தொண்டைமானைப் புகழ்வது போல் பழிக்கிறார்.

**இவ்வே பீலி அணிந்து மாலைசூட்டிக்**

**கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து**

**கடியுடை வியன்நக ரவ்வே அவ்வே**

**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**

**கொல்துறைக் குற்றில் மாதோ (புறம்.பா.95)**

என்று வீரத்திற்குத் துணைநிற்கும் படைக்கலக் கருவிகள் புகழப்பட்டுள்ளன.

**கொடைப்புகழ்**

கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரி பேராண்மையும் வறியோர்க்கு வழங்கும் வள்ளாண்மையும் உடையவன். இக்கொடைத் திறத்தை இகழ்வதைப் போலப் புகழ்கிறார் கபிலர்.

செந்நாப்புலவர் எல்லாரும், பாரி பாரி என்று அவனைப் புகழ்கிறார்கள். இந்த உலகத்தில் பாரி ஒருவன் மட்டும் தானா வாரி வழங்குகிறான். உலகைக் காப்பதற்கு மழையும் (மாரி) உள்ளது என்று கபிலர் பாடுகிறார்.

**பாரி பாரி என்று பல ஏத்தி**

**ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்**

**பாரி ஒருவனும் அல்லன்**

**மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே" (புறம்.பா.107)**

மழை பொழிந்து மாநிலத்தைக் காத்தல் இயற்கையானது. ஆனால் மன்னன் கொடுக்கும் மனம் இருந்தாலே உலக உயிரைக் காப்பாற்ற இயலும். இத்தகைய இயல்புடைய பாரியை மழையைப் புகழ்வது போல் புலவர் புகழ்ந்துள்ளார்.

**மனைப்புகழ்**

மனையறம் என்பது இன்றும் தமிழர்களால் பெரிதும் மதிக்கப்படுவது அகற்புடை மனைவி ஒருத்தியைத் தவிர பிற பெண்களை நாடாதவன். அவனுடைய 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் பண்பாட்டைப் புகழ நினைத்த கபிலர்,

**வடமீன் புரையும் கற்பின் மடமொழி**

**அரிவை தோள்அளவு அல்லதை**

**நினதுஎன இலைநீ பெருமித்ததையே (புறம்.பா.122)**

என்று பாடுகின்றார். கற்பில் சிறந்த மனைவி ஒருத்திக்கு மட்டும் உரிமை பூண்டவன் என்பதைத் தவிர வேறு என்ன சிறப்பு உனக்கு உண்டு என்று வினவி அவன் புகழைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

**சொற்புகழ்**

சங்ககால மக்கள் சொல் வழுவாமல் காத்தலை மிகப்பெரிய அறமாகக் கருதினர்.

**“இயல்புஉளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட**

**பெயலும் விளையுளும் தொக்கு”. (குறள். 545)**

என்கிறார் வள்ளுவர். பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி இத்தகைய சொல் மாறாத் திறம் படைத்தவன். இவனைப் புகழ நினைத்த இரும்பிடத் தலையார் என்னும் புலவர்,

**கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி!**

**நிலம் பெயரினும், நின்சொற் பெயரல்;**

**பொலங் கழற்காற்,புலர் சாந்தின்**

**விலங் ககன்ற வியன் மார்ப!**

**ஊர் இல்ல, உயவு அரிய,**

**நீர் இல்ல, நீள் இடைய,**

**பார்வல் இருக்கைக், கவிகண் நோக்கிற்,**

**செந்தொடை பிழையா வன்கண் ஆடவர்**

**அம்புவிட, வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்**

**திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந்து உயவும்**

**உன்ன மரத்த துன்னருங் கவலை,**

**நின்நசை வேட்கையின் இரவலர் வருவர்! அது**

**முன்னம் முகத்தின் உணர்ந்து, அவர்**

**இன்மை தீர்த்தல் வன்மை யானே. (புறம்.பா.3)**

என்ற பாடலின் மூலம் நிலமே மாறினாலும் நீ சொன்ன சொல் தவறாமல் வாழவேண்டும். நீ பொன்னாலான வீரக்கழலைக் காலில் அணிந்தவன். ஈரச்சந்தனம் புலர்ந்த மார்பை உடையவன். உன்னை நயந்து இரவலர் வருவர். ஊர் இல்லாத, வாழ முடியாத, நீர் இல்லாத நீண்ட வழியைக் கடந்து வருவர். வன்கண் ஆடவர் பதுங்கியிருந்து அம்பு விட வீழ்ந்தவர்களை உண்ணும் பருந்து உன்னமரத்தில்

காத்திருக்கும் வழியில் வருவர். அவர்களின் நிலைமையை எண்ணிப்பார்த்து அவர்களின் வறுமையைப் போக்குவதுதான் உன் வலிமை என்ற செய்தயின் வழி அறியமுடிகின்றது.

**மறப்புகழ்**

மறம் தமிழரின் அறம். வீரமும், காதலும் தமிழரின் இரு கண்கள். ஆண்மை போற்றவும், நாடு காக்கவும், காடு கொன்று நாடாக்கவும், குளம் தொட்டு வளம் பெருக்கவும் போர் அவசியமாயிற்று. சங்க கால மன்னர்கள் அனைவரும் வீரம் விளைந்தவர்களாகக் காணப்பட்டனர். தம் முயற்சியாலும், அறிவாற்றலாலும் செல்லும் இடமெல்லாம் வெற்றி பெற்றுத் திரும்பினர். விழுப்புண் பெற்றனர். நடுகல் நட்டனர். புவியை விட்டு மறைந்தாலும் புகழால் இன்னும் வாழ்கின்றனர்

**“ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழஅலின்**

**நீர்த்துறை படியும் பெருங்களிறு போல**

**இனிமை பெரும எமக்கே மற்றதன்**

**துன்னருங் கடாஅம் போல**

**இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே**” (புறம்.பா.94)

என்னும் பாடல் மறப்புகழைப் பாடுகின்றது.

**குற்றமில்லா புகழ்**

கீழ்வரும் பாடலில் ஒருவன் எந்தச் சூழ்நிலை ஏற்பட்டாலும் தன்னுடைய நிலை மாறாமல் இருத்தலை இப்பாடல் சுட்டுகின்றது.

**சேற்று வளர் தாமரை பயந்த, ஒண் கேழ்,**

**நூற் றிதழ் அலரின் நிறை கண் டன்ன,**

**வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து,**

**வீற்றிருந் தோரை எண்ணுங் காலை,**

**உரையும் பாட்டும் உடையோர் சிலரே;**

**மரைஇலை போல மாய்ந்திசினோர் பலரே:**

**புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்**

**..........................................**

**வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி,**

**அருள வல்லை ஆகுமதி; அருளிலர்**

**கொடா அமை வல்லர் ஆகுக;**

**கெடாஅத் துப்பின்நின் பகைஎதிர்ந் தோரே. (புறம். 27)**

எனும் பாடலில் தாமரை சேற்றில் பிறக்கிறது. அது நூற்றுக்கணக்கான இதழ்களுடன் பொலிவாகத் தோன்றுகிறது. யார் பிறப்பிலும் வேற்றுமை இல்லை. சிலர் தாமரைப் பூப் போல விளங்குகின்றனர். பாராட்டும் புகழும் பெறுகின்றனர். சிலர் அதன் இலை போலக் கிடக்கின்றனர். செய்யும் செயலால் புலவர் பாடும் புகழுடையோர் வானத்தில் யாரும் ஒட்டாத வான ஊர்தியில் செல்வர் என்று சொல்லப்பட்டுள்ளது.

சேட்சென்னி நலங்கிள்ளி! தேய்தலும் வளர்தலும் இறத்தலும் பிறத்தலும் இயற்கை என்னும் உண்மை தெரியாதவர்களுக்குத் தெரியும்படி நிலாத்தெய்வம் தேய்ந்து வளர்ந்தும் மறைந்து தோன்றியும் காட்டிக்கொண்டிருக்கிறது. எனவே வல்லவர் ஆயினும் வல்லவர் அல்லர் ஆயினும் வருந்தி வந்தோரின் நிலைமையைப்

பார்த்து அருள் தருபவனாக விளங்குக! உன் பகைவர் கொடாத்தன்மை உடையவராகிக் கிடக்கட்டும்.

**நீடு விளங்கும் புகழ்**

'காண்போர்க்கு அச்சத்தைத் தரும் கொடிய இடம் சுடுகாடு. நாடாண்ட மன்னர்கள் கூட முடிவில் சுடுகாட்டைத்தான் சென்றடைகின்றனர். வாழ்க்கை நிலையில்லதாது. ஒருவன் செய்த செயல்களுக்கேற்ப அவனைச் சாரும் பழியும் புகழும் அவன் இறந்த பிறகும் நிலைத்து நிற்கும். ஆகவே, இறப்பதற்குமுன், நற்செயல்களைச் செய்து புகழைத் தேடிக்கொள்.' என்று இப்பாடல் அறிவுறுத்துகின்றது என்பதைப் பற்றி,

**பாறுபடப் பறைந்த பன்மாறு மருங்கின்**
**வேறுபடு குரல வெவ்வாய்க் கூகையொடு**
**பிணந்தின் குறுநரி நிணம்திகழ் பல்ல**
**பேஎய் மகளிர் பிணம்தழூஉப் பற்றி**
**விளர்ஊன் தின்ற வெம்புலால் மெய்யர்**
**களரி மருங்கில் கால்பெயர்த் தாடி**
**ஈம விளக்கின் வெருவரப் பேரும்**
**காடுமுன் னினரே நாடுகொண் டோரும்;**
**நினக்கும் வருதல் வைகல் அற்றே;**
**…………………………….,**
**இழைகிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது**
**கொள்என விடுவை யாயின் வெள்ளென**
**ஆண்டுநீ பெயர்ந்த பின்னும்**
**ஈண்டுநீடு விளங்கும் நீ எய்திய புகழே."** (புறம் - 359)

என்ற பாடலின் மூலம் விளக்குகின்றது. சுடுகாடு உள்ள இடம் முற்றிலும் கெட்டுத் தேய்ந்து அழிந்து கிடக்கிறது. அங்கு, பல முட்களையுடைய இடங்களில் கொடிய வாயையுடைய ஆந்தை வெவ்வேறு குரலுடன் கூவுகிறது. அது மட்டுமல்லாமல், பிணங்களைத் தின்னும் குறுநரிகள் தசை ஒட்டிய பற்களுடன் காணப்படுகின்றன. பேய்மகளிர் பிணங்களைப் பற்றித் தழுவி, வெளுத்த தசையைத் தின்றதால், கொடிய புலால் நாறும் உடலுடையவராய், சுடுகாட்டுத் தீயின் வெளிச்சத்தில், களர் நிலத்தில் காலைவைத்துக் கூத்தாடுகிறார்கள். இந்தக் காட்சிகள் காண்போர்க்கு அச்சத்தை தருகின்றன. நாடுகளை வென்றவர்களும் அத்தகைய சுடுகாட்டைத்தான் சென்றடைந்தனர். உனக்கும் அந்த நாள் வரும். இவ்வுலகில் அவரவர் செய்த பழியும் நிலைத்து நிற்கும்; புகழும் நிலைத்து நிற்கும். அதனால், பழியை நீக்கிப் புகழை விரும்பி, விருப்பு வெறுப்பு இல்லாமல், நடுவுநிலையில் இருந்து, நல்லவற்றையே பேசி, ஒளிறும் தந்தங்களையுடைய களிறுகளையும், பொன்னாலான அணிகலன்களை அணிந்த குதிரைகளையும், பொன்னிழை அணிந்த தேர்களையும் இரவலர்க்குக் குறையாது கொடுத்து அனுப்பினால், வெளிப்படையாக, நீ மேலுலகத்திற்குச் சென்ற பின்னரும் உன் ஈகையால் உண்டாகும் புகழ் இவ்வுலகில் நீண்ட காலம் நிலைத்து நிற்கும்.

சுடுகாட்டின் கொடிய காட்சிகளைப் புலவர் சித்திரிக்கிறார். பின்னர், 'காடு முன்னினரே நாடு கொண்டோரும்' என்று கூறி அந்துவன் கீரனுக்கு நிலையாமையை நினைவூட்டுகிறார். அதன் பின்னர், ஈகையினால் அவன் பெறும் புகழ்தான் அவன்

இறந்த பிறகும் நிலைத்து நிற்கும் பெருமை உடையது என்று அறிவுரை கூறுகிறார். இப்பாடலில் புலவர் கூறும் கருத்துகளும் அவர் அவற்றைக் கூறும் விதமும் மிகவும் சிறப்பாக உள்ளது என்பது புலனாகின்றது.

**புகழ் பெருமிதம்**

சங்க காலம்புகழ் வேட்கை மிகுந்த காலமாகும். பழிகளுக்கு அஞ்சுகின்ற உணர்ச்சிகளுக்கு எதிர்மறையாக புகழை விரும்பி ஏற்கின்ற உந்துதல் தோன்றிய காலம். அறத்தைப் பின்பற்றிய சமுதாயத்தில் அறமில்லாததைச் செய்தல் ஆகாது என்னும் தவிப்புணர்வும் நிலவுதல் இயல்யே ஆகும். அறங்கள் பல செய்வதால் புகழ் சிறந்து விளங்கும். அறங்கள் பல செய்தும் போர்கள் பல நடத்தியும் வெற்றி பெற்றவர்களும் தம்மை சார்ந்தவர்களுக்கும், தம்மை நாடித் துன்பமுற்று வந்தவர்களுக்கும் தம்மால் இயன்ற பல பேரறம் செய்தவர்களே மரணத்தின் பின்னும் பலரால் பேசப்படுகின்றனர். இவர்களை சான்றாக முன் வைத்துக் கொண்டு பிறர் தம் வாழ்க்கையை நடத்திச் செல்வதால் சான்றோர்கள் என்றும் இவர்களைக் குறிப்பிடுவர்.

**வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,**

**புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன, -**

**உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற!**

**நின்னொன்று கூறுவது உடையேன் என்னெனின்,**

**நீயே, பிறர்நாடு கொள்ளும் காலை, அவர் நாட்டு (புறம். 91)**

என்று காரிக்கண்ணனார் கூறுகிறார். புகழ் வாழ்க்கை வாழ்ந்த சான்றோர்களைப் பற்றி து.சிவராகவன் குறிப்பிடும் பொழுது 'வாழ்ந்து மறைந்தவர்க்கு நினைவாலயங்கள் அமைக்கப்படும் மக்கள் உள்ளத்தில் அவர்தம்

உரைகளில் வெளிப்படுதலே மிகச் சிறந்த நினைவாலயம் ஆகும்"எனக் கூறுவது கருதத்தக்கது. வாழும் போதே பெறுகின்ற புகழ் தான் மரணத்தின் பின் உலகத்தில் நிலைத்திருக்கும் என்னும் நம்பிக்கையும் புறநானூற்றுப் பாடலின் வழி காண முடிகின்றது.

**முடிவுரை**

புறநானூற்றில் புகழ் எனும் தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் புகழ் குறித்த விழுமியங்கள், புகழ்பாடும் துறைகள், மறப்புகழ், கொடைப்புகழ், சொற்புகழ், மனைப்புகழ், குற்றமில்லா புகழ், நீடு விளங்கும் புகழ், புகழ் பெருமிதம் என்ற பல்வேறு உட்தலைப்புகளில் எடுத்தாளப்பட்டுள்ளன.

**பார்வை நூல்கள்**


1. சரஸ்வதி, கே.என்., அர்த்தநாரீஸ்வரர், பால, திருக்குறள் தெளிவுரை
   கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், தி-நகர், சென்னை. முதற்பதிப்பு
   ஜூன் 2004
2. மாணிக்கனார், அ., புறநானூறு தெளிவுரை, வர்த்தமானன் பதிப்பகம்
   தியாகராய நகர், சென்னை - 17 இரண்டாம் பதிப்பு - 2001



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Anudyana A., (2021) Fame in Puranaanooru, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:116-121. Cauvery College For Women, Trichy.

**முனைவர் மா. சங்கீதா**
தமிழ் ஆர்வலர்
பாளையம் பசார்
உறையூர்
திருச்சிராப்பள்ளி - 3.

## பத்துப்பாட்டுப் பகரும் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

பத்துப்பாட்டுப் பகரும் தமிழர் அடையாளங்கள் எனும் தலைப்பின் கீழ் ஆராயப் பெறவுள்ளன. இதில் ஐவகை நிலங்களில் வ*ழ்*கின்ற மக்களில் குறிப்பாக, குறிஞ்சி நிலத்தில் *வாழ்*கின்ற மக்களின் வாழ்வியல் அடையாளங்களாக விளங்குகின்ற குறிஞ்சி நில மக்களின் தொழில்களாக விளங்குகின்ற வேட்டையாடுதல், தினை முதலியவற்றை விதைத்தல், தினைப்புனங்களைக் காத்தல், தேனெடுத்தல், கிழங்கு வகைகளைப் பயிராக்குதல் போன்றவையும், குறிஞ்சிநில மக்கள் பொதுவாக, கானவர், குறவர், குன்றவர் என்று அழைக்கப்படுவர். பழந்தமிழர்கள் நெடுந்தொலைவிலுள்ள யவனம், கடாரம், போன்ற நாடுகளில் வாழ்ந்தவர்களோடும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். இந்தியாவில் இமயமலை வரையில் சென்று எந்தவொரு அடிப்படை வசதிகள் இல்லாத போதிலும் வாணிபம் செய்துள்ளனர் என்பது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்களின் இல்லங்கள் சிற்றூர்களிலும், பேரூர்களிலும் எவ்வாறு இருந்தன என்பதைப் பற்றியும், சோழ நாட்டில் குறிஞ்சிநில மக்கள் தேனையும், கிழங்கையும் உண்டார்கள். பிற நிலத்தார்க்கும் விற்று மீன் நெய்யையும், நறவையும் வாங்கிச் சென்றார்கள் பண்டைக் காலத்தில் இலைகளையும், தழைகளையும், பட்டைகளையும் உடுக்கத் தொடங்கினர். விலங்குகளின் தோல்களையும் ஆடைகளாகப் பயன்படுத்தி வந்தனர். நெசவுத்தொழில் கண்டறிந்தப் பிறகு பருத்தி ஆடைகளையும், பட்டாடைகளையும் பயன்படுத்தத் தொடங்கினர். முடியில் அணியும் அணிகலன்களாக, தாமம், மகுடம், பதுமம், கோடகம், கிம்புரி ஆகிய ஐந்துறுப்புகள் இருந்துள்ளதை திவாகரம் மற்றும் பிங்கல நிகண்டுகள் குறிப்பிடுகிறது. இவ்வைந்து உறுப்புகளும் ஒருங்கே அமைய பெற்ற விலை மதிப்பற்ற, வேலைப்பாடு நிறைந்த முடியை முருகப்பெருமான் அணிந்திருந்ததாக திருமுருகாற்றுப்படை கூறுகிறது. மேலும் அவர்கள் அணிந்திருந்த அணிகலன்கள், மணி வகைகள் கடவுள் வழிபாடு, கடவுளுக்கு அணிவித்து அழகு பார்த்த அணிகலன்கள் பற்றிய செய்திகளும் பத்துப்பாட்டு வழிநின்று குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் தமிழர்களின் அடையாளமாக மிளிர்வதை இவ் ஆய்வுக் கட்டுரையில் ஆராயப் பெற்றுள்ளன.

**முன்னுரை**

உலகில் வாழ்கின்ற எண்ணற்ற மக்களில் இன்றளவும் தமிழர்கள் தனக்கென்று சில அடையாளங்களைத் தக்க வைத்துள்ளனர். பண்டைத் தமிழகத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும், அறிவியல் செல்வத்தையும், அடையாளங்களையும் கண்முன் நிறுத்துவது புலவர்களின் பாடல்களேலாகும். அத்தகைய பாடல்களில் இன்று நமக்குக் கிடைப்பவைப் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமேயாகும். எட்டுப் புலவர்கள் பாடிய பத்துப் பெரும் பாடல்களின் தொகுதியே பத்துப்பாட்டு ஆகும். சங்க இலக்கியங்களில் காணப்படுகின்ற பழந்தமிழர்களாக விளங்குகின்ற குறிஞ்சிநில மக்களின் வாழ்க்கையில் காணப்படுகின்ற பழந்தமிழரின் தொழில்கள், வாணிபம், உணவு முறைகள், அணிகலன்கள், அவர்கள் வாழும் இல்லங்கள், வழிபட்ட கடவுளர் வழிபாடு ஆகியவை இன்றளவும் தமிழர்களின் அடையாளங்களைப் பறைசாற்றுகின்றன என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**குறிஞ்சிநில மக்களின் தொழில்கள்**

கான்உறை வாழ்க்கையராகிய குறிஞ்சிநில மக்கள் காட்டில் வாழும் விலங்குகளோடு போரிட்டு வெல்லும் விலங்கினராய் விற்பயிற்சி பெறுதலினாலேயே தோள் வலிமை வாய்ந்திருந்தனர். இதனால் இவர்கள் **சிலை நவில் எறுள்த்தோள்** (பெரும்-145) உடையவர் என்றும் **கொடுந் தொழில் எல்லில் கொலைஇய கானவர்** (திருமுருகு – 194) என்றும் சிறப்பிக்கப்படுகின்றனர். வேட்டையாடுதல் இவர்களின் முக்கியத்தொழில் வில்லும் அம்பும்

இவர்களது ஆயுதங்கள். வேட்டைக்கு உதவியாக நாயையும் உடன் அழைத்துச் செல்வர். நாய்களும் இவர்களுக்கு உதவுவதை நற்றிணைப் பதிவு செய்கிறது. பகை மன்னர்களுடைய பசுக்களைக் கவர்ந்து வருவதும் உண்டு. இவர்கள் உழவுத் தொழிலும் செய்வர். தினையுடன் அவரை முதலியனவும் பயிரிடுவர். தினைப் பயிர் முற்றும் பருவத்து அதனை கவரவரும் கிளி முதலிய பறவைகளைக் குறவர் மகளிர் பரண் மேலிருந்து கவண் எறிந்து ஓட்டிக் காவல் புரிந்தனர். இரவில் தீக்கொள்ளிகளை எறிந்து யானைகளை ஓட்டுவர் என்பதை,

**துணையின் திரிந்த கருங்கண் யானை**

**அணைய கண்ட அம்குடி குறவர்**

**கணையர் கிணையர் கைபுணை கவணர்**

**விளியர் புறக்குடி ஆர்க்கும் நாட** (நற்றிணை -108)

யானையை ஓட்டிய வகைகளும், மலையிலுள்ள தேன்களை எடுத்து தேன் சேகரித்தலும் செய்வர். மேலும், குறிஞ்சிநிலத் தொழில்களில் முக்கிய இடம் பெறுவது மலைநெல், தினை முதலியவற்றை விதைத்தல், தினைப்புனங்களைக் காத்தல், தேனெடுத்தல், வேட்டையாடல், கிழங்கு வகைகளைப் பயிராக்குதல் போன்றையாகும். மலையைச் சுற்றியுள்ள அடிவாரப் பகுதிகளில் எள், தினை, வரகு, மூங்கில் நெல், வெண் சிறுகடுகு, இஞ்சிக்கிழங்கு, கவலைக்கிழங்கு, மலைவாழை, மா, பலா முதலியன விளைந்தன என்று மலைப்படுகடாம் குறிப்பிடுகிறது. (மலைப்படுகடாம் - 102 – 139) மலை மீது தினை பயிர்ளும், கிழங்கு வகைகளும் பயிரிடப்பட்டு இன்றளவும் தொடர்வது மலைவாழ் மக்களின் அடையாளமாகத் திகழ்கிறது.

### குறிஞ்சி நிலத்தில் வாணிபம்

குறிஞ்சிநில மக்கள் பொதுவாக, கானவர், குறவர், குன்றவர் என்று அழைக்கப்படுவர். பழந்தமிழர்கள் நெடுந்தொலைவிலுள்ள யவனம், கடாரம், போன்ற நாடுகளில் வாழ்ந்தவர்களோடும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். மேலும், இமயமலைக்கு மலைப்பகுதியில் வாழ்ந்த வீரப்பெருமக்களாவர். மலை வாழ்க்கைக்கேற்ற திண்ணிய உடல்வலிமை வாய்ந்தவர்கள். **மறம்பூண் வாழ்க்கையர்** (பெரும் 134-136) என்றும் **வாட்குடிகள்** (பெரும் 137) என்றும் குறிக்கப்படுகின்றனர். குறிஞ்சி நில மக்கள் தேன், கிழங்கு, மான், தசை, மது முதலியவற்றை விற்றுத் தங்களுக்கு வேண்டிய உணவுப்பொருட்களை வாங்கிக் கொண்டார்கள். இங்ஙனம் பழந்தமிழர்கள் பண்டங்களைக் கொடுத்துப் பண்டங்களைப் பெற்றுக் கொண்டனர். மிளகு சேர நாட்டில் விளைந்தது. பிற நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டது. வணிகர் மிளகுப் பொதிகளைக் கழுதைகளின் மீது ஏற்றி ஊர் ஊராய் சென்று விற்று வந்தனர் என்பதைப் பெரும்பானாற்றுப்படை *ப*கர்கிறது. (பெ.பாஆ. 80-81) தமிழ்நாட்டு வணிகர்கள் பயிர்த்தொழில் போலவே, உள்நாட்டு வணிகத்தையும், வெளிநாட்டு வணிகத்தையும் வளம்பெற வளர்த்தனர். தம் நாடு முழுவதும் வண்டிகள் செல்லக் கூடிய நல்ல பாதைகளை அமைத்திருந்தனர். வணிகப் பொருட்களைப் பாதுகாக்க ஆங்காங்கே காவலரை நிறுத்தியிருந்தனர். பெருவழிகளிலும் கவர்த்த வழிகளிலும், விற்படை வீரர்கள் காவல் காத்தனர். (பெபாஆ. 79-81) மலையில் கிடக்கும் மான் தசை, யானை கோடு, யகில், சந்தனம் முதலியவற்றை இவர்கள் நாட்டில் வாழ்வார்க்கு விற்று நெல் பெற்று செல்லுதல் வணிகர் வாழ்க்கையாகும் *என* (புறம் 33-1-7) புறநானூறு குறிப்பிடுகின்றது.

### குறிஞ்சிநிலத்தாரின் இல்லங்கள்

ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்களின் இல்லங்கள் சிற்றூர்களிலும், பேரூர்களிலும் எவ்வாறு இருந்தன என்பதைப் பத்துப்பாட்டு ஓரளவு பறைச் சாற்றுகிறது. மலையும் மலைச் சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலத்தில் தினை முதலிய பயிர்களைத் தின்ன வரும் யானை, பன்றி முதலிய பயிர்களைத் தின்ன வரும் விலங்குகளையும், கிளி முதலிய பறவைகளையும், விரட்டுவதற்காக கானவர் உயர்ந்த மரக்கிளைகளில் பரண் கட்டினர். (பெ பா ஆ 51-52) குறிஞ்சி நிலமக்கள் குறுகிய கால்களை நட்டுத் தினையரிந்த தாளால் வேய்ந்த குடிலில் வாழ்ந்தன. (குறிஞ்சிப் பாட்டு 153 - 154) கழிகளை நட்டுத் திணையரிந்த தாளால் வேய்ந்த குடில்களில் சவ்வாது மலை மக்கள் வாழ்ந்தனர். (மலைபடுகடாம் 438-439) குறிஞ்சிநில மக்களின் வீடுகள் சிறிய குடிசைகளாக இருந்தன. **சிலம்படைந்திருந்த பாக்கம்** (மலைபடுகடாம் 162) **குறவர் பாக்கம்** (குறுந்தொகை - 319) **சிறுகுடி** (முருகு 196) கால்களை நட்டு அதன் மேல்

புற்களை வேய்ந்திருப்பர். இவர்களின் வீடுகளுக்கு முன்பாக வேங்கை முதலிய பெரிய காட்டு மரங்கள் வளர்ந்திருக்கும்.

**குறிஞ்சி நிலத்தாரின் உணவு**

மனிதன் உயிர் வாழ இன்றியமையாத பொருள் உணவாகும். பண்டை மனிதனின் முதல் தேவையே உணவாக இருந்தது. அவன் இயற்கையாகக் கிடைத்த காய்களையும், விதைகளையும், கிழங்குகளையும் உண்டான். பிறகு விலங்குகளையும், பறவைகளையும், வேட்டையாடி உண்ணத் தொடங்கினான். அதன் பிறகு தீயை கண்டுபிடித்ததும். பக்குவப்படுத்தி உணவுகளை உண்ணத் தொடங்கினான்.

சோழ நாட்டில் குறிஞ்சிநில மக்கள் தேனையும், கிழங்கையும் உண்டார்கள். பிற நிலத்தார்க்கும் விற்று மீன் நெய்யையும், நறவையும் வாங்கிச் சென்றார்கள் என்று பொருநராற்றுப் படை குறிப்பிடுகிறது. பொஆபடை.214-215) மேலும் சிறப்பு நாட்களில் நெய் மிகுந்த உணவை உட்கொண்டனர் என்பதைக் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகிறது. (கு.பாட்டு-304) நன்னனுடைய சவ்வாது மலையில் அடிவாரத்தில் சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள் தினைசோறும், நெய்யில் வெந்த இறைச்சியும் உண்டார்கள் என்பதை மலைபடுகடாம் எடுத்துரைக்கிறது. (மலைபடுகடாம் 168 -169) நன்னனுடைய சவ்வாது மலையைச் சேர்ந்த குறிஞ்சிநிலத்தவர் பெண்நாய் கடித்த உடும்பின் இறைச்சியையும், கடமான் இறைச்சியையும், பன்றி இறைச்சியையும் உண்டனர். நெல்லால் சமைத்த கள்ளையும் தேனால் செய்த முங்கிற் கணையுள் முக்கிய கள்ளையும் பருகினர். பலாக்கொட்டை, மா, புளிநீர் மோர் ஆகியவற்றைக் கொண்டு தயாரித்த குழம்பையும், மூங்கில் அரிசி சோற்றையும் உண்டனர். (மலைபடுகடாம் 171 -183) மலை நாட்டை காவல் புரிந்த வீரர் இறைச்சியையும், கிழங்கையும் உண்டனர். மலைபடுகடாம் 425 – 426) மலை மீது நடந்து சென்ற கூத்தர் தினைப்புனத்துள் காவலனால் கொல்லப்பட்ட காட்டுப்பன்றியின் மயிரைப் போக்கி முங்கில் பற்றி எரியும் நெருப்பில் வதக்கி இறைச்சியை உண்டனர். எஞ்சியைப் பகுதியை எடுத்து சென்றனர் என்று மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. (மலைபடுகடாம் -243 - 249).

குறிஞ்சி நிலத்தவர் தம்மை நாடி வரும் விருந்தினரை உபசரித்து விட்டு மலையில் யாரேனும் வழித் தவறி திகைத்து நிற்பாராயின் அவர்களுக்கும் இவர்கள் வழிகாட்டுவார் என்று மலைபடுகடாம் குறிப்பிடுகிறது. (ம.கடாம் 278 - 279) விருந்தோம்பல் பண்புகளிலும் அவர்கள் சிறந்து விளங்கினர் என்பதை அறிய முடிகிறது.

**குறிஞ்சி நில மக்களின் உடைகள்**

பண்டைக் காலத்தில் இலைகளையும், தழைகளையும், பட்டைகளையும் உடுக்கத் தொடங்கினர். விலங்குகளின் தோள்களையும் ஆடைகளாகப் பயன்படுத்தி வந்தனர். நெசவுத்தொழில் கண்டறிந்தப் பிறகு பருத்தி ஆடைகளையும், பட்டாடைகளையும் பயன்படுத்தத் தொடங்கினர்.

**தழை உடை**

குறமகள் மராமரக் கொத்துக்களை நடுவே வைத்து இலையையுடைய நறிய பூங்கொத்துக்களைச் சுற்றிலும் வைத்துத் தொடுத்த பெரிய அழகிய தழையுடையை உடுத்தினான். (திருமுருகு 201 – 203) முருகப்பெருமான் நலம்பெறு கலிங்கம் உடுத்தியிருந்தான் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. (திருமுருகு – 109) முருகன் செம்மை நிறம் பெற்ற ஆடை அணிந்ததாக நச்சினாக்கிணியர் குறிப்பிடுகிறார். முருகப்பெருமான் இடையில் உதரபந்தத்தில் மேல் உடுத்தத் தொங்கவிட்ட மென்மையான துகில் அவன் குறமகளோடு குரவைக் கூத்தாடுகையில் நிலத்தில் பொருந்தியது என்று திருமுருகாற்றுப்படைக் குறிப்பிடுகிறது. (திருமுருகு –213 214) திருப்பரங்குன்றத்து முருகனின் சிறப்பைப்பாடி விளையாடிய சூரர மகளிர் இந்திரக்கோபத்தை ஒத்த நிறம் பிடியாத இயல்பான சிவப்பாகிய பூ வேலைப்பாடு அமைந்தத் துகிலை உடுத்தியிருந்தனர்.

**'கோபத்தன்ன தோயாப் பூந்துகில்** (திருமுருகு – 15)

துணங்கைக் கூத்தாடிய பூதங்கள் துகிலை உடுத்தின போல என்பது உவமையாகக் கூறப்பட்டது. இங்கு துகில் என்பது வெள்ளையாடையைக் குறிப்பதாக நச்சிபார்கிணியர் குறிப்பிடுகிறார். திருவாவி நன்குடியில் முருகனை வழிப்பட்ட முனிவர் மரவுரியை உடுத்தியிருந்தார். (திருமுருகு 126) கந்தவர்கள் எனப்படும் இசைவாணர்கள் புகையை முகந்தால் ஒத்த மிக மெல்லிய அழுக்கேறாத தூய உடையினை அணிந்திருந்தனர்.

**‘புகைமுகந் தன்ன மாசில் தூவுடை’** (திருமுருகு - 138)

ஏரகத்து முருகன் கோயில் அருச்சகர் அறையில் காழகம் எனும் ஆடையை உடுத்தி இருந்தனர்.

**புலராக் காழகம் புலர வுடீஇ** (திருமுருகு - 184)

துகில், அறுவை, கலிங்கம் என்பவை மிகவுயர்ந்த மெல்லிய வேலைப் பாடமைந்த ஆடைகளாகும். இதுபோன்ற ஆடைகளை அரசர், செல்வர்களும் உடுத்தினர். கடவுள் திருவுருவங்களுக்கும் அணிவித்தனர். காழகம் எனும் ஆடை வகையை அருச்சகர் அணிந்திருந்தனர். முனிவர்கள் மரவுரி தரித்திருந்தனர். கானவர், வீரர், கச்சை அணிந்திருந்தனர். நாகரிக வளர்ச்சிப் பெற்ற இன்றைய காலக்கட்டத்தில் கூட மலையில் வாழ்கின்ற மக்கள் தழையாடைகளையும், முனிவர்கள் மரவுரியையும் தரித்திரிப்பதைக் காண முடிகிறது. மலைவாழ் மக்கள் தாங்கள் தழையாடை அணிந்திருந்தாலும், தாங்கள் வழிபடும் முருகனுக்கு நன்கு வேலைப்பாடமைந்த விலையுயர்ந்த ஆடைகளை உடுத்தி மகிழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**அணிகலன்கள்**

முடியில் அணியும் அணிகலன்களாக, தாமம், மகுடம், பதுமம், கோடகம், கிம்புரி ஆகிய ஐந்துறுப்புகள் இருந்துள்ளதை திவாகரம் மற்றும் பிங்கல நிகண்டுகள் குறிப்பிடுகிறது. இவ்வைந்து உறுப்புகளும் ஒருங்கே அமைய பெற்ற விலை மதிப்பற்ற, வேலைப்பாடு நிறைந்த முடியை முருகப்பெருமான் அணிந்திருந்ததாக திருமுருகாற்றுப்படை கூறுகிறது. (திருமுருகு – 84 – 85 உரை) தலைக்கோலம் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றத்துச் சோலையில் விளையாடிக் கொண்டிருந்த சூரர மகளிர் என அழைக்கப்படுகின்ற சீதேவி என்பவள் தலைக்கோலத்துடன் வலம்புரி வடிவாக செய்த தலைக் கோலத்தையும் தலையில் வைத்திருந்தாள். நெற்றியின் கண் சுறாவினது அங்காத்த வாயைப் பால் பண்ணின தலைக்கோலம் அணிந்திருந்தாள்.

**தெய்வ வுந்தியோடு வலம்புரி வயின்வைத்துத்**

**திலகந் தைஇய தேங்கமழ் திருநுதழ்**

**மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்து** (திருமுருகு – 23-25)

முருகப்பெருமான் பொலங்குழை என்று அழைக்கப்படும் மகரக்குழையைக் காதணியாக அணிந்திருந்தான். (திருமுருகு – 86) தொடி என்றழைக்கப்படும் கையணிகளை ஆடவரின் பின் கையில் வீரத்திற்கு அறிகுறியாக அணிந்திருந்தனர். முருகப்பெருமான் **‘தொடியணி தோழன்’** (திருமுருகு – 212) எனஅழைக்கப்பட்டான். இடையில் அணியும் அணிகலன்களாக, முருகப்பெருமான் குறமகளிரோடு குரவைக் கூத்தாடுகையில் அரையில் குறும்பொறி அணிந்திருப்பவன் என்று திருமுருகாற்றுப் படை தெரிவிக்கிறது.

**குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்**

**மருங்கு**. (திருமுருகு – 213 - 214)

குறும்பொறி என்றால் வயிற்றைச் சுற்றி பொருந்தியுள்ள அணியாகும். சில்காழ் என்னும் அணிகலன்களைத் திருபரங்குன்றத்துச் சோலையில் விளையாடிய சூரர மகளிர் பல்கால் நிறைத்த சில்காழ் அணிந்திருந்தனர் என்று திருமுருகாற்றுப் படை தெரிவிக்கிறது. அதாவது பல மணிகள் கோர்த்த ஏழு வடமாகிய மேகலை என்று பொருள் உரைக்கின்றார். பருமம் என்னும் திருவாவினன்குடியில் முருகனைப் புகழ்ந்தேத்திய கந்தருவ மகளிர் **‘இன்னகைப் பருமம்’** என்ற அணியை இடையில் அணிந்திருந்தார்கள். பருமம் என்பதற்கு கண்ணுக்கினிய ஒளியினையுடைய பதினெண் கோவையாகிய மேகலை எனப் பொருள் உரைத்தார். சூரரமகளிர் கால்களில் கிண்கிணி எனும் சிறுசதங்கையை காலணிகளாக அணிந்திருந்தனர் என்று திருமுருகாற்றுப்படைக் கூறுகிறது.

**கழுத்தணிகள்**

கழுத்தில் தொங்கவிடப்பட்டு மார்பை அணி செய்யும் அணிகளைக் கழுத்தணிகள் அல்லது மார்பணிகள் என்றழைத்தனர். பொன்னறி மாலை என்னும் அணிகலனை முருகப் பெருமானது ஊர்தியான பிணிமுகம் எனும் யானை அணிந்திருந்ததாகத் திருமுருகாற்றுப்படைத் தெரிவிக்கிறது. (திருமுருகு -79) முருகப் பெருமானது மார்பில் பொன்மாலை பொலிவுற்றது என்று திருமுருகாற்றுப்படைத் தெரிவிக்கிறது. (முருகு -104) முத்து மாலையும் பொன்னரி மாலையும்

கழுத்தையும் மார்பையும் அணி செய்தார் போலவே வேறு சில அணிவகைகளும் அணி செய்தன என்று தகவல்களும் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன. அதாவது பூண், இழை, கலம் போன்ற அணிகலன்களை அணிந்தனர். ஆனாலும் மற்ற அணிகலன்களைப் போன்று ஒரு முழுமையானத் தகவல்கள் கிடைக்கவில்லை.

**'சூரர மகளிர் நுண்பூண் ஆகத் திளைப்ப'** (முருகு -32)

இவ்வடியில் அதாவது நுண்ணிய வேலைப்பாடமைந்த பூண்கள் மார்பில் அணிந்திருந்தனர். என்ற செய்தி மட்டுமே அறிய முடிகிறது. குறிஞ்சிப் பாட்டில்

**மைந்நிரைக் கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்**

**தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலிய** (குறிஞ்சிப்பாட்டு 121 -122)

இவ்வடியில் குறிஞ்சிநிலத் தலைவனின் மார்பில் தொன்றுத் தொட்டு விளங்குகின்ற பேரணியைக் குறிக்கிறது. சூரரமகளிர் சாம்பூதகம் என்னும் உயர்ந்த பொன்னாலான அவிரிலை எனும் இழையை அணிந்திருந்தனர். (முருகு -18) குறிஞ்சிநிலத் தலைவி,

**முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை**

**நேர்வருங் குரைய கலம்** (குறிஞ்சிப்பாட்டு 13 – 14)

இவ்வடியில் கலம் என்பது பூண் என்ற பொருளைத் தருகிறது. முருகப் பெருமானுடைய யானைகள் பொன்னறி மாலையையும், நெற்றிப் பட்டத்தையும் அணிந்திருந்தனர். (முருகு -79) பத்துப்பாட்டுள் சில பொன் வகைகள் சில இடங்களில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன. சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூதகம், எனப் பொன் நான்கு வகைப்படும். (சிலம்பு காதை 14 201 - 203) என்று சிலப்பதிகாரம் பகர்கிறது. சங்கக்காலத்தில் பழந்தமிழர்கள் கிடைக்கும் நிலத்திற்கேற்ப பொன்னின் பெயரைச் சூட்டியிருந்தனர். மலையில் கிடைத்தப் பொன் சாதகும்பா எனப் பெயர் பெற்றது. ஐதன் நிறம் தாமரை இதழின் நிறம் போன்றது. ஜாம்பு என்ற நதியிற் கிடைத்தப் பொன் சாம்பு நதம் எனப்பட்டது. பொன் வகைகளில் உயர்ந்தது சாம்பு நதம் என்று திருவள்ளுவ மாலை (திருவள்ளுவ மாலை -36) குறிப்பிடுகிறது. அச்சாம்பு நதம் கொண்டு செய்யப்பட்ட இழைகளைச் சூரர மகளிர் அணிந்திருந்தனர். (முருகு -18)

**மணி வகைகள்**

வைரம், முத்து, மகரதம், மாணிக்கம், நீலம், புட்பராகம், வைடூரியம், கோமேதகம், பவளம் போன்றவை ஒன்பது வகையான மணிகளாகும். இவை விலை மதிப்பு மிக்கவையாகும். இவற்றுள், வைரம், முத்து, மரகதம், மாணிக்கம் என்னும் நான்கும் தலை மணிகள் எனப்படும். நீலம், புட்பராகம், வைடூரியம், இடையணிகள் எனப்படும். கோமேதகம், பவளம் இரண்டும் கடை மணிகள் எனப்படும். ஐவகை நிலங்களிலும் ஒன்பது வகையான மணிகள் சிற்சில இடங்களில் காணப்படுகிறது. பத்துப்பாட்டில் மணி வகைகள்

**நீலமணிப்போலும் பூவினையுடைய காயா** (பொ.ஆ - 200)
**முத்தினும் மணியினும் அத்துணை**
**நேர்வருங் குறைய கலம்** (கு .பாட்டு 13 – 14)

இவ்வடிகள் முத்துகளும், மணிகளும் கொண்ட நகைகள் இருந்தமையை உணர்த்துகின்றன. பொன்னின் அழுத்தின நீலமணி போன்ற சிறிய முதுகிடத்துத் தாழ்ந்து கிடந்த கரிய கூந்தல் (கு .பாட்டு 58 – 60) என்று குறிஞ்சிப் பாட்டில் வந்துள்ளது.

**பரூஉக்கா ழாரம் சொரிந்த முத்தமொடு**
**பொன்சுடு நெருப்பின் நிலமும் கென்ன**
**அம்மென் குரும்பைக் காய்படுப் பிறவும்** (மதுரைக் காஞ்சி 681 – 683)

மதுரைக் காஞ்சியில் இடம் பெற்றுள்ள இவ்வடிகளில் பிறவும் என்பதற்கு நச்சினாக்கினியர் முத்து ஒழிந்த மாணிக்கமும், மரகதமும், பொன்னும், மணிகளும் எனப் பொருள் கூறியுள்ளார். இவ்வடியில் மணி என்பது நீலமணியனைக் குறிக்கிறது.

**வடமலை பிறந்த மணியும் பொன்னும்** (ப. .பாலை 187)

இவ்வடியில் மணி என்பது மாணிக்கம் என்ற பொருளில் வருகிறது.

**அவரை பவளம் போல் பூத்தது.** (சிறுபாண் (164)

**பூம்புகார் நகர செல்வ மகளிர் பவளம் போன்ற நிறத்தினர்** (ப. .பாலை 148)

பவளத்தின் பிறப்பிடம் கீழ்கடல் என்றும் பவளத்திற்கு துகிர் என்ற பெயர் உண்டு என்பதையும் பட்டினப் பாலைப் பகர்கிறது.

**கடவுள் வழிபாடு**

குறவரும் குறமகளிரும் மலைக்கடவுளை வாழ்த்தி வணங்குவர். இக்கடவுளை வேங்கை மலரால் பூசிப்பர். இனிய பலிகளும் இடுவர். தும் குடும்பத்தாரோடு கூடி வாழ்த்துக் கூறுவர்.

**குன்றக் குறவர் காதல் மடமகள்**
**மன்ற வேங்கை மலர்சில கொண்டு**
**மலை உறை கடவுள் குலமுதல் வாழ்த்தி**
**தேம்பலி செய்த ஈர்நறுங் கையள்** (ஐங்குநுறூறு – 259)

ஐங்குநூற்றில் குறமகள் செய்த கடவுள் வழிபாட்டை அறிய முடிகிறது. முருகப் பெருமானே இவர்கள் வாழும் நிலத்துப் பெருந்தெய்வம். தொல்காப்பியமும் **'சேயோன் மேய மைவரை உலகமும்'** முருகன் பெருமான் பொருட்டு வெறியாட்டு என்னும் முருகப் பூசையும் செய்து குரவைக் கூத்து ஆடி வழிபடுவர். வெறியாட்டின் போது இவர்கள் முழக்கும் பறை **முருகியம்** (முருகு -243) எனப்படும். **மடிவாய் தண்ணுமையும்** (பெபாஆ - 144), தொண்டச் சிறுபறையும் (முருகு -297) இவர்கள் முழக்குதல் உண்டு. கோடு என்னும் ஊது கம்பினால் முழக்கம் எழுப்பி இசைக் கருவிகளை இசைக்கச் செய்வர். மலைப்படுகடாம் சேம்பு, மஞ்சள் ஆகியவற்றை பன்றிகள் அகன்று விடாமல் இருக்கப் பறைக் கொட்டுகின்றனர். இப்படியாக பல்வேறு ஓசைகளை நன்னனுடைய மலையிடத்தே கேட்கக் கூடும். பெருங்குன்றூர் கௌசிகனார் மலை ஓசை வருணனைகளும் மலையுறை மக்களின் வாழ்க்கை கூறுகளும் பழக்க வழக்கங்களையும் (மலைப்படுகடாம் 292-348) மலைப்படுகடாம் தொகுத்துக் கூறுகிறது

**முடிவுரை**

பண்டைத் தமிழர்களின் வாழ்வில் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றனர். அதிலும் குறிப்பாக பத்துப்பாட்டு இலக்கியங்கள் குறிஞ்சிநில மக்கள் வாழ்ந்த இல்லங்கள், அவர்கள் செய்த தொழில்கள், வாணிப முறைகள், பண்டமாற்று முறைகள், அவர்கள் உச்சி முதல் பாதம் வரை அணிந்திருந்த அணிகலன்கள் கடவுளை வழிபாடு செய்த முறைகள், குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் முறைகள், இன்றளவும் தமிழர்களின் அடையாளமாக மிளிர்வதை இவ்ஆய்வுக் கட்டுரை பகர்கிறது.

**துணை நூற்பட்டியல்**


1. இராசமாணிக்கனார். மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதமி, இரவீந்திர பவன், 35. பெரோசா சாலை, புதுதில்லி. 110 001
2. சண்முகம் பிள்ளை, மு., சங்கத்தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைசாலை, சி.ஐ.டி வளாகம், சென்னை 600 113
3. சுப்பிரமணியன் .ச.வே., பத்துப்பாட்டு முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், 31. சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600 008
4. சுப்பிரமணியன் .ச.வே., எட்டுத் தொகை மூலமும் தெளிவுரையும், தொகுதி 1, மணிவாசகர் பதிப்பகம், 31. சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600 008
5. சுப்பு ரெட்டியார். ந., தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை., பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, பீட்டர்ஸ் சாலை, சென்னை 600 014



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Sangeetha M., (2021) Tamil identities in Pathupaatu, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:122-127. Cauvery College For Women, Trichy.

**முனைவர் சு.சீனிவாசன்**
உதவிப்பேராசரியர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி
திருச்சி – 02.

# ஆற்றுப்படை இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

பத்துப்பாட்டு ஆற்றுப்படை நூல்களில் வழிபாடு, மூவேந்தர்கள் குறித்த செய்தி, கடையெழு வள்ளல்களின் கொடைத்தன்மை, காவிரி, சேயாறு ஆகிய நதிகள் குறித்த பதிவு, விருந்தோம்பல் பண்பு, பண்டமாற்று முறை, அறவோர் மன்றம், தமிழ்ச்சங்கம், யவனரின் வணிகம் ஆகியவை எம்முறையில் அமைந்து தமிழ்களின் அடையாளமாக திகழ்கிறது என்பதை இவ்ஆய்வுக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

**முன்னுரை**

அடையாளம் என்பது ஓர் இனத்தையோ, மொழியையோ கண்டறிவது எனலாம். ஒவ்வொரு இனமும், சமூகமும் தங்களுக்கும், தங்களுடையதாகக் கருதப்படும் சில வாழ்க்கைப் பண்பாட்டு அடையாளக் கூறுகள் இருக்கும். அவ்வாறு தங்களுடைய அடையாளக் கூறுகளாகக் கருதப்படுபவை, கருத்தாகவோ, பொருள்களாகவோ என அமையலாம். இவற்றுள் சிலவோ, பலவோ தமிழர்களுக்கு மட்டுமே உரித்தானது என்று கருத இயலாது. எனினும் தமிழர்கள் அவற்றைத் தம் பண்பாட்டோடு ஆழமான நெருக்கம் உடையவர்களாகக் கருதுகிறார்கள். இவ்வகையில், சங்க இலக்கியப் பத்துப்பாட்டு நூல்களில் செம்பாதியாக அமைந்திருக்கும் ஆற்றுப்படை இலக்கியங்களில் தமிழர் குறித்த அடையாளங்கள் எவ்வெவ் நிலையில் அமைந்திருக்கின்றன என்பதை ஆராய்வதே இவ்ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அடையாளம் - பொருள்:**

அடையாளம் என்பதற்குக் கழகத்தமிழ் அகராதி “அறிகுறி” (கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, ப.15. 1964) என்ற பொருளைத் தருகிறது. கௌராத் தமிழ் அகராதி, அங்கம், அச்சு, அறிகுறி”2 (எஸ்.கௌமாரிஸ்வரி (ப.ஆ.), கௌரா தமிழ் அகராதி, ப.14, 2010) என்று கூறுகிறது. தமிழ் லெக்சிகன், தமிழைத் தாய்மொழியாக உடையவன். ஆரியனல்லாத தென்னாட்டான்”3 (தமிழ் லெக்சிகன் ) என்கிறது.

**1.வழிபாடு**

தமிழர்களுடைய பண்பாட்டில் வழிபாடு என்பது முதன்மையாகக் கொள்ளப்பட்டது. தமிழர்கள் பெண் தெய்வத்தை அதிகமாக வழிபடக்கூடியவர்கள் என்ற அடையாளமும் உண்டு. சமயம் என்பது உலக இனத்தவர்கள் அனைவருக்கும் பொதுவானது என்றாலும் தமிழர்களின் அடையாளத்தில் அவை தனித்து விளங்குகின்றன எனலாம். தமிழர்கள் முதன்முதலாக வழிபட்டது பெண் தெய்வங்கள். காடுகளில் இயற்கையோடு வாழ்ந்த மனிதன் இயற்கைக்கு அஞ்சியும் வழிநடைப் பயணம் மேற்கொள்ளும் பொழுதும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள தனக்கு மீறிய சக்தி உள்ளது என்று கருதியும் தெய்வங்களை உருவாக்கினான். அவை முதலில் காளி, கூளி என்றழைக்கப்பட்டன. இத்தெய்வங்களை வணங்கினால் செல்கின்ற பயணம் நன்முறையில் அமையும் என்று நம்பிக்கைக் கொண்டான்.

**காடுறை தெய்வம்:**

காடுறை தெய்வம் குறித்து ஆற்றுப்படை இலக்கியங்களில் ஒன்றான பொரநராற்றுப்படையில் காண முடிகிறது. ஆற்றுப்படுத்தும் பொருநன் ஆற்றுப்படுத்தப்படும் பொருநனிடத்தில் பாலைநில வழியாகச் செல்லும் பொழுது, யானை உலா வரும் காட்டிடத்தே தங்கி வழிநடை வருத்தம் தாங்கி, மெல்லிய நிழலிடத்தே தங்கி, காட்டகத்தே உறையும் தெய்வங்கள் மனம் மகிழும்படி அவற்றிற்குச் செய்யும் முறைகளைச் செய்து விட்ட பின்னர் செல்க என்று ஆற்றுப்படுத்துவதை,

**“களிறு வழங்கதர்க் கானத் தல்கி**

**இலைமின் மராத்த எவ்வந் தாங்கி**

**வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்**

**காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றைப்” (பொருநர். 49-52)**

என்ற அடிகள் எடுத்துரைப்பதைக் காண முடிகிறது. இக்காடுறைத் தெய்வம் காளி, கூளி என்ற பெயரில் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**காரியுண்டிக்கடவுள்:**

கூத்தராற்றுப்படையில் ஆற்றுப்படுத்தும் கூத்தன், நன்னன் மலையில் மதிலையுடைய திருக்கோயில் உள்ளது. அங்கு காரியுண்டிக்கடவுள் இருப்பதாகக் கூறி அத்தெய்வத்தை வணங்கிச் செல்லுமாறு குறிப்பிடுதை; 225-231 என்ற அடிகள் வழி அறிய முடிகிறது.

**திருமால்:**

இலக்கியங்களில் முதன் முதலாக திருமால் பற்றிய குறிப்பு பெரும்பாணாற்றுப்படையில் இடம் பெறுகிறது. பெரும்பாணன் எதிர்ப்பட்ட பெரும்பாணனை ஆற்றுப்படுத்தும் பொழுது, இளந்திரையனின் போபுர வாயிலை அடையும் முன், தப்பாமல் நீர் பெருகுதலையுடைய பூக்கள் மிக்க துறையிடத்தே இளவேனிலின்பத்தை நுகர்வாரோடே தங்கி இளைப்பாறிப் பின்னர் அத்திருவெஃகாவணையிற் பள்ளி கொண்டுள்ள திருமாலை வாழ்த்திக் நும் யாழை இயக்கிச் செல் என்று கூறுவதை,

**“பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்**

**செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயின்**

**அருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநும்**

**கருங்கோட் டின்னியம் இயக்கினிர் கழிமின்” (பெரும்பாண்: 389- 392)**

என்ற அடிகள் எடுத்துரைக்கிறது.

**மறவரின் நடுகல் வழிபாடு:**

நடுகல் வழிபாடு என்பது தமிழரின் பண்பாட்டு அடையாளங்களுள் இன்றியமையாத ஒன்று. ஆற்றுப்படுத்தும் கூத்தன் ஆற்றுப்படுத்தப்படும் கூத்தனுக்கு நன்னனது நாட்டிற்கு வழி கூறும் போது மறவருக்கரிய நடுகல் பற்றிய செய்தி இடம் பெறுகிறது.

ஏவல் பொருந்தாத பகைவரோடு போர்செய்து தம்படை முதுகிட அதுகண்டு அப்பகைவர் தம் வெற்றிக்களிப்பால் ஆரவாரித்தாராக. அதனைப் பொறாதே இவ்விடம் உயிர்விடுதற்கேற்ற நல்ல காலம் என்று கருதி, மீண்டும் அப்பகைவரோடே போர் ஏற்று உயிர்கொடுத்தவர்கள் நாணமிக்க மறவர். அழியாத புகழையுடைய பெயர்களைப் பொறித்து நடப்பட்ட கற்கள், முதுகிட்டுப்போனவரை இகழ்ந்து நிற்கும் பல வழிகள் எண்ணுதல் மிகுப்படி பலவாயிருக்கும்.

இன்பம் மிகுகின்ற தாளத்தினையுடைய நும்முடைய பாட்டு அந்நடுகல்லில் உறையும் மறத்தெய்வம் விரும்பும் படியாக பழைமை நடக்கின்ற முறைமையினையுடைய நும்முடைய யாழை இயக்கி வணங்கிச் செல்லுக என்று கூறுவதாக இச்செய்தி இடம் பெறுகிறது. (மலைபடு.384-393)

மேற்கண்ட கருத்தினை நோக்கும் பொழுது காடுகளில் உறையும் காளி கூளி போன்ற காடுறை தெய்வத்தை வணங்கியமையையும், மலைகளில் காரியுண்டிக்கடவுளையும், மறவரின் நடுகல் வழிபாட்டையும் வழிபட்ட தமிழரின் வழிபாட்டு அடையாளங்களைக் காண முடிகிறது. மேலும் பெருந்தெய்வாகமாகப் போற்றக்கூடிய திருமாலையும் தமிழன் வணங்கியுள்ள அடையாளக் குறிப்பையும் அறிய முடிகிறது.

**2. மன்னர்களும் வள்ளகல்ளும்:**

தமிழகத்தைப் பல மன்னர்கள் ஆட்சி செய்துள்ளனர். இருப்பினும் அவர்களில் சிலர் மக்களால் போற்றக்கூடியவர்களாகவும், பிற தேச மக்களிடத்து தமிழர்களின் அடையாள மன்னர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள். அவ்வகையில் மூவேந்தர்களும் கடையெழு வள்ளல்களும் அடங்குவர். இவர்கள் குறித்த குறிப்பு ஆற்றுப்படை இலக்கியங்களில் இடம் பெறுகிறது.

**மூவேந்தர்களும் தலைநகரங்களும்:**

தமிழகத்தின் இன்றியமையாத அடையாளத்தோடு விளங்கக்கூடிய முப்பெரும் மன்னர்களாகிய சேரர், சோழர், பாண்டியர் குறித்த குறிப்புகள், அவர்கள் ஆட்சி செய்த தலைநகரங்கள் பற்றிய செய்திகள் சிறுபாணாற்றுப்படையில் இடம் பெறுகிறது. சிறுபாணன் எதிர்ப்பட்ட பாணனிடத்தில், நல்லியக்கோடன் தரும் பரிசிலானது இம்மூவேந்தர்கள் தரும் பரிசிலை விட பெரிது என்று கூறுமிடத்து இக்குறிப்பு இடம் பெறுகிறது.

மேற்றிசைக் கண்ணுள்ள நிலத்தைக் காக்கும் மன்னராகிய சேரர் குடியில் பிறந்தவனும், குட்ட நாட்டுக்குத் தலைவனுமாகிய மன்னனது ஊராகிய வஞ்சி தரும் பரிசில் சிறியது. (சிறுபாண்.41-50)

கொற்கைக்கு வேந்தனும் தமிழ் வீற்றிருந்தமையாலே மகிழ்ச்சி தருகின்ற தெருவினையுடைய மதுரை தரும் பரிசிலும் சிறியது. (சிறுபாண்.51-67)

மருத நிலம் சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய கிழக்கின் கண்ணதாகிய நிலத்தைக் காத்தல் தொழிலையுடைய குடியிலுள்ளான் சோழனது குடிகள் ஒடாமைக்குக் காரணமான உறந்தை தரும் பரிசிலும் சிறியது. (சிறுபாண்.68-83) என்று சிறுபாணாற்றுப்படை கூறுவதன் வழி மூவேந்தர்கள் குறித்த குறிப்பும், அவர்கள் ஆட்சி செய்த சேரநாட்டில் உள்ள வஞ்சி, சோழநாட்டில் உள்ள உறந்தை, பாண்டிய நாட்டில் உள்ள மதுரை ஆகிய தலைநகர் குறித்த குறிப்பும் இடம் பெறுவதையும் இவை தமிழரின் அடையாளமாக இன்றளவும் திகழ்வதையும் காண முடிகிறது.

**கடையெழு வள்ளல்கள்:**

கடையெழு வள்ளல்கள் தம் வாழ்வில் அறத்தின் வழிச் செய்த கொடையினால் தமிழகத்தின் அடையாளமாகத் திகழ்கின்றனர். சிறுபாணன் நல்லியக்கோடனின் பரிசில் சிறப்பினைக் கூறுமிடத்து கடையெழுவள்ளல்கள் குறித்தச் செய்தி இடம் பெறுகிறது.

கடையெழு வள்ளல்களான பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி என்று புகழ்ந்து கூறப்பட்ட வள்ளல்கள் எழுவரும் மேற்கொண்ட கொடையினைத் தான் ஒருவனே தாங்கிய முயற்சியையுடையவன் (சிறுபாண்.84-115) என்பதைச் சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது.

கடையெழு வள்ளல்களுள், மயிலுக்குப் போர்வை தந்த பேகன், முல்லைக்குத் தர் கொடுத்த பாரி, ஔவைக்கு நெல்லிக்கனி தந்த அதியன் போன்றோர்கள்

இன்றளவும் தமிழர்களிடத்தும், பிற தேசத்தாரிடத்தும் பேசக்கூடியவர்களாக அறியக்கூடியவர்களாக தமிழரின் அடையாளமாகத் திகழ்கின்றனர்.

**3. நதிகள்:**

நதிகள் ஒவ்வொரு இனத்தவருக்கும் அடையாளமாகத் திகழ்கிறது. அவ்வகையில் ஆற்றுப்படை இலக்கியங்களில் காவிரி, சேயாறு என்ற இரு நதிகள் குறித்த குறிப்புகள் இடம் பெறுகிறது.

**காவிரி:**

காவிரி நதி தமிழரின் அடையாளமாகத் திகழ்கிறது. இன்று கர்நாடகாவில் இருக்கிறது என்றாலும் அது தமிழரின் அடையாளம். தமிழகத்திலிருந்து பிரிந்ததுதான் கர்நாடகம். முன்பு இந்தியா முழுவதுமே தமிழர்கள் பரவியிருந்தனர் என்ற குறிப்புகளும் நமக்குக் கிடைக்கின்றன. அவ்வகையில் காவிரி பற்றிய வளத்தினைப் பொருநராற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார் 177 வது அடிகளிலிருந்து 188 வது அடிகள் வரை மிக விரிவாகப் பேசுவதைக் காண முடிகிறது.

**சேயாறு:**

ஒரு கூத்தன் எதிரிப்பட்ட கூத்தனிடத்தில், குயவன் வனைகின்ற உருளை போன்று குமிழி தோன்றும் விரைந்த செலவினையுடைய வாய்த்தலையில் ஓடும் காண்போர் பெரிதும் விரும்புகின்ற காட்சி இன்பமிக்க சேயாற்றினது புதிய வருவாயையுடைய ஒரு கரையை வழியாகக் கொண்டு செல்வீர் என்று ஆற்றுப்படுத்தும் பொழுது சேயாறு குறித்தச் செய்தி இடம் பெறுவதைக் காண முடிகிறது. இதனை,

“வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்

துணைசெலற் றலைவாய் ஓவிறந்து வரிக்கும்

காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்

யாணர் ஒருகரைக் கொண்டனிர் கழிமின்” (மலைபடு. 474-477)

என்ற அடிகள் எடுத்துரைக்கிறது.

சேயாறு பற்றி கண்ணன் ‘மலைபடுகடாம் படைக்கும் விருந்து’ என்னும் ஆய்வுக் கட்டுரையில், “சேயாறு என்பது இன்று செய்யாறு என்று வழங்கப்படுகின்றது. அது வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சவ்வாது மலைத்தொடரின் வடக்கில் தோன்றி தெற்கு நோக்கி மலைகளில் பாய்ந்து வருகின்றது. அந்த ஆறு வரும் வழியில் அதன் தென்கரையில் செங்கம் (செங்கம்மா) என்னும் ஊர் அமைந்துள்ளது. அந்த ஊர்க் கோயிலில் 11 கல்வெட்டுகள் இருக்கின்றன. அவை கி.பி. பதினோராம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரையில் அப்பகுதியை ஆண்டு வந்த சோழர், பாண்டியர், விசய நகர மன்னர் காலத்துக் கல்வெட்டுகள் அவற்றுள் ஒரு கல்வெட்டு நவிரமலை என்னும் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது” (கண்ணன், மலைபடுகடாம் படைக்கு விருந்து, இரா.ஜெகதீசன் மற்றும் இருவர் (ப.ஆ) பத்துப்பாட்டு ஆய்வுக்கோவை – மலைபடுகடாம், ப.46, 2012) என்று கூறுகிறார்.

**4. அறவோர் மன்றம்:**

அறவோர் மன்றம் என்பது நீதி கூறும் மன்றம். தற்போது நீதிமன்றம் என்றழைக்கப்படுகிறது. சங்க காலத்திலேயே நீதி கூறுவதற்கு அதாவது மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றினைக் களைய அறவோர் மன்றம் ஏற்படுத்தியிருந்த தமிழனின் அடையாளத்தைப் பொருநராற்றுப்படை எடுத்துரைக்கிறது.

முதியோர் நீதிவேண்டி அறமன்றம் ஏறியபொழுதே தம் உள்ளத்தே மாறுபாடு அகல கரிகாலன் இருபகையாளர்களிடம் பகை நீங்கி, அன்பு செய்து கொள்ளுமாறு தீர்ப்பு வழங்கியமையை,

"இளையோர் வண்ட லயரவு முதியோர்

அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்" (பொருநர். 187-188)

என்ற அடிகள் எடுத்துரைக்கிறது. மேற்கண்ட கருத்தின் வழி அறவோர் மன்றம் பண்டைய காலத்தில் இருந்ததென்பதனை அறிய முடிகிறது. கரிகாலன் நீதி வழங்கிய வரலாற்றுச் செய்தி இங்கே சுட்டப்படுகிறது.

**5. தமிழ்ச்சங்கம்**

தமிழ் மொழியை சங்கம் வைத்து வளர்த்துள்ள அடையாளக் குறிப்புகள் சிறுபாணாற்றுப்படையில் இடம் பெறுகின்றது. ஆற்றுப்படுத்தும் சிறுபாணன் மதுரையின் சிறப்பையும் பாண்டிய மன்னனின் சிறப்பையும் கூறும் பொழுது மதுரையில் சங்கம் வைத்து தமிழ் மொழியை வளர்துள்ள செய்தியைக் காண முடிகிறது. சிறுபாணாற்றுப்படையில், கொற்கைக்கு வேந்தனும் தமிழ் வீற்றிருந்தமையாலே மகிழ்ச்சி தருகின்ற தெருவினையுடைய மதுரை என்று வருணிக்குமிடத்து சங்கம் பற்றிய குறிப்பு இடம் பெறுவதை நத்தத்தனார்,

**"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்**

**மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே அதாஅன்று"(சிறுபாண்.66-67)**

என்று எடுத்துரைக்கின்றார். இக்கருத்தின் வழி நம் தமிழர்கள் சங்கம் வைத்து தமிழ் மொழியை வளர்த்துள்ளனர் என்பது புலனாகிறது.

**6. தொன்மா இலங்கை**

நல்லியக்கோடனின் நாடு இலங்கை. இந்நாடு தான் நகரமாக உருவான காலத்திலேயே இலங்கை என்ற பெயரையே (இராவணன் ஆண்ட தொன்மா இலங்கை) தன் பெயராகக் கொண்டு விளங்கியது என்று கூறவரும் புலவர் இரு இலங்கையையும் தொன்மா இலங்கை, நன்மா இலங்கை என்ற அடைமொழிகளால் வேறுபடுத்துகிறார்.

இவ்விடத்துப் பழைய இலங்கையாகிய இராவணன் ஆண்ட இலங்கையின் இயற்கை வருணனை இடம் பெறுகிறது. நறிய பூக்களையுடைய சுரபுன்னையையும், அகிலையும், சந்தனத்தையும் குளிக்கும் துறையிலே பெற்ற நீர்நிலையையும் உடையது என்று வருணிக்கப்படுகிறது. இதனை,

"நறுவீ நாகமும் அகிலும் ஆரமும்

துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய

பொருபுனல் தரூஉம் போக்கரு மரபின்

தொன்மா இலங்கைக் கருவொடு பெயரிய

நன்மா இலங்கை ........... .................." (சிறுபாண்.116-120)

என்ற அடிகள் வழி அறிய முடிகிறது. இக்கருத்துக்கள் வழி நம் தமிழ் முன்னோர்கள் இலங்கை வரை பரவியிருந்த வரலாற்றுக் குறிப்புகளைக் காண முடிகிறது.

**7. பண்டமாற்றுமுறை**

பண்டமாற்று முறை என்பது தமிழரின் சமூக நல்லிணக்தைப் பிரதிபலிக்கும் அடையாளம். நான்குவகை நில மக்களிடையே நிலவும் நல்லிணக்கச் சூழலைப், பண்டமாற்று முறையில் அமைந்த செய்தியினை முடத்தாமக்கண்ணியார். தேனாகிய நெய்யோடே கிழங்கையும் விற்று அதற்கு ஈடாக மீன் நெய்யோடு நறவையும் பண்டமாற்றாகக் கொண்டுச் செல்வர். இதன் மூலம் குறிஞ்சி நில மக்களும் - நெய்தல் நில மக்களும் பண்டமாற்று முறையில் ஈடுபட்ட செய்தி புலப்படுகிறது. மேலும் இனிய கரும்போடே அவலை விற்றோர், மானினது தசையோடே கள்ளையும் பண்டமாற்றாகக் கொண்டு செல்வர். இச்செய்தியில் மருத நில மக்களும், குறிஞ்சி நில மக்களும் பண்டமாற்று முறையில் பொருளைப்

பெற்றனர் என்பது தெளிவாகிறது. இச்செய்தி அந்நாட்டில் விளைந்த பொருட்களின் வளத்தினை எடுத்துக்காட்டுகிறது. இதனை முடத்தாமக்கண்ணியார்,

“தேனெய்யொடு கிழங்குமாறியோர்

மீனெய்யொடு நறவுமறுகவும்

தீங்கரும்போ டவல்வகுத்தோர்

மான்கறையொடு மதுமறுகவும்” (பொருநர்.214-217)

என்ற அடிகள் வழி விளக்குகிறார். இக்கருத்தினைத் தெ.பொ.மீ., “தேனெய்யொடு கிழங்கு மாறியோர் மீன் நெய்யோடு நறவு மறுகவும் என வரும் கூட்டுறவு வாழ்க்கையினை மக்களிடத்தும் ஏதுவாகத் தோன்றுவதுபோல் பாடுகிறார்” (மு. சண்முகம்பிள்ளை (ப.ஆ.), தெ.பொ.மீ. பத்துப்பாட்டு ஆய்வு, (புறம்), ப.5., 1981) என்கிறார்.

**ஆய்மகளிரின் பண்டமாற்று செயல்**

மோரினையும், தயிரினையும் உண்டாக்கிய ஆய்மகள் அவற்றை விற்ற விலைக்குக் கட்டிப்பசும்பொன் பெறாமல் எருமைகளையும் நல்ல பசுவினையும் அவற்றின் கன்றுகளையும் பெறுவாள். சங்க கால ஆயர் மகளிர் பசும்பொன் கட்டிக்கு முக்கியத்துவம் தராமல் அஃறிணையான பசுவிற்கு முக்கியத்துவம் கொடுத்து தன் தொழிலில் மேம்பட்டுள்ளனர் என்ற பண்பாட்டுச்செய்தியைப் பெரும்பாணாற்றுப்படை 163-165 என்ற அடிகளில் பேசுகிறது.

மேற்கண்ட கருத்தினை நோக்கும் பொழுது தமிழர்கள் கூட்டுறவு வாழ்க்கையை மேற்கொண்டு இச்சமுதாயத்தை ஒன்றிணைக்கும் செயலாகவும், சமூக வளர்ச்சிக்குரிய செயலாகவும் பண்டமாற்று முறையை உருவாக்கி தமிழர்க்கென்று ஒரு அடையாளத்தை உருவாக்கியுள்ள நிலையை அறிய முடிகிறது.

**8. விருந்தோம்பல் பண்பு**

பண்டைத்தமிழரின் வாழ்வில் விருந்தோம்பல் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. தமிழரின் பண்பாட்டு அடையாளத்தில் தனித்து விளங்குகின்றது. தம் வீட்டிற்கு விருந்தினராக வருபவர்களுக்கு மனம் மகிழும் வண்ணம் அமுது படைத்துத் தம் மகிழ்ச்சியை நிலைநாட்டுவது விருந்தோம்பல் பண்பாகும்.

ஆற்றுப்படை இலக்கியங்களில் கூறப்படும் விருந்தோம்பல் குறித்து தெ.பொ.மீ,“விருந்தில் உண்பதைப் புனைந்துரைப்பது சிறந்த பண்பாடாகாது எனினும் உணவின்றி வாழ்கின்ற அந்த குடும்பத்திற்கு, இன்றியமையாததாகும். நீங்கள் போனால் இப்படியிப்படியெல்லாம் உண்பீர்கள் என்று விரிந்துரைப்பது நாகரீகமல்ல. எனவே அந்த உணவினையும் அவர்கள் உண்ணப் போவதாகக் கூறாமல் தாமுண்ட அனுபவமாகக் கூறி, இந்த புனைந்துரையில் வரும் விரிவுரையெல்லாம் தன்மேலே ஏற்றுக்கொண்டு கூறும் பண்பாட்டின் மூலம் இந்தப்பாட்டு நன்கு விளக்குகின்றது” (மு. சண்முகம்பிள்ளை (ப.ஆ.),தெ.பொ.மீ. பத்துப்பாட்டு ஆய்வு, (புறம்), ப.7. 1981) என்கிறார்.

ஆற்றுப்படை இலக்கியங்களில் திருமருகாற்றுப்படையைத் தவிர மற்ற நான்கு ஆற்றுப்படைகளிலும் இருவகையான விருந்தோம்பல் பண்பு பேசப்படுகிறது.

1. மன்னன் கலைஞர்களுக்கும் விருந்தோம்பும் பண்பு

2. குடிமக்கள் கலைஞர்களுக்கும் விருந்தோம்பும் பண்பு

மன்னன் கலைஞர்களிடத்தில் இனிய முகமன் நோக்கி பல வகை உணவுகளைக் கொடுத்துள்ளான். குடிமக்களும் கலைஞர்களை தம் விருந்தினர் போல் உபசரித்து பால் கலந்த சோறு போன்றவற்றைக் கொடுத்து உபசரித்துள்ளமையைக் ஆற்றுப்படை இலக்கியங்களில் காண முடிகிறது.

விருந்தோம்பல் என்பது நம் பண்டைய மக்களின் மரபுகளில் ஒன்றாக இன்றும் கடைப்பிடித்து வரப்படுகின்றது. ஆனால் தற்போது சற்று குறைந்து அவை வணிக ரீதியாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. காலச் சூழல்களுக்கேற்ப மனிதன் மாறி விருந்தோம்பல் பண்பினையும் மாற்றம் செய்து அதே பண்புடன் இலாபத்தை ஈட்டும் மனம் கொண்டவர்களாக பலர் மாறிவிட்டனர் என்பது உண்மை.

**9. யவனர், வடவர் பற்றிய அடையாளக்குறிப்பு:**

நீர்ப்பெயற்றுத்துறைமுகமும், இவ்வழியே யவனர்கள் வந்து வணிகம் செய்த அடையாளக் குறிப்பும் பெரும்பாணாற்றுப்படையில் காணப்படுகிறது.

நீருண்ணும் துறைகளிலே மகளிர் கூடி விளையாடிப் போகவிட்டுப்போன மகரக் குழையினை, நீல நிறமுடைய சிச்சிலிப் பறவை தனக்குரிய இரையாகக் கருதி எடுத்துக் கொண்டு பறவைகள் நிறைந்திருக்கும் பனையிற் செல்லாமல், மறைவேள்வியையுடைய அந்தணர் யாக சாலையில் நட்ட வேள்வித் தூணின் மேலிருக்கும். அது சோனகர் பாய்மரத்தின் மேலேற்றிய அன்ன விளக்கைப் போலவும், விடிவெள்ளியைப் போலவும் ஒளிவிட்டு விளங்கும் என்று விளக்கப்படுகிறது. (பெரும்பாண்.311-319)

நீர்ப்பெயற்று துறைமுகத்திற்கு யவனர் வந்த குறிப்பு இங்கு சுட்டப்படுகிறது. இதனை ம. செல்வராசு தனது ஆய்வேட்டில், "வோளாண் சமூகத்தில் உண்டாகும் கூடுதல் பொருள்களின் பெருக்கத்தால் வேளாண் சமூகத்திலிருந்து வணிகச் சமூகம் உருவாகிறது. மேலை நாடுகளிலிருந்தும், கீழை நாடுகளிலிருந்தும் பலர் வணிகம் செய்யத் தமிழகத்திற்கு வந்துள்ளனர். யவனர்கள் தமிழகம் வந்ததையும் அவர்களின் பொருட் சிறப்பினையும் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது" (ம. செல்வராசு, சமூகவியல் அடிப்படையில் சங்க இலக்கியம் (ஆய்வேடு), பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.) என்று விளக்குகிறார்.

இக்கருத்தின் வழி யவனர், வடவர் ஆகியயோர் தமிழக நீர்ப்பெயற்றுதுறை வழியாக வணிகம் செய்த வரலாற்றுக் குறிப்பை அறிய முடிகிறது.

**10. இசைக்கருவிகள்:**

தமிழரின் அடையாளங்களுள் ஒன்று இசைக்கருவிகள். ஆதிமனிதர்கள் பயன்படுத்திய இசைக்கருவி பறை; என்பர். இப்பறை இசைக்கருவியோடு பல்வேறு இசைக்கருவிகள் இயக்கப்பட்டது. ஆற்றுப்படை இலக்கியங்களில் யாழ் இசைக்கருவி முதன்மையாகப் பேசப்படுகிறது. யாழைத் தவிர பிற இசைக்கருவிகளும் கலைஞர்கள் கைக்கொண்டிருந்த முறையையும் ஆற்றுப்படை இலக்கியங்கள் வழி பெற முடிகிறது.

யாழ் என்ற இசைக்கருவியை பாணர்கள் சிறப்பாக இயக்கக் கற்றிருந்தனர். எனவே திருமுருகாற்றுப்படையைத் தவிர பிற நான்கு ஆற்றுப்படை நூல்களிலும் யாழ் குறித்த செய்திகள் இடம் பெறுகிறது. அவை சீறியாழ், பேரியாழ் என்பனவாக அமைகின்றன.

பிற இசைக்கருவிகளாக தடாரி (பொருநர். 69-73), முழவு (பொருநர். 109-110), ஆகுளி (மலைபடு.140-41), பாண்டில் (மலைபடு.144), கொம்பு (மலைபடு.145), நெடுவாங்கியம் (மலைபடு.146), கூம்பு (மலைபடு.147), குழல் (மலைபடு.148), தட்டை (மலைபடு.149) எல்லரி,(மலைபடு.110), பதலை, பறை (மலைபடு.170-71) துடி, (மலைபடு. 210-11) குழல் பெரும். 177-81) ஆகியவை ஆற்றுப்படை இலக்கியங்களில் அமைந்திருக்கிறது. இக்கருத்தினை நோக்கும் போது பல்வேறு இசைக்கருவிகளை சங்க காலத்தில் தழிர்கள் இயக்கி இசையில் மேலோங்கிய தமிழர் என்ற அடையாளத்தோடு வாழ்ந்திருந்த தன்மையை அறிய முடிகிறது.

**முடிவுகள்:**

1. தமிழர் வழிபாடுகளுள், காடுகளில் உறையும் காளி கூளி போன்ற காடுறை தெய்வத்தை வணங்கியமையையும், மலைகளில் காரியுண்டிக்கடவுளையும்,

மறவரின் நடுகல் வழிபாட்டையும் வழிபட்ட வழிபாட்டு அடையாளங்களைக் காண முடிகிறது. மேலும் பெருந்தெய்வாகமாகப் போற்றக்கூடிய திருமாலையும் தமிழன் வணங்கியுள்ள அடையாளக் குறிப்பையும் அறிய முடிகிறது.

2. மூவேந்தர்களாக விளங்கிய சேர, சோழ, பாண்டியர்களும், அவர்கள் ஆட்சி செய்த தலைநகரங்களாக வஞ்சி, உறையூர், மதுரை போன்றவையும் தமிழர்களின் அடையாளங்களாக விளங்குகின்றன என்பதைக் காண முடிகிறது.
3. தமிழக நதிகளுள் அடையாளமாக காவிரியும், சேயாறும் அமைந்திருப்பதை அறிய முடிகிறது.
4. அறவோர் மன்றம், சங்கம் வைத்து தமிழ் வளர்த்துள்ள தமிழ்ச்சங்கம், பழைய இலங்கை, பண்டமாற்றுமுறை, விருந்தோம்பல் பண்பு, யவனர், வடவர் வணிகம் செய்தமை, இசைக்கருவிகள் ஆகியவை தமிழர்களின் அடையாளமாகத் திகழ்வதையும் காண முடிகிறது.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Srinivasan S., (2021) Tamil identities in Aattrupadai Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:128-135. Cauvery College For Women, Trichy.

**முனைவர் வெ.பிரேமலதா,**
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக்கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620002

# இலக்கியங்களில் ஏறுதழுவுதல்

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககாலத் தமிழர்களின் வாழ்வியல் அடையாளங்களை தமிழ் இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன. தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கையில் வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சிறப்பாக வாழ்ந்தனர். வீரம் ஒரு ஆண்மகனின் அடையாளம் என்பதை தமிழர்கள் பெரிதும் நம்பினர். ஏறுதழுவுதல் என்பது ஒரு ஆண்மகனின் வீரத்தினை மெய்ப்பிக்கக் கூடிய ஒன்றாக கருதப்படுகின்றது. ஏறுதழுவுதல் என்பது தமிழர்களின் அடையாளங்களுள் ஒன்றாகத் திகழப்படுகின்றது. தமிழர்களின் முக்கிய அடையாளமாகத் திகழும் ஏறுதழுவுதலை இலக்கியங்கள் எவ்வாறு பதிவு செய்கின்றது என்பதை எடுத்தியம்பும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

1. **ஏறு - காளை**
2. **அரி - சிங்கம்**
3. **பரி - குதிரை**
4. **களிறு - யானை**
5. **கொலைவன் - உருத்திரன்**
6. **கோவினம் - பசுக்கூட்டம்**
7. **புல்லினம் - ஆட்டுத்தொகுதி**
8. **இமில் - காளையின் முதுகின் மேல் பருத்துத் தோன்றும் ஓர் உறுப்பு**

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாட்டையும், வாழ்க்கைநெறிமுறைகளையும் எடுத்தியம்பும் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கின்றது. தமிழர்கள் வீரத்தையும் மானத்தையும் இரு கண்களாகப் போற்றி வளர்த்தனர். தமிழர்கள் தங்களின் முக்கிய அடையாளம் வீரம் என்று தன் நெஞ்சை நிமிர்த்தி, மார்தட்டி பெருமிதமாகக் கூறிக்கொள்வர். தமிழர்களின் முக்கிய அடையாளமாகத் திகழும் ஏறுதழுவுதலைப் பற்றி தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம், மலைப்படுகடாம், கலித்தொகை போன்ற நூல்கள் எவ்வாறு சித்திரிக்கின்றது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**ஏறுதழுவுதல்**

ஏறுதழுவுதல் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காளையை அடக்கும் வீர விளையாட்டின் பெயராகப் பயின்று வருகிறது. கொல்லக் கூடிய காளையைத் தழுவிப்போரிட்டு அடக்குவதால் **"கொல்லேறு தழுவுதல்"** என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. ஊரார் கூடி நிற்க வலிமை மிகுந்த காளை பாய்ந்து வருகையில் ஆண்மகன் ஒருவன் தன் பலத்தால் அக்காளையின் திமிலைப் பற்றி அதன் வேகத்தை

அடக்குதலாகிய நிகழ்வே **“ஏறு தழுவுதல்”** எனச் சுட்டப்படுகின்றது. இந்தியப் பண்பாட்டின் முக்கியக் கடவுளான சிவபெருமானின் வாகனமாகக் காளை இடம்பெறுகின்றது. இத்தகைய சிறப்பினைக் கொண்ட காளையினைக் கொண்டு ஏறுதழுவுதல் சங்க காலத்தில் நிகழ்த்தப்பட்டிருப்பது சிறப்பான ஒன்றாகும்.

**ஏறுதழுவுதலும் தமிழரின் அறமும்**

இலக்கியத் தொன்மையும், பண்பாட்டுத் தொன்மையும் கொண்டதே தமிழர் வரலாறு. இயற்கையும், பிற உயிர்களிடமும் இணைந்தே சங்ககாலத் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். இதற்கு சங்க இலக்கியங்களில் **‘ஏறு தழுவுதல்’** ஒன்றே சிறப்பான சான்று. இலக்கியங்கள் காண்பிக்கும் ஏறுதழுவுதலில் ஆண்மகன் எவரேனும் ஆயுதத்தை பயன்படுத்தக்கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும், முடிவிலும் காளைக்கு வழிபாடு செய்வர். எவராலும் அடக்க முடியாத காளைகள் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும், வீரத்தையும் ஒன்றாக வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

**கலித்தொகை**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகையில் முல்லைக்கலி ஏறுதழுவுதலின் சிறப்பைப் பற்றி முழுமையாக எடுத்துரைக்கும் நூலாகும். இதில் ஏறுதழுவும் இளைஞர்களின் வீரம், ஏறுகளின் வகைகள் மற்றும் நிறங்கள், ஏறுதழுவுதலை பரண் மீது அமர்ந்து பார்க்கும் பெண்களின் பேச்சுக்கள், ஆயர்குடி இளைஞர் என்ற பெருமிதம் போன்றவற்றை சிறப்பாக எடுத்தியம்புகிறது.

**ஏறுதழுவும் முன் வீரர்களின் செயல்**

ஏறுதழுவுவதற்காகப் போட்டியில் கலந்து கொள்ளும் ஆயர்குடி இளைஞர் இடிமுழக்கம் போல் ஆரவாரித்துக் களத்தின் முன் பகுதியில் வந்து கூடினர். இளைஞர்கள் நீர்த்துறை, ஆலமரநிழல், மராமரநிழல் ஆகியவற்றில் உள்ள தெய்வங்களை வணங்கிக் களத்தில் இறங்கினார்கள் என்பதை,

**“அவ்வழி முழக்கென இடியென முன்சமத்து ஆர்ப்ப**

**வழக்குமாறு கொண்டு வருபுவருபு ஈண்டி**

**நறையொடு துகழ் எழ நல்லவர் அணிநிற்பத்**

**துறையும் ஆலமும் தொல்வலி மரா அமும்**

**முறையுளி பாரா அய பாய்ந்தனர் தொழுஉ”1**

**கலி.முல்லை 101 10-15**

என்று ஏறுதழுவும் முன் ஆயர்குல இளைஞர்கள் தெய்வத்தை வழிபட்டனர்.

**ஏறுகளின் வகைகளும் நிறங்களும்**

பறக்கும் பட்டுப்பூச்சியின் சாம்பல் நிறங்கொண்ட காளை, நெற்றியின் சந்திரனைப் போன்ற அழகை உடைய கருநிறக்காளை, காதுகளுக்குப் பின்புறம் செம்புள்ளிகளை உடைய வெள்ளைக் காளை, மலையருவி போன்ற வெண்ணிறக் கால்களை உடைய கருநிறக்காளை, சிவந்த உடலில் வெண்புள்ளிகளுடன் விளங்கும் செவலைக் காளை, அழித்தல் கடவுளாக உருத்திரன் சூடிய இளம்பிறை போன்று வளைந்து தோன்றும் வளமான கொம்புகளை உடைய செவலைக் காளை, சடைமுடியும் பிறைச்சந்திரனும், முக்கண்ணையும் உடைய சிவபெருமானது நிறம் போன்ற குரால் நிறக்காளைகள் போன்ற பலவகையான காளைகளின் கொம்புகளை சீவி ஏறுதழுவும் களத்தில் நிறுத்தினர் என்பதை,

**“மணிவரை மருங்கின் அருவி போல**

**ஆணிவரம் பருத்த வெண்காற் காரியும்**

**மீன்பூத்து அவிர்வரும் அந்திவான் விசும்புபோல்**

**வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையும்**

**கொலைவன் சூடிய குழவித் திங்கள் போல்**

**வளையுபு மலிந்த கோடணி சேயும்**

**பொருமுரண் முன்பின் புகலேறு பலபெய்து**

**அரிமாவும், பரிமாவும், களிறும், கராமும்**

**பெருமலை விடரகத்து ஒருங்குடன் குழீஇ" 2**

**கலி.முல்லை 103 11-19**

இவ்வாறு பல வகையான காளைகளை ஏறுதழுவும் இடத்தின் பக்கத்தில் ஓரிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் காட்சி பார்ப்பதற்கு சிங்கமும், குதிரையும், யானையும், முதலையும் ஒரு மலைக்குகையில் ஒன்றாகக் கூடிநிற்பது போல இருந்தது.

**ஏறுதழுவும் இளைஞர்களின் வீரம்**

பல வண்ணமுடைய அழகிய காளைகளின் மீது பாய்வதற்கு இளைஞர் பலர் அவற்றின் எதிரே சென்றனர். காளைகளும் கொன்று குவிக்கும் வில்லைப்போல அதிக அளவு சினத்துடன் அவர்கள் மீது பாய்ந்தன. எங்கும் தூசி எழப் பாய்ந்த காளைகளின் கொம்பைத் தம் மார்பில் ஏற்பதற்கு ஆயத்தமாக நிற்க, காளைகள் அவர்களைக் கீழே தள்ளிக் கொம்புகளைத் தாழ்த்தின. அதைக்கண்டு பலரும் கலங்கினர் என்பதை

**"கொலைமலி சிலைசெறி செயிர் அயர் சினம்சிறந்து,**

**உருத்து எழுந்து ஓடின்று மேல்,**

**எழுந்தது துகள்;**

**ஏற்றனர் மார்பு;**

**கவிழ்ந்தன மருப்பு;**

**கலங்கினர் பலர்"3**

**கலி.முல்லை 102 19-24**

மேலும் மாலையணிந்த ஆயர்குடி இளைஞன் ஒருவன் தன் நீண்ட கரிய கைகளால் காளையின் கழுத்தை இறுகத் தழுவி, மறைந்து நின்று சட்டென, அதன் திமில் மீது ஏறிப் போரிட்டு, அதன் வலிமையை அடக்கினான். அப்போரில் துன்புற்று நின்றது காளை என்பதை,

**"அவருள் மலர்மலி புகழ்எழஅவர் மலிமணிபுரை நிமிர்தோள்பிணைஇ**

**எருத்தோடு இமிலிடைத் தோன்றினன்; தோன்றி**

**வருத்தினான் மன்றஇ அவ்வேறு"4**

**கலி.முல்லை 102 25-28**

என்று காளைகளை அடக்கும் வீரனின் செயலை ஆயர்குடி மகளிர்கள் அனைவரும் ஒன்று கூடிப் பார்த்தனர்.

**ஆயர்குடி மக்களின் பெருமிதம்**

ஆயர்குடி இளைஞர்கள் காளைகளை அடக்கும் செயலினைக் கண்ட மக்கள், இவன் ஆயர்குடியில் பிறந்த வீரத்திருமகனோ என்று பெருமிதம் கொள்வதை,

**"இருளை! இஃது ஒன்று கண்டை இஃது ஒருத்தன்**

**கோட்டினத்து ஆயர்மகன் அன்றே!" 5**

**கலி.முல்லை 103 32-33**

ஏற்றின் கழுத்தில் தாவிக் கையால் ஒரு மாலையைப் போலத் தழுவிக் கொள்பவன் நம் எருமைக் கூட்டத்தை உடைய ஆயர் குடும்பத்தான் அல்லவா?

**"இருளை! இஃது ஒன்று கண்டை இஃது ஒருத்தன்**

**கோவினத் தாயர் மகன் அன்றே!" 6**

**கலி.முல்லை 103 36-37**

மச்சத்தை உடைய காளையின் மேல் ஏறி வீற்றிருந்து வெற்றிக் களிப்பால் செலுத்துகின்ற ஆயன், பசுக்கூட்டத்தை உடைய நம் ஆயர்குடி இளைஞன் அல்லவா?

**"இருளை! இஃது ஒன்று கண்டை இஃது ஒருத்தன்**

**புல்லினத்தாயர் மகன் அன்றே!" 7**

**கலி.முல்லை 103 46-47**

புள்ளிகள் நிறைந்த வெள்ளைக் காளையு;ம் அழகிய மேனியின் மேல் சந்திரனில் உள்ள மறுவைப் போல் அகலாது பொருந்தித் தோன்றுகின்ற ஆயன்,

நம் ஆட்டுக் குழுவினுடைய ஆயர் குடும்பத்து இளைஞன் அல்லவா?

மிகுந்த வேகத்தோடு ஓடிவந்து தன்மேல் பாய்ந்த செவலைக் காளையின் கொம்பின் அடிப்பாகத்தை இறுகப்பற்றி அதன் வலிமையைப் போக்கிய காயாம்பூக் கண்ணியை அணிந்துள்ள ஆயனின் மறப்பண்பைப் பார்! என்பதை,

**"ஓவா வேகமோடு உருத்துத்தன் மேல்சென்ற**

**சேஎச் செவிமுதற் கொண்டு, பெயர்த்து ஒற்றும்**

**காயாம்பூங் கண்ணிப் பொதுவன்!" 8**

**கலி.முல்லை 103 50-53**

என்று ஆயர்குடி மக்கள் தம் இளைஞர்களின் வீரத்தை நினைத்து பெருமிதம் கொண்டனர்.

**ஆயர்குடி பெண்களின் மனநிலை**

முல்லைநில மகளிர் தம் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் மிக்க கவனத்துடன் இருந்தனர். ஆயர்குல மகளிரை மணக்க விரும்புவோர் அவளுக்காக வளர்க்கப்பட்ட காளையினை அடக்க வேண்டும் என்பது அக்கால வழக்கமாகும். எருதின் கூரிய கொம்புகளைக் கண்டு அஞ்சி ஓடும் வீரமில்லா இளைஞனை ஆயமகளிர் இப்பிறப்பிலும், மறுபிறப்பிலும் கூட கணவனாக அடைய விரும்பமாட்டார்கள் என்பதை,

**"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**

**புல்லாளே, ஆய மகள்**

**அஞ்சார் கொலையேறு கொள்பவர் அல்லதை,**

**நெஞ்சிலார் தோய்தற்கு அரிய – உயிர்துறந்து**

**நைவாரா ஆயமகள் தோள்"9**

**கலி.முல்லை 103 63-66**

கொல்கின்ற காளையின் கொம்புக்கு அஞ்சும் இளைஞனை ஆயர்குலத்து மங்கை மறுமையிலும் கணவனாகக் கொள்ள விரும்பமாட்டாள். எப்போதும் வெறுப்பாள். வீரம் மிக்க இளைஞர் ஏறு தழுவி உயிர்துறப்பினும் மனம் வருந்தாத ஆயர்குல மங்கையின் தோள் காளைக்கு அஞ்சாமல் அதனைப் பிடிப்பவரைத் தவிர ஊக்கமில்லாதவர்கள் தழுவக் கிடைக்காது.

**மலைப்படுகடாம்**

பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான மலைப்படுகடாமில் ஏறுதழுவுதல் பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளதை கீழ்வரும் பாடலில் அறியலாம்.

**“இனத்தின் தீர்ந்த துளங்கு இமில் நல் ஏறு**

**மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை**

**மாறா மைந்தின் ஊறுபடத் தாக்கி,**

**கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப**

**வள் இதழ்க் குளவியும், குறிஞ்சியும் குழைய**

**நல்ஏறு பொரூஉம் கல்லென் கம்பலை”10**

**மலைப்படுகடாம் 330 – 335**

தன்னுடைய கூட்டத்தினின்றும் பிரிந்த அசையும் திமிலையுடைய ஆனேறும், எக்காலத்தும் போரிட்டுப் போர்த்தொழிலில் பயின்ற காட்டுப் பசுவின் விரைந்த செலவினையுடைய ஏறும், முல்லைநிலக் கோவலரும், குறிஞ்சி நிலக் குறவரும் ஒருங்கு கூடித்தம் வெற்றி தோன்ற ஆரவாரிக்கும்படி, முதுகிடாத வலிமையுடன் முட்டித்தாக்கும் கல்லென்னும் ஓசைகொண்ட ஆரவாரமும், எருமைக்கடாக்கள், வளம் பொருந்திய இதழ்களையுடைய குளவியும், குறிஞ்சியும் வாடும்படி தம்மில் போர்புரியும் ஆரவார வெற்றியை, குறிஞ்சிநில மக்களும், முல்லைநில மக்களும் தங்கள் வெற்றியாக எண்ணி மகிழ்வர்.

**சிலப்பதிகாரம்**

ஆய்ச்சியர்குரவையில் ஆயர்கள் ஏழு வகையான ஏறுகளை வளர்க்கின்றனர். இவ்வேழு வகையான ஏறுகளை அடக்கியவனுக்கே இப்பெண் உரித்தாக்குகின்றாள் என்பதை,

**“நெற்றிச் செகிலை அடர்த்தற்கு உரிய, இப்**

**பொற்றொடி மாதராள் தோள்**

**மல்லல் மழவிடை ஊர்த்தாற்கு உரியள்,**

**முல்லையாம் பூங்குழல் - தான்**

**நுண் பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும், இப்**

**பெண்கொடி மாதர் - தன் தோள்**

**பொற்பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும் இந்**

**நற்கொடி மென்முல்லை தான்,**

**வென்றி மழவிடை ஊர்ந்தாற்கு உரியள், இக்**

**கொன்றையம் பூங்குழ லாள்,**

**தூநிற வெள்ளை அடர்த்தாற்கு உரியள், இப்**

**பூவைப் புதுமல ராள்”11**

**சிலம்பு ஆய்ச்சியர் குரவை 7-12**

நெற்றியிலே சிவந்த சுட்டியையுடைய காளையை அடக்கியவனுக்கே, இப்பொண்ணாலாகிய தொடியணிந்த பெண்ணின் தோள்கள் தழுவுதற்கு உரியன! வலிமிக்க அவ் இளைய ஏற்றினைத் தழுவி அதனை ஏற்ஊர்ந்தவனுக்கே இம்முல்லை மலரினைச் சூட்டிய பூங்குழலாள் உரியவளாவாள்! நுண்மையான புள்ளிகளையுடைய வெள்ளையேற்றினை வென்றவனுக்கே கொடி போன்ற இப்பெண்ணின் அழகிய தோள்கள் உரியனவாகும்! அழகிய பொன்னிறப்

புள்ளிகளையுடைய வெள்ளை ஏற்றினை வென்றவனுக்கே இந்த அழகிய கொடி போன்றவளின் மென்முலைகள் தழுவுதற்கு உரியன! அனைவரையும் வெற்றி கொண்ட இந்த இளைய ஏற்றினை ஊர்ந்தானுக்கே இக்கொன்றைப்பழம் போலும் பூங்குழலாள் உரியவளாவாள். தூய நிறமான அவ்வெள்ளையை வென்றவனுக்கே, இப்பூவைப் புதுமலராள் உரியவளாவாள் என்று சிலப்பதிகார ஆய்ச்சியர்குரவை கூறுகிறது.

**தொகுப்புரை**

சங்ககால மக்கள் வீரத்தையும், காதலையும் இரு கண்களாகக் கொண்டனர். வீரம் என்பது ஆண்மகனின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. வீரமுள்ள ஆண்மகனையே ஒவ்வொரு பெண்ணும் விரும்புவர். எனவேதான் தமிழ் இலக்கியங்களில் வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் கலித்தொகை முல்லைக்கலி அமைந்துள்ளது. முல்லைக்கலியில் ஆயர்குடி இளைஞர்களின் வீரத்தைப் பெரிதும் போற்றும் வகையில் ஆயர்குல மகளிரோ வீரமுள்ள ஆண்மகனை மட்டும் தான் திருமணம் செய்ய விரும்புவதாகவும், வீரமில்லாத ஆடவனை மறுபிறப்பிலும் ஏற்க மாட்டார்கள் என்னும் கூற்று மெய்ப்பிக்கிறது.

**சான்றெண்விளக்கம்**


1. விசுவநாதன்.அ (உரை)., கலித்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, 2004, ப. 439
2. மேலது, ப.451
3. மேலது, ப.446
4. மேலது, ப.446
5. சுப்ரமணியன் ச.வே, எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2010, ப.517
6. மேலது, ப.517
7. மேலது, ப.517
8. மேலது, ப.517
9. மேலது, பக்.517,518
10. விசுவநாதன்.அ (உரை)., பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, 2004, ப. 376
11. புலியூர்க்கேசிகன் (பதி.), சிலப்பதிகாரம், பாரிநிலையம், சென்னை, மறுபதிப்பு, 2006, ப.261


**பார்வை நூல்கள்**


1. சுப்ரமணியன் ச.வே - எட்டுத்தொகை மூலமும் உரையும்,
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர்தெரு, பாரிமுனை,
சென்னை – 600 108,
முதற்பதிப்பு, 2010

2. புலியூர்க்கேசிகன் (பதி.), - சிலப்பதிகாரம், பாரிநிலையம்,
184, பிராட்வே, சென்னை – 600 108,
மறுபதிப்பு, 2006

3. விசுவநாதன். அ (உரை)., - கலித்தொகை மூலமும் உரையும்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
41-பி, சிட்கோ, சென்னை – 600 098,
முதற்பதிப்பு, 2004

4. விசுவநாதன். அ (உரை)., - பத்துப்பாட்டு மூலமும் உரையும்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
41-பி, சிட்கோ, சென்னை – 600 098,
முதற்பதிப்பு, 2004

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Premalatha V., (2021) Bull Taming in Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:136-142. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ஆ.தேவதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 2

# நற்றிணையில் பெண்கள் விளையாட்டுகள்

**ஆய்வுச்சுருக்கம்**

மனித சமுதாயம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு தொன்மையானது விளையாட்டுகள். விளையாடுவதால் உடல் புத்துணர்ச்சி பெறுகிறது. விளையாடுவதால் ஒற்றுமை வளர்கின்றது. மனிதன் இனக்குழுவாக ஒன்று சேர்ந்து வாழத் தலைப்பட்ட போது விளையாட்டு ஒரு சமுதாய நிறுவனமாக உருவாகியுள்ளது. மனிதன் தோன்றிய நாள் முதலே விளையாட்டும் தோன்றிவிடுகிறது. மனிதன் பிறந்தது முதல் இறப்பு வரை வயதிற்கு ஏற்றார்போல் ஏதோ ஒரு விளையாட்டை ஆடும் வகையை உருவாக்கி வைத்திருக்கிறான். விளையாட்டு என்பது களிப்படையச் செய்து இன்பமூட்டுகிறது. நாடோடி வாழ்க்கையின் எச்சங்களும் அவற்றால் விளைந்த சிந்தனைகளுமே விளையாட்டின் தோற்றத்திற்கு அடிப்படை.

தமிழர்களின் வாழ்க்கைநிலை, சமூகஉணர்வு. குழுமனப்பான்மை பண்பாடு பழக்கவழக்கங்கள், போன்ற அனைத்தையும் உள்ளடக்கியதாக மக்களின் வாழ்க்கை முறையைப் பிரதிப்பலிக்கும் நிலைக்களன்களாக விளையாட்டுகள் விளங்குகின்றன.

தமிழர்கள் அவர்கள் விளையாட்டைக் காலம், களம், பங்குபெறுவோர், பால். வயது, பாடல், தன்மை, போட்டி, வரைபடம் என்ற அடிப்படைகளில் வகைப்படுத்தும் அளவிற்கு நமது விளையாட்டுகள் விரிந்த பரப்பைக் கொண்டிருக்கிறது.

**முன்னுரை**

இலக்கியங்களுள் மிகத் தொன்மையானது சங்க இலக்கியம் சங்க இலக்கியம் தமிழர்களின் இலக்கியக் கருவூலம.; தமிழரின் நாகரிகப் பண்பாட்டிற்கான அடையாளம். கடல்கோள்களாலும் கறையானாலும் மக்களின் அறியாமையாலும் மிகப்பெரும்பகுதி அழிந்துபோக சிறிய அளவிலான எஞ்சிய தொகுப்புக்கள் சிலவே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. ஆயினும் சங்ககால நாடும் நகரமும் மக்கள் வாழ்வும் அரசியல் வரலாறும் நாம் உய்த்துணருமாறு இவற்றின் வழி கிடைப்பதால் பழந்தமிழர் நாகரிகப் பண்பாட்டு வரலாற்றை முழுமையாய் அறிய இவை வழிகாட்டுகின்றன.

மக்களுக்காகவே மக்களையே மையப்பொருளாக வைத்துப் பாடப்பெற்ற பாடல்கள் சங்கஇலக்கியப் பாடல்கள் ஆகும். சங்க இலக்கியத்தில் உள்ள அகப்பாடல் கருத்துக்கள் வாழ்க்கையில் உள்ளவை. கொள்கைகளின் உயர்ந்த மரபுகளைப் பின்பற்றியவை. மனித குலத்தின் பண்பாட்டைக் காதல் பாடுபொருள் மூலம் நெறிப்படுத்தத் தோன்றியவை. தமிழ்ப்பண்பாட்டின் கருவூலமாக விளங்குகின்ற சங்கப்பாடல்கள் காலம் கடந்து வாடும் திறத்தன. சங்கத்துச் சான்றோர் எழுதிய காதற் கவிதைகளில் மிகச்சிறந்த தொகுப்பாக விளங்குவது நற்றிணை ஆகும். இது நற்றிணை நானூறு என்றும் அழைக்கப்படும். இந்நூல் எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுகிறது. நற்றிணைத் தொகுப்பு ஒன்பது அடி முதல் பன்னிரெண்டடி வரையில் உள்ள நானூறு அகவற்பாக்களைக் கொண்டது. நற்றிணைப் பாடல்கள் ஏனையை அகப்பாடலினும் இயல்பான அளவாலும் பாடுபொருள் முழுமையாலும் சிறந்தவை. நற்றிணைப் பாடல்களில் ஊடுபொருளும் தேடுபொருளும் உள்ளுறையாகவும் இறைச்சியாகவும் பாடப்பெற்றுள்ளன. இத்தகைய சிறப்புக்குரிய நற்றிணையில் பெண்கள் விிளாயாட்டுகளை ஆராய்வதே நோக்கமாக அமைகிறது.

**விளையாட்டு**

விளையாட்டு என்பது பொழுதுபோக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும், சில வேளைகளில் கற்பித்தல் நோக்கத்துக்காகவும் நடத்தப்படும் கட்டமைப்புக் கொண்ட ஒரு செயற்பாடு ஆகும். விளையாடுவதால் மனிதன் உடல்நலத்தையும். மனநலத்தையும் சமூகநலத்தையும் பெறலாம்.

**“ஓடிவிளையாடு பாப்பா – நீ**

**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா” [1]**

என்று பாரதியார் தம் கவிதைகளில் விளையாட்டுக் குறித்து கூறியிருப்பது இங்கு நினைவு கூறத்தக்கதாய் உள்ளது.

**“செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று**

**அல்லல் நீத்த உவகை நான்கே”[2]**

என்று தமிழர்களின் விளையாட்டின் பழமையை மேற்குறிப்பிட்ட தொல்காப்பிய நூற்பாவிலிருந்தும் அறியலாம்.

**1.புனல் விளையாட்டு**

புனல் என்பது ஓடும் நீர். அருவியில் நீராடுதல், குளத்தில் நீராடுதல், ஆறுகளில் நீராடுதல் எனப் பல நிலைகளில் காணலாம். இவ்விளையாட்டை விளையாடும் போது பெண்கள் தனது அணிகலன்களைக் கழற்றி வைத்துவிட்டு விளையாடினர்.

**“பொருவில் ஆயமோடு அருவி ஆடி**

**நீரலைச் சிவந்தபேரமர் மழைக்கண்”[3]**

தலைவி அருவியில் நீராடியதால் அவள் கண்கள் சிவந்திருப்பதாகத் தலைவன் கூறுகிறான்.

**“...............எந்தை**

**ஓங்குவரைச் சாரல் தீம்சுனை ஆடி”[4]**

என்று தோழி தலைவனிடம் என்னுடைய தந்தையின் உயரமான குன்றில் சுனையில் நானும் தலைவியும் நீராடினோம் என்று கூறுகிறாள்.

**“தெண்நீர் மணிச்சுனை ஆடின்**

**என்னோ மகளிர்தம் பண்பு என் றோளே”[5]**

தலைவி சுனையில் நீராடினால்; எத்தகைய மாற்றத்திற்கு ஆளாவாளோ என்று தாய் கூறுவதிலிருந்து சுனை நீர் ஆடியதை அறியமுடிகிறது.

**“பீலி மஞ்ஞை ஆலும் சோலைவரை**

**அம்கண் அறைய அகல்வாய்ப் பைஞ்சுனை**

**உண்கண் ஒப்பின் நீலம் அடைச்சி**

**நீர்அலைக் கலைஇய கண்ணிச்**

**சாரல் நாடனொடு ஆடிய நாளே”[6]**

என்று தலைவி தலைவனோடு சேர்ந்து சுனை நீராடி மகிழ்ந்ததாகக் கூறுகிறாள். புனல் விளையாட்டின் மூலம் பெண்கள் மகிழ்ச்சியடைந்ததை இதனால் அறிய முடிகின்றது.

**2. கழங்காடுதல்**

பெண்கள் விளையாடும் கழங்கு ஒரு கைத்திறப் பொழுதுபோக்கு விளையாட்டாகும். பொன்னால் செய்யப்பட்ட பொற்கழங்குகள், மரக்கட்டையில்

கடைந்தெடுத்த உருண்டைகள் முதலானவை மகளிர் விளையாட்டில் கழங்காகப் பயன்படுத்தப்பட்டன. கழங்கு தரையில் பரப்பி கையால் பற்றித் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடப்படும்.

**"சிறைநாள் ஈங்கை உறைநனி திரள்வீ**

**கூரை நன்மனைக் குறுந்தொடி மகளிர்**

**மணலாடு கழங்கின் அறைமிசைத் தாஅம்"[7]**

என்ற வரிகள் பெண்கள் மணலில் கழங்கு விளையாடியதை உணர்த்துகின்றது.

**"பந்தும் கழங்கும் தந்தனர்பரசி"[8]**

**கழங்காடு மகளிர் ஓதை ஆயத்து"[9]**

என்று சிலம்பு கழங்கு குறித்துக் குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாய் அமைந்துள்ளது.

**3.ஓரையாடல்**

ஓரை என்பது கோரைப்புல்லால் செய்த பொம்மை. அதனைக் கொண்டு மகளிராடும் விளையாட்டு ஓரையாடல் ஆகும். ஓரை என்பது மகளிர் சங்ககால மகளிரில் இளையோர் விளையாடிய விளையாட்டுகளில் ஒன்று. ஓரை விளையாடும் போது மகளிர் தம் காற்சிலம்பு ஒலிக்க ஓடுவர்.

**"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**

**துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை"[10]**

எனத் தொல்காப்பியம் ஓரை குறித்து எடுத்துரைக்கின்றது.

**"விளையா டாயமொடு ஓரை ஆடாது**

**இளையோர் இல்லிடத்து இற்செறிந் திருத்தல்**

**அறனும் அன்றே"[11]**

என்று பெண்கள் ஓரையாட இருப்பது அறம் கிடையாது என்று கூறப்படுகிறது.

**"தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து**

**ஓரை ஆயமும் நொச்சியும் கண்ணும்"[12]**

என்ற வரிகள் நொச்சி வேலிக்கருகில் பெண்கள் ஓரை விளையாடியதைப் புலப்படுத்துகின்றது.

**"நீர்அலைக் கலைஇய கூழை வடியாச்**

**சாஅய்அவ் வயிறு அலைப்ப உடன் இயைந்து**

**ஓரை மகளிரும் ஊர்எய் தினரே"13**

ஓரை என்னும் விளையாட்டை விளையாடிய பெண்கள் அருவி நீராடி மகிழ்ந்ததாக இப்பாடல் வெளிப்படுத்துகின்றது. ஓரை விளையாட்டு விளையாடப்படும் இடம் இங்கு சுட்டப்படுகின்றது.

**4. பந்தாடுதல்**

பந்து சங்க கால மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. சங்ககால மகளிர் பந்தாடுவதில் மிகவும் விருப்பம் காட்டினர். பல பந்துகளை மேலே தூக்கிப்போட்டு எந்தப் பந்தும் கீழே விழாமல் மேலே தட்டி விளையாடுவது சங்ககால மகளிரின் பந்தாட்டம்.

**"அரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்**

**வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்"[14]**

என்ற வரிகள் பெண்கள் பந்து விளையாடும்போது காலில் அணிந்த சிலம்பினைக் கழற்றி விட்டு விளையாடுவதாக நற்றிணை குறிக்கின்றது.

**"இல்எழு வயலை ஈற்றுஆ தின்றெனப்**

**பந்துநிலத்து எறிந்து பாவை நீக்கி**

**அவ்வயிறு அலைத்தஎன் செய்வினைக் குறுமகள்"[15]**

என்று தன்மகள் பந்து விளையாடியதாகத் தாய் கூறுகின்றாள்.

**"வரிஅணி பந்தும் வாடிய வயலையும்**

**மயில்அடி அன்ன மாக்குரல் நொச்சியும்"[16]**

என்ற வரிகள் பந்தாடுவதைக் காணும் போதெல்லாம் தன்மகள் ஞாபகம் வருவதாக நற்றாய் கூறுகிறாள்.

**"செல்வத் தந்தை இடனுடை வரைப்பின்**

**ஆடுபந்து உருட்டுநள் போல ஓடி**

**அம்சில் ஓதி இவள் உறும்"[17]**

என்ற வரிகள் தந்தையின் அகன்ற முற்றத்தில் மகள் பந்து விளையாடியதைப் புலப்படுத்துகின்றது.

**"பாவையும் பந்தும் பவளவாய்ப் பைங்கிளியும்**

**ஆயமும் ஒன்றும் இவைநினையாள்"[18]**

என்று ஐந்திணை ஐம்பதும்,

**பொன்னிலங்கு பூங்கொடி பொலம்செய் கோதை வில்லிட**

**தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்ததுமே**

**தேவர் ஆர மார்பன் வாழ்க என்று பந்தடித்ததுமே"[19]**

என்று சிலப்பதிகாரமும்,

**"சூடக முன்கையில் வால்வளை கண்டிரு**

**தோள்வளை நின்றாடப்**

**பாடமுஞ்சிறு பாதமும் அங்கொரு**

**பாவனை கொண்டாட**

**நாடகம் ஆடிய தோகை மயிலென**

**நன்னகர் வீதியிலே**

**ஆடக வல்லி வசந்த வொய்யாரி**

**அடர்ந்துபந் தாடினளே"[20]**

என்று வசந்தவல்லி பந்தாடிய சிறப்பைக் குற்றாலக்குறவஞ்சியும் குறிப்பிடுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**5. ஊஞ்சலாட்டம்**

சங்கப்பாடல்களில் ஊசல் என்பது ஊஞ்சலைக் குறிக்கும் மரத்தில் கயிற்றை அல்லது துணியைக் கட்டி விளையாடுவது ஊஞ்சலாட்டமாகும். குழந்தை ஊஞ்சலில் ஆடும்போது இன்பம் கண்டு தூங்குகிறது. பெரியவர்கள் தாமே ஊஞ்சலாடி மகிழ்கின்றனர்.

**"நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள்**

**ஊசல் உறுதொழிற் பூசல் கூட்டா**

**நயன்இல் மாக்களொடு குழீஇப்**

**பயனின்று அம்மஇவ் வேந்துடை அவையே”[21]**

என்ற வரிகள் கரிய பனை நாரிலே திரித்த கயிற்றைப் பிணித்துத் தொங்கவிடப்பட்ட ஊஞ்சலில் விளையாடியதை குறிக்கிறது.

**“வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்**

**தென்குமரி ஆண்ட செருவில் கயல் புலியான**

**மன்பதை காக்கும் கோமான் மன்னன் திறம்பாடி**

**மின்செய் இடை நுடங்க ஆடாமோ ஊசல்**

**விறல்வில் பொறி பாடி ஆடாமோ ஊசல்”[22]**

என்ற சிலப்பதிகார வரிகள் இங்கு ஒப்புமைப்படுத்தப்படுகிறது.

**“பெரும்புனம் கவரும் சிறுகிளி ஓப்பிக்**

**கருங்கால் வேங்கை ஊசல் தூங்கி**

**கோடுஏந்து அல்குல் தழைஅணிந்து”[23]**

தினைப்புனத்தில் புகுந்து கதிர்களைக் கவரும் கிளிகளை விரட்டிக் கருமையான அடிமரத்தை உடைய வேங்கை மரத்தில் தொங்கும் ஊஞ்சலிலே அமர்ந்து இருந்ததை நற்றிணை குறிப்பிடுகிறது.

**“ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்**

**உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்**

**ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்**

**அம்மென்மலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்”[24]**

என்று ஊசல் மகளிர் நந்திவர்மன் புகழைப்பாடியது இங்கு ஒப்புநோக்கப்படுகிறது.

### தொகுப்புரை

உடல் புத்துணர்ச்சி பெறுவதற்கு விளையாட்டு உதவுகின்றது. விளையாட்டு நிகழ்ந்த காலம் சூழல் சுட்டப்படுகின்றது. விளையாட்டு மனம் மகிழ்ச்சிக்கு வித்தாகின்றது. காண்போர் கண்ணுக்கு விருந்தளிக்கக் கூடியதாகவும் உள்ளது. ஒற்றுமை வளர்கின்றது. பண்பாட்டிற்கும் பழக்கவழக்கத்திற்கும் ஊன்றுகோலாய் அமைந்துள்ளது.

### சான்றெண் விளக்கம்


1. பாரதியார் கவிதைகள் - பக். 251
2. தொல்காப்பியம் - நூ. எ.3:255
3. நற்றிணை -44
4. மேலது, 317
5. மேலது, 339
6. மேலது, 357
7. மேலது, 79
8. சிலப்பதிகாரம் - 12: 1-35
9. மேலது, 27:245
10. தொல்காப்பியம் நூ.எ. 133
11. நற்றிணை – 68
12. மேலது, 143

13. மேலது, 398
14. மேலது, 12
15. மேலது, 179
16. மேலது, 305
17. மேலது, 324
18. ஐந்திணை ஐம்பது – பா.எ. 33
19. சிலப்பதிகாரம் - 29:18
20. குற்றாலக்குறவஞ்சி – பா.எ. 3
21. நற்றிணை – 90
22. சிலப்பிகாரம் - 29:26
23. நற்றிணை – 368
24. நந்திக்கலம்பகம் - 9:29

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம்
சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
சென்னை
2. முனைவர் கதிர்.மகாதேவன் - நற்றிணை
கோவிலூர் மடாலயம்
கோவிலூர்.
3. உரையாசிரியர் கதிர்முருகு - நந்திக்கலம்பகம்
சாரதா பதிப்பகம்
சென்னை
4. முனைவர் ச.வே.சுப்பிரமணியன்- பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள்
மணிவாசகர் பதிப்பகம்,
பாரிமுனை, சென்னை
5. புலியூர்க்கேசிகன் - திருக்குற்றாலக்குறவஞ்சி
பாரிநிலையம்
சென்னை
6. ஞா. மாணிக்கவாசர் - சிலப்பதிகாரம்
பதிப்பகம்
சென்னை
7. தமிழவேள் ச.மெய்யப்பன் - பாரதியார் கவிதைகள்
தென்றல் நிலையம்
சிதம்பரம்



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Thevatha A., (2021) Female sports in Nattrinai, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:143-148. Cauvery College For Women, Trichy.

**முனைவர் கு. டாலி ஆரோக்கிய மேரி**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620002

# தமிழ் இலக்கியங்களில் தெய்வ வழிபாடு

**ஆய்வுச் சுருக்கம்**

மனித சமூகம் சடங்குகள், நம்பிக்கைகள்,வழிபாடுகள் இவற்றின் கூட்டுக் கலவையில் தோன்றிய ஒன்றே சமயம் ஆகும்.உலகில் உள்ள மக்கள் அனைவரும் ஏதாவதொரு சமயத்திற்கு உட்பட்டே ஆக வேண்டும். நாட்டுப்புறச் சமய மரபிற்கு உட்பட்டவை நாட்டுப்புற தெய்வங்கள் சிறு தெய்வங்கள் என்றும், பெருஞ்சமய மரபிற்கு உட்பட்டவை பெருந்தெய்வங்கள் என்றும் பிரித்து வழங்கப் படுகின்றன. இந்த வழிபாடுகள் ஒரு தலைமுறையில் இருந்து வழிவழியாக வழிபாடுகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதனை சங்க இலக்கியங்கள் வழி பல்வேறு செய்திகள் மூலம் நம்மால் அறிய முடிகிறது. இதனை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

**முன்னுரை**

மனிதனின் அச்ச உணர்வும் குற்ற மனப்பான்மையுமே வழிபாடு தோன்றக் காரணம் எனலாம். இயற்கையானது இடி,மழை,புயலின் வாயிலாக மனிதனுக்கு அச்சமூட்டியது.தான் செய்த குற்றமே இயற்கையின் சீற்றத்திற்குக் காரணம் என்று நம்பிய மனிதன் அதனை வணங்கத் தொடங்கினான்.அது அவனுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் ஊட்டியது.இதனால் இயற்கை வழிபாடு தான் வழிபாட்டின் தொடக்கமாக அமைந்தது.

**இயற்கை வழிபாடு**

இயற்கை சக்திகள் பசுமையான மரங்களில் குடி கொண்டிருப்பதாக மனிதன் நம்பினான்.அதுவே மர வழிபாடாய் மலர்ந்தது. நாட்டுப்புறத் தெய்வங்கள் பெரும்பாலும் ஏதாவதொரு மரத்தின் கீழ் அமைந்திருப்பதையும்,மரத்தோடு இணைத்து அவை வழிபடுவதையும் காணலாம். இம்மரம் தலமரம், தல விருட்சம் என்று அழைக்கப்படுவதைக் காணலாம்.

**முன்னோர் வழிபாடு**

வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த தனது முன்னோர்களையும் தாய் தந்தையரையும் போற்றும் வகையில் மனிதன் அவர்களைத் தெய்வமாக வணங்கத் தொடங்கினான். இதன் விளைவாகத் தோன்றியதே முன்னோர் வழிபாடு ஆகும். போரில் மாண்ட வீரர்களுக்கு நடுகல் எடுத்தல் ,பத்தினிக்கல் வழிபாடு, சமாதி வைத்தல் போன்றவையும் இதனோடு தொடர்புடையவையாகும். இவையே மனிதனின் தொடக்க கால வழிபாடுகளாக விளங்குகின்றன.

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவறை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.”** [1]

தூய ஆன்மீக நெறியோடும், பக்தி உணர்வோடும், கடவுள் வழிபாட்டு வழியை,நாட்டின் நிலப்பகுப்போடு இணைத்துக் காட்டியவர் தொல்காப்பியர்.

மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்று நான்கு கடவுளரைப் பற்றி கூறி,அவர்களைப் பின்பற்றி வணங்கிய நிலங்களைக் குறிப்பிடுகிறார்.

| | |
|---|---|
| **நிலம்** | **தெய்வம்** |
| **முல்லை** | **மாயோன்** |
| **குறிஞ்சி** | **சேயோன்** |
| **மருதம்** | **வேந்தன்** |
| **நெய்தல்** | **வருணன்** |

நில இயற்கை அமைப்பை ஒட்டி இயற்கையோடு இயைந்த தெய்வ வழிபாட்டு நெறியைத் தொல்காப்பியம் மூலம் அறியலாம். தொல்காப்பியம் சூரியன், இந்திர வழிபாட்டைக் குறிப்பிடுகிறது. சூரிய வழிபாடு தமிழக மக்களிடம் நிலவியது என்பதனை,

**"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**

**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**

**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" [2]**

கீழ்த் திசையில் நிலைப்பெற்றுத் தோன்றும் செஞ்சுடர் மண்டிலம்,பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்கும்,தத்துவம் கடந்த பொருள்,தண்கதிர் மண்டிலம் என்று கூறப்பட்ட குற்றம் தீர்ந்த சிறப்பை உடைய மூன்று தெய்வமும் தேவரோடே கருத்து மாற்றாமல் தோன்றும். தொன்மை ,பழமை, மரபு போன்ற சொற்கள் முன்னோர்களின் வாழ்வின் எச்சங்களைக் குறிப்பனவாகும் .தமிழர்களின் மரபுகளைத் தொல்காப்பியர் நன்கு பதிவு செய்துள்ளார். பண்டைத் தமிழர் ஐவகை நிலங்களில் திணை என்னும் ஒழுக்கம்சார் வாழ்வியலில் உரிப்பொருள்களை முதல்,கருப்பொருள்களின் துணையுடன் அமைத்துக் கொண்டார்கள் .கருப்பொருளைச் சுட்டும் பொழுது தெய்வத்தை முதலாவதாகக் குறிப்பிடுகின்றார்.

**" தெய்வம் உணவே மா மரம் புள்பறை**

**சேய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருஎன மொழிப."[3] அகத்திணை 964**

இதன் வழி தெய்வத்திற்கு அக்கால மக்களிடமிருந்த சமூக நிலையையும்,மதிப்பையும் அறிய முடிகிறது.

**சிவன் வழிபாடு**

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள தெய்வ வழிபாடுகளுக்குள் தலைமையானது சிவ வழிபாடு ஆகும். ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ,புறநானூறு என்னும் நான்கு தொகை நூல்களில் அமைந்த கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவபெருமானைப் பற்றியனவே. காவிரிப்பூம்பட்டினம்,மதுரை,வஞ்சி முதலிய பெருநகரங்களில் இக்கடவுளுக்குரிய கோயில்கள் இருந்தன. சங்க நூல்களில் சிவனைப் பற்றிய குறிப்புகள் விரிவாக வந்துள்ளன. ஆனால் சிவன் என்ற பெயர் அங்கே வழங்கப்படவில்லை. சிவனை அடையாளங் காட்டும் வகையில் தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மனவாழ்க்கையில் ஈடுபட்டு மக்களைப் பெற்று இன்ப வாழ்வு வாழ்ந்ததும் தலைவனும் தலைவியும் கடவுளைப் பற்றி எண்ண முற்பட வேண்டும்.அதுவே வாழ்க்கையின் குறிக்கோளாகும் என்று தொல்காப்பிய நூற்பா கூறுகின்றது.இதனை

**"காமஞ் சான்ற கடைக்கோட் காலை**

**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**

**ஆறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"** [4]

பழந்தமிழர்கள் முழுமுதற் கடவுளையே தம் கருத்தில் கொண்டிருந்தனர்.இன்றும் பேச்சு வழக்கில் தெய்வத்தைக் குறிப்பதாக உள்ள கடவுள் என்னும் சொல் எல்லாவற்றையும் கடந்து நிற்பது என்னும் பொருளைக் காட்டி நிற்கிறது.

**"காமப்பகுதி கடவுளும் வரையார்**

**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்"[5] புறத்திணையியல் 81**

இங்கே கடவுள் என்பது தத்துவப் பொருளாக அமைந்த கடவுளராவர்.மாயோன், சேயோன்,வருணன்,இந்திரன் முதலியோர் திணைநிலைக் கடவுளர்.

**கலித்தொகை**

**"இமையலில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்**

**உமையமர்ந் துயர்மலை இருந்தனனாக**

**ஐயிறு தலையின் அரக்கர் கோமான்**

**எடுக்கல் செல்லாது உழ்ப்பவன் போல" கலி [32]**

இமயமலையிடத்துப் பிறந்த மூங்கிலாகிய வில்லை வளைத்தவனும் ஆகிய ஈரத்தை உடைத்தாகிய சடையினை உடையவனும் ஆகிய இறைவன் இறைவியோடு பொருந்தி,உயர்ந்த கயிலை மலையில் இருந்தனன். அரக்கர்க்கு அரசனாகிய பத்து தலையை உடைய இராவணன் மலையை எடுப்பதற்குக் கையை கீழே செருகித் தொடிப்பொலிவு பெற்ற அத்தடக்கையினாலே அம்மலையை எடுக்க இயலாது வருந்திய நிலைபோல இருந்தது.

**புறநானூறு**

உண்டவரை நீண்டநாள் வாழ்விக்கும் அரிய நெல்லிக்கனியை அதியமானிடமிருந்து பெற்ற ஔவையார் அவனை வாழ்த்தும் போது,

**" பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**

**நீலமணிமிடற் றொருவன் போல**

**மன்னுக பெரும நீயே." புறம் [9]**

பால்போலும் பிறை நெற்றியில் பொருந்திப் பொலிந்த திருமுடியினையும் நீலமணிபோலும் கரிய

திருமிடற்றினையும் உடைய ஒருவனைப் போல (சிவன்) நிலைபெறுவாயாக என்று வாழ்த்துகிறார்.இங்கு சிவன் அணிந்திருக்கும் பிறையும் அவனுடைய நீலமணிமிடறும் குறிப்பிடப்படுகின்றன.

**சிலம்பில் தெய்வம்**

கண்ணகி கோவலனுடன் இளங்காலைப் பொழுதில் மதுரைக்குப் புறப்பட்டுப் போகிறாள். சில திருக்கோயில்களை கடந்து செல்கிறாள்.அழகிய பாம்பனை மேல் கள்ளி கொண்டு அறிதுயிலில் உள்ள திருமாலின் கோயிலை வலமாக நடந்து வணங்கினாள். போதி மரத்தின் நிழலில் எழுந்தருளியுள்ள புத்ததேவன் அருளிய ஆகமத்தை ஓதி கோவலனுடன் கண்ணகி வழிபட்டாள் .மதுரைக்குச் செல்லும் முன் கண்ணகி திருமால், புத்தர், அருகர் ஆகிய புகார் நகரக் கோயில்களில் வழிபாடு செய்தாள் என்பதை அறிய முடிகிறது.

**"பொருள் இல் யாக்கை பூமியில் பொருந்தாது**

**அருகர் அறவன் அறிவோர்க்க அல்லது என்**

**இருகையும் கூடி ஒருவழிக் குவியா" சிலம்பு 200**

பெண்ணின் பெருமை பேச வந்த காப்பியம் சிலப்பதிகாரமாகும் .மதுரை மாநகரைக் காவல் செய்த மதுராபதி தெய்வம் கண்ணகியின் துன் தோன்றுவதற்கு அஞ்சி பின் பக்கமாக நின்று பேசுகிறது. தீக்கடவுள் அவள் ஏவல் கேட்கின்றது. தேவர்கள் விண்ணூர்தியில் வந்து கண்ணகியை அழைத்துச் செல்கின்றனர். இப்படி தெய்வங்கட்குத் தெய்வமாகக் கண்ணகியை அழைத்துச் செல்கின்றனர்.

**"வானம் பொய்யாதுவளம்பிழப்பு அறியாது**

**நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது**

**பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு."143-147**

என்று கண்ணகியை முழுமுதற் தெய்வமாக சிலப்பதிகாரம் காட்டுகிறது.

**தொகுப்புரை**

வழிபடு என்பதிலிருந்து பிறந்தது வழிபாடு என்னும் சொல். வழிபடு என்பதற்கு வணங்குதல், வழியில் செல்லுதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல் ,பூசனை முறை என்று அகராதிகள் பல்வேறு விதமான பொருளைத் தருகின்றன. இறைவனுடன் இரண்டறக் கலப்பதே வழிபாடு என்றும், உள்ளத்தின் கதவுகளை இறைவனுக்காகத் திறந்து வைப்பதே வழிபாடு என்றும் கருதப் படுகின்றது. இயற்கையோடு இணைந்து தொடங்கிய மனித வாழ்வு பல்வேறு பரிமாணங்களைப் பெற்று வந்திருப்பதைப் போல், நம்பிக்கை அடிப்படையில் தோன்றிய வழிபாடும் வளர்ந்தே வந்துள்ளது. இயற்கை வழிபாடு தொடங்கி, இறை வழிபாடு,தனிமனித வழிபாடு என்று பல்கிப் பெருகி வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கூறாக வழிபாடு நின்று நிலைத்துள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்காப்பியம் -அகத்திணையியல் ப 35
2. மேலது ப 45
3. மேலது ப 60
4. தொல்காப்பியம் கற்பியல் ப 25
5. மேலது ப 50
6. கலித்தொகை ப32
7. புறத்திணையியல் ப 40
8. சிலப்பதிகாரம் ப 200
9. மேலது ப143


**Cite this book Chapter:** S. Ramalakshmi and Worship of deities in Tamil Literature., (2021) Fame in Puranaanooru, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:149-152. Cauvery College For Women, Trichy.

**முனைவர் பா.இமாகுலேட்**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002

# ஔவையார் பாடல்களில் பண்பாட்டுச்சிந்தனைகள்

**ஆய்வுச்சுருக்கம்:**

புறத்தில் தோன்றும் காட்சிகளையும்; அகத்தில் தோன்றும் கருத்துக்களையும் புனைந்து நிற்கும் அழியாத அழகு ஓவியம் சங்கப்பாடல்கள். ஔவையார் உயரிய ஒழுக்கங்களையும், சிறந்த நீதிகளையும் எளிதாகவும் இனிமையாகவும் எடுத்தியம்பியுள்ளார். பெண்பாற் புலவர்களில் கூர்ந்த அறிவும், தகைசால் புலமையும் இவரை அதிகாரமையத்தில் கோலோச்சுவதற்கான ஆற்றலை வழங்கியுள்ளது. தமிழர் பண்பாட்டின் கூறுகளான விருந்தோம்பல், ஒழுக்கம், போர்த்திறம், நன்றிமறவாமை, நாட்டின் ஒற்றுமையைப்பேணல் போன்றவற்றினை ஔவையாரின் பாடல்கள் மூலம் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**முன்னுரை:**

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழகுல். 'பண்புடையார் பட்டுண்டுலகம்' என்கிறது. கலித்தொகையும் திருக்குறளும். இவ்வாறு மக்களின் இன்றியமையாத பண்பாட்டினை இலக்கியத்தில் எங்கும் காணலாம். தொன்மையான நாகரிக வாழ்க்கையை உடையவர்கள் நம் தமிழர்கள். சங்க இலக்கியங்கள் தமிழுக்கு தாய்மை இலக்கியம் எனலாம். இதனை இயற்றியவர்கள் சான்றோர்களாவர்.மேலும் சங்கப்பாடலைச் சான்றோர்கள் செய்யுள் என அறிஞர்கள் போற்றுவர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக சங்க இலக்கியத்தில் ஆண்புலவர்களுக்கு இணையான புலமையோடும் படைப்பாற்றல் திறத்தோடும் இப்படைப்புத்தளத்தில் முப்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் இருந்துள்ளனர். அவர்களில் ஒவையார் சிறந்த இடத்தைப்பெற்றுள்ளார். அவரின் கூர்ந்த அறிவும் தகைசால் புலமையும் அவரை அதிகாரமையத்தில் சிறந்து விளங்குவதற்கான ஆற்றலை வளங்கியுள்ளது. ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழும் சங்ககால ஔவையாரின் பாடல்கள் வழி வெளிப்படும் பண்பாட்டு நெறிகள் பற்றிய செய்திகள் அவ்வாய்வுக் கட்டுரையில் முன்னிறுத்தப்படுதிறது.

**ஔவையார்:**

ஔவை யார்? இவர் ஆதி என்ற புலச்சிக்கும், பகவன் என்ற அந்தணனுக்கும் மகளாகப் பிறந்ததாகவும், தந்தையின் கட்டளைபடி பிறந்த மகளைப் பிறந்த இடத்திலேயே விட்டுவிடுமாறு கூற தாய் ஆதி மனம்பொறாது கலங்க அக்குழந்தை

**'இட்டமுடன் என்றலையில் இன்னபடி என்றெழுதி**

**விட்டசிவனும் செத்து விட்டானோ? முட்டமுட்டப்**

**பஞ்சமே ஆனாலும்பாரம் அவனுக்கு அன்னாய!**

**நெஞ்சமே அஞ்சாதே நீ'**

என்று தாயைத் தேற்றுவதாகவும் அக்குழந்தையே ஔவையார் என புராணங்கள் கூறுகின்றன. ஔவையார் என்ற பெயரில் சங்க கால ஔவையார், இடைக்கால ஔவையார், பிற்கால ஔவையார் என மூன்று பெண்பாற் புலவர்கள் நம் தமிழகத்தில் வாழ்ந்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சங்ககால ஔவையார் சங்க இலக்கியங்களான நற்றிணை குறுந்nதாகை அகநானூறு புறநானூறு ஆகியவற்றில் பாடிய பாடல்கள் சொற்செறிவும்

பொருட்செறிவும் உடையன. இவைகளின் தமிழர்களின் பண்பாட்டக் களமாக விளங்குகின்றன. இவைகளின் மூலமாக பண்டைக்கால மக்களின் வீரம், கொடை, நாகரிகம், விருந்தோம்பல், நீதிநெறிகள் முதலியவற்றை அறியமுடிகிறது.

இளமைக் காலந்தொட்டு முழுக் கல்விக் கற்றுச;சான்றோராாக தறகழ்ந்த பெண்டிரை முதுகுறைவி என்று பட்டமளித்து புகழ்வது இலக்கிய மரபு. mத்தகைய சிறப்பினை 'அஞ்சி மஞ்சு முகட்டில் மலைகளின் இடுக்கில் பறித்த துஞ்சுதல் போக்கிடும் நெல்லிக்கனியினை' ஔவைக்கு கொடுத்த அதியமானை ஔவை

**'பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**

**நீலமணி மிடற்று ஒருவன் போல்**

**பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட**

**சிறையிலை நெலிலத் தீங்கனி குறியாது**

**ஆதல் நின்னகத்தடக்கி**

**சாதல் நீங்க எமக்கீத் தனையே' 1**

என்ற பாடலில் அவனது அருஞ்செயலுக்கு ஒப்பாக விண்ணோர் வாழத் தானே விரும்பி நஞ்சினை உண்ட சிவபெருமானே நினைவுக்கு வருவதாக கூறுகிறார். இதனை

**'இனிய உளவாக இன்னாதக் கூறல்**

**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' 2**

vd;w திருக்குறளில் வரும் கனி என்பதற்குச் சிறப்புரை வரையும்போது, பரிமேலழகர் இனிய கனிகள் என்றது ஔவை உண்ட நெல்லிக்கனி, போல அமிழ்தானவற்றை என்று கூறுகிறார்.

**"கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி**

**அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கீந்த**

**உரவுச்சினங் கனலும் ஒளித்திகள் நெடுவேல்**

**அரவுக்கடல் தானை அதிகனும்"; 3**

எனச் சிறுபாணாற்றுப்படையில் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் அதியமான் ஔவைக்கு நெல்லிக்கனி தந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

**விருந்தோம்பல்:**

தமிழர்களுக்கே உரித்தான தலைச்சிறந்த பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல் பண்பாகும். வீட்டிற்கு வரும் விருந்தினரை முக மலர்ச்சியுடன் அகமகிழ்ந்து வரவேற்று வயிறார உணவு படைத்து மகிழும் உயர்பண்புடையவர்கள் தமிழர்கள் என்பதை,

**"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**

**பன்னாள் பயின்று பலரோடு செல்லலினும்**

**தலைநாள் போன்ற விரம்பினன் மாதே"4**

இப்பாடல் விளக்குகிறது. இதில் பலநாள் பலரோடு சென்றாலும் முதல் நாளிலே எத்தகைய அன்போடும், விருப்போடும் மகிழ்ந்து வரவேற்றானோ அத்தகைய விருப்பமுடன் வரவேற்கும் பண்பினன் அதியமான் என்பதை தன்னுடை பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் ஔவையார்.

**போர்த்திறம்:**

அதியமானின் வீரத்திலும் ஈகையிலும் மனம் மயங்கினாலும் மதி மயங்கவில்லை ஒவையார். எனவேதான் போர் நடைபெறுதலைத் தவிர்க்க வேண்டி

அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றார். அதியமான் செய்யும் போர்கள் வெற்றியைத் தருதல் உறுதி என்றாலும் தொடர்ச்சியானப் போர்கள் நாட்டின் வளத்தையும் குடிகளின் ஆதரவையும் கெடுக்கும் என்பதால் அதனைத் தவிர்த்தலே நலம் என்றுணர்ந்து  தொண்டை நாட்டை ஆண்ட தொண்டைமdpடம் ஒவையார் செல்கிறார்.

தொண்டைமான் அழகிய  படைக்கsத்திற்கு அழைத்துச்சென்று அங்கே வில்லும்;;> வேலும் வீரக்கவசங்களும் எண்ணிக்கையற்று எழிலுடன் காட்சித்தருவதை ஔவைக்கு காண்பித்து தன் படைக்கsத்தின்மீது செருக்குற்று அதியமான்மீது போர்த்தொடுக்க எண்ணயிருந்தான். அவனது அறியாமையை உணர்ந்து, அதியனுடன் போர்தொடுத்தால் அழிவு உறுதி என்பதை அறிவிக்குமிடத்து தூது சென்ற ஔவையார்,

**"இவ்வே பீலி யணிந்து மாலைசூட்டி**

**....... ....... ....... ........**

**பகைவர்க் குத்தி கோடுநுதி சிதைந்து**

**....... ....... ....... ......**

**அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே"5**

என்றப்பாடலில் தொண்டைமானின் கருவிகளைக் கண்டவுடன், மயில்தோகை அணியப்பட்டு மலர்மாலைசூட்டி நெய்பூசப்பட்டு ஔிவீசுகிற தொண்டைமானின் கருவிகளைக் கண்டவுடன், அங்கே போர்க்களத்தை அடிக்கடி சந்தித்தன் விளைவாக பகைவரின் மார்பகங்களை குத்தியதால் முனைமுறிந்த கருவிகளும் ,கூர்வாள்கள்; உடைந்த கருவிகளும், கொல்லன் உலைக்களத்திலும் உள்ளது என்று அதியமானின் போர் கருவிகளைப்பற்றி கூறுமிடத்தில் பழிப்பதுப்போல புகழ்ந்துள்ளார். இதனால் தொண்டைமானுக்கும் அதியமானுக்கும் நடக்கயிருந்த போரினை தன் திறமையினால் நிறுத்தி மன்னர்களிடம் ஒற்றுமையை ஏற்படுத்தியமையை அறியமுடிகிறது.

இதன் மூலம் ஔவையார் அரசவைப்புலவராக மட்டுமல்லாமல் அதியமான் மாற்றாரைத் தோற்கடிக்க களம் புகும்போதெல்லாம் போர்க்களப் புலவராகவும் இருந்து அதியமானின் ஆற்றலை அவனை எதிர்த்திடத்துணிந்த மன்னர்களிடம் எடுத்துரைத்து இராஜதந்திர முறையில் போரினைத்தடுக்க முயன்றதனையும் அறியமுடிகிறது.

**ஒழுக்கம் :**

ஆடவர்களின் ஒழுக்கமே அந்நாட்டின் பண்பாட்டிற்கு அடிப்படை என்பதை,

**"நாடா கொன்றா காடா கொன்றா**

**அவலா கொன்றா மிசையா கொன்றா**

**எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நலனே"6**

என்ற பாடலில் நிலமானது நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் மேடோ பள்ளமோ எவ்வாறு  இருந்தாலும் நல்லவர்கள் இருக்கும் இடத்தில் நிலமும் நல்ல பலனைக் கொடுக்கும் என்று நாட்டின் வளர்ச்சிக்கு மக்களின் ஒழுக்கம் இனிறியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

**நன்றி மறவாத்தன்மை:**

பாரி இறந்துபட அவன் மகள்களான அங்கவை, சங்கவை இருவரையும் கபிலர் விச்சிக்கொன், இளங்கோவன் என்ற இருவரிடமும் மணமுடிக்க வேண்டுகிறார். அவர்கள் மூவேந்தர்பால் கொண்ட அச்சத்தால் மணமுடிக்க மறுக்கின்றனர்.

அப்பெண்களைப் பார்ப்பார் இல்லத்தில் அடைக்கலம் கொடுத்துவிட்டு வடக்கிருந்து உயிர் நீத்தார் கபிலர்.

ஒருநாள் பெருமழை பொழிய அவ்வழியே வந்த ஔவையார் அவ்வீட்டினுள் நுழைய, ஔவையின் வரவை அறிந்த பாரி மகளிர் தன் நீலச்சிற்றாடையைக் கொடுத்து அணியச்செய்து, தீ மூட்டி குளிர் காயவைத்து கொல்லையில் விளைந்த கிரையைப் பறித்து சுவையுடன் சமைத்து பசியும் போக்கினர். வந்தவர் இன்முகம் காணும்வரை வாரி வாரி வழங்கிய பாரியின் மகளிர் என அறிந்து தந்தைapன்; வழியே மகள்களும் நிற்பதை, பழைய நினைவுகளையும், நிகழ்ச்சிகளையும் நினைத்து,

**“பாரிபறித்த பறியும் பழையனூர்க்**

**காரி கொடுத்த களைக்கொட்டும் - சேரமான்**

**வாராய் என அழைத்த வார்த்தையும்**

**இம்மூன்றும் நீலச் சிற்றாடைக்கு நேர்” 7**

என்று பாரி தனக்கு செய்த உதவிகளை நினைத்து அவர் மகள்களிடம் நன்றி மறவாப் பண்பினை ஔவையார் வெளிப்படுத்தியுள்ளார்.

**தொகுப்புரை:**

சங்க கால சமுதாயத்தில் பண்பாடு என்பது பல்வேறு வகையான கூறுகளைக் கொண்டதாக இருந்துள்ளது. அவற்றைப் பின்பற்றியே அக்கால மனிதர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். எனவே விருந்தோம்பல் பண்பிலும், போர்த்திறத்தில் மனிதனின் மனப்பக்குவ மருந்தாக ஔவையார் திழ்ந்துள்ளார். ஒழுக்கம், நன்றிமறவாமை பாரி மகள்களிடம் காட்டி அன்பின் மூலமும் பண்பாட்டுக் கூறுகளை சங்க கால ஔவையார் பாடல்கள் மூலம் அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. புறம் : 91
2. குறள்-100
3. சிறு.பாண்- 99-102
4. புறம்-101
5. புறம்-95
6. புறம்-187
7. குறுந் 99

**கலைச்சொற்கள்:**

1. உரவு - நெஞ்சுரம்
2. கவினி – அழகு ஒழுகும்
3. பீலி – மயில்தோகை
4. அவல் - பள்ளம்
5. மிசை - மேடு

**பார்வை நூல்கள்:**

1. ஔவை.துரைசாமி (உ.ஆ); - புறநானூறு

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கலகம் லிட்.,

522. டி.டி.கே சாலை, ஆள்வார்பேட்டை

சென்னை – 18.

பதிப்பு: 2007

2. பொதுவான் அடிகள்;(உ.ஆ) - சிறுபாணாற்றுப்படை
செங்கைச்செல்வி
22,தெரு13, தில்லை நகர்,
சென்னை 620 061
பதிப்பு: 2000.

3. போ.வே.சோமசுந்தரனார்;(உ.ஆ)- குறுந்தொகை
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கலகம் லிட்.,
522. டி.டி.கே சாலை, ஆள்வார்பேட்டை
சென்னை – 18. பதிப்பு: 2007.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Emakulate B., (2021) Cultural Throughts in Avaiyar Songs , Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:153-157. Cauvery College For Women, Trichy.

**முனைவர் வி.கவிதா**
இணைப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி-18

# ஏறு தழுவுதல் - அன்றும் இன்றும்

**ஆய்வுச் சுருக்கம் ;**

சங்கத் தமிழர் தங்கள் உயிராகக் கருதியது வீரமும் மானமும். போர்கள் வழி மட்டுமல்லாது வீரவிளையாட்டுகள் வாயிலாக, தங்கள் வீரத்தினை பண்டைத்தமிழர் வெளிப்படுத்தி உள்ளனர். அவற்றுள் ஒன்று ஏறுதழுவுதல். முல்லை நில மக்களிடம் மட்டுமே காணப்பட்ட வீர விளையாட்டு இன்று பலதரப்பட்ட மக்களும் பங்கேற்கும் விளையாட்டாக மாறியுள்ளது. அன்று ஏறுதழுவுதுல் நடந்த வதத்தினையும் இன்று பெற்றுள்ள மாற்றத்தினையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

இலக்கியத்திலும் பண்பாட்டிலும் தொன்மை வாய்ந்தது தமிழினம். அன்றைய தமிழரின் வாழ்வியல் மரபுகளும் பண்பாட்டு எச்சங்களும் இன்றைய தலைமறை அவசியம் அறிந்துகொள்ள வேண்டும். அவ்வகையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொன்று தொட்டு தமிழரின் விளையாட்டாக இருந்து வரும் ஏறு தழுவுதுல் பற்றிப் பேச விழைகிறது இக்கட்டுரை.

சங்கத் தமிழர் தங்கள் உயிராகக் கருதியது வீரமும் மானமும். போர்கள் வழி மட்டுமல்லாது வீரவிளையாட்டுகள் வாயிலாக, தங்கள் வீரத்தினை பண்டைத்தமிழர் வெளிப்படுத்தி உள்ளனர். வேட்டையாடல் மல்லாடல் ஏறுதழுவுதல் போன்றவை பழந்தமிழரது வீரவிளையாட்டுகள். இவற்றுள் ஏறுதழுவுதல் - மஞ்சு விரட்டு, மாடு பிடித்தல், பொல்லெருது பிடித்தல், சல்லிக் கட்டு எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. அன்றைய ஏறுதழுவுதல், இன்று ச(ஜ)ல்லிக் கட்டு எனப்படுகிறது.

'ஏறு' என்ற சொல் காளையைக் குறிக்கம். கொல்லும் தன்மையுடைய காளையை அடக்குவதால் 'கொல்லேறு' தழுவுதல் என்று சங்க இலக்கியங்களில் சுட்டப்படுகின்றது. இதனை,

**"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**

**புல்லாளே ஆயமகள்"[1]**

என்ற வரிகள் வழி அறியலாம். முல்லை நில மக்களின் வீர விளையாட்டாகவும் திருமணத்துடன் தொடர்புடையதாகவும் ஏறு தழுவுதல் அமைகிறது.

முல்லை நிலத்தில் பசுமையான புல்லை மேய்ந்து வளமுடன் விளங்கும் காளைகள் ஆயர்களின் செல்வமாகப் பார்க்கப்பட்டன. 'மாடு' என்றால் செல்வம் என்று பொருள். ஆயுர்கள் தம் அரும்பெருஞ் செல்வத்தைப் போற்றி வளர்த்தமையால் திண்மையுடன் விளங்கின. தம் மாடுகளுடன் விளையாடியும் வீரத்தை ஊட்டியும் வளர்த்தனர். புலியையும் நேர் கொள்ளும் திறன் கொண்ட எருதுகள் தம் வலிய கொம்புகளால் உடலை ஊடுருவிக் கொல்லும் தன்மை வாய்ந்தவையாக விளங்கின. ஆகையால் கொல்லேறு என்று அழைக்கப்பட்டன.

"மஞ்செனத் திரண்டமேனி வாய்ந்த மாக்காளைகளைக் கண்டு ஆயர் குலத்து இளைஞர் அஞ்சுவதில்லை. அவற்றின் கொட்டத்தை அடக்க மார்தட்டி நிற்பர்"[2].

காதலையும் வீரத்தையும் உலகளாவிய நோக்கில் உரத்துக் கூறியவை தமிழிலக்கியங்கள். காதலை அன்பின் ஐந்திணை வாயிலாக உலகுக்குக் காட்டியது போல வீரத்தைப் புறத்திணைகளாகப் பறைசாற்றி நிற்கின்றன. வீரம் என்பது

ஆடவர்க்கு மட்டுமன்றி பெண்டிர்க்கும் உரித்தானது என்பதனை மூதின் முல்லை வாயிலாக அறிகிறோம். தமக்குப் பிறக்கும் பிள்ளைகள் வீரமுடன் விளங்க வேண்டும் என்று நினைத்த பெண்கள் கோழையைக் கணவனாக ஏற்பார்களா என்ன?,

"கொல்லேறு தழுவுதல் உயிருக்கு உலை வைக்கும் ஆபத்தான செயல். ஆயினும் அச்செய்கையில் வெற்றி பெறுகின்றவனையே ஆயர்குலப் பெண்கள் ஆண்மகனாக மதிப்பர். இல்லறத்தை இனிது நடத்துவுதற்கு ஏற்றவனாக எண்ணுவர்"[3] என்ற கருத்து பெண்டிரின் வீரம் பற்றி எடுத்தரைக்கின்றது. அப்படிக் காளையை அடக்காத வீரனை இப்பிறவி மட்டுமல்ல மறுபிறவியிலும் ஆய மகள் தழுவ விரும்ப மாட்டாள்.

தமிழர் இரு கண்களாகப் போற்றிய காதல் வீரம் ஆகிய இரண்டின் இணைப்பாகவே ஏறு தழுவுதல் நோக்கப்படுகிறது. ஐந்திணைகளாக வாழ்வையும் நிலத்தையும் பகுத்து வாழ்ந்த தமிழினத்தில் முல்லை நில மக்களிடம் ஏறு தழுவுதல் நிகழ்வு இருந்துள்ளது.

**"ஓஒ! இவள் பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்**

**திருமா மெய் தீண்டலர் என்று கருமமா**

**எல்லாரும் கேட்ப அறைந்து எப்பொழுதும்**

**சொல்லால் தரப்பட்டவள்"[4]**

என்ற வரிகள் ஆயமகளின் திருமணம் வீரத்துடன் தொடர்புடையதைச் சுட்டுகின்றன. ஏறு தழுவுதல் நடக்கும் முன்னர் பறை அறைந்து இந்நிகழ்வு பற்றி அறிவிக்கப்படும்.

**"சொல்லுக! 'பாணியேம்' என்றார், 'அறைக' என்றார், பாரித்தார் மாணிழை ஆறாகச் சாறு"[5]**

என்ற வரிகள் ஏறுதழுவுதல் விழாக் கோலத்துடன் நடைபெற்றது பற்றி எடுத்துரைக்கின்றன. ஏறுதழுவுதலுக்கு முதல் நாள் குரவைக் கூத்து நடைபெறும். அதில் ஏறுதழுவுதலில் பங்கு கொள்ளும் தம் மனங்கவர்ந்த ஆடவரின் வெற்றிக்காக முல்லை நிலப் பெண்கள் வேண்டிக் கொள்வர்.

ஏறு தழுவுதலில் இடம் பெறும் பல வகைக் காளைகள் குறித்து,

**"மணிவரை மருங்கின் அருவி போல**

**அணிவரம்பு அறுத்த வெண்காற் காரியும்,**

**மீன்பூத்து அவிர்வரும் அந்திவான் விசும்பு போல**

**வான்பொறி பறந்த புள்ளி வெள்ளையும்**

**கொலைவன் சூடிய குழவித்திங்கள் போல்**

**வளையுபு மழிந்த கோடு அணி சேயும்**

**பொருமுரண் முன்பின் புகல்ஏறு பலபெய்து**

**அரிமாவும், பரிமாவும், களிறும், கராமும்,**

**பெருமலை விடரகத்து, ஒருங்கு உடன் குழீஇ**

**படுமழை ஆடும் வரையகம் போலும்**

**கொடிநறை சூழ்ந்த தொழூஉ"[6]**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

காளையர், ஏறுகளைப் பிடிக்கையில் நடக்கும் நிகழ்வினைக் கூறுகையில்,

**"எழுந்தது துகள்**

**ஏற்றனர் மார்பு**

கவிழ்ந்தன மருப்பு

கலங்கினர் பலர்"[7]

என்று ஏறு தழுவும் வீரர்கள் சீறிப்பாயும் காளைகளை தம் மார்பை நிமிர்த்திக் கொண்டு அடக்கப் பாய்ந்தமையை அறிகிறோம்.

சங்க காலத்தில் நடந்த ஏறு தழுவுதல் நிகழ்வு இன்று ச(ஜ)ல்லிக் கட்டாக நடைபெறுகிறது. "சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தினைக் குறிக்கும். புளியங் கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் தற்போதும் வழக்கத்தில் உள்ளது. அதோடு 50 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த 'சல்லிக் காசு' என்னும் இந்திய நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அணையும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் 'சல்லிக்கட்டு' என்று மாறியது. பேச்சு வழக்கில் அது திரிந்து 'ஜல்லிக்கட்டு' ஆனது என்றும் கூறப்படுகிறது."[8]

அன்று திருமணத்துடன் தொடர்புபடுத்தி முல்லை நில மக்களின் வீர விளையாட்டாக இருந்த ஏறு தழுவுதல், இன்று தமிழரின் பண்பாடு, சமயம் சார்ந்த விழாவாகப் பார்க்கப்படுகின்றது. குறிப்பாக தென் தமிழகத்தில் உணர்வு பூர்வமாகப் பார்க்கப்படுகின்றது.

தற்போது மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம், பெரையூர் போன்ற இடங்களிலும், சிவகங்கை மாவட்டம் சிராவயல், சிங்கம்புணரி, புதூர், அரளிப்பாறை போன்ற இடங்களிலும், புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை போன்ற இடங்களிலும் சல்லிக்கட்டு நடைபெறுகிறது. மேலும் திருச்சி, தேனி போன்ற தென் மாவட்டங்களிலும் இவ்விளையாட்டு நிகழ்கிறது.

இங்ஙனம் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் இவ்விளையாட்டு பல விதமாக நடைபெறுகிறது.

வேலி மஞ்சுவிரட்டு என்பது ஒரு திடலில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டு கட்டுப்பாடின்றி ஓட வீரர்கள் விரட்டிப் பிடிப்பதாக அமைகின்றது.

அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டில் வாடிவாசல் வழியாக வெளியேறும் காளைகளின் திமிலில் தொங்கியப்படி சென்று இளைஞர்கள் அடக்குவதாக அமைகிறது.

வட தமிழகத்தில், வடம் மஞ்சு விரட்டு, 20 அடி நீல கயிற்றால் காளையைக் கட்டி இருபுரமும் இழுத்து பிடிக்க முன்னே நின்று கொம்புகளில் உள்ள பரிசு பொருள்களை எடுப்பர்.

மஞ்சு விரட்டு என்பது மஞ்சி அதாவது கற்றாழை நார் கொண்டு தயாரிக்கப்படும் கையிற்றினால் மாடுகளின் கொம்புகளில் கட்டப்படும் பொருட்களை எடுப்பதற்காக வீரர்கள் மாடடை துரத்திச் சென்று பிடிப்பது.

அன்று காளையை அடக்கி பெண்ணைப் பரிசாகப் பெற்றனர். தற்பொழுது பணமுடிப்பினைப் பரிசாகப் பெறுகின்றனர். எவ்வாறாயினும் தமிழகத்தின் குறியீடாக, தொன்மத்தின் சுவடாக ஏறு தழுவுதல் பார்க்கப்படுகிறது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர் தங்களது உயிருக்கு நிகராகக் காளையைப் போற்றினர். அன்றும் இன்றும் ஏறுதழுவுதல் தமிழரின் வாழ்வியலோடு இணைந்த ஒன்றாகவே காணப்படுகிறது. கால மாற்றத்தில் எத்தனையோ பண்பாட்டுக் கூறுகளை நாம் இழந்தாலும் வடிவம் மாறி இருந்தாலும் தமிழரின் அடையாளமாகவே ஏறுதழுவுதல் பார்க்கப்படுகிறது.

**சான்றெண் விளக்கம் ;**


1. கலித்தொகை, பா.எ - 103
2. தமிழரின் வீர விளையாட்டுகள், ta.m.wikipedia.org

3. தமிழர் வாழ்வும் பண்பாடும், ப.எ - 106
4. கலித்தொகை, பா.எ – 101
5. கலித்தொகை, பா.எ – 102
6. கலித்தொகை, பா.எ – 103
7. கலித்தொகை, பா.எ – 102
8. ஏறுதழுவல், ta.m.wikipedia.org

**துணைநூற் பட்டியல் ;**

1. நச்சினார்க்கினியர்(உ.ஆ)., - கலித்தொகை, கழக வெளியீடு.
2. சிதம்பரனார்.சாமி., - தமிழர் வாழ்வும் பண்பாடும் சாரதா பதிப்பகம் சென்னை முதற் பதிப்பு, டிசம்பர் - 2011

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Kavitha V., (2021) Bull Taming – Then and now, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:158-161. Cauvery College For Women, Trichy.

**முனைவர் மு.அனு**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி – 18

# மறம் போற்றும் மானுடம்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்கள் மிகவும் தொன்மை வாய்ந்த ஓர் இனத்தைச் சார்ந்தவர்கள். பாரம்பரியப் பெருமை உடையவர்கள். உலக நாகரிகங்களில் இடம் பெறத்தக்க உயர்ந்த நாகரிகத்தை உடையவர்கள். ‘மன்னும் இமயமலை எங்கள் மலையே’ என்று மார் தட்டிக் கூறியவனும் ‘கங்கையும் காவிரியும் எங்கள் நதியே’ என்று இருமாந்து பாடியவனும் ‘பஞ்சநதி பாயும் பழனத் திருநாடு எங்கள் நாடே’ என்று நெஞ்சம் நிமிர்ந்து பேசியவனும் தமிழனே. உலகம் போற்றும் உயர்ந்த நெறிகளையுடைய தமிழர்களின் பெருமையைப் பறை சாற்ற எண்ணிலடங்கா அடையாளங்கள் பல உள்ளன. அவற்றுள், வீரம் நிரைற்த மண்ணாகக் கருதப்படும் தமிழகத்தின் தமிழரின் அடையாளங்களுள் முதன்மையானது மறம். அம்மறத்தைப் போற்றும் மானுடம் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**முன்னுரை**

தமிழ்மக்கள் உலகின் தொன்மைக் குடியினர். பல நாடுகளில் நாகரிகமே தோன்றாத நிலையில் தமிழன் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவன். சேர சோழ பாண்டியர் என மூன்று பிரிவினராக இருந்தாலும் வீரத்திலும் ஈரத்திலும் சிறந்தவராய் இருந்தனர். மூவேந்தரும் இமயத்தில் வில், புலி, மீன் கொடிகளைப் பதித்தவர்கள். பிற நாடுகளோடு வாணிக உறவும் தூதுவர் உறவும் கொண்டிருந்த அறிவார்ந்த சமுதாயமாக இருந்தனர். அவர்களுடைய விளையாட்டில் கூட வீரம் இருந்தது. குளம் கண்டு வீரம் விளைத்தவருக்கு வீரக்கல் நட்டனர். தமிழரின் செயல் அனைத்தும் வீரத்தின் அடிப்படையில் தான் நடைபெற்றன.

**“குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்**

**ஆளன் றென்று வாளிற் றப்பார்”** [1]

என்ற புறப்பாடல் குழந்தை இறந்த நிலையில் அல்லது தசைப்பிண்டமாகவே பிறந்தாலும் அப்படியே எடுத்துப் புதைத்து விடாமல் உடம்பில் கத்தியால் கீறி ஒரு வீரத்தழும்பை உண்டாக்கி விட்டே புதைக்க வேண்டும் என்ற மரபு சங்ககாலத்தில் இருந்திருக்கின்றதை எடுத்தியம்புவதன் வழி மறம் போற்றும் மானுடமாகத் தமிழினம் தலை நிமிர்ந்திருந்ததை அறிய முடிகின்றது.

**சான்றோனும் வீரனே**

சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டது. வீரம் மிக்கவர்களே சிறப்புக்குரியவர்களாகக் கருதப்பட்டனர். பழந்தமிழரின் கடைமைகளைக் கூறும்போது,

**“ஈன்று புறந்தரு லென்றலைக் கடனே**

**சான்றோ னாக்குதற் றந்தைக்குக் கடனே**

**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**

**நன்னடை நல்கல் வேந்தர்குக் கடனே**

**ஒளிருவா எருஞ்சம முருக்கிக்**

**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"** [2]

என்று புறநானூறு கூறுகின்றது. இப்பாடல் குறிப்பிடும் அனைவரின் கடமைகளும் போரோடு தொடர்புடையனவாக இருப்பது கருதுதற்குரியது. சான்றோனாக்குதல் என்ற தொடருக்கு 'வீரனாக்குதல்' [3] என்று பொருள் கொள்வர் உ.வே.சாமிநாதையர். 'சான்றோர் என்னும் சொல் பழங்காலத்தில் வீரம்' [4] என்னும் பொருளிலேயே அமைந்துள்ளது என்பார் வ.சுப.மாணிக்கம். சுங்க இலக்கியத்தில் சான்றோன் என்பது பண்பு நலன்களையுடையவன் என்ற பொருளிலும் ஆளப்பட்டிருப்பினும், வுரம் என்ற பொருளிலும் ஆளப்பட்டுள்ளது என்பது குறிக்கத்தக்கது.

பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள், தொழில், விளையாட்டு ஆகியன யாவும் மறப்பண்புடன் திகழ்கின்றன. தம் தொழில் முயற்சியிலும் விளையாட்டிலும் பழக்க வழக்கங்களிலும், இயற்கைப் பண்பிலும் தமிழர்கள் போர்க்குணம் படைத்தவராகவே விளங்கினர். ஆடவர் மட்டுமன்றி மகளிரும் மறப்பண்புடன் விளங்கியதை அறியமுடிகின்றது. தன் தலைவன் போரில் வெற்றிப் புகழ் எய்துவதற்குப் போர்கள் ஏற்பட வேண்டும் எனப் பொண்ணொருத்தி விரும்பவதை,

**"ஓ…………………………. வேந்தனொடு**

**நாடுதரு விழுப்பதை பெய்துக வெனவே"** [5]

என்ற இவ்வடிகள் மறக்குல மகளிர் தன் கணவன் வீரம் மிகுந்த போரை மேற்கொள்ள இறைவனை வேண்டியது தெளிவாக்குகின்றது.

**மறவுணர்வின் மாண்பு :**

சங்க இலக்கியங்களின் ஒரு பகுதியான புறநூல்களில் முதன்மை பெறுவது மறவுணர்வாகும். மனித இனம் தோன்றிய நாளிலிருந்து அவனோடு வளர்ந்து வரும் உணர்வு இது. தொடக்க காலத்தில் மனிதன் உணவு தேடுவதிலும் தன்னைக் காத்துக் கொள்வதிலும் இப்போர்ப்பண்பை வளர்த்துக் கொண்டான். அதன் பின் கூட்டம் கூட்டமாய் வாழக்கற்றுக் கொண்ட நிலையில் தமக்கு வேண்டிய பொருள்கள் தம்மிடம் இல்லாத நிலையில் அப்பொருள் கொண்டிருக்கும் குழுவைக் கருவியாகக் கொண்டு தாக்க முனைந்தமையே போரின் முதற்கட்டமாயிற்று. இத்தகைய மறவர்களிடம் போர் விருப்பமும் உடல் தினவும் வழிவழியாக வந்துள்ளமையை,

**"மன்பதை புரக்கும் நன்னாட்டுப் பொருநன்**

**உட்பகையொரு திறம் பட்டெனப் புட்பகை**

**கேவானாகலின் சாவேம் யாமென"** [6]

என்று கூறுவார்களாம் மறவர்கள். ளபோரையே தொழிலாகவும், போரில் இறப்பதையே புகழுக்குரியதாகவும் பண்டைத் தமிழர்கள் கருதியிருந்தனர்.

**"இடைப்படை யழுவத்துச் சிதைந்த வேறாகிய**

**சிறப்பு டையளாளன் மாண்பு கண்டருளி**

**வாடு முலை யூறிச் சுரந்தன**

**ஓட்காப் பூட்கை விடலைத் தாய்க்கே"** [7]

என்ற இவ்வரிகள் போரில் பின்னிட்டு ஓடாத உறுதிமிக்க வீரன் ஒருவனின் உடலைக் கண்டு அவனை ஈன்ற தாய் அடைந்த பேற்றினை விளக்குகின்றது. போர் புரிவதும், போரில் யானைகளைக் கொல்லுவதும் வீரனுக்குரிய கடமைகளாகச் சமுதாயம் நோக்கின. போரில் இறந்துபடுதலைப் பெருமைக்குரியதாப் பழந்தமிழ்ச் சமூகம் போற்றியது. அரசக் குடியினர்களாக இருந்தாலும் போர்க்களத்தில் இறப்பதையே பெருமைக்கும் புகழுக்கும் உரியதாக கருதியிருக்கின்றனர்.

**பகிர்ந்தளிக்கும் மறப்பண்பு:**

ஆநிரை கவர்தலும், மீட்டலும் போருக்குரிய முதன்மைக் காரணங்களாகத் தொடக்கத்தில் இருந்தன. அவ்வாறு கவர்ந்து வந்த ஆநிரைகளையும் தமக்கென வைத்திராது பலருக்கும் பகிர்ந்தளிக்கும் பண்புடையோராக மறவர்கள் விளங்கினர்.

**“மிகப் பலவாயினும், என்ஆம் - எனைத்தும்**

**வெண் கோள் தோன்றாக் குழிசியொடு**

**நாள்உறை மத்து ஒலிகேளா தோனே?”[8]**

என்ற அவ்வரிகள் மிகுதியான ஆநிரைகளைக் கவர்ந்த மறவன் அவ்வாநிரைகளை வெள்ளி என்னும் விண்மீன் தோன்றுவதற்கு முன்னரும், பானையில் மத்தூற தயிரின் ஒலி கேட்பதற்கு முன்னரும், பிறருக்குக் கொடுத்தான் எனக் கூறுகின்றது. சிக்மண்ட் பிராய்டு என்ற உளவியலாளர் ‘தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டும் என்ற மன இளல்பே போருக்குக் காரணம்’ [9] என்று கூறுகின்றார். மானிட சமூகவியலாளர் அரிஸ்டாட்டில் ‘போர் இயற்கையானது, போரிடுவது மனிதர்களின் தொன்மையான பண்புகளில் ஒன்று என்றும் ஆனால் நாகரிகமடைந்த இனத்தில் இப்பண்பு கட்டுப்படுத்தப்படுகின்றது’ [10] என்றும் கூறுகின்றார்.

**போரும் பூசலும் :**

போர்க்குரிய காரணங்களாகப் பற்பல கருத்துக்கள் கூறப்பெறுகின்றன. இயல்பான மறப்பண்பு, மண்ணாசை, இடஞ்சிறிதென்னும் ஊக்க மேலீடு, அரசர்க்கெல்லாம் அரசராகத் திகழ வேண்டும் என்ற உள்ள வேட்கை, அரசுரிமை யார்க்கென்னும் சிக்கல், மகள் மறுத்தல் போன்ற காரணங்களால் போர்கள் தோன்றின எனக் கூறலாம். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே மூவேந்தரும் போரிட்டதை,

**“போந்தை வேயே ஆரென வரூஉம்**

**மாபெருந் தானையர் மலைந்த பூவும்” [11]**

என்ற தொல்காப்பிய வரிகள் வழி அறியலாம். மூவேந்தரும் போர் மேற்கொண்டதற்கான காரணங்களில் ஒன்றாக,

**“எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்**

**அஞ்சுகத் தலைச் சென்றடல் குறித்தன்றே” [12]**

அதாவது, தன் நாட்டில் வாழும் குடிகள் வளத்துடன் வாழ்வதற்குப் போதிய இடமின்மையாலும், இடம் சிறிதென்னும் ஊக்க மேலீட்டினாலும் வேந்தர்கள் போர் தொடுப்பர் என்கின்றார் தொல்காப்பியர்.

**“வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்**

**போகம் வேண்டிப் பொதுச்சொற் பெறாஅ**

**திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப” [13]**

பூமி முழுதும் தானே இருந்து என்றும் ஆளும் இன்பத்தைப் போகம் என்பர் புலவர். நிலம் என்பது பொதுவாய் அமைந்தது என்னும் சொல் பொறுக்காது தன் நாடு சிறிது என்று விரிவுபடுத்தும் ஊக்கமுடையவன் என மன்னனின் நிலத்தாசையையும் கூறியுள்ளனர் நம் முன்னோர்கள்.

**“அவற்று ஓர்அன்ன சினப்போர் வழுதி**

**துண்தமிழ் பொதுஎனப் பெறாஅன், போர்எதிர்ந்து” [14]**

எனப் பாண்டிய மன்னன் தமிழ்நாடு மூவர்க்கும் உரியது என ஏற்காது தனக்கு மட்டும் உரியது என்ற கொள்கையுடையவன். ஆகவே தமிழ்நாடு பொது என்றால் பொறுத்துக்கொள்ளாதவனாக இருந்திருக்கின்றான்.

**"பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்"** [15]

எனக் கூறுவதிலிருந்து பூமியை பிறர் ஆள்வதைப் பெறாமல் தான் ஒருவனே ஆள வேண்டும் என்ற எண்ணமுள்ள மன்னர்கள் பலர் இருந்நிருக்கின்றளர் என்பதை அறியமுடிகின்றது.

**விழுப்புண் புறப்புண் :**

போர்க்களத்தில் முகத்திலும் மார்பிலும் புண்பட்ட வீரனை எல்லோரும் போற்றுவர். அப்புண்ணால் ஏற்பட்ட வடுக்களையுப் பொன்னினும் மணியினும் மேலாக போற்றுவர். அவற்றைப் புகழின் சின்னமாகக் கருதி பெருமை கொள்வர்.

**"விழுப்புண் படாத நாளெல்லாம் வழக்கினுள்**

**வைக்கும் நாளை எடுத்து"** [16]

என்கின்றார் வள்ளுவர். அதாவது வீரன், கழிந்த தன் வாழ்நாட்களைக் கணக்கிட்டு, விழுப்புண் படாத நாட்களை எல்லாம், பயன்படாமல் தவறிய நாட்களுள் சேர்க்கின்ற மறப் பண்புடையவனாக திகழ்கின்றான்.

விழுப்புண் பெற்றவனை வியந்து பேசுவர். வீரக்கல் நாட்டி வணக்கம் செலுத்துவர். ஆனால் புறத்திலே புண்பட்ட வீரனை எல்லோரும் இகழ்வர். போர்க்களத்தில் புறங்காட்டி ஓடியதற்கு அடையாளமாகிய அப்புண்ணைப் பார்க்குந்தோறும் பழித்தும் இழித்தும் பேசுவர். அதனாலயே மானமிக்க வீரன் ஒருபோதும் புறப்புண் தாங்கி உயிர் வாழ இசையார். வேண்ணிப் போர்க்களத்தில் புறப்புண்பட்ட பெருஞ்சேரலாதன் என்னும் சேர மன்னன் அப்போதே உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்கின்றான்.

"**களி இயல் யானைக் கரிகால் வளவ!**

**சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற**

**வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே**

**.......................................................................**

**புறப்புண் நாணி வடக் கிருந்தோனே"** [17]

என்ற புறநானூற்றடிகளில் வெண்ணிப் போரில் வென்ற கரிகாற் பெருவளத்தானை விட, அப்போரில் புறப்புண் பட்டு அதற்காக நாணி அப்போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்த பெருஞ்சேரலாதன் நல்லவன் என்று பதிவு செய்துள்ளார் புலவர் வெண்ணிக் குயத்தியார்.

**அற வழியில் மறம் :**

மறவர்களுக்கிடையே போர் நிகழ காரணங்கள் பல இருப்பினும் அப்போர்களில் அறத்தையும், நீதியையும், நேர்மையையும் அவர்கள் கடைப்பிடித்துள்ளது தமிழர்களின் மற மாண்பிற்கு பெருமை சேர்ப்பதாகும். போரின் தொடக்கத்தில் பகைவர் நாட்டில் புகுந்து அவர்க்குரிய பசுக்களை கவர்ந்து வருதல் அக்கால மரபு என்கின்றனர் சான்றோர். ஆனால் ஒவ்வொரு போரும் பசுக்களைக் கவர்வதிலேயே தொடங்கியதென்று கூறமுடியவில்லை. ஆனால் அக்காலத்தில் போருக்குரிய காரணங்களில் ஆநிரைகளைக் கவர்தலும் ஒன்றாகும். பசு என்றாலே செல்வம், பொன் என்ற பொருள்படுதல் காணலாம். மேலும் சமயச் சின்னமாகவும், அவை விளங்கின. இதனால் அவற்றுக்கு ஊறு விளைத்தலாகாது என்று கருதி அவற்றைக் கவர்ந்து வந்ததாகப் பண்டுதொட்டுக் கூறி வருகின்றனர் நம் புலவர்கள்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற மன்னனின் பெருமையை எடுத்துரைக்கும் பொழுது,

**“ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**

**பேண்டிரும் பிணியுடையீரும் பேணித்**

**தேன்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்**

**போன்பொற் புதல்வற் பெறாஅதீரும்**

**எம்அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்”** [18]

எனப் பகைநாட்டில் பறையறைவழத்துப் பின் போர் தொடுத்ததாகப் பாராட்டிக் கூறியுள்ளார். நுச்சினார்க்கினியர் தமிழர் போர் முறையிற் கடைப்பிடித்த வேறுசில முறைகளாகச் சிலவற்றைக் குறிப்பிடுகின்றார். ‘கோழைகளையும், மயில்குலைந்தோரையும், பெண் பெயர் கொண்டோரையும், படைக் கருவிகளைக் கை நழுவ விட்டவரையும்’ [19] தமிழ் மறவர் கொல்லார் என்கின்றார்.

**மறம் நிறைந்த மாதர்:**

தமிழ் நாட்டில் பெண்களும் மனத்திண்மையும் வீரவுணர்வும் உடையவராய் விளங்கினார்கள். தம் மக்கள் வீரப்புகழ்பெற வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ்கொண்ட மைந்தர் செயல் கண்டு அவரைப் பெற்ற போதிலும் பெருமகிழ்வுற்ற வீரத்தாய் பலர் தமிழ் நாட்டில் இருந்தனர். ஒருமுறை வீரன் ஒருவன் போரில் பகைவர்களால் வாளால் வெட்டப்பட்டு இறக்கின்றான். ஆவன் உடல் பல துண்டுகளாக வெட்டப்பட்டுக் கிடந்தது. ஆவன் எவ்வாறு இறந்தான் என்பரத அறியாத பலர், அவனுடைய வயதான தாயிடம் சென்று உன் மகன் பகைவர்க்குப் புறமுதுகுகாட்டிப் போரில் இறந்தான் என்று சொல்லக் கேட்ட அத்தாய், தன் மகன் புறமுதுகுகாட்டி இறந்திருப்பானானால் அது தன் மறக்குலத்திற்கு இழுக்கு என்று கருதி,

“.......................................................................

**மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்**

**முலை அறுத் திடுவென் யான் எனச் சினைஇக்”** [20]

என்று வஞ்சினம் உரைக்கும் இவர் மறம் நிறைந்த மாதருக்கு ஓர் எடுத்துக்காட்மாகும்.

**“களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை**

**ஈன்ற ஞான்றினும் பெரிதே”** [21]

போர்க்களத்தில் யானையோடு போர் செய்து, அவ்யாயையைக் கொன்று, அவ்விடத்திலே தன் உயிர் நீத்த வீரனின் செயல் கேட்டு பிறவிப் பயனைப் பெற்றது போல் பேரின்பம் அடையும் வீரத்தாயின் மறவுணர்வை பதிவு செய்கின்றார் பூங்கண் உத்திரையார்.

முதல் நாள் போரில் தந்தையை இழந்து, இரண்டாம் றாள் போரில் கணவனையும் இழந்து, மூன்றாம் நாள் போர்முரசு ஒலிப்பதைக் கேட்டு, தனது ஒரே மகனை, சின்னஞ்சிறு பாலகனை அழைத்து, வெண்மையான ஆடை உடுத்தி, எண்ணெய் தடவிச் சீவிக் குடுமி முடித்து, வேலை எடுத்துக் கையிலே கnhடுத்து, அவனைப் பொர்க்களம் நோக்கிப் போ என்று அனுப்பிவைத்த அத்தாயின் வீரச்செயலுக்கு ஆயிரம் மறவர்களின் வீரமும் அடிபணியும், அவளின் வீரநெஞ்சை நினைத்து தமிழகமே வியந்து நிற்கும்.

“................................................................

**வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துஉபீஇப்**

**பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி**

**ஒருமகன் அல்லது இல்லோள்**

**செறுமுகம் நோக்கிச் செல்கஎன விடமே"** [22]

என்ற வரிகள் அவ்வீரத்தாயின் பெருமையினை எடுத்தியம்புகின்றது.

**முடிவுரை:**

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தக் குடி தமிழ்க்குடி. இக்குடிமக்களின் மொழி உலகின் தொன்மையான மொழிகளுள் ஒன்று. கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு, வடமொழி போன்ற தொன்மையான மொழிகள் இன்று வழக்கில் இல்லை. ஆனால் தொன்மையானத் தமிழ் மொழி இன்று வழக்கில் உயிர்ப்புடன் இருப்பதற்குக் காரணம் தமிழிலக்கியங்களும் அவ்இலக்கியங்கள் கூறும் தமிழர் அடையாளங்களுமே!. தமிழனை உலகறியச் செய்யும் அடையாளங்களில் மறுக்க முடியாத மறைக்க முடியாத ஒன்று அவனுடைய வீரம். வீரத்தால் கடல் கடந்து தடம் பதித்த தமிழனின் மறத்தை மானுடம் என்றும் போற்றும்.

**சான்றெண் விளக்கம் :**

1. புறநாநூறு – பா.எண் - 74
2. புறநாநூறு – பா.எண் - 312
3. சாமிநாதையர் உ.வே, புறநானூறு மூலமும் உரையும் - ப.எ – 112
4. மாணிக்கம் வ.சுப., பழந்தமிழிலக்கியத்தில் இயற்கை – ப.எ – 186
5. புறநாநூறு – பா.எண் - 306
6. புறநாநூறு – பா.எண் - 68
7. புறநாநூறு – பா.எண் - 195
8. புறநாநூறு – பா.எண் - 251
9. சிக்மண்டு பிராய்டு, சமூகவியலின் அடிப்படை கோட்பாடுகன் (மொழிபெயர்ப்பு – ஜெ.நாராயணன்), ப.எண் - 43
10. அரிஸ்டாட்டில், உ சமூகவியலின் அடிப்படை கோட்பாடுகன் (மொழிபெயர்ப்பு – ஜெ.நாராயணன்), ப.எண் - 43
11. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம் - புறத்திணையில் - நூ.எ – 64:4 -5
12. தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம் - புறத்திணையில் - நூ.எ 64: 2-3
13. புறநாநூறு – பா.எண் - 8: 1-3
14. மேலது 51: 5-4
15. கலித்தொகை பா.எண – 68
16. திருக்குறள்
17. புறநாநூறு – பா.எண் -6
18. மேலது – 9
19. டாக்டர் சு.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.35
20. புறநாநூறு – பா.எண் - 278
21. புறநாநூறு – பா.எண் - 277
22. புறநாநூறு – பா.எண் -279

**துணைநூற் பட்டியல் :**

சாமிநாதயர் உ.வே., - புறநானூறு மூலமும் உரையும்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்
12 - ம் பதிப்பு – 1971.

மாணிக்கம் வ.சுப., - பழந்தமிழிலக்கியத்தில் இயற்கை
மணிவாசகர் பதிப்பகம்
55 லிங்கியார் தெரு, சென்னை – 1
முதற்பதிப்பு – 1987.

வரதராசனார்.மு., - திருக்குறள்,
கழகவெளியீடு சென்னை
176 – வது பதிப்பு – 2004.

பாஸ்கல் கில்பர்ட்
(மொ.பெ) நாராயணன் - சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாம் முதன்மைச்சாலை
தரமணி, சென்னை
முதற்பதிப்பு – 1991

தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை,
தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு
கழகவெளியீடு சென்னை
முதற்பதிப்பு – 1978

கலித்தொகை - தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்
(பி) லிமிடெட், சென்னை - 1989

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Anu M., (2021) Human admiration of valour, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:162-168. Cauvery College For Women, Trichy.

**முனைவர் க.ராதிகா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி(தன்னாட்சி)
திருச்சி

# குறுந்தொகையில் மன்னராட்சி

**ஆய்வுச்சுருக்கம்**

குறுந்தொகை அகநூல் என்று கூறினாலும் அம்மக்களின் பழக்கவழக்கங்கள், அரசர்களின் ஆட்சி முறைகள்,வாழ்வியல் நெறி போன்ற செய்திகளை உள்ளடக்கிய நூலாக விளங்குகிறது. ஓரி, நன்னன், பொறையன், மலையன், ஆஅய் அண்டிரன், பாரி, எழினி போன்றோர்களின் ஆட்சிச் சிறப்பினையும் சமுதாய உணர்வினையும் இக்கட்டுரை சுட்டிச் செல்கிறது.

**முன்னுரை**

இலக்கியங்களில் காலத்தால் தொன்மை வாய்ந்த இலக்கியங்களாகக் கருதப்பெறுவன சங்க இலக்கியங்களாகும். தமிழ்ப்பண்பாட்டின் கருவூலங்களாகக் கொள்ளத்தக்கச் சிறப்பிற்குரிய சங்க இலக்கியங்கள் என்றும் மனிதகுலம் மற்றும் மன்னர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை வளம்படக் கூறுகின்றன.

**குறுந்தொகையில் மன்னராட்சி**

கடையெழு வள்ளல்களும் குறுநில மன்னர்களும் அரசு புரிந்தமையைப் பற்றிக் கூறுகிறது. இவைகள் பெரும்பாலும் புறநூல் கருத்தாக இருப்பினும் அகநூல்களில் உதாரணமாகவும் உவமைகளாகவும் உள்ளுறைகளாகவும் இடம் பெறுகின்றன. அரசர்கள் தனக்கென வாழாமல், நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும், வாழ்ந்ததால் அக்கால மக்களின் சமுதாய நிலைகளையும், ஆட்சி புரிந்த சிறப்பையும் உணர்த்துகின்றன.

**ஓரி**

இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். கொல்லி மலையும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளையும் ஆட்சி புரிந்தவன் இவன். வில்லாற்றலில் சிறந்து விளங்கியவன். ஆதலால் வல்வில் ஓரி என்ற பெயர் பூண்டவன் ஆவான். கொல்லி மலையின் மேற்குப் பக்கத்தே அமைந்த பாவைகளுக்கு உரியவனாக வாழ்ந்தவன் என்பதை,

**“வல்வில் ஓரி கொல்லிக் குடவரைப் பாவை” 1**

போன்ற அடிகளால் ஓரி தலைவனாக இருந்த கொல்லி மலையில் கொல்லிப் பாவையையும், ஓரியின் வில் ஆற்றலும் கொண்டுள்ளமையை உவமை நயம் பட கூறுகிறது. மேலும் ஓரி வாழ்ந்த கொல்லிமலை மேற்கில் அமைந்த பாவை போன்றவள் பெறுதற்கு அரிது என்ற அடியால் கொல்லி மலையில் பெண் உருவங்களைக் கொண்ட பொம்மைகள் அமைந்தமையும் வில்லாற்றல் கொண்ட ஓரி வாழ்ந்தமையும் பற்றி கூறப்படுகிறது.

**நன்னன்**

இவன் பாழி, பாரம், பிரம்பு போன்ற மலைகளுக்குரியவன். பெண் கொலைப் புரிந்தவன். அவனது சோலையில் மாங்கனி ஒன்று நீரில் வீழ்ந்து ஆற்றோடு சென்றது. அவ்வாற்றில் புனலாடியப் பெண் அக்கனியை உண்டாள். அக்கனியை உண்ட பெண்ணைக் கொலை செய்தான் . அந்நன்னனுடைய கொடுமைச் செயலை எண்ணிய கோசர்கள் முதிர்ந்த ஆலமரத்தடியில் வாழும் அறவோர்கள், நன்னனது கொடிய

செயலால் அம்மாமரத்தை யானையால் கொண்டு வரப்பட்டு வெட்டியவர்கள் என்பதை.

**" நறுமா கொன்று நாட்டிற் போக்கிய**

**ஒன்று மொழிக் கோசர்" 2**

**"பெண் கொலை புரிந்த நன்னன"3**

போன்ற அடிகளால், நன்னன் பெண் கொலை புரியும் கொடியவன் என்றும்,அக்கொடியவனின் செயலை அழிக்கும் பொருட்டு கோசர்களின் நீதிகளையும் அக்கால மக்களின் நிலைகளையும் உணர்த்துகிறது. மேலும் நன்னன் நாட்டுக் காவல் மரமாகிய மாமரத்தை வெட்டியழித்தமையும், ஒவ்வொரு நாட்டு அரசர்க்கும் உரிய காவல் மரமாகக் காத்தமையையும் இதன் மூலம் உணர முடிகிறது. அக்காலத்தில் அரசனாக இருந்தாலும் தவறு செய்தால் தண்டனை பெறுவர் என்பது தெரிகிறது.

**பொறையன்**

சேர நாட்டினைச் சேர்ந்தவன் பகைவர்களால் வெல்ல இயலாத தேர்வலிமை கொண்டவன் .சேர நாட்டுத் தொண்டி என்னும் துறைமுக பட்டினத்தைக் கொண்டவன். அத்தகைய வலிமையுடையவனது ஊரில் பிறந்த தலைவியைக் கூடுவது அரியது என்பது போல கூறியதாகும்.

**" திண்டேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை"4**

என்ற அடியால், அக்கால மக்களில் உயர்ந்தவர்களாகவும்,குடிச்சிறப்பு கொண்டவர்களாகவும் வாழ்ந்தனர். துறைமுகம் கொண்டமைக்கு மூன்றுறை என்று அழைக்கும் வழக்கம் இருந்தது. இதன் மூலம் பொறையனின் ஆட்சியையும் வளமையையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**மலையன்**

மலையன் என்ற மன்னன் முள்ளூர்க்கானத்தை ஆட்சி புரிந்தவன். எஃகு போன்ற கைவலிமைக் கொண்டவன். வேலைக் கையில் கொண்டவன். முள்ளூர் கானத்தில் விளைந்த வாசனை நிறைந்த சந்தனத்தை மார்பில் பூசுபவன். அத்தகைய மலையனைப் பற்றி பல இடங்களில் கூறப்படுகிறது அதனை,

**"எஃகு விளங்கு தடக்கை மலையன"5**

**"முரண் கொள் துப்பிற் செவ்வேன் மலையன்**

**முள்ளூர் கான நாற் வந்து" 6**

என்ற அடிகளால் மலையனது வீரமும் வலிமையும் கூறப்படுகிறது. அக்கால மக்களின் பழக்கவழக்கமாக சந்தனம் பூசுவதை இதன் மூலம் உணர்கிறோம்.

**ஆஅய் அண்டிரன்**

பொதிய மலைக்குத் தலைவன். வறியவர்களுக்கு வழங்கும் கொடைத்திறன் பெற்றவன் .தென் திசையாகிய பொதிமலை இல்லையென் இவ்வுலகு பிறழ்ந்து விடும் என்ற சிறப்பும், குளிர்ச்சியும் பொருந்தியது. இவன் வேனிர் குலத்தில் கொடை வழங்கும் தலைவன். பகைவருக்கு அஞ்சாமல் போர் புரிபவனும், பரிசுகளை மனம் மகிழ்ந்து தருபவனுமாக பொதிய மலையில் வாழ்ந்தவன் . எனவே இவற்றில் பொதிய மலையின் சிறப்பும் குளிர்ச்சியும் பற்றி கூறப்படுகின்றன. அதனை,

**"தென்திசை ஆஅய்குடி இன்றாயின்**

**பிறழ்வது மன்னோ ஈம்மவர் தலை உலகே" 7**

**"இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்**

**அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" 8**

என்ற அடிகளால் ஆஅய் அண்டிரன் வாழ்ந்த பொதிய மலையில் குளிர்ச்சியும், கொடைத்திறமும் கூறப்படுகின்றன. மேலும் ஆஅய் வாழக் கூடிய பொதிய மலை குளிர்ச்சிப் பொருந்தியது போன்று, தலைவியும் குளிர்ச்சிப் பொருந்தியவள் என்பதையும் பொதிய மலையின் இயற்கைச் சிறப்பையும் அறிய முடிகிறது. அதனை,

**"கழல் தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்**

**வேய்கையும் காந்தளும் நாறி**

**ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே" 9**

என்ற அடிகளால் பொதிய மலையில் தோன்றிய குளிர்ச்சியைப் போன்று தலைவியும் குளிர்ச்சிப் பொருந்தியவள் என்பதையும்,ஆஅய் வள்ளலின் கொடையும் வீரச் சிறப்புக்களையும் அறிய முடிகிறது.

**பாரி**

முந்நூறு ஊர்களைக் கொண்ட பறம்பு மலைக்கு தலைவன். மூவேந்தரும் முற்றுகையிட்கும் பெற இயலாது. பறம்பு மலையை ஆட்சி புரிந்தவன். மழை போன்று கொடைவளம் வழங்கியவன். தமிழ் நாட்டில் உள்ள பறம்பு மலை பாரியால் சிறப்பு பெறுகிறது. அதனை

**"தை இத் திங்கள் தண்கயம் போல" 10**

**"ஓரூர் உண்மையின் இகந்தொர் போல"11**

என்ற அடிகளால் பாரியினது பறம்பு மலை அரியதும். குளிர்ச்சி பொருந்திய இனிய நீரும் பெற்றதை அறிய முடிகிறது. மேலும் கோடைக் காலங்களிலும் குளிர்ச்சி நிறைந்த பனிச்சுனை நீராக அமையும் இயற்கை அழகும், அம்மக்கள் பெற்றுள்ள சிறப்பையும் அறியலாம். அதனை,

**"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்**

**தை இயற் திங்கள் தண்ணிய"12**

என்ற அடிகளால் அக்கால மக்களின் பழக்கவழக்கங்களையும், குளிர்ச்சியான சுவை மிகுந்த நீரை மக்கள் உண்டு களித்தமையையும் உணர முடிகிறது. இதனால் மக்களின் வரலாற்றுச் செய்திகளையும், சமுதாய நிலைகளையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

**எழினி**

வில், வேல், வலிமை கொண்டவன். பகைவரிடம் நடுநிலையோடு போரிட்டு வெற்றி பெறுபவன். பகைவர்களை வென்று தன்னாட்டு பசுக்களைக் காத்தவன். அஞ்சி என்னும் வேந்தன் ஆவான். அவனைப் பற்றி, பல நூல்களில் இடம் பெறுகின்றன.

**" நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி**

**கடுமுனை அலைத்த கொடுவில் ஆடவர்**

**ஆகொல் பூசலின்" 13**

என்ற அடிகளால் அதியமான் அஞ்சி பசுக்களைக் காத்த பெருமையும்,வீரமும், வரலாற்றுச் செய்திகளாக அமைகின்றன.

**"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்**

**பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி வெம்போர்**

**நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி**

**முனையான் பெருநிரை" 14**

என்ற அடிகளால் சங்ககாலப் பெண்கள் புதுபுனல் ஆடலை வழக்கமாக கொண்டிருந்தனர். ஆடவர்கள் பரத்தையோடு செல்வதும் அவற்றை மனைவி சுட்டிக் காட்டுதலும் அறிய முடிகிறது. பரத்தமையிடமிருந்து தம் கணவனை மீட்டு கொள்வாளாக என்று கூறுவதால், அதனை வரலாற்றுச் செய்தியோடு ஒப்பிட்டு எழினி தம் நாட்டுப் பசுக்களைப் பகைவரிடமிருந்து மீட்டது போல, தன்னிடத்திலிருந்து மீட்டுக் கெபள்வாளாக என்று கூறுவது அறியத்தகும் .

**முடிவுரை**

பண்டைய கால சமுதாயத்தில் அரசர்களின் ஆட்சி முறையும், பண்பாடுகளையும் அவர்களின் கொடை சிறப்புயையும் குறுந்தொகை வழி அறிய முடிகிறது. கடையெழு வள்ளல்களும், குறுநில மன்னர்களும் நாட்டு மக்களைக் காப்பதே கடமையாக கொண்டிருந்தனர். இவ்வாறு அக இலக்கியங்களில் புறக் கருத்துக்களை உவமைகள் மூலமும் உருவகத்தின் மூலமும் கூறுகின்றன.

## சான்றெண் விளக்கம்


1. குறுந்தொகை, பா.100
2. குறுந்தொகை, பா.73
3. குறுந்தொகை,பா.128
4. குறுந்தொகை, பா.128
5. குறுந்தொகை,பா.312
6. பெருங்கதை ,பா.58
7. புறநானூறு,பா.132
8. புறநானூறு,பா.133
9. குறுந்தொகை , பா.84
10. குறுந்தொகை,பா.70
11. குறுந்தொகை,பா.70
12. குறுந்தொகை,பா.196
13. அகநானூறு,பா.214
14. குறுந்தொகை,பா.80



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Rathika K., (2021) Monarchy in Kurunthogai, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:169-172. Cauvery College For Women, Trichy.

**முனைவர் க. அகல்யா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி , திருச்சி – 17

# புறநானூற்றில் பண்பாட்டு அடையாளங்கள்

**ஆய்வு சுருக்கம் :**

தமிழர் பாரம்பரியம் பன்னெடுங் காலம் கொண்டது அதனை வரையறுத்துக் கூறமுடியாதது. அவ்வாறான நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழர்கள் பல அடையாளங்களைக் கொண்டுள்ளனர். உலகின் பழைய நாகரிகங்களில் தமிழர் நாகரிகமும் ஒன்றாகும். தமிழ்ப் பண்பாடு என்பது தமிழர் அடையாளங்களில் முக்கியமானது. அவ்வாறான பண்பாட்டில் 'நிமித்தம் பார்த்தல்' என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நிமித்தம் பார்த்தல் என்பது தொல்காப்பியர் காலந் தொட்டு இன்றுவரை மக்களிடம் நிலவி வருகிறது. நிமித்தம் பார்த்தல் எனும் வழக்கம் குறித்த செய்திகளை புறநானூற்றின் வழியாக அறிந்து கொள்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது. நிமித்தங்களின் வகைகள், நிமித்தம் பார்க்கும் முறை போன்ற பல செய்திகளை இவ்வாய்வு விளக்குவதாக அமைகிறது.

**முன்னுரை**

தமிழர் அடையாளங்களில் முதன்மையானது பண்பாடு. அவ்வாறான தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைகள் விரவி இருந்தன. மக்களிடையே நிலவிய பலவித நம்பிக்கைகளில் ஒன்று நிமித்தம் பார்த்தல். நற்செயல்கள் , தீயசெயல்கள் என இருவகை செயல்களுக்கும் நிமித்தம் பார்க்கும் வழக்கத்தைச் சங்க கால மக்கள் கொண்டிருந்தனர். மக்கள், நிமித்தங்கள் வாயிலாக தங்களின் எதிர்கால வாழ்வை கணிக்கக் கூடியவர்களாக விளங்கினர். சங்க இலக்கியங்களில் காணப்படும் நிமித்தச் செய்திகள் வழியாக மக்களின் வானியல் அறிவு, அறிவியல் செய்தி, பிற உயிர்கள் குறித்த பல செய்திகளை தெரிந்து வைத்துள்ள பாங்கினை அறியமுடிகின்றது.

**பண்பாடு விளக்கங்கள்:** பண்பாடு என்ற சொல்லைத் தமிழில் முதல் முதலாக இரசிகமணி டி.கே.சி. அவர்கள் 1937ல் வழங்கியதாக பேரா. எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார். "Culture" எனும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் பண்பாடு என்ற சொல் வழக்கில் உள்ளது. "Culture" எனும் ஆங்கிலச் சொல்லுக்கு மூலச்சொல் "Cultura" எனும் இலத்தீன் சொல்லாகும். "பண்பாடு தனிமனிதனை மட்டும் சார்ந்து நிற்பதல்ல. ஒரு குழுவையோ, கூட்டத்தையோ, இனத்தையோ அது சார்ந்து நிற்கும் மனித சமுதாயத்தின் வளர்ந்த நிலையைக் காட்டுவதே பண்பாடாகும்" 1 என்கிறார் மரியசூசை. "பேரகராதி, பண்படுதல் எனும் சொல்லுக்கு அமைதல், உதவுதல், சீர்திருத்தல், செம்மாதல் எனப் பல பொருள்களைத் தருகிறது" 2.

"Culture" என்பதை மேலும் விளக்கும் போது ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழந்து நிற்கும் சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவா கொண்டு; இருக்கும் செம்மைத் தன்மையே பண்புடைமை" 3 என்கிறார் மேத்யூ அர்னால்டு.

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" (கலி.133: 8) என்று நெய்தற்கலி பெருமை சான்றாண்மைகளில் தாம் வழுவாது நின்று எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்தொழுகுதல் என பண்பிற்கு விளக்கம் தருகின்றது.

ஒருவரின் குணநலன்களும் பழக்க வழக்கங்களும் பிறப்பிலேயே தோன்றின என்று கூறுவதற்கில்லை. வளரும் சூழல், வாழும் சூழல், அரசியல் சூழல், சமயச் சூழல்,

பொருளாதாரச் சூழல் எனப் பல சூழல்களுக்கு ஏற்ப அமையும். பண்பாடு வளரும் தன்மையது. வளர்ந்து கொண்டே செல்லும் இயல்பினது.

பண்பாடு என்றால் ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்;சியங்கள், வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச் சடங்குகள், சமயங்கள், வழிபாட்டு முறைகள், களவொழுக்கம், கற்பொழுக்கம், அகத்திணை புறத்திணை மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியல் அமைப்புகள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், உணவு, பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள் ஆகியவற்றையெல்லாம் குறிக்கும். "இன்று நாம் பண்பாடு எனும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை போன்ற சொற்களால் குறித்துள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் பண்பாட்டுடன் தொடர்புள்ள வேறு சில பொருள்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே குறிக்கின்றன" 4 என்ற தனிநாயகம் அடிகளாரின் கூற்று நினைவுகூரத்தக்கது. ஓர் இனத்தின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு நாடோடி இலக்கியங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், பழமொழிகள், முதுமொழிகள், இசை, நாடகம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, பழக்கவழக்கங்கள் முதலியனவும் இன்றியமையாதவையாக இருக்கின்றன. தமிழர் பண்பாட்டில் ஒன்றான நிமித்தம் பார்த்தல் என்பதும் தமிழர் அடையாளங்களில் ஒன்று . அவ்வாறான நிமித்தம் பார்ப்பதனை குறித்த புறநானூற்றுச் செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**நிமித்தம் பார்த்தல் :** பழந்தமிழரது நம்பிக்கைக் கூறுகள் பரந்துபட்டவை. அவற்றுள் ஒன்று சகுனம் பார்த்தல். இன்று மனித இனம் பல முன்னேற்றங்களை அடைந்தாலும், அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப வளர்ந்தாலும் நிமித்தம் பார்ப்பதைக் கைவிடவில்லை. நிமித்தம் குறித்துத் தொல்காப்பியரும்,

"நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்

காலங் கண்ணிய ஓம்படை" (தொல். புறத். 36: 17-18)

என்று குறிப்பிட்டுச் செல்கிறார். தலைவன் நாள் நிமித்தம் புள் நிமித்தம் பிற நிமித்தங்களால் நன்மை எய்தி நீடு வாழ வேண்டும் என்று பரிசிலர் கருதுவதாய்க் கூறியுள்ளார். எனவே நிமித்தம் பற்றிய செய்தி தொல்காப்பியர் காலந்தொட்டே இருந்து வருகிறது என்பதை உணரமுடிகின்றது. இந்த நோக்கில் "நிமித்திகர்" என்ற சொல் கையாளப்பட்டுள்ளதையும் பார்க்க வேண்டியுள்ளது. நிமித்தங்களை இருவகையாகப் பிரிப்பர். 1. நன்னிமித்தம் 2. தீநிமித்தம் இதனை இன்று 'சகுனம்' என்ற பெயரில் மக்கள் வழங்குகின்றனர்.

ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நல்ல நாள், நல்ல நேரம், நல்நிமித்தம் பார்த்துத் தொடங்குவது தமிழர்களின் வழக்கம். மனிதன் மகிழ்ச்சியைவிடத் துயரமான நேரங்களில் தன்னை அறியாமலே நிமித்தங்களை நம்புகிறான். இதன் மூலம் சமுதாயத்தில் நிமித்தங்களின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதை உணரமுடிகின்றது.

**நன்னிமித்தம் :** நல்லவற்றை உணர்த்துவதாக இருக்கும் நிமித்தங்களை நன்னிமித்தம் என்று கூறுவர். இவ்வாறான நிமித்தம் புறநானூற்றில் நிரம்பக் காணப்படுகின்றன.

**புல் மேய்தல் :** "வீட்டில் கன்றை ஈன்ற ஆவின் கூட்டம் நல்ல புற்களை மேய்தலை நன்னிமித்தமாகக் கொள்வர்" ;5 என்பதை பி. எல்.சாமி கூறுகிறார். அதாவது, "மாபுல் மேய்வது நாட்டில் அமைதி நிலவும் என்பதன் அறிகுறி" என்கிறார். இதற்கு எடுத்துக்காட்டாக,

"மைம்மீன் புகையினுந்தூமந் தோன்றினும்

தென்திசை மருங்கினும் வெள்ளி யோடினும்

வயலக நிறையப் புதற்பூ மலர

............. .............. .............. ...........

ஆய்தொடி அரிவையர் தந்தை நாடே”   (புறம். 117:1-10)

என்ற கபிலர் பாடல் அமைகிறது.

**நற்சொல் கேட்டல் :** ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் சகுனம் பார்க்கும் வழக்கம் பண்டு தொட்டே மக்களிடம் இருந்து வருகின்றது. இவ்வழக்கம் நம்பிக்கையின் அடிப்படையில் உண்டானதாகும். சகுனம் பார்க்கும் வகைகளில் ஒன்று விரிச்சி. வருங்காரியத்தை விரிவாக முன்னரே தெரிவிப்பது விரிச்சியாகும். ஒருவர் ஏதேனும் ஒரு செயலைப் பற்றிச் சிந்திக்கவோ செயலாற்றவோ நினைக்கும் நேரத்தில் அருகிலிருப்பவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் சொற்கள், தான் சிந்திப்பவற்றிற்குச் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமைந்து, மேற்கொள்ளப் போகும் செயலின் பயனை உறுதிப்படுத்தும் என நம்பிக்கை கொள்ளுதலே விரிச்சி எனப்படும். ஆகவே இது நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றியதாகும் எனலாம்.

தொல்காப்பியப் புறத்திணையில் வெட்சித்திணைக்கண் போர் நிகழ்ச்சிக்குரிய துறைகளில் ஒன்றாகப் “பாக்கத்து விரிச்சி” சுட்டப்படுகின்றது. போர் புரிய விரும்பும் வேந்தன் முதலில் பகைவரின் ஆநிரையைக் கவர்ந்து செல்வது வழக்கம். அவ்வாறு நிரை கவர்தலுக்குப் போகும்முன் வெற்றி கிடைக்குமா என்பதை அறிய படைவீரர்கள், மக்கள் பேசிக் கொணடி;ருக்கும் வாய்ச்; சொற்களை அவர்கள் அறியாமலே கேட்டு நிமித்தமாகக் கொள்வா.; “நிறை கோடற்கு எழுந்தோர் போந்துவிட்ட பாக்கத்துக் கங்குலின் நல்வாய்ப்புக் கேட்டலும் நிரை மீட்டதற்கு எழுந்தோர் இடைப்புலத்துப் புறம் போந்தோர் கூறியவற்றை வாய்ப் புள்ளாகக் கேட்டலும்” 6 என்று நச்சினார்க்கினியர் உரை குறிப்பிடுகிறது. குறித்த பொருளின் பயன் அறிதற்குப் பாக்கத்துக்கண் நற்சொல் ஆய்தல் என இளம்பூரணரும் இதனைக் குறிப்பிடுகிறார். விரிச்சியினைத் தற்போது மக்கள் “வான்வாக்கு” என்றும் அழைக்கின்றனர். “விரிச்சி என்பது விரி என்னும் சொல்லுடன் தொடர்புடையதாக இருக்கலாம். எனவே வருங்காரியத்தை விரிவாய் முன்னரே தெரிவிப்பது என்று இச்சொல்லிற்குப் பொருள் கொள்ளலாம். ஒரு செயலை மேற்கொள்ளுங்கால் அம்முயற்சி இன்ன ஞான்று கைகூடும் என்பதனை அறிதற்கே இவ்வாறு செய்வர்.”7 என்பது சு. வித்யானந்தனின் விரிச்சி குறித்த கருத்தாகும்.

நெல்லும் நீரும் எறிந்து நின்று பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டலை,

“நென்னீர் ரெறிந்து விரிச்சி யோர்க்கும்

செம்முது பெண்டின் சொல்லு நிரம்பா”   (புறம். 280:6-7)

என்ற அடிகளில் இருந்து விரிச்சி, அசரீரி என்ற இரண்டும் ஒன்றா? வேறா? என்பதைப் புறப்பாடல் அடிகள்வழி தெளிவுபடுத்த முடிகிறது. மேலும் விரிச்சி குறித்த செய்திகளை,

“புள்ளும் ஓரோம் விரிச்சியும் நில்லோம்”   (குறுந.; 218:3)

“திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப”   (நற்.40:4)

என்று குறுந்தொகை, நற்றிணை அடிகள் மூலமாகவும் அறியலாம். விரிச்சி வேண்டுங்கால் தோன்றும் நன்னிமித்தங்களையும் தீ நிமித்தங்களையும் கொண்டு; அதன் வாயிலாக வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்ள சங்ககாலப் பொதுமக்கள் முயற்சி செய்திருக்கின்றனர்.

**தீநிமித்தம் :** தீயனவற்றை உணர்த்துவதாக இருக்கும் நிமித்தங்களை தீநிமித்தம் என்று கூறுவர். இவ்வாறான நிமித்தங்கள் குறித்து புறநானூற்றுப் பாடல்கள் வழி அறியலாம்.

**யானை** : யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பவன் இறப்பதற்கு ஏழு நாட்களுக்கு முன் அவனுடைய நாட்டில் பல தீய நிமித்தங்கள் தோன்றின. அவற்றைக் கண்டு மனங்கலங்கிய கூடலூர் கிழார் பாடலில், வளமையுடைய யானை கையை நிலத்தே வைத்துத் துஞ்சியதும், காற்றுப் போல் செல்லுகின்ற குதிரைகள் கதியின்றிக் கிடந்ததும் தீ நிமித்தங்களாகச் சுட்டப்படுகின்றன. இச்செய்தியை,

"மைந்துடை யானை கைவைத் துறங்கவும்

திண்பிணி முரசங் கண்கிழிந் துருளவும்

காவல் வெண்குடை கால்பரிந் துலறவும்

......... ............... .................. ....................

மேலோ ருலக மெய்தின னாகலின்" (புறம்.229: 18-22)

எனும் பாடலடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

**பன்றி** : பன்றி ஏற்றின் மீது ஏறுதலும் தீ நிமித்தமாகக் கொள்ளப்பட்டது. இதனைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர்கிழார் பாடிய பாடல்வழி அறியமுடிகிறது. "களிறுமேல் கொள்ளவும்" (புறம். 41:9) எனும் தொடருக்குப் "பன்றி ஏற்றை ஏறவும்" எனப் பொருள் கூறி அக்காட்சியைக் கனவிலோ நனவிலோ காணுதல் தீ நிமித்தமாகும் என்பதை உ.வே.சா.வும் (ப. 107) மற்றும் ஔவை துரைசாமியும் (ப. 179) விளக்கியுள்ளனர்.

**வண்டு** : போர்க்களம் சென்று வந்த வீரனொருவன் மார்பில் புண்பட்டு மயங்கிக் கிடக்கின்றான். அவன் உடம்பில் அதிகப்படியான விழுப்புண்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவனுக்கு இறப்பு நெருங்கும் வேளையில் அவனைக் காண பாணனும், விறலியும், துடி கொட்டுவோனும் வீட்டின் புறத்தே காத்திருக்கின்றனர். இந்நிலையில் அவனுடைய மனைவி சில நிமித்தங்களைக் கண்டு புலம்புகிறாள். நண்பகலில் தும்பிகள் முரலுதலும், நெடிய மனையில் ஏற்றி வைத்த விளக்குகள் அவிதலும், உறக்கமின்றி வாடும் தலைவியின் கண்கள் உறக்கத்தை நாடுதலும், அச்சம் தரும்படிக் கூகை அலறுதலும், நெல்லும் நீரும் தூவி விரிச்சி கேட்கும்போது நற்சொல் கிடைக்காமையைக் கூறி புலம்புவதாக உள்ளது.

"என்னை மார்பிற் புண்ணும் வெய்ய

நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்

.............. ......................

இவணுறை வாழ்க்கையோ வரிதே" (புறம். 280:1-10)

மேலும், தலைவி இப்பாடலில் வண்டு முரலுதலை முதன்மையாகக் கூறி வருந்துவதனைக் காணமுடிகின்றது.

### தொகுப்புரை

தமிழ்ச் சமுதாயத்தில் இன்றுவரை பலவகையான நம்பிக்கைகள் இருந்து வருகின்றன. சங்க காலம் தொட்டு இன்று வரை, கனவில் வரும் நன்மை தீமைகளை நம்புதல், நிமித்தம் பார்த்தல், நற்சொல் கேட்டல், தீ நிமித்தங்களைக் காணுதல் போன்றவற்றைத் தங்கள் வாழ்வின் முக்கிய நம்பிக்கைகளாகக் கொண்டு வாழ்கின்றனர். வாழ்வின் மகிழ்ச்சியான தருணங்களை முன்கூட்டி அறிய நற்சொல் கேட்டு தெரிந்து கொள்வதும், வானில் உள்ள நட்சத்திரங்களைக் கணக்கிட்டு நன்மை தீமைகளைக் கண்டறியும் அறிவியல் அறிவைப் பெற்றிருந்தது என்ற பலவகையான செய்திகளை புறநானூற்றின் வழி வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.. சங்க கால மக்களின் நம்பிக்கைகள் வழியாக அவர்களின் அறிவியல் அறிவினை அறிந்து கொள்ள முடிகின்றது.

**முதன்மை ஆதாரங்கள்**

புறநானூறு - துரைசாமிப்பிள்ளை ஔவை (உ.ஆ)

**பார்வை நூல்கள் :**


1. மரிய சூசை , இந்தியப் பழங்குடிப் பண்பாடும் தமிழ்ப் பண்பாடும்
2. மதுரைத் தமிழ்ப் பேரகராதி
3. மேத்யூ அர்னால்டு, (செ.பழனிச்சாமி, புறநானூற்றில் தமிழர் பண்பாடு)
4. தனிநாயகம் அடிகளார், தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும்
5. பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்
6. தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் உரை ,
7. சு.வித்யானந்தன் , தமிழர் சால்பு



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Akalya K., (2021) Cultural identities in Puranaanooru, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:173-177. Cauvery College For Women, Trichy.

**திருமதி. பொ. அபிராமி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி

# சங்க இலக்கியத்தில் வழிபாட்டு முறைகள்

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க கால மக்கள் வாழ்ந்த முறைகளின் வரலாற்றினைக் கூறும் நூல் சங்க இலக்கிய நூல்களாகும். அக்கால மக்களின் பண்பாட்டுகளில் தெய்வ வழிபாடும்,வழிபாட்டு முறைகளும் கூறப் படுகின்றன. மக்கள் வழிபட்ட தெய்வங்களையும் வழிபாட்ட முறையினையும் பற்றிக் காணலாம். சுங்க இலக்கியத் தெய்வ வழிபாட்டில் சிவபெருமானின் வழிபாடு முதலிடம் பெறுகின்றது. சிவனும் சக்தியும் இணைந்த வடிவத்தினை மன்றங்களில் வைத்து வழிபட்டனர். மேலும் குறிஞ்சித் திணை கடவுளான முருகன் தமிழ் கடவுளாகப் போற்றப்படுகின்றான். பெண் தெய்வ வழிபாடும் ஐவகை திணைகளுக்குரிய கடவுள் வழிபாடும் இருந்திருக்கின்றது. இவைஅல்லாமல் அணங்கு, பேய் பற்றிய அச்சங்களின் காரணமாகவும் மக்கள் வழிபாடுகளை நடத்தியிருக்கின்றனர் ஏன்பதனைத் தெளிவாகக் காணலாம்.

**முன்னுரை**

பழந்தமிழ் நாட்டின் காலத்தைச் சங்க காலத்திலிருந்து தொடங்குவது வழக்கமாகும். எட்டுத் தொகையும் பததுப்பாட்டும் சங்க இலக்கிய நூல்களாகப் போற்றப் படுகி;ன்றன. சங்கம் வைத்துதமிழ் வளர்த்த பாண்டிய மன்னர்களின் காலத்தில் சங்கப் புலவர்களால் எழுதப் பட்ட நூல்களே சங்க இலக்கிய நூல்களாகும். இப்பாடல்கள் அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை முறையினைத் தௌ;ளத் தெளிவாகக் காட்டுகின்றது. வாழ்வியல் முறையின் ஒரு பகுதி வழிபாட்டு முறையாகும். சுpவன், திருமால், முருகன், கொறறவை, இந்திரன் மற்றும் பிற தெய்வ வழிபாட்டு முறைகளும் இடம் பெற்றுள்ளன. மேலும் பேய், பூதம், யமன் போன்ற அச்சத்திற்குரியசக்திகளையும் தெய்வங்களாகப் பிரித்து வழிபட்டனர். "மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்"1

ஏன்று தொல்காப்பியமும் ஐந்திணைகளில் வழிபட்ட தெய்வங்களைப் பற்றி உரைக்கின்றது. எட்டுத் தொகை நூல்களில் சிவ வழிபாடுகொற்றவை, துர்க்கை, காளி, மலைமகள் போன்ற சக்திகளோடு நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமானின் பெருமைகளும் கூறப்படுகின்றன. சங்க காலத்தில் சிவன் என்னும் பெயர் குறிக்கப் பெறாமல் சிவனின பெருமைகள் போற்றப்படுகின்றது. சிவனின் பெயர்களாகசங்க இலக்கியங்கள் கூறுவன – ஆலமர் செல்வன், காலக் கடவுள், தாழ்சடைப் பெருமாள்,முக்கட் செல்வன், நீலமிடற்றன் போன்றவைகளாகும். சக்தியுடன் இணைந்தும், கோயில்அமைத்தும், ஊரின் நடுவே மன்றம் அமைத்தும் சிவனை வழிபட்டனர்.

ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் கடவுள் வாழ்த்து சிவபெருமானைப் பற்றியே இருக்கின்றது. இதனை,

"நீல மேனி வாலிழை பாகத்து

ஒருவன் இரு தாள் நிழற்கீழ்"2

என்று ஐங்குறுநூறு கூறுகிறது.

"கார் விரி கொன்றைப் பொன் நேர் புது

மலர்த் தாரன்”3

ஏன்று அகநானூறு கூறுகின்றது.

“;;ஆலமர் கடவுளன்ன நின் செல்வம் ;”4

என புறநானூறு கூறுகின்றது. இவ்வாறாக சிவபெருமானை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.உமாதேவியை ஒரு பாகத்தில் உடையவன் என்றும், நெற்றியல் கண் உடையவன் என்றும்,கொன்றைமாலை கூ◌ிடியவன் என்றும், கழுத்தில் கருப்ப நிறத்தைக் கொண்டவன் என்றும் போற்றப்படுகின்றார்.

மேலும் வானத்தில் பறந்து திரியும் இயல்பினை உடைய பொன், வெள்ளி, இரும்பினால் மதில்களைக் கொண்ட நகரத்தில் வாழ்ந்த அரக்கர்களைச் சிரிப்பினால் எரித்து சாம்பலாக்கினார் சிவபெருமான் என்னும் புராண வரலாறு பரிபாடலில் இடம் பெற்றுள்ளது.

**பெண் தெய்வ வழிபாடு**

தன் இயல்பிலிருந்து மாறாத ஒன்றினையே இயற்கை என்று அழைப்பர். ஆத்தகைய இயல்பின் தோற்றத்திற்குக் காரணமானவற்றை சக்தி என்றும் கூறுவார்கள். ஒரு சக்தியை வேறொரு சக்தியாக மாற்ற முடியுமே தவிர அதனை அழிக்க இயலாது. ஆதலால் தான் நிலம் நீர், காற்று, ஆகாயம், நெருப்பு போன்ற பஞ்ச பூதங்களைப் பெண்ணின் சக்தியாக உரைக்கின்றன.

“ நிலம் தீ நீர் வளி விசும்போடு

ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம்

ஆதலின்”5

என்று தொல்காப்பியம் பஞ்சபூதங்களின் கலவையே உலகம் என்று உரைக்கின்றது.

“செவ்வேர் பலவின் பயங்கொழு

கொல்லித்

தெய்வம் காக்கும் தீது நிர்

நெடுங்கோட்டு”6

என்று பரணர்நற்றிணை நூலில் குறிப்பிடுகின்றார். இப்பாடலின் மூலம் வேர்ப்பலா மரங்கள் அதிகம் காணலாகும் மலைப்பகுதிகளில் மேற்கு பக்க மலையில் இடியுடன் கூடிய காற்று பலமுடன் அடித்ததாலும் சூரைக் காற்றுடன் மழை பொழிந்தாலும் தனது அழகிய உருவத்தை எந்தவித மாற்றமுமின்றி இயற்கைப் பாவை கொண்டு இருக்கும் என்று கூறுகின்றார்.இன்றளவும் கொல்லி மலைப் பகுதி வளம் நிறைந்தததாகக் காணப் படுகின்றது கொல்லி மலையில் இருக்கும் கொலலிப் பாவையானது அங்கு இருப்பவர்களுக்கு வரங்களை அள்ளித் தரக் கூடியது. ஆனால் யாரேனும் தவறு இழைத்தால் அப்பாவையின் கண்களிலிருந்து கண்ணீர்வழியும் என்ற நம்பிக்கை இன்றளவும் நிலவுகின்றது.

மலையின் சக்தியை மலைமகளாகவும்,தீயின் சக்தியை காடுகிழாயாகவும், நீரின் சக்தியை கடல் பெழு செல்வியாகவும், சூரைக் காற்றினை சூரர மகளிராகவும், ஆகாயத்தின் சக்தியை கொல்லிப் பாவையாகவும் வழி பட்டனர்.. ஆகையினால் பெண்மையை சுக்தி என்று போற்றி வழிபடுகின்றனர்.

“ வழிபடு தெய்வம் நின்புறம் காப்பப்

பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து

பொலிசின் என்னும் புறநிலை வாழ்த்தே”7

என்னும் பாடல் தெய்வத்தினை வழி பட்டடால் தன்னைக் காக்கும் என்ற நம்பிக்கை அன்றைய கால கட்டத்தில் நிலவி வந்திருப்பதை உணர்த்துகின்றது.

“அரசுவா வழைப்பக் கோடறுத்

தியற்றிய

அணங்குடை மரபிற் கட்டில்

மேலிருந்து”8

ஏன்னு பதிற்றுப்பத்து பாடலில் யானையின் தந்தத்தை அறுது;துச் செய்யப்பட்ட கட்டிலானது அணங்குடை கட்டில் என்று கூறப்படுகின்றது. அணங்கு என்பது பிறரை வருத்தக் கூடிய பெண் தெய்வமாகக் கூறுகின்றனர்.அணங்காக இருந்த பெண் சக்தி செல்வி வழிபாடாக மாறியதை,

கடல் கெழு செல்வி கரை நின்றாங்கு”

என அகநானூறு சுட்டுகின்றது. கடற்கரையில்நின்ற கன்னித் தெயவம் என்று

உரைக்கின்றதுகன்னியாக இருந்த பெண் தெய்வம் தாயாக மாறியதை பெரும் பாணாற்றுப் படை உரைக்கினறது.

“வெண்டிரைப் பரப்பின்

கடுஞ்சூர் கொன்ற

பைம்பூட் சேஎய் பயந்மா

மோட்டுத்

துணங்கையஞ் செல்வி”9

கன்னியாக இருந்து முருகனின் தாயாக மாறியதை இப்பாடல் உரைக்கிறது. இக்கால கட்டத்திலும் சிவன், பார்வதி, விநர்யகர், முருகன் போன்றோரினைக் குடும்பக் கடவுளாகப் போற்றுகின்றனர்.

**முருகன் வழிபாடு**

குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் வாழும் இடம் என்பதற்கேற்ப குறிஞ்சி நிலத்தின்கடவுள் முருகனாகப் போற்றப் படுகின்றார். சேவலங்கொடியோன், சேய், முதிர்கடவுள், நெடுவேள்,முருகு, மலைவான், விறல்வேள் போன்ற பெயர்களால் முருகன் அழைக்கப் படுகின்றார்.

**திருமால் வழிபாடு**

முல்லை நிலத்தின் கடவுளாகத் திருமால் போற்றப்படுகின்றார்.

“மாநிலம் சேவடி ஆக. தூநீர்

வளை நரல் பௌவம் உடுக்கை ஆக

விசும்பு மெய் ஆக...

........

வேத முதல்வன்”10

நற்றிணையின் கடவுள் வாழ்த்துப் பாடல்இடம் பெற்றுள்ளது. பேரிய நிலத்தினைச் சேவடிகளாகக் கொண்டவன், கடலை ஆடையாகக் கொண்டவன், ஆகாயத்தை உடலாகக் கொண்டவன்,திசைகளைக் கைகளாகக் கொண்டவன், சூரிய, சந்திரர்களை தம் இரு கண்களாகக் கொண்டவன்எல்லாப் பொருட்களையும் தன்னுள் அடக்கியவன் என்பதால் வேதத்தின் முழுமுதற் கடவுளானவன், சங்கினையும் சக்கரத்தினையும் கைகளில் ஏந்தியவனை நாம் வணங்குவோம்எனக் கூறி திருமாலின்; பெருமைகளைக் கூறுகின்றார்.

**இந்திரன் வழிபாடு**

உலகங்களைப் படைத்தவனாக இந்திரனை ரிக் வேதங்கள் கூறுகின்றன. மருத நிலத்தின் முழுமுதற் கடவுளாக இந்திரன் விளங்குகின்றான். உயிர்களைப் படைக்கும் தன்மையுடையவன் இந்திரன் என்று போற்றப் படுகின்றான். முக்கள் மட்டுமல்லாமல் பயிர்களை விளைவிக்கும் தொழிலையும் இந்திரன் செய்வதாகக் கூறப்படுகின்றது.

படைப்புப் பல படைத்துப்

பலரோடுண்ணும் உடைப்பெருஞ் செல்வர்11

என்று இந்திரனை புறநானூறு உரைக்கின்றது. பல உயிர்களைப் படைத்து பலரோடும் இணைந்து உண்ணக் கூடியவன் என்று இந்திரனைப் பற்றி அறிய முடிகின்றது.

**வருணன் வழிபாடு**

மழைக்கு உகந்த தெய்வமான வருணன் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. முந்நீர் என்பது நடல்நீரைக் குறிக்கக் கூடிய ஒன்றாகும்.

முந்நீர் விழவின் நெடியோன்12

ஏன்று புறப்பாட்டு உரைக்கின்றது. வருணனின் வாகனமாக முதலை கூறப்படுகின்றது. முதலை நீரிலும் நிலத்திலும் வாழக் கூடிய ஒன்றாகும். நிலத்திலும் நீரிலும் வாழக் கூடியவன் வருணன் என்பதனால் நெய்தல் நிலத் தலைவனாகப் போற்றப் படுகின்றான்.

**கொற்றவை வழிபாடு**

பாலை நிலத்தின் தெய்வமாகக் கொற்றவை போற்றப் படுகின்றார். வெற்றியைத் தர வல்லவளாகவும்,படை வீரத்களுக்கும் கள்வர்களுக்கும் துணை புரிபவளாகவும் கொற்றவை விளங்குகின்றாள். சுpவனின் ஒரு பாகத்தில் இருப்பவளாகவும், முருகனின் தாயாகவும் போற்றப் படுகின்றாள்.

நெற்றி விழியா நிறைத்திலகம்

இட்டாளே

கொற்றவைக் கோலம் கொண்டு ஒரு பெண்13

என்று பரிபாடல் உரைக்கின்றது. கொற்றவையைப் போன்று ஒரு பெண்ணிற்கு நெற்றியில் திலகமிட்டு இருப்பது நெற்றி கண் போல காணப்படுகின்றது.

**முடிவுரை**

புதிய சமூகம் உருவாக ஆரம்பித்த காலத்தில் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் இருந்திருக்கின்றது. இனக்குழு வாழ்க்கையின் எச்சங்கள், சங்க காலத்தில் செல்வாக்குடன் விளங்கின. இயற்கை மீது ஆளுமை செலுத்தத் தொடங்கியவுடன் இயற்கை இகந்த ஆற்றல் இருப்பதைப் புரிந்து கொண்டனர். இக்காலத்தில் தான் கடவுள் பற்றிய புரிதல் இருந்தது. எனவே பல கடவுள்களை வேண்டினர் என்பதனை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்காப்பியம் - அகம்- 5
2. ஐங்குநூறு – கடவுள் வாழ்த்து
3. அகநானூறு - கடவுள் வாழ்த்து
4. புறநானூறு - 198
5. தொல்காப்பியம் - மரபியல் - 91
6. நற்றிணை - 164
7. புறநிலை வாழ்த்து -
8. பத்துப் பாட்டு - 79
9. பெரும் பாணாற்றுப் படை - 20

10. நற்றிணை - கடவுள் வாழ்த்து
11. புறநானூறு - 188
12. புறப்பாட்டு - 9
13. பரிபாடல் – 100

**துணைநூற் பட்டியல்**


1. தொல்காப்பியம் - சாரதா பதிப்பகம் - சென்்ன
2. பரிபாடல் –கௌதம் பதிப்பகம் - சென்்ன
3. அகநானூறு – வேங்கடசாமி நாட்டடார் உரை – தமிழ் மண் பதிப்பகம் - சென்்ன
4. நற்றிணை - ஔவை துரைசாமி – தமிழ் மண் பதிப்பம் - சென்்ன
5. புறநானூறு –சுந்தர் பதிப்பகம் - சென்்ன



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Abirami P., (2021) Worship methods in Sangam Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:178-182. Cauvery College For Women, Trichy.

**முனைவர் வ.ஹரிஹரன்**
இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி
மேலநீலிதநல்லூர் 627953

# "தமிழர் கலைகளே தமிழரின் அடையாளங்கள்"

**ஆய்வுச் சுருக்கம்**

'தமிழ் இலக்கியத்தில் தமிழர் அடையாளங்கள்' என்பது பன்னாட்டுக் கருத்தரங்கப் பொருண்மை ஆகும் .. 'இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடி' என்ற வாக்கிற்கிணங்கத் தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம் ,பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளன. ஆயகலைகள் அறுபத்தி நான்கு இந்திய அளவில் குறிப்பாகத் தமிழகத்தில் நிலைபெற்று நின்று புகழுடன் திகழ்கின்றன..

தொல்காப்பியம் தொடங்கி பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள் அனைத்திலும் இயல், இசை, நாடகம் குறித்த பதிவுகள் ஏராளமான அளவில் உள்ளன.சிலப்பதிகாரம் 'முத்தமிழ்க் காப்பியம்' என்னும் அடைமொழியோடு விளங்குகிறது. பக்க வரையறை கருதி கூத்துக்கலை,சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை ஆகியவை குறித்த இலக்கியப் பதிவுகள் மட்டுமே இக்கட்டுரையில் சுருங்க உரிய பாடல் வரிகள் துணைகொண்டு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**முன்னுரை:**

தமிழ் மக்களின் வாழ்க்கையின் பிரதிபலிப்புகள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. நாட்டு மக்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் யாவும் தமிழ் இலக்கியங்கள் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.. உலக அளவில் தமிழர்களை இனம் காட்டும் முக்கிய அம்சமாகப் பல்வேறு காரணிகள் உள்ளன. கட்டுரையின் அளவு கருதி 'தமிழரின் கலைகள்' இலக்கியங்களில் பெறுமிடம் குறித்து ஈண்டு சுருங்கக் காணலாம்.

**தமிழர் கலைகள்:**

காண்போர் கண்களையும் கருத்தையும் கவரும் விதத்தில் ஓவியங்கள் சிற்பங்கள் காணப்படுகின்றன. அயல்நாட்டினர் நம் நாட்டுக்கு வந்து தமிழனின் அருமை பெருமைகளை அவனுடைய கலைப்படைப்புகள் மூலம் அறிந்து கொள்கிறார்கள். வியந்து போகிறார்கள்.

பழைய கற்கால மனிதன் தாம் வாழ்ந்த மலைக்குகையில் பாறைகள் மீது சில ஓவியங்களை வரைந்து கைவண்ணத்தைக் காட்டியுள்ளான். உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களைக் கலை வடிவம் ஆக்குவதே படைப்பாளன் நோக்கம். கவிதை கட்டுரை மட்டுமல்ல கற் சிற்பங்களும் அதில் அடங்கும். ஆய கலைகள் அறுபத்து நான்கு என்று பல்வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளது.

**சங்க காலத்தில் கூத்துக்கலை::**

இந்தியாவில் வேதகாலத்திற்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தை உணர்த்தும் புதைப் பொருள்களில் வெண்கலத்தால் செய்யப்பட்ட நடன மாது வடிவம் ஒன்று கிடைத்துள்ளது........ மிருதங்கம், வீணை, காலம் இவற்றைக் குறிக்கும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன இவற்றைச் சேர்த்து நோக்கும் போது சிந்துவெளி மக்கள் கலையில் அறிவு உடையவராக இருந்தனர் என்பது வெளியாகிறதன்றோ?!"1 என்று மா.இராசமாணிக்கனார் குறிப்பிடுவார்.

பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் வேலன் ஆடும் வெறிக் கூத்து, போரில் வென்ற வீரர்கள் தம் அடையாளப் பூவைச் சூடி ஆடுகின்ற கருங் கூத்து,

வெற்றியைப் பாராட்டிப் பெண்கள் ஆடும் வள்ளிக்கூத்து, இளைய வீரனுக்குக் காலில் கழலை கட்டி ஆண் பெண் இருபாலரும் ஆடுகின்ற கழநிலைக் கூத்து ஆகிய கூத்துக்கள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன. இவை ,பெரும்பாலும் போர் தொடர்பானவை. இவை தவிர குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நாநிலங்களிலும் அந்தந்த நிலத்திற்குரிய கூத்தர்கள் இருந்து வந்துள்ளனர்.இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.

"குறிஞ்சி நிலக் கூத்தர்கள் முருகப்பெருமானை வழிபட்டு ஆடும் கூத்து 'குன்றக்குரவை' எனப்படும். முல்லை நிலத்தைச் சேர்ந்த கடவுள் மாயோனின் வழிபாட்டில் ஆடுவது ஆய்ச்சியர் குரவை என்று பெயர் பெறும்.. குரவை என்பது எழுவர் மங்கையர் செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்து அந்நிலைக்கொப்ப நின்று ஆடும் கூத்து ஆகும்.

துணங்கை என்பது கூத்து வகைகளுள் ஒன்று. அது முடங்கிய இரு கைகளையும் விலாப்புடைகளில் ஒற்றி அடித்துக்கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்து" 2 என்று மா. இராசமாணிக்கனார் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"நெய்திரள் நரம்பில் தந்த மழலையின்

இயன்ற பாடல்

தைவரு மகரவீணை தண்ணுமை

தழுவித் தூங்கக்

கைவழி நயனம் செல்லக் கண்வழி

மனமும் செல்ல

ஐயநுண் இடையார் ஆடும் நாடக

அரங்கு கண்டார்" (கம்ப இராமாயணம்)

என்ற கம்பரின் பாடல் வரிகள் சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய ஆடல் குறித்த பாடலுடன் ஒப்புநோக்கத் தக்கது

"குழல்வழி நின்றது யாழே;யாழ்வழித்

தண்ணுமை நின்றது தகவே,

தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே: முழவொடு

கூடிநின் றிசைத்த தாமந் திரிகை...."3

என்பது மாதவி ஆடிய விதம் குறித்த வரிகள்.

**சிற்பக் கலை**

தமிழரின் கலை அடையாளங்கள் பற்பல.அவற்றுள் சிற்பக் கலை தனித்துவமான ஒன்று..கட்டிடக் கலைக்கு அடுத்த நிலையில் சிற்பக் கலை தமிழரின் பாரம்பரிய அடையாளமாகச் சான்று கூறுவன

"கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்

மண்ணும் சுதையும் தந்தமும்

வண்ணமும்

கண்ட கருத்தையும் மெழுகும் என்றிவை

பத்தே சிற்பத் தொழிற் குறுப்பாவன""4

( திவாகர நிகண்டு)

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த மாளிகையில் சுதையினால் செய்யப்பட்ட சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து காணப்படும்.இந்திரவிழாவின்போது அந்த நகருக்கு வந்த மக்கள் கண்டுகளித்ததாக மணிமேகலை வழி அறிய முடிகிறது

"வம்ப மாக்கள் கப்பலை மூதூர்

சுடுமண் ஓங்கிய வானவர் முதலா

மையறு படிவத்து வானவர் முதலா

எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி

வெண் கதை விளக்கத்து வித்தகர்

. இயற்றிய

கண்கவர் ஓவியம் கண்டு நிற்குநரும்"5

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.

தமிழ்நாட்டுச் சிற்பக்கலை சமயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றது.பெரும்பாலும் தெய்வ உருவங்களை உருவாக்கும் விதத்தில் சிற்பக் கலைஞர்கள் ஈடுபட்டனர். ஆதிகாலத்தில் மரத்தினால், பஞ்ச உலோகங்களால் சைவ வைணவச் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டன .கருங்கல் கொண்டு கி.பி.ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னர்கள் மகாபலிபுரத்தில் உருவங்கள் அமைத்தனர்.

**ஓவியக்கலை:**

பௌத்தர்கள் காலம்தான் இந்திய ஓவியக் கலையின் வளர்ச்சிக்கு ஒரு பொற்காலம்.ஓவியங்கள் உயிரை உயிருக்குள் இருக்கும் ஆன்மாவை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறுவர். அஜந்தா குகை ஓவியங்கள் அவ்வண்ணமே வரையப்பட்டதாகும்.

"தென்னாட்டு இடைக்கால ஓவியங்கள், மொகலாய ஓவியங்கள், இராஸ்தானி ஓவியங்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் அனைத்தும் தமிழரின் பாரம்பரிய அடையாளங்கள்""6 என்று பி.கோதண்டராமன் தான் எழுதிய 'இந்தியக்கலைகள்' என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

**இசைக்கலை:**

தமிழ் இலக்கியத்தில் பழங்காலந் தொட்டு இயல், இசை, நாடகம் என்று முத்தமிழும் முகிழ்த்து வரும் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் உள்ளன.இசையும் நாட்டியமும் இரண்டறக் கலந்து நிகழ்வதை சிலப்பதிகாரம் உலகிற்கு எடுத்துக் கூறி நிற்கிறது.சங்க இலக்கிய நூல்களில் இசை நுணுக்கங்கள், இசைக் கலைஞர்கள், இசைக் கருவிகள் இன்னபிற குறித்து ஏராளமான குறிப்புகள் காணப்படுகின்றன. .உயிருள்ள மனிதர்களைப் போல மரம், செடி, கொடிகள் கூட இசைக்கு மயங்குவன என்றும் கூறுவர்.

தமிழில் இசைப் பாடல்கள் மமிகுதி பண்டைத் தமிழ் நாட்டில் பாணர்கள் என்னும் வகுப்பினர் இசை மற்றும் நாடகக் கலையின் காவலராக விளங்கினர்..திருஞானசம்பந்தர் 7 ஆம் நூற்றாண்டில் தமிழிசைப் பாடல்களுக்குப் புத்துயிர் அளித்தார்.

15 ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ் என்ற பக்திப் பனுவலின் மூவாயிரம் பாடல் வரிகளும் தாளலயத்துடன் அமைந்திருந்தன.18 ஆம் நூற்றாண்டில் முத்துத்தாண்டவர், அருணாசலம் கவிராயர் ஆகியோர் கீர்த்தனைகள் பாடினர்.. மாயூரம் வேதநாயகம்பிள்ளை சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் பாடினார்.இசைக்கலை நுணுக்கங்களை ஆராய்ந்தறிந்து இவர்கள் பாடிய இசைப் பாடல்கள் தமிழர்களின் வரலாறு கூறுவன.

**தொகுப்புரை**

'தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள்' என்ற பொருண்மையில் நடைபெறும் கருத்தரங்கில் "தமிழர் கலைகளே தமிழர் அடையாளங்கள்"என்ற இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஆயகலைகள் குறித்து விளக்கப் புகுந்தால் இயலாது என்று பக்க வரையறை கருதி சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை ஆகியவை தமிழ் இலக்கிய உலகில் தமிழரின் பாரம்பரிய அடையாளங்களாகத் திகழ்கின்றன என்று ஈண்டு சுருங்கிய அளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சான்றெண் குறிப்புகள்:**

1. 'இராசமாணிக்கனார்,'தமிழகக் கலைகள்', ப.66
2. மேலது,,ப.68
3. சிலப்பதிகாரம், 'கடலாடுகாதை'
4. திவாகர நிகண்டு,
5. மணிமேகலை,மலர்வனம் புக்க காதை, வரிகள் 126--131
6. பி.கோதண்டராமன், 'இந்தியக்கலைகள்' ,பக் 51-52

**துணை நூற்பட்டியல்**


1. 1.இராசமாணிக்கனார்,மா .,'கல்வெட்டுக்களும் தமிழ்ச் சமூக வரலாறும்" நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை-98 ,டிசம்பர் 2008
2. இராசமாணிக்கனார்,மா., 'தமிழகக்கலைகள்' , அழகு பதிப்பகம், சென்னை-49 முதல் பதிப்பு,2019
3. கோதண்டராமன்,பி.'இந்தியக்கலைகள்'நியூசெஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை.98. மூன்றாம் பதிப்பு ஆகஸ்ட் 2013
4. புலியூர்க்கேசிகன்,உரையாசிரியர், 'சிலப்பதிகாரம்' , பாரிநிலையம், சென்னை. 600108. 1986
5. வேங்கடசாமிநாட்டார்,நீ.மு.,'மணிமேகலை,' திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1969



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Hariharan V., (2021) Tamil arts are the symbols of Tamilians, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:183-186. Cauvery College For Women, Trichy.

**முனைவர் இரா. வனிதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி, திருச்சி

# நற்றிணையில் சங்க காலப் போர்க் கருவிகள்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழர்கள் தொல்காப்பிய காலந்தொட்டே போர்கருவிகளை கையால்வதிலும் அவற்றை வடிவமைத்துக் கொள்வதிலும் பழக்கமுடையவர்களாக இருந்துள்ளனர்.மேலும் தமிழர்களின் எயில்போல் மிகச் சிறப்பு வாய்ந்ததாக இருந்துள்ளது. எயிலிடத்து படைக்கருவிகளைப் பரப்பிப் போர் செய்துள்ளனர். தமிழர்கள் பயன்படுத்திய மரபுசார் போர்க்கருவிகளை இரண்டு வகைகளாக பகுத்துக் கொள்ள இயலும்.

அவை இயல்புப் போரில் பயன்படுத்தப் பெறும் வாள், வேல், வில் ஆகிய முப்போர்க் கருவிகள் எயிற் போர்க் கருவிகள் என்பனவாகும். இவற்றுள் இயல்புப் போர் என்பது மட்டும் இங்கு எடுத்துக்கொள்ளப் பெற்று விளக்கப்படுகிறது.

**முன்னுரை**

மனித வரலாற்றில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஒவ்வோர் இயல்புகளையும் சிறப்பாக போற்றப்படுவதுண்டு. இவ்வியல்பினை அந்தந்தக்கால இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சங்க காலத்தில் காதலும் வீரமும் முதன்மையாகப் போற்றப்பட்டது. இவ்வியல்புகள் சங்க இலக்கியங்களில் இணைந்தும் தனித்தும் காணப்படுகின்றன. அவ்வகையில் நற்றிணை அகஇலக்கியமாக இருந்தாலும் அதில் புறச்செய்திகள் இடம்பெறாமல் இல்லை. அகஇலக்கியமான நற்றிணையில் காணப்படும் போர்க்கருவிகள் பற்றி ஆராயப்படுகிறது.

**போர்க்கருவிகள்**

போர்க்கருவிகள் என்பது பகைவரை வீழ்த்துவதற்கு பயன்படுத்தும் சாதனம் ஆகும். அவை வேல் வாள் வில் ஈட்டி கேடயம் முதலியவற்றைச் சுட்டலாம்.

**வேல்**

வீரரின் வீரத்தை அளக்கும் அளவுகோளாக வேல் விளங்கியதை

" பழையன் வேல் வாய்ந்தன்ன நின்

பிழையா நல்மொழி தேறிய இவட்கே"1

என்றும் மற்றொருப் பாடலில்

.. . . . வென்வேல்

தெறல் அருந்தானைப் பொறையன்" 2

என்றப் பாடல் வரிகள் பழையனின் வேற்படை சிறப்பையும் கணைக்கால் இரும்பொறையின் வேற்படைச் சிறப்பையும் கூறுகிறது.

அதாவது இவ்விரு மன்னர்களின் வேற்படையும் வெற்றியையும் மட்டுமே சூடும் திறமிக்கவைகள் எனலாம்.மேலும் ஒரு பாடலில்

"___ _ _ மலையனது

ஒரு விற்கு ஓடியாங்கு " 3

மலையன் என்ற மன்னனின் வேலுக்கு பகைவர் திரள் அஞ்சி ஓடும் என்று

மலையனின் வேல்கொண்டு போர் புரியும் தனித்துவம் போற்றப்படுகிறது. மலையன் வேற்படை வலிமை மிக்கது என்பதை

" முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன்" 4

குறுந்தொகைப் பாடல் அடிகளும் மலையனின் வேற்படையைப் பற்றி குறிப்பிடுகின்றதை அறியமுடிகிறது.

"_______ _____ நெறிப்பட

வேலும் இலங்கு இலைதுடைப்ப" 5

என்ற நற்றிணைப்பாடலில் வேல் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.நன்னனின் வேற்படைச் சிறப்பையும் பகைவர் தோற்றோடியதையும்

" விரிஉளைப் பொலிந்த பரியுடை நன்மான்

வேந்தர் ஓட்டி ஏந்துவேல் நன்னன்" 6

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இதில் ஏந்துவேல் என்பது வேலைப் பயன்படுத்தும் முறையை உணர்த்துவதாகும்.மேலும்

" இலங்கு இலை வாழ்வில் விடலையை"7

என்ற அடிகள் இலை வடிவினதாக விளங்குகின்ற வெற்றிப் பொருந்திய வேற்படை என்று கூறப்படுகிறது. இதில் வேலின் வடிவம் சுட்டப்படுவதை அறியமுடிகிறது. இச்செய்தி ஐங்குறுநூற்றிலும்

"தண்ணறு நெய்தற் களை அவிழ் வான்பூ

வெண்ணல் அரிநர் மாற்றினர் அறுக்கும்" 8

"முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன்" 9

என்ற அடிகளால் உவமையாகவும் போர் செய்யும் முறையும் தெளிவாக கூறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

**வாள்**

வாட்படை வீரர்வேற்படை விற்பனை வீரர் போல்லாது அண்மையில் நேருக்குநேர் நின்று போரிடுவர்.இவர்களை வாள்மறவர் வாளின் வாழ்நர் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வாள் பற்றிய குறிப்புகள் நற்றிணையில் நான்கு பாடல்களில் காணப்படுகிறது. அவை

" பலர்உடன் கழித்த ஒள்வாள் மலையனது" 10

என்ற அடிகள் மூலம் மலையனது உறையினின்று எடுத்த ஒள்ளிய வாள் என்று சுட்டப்படுகிறது.வாள் உரறையில் வைக்கப்பபட்டிருக்கும் என்பதும் ஒளியுடைய அழகுடைய வாள் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நற்றிணையில்

"நெல்ரி தொழுவர் கூர்வாள்

உற்றென"11

வயலில் நெல்லை அரிகின்ற உழவர்கள் பயன்படுத்தும் வில் பற்றியும் சுட்டப்பட்டுள்ளது. இவ்வடிகள் வாயிலாக அறியமுடிகிறது.மேலும் மற்றொருப் பாடலில்

" வாளை வாஆளின் பிறழ் நாளும்" 12

என்ற அடிகள் போரிடும் போது வாள் பிறழும் தன்மையைச் சுட்டுகிறது. இவற்றை வாளின் சுழற்சி என்றுக்கூட கூறலாம். இச்செய்தி புறநானூற்றிலும்

" நெல்லரி தொழுவர் கூர்வாள் மழுங்கில்" 13

" வலையவர் முன்னாள் பொங்கிவா

ளென வாளைபாய" 14

" வாளை பிறழும் கயங்கடுப்ப" 15

இந்நூல்களிலும் வாள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளததை அறியமுடிகிறது.

**வில்**

வில் என்பது ஒளி அம்பெய்யுங் கருவி என்ற பொருண்மைகளை உடையது.நற்றிணையில் வில் என்ற கருவி பற்றி ஏழு பாடல்களில் இடம்பெற்றுள்ளது. அவை

" ______ _______ சாரல்

கொடுவிற் கானவன் காட்டும் தெலைச்சி" 16

என்ற மாமூலனாரின் பாடல் அடிகள் வாயிலாக மலைச் சாரலில் வேட்டுவன்

வளைந்த வில்லைக் கொண்டு வரிகளையுடைய பன்றிகளைக் கொள்வதற்குப் பயன்படுத்தினான் என்பதைச் உணர்த்துகின்றது.மேலும் நற்றிணையில்

"____ _______ ______ முனை ஊர்ப்

பல்ஆ நெடுநிரை வில்லின் ஒய்யும்" 17

என்ற அடிகள் மூலம் ஆநிரைகளை கவர்தலில் விற்போர் செய்த செய்தி இடம்பெற்றுள்ளது.மேலும்

" செங்கோல் வாளிக் கொடுவில் ஆடவர்

வம்ப மாக்கள் உயிர்திறம் பெயர்த்தென" 18

ஆறலைக் கள்வர்கள் வைத்திருக்கும் வளைந்த வில் பற்றி குறிப்பிடுகின்றது. மறைந்திருந்து தாக்குவதற்கு இக்கருவி ஏதுவானதால் கள்வர்கள் இதனைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை இவ்வடிகள் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் மற்றொருப் பாடலில்

" வல்வில் அம்பின் எய்யா வண்மகிழ்த் " 19

என்று கயமானார் தன் பாடலில் வலிமையான வில்லின் சிறப்பு தன்மையை எடுத்துரைத்துள்ளதை அறியமுடிகிறது. மேலும் மற்றொருப் பாடலில்

"கல்அதர் அரும்புழை அல்கி கானவன்

வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை" 20

வேடன் கல்நிறைந்த அறிய வழியிடையே தங்கி வில்லினால் அம்பெய்து ஆண் பன்றியைக் கொள்கின்றத் தன்மையைக் கபிலர் தன் பாடலின் வாயிலாக சுட்டிக்காட்டியுள்ளார்.மேலும் மற்றொருப் பாடலில்;

"வல்வில் ஓரி கானம் நாறி" 21

என்ற அடிகள் விட்போரில் வலிமை மிக்க ஓரியின் சிறப்பை விளக்குகின்றது. இச்செய்தி அகநானூற்றிலும் குறுந்தொகையிலும்

" வல்வில் ஓரி கொல்லி குடவரை" 22

" கைவள்ளோரி கானம் தீண்டி" 23

என்ற பாடல் அடிகள் வில் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**அம்பு**

நீர்,மேகம்,தளிர் எலுமிச்சி மூங்கில் ணதிப்பிலி, வளையல் உலகம், பாணம், கணை, போன்ற பொரிண்மைகளைக் கழகத் தமிழகராதி சுட்டுகிறது. வில்லினால் அம்பு எய்யப்படும். அம்பைமட்டுமே வைத்துக் கொண்டு செயல்பட முடியும்.அம்பு பற்றிய செய்திகள் நற்றறிணையில் மூன்று பாடல்களில்இடம்பெற்றுள்ளன.அவை

" வல்வில் அம்பின் வில்லோர் பெருமகன்" 24

என்ற அடிகளின் வாயிலாக கயமனார் தன் பாடலில் வில்லும் அம்பும் வலிமையுடையவைகளாக இருக்க வேண்டும். என்பதுஉணர்த்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.மேலும் மற்றொருப் பாடலில் "

வீணை அம்பின் வில்லோர் பெருமகன்" 25

வேட்டையாடுதலுக்காக பயன்படுத்தப்பட்டது என்பதை எடுத்துரைக்கிறது.மேலும் வீளை ,அம்பு என்றது அம்பின் ஒலியைக் குறிக்கிறது.இதில் வில்லும் இணைந்து செயல்படும் என்பதை உணர்ந்துகொள்ளமுடிகிறது.

**முடிவுரை**

வில்,வேல், வாள்,அம்பு ஆகிய கருவிகள் பற்றியக் குறிப்புகள் நிரம்பக் காணப்படுகின்றன. மேற்கண்டக் கருவிapன் அமைப்பும்,பயன்படுத்தும் முறையும் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளது.வில் என்ற கருவி வேட்டையாடுதல், கொள்ளையடித்தல்,போரிடுதல் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனென்றால் வில் மறைந்திருந்து தாக்குவதற்கு ஏதுவான ஒன்றாகும். நற்றிணையில் போர்கருவிகள் பற்றிய குறிப்புகள் 22 பாடல்களில் காணப்படுகின்றன. வேல்_ எட்டுப் பாடல்களிலும், வாள்_ நான்காம் பாடல்களிலும்,வில்_ ஏழு பாடல்க்களிலும் , அம்பு _ 3 பாடல்களிலும் காணப்படுகின்றன. அகிலக்கியமான நற்றிணையிலும் புறச்செய்திகளையும் தாங்கி நிற்கும் பெட்டகம் என்று சொல்லும் சிறப்புடையது எனலாம்.

**சான்றன் விளக்கம்**


1. நற்றிணை பாடல் : 10
2. நற்றிணை பாடல்: 18
3. நற்றிணை பாடல் : 170
4. நற்றிணை. பாடல் : 177
5. நற்றிணை பாடல் : 270
6. நற்றிணை பாடல். : 305
7. ஐங்குறுநூறு பாடல் :190
8. நற்றிணை பாடல் :86
9. நற்றிணை பாடல் : 334
10. குறுந்தொகை பாடல் : 312
11. நற்றிணை பாடல் : 170
12. நற்றிணை பாடல் : 195
13. நற்றிணை பாடல் : 390
14. பறநானூறு பாடல் : 379
15. சீவகசிந்தாமணி : 2583: 1180
16. பறப்பொருள் வெண்பாமாலை :147

17. நற்றிணை பாடல் : 75
18. நற்றிணை பாடல் 100
19. நற்றிணை பாடல் 164
20. நற்றிணை பாடல் : 198
21. நற்றிணை பாடல்: 336
22. நற்றிணை பாடல் : 6
23. அகநானூறு பாடல் : 209
24. குறுந்தொகை பாடல் :199
25. நற்றிணை பாடல் :198
26. நற்றிணை பாடல் : 265

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Vanitha R., (2021) Weapons of Sangam period in Nattrinai, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:187-191. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ச.கௌசல்யா,**
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சி - 620 002.

# சங்க கால மகளிர் விளையாட்டுகள்

**ஆய்வுச்சுருக்கம்**

விளையாட்டு என்பது உடல்சார்ந்த செயல்பாடு. சங்ககாலத்தில் பொழுதுபோக்காக தொடங்கிய விளையாட்டு நாளடைவில் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் வகையில் தொடர்ந்து, பின் பொருளாதார நோக்கத்தில் மாற்றம் பெற்றது. ஆடவர் மட்டுமன்றி மகளிர் பல விளையாட்டுகளை விளையாடியதோடு விளையாட்டுகளை நடத்தியும் மகிழ்ந்தனர். நீரிலும் நிலத்திலும் பல விளையாட்டு வகைகளை விளையாடியதன்வழி ஒற்றுமையுணர்வு பெற்றதோடு நல்ல ஆரோக்கியமான உடல்நலமும் உள்ளநலமும் பெற்று வாழ்ந்தனர். இன்றைய காலத்தில் நாம் ஆடிவரும் பல விளையாட்டுகள் அக்காலத்திலே தோற்றம் பெற்றிருந்தன என்பது வியப்பிற்குரிய ஒன்றாகும். விளையாட்டுகளில் பெண்களின் பங்களிப்பு பெருமைக்குரியதாகும். அக்காலத்தில் போற்றி விளையாடப்பட்ட விளையாட்டுகளை அழியாமல் காக்க வேண்டியது நம் கடமையாகும்.

**முன்னுரை**

விளையாட்டுகள் வேட்டைச் சமூக வாழ்தளங்களிடையே தோற்றம் கொண்டிருந்தன. வேட்டையாடுதலும், ஆயுதங்களைக் கையாளுதலும் உடல் வலிமையைப் பேணுதலும் விளையாட்டுகளுக்கு வழிவகுத்தன. மனித குலமானது பண்பாட்டு வளர்ச்சிபெறத் தொடங்கிய காலத்திலேயே விளையாட்டுகளும் முதன்மைபெறத் தொடங்கின. ஓரினமானது மரபுத் தொடர்ச்சியின் வழியாகப் பின்பற்றி வரும் விளையாட்டுகள், அவ்வினத்தினைப் புரிந்துகொள்ளவும், அக்கால சமூகத்க்கொள்கைகளை வரையறுக்கவும்வல்ல இனம்சார் அடையாளங்களாகவே திகழ்கின்றன. இத்தகு சிறப்புமிகு விளையாட்டுகளில் சங்ககால மகளிர் விளையாட்டுகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**விளையாட்டு**

விளையாட்டு என்பது அனைத்து மனிதர்களும் இயல்பாக விரும்பி ஈடுபடும் ஒரு செயல்பாடுகளுள் ஒன்று. இது பொழுதுபோக்கிற்காகவும், மகிழ்ச்சிக்காகவும், கற்பித்தல் நோக்கத்திற்காகவும் நடத்தப்படும் கட்டமைப்பு கொண்ட ஒரு செயல்பாடு. விளையாட்டினால் உள்ளம் உவகை கொள்வதோடு உடலும் ஆற்றல் பெறுகிறது. இவ்வண்ணம் விளையாடி மகிழ்ந்த மனிதர்கள் பின் அதனைப் போட்டியாக விளையாட ஆரம்பித்தனர். போட்டியில் வெற்றியும், தோல்வியும் இயல்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**விளையாட்டு - விளக்கம்**

விளையாட்டு என்பதற்கான விளக்கத்தைச் சங்கப்புலவோர் வரையறுத்துக் கூறவில்லை. உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகைக் களங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அதில் ஒன்று விளையாட்டு. இதிலிருந்து மன மகிழ்ச்சியை விளைவிக்கும் ஒரு செயலே விளையாட்டு என்பதை அறியமுடிகிறது. தொல்காப்பியரால் கெடவரல், பண்ணை என்னும் இருசொற்களால் விளையாட்டு குறிப்பிடப்படுகிறது.

***'கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு"1***

***(தொல்காப்பியம்-உரியியல் - 319)***

**கெடவரல்** - நிலத்தில் விளையாடும் விளையாட்டு

**பண்ணை** - நீரில் விளையாடும் விளையாட்டு

சங்ககாலத்தில் விளையாட்டு என்பது நிலத்தில் விளையாடும் விளையாட்டுகளையும், நீரில் விளையாடும் விளையாட்டுகளையும் குறித்தன.

**சங்ககால தமிழர் விளையாட்டுகள்**

தமிழர்களின் வாழ்க்கை நிலை, சமூக உணர்வு, குழு மனப்பான்மை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியவையாக, மக்களின் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் நிலைக்களன்களாக விளையாட்டுகள் விளங்குகின்றன. தமிழர்கள் விளையாட்டைக் காலம், களம், பங்குபெறுவோர், பால், வயது, பாடல், தன்மை, போட்டி, வரைபடம் என்ற அடிப்படைகளில் வகைப்படுத்தும் அளவிற்கு நமது விளையாட்டுகள் விரிந்த பரப்பை கொண்டிருக்கிறது. வேனிற்கால விளையாட்டு, மழைக்கால விளையாட்டு, வீட்டிற்கு உள்ளே மற்றும் வெளியே தனிநபர், இருவர், குழு, ஆண், பெண், இருபாலர் எனத் தமிழர்களின் விளையாட்டு வகைப்பாடு நீண்டு கொண்டே செல்லும். தமிழர்களின் விளையாட்டின் பழமையை,

***“செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று***

***அல்லல் நீத்த உவகை நான்கே”2***

***(தொல்காப்பியம்-மெய்ப்பாட்டியல் 1205)***

என்னும் தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம். சங்க காலத்தில் சிறுமியர் வெளியில் சென்று தம் தோழியரோடு விளையாடுவதே அறமாகக் கருதப்பட்டது. மாறாக வீட்டிற்குள் இருந்தால் அது அறமும் அல்ல. ஆக்கமும் தேய்ந்துவிடும் என்று கருதினர். இதனை,

***'விளையாடா யமொடு ஓரையாடாது***

***இளையோர் இல்லிடத் திற்செறித் திருத்தல்***

***அறமும் அன்றே ஆக்கமும் தேய்ம்மென..."3 (நற்றிணை - 68)***

என்ற நற்றிணையின் பாடல்வழி அறியலாம். உவகை ஊட்டுதல் என்ற நிலையிலிருந்து பொருளியல் சார்புநிலைக்கு சில விளையாட்டுக் கூறுகள் மாற்றம் பெற்றன. சில விளையாட்டுகள் வாயிலாக பொருளை இழப்பதும் பெறுவதும் இயல்பாயிற்று. வைகை ஆற்றில் நீராடிய மகளிர் இசைக்கருவிகள் முழங்க ஒருவர் தலைமேல் ஒருவர் நின்று உடல் வளைத்து வித்தை காட்டியிருக்கின்றனர். இதனைச் **"சென்னியர் ஆடல்"** என்று பரிபாடல் குறிப்பிடுகின்றது.

மந்தி தன் வயிற்றில் குட்டியைப் பற்றிக் கொண்டு மூங்கில் நுனியைப் பற்றி வளைந்து ஆடி தவ்வுவது கண்டு, குன்றத்து குறவரின் புதல்வர் தாமும் மூங்கில் கொம்பைப் பற்றி வளைந்து ஆடி வெற்றி கொண்டவர் கைக்கொட்டி மகிழ்ந்தனர். இதனை,

***"செம்முகத் துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கிக்***

***கழைக்கண் இரும்பொறைஏறிவிசைத்து எழுந்து***

***குறக்குறு மாக்கள் தாளம் கொட்டும் அக்***

***குன்றத்ததுவே..."4 (நற்றிணை - 95)***

என்ற பாடல்வரிகள் மூலம் அறியலாம்.

**புனல்விளையாட்டு**

இதனை நீர் விளையாட்டு என்றும் கூறுவர். சங்க காலத்தில் ஆடவர் பெண்டீர் என்ற இருவரும் நீர் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. இவ்விளையாட்டு அருவியில் நிராடுதல், குளத்தில் நீராடி மகிழ்தல், ஆறுகளில் நீராடுதல் எனப் பல நிலைகளில் காணலாம். இவ்விளையாட்டு இன்று மேம்படுத்தப்பட்டு **'Water Diving'** என்று வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

**வட்டாடுதல்**

அக்காலத்தில் சிறந்து விளங்கிய விளையாட்டுக்களில் ஒன்று வட்டாடுதலாகும். இதற்கென்று அரங்கிழைத்துக் காய்களை நகர்த்தி வட்டாடுவர். வேப்பமரத்து நிழலில் கல்லாச் சிறுவர்கள் நெல்லிவட்டாடிய செய்தியை இளங்கீரனாரின்,

***"பொரியரை வேம்பின் புள்ளிநீழல்***

***கட்டளையன்ன வட்டரங் கிழைத்துக்***

***கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டாடும்***

***வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்"5 (நற்றிணை - 3)***

என்ற நற்றிணைப் பாடல் விவரிக்கின்றது.

பழைமையான அழகிய காட்டிலே பளிங்கு போன்று விளங்கும் உயர்ந்த பெரிய பாறைகளின் மேலாக்க் கிடக்கும் நெல்லி மரத்தின் பல காய்கள் கிடக்கும் அதனைச் சிறுமியர்களும்இ சிறுவர்களும் வட்டாடச் சேர்த்து வைத்துக் கழங்குகளைப் போல விளையாடுவர்.

இதனை,

***"...மூதையலம் காட்டுப்***

***பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி***

***மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப"6 (அகநானூறு - 5)***

என பாலை பாடிய பெருங்கடுங்கோ எடுத்துரைக்கின்றார்.

வட்டாடுதல் வல்லாடுதல் என்று வழங்கப்டுவது குறிப்பிடத்தக்கது. வயது முதிர்ந்த பெரியோர்கள் சூதாடு கருவியை இட்டு இட்டுக் குழிந்து போன பாழ்பொதியில் விளையாடுவர் என்பது பற்றி,

***"கலிகெழு கடவுள் சுந்தம் கைவிடல்***

***பலிகண் மாறிய பாழ்படு பொதியில்***

***நரை மூதாளர் நாயிடக் குழிந்த***

***வல்வின் நல்லகம்"7 (புறநானூறு - 52)***

எனப் புறப்பாடல் நவில்கின்றது.

**ந்தாட்டம்**

இதனை மகளிர் மட்டுமே ஆடினர். இவ்விளையாட்டு வீட்டிற்கு வெளியிலும் முற்றத்திலும் மாடத்திலும் மணல் மேட்டிலும் ஆடப்பட்டது. பந்து நூலினால் செய்யப்பட்டது. அதைச் சுற்றிப் பல வேலைப்பாடுகள் அமைந்திருந்தன.

***'வரிபுனை பந்து'8 (நற்றிணை 305)***

இதனைச் செல்வக்குடி மகளிர் விளையாடினார்கள். சங்கப் பாடல்களில் வரும் ஆடுபந்து, எறிபந்து என்னும் தொடர்கள் விளையாடும் முறைகளைத்

தெரிவிக்கின்றன. காலால் பந்தைத் தள்ளி விளையாடியதாக நற்றிணை குறிப்பிடுகின்றது.

*"ஆடுபந்து உருட்டுநள் போல ஓடி*

*அம்சில் ஓதி இவள்உறும்*

*பஞ்சிமெல் ஆடி நடைபயிற் றும்மே"9 (நற்றிணை 324:7-9)*

சொல்கிறது. எனவே சங்க காலத்தில் கைப்பந்து, எறிபந்து, கால்பந்து ஆட்டங்களை மகளிர் ஆடினார்கள் என்பதை அறியலாம்.

**ஊஞ்சல்**

பழங்காலத்தில் பருவப் பெண்கள் மகிழ்ந்து விளையாடிய ஆட்டங்களில் ஒன்று ஊஞ்சல் ஆட்டம். பனைமடலுக்குக் கருக்கு நீக்கிப் பலகை இணைப்புப் போல் பரப்பிப் பெருங்கயிற்றால் பிணைத்து ஊஞ்சலை அமைத்தார்கள். கருங்கால் வேங்கை மரத்திலும் ஊஞ்சல் கட்டப்பட்டது. ஞாழல் மரத்தின் உயர்ந்த கிளையிலும் கட்டப்பட்டது. சுறாமீன் கொம்பினால் பலகை செய்தும் அதனைக் கட்டி விளையாடினார்கள்.

**மல்லாட்டம்**

இது இரண்டு ஆடவர்கள் விளையாடும் புற விளையாட்டு. சோழன் போர்வைக்கோ பெருநற்கிள்ளிக்கும் முக்காவனாட்டு ஆமூர் மல்லனுக்கும் நடைபெற்ற மல்லாட்டத்தைப் பற்றி புறநானூற்றுப் பாடல்கள் சித்தரிக்கின்றன. மேலும் பட்டினப்பாலை, மறவர்கள் கையிலும் கலத்திலும் சண்டை செய்தனர் என்று குறிப்பிடுகிறது. ஆகவே சங்க காலத்தில் மல்லாட்டம், கைக்குத்துச் சண்டை ஆகிய இரண்டும் இருந்திருக்கின்றன என தெரியவருகிறது. சிலப்பதிகாரம் பதினொருவகைக் கூத்துகளுள் ஒன்றாக மல்லாட்டத்தைக் குறிப்பிடுகின்றது. பின்னர் அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**கழைக்கூத்து**

இந்த ஆட்டம் ஆரியக் கூத்து என்றும் கயிற்று நடனம் என்றும் சுட்டப்படுகின்றது. விழா நாட்களில் ஆடல்மகளிர் உடற்பயிற்சி வித்தைகள் பலவற்றைச் செய்வார்கள். கழைக்கூத்து நடக்கும் போது வாத்தியங்கள் பல ஒலிக்கப்படுகின்றன. மகளிர் கயிற்றில் நடந்தும் ஆடியும் பொதுமக்களை மகிழ்விக்கின்றனர். இதனை ஆரியர் ஆடினர் என்று குறுந்தொகை கூறுகிறது. இது விழாகாலத்தில் நடைபெற்றதென குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகிறது. இது இன்று தெருக்கள் கூடுமிடத்திலும் சர்க்கஸிலும் ஆடப்படுவதைக் காணலாம். நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒரு வகையான பந்தினைக் கொண்டு ஆடுதல் அன்றைய களிர் வழக்கமாக இருந்த்து. மாடிவீடுகளின் மேல் மாடங்களில் பெண்கள் வரிப்பந்தாடியது பற்றி,

*“பீலி மஞ்ஞையின் இயலிக் கால*

*தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை*

*வான் தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்"10*

*(பெரும்பாணாற்றுப்படை 331-333)*

என்று தெளிவுறுத்துகின்றது.

**கழங்காடுதல்**

மகளிர் விளையாட்டுக்களில் கழங்காடுதலும் ஒன்று. கையிலே அணிந்த பொன்வளையல்கள் அசைய மெத்மெத்தென்று மெதுவாக இருக்கும் முத்தைப் போன்ற வெண்மணலில் பொன்னால் செய்த கழற்சிக் காயைக் கொண்டு பெண்கள் கழங்காடி மகிழ்ந்தனர்.

*“கைபுனை குறுந்தொடி தந்தப் பைப்பய*

*முத்த வார்மணல் பொற்கழங்கு ஆடும்”11*

*(பெரும்பாணாற்றுப்படை 334-335)*

எனப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கின்றது.

வீட்டுத் திண்ணைகளில் பொன்னாலான கழங்கினை வைத்து விளையாடியதாக,

*“செறியரிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்*

*பொலஞ்செய் கழங்கிற் தெற்றியாடும்”12 (புறநானூறு 36)*

என்ற புறநானூற்று வரிகள் மொழிவது நோக்கத்தக்கது.

**ஊசலாட்டம்**

மரக்கிளைகளில் கயிற்றினை (அல்லது) கொடிகளைக் கட்டி அதிலமர்ந்து ஆடி விளையாடுவது ஊசலட்டமாகும். அச்சமயத்தில் பாடும் பாடல் ஊசல் வரியாகும். இவ்விளையாட்டை ஊஞ்சலாட்டம் என்றும் கூறுவர். மகளிர் விளையாடிய ஊசலாட்டத்தை,

*“பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையில்*

*பூங்கண் ஆயம் ஊக்க ஊக்காள்”13 ( நற்றிணை 6-7)*

என்று நற்றிணை குறிப்பிடுகின்றது.

புலிநகக் கொன்றையின் உயர்ந்த கிளையிலே கயிற்றிலே கட்டித் தொங்கவிடப் பெற்ற ஊஞ்சலில் அமர்ந்து பெண்கள் விளையாடிய செய்தியினை,

*“ஞாழல் ஓங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்*

*தாழை வீழ்கயிற்று ஊசல் துங்கிக்*

*..................புனத்து அயல்"14 (நற்றிணை 5-6)*

எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

**ஓரையாடல்**

மகளிர் விளையாட்டுக்களில் ஓரையாடுதல் ஒன்று. இது ஆமை, நண்டு ஆகியவற்றை சிறிய கோல் கொண்டு அலைத்து விளையாடுவதாகும்.

*தாதிற் செய்த தண்பனிப் பாவை*

*காலை வருந்தும் கையா றோம்பென*

*ஓரையாம் கூறக் கேட்டும்”15 (குறுந்தொகை 380*

*துரவுக்கடல் பொறாத விரவுமணல் அடைகரை*

*ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட”16 (குறுந்தொகை 310)*

*ஓரை மகளிர் அஞ்சி யீர்ஞெண்டு*

*கடலிற் பரிக்கும்”17 (குறுந்தொகை 401)*

*“ஓரை ஆடினும் உயங்கும் நின் ஏறி”18 (நற்றிணை 60:10)*

*விளையாட்டாயமொடு ஓரை யாடாது”19 (நற்றிணை 68)*

*“ஓரை யாயத் தொண்டொடி மகளிர்”20 (புறநானூறு 176)*

என சங்க இலக்கிய வரிகள் ஓரையாடல் பற்றி தெளிவாக எடுத்துரைக்கின்றன.

**வண்டலிழைத்தல்**

வண்டல் மணலால் ஒரு பாவை செய்து அதற்குப் பூச்சூட்டி மகிழ்ந்து விளையாடும் விளையாட்டிற்கு வண்டலிழைத்தல் என்று பெயர். பசிய அவலை இடித்த கரிய வயிரம் பொருந்திய உலக்கையினை அழகிய கதிர்களையுடைய நெல்வயல்களின் வரப்பாகிய அணியிலே படுக்க வைத்து ஒள்ளிய தொடியணிந்த பெண்கள் வண்டல் விளையாட்டை விளையாடினர் என்பதை,

***"பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை***

***ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணைத்துயிற்றி***

***ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்" 21 (குறுந்தொகை 238)***

எனக் குறுந்தொகை நவில்கின்றது.

மேலும் மானின் அடிபோன்ற கவட்டிலையை உடைய அடும்பின் ஒள்ளிய பூவை வண்டற் பாவைக்குச் சூட்டுவர் என்ற செய்தியையும்,

***"மானடி யன்ன கவட்டிலை யடும்பின்***

***தார்மணி யன்ன வொண்பூக் கொழுதி***

***ஒண்டொடி மகளிர் வண்டல் அயரும்"22 (குறுந்தொகை 243)***

என்ற குறுந்தொகை வரிகள் தெளிவுறுத்துகின்றன.

கழியிலுள்ள பூக்களைப் பறித்துத் தந்தும் கானற் சோலையிலே சேர்ந்திருந்தும் வரிப்பட்ட மணலிடத்தே வண்டல் பாவை சாமத்து விளையாடியதை,

***"கழிப்பூக் கற்றுங் கானல் அல்கியும்***

***வண்டற் பாவை வரிமணல் அயர்ந்தும்"23 (அகநானூறு 301-2)***

என அகநானூறும்,

***"வாலிழை மடமங்கையர்***

***வரிமணல் புனை பாவைக்கும்***

***குலவுசினைப் பூக்கொய்து"24 (புறநானூறு 11:1-2)***

***"......திணிமணல்***

***செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்***

***தண்கய மாடும் மகளிரொடு"25 (புறநானூறு 213:2-3)***

எனப் புறநானூறு எடுத்துரைக்கின்றது.

**தொகுப்புரை**

சங்ககால மக்கள் விளையாட்டினை மகிழ்ந்து கொண்டாடினர். பல்வேறு விளையாட்டுகளின் வாயிலாக ஒன்றுகூடி ஒற்றுமையோடு வாழ்ந்துவந்தனர். ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் தங்கள் உடல், உள்ள வலிமைகளைப் பேணுவதற்கு விளையாட்டு பெருந்துணை புரிந்தது. இன்று நாம் உலகளவில் பெரிதும் கொண்டாடிவரும் விளையாட்டுகள் பலவும் சங்க காலத்திலேயே பெண்களால் பெரிதும் விளையாடப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் பெண்களால் பல விளையாட்டுகள் நடத்தபட்டன என்பது வியப்புக்கும் பெருமைக்குரியதாகும். சமூக மாற்றங்களின் காரணமாக பொருளை மையமிட்டதாக விளையாட்டுகளின் தன்மையும் மாறத்தொடங்கின. இன்று வாழ்வியல் விழுமியங்களோடு பல பண்பாடுகளையும், விளையாட்டுகளையும் தொலைத்துக்கொண்டிருக்கிறோம். விளையாட்டுகளில் பெண்களின் பங்கேற்பு மேன்மேலும் பெருக வேண்டும். நம்

பாரம்பரிய விளையாட்டுகளை அழியாமல் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

***"ஓடி விளையாடு பாப்பா நீ***

***ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"26***

என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப பெண்கள் அனைவரும் விளையாட்டில் ஈடுபட்டு நம் உடல் வலிமை மற்றும் நாட்டின் வளத்தையும் மேம்படுத்துவோம்.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியம் சொல்லதிகாரம் கந்தசாமியார் ப. 204
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் தமிழண்ணல்; ப. 27
3. சங்க இலக்கியம்-நற்றிணை(தொகுதி-1) ச.வே.சுப்பிரமணியன் ப. 89
4. மேலது ப. 111
5. மேலது ப.35
6. அகநானூறு பதிப்பாசிரியர் குழு வெளியீடு ப. 9
7. சங்க இலக்கியம்-புறநானூறு(தொகுதி-3) ச.வே. சுப்பிரமணியன் ப. 569
8. சங்க இலக்கியம்-நற்றிணை(தொகுதி-1) ச.வே.சுப்பிரமணியன் ப. 278
9. மேலது ப. 294
10. பெரும்பாணாற்றுப்படை ப. 140
11. மேலது
12. சங்க இலக்கியம்-புறநானூறு(தொகுதி-3) ச.வே. சுப்பிரமணியன் ப. 550
13. சங்க இலக்கியம்-நற்றிணை(தொகுதி-1) ச.வே.சுப்பிரமணியன் ப. 36
14. மேலது
15. சங்க இலக்கியம்-குறுந்தொகை(தொகுதி-1) ச.வே.சுப்பிரமணியன் ப. 379
16. மேலது ப. 552
17. மேலது ப. 607
18. சங்க இலக்கியம்-நற்றிணை(தொகுதி-1) ச.வே.சுப்பிரமணியன் ப. 82
19. மேலது
20. சங்க இலக்கியம்-புறநானூறு(தொகுதி-3) ச.வே. சுப்பிரமணியன் ப. 689
21. சங்க இலக்கியம்-குறுந்தொகை(தொகுதி-1) ச.வே.சுப்பிரமணியன் ப. 507
22. மேலது ப.510
23. அகநானூறு பதிப்பாசிரியர் குழு ப. 356
24. சங்க இலக்கியம்-புறநானூறு(தொகுதி-3) ச.வே. சுப்பிரமணியன் ப. 515
25. மேலது ப. 725
26. பாரதியார் கவிதைகள் மின்னூல் வெளியீடு ப. 91

**பார்வை நூல்கள்**

1. அகநானூறு பதிப்பாசிரியர் குழு
வெளியீடு,
5, தம்புச் செட்டித் தெரு,

| | | |
|---|---|---|
| | | சென்னை - 600 001.<br>முதல் பதிப்பு : 1958 |
| 2. | சங்க இலக்கியம்-குறுந்தொகை(தொகுதி-1) | ச.வே. சுப்பிரமணியன்,<br>மணிவாசர் பதிப்பகம்,<br>31 சிங்கர் தெரு, பாரிமுனை,<br>சென்னை - 600 108.<br>முதல் பதிப்பு : ஜூன் 2010 |
| 3. | சங்க இலக்கியம்-நற்றிணை(தொகுதி-1) | ச.வே. சுப்பிரமணியன்,<br>மணிவாசர் பதிப்பகம்,<br>31 சிங்கர் தெரு, பாரிமுனை,<br>சென்னை - 600 108.<br>முதல் பதிப்பு : ஜூன் 2010 |
| 4. | சங்க இலக்கியம்-புறநானூறு(தொகுதி-3) | ச.வே. சுப்பிரமணியன்,<br>மணிவாசர் பதிப்பகம்,<br>31 சிங்கர் தெரு, பாரிமுனை,<br>சென்னை - 600 108.<br>முதல் பதிப்பு : ஜூன் 2010 |
| 5. | தொல்காப்பியம் - சொல்லதிகாரம் | கந்தசாமியவர்கள் மற்றும்<br>தேவநேயப்பாவாணர்,<br>தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,<br>154, டி.கே.கே. சாலை,<br>சென்னை - 18<br>16ஆம் பதிப்பு : மே 2004 |
| 6. | தொல்காப்பியம் - பொருளதிகாரம் | தமிழண்ணல்;<br>மணிவாசர் பதிப்பகம்,<br>31 சிங்கர் தெரு, பாரிமுனை,<br>சென்னை - 600 108.<br>முதல் பதிப்பு : 2003 |
| 7. | பெரும்பாணாற்றுப்படை | கா. கோவிந்தனார்,<br>எழிலகம் வெளியீடு,<br>46 செல்வ வினாயகர் கோயில் தெரு,<br>திருவத்திபுரம் (செய்யாறு) 604 407.<br>முதற்பதிப்பு: டிசம்பர் 1996 |
| 8. | பாரதியார் கவிதைகள் | மின்னூல் வெளியீடு<br>https://TamilEbooks.Org |

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Kowsalya S., (2021) Women's sports in Sangam period, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:192-199. Cauvery College For Women, Trichy.

**முனைவர் பா.கவிதா,**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

# புறநானூற்றில் ஆடைகள்

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உடை, உறையுள், இவற்றுள் ஆடை இன்றியமையாததாகும். ஆடை மனிதனின் அடையாளமாகவும் விளங்குகிறது. இலக்கியங்களில் ஆடைகள் பற்றிய பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. எட்டுத்தொகை நூல்களில் புறநானூற்றில் ஆடைகள் குறித்த கருத்துகள் அமைந்துள்ளன. ஆடைகளைக் குறிக்கும் பெயர்கள், ஆடைகளின் வகைகள், குழந்தைகள், பெண்கள், அரசர், வீரர், கோவலர், பாணர் என அனைத்துப் பிரிவினரும் அணிந்த ஆடைகள் மற்றும் ஆடையின் பயன்பாடும், அவ்வாடைகள் கலை நோக்குடன் வடிவமைத்த பாங்கினையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தமிழரின் அடையாளமாக நம் மொழி, இனம், பண்பாடு போன்று நம் தமிழர் அணிந்த ஆடைகளும் அடையாளமாக அமைந்துள்ளது. இதனை இனம் காட்டும் நோக்குடன் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**முன்னுரை**

இன்றைய தமிழர் வாழ்வில் இடம்பெற்றுள்ள பல்வேறு வகையான ஆடைகள் அழகுணர்வை மட்டுமே நோக்கமாகக் கொண்டு அமைவதால் தோல் தொடர்பான பல்வேறு நோய்கள் ஏற்படுவதுடன், புற்றுநோய் போன்ற கடுமையான நோய் உண்டாவதற்கு வாய்ப்புகள் உள்ளதை மருத்துவ ஆய்வில் குறிப்பிடுவர். பழந்தமிழர் வாழ்வில் பயன்படுத்தியவைகளை நாம் இன்று மறந்தும், மறுத்தும் வாழ்ந்து வருகிறோம். மனிதன் "நாகரிகம் அடைவதற்கு முன்பு ஆடையின்றி வாழ்ந்தனர். பின்னர், தழையை ஆடையாகவும், மரப்பட்டைகளும் உடுத்தி வந்துள்ளனர். பின்பு, கால வளர்ச்சிக்கு ஏற்ப மனித நாகரிகத்தினை வெளிக்காட்டும் உடைமைகளில் ஆடைகளும் ஒன்று. தமிழரின் அடையாளமாக விளங்கும் ஆடைகளை இன்று நினைவு கூறும் வகையில் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள ஆடைகளைக் குறித்து கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளது.

**ஆடையைக் குறிக்கும் பெயர்கள்**

சங்க இலக்கியத்தில் ஆடையைக் குறிப்பதற்கு பல பெயர்களைக் கையாண்டுள்ளனர். அவற்றுள் விழவணி வியன்களம் அன்ன முற்றத்து (4-390-4) ஆடை – பரி 21:62 அறுவை, துகில், கலிங்கம், உடை இவை அனைத்தும் காரணம் குறித்து அமைந்த பெயர்கள்.

'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' (புறம் 89-5) எனும் புறநானூற்று அடி சங்ககாலத்தில் மேலாடை, கீழாடை என ஆடைகள் இரண்டாகக் கருதப்பட்ட நிலையைத் தெளிவுபடுத்துகிறது. வறுமையின் விளிம்பில் வாழும் புலவர் ('ஒன்றன் கூறாடை உடுப்பவரே யாயினும்') எனக் குறிப்பிடப்படுவதால், ஆடை உணவைக் காட்டிலும் முதன்மை பெற்றதாக மதித்து வாழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**தொல்காப்பியர் குறிப்பிடும் ஆடை**

பழந்தமிழரின் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழும் ஒல்காச் சிறப்புடையது தொல்காப்பியம். 'உடை' எனும் சொல் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. நெசவுத் தொழிலின் தொன்மையை நாம் நன்கு அறியமுடிகிறது. இதனை,

'கூழை விரித்தல் காதொன்று கலைதல்

ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலோ

குழி நான்கே இரண்டென மொழிப'1

**ஆடை அணிவதற்கான காரணங்கள்**

மக்கள் ஆடைகளைப் பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக அணிந்துள்ளனர் என்பதைக் கு.பகவதி குறிப்பிடுகையில் (1) மானவுணர்வும் துணையாதல், (2) அழகினை மிகுவித்தல், (3) தட்பவெப்ப நிலையினின்றும் பாதுகாத்தல், (4) தன் தகுதியியம்பல், (5) உடுத்தவர் தகுதியியம்பல், (6) கலையுணர்வு எடுத்துக்காட்டல் போன்ற பல்வேறு பயன்களைத் தன்னில் வெளிப்படுத்தி நிற்கும் உடை நாட்டின் தட்பவெப்பம், நாட்டில் உற்பத்தியாகும் மூலப்பொருள், உளவியல், சமுதாயநிலை, உடலில் தன்மை, பொருளாதாரம் என்ற பல நிலைக்கிணங்க அமையும் (பகவதி. 2003-4) எனத் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சங்க கால மக்கள் தழை, பருத்தி, பட்டு, தோல் ஆகியவற்றாலான பொருள்களைக் கொண்டு தயாரித்த ஆடைகளை உடுத்தியுள்ளனர். இவற்றுள் பெண்கள் பெரும்பான்மையும் தழையாலான ஆடைகளையே உடுத்தியுள்ளனர்.

சங்ககாலத்தில் குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என அனைவரும் ஆடைகளை உடுத்தியுள்ளனர். இரவில் ஒரு வகை ஆடையினையும், பகலில் ஒரு வகையான ஆடையினையும், நீராடுதலின்போதும், போருக்குச் செல்லும் போதும், விழாக்களின்போதும் என காலச் சூழலுக்கு ஏற்றவாறு பல்வேறு வகையான ஆடைகளை சிறார், ஆண்கள், பெண்கள் என உடுத்தியுள்ளனர்.

ஆடை அணியும் முறை:

ஆண்கள், பெண்கள், முதியவர், சிறுவர், சிறுமியர் எனப் பலரும் ஆடைகள் அணிந்துள்ளனர். அவற்றுள் ஆண், பெண் இருவரும் ஆடைகள் அணிவதற்கான முறைகள் உண்டு. அவற்றுள் ஆடவர்கள் பொதுவாக இரண்டு உடைகள் அணிந்துள்ளனர். ஒன்றை இடையில் கட்டி, மேலாடையைத் தோளில் முன்னும் பின்னும் தொங்கவிட்டு அணிந்துள்ளனர் என்பதை,

"இழை மருங் கறியா நுழைநூற் கலிங்கம்

எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ"2

இவ்வடிகள் சுட்டுகின்றன.

உயர்குடியில் பிறந்த ஆண்கள் இடையில் ஒரு வேட்டியும் மேலாடையும் அணிவர். அரசரும், பணியாளரும் சட்டை அணிவர். இச்சட்டைக்கு கஞ்சுகம் என்று பெயர். மேலாடை என்பது ஆடவர் தோளில் அணியும் ஆடை. இச்சட்டைக்கு சங்ககாலத்தில் 'மெய்ப்பை' என்னும் பெயர் வழக்கில் இருந்துள்ளது.

மேலாடையைக் குடுமியைச் சுற்றித் தலைப்பாகையாகக் கட்டிக்கொள்வது வழக்கில் இருந்துள்ளது. இதனை,

"அறுவை தோயும் ஒருபெருங் குடுமிச்

சிறுவை நாற்றிய பல்தலைக் கொடுங்கோல்

ஆகுவது அறியும் முதுவாய் வேல"3

என்ற அடிகள் பகர்கின்றன.

இளங்கோவடிகள் பாண்டிய மன்னனின் பொற்கொல்லன் அணிந்திருந்த சட்டையை இளங்கோவடிகள் மெய்ப்பை என்று சுட்டுகிறார். உடலைத் தன்னுள் அடக்கியிருக்கும் பை என்ற கருத்தில் சட்டைக்கு இப்பெயர் வழக்கில் இருந்துள்ளது. மற்றொரு பெயரும் இதற்கு உண்டு. 'கஞ்சுகன்'. அரசாங்கத்தில் பணிபுரியும் பணியாளன் இதனை அணிவதால் கஞ்சுகன் என அழைக்கப்பட்டான் என்பதை,

"காவலற் றொழுது கஞ்சுகன் உரைப்போன்

கஞ்சுகு முதல்வர்"4

பாண்டியர் அரசவைப் பள்ளியில் மிலேச்சர்கள் காவல்புரிந்தனர். அவர்கள் மெய்க்காப்பாளர்கள் அனைவரும் உடுத்திய உடையை அடையளாச் சட்டையாக அணிந்துள்ளனர். அவர்கள் உடுத்தியதற்கான சான்றுகளாக சிலப்பதிகாரம் சுட்டுகின்றன.

**ஆடையின் வகைகள்**

**பஞ்சாடை**

நகர மக்கள் பஞ்சாலும், பட்டாலும் ஒருவகை மலையெலி மயிராலும், வேறு சில விலங்குகளின் மயிராலும் ஆடைகள் நெய்து அணிந்தனர். துணிகளின் இழைகள் கண்ணுக்குப் புலப்படாதவாறு நுண்ணிய நூல்களினால் நெய்யப்பட்டன. அவ்வாடை பாம்புரிந்த தோலைப் போல இருந்தன என்பதை,

"பாம்புரியன்ன வடிவினை காம்பின்

கழைபடு சொலிய னிழையணி வாரா ……"5

என புறநானூறு விளக்குகின்றது. இதனையே,

"நோக்குநுழை கல்லா நுண்மையடகக்கனிந்து

அரவுரி அன்ன அறுவை"6

என்று பொருநராற்றுப்படையும் உணர்த்துகின்றன.

**பட்டாடை, நூலாடை**

பண்டைக் காலத்தில் பட்டாடைகளும் நெய்யப்பட்டன. அவை சரிகை கலந்து செய்யப்பட்ட மஞ்சள் நிறப் பட்டாடை பீதாம்பரம் என்றும் பொன்னாடை என்றும் பெயர்பெற்றது. இந்தப் பொன்னாடை என்பது பழங்காலத்தில் மிகவும் உயரியதாகக் கருதப்பட்டது. திருமாலுக்குரியதாகவும் இருந்துள்ளது. இதனை,

"பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய

செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"7

என்ற இப்பாடல் அடி பொலம்பூவாடை என்பதற்கு அடியார்க்கு நல்லார் பொற்பூவாடை என பொருள் குறித்துள்ளனர். பொற்பூவாடை என்பது தற்காலத்தில் பொன்னாடை என வழங்கப்பட்டு வருகின்றது.

பண்டைத் தமிழர் பஞ்சைப் பயன்படுத்தி நெய்த ஆடை மட்டுமல்லாமல் பட்டுநூலைப் பயன்படுத்தி பட்டாடை நெய்தனர். மரப்பட்டையில் உள்ள நாரினை எடுத்துப் பின்னி மழைவாழ் குறவர்கள் ஆடையாகப் பயன்படுத்தினர். இதனை,

"மரம்நார் உடுக்கை மலையுலை குறவர்"8

இவ்வரிகள் உணர்த்துகின்றன.

**சிறார் உடுத்தும் ஆடைகள்**

சங்ககால மக்களுள் ஆண்கள், பெண்கள் இவர்களின் ஆடைகளை அறியும் அளவிற்குச் சிறார்களின் ஆடைகளைப் பற்றிய செய்திகள் நிறைந்து காணப்படவில்லை. ஓரிரு ஆடைகளின் பெயர்களையே அறியமுடிகின்றது. துகில், அறுவை மற்றும் வெளிது (வெள்ளாடை) முதலிய ஆடைகளைப் பயன்படுத்தியதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. அறுவை என்பதும் வெள்ளாடையினைக் குறிக்கின்றது.

**துகில்**

செல்வச்செழிப்பில் உயர்ந்த நிலையில் உள்ள குழந்தைகள் துகிலினை உடுத்தியுள்ளனர். இத்துகில் மென்பட்டாடை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தை அணிந்துள்ள அலங்காரங்களைப் பற்றி விளக்குகையில் “கைவேலைப்பாடமைந்த பொற்காசுகளையும் அதன் மேலே அழுக்கில்லாத சிவந்த பவள வடங்களையும், அவற்றின் மேலே உடுத்தின தாய்க் கழல்கின்ற மென்பட்டாடைகளையும் இடுப்பிலே உடுத்தியுள்ளாய்” என்பதை

“உடுத்தவை கைவினைப் பொலிந்த காசுஅமை பொலங்கால் மேல்

மைஇல் செந்துகிர்க் கோவை அவற்றின் மேல்

தைஇய பூந்துகில் ஓதுகழல் ஒருதிரை”9

எனும் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகின்றது.

**அறுவை**

போரிலே இறந்த சிறுவனின் மீது தூய வெள்ளாடையினால் மூடியுள்ளனர். இதனை,

“தூவெள்ளறுவை போர்ப்பித்திலே”10

என்ற வரி சங்ககாலத்தில் இறந்தவர்களின் உடல் மீது தூய வெள்ளாடையை போர்த்துதல் வழக்கமாக இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

**வெளிது**

புறநானூற்றில் தாய் ஒருத்தி, வீரரை அழிக்கும் போர்ப்பறையைக் கேட்டு தன் மகனைப் போருக்கு அனுப்புகிறாள். போருக்குச் செல்லும் தன் மகனுக்கு வெள்ளாடையினை உடுத்தி அனுப்புகிறாள். இதனை,

‘செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி

வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துட்கிப்’11

எனும் பாடல் வரிகள் போருக்குச் செல்லும்போது வெள்ளாடை உடுத்துதல் வழக்கமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது.

**ஆண்கள் ஆடை**

ஆண்களின் ஆடைகளை அரசர்கள், வீரர்கள், காவலர்கள், துறவிகள், பார்ப்பான், அந்தணன், இடையர், ஆயர், கோவலர், வணிகர், தெய்வங்கள் எனப் பல நிலைகளில் அணிந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

**அரசர் ஆடை**

பண்டைய காலத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் சீரோடும், சிறப்புடனும், வளமுடன் வாழ்ந்துள்ளனர். இவர்கள் உயர்ந்த ஆடைகளை அணிந்துள்ளனர். அவற்றுள் கலிங்கம், கச்சு, கச்சை, துகில், அறுவை, படாஅம் முதலிய ஆடைகளை உடுத்தியுள்ளனர். இவற்றுள் கலிங்கம், படாஅம் முதலியன போர்க்குச் செல்லும்போது அணிந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

அம்பறாத்துணி தழுவிக் கிடக்கும் முதுகுடையவன், தேர்மேல் நின்று, வில்லினை கயிறு அழுந்த அம்பை வேகமாகச் செலுத்தும் காட்சியை,

“ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைக்

றாவ நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்”12

என்ற வரிகள் புறநானூற்றில் அரசன் அம்பறாத் துணியை அணிந்துள்ளமையைச் சுட்டுகின்றது.

பாண்டிய நெடுஞ்செழியன் பாசறையைப் பார்வையிடச் சென்றபோது

"புடைவீழ் அந்துகிழ் இடவயின் தழீஇச்"13

சில பூந்துகில் வகைகள் மிகவும் வழுவழுப்பாக இருந்துள்ளது என்பதை நெடுநல்வாடை இவ்வரி சுட்டுகிறது.

தொண்டைமான் இளந்திரையன் தன்னை நாடி வந்த இரவலர்களுக்கு நீப்பாசி போல சுழிக்கேறறைந்து கிழிந்து இடுப்பில் உள்ள கந்தல் ஆடையை நீக்கி பாலேடு போல் நூலால் நெய்த புது உடையை அணிந்து கொள் வழங்கினான் என்பதை,

"ஆவி அன்ன அவிர் நூல் கலிங்கம்"14

எனும் வரி பகர்கின்றது.

**வீரர்கள் ஆடை**

போர்வீரர்கள் கச்சை, ஆடை முதலிய ஆடைகளை உடுத்தியுள்ளனர். வீரர்கள் அணிந்த ஆடைகளை குறிப்பிட்டுக் கூறும்போது அவை நீலநிறமுடைய பூ வேலைப்பாடு உடைய ஆடையை இடுப்பில் கட்டியும், மயில் தோகையோடு கூடிய மாலையணிந்து போருக்குச் சென்றதை,

"நீலக் கச்சைப் பூவா ராடைப்

மீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்"15

இப்பாடல் வரிகள் சுட்டுகின்றன. போர்வீரர்கள் உடுத்தும் ஆடையை குறிப்பிடும் போது கச்சை எனும் ஆடையை இடையில் உடுத்துச் சென்றுள்ளதை அறிய முடிகிறது. மேலும், போர் புரிந்து மாண்ட வீரர்களுக்கு அறுவை எனும் தூய வெள்ளிய ஆடையைப் போர்த்தியுள்ளனர். இதனை,

"களர்ப்படு கூவற்றோண்டி நாளும்

புலைத்தி கழீஇய தூயவெள் ளறுவை"16

எனும் பாடல் வரிகள் சுட்டுகின்றன.

**கோவலர் ஆடை**

மேய்தல் தொழிலில் ஈடுபடும் ஆடவர்களுக்கு கோவிலர் என பெயர் உண்டு. ஆநிரைகளை மேய்க்கும் ஆண்களை ஆயன், இடையன், கோவிலன், பொதுவன் என்று குறிப்பிடப்படுகின்ற மேய்த்தல் தொழிலை உடையவர்கள் உடுக்கை, ஆடை, உடை முதலிய ஆடைகளை உடுத்தியுள்ளதாக இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. அவற்றுள்,

"பாசிலைத் தொடுத்த வுவலைக் கண்ணி

மாசு ணுடுக்கை மழவா யிடையின்"17

இவ்வரிகள் ஆடைகள் அழுக்கேறிய ஆடையாக காணப்பட்டன என்பதைக் குறிப்பிடுகின்றன. காரணம், பல்வேறு இடங்களுக்குச் சென்று மேய்த்தல் தொழிலைச் செய்வதால் ஆடைகள் அழுக்குடையதாக காணப்படுகின்றன.

**பாணர்களின் ஆடை**

பரிசில் பெற விரும்பி மன்னனிடம் சென்றவரை முகமலர்ந்து இனிதாக வரவேற்று, இகழ்ந்து பேசாமல், இழை நுழைந்த இடம் தெரியாத நுண்ணிய நூலினால் நெய்யப்பட்ட ஆடைகளை பரிசாக வழங்கியுள்ளனர்.

கையில் யாழைக் கொண்டு வறுமையில் வாடிய பாணர்கள் வேறு துணி இன்றி தைத்த ஆடையை அணிந்திருப்பர். தைத்த ஆடையை இடையில் உடுத்தியதால் வேறு நூல் புகுந்த வேர்வையும் நனைந்த கிழிந்த ஆடையை பாணன் அணிந்திருப்பர். அப்பாணனது வறுமையைப் போக்க கிள்ளிவளவன் பொருள் வழங்கினான். வறுமை நீங்கி தன் சுற்றத்துடன் இன்பமாக வாழ உதவி செய்தான்.

“அரையது வேற்று இழை நுழைத்த வேர்நனை சிதாஅர்

ஓம்பி உடுத்த உயவல் பாண”18

என்ற இவ்வரிகள் பாணனின் வறுமையைக் காட்சிப்படுத்துகின்றது.

**புலவர் ஆடை**

புலவன் வறுமையின் நிலையில் பசியினால் உணவு உண்ணாது மெலிந்த தேகம், வாட்டும் பசி, யாழின் பத்தர் என்ற உறுப்பின் கருவியை முதுகுப் பக்கத்துப் பல தையல்களை உடைய ஆடையில் இடைவெளியைப் பற்றிக் கிடக்கும் ஈர்த்திரளோடு தங்கியிருக்கும் பேன் போல வறுமையில் உள்ளார். இந்த புலவனது வறுமையை கிள்ளிவளவன் போக்கினான். இதனை,

“யாழ் பத்தர் புறம் கடுப்ப

இழை வலந்த பஃறுன்னத்து

இடைப் புரைபற்றிப் பிணிவிடாஅ

ஈர்க் குழாத்தோடு”19

என்னும் புறநானூற்றுப் பாடல் புலவர்கள் இழையாடையை இடையில் கட்டியிருந்தனர் என்பதைச் சுட்டுகிறது. மேலும், இத்தகைய புலவர்களுக்கு பொருள்களை மன்னன் வழங்கியுள்ளான் என்ற செய்தியையும் அறியமுடிகிறது.

**பெண்கள் ஆடைகள்**

தமிழர்தம் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் குறித்து ஆராய்ந்த க.காந்தி, “பூப்படைந்த மகளிர் அணங்கினால் பாதிப்படையாமல் இருக்கும் பொருட்டாகவே தழையுடை அணிந்தனர்” எனக் குறிப்பிடுகிறார். பூப்படைந்த மகளிரின் உடலில் அணங்கு புகுந்து கொள்ளும் எனவும், அது பெரும்பாலும் அவர்களின் மார்பகங்களிலும் சிறுபான்மை அக்குலிலும் தங்கும் தன்மையது எனவும் ஜி.எல்.ஹார்ட் டையின் கருத்தை இவர் மேற்கோள் காட்டியுள்ளார்.

க.ப.அறவாணன் “மனிதனின் ஆதியுடை தழைகளாகவே இருந்தன. சமூக காலத்தில்கூட இப்பழக்கம் தமிழகத்தில் இருந்தது என்பதை “தடையுடை தருதல்” என்ற அகத்துறை தெளிவுறக் காட்டுகிறது என்பர்.

தழையாடை, பூங்கரை நீலம், தூசு என்பன பெண்கள் அணியும் ஆடைகளாகும். பெண்கள் மென்மையானவர்கள் என்பதனால் மென்மையான பூக்களும் தழைகளும் அணிந்தனர். இத்தழையாடை இளைய பெண்களுக்கு மட்டுமே உரியதாக இருந்துள்ளன. இதனை,

“அளிய தாமே சிறுவெள் ஆம்பல்

இளைபாகத் தழை ஆயினவே”20

புறநானூற்று அடிகள் விளக்குகின்றது. குறுந்தொகை பெண்கள் தழையாடையை ஓர் அணியாக அணிந்தனர் என்பதை,

“தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி”21

செல்வக் குடியில் பிறந்த பெண்கள் இரவு நேரத்திற்கு ஏற்றாற்போல ஆடைகளை அணிந்துள்ளதை,

“அகலாக் காதலொடு பகல்விளையாடி

..........................................

துணைப் புணர்ந்த – மடமங்கையர்

பட்டு நீக்கித் துகில் உடுத்தும்”22

என பட்டினப்பாலை அடிகளை அடியொற்றி,

"மாலை மணிவிளக்கம் காட்டி இரவிற்கோர்

கோலம் கொடியிடையார் தாம் கொள்ள"23

என்ற வரிகளுடன் ஒப்புநோக்கத்தக்கது.

**ஆடையும் கலைநயமும்**

பஞ்சாடை, நூலாடை, பட்டாடை எனப் பல ஆடைகள் இருப்பினும் அவற்றோடு பூ வேலைப்பாடுகள் கொண்ட ஆடையினை மக்கள் அணிந்துள்ளனர் என்பதை,

"புகைவிரிந் தன்ன பொங்குதுகில் உடீஇ"24

என்ற வரி பூ வேலைப்பாடு கொண்ட ஆடைகளை உடுத்தினர். பாம்பு உரித்த சட்டை போன்ற பூ வேலைப்பாடுகள் செய்த உயர்ந்த ஆடைகளை உடுத்தினர். இதில் பாம்பு போன்ற வழுவழுப்பான ஆடைகள் என்ற குறிப்பு புறநானூற்றில்,

"பாம்பு உரித்தன்ன வான்பூங் கலிங்கமொடு"25

இவ்வரி சுட்டுவதன் வழி சங்ககாலத்தில் பூ வேலைப்பாடுகளுடன் ஆடைகள் நெய்யப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

ஆடைகளுக்கு பல்வேறு பெயர்கள் இடம்பெற்றுள்ளதையும், சிறுவர், சிறுமியர்கள், ஆண்கள், பெண்கள், முனிவர், பாணன், புலவர், போர்வீரர், அரசர் எனப் பல்வேறு பிரிவுகளை உடையவர்களும் தங்களுக்கான ஆடைகளை அணிந்து வாழ்ந்துள்ளனர் என்பதையும், செல்வச்செழிப்போடு வாழ்ந்தவர்கள் பட்டாடையும், வறியவர்களுக்கு அரசர்கள் நேர்த்தியாக உயர்ந்த ஆடைகளை வழங்கி உள்ளதையும் அறியமுடிகிறது.

பல்வேறு சமூகத்தினரும் வாழ்ந்து வந்தமையை அறியமுடிகிறது. பாரம்பரிய பண்பாட்டின் அடையாளமாக ஆடை பயன்படுத்தியுள்ளமை புறநானூற்றின வாயிலாக அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. தொல். பொருள் நூற்பா – 163.
2. மலைபடுகடாம், பா.561-562.
3. அகநானூறு, பா.195 : 12-14.
4. சிலப்பதிகாரம், அடி - 138.
5. புறநானூறு, பா.383 : 10-11.
6. பொருநராற்றுப்படை, பா. வுரி – 82, 83.
7. சிலப்பதிகாரம், அடி - 50-51.
8. நற்றிணை, பா. 64 : 4
9. கலித்தொகை, பா.85 : 3-5.
10. புறநானூறு, பா.286 : 3-5.
11. புறநானூறு, பா.279 : 7-8.
12. புறநானூறு, பா.14 : 8-9.
13. நெடுநல்வாடை, பா. வரி - 181.
14. பெரும்பாணாற்றுப்படை, வரி 469.
15. புறநானூறு, பா.274 : 1-2.
16. புறநானூறு, பா.311 : 1-2.

17. புறநானூறு, பா.54 : 10-11.
18. புறநானூறு, பா.69.
19. புறநானூறு, பா.136 : 1-5.
20. புறநானூறு, பா.248 : 1-2.
21. குறுந்தொகை, பா.295.
22. பட்டினப்பாலை, பா.வரி 104-107.
23. சிலப்பதிகாரம், பா. 9 : 3-4.
24. புறநானூறு, பா.398 : 20.
25. புறநானூறு, பா.397 : 5.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Kavitha B., (2021) Attire in Puranaanooru, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:200-207. Cauvery College For Women, Trichy.

முனைவர் தெ.அகிலா
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி -18

# புறநானூற்றில் புழங்குப் பொருட்கள்

**ஆய்வின் நோக்கம்**

பண்டைய கால மக்களின் வாழ்வியல் முறைகளை அறிந்து கொள்ள இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன. அவ்விலக்கியங்களை இயற்றிய புலவர்கள் அக்கால மக்கள் இயற்கையோடு இயைந்த பொருட்களையும் பயன்படுத்தி வாழ்ந்ததை தன் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். அவற்றுள் புறநானூற்றில் எவ்வகையான புழங்கு பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை ஆராய்வதே ஆய்வின் நோக்கமாக திகழ்கிறது.

**முன்னுரை**

புழங்குபொருட்கள் என்பவை மனித வாழ்வில் மிக நெருங்கிய தொடர்புடையவை. நம் உணர்வுகள் வாழும் களமாகப் புழங்கு பொருட்கள் விளங்குகின்றன. சங்ககால மக்கள் தங்களின் பொருட்களில் கருத்துக்களை உணர்வுகளை மதிப்பீடுகளை ஏற்றியுள்ளனர். புறநானூற்றில் புழங்கு பொருட்கள் பற்றி கூறுகையில் மன்னர்கள் போர் புரிந்த திறம், கொடை, சிறப்பு ஆகிய செய்திகளைக் கூறுவதோடு விருந்தோம்பல் பண்பையும் சுட்டுகின்றனர்.

**புழங்குப் பொருட்கள் விளக்கம்**

புழங்கு என்பதற்குக் கதிரை வேற்பிள்ளை தமிழ் மொழியராதி (1990 :1047) வழங்குதல் என்றும், தமிழ் லெக்சிகன் (1982 : 2793) கையாளுதல்;, புழங்குதல் என்றும் விளக்கம் தருகின்றன. எனவே புழங்கு பொருள் என்பது மக்கள் அன்றாடம் தங்கள் தேவைக்காகப் பயன்படுத்தி வந்த வருகின்ற பொருட்களைக் குறிக்கின்றது. மக்கள் தங்களின் தேவைக்கு ஏற்ப தொன்று தொட்டு செய்து வருகின்ற கைவினைப் பொருட்கள் யாவும் புழங்கு பொருட்கள் பண்பாட்டை அடையாளப் படுத்துகின்றன. லூர்து (1997 : 297) இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும், கலைப் படைப்புகளாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடு என்றும் மானுடக்குழு ஒன்றின் தொழில் நுட்பத்திறனும் புழங்குபொருள் சார்ந்த கலைத்தொழில் வேலைப்பாடமைந்த பொருட்களும் புழங்கு பொருட்கள் பண்பாட்டில் அடங்குகின்றன. ஏன்றும் குறிப்பிடுகின்றனர்.

**குழிசி**

பிட்டங்கொற்றன் என்னும் அரசன் சிறந்த வள்ளலாக விளங்கினான். அவன் தன் நாட்டு மக்களுக்கு விருந்து படைக்கும் கொடையாளியாக இருந்தான். அவன் நாட்டு மக்களும் அவ்வாறே இருந்தனர். அவர்கள் தன் வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்;கு சோறு சமைப்பதற்கு மற்றும் பால் ஊற்றி வைப்பதற்கு குழிசியைப் பயன்படுத்தினர்;. குழிசி என்ற சொல்லுக்குப் பானை என்று பொருள். இதனை,

**இருங்கட் குழிசி கவிழ்ந்திழுது மறப்ப**

**மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி**

என்னும் அடிகள் சுட்டும். மேலும,; குழிசியில் சமைத்து உண்டதை

**சோறு அடு குழிசி இளக, விழுஉம்**

என்னும் அடியும் விளக்குகிறது.

**வேல்**

புறநானூற்றில் மன்னர்களும் மறவர்களும் கையில் வைத்திருக்கும்; போர்க் கருவியாக வேல் என்னும் கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். இக்கருவி இரும்பினால் செய்யப்பட்டது. நீண்ட காம்பினையும் தலைப்பகுதி இலை வடிவத்தைப் போன்று கூரியதாகவும் இருக்கும். கொல்லர்கள் வேல் செய்வதைக் கடமையாக கொண்டிருந்ததை,

**வேல்வடித்துத் தருவது கொல்லர்க்குக் கடனே (புறம் 312:3)**

என்னும் அடிகள் விளக்கும். இக்கருவி உலைக்களத்தில் உலோகத்தை உருக்கி வடித்துச் செய்துள்ளதை,

**வேந்து வாய் மடித்து வேல் தலைப் பெயரி (புறம் 295:2**

என்னும் அடிகளும் அவ்வாறு செய்யப்படும் வேலின் வாய்ப்பகுதியை நெருப்பில் கூர்மையாகத் தீட்டப்பெற்றதை

என்னும் அடிகளும் வேலினைப் பகைவரின் நெஞ்சிலும் யானையின் நெற்றியிலும் வீசியதை,

**இரும்புமுகஞ் சிதைய நூறி பொன்னார் (புறம்: 309: 1)**

என்னும் அடிகளும் சுட்டுகின்றன. மேலும், இவ்வேலினை வல்வேல் (புறம்:125 ) திருந்துவேல் (புறம்: 171) நெடுவேல் (புறம்:63) கூர்வேல் (புறம்: 35) நல்வேல் (புறம்: ) ஒளிறுவேல் (புறம்: 308) ஒளிறிலைய எஃகம் (புறம்: 26) சிறியிலை எஃகம் (புறம்: 308) என்னும் பாடல் அடிகள் வேல் பல அடைமொழிகளோடு அழைக்கப்படுவதை குறிப்பிடுகின்றன. குன்று போல் குவிந்த நெல்லந்தாளில் நாள்தோறும் எருமைக் கடா பூட்டி அடித்தெடுத்த நெல்லையெல்லாம் வில் வீரர்களுக்கு உணவாகத் தரும் மன்னன் நேற்று அவன் மகளை யார் மகள் என்று வினவியற்கு பதில் கூறும் வகையில் அவள் தொல்குடி மன்னன் மகள் என்று கூறி பெண் கேட்டு வந்த வேந்தரை எதிர்த்துப் போரி;ட்டு ஓட்டிவிட்டு அப்பெண்ணின் அண்ணனும் தந்தையும் தன் மீது பட்ட புண்ணில் வைத்துக்கட்டிய பஞ்சைக்கூட களையாமல் வேலைத் தீட்டிக்கொண்டிருப்பதை,

**கதுவாய் போகிய துதிவாய் எஃகமொடு (புறம்: 353 :15)**

என்னும் அடியில் காவிரிப்பூம்பட்டினத்துக்காரிக் கண்ணனார் குறிப்பிட்டுள்ளார். இப்பாடல்கள் வாயிலாக வேல் பயன்பாடு அக்காலத்தில் மிகுதியாக இருந்தது என்பதை அறியமுடிகிறது.

**வாள்**

சங்ககாலத்தில் வாள் என்னும் கருவி முக்கிய இடம் வகித்தது. மன்னர்கள் கையில் பிடித்திருக்கக்கூடிய போர்க்கருவிகளில்; ஒன்று. இவ்வாட்படை போர்படைகளில் சிறந்த படையாக விளங்கியதை,

**ஆடுகுடி மூத்த விழுத்தினைச் சிறந்த**

**வாளின் வாழ்நர் தாள்வல் வாழ்த்த (புறம்:24:28-29)**

என்னும் அடிகள் விளக்கும். இவ்வாளேந்திய வீரர்களடங்கிய படையானது பனைமடல் போன்று காணப்படுவதை,

**வாள்மடல் ஓச்சி (புறம்: 370: 16)**

என்றும் விளக்குவர்.; பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் காட்டில் இருந்த குமணனிடம் சென்று தன் வறுமைநிலையை எடுத்துரைத்து பரிசில் வேண்டிப் பாடியதில் குமணன் தன்னிடத்துப் பொருள் இல்லையாயினும் தன்னுடன் சிறந்த பொருளாதலையும் அதன் கண் தலை சிறந்த உறுப்பாதலையும் அதனைக் கொண்டு வருவார்க்கு பொருள் தருவதாய் இளங்குமணன் அறிவித்திருந்தான். அதற்கு தன்

தலையை வெட்டிச் சென்று இளங்குமணனிடம் காட்ட வேண்டும். பொருள் பெற்று வறுமைத் துயரைப் போக்கிக் கொள்ள என்று தன் வாளை எடுத்து புலவர் கையில் தந்தான். கைநடுங்க உள்ளம் பதைக்க வாளை வாங்கிய சாத்தனார் விரைந்து வந்து இளங்குமணனிடம் காட்டி அறிவுறுத்தினர். இதனைக் கேட்டு நல்லுணர்வு பெற்ற இளங்குமணன் தன் சகோதரனை அழைத்து தன் தவறுக்கு வருந்தி அவனை நாட்டிற்கு அழைத்து வந்தான். இவற்றின் மூலம் புலவர்கள் பரிசில் பெறுவது மட்டுமே நோக்கமாக அல்லாமல் அரசன் தவறு செய்தால் அவனை இடித்துரைத்து நல்வழிப்படுத்துவதற்கு வாள் போன்ற கருவியை பயன்படுத்தியதை மேற்கண்ட பாடலடிகளால் உணரமுடிகின்றது. போரில் ஈடுபட்ட வீரன் ஒருவன் போரிட்டதனால் அவனது வாள் வளைந்தது. வளைந்த அவ்வாளை இறந்து கிடக்கும் யானையின் தந்தத்துக்கு இடையில் விட்டு நிமிர்த்துவதை,

**----------- முன்னின் றெறிந்த**

**ஒருகை யிரும்பிணத் தெயின் மிறையாகத்**

**திரிந்த வாய்வா பிருந்தாத் ( புறம்: 289 5-7)**

என்னும் அடிகள் குறிப்பிடுகின்றன. இவ்வாளால் உண்டான வடு உடல் முழுவதும் காணப்பட்டதை,

**படை விலக்கி எதிர் நிற்றலின்**

**வாஅள் வாய்த்த வடு ஆழ் யாக்கையொடு ( புறம்: 167: 2-3)**

என்னும் அடிகளில் மாடலன் மதுரைக்குமரனார் குறிப்பிட்டுள்ளார்.

**கடிப்பு**

கடிப்பு என்பது குறுந்தடியால் அடிக்கப்பட்டு பெரும் ஒலியெழுப்ப வைக்கும் ஒரு பொருள். இதனை அடித்து ஒலிக்க வைப்பதை,

**விழுக்கடிப்பு அறைந்த முழுக்குரல் முரசம் ( புறம். 366 :1)**

என்று கோமதனார் என்னும் புலவர் பாடியுள்ளார். அக்காலத்தில் மன்னர்கள் நாட்டு மக்களுக்கு அறிவுரை கூறுவதற்கும் அவர்களை ஒருங்கிணைப்பதற்கும் கடிப்பினை அடித்து பயன்படுத்தியதை அறியமுடிகிறது.

**முரசு**

பண்டையத் தமிழர் வீரம்,மானம்,புகழ் ஆகிய பண்புகளை உயிரினும் மேம்பட்டதாகக் கருதினர்.||இப்பண்புகளைக் காக்கும் அடிப்படையில் போர் தொடங்கியது.|| மன்னர்கள் காலத்தில் போரில் பகைவரை வென்று வெற்றி பெற்ற பின் ஒலிக்க பெறுவது முரசு. இம்முரசினை தலைவன் ஒருவன் தன் மகளை மணம் செய்விக்க மறுத்ததலால் அவளை மணந்து கொள்ள விரும்பிய மன்னர்களுக்கும் அவனுக்கும் இடையே போர் நடைபெற்ற பின் அப்போரில் வெற்றி முரசு கொட்டியதை,

**வென்றெறி முரசின் வேந்த ரென்றும் ( புறம்: 351:5)**

என்னும் பாடல் அடிகளும் வாகை என்னும் திணையில் அமைந்த பாடல் ஒன்றில் தன்னுடைய தமையனைக் கொன்றவன் தம்பியை பழிவாங்குவதற்கு நாளை போர் செய்து அவனை கொள்வேன். அதுவரை உண்பதில்லை என்று சூளுரைத்து குதிரையை விரைவாகச் செலுத்தி அச்செய்தி கேட்டவர்கள் வெற்றி உண்டாக முரசு கொட்டி முழக்குவதை,

**வலம்படு முரசின் வெல்போர் வேந்தன் ( புறம். 304:9)**

என்னும் அடிகளும் வெற்றியை கொண்டாடுவதற்கும் போர்செய்வதற்கு உற்சாகத்தைத் தூண்டுவதற்கும் முரசு பயன்படுத்தியமைக்கு சான்று பகர்கின்றன.

**நாண்**

வில்லின் இரு முனைகளைப் பூட்டுவதற்கும் அம்பை வில்லிலிருந்து எய்வதற்கும் உதக்கூடிய கருவியாக நாண் என்னும் கயிறு விளங்கியது. வாகை திணையில்

**விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த( புறம்.369:8)**

என்னும் அடியும் ,

**சாப நோன் ஞாண் வடுக் கொள வழங்கவும் ( புறம்.14:9)**

என்னும் அடியும் நாண் என்னும் கயிறு இந்நாண் வலிமையுடையதாக விளங்கியதை குறிப்பிடுகின்றது.

**வாழையிலை**

பிட்டங்கொற்றனைக் கருவூர்க் கதம்பிள்ளைச் சாத்தனார் என்னும் புலவர் வாழை இலையில் உணவு உண்ணுவதை காட்சியாக்கி அதில் புழங்கு பொருட்கள் பயன்படுத்தியதைக் குறிப்பிட்டுள்ளார். மிளகுக் கொடிகள் படர்ந்திருக்கும் காட்டில் பன்றிகள் காந்தள் கிழங்குகளைக் கிண்டி உண்ணும் அப்புழுதியில் குறவர் மக்கள் தினையை உழாமலேயே விதைப்பர். அதில் விளைந்த தினையில் மரையான் என்னும் காட்டுப்பசுக்கள் மேயும் அந்த மரையானி;ன் பாலைக் கறந்து ஊற்றி ,

**மான்தடி புழுக்கிய புலவு நாறு குழிசி**

**வான் கேழ் .இரும் புடை கழாது ஏற்றி**

**சாந்த விறகின் உவத்த புன்கம்**

**கூதளம் கவினிய குளவி முன்றில்**

**செழுங்கோள் வாழை அகல் இலைப் பகுக்கும் ( புறம்.168:2-8)**

என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு சமைத்த உணவினை விருந்தினர் உண்டு மகிழ வாழையிலை உணவு உண்ணும் புழங்கு பொருளாக இருந்துள்ளதை காணமுடிகின்றது.

**சக்கரம்**

சோழநாட்டில் நல்லறிவு படைத்த

**நல்மதி வேட்கோச் சிறாஅர் தேர்க் கால் வைத்த**

**பசுமண் குரூஉத் திரள் போல ( புறம்.32:7-9)**

என்னும் அடிகளில் குயவர்குலச் சிறுவர்கள் பானை வனைய சக்கரம் என்னும் கருவி பயன்படுத்தியதை, கோவூர்க்கிழாhர் சோழன் நலங்கிள்ளி என்னும் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

**தாழி**

தாழி என்னும் பொருளை குயவர்கள் செய்தனர். அக்காலத்தில் இவர் தாழி முதலியன வனைந்தனர்.2 என்னும் தமிழர் சால்பு நூல் வரிகள் இதற்கு வலு சேர்க்கும் பொதுவியல் என்னும் திணையில் பெருஞ்சித்திரனாhர் செம்பருந்தும் பொருவல் என்னும் பிணம் தின்னக் கழுகுகள் காட்டில் கிடக்கும் பிணத்தை இடுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் தாழியின் மேல் காத்திருப்பதைக்,

**கவிசெந் ததாழிக் குறபுறத்து இறந்த**

**செவிசெந் சேவனும் பொருவிலும் பெருவா**

**வாய் வன் காக்கையும் கூகையும் கூடி (238 1-3)**

என்னும் வரிகள் இறந்தவர்களைத் தாழி என்னும் மண்ணால் செய்த பொருள் வைத்து மூடுவதைக் குறிப்பிடுகிறது.

**அரிவாள்**

சங்க காலத்தில் கணவனை இழந்த பெண்கள் சைவ உணவினை உண்பர். அதில் வெள்ளரிக்காயை சேர்ப்பர். அவ்வெள்ளரியை அரிவாள் என்னும் இரும்பால் ஆன பொருளால் அரிவர். இதனை,

**அணில் வரிக் கொடுங் காய் வாள் போர்ந்திட்ட (4)**

என்று பெருந்தலைச் சாத்தனார் குறிப்பிடுகிறார். குளத்தில் மேய்ந்த நாரை வைக்கோற் போரில் உறங்கும் நெய்தல் நிலத்தில் நெல்லை அறுவடை செய்யும் உழவர்கள். தனது களைப்பை போக்கி கொள்ள ஆம்பல் இலையில் மது உண்டு களிப்பதை,

**கூம்பு விடு டென் பிணி அவிழ்ந்த ஆம்பல்**

**ஆகல் அடை அரியல் மாந்தி (209 1-4)**

என்னும் அடிகள் விளக்குகின்றன.

**தொகுப்புரை**

- சங்ககால மக்கள் வாழ்வியல் முறைகளை அறிந்து கொள்வதற்கு புழங்கு பொருட்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

- மன்னர்கள் போர் செய்வதற்கு இரும்பினால் ஆன கருவிகளாக வேல். வாள், நாண், கடிப்பு ஆகிய கருவிகளையும் தங்களின் வெற்றிகளை கொண்டாடுவதற்கு முரசு போன்ற கருவியைக் கொட்டி மகிழ்ச்சி அடைந்தும் வெற்றி உண்டாவதற்கு முன் ஆயத்தமாக முரசு கருவியைக் கொட்டி உற்சாகமாக போர் செய்வதற்கும் முரசு என்ற புழங்கு பொருட்களை மறவர்களும் மன்னர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

- கணவனை இழந்த பெண் சைவ உணவினை உண்டு விரதநிலை மேற்கொள்ளும் போது அதற்கு உணவினை தயார் செய்வதற்கும் வெள்ளரிக்காய் அரிவதற்கும் அரிவாள் என்ற பொருளைப் பயன்படுத்தியுள்ளதை அறிகின்றோம்.

- இறந்தவர்களை புதைப்பதற்கு தாழி என்னும் கருவிகளையும் உழைத்த களைப்பைப் போக்கி கொள்ள உழவர்கள் மது உண்பதற்கு ஆம்பல் இலையையும், விருந்தினர்க்கு உணவளிக்க வாழையிலையையும் பயன்படுத்தியுள்ளமை வாயிலாக நம் பண்பாட்டையும் கலாச்சார உணர்வையும் அறி;ந்து கொள்ள முடிகிறது.

- புறநானூற்றில் பழங்கு பொருட்களாக வேல், வாள், கடிப்பு, முரசு, அரிவாள்,வாழையிலை, ஆம்பல் ஆகிய பொருட்களைப் புலவர்கள் கையாண்டுள்ளனர்.

**சான்றெண் விளக்கம்**

1. கழகத் தமிழ் அகராதி, ப.641.
2. தமிழ் லெக்சிகன், ப. 670.
3. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,ப. 751.
4. பத்துப்பாட்டு, பெரும்பாணாற்றுப்படை,பா.எண்.366.
5. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், முனைவர் க. காந்தி,ப.334.
6. தமிழர் சால்பு, சு. வித்தியானந்தன், ப.157.

**துணைநூற்பட்டியல்**

1. சங்க இலக்கியம், புறநானூறு 1,

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,

சென்னை- 600098

முதல் பதிப்பு - ஏப்ரல், 2004.

2. சங்க இலக்கியம், புறநானூறு 2,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்,
சென்னை- 600098
முதல் பதிப்பு - ஏப்ரல், 2004.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Akila D., (2021) Utility thigs in Puranaanooru, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:208-213. Cauvery College For Women, Trichy.

**முனைவர் க.சுஜாதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனிதசிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி -2

# தமிழ் இலக்கியங்களில் தமிழர்அடையாளங்கள் - கைவினைப்பொருள்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

கலை எனப்படுவது நுட்பமானத் தன்மை மற்றும் திறமையை உள்ளடக்கியது. கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்ச்சியளித்து நற்பண்புகளை வளர்ப்பது கலைகளின் இயல்பாகும். அவை மனிதனின் தன்மையான பண்பாட்டுக் கூறுகளை எடுத்துக் காட்டுகின்றன. உடல் மற்றும் உள்ளத்தின் திறன்களை ஒருங்கினைந்து கற்பனை வளத்தை ஊக்குவிப்பது கலையாகும். மனிதன் தன் கற்பனை வளத்தினால் அன்றாடப் பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களைத் தொழில் முறையில் உருவாக்கும் கலையை கைவினைக்கலை எனலாம். இக்கலைகள் தழிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமையை எடுத்துக்கூறுவதே இவ்வாய்வின் சுருக்கமாகும்.

**மண்சார்ந்த கலைகள்**

நாட்டுப்புற மட்பாண்டக் கலையின் தாயகமே கிராமங்கள் தான். கிராமமக்கள் தங்கள் கலைத்திறனைக் காட்டி மண்பாண்டங்கள் செய்து வருகின்றனர். மட்பாண்டம் என்பது களிமண் வகைகைளக் கொண்டு தங்களுக்குத் தேவையான பாண்டங்களை வடித்தல் மட்பாண்டங்கள் செய்வது என்பது உலகின் மிகப் பழமை வாய்ந்த தொழிலாக இருந்து வருகிறது. இத்தொழில் தமிழில் குலத்தொழில் என்றும் மண்பாண்டம் செய்பவர்கள் குயவர் என்றும் வேளார் என்றும் அழைக்கப்படுகின்றனர். மண்சார்ந்த தொழில்களை மேற்கொள்வோரை மணிமேகலைக்காப்பியம் மண்ணீட்டாளர் என்று குறிப்பிடுகிறது.

**‘நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**

**மண்மாண் புனைபாவை அற்று”1**

என்று வேளார்களின் கலைநுட்பத் திறனைச் சிறப்பிக்கின்றார் வள்ளுவர்.

தமிழகத்தில் மண்ணாலான புழங்கு பொருட்கள் தெய்வ உருவங்கள் குதிரைகள் போன்றவற்றை கலைத்திறனோடு செய்தனர் கைவினைஞர்கள்.

நீர் தூர்வையில் மண்சேர்த்துக் குழைக்கப்பட்ட களிமண்ணை வேண்டிய உருவத்தில் செய்து அதனை சூளையில் இட்டு உயர்ந்த வெப்பநிலையில் சூடாக்கி மண்பாண்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு சூடாக்குவதன் மூலம் களிமண் இறுகுதல் பலம் கூடுதல் வடிவம் உறுதியாதல் போன்ற நிரந்தரமான மாற்றங்கள் செய்வதற்குப் பயன்படும் களிமண் இடத்துக்கு இடம் வேறுபட்டு அமைவதால் மட்பாண்டங்கள் தனித்துவமான இயல்புகளைக் கொண்டவையாக அமைகின்றன. இதன் தொன்மையை திருக்குறள்,

**காலத்தாற் பொருட் செய்தே மார்த்தல் பசுமட்**

**கலத்துள் நீர் பெய்திரீ யற்று"2**

என்கிறது.

**சுடுமண் சிற்பங்கள்**

சிற்பக்கலைக்குரிய பத்துச் செய்பொருட்களில் மண்ணும் ஒன்று என்பதை திவாகர நிகண்டு,

**"கல்லும் உலோகமும்; செங்கலும் மரமும்**

**மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்**

**கண்ட சர்க்கரையும் மெழுகும் என்றிவை**

**பத்தே சிற்பத் தொழிற்கு உறுப்பாவன."**[3] என்பதன் வாயிலாக அறியலாம்.

களிமண்ணை எடுத்து வந்து நன்றாக காய வைத்துக் கல் தூசி நீக்கி நீருற்றிப் புளிக்க வைத்து ஆற்று மணல் வைக்கோல் சேர்த்து மிதித்துக் குழைத்துப் பெரிய தெய்வ உருவாரங்களும் குதிரைகளும் செய்வர். பின்பு அவற்றை நெருப்பில் போட்டுச் சுடுமண் சிற்பங்களாக மாற்றப்படுகின்றன. பின் வண்ணங்கள் பூசப்பட்டு கோயிலில் நிலைநிறுத்தப்பட்டு வழிபாட்டிற்குரியவை ஆகின்றன. குதிரை ஓடுவது போன்றும் நிற்பது போன்றும் அதன்மேல் தெய்வங்கள் அரசர்கள் அமர்ந்திருக்கக் கூடிய நிலையில் சிற்பங்கள் மண்ணால் வடிவமைக்கப்படுகின்றன.

தமிழகத்தில் மண்ணில் சிலை வடித்து வழிபடும் வழக்கும் இன்றும் நிலவி வருகிறது. சிறுதெய்வங்களான அய்யனார் முனியப்பன் மதுரைவீரன் முத்தலாம்மன் பேச்சியம்மன் போன்ற தெய்வங்கள் கலை நேர்த்தியுடன் செய்யப்பட்டு வழிபாட்டுக்குரியவையாகத் திகழ்கின்றன.

**மண்பொம்மைகள்**

பொம்மை ஒரு விளையாட்டுப் பொருளாகும். பொம்மைகள் குழந்தைகளுடனும் வளர்ப்பு விலங்குகளுடனும் தொடர்புடையன. உலகை அறிந்து கொள்ளவும் வளர்ச்சி அடையவும் பொம்மைகள் உதவுகின்றன. பொம்மைகள் களிமண் நெகிழி காகிதம் மரம் உலோகம் முதலானவற்றிலும் செய்யப்படுகின்றன.

களிமண்ணை அச்சாளில் பரப்பி செய்யப்படும் சிறுசிறு மண்பொம்மைகள் பல்வேறு வண்ணங்களில் செய்யப்படும் பொம்மைகள் வீடுகளில் அலங்காரப் பொருட்களாகப் பயன்படுகின்றன. மக்களால் செய்யப்பட்ட கைவினைக் கலைகள் தொழில் நுட்ப வளர்ச்சி ஆதிக்கத்தால் நலிவடைந்து வருகின்றன.

**மரம்சார்ந்த கலைகள்**

மரம் சார்ந்த கலைகள் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக வளர்ந்துள்ளன. இக்கலையில் ஈடுபடுபவர்களை கம்மாளர் தச்சர் ஆசாரி என்றழைப்பர். பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து ஒரே தொழிலில் ஈடுபட்டு வருவதால் இத்தொழிலில் இக்கலைஞர்கள் தேர்ச்சிப் பெற்றவராகத் திகழ்கின்றனர்.

தெய்வ ஊர்வலங்களுக்கான தேர்கள் சப்பரம் உட்காரும் நாற்காலி கட்டில்கள் உழவுக்கருவிகள் இவையனைத்தும் தச்சர்களின் கைவண்ணமே ஆகும். இவை மட்டுமன்றி மேலும் இசைக்கரிகளான வீணை மத்தளம் நாதசுரம் மரப்பாச்சிப் பொம்மைகள் கட்டுமரங்கள் படகுகள் தோணிகள் ஆகியனவும் இவர்களின் படைப்புகள் ஆகும்.

**ஓலை**

பண்டைக் காலந்தொட்டு ஓலைகள் எளிய வீட்டு உபயோகப் பொருட்களாகப் பயன்பாட்டில் இருந்து வருகிறது. ஓலை என்பது ஒரு வித்திலைத் தாவரங்களான பனை தென்னை கமுகு போன்றவற்றின் இலைகளாகும். ஓலைகள் பல இலை நரம்புகளைக் கொண்டிருக்கும். இதை ஈர்க்கு என்றழைப்பர்.

**பனைஓலை**

பனைமரத்தின் இலை பனையோலை எனப்படும் இவ்வோலை விசிறி போன்ற வடிவத்தையுடையது. இதனுடைய காம்பு உறுதியாக இருக்கும். அரைவட்ட வடிவமான குறுக்கு வெட்டுமுகம் கொண்டது. இதன் விளிம்புகள் கருநிறமான வாளின் பற்கள் போன்ற அமைப்பு உள்ளது. இது கருக்கு எனப்படும். யாழ்ப்பானத்தில் வாழ்ந்த சோமசுந்தரப் புலவர் இந்த கருக்கை மன்னர்களின் வாளுக்கு ஒப்பிட்டுள்ளனர்.

**"உருக்கு வாளேந்திப் பகைசெற்றுலகினை**

**ஓம்பும் மணிமுடி மன்னவன் போல்**

**கருக்கு வாளேந்திக் கலியை அழித்திந்தக்**

**காசினியைக் காக்கும் ஞானப் பெண்ணே"[4]**

என்று இலக்கியச் சுவையுடன் பாடியுள்ளார்.

பனையோலைகள் வேலியடைத்தல் கூரைவேய்தல் முறம் செய்தல் போன்றவற்றுக்குப் பயன்படுகின்றன. காய்ந்து விழும் ஓலைகள் பயிர்களுக்கு உரமாகிறது. பச்சை ஓலைகள் மாடுகளுக்கு உணவாகிறது. மேலும் கட்டடப் பொருட்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் எனப் பல பொருட்கள் பனையிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

**"பனைமரமே பனைமரமே**

**ஏன் வளர்நதாய் இத்தூரம்**

**நான் வளர்ந்த காரணத்தை**

**நட்டாரே சொல்லுகிறேன்**

**எழுதுகிற பிள்ளைகளுக்கு**

**எழுத்தோலை நானாவேன்**

**அழுகின்ற குழந்தைக்குக்**

**கிலுகிலுப்பை நானாவேன்**

**வண்ணக் கொட்டான் நானாவேன்**

**நீர்நிறைக்கக் கயிறாவேன்**

**குழல் தரும் குடிலாவேன"[5]**

என்று பனைமரத்;தின் பயன்களை நாட்டுப்புறப் பாடல் ஒன்று பட்டியலிட்டுக் காட்டுகின்றது.

**புல்சார்ந்த கலைகள்**

புல் வகை தாவரங்களில் மிகப் பெரியதாக வளரக் கூடியது. மூங்கில் குடிசை வீடுகள் கட்டுவதற்கு மரமாகவும் கட்டிடம் கட்டும் தொழிலில் சாரமாகவும் சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழிலின் மூலப்பொருட்களாகவும் பயன்படுகிறது.

உள்ளூரில் கிடைக்கும் மூங்கில்களைக் கொண்டு வனையப்படும் கூடைகளைக் குறவர் இனமக்கள் அன்றாடம் விற்பனை செய்வதைக் காணலாம். பொருட்களைச் சேகரித்து வைக்கவும் பழக்கூடை பூஜைக்கூடை விளையாட்டுப் பொருட்கள் எனப் பல்வேறு வடிவங்களில் மூங்கில் தயாரிப்பு பிரசித்தி பெற்று விளங்குகிறத. தற்பொழுது நெகிழிக்குப் பதில் மூங்கில் கூடைகள் பயன்படுத்துவது சிறப்புக்குரியது.

**பாய்முடைதல்**

பனை ஓலை ஈச்ச ஓலை மூங்கில் நாணல் போன்ற பல்வேறு வகையான மூலப்பொருட்களைப் பயன்படுத்;;தி பாய்முடைவர். இதில் கோரைப்பாய் தனிச் சிறப்புடையது. கோடைக்காலத்தில் குளிர்ச்சியையும் மழைக்காலத்தில் வெப்பத்தையும் தரவல்லது. ஆற்றோரங்களில் கிடைக்கும் தரமான புல்வகையைச் சார்ந்த கோரைகளைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் பத்தமடை பாய் சிறப்பு வாய்ந்தது. பல்வேறு வண்ணங்களில் எழுத்துக்களும் படங்களும் இடம்பெற்று விற்பனை செய்யப்படுகின்றன.

பிரம்பு கொடி வகையைச் சார்ந்தது. காவிரி கரையில் ஆள் உயரத்திற்கு வளர்ந்து இருப்பதை காணலாம். பல வடிவங்களில் பிரம்பை பயன்படுத்தி தொட்டில் மேசை நாற்காலி விதவிதமான கூடைகள் போன்றவை செய்யப்படுகின்றன. பிரம்பு குளிர்ச்சியுடையது. அதிக நாட்கள் நீடித்து உழைக்கக் கூடியது. வளையும் தன்மைக் கொண்ட பிரம்பு தண்டனை வழங்கும் கோலாகவும் ஊன்றுகோல் வீட்டுக்கூரை புத்தக அலமாரி பூச்சாடி முதலான அழகுப்பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

சீர்காழி அருகே உள்ள தைக்கால் கிராம மக்கள் பிரம்பு பொருட்கள் செய்வதையே பிரதானத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். வார்னிஷ் அடிக்கப்பட்ட விதவிதமான பிரம்பு பொருட்களை கடைகளில் வரிசை கட்டி வைத்திருக்கின்றனர்.

**நெசவுத்தொழில்**

வேட்டி புடவை துண்டு போன்ற உடைகளை தயாரிக்கும் கலை நெசவுக்கலை பருத்தியிலிருந்து தக்ளி அல்லது சாட்டையின் மூலம் நூல் நூற்றலையும் கைத்தறியையும் தையலையும் பண்டைக்காலம் தொட்டே தமிழர் அறிந்திருந்தனர். தமிழர்கள் நெசவுத்தொழிலில் கொண்ட தொழில் நுட்பத்தையும் ஈடுபாட்டையும் வெளிப்படுத்துகிறது. தட்ப வெப்பநிலைகள் உடம்பைத் தாக்காத வண்ணம் ஆடை பாதுகாத்து வந்தது.

**“ஆடையுடையான் அவைக்கஞ்சான்”**[6]

**“ஆடையில்லா மனிதன் அரை மனிதன்”**[7] என்ற முதுமொழிகள் பல தோன்றலாயின.

**“உடைபெயர்த்துடுத்தல்”** என்றது தொல்காப்பியம்.

பண்டைக் காலத்தில் பெண்கள் நூல் நூற்றாமையை 'பருத்திப் பெண்டு' என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

**"பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன"**[9]

**"பருத்திப்பெண்டின சிறுதீ விளக்கத்து "**[10]

என்கிறது.

**நூலினு மயிரினு நுழைநூற்பட்டினும்**

**பால்வகை தெரியா பன்னூறடுக்கத்து**

**நறுமடி செறிந்த வதுவை வீதியும்**

என்கிறது சிலப்பதிகாரம்.

**"புகழ்வரைச் சென்னிமேற்**

**பூசையிற் பெரியன**

**பவளமே பனையன பன்மயிர்ப்பபேரெலி"**

என்கிறது சீவகசிந்தாமணி.

பண்டைத்தமிழரின் நெசவின் பெருமையை இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன. திருமண நிகழ்வுகளில் இன்றியமையாத ஆடையாக விளங்குவது பட்டுத்துணி. தறி கொண்டு நெசவு செய்யப்படும் பட்டுத் தனித்துவம் நிறைந்தது.

**தொகுப்புரை**

உலகமே தமிழரைக் கண்டு வியந்து பாராட்டும் வகையில் கைவினைக் கலைப்பொருட்களைத் தயாரிப்பதில் சிறந்து விளங்குகின்றது தமிழகம் இப்பொருட்கள் சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணமும் குழந்தைகளுக்கு ஆபத்தில்லாதனவாகவும் இருக்கின்றன. இக்கலைப்பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழிலாளிகளின் வாழ்க்கை மகிழ்ச்சியுற கைவினைப்பொருட்களை வாங்குவோமாக.

**சான்றெண் விளக்கம்**

1. திருக்குறள் கு.எண் 407
2. மேலது, கு.எண் 660
3. சோ.இலக்குவன், கழகப் பைந்தமிழ் இலக்கிய வரலாறு ப. 25
4. சோமசுந்தரப் புலவர், சூரிய வழிபாடு ப.60
5. நாட்டுப்புற மண்ணுமு; மரபும் மக்களும் ப. 110
6. சண்முகநாதன் தமிழனின் வரலாறு ப. 205
7. தொல்காப்பியம் 166
8. புறநானூறு பா. எண. 125
9. அ.சீனிவாசன் தமிழ்ச் சமூக வரலாறு ப. 113
10. மேலது, ப.118

**துணைநூற்பட்டியல்**

1. சோ.இலக்குவன் கழகப் பைந்தமிழ் இலக்கிய வரலாறு

சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

| | | |
|---|---|---|
| | | டி.டி.கே சாலை சென்னை |
| 2. | சண்முகநாதன் | தமிழனின் வரலாறு<br>சென்னை |
| 3. | அ.சீனிவாசன் | தமிழ்ச் சமூக வரலாறு<br>சென்னை |
| 4. | சோமசுந்தர புலவர் | சூரிய வழிபாடு |
| 5. | நாட்டுப்புற மண்ணும்<br>மரபும் மக்களும் | பல்லவி பப்ளிகேஷன்ஸ்<br>தென்இந்தியா பி.லிட்<br>194, கண்ணா காம்ப்ளக்ஸ் மேட்டூர் ரோடு,<br>ஈரோடு |
| 6. | பரிமேலழகர் உரை | திருக்குறள்,<br>நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் திருச்சி |


**Cite this book Chapter:** S. Ramalakshmi and Sujatha K., (2021) Tamil identities in Tamil Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:214-219. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ம. அரும்பு**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

# அகநானூற்றில் இசையும் இசைக்கருவிகளும்

**ஆய்வுச் சுருக்கம்**

மனித உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்பி இன்பத்தையும் மனநிறைவையும் கற்பனை வளத்தையும் அளிக்கின்ற கலைகளுள் இசை மிகவும் முக்கியமானதொரு கலையாகும். ஒலியை ஓர்ந்து அறியும் ஆற்றலும் காலக் கட்டுக்குள் அதை முறையாக அடக்கி ஆளும் திறனும் நுட்பமாகப் பெற்ற தமிழர்களின் இசைப்புலமை சிந்திக்கச் சிந்திக்க வியப்பும் பெருமைப்படுவதாகவும் உள்ளது. ரசிக்கும் தன்மையும் களிக்கும் திறமையையும் நன்கு இருந்தமையால் தமிழரின் இசை மேன்மையுற்று விளங்கியுள்ளது. பண்டைத் தமிழர் பல்வேறு கருவிகளைப் பலவகையாகப் பயன்படுத்திப் பண்ணிசையாகவும், தாள இசையாகவும் இனிய முறையில் இசைத்து வாழ்க்கை முறையில் ஒன்றுடன் ஒன்று கலந்து வாழ்ந்துள்ளனர். அவ்வகையில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் காணப்படும் இசைக்கலை பற்றியும் இசைக்கருவிகள் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழரின் அடையாளங்களுள் முதன்மையாக திகழ்வது கலைகள். ஒரு நாட்டின் கலாச்சாரம் பாரம்பரியத்தை அறிந்து கொள்ள வேண்டுமாயின் அந்நாட்டின் கலைகளை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். மக்களின் உள்ள உணர்ச்சி, குணச்சிறப்பு, நாகரிக நிலை, பண்பாட்டுப் பெட்டகங்கள் என ஒவ்வொன்றையும் எடுத்தியம்பும் திறன் கலைகளுக்கு மட்டுமே உண்டு. முத்தமிழ்க் கலைகளாவன இயல், இசை, நாடகம் எனப் போற்றப்படும் கலைகள் செம்மொழியாம் தமிழ்மொழியின் இலக்கியங்களான சங்க இலக்கியங்களில் இடம்பெற்று நம் தமிழ்மொழிக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள விதத்தினை உணர முடிகின்றது. அத்தகைய சிறப்பு வாய்ந்த முத்தமிழ்க் கலைகளுள் ஒன்றான இசைத்தமிழ் பற்றிய குறிப்புகளை அகநானூற்றில் அமைந்துள்ள விதத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**இசைக்கலை**

சங்க இலக்கியப் பாடல்களில் இசை என்ற சொல் இன்னிசை, இமிழிசை, இரங்கிசை, நல்லிசை, முழங்கிசை, சொல்லிசை, விளரிசை எனப் பலவாறு பயன்படுத்தப்பட்டு உள்ளது. உள்ளத்தினை வசப்படுத்தி இசைய வைக்கும் கலையே இசைக்கலை. குறில் நெடிலாகும் போது இசை பிறக்கிறது எனத் தொல்காப்பியம் கூறுகிறது. செவ்வியல் இசையின்கண் வடிவம் முதலிடம் பெற உணர்வு அதற்குத் துணையாய் அமைகிறது எனலாம் என்று சாரதாம்பாள் அவர்கள் செவ்வியல் கலைகள் எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

இசை என்னும் சொல் இசைவிப்பது, தன்வயப்படுத்துவது எனப் பொருள்படும். இசை, கல்மனதையும் கரைந்துருகச் செய்யும் பெருமை வாய்ந்தது. இசையின் பெருமையையும் அருமையையும் உணர்ந்தே தமிழர் இசைத்தமிழை முத்தமிழின் நடுநாயகமாக வைத்துள்ளனர்.

**"இயைபே புணர்ச்சி"**[1]

**(தொல்.உரி. 12)**

என்ற தொல்காப்பிய நூற்பா கூறுகின்றது. இயைபு என்றும் சொல்லிலிருந்து இசைப்பு என்னும் சொல் உருவாயிற்று.

**“இசைப்பு இசையாகும்”[2]**

**(தொல்.உரி. 12)**

இசைப்பு என்பதற்கும் பொருந்துதல் என்று பொருள் கொள்ளும் போது தாளம், பண், பாடல், சொல், பொருள், பாடுவோன் குரல் முதலிய அனைத்தும் ஒன்றோடொன்று இசைந்து நிற்றல் எனக் கொள்ளல் வேண்டும்.

**“யாழும் குழலும் சீரும் மிடலும்**
**தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்**
**இசைந்த பாடல் இசையாகும்”[3]**

**(சிலம்பு :3 26-28)**

என்னும் வரிகள் விளக்குகின்றன. பாடலில் அமைந்த ஒழுங்குப்படுத்தப்பட்ட இசைவாக எழுந்த இனிய ஓசைதான் இசையாகும் என்று அறிஞர் கூறுவர். அவ்வாறு ஒழுங்குப்படுத்தப்பட்ட ஓசையே இசையாகிறது என்பது இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**இசையின் மேன்மை**

அகநானூற்றில் இசையின் மேன்மை விளக்கப்பட்டுள்ளது. ஒரு வேட்டுவப் பெண் பாடிய குறிஞ்சிப்பண்ணைக் கேட்டு தானியக் காடுகளில் நுழைந்த யானையானது தானியங்களையும் உண்ணாது. ஓடவும் செய்யாது. மாறாது ஆழ்ந்த தூக்கத்திற்குள்ளாகும். அந்த அளவிற்கு வேட்டுவப் பெண்கள் குறிஞ்சிப்பண் பாடுவதில் வல்லவராய் இருந்ததை அகநானூறு குறிப்பிடுகின்றது.

**“ஒலியல் வார்மயிர் ஊரினள் கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட**
**குரலும் கொள்ளாது நிலையினு பெயராது**
**படாஅப் பைங்கண் பாடுபெற்று ஒய்யென**
**மறம்புகல் மழகளிறு உறங்கும்”[4]**

**(அகநானூறு 102. 5-9)**

என்று வரிகள் மூலம் இசையின் மேன்மையை அறிய முடிகின்றது.

**இசை நூல்**

இசை பற்றிய இலக்கணத்தை அகநானூறு வரையறுத்துக் கூறுகின்றது. பாண்மகன் இசைத்த இனிய பண் இசைத்தமிழ் நூலின் எண்ணின் முறைப்படி அமைந்த செய்தியை,

**“நல்லிசை நிறுத்த நயம்வரு பனுவல்**
**தொல்லிசை நீறீஇய உரைசால் பாண்மகன்**
**எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்”[5]**

**(அகநானூறு 352.13-15)**

என்னும் வரிகள் இசை வளர்க்கும் பாணன் இசைநூலை நன்குக் கற்றிருந்ததை உணர்த்துகிறது.

**இசைக்கலையின் வளமை**

இசையும் கூத்தும் மக்கள் வாழ்வில் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையது எனலாம். இயற்கையின் எழில்கள் மக்களுக்கு இன்பத்தையும்

முருகியல் உணர்வையும் ஊட்டின என்றே கூறலாம். ஏனெனில் மழை பெய்யும் ஓசையும் அருவி விழும் ஓசையும், மலர்ந்த மலர்களில் தேன் பருகும் வண்டுகள் எழுப்பும் ரீங்கார ஓசையும் யாழிசையைப் போன்ற இன்பத்தைத் தந்தன என்பதை,

**“வல்லோன் தைவரும் வள்உயிர்ப் பாலை**

**நரம்புஆர்த் தன்ன வன்புனம் முரலும்”[6]**

**(அகநானூறு 355 4-5)**

ஏன்ற வரிகள் விளக்குகின்றன.

**இசைக்கருவிகள்**

இசைக்கருவிகள் முதலில் பண்ணிசைக் கருவிகளாகவும் தாள இசைக் கருவிகளாகவும் வகைப்படுத்தப்பட்டன. மண்ணிசைக் கருவிகளாகவும் குழலும், யாழும் அமைந்திருந்தன தாள இசைக் கருவிகளாகப் பறை, தண்ணுமை, முழவு முதலியன விளங்கின பிற்காலத்தில் இசைக்கருவிகளை

1. **நரம்புக் கருவிகள்**
2. **காற்றுக் கருவிகள்**
3. **தோற் கருவிகள்**
4. **கஞ்சக் கருவிகள்**

எனப் பாகுபடுத்தினர். இவ்வடிப்படையில் அகநானூற்றில் காணப்படும் இசைக்கருவிகளைப் பற்றி இனிக் காண்போம்.

**நரம்புக் கருவிகள்**

அகநானூற்றில் நரம்புக் கருவிகளாக யாழ்கருவி இடம் பெற்றுள்ளது. பாணர்கள் யாழிசைத்த முறையும், யாழின் சிறப்பும், அழகும், குழலோடு இசைக்கப்பட்ட பாங்கும் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அரசர்கள் யாழிசையைக் கேட்டு மகிழ்ந்து பாணர்களுக்கும் பல பரிசில்களைக் கொடுத்து பாராட்டி உள்ளனர். இவர்கள் ஆதரவாய் இசை நன்கு செழித்திருந்தது. இதனை அகநானூற்றுப் பாடல்,

**“அருந்துறை முற்றிய கருங்கோட்டு சீறியாழ்ப்**

**பாணர் ஆர்ப்ப பலகலம் உதவி**

**நாளவை யிருந்த நனைமகிழ் திதியன்”[7]**

**(அகநானூறு 331 10-12)**

திதியன் என்ற குறுநில மன்னன் சீறியாழ்க் கலையில் சிறந்த பாணர்களுக்குப் பல பரிசுகளை நாளவையில் உவந்து அளித்துள்ளனர்.

**“யாழிசை மறுகின் நீடுர் கிழவோன்**

**வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்”[8]**

**(அகநானூறு 266 10-11)**

என்ற பாடலிலிருந்து எவ்வி என்ற அரசன் யாழிசையைப் போற்றியதை அறிய முடிகின்றது. யாழில் செவ்வழிப் பண்ணை இசைத்து இறைவனை வாழ்த்தியுள்ளனர். இப்பண் யாழில் அதிகமாக இசைந்திருப்பதால் செவ்வழி நல்யாழ் என்று சிறப்பிக்கப்படுகிறது.

**“செவ்வழி நல்யாழிசையினென் பையெனக்**

**கடவுள் வாழ்த்திப் பையுண் மெய்ந் நிறுத்தி”[9]**

**(அகநானூறு 34 15-16)**

என்ற பாடலும்

**“நயவன் தைவருஞ் செவ்வழி நல்யாழ்**

**இசையோர்த் தன்ன இன்தீங் கிளவி “[10]**

**(அகநானூறு 212 6-7)**

என்ற பாடலின் மூலம் யாழைச் செவ்வழி நல;யாழ் என்று குறிப்பிடப்பட்டுள்ளன என அறிகிறோம். மேலும் ஆநிரையை மேய்த்துச் செல்லும் கோவலர்கள் யாழில் ஆம்பல் பண்ணுடன் செவ்வழிப் பண்ணையும் சேர்த்து இசைத்துள்ளனர்.

**காற்றுக் கருவிகள்**

அகநானூற்றில் குழல், தூம்பு, வயிர் போன்ற காற்றிசைக் கருவிகள் கூறப்பட்டுள்ளன.

**குழல்**

தமிழன் கண்டெடுத்த முதல் இசைக்கருவி குழலும் யாழும் ஆகும். இயற்கையில் மூங்கில் துளைகளில் வண்டு புகுந்து உண்டாக்கிய துளையின் வழியாகக் காற்று சென்று ஏற்றப்பட்ட ஒலியின் மூலமாக மனிதன் குழல் கருவிகளை உருவாக்கினான். அகநானூற்றில் ஒருவகையான கொன்றைக்குழல் பற்றிய குறிப்பு உள்ளது.

**“கொடுமுடி யுடையர் கோற்கைக் கோவலர்**

**கொன்றையங் குழலர் பிற்றைத் தூங்க”[11]**

**(அகநானூறு 54 10-11)**

இதில் கோவலரால் இசைக்கப்பட்ட கொன்றைக்குழல் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.

**தூம்பு**

தூம்பு என்பது மூங்கிலை அறுத்துக் குழல் போன்று செய்யப்பட்ட கருவியாகும். இதனை வங்கியம் என்றும் நெடுவங்கியம் என்றும் கூறியுள்ளார். இது குழலை விடப் பெரியதாக இருந்திருக்க வேண்டும் இதற்குத் துளைகள் இட்டு சுருதிமைத்துச் சுரத் தாளங்களை வகுத்துள்ளனர்.

கோடியர் என்ற இசைக்கலைஞர் தூம்பு என்ற இசைக்கருவியினை இசைக்கின்றனர். இதனை அகநானூறு பின்வரும் பாடலின் மூலம் குறிப்பிடுகின்றது.

**“ஒள்கயிறு எடுத்த நோயுமை நெடுங்கை**

**தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்”[12]**

**(அகநானூறு 111 8-9)**

ஏன்று கோடியர் தூம்புக் கருவியினை இசைத்தணைக் குறிப்பிடுகிறது. மேலும் தூம்பின் இசை சில சமயங்களில் கடுமையாக ஒலிப்பதனை

**“கடுங் குரல் தூம்பு”[13]**

**(அகநானூறு 82 5)**

என்கிறது.

**வயிர்**

வயிர் என்ற துளைக்கருவி போர்க்களங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது இது விலங்குகளின் கொம்பினால் செய்யப்பட்டதாகவும் மரங்களின் வயிர்ப் பகுதியைத் துளைத்துச் செய்யப்பட்டிருப்பதால் வயிர் என்ற பெயரைக் கொண்டிருந்தது.

அகநானூற்றில் வயிரின் ஒலி அச்சமுற்ற நாரையின் ஒலிப்போற்றும் மயில் பேடையின் ஒலிக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது.

**“கான மஞ்ஞை கமஞ்சூல் மாப்பெடை**

**அயிரியாற் றடைகரை வயின் நரலும்”[14]**

**(அகநானூறு 177 10-11)**

ஏன்றும்

**“தண்ணுமை செரீஇய தடந்தாள் நாரை**

**செறிமடை வயிரீற் பிளிற்றும்”[15]**

**(அகநானூறு 40 13-14)**

மேலும், அகநானூற்றில் ஆடுகளத்திலும் வயிர் பயன்படுத்தப்பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது.

**“ஆடுகள வயிரின் இனிய ஆலி”[16]**

என்ற பாடல் வரியிலிருந்து வயிரும் வளையும் இணையாக இசைக்கப்பட்ட செய்தி புலப்படுகிறது.

**தோற்கருவிகள்**

கால அளவை மையிட்டுத் தட்டொலியைச் சிறப்பாகக் கொண்டு பண்ணிசைக்கும் பொருந்தும் வகையிலும் இசைக்கும் இசைக்கருவி தோற்கருவியாகும். இக்கருவியின் தோளில் விரலாலும். சிறு குறுந்தடி கொண்டு தட்டியும் ஒலி எழுப்புவர். அகநானூற்றில் முழவு, முரசு, பறை, கிணை, துடி, சில்லரி, தட்டை, இன்னியம் போன்ற தாள இசைக்கருவிகளைப் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றது.

**முடிவு**

முழவு பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் அதிக இடங்களில் இடம் பெற்றுள்ளன. இதுவும் தண்ணுமை போன்ற ஒரு கருவியாக இருந்திருக்க வேண்டும். இதன் அமைப்பு தண்ணுமை மத்தளத்துடன் ஒப்புடையதாக உள்ளது.

முழவு பலாப்பலத்துடன் ஒப்புமைப்படுத்தி அகநானூற்றில் கூறப்படுகிறது.

**“முன்றில் நீடிய முழவுறழ் பலவின்”[17]**

**(அகநானூறு 72 11)**

முழவினை விரல் கொண்டு அடித்து ஒலி எழுப்பினர். அதன் கண்ணில் விரலால் அடித்த தழும்பு இருந்துள்ளது என்பதை,

**“மண்ணார் முழவின் கண்ணகத் தசைத்த**

**விரலுன்று வருவின் தோன்றும்”[18]**

**(அகநானூறு 155 11)**

ஏன்ற வரிகளால் அறியலாம்.

**முடிவுரை**

அகநானூற்றில் இசையும் இசைக்கருவிகளும் எனும் கட்டுரையின் வாயிலாகப் பழந்தமிழ் மக்கள் இசையையும் கூத்தையும் தம் வாழ்க்கையோடு இணைத்தும் போற்றியதை உணர முடிகின்றது. அகநானூற்றில் பண், இசைக் கலைஞர்கள் பற்றிய செய்திகள், இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் மிகுதியாக இடம் பெறுகின்றன. இத்தகைய இசைக்கருவிகள் பிற்காலத்தில் பல்வேறு வகையாக வளர்ச்சியடைந்து சிறந்த அரங்கிசைக் கருவிகளாகத் திகழ்ந்து வருகின்றன.

**சான்றெண் விளக்கம்**

1. ச.வே சுப்ரமணியம், தொல்காப்பியம் தெளிவுரை, ப.304
2. மேலது ப.304
3. உ.வே சாமிநாதையர், சிலப்பதிகாரம் மூலமும் உரையும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லார் உரையும் ப.61
4. இரா. செயபால், அகநானூறு மூலமும் உரையும், ப. 21
5. மேலது ப.464
6. மேலது ப.490
7. மேலது ப.401
8. மேலது ப.380
9. மேலது ப.81
10. மேலது ப.340
11. மேலது ப.97
12. மேலது ப.245
13. மேலது ப.113
14. மேலது ப.233
15. மேலது ப.75
16. மேலது ப.101
17. மேலது ப.134
18. மேலது ப.293

**பார்வை நூல்கள்**


1. சுப்ரமணியம். ச.வே, தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை, எட்டாம் பதிப்பு 2006
2. சhமிநாதையர் உ.வே (ப.ஆ), சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், மகாமகோ பாத்யாய டாக்டர் உ.வே சாமிநாதையர் நூல் நிலையம், பெசண்ட் நகர், சென்னை. பத்தாம் பதிப்பு – 2001
3. செயபால். இ.ரா, அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி).லிட், அம்பத்தூர், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2007


**Cite this book Chapter:** S. Ramalakshmi and Arumbu M., (2021) Music and Musical Instruments in Aganaanooru, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:220-225. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ஆ.ஷர்மி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 2

# சங்க இலக்கியங்களில் தமிழர் அடையாளம் - உறவுகள்

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்க்கையில் உறவுகள் காலங்களையெல்லாம் கடந்து நிற்கின்ற ஒன்றாகும். உறவுகள் சிக்கலில்லாமல் அமைய வேண்டுமெனில் பேச்சும் செயலும் உண்மையோடு ஒத்த தன்மையை பெறவேண்டும். சங்க இலக்கிய அக நூல்களும் புற நூல்களும் தமிழர்களின் உறவினைப் படம் பிடித்துக்காட்டுகின்றன. பாலுறவுத் தொடர்பு உரிமை வாழ்க்கைச் சூழலில் திருமணக்கட்டம் ஏற்படுகிறபொழுது அந்தத் திருமணத் தொடர்பினால் மணஉறவு குடும்ப பணிவிடைகள் பொருளாதார ஒத்துழைப்பு குடும்பம் திருமண உறவுகள் கணவன் -மனைவி உறவு, கணவன் - மனைவி – சுற்றத்தார், தலைவன் - தலைவி - தோழி உறவு, தந்தை - மகள் உறவு, தாய் - மகன் உறவு, அண்ணன் - தம்பி உறவு, தலைவன் பரத்தமை உறவு, அரசர் புலவர் உறவு. குற்றம்பார்க்கின் சுற்றம் இல்லை என்ற பழமொழிக்கு ஏற்ப உறவுமுறை என்பது மனிதப்பண்புகள் மாறாமல் எவர் மனமும் புண்படாமல் எண்ணங்களால் தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொண்டு ஒருவரோடு ஒருவர் பழகும் முறையே உறவு முறையாகும். கூடிப் பழகும் நிலையே உறவு என்றும் உறவின் நெறியாகவும் அறமாகவும் அமைகிறது என்பதை இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகின்றது. மண்ணின் மரபுகளைப் பின்பற்றி தமிழர்கள் உறவு என்ற அடையாளத்தோடு வாழ்ந்து நம் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பாதுகாத்து வாழவேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் இவ்வாய்வாய்வு அமைந்துள்ளது.

**முன்னுரை**

இன்றையச் சமுதாயச் சுழலில் ஒரு மனிதன் தனிமையாக வாழ்வது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும். ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டியிருப்பதால் அவர்களுக்கிடையேயான உறவு முறைகளை அறிவது மனித சமுதாயத்தினை அறிவதற்கு ஒப்பாக அமைகிறது. குடும்பமே சமுதாயத்தின் அடிப்படை அமைப்பாக இருந்து வருகிறது. சங்க காலத் தமிழகத்தின் சமூக வரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியம் தலைமை ஆதாரமாக அமைகிறது. குடும்ப சமூக உறவு நிலைகளைப் பற்றி அகப் பாடல்களும் புறப்பாடல்களும் சித்திரிக்கின்றன. சங்க காலத்தில் தமிழகத்தில் அமைந்துள்ள குடும்பங்களின் உறவுமுறைகளைப் பற்றியும் சூழ்நிலைகள் பற்றியும் நாம் காண்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

**குடும்பம்**

குடும்ப உறவானது அனைத்துத் தரப்பு மக்களிடமும் காணக்கூடியதாகும். திருமணத்தின் மூலம் பிணைக்கப்பட்டு கணவன், மனைவி, தாய், தந்தை, மகன், மகள், தம்பி, தங்கை போன்ற உறவு முறைகளுடன் வளமுடன் வாழ்வது குடும்பமாகும். குடும்பம் எல்லாச் சமூகங்களிலும் உள்ள அடிப்படையான அமைப்பாகும். குடும்பத்தினின்று உறவு ஏற்படுகிறது. சமூகத்தின் பல்வேறு பிரிவுகட்கும் குடும்பம் அடிப்படையாக அமைகிறது. இக்குடும்பமானது சமூக வழக்காலும் சமுதாயத்தாலும் கட்டுப்படுத்தப்படுகிறது

**திருமண உறவுகள்**

மணநிலை ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பெருநிலையாகும். சங்க இலக்கியத்தில் பல்வகையான மணமுறைகள் வழக்கிலிருந்தன என்று அறிய முடிகிறது. அவை அனைத்திலும் குடும்பப் பெரியோரின் விருப்பத்திற்குச் சிறப்பிடமிருந்ததென்றும் விளங்குகின்றது. இன்றளவும் நீடித்துள்ள இம்மரபு சங்க

காலத்திலும் இருந்திருப்பது இயல்பாகும். ஆனால் சங்கப் புலவர்கள் களவு திருமணத்தைப் பாடுதலை இலக்கிய மரபாகக் கொண்டமையின் உறவு வழித் திருமணத்தைப் பாட்டுக்குப் பொருளாகக் கொண்டாரெனத் தெரிகின்றது. அக்காலத்தில் இத்தகு நெருங்கிய உறவினர் மனஉறவு கொள்ளும் வழக்கம் இருந்தது.

இதனை,

**“யாயும் ஞாயும் யாராகியரோ**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்”[1]**

என்னும் செம்புலப்பெயரல் நீராரின் வாக்கால் நன்கு உணரப்படுகிறது.

**“மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**

**நன்கலம் நன்மக்கட் பேறு” [2]**

என்ற குறள் இல்லறத்தை சிறக்க செய்பவள் மனைவி என்பதை அறிய முடிகிறது.

**கணவன் - மனைவி உறவு**

சங்க அக இலக்கியங்களில் சிறப்பாகப் பேசப்படுவன தலைவன் தலைவியின் உறவுச் செய்திகளே தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டுக் காதல் கொண்டு களவொழுக்கம் நடத்தி சில நாட்களுக்குப் பின்னர் திருமணம் செய்து கொண்டதாக இலக்கியங்கள் கூறுகின்றன.

குடும்பம் அதன் உறுப்பினர்களுக்குப் பொதுவான உறவிடத்தை அளிக்கின்ற குழுவாகும். கணவன் மனைவியிடையே நிறுவப்பட்ட பாலின உறவும் புணர்ச்சியும் ஏற்பட வழிவகுக்கிறது. அதன் உறுப்பினர்களிடையே காணப்படுகின்ற ஒரு நெருக்கமும் பற்றும் பாசமுந்தான் அதனுடைய இயல்பான ஒற்றுமைக்கும் கூட்டுச் செயலுக்கும் அடித்தளமாக அமைகின்றன.

ஒரு சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கும் தேவைக்கும் ஏற்பக் கணவன் - மனைவி உறவு பற்றிய கொள்கைகளை வகுத்துப் போற்றி வருகிறது. இல்லற வாழ்வில் மனைவியே கணவனின் பெருமைக்கு ஆதாரம் என்பதை

**“மனைக்கு வரம்பாகிய வானுதல் கணவன்**

**மனைக்கு வரம்பாகி;ய வென்வேல் நெடுந்தகை” [3]**

முடவனார் பொருள் பொதியப்பாடியுள்ளார்.

**கணவன் -மனைவி –சுற்றத்தார்**

கணவன் மனைவி நெருக்கம் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவருள் ஒருவர் தவறி விடும்போது தெளிவாகத் தெரிகிறது. போரில் வீரமரணம் அடைந்த தலைவனைக் கண்டு தலைவிப் புலம்புங்கால்

**“என் திறத்து அவலங் கொள்ளல் இனியே**

**இளையுள் ஓய்வலே கூறுநின் உரையே”[4]**

என்று தான் உயிரை மாய்த்துக் கொள்ள இருப்பதைக் குறிப்பால் புலப்படுத்தி உன் சுற்றத்தார் உன் பிரிவை எப்படித் தாங்குவர் என்ற வரிகள் தலைவியின் கையறு நிலையினை சுட்டுகிறது.

தலைவன் தேடி வரும் பொருளைப் பேணிப்பாதுகாப்பதும் பகுத்துக் கொடுத்தலும் தலைவியின் உரிமையாகவும் கடமையாகவும் இருந்தது. கணவன் வேட்டையாடி கொண்டு வந்த முள்ளம் பன்றி இறைச்சியையும் அவன் மனைவி அகழந்து எடுத்து வந்த கிழங்கையும் சுற்றத்தார் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கிறாள் என்பதை

**“கானவன் எய்த முளவு மான் கொழுங்குறை**

**கேம் கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு**

**காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்**

**ஓங்கு மலை நாடன் நின் நசையினானே"**[5]

என்ற பாடலின் வழியாக இல்லறத் தலைவனை நம்பி மனைவி மட்டுமின்றி சுற்றமும் இருந்தது என்பதால் கூட்டுக்குடும்ப முறையானது நிலவியிருப்பதை அறிய முடிகிறது.

கணவன் - மனைவி உறவுப் பற்றித் தமிழர்கள் உருவாக்கியிருந்த கொள்கைகள் சங்க காலத்திலேயே தொன்மையானவைகளாகக் கருதப்பட்டமையைத் "**தோன்றில் மரபின் மன்றல் அயர்"** என்று திருமணம் பற்றிய சங்க இலக்கியங்களின் குறிப்பால் நன்கறியலாம்.

**தலைவன் - தலைவி - தோழி உறவு**

சங்க இலக்கியங்களில் ஒரு குடும்பத்தில் தலைவனும் தலைவியும் இணைந்து நடத்தும் களவொழுக்கம் கற்பொழுக்கம் ஆகியவற்றுக்கு அச்சாணியாக நிற்பவள் தோழியாவாள். தலைவன் தலைவியரைவிட தோழி என்னும் பாத்திரத்திற்கே சங்க இலக்கியத்தில் முதன்மை பெறுகிறது. குடும்பத் தொடர்பு உடையவர்களிடையே உள்ள உறவுகளில் தலைவி - தோழி உறவே நெருங்கிய உறவாக சங்க இலக்கியங்களில் பேசப்படுகிறது.

**மதியுடம்படுதல்**
**குறைநயத்தல்**

**ஆற்றுவித்தல்**

**அறத்தொடுநிற்றல்**

சங்க இலக்கியங்களில் தலைவி கூற்றை விட துணைப் பாத்திரமாகிய தோழியின் கூற்றே மிகுதியாக உள்ளது.

**தோழி தலைவி தொடர்பு நெருக்கம்**

இளம்பருவம் தொடங்கியே தலைவியும் தோழியும் **"ஈருடல் ஓருயிர்"** என்று பழகி வந்தனர். அதனால் தன் தனிநிலைக் காதலிலும் பொதுநிலையாகப் பேசிக் கொள்கின்றனர். அவர்கள் தலைவனுடன் கொண்டிருக்கும் உறவைப் பிறர் ஐயுறும் அளவுக்கு அவர்களின் தொடர்பு நெருக்கம் அமைந்துள்ளது. தோழி தலைவிக்கே உரிய காதலனாகிய தலைவனை நம் காதலர் என்றே குறிப்பிடுகிறாள்.

தலைவியின் நலனைத் தனக்கும் உரியதாக்கிப் பேசுகிறாள். தலைவியின் உயிரையும் நம் உயிர் என்று கூறுகிறாள். இடம் என்று குறிப்பிடும் போது நம் என்ற தொடர்பின் நெருக்கம் வெளிப்படுகிறது. தலைவியும் பேசும்போது சில இடங்களில் தோழியை உளப்படுத்தியே தன் நெருக்கத்தை வெளியிடுகிறாள்

**"இனிய செய்த நம் காதலர்**

**இன்னா செய்தல் நோம் என்நெஞ்சே ! "-6**

என்று தனக்கே உரிய காதலனைத் தோழிக்கும் உரிமைபடுத்தி தலைவனைப் பற்றிப் பேசுகிறாள்.

**தந்தை - மகள் உறவு**

தந்தை மகன் உறவு சிறப்பான உறவாகும். வேள்பாரி பறம்பு மலைக்குத் தலைவன். இவன் அஃறிணை உயிரான முல்லைக்குத் தேர் கொடுத்த சிறப்புக்குரியவன். இவன் கொடைத் தன்மை மிக்கவன். இவன் மூவேந்தரது சூழ்ச்சிக்கு இரையாகி உயிர்துறந்தான். இதனால் வருத்தமுற்ற பாரியது மகளிர் புலம்பி வருந்தினர். பாரி மகளிர் தம் தந்தை இருந்த போது மகிழ்ந்திருந்ததையும் இறந்த போது துன்புற்று வருந்தியதையும்,

**“அற்றைத் திங்கள் அவ்வெண் ணலவின்**

**எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்**

**இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்**

**வென்றெறி முரசின் வேந்தரெம்**

**குன்றுங் கொண்டார்யாம் எந்தையும் இலமே”[7]**

என்ற பாடல் தெளிவாகச் சுட்டுகிறது. தந்தையின் இறப்பிற்காக வருந்தும் அவனது மகளிரின் பேரன்பினை வெளிப்படுத்தும் சிறந்த பாடலாகும்.

**தாய் - மகன் உறவு**

தாய் - மகன் உறவு போர் நிகழ்ந்த சூழலிலேயே சுட்டப் பெற்றுள்ளது. ஒரு தாய் தன் மகனை எங்கே என்று கேட்டவர்களிடம் புலி இருந்து போன குகையைப் போல என் வயிறு இங்கேயுள்ளது என் மகனோ போர்க்களத்தில் இருப்பான் என்று முழங்கியதை,

**“புலி சேர்ந்து போகிய கல்லளை போல**

**ஈன்ற வயிறோ இதுவே**

**தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே”[8]** என்ற பாடல் உணர்த்துகிறது.

போரில் கணவனையும் தமையனையும் இழந்த பெண் தன் ஒரே மகனிடம் வேலைக் கொடுத்துப் போருக்கு அனுப்பியதை

**“ஒருமகன் அல்லது இல்லோள்**

**செருமுகம்; நோகக்கிச் செல்கென விடுமே”[9]** என்ற பாடலின் வழியாக உறவில் அன்பும் நெருக்கமும் அறிய முடிகிறது.

**அண்ணன் - தம்பி உறவு**

சங்க காலத்தில் அண்ணன் - தம்பி உறவு பற்றி அரிசில் கிழார் என்னும் புலவர்

**“தோல்தா தோல்தா என்றி தோலொடு**

**துறுகல் மறையினும் உய்குவை போலாய்**

**நெருநல எல்லைநீ எறிந்தோன் தம்பி**

**அகல்பெய் குன்றியின் சுழலும் கண்ணன்**

**பேருர் அட்ட கள்ளிற்கு**

**ஓர் இல் கோயின் தேருமால் நின்னே” [10]**

என்ற பாடலில் நேற்று நீ ஒரு வீரனை வீழ்த்தினாயே அவன் தம்பி உன்னைக் கொல்வதற்காகத் தேடிக்கொண்டிருக்கிறான் அவன் உன்னைக் கொல்லாமல் விட மாட்டான் என்று அண்ணன் தம்பியின் பாச உணர்வினை எடுத்துரைக்கின்றது.

குமணன் முதிர மலையைச் சார்ந்த நாட்டின் தலைவன். இவனது தம்பி; இளங்குமணன் பொறாமையும் சிற்றின் சேர்க்கையும் அவனைத் தீயவனாக்கித் தன் அண்ணனை நாட்டை விட்டு காட்டிற்குத் துரத்தும்படி செய்தது. இளங்குமணன் குமணனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு தானே ஆட்சிப் பொறுப்பேற்றான். பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் தன் வறுமை காரணமாக அந்நாட்டிற்கு வந்து அங்கு நிகழ்ந்தவற்றை அறிந்து மனம் வருந்தினார். புலவர் இளங்குமணனின் மனவலிமை இல்லாதவன் என்பதனை உணர்ந்து கொண்டார். பின்னர் புலவர் காட்டிற்;குச் சென்று குமணனைப் பார்த்துத் தம் ஏழ்மை நிலையை விளக்கிப் பரிசில் வேண்டினார். குமணன் ஒரு வாளை எடுத்து புலவரிடம் கொடுத்துத் தன் தலையைக் கொய்து சென்று தன் தம்பி இளங்குமணனிடம் கொடுத்தால் அவன் அவருக்குப் பரிசில் தருவான் என்று கூறினான். புலவரும் அவ்வாளை வாங்கிக் கொண்டு

இளங்குமணனிடம் சென்று காட்டில் குமணன் கூறியவற்றை எடுத்துரைத்தார். இதனால் மனம் தெளிவடைந்த இளங்குமணன் காட்டிற்குச் சென்று குமணனிடம் தன் தவற்றிற்குத் தம்மை மன்னிக்கும்படி வேண்டினான். பின் குமணன் அரசுப் பொறுப்பேற்று நல்லாட்சி நடத்தினான்.

**''மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**

**தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே**

**துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்**

**..........................................**

**ஓடாப் பூட்கைநின் கிழமையோன் கண்டே"11**

எள்ற பாடலின் அண்ணன் தம்பி இருவரும் தமக்குள் கருத்தொருமித்து ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற உயரிய கருத்தை குமணன் இளங்குமணன் வரலாறு உணர்த்துகிறது.

**தலைவன் பரத்தமை உறவு**

அகப்பொருள் நுல்களில் காணும் பரத்தையர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைவனைப் பற்றி நின்றவர் என்று கொள்ளலாம் பரத்தைமை இல்லாது நாம் இல்லை என்பதுதான் உண்மை இதனை நன்குணர்ந்த தொல்காப்பியர்

**"இமையோர் தேயத்தும் எறிகடல் வரைப்பினும்**

**அவையில் காலம் இன்மையான"12**

என்னும் உண்மை இயல்பினை உணர்த்திய பெருமை உணர்ந்து போற்றுதற்குறியது.

சூரியன் செல்லும் திசையெல்லாம் திரும்பும் நெருஞ்சியும் பிடியைச் சார்ந்து அதன் பின்னே செல்லும் களிறும் பரத்தையின் பின்னே போகும் தலைவனுக்கு உவமை கூறப்பட்டுள்ளமை காணலாம்.

**"யானவன் வாராமாறே வரினே**

**வானிடைச் சுடரொடும் திரிதரும்**

**நெருஞ்சி போல என்னொடு திரியா னாயின் " 12** எனும் பாடல் தலைவன் பரத்தமை உறவினை தெளிவாகச் சுட்டுகிறது.

**"வருகதில் அம்ம எம் சேரி சேர !**

**.... ... ... ....**

**தோள்கந் தாகக் கூர்தலின் பிணித்துஇஅவன்**

**மார்புகழ் கொள்ளேன் ஆகின்இஆற்று"-13**

தலைவன் மார்பு பிறர்க்குரிமையாகாது தனக்கே உரிமையாகும் படிக்குச் சிறை செய்யப் போவதாக மேற்காணும் பாடல் விளக்குகிறது.

தலைவனுடைய பரத்தமையைப் பார்த்துப் பேசும் மருதப் பாடல்கள் தலைவனோடு உறவு கொண்ட பரத்தை வறும்பூத்துறக்கும் வண்டுபோல் பிற ஆடவரைத் தேடிச் சென்றாள் என்று காட்டவில்லை. மாறாகத் தன்னையும் விடுத்துப் பிற பெண்டிரை நாடிச் சென்றமைக்காக வருந்திப் பேசும் பரத்தையரையே காட்டியுள்ளன. இவ்வாறு தலைவன் பரத்தை உறவினை இலக்கியம் நமக்கு காட்டுகின்றது. தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும் பாலுணர்ச்சி மிக இன்றியமையாத இடம்பெற்று ஆண் - பெண் உறவினை சிறப்புச் செய்கிறது.

**அரசர் புலவர் உறவு**

அரசர் புலவர்களுக்கிடையிலான உறவு போற்றுதற்குரியது. புலவர்கள் அரசர்களோடு நட்பு பூண்டு ஒழுகியதோடல்லாது அரசர்கள் தவறு செய்யும்போது

அவர்களைத் திருத்தியும் தூது சென்றும் மனைவியோடு கொண்ட ஊடலினை நீக்கியும் அரசர்களின் அகப்புற வாழ்க்கையில் ஈடுபட்டு உதவி செய்தனர் என்பதைக் காண முடிகிறது.

மயிலுக்குப் போர்வை தந்த பேகன் தன் மனைவி கண்ணகியுடன் கருத்து மாறுபாடு கொண்ட போது பரணர் என்னும் புலவர் தான் விரும்பும் பரிசிலாக,

**“இனமணி நெடுந்தேர் ஏறி**

**இன்னாது உறைவி அரும்படர் களைமே”14**

என்று மனைவியுடன் நீ இணைந்து வாழ்வதே நான் கோறும் பரிசிலாகும் என்கிறார்.

அரசர்களும் தனது புகழ்பாடும் புலவர்களை உயர்நிலையிலேயே வைத்திருந்தனர். கோப்பெருஞ்சோழன் தன்னுடன் வடக்கிருக்க முன்வந்த பொத்தியார் என்னும் புலவரைப் பார்த்து **“புதல்வன் பிறந்த பின் வா”** என்றான். சோழன் இறந்தபின் அவனது நடுகல்லின் முன்பு நின்று

**“புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென**

**என்னிவ ணொழித்த அன்பி லாள**

**எண்ணா திருக்குவை யல்லை**

**என்னிடம் யாதுமற் றிசைவெய்யோயே”15**

என்கிறார் புலவர். அரசன் புலவனோடு கூடி உண்மையான மகிழ்ச்சியை நாள்தோறும் கொண்டிருந்தான் என்பதை

**“ஆரல் கொழுஞ் சூடு அம் கவுள் ஆடாஅ**

**வைகு தொழில் மடியும் மடியா விழவின்**

**யாணர் நல் நாட்டுள்ளும் பாணர்**

**பைதல் சுற்றத்துப் பசிப் பகை ஆகி**

**கோழியோனே கோப்பெருஞ் சோழன்**

**பொத்தின ண்பின் பொத்தியொடு கெழீஇ**

**வாய் ஆர் பெரு நகை வைகலும் நக்கே”16**

என்ற பாடலில் புலவர் கோப்பெருஞ்சோழனுடைய படைவீட்டில் தங்கி இருந்தான். அவன் குற்றமற்ற நட்பினை உடையவன் என்றும் பொத்தி என்னும் புலவனோடு கூடி உண்மையான மகிழ்ச்சியை நாள்தோறும் கொண்டு இருந்தான் என்று கோப்பெருஞ்சோழனை பிசிராந்தையார் புகழ்ந்து பாடுகிறார்.

உண்டாரை நீண்டு நாள் வாழ வைக்கும் அதிசய நெல்லிக்கணியினைத் தான் உண்ணாமல் ஔவைக்கு ஈந்து தமிழ் வாழ நற்பெயர் கொண்டான் அதியமான். அதனாலன்றே ஔவையார்,

**“நீலமணி மிடற்று ஒருவன் போல**

**மன்னுக பெரும நீயே ”17** என்கிறார்

அதியமான் - ஔவையார் நட்புறவானது அதியமானின் அன்புள்ளம் முகம் சுருங்காத தன்மையும் கொடை மாண்பும் புலனாகிறது. இதனை ஔவையார்

**“யானை தன் கோட்டிடை வைத்த கவளம் போலக்**

**கையகத்துத ஆத பொய் ஆகாதே**

**அருந்தே மாந்த நெஞ்சம்**

**வருந்த வேண்டா வாழ்க அவன் தாளே” 18**

பாரி கபிலர் நட்பினைப் பற்றி கபிலர் பாரியைப் பற்றி பாடும் போது அவர் நாட்டின் சிறப்பினைப் பற்றியும்

**"அருவி மால்புரை நெடுவரைக் கோடுதொறு இழிதரும"'19**

பாரியின் மலை வளத்தையும் அருவி நீரினும் இனிய சாயலை உடைவன் என்று அவன் குணங்களையும் பாரியின் கொடை உள்ளத்தையும் கபிலர் எடுத்துரைக்கிறார்

**தொகுப்புரை**

மனித வாழ்க்கையில் உறவுமுறைகள் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன. குடும்பம் என்ற அமைப்பு உலகம் முழுவதிலும் நிரந்தரமானதாகும். சமுதாயத்தில் குடும்ப அமைப்பின் அம்சங்களாக மனிதப் பிணைப்புகளில் சிறப்பான இடம் உறவுக்குத்தான் இருக்கிறது. மனிதனுடைய வாழ்க்கையில் அனைத்து நிலைகளிலும் பிறப்பு முதலாக இறப்பு வரையிலான எல்லா நிலைகளிலும் உறவுதான் முதன்மையான இடத்தைப் பெறுகிறது. தமிழர்கள் எந்தக் காலத்திலும் எந்த நிலையிலும் இந்த உறவு பிணைப்பை மறுக்கவோ நீக்கவோ இயலாத ஒன்றாகும்.வருங்கால சந்ததியினரும் தமிர்களின் பண்பாடு பழக்க வழக்கத்தினைப் பின்பற்றி மண்ணின் மரபுகளைப் பின்பற்றினால் மகத்தான வாழ்வைப் பெறலாம் என்பது இவ்வாய்வின் மூலமாக எடுத்தரைக்கப்படுகிறது.

**சான்றெண் விளக்;கம்**

1. குறுந்தொகை பா - 40
2. திருக்குறள் எண் - 60
3. புறனாநூறு – பா - 314
4. புறனாநூறு – பா - 253
5. நற்றிணை - பா 85
6. குறுந்தொகை –பா - 202
7. புறனாநூறு – பா -112)
8. புறனாநூறு – ; பா - 86)
9. புறனாநூறு – பா -புறம் - 279)
10. புறனாநூறு – பா - 300
11. புறனாநூறு – பா -165
12. அகனாநுறு – பா - 336
13. அகம் 271)
14. புறனாநூறு – பா - 145
15. புறனாநூறு – பா - 222
16. புறனாநூறு – பா – 212
17. புறனாநூறு – பா - 91
18. புறனாநூறு – பா - 101
19. புறனாநூறு – பா - 105

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர் (உ.ஆ.) - தொல்காப்பியம்
பொருளதிகாரம்
சாரதா பதிப்பகம்
சென்னை 600 014

2. தட்சிணாமூர்த்தி. அ. - அகநானூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
41பிஇ சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்

அம்பத்தூர்இ சென்னை – 98
3. தமிழ்வாணன் லேனா - குறுந்தொகை
மணிமேகலை பிரசுரம்
4இ தணிகாசலம் தெரு
தியாகராயநகர்
சென்னை - 600 017.
4. ஜெயம். ஆ. - தமிழ் இலக்கிய வரலாறு
ஜனகா பதிப்பகம்இ
63, தம்பையா சாலை
மேற்கு மாம்பலம்
5. பாலசுப்ரமணியன்.கு.வே - குறுந்தொகை
நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ்
(பி) லிமிடெட்இ 41-பிஇ சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட்
அம்பத்தூர்இ சென்னை.
6. பாலசுப்ரமணியம்.கு.இ(உ.ஆ) - புறநானூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
41 - பிஇ சிட்கோ
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர்இ சென்னை.
முதற்பதிப்பு -2004
7.இராமையாபிள்ளை.நா.இ(உ.ஆ) - நற்றிணை
வர்த்தமான் பதிப்பகம்
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ்
41 - உஸ்மான் சாலை
சென்னை.
முதற்பதிப்பு - 1999
8;. புலியூர் கேசிகன் - திருக்குறள் -
நியு செஞ்சுரி புக் ஹவுஸ்
91-பிஇ சிட்கே இன்டஸ்டீரியஸ்
எஸ்டேட்இ அம்பத்தூர்இ
சென்னை. முதற்பதிப்பு ஏப்.2004.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Sharmi A., (2021) Tamil identity in Sangam Literature – Relationship, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:226-233. Cauvery College For Women, Trichy.

**முனைவர் க.ஆனந்தி**
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்.

# அகப்பொருள் கூறும் வாழ்வியல்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்மொழியில் இலக்கண வகைப்பாடு கண்டவர்கள் பொருள் இலக்கணம் என்பதனை மூன்றாவது இலக்கணமாகப் படைத்துள்ளனர். இலக்கியம் என்பது மக்களிடமிருந்து – மக்களுக்காக உருவாக்கப்பட்டது. பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியல் பிழிவாக அமையும் பொருள் இலக்கணம் வாழும் வழிவகைகளை வழங்குகிறது. இதனடிப்படையிலே பொருளதிகாரம் வாழ்க்கைக்கு வழங்கப்பட்ட இலக்கணமாகவும், தமிழர்க்கே உரிய தனித்தன்மையாகவும் விளங்குகிறது. தலைவன், தலைவி சந்தித்தல், களவு கொள்ளுதல், களவு கற்பு நிலையை அடைய உதவும் தோழியின் பாங்கு, அதற்காக அறத்தொடு நிற்கும் தன்மை உருவாகிறது. அறத்தொடு நிற்றல் என்பது யார் யாருக்கு, எந்த சூழலில் நிகழ்கிறது அதன்வழி வாழ்க்கையின் பண்பாட்டு நெறிமுறைகளை நாகரிகத்தோடு தமிழன் வழங்கியிருக்கும் பாங்கினை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**களவு**

ஒத்த இயல்புகளுடைய தலைவனும், தலைவியும் பிறர் அறியாதவாறு கூடி இன்புறுவது கைகோள் புணர்ச்சியாகும். தலைவனும், தலைவியும் நேர்ப்படும்போது உடனே விருப்பம் தோன்றி விடுவதில்லை. தலைவன் ஒருதலையாக அவளை விரும்பி அவள் குறிப்பை ஆராய்வான். ஒத்த கருத்து ஏற்படின் இருவரும் யாரும் அறியா வண்ணம் கூடி மகிழ்வர். இதுவே களவு வாழ்க்கை, இதன்பின் கற்பு வாழ்க்கை தொடரும்.

இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தால் நடைபெறுவது, தலைவியால் நடைபெறுவது என இரு நிலையில் நிகழும்.

**“தெய்வம் தன்னில் எய்தவும் கிழத்தியின்**
**எய்தவும் படூஉம் இயற்கைப் புணர்ச்சி”** **(அகம் : 32)**

என்று நம்பியகப்பொருள் கூறுகிறது.

**தலைமக்கள் குணங்கள்**

**“பொருவு இறந்தோற்குப் பெருமையும் உரனும்**
**நண்ணுதற்கு அச்சமும் நாணும் மடனும்**
**மன்னிய குணங்கள் ஆதலின் முன்னம்”** **(அகம் :35)**

சிறப்பு மிக்க தலைமக்களாக விளங்கும் தலைவனுக்குப் பெருமையும், அறிவும் இயற்கையாக அமைந்த குணங்களாகவும், தலைவிக்கு அச்சமும் நாணும், மடனும் இயற்கையாக அமைந்த குணங்களாகவும் அகப்பொருள் கூறுகிறது. இதனையே தொல்காப்பியர்,

**பெருமையும் உரனும் ஆடூஉ மேன**

எனவும்,

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற் குரிய என்ப** **(தொல்.பொருள்.7,8)**

எனவும் தலைவன், தலைவியின் குணங்களைக் குறிப்பிடுகின்றார்.

**களவுப்புணர்ச்சி நிகழும் இடம்**

ஒத்த அன்புடைய தலைமக்கள் பகலிலும், இரவிலும் சந்திக்க ஏற்ற இடத்தை தேர்ந்தெடுத்துத் தலைவி கூறுவது குறி எனப்படும். இவ்விடம்,

“பலவகைப்பட்ட மரங்களாலும் பொலிவுடைத்தாய்ப் புறத்தார் அகத்தாரைக் காண்பது அரிதாய், அகத்தார் புறத்தாரைக் காண்பது தெளிவாய்.....” (இறை.கள.18 உரை)

என, இவ்வாறு அமையும் குறியிடம் என்று இறையனார் களவியல் உரை குறிப்பிடுகின்றது.

இதனை, அகப்பொருள்

**“பகற்குறி இரவுக் குறியெனும் பான்மைய**

**புகற்சியின் அமைந்ததோர் புணர்ச்சிநிகழ் இடனே” (அகம்:37)**

என்கிறது.

**வரைவு நிகழும் காலம்**

களவொழுக்க காலத்தில் இரண்டு நிலையில் பிரிவு நிகழ்கிறது. ஒன்று ஓர் ஊருக்குள் அல்லது ஓர் நாட்டிற்குள் தலைவன் பிரிந்து இருத்தலாகும். மற்றொன்று திருமணம் குறித்த பின் அதன் பொருட்டுப் பொருள் ஈட்டக் காட்டையும், நாட்டையும் கடந்து செல்வதாகும். இந்த பிரிவு நிகழ்வதால் தலைவன், தலைவி திருமணம் களவு காலத்தில் உறுதி செய்யப்படுகிறது.

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்னும் நால்வகைச் சூழலால் தலைவியோடு கூடும் தலைவன், தானே தெளிவுற்று தலைவியை மணத்தலும், பாங்கன், பாங்கியின் அறிவுரைப்படி மணந்து கொள்ளுதல் என இரு நிலைகளில் களவு வெளிப்படுவதற்கு முன்னர் வரவு நிகழும்.

களவு வாழ்க்கை மற்றவர்களுக்குத் தெரியத் தொடங்கியபிறகு தலைவன் தலைவியைத் தன்னூருக்கு அழைத்துச் சென்று வரைதல்.

தலைவியைத் தன்னுடன் உடன்போக்காக அழைத்துச் சென்று மீண்டும் ஊருக்கு வந்து வரைதல்.

உடன்போக்கைத் தவிர்த்து உறவினர்களை அணுகி வரைதல் என மூவகையில் அமையும்.

**அறத்தொடு நிற்றல்**

தலைவனும், தலைவியும் களவு வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும்போது நிலைமையை எடுத்துக் கூறுதல் அறத்தொடு நிற்றல் எனப்படும்.

**“ஆற்று ஊறஞ்சினும் அவன்வரைவு மறுப்பினும்**

**வேற்றுவரைவு நேரினும் காப்புக்கை மிகினும்**

**ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே” (அகம்:47)**

என்கிறது அகப்பொருள். இதனை இறையனார் களவியல் உரை,

“அறம் என்பது தக்கது; தக்கதனைச் சொல்லி நிற்றல் ..... என்றவாறு அல்லதூஉம் பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு, கற்பின் தலை நிற்றல் என்பதூஉம்.” (இறை.கள.உரை:29)

களவொழுக்கத்திலேயே காலத்தை நீட்டிக்க முடியாத சூழல் வரும்போது தலைவியுடனான தன் உறவைக் கூறி அடுத்துக் கற்பு வாழ்க்கைக்குத் தலைவி வழிவகை செய்து கொள்வதே அறத்தொடு நிற்றலாகும்.

**அறத்தொடு நிற்பாரும் நெறியும்**

அறத்தொடு நிற்றல் தலைவியின் அடுத்த கட்ட கற்பு வாழ்க்கையை நோக்கிய தன்மையாகும்.

"தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்றல்
பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்
செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்
நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு
நிற்கும் என்ப நெறிஉணர்ந் தோரே." (அகம்:48)

இங்ஙனம் தலைவி தன்னுடைய தோழியாகிய பாங்கிக்கும், பாங்கி தலைவியின் நிலையை செவிலிக்கும், செவிலி நற்றாயிடமும், நற்றாய் தலைவியின் தந்தை, உடன் பிறந்தோர்க்கும் எனக் கூறி அறத்தொடு நிற்பர்.

தலைவியின் காதல் நிலையை ஒவ்வொருவரிடமும் தெரிவிக்கும் தன்மை அவர்களின் வாழ்க்கை நெறிமுறைகளை எடுத்துக்காட்டுகிறது.

**தலைமகள் அறத்தொடு நிற்றல்**

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் என்னும் நிலையில் ஏற்பட்ட நிகழ்வுகள் பாங்கியாகிய தோழிக்குத் தெரியாதாகையால் தலைவி, தோழியிடம் தன் நிலைமையைக் கூறி அறத்தொடு நிற்கிறாள்.

"ஒருபுணர்வு ஒழிந்தவற்று ஒருவழித் தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரியவும்
இறைவனைச் செவிலி குறிவயின் காணவும்
மனைவயின் செறிப்பவும் வருத்தம் கூறின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணும்
அனநடைக் கிழத்தி அறத்தொடு நிற்கும்" (அகம்:49)

என்று தலைவி தான் எத்தகைய சூழலில் தோழியிடம் அறத்தொடு நிற்கக் கூடிய நிலை ஏற்படுகிறது என்பதனை விளக்குவதாக மேற்கண்ட பாடல் அமைந்துள்ளது.

அதாவது, ஒருவழித் தணத்தல் என்னும் சில நாட்கள் தலைவனை பிரிந்திருக்கும் போது, பொருள் தேடத் தலைவன் பிரிந்து சென்ற போது, தலைவனும், தலைவியும் பகற்குறி, இரவுக்குறியில் சந்தித்ததை செவிலி கண்ட போது, இல்லத்தில் தலைவி வெளியே செல்ல முடியாமல் காவல் மிகும்போது என இன்ன காரணங்களால் தலைவி தோழியிடம் அறத்தொடு நிற்பதாகக் கூறியுள்ளனர்.

இதனையே,

"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறும் காலமும் உளவே."

எங்கிறார் தொல்காப்பியர்.

**பாங்கி அறத்தொடு நிற்றல்**

சேடி, இணங்கி, துணைவி, இருளை, சகி, சிலதி என்னும் பெயர்களால் அழைக்கப்படும் பாங்கி, தலைவிக்காக செவிலியிடம் அறத்தொடு நிற்கும் சூழல் ஏற்படுகிறது.

**"முன்னிலைப் புறமொழி முன்னிலை மொழிகளில்**
**சின்மொழிப் பாங்கி செவிலிக்கு உணர்த்தும்" (அகம்:50)**

என்று, தலைவியின் களவொழுக்கத்தைப் பற்றி பிறர் நேரடியாகச் சொல்லாமல், புறங்கூறும் காலத்திலும், நேரடியாக களவொழுக்கத்தைப் பற்றி கூறும் காலத்திலும் தோழி அறத்தொடு நிற்பதாகக் கூறுகிறார் நம்பி.

**செவிலி அறத்தொடு நிற்றல்**

"**செவிலிநற் றாய்க்குக் கவலையின்று உணர்த்தும்" (அகம்:51)**

அதாவது, தோழிவழி அறிந்த தலைவி பற்றிய களவொழுக்கச் செய்திகளைச் செவிலி நற்றாய்க்குக் கூறி அறத்தொடு நிற்பதாக கூறப்பட்டுள்ளது.

**நற்றாய் அறத்தொடு நிற்றல்**

செவிலி கூற்றின் வழித் தலைவியின் களவொழுக்கத்தை அறிந்த நற்றாய் இல்லத்தலைவனுக்கும் தலைவியின் தமையன்மார்க்கும் கூறி அறத்தொடு நிற்பாள்.

**"நற்றாய் அறத்தொடு நிற்குங் காலைக்**
**குரவனும் தன்னையும் குறிப்பின் உணர்ப" (அகம்:52)**

தலைவியின் களவொழுக்கச் செய்தி பலவழிகளில் வருமாயினும் தந்தை, தமையன்மார்களிடம் செல்லும்போது ஒரு படி நிலையோடு செல்வதனை அறியமுடிகிறது.

பல்வேறு காரணங்களால் தலைவி தலைவனுடைய களவு வாழ்க்கை வெளிப்பட்டு நின்றுவிடுகிறது. இத்தகைய சூழலில் தலைவியின் உடல் மெலிதல், பசலை படர்தல் போன்ற வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இதனைக் கண்ட பாங்கி தலைவியிடம் வினவுவாள். செவிலியும், நற்றாயும் பாங்கியிடம் வினவுவர்.

களவு வாழ்வில் ஈடுபட்ட தலைவனும், தலைவியும் கற்பு வாழ்க்கைக்குப் புக எண்ணும்போது உடன் போக்கில் ஈடுபடுவர். இதைத் தெரிவிக்கவே பாங்கி, செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தை, தமையன்மாகளுக்கும் என முறையாகக் கூறி அறத்தொடு நிற்பதாக அகப்பொருள் விளக்கம் தருகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. அகப்பொருள் விளக்கம் – நாற்கவிராச நம்பி, உரை-முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ், இயல் வெளியீடு, ஏழாம் பதிப்பு 2020.
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் – தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2010
3. இறையனார் களவியல் – கா.நமச்சிவாய முதலியார், சி.ஆர்.என் & சன்ஸ், சென்னை,1943.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and. Anandhi K, (2021), Lifestyle shown Agapporul, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:234-337. Cauvery College For Women, Trichy.

**முனைவர் தி. மணிமொழி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி – 620 018.

# குறுந்தொகையில் இயற்கை

**ஆய்வுச் சுருக்கம்**

உலகம் நிலம், நீர், தீ, வளி, வான்வெளி ஆகிய ஐம் பூதங்களால் ஆனது. இயற்கை பல்வேறு வடிவங்களாய் பரிணமித்துள்ளது. மலை, காடு, ஆறு, சமவெளி, கடல், மணல்வெளி என்றெல்லாம் பரந்து விரிந்து இப்புவிப்பரப்பு அமைந்துள்ளது. பழந்தமிழர் இயற்கையின் புரிதலோடு வாழ்வினை மேற்கொண்டனர். இடங்களுக்கேற்ப நிலங்களைப் பெயரிட்டு அழைத்தனர். இயற்கையான மரம், செடி, கொடி, மலை, மலர், பறவை, விலங்கு, போன்றவற்றை புலவர்கள் தம் பாடல்களில் நன்கு பதிவுசெய்துள்ளனர். அவ்வாறு பதிவானதன் வாயிலாக புலவர்கள் வெளிப்படுத்தும் நிலைப்பாடுகளையும் தன்மைகளையும் சூழல்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

ஆதிகாலம் முதல் இன்றுவரை மனித வாழ்வோடு இயற்கையானது தவிர்க்கவியலாத இணக்கமான உறவைக்கொண்டு திகழ்கிறது. மனித குல வரலாறு என்பது இயற்கையை மையமாகக் கொண்டே இயங்கி வருகிறது எனலாம். இயற்கையை இன்றளவும் வரையறைக்குள் அடக்கிவிட முடியாதவாறு எல்லையற்ற ஆற்றலுடையதாக விளங்கிவருகிறது. இயற்கை மனிதனுடைய வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. இயற்கையின் இன்றியமையாத நிலையை நம் இலக்கியங்கள் நன்கு பதிவு செய்துள்ளன. மனிதனைச் சுற்றியுள்ள இயற்கைப் பொருட்கள் அவனைச் சிந்திக்கச் செய்திருக்கின்றன. அச்சிந்தனைகளின் வெளிப்பாடு இலக்கியங்களாக உருவாகியிருக்கின்றன. இயற்கையின் அழகை வெளிப்படுத்தவும் தம் உணர்ச்சிகளைக் காட்டவும் பல அரிய செய்திகளை வெளிக்கொணரவும் , தம்முடைய கருத்துக்கு ஒரு பின்னணி அமைக்கவும் புலவர்கள் தங்கள் இலக்கியங்களில் சங்ககாலம் முதல் இன்றுவரை இயற்கையை இனணத்துப் பாடியுள்ளனர். அவ்வகையில் சங்க இலக்கியமான குறுந்தொகையில் புலவர்கள் தமிழர்களின் அடையாளங்களில் ஒன்றாகிய இயற்கையை இனணத்துப் பாடியுள்ளமையை இக்கட்டுரை விளக்குகிறது.

**இயற்கையோடு இயைந்த வாழ்க்கை**

மனிதனின் காதல் உணர்வுகளுக்கு மிகச் சிறந்த பின்னணியாக அமைவது இயற்கைக் காட்சியாகும். அவ்வகையில் சங்கப்புலவர்கள் ஐந்து நிலக்காட்சிகளையும் சிறப்பாகப் பாடியுள்ளனர். இருப்பினும் அவற்றைக் காதலுக்கு ஏற்ற அரங்கு என்ற அளவோடு நில்லாமல் தலைவன் தலைவியர் அகத்தே தோன்றும் திளைப்பையும் இயற்கைக் காட்சிகளில் கண்டார்கள். சூழ்ந்துள்ள இயற்கையெல்லாம் அவர்களோடு ஒன்றிவிட்டதாக உணர்ந்தார்கள். தலைவன் தலைவரின் உள்ளத்து உணர்வுகளை இயற்கை உணர்ந்து ஒன்றிவிட்டது போல் அவர்கள் உணர்ந்தார்கள். அவ்வாறு உணர்ந்தபோது இயற்கையும் மகிழ்ந்தது.அவர்கள் துன்பப்படும் போது இயற்கையும் துவண்டது என்றனர். இயற்கைப் பொருள்களுக்கு உயிரும் உணர்வும் கொடுத்துப் பாடுவதுண்டு. இதுபோன்ற பாடல்களில் உள்ளத்துணர்வின் ஆழமும், அதனோடு தொடர்புடைய நம்பிக்கையின் உறுதிப்பாடும் புலப்படும். மேலும் மனித உணர்வின் மறுபதிப்பாகவே இயற்கை தமிழ் இலக்கியங்களில் வருணிக்கப்படுகிறது.

**பழந்தமிழரின் திணை ஒழுக்கம்**

உலகம் தோன்றிய பிறகு உயிர்கள் தோன்றின. தோன்றிய உயிர்களில் தொன்மையான இனம் தமிழ் இனம். இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொண்டுள்ளது. தாவரங்களை தன்னுடைய இனமாகவும் பிற உயிர்களை தமக்கு இணையாக கருதி செயல்பட்டும், இயற்கைக்கு எதிராக ஒருபோதும் செயல்படாத பழந்தமிழரின் வாழ்வியலை இலக்கியங்களின் வழியாக அறியலாம். இயற்கையோடு அமைந்த நிலத்தினை அதற்குரிய இயல்பிற்கு ஏற்ப பகுத்து அந்தந்த சூழலுக்கு ஏற்ப பெயரிட்டும் தொழில் புரிந்தும் தமிழர் தம் வாழ்வினை மேற்கொண்டனர்.

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே”**[1]

என்ற நூற்பாவின் வழியாக மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சியாகவும் காடும் காடு சார்ந்த பகுதியும் முல்லையாகவும் வயலும் வயல் சார்ந்த பகுதியும் மருதமாகவும் கடலும் கடல் சார்ந்த பகுதியில் நெய்தலாகவும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

**மலர்களின் வண்ணமும் மணமும்**

இயற்கையின் இயக்கத்தால் தான் இவ்வுலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஐம்பூதங்களில் முதலாக அமைவது நிலமாகும். நிலமே உயிர்களின் வாழ்வாதாரமாகும். “இயற்கை என்பது இயல்பான பொருள் தன்மை உடையது. மனித சக்தியால் அன்று உலகில் தானே தோன்றிய பொருட்கள் அனைத்தும் இயற்கை எனப்படும்”[2] மரம் செடி கொடி பறவை விலங்கு ஆகிவற்றை அக வாழ்க்கையோடு தொடர்பு படுத்தி புலவர்கள் காட்சிப்படுத்தி உள்ளனர். “தாவரங்களின் முக்கிய உறுப்பு பூ ஆகும். பூ இல்லை என்றால் தாவர இனப்பெருக்கம் இல்லை”[3] “பூக்கள் இயற்கையின் ராகங்கள், பூமாலை அந்த ராகங்களால் உருவான பாடல். பூமாலை மேல் நாட்டவருக்கு வராத கலை. தமிழர்களின் பூச்செண்டு அயலவரின் பூச்செண்டினும் கலைநயம் மிக்கது. தமிழர்களின் மலர் அறிவியல் மகத்தானது.”[4]

**“மன்ற வேங்கை மலர் பதம் நோக்கி**

**ஏறாது இட்ட ஏமப் பூசல் “**[5]

என்ற பாடலில் இடைச்சிறுவர்கள் மன்றத்தில் உள்ள வேங்கை மரத்தின் கீழிருந்து அதன் மீது ஏறி உதிர்க்காமலே வேங்கை மலர்கள் உதிர்வதாகக் கூறப்பட்டுள்ளது. இது மலர்களால் பூமியை அலங்கரிப்பது வண்ண ஓவியமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**“கருங்கால் வேங்கை வீஉகு துறுக்கல்**

**இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை”**[6]

வலிய தாளையுடைய வேங்கை மரத்தின் பூக்கள் உதிர்ந்து கிடக்கின்ற குண்டுப்பாறையானது, பெரும் புலிக்குட்டியைப் போல தோன்றுகிறது

**“ஆங்கு அறிந்திசினே தோழி வேங்கை**
**வீயா மென்சினை வீயுகயானை**
**ஆர்துயில் இயம்பும் நாடன் “**[7]

என்ற பாடலில் ‘வேங்கையது, வீழாத மென் கிளையிலிருந்து மலர்கள் உதிர்ந்து கிடக்கும். அவ்விடத்தில் யானை அரிதான துயிலைக் கொள்ளும். அவ்யானையது உயிர்ப்பொலியானது யாண்டும் ஒலிக்கும். அப்படி ஒலிக்கின்ற நாட்டினன் நம் தலைவன்’ என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள். இவ்வாறு ஒவ்வொரு பாடலிலும்

இயற்கையை மட்டும் கூறாது மனித வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையையும் இணைத்து தமிழர்களின் அடையாளங்களையும் தம் பாடலில் நுட்பமாக புலவர்கள் கூறியுள்ளனர்.

**பலாவின் தோற்றம்**

முடி மன்னர்களும் சிற்றரசர்களும் மிகுந்த கவனத்தோடு தமது அரண்மனையின் முன்றிலில் ஒரு மரத்தை வைத்து போற்றி வந்தனர். அது ஒரு தோற்றச் சின்னம். அது மிகப் பண்டைக் காலத்திலிருந்து ஆளும் குடியோடு சேர்ந்து எண்ணப்படுவது. அக்கால மன்னர்களும் அதன் தோற்றம் பற்றியும் அது ஏன் தமது குலம், குடும்பம் என்பவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்பதைப் பற்றியும் தெரியாத அளவிற்கு அம்மரபு புராதனமானது. அம்மரம் அவ்வூரைக் காக்கும் காவல் மரம் எனப்பட்டது. இவ்வாறாக மரங்களில் தமிழ்ச் சமூகத்தின் மிகுந்த முக்கியத்துவம் தரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.”[8] குறிஞ்சி நிலப்பகுதியில் மிகுதியாக காணப்படும் பலாவின் தோற்றத்தை பலவாறு கூறியுள்ளார்.

**“வேரல் வேலி வேர்க்கோட் பலவின்**

**சாரல் நாட செவ்வியை ஆகுமதி**

**யார அஃது அறிந்திசினோரே - சாரல்**

**சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்**

**உயிர் தவச்சிறிது காமமோ பெரிதே”[9]**

என்ற பாடலில் மூங்கிலை வேலியாக உடைய வேரில் பல குலைகளையுடைய பலா மரங்கள் செறிந்த மலைப்பகுதி தலைவனின் நாடுஎன்று தோழி கூறுவதாக கபிலர் பாடியுள்ளார். தலைவனின் மலையில் வளர்ந்துள்ள பலாவின் சிறிய கொம்பில் பெரிய பழம் தன்னைத் தாங்கும், எவ்வகை பற்றுக்கோடுமின்றி தொங்குவது போல இத்தலைவியின் உயிர் கொம்பு போல சிறியதாக உள்ளது. அதன் கண்விளங்கும் காமநோயோ மிகவும் பெரியதாக உள்ளது. இதில் உள்ளீடான பொருளில் பலாப்பழம் தன் அளவின்றி மேலும் முதிர்ந்தால் தன்னை தாக்கியுள்ள கிளையையும் முறித்து கீழே விழுந்து பயன்படாது ஒழியும் அதுபோல தலையின் காமம் மிகுதியாயின் தங்களுக்கு பயன்படாமல் அவள் உயிரைக் எடுத்து ஒழியும் என்பது பொருள். பலாவின் தன்மையோடு தலைவியின் வருத்தத்தையும் இணைந்து பாடியுள்ளார் கபிலர். இயற்கையின் ஒவ்வொரு தன்மையையும் குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையோடு இணைத்துப் பாடியுள்ளார். தமிழர்களின் அடையாளமான இயற்கை இப்பாடலில் வெளிப்படுவதை அறியமுடிகிறது.

**அசையும் மூங்கில்**

**அமை, கழை, பணை, உந்தூழ், வெதிர், வேய்** என்னும் சொற்கள் சங்க நூல்களில் மூங்கிலை குறிப்பிடுகின்றன. மூங்கில் புல் வகையைச் சார்ந்ததாகும். ஆதலால் மலைப்பகுதிகளில் மூங்கிலானது ஓங்கி வளர்ந்து அங்குள்ள உயிர்களுக்கு உணவாகவும் அமைகிறது .

**“இரு வெதிர் நீடு அமை தயங்கப் பாயும்**

**பெருவரை அடுக்கத்துக் கிழவோன் ” [10]**

மலைச்சாரலில் பெரிய மூங்கிலின் கொம்பில் குரங்கு கூட்டம், போர்க்களத்தில் வேடுவனின் அம்புக்கு பயந்து குதிரைகள் குதிப்பது போல எழுந்து பாயும் என்று தலைவி குறிப்பிடுகிறாள். அக வாழ்வின் நிலைகளைக் குறிப்பிடும் போது நேரடியாக செய்திகளைக் கூறாமல் உவமையாக உள்ளுறையாக இறைச்சியாக அமைவதுண்டு. இது போன்ற காட்சிகள் அக வாழ்வின் நிலைகளை விளக்குகின்றன.

**மலையில் படரும் மிளகு**

"தாவரங்கள் மனிதன் வெளியிடும் கரிய வளியை ஏற்றுக்கொண்டு மாந்தர்க்கு வேண்டிய உயிர் வளியை வெளியேறுகின்றன. மனிதனும் தாவரமும் இந்த அடிப்படையிலேயே பிணைப்புக் கொண்டியங்குவதைக் காணலாம். ஆகவே பழந்தமிழர்கள் மரங்கள் அளப்பரிய கொடையாகிய மூச்சுக்காற்றை வழங்கியதால் தமிழர்கள் மரங்களை நேசித்தார்கள்."[11] மலைப்பகுதியில் படரும் செடிகளுள் மிளகும் ஒன்று. அதனை கபிலர் தம் பாடலில் கூறியுள்ளார்.

"கறிவளர் அடுக்கத்து ஆங்கண் முறிஅருந்து

குரங்கு ஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்"[12]

மிளகுக்கொடி வளர்கின்ற மலைப்பக்கத்தில் தளிரை அருந்துகின்ற தன்மைக் கொண்ட குரங்குகள் பலவும் ஒருங்கே திரண்டு இருக்கும் மலை நாட்டைச் சேர்ந்த தலைவன் என்று தோழியிடம் தலைவி கூறுகின்றாள்.

மலையின் பேரொலி

மலையில் எதிரொலி தோன்றுவது இயற்கையின் விளைவு. பரந்துபட்ட நிலையில் மலையிடந்தோறும் ஒலி நில்லாது கேட்டுக்கொண்டே இருக்கும். அருவியின் ஒலி, விலங்குகளின் பூசல் ஒலி, திணைக் காப்போர் ஒலி முதலியன மலையிடத்து யாண்டும் கேட்கப் பெறுவனவாகும்.

**"கல்லென் கானத்து கடமா ஆட்டி**

**எல்லும் எல்லின்று ஞமலியும் இளைத்தன"[13]**

கல்லென்னும் ஆரவாரத்தை உடைய காட்டுப்பகுதி என்று குட்டுவன் கண்ணன் தம் பாடலில் குறிஞ்சி நிலத்தை குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் மலைப்பகுதி ஆரவாரம் உடையது என்பதை அறியமுடிகிறது.

**துகிலாய் தோன்றிய வெள்ளருவி**

மலையிலிருந்து அழகு ஒழுக ஓடிவரும் அருவி காட்சியை கோவேங்கைப் பெருங்கதவன் குறிப்பிட்டுள்ளார். அருவியின் தோற்றம், ஓடிவரும் அருவி எழுப்பும் ஒலி முதலியவற்றை அழகுபட கண்டு தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**"குறும்பொறை தடைஇய நெடுந்தாள் வேங்கை**

**பூவுடை அலங்குசினை புலம்பத் தாக்கிக்**

**கல்பொருது இரங்கும் கதல்வீழ் அருவி "[14]**

இதில் பருத்து வளர்ந்த அடியை உடைய வேங்கை மரத்தினது, பூக்களை உடையதாய் அசையும் கிளைகள், பூக்களற்றவையாய் தனித்துப் போகும்படியாக தூக்கிக் கற்களை ஒலியோடு விரைந்து விழும் அருவி என்று அருவியின் தன்மை கூறப்பட்டுள்ளது .

**"வரையின் தாழ்ந்த வால்வெள் அருவி"[15]**

மலையிடத்தே நின்றும் தாழ்ந்து வீழ்கின்ற தூய வெண்மையான அருவி என்று மிளை வேள் தித்தன் பாடியுள்ளார்.

**"மால்வரை இழிதரும் தூவெள்அருவி**

**கல் முகை ததும்பும் பல்மலர் சாரல்"[16]**

பெரியமலை இடத்திலிருந்து தூய வெண்மை நிறத்தை உடைய அருவிகள் விழும். அவை, பாறைகளின் வெடிப்புகளில் பட்டு ஒலிக்கின்றது .பல மலர்களை உடைய மலைப்பகுதியில் அருவி ஒலிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக அருவியின் ஒலியானது பல்வேறு ஒலிகளை கொண்டிருப்பதாக இயற்கையினை கபிலர் நன்கு காட்சிப்படுத்தியுள்ளார்.

**அச்சம் தரும் கூகை**

இன்று நாம் ஆந்தை என்று கூறும் பறவையே சங்க காலத்தில் நம் முன்னோர்கள் கூகை என்று அழைத்தனர். கூகையானது மரப்பொந்துகளிலும், கற்குகைகளிலும் இடிந்த கட்டடங்களிலும் காணப்படும். இது குறிஞ்சி நிலத்தின் ஒரு பறவையாகும். குறிஞ்சி நிலத்தில் உள்ள கூகையை கபிலர் குன்றக் கூகை என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

**" குன்றக் கூகை குழறினும் முன்றிற்**

**பலவின் இருஞ்சினைக் கலை பாய்ந்து உகளினும்**

**அஞ்சும்மன் அளித்து -என் நெஞ்சம் இனியே"[17]**

முன்பெல்லாம் குன்றின்கண் வாழும் கூகை, தன்னுடைய பெடையைக் கூவி அழைத்தாலும் முன்றிலில் உள்ள பலா மரத்தின் பெரிய இலைகளில் ஆண் குரங்கு தாவி விளையாடினாலும் என் நெஞ்சு அச்சத்தை அடையும் என தலைவி தலைவனை நினைத்து அஞ்சி தன் கருத்தை தன் தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இதில் கூகை குழறுவது அச்சம் தரும் காரியம் நடக்கப் போகிறது என்ற நம்பிக்கை குறிஞ்சிநில மக்களிடம் உள்ள நம்பிக்கையாகும். கிளியும் ஒரு பறவைதான் ஆனால் அதை தூது செல்லும் நல்ல செயலுக்கு பயன்படுத்துவதும், ஆந்தை தீய சகுனத்தைக் கூறுவதாக எடுத்துக் கொள்வதும் பண்டைய தமிழர்களிடையே இருந்து வரும் வழக்கமாகும்.

இன்றும் இந்த நம்பிக்கை மக்களிடையே உள்ளது. இவ்வாறாக பறவைகளின் செயல்பாடுகளை மனித வாழ்க்கையோடு ஒன்றிணைத்து இயற்கை சூழலை குறிப்பிட்டுள்ளனர்.

**நடனமாடும் மயில்**

மயில், தோகையை விரித்து ஆடி மலைப் பகுதிகளுக்கு அழகூட்டுவதை சங்கப் புலவர்கள் தம் பாடல்களில் குறித்துள்ளனர். மயில் தன் நீண்ட தோகையுடன் மரத்தின் மீது அமர்ந்த காட்சி கபிலரை ஈர்த்திருக்கிறது. மாமரத்திலும், வேங்கை மரத்திலும், பலா மரத்திலும் அமர்ந்து அழகுடன் தோன்றும் காட்சி பூக்களை கொய்ய வந்த மகளிர் போல காணப்பட்டதாகவும் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**"கலிமழை கெழீஇய கான்யாற்று இகுகரை**

**ஒலிநெடும் பீலி துயல் வர இயலி**

**ஆடுமயில் அகவும் நாடன் நம்மோடு**

**நயந்தனன் கொண்ட கேண்மை"[18]**

என்ற பாடலில் ஆரவாரத்தோடு பெய்கின்ற மழை பொருந்திய காட்டாற்றில் வெள்ளம் பாய்கிறது. அலை மோதும் கரைகளின் மேல், தழைத்து நீண்ட தோகை அசையும் படி நடந்து ஆடுகின்ற மயில்கள் அகவுதலைச் செய்யும் அந்நாட்டை உடைய தலைவன் தம்மோடு விருப்பம் உடையவனாக கொண்ட நட்பானது நாம் பசலையை அடைந்தாலும் அந்த பசலையோடு நட்பானது பொருந்திராது. தன் நெஞ்சம் தலைவன் கொண்ட நட்பை உறுதியாக எண்ணி இருத்தலினாலே அறிந்து இருப்பேன் என்று தலைவி குறிப்பிடுகிறாள்.

**"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**

**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"[19]**

என்ற குறளில் தலைவியை மயிலோ என கூறும் போக்கு காட்டப்பட்டுள்ளது.

**தேன் உண்ணும் வண்டு**

சங்க இலக்கியங்களில் பறவைகள் மற்றும் விலங்குகள் பற்றிய செய்திகள் காணப்படுவது போல் வண்டு பற்றிய செய்திகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

பொதுவாக, இவை தலைவியின் அழகினை வருணிப்பதாகவோ அல்லது தலைவனது ஊரின் சிறப்பினைக் கூறுவதாகவோ பாடப்பட்டுள்ளன.

வண்டுகள் உருவில் சிறியவை ஆயினும் புலவர்கள் பார்வையில் விரிந்த காட்சியை தந்துள்ளதை சங்கப் புலவர்களின் பாடல்களில் காணலாம். பறவைகளின் அன்றாட வாழ்வில் காணும் நிகழ்ச்சிகளை செறிவுடன் கபிலர் எடுத்துக் கூறியுள்ளார். குறுந்தொகையில் வண்டுகள் தேன் உண்ணும் நிலையினை,

**"குண்டு நீர்ப் பைஞ்சுனை பூத்த குவளை**

**வண்டுபயில் பல்இதழ் கலைஇத்**

**தண்துளிக்கு ஏற்ற மலர் போன்றவ்வே"[20]**

இதில் கிளி தினைப்புனத்திலிருந்து ஓடாமல் திரும்பத் திரும்ப வருவதை கண்டு தலைவி அழுகிறாள் .அந்த காட்சி எவ்வாறு இருந்து எனில், அவள் கண்கள் ஆழமான, பசுமையான சுனையில் பூத்த குவளை மலரை வண்டுகள் கலைத்து தேன் உண்ண இயன்ற நிலையில் துளிகளோடு அம்மலர்கள் தோற்றமளித்தன. அம்மலர்களைப் போன்று அவள் அழுத கண்கள் இருந்தன என்று இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

**இரக்கமில்லா குருகு**

"ஒரு உயிர் நிலை வேறு ஒரு உயர் நிலையை தாங்குகிறது. உணவானது ஒரு உண்ணும் நிலையில் இருந்து வேறு உண்ணும் நிலையை சென்றடைந்து ஒரு சங்கிலித் தொடரை உருவாக்குகிறது. இதுவே உணவுச்சங்கிலி என்கிறது சுற்றுச்சூழல் அறிவியல்".[21] இவை உயிரியக்கங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்திட அடிப்படையான ஒன்றாகும். இந்த உயிரின இயக்கத்தை கவிஞர் இயற்கை வருணனைகளுடன் காட்சிப்படுத்தியுள்ளார்.

**"தினை தாள் அன்ன சிறு பசுங்காஅல**

**ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்**

**குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே"[22]**

இதில் குருகின் கால் தினைத்தாளொடு உவமித்து சிறிய பசுமையான கால்களை உடைய குருகு, நீர் நிலையை விட்டு பெயராது நின்றது என்றும் ,அது உணவிற்காக காத்திருந்தது என்றும் இயற்கை கபிலர் காட்சிப்படுத்தியுள்ளார். அந்த நாரை தன் உணவின் பொருட்டு ஆரல் மீனின் நோக்கிய வண்ணம் இருந்தது. கொலை செய்யக்கூடிய தன்மை உடைய குருகு என்று கூறக் காரணம் குருகு இரக்கமில்லாமல் மீனை கொன்று தன் பசியைப் போக்கிக் கொள்கிறது. சுயநலமாக தனது பசிக்காக மட்டுமே மீனை குறிபார்த்து இருந்த கொக்கு இரக்கமற்றது . இவ்வாறு பறவையினங்களில் ஒன்றாகிய குருகினம் இருந்தமையை இப்பாடலின் அறிய முடிகிறது.

**துள்ளி விளையாடும் மான்**

மலைப் பக்கங்களில் வாழைகள் செறிந்த இடத்தில் வருடை மான்கள் கூட்டமாகத் திரியும். மேட்டு நிலத்தில் மிகவும் விரைவாக ஓடக் கூடிய ஆற்றல் உண்டு. மலைமிசை வருடை குதித்துப் பாயும் இயல்பினையுடையதாகும். மானின் செயல்பாடுகள் இந்த பாடலில் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**"செவ்வரைக் சேக்கை வருடைமான் மறி**

**சுரை பொழி தீம்பால் ஆரமாந்தி**

**பெருவரை நீழல் உகளும் நாடன்" [23]**

இப்பாடலில் மலைப்பகுதியில் தங்கியிருக்கும் வருடை மானின் குட்டி, தன் தாயின் மடியில் பொழிந்த இனிய பாலை, வயிறு நிறைய குடித்து விட்டு, பெரிய

மலைப்பக்கத்தின் நிழலில் துள்ளி விளையாடும் என்று மானின் செயல்பாடுகளை கூறியுள்ளார்.

வலிமையான களிறு

சங்க நூல்களில் யானை பல இடங்களில் புலியுடன் பொருந்தியிருக்கும் பாங்கு சொல்லப்படுகிறது.

**" பொருகளிறு மிதித்த நெரி தாள் வேங்கை**

**குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்**

**நின்று கொய மலரும் நாடனொடு "[24]**

என்ற பாடலில் புலியோடு போரிட்ட ஆண் யானை சினம் தணியாமல் வேங்கை மரத்தை சிதைத்ததால் மரமானது சற்று சாய்ந்தது. அதனால் குறவர் மகளிர் தங்கள் கூந்தலில் அழகு செய்வதற்கு மலர்களை நின்றபடியே பறிக்கும் அளவிற்கு வேங்கை மரம் சாய்ந்திருந்த நிலை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் குறிஞ்சிநில மகளிர் வேங்கை பூக்களை பறிப்பதற்கு யானை உதவியதை அறியமுடிகிறது.

**பொன்போன்ற ஆவாரம் பூ**

மலர் பண்பாடு தமிழ்ச் சமூகத்தில் காலங்காலமாக இருந்து வரும் நடைமுறையாகும். தலைவன், தோழியின் உதவியால் தலைவியை அடைய விரும்பும்போது, தனக்கு உதவ மறுக்கிறாள் தோழி, அப்போது தனது மடலேறும் முடிவினை கூறுகிறான் தலைவன்.

**"பொன்நேர் ஆவிரை புதுமலர் மிடைந்த**

**பல்நூல் மாலைப் பனைபடு கலிமாப்**

**பூண்மணி கறங்க ஏறி நாண்அட்டு**

**பழிபடர் உள்நோய் வழிவழி சிறப்ப" [25]**

பொன்னையொத்த ஆவிரையின் புதுப் பூக்களை நெருங்க கட்டிய பலவாகிய நூல்களையுடைய மாலைகளை அணிந்த பனங்கருக்கால் அமைக்கப்பட்ட குதிரையில் ஏறியவனாக மடலேறுதல் செய்வேன் என்று தலைவன் தோழியிடம் கூறுகின்றான். மடலேறும் போது தலைவன் ஆவாரம்பூ அணிந்திருந்த செய்தியை இதன் வழி அறிய முடிகிறது.

**கடல்**

தலைவி தன் வருத்தத்தை கடலிடம் கூறுகிறாள் நள்ளிரவில் துயில் பெறாது வருந்தி கடலிடம் பேசுவதாக நெய்தல் திணையில் அம்மூவனார் கூறியுள்ளார்.

"யார் அணங்குற்றனை கடலே பூழியர்

சிறுதலை வெள்ளை தோடு பரந்தன்ன

மீன்ஆர் குருகின் கானல் அம் பெருந்துறை" [26]

இப்பாடலில் என் புலம்பலுக்குத் தலைவன் காரணம். உன் புலம்பலுக்கு யார் காரணம் என தலைவி கடலைப் பார்த்துக் கேட்கிறாள். தம் வருத்தத்தை இயற்கையான கடலிடம் கூறியதை காணமுடிகிறது.

**முடிவுரை**

பழந்தமிழர் இயற்கையுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்ததற்கான சான்றுகளை சங்க இலக்கியங்கள் பகிர்கின்றன. மனிதன் இல்லாமல் இயற்கை இயங்க இயலும். இயற்கை இல்லாமல் மனிதன் வாழ்வது என்பது இயலாத ஒன்றாகும். மரங்கள் உயிர்களுக்குத் தேவையான உயிர்வளியை வழங்கி வருகிறது. உயிரினங்களின்

வாழ்வுக்கு இன்றியமையாத மரங்களை தன் உறவாக உயர்திணையில் சங்ககால மக்கள் எண்ணி இருக்கின்றனர். மேலும் மரங்கள், செடிகள், கொடிகள் ஆகியவற்றினை அதன் வடிவத்தில் புலவர்கள் தங்கள் பாடல்களில் கூறியுள்ளனர். பழந்தமிழர் தாவரங்களுக்கு அளித்துள்ள முக்கியத்துவத்தை உணரலாம். சூரியக் குடும்பத்தில் புவியில் மட்டும்தான் எண்ணற்ற உயிர்கள் வாழ்வதற்கான சூழல் அமைந்துள்ளது. எனவே அனைத்து உயிர்களும் இப்புவியில் வாழ்வதற்கான உரிமைகளை பெற்றுள்ளன அதனை உணர்ந்து பழந்தமிழர் பல்வேறு உயிரினங்களின் செயல்பாடுகளையும் குறிப்பிட்டுள்ளனர். தாவரங்கள் பறவைகள் விலங்குகள் வாயிலாக வாழ்விற்குத் தேவையான சிந்தனைகளைப் புகுத்த புலவர்கள் விழைந்துள்ளனர்.

தலைவன் தலைவியின் உள்ளத்து உணர்வுகளை இயற்கை உணர்ந்து விட்டதுபோல் புலவர்கள் தம் பாடலில் உணர்வுகளைக் காட்சிப்படுத்தி உள்ளனர். அவர்கள் மகிழ்ந்த போது இயற்கையும் மகிழ்ந்த்தாகவும், துயருற்ற போது இயற்கையும் துயருற்று துவண்டது போலவும் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். மனித வாழ்க்கையையும் இயற்கையும் பின்னிப் பிணைந்திருக்கும் நிகழ்வுகளை சங்க இலக்கியப் பாடல்கள் நன்கு பதிவு செய்துள்ளன என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம் – நூ.எண் – 951
2. வே.முத்துலக்குமி, இலக்கிய இலக்கிய இயற்கை, பக்.13
3. கு.வி.கிருஷ்ணமூர்த்தி, தமிழரும் தாவரமும், பக்.66
4. மாத்தளை சோமு, வியக்க வைக்கும் தமிழர் வாழ்வியல், பக்.207
5. குறுந்தொகை பா.241
6. குறுந்தொகை பா.47
7. குறுந்தொகை பா.247
8. ந.சுப்பிரமணியன், சங்க கால வாழ்வியல் பக்.172, 173
9. குறுந்தொகை பா.18
10. குறுந்தொகை பா.385
11. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் வியக்க வைக்கும் இயற்கை, பக்.294
12. குறுந்தொகை பா.288
13. குறுந்தொகை பா.179
14. குறுந்தொகை பா.134
15. குறுந்தொகை பா.284
16. குறுந்தொகை பா.95
17. குறுந்தொகை பா.153
18. குறுந்தொகை பா.264
19. திருக்குறள் கு.எண்.1081
20. குறுந்தொகை பா.291
21. கு.குமாரசாமி, அ.அழகப்பா மோசஸ் மு.வசந்தி, சுற்றுச்சூழல் அறிவியல், பக்.103
22. குறுந்தொகை பா.25
23. குறுந்தொகை பா.187
24. குறுந்தொகை பா.208
25. குறுந்தொகை பா.173
26. குறுந்தொகை பா.163

**துணைநூற்பட்டியல்**

நாகராசன் வி., (உரை) குறுந்தொகை (மூலமும் உரையும்)
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
சென்னை முதற்பதிப்பு – ஏப்ரல்2004

| | |
|---|---|
| இளம்பூரணர் (உரை) | தொல்காப்பியம் (பொருளதிகாரம்)<br>திருநெல்வேலி தென்னிந்திய சைவ<br>சித்தாந்த நூற்பதிப்பு கழகம் (பி) லிட்<br>சென்னை முதற்பதிப்பு - 1978 |
| முத்துலக்குமி வே., | இலக்கியத்தில் இயற்கை<br>அனுராதா பதிப்பகம்<br>திருச்சிராப்பள்ளி<br>முதற்பதிப்பு டிசம்பர்2009 |
| கிருஷ்ணமூர்த்தி கு.வி., | தமிழரும் தாவரமும்<br>பாரதிதாசன் பல்கலைக்கழகம்<br>பல்கலைப் பேரூர்<br>திருச்சி முதற்பதிப்பு 2007 |
| மாத்தளை சோமு | வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்<br>உதகம் எண்.பி.5<br>ஐந்தாவது முதன்மைச் சாலை<br>இராமலிங்க நகர், உறையூர் திருச்சி<br>முதற்பதிப்பு 2005 |
| வரதராசன் மு., | பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை<br>பாரி நிலையம் சென்னை<br>மறுபதிப்பு 2011 |
| குமாரசாமி கு., | சுற்றுசூழல் அறிவியல்<br>பாரதிதாசன் பல்கலைக்கழகம்<br>பல்கலைப் பேரூர்<br>திருச்சி முதற்பதிப்பு 2005 |


**Cite this book Chapter:** S. Ramalakshmi and Manimozhi T., (2021) Nature in Kurunthogai, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:238-246. Cauvery College For Women, Trichy.

**முனைவர் இரா.பபித்ரா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி -2

# அக இலக்கிய மரபுகளும் நாட்டுப்புறக் காதல் பாடல்களும்

**ஆய்வுச்சுருக்கம்**

உலக உயிர்கள் அனைத்திற்கும் பொதுவானது காதல். உயிர் வளர்ச்சிக்கும் உலகத்தின் இயக்கத்திற்கும் துணையாக இருப்பதும் இக்காதல் வாழ்வுதான், உலக நாகரிகம் மற்றும்; பண்பாடு ஆகியவற்றின் சிறப்பிற்கும் உயர்விற்கும் அடிப்படையானதும் இக்காதல் வாழ்வுதான். தனி மனித வாழ்வு குடும்ப வாழ்வாக மலர்ச்சியடைவதும் சமுதாய வாழ்வாக உருப்பெறுவதும் காதலால்தான். காதல் பற்றிய பாடல்கள் அக இலக்கியத்தில் எண்ணற்றவை. அங்ஙனமே நாட்டுப்புற இலக்கியத்திலும் அதன் பங்கு மிகுதி அக இலக்கிய மரபுகளோடு ஒத்த நாட்டுப்புற காதல் பாடல்களை ஆராய்வதே இவ்வாய்வின் சுருக்கமாகும்

**அகத்திணை மரபுகள்**

தமிழ் இலக்கியத்தின் நீண்ட நெடிய அகப்பாடல் மரபுத்தொடர்ச்சி இருந்தாலும் அகப்பாடல் மரபுகளைக் கட்டமைப்பதில் சங்க அகப்பாடல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் மிகப்பெரிய பங்களிப்பு உண்டு. ஆயினும் தொல்காப்பியம் வரையறுக்கும் சில மரபுகள் சங்க இலக்கியங்களில் பொருந்தி வரவில்லை. சங்க இலக்கியங்கள் முழுமைக்குமான பொதுவான அகத்திணை மரபுகள் என்று திட்டமாக வரையறுக்க இயலவில்லை. சங்க இலக்கியங்களிலேயே பல்வேறு மரபுகளும் மரபு மீறல்களும் காணப்படுகின்றன என்று நா.இளங்கோ அவர்கள் கூறுகின்றார்.

**இன்பம் பொது**

அன்போடு பொருந்திய இன்ப வாழ்க்கையே காதல் என்பர். உலகத்துள்ள அனைத்து உயிர்களும் இன்பவேட்கை உடையன என்றும் இன்ப வேட்கை அனைத்து உயிர்க்கும் பொதுவாக இருப்பினும், ஆடவர் மகளிர் ஆகிய இருபாலார் இடத்து நிகழும் அன்பு, நாட்டம், காதல் எனச் சிறப்பித்துச் சொல்லப்படும் இன்ப வேட்கை மனத்தொடு பொருந்தி வருவது என்பார் தொல்காப்பியனார்

“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரூஉம் மேவற்று ஆகும்”1

இதற்கு உரை ஆசிரியராகிய இளம்பூரணர்,

எல்லா உயிர்களுக்கும் இன்பம் என்பது மனம் பொருந்தி வரும் விருப்பத்தை உடையது என்கிறார். ஆகையால் மனம் பொருந்தியவிடத்து பரத்தையரிடமும் இன்பம் உள்ளது எனவும். மனம் பொருந்தாவிடில் மனைவியாக இருந்தாலும் இன்பம் இல்லை எனவும் கூறுகின்றார்.

மேலும். உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர்,

உலக உயிர்கள் அனைத்திற்கும் இன்பம் பொதுவாயினும் அதன் சிறப்புகள் எல்லாம் செவ்வனே நிகழ்வன மக்கள் இடத்துதான் என்கிறார்.

**காதல்**

“காதல் என்பது ஆடவர் மகளிர் இருவரும் உலக வாழ்க்கையில் அறநெறி பிறழாது இன்பம் நுகர்தற்கு உரிய சிறந்த குணமாகும். காதல். காமம் என்னும்

இரண்டனுள் காமம் இழிந்த நிலையில் நிகழ்வது என்றும் காதல் உயர்ந்த நிலையில் நிகழ்வது என்றும் அக்காதலானது. தன்வயப்பட்டாரை எத்துணை இடையூறுகள் நேர்ந்தாலும் பிறழவிடாது பிணித்து இன்பத்திலும் துன்பத்திலும் பகிர்ந்து அனுபவித்து நீண்ட காலம் நிலைத்திருப்பர் என்பதும் அறிஞர்கள் கண்ட உண்மைகளாகும்”2 என்று மு.கதிரேசச் செட்டிகார் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

சு.சண்முகசுந்தரம் அவர்கள்

**“காதலர்; உள்ளங்கள் இன்ப வானில் சிறகு**

**அடிக்கும்போது இனிய பாடல்கள் பிறக்கின்றன**

**நாட்டுப்புறங்களிலும் ஏற்படும் காதல்கள்**

**நகர்ப்புறம் காதலைப் போன்று போலி**

**யானவை அல்ல .’பட்டிக்காட்டுக் காதலுக்குக்**

**கெட்டியான உருவம் அப்பா’ என்று சொல்வது**

**போல் இவர்களின் காதல் சுத்தமானது.**

**இவர்கள் பாடும் பாடல்கள் சுவையானது”[3]**

என்று நாட்டுப்புறக் காதலின் இயல்பினையும் காதல் பாடல்களின் இயல்பினையும் பாராட்டுகின்றார்.

**காதலின் தோற்றம்**

**“காதலுக்கு கண் இல்லை”** என்பது நாட்டுப்புற வழக்காகும். இவ்வழக்கு உணர்த்தும் பொருள் என்னவென்றால் சாதி சமயப் பேதங்கள் இன்றி செல்வத்தால் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகள் இன்றி அழகு அருவருப்பு என்ற காட்சி வேறுபாடுகள் இன்றி தோன்றுவதுதான் காதல் என்கிறது. தான் விரும்பும் பெண்ணை தேவலோக மங்கையாக நினைத்து அவளுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளுவதும் செல்வக்குடியில் பிறந்த பெண் ஏழை ஒருவனைக் காதலிப்பதோடு அவனையே தன் வாழ்க்கையோடு பிணைத்துக்கொள்வதும் உலக மரபாகும்.

**நாட்டுப்புறக் காதலின் தோற்றம்**

நாட்டுப்புறப்பாடல்களில் பேசப்படும் காதல் பெரும்பாலும் உறவின் அடிப்படையிலேயே நிகழ்வதாகக் கூறப்படுகிறது. இளமைக் காலந்தொட்டு பழகி வந்த ஆணும் பெண்ணும் உரிய பருவம் எய்தியதும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். அவர்கள் தனிமையில் சந்தித்துப் பேசிக் கொள்ளப் பல வாய்ப்புகள் ஏற்படுகின்றன. தொழிற்களங்கள், நீராடும் இடம். திருவிழாக்கள் போன்றன காதலர் உரையாடவும் உறவாடவும் வாய்ப்பாக அமைகின்றன.

**காதல் பாடல்களின் வகைப்பாடு**

நாட்டுப்புறக் காதல் பாடல்கள் மற்றும் அகப்பாடல்களும் பொருள் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

1. வருணனைப் பாடல்கள் (தலைவன் தலைவியை வருணிப்பது)

**“கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**

**காமம் செப்பாது கண்டது மொழிமோ**

**பயிலியது கெழீஇய நட்பின் மயில் இயல்**

**செறி எயிற்று அரிவைக் கூந்தலின்**

**நறியவும் உளவோ நீ? அறியும் பூவே?”[4]**

தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சியில் இணைந்த பின்னர் தலைவியின் கூந்தலில் இயற்கை மணம் உடையது என்பதைத் தலைவன் வண்டை வினவுவதின் வழி புலப்படுத்தி அவளுடைய கூந்தலின் அழகைப் பாராட்டுகின்றான்.

இக்கருத்தினையே,

நாட்டுப்புறப்பாடலில் ஓர் இளையவளின் கன்னங்கரிய கார்மேகக் கூந்தல். காளை ஒருவனைக் கவர்ந்தது. அதன் நீளம். அதை முடிந்து கொண்டை போட்டிருக்கும் அழகு, கொண்டை வனப்பு, ஆளை மிரட்டும் தன்மை ஆகியவை அந்த இளையவனின் கருத்தில் நின்றன.

**“ஆலம் விழுதுபோல**
**அந்தப் புள்ளை தலைமயிரு**
**தூக்கி முடிச்சாளே**
**தூக்கனாங் கூடுபோலே”**
**“வாழையடி உன் கூந்தல்”**

**2.அலர்மொழி**

பலர் அறிய நிகழும் பழமொழியே அலர் ஆகும். மலர்ந்த பூவின் மணம் பலராலும் அறியப்படுதல் போலத் தலைவன் தலைவியரின் காதல் வாழ்க்கை பலரால் அறியப்பட்டுப் பழிக்கப்படுதலே இதன் நிலையாகும்.

களவு கற்பு ஆவதற்கு ஊராரே காரணம். ஊராரின் பேச்சுக் காதலர் சந்திப்பிற்கு இடையூறு ஆகிறது. காதலியின் பெற்றோர் எச்சரிக்கை கொள்கின்றனர். காதலி ஒருத்தி தன் காதலனைச் சந்திக்க ஊரார் குறுக்கே நிற்பதைக் கண்டிப்பதாக,

**“ஆலமரம் உறங்க**
**அடிமரத்துக் கிளி உறங்க**
**உன்மடிமேல் நான் உறங்க**
**உலகம் பொருக்கலையே?”**

என்று கூறும் நாட்டுப்புறப்பாடல் இது.

இதனையே சங்க இலக்கியமான நற்றிணையில்

தலைவி தான் தன் நலனைத் தலைவனால் இழந்து நிற்க. எதனை இழந்ததனால் அலர் கூறும் பெண்டிர் யாமத்திலும் துயிலாதிருக்கின்றனர் என வினாத் தொடுப்பதாக,

**“யாமெந் நலனிழந்தனமே யாமத்து**
**அலர்வாய்ப் பெண்டிர் அம்பலொடொன்றிப்**
**புரையில் தீமொழி பயிற்றிய வுரையெடுத்து**
**ஆனாக் கௌவைத் தாகத்**
**தானென் இழந்தவிவ் வழுங்க லூரே”[5]**

**3. இற்செறிப்பு**

தலைவன் வரவினாலும் அலர் தோன்றுதலாலும் தலைமக்களிடையே நிலவும் களவொழுக்கத்தைச் செவிலித்தாய் அறிகின்றாள். இதனால் தலைவி இற்செறிக்கப்படுகிறாள். நற்றிணை தலைவியொருத்தி, தலைவனுடைய தேர் இராக்காலத்து வந்ததனால் ஊரில் அலரெழுந்தது என்றும். அதன் காரணமாக அன்னை (செவிலி) தன்னை உற்று நோக்கினாள் என்றும் களவு வெளிப்பட்டதைச் சுட்டி ‘நாளை, மணிப்பூ முண்டகம் கொய்யேன்’ எனத் தான் இற்செறிக்கப்பட்டதையும் குறிப்பாக உணர்த்துவதை,

“என்னோக் கினளே அன்னை நாளை,

மணிப்பூ முண்டகங் கொய்யே னாயின்

அணிக்கவின் உண்மையோ அரிதே மணிக்கழி

நறும்பூங் கானல் வந்தவர்

வறுந்தேர் போத லதனினு மரிதே”[6]

நாட்டுப்புறப்பாடலில், காதலர்கள் நாளும் நாளும் சந்தித்து மகிழ்வதை வீட்டார் அறிந்து விடுகின்றனர். காதலர் சந்திப்புக்குத் தடை விதிக்கின்றனர். காதலி வீட்டில் அடைக்கப்படுகிறாள். அவன் இயக்கம் கண்காணிக்கப்படுகிறது. வாழ்க்கைத் துன்பமாகிறது என்ற செய்தியை கீழ்வரும் நாட்டுப்புறப் பாடல் விளக்குகிறது.

“பச்சை பரங்கிக் காயாம் - யம்மா

பாதையோரம் காய்ச்சிருக்க யம்மா

பாதையோரம் காய்ச்சிருக்க யம்மா

பாதுகாக்க வேணுமிண்ணு

பாழா நல்ல கெடுத்தீங்களே –யம்மா

பாழா நல்ல கெடுத்தீங்களே”

**4. உடன்போக்கு**

ஊரர் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகாமல் தப்பிக்க வழி என்ன என்று இளம் காதல் உள்ளங்கள் சிந்திக்கின்றன. பெற்றோரும் மற்றோரும் அறியாமல் ஊரைவிட்டே ஓடிவிட்டால் அவாகளின் தொல்லையின்றும் விடுபடலாம் காதல் இன்பத்தைத் தடையின்றி துய்க்கலாம். சந்தைக்குச் சென்று சட்டிப்பானை வாங்குவதாகப் பாவித்த ஊரை விட்டு ஓடிவிடலாம் என்று திட்டம் தீட்டுவதை,

**“சந்தைக்கு போவமடி**

**சட்டிபானை வாங்குவோமடி**

**சந்தை கலையுமுன்னே**

**தப்பிடுவோம் ரெண்டு பேரும்”**

**என்று பாடப்படுகின்றது.**

**“போக்கும் வரைவும் மனைவிகண்; தோன்றும்”[7]**

அகஇலக்கியங்களில் உடன்போகும் எண்ணமும் வரைவு வேட்கையும் தலைவியிடத்தே தாம் எழும் எனத் தொல்காப்பியர் கூறுவர். இதனால் தலைவனுக்கு இவை தோன்றாது என்பது புலப்படும். தலைவனோடு தனக்குள்ள உரிமையை நிலைநாட்டுமிடத்தும் பிரிவச்சம் தோன்றும் போதும் அம்பலும் அலரும் களவொழுக்கத்தை வெளிப்படுத்தி விடுமோ என்ற அச்சம் தோன்றியவிடத்தும் பிற இடையூறுகளின் காரணமாகவும் தலைவியிடத்து உடன்போதலாகிய விருப்பம் தோன்றும்.

**தொகுப்புரை**

சங்க இலக்கியம் அகம் புறம் எனப் பகுக்கப்பட்டுள்ளதையும் அகமானது களவு என்றும் கற்பு என்றும் பிரிக்கப்பட்டுள்ளமையும் சிந்திக்கத்தக்கன. நூற்றுக்கணக்கான பாடல்கள் கிடைக்கின்றபோது அகப்பாடல்கள் எல்லாம் ஏதோ ஒரு வகையில் பகுத்தேமானால் அவற்றின் தனித் தன்மையினைக் காண இயலாது. எனவே நாட்டுப்புற இலக்கியத்தில் காணப்படும் அகப்பாடல்கள் அனைத்தையும் சங்கஇலக்கியச் சுவட்டில் களவு. கற்பெனப் பகுத்துக்கொண்டு ஆய்வது சுவையினைத்தரும்.

காதலன் காதலி சந்திப்பு, வருணனை, பிரிவுது; துயர், காதலி காதலனை தன் வீட்டிற்கு அழைத்தல். தன்னை சந்திக்க வழிச் சொல்லித் தருதல், சந்திப்பதில் உள்ள இடர்பாடுகள், அலர், இற்செறிப்பு, உடன்போக்கு என்பனவாகிய களவொழுக்கமானது அகஇலக்கிய மரபுகளோடு நாட்டுப்புறப்பாடல்களில் இடம் பெறுவதை எடுத்துரைக்கப்படுகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. (தொல்.பொருள். பொருளியல் நூ;28)
2. மு.கதிரேசச் செட்டியார் -உரைநடைக்கோவை
3. சண்முகசுந்தரம் .சு நாட்டுப்புறப்பாடல்
4. குறுந்தொகை பா.எண்.2
5. நற்றிணை பா.எண் 36:5-9
6. மேலது பா.எண் 191:8-12
7. தொல;..;; பொருள.; பொருளியல் சூத். எண் 31

**துணைநூற்பட்டியல்**


1. கதிரேசச் செட்டியார் மு உரைநடைக்கோவை
2. சண்முகசுந்தரம் .சு நாட்டுப்புறப்பாடல்
3. சாமிநாத ஐயர் குறுந்தொகைமூலமும் உரையும் உ.வே.சா.நூல்நிலையவெளியீடு சென்னை 2009
4. நச்சினார்க்கினியர்(உ.ஆ) தொல்காப்பியப்பொருளதிகாரம் சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழக வெளியீடு சென்னை -1 ஐந்தாம் பதிப்பு, மார்ச்சு, 1970
5. நாரயணசாமி ஐயர்,அ . நற்றிணை மூலமும் உரையும் சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழக வெளியீடு சென்னை -1



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Babithra R., (2021) Agam literary traditions and folk love songs, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:247-251. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ஜெ.ஜெயபிரியா**
உதவிப்பேராசிரியர்
மற்றும் துறைத்தலைவர்
தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620002.

# புற இலக்கியங்களில் ஆளுமை அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழரின் வரலாறுகளையும் பழம்பெருமைகளையும் மன்னன் முதல் சாதாரண மானிடன் வரை அவர்களுடைய பழக்கவழக்கங்களையும் கொண்டுள்ள தமிழர் அடையாளங்களை அறிந்துக் கொள்வதற்கு சிறந்த கருவியாக புறம் சார்ந்து கருத்தமைந்த இலக்கியங்கள் முதன்மையாக விளங்குகின்றன என இவ் ஆய்வில் எடுத்துரைக்கப்ப டுகின்றது.

**முன்னுரை**

"சமுதாயத்தில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வுகளும் மக்களுக்குப் பாடமாக அமைகின்றது. தாம் வாழ்கின்ற சமுதாயத்திலிருந்து சந்திக்கும் சிக்கல்களிலிருந்து எவ்விதம் கடந்து முன்னேறுவது என்ற தேடுதலில் விழிப்புணர்வு பெறுகின்றனர். இந்த பட்டறிவிலிருந்து மக்கள் பெற்றுக் கொள்கின்ற படிப்பினைகள் அனைத்தும் அவர்களுடைய புற வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கும், அக வாழ்க்கையின் இன்பங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றன என்பதில் ஐயமில்லை"1 என முனைவர் கு. இராசரெத்தினம் அவர்கள் தன் ஆய்வில் எடுத்துரைக்கிறார். அவ்விதம் தாம் வாழ்ந்த வாழ்வின் அடிப்படையில் பெற்ற அனுபவங்களையும் உலகியலில் தான் கேட்டுணர்ந்த வாழ்வியல் உண்மைகளையும் சற்றும் மிகைப்படுத்தாமல் எதிர்காலச் சமுதாயம் உணர்ந்து, தம் வாழ்வியலை அமைத்துக் கொள்ள ஆன்றோர் பெரும் புலவர்கள் தங்கள் பாடல்களில் பதிவுச் செய்துள்ளனர். அதன் வாயிலாக, புற வாழ்வியல் உண்மைகளைக் கண்டறிய முடிகின்றது.

'தனிப்பட்டவர்களின் வலியாலும் திறத்தாலும் அரசுகள் உருவாகின்றன' எனக் கூறுவார் மாக்கிய வெல்லி. குடும்பம், ஊர், நாடு என்ற படிமுறை வளர்ச்சியில் அரசு என்ற அமைப்பே சமுதாய மதிப்பையும் நோக்கத்தையும் காட்டும் உயரிய நிறுவனமாகும். காரல் மார்கஸ், 'அரசு என்பது ஒரு வர்க்க நிறுவனம் என்றும், பாட்டாளிகள் அதனைத் தமக்குரியதாக மாற்றியமைத்து பின் வர்க்கமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்றும் கூறுவார். "மக்கள் வாழ்வைத் தூய்மைப்படுத்தி அவர்கள் அறநிலை பெறுதற்குத் துணைபுரியவே அரசியல் முதன்முதல் ஏற்பட்டது"2 என்று குறிப்பிடுகிறார். திரு.வி.க. எழுதப்பட்ட அரசியற் சட்டங்களோ மேற்கொள்ள வேண்டிய இயற்றப்பட்ட சட்டங்களோ இல்லாத நிலையில் அறத்தின் வலிவும், கனிவும் புரிந்து சங்க கால மன்னர்கள் ஆட்சிப்புரிந்து தமிழகத்தையே அறம் விளைநிலமாகப் பண்படுத்தியிருப்பது பெருமைக்குரியதாக அமைகின்றது.

அரசன் இறைப்பொருள் கொள்ளும் நெறியை அறிந்துக் கொண்டால் நாடு மிகவும் தழைக்கும் என்று அறிவுடை நம்பி என்ற பாண்டிய மன்னனிடத்து பிசிராந்தையார் கூறும் அறிவு மொழிகள் வரி விதிப்புமுறைக்கு வைக்கும் அதிகாரிகளுக்கு பாடமாக அமைகின்றது.

அரசாங்க ஒழுக்கம், ஒற்றுமை, அருள், துறவு, வாய்மை, கற்பு, நட்பு எண்ணிறந்த பண்புகளும்,

“நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்

இவனின் தோன்றிய இவை எனஇரங்க”3

அன்பு, நடுநிலைமை போன்ற பண்புகளும் உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய பண்புகளாக சுட்டிக்காட்டி விளங்க வைக்கின்றது புற இலக்கியம்.

**புறப்பொருளில் அறநெறி:**

புறப்பொருளை உணர்த்தக் கூடிய இலக்கியப் பாடலின் வழியாக நாட்டை ஆளும் தலைவன் மக்களுக்கு உயிர் போன்றவன் என்பதை உணர்த்துகின்றது. மக்களினம் முழுவதும் உறவினராக எண்ணி வாழ வேண்டும். அரசனின் கடமை, நாட்டைக் காக்கும் முறைமை, ஆடை வகைகள், தொழில்கள், புலவர்களின் மனத்திண்மை, இசைக்கலைகள் ஆக்கம் பெற்ற நிலை இவை போன்ற பல கருத்துகளைப் புற நூல்களில் காணமுடிகின்றது.

சங்ககாலத்தில் அரசன் எனும் ஒருவரிடமே அனைத்து அதிகாரங்களும் குவிந்திருக்கின்ற முடியாட்சி ஆகும். என்றாலும், குடியாட்சியின் சிறப்புக் கூறுகள் குவிந்திருக்கின்றன. நிலவுலகை ஆளும் மன்னன், மக்களை உயிராகக் கொண்டு ஆளுவதால் வேள்வியும் வேண்டுமோ என்பதை,

“வைய மன்னுயி ராகவும் மன்னுயிர்

உய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்கு

ஐய மின்றி யறங்கட வாதருள்

மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ!”4

நில உலகை உயிராக நினைத்து உடல் போன்று விளங்கும் மன்னன் செய்த அறத்தினால் வேள்வியும் வேண்டுமோ! என மன்னன் தன் கடமையை செயல்படுத்துவதை கம்பராமாயணம் மொழிவது போல, குடிமக்களின் தந்தையாக கருதப்பட்டதோடு, உண்ணும் உணவு, பருகும் நீர் இவற்றின் முக்கியத்துவத்தோடு அமைந்து விடாது, வேந்தனின் இயக்கமே முதன்மையானது அரசன் அறிந்து செயல்படக் கூடிய கடமையும் அதுவே என்பதை,

“நெல்லு முயிரன்றே: நீரு முயிரன்றே:

மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்:

அதனால், யான் உயிர் என்பது அறிகை

வேல் மிகு தானை வேந்தற்குக் கடனே”5

என பழந்தமிழர் கருதியதை எடுத்துக்காட்டுகின்றது.

**அரசரின் மாண்புநெறி**

தொல்காப்பியம் அரசனின் கடமைகள் என ஐந்தினைக் குறிப்பிடுகின்றது. “ஐவகை மரபின் அரசர் பக்கமும்”6 .ஓதல், வேட்டல், ஈதல், படை வழங்குதல், குடிஓம்புதல் என ஐந்து கடமைகளுக்கான பொருளை உரைக்கிறார் உரையாசிரியர் இளம்பூரணார்.

கடமை உணர்வுடன் ஆண்டத் தன்மையால் “அறநெறி முதற்றே அரசின் கொற்றம்”7 என்ற அறநெறியைத் தலைக் கொண்டு வழுவாது ஆட்சிப் புரிந்துள்ள மன்னர்களைப் பற்றிக் காண முடிகின்றது.

நம்மவர் எனக்கொண்டு அவரது தீய செயல்களைப் பொறுத்தலும் அறமன்று: அயலாரெனக் கருதி அவர் குணங்களைக் கொள்ளாது மறத்தலும் அறமன்று: நடுநிலை நின்று அறத்தைக் காத்தலே சிறப்புடைய செயலாகும். ஞாயிற்றைப் போன்று வெம்மையான ஆற்றலையுடைய ஆண்மையும், திங்களைப் போன்று

குளிர்ந்த பெரிதான மென்மைப் பண்பும், வானத்து மழையைப் போன்று வழங்கும் வள்ளண்மையும் என்ற இந்த மூன்று பண்புகளும் உடையவரே சிறந்தவர் என்பதை,

"மாரி பொய்ப்பினும், வாரிகுன்றினும்,

இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்

காவலர்ப் பழிக்கும், இக்கண் அகல் ஞாலம்"8

என்பதால் மன்னன் மக்களுக்கு தார்மீகப் பொறுப்பேற்றுக் கொள்ளும் நிலைகள் பெருகி நிற்பதை உய்த்துணர முடிகின்றது. தனக்கும் பழி நேர்ந்திடாது, தன் மக்களுக்கும் தீங்கு வந்திடாது காப்பதை,"குடி பழி தூற்றும் கோலேன் ஆகுக"9 என்பதால் பழி நிலை வராமல் குடிமக்களைத் "தன்னுயிர் போலத் தழீஇ"10 என காக்கவே மன்னர்கள் அரசாட்சி செய்ய விழைந்தனர் என்பதை உணர்த்துகின்றன.

மேலும், வேந்தர்களிடத்து, "ஆறு முட்டுறாது அறம் புரிந்தொழுகும்"11 என அறநிலை கடவாத பண்பு மிகுந்து காணப்படுவதை அறியமுடிகின்றது. ஆளப்படும் மக்களின் உலகத் தலைவன் மன்னனே என்பதால் தனது பண்பட்ட நடவடிக்கைகளின் மூலம் தன் நாட்டு மக்களுக்கு, "நன்னடை நல்கல் வேந்தருக்குக் கடனே"12 என்பதால் நேரிய நெறியின் கடமையும் மன்னனுக்கு வகுத்தளிக்கப்பட்டுள்ள கடமை உணர்வை வெளிப்படுத்துகின்றது.

ஒரு செயலை செய்தபின் ஏதேனும் பிழை உண்டானால் அதற்கு இரங்குவோம். ஆனால் அவ்வாறு தவறு இழைக்காது திட்பமுடைய செய்கையை உடையவன் மன்னன் என்பதை, "செய்து இரங்கா வினை, சேண் விளங்கும் புகழ்"13 என முன் ஒரு செயல் செய்து பின் அது செய்தமைக்கு வருந்தாதபடி நிலை அறிந்து செயல்புரிதல் வேண்டும். அவ்வாறு அல்லாது செய்து விட்டு அந்நிலைக்கு இரங்குவது செய்யற்க என,

"எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்

மற்றன்ன செய்யாமை நன்று"14

திட்டமிட்டு செயல்புரிய வேண்டிய நிலையினைக் குறளின் கருத்தினோடு எடுத்துரைக்கின்றது. கண்ணை இமைக்காப்பது போல, மன்னன் தன் குடிமக்களின் உயர்வைக் கருத்தில் கொண்டு நடுநிலைமையுடன் நீதி காத்து ஆளவேண்டும். நாட்டை ஆளும் அரசன் தாம் செய்யும் செயலை உரிய நேரத்தில் செய்ய வேண்டிய செயல்திறனை எடுத்துக்காட்டுகிறது.

தம் நாட்டை திறம்பட ஆள்வது மட்டுமன்றி, நாட்டு மக்களின் வறுமையையும் போக்கும் படி அன்றைய மன்னர்கள் நல்லாட்சி செய்தனர். சான்றாக, தாம் ஆளும் நாட்டில் வறுமை ஒழிந்ததால் இரவலர் இன்மைக் காரணமாக, அயல் நாட்டில் உள்ள இரவலர்களைத் தேரில் ஏற்றிக் கொண்டு வந்து அவர்களின் பசியைப் போக்கிய ஆடுக்கோட்பாட்டுச் சேரலாதனின் நாடு காக்கும் சிறப்பை,

"வாரா ராயினும் இரவலர் வேண்டித்

தேரிற் றந்தவர்க் கார்பத லைக்கும்"15

என்ற வரி மூலம் மாபெரும் பகையான வறுமையைத் தன்னாட்டிலுமன்றி பகைநாட்டிற்கும் சென்று வறுமை பகையை அழித்த சேரலாதனின் உன்னதச் செயலைக் கண்டுணர முடிகின்றது.

ஒளி பொருந்திய ஆபரணங்களை அணிந்த விறலியர் மன்னனின் வீரத்தை உயர்த்திப் பாடுவர். அவ்விதம் பாடிய இரப்போர்களின் வறுமை துன்பம் தீர ஒவ்வொரு நாளும் பரிசுப் பொருட்களைத் தரும் வள்ளல் பற்றி, பதிற்றுப்பத்து பாடல் மூலம், இவ்வளவு தான் என்று வரைமுறையின்றி நல்கிய முறையை எடுத்துரைக்கிறது. தான் தேடிய செல்வத்தைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்ண வேண்டும், வருந்தும் உயிர்கள் பலவற்றையும் காப்பாற்ற வேண்டும் என்று அறநூலோர் தொகுத்துக் கூறியிருக்கும்,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை16

என்ற அறங்களுக்குள்ளே தலைச்சிறந்ததான அன்னம் வழங்கி பசியாற்றும் மன்னர்களின் பெருமைகளையும் நம் முன்னோர்களின் சிறப்புகளையும் புற இலக்கியம் வாயிலாக அறியலாம்.

**முடிவுரை**

பழந்தமிழ் மக்களின் பண்பாடு, வாழ்வியல், அரசியல் போன்றவற்றை உணர்த்தும் கருவியாக புற இலக்கியம் திகழ்கிறது. வரலாற்று அறிஞர்களும் ஏற்றுக் கொள்ளும் படி வரலாற்றுச் செய்திகளை தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது.

--------------------------------

1. 'சங்க இலக்கியத்தில் பொதுமக்கள்', ப.54
2. ஆயுத எழுத்து-காலாண்டிதழ்-ஜூன் 2013, ப.102, (திரு.வி.க. மனித
3. வாழ்க்கையும் காந்தியடிகளும், ப.61)
4. கலித் -நெய்-130: 1-2
5. கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், மந்தரை சூழ்ச்சி படலம்.
6. புறம் - 186: 1-4
7. தொல் - பொருள் - 74: இளம்பூரணார் உரை
8. புறம் - 55: 10
9. மேலது - 35: 27-29
10. மேலது - 72: 12
11. கலித் -143 :52
12. பதிற் -59: 16
13. புறம்-312: 4
14. குறள்-655: அதி-66
15. பதிற். 55 – 10- 11
16. குறள்-322: அதி-33

**பயன்படுத்திய நூல்கள்**


1. சங்க இலக்கியக் கட்டுரைகள் - கருத்தரங்கம்,தமிழ் பல்கலைக்கழகம், பதிப்பு – ஏப்ரல் 1984
2. கு.வெ.பாலசுப்பிரமணியன், நாகராசன்.வி, - புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், ,4ஆம் பதிப்பு, அக்டோபர்.2011
3. கம்பராமாயணம் மூலமும் உரையும் - பூவண்ணன் வர்த்தமானன் பதிப்பகம் - முதற் பதிப்பு 1986
4. தொல்காப்பியம் - இளம்பூரணார் உரை, கௌமாரீஸ்வரி பதிப்பாசிரியர், சாரதா பதிப்பகம், 11-ஆம் பதிப்பு – ஜீன் 2011
5. எட்டுத் தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், 4ஆம் பதிப்பு, அக்டோபர்.2011



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Jeyapriya J., (2021) Leardership Qualities in Puram Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:252-255. Cauvery College For Women, Trichy.

**க. கௌரி,**
உதவிப் பேராசிரியர்,
திருத்தங்கல் நாடார் கல்லூரி,
சேலவாயல்,
சென்னை -51.
அலை பேசி : 9445813615

# சங்க இலக்கியங்களில் பழக்கவழக்கங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் தமிழ்ச் சமூகத்தின் நாகரிகம், பண்பாடு, அரசியல், பழக்க வழக்கங்களை விளக்கும் வரலாற்றுக் களஞ்சியமாக திகழ்கின்றன. ஒவ்வொரு இலக்கியமும் அவ்வக்கால சமூகத்தைத் தன்னுள் கொண்டுள்ளது. சமூகத்தோடு தொடர்புடைய இலக்கியம் சமூகத்தின் நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றதன. இதனடிப்படையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் பழக்க வழக்கங்களை முன்னெடுத்து உரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது. மேலும் இவை வரலாற்று ஆய்விற்கும் சமூக ஆய்விற்கும் முதன்மை நிலைச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன.

**முன்னுரை**:

உலகின் உயர் தனி செம்மொழிகளான கிரேக்கம் , எபிரேயம் , இலத்தீன் சீனம் போன்ற மொழிகளின் வரிசையில் தமிழ் மொழி இடம்பெறுவதற்கு தொன்றுதொட்டு வந்த இலக்கிய இலக்கண பாரம்பரியமும் சங்க இலக்கியங்களும் காரணமாக அமைகின்றன. சமுதாயத்தில் ஒவ்வொரு காலகட்டத்திலும் விதவிதமான பழக்க வழக்க முறைகள் வந்தாலும் சங்ககால முறையில் சடங்குகள், வழிபாடுகள், மரபு போன்றவற்றைக் கடைப்பிடித்து கொண்டு தான் இருக்கிறோம். பண்பாட்டிலும் கலாசாரத்திலும் தன்னிகரற்று தழைத்து ஓங்கி நிற்பவன் தமிழன்.

வாழும் நிலத்தின் இயல்புக்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் அமைந்திருந்தது. மக்களின் ஒழுகலாற்றை அடிப்படையாகக் கொண்ட அகத்திணைப் பாடல்கள் இயற்கைக்கும் மனிதனுக்குமான நெருக்கமான தொடர்பினை வெளிக்காட்டுகின்றன. சமுதாயத்தின் நிகழ்வுகளையும் மாந்தர்களின் உளவியலையும் ஒருங்கே கொண்ட சங்க இலக்கியங்கள் வாயிலாக தமிழர் தம் பழக்க வழக்கங்கள் குறித்த அடையாளங்களை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உணவு**

உயிர் வாழ்வதற்கு தேவையான ஆற்றலைத் தரும் பொருளை உணவு என்று கூறலாம். அங்கங்கள் அழியாமல் பாதுகாப்பது. இயக்க ஆற்றலை கொடுப்பது. நோயைத் தீர்க்கும் மருந்தாக பயன்படுவது என உணவின் சிறப்பினை அறிஞர்கள் கூறுகின்றனர்.

**“உணவெனப் படுவது நிலத்தொடு நீரே” (புறம்-18:21)**

பண்டைத் தமிழர் அரிசி உணவையே தம் அடிப்படையான உணவாகக் கொண்டிருந்தனர். தமிழகத்தில் பல வகையான நெல் விளைந்ததுள்ளது. தமிழர்கள் புழுங்கலரிசியை உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதனை,

**“ இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த**

**அவைப்புமாண் அரிசி அமலை” (சிறுபாணாற்றுப்படை 193-194)**

இப்பாடலடிகளில் அறியலாம். பலவித பருப்பு வகைகளையும் ஊனையும் மதுவையும் உண்டு மகிழ்ந்திருந்தனர். வெண்ணெயைப் பதமாக சூடாக்கி நெய்

எடுத்து சோற்றில் சேர்த்து உண்டு மகிழ்ந்துள்ளனர். மிளகும் உப்பும் உணவில் சேர்த்து வந்துள்ளனர். சோறுடன் பசிய துண்டுகளாக்கிய பொறிக் கரியைப் சூட்டிறைச்சியுடன் உண்டனர் என்பதை,

**“பெருஞ்செய் நெல்லின் கொக்கு உதிர் நிமிரல்**

**பசுங்கண் கருனை சூட்டோடு மாந்தி” ( புறநானூறு ;395)**

இப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

**அருவிநீர்**

சங்க கால மக்கள் அருவிநீர், சுனைநீர், இளநீர், பால், தயிர், மோர் போன்றவற்றைப் பருகியுள்ளனர். பலவகையான உணவுகளை உண்ட பின்னர் குளிர்ந்த மலைச்சாரலில் இருந்து கீழே பாய்ந்து வரும் குளிர்ச்சியான அருவி நீரை மக்கள் அருந்திச் சென்றனர் என்பதை,

**“ நல்மரன் நளிய நறுந்தண் சாரல்**

**கல்மிசை அருவி தண்ணெனப் பருகி” (புறம்-150:15-16)**

இப்பாடலடிகளில் அறியலாம்.

**மண்பாண்டம்**

மண்ணால் உருவாக்கப்படும் பொருட்கள் அனைத்தும் மண்பாண்ட பொருட்களாகும். குழிசி, மண்டை, குடம் , போன்ற மண்பாண்டப் பொருள்களைச் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது. மண்ணை நன்றாக குழைத்து அதனுடன் நாட்டுச் சர்க்கரை,கருப்பட்டி, பனை வெல்லம், உப்பு, கடுக்காய், நிறமூட்டிகள் போன்றவை கலந்து மண்பாண்டங்கள் உருவாக்கப் பெறுவதாகக் கருதப்படுகின்றது.

சங்க காலத்திலும் இம்முறையிலேயே மண்பானைகள் உருவாக்கம் நடைப்பெற்றுள்ளது. சங்க கால மக்கள் பல்வேறு வகையான மண்பாண்ட பொருள்களைப் பயன்படுத்தினர். பால், மீன் போன்ற பொருள்களை மண்கலத்தில் வைத்து உபயோகப்படுத்தி உள்ளனர் என்பதை,

“**பாணர் பசுமீன் சொரிந்த மண்டை போல “ (குறுந்தொகை-169)**

**“ஊன் கொண்ட வெண்மண்டை” (புறம்-386)**

என்ற பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன. சோறு சமைப்பதற்கும் இறைச்சி உணவு சமைப்பதற்கும் மண்பாண்டத்தைப் பயன்படுத்தினர். சமையலுக்குப் பயன்படும் மண்பாண்டம் குழிசி என அழைக்கப்பட்டது.

**“ மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி” (புறம்-168)**

**“அட்ட குழிசி அழல்பயந்து ஆஅங்கு” (புறம்-237)**

இவ்வடிகள் வாயிலாக மண்பாண்ட சமையல் நிகழ்ந்துள்ளதை அறியலாம். எந்த பாத்திரத்தில் சமைக்கின்றோமோ அந்த பாத்திரத்தின் தன்மை உணவின் மீதும் பிரதிபலிப்பை ஏற்படுத்தும் என்பது உண்மையே.

இரும்பு பாத்திரத்தில் சமைக்கும் பொழுது இரும்பு உடலுக்குள் சென்று ரத்தசோகை நோயை சரி செய்யும். இதனடிப்படையில் மண் பாத்திரங்கள் மண்ணில் செய்யப்படுவதால் அதில் சிலிக்கன் டை ஆக்சைடு இருக்கும். இந்த சிலிக்கன் டை ஆக்சைடு உள்ள மண் பாண்டத்தில் சமைக்கும் பொழுது எந்த விதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை. இந்த மண்பாண்ட உணவுமுறை இன்றைய சூழலில் மீண்டும் புத்துணர்வு பெறுவது வரவேற்கத்தக்கது.

**திருமணம்**

தமிழரிடையே நிலவிய ஆதிகால மணமுறை எளிதாயும் இயல்பானதாயும் இருந்தது. தலைவனும் தலைவியும் சேர்தல் மணமாயிற்று. பண்டை நாட்களில் சங்க இலக்கியங்கள் கூறும் திருமணமுறை சிறப்பு வாய்ந்தது.

தலைவன் தலைவி தனியே சந்தித்து தன் காதலை வளர்த்துக் கொள்வர். "தலைவன் தலைவியர் ஆகிய இருவர் ஒப்புதலாலேயே அது நடைபெற்றமையின் பெற்றோர் பிற உறவினர் என்போர் அறியாமலே அம்மணம் நிறைவேறிற்று. அதனால் அது களவின் பாற்பட்டது. அதாவது தலைவியைத் தலைவன் அவளைப் பெற்றோரிடமிருந்து களவாடித் தன்னவளாக்கிக் கொண்டான் என்பது கருத்து."1

தலைவியின் களவு வாழ்வை அறிந்த தாய் தந்தையர் தலைவி விரும்பிய தலைவனுக்கு மணம் செய்து வைக்க இசைவு தந்துள்ளதை (கலித்தொகை-114) பாடல் சுட்டுகிறது.

**வேளாண்கருவிகள்**

வேளாண் தொழில் முறைகள் உழுதல், உரமிடுதல் ,விதை விதைத்தல், களை எடுத்தல், பயிர் காத்தல், தானியங்களை அறுவடை செய்தல் போன்ற பல்வேறு கூறுகளை உள்ளடக்கியது . "காட்டுமிராண்டி நிலையில் மனிதன் கண்டுபிடித்த நெருப்பும் இரும்பும் நாகரிக நிலைக்குப் போகப் பெரிதும் உதவின. வித்தைக் கண்டு விதைக்கத் தொடங்கிக் கழனியும் ஊரும் கண்ட நிலையில் நிலைத்த வாழ்க்கையில் நாகரிகம் எழுந்தது. மனித சமூகங்கண்ட முதல் நாகரீகம், பயிர்த்தொழில் நாகரிகமே ஆகும்"2.

தினைப்புனத்தைக் காக்கும் பொருட்டு பறவைகளிடமிருந்து கதிர்களைப் பாதுகாக்க கவண், தழல், தட்டை முதலியவற்றை பயன்படுத்தினர். தண்ணுமை என்னும் பறையை முழங்குவதும் உண்டு.

**"தட்டையும் புடைத்தனை கவனணயுந் தொடுக்கென" ( நற்றிணை -206:5)**

இவ்வடிகளில் கிளியை விரட்டுவதற்கு 'தட்டை' என்ற கருவியைக் கொண்டு விரட்டினர் என்பதை அறியலாம் .

**"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்**

**பழனப் பல்புள் இரியக் கழனி" (நற்.350:1-2)**

சங்ககாலத்தில் அறுவடை செய்யத் தொடங்குமுன் வயல்களில் கூடமைத்து வாழும் பறவைகளை விரட்ட தண்ணுமை என்னும் இசைக்கருவியை இசைத்து உள்ளனர்.

மேலும்,

**"தினையுண் கேழல் இரியப் புனவன்**

**சிறுபொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்" (நற்.119:1-2)**

இவ்வடிகளில் பன்றியை விரட்ட 'அடார்' என்ற பொறி வைத்து பிடித்ததை அறியலாம் . உழவுத்தொழிலில் தமிழர்கள் கடைபிடித்து உள்ள அனைத்துமே அவர்களின் பழக்கவழக்கங்கள் மட்டுமன்றி வேளாண் தொழில்நுட்பத் திறனையும் வெளிப்படுத்துகிறது.

**பகிர்ந்துண்ணல்**

சங்ககாலத்தில் பெண்கள் தங்கள் கணவருடன் நல்ல கொழுப்பு மிக்க இறைச்சியோடு கூடிய உணவை உண்டு மகிழ்ந்திருந்தனர் . தினையைத் தின்ற பன்றியைத் தலைவன் கொணர்ந்து கொடுப்ப அவன் மனைவி அதனை வாங்கிப் பகுத்துச் சுற்றத்தார் பலருக்கும் முறைப்படி பகுத்துண்டு கொடுத்தாள் என்பதை,

**" வில்லில் தந்த வெண்கோட்டு ஏற்றைப்**

**புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டிக்**

**குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட “ (நற்றிணை – 336)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம் . கணவன் கொடுக்கும் பொருள்களை எதிர்காலத்திற்கு என்று எடுத்து வைக்காமல் சுற்றத்தார் அனைவருக்கும் வழங்கும் மனைவியின் பழக்கம் அவளது சமூக கடமையையும் உணர்த்துகின்றது.

“அறப் பொருளியல் என்பது பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல். அதாவது, குடும்ப வாழ்வும் பொதுவாழ்வும் சீராக இயங்க ஒருவர் ஒழுக்கக் கண்ணோட்டத்துடன் கடைபிடிக்கக் கூடிய நெறிமுறை அல்லது கடமை என்று பொருள் கொள்ளப் பயன்படுகிறது”. 3 என்ற கருத்து இங்கு சிந்திக்கத் தக்கது. இத்தகைய சமூக அறம் சங்க காலத்தில் பின்பற்றப்பட்டுள்ளது.

**விருந்தோம்பல்**

தமிழகப் பண்பாட்டில் விருந்தோம்பல் என்பது நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது. விருந்தோம்பல் என்பது உயர்ந்த பண்பாகும் . சங்ககாலத்தில் விருந்தோம்பல் சிறந்த கலையாகப் போற்றப்பட்டது. கணவனுடன் கூடிவாழும் மங்கள மகளிருக்குரிய தனி உரிமையாக கருதப்பட்டது. தமிழ் மக்கள் விருந்து புறந்தரும் வாழ்வை விரும்பினர். மனிதன் பொருள்தேடி இல்லிருந்து வாழ்வது விருந்தோம்புதல் பொருட்டே என்று வள்ளுவர் விருந்தோம்பலின் சிறப்பை விளக்கியுள்ளார்.

**“ அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**

**முல்லை சான்ற கற்பின்**

**மெல்லியல் குறுமகள் “ (நற்றிணை- 142)**

வரக்கூடாத நேரத்தில் விருந்தினர் வந்தாலும் முகம் கோணாது உபசரிக்கும் பண்பாட்டை நற்றிணை அழகாக உணர்த்துகின்றது. மாறிக்கொண்டே வரும் இக்கால சமூகம் இதனை உணர்தல் அவசியமாகும்.

**நம்பிக்கை**

திருமணம் ஆகாத பெண்கள் மார்கழி முழுமதி நாள் தொடங்கி தை முழுமதி நாள் காலையில் நீராடி நோன்பு இருந்தால் திருமணமாகும் என்பது பெண்களின் நம்பிக்கை இதனை,

**“தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ” (கலித்தொகை-59:13)**

என்ற கபிலரின் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**முடிவுரை**

தமிழரின் பண்பாடும் பழக்கவழக்கங்களும் பார் போற்றியவை. தமிழ் வேறு தமிழர் வேறு என பிரிக்க முடியாதபடி வாழ்ந்து வந்துள்ளனர். தமிழின் புகழும் தமிழ் இலக்கியங்களின் சிறப்பும் என்றும் அழியாதவை. சங்ககால மக்களின் பழக்க வழக்கங்களை உணர்தல் தனிமனித மேம்பாட்டிற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் அவசியமானதாகும். மேலும் இயற்கைச் சூழலுக்கு பாதகம் விளைவிக்காத நிலையினையும் அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**


1. ந.சுப்பிரமணியன், சங்ககால வாழ்வியல்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,1986,ப.381.
2. தமிழ் ஒளி, தமிழர் சமுதாயம், புகழ்ப் புத்தகாலயம்,2006,ப.100.
3. அரங்கமல்லிகா,பெண்ணின் வெளியும் இருப்பும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,2008, பக்.19-20

**துணைநூல் பட்டியல்**


1. குறுந்தொகை, உ.வே.சாமிநாத ஐயர் உரைப்பதிப்பு, மூன்றாம் பதிப்பு-1955.
2. சிறுபாணாற்றுப்படை, நச்.உரை,உ.வே.சாமிநாத ஐயர் பதிப்பு,1957,சென்னை.
3. புறநானூறு, உ.வே.சாமிநாத ஐயர் பதிப்பு, 1956,அவ்வை துரைசாமி மொழி உள்ளே உரை, கழகப்பதிப்பு, சென்னை.
4. சங்ககால வாழ்வியல்,ந.சுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,1986,சென்னை.
5. நற்றிணை, பின்னத்தூர் நாராயணசாமிஐயர் உரைப்பதிப்பு, கழகப்பதிப்பு,1915, சென்னை.


**தொடர்பு முகவரி**


திருமதி.க. கௌரி,

எண்38, 2 வது பிளாக்,

புதிய காவலர் குடியிருப்பு,

புதுப்பேட்டை,சென்னை-2.

Cell No.9445813615.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Gowri K., (2021) Scientific reviews of ancient Tamil food symbols shown in the literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:256-260. Cauvery College For Women, Trichy.

**பேரா. ந.செல்லம்**
ஊட்டச்சத்து மற்றும் உணவியல் துறை,
சீதாலெட்சுமி இராமசுவாமி கல்லூரி,
திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு

# இலக்கியங்கள் காட்டும் பழந்தமிழர் உணவியல் அடையாளங்கள் பற்றிய அறிவியல் விமர்சனங்கள்

**Abstract**

Tamil culture has been approved globally for its origin of several ethnic cultural practices. Literatures and archeological evidences mentions the usage of nature based dietary culture of Ancient Tamil people and methods of incorporating them in their daily life. Understanding traditional knowledge on food culture from ancestors can open up various avenues of health care. Learning food preparation tecniques and dietary remedies adopted by the ancestors can prescribe remedies to prevent current life style based illness.This research paper explains the scientific aspects of ancient food knowledge and their understandings on wellbeing, various methods of food recommendation in a detailed manner.

**Keywords:** Traditional foods, Tamil literature, Food preservation, Ancient practices, Functional foods**.**

## முன்னுரை

குமரிக்கண்டத்தில் இருந்து தோன்றியவர்களாகவும், ஆதியில் ஆப்ரிக்காவிலிருந்து அரேபிய கடல் ஊடாக தென் இந்தியா வந்தோரின் வழி தோன்றல்களாகவும், தென் இந்தியாவின் ஆதிபழங்குடிகளாகவும் கருக்கோள்கள் கொண்ட தமிழ் இனம் ஓர் தொன்மை வாய்ந்த மக்கள் இனங்களில் ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை. ஆதிச்சநல்லூர் அகழ்வராய்ச்சியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்பாண்டங்கள் ஆதி தமிழர்கள் கி.மு.1000 ஆண்டு காலத்தை சேர்ந்தவர்கள் என உறுதிப்படக் கூறுகின்றது. [1]

"தமிழர் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்று நாமக்கல் கவிஞர் போற்றும் அளவிற்கு சிறந்த பல தனித்துவமான பண்புகளை தமிழ்மக்கள் தன்னகத்தே கொண்டிருந்துள்ளனர். அவற்றுள் குறிப்பாக மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக விளங்குவது உணவு. அவ்வுணவின் பயன்பாடு குறித்த தமிழரின் பார்வை மற்றும் அவர்களின் பங்களிப்பு போன்றவை உலக அளவில் உணவின் பல்வேறு பரிணாம வளர்ச்சிக்கு தமிழர்கள் தான் முன்னோடியாக இருந்துள்ளனர் என்பதை காட்டுகிறது.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும் காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும் குடமலைப் பிறந்த ஆரமும்
அகிலும் தென்கடல் முத்தும் குணகடல்துகிரும் கங்கை வாரியும்
காவிரிப்பயனும் ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும் அரியவும்
பெரியவும் நெரிய ஈண்டி வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகு"-
பட்டினப்பாலை**, 185-193** **[2]**

கடியலூர் உருத்திரங் கண்ணாரின் இவ்வரிகள் புகார் நகரத்தின் பெருமையை விளக்கும் வண்ணம் தமிழரின் உணவு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி இறக்குமதி நிகழ்வுகளையும், உணவுப்பொருள் பரிமாற்றத்தில் தமிழரின் முன்னோடித் துவத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பல்வேறு சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வியல் கலாச்சாரங்களை நில அடிப்படையிலும், தொழில் மற்றும் சமூக அடிப்படையிலும் விவரித்துள்ளது நாம் அறிந்த ஒன்றே. உணவியல் கலாச்சாரம் சார்ந்த தமிழ் இலக்கிய ஆய்வுகளை அறிவியல் நோக்கில் பகுத்தாய்வு செய்தால் நோயற்ற நீண்ட வாழ்வு வாழ தேவையான பல்வேறு சூத்திரங்களை உணவின் மூலம் நம் முன்னோர்கள் கையாண்ட விதம் கண்டறிய முடியும்.மேலும்,நோயை உண்டாக்குவதும், அந்நோயை நீக்கும் கராணியாகவும் உணவை அவர்கள் பார்த்துள்ள விதம் வியப்பிற்குரியது. மேலும், உணவின் தன்மை அறிந்து அவற்றை பக்குவமாக கையாளும் பொழுது உணவின் மருத்துவக்குணம் அதிகரிப்பதையும் அவர்கள் கண்டுவைத்துள்ள விதம் போற்ற தகுந்தது. தொற்று நோய் மற்றும் வாழ்வியல் முறை சார்ந்த நோய்களின் பிடியில் சிக்கி தவிக்கும் இக்காலகட்டத்தில் நமக்கு சங்க தமிழிரின் உணவியல் மாண்பு ஒரு தீர்வாக அமையும் என்பதில் மாற்று கருத்து இல்லை. இக்கட்டுரை பழந்தமிழர் உணவியல் கலாச்சாரத்தின் அறிவியல் உண்மையை வெளிப்படுத்தும் நோக்கில் புனைய பெற்றுள்ளது.

**பழந்தமிழர் உணவுகளைப் பதப்படுத்தி பயன்படுத்திய முறை**

பூமியின் மத்திய ரேகைக்கு மிக அருகே அமைந்த ஆசியாவின் துணைக்கண்டமாம் இந்திய***த்***திரு நாட்டில் தீபகற்ப பகுதியில் அமைந்துள்ள நம் தமிழ்நாடு, ஆறுகளும் நதிகளும், மரங்கள் அடர்ந்த வனங்களும், அவற்றில் உறையும் விலங்கினங்களும், பசுமை போர்த்திய புல்வெளிகளும், நெல் வயல்களும் ஒருங்கே அமைய பெற்ற இயற்கை அன்னையின் வளமாக திகழ்வது நம் பெருமையே.

இவ்வளங்கள் மேலோங்கி செழித்திருப்பதால் இவற்றின் மூலம் உற்பத்தியாகும் உணவு பொருட்களும் எண்ணற்றவையே. காலதட்பவெப்பத்திற்கு ஏற்ற வண்ணம் காய்கறிகளும், பயிர்களும், பழங்களும் மற்றும் பிற உணவுப்பொருட்களும் அளவிற்கு அதிகமாகவே உற்பத்தியாவதில் இவ்வியற்கையின் அருளே ஆகும். சங்க இலக்கியங்களில் இவற்றைப் பற்றிய பதிவுகள் அதிகம் புலப்படுகின்றது. இவ்வியற்கையை வணங்கி, அவை வழங்கும் உணவு பொருட்களை பக்குவமாக்கி உண்பதை மட்டும் அல்லாமல் அளவிற்கு அதிகமாக உற்பத்தியாகும் உணவுப்பொருட்களைப் பதப்படுத்தி நீண்ட நாள் கெட்டுப் போகாத வண்ணம் பாதுகாக்கும் உபாயமும் அறிந்தவர்கள நம் முன்னோர்கள் என்ற உண்மையை புறநானூற்று அடிகளில் தமிழர் 'உலர வைத்து பாதுக்காக்கும்' முறையினைக் கையாண்டுள்ளது அறிய முடிகின்றது.

**""மேந்தோல் களைந்த தீங்கொள் வெள்ளள்**

**சுளகிடை உணங்கல் செவ்வி கொண்டு"- புறநானூறு, 32 [3]**

அறிவியல் நோக்கில் 'உணவுப்பதபடுத்துதல்' என்பது கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிரிகள் உணவின் மீது செயல்புரியாத வகையில் பாதுகாக்கப்படுவதும், மேலும் உணவில் உள்ள கொழுப்பு ஆக்சிஜனேற்றம் அடையாமல் செய்வதும் ஆகும். [4]

இயற்கையால் தருவிக்கப்பட்ட உணவுப் பொருட்களானது அவற்றின் ஆதாரத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட நாள் முதற்கொண்டே நுண்ணுயிரிகளாலும், அவை உண்டாக்கும் வேதிப்பொருட்களாலும், அவற்றின் திசுக்களில் ஏற்படும் இயற்பியல் மாற்றங்களாலும் பாதிக்கப்பட தொடங்குகின்றது. இவ்வுயிர் வேதியியல் மாற்றங்களின் விளைவால் உணவுப்பொருட்களின் திசுக்கள் சிதைக்கப்பட்டு அவை பயனற்றுப் போக ஆரம்பிக்கின்றன. மேலும் இவை நச்சுப்பொருட்களாக மாறி உடலுக்கும் உயிருக்கும் கேடு விளைவிக்கவும் தயங்குவதில்லை. ஆருயிர் அரு மருந்தாம் அமிர்தமான உணவின் தன்மை விடமாகி போவது இத்தகைய உயிர் வேதி மாற்றத்தினால் தான். இத்தகைய ஒரு தகாத மாற்றம் ஏற்படாமல் தடுக்க நாம் கையாளுவதே உணவுப்பதப்படுத்தும் முறைகளாகும்.

பொதுவாக உணவின் தன்மையினை விஞ்ஞானம் மூன்றாக பகுக்கின்றது. நீர்ச்சத்து அதிகம் நிறைந்த உணவுப்பொருட்கள், நீர்ச்சத்து குறைந்த

உணவுப்பொருட்கள் மற்றும் நீர்ச்சத்து அல்லாத உணவுப்பொருட்கள் என்ற அறிவியல் வகைப்பாட்டின் மூலம் நாம் அன்றாடம் புழங்கும் உணவுகள் பிரிக்கப்படுகிறது. ஒரு உணவின் அழுகி போகும் தன்மையானது அவ்வுணவின் நீர்ச்சத்தின் அளவை பொருத்தே நிர்ணயிக்கப்படுகிறது. ஏனென்றால் உணவை தாக்கும் நுண்ணுயிரிகளின் வாழ்வியல் ஆதாரமாக விளக்குவதும் இந்நீர்ச்சத்தேயாகும். எனவே தான், நீர்ச்சத்து அதிகம் நிறைந்த பால், பழங்கள், கீரை வகைகள், நீர் காய்கறிகள், மாமிச வகைகள் போன்ற அனைத்தும் மிக எளிதாக வீணாகி விடுகின்றன. [5] இந்த உணவுகளின் நீர்த்தன்மையை வற்றி போக செய்வதன் மூலம் இவற்றின் ஆயுள் காலத்தை அதிகரிக்க முடியும். இவ்வுபாயம் தான் நம் புறநானூற்று முன்னோர்கள் உபயோகித்த உலர வைத்த முறையாகும்.

உணவின் அழுகி போகும் தன்மைக்கு நீர்ச்சத்து மட்டும் அன்றி அவற்றின் நொதிகளால் ஏற்படும் உயிர் வேதி மாற்றங்களும், சுற்றுச்சூழலின் தற்பவெப்பநிலையும் நுண்ணுயிரிகள் வளர தேவையான சூழலை ஏற்படுத்துகின்றன. எனவே, 'உலர வைத்தல்', உப்பில் ஊற வைத்து உணவின் நீர்ச்சத்தை உறிஞ்சி எடுத்தல், தேன் அல்லது சர்க்கரை பாகில் ஊற வைத்து நீர்ச்சத்தினை உறிஞ்சி எடுத்தல், கொதிக்க வைத்து வற்றச் செய்தல், புளிக்க செய்தல் மற்றும் குளிர்வூட்டுதல் போன்ற முறைகள் பதப்படுத்த உதவுகின்றன. இத்தகைய முறைகளைக் கையாண்டு நுண்ணுயிர்கள் வளர எதுவான சூழலை குறைத்து உணவின் ஆயுளை நீடிக்க செய்ய முடியும். நம் சங்கத் தமிழர்களும் மேற்கூறிய உணவு பக்குவப்படுத்தும் முறைகளை கையாண்டு இவ்விஞ்ஞான அறிவினை உலகிற்கு அறிமுகப்படுத்திய பாங்கு இரண்டாயிரம் நுற்றாண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்களின் மூலம் அறியப்படுவது சிறப்பு.

**"பழம் சோற்று புக வருத்தி" - (புறநானூறு-395) [3]**

**"வாடுன் புழுங்கல், வாடாத் தும்பை"- (பெரும்பாணாற்றுப்படை-100) [6]**

**"நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த தகைமாண் காடியின்" - (பெரும்பாணாற்றுப்படை) [6]**

**"இரும்புலி துறந்த ஏற்று மான் உணங்கல்"- (அகநானூறு, 107) [7]**

**"படை மூன்றில் சிறுதினை உணங்கல்"- (புறநானூறு, 319) [3]**

சங்க தமிழர்களின் உணவியல் கலாச்சாரம் அறியும் நோக்கில் இக்கட்டுரையாளர் மேற்கொண்ட ஆய்வில் 14 % சங்க உணவுகள் உணவுப்பதப்படுத்தும் முறையினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சுவடிகளும், கல்வெட்டுகளும் காட்டும் உணவியல் உரையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உணவுகளில் பெயர் குறிப்புகளின் மூலமாகவே அவை பக்குவப்படுத்தும் முறைகளும் வெளிப்படுவது அழகு.[8]

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பஞ்சம், வெள்ளம், போர் போன்ற சூழ்நிலையில் பதப்படுத்தப்பட்ட உணவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நெடுதூரம் கப்பலில் பயணம் செய்வோர் உண்பதற்கும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் பயன்பட்டுள்ளன. இம்முறைகள் உணவின் ஆயுளை மட்டும் நீட்டிக்காமல் நறுமணத்தையும் சுவையும் வழங்கவல்லது.

அதுபோல, பதப்படுத்துதலின் முக்கிய முறையான 'நொதித்தல் முறை' அவ்வுணவில் உள்ள ஊட்டங்களை அதிகரிப்பதாகவும் அறிவியல் தகவல்கள் தெரிவிக்கின்றன. வைட்டமின் –பி பிரிவுகளில் அடங்கியுள்ள இரத்த அணுக்களின் செறிவினையும், உடலின் ஆற்றலையும் கூட்டும் ஃபோலிக் அமிலம், சைனோகோபாலமின், நிக்கோடினிக் அமிலம், ரைபோஃப்ளேவின் மற்றும் தையமின் வைட்டமின்களை நொதித்தல் முறை அதிகப்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. [9]

இவற்றிற்கும் மேலாக மனித உடலின் குடல் நுண்ணுயிரிகள் புளிக்க வைத்த உணவுகளிலிருந்து பெறப்படுவதாகவும், அதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்பு மண்டலம் தூண்டப்பட்டு பல்வேறு வியாதிகளுக்கு தீர்வாகவும் இது அமைவது சிறப்பு. இவ்வாறு நொதிக்கும் உணவுகளின் சிறப்புகளை அறிந்து தான் என்னவோ நம் பழந்தமிழர்கள் வண்டினால் புளிக்க வைத்த தேன், கள், தேறல், தெளிவு, மட்டு, நறவு போன்ற மதுப்பானங்களையும் அன்றாட வாழ்வில் பயன்படுத்திருப்பார்களோ எண்ணவோ.

சமீபத்திய அமெரிக்க அறிவியல் ஆய்வு புளித்த பழைய சோற்றில் எண்ணற்ற சத்துக்கள் உள்ளதையும் அதை உட்கொண்டால் கிடைக்கும் நன்மைகளையும் கண்டறிந்து பட்டியலிட்டுள்ளது.[10] சுவோன் பல்கலைக்கழகம் நம் பழந்தமிழர் தோற்றுவித்த பழஞ்சோற்றினை மருத்துவ உணவாக அங்கீகரித்துள்ளது மிகுந்த பெருமைக்கும் ஆச்சரியத்திற்கும் உரிய ஒரு தகவலாகும். இத்தகைய நீண்ட நாட்களுக்கு தேவையான உணவினை சேகரித்து தேவைக்கேற்ப அதனை பயன்படுத்தி வாழும் பாங்கினை நாம் முன்னோரிடம் பெரும் அளவு காணமுடிகிறது.

**காலம் அறிந்து (தவறாமல்) உணவை உட்கொள்ளல்**

மனிதர்களின் அன்றாட வாழ்வியலின் நடைமுறைகளான உறக்கம், விழிப்பு, உண்ணல், விரதம் மற்றும் உடலியல் இயக்கங்களான இருதய செயல்பாடு, ஹார்மோன் சுரப்பு போன்ற அனைத்து காரியங்களுமே 'சிற்காடியன்' கடிகாரம் என்ற நம் உடலுக்குள் புதைந்த ஓர் நேர கட்டுப்பாட்டு இயக்கத்தின் மூலம் பராமரிக்கப்படுகின்றது. இக்கடிகார அமைப்பின் மூலமே நம் எண்ணம், செயல், சிந்தனை போன்றவை மேம்படுத்தப்படுகின்றன. இத்தகைய வியத்தகு உயிரியல் கடிகாரம் நம் சுற்றுச்சூழல் அமைப்பினாலும் அவற்றில் ஏற்படும் மாற்றத்தினாலும் பெரிதும் பாதிப்பு அடைந்து, உடலில் மூலை முடுக்குகளில் நோய் காரணிகளை உருவாக்கும் மூலமாக விளங்குகின்றது என்பது அதிர்ச்சியடைய செய்யும் தகவலேயாகும். [11]

இயற்கையின் சாரலில் நனைந்து இயற்கையோடு ஒன்றிய வாழ்வில் இன்பம் கண்ட நம் முன்னோர்கள் இந்த அதிர்ச்சியுட்டும் தகவலை கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள். இக்கால வாழ்வியல் முறையில் ஏற்பட்ட மாற்றங்களே மனித இனத்தின் நோய் பரப்பும் காரணிகளாகும் என்றபதில் எந்த வித ஐயமும் இல்லை.

பண்டைய சீனர்கள் உணவு உட்கொள்ளும் வரையரைகளை சூரியனின் அசைவுகளுக்கு ஏற்ப வகுத்துள்ளனர். சூரியனின் அசைவுகளுக்கு இணையாக உடலைச் சுற்றி ஆற்றல் பாய்கிறது என்றும், அதற்கேற்ப நம் உணவு நேரமாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் நம்பினர். சூரியனின் கதிர்கள் அதிகம் தோன்றும் காலை 7-9 என்பது அதிக உணவை உட்கொள்ள உகந்த வயிற்றின் நேரம் எனவும், மதியம் மற்றும் மாலை பிற உறுப்புகளின் ஆதிக்க அதிக நேரமாகவும், குறைந்த அளவே உணவு உட்கொள்ளும் நேரமாகவும் அவர்கள் நம்பினர். இதை தான் நம் தமிழர்கள் வாழ்விலும் கடைப்பிடிக்கப்பட்ட ஒழுங்கு என்பது "அரசனைப் போலக் காலை உணவை உண்ணுங்கள், இளவரசனைப் போல மதிய உணவை உண்ணுங்கள், இரவு பரம ஏழையைப் போல உண்ணுங்கள்" என்ற பழமொழி தெளிப்படுத்துகின்றது. [12]

நாம் உண்ணும் உணவினை குறித்தும், அவ்வுணவினை எவ்வப்போதெல்லாம் உண்ணவேண்டும், எவ்வாறு உண்ண வேண்டும் என்பதற்கெல்லாம் ஓர் முறையியல் உண்டு என்ற பழந்தமிழ் மக்களின் வாழ்வியல் அறங்களைப் பதிவுசெய்து விளக்கும் நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. நாம் உட்கொள்ளும் உணவு மட்டும் தூய்மையானதாக இருந்தால் போதாது, அவ்வுணவினை உண்ணும் மனிதர்களும் தூய்மையாக இருத்தலின் அவசியத்தை, பெருவாயின் முள்ளியனார் வரிகள் விளக்குகின்றன.

**"நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலம்செய்து**

**உண்டாரே உண்டார் எனப்படுவர்; அல்லாதார்**

**உண்டார் போல் வாய்பூசிச்செல்வர்; அது எடுத்துக்**

**கொண்டார் அரக்கர் குறித்து" – (ஆசாரக்கோவை) [13]**

ஆசாரக்கோவையின் இவ்வரிகள் உடல் சுத்தத்தின் முக்கியத்துவத்தையும், சுகாதாரமின்மையின் கேட்டினையும் எடுத்துரைக்கும் விதம், தொற்று நோயின் பிடியில் நாம் இருக்கும் காலக்கட்டத்தில் நம்மை முன்னோக்கி சிந்திக்க வைக்கும் சொற்றொடர்களாக அமைந்திருப்பது சிறப்பு.

மேலும் உணவு உட்கொள்ளும் முறைமைகளில் எவ்வாறான உணவுகளை முதலில் உண்ணவேண்டும் அதன் பின் உண்ணவேண்டிய உணவுகள் எவை என்பதை அதன் சுவைகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தி ஓர் ஒழுங்குமுறையியலை நமக்கு தெளிவுபடுத்திய பெருமை பழந்தமிழ் மக்களையே சாரும். உடலின் ஆரோக்கியத்தை மென்மேலும் பாதுகாத்து வைப்பதற்கான வழிகளாகவே இவ்வொழுங்கு முறையியலை பார்க்க முடிகிறது.

**'கைப்பன எல்லாம் கடை; தலை தித்திப்ப,**

**மெச்சும் வகையால் ஒழிந்த இடை ஆக,**

**துய்க்க முறைவகையால் ஊண்." – (ஆசாரக்கோவை) [13]**

நாம் உண்ணும் உணவில் அறுசுவை கூறுகளும் இருப்பது மிகவும் அவசியம். இனிப்புப் பண்டங்களை முதலில் எடுத்துக்கொள்ளும்போது உமிழ்நீர் சுரப்பு அதிகரிக்கும், செரிமானம் தூண்டப்படும். இந்தச் செயல்கள் உண்ட உணவு நன்கு செரிமானமாகி அடுத்த வேளை பசியெடுக்க உதவும். கசப்பான பொருள்களை உண்ட பிறகு மற்ற பொருள்களை உண்ணுவது சிரமம். ஆதலால் கசப்புச் சுவையை கடைசியில் உண்ண வேண்டும். இதற்கிடையில் மற்ற புளிப்பு, துவர்ப்பு மற்றும் உவர்ப்பு சுவையுடைய பொருள்களை உண்ணலாம். [14]

அதுபோல, பதார்த்தங்களின் குணங்களையும், அவைகளைப் புசிக்க வேண்டிய காலபேதங்களையும் பகுத்தறிந்து புசிப்பவனே பிணிகளையும் காணாதவர்களாய் புத்திரர்களையும், மலைபோல் உறுதியான சரீரத்தையும், நீண்ட ஆயுளையும் பெற்று இன்புற்று வாழ்வார் என்ற வாழ்வினை வெல்லும் சூத்திரத்தினை தேரையர் சித்தர் தெளிவாக எடுத்துரைக்கின்றார். [8]

**திரவியலும் தில்லுணர்ந்தே தின்றனுப விப்பார்**

**பரவியநோய் காணாராய்ப் பால-ரரிவயதேர்**

**மெய்யங் களித்தடுகோன் மிக்காயுள் பெற்றீரேழ்**

**வையங் களித்துடவாழ்வார் - பதார்த்த குண சிந்தாமணி**

## உணவுப்பண்டங்களில் பல்வேறு வகைமைகளை உருவாக்குதல் மற்றும் உணவு தயாரிப்பதில் பல்வேறு முறைமைகளை பயன்படுத்தல்

பழங்காலத்தில் மனிதர்கள் வேட்டையாடி கிடைத்த மாமிச உணவுகள் மற்றும் காய், கனி, கிழங்கு வகைகள் போன்றவற்றை எவ்விதமான தயாரிப்பு முறைகளையும் அறியாமல் தமக்கு கிடைத்த உணவுகளை அவ்வாறே உண்டு வந்திருந்தனர். அதன் பின் ஏற்பட்ட நாகரிகத்தின் வளர்ச்சி அவற்றின் விளைவாக உருவான புதிய கருவிகளின் கண்டுபிடிப்புக்கள் ஆகியவற்றால் உணவினை சமைத்து உண்ணும் வழக்கத்திற்கு முன்னேறினர். அதன் விளைவாக உணவுப்பண்டங்களை சமைக்கும் முறையியலிலும் பல்வேறு வகைமை சார்ந்த உணவுகளை தயாரிப்பதிலும் ஆர்வம் காட்டி வந்துள்ளனர்.

உணவு சமைத்தல் என்ற செயலின் அறிவியல் பின்புலத்தை உற்றுநோக்கினால் அது ஓர் ஆற்றலை உட்கிரகித்து, அணுக்களை மாற்றிமைத்து, மனிதர்கள் உடலுக்கு ஏற்றம் தரும் வண்ணம் அவ்வுணவினை உருமாற்றும் ஒரு

ஏற்றமிகு செயலாகும். இவ்வாறு நெருப்பின் உதவியுடன் உணவுப்பொருட்களை சமைக்கும் போது அவற்றின் நீர்ச்சத்துக்கள் வெளியேறி உள்ளிருக்கும் நாசிக்கினிய நறுமண வேதிப்பொருட்களை உமிழ செய்து அவ்வுணவின் ஊட்டத்தை செறிவேற்றுவதுடன், உடலுக்கு நன்மை பயக்கும் விதமாக செயல்படுகிறது. இக்கலையின் முழு வடிவம், சமைப்பவரின் கலாச்சார பின்னணியைப் பிரதிப்பலிக்கும் மாண்பாகும்.

உணவு அறிவியல் துறையின் பார்வையில், சமைக்கும் முறைகள் இருபிரிவாக வகைப்படுத்தப்படுகின்றது. நீர் ஏற்றி சமைக்கும் முறை, நீர் அன்றி சமைக்கும் முறை என்ற இருபிரிவுகளின் பல அங்கங்களாக கொதிக்க வைத்தல், புழுக்கி சமைத்தல், ஆவியில் அவித்தல், வேக வைத்து வடித்தல் மற்றும் சுண்ட காய்ச்சுதல், பொரித்தல், வதக்கல், வறுத்தல், சுட்டு சமைத்தல், கடைதல், மசித்தல் போன்ற பக்குவ முறைகள் வகுக்கப்பட்டன. இவற்றுள் சமைக்கும் முறைகளானது சமைக்கும் பொருளுக்கு ஏற்ற வண்ணம் உபயோகப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே அவ்வுணவின் முழுமையான குணங்களையும், மருத்துவப் பலன்களையும் பெறமுடியும்.

உதாரணமாக, தானிய வகைகளை புழுக்கி சமைத்தால் தான் செரிமான சக்தி கூடுவதுடன் நீரில் கரையும் பி-வைட்டமின் பாதுகாக்கப்படுகின்றன. அதுபோல, காய்கறிகளை பெரிதாக நறுக்கி சமைத்தால் தான் ஊட்டம் சேமிக்கப்படுகின்றது. புரதம் நிறைந்த உணவுகளை சுட்டோ அல்லது வாட்டியோ சமைக்கும் போது அவற்றின் செரிமானம் கூடுவதுடன் ஊட்டங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இவ்வறான சமையல் முறைகளை தான் சங்க இலக்கியங்களில் மிதவை, துழவை, நுவணை, புழுக்கல், சுடுதல், வாட்டுதல் போன்ற பெயர்களில் உணவுகள் பக்குவப்படுத்தப்பட்டமையை சுட்டிக்காட்டுக்கின்றன.

**"வாராது அட்டவாடுன் புழுக்கல்" - (பெரும்பாணாற்றுப்படை, 100) [6]**

**"குறுமுயல் கொழுஞ் சூடு கிழித்த ஒக்கலொடு" – (புறநானூறு, 34) [3]**

**உணவை மருந்தாக உட்கொள்ளும் முறைகள்**

உணவே மருந்து என்று கூற்று காலம் எடுத்துரைக்கும் அனுபவமாகும். இவ்வுலகில் தோன்றும் ஒவ்வொரு உயிருக்குமான அடிப்படைத் தேவைகளில் முதல் தேவையாக உணவு விளங்குகின்றது. இவ்வுணவில் இருந்து பெறப்படும் வேதியியல் மூலக்கூறுகளினால் மட்டுமே ஒவ்வொரு உயிரின் செல்களும் புத்தாக்கம் பெறுகிறது. இத்தகைய வேதியியல் மூலக்கூறுகளைத் தான் நாம் 'ஊட்டம்' என்று அழைக்கின்றோம். இவ்வூட்டங்களின் தேவை ஒவ்வொரு உயிருக்கும் வேறுபடுவதுடன் மட்டுமல்லாமல் அவற்றின் இருப்பிடம், காலம் மற்றும் தேவைக்கு ஏற்ப மாற்றம் கொண்டு பரிந்துரைக்கப்படுகின்றது. இவற்றில் ஏற்படும் ஏற்ற தாழ்வுகளின் மூலமே நோய் உருவாகுவதுடன் அவற்றின் பக்க விளைவுகளும் தூண்டப்படுகின்றது. எனவே, இந்நோய்களுக்கு காரணமான ஊட்ட குறைபாடு தான் அவற்றை போக்கும் மருந்தாகவும் விளங்குகின்றது என்று கூறுவதில் ஐயமில்லை.

ஆய்வு தகவல்களின் கருத்துப்படி, நோய்களை எதிர்க்க வல்ல அல்லது நோய் ஏற்படுத்து காரணிகளை தாக்கவல்ல உணவுகளே 'செயல்பாட்டு உணவுகள்' (Functional foods) என்று அழைக்கப்படுகிறது. [15] [16] சமீப காலத்தில் வெளியான அறிவியல் ஆய்வுகள், இவை மனித உடலில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும், உறுதியை கூட்டுவதாகவும் அவற்றில் உள்ள ஊட்டங்களின் அளவு சரிவிதமாகவும் உள்ளதால் 'சிறப்பு உணவுகள்' (Super foods) என்று அழைக்கின்றன. [17]

அன்றாடம் நாம் உண்ணும் உணவின் தன்மையைப்பொறுத்தே நமது உடலின் ஆரோக்கியமும் அமைகிறது. உணவு உட்கொள்ளும் முன்பும் பிறகும் மருந்தை உண்ணும் இன்றைய சூழலில், நாம் அறிந்துகொண்டு பின்பற்ற வேண்டிய மிக முக்கியமான ஒரு முறையியலாகவே பழந்தமிழர் உணவு உட்கொண்ட முறை உள்ளது. இயற்கை சார்ந்த உணவை அருமருந்தாக எடுத்துக்கொண்டு ஆரோக்கியமான ஒரு

சூழலில் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை நமக்கு பழந்தமிழ் மக்களின் வாழ்வியல் சார்ந்த பதிவுகள் விளக்குகின்றன.

**" மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**

**அற்றது போற்றி உணின்" -(திருக்குறள்)** [17]

என்ற வள்ளுவரின் அடிகள் உடல் ஆரோக்கியத்தில் உணவு செரிமானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் விதமாக விளங்குகின்றது.

நாம் உட்கொள்ளும் உணவு தான் நோய்க்கும் காரணமாக உள்ளது. ஆகவே உணவினை அளவோடும் அதனை உட்கொள்ளும் முறையியலையும் பின்பற்ற வேண்டியதும் அவசியமாகிறது. இக்கட்டுரையாளர் மேற்கொண்ட ஆய்வின் தகவல் படி, உடல் உபாதைகளுக்கு ஏற்றவாறு மருந்துவ பரிந்துரைகள் வழங்கப்படுவது போல உணவியல் பரிந்துரைகளும் உபாதைகளை விடுவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த உணவின் தன்மையும், சேர்க்கையும் ஔவுடதமாக ஆக்கும் போது அதன் மருத்துவ குணங்கள் மெருகேற்றபட்டு நோய் நீக்கும் தன்மை அதிகரிக்கின்றது என்ற உண்மை உறுதிப்படுத்தப்படுகின்றது. [8]

**முடிவுரை**

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**

**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**

**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**

**உடம்பை வளர்த்தேன். உயிர் வளர்ந்தேனே - திருமந்திரம், 724**. [19]

திருமூலரின் இம்மெய்ஞான வரிகளில் ஒரு மருத்துவரின் பரிந்துரைகளை எடுத்துரைக்கும் சூத்திரம் அடங்கியுள்ளது வியப்பிற்குரியது. உடல் என்ற ஆதாரத்தை உயிரால் காப்பது போல் உயிரின் ஆதாரத்தை உணவே காக்கும் என்ற அறிவியல் தகவல் காலத்தால் முற்பட்ட சிந்தனையாக இங்கு வெளிப்படுக்கின்றது. இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமே தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளமாக உணவியல் கலாச்சாரம் அமைந்துள்ளதை சுட்டுவதாகும். கட்டுரையின் ஆய்வு களத்தில் வெளிப்பட்ட தகவல்கள் தமிழ் முன்னோர்கள் உணவினை, அதன் அறிவியல் தன்மையினை நன்கு அறிந்தவர்களாக விளங்கியமைக்கான சான்றுகளுடன் அவற்றின் மூலம் உணவை மருந்தாக்கும் சூத்திரத்தினையும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது குறிப்பிட்டத்தக்கது. உணவின் அறிவியலை உற்று நோக்கி அவற்றின் குணநலன், மருத்துவபலன் அறிந்து பக்குவப்படுத்தி, அவற்றின் உண்ணும் நேரம், காலம், அளவு அறிந்து புசித்து, மித மிஞ்சிய உணவுப்பொருட்களைப் பக்குவமாகப் பதப்படுத்தி உணவை பாதுக்காத்து வந்துள்ள மாண்பினை இவ்வாய்வு வெளிப்படுத்துயுள்ளது. மேலும் கொரானா பெரும் தொற்று காலத்தில் நாம் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு உணவியல் கலாச்சாரமும் நம் முன்னோரின் வழிதோன்றல் என்று கூறும் விதமாகவும் அமைந்துள்ளது. ஆகவே, இக்கட்டுரையின் சாரம் இவ்வுலகிற்கு வழிக்காட்டும் வாழ்வின் ஆதாரமாக நம் தமிழ் முன்னோர்களின் உணவியல் கலாச்சாரம் விளங்கியுள்ளது என்பதனை நிரூபிக்கிறது.

**துணை நூல்கள்**


1. 'Rudimentary Tamil-Brahmi script' unearthed at Adichanallur, T.S.Subramanian, The Hindu, 2005
2. பட்டினப்பாலை, ஆராய்ச்சியும் உரையும், ரா.இராகவையங்கார், அண்ணாமலை பல்கலைகழகம், 1951
3. புறநானூறு, ஔவை துரைசாமி, தமிழ் மண் பதிப்பகம், சென்னை,2012
4. சங்க இலக்கியத்தில் உணவு பதப்படுத்தல், கா.நளினி, த.சிவக்குமார், ஆய்வுச்சுடர் பன்னாட்டு பன்முகத் தமிழ் மின்-ஆய்விதழ், 2019

5. A review on mechanim and commercial aspects of food preservation and processing, Sadat Kamal Amit, 2017
6. பெரும்பாணாற்றுப்படை, பொ.வே.சோமசுந்தரனார், சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை
7. அகநானூறு, மூலமும் உரையும், புலியூர்க் கேசிகன், சாரதா பதிப்பகம், 2010
8. உணவே மருந்து-பண்டைத்தமிழர் வாழ்வை முன்வைத்து, ந.செல்லம், ச.உமாமகேஸ்வரி, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், 2021
9. The best time to eat, Times Entertainment Times, 2019, https://timesofindia.indiatimes.com/life-style/health-fitness/diet/the-best-time-to-eat/articleshow/49658155.cms
10. உலகிலேயே பழைய சாதம் தான் ஊட்டச்சத்துமிக்க சிறந்த காலை உணவு - அமெரிக்க ஆய்வில் தகவல், மகாலெட்சுமி, 2021, https://tamil.boldsky.com/health/wellness/2015/health-benefits-palaya-satham-009300.html
11. When to eat: The importance of Eating Patterns in Health and Disease, Emily N.C. anoogaian, Et.al, Journal of Biological Rhythms, 2019, https://doi.org/10.1177/0748730419892105
12. How meal timings affect your waistline, Linda Geddes, BBC Future, 2019, https://www.bbc.com/future/article/20190304-how-meal-timings-affect-your-waistline
13. ஆசாரக்கோவை, பெருவாயின்முள்ளியாசிரியர், ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சிப்பதிப்பகசாலை, 1899
14. காலை, மதிய, இரவு... இப்படி இருக்க வேண்டும்!, கு.மகேஷ்முரளிகிருஷ்ணா, விகடன், 2020
15. Functional foods: Benefits, concerns and challenges- A position paper from the American council on Science and Health, Clare M.Hasler, The Journal of Nutrition, Volume 132, Issue 12, December 2002, Pages 3772–3781, https://doi.org/10.1093/jn/132.12.3772,
16. The Role of Functional foods, Nutraceuticals, and food supplements in intestinal health, Avelija cencic and Walter chingwaru, Journal of Nutrients, 2010
17. Superfoods: Recent Data on their Role in the Prevention of Diseases, Charalampos Proestos, Current research in Nutrition and Food Science, 2018
18. திருக்குறள் புதிய உரை, புலியூர்க் கேசிகன், பூம்புகார் பதிப்பகம், 2010
19. **திருமந்திரம் ,** பாலூர் கண்ணப்ப முதலியார், வானதி பதிப்பகம், சென்னை, 1965

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Chellam N., (2021) Scientific reviews of ancient Tamil Food symbols shown in the Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:261-268. Cauvery College For Women, Trichy.

**முனைவர் கார்த்திகேஸ் பொன்னையா**
தமிழ்த்துறைத் தலைவர்
Universiti Pendidikan Sultan Idris, Malaysia.

# ஊழ்வினைக் குறித்துத் திருவள்ளுவரின் சிந்தனைகள் ஒரு பார்வை

**கட்டுரைச் சுருக்கம்**

திருக்குறள் அனைத்துக் காலத்திற்கும் ஏற்புடைய தலைச்சிறந்த நூல். அது வாழ்வின் இன்ப துன்பங்களைப் பற்றி ஆராயும் நூலாகவும் படைக்கப்பட்டிருகிறது. அவ்வகையில், ஊழ்வினைப்பற்றி பல குறட்பாக்களை வள்ளுவர் படைத்துள்ளார். நாம் நம் வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்ப துன்பங்களைப் பற்றியும், அவை ஏன் ஏற்படுகிறது என்பதை பற்றியும், நாம் நமது முற்பிறவியில் செய்த கர்ம வினைகளான நன்மை தீமைகளுக்குகேற்ப அதன் விளைவுகளை அனுபவிக்கவே இப்பிறப்பு என்பதைப் பற்றியும் அறியும் அறிவே ஊழ்வினை எனப்படுகிறது. இதனைத் திருவள்ளுவர் அவரது திருக்குறளில் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை அறிய முற்படுவதே இக்கட்டுரை. ஊழின் தோற்றம் செயற்காரணம், அதன் எண்ணம், விளைவு, நீக்கும் விளைவு ஆகியவற்றை வள்ளுவரின் திருக்குறளைக் கொண்டு ஒப்பு நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக விளங்குகிறது. இது விளக்கமுறை ஆய்வு முறைமையைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டது. இக்கட்டுரையின் வாயிலாக நாம் இப்பிறப்பினைச் செவ்வையாக வாழ்ந்தால் அடுத்தப் பிறப்பு நமக்குச் சிறப்பானதாகவோ அல்லது இதுவே கடைசி பிறப்பாகவோ இருக்க திருவள்ளுவர் கூறும் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது.

**முன்னுரை**

ஊழ்வினை என்பது கர்ம பலன். ஊழ்வினை முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினையைக் குறிக்கின்றது. ஒவ்வொருவரும் முற்பிறப்பிலே செய்த நல்வினை தீவினைகளின் பலனை இப்பிறப்பிலேயே அனுபவித்துத்தான் தீர வேண்டும். ஊழ் என்றால் வரிசை, தொடர்ச்சி என்று பொருள் கொள்ளலாம். ஒருவர் செய்யும் எந்தவொரு செயலும் அதாவது வினையும் அப்படியே முடிவு பெறாது; தொடர்ந்து வரும். வினைத் தொடர்ச்சி என்னும் இயற்கை நியதியை வெல்லும் ஆற்றல் எவருக்கும் இல்லை. வாழ்க்கைச் சூழ்நிலையை ஆராயும் போது, பொதுவாகத் துன்பமான வாழ்க்கை, சுகமான வாழ்க்கை, ஆயுள் இதெல்லாம் ஊழ்வினையைப் பொறுத்தது என்பது சமயங்களில் நம்பப்படுகின்றது. ‘விதியின் பிழை நீ இதற்கு என் கொல் வெகுண்டது’ என்று இராமன் இலக்குவனுக்கு எடுத்துரைப்பதாகக் கம்பன் சொல்வது ஊழ்வினையைத் தான். உலகின் ஒப்பற்ற கருத்துக் களஞ்சியமாக விளங்கும் திருக்குறளும் விதி என்ற ஒன்று ஒவ்வொருவர் வாழ்விலும் செயல்படுவதை ஒப்புக் கொள்கிறது. ‘ஊழிற் பெருவலி யாவுள’ என்பதை வள்ளுவன் உறுதியாகப் பகர்கின்றார். தமிழ்ச் சங்கப் பாடல், கம்பராமாயணம், நளவெண்பா உள்ளிட்ட பல்வேறு இலக்கியங்களும் மனித வாழ்வில் விதி இயங்குவதை ஏற்கின்றன. ஊழ் நம் வாழ்வில் செலுத்தும் அதிகாரத்தை யாராலும் மாற்ற இயலாது என்ற கருத்தை விளக்கி ஊழ் என்ற தலைப்பிலேயே முப்பத்தெட்டாம் அதிகாரத்தை எழுதுகிறார் வள்ளுவர். ஆகூழ், போகூழ் என இருவகை ஊழ்வினை உண்டு. நம் வாழ்வில் ஆகூழ் செயல்படும் காலத்தில் பொருள் சேர்ப்பதற்குத் தேவையான முயற்சி நம்மிடம் தானே தோன்றும். போகூழ் செயல்படுமானால் பொருள் அழிவதற்குக் காரணமான சோம்பல் தோன்றிவிடும்.

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்

போகூழால் தோன்றும் படி (குறள் 371)

என்கின்றார் வள்ளுவர். கர்மம் அல்லது வினைப்பயன் என்ற சொல்லுக்குச் செயல் என்பது பொதுவான பொருள். ஒவ்வொரு செயலுக்கும் எதிர்வினை ஏற்படும் என்பது உலகப் பொது வழக்கு. அந்த வழக்குப் போலவே, இந்து சமயத்திலும் ஒவ்வொருவரின் செயல் வினைக்கும் அதற்கேற்றாற்போல் பலன் கிட்டும் என்பதைக் குறிப்பதற்குக் 'கர்மா' சென்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதனைத் தமிழில் "வினைப்பயன்" என்றும் கூறுவர்.

கர்மா என்பது ஒருவருக்கு விதிக்கப்பட்ட தலைவிதி அல்ல. அஃது அவரவர் வினைப்பயன் அல்லது கர்மவினை ஆகும். அவரவர் கர்மம் அவரவர் செய்யும் செயலில்தான் இருக்கிறது. நல்ல செயல்களைச் செய்தால் அதன் பயன் நன்மை தரும். மாறாகத் தீவினையோ, துன்பம் தரும் என்பது வேதவாக்கு. ஒருவரின் அனைத்துச் செயல்களின் பயன்கள், அவரவர் முற்பிறவிச் செயல்பாடுகள் உட்பட, அவரது கர்மவினை தீர்மானிக்கின்றது.

**திருக்குறளில் ஊழ்வினைக் குறித்தக் குறட்பாக்கள்**

வள்ளுவர் முன்வினை, பழவினை என்பது பற்றிய கொள்கையுடையவர் என்பதற்குக் குறள் எண்கள் 5, 10, 38, 62, 98, 107, 126, 319, 339, 345, 349,351, 356, 357, 358, 361, 362,398, 459, 538,835, 972,1002,1042, 1315 ஆகியன சான்றாக எடுத்துக்கொள்ளலாம்.

**ஊழ்வினை தோன்றக் காரணம்**

ஒருவனின் வாழ்விற்கும் செயலிற்கும் தொடர்புண்டு எனும் செயற்கோட்பாட்டினைக் கொண்டது ஊழ்வினை கொள்கையாகும். இருப்பினும்,

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்

தவாஅப் பிறப்பீனும் வித்து (குறள் 361)

என்கிறார் வள்ளுவர். ஆசையே பிறப்பு என்னும் முளைவிட்டுப் பிறவி நிலைக்குக் காரணமாகிறது. ஆசை உடையவருக்கு மறுப்பிறப்பு என்பது உண்டு. ஆசையே பிறவித்துன்பங்களுக்குக் காரணமாகிறது. இங்கே 'எல்லா உயிர்க்கும்' என்று கூறியிருப்பது ஆராய்ந்து நோக்கத்தக்கது. ஆசை என்பது பிறவித்துன்பத்தை எல்லா உயிர்களுக்கும் தரும் என்றும், எவ்வகைப்பட்ட மனிதர்களுக்கும் தரும் என்றும் கொள்ளலாம். எஞ்ஞான்றும் என்று கூறியது, பல்லாயிரம் ஆண்டுகள் காலமாற்றம் உண்டாகியிருந்தாலும், பிறவித்துன்பத்திற்கு ஆசை என்ற ஒன்றே மூலகாரணமாக அமைகிறது. அதுவே பிறவாமை நிலைக்குத் தடையாகவும் இருக்கிறது.

**செயற்காரணம்**

செயலுக்கும் ஊழ்வினைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. செயலின் விளைவினால் ஒருவர் பெற்ற துன்பங்கள் விளக்கப்படுகின்றன. ஒருவன் தன் செல்வத்தை இழந்து குற்றம் சாட்டப்பட்டுப் பழிச் சொல்லுக்கு ஆளாகி துன்பப்பட நேரிடுவது தான் செய்யும் செயலாலே. அதோடு ஒருவன் செல்வ செழிப்புடனும் அனைவரும் போற்றத்தக்க இன்பமான வாழ்க்கையை வாழ்வதற்கும் தான் செய்த நல்வினையே காரணமாகின்றது.

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும்

துய்த்தல் அரிது" (குறள் 377)

கோடிப்பொருள் சேர்ந்திருந்தாலும் இறைவன் விதித்த விதிப்படிதான் நாம் அதை அனுபவிக்க முடியுமே தவிர, நம் விருப்பப்படி அனுபவிப்பது கடினம். இதனை இசைத்தலும் உரிய வேறிடத்தான் (தொல்காப்பியம். சொல்.59) பொருத்திப்பார்க்கலாம்.

**எண்ணம்**

ஒருவன் எந்த ஒரு செயலை, கருமத்தை, வினையைச் செய்வதற்கும் அவனது எண்ணமே அடிப்படையாக அமைகின்றது. இவ்வெண்ணங்களே அவனவனது ஊழ்வினைக்கும் காரணமாக அமைகின்றது என்று சமணம் கூறுகின்றது. சமண சமயம் செயல்களை விட எண்ணங்களே ஒருவனது வாழ்வில் இன்பத் துன்பங்களுக்குக் காரணமாகின்றன என்னும் கொள்கையுடையது. சமண சமயத்தில் தீய எண்ணம் கொண்டோர் விலங்குகளாகப் பிறப்பெடுப்பர் என்று ஆழ நம்புகின்றனர். எடுத்துக்காட்டாக, தீய எண்ணம் கொண்ட யசோதரனும் அவன் தாயும் பல பிறப்புகள் எடுக்க அவர்களது எண்ணங்களே காரணமாய் அமைந்துள்ளன. ஒருவன் எண்ணும் எண்ணத்தின் விளைவாலேயே அவனது செயல்கள் அமையும் என சமணர் குறிப்பிடுகின்றனர். எண்ணம் நல்ல எண்ணமாக இருந்தால், அதன் விளைவாக நல்ல செயல்களைச் செய்வர். நல்ல நண்பர்களுடன் கலந்திருப்பர். பெரியோர்களின் அன்புக்கும் ஆட்படுபவர். இம்மனிதனால் சமூகத்திற்குச் சீர்குலைவுகள் ஏற்படாது. ஆகவே, ஊழ்வினைக்கு எண்ணமே அடிப்படையாகத் திகழ்வதாகச் சமண சமயம் கூறுகின்றது.

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்

கேடும் நினைக்கப் படும் (169)

பொறாமை மனதானது செல்வமும், பொறாமை கொள்ளாத செவ்விய மனதானது வறுமை அல்லது துன்பமும் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று ஆராயப்படும். இந்த இரு நிலைகளும் இயற்கைக்கும் அறம் சார்ந்த கொள்கைகளுக்கும் மாறாக இருப்பதால் அவற்றிற்குக் காரணம் பழவினையே என்பது ஆராய்ச்சியால் அறியப்படும். “இம்மைச் செயதன யானறி நல்வினை யும்மைப் பயன்கொ லொருதனி யுழந்தித் திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்து” என்ற சிலப்பதிகார கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது.

**ஊழ்வினையின் விளைவு**

சமண சமயத்தின் கொள்கைகளையும் பண்பாட்டையும் சமண காப்பியங்களின் வழி நன்கு அறிய முடியும். சமண காப்பியங்கள் நல்வினையை விட தீவினையையே அதிகம் பேசுகின்றன. தீவினை செய்தவன் பெறும் பலன்களைச் சமணக் காப்பியங்களின் கதை மாந்தர்களின் வழியாக அறிய முடியும்தீவினையின் பயனை யாராலும் வெல்ல முடியாது. வினைகளின் பயனை எவராலும் வெல்வதற்கு முடியாது என்று கூறப்படுகின்றது. தீவினை செய்தவனும் அவ்வினையைச் செய்ய தூண்டியவனும் பல பிறவிகளுக்கு ஆட்பட்டுத் துன்பப்படுவர் என்பதனை விளக்கும் வகையில் சமண காப்பியமான யசோதரன், சந்திரமதி வாழ்க்கை வரலாற்றின் வழி அறிய முடியும்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினும் தான் முந்துறும்" (குறள் 380)

'ஊழிற் பெருவலி' என்பது, ஊழ் என்பது ஆகூழ், போகூழ் என்ற இரண்டு ஊழ்களுக்கும் பொதுவாகவே கூறப்படுகிறது. இவை இரண்டுமே பெருவலியுடையன என்று பொருள். இதில் 'முந்துறும்' என்ற சொல் ஏதோ போட்டி நடக்கிறது என்பதாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்போட்டி மனிதனின் மதிக்கும், மக்களறிவுக்கு இடையே ஏற்படும் போட்டி எனலாம். அப்போட்டியில் மதிவலியைக் கடந்து ஊழ்வலியே எப்பொழுதும் முற்பட்டு நிற்கும் என்பதே இப்பாடலின் பொருள். 'முந்துறும்' என்ற சொல்லில் ஓர் உறுதிப்பாடு காணப்படவில்லை. 'முன்வந்து நிற்கும்' என்றுதான் திருவள்ளுவர் வலிந்து குறிப்பிடுகிறார்.

**ஊழ்வினை நீங்கும் வழி**

ஊழ்வினை ஒருவனை விட்டு நீங்க வேண்டுமானால் அதற்குச் சில ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சமணம் கூறுகின்றது. அதோடு அறநெறியில் நிற்பதனால் மீண்டும் வினைகள் வராமல் தடுக்க முடியும் என்று சமண காப்பியங்களின் வழி அறிய முடிகின்றது.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்

தாழா துஞற்று பவர் (குறள் 620)

'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்கிறார் திருவள்ளுவர். எத்தனை முறை முயற்சி செய்தாலும் ஊழின் விளைவுகளை மாற்ற முடியாது என்பதை உணர்ந்தவராக இந்தக் குறளில் தன் கருத்தை வெளிப்படுத்துகிறார். ஆயினும் 'எல்லாமே ஊழ் வழித்தான் நடக்கும் எனும் பொழுது நாம் ஏன் செயலாற்ற வேண்டும்' என்ற எதிர்மறை எண்ணம் ஒருவனுக்கு உண்டாகக் கூடாது. அவ்வித நம்பிக்கை ஒரு மனிதனின் மனத்திலே நிலைத்து விட்டால் அந்த மனிதன் எந்த முயற்சியையும் எடுக்காமல் எல்லாவற்றையும் ஊழின் ஆற்றலுக்கே விட்டுவிட்டுச் சோம்பியிருப்பான். எல்லாவற்றிலும் தான் தோற்று விடுவோமோ? என்ற அச்சமும் ஏற்படும். விதி நம்மை நடத்துகிறது என்று எண்ணினால் எந்த முயற்சியும் இல்லாமல் எந்த வருத்தமும் இல்லாமல் அந்த மனிதன் செயலிழந்து காணப்படுவான். ஊழ்வினை மனித சமுதாயத்தினை முடக்கும் ஆற்றல் பெற்றது இல்லை, மனிதனின் முயற்சியால் அதனை வெல்ல இயலும் என்பதே இக்குறளின் நோக்கம்.

முயற்சி உடையவர்கள் இயற்கையின் ஆற்றலை வென்றிருக்கிறார்கள் என்பதையும் முயன்ற அளவுக்குப் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் வள்ளுவர் அறிந்து வைத்திருக்கிறார். எனவே, ஊழ் பெருவலியுடையது என்பதற்காக நாம் மனம் உடைந்து போகாது அதனை எதிர்த்துப் போராட வேண்டும். ஊழ் அல்லது சுற்றுச் சூழ்நிலை ஒருவனை முயலவிடாது தடைஏற்படுத்தும்; முயற்சிப் பயனை நுகர விடாது தடுக்கும். ஆனால், தளராமல் இடைவிடாமல் ஒருமுறை, இருமுறை என்றல்லாமல் பல முறை முயலும் பெரு முயற்சி கொண்டவர் ஊழை வெல்லும் ஆற்றல் பெற்றவராவர். ஆள்வினையை மேலும் மேலும் மேற்கொள்பவனால் ஊழின் தீய விளைவுகளைத் தடுக்க இயலும்.

இப்பாடலிலுள்ள தாழாது என்ற சொல்லுக்கு முயற்சியில் குறைவு இல்லாமல், நீட்டியாமல், காலம் தாழ்த்தாமல் எனப் பொருள் கொள்வர்.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று

நிலையாமை காணப் படும் (குறள் 349)

நம் வாழ்க்கைகைத் துன்பம் நீங்க வேண்டும் என்றால் அகப்பற்று, புறப்பற்று என்ற இருவகைப் பற்றை நீக்கி வாழ வேண்டும். அந்தப் பற்று இல்லாத வாழ்க்கையே நம் பிறவித்துன்பத்தை நீக்கும். அந்தப் பற்று நீங்கா விட்டால் நிலையற்ற வாழ்வே நீடிக்கும்.

இல்லற வாழ்க்கையை முழுவதுமாக வாழ்ந்த பின் உரிய காலத்தில் துறவை மேற்கொள்வார். அதுவே இறைவனை அடைவதற்கு அல்லது உலக வாழ்க்கையை அறிந்து கொள்வதற்கு ஏற்ற வழி என்பது நம்பிக்கை. துறவு என்பது பற்றினை விடுவது. பற்றுகள் நீடிக்கும் வரை துறவை நம் ஏற்க முடியாது. பற்றை நீக்கினால் துறவுள்ளம் கிடைக்கப்பெறும்.இதனால், துன்பங்கள் இல்லாமல் போகும். நாம் ஒன்றின் மீது பற்றை வைக்கும் போது நம் மனம் நிலையாமல் திரிந்து தொடர்புகளைப் பெருக்கும்; இதனால், துன்பம் விடாது தொடரும். பற்று நீங்காதவரைச் செல்வம், யாக்கை, இளமை போன்ற நிலையற்றவை உள்ளத்தின் அளவிலும் அறிவு நிலையிலும் தோன்றிக்கொண்டே இருக்கும்.

இறைவனே முழுமுதற் காரணி என்பதை அறிந்து அவரிடம் நாம் முழுமையாக ஒப்புக்கொடுக்கும் பொழுது நம் பிறவி துன்பம் நீங்கும். இதனைத் திருவள்ளுவர்

இறைவன் அடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; என்று குறிப்பிடுகிறார். ஆனால், இங்குப் பற்று இல்லாத வாழ்க்கையை நாம் வாழ்ந்தால் பிறவித்துன்பத்தை நீக்கலாம் என்றும் கூறுகிறார்.

**முடிவுரை**

இக்கட்டுரை, ஊழ்வினையின் சிறப்பினைத் திருவள்ளுவரின் திருக்குறளைக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளது. நம் ஊழ்வினையை மாற்றியமைக்கும் சக்தி நம்மிடத்திலே உண்டு, அதனை இறைவன் வழியாகவும் நாம் அடைந்து விட இயலும் என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது. விதியை வெல்ல எவராலும் முடியாது. அதனை, நாம் சந்தித்தே ஆக வேண்டும். அதனால், நாம் எடுக்கும் பிறவிகளில் செய்யும் செயல்களின் விளைவே இந்த ஊழ்வினையின் அமைப்பு. இஃது இன்று நாம் வாழும் சூழலுக்கு மிகப்பெரிய பங்கு ஆற்றுகிறது என்பதைத் திருவள்ளுவர் வெளிப்படுத்தியிருக்கிறார். நமது எண்ணமும் ஊழ்வினையில் மிகச் சிறந்த பங்கை ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றியும் சிறப்பாகத் தெளிவுப்படுத்தியிருக்கிறார். நாம் அகப்பற்று, புறப்பற்று என்ற இருவகை பற்றை முழுமையாக நீக்கி வாழ்ந்தால் நம் வாழ்க்கைச் சிறப்பானதாக அமையும் என்பதை இந்த நீதி நூல் விளக்கி நம் வாழ்க்கையின் நீதி நூலாகவும் இஃது அமைந்துள்ளது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Ponniah, K., Kumar, M., Moneyam, S., & Sivanadhan, I. (2019). The teaching of Thirukkural based on HOTS among the students of Tamil primary schools in the state of Perak. *International Journal of Advanced and Applied Sciences*, *6*(2), 94-101.
2. Ponniah, K., Sivanadhan, I., Kumar, M., & Nadarajan, P. (2019). Implementation of the 21st century learning in learning and facilitation of Thirukural in Tamil primary schools. International Journal of Advanced and Applied Sciences, 6(1), 43-50. https://doi.org/10.21833/ijaas.2019.01.006
3. Sekar, V., Nachiappan, S., & C.Gengadaran. (2021). Analisis penerapan nilai murni melalui pengajaran karya Thirukural bahasa Tamil dalam kalangan pelajar tingkatan empat [Infusion of moral values on teaching of Thirukkural on Tamil language among form 4 students]. *Muallim Journal of Social Sciences and Humanities*, *5*(3), 194-201. https://doi.org/10.33306/mjssh/152
4. Subahshini, J. (2018). The thoughts of Thirukkural in Pattukkottai Kalyana Sundaram's Tamil movies songs [பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் திரை இசைப் பாடல்களில் திருக்குறள் சிந்தனை]. *Muallim Journal of Social Sciences and Humanities*, 84-93.
5. Thamburaj, K. P., & Ponniah, K. (2015). வள்ளுவர் கூறும் நட்பின் மறுகட்டமைதி (Reframing Valluvar's claim on Friendship). *Journal of Tamil Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்)*, *2*(1), 7-13. http://kuralthiran.com/KuralThiran/KuralThiran0371.aspx
6. சுலோச்சனா (1999), அறநூல்களில் ஊழ்வினைக் கோட்பாடு, முனைவர் பட்ட ஆய்வேடு, பராசக்தி மகளிர் கல்லூரி, சென்னை.
7. நெடுஞ்செழியன்.க.(2009) திருக்குறளும் ஊழியலும், http:// koodal1.blogspot.com/2009/06/blog-post_17 html.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Karthiges Ponniah., (2021) A View of Thiruvalluvar's Thoughts on Fatalism , Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:269-273. Cauvery College For Women, Trichy.

**முனைவர் துறைமுத்து சுப்ரமண்யம்**,
தலைவர் மொழியியற்புலம்,
தெங்கு அம்புவான் அப்சான் ஆசிரியர் கல்வியியல் கழகம்,
27200 கோலா லிப்பீஸ், பகாங், மலேசியா

# ஆசாரக் கோவை விளம்பும் தமிழர் வாழ்வியல்

ஆய்வுச் சுருக்கம்

தொடக்கக் காலத்திலிருந்தே அறிவைப் பெறுவதும் அவ்வறிவை விளைபயனாகப் பிரயோகிப்பதும் முக்கியமாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு மனித வாழ்க்கையும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு கூடியளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஒழுக்க ரீதியான வாழ்க்கை அவசியம் என்பதை வலியுறுத்தினர். தனிமனிதன் முதல் சமூகம் வரை அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் அம்சங்களை நடைமுறை ரீதியாக. வலியுறுத்துவதாகப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஆசாரக்கோவை அமைந்துள்ளது. இந்நூல் எடுத்துக் கூறும் ஒழுக்கக் கருத்துகள் மிகவும் பெருமதியானவைகளாகும் என்பதை இவ்வாய்வு முற்படுகிறது.

நல்ல ஒழுக்கமே நல்ல மனிதர்களை உருவாக்கும். ஒழுக்க நெறிகளை அறிந்தால்தான் அவற்றைப் பின்பற்றி நல்வாழ்வு வாழமுடியும். பின்பற்ற வேண்டிய நற்பண்புகளை அற நூல்கள் வடிவில் படைத்தனர். நம் முன்னோர்களின் தூய நோக்கத்தையே இவ்வறநூல்கள் பிரதிபலிக்கின்றன

மனித வாழ்வியுலுக்கும் வாழ்வாதாரத்திற்கும் இன்றியமையாத ஒழுக்கங்களை அழகாக மாலை போல் கோர்த்து கோவை போன்ற ஒரு நூல் மாலையாகக் கருதப்படுகிறது. ஆசாரக்கோவை என்னும் இந்நூல் பண்டையத் தமிழர்களின் நல்ல ஒழுக்கங்களின் தொகுதி என்ற பொருளையும் உணர்த்துகின்றது. இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நீதி நூல்களுள் சிறந்த நூல்களில் ஒன்றெனப் போற்றப்படுகிறது .

ஆசாரக்கோவை என்பதற்கு 'ஆசாரக் கருத்துகளின் கோவை' என்றோ, 'ஆசாரங்களைத் தொகுத்துள்ள கோவை' என்றோ பொருள் கூறலாம். 'ஆசார வித்து' (பா1) என்று தொடங்கி, 'ஆசாரம் வீடு பெற்றார்' (பா100) என முடியும் நூறு செய்யுள்களில் தாம் கூறவரும் ஆசாரங்களை ஒரு நெறிப்பட கோவை வடித்துள்ளார். பொது வகையான ஒழுக்கங்களோடு தவிர நாள்தோறும் வாழ்க்கையில் பின்பற்றி நடக்க வேண்டிய கடமைகளையும் அல்லது நித்திய ஒழுக்கங்களையும் மிகுதியாகத் தொகுத்தது ஆசிரியர் தந்துள்ளார். அகத்தூய்மைக்கு வித்திடும் அறங்களோடு உடல் நலம் காக்கும் வழிவகைகளையும் அவற்றைப் பேணும்பயனையும் புறத்தூய்மையையும் வலிந்து கூறும் செய்யுள்களும் அதிகமாகவே காணக் கிடைக்கின்றன.

இந்நூல் வடமொழியிலுள்ள வேதாந்த கருத்துகளை வலியுறுத்தியும் பின்னொற்றியும் எழுதப்பட்டவையென்பதை,

ஆரிடத்துத் தான் அறிந்த மாத்திரையான், ஆசாரம்
யாரும் அறிய, அறன் ஆய மற்றவற்றை
ஆசாரக்கோவை எனத் தொகுத்தான்

எனவரும் சிறப்புப் பாயிரச் செய்யுள் (பா101) மூலம் அறியக் காண முடிகின்றது

தமிழ் இலக்கியம் வாயிலாக சங்கம் மருவிய காலத்தில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக ஆசாரக்கோவை என்னும் நூலின் ஆசிரியரின் குறிப்பினைக் காண்போம். இந்நூலை எழுதியவர் பெருவாயின்

முள்ளியார் என்ற பெரும்புலவர். பெருவாயின் முள்ளியார் இவரது சமயம் சைவ சமயத்தை சார்ந்தவர் இவர் கிபி ஐந்தாம் நூற்றாண்டு இவரின் முழுப் பெயர் பெருவாயின் முள்ளியார்.. கயத்தூர்ப் பெருவாயின் முள்ளியார் இவர் வாழ்ந்த ஊர் கயத்தூர். இவ் ஊரைத் 'திரு வாயில் ஆய திறல் வண கயத்தூர்' என்று பாயிரப் பாடல் சிறப்பிக்கின்றது. இது கொண்டு செல்வமும், திறலும், வண்மையும் ஓங்கிய ஊர் இது என்பது விளங்கும். இவ் ஊர் எங்குள்ளது என்பது தெளிவாகத் தெரியவில்லை. 'ஆர் எயில் மூன்றும் அழித்தான் அடி ஏத்தி' என்பதனால், இவர் சைவ சமயத்தார் என்பதும் இங்கு விளங்கும்.

ஆசாரக்கோவை என்னும் இந்நூல் நல்ல ஒழுக்கங்களின் தொகுப்பாகும் இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று இன்னும் நூறு பாடல்கள் உள்ளன இந்நூலில் சிறப்புப் பாயிரம் தவிர்த்து, 100 வெண்பா செய்யுள்கள் உள்ளன. வெண்பாவின் வகையாகிய குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, சவலை வெண்பா, என இவற்றைத் தொகுத்துப் பகுப்பாய்வு செய்யத்தக்கது..

**இன்னிசை வெண்பா (53)**

3 தக்கணைமுதலியவை மேற்கொள்ளல்
5 எச்சிலுடன் தீண்டத் தகாதவை
6 எச்சிலுடன் காணக் கூடாதவை
7 எச்சில்கள்
8 எச்சிலுடன் செய்யக் கூடாதவை
9 காலையில் கடவுளை வணங்குக!
12 செய்யாமல் தவிர்க்க வேண்டியவை
15 உடலைப் போல் போற்றத் தக்கவை
19 கால்கழுவியபின் செய்ய வேண்டியவை
21 ஒழுக்கம் பிழையாதவர் செய்வது
22 பிற திசையும் நல்ல
23 உண்ணக் கூடாத முறைகள்
24 பெரியோருடனிருந்து உண்ணும்முறை
25 கசக்கும் சுவை முதலிய சுவையுடைய பொருள்களை உண்ணும் முறைமை
52 தளராத உள்ளத்தவர் செயல்
54 விருந்தினர்க்குச் செய்யும் சிறப்பு
59 சில தீய ஒழுக்கங்கள்
60 சான்றோருடன் செல்லும் போது செய்யத் தகாதவை
61 நூல்முறை உணர்ந்தவர் துணிவு
62 சான்றோர்க்குச் செய்யும் ஒழுக்கம்
63 கற்றவர் கண்ட நெறி
65 தனித்திருக்கக் கூடாதவர்
70 மன்னன் முன் செய்யத் தகாதவை
71 மன்னன் முன் சொல்லக் கூடாதவை
72 வணங்கக்கூடாத இடங்கள்
73 மன்னர் முன் செய்யத் தகாதவை
75 சான்றோர் அவையில் செய்யக் கூடாதவை
77 நல்ல குலப்பெண்டிர் இயல்பு

| | | | |
|---|---|---|---|
| 28 | நீர் குடிக்கும் முறை | 78 | மன்னர் அவையில் செய்யக் கூடாதவை |
| 29 | மாலையில் செய்யக் கூடியவை | 81 | ஆன்றோர் செய்யாதவை |
| 30 | உறங்கும் முறை | 82 | மனைவியின் உள்ளம் மாறுபடுதல் |
| 31 | இடையில் செல்லாமை முதலியன | 86 | பெரியவரை 'உண்டது யாது'எனக் கூடாது |
| 39 | சான்றோர் இயல்பு | 87 | கட்டிலில் படுத்திருப்பவருக்குச் செய்யத் தகாதவை |
| 40 | சான்றோர் இயல்பு | 88 | பெரியோர் போல் வாழ்வோம் என எண்ணுபவர் செய்கைகள் |
| 41 | சில செய்யக் கூடியவையும் செய்யக் கூடாதவையும் | 89 | கிடைக்காதவற்றை விரும்பாமை |
| 42 | மனைவியைச் சேரும் காலமும் நீங்கும் காலமும் | 90 | தலையில் சூடிய மோத்தல் முதலானவை |
| 45 | பந்தலில் வைக்கத் தகாதவை | 91 | பழியாவன |
| 48 | அறம் செய்தற்கும் விருந்து அளித்தற்கும் உரிய நாட்கள் | 93 | சான்றோர் அவையில் குறும்பு முதலியன செய்யாமை |
| 49 | நடை உடை முதலியவற்றைத் தக்கபடி அமைத்தல் | 97 | சான்றோர் முன் சொல்லும் முறை |
| 51 | தம் உடல் ஒளி விரும்புபவர் செய்யத் தக்கவை | 98 | புகக் கூடாத இடங்கள் |
| | | 99 | அறிவினர் செய்யாதவை |

**.இன்னிசை வெண்பா (32)**

| | | | |
|---|---|---|---|
| 2 | ஒழுக்கம் தவறாதவர் அடையும் நன்மைகள் | 50 | கேள்வியுடையவர் செயல் |
| 4 | முந்தையோர் கண்ட நெறி | 53 | ஒழுக்கமுடையவர் செய்யாதவை |
| 11 | பழைமையோர் கண்ட முறைமை | 57 | நோய் வேண்டாதவர் செய்யக் கூடாதவை |
| 13 | செய்யத் தகாதவை | 58 | ஒருவர் புறப்படும்போது செய்யத் தகாதவை |
| 14 | நீராடும் முறை | 64 | வாழக்கடவர் எனப்படுபவர் |

| | | | |
|---|---|---|---|
| 17 | நல்லறிவாளர் செயல் | 66 | மன்னருடன் பழகும் முறை |
| 18 | உணவு உண்ணும் முறைமை | 67 | குற்றம் ஆவன |
| 20 | உண்ணும் விதம் | 68 | நல்ல நெறி |
| 26 | உண்ணும்கலம் | 69 | மன்னர் செய்கையில் வெறுப்படையாமை முதலியன |
| 32 | மலம், சிறுநீர் கழிக்கக் கூடாத இடங்கள் | 74 | ஆசிரியரிடம் நடக்கும் முறைமை |
| 34 | மலம் சிறுநீர் கழிக்கும் முறை | 76 | சொல்லும் முறைமை |
| 35 | வாய் அலம்ப ஆகாத இடங்கள் | 83 | கடைபோக வாழ்வோம் என எண்ணுபவர் மேற்கொள்ள வேண்டியவை |
| 38 | எண்ணக் கூடாதவை | 84 | பழகியவை என இகழத் தகாதவை |
| 43 | உடன் உறைதலுக்கு ஆகாத காலம் | 94 | ஐயம் இல்லாத அறிவினர் செய்கை |
| 44 | நாழி முதலியவற்றை வைக்கும் முறை | 95 | பொன்னைப் போல் காக்கத் தக்கவை |
| 47 | நூல் ஓதுதற்கு ஆகாத காலம் | 96 | எறும்பு முதலியவை போல் செயல் செய்தல் |

**பஃறொடை வெண்பா (8)**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆசார வித்து | 46 | வீட்டைப் பேணும் முறைமை |
| 10 | நீராட வேண்டிய சமயங்கள் | 55 | அறிஞர் விரும்பாத இடங்கள் |
| 27 | உண்டபின் செய்ய வேண்டியவை | 56 | தவிர்வன சில |
| 36 | ஒழுக்கமற்றவை | 100 | ஒழுக்கத்தினின்று விலகியவர் |

**நேரிசை வெண்பா (5)**

| | | | |
|---|---|---|---|
| 7 | நரகத்துக்குச் செலுத்துவன | 85 | செல்வம் கெடும் வழி |
| 79 | பெரியோரிடம் உள்ள முச்செயல்கள் | 92 | அந்தணரின் சொல்லைக் கேட்க! |
| 80 | சான்றோர் பெயர் முதலியவற்றைக் கூறாமை | | |

**குறள் வெண்பா (1)** **சவலை வெண்பா (1)**

33 மலம் சிறுநீர் கழிக்கும் முறை 16 யாவரும் கூறிய நெறி

பழங்காலச் சமுதாயம் ஒன்றில் வாழும் வாழ்க்கை ஒரு மக்கள் தொகுதி, குழு, அல்லது மரபு என்னும் பொருண்மைக்கு வடிவம் கொடுக்கலாயினர் எனலாம். அதன்வழி, மரபொழுக்க நிலைக்கு உட்பட்டு பழங்காலந்தொட்டு இன்று வரை அனைத்து மக்களாலும் போற்றப்படும் அற இலக்கியங்களில் ஒன்றாகத் தமிழரின் வாழ்வியலை எடுத்துரைப்பது ஆசாரக்கோவை எனும் ஒப்பற்ற நூலாகும். இத்தகைய நூல் எடுத்தியம்பும் கருத்துகள் யாவும் தமிழர் மரபொழுக்க நிலையை ஏற்று பின்பற்றியவையாகவும் உள்ளன எனுங் கருத்தினை உணர்ந்திட இயலுகிறது. இந்நூலில் ஆசாரவித்து (பா1) தொடர்ந்து, சிறப்புப் பாயிரம் (பா101) எனும் முதலும் முடிவுமாய் அமைந்த இவ்விருச் செய்யுள்களும் தெள்ளத் தெளிவாய் நம்முள் விளக்குகின்றன.அதனோடு, மற்றப்பிற செய்யுள்கள் விளம்பும் உண்மைகளையும் காண்போம்.

**ஆசார வித்து**

ஆசாரக் கோவையின் முதற்பாடலில், நன்றி மறவாமை, பொறுமை, இன்சொல், பிற உயிர்களைத் துன்புறுத்தாமை, கல்வி, ஒப்புரவு அறிதல், அறிவுடைமை, நல்ல இயல்புள்ளவர்கள் நட்பு இவை எட்டும் ஆசார வித்து சொல்லிய ஒழுக்கங்களாகும். இதனையே, சான்றோர்களால் அறிஞர்களால் சொல்லப் பட்டவை. நமது வாழ்க்கைக்கு நன்மை தரக்கூடிய எட்டு விதைகளாகப் பெருவாயின் முள்ளியார் புலவர் மிக அழகாக ஆசாரகோவை செய்யுள் வரிகளில் எடுத்துரைக்கின்றார்.

இச்செய்யுள் வாயிலாக, வாழ்வில் யாரோ ஒருவர் செய்த உதவியை நாம் என்றும் மறத்தல் கூடாது; அடுத்து, பொறையுடைமை எனப்பிறர் நமக்குச் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்;.எந்த சூழ்நிலையிலும் பொறுமையைக் கடைப்பிடித்து அமைதியாய் இருத்தல் வேண்டும்; விலங்குகளுக்கும் அல்லது மனிதர்களுக்கும் எந்த தீங்கும் செய்ய கூடாது; எவனொருவன் செயலை எவ்வாறு செய்ய வேண்டும் என்று அறிந்து செய்கிறாரோ, அதுவே நல்ல அறிவு உடையவர்க்கு அழகு.அந்நற்பண்பு உடையவரின் நட்பு கொள்ளுதல் வேண்டும் என்கிறார்.

**ஆன்மீகயியல் ஆசாரம்**

சிறப்புப் பாயிரம் (101) பாடல் பதிவு, முப்புறங்களையும் அழித்த சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, ஆரியரிடம் தான் அறிந்த ஆசாரங்களை யாவரும் அறிய ஆசாரக்கோவை என்ற இந்நூலை திருவாயில் எனப் போற்றப்படும் கயத்தூர் அருகில் பெருவாயின் என்ற ஊரில் வாழும் முள்ளியார் தொகுத்துக் கொடுத்தான் அவரே ஒப்புதல் வாக்குமூலம் தருவதை இங்கே காணயிலுகிறது. இதன்வழி,பெருந்தெய்வ வழிபாடு சங்க காலத்திற்கும் முன்பே இருந்திருக்கின்றது என்பது நிரூபணமாகின்றது

தொடர்ந்து, இறையைப் போற்றுதலைப் பற்றி கூறுகிறார். பாடல் ஒன்பதில், விடியற்காலையில் பல் சுத்தம் செய்து, கண் கழுவி கடவுளை வணங்கித் தொழ வேண்டும் .பின் நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொடங்க வேண்டும் . மாலையில் கடவுளை வணங்குதல் குற்றமாகும்என்றும்,பாடல் **72**-இல் அரசர் மாளிகையிலும், தேவாலயங்களிலும், பெரியோரை வணங்கமாட்டார்.அரசரும், தெய்வங்களும் ஊர்வலம் வரும்போதும் பெரியாரை வணங்க மாட்டார் என்பதையும் சுட்டுகின்றார்..

**தனிமனிதவியலில் ஆசாரம்**

ஒவ்வொரு தனிமனிதனும் கடைபிடிக்க வேண்டிய ஆசாரமாக பாடல்4லில் விடியற்காலையில் விழித் தெழுந்து, மறுநாள் செய்ய வேண்டிய

அறச்செயல்களையும், வருவாய்க்கான செயல்களையும்,சிந்தித்து, தாயையும் தந்தையையும் தொழுது ஒரு செயலைச் செய்ய அறிவுடையோர் சொல்லிய முறையாகும் என்று கூறுகின்றார்.

பாடல்**16-இல்** அரசனும், குருவும், தாயும் தந்தையும், தனக்கு மூத்தோரும், நிகரில்லா உறவினராவார்இவர்களை தேவர்களைப் போல தொழ வேண்டும். இவர்கள் சொல்லை மீறி செய்யார், அதனை மறந்தும் நடக்கமாட்டார், நல்லறிவாளர் என்றும், பாடல் **96-இல்** எறும்பு, தூக்கணாங் குருவி, காக்கை, ஆகியவற்றின் குணங்களைப் போல செய்பவர்க்கு எப்போதும் சிறப்பு உண்டாகும் எனவும், பாடல்**41-இல்** ஒருவன் தன் கண்ணிற்கு மருந்தெழுதிய கோல்கொண்டு பிறர் கண்ணிற்கு உபயோகப்படுத்தல் கூடாது. .காலோடு கால் தேய்க்கக்கூடாது. .புண்ணியப் பொருள்களைத் தலையிலும், பிற உறுப்புகளிலும் ஒற்றிக் கொள்ள வேண்டும் என்பர் நுட்பமான அறிவினை உடையவர்கள் எனக்கூறியவர்.

மேலும் பாடல்**.49-இல்** தங்களுடைய பதவிக்கும், கல்விக்கும், ஆற்றலுக்கும், குடிப்பிறப்புக்கும் ஏற்பவே உடை, நடை, சொற்கள், திட்டுதல் இவை அமையும் என்கிறார்.பாடல் **89,** உண்மையாக வாழ விரும்புபவர் தமக்குக் கிடைத்தற்கு அரியவற்றை விரும்பார்.தொலைந்து போன பொருளை நினைத்து வருந்த மாட்டார்.மனம் கலங்க மாட்டார் என்றுரைக்கின்றார்.தொடர்ந்து, பாடல்**91** காட்டினிடத்தில் தம்மினும் மூத்தன இருப்பதால்,உடலின் மீது போர்த்தலும், செருக்கோடு இருத்தலும் பாவமாகும் என்று எடுத்துரைக்கின்றார்.

**பாடல்21ல்,** நல்லொழுக்கத்தினின்று தவறாதப் பெரியோர்கள், விருந்தினர்க்கும், மூத்தோர்களு -க்கும், பசுக்களுக்கும், பறவைகளுக்கும், பிள்ளைகளுக்கும் உணவு அளிக்காமல் தான் உண்ணமாட்டார். என்று உரைக்கின்றார். பாடல்**36ல்,** விளக்குக்கும் ஒருவருக்கும் நடுவே போக மாட்டார். .சுவரின் மேல் உமிழார் நோய்வரினும்பிறர் உடுத்த அழுக்கு உட படுக்கவும் போர்த்தவும் பயன்படுத்த மாட்டார். படை வந்தாலும், தம் ஆடை பிறர்மேல் படும்படி செல்ல மாட்டார் அறிவுடையார். பெரியவர்கள பலர் நடுவில் உடையை உதறமாட்டா...ர். பாடல் **37ல்,** ஒழுக்கம் அறிந்தவர். பிறருடைய மனையாளை விரும்புவதும், கள் குடிப்பதும், களவு செய்வதும், சூதாடுவதும், கொலை செய்தலும் ஆகிய தீய செயல்களை மனதாலும் நினையார் எனச் செப்புகின்றார்.

**பாடல் 52ல்,** நல்லொழுக்கம் உடையவர், வஞ்சனை சொல்லையும், பயனில்லாத சொல்லையும், பழிச்சொல்லையும், புறங்கூறுதலையும் சொல்ல மாட்டார். பாடல் **53ல்** ஒழுக்கமுடையோர், கல் எறிதல், கனைத்து அழைத்தல், ஒருவனைப் போலவே தாமும் இகழ்ந்து செய்து காட்டுதல், தன் உறுப்புகளை அழித்தல், கோபம், ஒளித்தல் ஆகியவற்றைச் செய்யமாட்டார். **பாடல் 83ல்,** எப்போதும் ஒரே தன்மையாக வாழ்பவர்கள் ஒருவருடைய வரிசைப்பட போகமாட்டார் .ஒருவருடைய நிழலை மிதித்து நிற்க மாட்டார் .பேசும்போது நடுவில் ஆராய்ந்து பேசார், ஊரார் வெறுக்கத்தக்கவைகளைச் செய்யார், அரசர் படைத் தொகையையும் சொல்லமாட்டார்..

### குடும்பவியலில் ஆசாரம்

**பாடல் 77ல்,** நற்குலப் பெண்டிர், பிற ஆடவரைக் காண மாட்டார் .தமது உடல் அழகைப் பார்த்துக் கொள்ள மாட்டார். .தலை மயிரைக் கோதுதல், கையை நொடித்தல் முதலியன செய்ய மாட்டார். பாடல் **46ல்,** நல்லது நடக்க வேண்டும் என்று நினைப்பவர்கள். அதிகாலை துயில் எழுந்து, வீடு பெருக்கி, கலங்களைக் கழுவி நீர் நிறைக்கும் சாலையும், கரகங்களையும் பூ அணிவித்து அடுப்பினுள் தீ உண்டாக்க வேண்டும். பாடல் **82ல்,** அறிவுடையவர்கள், தம்மை அழகு செய்து கொள்ளும் விலை மகளிர் இல்லத்திற்கு அருகில் வாழ மாட்டார், .அந்த இடம் தமக்கு உரிமையுள்ள இட என்றாலும் மனைவியின் மனத்திற்காக அவ்விடத்தில் வசிக்க மாட்டார்

**பாடல் 90ல்,** தலையில் முடிந்த பூவையும், மோந்த பூவையும் அணியார். பிராமணர் தானமாக பசுவினைக் கொடுத்தாலும், பெரியோர் அதனை வாங்க

மாட்டார் .எச்சிலுணவைக் கொடுக்க மாட்டார். பாடல் **42ல்,** தம் மனைவியர்க்கு பூப்பு நிகழ்ந்தால், நாள் மூன்றும் அவரை நோக்கார், நீராடியபின் பன்னிரண்டு நாளும் அகலாது இருத்தல் நன்மையாகும் என்பர் மிக்க ஆராய்ச்சியாளர். பாடல் **65ல்** அறிவால் மிகுந்தவர்கள் ஐந்து புலன்களையும் தடுத்தல் அரிது என்பதால் தம்முடைய தாயுடனும், உடன் பிறந்தவளுடனும், மகளுடனும் தனியாகத் தங்க மாட்டார்.

**பாடல் 48ல்,** தன் கல்யாண நாளிலும், தேவர்க்குச் சிறப்பான நாளிலும், பிதிருக்களுக்குச் சிறப்பு செய்யும் நாளிலும், விழா நாளிலும், வேள்வி செய்யும் நாளிலும், விருந்தினர்க்கு சோறிட்டுக் கொடை அறம் செய்ய வேண்டும். **பாடல் 57ல்,** நோயற்ற வாழ்வு வாழ விரும்புவோர், பாழ் வீட்டிலும், கோயிலிலும், சுடுகாட்டிலும், ஊரில்லாத இடத்தில் உள்ள மரத்திடமும் பகல் பொழுதில் தூங்கமாட்டார். **பாடல்.64ல்** அந்தணரும், தவசியரும், சுமையுடையவரும், நோய்வாய்ப்பட்டவரும், பெரியோர்களும், பிள்ளைகளும், பசுக்களும், பெண்களும் மதிக்கப்பட வேண்டியவர்கள்..இவர்களுக்கு வழிவிட்டுப் போனவர்களே மக்களாகப் பிறந்தவர்களுள் மற்றவர்களால் போற்றப்படுவர்..... **பாடல் 80ல்,** கோபத்திலும் பெரியோர் பெயரை வாயால் சொல்லமாட்டார் .வீட்டில் மனைவியைக் கோபித்து நீண்ட பொழுது இருக்க மாட்டார் .பெரியோரையும் கீழ்மக்களையும் முறைமை பாராட்டிப் பேச மாட்டார்.

**கல்வியியலில் ஆசாரம்**

**பாடல்1ல்,** நன்றி மறவாமை, பொறுமை, இன்சொல், பிற உயிர்களைத் துன்புறுத்தாமை, கல்வி, ஒப்புரவு அறிதல், அறிவுடைமை, நல்ல இயல்புள்ளவர்கள் நட்பு இவை எட்டும் அறிஞர்களால் சொல்லப்பட்ட ஒழுக்கங்களாகும் என்றவர், பாடல்.**3ல்,** ஆசிரியர்க்கு தட்சணை கொடுத்தலும், யாகம் பண்ணுதலும்,

தவம் செய்தலும், கல்வியும், இந்நான்கினையும் காத்து வாழ வேண்டும். இல்லையென்றால் எந்த உலகத்திலும் பயனுமில்லை என்கிறார். பாடல்.**43ல்,** நடுப்பகலிலும், மாலையிலும், காலையும், ஆதிரையும், ஓணமும், அட்டமியிலும், பிறந்த நாள் அன்றும், பௌர்ணமியிலும், தம் மனைவியரோடுசேர்ந்திருக்க மாட்டார் நல்லோர் என்றும்,

**பாடல் 47ல்** அட்டமியும், அமாவாசையும், பௌர்ணமியும், பதினான்காம் நாளும்அரசர்க்குத் துன்பம் வரும் காலமாகும்.. இந்நாட்கள் பூமி அதிர்ச்சி உள்ள நாட்கள், மேகமுழக்கமும் தூய்மை அல்லாத நாட்கள். என்றும் பாடல் **50ல்** நன்கு கற்றுத் தேர்ந்தவர், பலருள் ஒருவரைத் தூற்றார், படுத்துத் தூங்கார், தமக்குப் பொருந்தாத செயல்களை ஒப்புக் கொண்டு பின்னர் செய்யாது விடமாட்டார், வறியவரை இழிவாகப் பேச மாட்டார்எனவே அந்தணர்கள் வேதம் ஓதாத நாட்களாகும் என்றும் கூறுவதைக் காண முடிகின்றது..

**பாடல் 61ல்** வேதங்களை ஓதும் அந்தணரை, பெரியோரைப் போல நடத்தல் கற்றவர்களின் கொள்கைகளாகும் என்றும் **பாடல் 63ல்** துறவிகளைப் போற்றுதலும், பழிக்கு அஞ்சுதலும், பெரியோர் முன் தான் கற்றவற்றைச் சொல்லாது இருத்தலும் சிறந்த ஒழுக்கமாகும் எனவும் **பாடல் 74ல்** நல்ல மாணவர்கள் அடக்கத்தோடு ஆசிரியர் கற்பிக்காத போது சும்மா இருக்க வேண்டும், அவர் முன்பு அவர் கட்டளை இல்லாமல் எழுந்து போகக் கூடாது, அவர் சொல்லிக் கொடுக்கும்போது செவி கொடுத்துக் கேட்டு ஒப்பிக்க வேண்டும் அவர் ஒன்றும் சொல்லாவிட்டால் கேள்வி கேட்கக் கூடாது

**பாடல் 92ல்** நற்செயல்களைச் செய்யும்போது, புலையாரிடத்து நாள் கேட்டுச் செய்ய மாட்டார் .அந்தணரிடத்தே நாற்கேட்டு, அவர் வாய்மொழிப்படி நற்கருமம் செய்ய வேண்டும் எனவும் **பாடல் 94** அறிவுடையோர், பெரியோர் முன் கை காட்டிப் பேச மாட்டார் .காலின் மேல் எழுதார், கல்வியில்லாதவரோடு மெய்யென சாதித்துப் பேசமாட்டார் .பெரியோர் கொடுப்பவற்றை உட்கார்ந்து கொண்டு கையில் வாங்க மாட்டார். என்றும் **பாடல் 99** அறிவுடையார் ஆரவாரஞ் செய்யுமிடத்தும்,

மடைப்பள்ளியிலும், பெண்களிடமும், பார்க்க மாட்டார் .எடுத்து உரைக்க மாட்டார் . இல்லத்துள் செல்ல மாட்டார் என்றும் தெளிவாகப் பகன்றுள்ளார்.

**பெரியோரியலில் ஆசாரம்**

பெரியோர் கேண்மையைப் பற்றி **பாடல் 16ல்,** அரசனும், குருவும், தாயும் தந்தையும், தனக்கு மூத்தோரும், நிகரில்லா உறவினராவார் .இவர்களை தேவர்களைப் போல தொழ வேண்டும் .இவர்கள் சொல்லிய சொல்லை கடந்து செய்யார், அதனை மறந்து நடக்கமாட்டார், நல்லறிவாளர் என்றவர்

**பாடல் 17** அறிவாளர், குரவர்கள் சொல்லிய சொல்லை மீறி எதனையும் செய்யமாட்டார்.நிறை அம்மாவாசை விரதத்தை மறக்கமாட்டார் அன்று துடைப்பதும், மரம் வெட்டுதலும் செய்ய மாட்டார்.

**பாடல் 39** பிறர்க்காக அன்றி தனக்காக உலை வையார், உணவு உட்கொள்ளார், எச்சிற்படுத்தார், மனையில் இருக்கும் தெய்வங்களுக்கு ஊட்டினதை அறிந்து பின் தாம் உண்பார். தொடர்ந்து,**பாடல் 22** கிழக்கு திசையும், ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் மற்ற திசைகளும் நல்லவைகளாகும்.வாயிற்படிக்கு நேராகக் கட்டிலிட்டு உறங்கக் கூடாது என்கிறார் .உச்சிப் பொழுதில் உண்ணுதல் நலம். என்றவர்,

**பாடல் 40ல்,** புதிய சுற்றத்தார் தம்மொடு சேர்ந்து உண்ணும் போது பெரியார் உயர்ந்த இடத்தில் அமரமாட்டார், துன்பம் தரும் செயல்களைச் செய்ய மாட்டார், முறை கடந்து இன்னாதவற்றைச் செய்யமாட்டார் என்றார். **பாடல் 55ல்,** அறிவுடையோர், பகைவரிடத்திலும், கள் குடித்து ஆடும் இடத்திலும், மனமில்லாத வேசியருடனும், தெருவிலும், நட்பு கொண்டவர் விலகிச் செல்லும் இடத்திலும், பலர் ஒன்று கூடும் தண்ணீர்த் துறையிலும் நிற்க விரும்ப மாட்டார் கூறிடக் காண்கின்றோம்

அதனைத் தொடர்ந்து**, பாடல் 66ல்** அரசருடைய வாயிலில் காவலர் தடுத்தால் கோபம் கொள்ள மாட்டார் .அவருக்குக் கொடுக்க வேண்டிய இறை பொருளைக் கொடுக்காமல் இருக்க மாட்டார் .அரசன் போலத் தம்மை அணி செய்து கொள்ள மாட்டார் .அரசவையில் நடுவே சென்று மற்றொருவனைச் சேர மாட்டார் என்று கூறக் கேட்கின்றோம். **பாடல் 69ல்** அரசன் செய்பவற்றை வெறுக்கார் .அவனோடு சண்டையிட மாட்டார் .அரசன் தனிமையாய் இருக்குமிடத்தில் தனது குறையைச் சொல்ல மாட்டார் .நாம் அறிவோம் என்று தானே முன்வந்து கூறமாட்டார் .காக்கை வெள்ளை என்றாலும் அன்பின்றி வெகுளுமாறு மறுத்து உரையார் .அரசன் சொற்படியே நடப்பர். தொடர்ந்து **பாடல் 62ல்** பெரியோர்க்குச் செய்யும் ஒழுக்கம், காலில் தொழுதலும், நிற்றலும், அவரைக் கண்டவுடன் எழுந்திருத்தலும் ஆகும் என்றவர், **பாடல் 67ல்** தமக்கு உற்ற உறுதிமொழியையும், அரசனால் பெரியராக மதிக்கப்பட்டவர்கள் சொல்லிய சொல்லையும், பிறர்க்குரிய உறுதிச் சொல்லையும் அரசனிடத்துச் சொல்லுதல் பெரிய குற்றமாகும் என எடுத்துரைக்கின்றார்.

மேலும் தொடர்ந்து **பாடல் 70ல்,** எச்சில் உமிழ்தலும், உயர்வாகிய இடத்தில் ஏறுதலும், தாம்பூலம் போடுதலும், தகுதியில்லாததைச் சொல்லுதலும், தூங்குதலும் ஆகிய இந்த ஐந்திணையும் பெரியோர் அரசர் முன்பு செய்ய மாட்டார்கள் எனவும் **பாடல் 71ல்** நற்குடியில் பிறந்தார் அரசர் முன், செல்வத்தையும், கல்வியையும், விளக்கத்தையும், குணங்களையும் பல முறை பரப்பிச் சொல்ல மாட்டார். என விளக்கம் தருகின்றார்**.** இன்னும் தொடர்கையில் **பாடல் 73ல்,** சிரிப்பும், கொட்டாவி விடுதலும், காறியுமிழ்தலும், தும்முதலும், அரசர் முன்பு செய்தால் பழி நிலைக்கும் என்கிறார். அதே வேளையில் **பாடல் 75ல்,** பெரியோர் கூடியுள்ள அவையில் உடையை அவிழ்க்க மாட்டார், காதைச் சொறிய மாட்டார், கையை உயர தூக்கிப் பேசார்,பெண்டிரைப் பார்க்க மாட்டார். பிறர் காதில் சொல்லுதலையும் கேட்க மாட்டார் குறிப்பிடுகின்றார்.

இன்னும் கூறுகையில் **பாடல் 78ல்** பிறருடன் மறைவாக ஆராய மாட்டார், அரசன் பிறருக்குச் சொல்வதைக் காது கொடுத்துக் கேட்க மாட்டார் . அப்படிப் பேசும்

போது வேறொன்றை ஆராய்வார் போல் முகம் மாறி நிற்பர் என்றவர், **பாடல் 81ல்** நற்குணமுடையோர் பின் வாயில் வழியாக ஒருவர் வீட்டில் நுழைய மாட்டார் .அரசன் அவை கூடியிருக்கு இடத்திலும், மனைவியுடன் இருக்கும்போதும் போய்ப் பார்க்க மாட்டார். எனக் கூறியவர், **பாடல் 79ல்** துன்பம் வந்த காலத்திலும், இன்பம் வந்த காலத்தும் அமைதியாக இருத்தலும், அன்பினின்று வேறுபட்டவர் வீட்டில் நுழையாமையும் பெரியாரிடத்தில் உண்டு என்கிறார். அதை வலியுறுத்தியே **பாடல் 97ல்,** பெரியோர் முன்பு, வாய் புதைத்து நின்றேனும், வணங்கியாவது, பேச வேண்டும் அன்றி அவர் முன் ஆராய்ந்து குற்றம் எதுவும் உண்டாகாமல் பேச வேண்டும் என்கிறார். **பாடல்100ல்,** ஒழுக்கத்தினின்று விலகியவர், அறியாமையுடையவனும், வறியவனும், வயதில் முதிர்ந்தவனும், சிறுவனும், உயிரிழந்தவனும், அஞ்சினவனும், உண்பவனும், அரசரது கட்டளையைத் தாங்கினவனும், மணமகனும், ஆசாரம் நீங்கியவராவார் என விளக்கமளிக்கிறார்.

**உனணவியலில் ஆசாரம் '**

'ஆகாரம் இல்லையேல் ஆதாரம் இல்லை' என்பர். அதனை முறையாக விளக்கப் **பாடல் 18ல்** நீராடி, காலைக் கழுவி, வாய் துடைத்து, உண் கலத்தை சுற்றி, நீரிரைத்து உண்பவரே உண்பார் . இப்படி செய்யாமல் உண்டாரைப் போல் வாயை கழுவி போவார் ஊனை அரக்கர் எடுத்துக் கொள்வார் என்றும் **பாடல் 20ல்** ஒருவன் உண்ணும்போது கிழக்கு திசையில் அமர்ந்து, தூங்காமல், அசையாமல், வேறொன்றினையும் பார்க்காமல், பேசாமல், உண்கின்ற உணவை கையாலெடுத்து சிந்தாமல் நன்றாக

உண்ண வேண்டும் எனவும் **பாடல் 23ல்** படுத்தோ, நின்றோ, வெளியிடத்தில் நின்றோ உண்ணல் ஆகாது.

விரும்பி மிகுதியாக உண்ணலும் ஆகாது .கட்டில் மேலிருந்து உண்ணுதல் கூட. **பாடல் 24** தம்மிலும் பெரியாருடன் உண்ணும்போது அவர்க்கு முன்னே தாம் உண்ண மாட்டார். .முந்தி எழுந்திருக மாட்டார்.அவரை நெருங்கி அமர்ந்து உண்ணமாட்டார் எல்லா செல்வமும் பெறுவதாயினும் வலப்புறம் அமர்ந்து உண்ணார் என்றும்**, பாடல் 25ல்** உணவை உண்ணும்போது கசப்பானவைகளை கடைசியிலும் தித்திப்பான பண்டங்களை முதலாகவும் மற்றவைகளை இடையிலும் உண்ண வேண்டும் என்பதே ஒழுக்கம் எனக் கூறுகின்றார்

அதனையொட்டியே **பாடல்26ல்** தம்மைவிட ஆமூத்தாருடன் உண்ணுதல் கூடாது . அப்படி உண்ணும் போது ஒழுங்குப்படி சிறிய கலங்களைக் கொண்டு ஒழுக்கம் தவறாமல் உண்டு அக்கலங்களை உடனே முறைப்படி நீக்க வேண்டும் எனவும் **பாடல் 27ல்** வாயை நன்றாகக் கொப்புளித்து, நன்றாகத் துடைத்து, முக்குடி குடித்து, முகத்திலுள்ள உறுப்புகளை மந்திரம் சொல்லி வாய் துடைத்தல் பெரியோர் அறிந்துரைத்த ஒழுக்கங்களாகும் என்று கூறுகையில் **பாடல் 28ல்** இரண்டு கைகளாலும் தண்ணீர் குடியார் .ஒரு கையால் பெரியோர்க்குக் கொடுக்க மாட்டார், வாங்க மாட்டார் . இரண்டு கைகளையும் வைத்து சொறிய மாட்டார். என்கிறார்.

அதனினும் **பாடல் 54ல்,** அறிவுடையோர் தம் நண்பர்க்கு, புன்சிரிப்புடன் கால் கழுவ நீர் அளித்து, உட்கார மணை கொடுத்து, உணவளித்தலோடு, படுக்க பாயும், இருக்க இடமும் கொடுத்து உதவுவர் என்றும் **பாடல் 86ல்,** பெரியோரைக் கண்டால், நீங்கள் உண்டது யாது எனக் கேட்க மாட்டார். .கீழோரைக் கண்டால் முகம் திரிந்து நீங்கள் உண்டது யாது என்று கேட்கமாட்டார். என்ரைத்தவர் **பாடல் 88ல்,** பெரியோரைப் போல ஒழுக்கத்துடன் வாழ விரும்புபவர் உணவை இகழ்ந்து உரைக்க மாட்டார் .அறச்செயலையும், தாம் செய்த விரதத்தையும் தாமே புகழ்ந்து உரைக்க மாட்டார் .உதவியின் பயனைத் தாமே எடுத்து சொல்ல மாட்டார்

**பொருளியலில் ஆசாரம்**

பொருளில்லாதவர்க்கு இவ்வுலகமில்லை என்றுணர்ந்து புலவர் **பாடல் 85ல்,** அறிவுடையோர், செல்வம் வந்த காலத்தும் அறச்செயல்களையும்,

கல்யாணங்களையும், செய்யும் முயற்சிகளையும், வீட்டையும் அரசன் செய்வதையும் அதிகமாகச் செய்யாதிருக்க வேண்டும். செய்வாராயின் அச்செலவம் அழிந்து விடும்

**சுகாதாரவியலில் ஆசாரம்**

'சுத்தம் சுகம் தரும்' என்கின்ற பழமொழிக்கொப்ப **பாடல் 14ல்,** ஆராய்ந்த அறிவுடையார் நீராடும் பொழுது நீந்தமாட்டார், எச்சிலை உமிழ மாட்டார், அமுங்கியிருக்க மாட்டார், விளையாட மாட்டார், எண்ணெய் தேய்த்துக் கொள்ளாமல் கழுத்தளவு அமிழ்ந்து குளிக்க மாட்டார் என்றவர். **பாடல் 16ல்** அரசனும், குருவும், தாயும் தந்தையும், தனக்கு மூத்தோரும், நிகரில்லா உறவினராவார் . இவர்களை தேவர்களைப் போல தொழ வேண்டும் இவர்கள் சொல்லிய சொல்லை கடந்து செய்யார். அதனை மறந்தும் நடக்கமாட்டார், நல்லறிவாளர். என்று கூறியவர் **பாடல் 19ல்,** கால் கழுவின ஈரம் உலர்வதற்கு

முன்னே உணவு உண்ண வேண்டும். கால் ஈரம் உலர்ந்த பிறகே படுக்கைக்கு செல்லலாம் . இதுவே அறிவாளர்களின் கொள்கையாகும் என்றார்.

பெருவாயின் முள்ளியார் **பாடல்5ல்,** பசு, பார்ப்பார், தீ, தேவர், உச்சந்தலை ஆகியவற்றை எச்சிலையுடையார் எவரும் தீண்டார் என்றும் **பாடல்7ல்** மல மூத்திரங்கள் இயற்றிய இயக்கம் இரண்டொடு, இணை எச்சில், வாயினால் வழங்கிய எச்சில் ஆகிய நான்கினையும் பாதுகாக்க வேண்டும் எனவும் **பாடல் 8ல்** இந்நான்கு எச்சிலையும் கடைப்பிடித்து ஒன்றினையும் ஒழுகாதவர், வாயால் எதையும் சொல்லார், கண்துயிலார் எப்போதும் அறிவுடையவராக இருப்பர் என்கின்றவர் **பாடல் 10ல்** தெய்வத்தை வழிபடும்போதும், தீய கனவைக் கண்டபோதும், தூய்மை குன்றிய காலத்தும், வாந்தி எடுத்த போதும், மயிர் களைந்த போதும், உண்ணும் பொழுதும், பொழுதேற உறங்கிய விடத்தும், புணர்ச்சியான காலத்திலும், கீழ் மக்கள் தீண்டிய போதும், மலசலங் கழித்த காலத்தும் நீராட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

தொடர்ந்து **பாடல் 30ல்,** படுக்கும்பொழுது கடவுளை வணங்கி, வடதிசையில் தலை வைக்காமல், மேலே போர்த்துக் கொள்ளப் போர்வையை போர்த்திப் படுத்தல் ஒழுக்கமாகும் என்பவர் **பாடல் 33ல்** பகல் பொழுதில் தெற்கு நோக்காமலும், இரவில் வடக்கு நோக்காமலும், மலசலங் கழித்தல் நல்லது என்றும் **பாடல் 32ல்** அறிவுடையார் புல்லின் மீதும், பயிர் நிலத்தும், பசுவின் சாணத்தின் மேலும், சுடுகாட்டிலும், வழியிலும், தண்ணீரிலும், ஆலயங்களிலும், நிழலுள்ள இடத்திலும், சாம்பலிலும் ஆகிய பத்து இடங்களில் எச்சில் உமிழ்தலையும், மலசலங்கழித்தலையும் செய்ய மாட்டார் என்று வழிகாட்டுகின்றார்.

**பாடல் 34ல்** பத்து திசையினையும் மறைத்துக் கொண்டு, அந்தரத்தில் செய்வதாக நினைத்துக் கொண்டு எச்சில் உமிழ்தலும், மலங்கழித்தலும் செய்ய வேண்டும் . இந்திர பதவியே கிடைத்தாலும் வெளிப்படையாகச் செய்யக்கூடாதுஎன்றும் **பாடல் 35ல்** நீரிடத்தில் நடக்காமல் நின்று வாயலம்புதல் கூடாது .தேங்கியிருக்கும் நீரிலும் வாயலம்பார்.கலத்துள் முகந்து பிறர் முன்னிலையில் வாயை அலம்ப முடியாது என்கின்றார். **பாடல்51ல்** தம் கண்ணின் ஒளியும் புகழும் கெடாமல் இருக்க, மின்னலையும், எரிநட்சத்திரத்தையும், வேசியரது ஒப்பனையையும், காலை ஒளியையும், மாலை ஒளியையும் பார்க்கக் கூடாது என்றும் உரைக்கின்றார்.

**முறைமையியலில் ஆசாரம்**

புலவர் பெருமகனார் அன்றாட வாழ்வியல் முறைகளப் பற்றிய ஆசாரங்களைக் கூறுகையில் **பாடல் 11ல்** நீராடும் போது ஓர் ஆடையும், உண்ணும் போது இரண்டு ஆடையும் அணியாமல் இருக்கக் கூடாது .நீரில் ஆடையை பிழியமாட்டார் .ஒரு ஆடை உடுத்தி அவையின்கண் செல்லக்கூடாது .இது பழையோர் கண்ட முறைமையாகும். என்றவர் **பாடல் 13ல்,** நீரில் தம் நிழலை விரும்பி பார்க்கமாட்டார் .நிலத்தை கீற மாட்டார் .இரவில் மரத்தின் கீழ் நிற்கமாட்டார் . நோய்பட்டபோதும் நீரைத் தொடாமல் எண்ணெயை உடம்பில் தேய்க்க மாட்டார் .

எண்ணெய் தேய்த்த பின் தம உடம்பின் மேல் நீரைத் தெளித்துக் கொள்ளாது புலையைத் தம் கண்ணால் பார்க்க மாட்டார் என்கிறார். **பாடல் 15ல்** நிலம் முதலிய ஐம்பூதங்களையும், பார்ப்பாரையும், பசுவையும், சந்திரனையும், சூரியனையும் போற்றாதவர், உடம்பில் உள்ள ஐம்பூதத்தையுடைய தெய்வங்கள் அகன்று போய்விடும் என்றும் எச்சரிக்கை விடுகின்றார்.

மேலும் **பாடல் 31ல்,** இரண்டு தெய்வங்களுக்கு இடையிலும், பார்ப்பார் பலர் நடுவும் போகக் கூடாது .தும்மும்போது பெரியார் வாழ்த்தினால் அவரை வணங்க வேண்டும் .வெளியில் செல்லும் போது நண்பர் எதிர்பட்டால் மனம்மகிழ்ந்து அவருடன் செல்ல வேண்டும். என்று கூறியவர் **பாடல் 44ல்,** மணை மேல் நாழியைக் கவிழ்த்து வைக்கக் கூடாது பலர்செல்லும் இடத்தில் மணையைக் கட்டக் கூடாது புத்தாடையைத் தலைக்கடியில் வைக்கமாட்டார்என்றவர்,மாட்டார் .தம்மை அறியாதவனெதிரில் நிற்க என்றும் **பாடல் 45ல்** துடைப்பமும், பூஜிதமும், கரிச்சட்டியும், கிழிந்த கட்டிலும் மணப்பந்தலின் கீழ் பரப்பாதிருக்க வேண்டும் எனவும் **பாடல் 68ல்,** பெரியோர்கள் விரும்புவனவற்றைத் தாம் விரும்பமாட்டார் . கீழ்மக்களை வீட்டினுள் அழைத்துக் கொண்டு வரமாட்டார் .தன்னுடைய பிள்ளையே ஆயினும் இழிவாகப் பேசமாட்டார தம்மோடு நட்பாக இல்லை என்றாலும் மற்றவர்களை இகழ்ந்து பேசமாட்டார் என்கிறார்.

தொடர்ந்து குறிப்பிடுகையில் **பாடல் 76ல்,** விரைவாகப் பேசமாட்டார், அடிக்கடி பல தடவை பேசார், பொய்யை விரிவாகப் பேசமாட்டார், விளக்கிப் பேசமாட்டார், சிறிய சொற் தொடரால் சொல்ல வேண்டிய பொருள்களை காலத்துக்கு ஏற்றபடி கேட்போர் சமயம் அறிந்து சொல்ல வேண்டும் என்றும். **பாடல் 95ல்** தன்னுடைய உடலும், மனைவியும், அடைக்கலமாக வந்த பொருளும், தன் உயிர்க்கு உதவி என்று வைத்த பொருளும் ஆதரித்துப் பாதுகாக்க வேண்டியவை.இல்லையெனில் துன்பத்தைத் தரும் .என்கிறார்.

**கொள்ள – தள்ளத் தக்கவையியலில் ஆசாரம்**

இப்பெருமகனார் **பாடல் 2ல்,** நற்குடிப்பிறப்பு, நீண்ட வாழ்நாள், செல்வம், அழகுடைமை, நிலத்திற்கு உரிமை, சொல் மேன்மை, படிப்பு, பிணியில்லாமை இவை எட்டையும் ஒழுக்கம் தவறாதவர்கள் அடைவர்.

**பாடல் 12ல்** தலையில் தேய்த்த எண்ணெயினால் யாதொரு உறுப்பையும் தீண்டக்கூடாது.பிறர் உடுத்திய ஆடையும், பிறர் தொட்ட செருப்பும் அணிந்து கொள்ளக்கூடாது. என்றும் **பாடல் 29ல்** மாலைப் பொழுதில் படுத்துத் தூங்குவதும், உண்ணுதலும், நடத்தலும் கூடாது .மாலையில் உண்ண மாட்டார், கோபப்படமாட்டார். முற்பொழுது விளக்கு ஏற்றி இரவில் உண்டு உறங்குதல் நன்று என்கிறார்.

இம்மகனார் **பாடல் 38ல்,** அறிவுடையார் பொய் பேசுதலும், கோள் சொல்லுதலும், பிறர் பொருளை விரும்புதலும், பொறாமை கொள்ளுதலும் செய்ய மாட்டார் .அப்படிச் செய்தால் இம்மையில் வறுமையும், மறுமையில் நரகமும் வாய்க்கப்படும்; தெய்வமும் அழிந்துவிடும். **பாடல் 56** முற்றிய புல்லிடமும், காட்டினிடத்தும் சேரமாட்டார்; அவற்றை நெருப்பிலிட்டு அழித்து விடார்; மழையில் ஓடமாட்டார்; காட்டில் தனியாக செல்ல மாட்டார்; வறுமையிலும் தமது ஒழுக்கத்திலிருந்து மாறமாட்டார், அறிவுடையோர் என்றும் **பாடல் 59ல்,** பிறரைப் பார்த்து, உமது உடல் நன்றாயிருக்கிறதென்று சொல்லமாட்டார் .விளக்கையும், அடுப்பிலுள்ள நெருப்பையும் அணைக்க மாட்டார் .அந்நெருப்பிடம் குளிர் காய மாட்டார்.எனவும் **பாடல் 60ல்,** பெரியாருடன் செல்லும்போது எதன் மேலும் ஏறிச் செல்ல மாட்டார் .குடை பிடித்துச் செல்ல மாட்டார் காலில் செருப்பு அணிய மாட்டார்என்று எடுத்துரைக்கின்றார்...

தொடர்கையில் **பாடல் 84ல்** புற்றில் வாழும் பாம்பும், அரசரும், தீயும், குகையில் இருக்கும் சிங்கமும், சிறியவை என்றும், எளியனவென்றும், பழகினவென்றும் நினைத்து இகழ்ந்தால் துன்பத்தைத் தருமெனவும் **பாடல் 87ல்** எப்பொழுதும் படுத்திருப்பவரது காலைக் கழுவமாட்டார், அவருக்கு பூப்புனையார், அவருக்குச்

சந்தனம் பூசார், அருகில் நிற்கவும் மாட்டாரென்றும். **பாடல் 93ல்,** சான்றோர் அவையில் குறும்பு செய்ய மாட்டார் .அழுக்கை உதிர்த்துக் கொண்டு செல்லார். கடுமையான சொல்லைச் சொல்லார் .இரண்டு பேராய் நின்று பேசுமிடத்திற்குப் போகமாட்டார் .ஆகவே இவைகளைச் செய்யாதிருத்தல் வேண்டுமென்றும் **பாடல் 98ல்** சூதாடும் இடத்திலும், பாம்புகள் இருக்குமிடத்திலும் மூடர்களே நுழைவர் பல துன்பங்களையும் பெறுவாரென ஞயம் பட உரைகின்றார்...

**நிறைவுரை**

பெருவாயின் முள்ளியார் ஆசாரக் கோவையில் இன்னின்ன செய்யத் தக்கவை, இதனால் இன்ன நலம் உண்டாகும் என்பதையும் இன்னின்ன செய்யத் தகாதன, அவற்றைச் செய்யின் இன்னின்ன கேடுகள் உண்டாகும் என்பதையும் இந்நூலில் தெளிவாக விளக்கியுள்ளார். அவை தமிழர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத் தக்கவையாக அமைக்கப்பட்டுள்ளன. இதன்வழி, இவ்வறச்செயல்களே இன்றளவும் சமுதாயத்தின் மரபுகளாக மனிதனைத் தனக்குள் கட்டுப்படுத்தி நிற்க வைகத்துப் பின்பற்ற உதவி வருகின்றன. இதன்கண் சமூகத்தில் ஒருவித ஒழுக்கநிலையைக் கட்டமைத்துள்ளனர்.

***வேதத்தை விட்ட அறம் இல்லை வேதத்தின்***
***ஓதத் தகும் அறம் எல்லாம் உளதர்க்க***
***வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற***
***வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே.***

(திருமந்திரம்: 51)

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
***தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்***
உணர்த்தும் அவனை உணரலு மாமே

(திருமந்திரம்:66)

மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியும் நின்றங்கு இளைக்கின்ற காலத்து
***ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்***
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே

(திருமந்திரம்:67)

நன்றாய்ந்த நீள்நிமிர்சடை
முது முதல்வன் வாய் போகாது
***ஒன்று புரிந்த ஈரிண்டில்***
***ஆறுணர்ந்த ஒரு முதுநூல்***
**.......................................**

**(புறம்:166)**

வானவன் காண்; வானவர்க்கும் மேல் ஆனான் காண்; ***வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்;*** ஆன் ஐந்தும் ஆடினான் காண்; ஐயன்

(திருநாவுக்கரசர் தேவாரம், ஆறாம் திருமுறை)

தேவர்குறளும் ***திருநான் மறைமுடிவும்***

மூவர் தமிழும் முனிமொழியும்- கோவை

திருவா சகமும் திருமூலர் சொல்லும்

ஒருவா சகமென்று உணர்.

(ஔவையார், நல்வழி 39)

மேற்கண்ட செய்யுள்கள் எடுத்துரைக்கின்ற; வலியுறுத்துகின்றனவற்றைத் தந்த நம்முள் மூத்தத் தமிழ் மூதறிஞர் பெருமக்களை மனத்திற்கொண்டு தமிழையும் வடமொழியையும் பாகுபாடின்றி ஏற்று மானுடம் தழைக்க வழி காண்போம்.

**துணைநூற்பட்டியல் :**


1. பெருவாயின் முள்ளியார் இயற்றிய ஆசாரக்கோவை,செல்வகேசவராய முதலியார், கலாரத்னாகரம் பிரஸ்,சென்னை (மூன்றாம் பதிப்பு 1916)
2. அறவியல் -ஓர் அறிமுகம்,வில்லியம் லில்லி (ஆங்கிலம்),காந்தி கோ.மோ (தமிழ் மொழியாக்கம்),தமிழ் வெளியீட்டுக்கழகம்,சென்னை (1964)
3. ஆக்க இலக்கியமும் அறிவியலும், சண்முகதாஸ். அ, யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணம், இலங்கை (1977)
4. இலக்கியமும் உளவியலும், காஞ்சனா. இரா, விஷ்ணுப்பிரியா பதிப்பகம், மதுரை (1997)
5. பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை, ஈசுவரப்பிள்ளை. தா, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் (2000)
6. பத்மதேவன்,தமிழ்ப்பிரியன் (உ.ஆ) நீதி நூல் களஞ்சியம் கொற்றவை வெளியீடு சென்னை -600017 முதற்பதிப்பு -2014


**Cite this book Chapter :** S. Ramalakshmi and Duraimuthu Subramaniam., (2021) Asarak Kovai’s portrayal of tamil humanities, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:274-286. Cauvery College For Women, Trichy.

**ச.அம்பிகா எம்.ஏ., பி.எட்.,எம்.பில்,**
எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல்கல்லூரி,
குமாரபாளையம்,
நாமக்கல்.

# திருக்குறள் உணர்த்தும் இல்லறபண்பாடு

**ஆய்வுச்சுருக்கம்**

உலகம் விளக்கமுற உதிக்கின்ற ஞாயிறுபோல் உள்ளங்களில் விளக்கேற்றியவர் வள்ளுவர். வாசுகி என்னும் கற்புக்கரசியை மணந்து இல்லறமெனும் நல்லறத்தை உலகிற்கு உணர்த்திய உத்தமர்.

ஆணும்பெண்ணும்லயமும்சுருதியும்போல், சுடரும் கதிரும்போல், மலரும் மணமும் போல் இருவர்வாழ்வும் ஒன்றுபட்டு, ஒருவரை ஒருவர் நன்கறிந்து, நயம்பட அன்பாய் வாழ்வு நடத்துவதுதான் இல்லறம். காதல் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டு வாழ்வதுதான் இல்வாழ்க்கை. அன்பேதெய்வம்என்பர். மரஞ்செடி கொடிகளுக்கு ஆதவன்போல், மனித இதயத்துக்கு அன்புமிக அவசியம். இறம் செய்தால் அன்பு உண்டாகும். அன்பு உண்டானால் அருள் பெருகும். இல்வாழ்க்கை நடத்தும் ஆணும் பெண்ணும் அன்புடன் வாழ்வதுடன் மற்றுமுள்ளார் அனைவரிடத்தும் அன்புசெலுத்த வேண்டும். அத்துடன் அறம்பட வாழவேண்டும் . அறமென்பது வாழ்க்கைநெறி. அறமின்றித் தீயநிலையில் இருப்பின் அது இல்லறமாகாது. இல்லறம், பிறர்பழி சொல்லக்கூடிய அளவிற்கு அமையலாகாது. அவ்விதம் அமையாதிருக்குமாயின் , அது நல்லபுகழுக்குரிய பெரும்நிலையாகும்.

**முன்னுரை**

மனிதன் மனிதனாக வாழ மனிதன் மனிதனுக்கு கூறிய அறிவுரை திருக்குறள். திருக்குறள் அறநூல் மட்டுமல்ல வாழ்வியல் நூலாகும். அதனால்தான் இது உலகப்பொதுமறை என்று அழைக்கப்படுகிறது. உலகில் அதிகமொழியில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் இதுவாகும். இந்நூல் கி.மு.வில் தொடங்கி இன்றுவரை உயிர்ப்புடன் வாழ்கிறது. அறம் பொருள் இன்பம் என்ற முப்பாலிலும் வாழ்வியல் உண்மைகளை உணர்த்துகின்றது.

**திருக்குறளின்தேவை**

மனிதன் விண்ணையேத்தொடுமளவிற்கு உயர்ந்துவிட்டான். வேற்றுக் கிரகங்களுக்குச் செல்லும் நிலைக்கு வித்திட்டு விட்டான். நினைத்தப்படி எல்லாம் சாதித்து விட்டான். நிழலான கற்பனைகளுக் கெல்லாம் கூட வடிவம் கொடுக்க ஆரம்பித்து விட்டான். மனிதனின் இத்தகைய வளர்ச்சியினால் சமுதாயத்தில் அவன் மதிப்பு நாளுக்குநாள் கூடிவருகிறது.

"மனிதன்மனிதனாக்கும்"

முயற்சியினைத் திருக்குறள் மேற்கொண்டுள்ள காரணத்தால்தான் அது அன்றைய வாழ்விற்கும் பொருந்துவதாகிறது. மனிதன் வாழும் காலந்தோறும் திருக்குறள் வாழம் என்பதில் ஐயமில்லை. காலமாற்றத்தின் வினைவாக அளவற்ற பலதரப்பட்ட நூல்களையும் அறிவியல் தொழிலில்நுட்ப நூல்களையும் படிக்கும் மனிதன் எளியநூலான திருக்குறளை பழக்கத்தில் கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்கது.

இன்றைய பரபரப்பான சூழ்நிலையில் மனிதன் மனநலத்தைப் பேணமுடியாமல் பாதிப்புக்குள்ளாகும் போதுமன அமைதியைத்தேடி ஆன்மீகம் தியானம் யோகா என்று பலவற்றிலும் பயிற்சிபெறுவதில் ஆர்வம் காட்டுகிறான். திருக்குறள் போன்ற அறநூல்களைக் கைவிட்டதன் விளைவே இது. நம் வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் துன்பங்கள் சந்தோசங்கள் ஆகியவற்றைப் போக்கிக் கொள்ளவும் வாழும் நெறிமுறைகள் பற்றித் தெளிவினைப் பெறவும் வாழ்வியல் ஆலோசனைகள்

வழங்கும் பெட்டகமாகத் திருக்குறள் விளங்குகிறது. எந்தக்காலக் கட்டத்திலும் எந்த இடத்திலும் எத்தகைய மனிதர்கள் வாழ்ந்தாலும் அவர்களின் இயல்புகள் நடத்தைகள் இந்நூலில் உள்ளபடிதான் இருக்கமுடியும் இருக்கவேண்டும். என்பதை உணர்ந்து எழுதியிருக்கிறார் வள்ளுவர். மனிதனின் இன்றைய"ஹைக்கூ" கவிதை இரசனைக்கேற்ப அன்றே திருக்குறளைக் குறைந்த அடிகளில் தந்து நிறைந்த பொருள்தரும் அளவில் நிற்கிறார் வள்ளுவர். இத்தகைய திருக்குறள் காட்டும் இல்லறம் இன்றைக்கும் பொருந்தும்நிலை இங்குச்சிறப்பாக ஆக்கம்பெறுகின்றன.

**இல்லறவியல்**

திருக்குறளில் தொட்ட இடமெல்லாம் வாழ்க்கை விளக்கங்கள் இடம்பெறுகின்றன. எனினும் "இல்லறவியலில்" இடம்பெற்றிருக்கும் 20 அதிகாரங்கள் இல்லத்தின் நல்லறத்தை எடுத்தியம்புவதாகச் சிறப்புப்பெறுகின்றன. வள்ளுவரின் வழிநின்று வாழ்வோர்க்குக் குறள்காட்டும் "இல்லறம்" இன்றுமட்டுமல்ல என்றுமே நலம்பயப்பதாகவே அமையும் என்பது திண்ணம்

"இல்வாழ்வான்என்பான்இயல்புடையமூவர்க்கும்

நல்லாற்றின்நின்றதுணை......(குறள்**41)**

ஒருவன் தன்னைநாடி நிற்கும் பெற்றோர் மனைவி மக்களை நெறிதவறாமல் காக்கும் நிலையானதுணையாவான் என்று குறிப்பிடுகிறது. இன்றைய தலைவன் இல்லறக் கடமையைத் துறந்துவிட்டான். அத்தனையும் மறந்துவிட்டான் தன்னை மறந்து தவறிழைக்க ஆரம்பித்துவிட்டான். இதன் விளைவாகவே இந்நாளில் முதியோர் இல்லங்கள் மணமுறைகள் குழந்தைகள் "மறியிடைப்படுத்தமாண்பிணை" போல வாழவேண்டிய நிலைமாறி அம்மாவிடம் சிறிதுகாலம் அப்பாவிடம் சிறிதுகாலம் என்று வாழும் அவலங்கள்......இப்படி அனைத்துமே நிகழ்கின்றன. இல்லத்தின் ஆரோக்கியம் சிதைக்கப்படுகின்றன. ஆகவே பண்பிலிரந்து விலகாமலிருக்கத் திருக்குறளின் சேவை என்பது உணரப்படுகிறது.

அன்பு என்கின்ற பண்பையும் அறம் என்கின்ற பண்பையும் சிறந்த இல்வாழ்க்கை மூலமாகவே அடையமுடியும். இதனை

"அன்பும்அறனும்உடைத்தாயின்இல்வாழ்க்கை

பண்பும்பயனும்அது"

என்ற குறள் குறிப்பிடுகிறது. இத்தகைய அன்பும் அறனையும் இன்றைய இல்லங்களில் பேணப்படாத காரணத்தாலே குடும்பங்களில் சண்டைசச்சரவுகளும் குழந்தை வளர்ப்பில் சிக்கல்களும் நிறைந்த நிகழ்கால எதிர்காலச் சமுதாயங்கள் பாதிப்புக்குள்ளாவதைக் காணமுடிகின்றது. மேலும் அன்பும் அறனும் கிடைக்கப்பெறாத நிலையில் இளைய சமுதாயம் மனமுறிவு உளச்சிக்கல் போன்றவற்றிக்கு ஆளாகின்றனர்.

ஒருவனது இல்வாழ்க்கையானது தன்மனைவியிடத்த அன்பினையும் பிறர்க்குப்பகுத்துண்டலாகிய அறத்தினையும் உடையதானால் அதுதான் இல்வாழ்க்கைக்கான பண்பும் பயனும் ஆகம் என்றுரைக்கின்றார். மனைவியிடம் அன்பினையும் மற்றவர்களுக்கு அறத்தினையும் அளிப்பதுதான் இல்வாழ்க்கையின் பண்பாடு என்பதை அறியமுடிகின்றது.

" அறனெனப்பட்டதேஅல்வாழ்க்கைஅக்து

பிறன்பழிப்பதுஇல்லரின்நன்று

அறனென்று சிறப்பித்துக் கூறப்படுவது இல்வாழ்க்கையே அதுவும் மற்றவர் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும். இல்வாழ்க்கை அன்பைச்சார்ந்தது மனைவி கணவனிடத்தும், கணவன்மனைவியிடத்தம் அன்பு கொண்டுவாழலாம் வாழ்க்கையே அறத்தோடு வாழும் இல்லறம் அதுதான் இல்லறத்தின் பண்பு அகும். அதுதான் இல்லறத்து வாழ்பவர்களுக்கு பயனைத்தரும்

இல்லையென்றால் பயனற்ற பண்பற்ற வாழ்க்கையாக மாறிவிடும் என்பதை உணர்ந்து உரைத்துள்ளார் திருவள்ளுவர் அறம் என்பதே இல்வாழ்க்கை தான்பிறரின் பழிச்சொல் இல்லாமல் வாழ்வதே நன்மையினைத் தரும் என்றும் வலியுறுத்துகின்றார்.

இல்வாழ்க்கையில் அன்பும் அறமும் குறைந்து மற்றவர்களின் பழிச்சொல்லுக்கு உள்ளாவது இன்றையக் காலக்கட்டத்தில் மிகுந்து வருகின்றது இல்லறத்தின் பண்பாட்டினை மீறிகணவன் மனைவி செயல்படுகின்றபோது ஏற்படும் குடும்பச்சிதைவுகளையும் சமுதாயச்சீர்க் கேடுகளையும் காணமுடிகிறது.

**சங்கஇலக்கியத்தில்வாழ்வியல்நெறிகள்**

சங்க இலக்கியத்தை வாழ்வியல் நெறிகள் நோக்கில் ஆராய்வதற்கு இடமுண்டு. அறம் சார்ந்த வாழ்வியல்நெறிகள், பொருள்சார்நத வாழ்வியல்நெறிகள் இன்பம் சார்ந்த வாழ்வியல் நெறிகள் மூன்று நிலைகளாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அறம்சார்ந்தவாழ்வியல்நெறிகள்**

வாய்மை,பொய்யாமை,செய்நன்றிஅறிதல் நடுவுநிலைமை, அடக்கமுடைமை ஒழுக்கமுடைமை, புறங்கூறாமை, இன்னாசெய்யாமை, ஈகை, கள்ளாமை, கொல்லாமை பற்றிய குறிப்புகள் திருக்குறளில் கட்டப்படும் வாழ்வியல் நெறிகளாகும்.

பொருளின் நிலையாமைப் பண்பைப் பற்றிப் பேசுவதுடன் நில்லாமல் பொருளின் அருமையையும் தேவையையும், முதன்மையையும் வலியுறுத்திக்கூறியிருப்பது சங்க இலக்கியத்தின் தனித்தன்மைஆகும்.

"அருளில்லார்க்குஅவ்வுலகம்இல்லைபொருளில்லார்க்கு

இவ்வுலகம்இல்லாகியாங்கு" (குறள்)

இன்பம்சார்ந்தஅறநெறிகள்

சங்க இலக்கியத்தை நுணுகி ஆராயும்போது கிடைக்கும் வாழ்வியல் உண்மைகள் திட்பமும், நுட்பமும் வாய்ந்தவை ஆகும். வெறும் உடல் இன்பம் மட்டும் சங்க இலக்கியம் பேசவில்லை. அவற்றிக்கு மேலாகத் தலைவன் தலைவி உள்ளப் புணர்ச்சிக்கு இது முதன்மைதந்துள்ளது.

" அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"(குறுந்தொகை.**40)**

அகத்திணைப் பாடல்களில் மட்டுமின்றி புறத்திணைப்பாடல்களிலும் வாழ்வியல் நெறிகள் குறித்தான பற்பல அரியகருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. பண்டையச் சமூகத்தில் மக்களிடையே வாழ்வியல் அறநெறிகள் எங்ஙகனம் ஓங்கியிருந்தன. அதில் அந்நாட்ட அரசர்களின் பங்கு எப்படியிருந்தன என்பதை

"நன்னடைநல்கல்வேந்தற்குக்கடனே" (புறத்திணை.**312)**

எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்ற பழமொழிக்கேற்ப பண்டையக் காலத்தில் அரசர்கள் மக்களின் வாழ்வியல் அறநெறிகளில் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தனர் என்பதை மேற்படி பாடலின் ஒரே ஒரு அடியாயினும் அது நெற்றி அடியாய் உணர்த்துகிறது. இதுதமிழ் மரபில்தொன்று தொட்டு வருவதைக் காணலாம்.

"கோன்எவ்வழியோகுடியும்அவ்வழியே"

என்னும் பழமொழி வாயிலாக மக்களின் அறநெறிகள் அச்சமூகத்தை வழிவழியாக தொன்று தொட்டுவழி நடத்திவரும் அரசர்களின் வாழ்வியல் நெறிகளை அடியொட்டி வருவன என்பதை வலியுறுத்தி கூறப்படுகிறது.

**இனியசொற்கள்**

உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் புலப்பாட்டுக் கருவிமொழி. சமூகம் மொழியின் வாயிலாகக் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்துகொண்டு உறவுப்பாலங்களை வலுப்படுத்திக்கொள்கின்றது. "யாகாவாராயினம்நாகாக்க" என்னும் பாதுகாப்பு வளையத்தை அமைத்துக்கொண்டு வாழ்வது நலம். நம்முடைய இனியசொற்கள் பாவத்திற்கு கழுவாயாக அமையும் அறத்திற்கு சமமானத என்பதை.

"அல்லவைதேயஅறம்பெறுகும்நல்லவை

நாடிஇனியசொலின்"

என்னும் குறட்பாக்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

**இன்பம்**

இன்பமும் துன்பமும் இல்லானே இறைவன் என்பது உண்மை. ஆனால் மனிதர்களுக்கு இன்பமும் துன்பமும் பிடிக்கமுடியாத வாழ்வியல் அங்கம். இருப்பினும் மனிதமனம் துன்பத்தை வெறுத்து வெறுத்து இன்பத்தை மட்டுமே விரும்புகின்றது. இளமை, பொருள், செல்வாக்கு, புகழ் இவற்றால் வரும் இன்பம் நிலையற்றது. அழிவில்லாத இன்பத்தினை அறம்செய்தால் மட்டுமே பெறமுடியும்.

"அறத்தான்வருவதேஇன்பமற்றுஎல்லாம்

புறத்தபுகழும்இல்"

என்ற ஏழுசீர்களுள் பக்குவமாக அறிவுரைப் புகட்டிய வள்ளுவன் காலந்தோறும் இறவாதப் புகழுடன் நம்மிடையே வாழ்த்துக் கொண்டிருக்கின்றார்.

"அறமெனப்படுவதுயாதெனக்கேட்டபின்

மறவாதுஇதுகேள....."

என்று பட்டினத்தார் அறத்தின் மேன்மையை வலியுறுத்திக்குறிப்பிடுகின்றார்.

**செல்வம்**

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது நிதர்சமான உண்மை. மனிதசமூகம் உலகத்தில் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு செல்வம் இன்றியமையாதது. இதனைத்

"திரைக்கடல்ஓடியும்திரவியம்தேடு"

"வினையேஆடவற்குஉயிர்"(தொல்காப்பியம்)

என்ற முன்னோரின் கருத்து மெய்ப்பிக்கிறது. செல்வம் உடைய மனிதனுக்க சமூகத்தில் மதிப்பும் செல்வாக்கும் கிட்டும். இவ்விரண்டையும் அறத்தினால் மட்டுமே அடையமுடியும் என்பதை.

"சிறப்பினும்செல்வமும்ஈனும்அறத்தினூங்கு

ஆக்கம்எவனோஉயிர்க்கு" - என்னும்குறள்தெளிவபடுத்துகிறது.

"அறம் செய விரும்பு" என்னும் ஔவையாரின் ஆத்திச்சூடி அதனைவழி மொழிகின்றது. அரிதாய் அறனெய்தி அருளியோர்க்கு அளித்தலும் பெரிதாய் பகைவென்றுப் பேணாரைத்தெறுதலும் என்று கலித்தொகை குறிப்பிடுகிறது.

பிறருக்குக்கொடத்துமகிழவெபொருளைச்சேர்க்கவெண்டும்என்பதை

" செல்வத்துப்பயனேஈதல்

துய்ப்பேம்எனினெதப்பறபலவே"

என்ற புறநானூறு தமிழரின் புறவாழ்வியல் புலப்படுத்தும் சிந்தனை. மேலும் தமிழரின் பறவாழ்வியல் புலப்பாட்டுச் சிந்தனைகளை உடம்பால் மட்டும் வாழாது உயிராலும் வாழவேண்டுமெனில் அறம்செய்வதை கடமையாகக் கருதுதல் வேண்டும்.

**விருந்தோம்பல்**

நம் இல்லம்நாடி வரம்விரந்தினர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடாகும். அவர்கள் அகம்மகிழ மனமுவந்து அமுதுபடப்பதை கடமையாகப் போற்றினர். நெய்யோடு வெண்ணெய் அரிசியால் சமைத்த வெம்மையான சோற்றையும் ஏழுகலங்களில் இட்டுகாக்கைக்க உணவுவைத்தல் பழங்கால மரபாகும். அவ்வழக்கம் இன்றளவிலம் நடைமுறையில் உள்ளது.

"எழுகலத்துஏந்திணும்சிறிது-என்தோழி

பெருந்தோள்நெகிழ்ந்தசெல்லற்கு

விரந்துவரக்கரைந்தகாக்கையது

பலியே " (குறுந்தொகை**210)**

**வறுமையில்விருந்து**

பொருநர்,பாணர்,விறலியர்,கூத்தர் போன்ற இசைக்கலைஞர்கள் மன்னர்கள் மற்றம் புலவர்கள் ஆகியோரைப்பற்றி புகழ்ந்துபாடிபரிசில் பெற்று தம்மடைய வறுமையை போக்கிகொள்வதாக ஆற்றுப்படை நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

இவ்வாறு வறுமையில் வாழும்பாணன் மனைவிதன் வீட்டிற்கவரும் விருந்தினரை உபசரிக்கும் விதம் தமிழ்மக்களின் விருந்தோம்பல் பண்பிற்குசிறந்த ஓர்எடுத்துக்காட்டு என்றுகூறலாம்.

"குப்பைவேளைஉப்புஇலிவெந்ததை

மடவோர்காட்சிநாணிக்கடையடைத்து

இரும்பேர்அஒக்கலொடுஒருங்கு

உடன்மிசையும்" (சிறுபாணாற்றுப்படை**137-139)**

வறுமையில் வாழ்ந்தவந்தாலும் தன்னைநாடி வீட்டிற்குவந்த உறவினர்க்குகுப்பையிலே முளைத்திருந்த வெளைக்கீரையைக் கிள்ளிவந்த உப்புக்கூடப் பொடவழியில்லாத நிலையிலும் சமைத்து உறவினர்களுக்கு விருந்து அளிந்த உபசரித்தார் என்பதனை இதன்மூலம்அறியலாம்.

**முடிவுரை**

இன்றைய மனிதனின் தேவைக்கஏற்ப, மனிதனை மனிதனாக்கம் கல்வி, சமுதாயக்கல்வி, இல்லறக்கல்வி, முதியோர்கல்வி, உளவியல்கல்வி, நாட்டுக்கல்வி ஆகிய பலவகையான கல்விக்கருத்துக்களைத் திரக்குறள் nடுத்துக்கூறி சிறப்பும் பெறுவதாகிறத.வாழ்க்கையில் நமக்குச்சிக்கல்கள் ஏற்படும் பொழுதெல்லலாம் தெளிவுபெறும் பொருட்டு திருக்கறளை எடுத்துவள்ளுவர் கூறியுள்ள வழிவகைகளை மேற்கொள்ளல் வேண்டும். இங்ஙனம் நாம்செயல்படும்போது தான் திருக்குறள் உடல்நலம், மனநலம் பேணும்திருக்கறள் அதபோதிக்கும் பாடம்அதன் சேவை என்றென்றும் தேவை என்றளவில் மனதில் நீங்கா இடம்பிடிக்கிறது.

**துணைநின்றநூல்கள்**


1.பரந்தாமனார்.அ.கி.பேச்சாளராக. அல்லிநிலையம். சென்னை.

2.மாணிக்கவாசகன்,ஞா.(உ.ஆ) திருக்குள்உமாபதிப்பகம்சென்னை

3.திருக்குறள் – பரிமேலழகர்உரை



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Ambika S., (2021) Domestic ethics Portrayed in Thirukkural, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:287-291 Cauvery College For Women, Trichy.

**கு. திலகவதி**
பட்டதாரி ஆசிரியர்
அ.பெ.மே.பள்ளி
தொண்டாம்புத்தூர்
கோவை

# பாவேந்தரின் குடும்ப விளக்கில் தமிழரின் அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழரின் அடையாளங்களாகக் கருதப்பட்ட அனைத்தும் தற்போது பாதுகாக்கப்படுகிறதா? என்ற கேள்வியே ஆய்விற்கான அடிப்படை. பாவேந்தரின் குடும்ப விளக்கு நூலில் ஒவ்வொரு பகுதியும் குடும்ப முன்னேற்றத்தை மட்டுமல்லாது நாட்டின் முன்னேற்றத்தையும் தமிழ்ப்பற்றையும் வளர்ப்பதற்காக அமைந்துள்ளது. தனிமனித ஒழுக்கமே சமுதாய ஒழுக்கம் என்ற அடிப்படை தத்துவம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

**‘குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்’**

**‘நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்’**

குடும்பம் சிறப்பாக இருந்தால் நாடும் நன் முறையில் வளர்ச்சி பெறும் என்பதற்காகக் குடும்பத்தை முன்னேற்றக் கூடிய தமிழரின் பாரம்பரியங்களை அழகாக எடுத்துக் கூறும் நூல் குடும்ப விளக்கு. எப்படி இருந்தார்கள் தமிழர்கள் எப்படி இருந்திருக்கிறது. அன்றைய காலகட்டம் என்பதை நம் கண்முன்னே நிறுத்தும் ஓர் ஒப்பற்ற படைப்பு.

**பாரதிதாசன் குறிப்பிடும் தமிழர் அடையாளங்கள்**

பாரதிதாசன் ஒரு குடும்பத்தின் மூலமாக ஒட்டுமொத்த தமிழர்களின் வாழ்க்கை நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். குடும்பத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருடைய பங்கும் அவர்களுடைய வேலைகளும் மற்றவர்களுடன் கலந்து பழகுதலும், சமுதாயத்துடன் ஒன்றிணைந்து முன்னேற்றத்துதலும் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவைகளாகக் குறிப்பிடப்படுபவை.

**தமிழர்களின் சுறுசுறுப்பு**

காலையில் சூரியன் வரவுக்கு முன்பே குடும்பத்தலைவி எழுவதும் சுறுசுறுப்போடு அந்தப் பொழுதை ஆரம்பிப்பதும் அன்றைய மக்களின் நிலையைக் காட்டுவனாக உள்ளன. வீட்டின் தலைவி அழகிய கோலமிடுவது மிக சிறப்பாக எடுத்துக் கூறும் கவிஞர் அவளின் அழகிய கோலத்திற்கு சூரியன் தன்னுடைய பொன்னிறக் கதிர்களை நீட்டி பரிசு வழங்குவதாகக் குறிப்பிடுகிறார்.

**காலை எழுந்தவுடன் படிப்பு**

தமிழர்களின் முக்கிய கடமையாக காலை எழுந்தவுடன் செய்யக்கூடிய வேலைகளும், குழுந்தைகளைப் படிப்புக்குத் தயார் செய்வதும், இசை கற்றுக் கொடுப்பதும் அழகாக எடுத்தாளப்பட்டுள்ளன. குழந்தைகளுக்குக் கற்றலின் அவசியத்தைப் பெற்றோர்கள் வலியுறுத்துவது போற்றத்தக்கது.

**“வீடெல்லாம் இசையே வீட்டில்**

**நெஞ்சலெல்லாம் மெருகே நெஞ்சே**

**ஏடெல்லாம் அறிவே ஏட்டில்**

**எழுத் தெல்லாம் களிப்பே”1**

**(கு.வி ப.எ 30)**

**இல்லத்தரசிகளின் கடமை**

வீட்டின் அச்சாணியாக விளங்குவது குடும்பப் பெண்களே, வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் கணவனுக்கு உதவுதல், பிள்ளைகளுக்குப் பாடம் கற்று தருதல், வீட்டு வேலைகளை நிறைவு செய்தல், மாமன் மாமியைக் கவனித்தல் போன்றவை மிகச் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன. வீட்டு தலைவியின் படிப்பறிவைப் பற்றிய முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது.

**வாணிப திறமையும் நேர்மையும்**

**"மல்லியை அளப்பார்; கொம்பு**
**மஞ்சளை நிறுப்பர்; நெய்க்குச்**
**சொல்லிய விலை குறைக்கச்**
**சொல்லுவார், கொள்சரக்கின்**
**நல்லியல் தொகை கொடுப்பார்**
**சாதிக்காய் நிற்கச் சொல்வார்"[2]**

**(கு.வி ப.எ 32)**

மேற்கண்ட கூற்றில் பலசரக்கு கடையின் அடிப்படைக் கூறுகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அதோடு வியாபாரத்தில் நேர்மையாக இருப்பதையும் வாணிக திறமையையும் சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறது இந்த நூல்.

**கணவன் மனைவியின் பொது நலம்**

பொதுவாக வீட்டைப் பற்றி மட்டும் கவலை கொள்ளாமல் நாட்டைப் பற்றியும் சிந்திக்கும் கணவன் – மனைவியாக தமிழர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை பாரதிதாசன் சுட்டிக் காட்டுகிறார். தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் தொண்டாற்ற வேண்டிய கடமை உணர்வை தலைவன் தலைவி மூலமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

**தமிழ் படிக்க வேண்டும்**

தமிழ் படிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இருக்கிறார்கள். தன்னலம் பாராமல் பொதுநலத்துடன் நடந்து கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி இருக்கின்றனர்.

**"தமிழரென்று சொல்லிக்கொள் கின்றோம் நாமும்**
**தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்பு கின்றோம்**
**எமதென்று சொல்லுகின்றோம் நாடோறும் தான்**
**எப்போதும் தமிழனுக்கு கையால் ஆன**
**நமது உழைப்பை ஒரு காசை செலவு செய்தோம்"**
**நாம் இதனை என்றேனும் வாழ்நாள் தன்னில**
**அமைவாக குந்தி நினைத் தோமோ? இல்லை**
**அனைவரு ம்இவ் வாறு இருந்தால் எது நடக்கும்"[3]**

**(கு.வி ப.எ 46)**

மேற்கண்ட அடிகள் பொது நலத்துடன் இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

**விருந்தோம்பல்**

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"[4]**

**(திருக்குறள் 322)**

விருந்தோம்பல் இல்லறத்தில் தலையாய நெறியாகும். விருந்தோம்பல் இல்லாத வாழ்க்கை இல்வாழ்க்கையாகாது. விருந்தோம்பலில் பெண்கள் பெரும்பங்கு பெறுகின்றார்கள். 'நல்விருந்தோம்பலில் நட்டால்' எனத் திரிகடுகம் வாயிலாக அறியலாம். தமிழர்களின் மிகச் சிறந்த பண்பாடு விருந்தோம்பல் ஆகும். வந்தவர்களை அகம் மலர்ந்து வரவேற்கும் சிறப்பான பண்பாட்டை பாவேந்தர் ஒரு பகுதி முழுவதும் குறிப்பிட்டிருக்கிறார்.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து"[5]**

**( திருக்குறள் 90)**

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கேற்ப வந்த விருந்தினர்களின் முகம் வடாதவாறு விருந்தோம்பல் செய்வது தமிழர் பண்பாடு.

**உணவு பரிமாறும் முறை**

**"வாழை இலையின் அடி**
**உண்பார் வலப்புறத்தில்**
**வீழ விரித்துக்**
**கறிவகைகள் - சுழ வைத்துத்து**
**தண்ணீர்வெந் நீரை**
**தனித்தனியே செம்பில் இட்டு**
**வெண்சோ றிடும் முன்**
**மிக இனிக்கும் - பண்ணியமும்**
**முக்கனியும் தேனில்**
**நறுநெய்யில் மூழ்குவித்தே**
**ஒக்கநின்றே உண்டவின்**
**சோறிட்டு - தக்கபடி**
**கேட்டும் குறிப்பறிந்தும்**
**கெஞ்சியும் மிஞ்சும் அன்பால்**
**ஊட்டுதல் வேண்டும் தாய் போல்"[6]**

**(கு.வி. ப. எ. 61)**

மேற்கண்ட அடிகளைக் கொண்டு உணவு பரிமாறும் முறையும் விருந்தோம்பலின் முக்கியத்துவமும் அழகாய் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இல்லறமே நல்லறம்**

**"தானே தனி இன்பம்**
**கொள்ளத்தகும்? நல்**
**தேனிதழால் இன்றி ஒரு**
**சேய்க்கின்பம் ஆனதுண்டோ?"[7]**

**(கு.வி.ப.எ. 80)**

எல்லாவற்றையும் துறந்து தனித்து இருப்பதைக் காட்டிலும் இல்லறத்தில் இருந்து பொதுத் தொண்டாற்றுவதேமிகச் சிறந்தது என்பதே தமிழரின் பண்பாடாக இருந்திருக்கிறது.

**பெண் கல்வியின் அவசியம்**

**"கல்வியில் லாத பெண்கள்**
**கலர் நிலம்! அந்நில த்தில்**
**புல் விளைந் திடலாம் நல்ல**
**புதல்வர்கள் விளைதல் இல்லை!**
**கல்வியை உடைய பெண்கள்**
**திருந்திய கழனி, அங்கே**
**நல்லறி வுடையே மக்கள்**
**விளைவது நவிலவோ நான்?"[8]**

**(கு.வி.ப.எ 100)**

பெண்கல்வியின் அவசியத்தை தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தனர் என்பது இப்பாடலின் வாயிலாகப் புலனாகிறது. சமையல் செய்வது என்பது பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை என்றும் சமையல் செய்யும் தொழிலானது மட்டுமே வேலை என்ற சட்டத்தினை விரட்ட வேண்டும். பெண்கல்வி எல்லா இடங்களிலும் பரவ வேண்டும் என்ற பாவேந்தரின் வரிகளில் பெண் கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்டு உள்ளது.

**காதல் திருமணம்**

சங்க காலம் தொட்டே காதல் வாழ்க்கை போற்றப்பட்டு வந்துள்ளது. ஆகையினால் காதல் ஒன்றும் தவறல்ல என்றும், காதலிப்பவர்களைப் பெரியோர்களே ஒன்று சேர்த்த திருமணம் செய்து வைத்திருக்கிறார்கள் என்பதும் இந்நூல் வழி அறியலாம்.

**தமிழ் பெயர் சுட்டல்**

தமிழர் இனத்தில் உள்ள ஒரு குடும்பத்தில் பிறந்துள்ள குழுந்தை தமிழ் குழந்தையாகும். எனவே குழுந்தைக்கு நல்ல தமிழ் பெயரை வைத்து சிறந்த செயல் என்பதைக் குறிப்பிட்டுள்ளனர்.

**"வானின்று மண்ணில் வந்து**
**மக்களை காக்கும் அஃது**
**பேனென்று; கரும்பும் அன்று;**
**செந்நெல்லின் சோறும் அன்று;**
**ஆன் அருள் பாலும் அன்றே;**
**அதன் பெயர் அமிர்தார்"[9]**

**(கு.வி.ப.எ. 224)**

தாலாட்டு தமிழரின் மிகச்சிறந்த பண்பாடாகவே காக்கப்பட்டுள்ளது.

**நிலா காட்டி சோறு ஊட்டல்**

இன்று அழிந்து போன மிகச் சிறந்த பண்பாடு. நிலவினைக் காட்டி குழந்தைக்குக் சோறு ஊட்டுதல் என்பது ஒவ்வொரு வீட்டிலும் நிகழ்ந்த நிகழ்வு. அழகழகான வார்த்தைகளால் நிலவினைக் காட்டிக்காட்டி குழந்தைக்குச் சோறு ஊட்டுதல் என்பது மிகச் சிறந்த கலையாக இருந்தது.

**"வானம் நீல தோப்பு - நீ**

**மங்கா தமத் தாப்பு**

**கூனி மீன்கள் மின்னும் - ஒளிக்**

**குட்டை நீஎன் றெண்ணும்**

**சீனத்து ப்பால் கோப்பை -நீ**

**சிரிப்பு முகத்தையும் சாய்ப்பை**

**கானல் வெளியும் குளிரும் - கண்**

**காண மனமும் ஒளிரும்**

**நிலா நிலா வா வா -ஒளி**

**நிறைவி எக்கே வா வா!”[10]**

**(கு.வி.ப.எ257)**

**முதியோர் காதல்**

வீட்டின் கடமைகளைச் செவ்வனே செய்து முடித்து ஓய்வாக இருக்கும் பெரியவர்கள் கடைசிவரை காதலர்களாகவே வாழ்கின்றனர். வயது அவர்களது அன்பிற்கு எவ்வகையிலும் தடையாக இல்லை. கடைசிவரை அவர்களுடைய காதலும் அன்பும் குறையாமல் பாதுகாப்பதே தமிழர்களின் அடையாளமாக இருந்திருக்கிறது. உடல் மெலிந்து உயிர் ஒட்டிக் கொண்டிருக்கும் வேளையிலும் கூட அவர்களது அன்பும் காதலும் குறையாமல் பார்த்துக் கொண்டனர்.

**நிறைவான வாழ்க்கை**

**“மைந்தருக்கு கல்வி சேர்த்தோம்**

**மகள்மார்க்கும் அவ்வாறேயாம்**

**எம்தகக் கடன்மு டித்தோம்**

**இனிதாக வாழுகின்றோம்**

**முந்துறச் சுற்றத் தார்க்கும்**

**செய்வன முழுவதும் செய்தோம்”**

**இந்தநாள் வரைக்கும் வாய்மை**

**இம்மியும் மறந்த தில்லை”[11]**

**(கு.வி.ப.எ 272)**

இவ்வகையில் செய்ய வேண்டிய கடமைகளை முழுதாக செய்து ஓய்வில் இருக்கும் முதியவர்களின் மனநிலை அழகாக காட்டப்பட்டுள்ளது.

**நாட்டிற்கு நலன் செய்வதே தமிழர் கடமை**

நாட்டின் நலன் பெருக வேண்டும் என்பதற்காக அறச்செயல்கள் செய்வதும் யாருக்கும் தீங்கு செய்யாமல் நன்மையே செய்வதும் தமிழர்களின் மிக முக்கிய கடமையாக இருந்திருக்கிறது. அப்படி தன்னலம் கருதாமல் பொது நலம் கருதுபவர்களாக, அக்கால தம்பதியினர் இருந்திருப்பது தெரியவருகிறது.

**மகளிர் ஒழுக்கம்**

மகளிர் எல்லாம் ஒழுக்கநெறி பூண்டால் மருத்துவ நிலையமே வேண்டாம் என்பது பாவேந்தரின் கருத்தாக உள்ளது. பெண்கள் அனைவரும் கல்வி அறிவு உடையவராகவும் ஒழுக்கமுடைய வாழ்வினையும் மேற்கொள்வார்கள். ஆனால் அவர்களுக்கு மருத்துவ உதவிகலே தேவைப்படாது நோய்களும் வராது. குடும்பமும் சமுதாயமும் சிறப்பாக நடைபெறும் என்பது முக்கிய கருத்தாக கூறப்பட்டுள்ளது.

**பெண்களுக்கு அரசியல் வரவேற்பு**

பெண்கள் அரசியலுக்கு வந்தால் மாநிலங்களில் போர் என்ற நிலையே ஏற்படாது என்பது பாவேந்தரின் கருத்து. குடும்பத்தை செவ்வனே நடத்தும் பெண்களுக்கு நாட்டையும் செவ்வனே வழிநடத்த தெரியும் என்பதை இந்நூல் வழி அறியலாம்.

**தமிழர் அடையாளங்கள்**

தமிழர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும். இப்படி இருந்தால் சிறப்பாக இருக்கும். அன்றைய சுழலில் இருந்த தமிழர்களின் அடையாளங்களாக பாரதிதாசன் பதிவு செய்த செய்திகள் குடும்ப விளக்கின் நூல் வழி அறியமுடிகிறது. குடும்பத்தின் முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது. குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களும் ஒவ்வொரு நிகழ்வுகளும் ஒவ்வொருவருடைய கருத்துக்களும் பொறுப்புகளும் கடமைகளும் மிக அழகாகச் சொல்லப்பட்டுள்ளன.

**தொகுப்புரை**

இதன்வழி தமிழர்களின் முக்கிய அடையாளங்களான கல்வியறிவு, விருந்தோம்பல், சுறுசுறுப்பான பாங்கு, வியாபாரத்தில் நேர்மை, வணிகத்தில் தூய்மை, நாட்டுப்பற்று, தமிழ்பற்று, தன்னலம் கருதாத பொதுத்தொண்டு, பிறர் நலம் பேணுதல், தமிழில் பெயர் வைத்தல், காதல் திருமணம் அங்கீகரித்தல், பெண் கல்வியின் முக்கியத்துவம், முதியவர்களின் காதல், நாட்டிற்காக உழைக்கும் பங்கு, நல்ல இல்லறம் ஆகியவை தமிழர்களின் மிகச் சிறந்த பண்பாடாக அறிந்து கொள்ள முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. பாவேந்தர் பாரதிதாசன், குடும்ப விளக்கு, ப.எ 30
2. மேலது, ப.எ 32
3. மேலது, ப.எ 46
4. கமலா முருகன், திருக்குறள், குறள் எண்,322
5. மேலது, குறள் எண்,90
6. மேலது, ப.எ 61
7. மேலது, ப.எ 80
8. மேலது, ப.எ 100
9. மேலது, ப.எ 224
10. மேலது, ப.எ 257
11. மேலது, ப.எ 272

**பார்வை நூல்கள்**


1. பாவேந்தரின் குடும்ப விளக்கு மூலமும் உரையும், கமலா முருகன், சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, சென்னை - 14
2. திரிகடுகம், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. திருக்குறள், பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Thilagavathy K., (2021) Tamil identities in Pavendar’s Kudumba Vilakku, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:292-297. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ம.மணிமேகலை,**
தமிழ்ப் பேராசிரியர்,
சமூக அறிவியல் துறை
அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி- 620027

**முனைவர் செ.இராதிகா,**
உதவிப் பேராசிரியர் (உழவியல்),
பயிர் மேலாண்மத் துறை,
அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி

# பழமொழி நானூறு தடத்தில் வேளாண் அறிவியல் சிந்தனைகள்

## ஆய்வுச் சுருக்கம்

நம் முன்னோர்கள் இயல்பான வார்த்தைகளின் வாயிலாக அக்காலப் பண்பாட்டு சிந்தனைகளைப் பின்வரும் சந்ததியினரும் அறிந்துகொள்ளும் பொருட்டு மிக அழகாகப் பழமொழிகளாக நமக்கு உருவாக்கித் தந்துள்ளனர்.இத்தகைய வாய்மொழி இலக்கியத்தினை ஏட்டில் எழுதும் இலக்கியமாக "பழமொழி நானூறு" எனும் தலைப்பில் செய்யுளாக்கி வடிவமைத்து அனுபவங்களைப் பகிர்ந்தளித்துள்ளார் ஆசிரியர் முன்றுரையரையனார். தமிழர்களின் அடையாளங்களுள் ஒன்றாகிய வேளாண்மைக் குறித்துப் "பழமொழி நானூறு" பதிவு செய்த வேளாண்மை சார்ந்த செயல்பாடுகள் குறித்துத் தம் கருத்தினை உவர் நிலத்தின் இயல்பு , எருவிடுதல் நுட்பம், களையெடுத்தல், பருவம், விதை அறிவியல் தொழில்நுட்பம், அறுவடை, சுங்க வரி, மரம் வளர்த்தலின் மாண்பு போன்ற வேளாண் சார் சிந்தனைகளைப் "பழமொழி நானூறு" வாயிலாகப் பழமொழியாகப் பகர்ந்ததனை இக்கட்டுரை ஈண்டு பதிவு செய்கின்றது. வேளாண் மாந்தர்கள் அக்காலத்தில் பயன்படுத்திய வேளாண் சார்ந்த நிகழ்வுகளில், சில செய்திகளை மட்டும் இக்கட்டுரை விளக்கியுரைக்கின்றது.

## முன்னுரை :

நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தில் கண்ட அப்பழுக்கற்ற உண்மையினை வாய்மொழியாகப் பழகி வந்த, வாய்மொழி இலக்கிய வகையே பழமொழி ஆகும். இதில் கற்பனைக்கு இடமில்லை. நடைமுறை அனுபவங்களைத் தகுந்த கருத்துக்களோடு பொருத்தி அதன் தொடர்பைக் கண்டறிந்து விழிப்புணர்வு பெற முயலும் நம் முன்னோரின் அரிய முயற்சியே பழமொழியாகும்.நம் முன்னோர்கள் இயல்பான வார்த்தைகளின் வாயிலாக அக்காலப் பண்பாட்டு சிந்தனைகளைப் பின்வரும் சந்ததியினரும் அறிந்துகொள்ளும் பொருட்டு மிக அழகாகப் பழமொழிகளாக நமக்கு உருவாக்கித் தந்துள்ளனர்.வழக்குமொழியில் பழகிவந்த பழமொழிகளை பழமொழி நானூறு எனும் தலைப்பில் செய்யுளாக்கி வடிவமைத்து அனுபவங்களைப் பகிர்ந்தளித்துள்ளார் கவிஞர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய பழமொழி நானூறின் ஆசிரியர் முன்றுரையரையனார் ஆவார்.வாழ்வியல் குறித்தப் பழமொழிகளைப் பேசும் அதே வேளையில், வேளாண் சார்ந்த சில அனுபவங்களையும் வாழ்வியலோடு பிணைத்துக் கூற முற்பட்டிருக்கிறது பழமொழி நானூறு. கி.பி.ஐந்தாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற பழமொழி நானூறு, தமிழர்களின் அடையாளங்களுள் ஒன்றாகிய வேளாண்மைக் குறித்துப் "பழமொழி நானூறு" பதிவு செய்த மண்ணறிவியல்,

எருவிடும் நுட்பம், களையெடுத்தல், பருவம், விதை அறிவியல் தொழில்நுட்பம், அறுவடை, சுங்க வரி போன்ற வேளாண் சார் சிந்தனைகளை இக்கட்டுரை ஈண்டு பதிவு செய்கின்றது.அக்காலத்தே பயன்பாட்டிலிருந்த வேளாண்மை சார்ந்த செயல்பாடுகளை அடுத்தடுத்தத் தலைமுறையினருக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் பொருட்டே, இவை பாடப்பெற்றுள்ளன என்பதே திண்ணமாகும்.

**மண்ணறிவியல் :**

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நிலத்தை நால் வகையாகப் பகுத்து மண்ணறிவியலின் முதல் விதையை வேளாண் விஞ்ஞான யுகத்தில் முதன்முதலில் ஊன்றியவர்கள் நம் முன்னோரே ஆவர். மண்ணின் இயல்பு, நீர்த்தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மண்ணைப் பகுத்த நம் முன்னோர்கள் களர் உவர் நிலத்தின் தன்மையையும் ஆய்ந்து அறிந்துள்ளார்கள்.

"உவர் நிலம் உட்கொதிக்குமாறு" (பழ.நா: 289)

எனும் அடியிலிருந்து உவர் நிலத்தின் தன்மையை நாமறியலாம். உவர் நிலமானது உள்ளிருந்து வெப்பத்தை வெளியே கடத்தாது தனக்குள்ளேயே இறுக்கி வைத்துக்கொள்ளும் தன்மையை உடையது என உவர்நிலத்தின் இயல்பை பழமொழிநானூறு மிக அழகாக எடுத்துரைக்கின்றது. உவர் மண்ணானது, வெப்பத்தை வெளியே அனுப்பாததினால், அம்மண்ணில் இடப்படுகின்ற விதைகள் அவ்வெப்பத்தினால், தம்முடைய முளைக்கும் திறனை இழந்து வெந்து வெதும்பிவிடுகின்றன. இதனால், முளை எழும்பாத விதைகள் அப்படியே மண்ணிலேயே அழுகிவிடும் நிலையை அடைகின்றன. உவர் மண்ணில் இடப்படுகின்ற விதைகள் முளைக்காமல் அழிந்துபடுவதினால் இம்மண், சாகுபடிக்கு ஏற்ற நிலமன்று என நம் முன்னோர்கள் உணர்ந்திருந்த அறிவியல் நுட்பத்தினை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். இன்று ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டறிந்த இந்த அறிவியல் செய்தியினை, ஆறாம் நூற்றாண்டிலேயே நம் முன்னோர்கள் அறிந்திருந்தார்கள் என்பது தெளிவு.

**எருவிடும் நுட்பம்:**

நீண்ட நாட்களாக எரு இடப்பெற்ற வயல், எரு பெறாத நாட்களிலும் போர் இடும்படியான கதிர்விடுவது எவ்வாறு என வியந்து நிற்கும் நம் முன்னோர்கள், எருவின் தன்மை, எரு இடுவதின் நோக்கம் ஆகிய எரு குறித்த ஒவ்வொரு கூறினையும் நன்கு ஆய்ந்திருக்கிறார்கள் என்பதனை நாம் கீழ்க்கண்டவாறாக அறிய வருகிறோம். மண்ணிலேயே தங்கியிருக்கும் எரு, உரம் ஆகியவை பயிரால் உறிஞ்சப்படும்வரை அல்லது வெள்ளத்தினால் சத்துமண் அடித்துச் செல்லப்படும் வரை அம்மண்ணிலேயே தங்கியிருக்கும் என்பதை அறிய முற்படுகின்றனர் என்பதனைப் "பழஞ்செய் போர் பின்று விடல்" (பழ.291) எனும் பழமொழி விளக்குகிறது. முந்தைய சாகுபடியின்போது இடப்பட்ட எருவானது அதற்கடுத்த சாகுபடியின்போது எத்தகைய எருவும் இடாதபோதும் முந்தைய எருவினைக்கொண்டே மீண்டும் பலனைத்தரும் என்கின்ற விளக்கத்தினைப் பெறலாம்.

**பருவம் :**

"பன்னாளும் நின்றவிடத்தும் கணி வேங்கை
நன்னாளே நாடி மலர்தலால்" (பழ.நா: 233)

எனும் பழமொழியின் அடியானது, வேங்கை மரமானது பல நாட்களும் தான் நின்றவிடத்தே நின்றிருந்தாலும் தான் பூத்ததற்குரிய நல்ல நாளை அறிந்தே மலரும், என்னும் செய்தியை விளக்குகிறது. இளம் பருவமுடைய தாவரமாயினும் நன்கு வளர்ந்த மரமாயினும் ஒவ்வொரு தாவரமும் மரமும் தத்தமக்குரிய நீர், வெப்பம், மண்ணின் சத்து கிடைக்கப்பெறும் எரு, உரம் போன்றவற்றைக் கொண்டிருந்தாலும் அத்தாவரத்திற்குரிய பருவம் வாய்க்கப் பெறும் காலத்தில் மட்டுமே பூ பூத்தல், பிஞ்சு உருவாதல், காய் கனி தோன்றுதல், முதிர்தல் போன்ற வளர்ச்சி மாற்றங்கள்

நடைபெறுகின்றன. பருவமே இவற்றை நிர்ணயம் செய்கின்றன. எவ்வித வளர்ச்சியாயினும் அதற்குரிய காலத்தே அவை நிகழும் என்பதனைக் கண்டறிந்த நம் முன்னோர்களின் வேளாண் தொழில்நுட்பத்தை மேற்கண்ட அடிகளால் நாமறியலாம். பருவம் பார்த்துப் பயிர் செய்தல் என்பதே வேளாண்மையில் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டிய அறிவியல் அணுகுமுறையாகும். இதனாலேயே அக்காலத்தே சிறுபொழுது, பெரும்பொழுது என காலம் இரண்டாகப் பகுக்கப்பட்டதனைத் தொல்காப்பியம் வழி அறியலாம்.

**விதை அறிவியல் தொழில்நுட்பம் :**

நல் விதையில்லாமல் நல் விளைச்சல் பெறப்படுவதில்லை என்பதனை," வித்தின்றி சம்பிரதம் இல் "(பழ.நா: 327) எனும் பழமொழி விளக்குகின்றது.நல் விதையே நல் விளைவிற்குக் காரணம் என்பதும் நிரூபணமாகின்றது. 'விதை பாதி வேலை பாதி' எனும் பழமொழியுமே இக்கூற்றினை வலுப்படுத்தும் காரணியாக உள்ளது.

பொதுவாக எல்லா மரங்களுமே பூக்கும்; பூக்கின்ற அனைத்துமே காய்க்கும் என்பது எழுதப்படாத விதியாக எண்ணிக்கொண்டிருந்த அந்தக் காலக்கட்டத்திலே பூத்தாலும் காய்க்காத தாவரங்களும் உள்ளன என்பதை நம் முன்னோர்கள் நன்கு கவனித்து அறிவியல்பூர்வமான உண்மையினை ஆய்ந்து கண்டிருக்கிறார்கள். இதனையே பழமொழிநானூறு, பாதிரி மரம் பூத்தாலும் காய் காய்ப்பதில்லை. வரப்பு கட்டி நீர் பாய்ச்சிய பாத்தியில் விதையை விதைத்தாலும் அத்தனை விதைகளும் முளைப்பதில்லை. விதைக்கப்படுகின்ற விதைகள் அனைத்துமே முளைப்பதில்லை. இதற்கான காரணங்களைத் தற்காலத்தில் வேளாண் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வெளியிட்டிருக்கின்றனர்.

"பூத்தாலும் காயா மரமுள மூத்தாலும்
நன்கறியார் தாமும் நனியுளர் -பாத்தி
விதைத்தாலும் நாறாத வித்துள" ( பழ.நா:93)

பூத்தாலும் காய் காய்க்காத 'பாதிரி' போன்ற மரங்கள் காணப்படுகின்றன. ஏதோ பூக்கிறது, விளைகிறது என்று அலட்சிய நோக்கில்லாது பாதிரி மரத்தில் பூக்கள் மட்டுமே காணப்படுகின்றன.காய்கள் காய்ப்பதில்லை என்று கூர்ந்து கவனித்த திறமும் பூக்களிலிருந்துதான் காய்களும் கனிகளும் தோன்றுகின்றன; அவற்றிலிருந்துதான் விதைகள் தோன்றுகின்றன என்று பூவினையும், பூவின் நுட்பங்களையும் அறிந்து கொண்ட நம் முன்னோர்களின் தாவரவியல் ஆய்வு அணுகுமுறையும் நம்மை வியப்படையவே செய்கிறது.மேலும், விதைக்கின்ற விதைகள் எல்லாம் முளைக்கின்றன என்று மேம்போக்காக எண்ணாது வரப்பு கட்டி நீர் பாய்ச்சிப் பாத்தியாகப் பிரித்து எத்துணை பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டாலும் தக்க சூழலை அமைத்துக் கொடுத்தாலும் விதைக்கப்படுகின்ற விதைகள் அனைத்துமே முளைப்பதில்லை. வெப்பம், காற்று, நீர், சத்துள்ள மண் போன்ற அனைத்து விதமான நலன்களும் அமைந்திருந்தபோதும் தேர்ந்தெடுக்கப்பட்ட நல் விதைகளை விதைத்திருந்தும் அவை முளை கொள்ளாதது ஏன் என்று விதை குறித்து ஆராய்ந்த நம் முன்னோர்களின் விதைத் தொழில்நுட்பம் போற்றுதற்குரியதாகும். தற்காலத்தில் இதனை விதை உறக்கம் என்கின்றனர். விதைகள் உறக்கம் கொள்கின்றன. அனைத்து விதைகளுமே உறக்கம் கொள்வதில்லை. ஏனோ ஒரு சில விதைகள் மட்டுமே உறங்குகின்றன.இதற்கான அறிவியல்பூர்வமான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. இக்காலத்தில் நாம் பழகிப்போன மிகமிகச் சாதாரண இந்நுட்ப செய்திகள் முதன் முதலாக வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடையாத முற்காலத்திலேயே எழுதி வைக்கப்பட்டிருப்பது வியப்பினைத் தருகின்றது. இதுபோன்ற ஒவ்வொரு சிறு செய்திகளுமே இன்றைய வேளாண் ஆராய்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைந்திருந்தன என்பது உண்மையே.

**களையெடுத்தல் :**

நெற்பயிர் நன்றாக விளைந்து நல்ல மகசூலைத் தரவேண்டுமாயின் களைகளை முழுமையாய்க் களைதல் வேண்டும். இவ்வாறாக வயலில் உள்ள புல் (களைகள்), தான் அழிந்து நெற்பயிர் வளர்வதற்கு இடம் கொடுக்கின்றது. களைகளை அழித்தால் பயிர் நன்றாக வளரும் எனும் தொழில்நுட்பத்தினை நம் முன்னோர்கள் கண்டறிந்து பல காலமாக செயல்படுத்தி வந்திருக்கின்றனர் என்பதைப் பழமொழியும் பதிவு செய்கின்றது.

" நெல்செய்யப் புல் தேய்ந்தாற்போல நெடும்பகை

தற்செய்யத் தானே கெடும் " (பழ.நா: 53)

ஒருவன் தன்னை வன்மைபெறச் செய்தலால் அந்தப்பகை தானே அழிந்துவிடும் என்பதனைக் கூற, புல் அழிவதால் நெற்பயிர் தமக்குரிய எல்லாச் சத்துக்களையும் எடுத்துக்கொண்டு நன்றாக வளரும் என்று கவிஞர் கூறுகின்றார்.ஆதலால், களை களைவது என்பது வேளாண்மையின் முக்கியப் பணியாகப் பார்க்கப்படுகின்றது.

**நீர்ப்பாசனம் :**

எத்தகைய நன்மை விளைவிப்பதாக இருப்பினும், அது அளவோடும், தேவையானபோதும் கிடைக்கப் பெறுவதில்தான் உண்மையான பயன்பாடு இருக்கிறது. அந்த வகையில், நன்கு பேணிப் பாதுகாக்கப்பட்ட வயலில் தேவையில்லாத நேரத்தில், தேவைக்கு மீறியதாக நீர்ப்பாய்ச்சும்போது, இளம் பயிர்களிடையே களை மண்டிப்போகின்றது. "யாப்பினுள் அட்டிய நீர்" (பழ.நா:311) தேவைக்கு மீறிய நீர்ப்பாய்ச்சல் என்பதும், அரணோடும் வளமையோடும் இருக்கும் வயலுள் இடப்பட்ட நீரானது, களை வளர ஏதுவாக அமையும் எனப் பழமொழி நானூறு குறிப்பிடுகின்றது. தேவையைத் தாண்டிய அதிக வரத்து நீரானது பயிரை வளர்ப்பதோடு அல்லாமல், பயிருக்குத் தீங்கு செய்கின்ற களையையும் வளரச் செய்யும் தன்மையுடையதாகும். 'பாய்ச்சலும் வேணும்; காய்ச்சலும் வேணும்' என்கின்றப் பழமொழி, பழமொழி நானூறின் கூற்றை வழிமொழிவதாகக் கருத்தில் கொள்ளலாம்.

**அறுவடை :**

தேவைப்படும்போது நீரைத் தேக்கிவைப்பதும், தேங்கிய நீரை வடிப்பதும் வேளாண்மையில் இயல்பான ஒரு நிகழ்வாகும். இருப்பினும், ஒவ்வொரு வேளாண் பணிக்கும் ஏற்ற காலமும், ஏற்ற தொழில்நுட்பமும் உண்டு. அறுவடையின்போது சேற்று நிலத்தில் கால் வைக்க இயலாது என்பதோடு அறுக்கும்போது நீரில் விழும் நெல்லும் பாழாகும் என்பதினால் வடிகாலில் நீரை வடியவிட்டுக் காய்ந்த பின்னர் அறுவடை மேற்கொண்டனர். இன்றைய வேளாண் நடைமுறையுள் மிக இயல்பாக நடைபெற்று வரக்கூடிய செயல்பாடாக இந்நிகழ்வு அமைந்துள்ளது. "விளைநெல் அரிநீர் அணை திறக்கும் ஊர அறுமோ", (பழ.நா.203) எனும் பழமொழியானது, விளைந்த நிலத்தை அறுக்கும் பொருட்டு நீரானது வடியவிட வடிகாலை உழவர்கள் திறந்து விடுகின்றனர் என்றும் அக்காலத்தே நம் உழவர்கள் பின்பற்றி வந்ததாக இப்பாடலில் இடம்பெறுகிறது.

மேலும், "கோல் தலையேயானினும் கொண்டீக", (பழ.நா.245) எனும் பழமொழி அடியானது, அரியப்பட்ட தாளின் தலையில் உள்ள நெல்லே என்றாலும் அதைக் காலம் அறிந்து உடனே கைக்கொள்ள வேண்டும். அறுவடை செய்யப்பட்ட தாளில் உள்ள நெல் மணிகள் உடனே அடித்துத் தூற்றித் தக்கவாறு சேமித்து வைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தினால் நெல் மணிகள் கண்டவாறு சிதைந்து வீணாகிப்போவதற்கு ஏதுவாகும் என்று நம் முன்னோர்களால் அறுவடைப் பணியின் முற்றுச் செய்கை வலியுறுத்தப்படுகிறது. செடி, தன் தலையிலேயே நெல்லைச் சுமந்து கொண்டிருந்தாலும் தகுந்த காலத்தில் அறுவடை செய்யப்படும்போதே அதன் பலனை உரியவர் துய்த்தல் இயலும். காலம் தாழ்த்தினாலோ அல்லது முன்னரே அறுவடை செய்தாலும் அதற்கான பயன் வந்து சேராது என்பதனையே "கோல்

தலையேயாயினும் கொண்டு ஈக” எனும் பழமொழி விளக்குகிறது. தலையிலேயே நெல்லைச் சுமந்து கொண்டிருந்தாலும் தகுந்த காலத்தில் அறுவடை செய்தலே பயனளிக்கும்.

**சுங்க வரி :**

ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு விளைபொருட்களை ஏற்றிச்செல்லும்போது, அரசின் வழிகாட்டுதலின்படி சுங்கவரி வசூலித்தல் என்பது அக்காலத்திலே பழக்கத்திலிருந்த அரசு நடைமுறையாகும். தற்காலத்திலும் இதே போன்ற வசூல்முறை நடைமுறையிலே உள்ளது.வழியினைக் கடந்து செல்கையில் அவர்களை நிறுத்தி வரி வசூலிப்பர்.அதுபோலவே, ஓடத்தில் ஏறும்போதே அதற்கானத் தொகையினை வசூல் செய்துவிடுவர். தொலைவைக் கடந்த பின்னர் யாரும் உரிய பணம் தருவதற்கு அலட்சியம் காட்டுவர். ஆகையால், வழியினைக் கடப்பதற்கு முன்பாகவே வரியினைப் பெற்றுவிடுவது அக்காலத்திய நடைமுறையாகும். தற்காலத்திலும் சாலைகளின் இடை இடையே சுங்கம் வசூலிக்கும் பழக்கம் அதாவது தொலைவினைக் கடப்பதற்கு முன்பாகவே வரி (உல்கு) வசூலிக்கப்படுகின்றது

“ சுரம் போக்கி உல்கு கொண்டார் இல்லையேயில்லை

மரம்போக்கிக் கூலிக்கொண்டார்” (பழ.நா:1) என விளக்குகின்றது.

இப்பழமொழியானது அக்காலத்திய சுங்கவரி வசூலிக்கும் முறையை எடுத்தியம்புகின்றது.

**மரத்தின் மாண்பு :**

உணவாகப் பயன்படும் பழ மரங்களைத் தனியாகத் தோட்டங்களில் வணிகம் பொருட்டு சாகுபடி செய்யாது, தங்கள் தேவைக்கானவற்றைத் தங்களுடைய கொல்லைப்புறங்களிலே தம் தேவைக்காக வளர்க்கும் முறை பல்லாண்டு காலமாகவே நம் முன்னோர்கள் கடைப்பிடித்துவரும் நடைமுறையாகும். “கொல்லையுள் கூழ் மரமே போன்று” (பழ.நா: 256) நம் வீட்டுக் கொல்லையிலே நாம் வளர்க்கக் கூடிய உணவாகப் பயன்படக் கூடிய மரமானது நமக்குப் பேருதவியாகத் திகழும், வேண்டுமென்கிற காலத்து உடனே நம் தேவையை அம்மரம் பூர்த்தி செய்துவிடும். ஆகையினால், பயனுள்ள நன் மரங்களை நம் வீட்டுத் தோட்டத்திலேயே வளர்ப்பது மிகச்சிறந்ததாகும் எனும் செய்தி வலியுறுத்தப்படுகின்றது.

“மரத்தின் கீழ் ஆகாமரம்”, (பழ 251) எனும் பழமொழியானது, ஒரு மரத்தின் கீழ் வைக்கப்பட்ட மரம் சிறந்து வளராது எனும் வேளாண் தொழில்நுட்பத்தைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது. மரத்தின் நிழலில் வேறு தாவரங்கள் நன்முறையில் வளர்ந்து பயன் நல்கும் என்பது நிகழாத செயலாகும். சூரிய வெளிச்சம் இல்லாததினாலும், மரத்தின் வேர்கள் தனக்குத் தேவையான சத்துப் பொருட்களை உறிஞ்சிக் கொள்வதினாலும் அதன் நிழலில் வளரும் தாவரத்திற்குத் தேவையான சத்துப்பொருள் கிடைக்கப்பெறாததினாலும் வேறு தாவரங்கள் ஒரு மரத்தின் கீழ் நன்கு வளர்ச்சியடைவதில்லை எனும் நுட்பம் நம் முன்னோர்களினால் ஆராய்ந்தறியப்பட்டுள்ளது.அதனாலேயே அக்காலத்தே மரங்களை வெட்டி, நிலத்தைப் பாங்குறப் பண்படுத்தி விளைநிலங்களை உருவாக்கிய செய்தியைப் பல இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

வீட்டின் கொல்லைப்புறத் தோட்டத்தில் மரம் வளர்ப்பது என்பது நமக்கு அரிதான சமயங்களில்கூட மிகுந்த பயனை விளைவிப்பதாகும். நாம் துன்பமுற்று வருத்தம் அடைந்திருக்கும் வேளையில் வீட்டின் கொல்லைப்புறத்தில் வளர்க்கும் மரமானது பல்வேறு நிலைகளில் நம் துயர் போக்கும் மருந்தாக அமைகின்றது எனப் பழமொழி குறிப்பிடுகின்றது. “மனைமரமாய மருந்து” (பழ.நா :350) நல்ல சத்தான சுவையான கனிகளை ஈந்து பசிப்பிணிக்கு சிறந்த மருந்தாகவும், உறைவிடத்தை இழக்கையிலே வீடு கட்டுவதற்கான பொருளாகப் பயன்படுவதாகவும், உடல் நோய்க்கு மருந்தாகவும், கை முதற்பொருளை இழக்கையிலே மரத்தை விற்பனை

செய்து பொருளீட்டுவதாகவும் எனப் பல வகைகளில் நம் துன்பம் எனும் நோயைத் தீர்க்கும் மருந்தாகக் கொல்லைப்புறத்திலே வளரும் மரம் பயன்படுகின்றது. தமக்குத் துன்பம் வரும்போது நெருங்கிய உறவினரே அதனைத் தீர்த்து வைப்பர் என வீட்டுத் தோட்டத்தில் மரம் வளர்க்கப்பட வேண்டுமென்ற செயலை வலியுறுத்துவதாகப் பழமொழி நானூறு பதிவு செய்கின்றது.

மேற்கண்ட பழமொழிகளிலிருந்து அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்த வேளாண் தொழில்நுட்பங்கள் அடையாளம் காணப்பட்டன. குறிப்பிட்ட சில வேளாண் அணுகுமுறைகளை தேவைக்கேற்ப, நடைமுறைக்கேற்பத் தகுந்த இடங்களில் பழமொழிகளில் பயன்படுத்திக் கொண்ட கோணத்தைப் பழமொழிநானூறு பதிவு செய்துள்ளது அறிய வருகின்றது.

**துணை நூற்பட்டியல் :**


- பழமொழி நானூறு- மூலமும் உரையும் –புலவர் அ.மாணிக்கனார்
- பயிர் உற்பத்திக் கையேடு -2005-வேளாண்மைத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-5 ; தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-3



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Manimegalai M. & Rathika S., (2021) Thoughts of Agricultural science in Pazhamozhi Naanooru, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:298-303. Cauvery College For Women, Trichy.

**வை. வனிதா**
உதவிப்பேராசிரியர்
திருத்தங்கல் நாடார் கல்லூரி

# நாலடியார் காட்டும் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம் :**

நாலடியார் பதினெண் கீழ்க்கணக்கு நூல் வகையைச் சார்ந்த நீதி நூல் ஆகும். இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகும். இதை நாலடி நானூறு என்றும், வேளாண் வேதம் என்றும் வழங்குவர். வாழ்க்கையின் எளிமையான பொருட்களை உவமையாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி, சொல்லாய்ந்து நாலடி நானூறும் நன்கு இனிது, பழகுதமிழ் சொல்லருமை நாலிரண்டில் என்னும் கூற்றுகள் திருக்குறளுக்கு இணையாக நாலடியாரைப் போற்றுவதை உறுதி செய்கின்றன. அத்தகைய சிறப்பு வாய்ந்த நாலடியார் காட்டும் தமிழர் அடையாளங்களான சமூகக்கல்வி, பொருளாதாரம், அரசியல், செல்வம் நிலையாமை, அறன் வலியுறுத்தல், சினமின்மை, பொறையுடைமை, பிறன்மனை நயவாமை, ஈகை, சிறந்த அழகு, நல்லினம் சேர்தல், நட்பில் பிழை பொறுத்தல், தன்மானம், கயமை போன்ற கருத்துக்களை இக்கட்டுரை விளக்கிறது.

**முன்னுரை:** :

உலக மொழிகள் அனைத்திலும் தொன்மை வாய்ந்தது தமிழ் மொழி. உருவத்தாலும் ஒலியாலும் வேறுபட்டு இன்று நிலவும் பல மொழிகளின் மூல மொழி தமிழ். சிற்றரசர்களும் பேரரசர்களும் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு தமிழை வளர்த்தார்கள். மொழிக்கு இலக்கணம் சமைத்து சங்கங்களில் வளர்த்த பெருமை தமிழை விட வேறு மொழிகளுக்குக் கிடைக்காது. தமிழன் வெற்றி வீரனாக சென்ற நாடுகள் தோறும் கன்னித்தமிழ் சென்றது. பண்டைத் தமிழ் இலக்கியங்களைப் படிக்குந்தோறும் அன்று சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த நம் இனத்தின் பெருமை நமக்கு புலனாகிறது. அறம் தமிழ் மக்கள் வாழ்வோடு கலந்து கிடந்தது. மனையறம் – மக்கள் அறம் – உயிரினும் மேலாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்படிப்பட்ட சிறந்த தமிழ் இலக்கியமான நாலடியார் காட்டும் தமிழர் அடையாளங்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கல்வி :**

கல்வி கரையில கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. (பாடல்-135)

கல்விகள் முடிவில்லாதன; ஆனால் கற்பவருடைய வாழ்நாட்கள் சில! சற்றுப் பொறுமையாக நினைத்துப் பார்த்தால் அந்தச் சில வாழ்நாட்களிலும் பிணிகள் பலவாக இருக்கின்றன. ஆதலால் நீரை நீக்கிப் பாலைப் பருகும் அன்னப் பறவையைப் போல அறிவுடையார், நூலின் தன்மைகளை அறிந்து நல்ல நூல்களையே கற்பர் எனக் கூறுகிறது.

**பொருளாதாரம் :**

நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே ஆயினும் செல்வர்வாய்ச் சொல்செல்லும்.

புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்

செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல். (பாடல்-115)

பசுவானது நல்ல பசு ஆனால் அதன் கன்றும் நல்ல விலை பெறும். கற்காதவன் ஆனாலும் செல்வம் படைத்தவன் வாயிலிருந்து வரும் சொல் செல்லுபடி ஆகும். சிறிதே ஈரம் இருக்கும் வயலில் உழவு செய்யும்போது கலப்பையின் கொழு ஆழமாகச் செல்லாதது போல வறுமையில் வாடுவோரின் சொல் செல்லுபடி ஆகாது என செல்வத்தின் மேன்மையை நாலடியார் எடுத்துரைக்கிறது .

**அரசியல் :**

மன்னர் திருவும் மகளிர் எழினலமும்

துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா - துன்னிக்

குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்

உழைதங்கட் சென்றார்க் கொருங்கு. (பாடல்–167)

மன்னனின் செல்வத்தையும், மகளிர் பெற்றிருக்கும் அழகு நலத்தையும், நெருங்கி வாழ்பவர் துய்ப்பர். குழைத்துத் தழைத்துத் தாழ்ந்திருக்கும் மரத்தின் நிழல், மணம், பழம் முதலானவற்றை-யெல்லாம் அதனிடம் சென்றவர் தாமே துய்க்க முடியும்? அதுபோலத்தான் அரசியலும் என்கிறது நாலடியார்.

**செல்வம் நிலையாமை :**

"துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்

பகடு நடந்தகூழ் கல்லாரோ டுண்க

அகடுற யார் மாட்டும் நில்லாது செல்வம்

சகடக்கால் போல வரும்" (நா-2 ப. 6)

செல்வம் ஒருவரிடம் மட்டுமே நிலைத்து நிற்காமல் வண்டியின் சக்கரம் போல் பலரிடமும் சுழன்று செல்லக்கூடியது. எனவே மக்கள் ஏர் பூட்டி உழவுத்தொழிலால் நல்வழியில் உற்பத்தி செய்த செல்வத்தையும் உணவையும் அனைவர்க்கும் பகிர்ந்து கொடுத்து தாமும் அனுபவிக்க வேண்டும் என்று கூறுகிறது.

**அறன் வலியுறுத்தல் :**

இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது

பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி

ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்

மருவுமின் மாண்டார் அறம் (பாடல்-36)

நம் வாழ்நாளில் இறுதி நாள் இன்றோ, நாளையோ, வேறு எந்நாளோ என்று வீணாகச் சிந்தித்துக் கொண்டு இருக்காமல் உன் உயிரைப் பறிப்பதற்குக் காலன் காத்திருக்கிறான் என்பதை மட்டும் உணர்ந்து இன்று முதலே தீய செயல்கள் செய்வதை விடுத்துப் பெரியோர்கள் கூறிய அறச்செயல்களைச் செய்யுங்கள் என்று கூறுகிறது. மேலும், சிறிய அளவிலான ஆலம் விதை தழைத்து எல்லையற்று விரிந்த நிழலைத் தருவது போல அறச்செயல்களின் பயனாகிய புண்ணியமும் செய்வது சிறியதாக இருந்தாலும் தக்கவரிடம் சென்று அடைந்தால் வானமே சிறுத்துப் போகும்படி பெரிய புண்ணியப் பயனைத் தரும் என்று கூறுகிறது.

**சினம் இன்மை :**

காவா தொருவன்தன் வாய்திறந்து சொல்லும்சொல்

ஓவாதே தம்மைச் சுடுதலால் - ஓவாதே

ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்

காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து (பாடல்-63)

கோபம் கொண்டு ஒருவன் அடக்கம் கெட்டுக் கூறிய கோபச்சொல் எக்காலத்திலும் சொன்னவனையே வருத்தும். எனவே, ஆராய்ந்து தெளிந்த ஞானம் உடையவர்கள் அத்தகைய கோப மொழிகளைக் கூறமாட்டார்கள் என்கிறது. மேலும் கீழ்மக்கள் கொண்ட கோபமானது, நீண்ட காலமானாலும் தனியாமல் பெருகிக்கொண்டே போகும். ஆனால் சான்றோர்கள் கொண்ட கோபமானது, கொதிக்கும் போது வெப்பம் அடைந்த நீர் பின்னர் தானே தணிந்து விடுவது போன்று தணிந்து விடும் என்று கூறுகிறது.

**பொறையுடைமை :**

"அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி

உறுவ துலவெப்பச்செய்து- பெறுவதனால்

இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்

துன்புற்று வாழ்தல் அரிது" (நா. 74 ப. 45)

நன்கு கற்று அறிய வேண்டியதை அறிந்து, அடக்கம் உடையவராய் பயப்பட வேண்டியதற்குப் பயந்தும், தமக்குத் தகுந்தவாறு உரிய செயல்களை உலகம் மகிழுமாறு செய்து அதனால் அடையத்தகும் பயனைப் பெற்று இனிமையோடு வாழ்பவர் வாழ்க்கையில் எக்காலத்திலும் துன்பம் என்பதே இல்லை என்று கூறுகிறது.

**பிறன்மனை நயவாமை :**

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்

பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா பிறன்தாரம்

நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்

றச்சத்தோ டிந்நாற் பொருள். (பாடல்-82)

தருமம், புகழ், நட்பு, பெருமை ஆகிய இந்நான்கும் பிறன் மனைவியை விரும்புவரிடம் சேராது. அத்தகையோரிடம் பகை, பழி, பாவம், பயம் ஆகிய நான்கு தீயப்பண்புகள் தான் சேரும் என்கிறது.

**ஈகை :**

தம்மிடம் பொருள் இல்லாத போதும், பிறர்க்கு இயன்ற அளவு பொருள் உடையவர் போன்று பெரிதும் மகிழ்ந்து கொடைத்தன்மையோடு விளங்கும் ஈகைக் குணம் கொண்ட மாந்தர்க்கு அடுத்தப் பிறவியில் பேரின்பமாகிய வீட்டுக்குச் செல்லும் கதவுகள் அடைப்படாமல் திறந்தே இருக்கும் என்கின்றது. மேலும்,

"இம்மி யரிசித் துணையானும் வைகலும்

நும்மில் இயைவ கொடுத்துண்மின்..." (பாடல்-94)

இம்மியளவு அரிசியானாலும், உம்மை அடைந்தவர்க்கு நாள்தோறும் கொடுத்து, அதன்பிறகு உணவு உண்ண வேண்டும். முற்பிறவியில் யாருக்கும் கொடுக்காதவர்களாய் இருந்தவர்களே கடல் சூழ்ந்த இவ்வுலகில் வறியவர்களாக இருக்கிறார்கள் என்று சான்றோர்கள் கூறுவதாகக் கூறுகிறது.

**சிறந்த அழகு :**

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து

நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்

கல்வி யழகே அழகு" (பாடல்-131)

தலைமுடியின் அழகும், வண்ணமிகு ஆடையின் அழகும், வாசனைப் பூச்சின் அழகும் உண்மையான அழகாகாது. நாம் நல்லவர்களாக இருக்கிறோம் என்னும்

உறுதிப்பாட்டினைத் தருகின்ற ஒழுக்கம் தரும் கல்வியைப் பெறுதலே சிறந்த அழகாகும்.

**நல்லினம் சேர்தல்:**

"பாலோடு அளாயநீர் பாலாகும் அல்லது

நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்..." (பாடல்-177)

பாலுடன் நீரைக் கலந்தால், நீரானது தன் நிறம் கெட்டுப் பாலின் வெண்மை நிறமடையும். அதுபோல, கீழ்மக்கள் ஆனாலும் பெரியோருடன் சேரும் போது பெருமை பெறுவர். மேலும், ஊரிலுள்ள சாக்கடை நீர் கடல் நீரோடு சேர்ந்தால் அதன் பெயரும் மாறிப் புனிதம் நிறைந்த தீர்த்தமாகிப் பெருமை கொள்ளும். அது போல நற்குலப் பெருமை இல்லாதவரும், நல்ல மாட்சிமை உடையோரைச் சாரும் போது அவர்களும் மலை போன்ற சிறப்பை அடைவார்கள் என்கிறது.

**நட்பில் பிழை பொறுத்தல் :**

நல்லா ரெனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை

அல்லா ரெனினும் அடக்கிக் கொளல்வேண்டும்

நெல்லுக் குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு

புல்லிதழ் பூவிற்கும் உண்டு. (பாடல்-221)

நெல்லில் உமியும், நீரில் நுரையும், பூவில் வாசனையற்ற புற இதழும் ஆகிய வேண்டாப் பகுதிகள் இருக்கும். இவைபோலவே, நாம் நல்லவர் என மிகவும் விரும்பி நட்புக் கொள்கின்றவரிடமும், சிறுசிறு குறைகள் இருக்கும். இக்குறைகளைக் கண்டால் பொறுத்து, அவரை நம்முடனே சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும் என்கிறது.

**தன்மானம் :**

தன்மானம் உடையவர்கள் எலும்பு தேய்ந்து, தசை அழிந்தாலும் நற்குணம் இல்லாதவரிடம் தங்களுடைய துன்பங்களைக் கூறமாட்டார்கள். தம் வறுமை நிலையைத் தாம் உரைப்பதற்கு முன்பே உணர்ந்து உதவ வல்ல அறிவுடையவரிடமே சென்று தம் துன்பத்தைக் கூறி உதவி வேண்டுவர் என்கிறது.

**கயமை :**

தனக்கு ஒரு நன்றியைச் செய்தவர்கள், பின்பு நூறு கெடுதல்களைச் செய்தாலும் சான்றோர் பொறுத்துக் கொள்வர். ஆனால் கயவர்களுக்கு எழுநூறு நன்மைகள் செய்து பின்பு ஒன்று கெடுதியாக அமைந்தாலும் அவ்வெழுநூறு நன்மைகளும் மறந்து அவர்களால் தீமைகளாகவே கருதப்படும் என்கிறது.

**முடிவுரை :**

நாலடியார் பல்வேறு தமிழர் அடையாளங்களை எடுத்துரைக்கிறது. சான்றோர்களின் பட்டறிந்த உண்மைகளே அறக்கருத்துகளாக நாலடியார் நூல் முழுவதும் விரவிக்கிடக்கின்றன. அவ்வறக் கருத்துக்களை மக்கள் மனதில் நன்கு உள்வாங்கிக் கொண்டு வாழ்வினை வாழ முற்பட்டால் அவர்களின் வாழ்வும் சமுதாயமும் மேன்மையடையும்.

**பயன்பட்ட நூல்கள் :**


1. நாலடியார் பாட்டும், உரையும் - சாமி சிதம்பரனார், பாரி நிலையம், சென்னை – 108.
2. இலக்கிய பேருரைகள் - கண்ணதாசன், கண்ணதாசன் பதிப்பகம், சென்னை – 17.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Vanitha V., (2021) The Trace of Tamil people as referred by Naaladiyar , Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:304-307. Cauvery College For Women, Trichy.

**முனைவர் செ.நான்சி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 2

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும், நாகரிகத்திலும் சிறந்திருந்தனர் என்பதை தமிழ் இலக்கியங்கள் உணர்த்துகின்றன. தமிழ் கலாச்சாரம் மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புறக்கலை. தற்காப்புக் கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள், கொண்டாட்டங்கள், தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள் போன்றவை தமிழரின் அடையாளங்களாக காணக் கிடைக்கின்றன. தமிழ் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும் தமிழ்க் தாயகப் பிணைப்பின் ஊடாகவும். சமூக பொருளாதார அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவ பண்பாட்டுக் கூறுகளைக் குறிக்கும்.

தமிழர் பண்பாட்டின் அமைப்பொழுங்கானது அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டதாகும். ஒன்று அதனளவில் சார்புடையது மற்றொன்று உலகளாவிய அமைப்பியல்புகளோடு பொருந்தக் கூடியது. அதாவது தமிழ்ப் பண்பாட்டின் உருவகத்தை தரக்கூடிய 'புறக்கூறுகள்' பண்பாடு சார்ந்தும் அவற்றின் அக்கூறுகள் உலகளாவிய அமைப்புகளோடு ஒத்திசைவு பெறுவதும் இதன் உட்பொருளாகும் நமக்கு கிடைத்திருக்கும் தமிழ் இலக்கியங்களிலிருந்து தமிழரின் பண்பாட்டை அறியமுடிகின்றது. பண்பாட்டின் கூறுகள் சிலவற்றை பற்றி இங்கு காண்போம்.

**நம்பிக்கைகள்**

நல்வினையால் தான் ஒருவருக்குச் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கை பண்டைத் தமிழரிடம் இருந்தது. '**வினை விளையச் செல்வம் விளைவது போல்"**[1] என்ற பாடலின் மூலம் பின்வரும் கருத்து பெறமுடிகின்றது.

நல்ல நாளில் தொடங்கும் காரியம் இடையூறில்லாமல் வெற்றி பெறும் என்பது பழந்தமிழர் நம்பிக்கை பெண் கேட்கச் செல்வார் நல்ல நாள் பார்த்து அந்நாளிலே புறப்படுவார்கள்.

**"நாள் கேட்டுத் தாழாது வந்தால் நீ எய்துதல் வாயால்"**[2] நல்ல நாள் கேட்டுக்கொண்டு தாமதமில்லாமல் வந்தால் இப்பெண்ணை அடைவது உண்மை என்பது இதன் பொருள்.

சோதிடர்களே நல்ல நாட்களைக் குறித்துக் கொடுப்பார்கள் அந்த நல்ல நாளிலே திருமணம் முதலிய மங்கலமான செயல்களை நடத்துவார்கள். இவ்வழக்கம் தமிழகத்தில் இருந்தது.

குறிகேட்கும் வழக்கமும் பண்டைக் காலத்தில் இருந்தது. குறி சொல்வோர் கழங்குக் காய்களை வைத்துக்கொண்டு அவற்றை எண்ணிக் குறி சொல்வார்கள். குறி சொல்லுகின்றவர்கள் தெய்வத்தின் உதவியினாலேயே உண்மையை அறிந்து உரைக்கின்றனர் என்று நம்பி வந்தனர்.

**"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும் துறந்த**

**ஒழுக்கம் கிழவோற்கு இல்லை"**[3]

ஒவ்வொரு தமிழனும் சோதிடத்தைப் பார்ப்பவனே. நாள்தோறும் நல்ல காரியங்களைச் செய்வதற்கு நாளும் ஓரையும் பார்த்தவர்கள் பழந்தமிழர்கள். நாள் என்ற தமிழ் வார்த்தையே நட்சத்திரத்தைக் குறிக்கும் என்பது ஒரு சுவையான செய்தியாகும். களவொழுக்கத்தில் தலைவனுக்கு தீய ராசி தீய நாள் இல்லை என்பதை தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது. இதனாலே களவொழுக்கம் இல்லாத இயல்பான ஒழுக்கம் உடைய தமிழர் நாளும் ஓரையும் பார்த்து வாழ்ந்தவர்கள் என்பது தெளிவாக விளங்குகிறது.

**பொய்யை வெறுத்தல்**

பொய் சொல்வது தவறு. பொய் சொல்வதை நல்லவர்கள் வெறுப்பார்கள். பொய்யர்களை மக்கள் மதிப்பதில்லை. அவர்களோடு முகங்கொடுத்துப் பேசவும் முன்வர மாட்டார்கள். இன்றும் பொய் புகல்வோரைப் பொதுமக்கள் இகழ்ந்துரைப்பதைப் பார்க்கின்றோம். இது பண்டைத் தமிழரின் பண்பாகும்.

காதலன் பரத்தையர் வீட்டுக்குப் போய்விட்டான். சில நாட்கள் கழித்து வீட்டிற்குத் திரும்ப நினைத்தான். திடீரென்று திரும்பி வந்து வீட்டிற்குள் புகுந்தால் காதலியின் வரவேற்பை பெற இயலாது என்பது அவனுக்குத் தெரியும். ஆதலால் அவன் பாணனை அனுப்பக் காதலிக்குச் சமாதானம் கூறும்படி செய்தான். தலைவனால் தூதாக அனுப்பப்பட்டு வந்த பாணன் தலைவியை அடைந்து ஏதேதோ பொய்யும் புளுகும் அளந்தான். **“தலைவன் இனித் தவறு செய்ய மhட்டான் அவன் இப்பொழுது செய்த குற்றத்திற்காக வருந்துகின்றான் இக்குற்றத்தை மன்னிக்கும் படி வேண்டுகின்றான். இனி வேசையர் வாழும் திக்கைத் திரும்பிப் பார்ப்பதே இல்லையென்று உறுதி கூறுகின்றான்”** என்றெல்லாம் சொன்னான் பாணன். பாணன் இப்படிச் சொல்வது புதிதன்று ஆதலால் பாணன் கூறுவது பொய்யுரை என்றே அவள் நினைத்தாள் நினைத்ததும் அப்பாணனைக் கடிந்து கொள்கின்றாள்.

**“பயம்இல் யாழ்ப்பாண! பழுதாய கூறாது**

**எழு! நீ போ நீடாது மற்று”[4]**

பயனற்ற சொற்களைப் பேசும் யாழ் வாசிக்கும் பாணனே குற்றமுள்ள பொய்மொழிகளைப் பேசாமல் நீ எழுந்து போ, அங்கே தாமதிக்காதே என்று அவனை அனுப்பி வைக்கிறாள் தலைவி. இதன் மூலம் பொய் பேசுவதைத் தமிழர்கள் எவ்வளவு வெறுத்தனர் என்பதைக் காண முடிகிறது.

**திருமணம்**

களவு மணம் தமிழர் பரம்பரை வழக்கம். களவு இல்லாமல் கற்பு நிகழாது. இதுவே தமிழர் கொள்கை ஆயினும் நாளடைவில் கற்பு மனத்தையே சிறப்பாக மதித்தனர். களவு மணத்தைப் பழிக்கவும் தொடங்கினர். ஆதலால் கள்ள நட்புள்ள காதலர்கள் விரைவில் கற்பு மணத்தம்பதிகளாகப் பழிப்பின்றி வாழவே விரும்பினர். இந்த நிலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் தோன்றி விட்டது. இவ்வுண்மையை விளக்கும் செய்யுட்களை அகத்திணை நூல்களிலே காணலாம்.

**“யாழும் குழலும் முழவும் அயைந்தன**

**வீழும் அருவி விறன்மலை நன்னாட**

**மாழைமான் நோக்கியும் ஆற்றான் இரவரின்**

**ஊர்அறி கௌவை தரும்”5**

யாழும். புல்லாங்குழலும், மத்தளமும் தம்முன் ஒத்து இசைப்பன போல அருவி நீர் ஒலித்துக் கொண்டு விழுகின்றது. இத்தகைய சிறந்த மலைநாட்டை உடையவனே! அழகிய கண்களையுயை தலைவியும் நீ இரவு நேரத்திலே வருவதற்குப் பொறுக்கமாட்டாள். நானும் சம்மதிக்க மாட்டேன் உன் செய்கையை ஊரார் அறிந்தால் பழிப்பை உண்டாக்கும். ஆதலால் விரைவில் தலைவியைப் பலரும் அறிய

மணம்புரிந்துக்கொள் என்ற கருத்தையே தோழி தலைவனிடத்து இவ்வித்தில் உரைக்கின்றாள்.

கற்புள்ள பெண்ணுக்குக் கணவனே தெய்வம். அவனை விட்டால் அவளுக்கு வேறு கதியில்லை. இதுவே பழந்தமிழர் கொள்கை. இக்கொள்கையை வற்புறுத்துகிறது இந்நூல்.

மனைவி ஊடியிருக்கிறாள் அவள் ஊடலைத் தணிக்கும்படி காதலன் தோழியிடம் வேண்டிக் கொள்கின்றான். அப்பொழுது அவனுக்குத் தோழி விடையளிக்கின்றாள். அவ்விடையிலே இக்கருத்து அடங்கியிருக்கின்றது.

**“செந்தாமரை மலரும் செவ்வயல் நல்ஊர**

**நொந்தால் மற்று உன்னைச் செயப்படுவது என் உண்டாம்**

**தந்தாயும; நீயே! தரவல்ல நல்நலம்**

**கொண்டாயும் நீ! ஆயக்கால்”6**

இவ்வாறு காதலர்களின் அன்பு நிறைந்த வாழ்க்கை முறையை எடுத்துக் காட்டுவதே இந்நூலாகும். ஆணும், பெண்ணும் இணைந்து ஒன்றுபட்ட உள்ளமுடன் வாழும் நிலை ஏற்பட்ட பிறகுதான் மக்களிடையிலே நாகரிகம் தழைத்தது. அறம், பொருள், வீடு பற்றிய எண்ணங்கள் எல்லாம் தோன்றி வளர்ந்தன. இவ்வெண்ணங்கள் தோன்றி வளர்வதற்கு அடிப்படை ஆண் பெண்களின் அன்பிலே தோன்றிய குடும்ப வாழ்வுதான் என்பதை இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன.

**மனைவியின் மாண்பு**

இல்லறத்திலே இன்பமுடன் வாழ வேண்டுமாயின் இல்லாள் கற்புடையவளாயிருக்க வேண்டும். தன் காதலனுக்குக் கூட்டாளியாகவும். தாயகவும். மனைவியாகவும் இருந்து உதவி செய்வதே கற்புள்ள பெண்ணின் கடமை என்று கூறப்பட்டுள்ளது.

**“நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும்**

**இல்புறம் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்**

**மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம் மூன்றும்**

**கற்புடையாள் பூண்ட கடன்”[7]**

நல்ல விருந்தினரைப் பாதுகாப்பதனால் கணவனுக்கு நட்பினாளாம். இல்லறத்தை வழுவாது நடத்தலால் பெற்ற தாயாவாள். தன் பழமையான குடும்பம் விளங்குவதற்குரிய மக்களைப் பெற்றதனால் மனையாள். இம்மூன்றும் கற்புள்ள மனைவி கொண்ட கடமையாகும.

இச்செய்யுள் ஒரு பெண்ணின் கடமை இன்னது என்று எடுத்துக் காட்டுகின்றது. விருந்தினரைப் பேணுதல் இல்லறத்தை நன்றாக நடத்துதல் பிள்ளை பெறுதல் இதுவே கற்புள்ள மங்கையின் கடமை என்று கூறப்பட்டது. இது பண்டைத் தமிழ் இல்லறத்திலே மகிழ்ச்சியும் இன்பமும் தழைத்திருந்ததை அறிய முடிகிறது.

**தேசத்தொண்டு**

மழை குறைந்த நாடுகளில் மரம் வளர்க்க வேண்டும் என்னும் கிளர்ச்சி இன்று வலுத்து வருகின்றது. இருக்கும் காடுகளை அழித்துவிடக் கூடாது அவைகளைப் பாதுகாக்க வேண்டும் நாடெங்கும் புதிய மரங்களை வளர்க்க வேண்டும் என்ற உணர்ச்சி எல்லா நாடுகளிலும் தலையெடுத்திருக்கின்றது. பண்டைய இலக்கியங்களிலே செடி நட்டு மரம் வளர்ப்பதை ஒரு கடமையாகக் கூறியிருக்கின்றனர். திருமணச் சடங்கின் போது மரம் நடுவதையும் ஒரு சடங்காக நம் தமிழர்கள் வைத்திருக்கின்றனர். திருமணத்திலே அரசாணிக்காலாக இருந்த ஒதிய மரத்தை நட்டுப் பயிர் செய்வது வழக்கம். ஒவ்வொரு மனிதனும் தன் ஆயுள்

காலத்திலே பால் தரும் ஐந்து மரங்களையாவது நட்டுப் பயிர் செய்ய வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் ஒரு கடமையாகக் கொண்டிருந்தனர். நாட்டில் மழை வளம் குறையாமலிருப்பதற்கே இவற்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

நாட்டு மக்கள் நன்றாக வாழ நாட்டிலே நீர்வளம் குறையரமலிருக்க உணவுப் பொருள் உற்பத்தி பெருக, செய்ய வேண்டிய காரியங்களை செய்தனர் என்பதை சிறுபஞ்சமூல ஆசிரியர் கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கின்றார்.

**“குளம் தொட்டுக் கோடு பதித்து வழி சீத்து**

**உளம் தொட்டு உழுவயல் ஆக்கி – வளம் தொட்டுப்**

**பாகுபடும் கிணற்றொடு என்றுஇவ் ஐம்பால் படுத்தான்**

**ஏகும் சுவர்க்கத்து இனிது”**[8]

தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்காகப் பெரிய ஆழமான குளம் தோண்ட வேண்டும். தளிர்ந்து வளரக் கூடிய மரக்கிளைகளை நிலத்திலே நட்டு நீர்விட்டு வளர்க்க வேண்டும். மக்கள் நடப்பதற்கான வழிகள் முட்புதர்களோ மேடுபள்ளங்களோ இல்லாமல் நன்றாகச் செப்பனிட்டு வைக்க வேண்டும். தரிசு நிலத்தை வெட்டிப் பண்படுத்தி உழுது பயிர் செய்யத்தக்க நன்செய் நிலமாக்குவதோடு நன்றாக விளையும் படி செழிப்புள்ள நிலமாக்க வேண்டும் சுற்றிலும் கரை கட்டப்பட்ட கிணறுகளையும் தோண்ட வேண்டும் இந்த செயல்பாடுகளையும் செய்தவனே இனிய சுவர்க்கத்தை அடைவான். இதைப் பின்பற்றி நடக்கும் நாட்டிலே பஞ்சம் ஏற்படாது என்ற செய்தியினை,

**“அறையும் பொறையும் மணந்த தலையை**

**என்றான் திங்கள் அணைய கொடுங்கரைத்**

**தெண்ணீர் சிறுகுளம் கீள்வது மாதோ”**[9]

என்று புறநானூற்றுபு; பாடலில் ஒரு ஏரியை வைத்துக்கொள்ளும் முறைப்பற்றியும், ஏரிகள் நீளம் குறைவாகவும் நிறைய நீர் சேமிக்கும் வகையிலும், பிறைவகையிலும் இருக்கவேண்டும். அப்போதுதான் விவசாயத்திற்கு தேவையான நீரினைப் பெற்று பயிர்கள் சரிவர செழித்து வளர முடியும் என்றுரைக்கின்றது

**ஆள்வோர் கடமை**

அரசாள்வோர் கடமையைப் பற்றிப் பல பாடல்களிலே கூறப்பட்டுள்ளன அவற்றுள்,

**“வார்சான்ற கூந்தல் வரம்புஉயர வைகலும்**

**நீர்சான்று உயரவே நெல்உயரும் சீர்சான்ற**

**தாவாக் குடிஉயரத் தாங்கும்சீர்க் கோஉயரும்**

**ஓவாது உரைக்கும் உலகு”**[10]

நீண்ட கூந்தலையுடைய பெண்ணே! நிலத்திலே நீர் தங்கும்படி கரை உயர்ந்திருக்க வேண்டும். கரை உயரமாயிருந்தால் தான் நிலத்திலே தண்ணீர் தங்கி நிற்கும். தண்ணீர் தேங்கி நின்றால்தான் பயிர் செய்யப்படும். நெற்பயிர் ஓங்கி வளரும். நெற்பயிர் ஓங்கி வளர்ந்தால்தான் குடி மக்கள் உணவு பஞ்சமின்றிச் செல்வங்கள் எல்லாம் பெற்று உயர்ந்து வாழ்வார்கள். குடிமக்கள் உயர்வாக வாழ்ந்தால் தான் அரசன் உயர்வாக வாழ்வான். அரசாட்சியும் சிறப்படையும்.

நாட்டிலே உணவுப்பொருள் உற்பத்தி பெருவதற்கான முயற்சியிலேயே அரசாங்கம் முதலிலே ஈடுபட வேண்டும் அப்பொழுதுதான் பஞ்சம் தலைகாட்டாது. நாட்டில் அமைதி நிலைக்கும். மக்களிடம் ஒற்றுமைக் குறையும். ஒழுக்கக் கேடும் தோன்றாது மக்கள் அனைவரும் மகிழ்ந்து வாழ்வார்கள். இது எக்காலத்திலும் எந்த அரசாங்கமும் கண்ணும் கருத்துமாகச் செய்ய வேண்டிய கடமையாகும்.

**தொகுப்புரை**

**'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவனுக்கோர் குணமுண்டு'** என்று தமிழரை அடையாளப் படுத்தினார். நாமக்கல் கவிஞர். வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும் தமிழருக்கும் உண்டு காரணம் மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதை விட எப்படி வாழக் கூடாது என்ற வாழ்வியலை கற்றுக் கொடுத்த தமிழரின் பண்பாட்டு அடிச்சுவடுகள் அன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது. பண்பட்ட மண்ணில் தான் செடிகளும். கொடிகளும் துளிர்விடும். அதுபோல இந்தச் சமூகம் பண்பட வேண்டும் என்றால் நல்ல பண்பாடு இருக்க வேண்டும் என்பதன் தமிழினம் இத்தரணிக்குக் கற்று கொடுத்தது இருக்கிறது நாடாண்ட மன்னன் முதல் குடிசை வாழும் சாரதாரண குடிமக்கள் வரை குலம் காக்கும் பண்பாட்டை கட்டிக் காத்து பார் போற்ற வாழ்ந்த ,இனம் தமிழினம் நாகரீகம் என்ற பெயரில் தலைமுறை கடந்து விட்டாலும் தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு தளத்திலும் பின் தொடர்ந்து வருகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. திணைமாலை நூற்றைம்பது பா.எ 5
2. மேலது. பா.எண் 46
3. தொல் பொருள். நூ.1081
4. ஐந்திணை அறுபது பா.எண். 46
5. தொல்.பொருள் நூற்பா 140
6. திணைமொழி ஐம்பது பா.எண். 7
7. மேலது, பா.எண். 36
8. திரிகடுகம் பா.எண். 64
9. சிறுபஞ்சமூலம் பா.எண். 66
10. புறநானூறு பா.எண். 118


**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர் - தொல்காப்பியம் பொருளதிகாரம்
சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம்
சென்னை -1 ஐந்தாம்பதிப்பு, மார்ச் 1970

2. ரா.சீனிவாசன் - புறநானூறு மூலமும் உரையும்
சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம்
சென்னை -1

3. முனைவர் எம் நாராயண
வேலுப்பிள்ளை - பதிணென் கீழ்க்கணக்குநூல்கள்,
நர்மதா பதிப்பகம்



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Nancy S., (2021) The identitiy of Tamil people in Pathinen kilkanakku, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:308-312. Cauvery College For Women, Trichy.

**ப.ஆனந்தி,**
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
பதிவெண்: P4184
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

# “திருக்குறளில் வாழ்வியல் அறங்கள்”

**ஆய்வுச்சுருக்கம்**

“திருக்குறளில் வாழ்வியல் அறங்கள்” என்பது இவ்ஆய்வுக்கட்டுரையின் தலைப்பாகும். தமிழர்களின் அறங்கள் தமிழ் இலக்கியங்களில் தொன்று தொட்டு பரந்து காணப்படுகின்றன. அந்தந்த காலக்கட்டத்தில் காணப்படுகின்ற தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் , நடத்தைகளையும், வளர்ச்சிகளையும் காட்டும் கண்ணாடியாக இலக்கியங்கள் இருந்து வருகின்றன. அவ்வகையில் அறநூலான, வாழ்வியல் நூலான திருக்குறளில் இடம்பெறும் தமிழர் அடையாளங்களுள் விருந்தோம்பல், நன்றி பாராட்டுதல், ஒழுக்கம், ஈகை, மானம் ஆகியன இக்கட்டுரையில் விளக்க முறையில் கூறப்பட உள்ளன. திருக்குறள் உரையாசிரியர்கள் பரிமேலழகர் மற்றும் நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோரின் உரைகள் ஒப்பீட்டுடன் ஆராயப்பட உள்ளன.

திருக்குறள் வழி உணரப்படும் விருந்தோம்பலில் தமிழர்கள் தம்மிடம் இருக்கும் உணவின் அளவு குறைவாக இருந்தாலும் புதியவர்க்கும் - விருந்தினர்க்கும் பகிர்ந்து உண்ணும் பண்பு விவரிக்கப்பட உள்ளது. நன்றி பாராட்டுதலில் பிறர் செய்த சிறிய உதவியைக் கூடப் பெரியதாக மதிக்கும் எண்ணம் விளக்கப்பட உள்ளது. ஒழுக்கக்குணம் உயிரை விட மேலானது என்ற நிலை தமிழர்களிடம் இருப்பது கூறப்பட உள்ளது. இரப்பவர்க்குக் கைம்மாறு கருதாமல் கொடுப்பவர் தமிழர் என்பது “ஈகை” மூலம் ஆராயப்படவுள்ளது. தமிழர்கள் மானம் இழக்க நேரிட்டால் மரணம் எய்துவர் என்ற மான அடையாளம் கூறப்பட உள்ளது. பரிமேலழகர் கூறுகின்ற பார்ப்பான், மேல் உலகம் என்ற சொற்களுக்குப் பார்ப்பவன்,வான்புகழ் கொண்டோரின் புகழ் உலகம் என்று நாவலர் நெடுஞ்செழியன் கூறுகின்ற புத்துரைகள் பகிரப்பட உள்ளன. ஆய்வுக் கட்டுரையின் நிறைவில் தொகுப்புரை, சான்றெண் விளக்கம், துணைநூல்பட்டியல் ஆகியன தரப்பட உள்ளன.

**முன்னுரை**

தமிழர்கள் உலக நாகரிகங்களில் இடம்பெறத்தக்க உயர்ந்த நாகரிகத்தையும், பாரம்பரியப் பண்பாட்டையும் கொண்டுள்ளனர். தமிழர்களின் அன்பும் அறமும், நேர்மையும் பொறுமையும், விட்டுக்கொடுக்கும் குணமும் பரந்து விரிந்த மனமும் கவிஞர் பலரால் பாராட்டப்பட்டு வருகின்றன.

இதற்கு நாமக்கல் கவிஞரின்,

“தமிழன் என்றோர் இனமுண்டு

தனியே அவற்கொரு குணமுண்டு

அமிழ்தம் அவனுடை மொழியாகும்

அன்பே அவனுடை வழியாகும்.” என்ற பாடல் வரிகள் சான்றாக அமைகின்றன. தமிழ்ச் சமூகத்திற்கென்று தனிப்பட்ட அறங்கள் பல உண்டு. அந்த அறங்கள் தமிழ் மக்களின் ஒருமித்த எண்ணங்களையும், பண்புகளையும், நடத்தைகளையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

அவ்வகையில் தமிழர் வாழ்வியல் அறங்களைத் திருவள்ளுவர் தமது திருக்குறளில் எவ்வாறு இடம்பெறச் செய்கிறார் என்பது விளக்க முறையில்

ஆராயப்படுகிறது. திருக்குறளுக்கு உரை தந்த பரிமேலழகர், நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் உரைகள் இங்கு ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன.

**விருந்தோம்பல்**

தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழ் மக்களின் அடையாளங்களுள் மிகச் சிறந்ததாக "விருந்தோம்பல்" இருந்து வருகிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றுள் உணவிற்குத் தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. ஏனெனில் உடலுக்கு வேண்டிய உயிர்ச் சக்தியை உற்பத்தி செய்து கொடுப்பது வயிறு; அதற்குத் தேவை உணவு. அந்த உணவினைப் பிறருக்குக் கொடுக்கும் போது மகிழ்வுடன் வழங்குபவர்கள் தமிழர்கள் என்பதைப் பாரதிதாசன் அவர்களின்,

"நற்றமிழர் சேர்த்த புகழ் ஞாலத்தில் என்னவெனில்

உற்ற விருந்தை உயிரென்று – பெற்று உவத்தல்" - 1

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.

**விருந்து – விளக்கம்**

தொல்காப்பியர் எண்வகை வனப்பிற்கு விளக்கம் தரும் போது "விருந்து" என்பதற்குப் "புதுமை" என்று பொருள் தருகின்றார்.

"விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" - 2

இதன்படி, புதுமையாகச் செய்யப்பட்ட யாப்பை "விருந்து" என்பது போல வீட்டிற்குப் புதிதாக வந்தவரை இன்முகத்துடன் வரவேற்று முகமலர்ந்து அகமலர்ந்து, தேவையறிந்து உணவு பரிமாறுவதையே "விருந்து" எனக் கொள்ளலாம்.

சங்ககாலத் தமிழ்மக்கள் விருந்தினர்க்குப் பல வகையான உணவுகளைத் தாமே எடுத்து வைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதை,

மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி

மகமுறை மகமுறை நோக்கி

முகனமர்ந்து ஆனா விருப்பின்

தானின்றூட்டி" - 3

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடல் மூலம் அறிய முடிகிறது.

"விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" - 4

என்ற சிலப்பதிகாரத்தொடரில் கண்ணகி கோவலனைப் பிரிந்து தனியளாக இருந்ததால் விருந்தினர்க்கு வழங்க இயலவில்லை என்று கூறுவதிலிருந்து கணவனும் மனைவியும் இணைந்தே விருந்து அளிப்பர் என்ற செய்தி அறியப்படுகிறது.

**திருக்குறளில் விருந்தோம்பல்**

உணவு உண்ணும் போது புதியோர் வந்தால் அன்புடன் பகுத்து உண்ண வேண்டும் என்பதே வள்ளுவர் உள்ளமாக அறியப்படுகிறது.

"விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று" என்ற குறளுக்கு உரை தந்த பரிமேலழகர், உண்ணப்படும் பொருள் அமிர்தமே எனினும், தன்னை நோக்கி வந்த விருந்து தன் இல்லின் புறத்ததாகத் தானே உண்டல் விரும்புதல் முறைமை உடைத்தன்று' என்கிறார்.

அதே குறளுக்கு உரை எழுதிய நாவலர் நெடுஞ்செழியன், 'இல்லம் தேடி வந்த விருந்தினர் வெளியே உட்கார்ந்திருக்க, ஒருவன் தான் மட்டும் வீட்டுக்குள்ளே இருந்து உணவு உண்ணுவது என்பது, அப்படிப்பட்ட உணவு சாவாமைக்குக் காராணமாக

அமையக்கூடிய மருந்தாகவே இருந்த போதிலும், அது விரும்பத்தக்கதொரு செயல் ஆகாது' என்கின்றார்.

விருந்தினரை வீட்டுத் திண்ணையில் அமரச்செய்து விட்டுத் தான் மட்டும் வீட்டுக்குள் தனியனாக உண்ணக் கூடாது என்பதில் பரிமேலழகரும் நெடுஞ்செழியனும் உடன்பட்டே உரை தருகின்றனர்.

"சாவா மருந்து" என்பதைப் பரிமேலழகர் 'அமிழ்தம்' என்றும், நாவலர் அதனை 'உணவு' என்றும் பொருள் தந்துள்ளனர் என்பதை உணர முடிகிறது. இருவரும் விருந்தோம்பலை முதன்மைப்படுத்தியுள்ளனர். இவற்றுள் நாவலர் புதுமையாக உரை தந்துள்ளார் என்பது புலனாகிறது.

நாவலர் கருத்துப்படி, சாகாமல் உயிருடன் வாழ்வதற்கு உணவே ஆதாரம் என்று தெரிகிறது. உணவு இல்லையென்றால் பசி வாட்டும், வருத்தும் என்பதை உணர்த்தவே உறுபசி, அழிபசி போன்ற சொற்களும், பசிப்பிணி என்ற தொடரும் பயன்படுத்தப்படுகின்றன. பசியை "நோய்" என்று இலக்கியங்கள் கூறுவதால் உணவை "மருந்து" என்று கூறுவது இயல்பாகும்.

பசிநோய் தீர்க்கும் மருந்து உணவாகும். அந்த உணவின் அளவு குறைவாக இருந்தாலும் புதியவர்க்கும் பகிர்ந்து உண்ண வேண்டும் என்பது பெறப்படுகிறது. 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்க' என்று கொன்றை வேந்தன் கூறுகிறது. 'மருந்து' உடல்நலக் குறைபாட்டை நீக்கக் கொடுக்கப்படுகிறது. அதனைச் சிறிதளவே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆக, விருந்தினர்க்குத் தலைவாழை இலை போட்டு அறுசுவை உணவு படைத்து உபசரிக்க இயலாவிட்டாலும், தான் உண்ணும் கூழோ, கஞ்சியோ சிறிதளவு அவர்களுக்கும் கொடுத்தபின் உண்ண வேண்டும் என்பதே தமிழர் மரபாக இருந்து வருகிறது என்பதை உணரலாம்.

**நன்றி பாராட்டுதல்**

தமிழரின் அறங்களுள் விருந்தோம்பலுக்கு அடுத்தபடியாக நன்றி பாராட்டுதலைக் கூறலாம்.

'நன்றியறிதல்' என்பது உயரிய சிந்தனையாகவும் மகத்தான சக்தியாகவும் இருந்து வருகிறது. வாழ உதவி செய்யும் உலகத்திற்கு நன்றி கூறுவதும், அன்னை, தந்தை, ஆசான் ஆகியோர்க்கு நன்றி பாராட்டுவதும் தமிழர்களின் அடையாளமாக இருத்து வருகிறது.

**திருக்குறளில் நன்றி பாராட்டுதல்**

வள்ளுவர் 'செய்நன்றியறிதல்' என்ற அதிகாரத்தில் பிறர் செய்யும் உதவி சிறியதாக இருந்தாலும் பெரியதாக எண்ண வேண்டும் என்பதை,

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது." என்ற குறள் மூலம் வெளிப்படுத்துகிறார்.

இதன்வழி, பிறருக்கு எதுவும் கொடுக்காத போதும் பிறர் உதவி செய்தால் அந்த உதவியைப் பூமியை விடப் பெரியதாகவும், விண்ணை உயர்ந்ததாகவும் தமிழர்கள் கருதுவர் என்பது பெறப்படுகிறது.

இக்குறளுக்கு பரிமேலழகர், 'தனக்கு ஒருவர் ஓர் உதவி செய்யாதிருக்க, ஒருவன் பிறருக்குச் செய்த உதவிக்கு விண்ணுலகும் மண்ணுலகும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஒத்தல் அரிது' என்று விளக்கம் தந்துள்ளார்.

ஆனால் நாவலர்,'ஒருவர், பிறர் ஒருவரின் நிலைமையை அறிந்து, அவனுக்கு வெளிப்படையாக உதவி செய்வதைக் காட்டிக் கொள்ளாமல், அவனுக்கு அவ்வப்போது மறைமுகமாகச் செய்து வரும் உதவிக்குக் கைம்மாறாக மண்ணகத்தையும் விண்ணகத்தையும் கூட ஈடு செய்து காட்ட முடியாது' என்று பொருள் தருகின்றார்.

தமிழர்களின் அறங்களுள் ஒன்றான நன்றி பாராட்டும் குணத்தை இருவருமே தம் உரையில் பதிவு செய்துள்ளனர். ஆக, பிறர் தேவையறிந்து உதவும் மனமும், உதவியவரைப் பாராட்டும் குணமும் தமிழர்களின் அறங்களுள் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது குறள்வழி வலியுறுத்தப்படுகிறது.

**ஒழுக்கம்**

உயிரினும் மேலாகக் கருதப்படும் விழுப்பம் தரும் ஒழுக்கமும் தமிழர்களின் அறங்களுள் சிறப்பாக எண்ணப்பட வேண்டியதாக வள்ளுவரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஒழுகுதல்" என்ற சொல்லின் பொருள் "பின்பற்றுதல்" ஆகும். இதன்வழி, வாழ்வில் நல்ல பண்புகளை ஒழுங்குடன் கடைப்பிடித்து, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கொள்கையுடன் தமிழர்கள் இருந்து வருகின்றனர். ஒழுக்கத்தை விரும்பி ஏற்று, வறுமையிலும் செம்மை காத்து, எந்நிலையிலும் வாய்மை பேசி, மனசாட்சிப்படி நேர்மையாக வாழ்ந்து வருபவர்கள் தமிழர்கள்.

**திருக்குறளில் ஒழுக்கம்**

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" – என்ற குறளுக்குப் 'பார்ப்பான்' தான் கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணம் கெடாமையின் பின்னும் அஃது ஓதிக் கொள்ளலாம்; அந்தணனது உயர்ந்த வருணம், தன் ஒழுக்கம் குன்றக் கெடும் என்று பரிமேலழகர் உரை கூறுகின்றார்.

ஆனால் நாவலர் நெடுஞ்செழியன் 'பார்ப்பான்' என்ற சொல்லிற்குப் 'பார்ப்பவன்' என்று புதுமையாகப் பொருள் தருகின்றார். அவர் 'பார்ப்பான்' என்ற சொல்லை வினைச்சொல் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல்லாகக் காண்கிறார். இதன் காரணமாக, அறநெறி நூல்களை ஆராய்ந்து பார்ப்பவன், அவற்றையெல்லாம் மறந்து போய் விட்டாலும் மீண்டும் கற்றுத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் ஆறறிவு படைத்த மனிதர்களின் ஒழுக்கம் குன்றிப்போகுமேயானால் அவன் கெட்டொழிந்தே போய் விடுவான்' என்று நாவலர் உரை பகர்கிறார்.

ஆக, பார்ப்பனர் உள்ளிட்ட அனைத்து மனிதர்களும் ஒழுக்கத்துடன் வாழ வேண்டும் என்பதே வள்ளுவர் எண்ணமாக இக்குறளில் வெளிப்பட்டுள்ளது.

**ஈகை**

தமிழர் அறங்களுள் ஈகையும் முக்கியப்பங்கு வகிக்கிறது. 'இல்லை' என்று வருபவர்க்கு 'இல்லை" என்று கூறாது கொடுக்கும் அறமே 'ஈகை' ஆகும். வறியவர்க்கு உதவும் போது யாதொரு பயனையும் எதிர்பார்க்காமல் வழங்க வேண்டும் என்பதில் தமிழர்கள் உறுதியாக இருந்து வருகின்றனர்.

ஏழை என்பதால்தான், ஒருவன் உதவி பெறுகிறான். அவனால் எவ்வாறு பதிலுதவி செய்ய இயலும்? அதனால்தான் "வறியார்க் கொன் றீவதே ஈகை" என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

திருமந்திரம் தந்த திருமூலர் அவர்கள் ஈகை குறித்து,

"யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை

யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி

யாவர்க்குமாம் பிறர்க்கு ஒரு இன்னுரை தானே" - 5

என்ற பாடலில் பேருதவி, பெரும்பொருள் ஆகியன கொடுப்பது தான் ஈகை என்றில்லை. உண்ணும்போது பசித்து வருபவர்க்கு ஒரு பிடிச்சோறு தருவதும், சோர்வுற்ற மனத்தைப் போக்க இனிய சொற்கள் பேசுவதும் ஈகை தான் என்கிறார்.

ஈகையின் சிறப்பை உணர்த்த ஔவையும் “ஈவது விலக்கேல்” என்று கூறுகிறார். இக்கருத்தை அடியொற்றிச் சிவப்பிரகாசர்,

“கைம்மாறு உதவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்

தம்மால் இயலுதவி தாம் செய்வர்.”

என்று நன்னெறி நூலில் குறிப்பிடுவது இங்கு இணைத்து நோக்கத்தக்கது.

“கொடுப்பது உயர்வு; யாசிப்பது தாழ்வு’ என்ற ஒரு கருத்தும் பழங்காலத்தில் இருந்து வந்துள்ளது என்பதை

“ஈயென இரத்தல் இழிந்தன்று, அதனெதிர்

ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று” – 6 என்ற புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது. ‘ஈதல்’ பற்றிப் பேசும் போது முல்லைக்குத் தேர் தந்த பாரி, மயிலுக்குப் போர்வை ஈந்த பேகன், ஔவைக்குக் கனி கொடுத்த அதியன் போன்றோர் கண்முன்தோன்றி ஈகையின் மகத்துவத்தை உணர்த்துகின்றனர்.

**திருக்குறளில் ஈகை**

“நல்ஆறு என்னும் கொளல்தீது மேல்உலகம்

இல்எனினும் ஈதலே நன்று”. என்ற இக்குறளுக்கு உரையாசிரியர் பரிமேலழகர், ‘ஏற்றல் வீட்டுலகிற்கு நல்ல நெறி என்பார் உளராயினும் அது தீது; மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று’ என்று கூறுகின்றார்.

நெடுஞ்செழியன் அவர்களும் ‘ஈகை’ என்பது நன்மையே பயக்கும் என்று உரை தருகின்றார். ஆனால் மேல் உலகம் என்பதற்கு வான்புகழ் கொண்டோரின் புகழ் உலகம் என்று புத்துரை வழங்குகின்றார். நாவலர் உரைப்படி, வாழும்போது

ஈகை குணத்தால் உயர்ந்து வாழ்ந்தவர் மறைந்த பிறகும் புகழ் உடம்பால் வாழ்வர் என்பதை வலியுறுத்தவே வான்புகழ் கொண்டோரின் புகழ் உலகம் என்று உரை கூறுவதாக எடுத்துக் கொள்ளலாம்.

**மானம்**

தமிழர் அறங்களுள் ஒப்புயர்வற்ற தன்மை கொண்டது மானப்பண்பு ஆகும்.

தற்காலக்கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மானத்தின் மாண்பு குறித்து,

“மானம் ஒன்றே பெரிதெனக் கொண்டு

வாழ்வது நமது சமுதாயம்

மரண பயங்கரம் சூழ்ந்து வந்தாலும்

மாறி விடாது ஒரு நாளும்’

என்ற பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

தன் ஒரே மகன் களத்தில் புறப்புண்பட்டு மாண்டான் என்ற செய்தி கேட்டு வெகுண்ட தாய், அவ்வாறெனில் அவன் பாலுண்ட அங்கத்தை வெட்டி எறிவேன் என்று வஞ்சினம் கூறிக் களம் புகுகிறாள். மகன் விழுப்புண் பெற்றுக் கிடப்பதைப் பார்த்து மகிழ்வுற்றதான நிலை மானத்தின் மீது கொண்டிருந்த உயர்வினை வெளிப்படுத்துகிறது.

சிறைப்பட்ட சேரன்கணைக்கால் இரும்பொறை நீர் கேட்டுச் சேவகன் தாமதமாகக் கொணர்ந்து இடக்கையால் வைத்ததால் அருந்தாமல் உயிர் விட்ட செய்தியும் மானத்தின் சிறப்பை விளக்குகிறது.

அறநூலான நாலடியாரும் மானம் குறித்து,

“வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்

மானம் அழுங்க வரின்."      என்ற பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

**திருக்குறளில் மானம்**

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்."

இக்குறளுக்குப் பரிமேலழகர் உட்பட உரையாசிரியர்கள் பலரும், நாவலரும் ஒரே உரையைத் தந்திருக்கின்றனர். கவரிமான் தன் உடலில் உள்ள மயிர் நீங்கினால் உயிர் வாழாது, அதைப் போல மானம் காக்க முடியாதவர்கள், மானம் காக்க எண்ணுபவர்கள் தம் உயிரையும் விட்டுவிடுவர், என்று பொருள் கூறியுள்ளனர்.

"கவரி மா" என்ற உயிரினம் இமய மலையைச் சார்ந்தது. யாக்(Yak) என்ற மாட்டினத்தைச் சேர்ந்தது என்பது நினைவு கூறத்தக்கது. இதன் உடலில் இருந்து மயிர் நீங்கினால் குளிரால் உயிர் வாழ இயலாது என்பது அறியப்படுகிறது.

மானம் இழந்து விட்டால் சான்றோர் தம் உயிரை விட்டுவிடுவர் என்பது தெளிவாகிறது. ஆக, மான உணர்வு மிக்க மாண்புடையவர்களாகத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று அறியப்படுகிறது. தமிழர் அறங்களுள் ஒரு சிலவற்றைத் திருக்குறள் வழியாக ஆய்ந்ததன் அடிப்படையில் கிடைத்த ஒரு சில முடிவுகள் தொகுப்புரையில் தரப்பட்டுள்ளன.

**தொகுப்புரை**

"திருக்குறளில் வாழ்வியல் அறங்கள்" என்ற இவ் ஆய்வுக் கட்டுரை தமிழ் இலக்கியமான திருக்குறளில் இடம் பெறுகின்ற தமிழர் அறங்களுள் ஐந்து பண்புகள் கொண்டு விளக்கமுறையில் அணுகப்பட்டுள்ளது. பரிமேலழகர், நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோரின் திருக்குறள் உரைகள் ஒப்பீட்டு முறையில் ஆராயப்பட்டுள்ளன.

தமிழர்களின் தலையாய அறமான விருந்தோம்பல் மூலம், இருக்கும் உணவின் அளவு குறைவாக இருந்தாலும் தம்மிடம் வரும் விருந்தினரை விடுத்துத் தமிழர்கள் உண்ண மாட்டார்கள் என்பதை அறிய முடிகிறது.

"செய்நன்றியறிதல்' மூலம் மற்றவர்களிடமிருந்து பெறப்படும் உதவி மிகச்சிறியதாக இருப்பினும் அதனை மண்ணின் பரப்பை விட; விண்ணின் விரிவை விட உயர்வாக நினைப்பவர்கள் தமிழர்கள் என்று பெறப்படுகிறது.

"ஒழுக்கம்" என்ற அறம் மூலம் ஆறறிவு படைத்த மனிதர்கள் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக எண்ணிக் கடைப்பிடித்தனர் என்பதும், ஒழுக்கம் தவறக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர் என்பதும் பெறப்படுகிறது.

தமிழர்களிடம் இடம் பெற்றிருக்கும் "ஈகை" என்ற அறம் அவர்கள் வறியவர்களுக்குக் கொடுப்பதை இயல்பாகக் கொண்டிருக்கும் தன்மையையும், புகழுக்காகக் கொடுக்காமல் நாடி வருபவர்களுக்கெல்லாம் உதவும் தன்மையையும் கொண்டவர்கள் என்பது புலனாகிறது.

"மானம்" என்ற அறம் தமிழர்களின் தனித்துவம் மிக்கது. மானமே உயிர்; உயிரே உயர்மானம் என்பது போல தன்மானம் இழந்தால் உயிரையும் துறப்பர் என்ற கருத்து தெரிய வருகிறது.

**சாண்றென் விளக்கம்**


1. குடும்ப விளக்கு – பாவேந்தர் பாரதிதாசன் – இரண்டாம் பகுதி, ஐந்தாம் பாடல், பக்க எண்- 475
2. சிவலிங்கனார், ஆ-(தொகுப்பு ஆசிரியர்) தொல்காப்பியம், நூற்பா எண், பக்க எண் – 161
3. பெரும்பாணாற்றுப்படை,கோவிந்தனார்.கா, பாடல் எண் – 477, பக்க எண் – 193
4. சிலப்பதிகாரம், வேங்கடசாமி நாட்டார்.ந.மு, பாடல் எண்- 75, பக்க எண் – 140

5. திருமுலர் அருளிய திருமந்திரம் மூலமும் எளிய உரையும், அடியன் மணிவாசகன், பாடல் எண்- 252, பக்க எண்- 91
6. புறநானூறு மூலமும் உரையும், சாமிநாதையார்.உ.வே- பாடல் எண்-24, பக்க எண் – 436

**துணை நூற்பட்டியல்**

1. அடியன் அணிவாசகன், திருமூலர் அருளிய திருமந்திரம் மூலமும் எளிய உரையும், சாரதா பதிப்பகம், சென்னை – 14, 2009
2. கோவிந்தனார்.கா.எம்.ஏ, பெரும்பாணாற்றுப்படை, எழிலகம், திருவத்திபுரம் (செய்யாறு) 604-407, 1996
3. சாமிநாதையர். உ.வே.நூல் நிலையம், புறநானூறு மூலமும் உரையும், சென்னை, 2014
4. சிவலிங்கனார்.ஆ.(தொகுப்பு ஆசிரியர்) தொல்காப்பியம் – பொருள் செய்யுளியல் – பகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1998
5. பாவேந்தர் பாரதிதாசன், குடும்ப விளக்கு, தென்மொழி அச்சகம், சென்னை- 5, 1984
6. வேங்கடசாமி நாட்டார்.ந.மு, சிலப்பதிகாரம், ராமையா பதிப்பகம், சென்னை – 5, 2005.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Anandhi B., (2021) Human Values in Tirukkural, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:313-319. Cauvery College For Women, Trichy.

**திருமதி க.வெண்ணிலா,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்.

# இனியவை நாற்பது உணர்த்தும் வாழ்வியல் அறங்கள்

**ஆய்வு சுருக்கம்**

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குச் சில நெறிமுறைகளைப் பின்பற்றுதல் அவசியமாகும். எப்படியாகிலும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்று நெறிப்படுத்திய நமது முன்னோர்கள் அதனைப் பதிவு செய்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும் முற்பட்டனர். அவ்வாறு கூறிய இலக்கியங்களில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் அடங்கும். இவற்றுள் ஒன்றான 'இனியவை நாற்பது' நூலின் வாழ்வியல் அறங்களை முன்னுரை - மேற்கணக்கு கீழ்க்கணக்கு வேறுபாடுகள் - நூல் அறிமுகம் – இல்லறம் - குழந்தையின் சிறப்பு - கல்வியின் பெருமை – சமுதாயக்கடமை - தனிமனித ஒழுக்கம் - அரசனின் கடமை - உணவுமுறை போன்ற தலைப்புகளில் இக்கட்டுரை விளக்கிச்செல்கிறது.

**முன்னுரை**

ஓரறிவு உயிரியாய்ப் பரிணமித்த உயிரானது ஆறரறிவு கொண்ட மனிதனாய் உருவம் கொள்ள நிகழ்த்திய சோதனைகளும், சாதனைகளும் பற்பலவாய் காணப்படுகின்றன. அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்ற ஔவையின் வரியில் பல அர்த்தங்கள் பொதிந்துள்ளன. மனிதன் பகுத்தறிவு கொண்டு பகுத்தும், வகுத்தும் ஆராயத் தொடங்கியதன் விளைவு குடும்பம், சமுதாயம் போன்ற அமைப்பாகும்.

விலங்குகளாக வாழ்ந்த மனிதன் தன்னை வேறுபடுத்திக்கொள்ளும் அவசியத்தை உணர்ந்து தனக்கெனச் சில ஒழுகலாறுகளைக் கடைபிடிக்கத் தொடங்கினான். அவற்றுள் அன்பு, கல்வி, கூடிவாழும் பண்பு, தன்னை உணர்தல் போன்ற ஒழுக்கங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். பிற மொழியினர் பேசக்கற்கும் பொழுதே, தமிழினம் இலக்கிய வளமையும், இலக்கணப் புலமையும் பெற்றிருந்தது என்பர். அவ்வாறு காலம் காட்டும் கண்ணாடியாகக் காணப்படும் இலக்கியங்கள் மனிதனின் ஒழுகலாறுகளைப் படம்பிடித்துக் காட்டுவதுடன் பின்வரும் இளைய தலைமுறைகளையும் வளர்த்தெடுக்கும் கருவூலமாகத் திகழ்கின்றன. அவ்வகையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் குறிப்பிடத்தக்கனவாய் அமைகின்றன. அறஇலக்கியங்களுள் ஒன்றான இனியவை நாற்பதில் காணப்படும் வாழ்வியல் அறங்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**மேற்கணக்கு கீழ்க்கணக்கு வேறுபாடு**

கணக்கு என்பது நூல் என்றும் ஒரு செயலைச் சரியாகச் செய்தல் என்றும் பொருள் கொள்ளப்பெறுகின்றது. பல்வேறு நூல்களுக்கும் இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்களில் சிறப்பானதாய்க் கூறப்பெறும் பன்னிரு பாட்டியல் ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் ஆகிய பாவகைகளில் மிகுதியான அடிகள் கொண்டனவாக 50 முதல் 500 பாடல்களைத் தொகுத்தமைவது மேற்கணக்கு நூல்கள் என்றும், வெண்பா யாப்பினைப் பயன்படுத்திக் குறைவான அடிகளால் 50 முதல் 500 பாடல்களைக் கொண்டு விளங்குவது கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் வேறுபடுத்திக்காட்டுகின்றது. இக்கருத்தினைத் தமிழ்விடுதூது

**'மூத்தோர்கள் பாடியருள் பத்துப்பாட்டும்**

**எட்டுத்தொகையும் கேடில் பதினெட்டுக்**

**கீழ்க்கணக்கும்’** [1]

என்ற வரிகளில் விளக்குகிறது.

**கீழ்க்கணக்கு நூல்கள்**

**‘நாலடி நாண்மணி நானாற்பது ஐந்திணை முப்**

**பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்**

**இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி என்பனவே’**

என்று பிற்கால ஆசிரியர்கள் வெண்பா பாடியதிலிருந்து கீழ்க்கணக்கு நூல்களின் வரிசைகளை அறியமுடிகிறது.

**இனியவை நாற்பது**

மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனாரால் இயற்றப்பெற்ற இப்பாடல்கள் நாற்பதும் இனிய இன்பம் பயக்கும் செய்திகளைக் கொண்டுள்ளதால் ‘இனியவை நாற்பது’ என்னும் சிறப்பானப் பெயருடன் விளங்குகின்றது. இந்நூலின் முப்பத்தொன்பது பாடல்கள் நான்கடி வெண்பாவாலும், 8ஆம் பாடல் மட்டும் ஐந்தடி வெண்பாவாலும் அமைந்த இந்நூலின் கடவுள் வாழ்த்தில் சிவன், திருமால், பிரம்மா முதன்மை தெய்வங்களாகக் காட்சிபடுத்தப்பெற்றிருக்கின்றனர்.

**இல்லறம்**

சங்க காலத்தில் ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறைவு, முறை, பொறை முதலான இல்லற அறப்பண்புகள் வாழ்வியலில் மேற்கொள்ளப்பட்டன. வாழ்க்கையில் அறம்பல புரிவதற்கும், பிறர் கடைவாயிற் சென்று நிற்காத நிலைமைக்கும் பொருள் இன்றியமையாதது என்பதனை,

**அறன்கடைப் படாஅ வாழ்க்கையும்**

**பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்**

**பொருளின் ஆகும்**[2]

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

அறத்தில் சிறந்தது இல்லறமாகும் – அவை நல்லறமாய் அமைய கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்கிறார். இதனை,

**...........ஒப்ப முடிந்தால்**

**மனைவாழ்க்கை முன்இனிது**

(இனி.நா., பாடல் 2:1)

என்ற அடிகளில் விளக்குகிறது. எப்பருவத்திற்கும் அறக்கருத்துக்களை வழங்கும் திருக்குறளானது பாயிரத்திற்கு அடுத்தபடியாக அமைப்பது இல்லறவியலாகும். இல்லறத்தை நல்லவழியில் மேற்கொள்பவர்களை விண்ணுலகமும் பாராட்டும் என்பதனை,

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும்** [3]

என்று திருவள்ளுவர் விளக்குவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மேலும் இனியவை நாற்பது

**காதல் மனையாளும், காதலனும் மாறுஇன்றி**

**தீதில் ஒருகருமம் செய்பவே** (இனி.நா.பா.6:1-2)

என்று விளக்குகிறது. இல்லறத்தில் வாழும் மகளிர் கற்புடன் இருக்க வேண்டுமென்பதனை

**‘நிறை மாண்டில் பெண்டிரை**

**நீக்கல் இனிது’** (இனி.நா.பா.11:2)

என்ற வரிகள் விளக்குகிறது.

**குழந்தையின் சிறப்பு**

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்று கூறிய பெரியோர்களின் வழியில் குழந்தைக்கென்று பருவங்கள் அமைத்து இலக்கியங்கள் பாடிய மரபு நம் தமிழரின் மரபாகும். குழந்தையைப் போற்றும் பண்பானது இனியவை நாற்பதிலும் காணப்படுகிறது. அப்பண்பினை,

‘**குழந்தையின் மழலைச்சொல் கேட்டலினிது** (இனி.நா.பா. 14:2)

**குழந்தையின் தளர்நடையினிது** (இனி.நா.பா. 14:1)

**குழந்தை நோயின்றி வாழ்தலினிது’** (இனி.நா.பா. 12:1)

என்ற வரிகளால் உணரமுடிகிறது.

**கல்வியின் பெருமை**

கல்வி மனிதனை முழுமையடையச் செய்கிறது என்பதனை உணர்ந்து இலக்கியங்கள் கல்வி என்பதனை மிகச்சிறப்பானதாக எடுத்துரைக்கின்றன. அதன் வரிசையில் இனியவை நாற்பது கல்வி என்பதனைப் பிறரிடம் இரந்தாவது கற்க வேண்டும் என்ற கருத்தினைப்

**‘பிச்சைப் புக்காயினும் கற்றல் இனிது’** என்று விளக்குகிறது. மேலும், தான் கற்றவற்றைக் கற்றார்முன் எடுத்துரைத்தல், நற்கருத்துக்களைச் சோர்வின்றி எடுத்துரைத்தல், மூடரைச் சேராதிருத்தல், நன்னெறி கூறும் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தல் போன்ற குணங்களைக் கல்வி கற்றோர் பெற்றிருக்க வேண்டும்’ என்று இனியவை நாற்பது கூறுகின்றது.

**சமுதாயக் கடமை**

சமுதாயப் பிராணியான மனிதன் தான் மட்டுமின்றி பிறரையும், மற்ற உயிர்களையும் நேசிக்க வேண்டும். தன்னைச் சார்ந்தவர்களுக்கும், சமுதாயத்திற்கும் தன்னுடைய கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டுமென்ற கருத்தினை முன்வைக்கும் இனியவை நாற்பது கடன்பெற்றாவது நல்லது செய்யவேண்டும் என்பதுடன், உடல்வலிமை உடையவர்கள் செயல்வீரர்களாக வாழ்தல் வேண்டும். அனைத்து உயிர்களும் பயன்பெறும்படியாகக் குளம் வெட்டுதல் வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனைகளை எடுத்துரைக்கின்றது.

குளம் வெட்டுதல் இனிது என்பதனை,

**‘காவோடு அறக்குளம் தொட்டல் மிகவினிதே”** (இனி.நா.பா.23: 1)

என்ற வரி உணர்த்துகிறது.

**தனிமனித ஒழுக்கம்**

நாடுநலம் பெற வேண்டுமெனில் வீடு சிறப்புற வேண்டும். அவ்வீட்டில் வாழும் ஒவ்வொருவரின் பண்பும் மேன்மையுற வேண்டும் என்பது சான்றோர்களின் எண்ணமாக இருந்தது. இதனை, இனியவை நாற்பது முறைப்படி அமைத்துக் காட்டுகின்றது.

பெற்றோரை மதித்தல், பெற்றோரை வணங்குதல், பெற்றோரைப் போற்றி வாழ்தல் சிறந்த அறமாகும் என்ற கருத்தானது,

**‘எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களை**

**கண்டெழுதல் காலையினிது’** (இனி.நா பா 19: 3-4)

என்ற வரிகளில் கூறப்பட்டுள்ளது.

இனியசொல் கூறுதல், புன்முறுவல் செய்தல், புறம் பேசாதிருத்தல், பொல்லாப்பு பேசாதிருத்தல், பொறாமை கொள்ளாதிருத்தல், அறம் பேசுதல், கடன் வாங்காமல் இருத்தல், வஞ்சகரைச் சேராதிருத்தல், பிறன்மனை நோக்காதிருத்தல், மற்றொருவன் கைப்பொருளைப் பறிக்காமல் இருத்தல், நண்பர்களுக்கு நல்லன செய்தல், நண்பனைப் புறம் பேசாதிருத்தல், குழப்பவாதிகளுடன் சேராமல் இருத்தல், அற்பரிடம் நட்புகொள்ளாதிருத்தல், சோம்பல் இன்மை, சினமின்மை, விரும்பியபடி வாழாமல் அறநெறிப்படி வாழ்தல், செய்ந்நன்றி மறவாமல் இருத்தல், ஐம்பொறிகளை அடக்கி வாழ்தல், தன்னை நாடி வருபவர்களை அழிக்காது இருத்தல், மானம் கெட்டபின் வாழாமல் இருத்தல் போன்ற கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

செய்ந்நன்றி மறவாமல் இருத்தல் என்பதனை,

**‘நன்றி பயன்தூக்கி வாழ்தல் நனியினிதே’** (இனி.நா.பா.30: 1)

ஐம்பொறிகளை அடக்கி வாழ்தல் என்பதனை,

**‘ஐவாய வேட்கை அவா அடக்கல் முன்னினிதே’**

(இனி.நா.பா.25: 1)என்று சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

மானம் கெட்டபின் வாழாமல் இருத்தல் என்பதனை,

**‘மானம் படவரின் வாழாமை முன்னினிதே’** (இனி.நா.பா.27: 2) என்று பதிவு செய்கிறார்.

வாழ்வியல் நெறிகளை செம்மையாக வைத்திருப்போர் சோம்பியிருத்தல் தகாது என்பதே நாம் கற்க வேண்டிய முதல் பாடமாகும் என்பதனையும், புகழ், இன்பம், அறம் ஆகிய மூன்றும் சோம்பல் உடையாரிடம் தவறிக்கூட உண்டாவதில்லை என்பதையும் நற்றிணை கீழ்க்காணம் வரிகள் மூலம் விளக்குகிறது.

**‘இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**

**அசைவுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இனமென**

**வினைவயின் பிரிந்த வேறுபடுகொள்கை’** [5]

**அரசரின் கடமை**

சங்க காலப் புலவர்கள் அரசனுக்கு அறிவுரை கூறும் நிலையில் இருந்துள்ளனர். நீரின்றி உலகில் எவ்வுயிரும் நிலைத்து வாழ இயலாது. வாழ உணவு கொடுத்தோரும் உயிரைக் கொடுத்தவர் ஆகிறார். எனவே, நீர்நிலைகளை ஏற்படுத்தி, வேளாண்மையைப் பெருக்கி மக்களைக் காக்க வேண்டும் என்ற கடமையை

**‘ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே**

**சான்றோனாக்குதல் தந்தைக்குக்கடனே**

**வேல்வடித்துக்கொடுத்தல் கொல்லருக்குக்கடனே**

**நன்னடை நல்கல் வேந்தருக்குக்கடனே**

**ஒளிருவாள் அருஞ்சமம் முருக்குக்**

**களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே’** [4]

புறநானூற்றுப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன

‘அரசன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே’ என்றனர் நம் முன்னோர்கள். இனிய சொற்களை எடுத்துரைக்கும் இனியவை நாற்பது அரசனின் கடமைகளை விளக்கிச் செல்கிறது. மன்னன் செங்கோலாட்சி செய்ய வேண்டும். ஆற்றலுடைய படைக்கருவிகளைப் பெற்றிருக்க வேண்டும். குதிரைப்படை, யானைப்படைகளைக்

கொண்டிருக்க வேண்டும். வலிமையுடையவர்களைப் படையில் சேர்த்திருக்க வேண்டும்.

மேலும் குடிமக்களிடம் அன்பு செலுத்துதல், ஒற்றர்களை உறவு அறிதல், வேந்தரின் சேனையைத் தடுத்தல், தவசிகளைப் பாதுகாத்தல் போன்ற பண்புநலன்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று எடுத்துரைக்கின்றது.

**புலால் மறுத்தல்**

சமண சமய நூலான இனியவை நாற்பது புலால் மறுத்தல் கூறுவது இயல்பானதாக இருந்தாலும், உயிர்களை நேசிக்கும் எந்த மனிதனும் பிற உயிரைக் கொன்று தன் உயிரை வளர்க்க நினைக்க மாட்டார் என்பதே உண்மைக் கூற்றாக அமைகிறது. ஊழ்வினை, மறுபிறவி போன்றவற்றில் அதிக நம்பிக்கை கொண்ட சமண சமயமானது புலால் உண்பதை மறுத்துரைக்கும் என்பதனை

**ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே**

(இனி.நா.பா.4: 2)

என்ற வரி மூலம் அறிய இயலுகிறது.

**தொகுப்புரை**

சுருங்கக் கூறி விளங்க வைத்தல் செய்யுள் இலக்கணத்தைச் சிக்கெனப் பிடித்துக்கொண்ட பூதஞ்சேந்தனார். இனிது இனிது என்று கூறி இன்சொலனாகக் காட்சியளிக்கிறார். மனித குலம் சிறக்க வேண்டுமெனில் இல்லறம் சிறக்க வேண்டும். இல்லறத்தின் நற்பயனாய் குழந்தைகளின் பண்புநலம் சிறக்க வேண்டும். குழந்தைகள் கல்வியில் மேன்மை பெற வேண்டும். கல்வி கற்றவன், சிறந்த புலவர்களைத் தன்னருகில் வைத்துப் போற்றிப்பாதுகாக்க வேண்டும். தனக்கும், சமுதாயத்திற்கும் பயனுடையவனாய் வாழவேண்டும். அரசன் மக்களுடன் அன்பு பாராட்டி வீரம் மிக்கவனாய்ப் பெரும்படை கொண்டவனாய் வாழவேண்டும் முதலிய நற்கருத்துக்களை இனியவை நாற்பது எடுத்துரைக்கின்றது.

**முடிவுரை**

மனிதகுலத்தை நன்னெறிப்படுத்தத் தோன்றிய பதினெண்அறநூல்களுள் இனியவை நாற்பது சிறந்த இடத்தினைப் பெறுகின்றது. தனிமனித ஒழுக்கத்தினை முதன்மையாக எடுத்துக்கொண்டு மனிதகுலம் மேன்மையுற கைபிடித்து அழைத்துச் செல்கின்றது. மானம் போனபின் வாழாமை முன்னினிது என்று ஒழுக்கங்களை முன்னிறுத்தும் இனியவை நாற்பது போன்ற அறநூல்களை வளரும் இளைஞர்களுக்கும், அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்வதை நமது கடமையாக மேற்கொள்ள வேண்டும்.

**சான்றெண் விளக்கம்**


1. தமிழ்விடுதூது, ப.56
2. அகநானூறு,155: 1-3
3. திருக்குறள் 50
4. புறநானூறு 312
5. நற்றிணை 214: 1-3



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Vennila K., (2021) The indication of Human Values in Iniyavai Naarpathu, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:320-324. Cauvery College For Women, Trichy.

**முனைவர் சு.மகேஸ்வரி,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்.

# நாலடியாரில் உணவு

**ஆய்வு சுருக்கம்**

மூன்று பருவகாலங்களும் பருவம் தப்பாமல் சரியாக அமைய, உயிர்க்காற்று நிறைந்த இந்தத் தமிழர் நிலம், இங்கு வாழ்ந்த மக்களால் ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பெற்றது. ஐவகை நிலங்களின் தட்பவெப்பநிலயில் விளைந்த, விளைவித்த, கிடைக்கின்ற உணவுப்பொருட்களைத் தமிழர்கள் உட்கொண்டனர். வெளிநாடுகளைப்போலப் பனிசூழ் பிரதேசமாகவோ, ஆறுமாதம் குளர்நிறைந்த பிரதேசமாகவோ தமிழர்களின் நிலம் இல்லை. ஆதலால், தமிழருக்கு இயற்கையை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியம் இல்லாமல் போயிற்று. இயற்கையே எல்லாமும் கொடுத்தது. எல்லாம் கொடுத்த இயற்கையையே தமிழர்கள் தெய்வமாகவும் வழிபட்டனர்.

உலகத்தின் நாகரிகம், மொழி, கலை, பண்பாடு எனப் பண்பட்ட தமிழ்ச்சமூகம்தான் முதலில் சமைத்து உண்ட அறிவுசார் இனமாக இருந்திருக்கும். அதனால்தான் உணவை, மரக்கறி உணவு, புலால் உணவு, கனி உணவு எனப்பிரித்தனர். அதோடு மட்டுமல்லாமல் உணவைத் தன்மானத்தோடும், சுயமரியாதையோடும் இணைத்தும் உணவு உண்ணும் முறையைப் பகுத்தும், உணவிலும் அறம் சமைத்தது தமிழ்ச்சமூகம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியாரில், தமிழர் உணவு குறித்தும், உணவு உண்ணும் முறை குறித்தும், எங்கு உண்ணலாம், எந்த இடத்தில் உண்ணக்கூடாது என்றும் உணவு எப்போது சுவை கொடுக்கும், எவ்வளவு சுவை மிகுந்த உணவாயினும் எந்தச் சூழ்நிலையில் அவ்வுணவு சுவையிழக்கும் என்பதையும், வறியோர்க்கு உணவிடுதல் அறம் என்பதையும் எடுத்தியம்புகிறது நாலடியில் நல்லறம் கூறும் நாலடியார்.

**உழைப்பவரும் உரிமையாளரும்**

உற்பத்தி நுகர்வு ஆகியவற்றிற்கு இடையிலான பாகுபாட்டின் காரணமாக அவசியமானதாக்கப்பட்ட ஒரு சமூகச்செயல்பாடே பகிர்வு ஆகும். ஆதிச்சமூகமான தமிழ்ச்சமூகம் அதைப் **பகிர்ந்து உண்** என்கிற அறச்செயல்பாடாக்கியது. உற்பத்தி உபரி தோன்றியவுடன் உபரிப்பொருள் விற்பனைப்பொருள் விற்பனைச் சரக்காக மாறிவிடுகிறது. அதுவரை உற்பத்திப் பொதுவாக இருந்தது. உபரிக்குப் பிறகே பரிவர்த்தனைப் பொருளாக மாற்றமடைந்தது.

அப்போதே ஏற்றத்தாழ்வுகளின் தொடக்கத்தில் நிற்கின்ற பழைய சமூக அமைப்பை **'ஐயமிட்டு உண்'** என்று சொல்கிறது தமிழிலக்கியம். தமிழ் நிலத்தில் பௌத்தமும், சமணமும் பரவத்தொடங்கியதிலிருந்து புலால் என்பதைத் தவிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டனர். தாவர உணவு புலாலை விடச் சிறந்தது என்ற கருத்து பரப்பப்பட்டது. ஆரிய வருகையும், இந்த நிலத்தில் அவர்களின் ஆதிக்கமும் புலால் உணவைக் கீழான உணவாக மாற்றின. ஆனால், இக்கருத்துக்கள் மக்களிடையே வெற்றிபெற முடியவில்லை. இன்று வரை, சைவமா? அசைவமா? என்கிற போராட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

சமூகத்தில் உழைப்பவர், உரிமையாளர் என்ற பெரும்பிரிவு தோன்றிய பிறகு உழைப்பவர்கள் உணவு நுகர்விலிருந்தே தள்ளிவைக்கப்பட்டனர். அரிசிச்சோறு, புலால் உணவு எப்போதாவது அவர்களுக்குக் கிடைக்கும் உணவாக

மாறிக்கொண்டிருக்கிறது. உடைபட்ட நெல்லின் நொய்யரிசிக் கஞ்சியும், கூழும் எளிய மக்களின் உணவாகின்றன. அவரகளுக்குப் புலால் உணவென்பது அவர்கள் உழைக்கின்ற இடத்தில் கிடைக்கும் நண்டு, நத்தை, எலி, மீன் என்பதாகக் குறுகின. ஆனால், நம் தமிழிலக்கியங்கள் **‘ராசா அன்னம்’** என்கிற ஒரு உயர்வகை நெல் அரசர்கள் நண்டுக்கறியோடு சேர்த்து உண்டனர் என்று சிறுபாணாற்றுப்படை பாடல் ஒன்று சொல்கிறது.

பாரி வள்ளல் இரந்து வரும் புலவருக்கு ஆட்டிறைச்சியைப் படைத்தான். **‘உண்டாட்டு’** என்னும் கள்ளுண்டு களிக்கும் பெருவிழாவில் மன்னன் தன் கரங்களாலேயே ஆட்டிறைச்சியை வழங்குவான் என்று புறநானூறு குறிப்பிடுகிறது. இதிலிருந்து உயர்ந்தோர் ஒரு வகை உணவும், உழைப்போர் ஒரு வகை உணவும் உண்டனர் என்பது புலனாகும். நாலடியாரின் செல்வம் நிலையாமையைச் சொல்ல வருகிற

**அறுசுவை உண்டி, அமர்ந்து இல்லாள் ஊட்ட,**
**மறுசிகை நீக்கி உண்டாரும் – வறிஞராய்ச்**
**சென்று இரப்பர் ஓரிடத்துக் கூழ், எனின், செல்வமொன்று**
**உண்டாக வைக்கற்பாற்று அன்று**

(நால.,செல்வம் நிலையாமை பாடல் 1)

இப்பாடல் காதல் மனைவி அருகமர்ந்து அறுசுவைகளுடன் கூடிய உணவினை அன்புடன் வாயிலே எடுத்தெடுத்து ஊட்டிக்கொண்டிருக்கும்போதும், அடுத்த உருண்டையை வேண்டாமென்றுத் தடுத்து உண்டு களிப்பவர் சிறந்த செல்வச் செழுமையினையும் இன்பவாழ்வினையும் உடையவர்கள். அப்படிப்பட்டவர்களும் ஒருசமயத்தே வறுமையாளர்கள் ஆவர். ஓரிடத்திலே சென்று புன்மையான கூழினையும் யாசித்து நிற்பார்கள் என்று சொல்கிறது.

உணவை வீணாக்கினாலும், தேவைக்கதிகமான உணவைச் சமைத்து யாரிடமும் பகிராமல் வீண்செய்தாலும் அச்செல்வந்தரின் செல்வம் அழியும் என்று உணவின் முக்கியத்தைக் கூறினாலும், புன்மையான கூழ் அஃதாவது இழிவான கூழ் என்று கூறுகிறது. எளிய மக்கள் உணவாகப் பயன்படுத்தும் கூழ் செல்வந்தருக்கு இழிவானதாகும் என்பதை இப்பாடலின் வழியாக பழந்தமிழரின் உணவு வேறுபாட்டை அறிந்து கொள்ளலாம்.

ஆதிசமுதாயத்தின் (primitive society) மக்கள் தங்களது கூட்டு உழைப்பால் உற்பத்திச் செய்யப்பட்டவற்றைச் சரிபங்குகளாகப் பிரித்துக்கொள்வர். அங்கு சரிசமமென்பது கட்டாயமாகிறது. ஏனெனில், அப்போதைக்கு உயிர்வாழ்வதற்குப் போதுமானவற்றையே உற்பத்தி செய்தனர். விலங்குகளைப் பயன்படுத்தியும், கருவிகளைப் பயன்படுத்தியும் உற்பத்தியில் ஈடுபட்டபொழுது தேவைக்குப்பிறகு எஞ்சிய உற்பத்திப் பொருட்கள் சமூகத்தைப் பிரித்தது. நிலவுடைமையைத் தோற்றுவித்தது.

உணவுப் பொருட்களைப் பகிர்ந்து உண்டது மாறி உணவுப் பொருட்களை மனிதன் சேமிக்கத் தொடங்கிய காலகட்டத்தில் பசி ஒரு பிரிவினருக்கு நிரந்தரமாக்கப்பட்டது. அந்தப்பசியே கலைகளையும், இலக்கியங்களையும் தோற்றுவித்ததோடல்லாமல் புதிய வகை நுகர்வுப் பொருட்களை நுகர்வது என்கிற நிலைக்குத் தள்ளியது. இப்பாகுபாட்டைச் சாடுகின்ற நாலடியாரின் செல்வம் நிலையாமையின் இரண்டாவது பாடல்

**துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டும்**
**பகடுநடந்த கூழ் பல்லாரோடு உண்க**
**அகடுஉற யார்மாட்டும் நில்லாது, செல்வம்**
**சகடக்கால் போல வரும்**

(நால.,செல்வம் நிலையாமை பாடல் 2)

நடுவுநிலைமை பொருந்த, எவரிடத்துமே செல்வம் நிலையாக நிற்பதில்லை. வண்டிச்சக்கரத்தின் ஆர்க்கால்கள் போல, மேலும் கீழுமாகச் சுற்றிச்சுற்றி இடம்மாறிக்கொண்டே போகின்ற இயல்பினை உடையது அது. அதனால், எருமைக்கடாக்களை நடத்திப் போரடித்துப் பெற்ற நெல்விளைவாகிய, குற்றமற்ற பெருஞ்செல்வமானது விளைந்து தோன்றிய காலத்திலே, அதனை எவருக்கும் தராமல் சேமித்துப் பூட்டி வைக்காதீர்கள். அது கிடைத்த காலந்தொடங்கி, அனைவரும் பசியின்றி வாழ வேண்டும் என்ற அறநினைவுடன், பலரோடும் கூடிப் பகிர்ந்து உண்பீர்களாக என்று கூறுகிறது.

**உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே**

**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே[1]**

நீரையும், நிலத்தையும் ஒன்றாக இணைத்து உற்பத்தியில் ஈடுபடுபவர்களே உடம்பையும், உயிரையும் படைப்பவர்கள் என்று கூறுகிற இப்புறநானூற்றுப் பாடலின் வழியாக உணவு எந்த நில மக்களுக்குத் தங்குதடையின்றிக் கிடைத்திருக்கும் என்றால் மருதநில மக்களுக்கே கிடைத்திருக்கும்.

மருதநிலத்தில்தான் நீரும்நிலமும் இணைந்திருக்கும். நம் தமிழரின் அறிவின்படி பிரிக்கப்பட்ட மற்ற நான்கு நிலங்களில் உணவு என்பது உற்பத்திக் குறைவாகவும், கிடைக்கின்ற பொருளை உணவாக எடுத்துக்கொள்ளும் முறை மிகுந்திருப்பதையும் நாம் அறியலாம்.

மருதநிலத்திலேயே வன்நிலம், மென்நிலம் என்ற இரு வகை நிலங்கள் இருந்ததாகப் புறநானூற்றுப் பாடல் 42 குறிக்கிறது. வன்நிலம் என்பது நீர்மைத்தன்மை குறைந்த மென்மையற்ற நிலமாகும். மென்நிலம் என்பது நீர்வளமிக்கப் பண்பட்ட நிலமாகும். மேற்சொன்ன புறநானூற்றுப் பாடல் வன்நிலத்தார் மென்நிலத்திற்கு வந்து உணவு பெற்றுக்கொண்டனர் என்றும் குறிப்பிடுகிறது.

ஆகவே, ஒரு நிலத்திலேயே இருவகைப் பாகுபாடுகள் இருந்த சூழலில், உணவை நாலடியார் இளமை நிலையாமையில் இவ்வாறு பதிவு செய்கிறது.

**பருவம் எனைத்துள? பல்லின்பால் ஏனை?**

**இருசிகையும் உண்டீரோ? என்ற – வரிசையால்**

**ஊண்ணாட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்**

**எண்ணார், அறிவுடையார்**

(நால.,இளமை நிலையாமை பாடல்18)

அதாவது, பிராயம் எவ்வளவு ஆகியுள்ளது? பல்லின் தன்மை எப்படியுள்ளனது? இரண்டு கவளமும் உண்டு விட்டீரோ? என்று வயது முதிர்ச்சியினை முறைமையால் உள்ளத்திலே எண்ணி ஆராய்தலைச் செய்யப்படுவதனால், தேகத்தின் வலிமையைப் பற்றி எண்ணி, அறிவு உடையவர்கள் அளவுக்குமீறி மகிழ மாட்டார்கள் என்று உணவை விட அறிவு மேலானது என்கிறது நாலடியார்.

உணவுக்கு அலைகின்ற ஒரு மக்கட்சமூகம் இருக்கையில் அறிவே மேலானது என்று போதிப்பது பசியோடு இருக்கின்ற மக்களைக் கலகம் செய்யவிடாமல் தடுத்து அறஒழுங்கிற்குள் கொண்டு வர முயற்சிக்கிறது இப்பாடல். நன்கு உண்ட சமூகப்பிரிவு மக்களுக்குத்தான் சிந்திப்பதற்கும் உணவில் எது சிறந்தது? எது தேவையற்றது? எது தேவையுள்ளது என்ற சிந்தனை பிறந்திருக்கும். எதிர்த்தரப்பில் உள்ள மக்களுக்கோ உணவினைத் தேடுவதுதான் சிந்தனையாக இருந்திருக்கும். இப்பாடல் கூறவருகின்ற அறம் சரியென்றால், ஒரு பகுதி மக்களுக்கு நாம் அறிவு போதனை என்கிற பெயரில் அநீதி இழைத்திருக்கிறோம் என்பதாகும்.

**ஈயல்பெய் தட்ட இன்புளி வெஞ்சோறு**

**--------------------**

**பாலுடை அடிசில் தொடீஇய ஒரு நாள்**

**மாவண் தோன்றல் வந்தனை சென்மோ [2]**

தலைவனுக்குப் பால் கொண்டு செய்யப்பட்ட இனிய உணவினையும், தலைவனோடு வரும் ஏவலர்களுக்கு வரகரிசியுடன் ஈயலை இட்டுச் சமைத்த உணவினையும் தலைவி வீட்டில் படைப்பர் என்று தோழி கூறினாள். இப்பாடலின் மூலம் யாருக்கு எவ்வுணவு கொடுக்க வேண்டும் அல்லது யார் எவ்வுணவை உண்ண வேண்டும் என்று வரையறுக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுள்ள சமூகமாகத் தமிழ்ச்சமூகம் இருந்திருப்பதை நாம் உணர்ந்தாலும், தனிப்பாடல்திரட்டில் ஔவையார்

**உண்ணீர் உண்ணீரென்று உபசரியார்**

**தம்மனையில்**

**உண்ணாமை கோடி பெறும் [3]**

உண்ணீர் உண்ணீர் என்று உபசரியாதவர்கள் வீட்டில் உண்ணாமல் இருப்பது கோடி பெறுவதற்குச் சமமானது என்கிற அறச்சீற்றத்தின் மூலம் கொடும்பசியாயினும் உணவு உண்பதைச் சுயமரியாதையோடு இணைத்துக் கூறுகிறார். மேழும் கீழுமான சமூக உறவுகள் ஏற்பட்டபிறகு, உணவிலும் மிகப்பெரிய மாறுதலைத் தமிழ்ச்சமூகம் சந்தித்திருக்கிறது. அதனால்தான் பசியைப்பற்றிப் பாடுகின்ற சங்கஇலக்கியப் பாடல்கள், பக்திஇலக்கியப்பாடல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் காலம் வரையிலும், பசித்த சமூக மக்களுக்காக உணவு கொடுப்பதை அறம் எனக் கொண்டாடியிருக்கிறது அறிவார்ந்த தமிழ்ச்சமூகம். மேலும், உணவிடுவது அறம் என்றாலும், உணவைப் பெறுவது தமிழ் வாழ்வியலில் அவலச்சுவையாகவே பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கீழ்வரும் நாலடியாரின் பொறைஉடைமை பாடல் உணர்த்துகிறது.

**தான் கெடினும், தக்கார்கேடு எண்ணற்க! தன்னுடம்பின்**

**ஊன்கெடினும், உண்ணார் கைத்து உண்ணற்க! – வான்கவிந்த**

**வையகம் எல்லாம் பெறினும், உரையற்க,**

**பொய்யோடு இடைமிடந்த சொல்!**

**(நாலடியார் பொறைஉடைமை 80)**

தான் அழியவே நேர்ந்தாலும் அதனை நீக்கிக் கொள்ளும் பொருட்டு மேலோர்களுக்குக் கேடு செய்வதை ஒருவன் எண்ணாதிருப்பானாக. தன் உடம்பின் ஊனே வற்றி, உடலே அதனால் அழிந்தாலும், உண்ணத்தகாதவர் கையிலிருந்து கிடைக்கும் உணவை ஒருவன் ஒருபோதும் உண்ணாதிருப்பானாக. வானம் கவிந்துள்ள உலகம் அனைத்துமே பெறுவதாயிருந்தாலும், பொய் இடையிடையிலே கலந்த சொல்லை, ஒருவன் என்றுமே சொல்லாதிருப்பானாக!

**இம்மி அரிசித் துணையானும், வைகலும்**

**நும்மில் இயைவ கொடுத்துண்மின்; உம்மை**

**கொடாஅ தவரென்பார், குண்டுநீர் வையத்து**

**அடாஅ அடுப்பி னவர் ( பாடல் 94)**

இம்மியளவான அரிசியே ஆனாலும், உங்களுக்கு இசைந்த மட்டிலே நாள்தோறும் இரவலர்களுக்குக் கொடுத்து, அதன் பின்பே நீங்கள் உண்ணுங்கள். ஆழமான கடல் சூழ்ந்த இந்த உலகத்திலே சமைக்காத அடுப்பை உடையவர்களான சோற்றுப் பிச்சைக்காரர்கள் என்பவர்கள் எல்லாம், முற்பிறப்பிலே தம்மிடம் வந்து

இரந்தவர்களுக்கு ஏதும் உணவு கொடாத உலோபிகளேயாவர். அதனால், அடுத்த பிறப்பில் நாமும் அந்நிலையினை அடையாமல் இருப்பதைக் கருதியாவது கொடுத்து உண்பதில் ஈடுபடல் வேண்டும்.

**முடிவுரை**

இப்படியாக, உயர்சிந்தனை கொண்ட தமிழர் வாழ்வியல்முறையை நாம் மிகச்சரியாக ஆராய்ந்தோமானால் ஆதிக்குழு சமூகங்களில் உணவு தேடுதலென்பது பொதுவாக இருந்தது. ஈட்டி, வில், அம்பு போன்ற கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு பெண் கருவிகளைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கிவைக்கப்படுகிறாள். அப்போதிருந்துதான் பெண் உணவைச் சேகரிப்பவளாக, உணவை உற்பத்திச் செய்பவளாக மாறுகிறாள்.

ஆண் தன் வலிமையால் உணவைச் சேகரிக்க, பெண் தன் இனவிருத்திக்கான கருணையிலும், தேவையிலும் உணவைச் சேகரித்துப் பாதுகாக்கத் தொடங்குகிறாள். சமூகம் வளர்ந்து நிலவுடைமைச் சமூகமாக மாறுகின்ற பொழுது உணவைச் சமைப்பது என்கிற அளவிற்குப் பெண்ணைச் சுருக்கி ஆண் ஆதிக்கம் கொண்டவனாக உயர்ந்து நிற்கிறான். பொதுவாக நமது இலக்கியங்கள் எல்லாமும் தமிழர் பெருமை சாற்றுவதையே நோக்கமாகக் கொண்டவயாக இருக்கின்றன. ஆனால், நிகழ்வில் சமூகம் அப்படியில்லை. மக்களையே வருணங்களாகப் பிரித்தவர்கள் உணவையும் பிரித்தார்கள். அல்லது ஒரு சாரருக்கு நல்உணவையே மறுத்தார்கள். இதுதான் மெய்யான தமிழ்ச்சமூகம் என்பதைக் கீழ்வரும் அகப்பாடல் ஒன்றின் வழி நாம் அறியலாம்.

**அணல்வரிக் கொடுங்காய் வாள் போழ்ந்திட்ட**

**காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது**

**அடைஇடைக் கிடந்த கைபிழி பிண்டம்**

**வெள்எள் சாந்தொடு புளிபெய்து அட்ட**

**வேளை வெந்தை வல்சி ஆக....**[4]

இப்பாடலலிருந்து, சங்ககாலக் கைம்பெண்களுக்குரிய உணவு முறையை அறிய முடிகிறது. 'நெய்' இம்மகளிருக்கு விலக்கப்பட்ட உணவாக இருந்துள்ளது. 'நீர்ச்சோறும், வெள்ளை எள் துவையலும் புளி சேர்த்து வேகவைத்த வேளைக்கீரையும் கைம்மை மகளிருக்குரிய உணவாக இருந்துள்ளதும் தெரிகின்றது. சங்ககாலச் சமூகத்தின் பெண்களின் நிலையை, 'உணவு' குறித்த செய்தியால் இப்புறப்பாடல் பதிவு செய்கிறது.

அறநூலான நாலடியார், உணவை மானத்தோடு இணைத்துக் கூறி, உணவு தேவையுள்ள ஒரு சமூகத்தை மறைக்கிறது. சங்க இலக்கியங்கள் எதை மறைக்க முயற்சித்தனவோ, அதை பக்தி இலக்கியங்களும், அற இலக்கியங்களும் செவ்வனே செய்துமுடித்தன. சமூகத்தின் எதிர்க்கலகக்குரலாய் ஓயாமல் ஒலிக்கும் ஓங்காரம் பழந்தமிழர் இலக்கியங்களைக் கூர்ந்து படிப்பவரின் காதுகளில் என்றைக்கு விழுகின்றதோ அன்றைக்குத்தான் தமிழர் அடையாளங்கள் மிகச்சரியாக ஆய்வு செய்யப்படும். அப்பொழுதுதான் கீழடிபோல் இலக்கியங்களும் புதிய வெளிச்சம் பெறும்.

**சான்றெண் விளக்கம்**

1. புறநானூறு, பாடல் 18:(21 – 23)
2. அகநானூறு பாடல் 394
3. ஔவையார் தனிப்பாடல் திரட்டு பாடல் 41:(3-4)
4. புறநானூறு – 246

**துணைநூற் பட்டியல்**


1. நாலடியார் தெளிவுரை புலியூர்க்கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை – 600 014
2. புறநானூறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை.
3. அகநானூறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை.
4. தமிழர் நாகரிகமும் பண்பாடும், டாக்டர் அ.தட்சிணாமூர்த்தி, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Maheswari S., (2021) ‘Food’ in Naaladiyar, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:325-330. Cauvery College For Women, Trichy.

**முனைவர் வி.சத்யவதி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி

# ஆற்றுப்படை நூல்களின் கட்டமைப்பும் பாடுபொருளும்

**ஆய்வுச்சுருக்கம்**

பழந்தமிழ் நூல்களிலே பத்துப்பாட்டு ஒரு சிறந்த நூலாகும். பண்டைத் தமிழர் நாகரிகத்தை விளக்கி காட்டும் ஒரு ஒளி விளக்கு. இந்நூலில் இயற்கைக்கு மாறான கற்பனைகளை எங்கும் காணமுடியாது. தமிழன் வாழ்ந்த உன்னதமான வாழ்வினை உலகிற்கு எடுத்துரைத்த நூல். இந்நூலில் பாடப்பட்ட ஆற்றுப்படை நூல்கள் கலைஞர்களும், புலவர்களும் வறுமையிலும் கூட செம்மையான வாழ்வு வாழ்ந்த நிலையினை விளக்குகிறது. பண்டைய மக்கள் வரும் விருந்தினர்களை எதிர் கொண்ட நிலை அவர்களை உபசரித்த தன்மை ஆகியன சுட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிலத்திலும் கிடைக்கும் உணவுப் பொருட்கள் மற்றும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையையும் பாணனோ, கூத்தனோ, பொருநனோ ஒருவன் மற்றொருவனை ஆற்றுப்படுத்திய நிலையினை காணமுடிகின்றது. அரசர்களும் கலைஞர்களை மதித்த திறத்தினை அறிய இயலுகிறது. இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்டு பண்டைய மக்களின் போற்றத்தக்க விழுமியங்களை கட்டமைத்துக் கூறியுள்ளனர். இதனை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

ஆற்றுப்படை என்பது சங்ககாலப் புலவர்கள் செய்த நூல்வகைகளில் ஒன்று; பரிசு பெற்ற ஒருவன், பரிசு பெற நாடிச்செல்லும் மற்றொருவனுக்கு, வழி சொல்லி அனுப்புவதே ஆற்றுப்படையாகும். பத்துப்பாட்டுள் ஐந்துப் பாடல்கள் ஆற்றுப்படையைப் பற்றியவை ஆதலின், சங்ககால ஆற்றுப்படை இலக்கியத்தின் இலக்கியத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் கட்டமைப்பு பற்றிய விவரங்களை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஆற்றுப்படை விளக்கம்**

ஆற்றுப்படை நூலுக்கு தொல்காப்பிம் இலக்கணம் கூறுகிறது. சங்ககால எட்டுத்தொகை நூல்களில் ஆற்றுப்படைப் பாடல்கள் உள்ளன. சங்கநூல் பத்துப்பாட்டில் ஐந்து பாட்டுகள் ஆற்றுப்படை நூல்கள். பிற்காலத்தில் ஆற்றுப்படை நூலைத் தமிழில் சிற்றிலக்கியங்கள் என்றும் வழங்கலாயினர். இதனை பாட்டியல் வகைகளுள் ஒன்றாக்கினார். ஆற்றுப்படுத்துதல் என்பது வழிபடுத்துதல் என்னும் பொருள் உடையது. விறலியர், பாணர், கூத்தர், பொருநர் என்போர் தமது வறுமையை போக்க வள்ளல்களிடம் சென்று பொருள் பெறுவது அக்கால வழக்கம். அவ்வாறு பரிசு பெற்றுச் செல்லும் மேற்கூறிய நால்வகைப் பிரிவினருள் ஒருவன், பரிசு பெறச் செல்லும் இன்னொருவனை வழிப்படுத்தும் முறையில் அமைவதே ஆற்றுப்படை ஆகும். அகவற்பாக்களாக அமையும் இப்பாடல்கள் தலைவனின் புகழ், கொடை, கொற்றம் ஆகியவை பற்றி எடுத்துக்கூறுவாக அமையும்.

**ஆற்றுப்படையின் கட்டமைப்பு**

ஆற்றுப்படை இலக்கியத்தில் கூத்தர், பாணர், பொருநர் விறலி ஆகியோர் அமைந்திருக்கின்றனர்.

கூத்தர் – தனிக் கூத்திலும், கதை தழுவி வரும் கூத்திலும் வல்லவர்.

பாணர் – இசைத் தமிழிலும், குழல், யாழ் முதலிய

இசைக்கருவிகளோடும் பாடுவர்.

பொருநர் – ஏர்க்களம் மற்றும் போர்க்களம் சென்று பாடும் கூத்தர்.

விறலி – உள்ளக் குறிப்பை மற்றோருக்கு வெளிப்படும் வகையில் திறம்பட நடிப்பவள்.

இவர்கள் நால்வரும் தமக்குத் துணையாயினரோடு சிற்றரசரிடமும் பேரரசிடமும் சென்று தம் கலைத்திறனைக் காட்டி பரிசு பெற்று மீள்வர், அவ்வாறு மீண்டு வருபவர் வள்ளல்களை தேடிச்செல்லும் தம்மைப் போன்ற கலைவாணரை வழியிற் கண்டால் அவர் மீது இரக்கம் கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய எண்ணுவார், அதனால் தம்மை ஆதரித்த வள்ளலிடம் சென்று பரிசு பெற்று மகிழும்படி அவர்களை வழி கூறி அனுப்புவர் இவ்வாறு ஆற்றுப்படுத்தலே "ஆற்றுப்படை" எனப்படும்.

கூத்தன் ஒருவன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துதல் "கூத்தராற்றுப்படை" எனப்படும். பாணன் ஒருவன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துதல் பாணாற்றுப்படை என்று அழைக்கப்படுகிறது. பொருநன் ஒருவன் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்துதல் பொருநராற்றுப்படை எனப்படுகிறது.

ஆற்றுப்படை நூல்களுள் ஒன்றிற் கூறியது போல மற்றொன்றிற் செய்திகள் முறைப்படி கூறப்படவில்லை இருப்பினும், இந்நூல்களில் வள்ளலின் போர்ச்சிறப்பு, கொடைச்சிறப்பு, அவன் மனைவிமார் சிறப்பு, அவனது நாட்டுச்சிறப்பு, ஊர்ச்சிறப்பு, பாணன் அல்லது விறலியரது வறிய நிலைமை, அவர்தம் இசைக்கருவிகள் ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன. சிறப்பாக ஒவ்வொரு செய்யுளிலும் வள்ளலது கொடைச்சிறப்பும் போர்சிறப்பும் கூறப்பட்டுள்ளது. பெரும்பான்மையான செய்யுள்களில் கொடைசிறப்பும் போர்சிறப்பும் கூறப்பட்டுள்ளன. புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல்களில் பாடப்பட்ட ஆற்றுப்படை பாடல்களில் "இன்ன வள்ளலிடம் செல்" என்ற செய்தி ஒவ்வொரு செய்யுளிலும் இடம் பெற்றுள்ளது. ஆனால் புறநானூறும், பதிற்றுப்பத்தும் சிற்சில அடிகளையே கொண்டதாகலின், நாடு, ஊர், போர்கள், கொடை, பரிசில் பெற்று மீண்டவர் சிறப்பிக்கப் பெற்ற முறை முதலியன விவரமாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் பத்துபாட்டில் உள்ள ஆற்றுப்படை செய்யுள்கள் பல அடிகளை கொண்டுள்ளதால், மேற்கூறிய அனைத்தும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

## பத்துப்பாட்டில் ஆற்றுப்படையின் பாடுபொருள்

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்னும் ஐந்து ஆற்றுப்படை நூல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூல்கள் அக்கால மக்களின் சமுதாய வாழ்வினை எடுத்துக்காட்டும் வண்ணம் பாடப்பட்ட நூலாகும். மன்னர்களின் செங்கோண்மை சிறப்பு, கொடை, வீரம், ஈகை பண்பு முதலியவற்றையும் சங்க மக்களின் விருந்தோம்பல் பண்பினையும் ஆற்றுப்படை நூல்கள் எடுத்ரைக்கின்றன.

## திருமுருகாற்றுப்படை

பொருளை எவரிடத்திலும் இருந்தும் எந்த வழியிலும் பெற முடியும் ஆனால் அருள் உள்ளம் என்பது கடவுளால் மட்டுமே அருளப்படுவது. அருளைப் பெறுவதே மறுமை வாழ்வுக்கு சிறந்தது என்னும் உயர்ந்த நோக்கத்துடன் முருகனிடமிருந்து அருளைப் பெற்ற ஓர் அரும்புலவன் மற்றவனுக்கு அதை பெற வழி சொல்வதாக நக்கீரரால் இயற்றப்பட்டதே இந்நூலாகும்.

முருகன் மலை கடவுள் ஆவார். அவரின் அறுபடை வீட்டையும் அதன் சிறப்பையும் இந்நூல் பாடியுள்ளது. இதில் கூறப்படும் தெய்வங்கள் திருமால், பரமசிவன், இந்திரன், பிரம்மன் முதலிய தெய்வங்களை இந்நூலில் காணலாம்.

"பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறை" [1]

என்ற அடிகள் திருமாலை குறித்தும்,

"வெள்ளேறு

வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்

உமையமர்ந்து விளங்கும் இமையாமுக் கண்

மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வன்" [2]

என்னும் அடிகள் சிவபெருமானை குறித்தும்,

"நூற்றுப் பத்தடுக்கிய நாட்டத்து, நூறுபல்

வேள்வி முற்றிய, வென்றடு கொற்றத்து,

..............................................................................................................................

...... ..............................................................................." [3]

என்ற அடிகள் இந்திரன் குறித்தும்

"தாமரை பயந்த தாவின் ஊழி

நான்முக ஒருவன்" [4]

இவ்வடிகள் நான்முகன் குறித்தும்,

இன்னும், ஆதித்தர், பன்னிருவர், உருத்திரர், பதினொருவர், அஷ்டவசுகள், மருத்துவர் இருவர் ஆகிய தேவர்களும் காணப்படுகின்றனர். விநாயகர் வழிபாடு மட்டும் காணப்படவில்லை.

தமிழர்கள் முருகனை காட்டிலும், சோலையிலும், ஆற்றின் நடுவிலும் வைத்து வழிபட்டனர். கடம்ப மரம் முருக வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றது. சங்க காலத்தில் இன்று இருப்பது போல பெரும் கோவில்கள் ஏதும் காணப்படவில்லை சிறுசிறு அரங்கிலும், மரத்தடியிலுமே இறைவழிபாடு நடைபெற்றதைக் காணமுடிகிறது. ஏனெனில் அவர்கள் இறைவன் எங்குமிருப்பதாக நம்பினர். ஆகவே இயற்கையின் வடிவங்களையே தெய்வ வடிவங்களாக வழிபட்டனர். உருவ வணக்கம் தமிழ்நாட்டில் தான் தோன்றியிருக்க வேண்டும் என்பதை பழைய நாகரிகத்திலிருந்தே சொல்ல இடமுண்டு.

அந்தணர்கள் செய்த வேள்விப் பற்றியும் தெய்வங்களுக்கு மக்கள் பலியிட்டு வணங்கியமை பற்றியும், தெய்வத்திற்கு திருவிழாக்கள் எடுத்து மகிழ்ந்தது பற்றியும் இந்நூல் எடுத்துரைக்கின்றது.

**பொருநராற்றுப்படை**

உடலும் உள்ளமும் சோர்ந்த வறிய பொருநனைப் பரிசில் பெற்று வந்த மற்றொரு பொருநன் ஆற்றுப்படுத்துவது. பரிசில் வாழ்க்கை சிறப்புடையதாகக் கருதப்பட்ட பண்டைக்காலத்தில் பொருநர்கள் பரிசில் பெற தான் மட்டும் தனித்து செல்லாமற் மனைவி மக்களையும் உடன் அழைத்து செல்வர். பொருநர்கள் யாழ் இசைப்பதிலும், இன்னிசைப் பாடுவதிலும் திறனுடையவர்களாக இருந்தமையாற் பாடினி என அழைக்கப்பட்டனர்.

"வருந்து நாய் நாவின் பெருந்தகு சீறடி

அரக்கு உருக்கன்ன செந்நிலன் ஒதுங்கலின்

.......................................................................................

..................................................................................." [5]

இவ்வடிகள் பாடினி பற்றியும் அவர்கள் பரிசு பெற்ற திறன் பற்றியும் விளக்குகின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் நெசவுத்தொழில் இருந்ததை,

"நோக்கு நுழைகல்லா நுண்மைய, பூக்கனித்து

அரவுரியன்ன அறுவை" [6]

என்ற அடிகள் விளக்குகின்றன.

"கொட்டைக் கரைய பட்டுடை நல்கி" [7]

என்ற அடிகள் அக்கால தமிழர் அழகிய பட்டாடைகளை நெய்து உடுத்தியிருந்த செய்தியை உறுதிபடுத்துகின்றது.

செல்வ வளம் செழித்திருந்த தமிழகத்தில் மற்றொரு புறம் வறியவர்களும் வாழ்ந்திருந்த நிலையை அறியமுடிகின்றது. விருந்தோம்பல் பெரும் பண்பாக காணப்பட்டது மதுவிலக்கும், புலால் மறுத்தலும் பழங்காலத்தில் இல்லை. சங்க இலக்கியங்களில் இவை இரண்டும் மணம் வீசி கிடந்ததை காணமுடிகின்றது.

"இழையணி வனப்பின் இன்னகை மகளிர்,

போக்கு இல் பொலங்கலம் நிறையப், பல்கால்

வாக்குபு தரத்தர, வருத்தம் வீட

ஆர உண்டு பேரஞர் போக்கிச்

செருக்கொடு நின்ற காலை" [8]

என்ற அடிகள் மூலம் மது பெற்றிருந்த இடத்தை அறியமுடிகிறது. பண்டைத் தமிழரின் நாகரிகம் பலவற்றை இந்நூலின் வழி அறிய முடிகின்றது. உழவுத்தொழில் மிகச் சிறந்த முறையிலே நடைபெற்று வந்தது. சோழநாட்டின் சிறப்பை எடுத்துக்காட்டுவதே இந்நூலின் நோக்கம்.

**சிறுபாணாற்றுப்படை**

சங்ககாலத்தில் ஈகை குணம் சிறக்கப் பெற்ற ஏழு வள்ளல்களின் பெருமை பற்றி இந்நூல் வழி அறிய முடிகின்றது. ஒய்மானாட்டு நல்லியக்கோடன் புகழ் பாடிப் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் தன் எதிர்பட்ட இன்னொரு பாணனிடம் நல்லியக் கோடனின் நாட்டின் வளத்தையும் செல்வச் செழிப்பையும் எடுத்துக் கூறுவாக இந்நூல் அமையப் பெறுகிறது. நல்லியக்கோடனின் புகழை நத்ததனார் சிறப்புற பாடிய செய்யுள். நல்லியக்கோடனிடம் பரிசுபெற்ற பாணன் ஒருவன் பாலைநிலத்தின் வழியே வந்துகொண்டிருந்தான். வரும் வழியிலே மற்றொருப் பாணனைப் பார்த்தான், அவனிடம் நல்லியக்கோடனின் புகழை சொல்லி அவனிடம் ஆற்றுப்படுத்தினான்.

நல்லியக்கோடனுடைய நாடு சேரநாட்டைக் காட்டினும் செல்வம் நிறைந்தது, பாண்டி நாட்டைக் காட்டிலும் பல்வகை வளங்கள் கொழிப்பது, சோழ நாட்டைக் காட்டிலும் செழிப்புடையது. அவன் நாட்டு மக்களும் விருந்து ஓம்பி அறச்செயலில் ஈடுபட்டனர். கடையேழு வள்ளல்களின் சிறப்பும் பாடப்பட்டுள்ளது. நல்லியக்கோடனின் பெருமையை இந்நூல் பறைசாற்றுகிறது. நல்லியக்கோடன் தன்னைப் புகழ்ந்து பாடும் பொருநர்க்கும், புலவர்க்கும் அருமறை பயின்ற அந்தணர்களுக்கும் எப்பொழுதும் காட்சி தருவான். அவர்கள் வேண்டுவனவற்றை விருப்புடன் கொடுப்பான். இமயம் போன்ற அவனுடைய உயர்ந்த மாளிகையின் கதவு இரவலர்களுக்காக எப்பொழுதும் திறந்தேயிருக்கும். இதனை,

"பொருநரக்காயினும் புலவர்க்காயினும்

அருமறை நாவின் அந்தணர்க்காயினும்

கடவுள்மால் வரை கண்விடுத்தன்ன

அடையா வாயிலவன்" [9]

என்ற அடிகளால் அறியலாம்.

இவன் அறிஞர்களைக் கண்ட போது அன்புடன் கை குவித்து வணங்குவான். இதனை,

"முதுவோர்க்கு முகிழ்ந்த கையினை" [10]

என்பர். இவன் உழவர்க்கு ஒரு துன்பமும் உண்டாகாமல் காத்து வந்தான். அவர்கள் வறுமையால் வாடாமல் மனமகிழ்ச்சியுடன் வாழ்ந்தால் தான் உணவுப் பொருள் உற்பத்தி குறையாது, என்ற உண்மையை உணர்ந்திருந்தான். இதனை,

"ஏரோர்க்கு நிழன்ற கோலினை" [11]

உழவர்க்கு நன்மையைச் செய்யும் செங்கோலையுடையவன் நீ என்றதனால் அறியலாம்.

இந்நூலாசிரியர் காலத்தில் தமிழ்நாட்டில் சிவன் கோயில்கள் இருந்தன. தமிழ்நாட்டிலே நான்மறை பயின்ற அந்தணர்கள் வாழ்ந்தார்கள், அவர்கள் நிலப்பிரபுக்களின் ஆதவிலும் வாழ்ந்தனர்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வகைப் பிரிவுகள் தமிழ்நாட்டில் இருந்ததை பதிவு செய்துள்ளார். தமிழ்நாட்டிலே பல சிறந்த தொழில்களும், கலைகளும் வளர்ந்திருந்தன. இவை போன்ற இன்னும் பல உண்மைகள் இந்நூலில் காணப்படுகிறது.

**பெரும்பாணற்றுப்படை**

பத்துப்பாட்டுள் நான்காவது பாட்டு 500 அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் ஆகியது. சிறுபாணாற்றுப்படையைக் காட்டிலும் இது பெரியது, பாணரை ஆற்றுப்படுத்தியது என்பது பொருள். பெரும்பாணரை அதாவது பெரிய யாழ் வாசிக்கும் பாணரை ஆற்றுப்படுத்துதல் என்று கூறுவது பொருந்தும். இதன் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணார்.

ஆசிரியர் பொதுமக்களுடன் நன்றாகக் கலந்து பழகியவர். அவர்களுடைய வாழ்க்கை நிலையைத் தேர்ந்து தெளிந்தவர். ஐவகை நிலமக்கள் பற்றியும், அவர்களின் தொழில்கள் பற்றியும், உணவு வகைகள் பற்றியும் படம் பிடித்தது போல் பாடியுள்ளார்.

வறுமையால் வாடிய பாணன் ஒருவன் காஞ்சிக்கு சென்றான். இளந்திரையனைப் புகழ்ந்து பாடினான் அவனிடம் பரிசில் பெற்றான், வறுமை நீக்கினான். அவன் தனது ஊருக்குப் போய்க் கொண்டிருக்கும் வழியிலே வறுமையால் வருந்தி வள்ளல்களைத் தேடிச்செல்லும் மற்றொரு பாணனைப் பார்த்தான், அவனுடைய ஏழ்மை நிலைக்கு இரங்கினான். உடனே அவனிடம் அணுகி, அவனுடைய வறுமை யொழிந்து வாழ்வு பெற வழி கூறினான்.

எயிற்றியர் உணவு, எயினர் உணவு, உழவர் உணவு, ஆயர் உணவு, செல்வர் உணவு, பார்ப்பார் உணவு, வேளாளர் உணவு என தமிழக மக்களின் உணவு வகைகளை உலகிற்கு பறை சாற்றியவர்.

"நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்,
பார்வை யாத்த பறைதாள் விளவின்
..............................................................................................................
.........................................................................................................." [12]

இவ்வடிகளால் தனித்திருக்கும் வேடப் பெண்களின் உணவைக் காணலாம்.

புல்லரிசியும், உப்புக் கண்டமுமே அவர்களுக்கு எப்பொழுதும் கிடைக்கும் உணவு என்று அறியலாம்.

"நெடுங்குரல் பூளைப்பூவின் அன்ன

குறுந்தாள் வரகின் குறள விழச் சொன்றி,
புகர் இணர் வேங்கை வீகண்டன்ன
அவரை வான் புழுக்கட்டிப் பயில்வுற்று,
இன்சுவை மூரல் பெறுகுவிர்” [13]

ஏழை உழவர்களின் இயற்கையான உணவு இது தான் என்பதை இவ்வரிகள் காட்டுகின்றன. மற்ற நிலத்து மக்களைக் காட்டிலும் நீர் வளத்திலும் நில வளத்திலும் செழித்திருந்த மருத நிலத்து மக்கள் உயர்தரமான வாழ்க்கையை நடத்தினர் சிறந்த உணவினை உண்டனர். அக்காலத்து பார்ப்பன மக்கள் எல்லோருடனும் இனிதுகூடிப் பழகினர். வகுப்பு வேற்றுமை பாராட்டவில்லை. தமது இல்லத்துக்கு யார் வந்தாலும் அவர்களை வரவேற்று உணவிடும் உத்தமர்களாயிருந்தனர்.

தமிழகத்திலே தச்சுத்தொழில், இரும்புத்தொழில், உழவுத்தொழில், நாடகம் இசை போன்ற கலைகள் வளர்ந்திருந்தன. அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் உழவர், வலையர், வேடர், பாணர் போன்ற பல பிரிவுகள் தமிழ் மக்களுக்குள்ளே இருந்தன. இருப்பினும் அவர்கள் பிறப்பிலே உயர்வு தாழ்வுகள் பாராட்டிக் கொள்ளவில்லை. உள்ளவர்கள் இல்லாதவர்கள் என்ற வேற்றுமை பண்டை தமிழகத்தில் இருந்தது.

அரிய செய்திகள் பலவற்றை இந்தப் பெரும்பாணாற்றுப்படையில் காண முடிகிறது. தமிழரின் நாகரிகத்தையும், வரலாற்றையும் காண இப்பாட்டுப் பெருந்துணை செய்யும். பத்துப்பாட்டுள் இது ஒரு சிறந்த பாட்டு எனவே கூறலாம்.

**கூத்தராற்றுப்படை**

இந்நூலுக்கு மலைபடு கடாம் என்று மற்றொரு பெயரும் உண்டு. மற்ற ஆற்றுப்படை நூல்கள் எந்த முறையில் பாடப்பட்டுள்ளனவோ அந்த முறையிலே இந்நூலும் அமைந்திருக்கின்றது. இந்நூலாசிரியர் கௌசிகனார் ஆவார். இவர் சிறந்த புலவர். காடு, மலை, முதலியவைகளின் இயற்கை வளங்களை அறிந்தவர். அவ்விடங்களில் எல்லாம் சுற்றித் திரிந்து அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண் கூடாகக் கண்டறிந்தவர் இவ்வுண்மையை இவர் பாடிய நூல் வழி அறிய முடிகிறது.

கூத்தராற்றுபடையின் பாட்டுடை தலைவன் நன்னன், இவன் வேளிர் குல தலைவன், சிறந்த வீரன், கொடை வள்ளல், விருந்தினர்க்கும் இரவலர்க்கும் வேண்டுவன கொடுக்கும் இயல்புடையவன், இவனைப் போலவே இவனுடைய முன்னோர்களும் வீரர்களாகவும் கொடைவள்ளல்களாகவும் வாழ்ந்திருந்தனர். இப்பாடலில் ஒரு கூத்தன் நன்னனிடம் போய் பரிசு பெற்று வருகிறான். அவன் வரும் வழியில் பரிசு கொடுப்போரைத் தேடிச் செல்லும் மற்றொரு கூத்தனை பார்த்து அவனும் பரிசு பெறும் நோக்கில் அவனையும் அவனது சுற்றத்தையும் நன்னனிடம் பரிசில் பெற ஆற்றுப்படுத்துதல்.

நன்னனிடம் கூத்தனை ஆற்றுப்படுத்திய மற்றொரு பாணன் நன்னனை

அடைய அவன் செல்ல வேண்டிய வழிகளின் தன்மைகளை எடுத்துக் கூறுகிறான். அப்போது வழியில் காணப்படக்கூடிய இயற்கை வளங்களையும், நடந்து போவதில் உள்ள இடையூறுகளையும், மலையிலே தங்கி செல்ல வேண்டிய இடங்கள், மலைவாழ் மக்களின் வாழ்க்கை அவர்கள் நன்னனைத் தேடிச் செல்வோர்க்குத் தரும் உணவுகள் முதலியவற்றைக் கூறுகிறார். மலையில் கேட்கும் ஓசைகளின் சிறப்பை அழகுற இந்நூலில் ஆசிரியர் கூறியுள்ளார்.

இந்நூலில் குறிஞ்சி நில மக்களான கானவர்களின் வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டியுள்ளார் புலவர்.

“மணஇல் கமழும் மாமலைச் சாரல்
தேனினர் கிழங்கினர் ஊனார் வட்டியர்,
சிறுகண் பன்றிப் பழுதுளிப் போக்கிப்,

பொருதுதொலை யானைக் கோடுசீராகத்
தூவொடு மலிந்த காய கானவர்" [14]

கானவர்கள் இயற்கையாகக் கிடைக்கும் தேனையும் கிழங்கையும் உண்டனர். தங்கள் முயற்சியாற் பெற்ற பன்றிக் கறியையும், வேறுபல மாமிசங்களையும் உண்டு வாழ்ந்தனர்.

தமிழர்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே விருந்தினரை உபசரிக்காமல் விட மாட்டார்கள். தாம் உண்ணும் உணவு எதுவாயினும் அதை விருந்தினர்க்கும் கொடுத்து தாமும் உண்டு மகிழ்வர். தமிழ்நாட்டில் வாழ்ந்த மக்கள் எல்லோரிடத்திலும் இக்குணம் உண்டு. இது தமிழர்களின் பரம்பரைக் குணம். தமிழர்களின் பண்பாட்டை

"வேறுபுலம் படர்ந்த ஏறுடையினத்த,
வளைஆன் தீம்பால், மிளைசூல் கோவலர்
வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின்
பலம் பெறுநசையொடு பதிவயின்தீர்ந்தநும்
புலம்புசேண் அகலப், புதுவீர் ஆகுவிர்" [15]

இவ்வடிகள் ஆயர்களின் அன்பான விருந்தோம்பலை விளக்குகின்றன. சிற்றூர்களிலே வாழும் மக்கள், ஆயர்கள், மருத நிலத்திலே வாழும் மக்கள், உழவர்கள் ஆகியோர் வாழ்க்கையையும், அவர்களுடைய விருந்தோம்பும் சிறப்பையும் குறிக்கின்றன. தமிழ் மக்கள் விருந்தோம்பும் பண்பாட்டிலே சிறந்தவர்கள் என்பதற்கு இவைகளே சான்றாம்.

பழந்தமிழர்களிடம் குடிகொண்டிருந்த பழக்கவழக்கங்களை இந்நூலிலே காணலாம். நாகப்பாம்பினை தெய்வமாக வழங்கும் பழக்கம் இருந்தமையைக் காணமுடிகிறது. பறவைகள் சகுனம் பார்ப்பதைக் காணமுடிகிறது. மண்பாண்ட தொழில் மிகுந்திருந்ததைக் காணமுடிகிறது. உலோகங்களை உருக்கிப் பாத்திரங்கள் செய்யும் தொழில் வளர்ந்திருத்தது. தேவர்கள் அமுதம் வேண்டிக் கடல்கடைந்தது, பரமசிவன் நஞ்சுண்டது, ஆகிய வரலாறுகள் தமிழ்நாட்டிலே வழங்கியிருந்தன. இவை போன்ற இன்னும் பல செய்திகளையும் பழந்தமிழர் நாகரிகத்தையும் இந்த மலைபடுகடாம் நமக்குக் கூறுகின்றது.

**முடிவுரை**

ஆற்றுப்படைநூல்களின் கட்டமைப்பையும் பாடுபொருளையும் காணும் பொழுது நமது பண்டைத் தமிழர்களின் உயரிய நாகரிகமும் பண்பாட்டினையும் காணமுடிகிறது. நமது பழைய நாகரிகம், உயர்ந்ததாயினும் சரி, தாழ்ந்ததாயினும் சரி அதனை அப்படியே நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நமது பழைய வரலாறு நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக நிற்காது. ஆகவே ஆற்றுப்படை நூல்கள் தமிழர்களின் வாழ்வியல் ஒழுக்கலாறுகளை உலகிற்கு படம் பிடித்து காட்டுகிறது. இன்றைய உலகில் எவ்வளவு பொருள் சேர்ப்பினும் தன்நிறைவு பெறாமல் மேன்மேலும் பொருள் தேட விழைகின்றனர், ஆனால் அன்றைய பாணர்களோ கூத்தர்களோ தமக்கு கிடைத்த பொருள் மற்றோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் ஆற்றுப்படுத்தினர். வறுமையுற்ற போதும் கூட பிறரோடு பகிர்ந்து உண்ணும் பண்பை கொண்டிருந்தனர். இத்தகைய தலையாய நூல்களை ஆய்ந்தால் பழந்தமிழரின் ஆற்றல்சால் பண்பை உலகறியச் செய்ய இயலும்.

**சான்றெண் விளக்கம்**

1. திருமுருகாற்றுப்படை – 150
2. திருமுருகாற்றுப்படை – 151 – 154
3. திருமுருகாற்றுப்படை – 155 - 159
4. திருமுருகாற்றுப்படை – 164 - 165
5. பொருநராற்றுப்படை - 42 - 52
6. பொருநராற்றுப்படை - 82 – 83
7. பொருநராற்றுப்படை - 155
8. பொருநராற்றுப்படை - 85 – 89
9. சிறுபாணற்றுப்படை - 203 – 205
10. சிறுபாணற்றுப்படை - 231
11. சிறுபாணற்றுப்படை - 233
12. பெரும்பாணாற்றுப்படை – 94 – 100
13. பெரும்பாணாற்றுப்படை – 192 -196
14. கூத்தராற்றுப்படை – 151 – 155
15. கூத்தராற்றுப்படை – 408 - 412

**துணை நூற்பட்டியல்**


1. திருமுருகாற்றுப்படை - கதிர் முருகு – சாரதா பதிப்பகம் சென்னை 2012 - மூன்றாம் பதிப்பு
2. பொருநராற்றுப்படை கதிர் முருகு - சாரதா பதிப்பகம் சென்னை 2014 - இரண்டாம் பதிப்பு
3. சிறுபாணாற்றுப்படை - கதிர் முருகு - சாரதா பதிப்பகம் சென்னை 2015 - நான்காம் பதிப்பு
4. பெரும்பாணாற்றுப்படை - கதிர் முருகு- சாரதா பதிப்பகம் சென்னை 2012 - மூன்றாம் பதிப்பு
5. கூத்தராற்றுப்படை - கதிர் முருகு - சாரதா பதிப்பகம் சென்னை 2011 - முதல் பதிப்பு
6. பத்துபாட்டில் பண்டைய தமிழகம் – சாமி.சிதம்பரனார் – மல்லிகா பதிப்பகம், ஆலந்தூர், சென்னை – 2006 – முதற் பதிப்பு
7. பத்துப்பாட்டு ஆராய்ச்சி – மா.இராசமாணிக்கனார் – சாகித்திய அகாதெமி சென்னை – 2012 – முதற் பதிப்பு



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Sathyavathi V., (2021) Structure and Meaning in the books of Attrupadai, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:331-338. Cauvery College For Women, Trichy.

**முனைவர். மே.க. வசந்தி**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி

# திருக்குறளில் மருத்துவம்

**ஆய்வுச்சுருக்கம்**

உலகப் பொதுமறையான திருக்குறள் எக்காலங்களுக்கும் எந்நிலைக்கும் பயன்படும் ஒரு அற்புத நூலாகும். மனித வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கும். திருக்குறள் என்ற பகுத்து அதிகாரத்தில் அய்யன் திருவள்ளுவர் மருத்தவம் பற்றி பத்து பாடல்களை எழுதியுள்ளார். இது மருத்துவ பெட்டகம் நிறைந்த அதிகாரமாகும்.

**முன்னுரை**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் நீதிநூல்களாக அமைந்தன. கொல்லாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, காமம் இன்மை, கள்ளாமை எனும் பஞ்சீலக் கொள்கைகளை இவ்விலக்கியங்கள் உணர்த்தின. அக்காலப் புலவர்கள் மருத்துவர்களாகவும் இருந்ததால் உடல்நோயை, உள்ள நோயை நீக்குவதற்கு இலக்கியத்தையே மருந்தாகக் கருதினார். பரத்தமை ஒழுக்கம், கள் அருந்துதல், அளவுக்கதியமாய் உணவு அருந்துதல் போன்றவற்றை நோய்க்கான காரணிகளாகக் கண்டறிந்தனர்.

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

மருத்துவர் கூறும் வாதம், பித்தம், கபம் மூன்றும் கூடினாலும் குறைந்தாலும் நோய் தரும்.

"ஊனப்பா உடலாச்சு உயீரு மாச்சு
உயிர் போனாற் பிணியாச்சு உயிர்போ முன்னே
பூணப்பா வாத பித்த சேத்து மத்தாற்
பூண்டெடுத்த தேக வளம் புகலுவேனே"

என்று நாடி நூல்கள் கூறுவதை இலக்கியமாகத் தமிழில் தந்தனர். பஞ்சபூதங்களில் வாயுவின் கூறாக வாதமும், தேயுவின் கூறாகப் பித்தமும், அப்புவின் கூறாகக் கபமும் வருவதாகக் கூறிய முனிவர்கள் நோய் நீக்கும் மருந்துப் பெயர்களைச் சிறுபஞ்ச மூலம், ஏலாதி, திரிகடுகம் என்று பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுக்கு வைத்தனர்.

**திருக்குறள் கூறும் மருத்துவக் குறிப்புகள்**

"நல்ல மருத்துவம் என்பது நோயை நீக்குவது அன்று. நோயே வராமல் தடுப்பது" என்ற கருத்து திருவள்ளுவரின் மருத்துவச் சிந்தனையாக உள்ளது.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

இக்குறளின் கருத்தாவது தான் முன்பு உண்ட உணவு செரித்து விட்டது என்பதை அறிந்து அடுத்த வேளை உண்பவருக்கு மருந்து என்ற ஒன்று தேவையில்லை என்பதாகும்.

உடலை கெடுக்கும் உணவுகளை, உடலுக்கு ஒவ்வாத உணவுகளை உண்ணக் கூடாது. இன்று நவீன உலகத்தில் கிடைக்கும் பரோட்டா, பீசா, பர்கர், பிராய்லர் கோழி

போன்ற உணவுகள் நம் உடல் நலத்திற்கு பெரிதும் கேடு விளைவிக்கக்கூடியது. நம் மூதாதையர்கள் பின்பற்றிய கீரைகள் பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை நாம் உணவில் அதிக அளவில் சேர்த்துக் கொள்வது நலம் பயக்கும்.

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு

பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு"

செரித்தால் செரிமானம் பார்த்து உண்க. அதுவே உடல் பெற்றவன் நீண்டநாள் வாழும் நெறியாகும். அனைத்து நோய்களின் பிறப்பிடம் தவறான உணவுப் பழக்கவழக்கமே என்பது வள்ளுவரின் கருத்தாகும். உணவே மருந்து எனும் கொள்கை உடையவர்களாகத் தமிழர்கள் இருந்தனர். சமையல் அறையில் உள்ள அஞ்சறைப்பெட்டி மருத்துவரின் நோய் தீர்க்கும் பெட்டியாகத் தமிழர்கள் கருதினர்.

"பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டில் உண்ணலாம்"

என்பது நம் முன்னோர்கள் வாக்கு.

மிளகு,சீரகம், மஞ்சள், இஞ்சி, பூண்டு, இவற்றை நம் உணவில் சேர்த்த முன்னோர்கள் உணவே மருந்து என்ற கொள்கையை கடைபிடித்தனர்.

"தீயளவு அன்றித் தெரியான் பெரிதுண்ணின்

நோயளவு இன்றிப் படும்"

பசியளவு தெரியாமல் மிகுதியாக உண்டால் நோய் அளவில்லாமல் ஆகும். உடல்நிலை சரியில்லாத நேரத்தில், செரிமானம் இல்லாத நேரத்தில் அதிகமாக உண்டால் நோய் பெருகும் என்கிறார் திருவள்ளுவர். அண்டத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம் என்று வாழ்ந்த சித்தர்கள் உடல்நலம் பேணினால்தான் உள்ள நலம் பேணமுடியும் என்றனர். திருமூலர் அவர்கள்,

"உயிரை வளர்க்கும் உபாயம் அறிந்தே

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்றார்.

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல

துய்க்கு துவரப் பசித்து"

முன்பு உண்ட உணவு செரித்ததை அறிந்து மாறுபாடில்லாத உணவைப் பசித்த பிறகே உண்ண வேண்டும்.

"பசித்துப் புசி என்பது சான்றோர் வாக்கு"

பசித்த பின்பே உணவருந்த வேண்டும். பசி இல்லாமல் உண்பது அஜீரணத்துக்கு வழி வகுக்கும். அஜீரணத்தால் உடல் இயக்கம் தடைபடும். இது பல நோய்கள் உருவாக காரணமாகிறது.

குழந்தைக்கு மாந்தம் ஏற்பட்டால்,

"சீர்சிறந்த மாசிக்காய் திப்பிலி கோரோசனமும்

கார்சிறந்த கோட்டம் கருஞ்சீரகம் – பேர் சிறந்த

அக்கார காரம் அரைத்துமுலைப் பாலிலிட

இலக்கணமே தீரும் இது"

என்று குணபாட நூல் கூறுகிறது.

"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணிண்

ஊறுபாடு இல்லை உயிர்க்கு"

ஒத்துக் கொள்வதையும் அளவாக உண்டால் உயிர்க்கு எந்த நோயும் இல்லை. மூன்று வேலை கண்டிப்பாக சாப்பிட்டே ஆக வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் பலர். வயிறு செரிமானமாகாமல் இருந்தால் அடுத்த வேளை உணவை தவிர்த்து விடலாம். அதிலும் இரவு உணவு உண்பதில் எச்சரிக்கை வேண்டும். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இரவு உணவில் மாமிசத்தைத் தவிர்ப்பது நல்லது.

"மறுப்ப துடல்நோய மருந்தென லாகும்
மறுப்ப துளநோய் மருந்தெனச் சாலும்
மறுப்ப தினிநோய் வாரா திருக்க
மறுப்ப சாலையு மருந்தென லாமே"

என்று திருமூலர் கூறுகிறார்.

உலக மக்கள் இருவகை எண்ணம் கொண்டவர்கள். உயிர் வாழ்வதற்காக உண்பவர்கள், உண்பதற்காகவே உயிர் வாழ்பவர்கள் என்று கூறுவர். இதில் இரண்டாம் வகையினர்.

**சாப்பாட்டுப் பிரியர்கள்**

தினமும் விருந்தும் கேளிக்கையுமாக உள்ளவர்கள் தங்கள் வாழ்வை அவர்களே குறுக்கிக் கொள்கிறார்கள்.

"தணியாத நோயுந் தணியப் புரியும்
மணிமந்திர வவிழ்த மார்க்கப் பிணியை
உசாவி பசியற்றும் அறிவுள்ளவரைக் கண்டால்
மசாவும் பயப்படு மம்மா"

என்று கூறுகிறார்.

உடலுக்கு ஏற்றபடி உணவைக் குறைத்து வாழ்வதைக் திருவள்ளுவர், நோய் வராமல் தடுக்கும் முறையாகக் கருதுகிறார்.

"இழிவறிந்து உண்டான்கண் இன்பம்போல் நிற்கும் குறைந்த அளவு உண்பவனிடத்தில் இன்பம் நிலைத்து நிற்கும். அளவுக்கு அதிகமாக உண்பவனிடத்தில் நோய் நிற்கும்.

உணவு உன்பதில் ஒரு வரைமுறை வேண்டும். ஒரு கட்டுப்பாடு வேண்டும். கால இடைவெளி வேண்டும்.

"ஒரு வேளை உண்பான் யோகி
இரு வேளை உண்பான் போகி
முப் போதும் உண்பான் ரோகி
எப் போதும் உண்பான் துரோகி"

இப்பாடலில் உணவு உண்ணும் முறை பற்றி தெளிவாக விளக்குகிறார். உடல் தீயை 1.சமாக்கினி, 2. விஷமாக்கினி, 3. தீஷணாக்கினி, 4. மந்தாக்கினி என்ற சித்த மருத்துவம் நான்கு வகையாகப் பிரிக்கிறது.

**சமாக்கினி**

ஒருவன் வேண்டும் அளவு உட்கொள்ளுகின்ற உணவு, நீர் எல்லாம் முறைப்படி கால அளவுக்கு மாறுபடாமல் சான்றாகச் சீரணிக்கச் செய்யும் தீயே சமாக்கினி எனப்படும்.

**விஷமாக்கினி**

இது உண்ட உணவை உடனே சீரணிக்காமல் நெடுநேரம் கழித்துச் செரிக்கச் செய்யும். அப்படிச் செரித்தாலும் அவை விஷமச் சீரணமாகும்.

**தீஷ்ணாக்கினி**

வெந்ததும் வேகாததுமான உணவுப் பொருட்களைப் புசித்தாலும் அதனை இரசத்தோடும் (காரம்) கூடவே செரிக்கப்படும்.

**மந்தாக்கினி**

விருப்பத்தோடு உண்ட உணவுப் பொருள்கள் உடனே செரிக்காமல் வாயுவால் வயிற்றிரைச்சல், குடலிரைச்சல், வயிறுப்புசம், உடல் களைத்தல் என்னும் தீமைகளை உண்டாக்கி நெடுநேரத்திற்குப் பிறகுச் செரிவிக்கும்.

(சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு பாகம் – 1) என்ற நூல் குறிப்பிடுகிறது.

இந்நான்கு தீயும் உணவினால் உண்டாகிறது என்பதால் திருவள்ளுவர் நோய் நீக்குதலை மருந்து என்ற அதிகாரத்தில் உணவுக் கட்டுப்பாட்டில் வைக்கச் சொல்கிறார். நோய்க்கக் காரணம் வாய் என உரைக்கும் திருவள்ளுவர் நோயை நீக்குவதை விட நோய் விடும் காரணத்தைக் கண்டறிந்து நீக்குதல் மேலானது என்கிறார்.

"தீயளவு அன்றித் தெரியான் பெரிதுண்ணின்

நோயளவு இன்றிப் படும்"

பசியளவு தெரியாமல் மிகுதியாக உண்டால் நோய் அளவில்லாமல் வரும்.

"நோய்நாடி நோய் முதனாடி அதுதனிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்"

தலைவலி வந்தால் தலைவலிக்கு மருந்து தராமல் தலைவலி உருவாகும் காரணத்திற்கு மருந்து தர வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

அடிக்கடி உணவு உண்பவன் தனக்குத் தானே துரோகம் செய்து கொள்கிறான். எப்போதும் உண்டு,கொண்டே இருந்தான் வயிறு ஒரு அரவை இயந்திர மாகிப் போகிறது. வயிற்றுக்கு ஓய்வில்லாமல் போகிறது. இது வயிற்றில் சுரக்க வேண்டிய சுரப்பி நீர்களை அதிகமாகவோ குறைவாகவோ நேரம் கெட்ட நேரத்தில் சுரக்க வைக்கிறது.

"உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்

கற்றான் கருதிச் செயல்"

நோயாளியின் நிலையையும், நோயின் நிலையையும், காலத்தையும் மருத்துவன் அறிந்து செய்ய வேண்டும்.

**முடிவுரை**

வள்ளுவம் வாழ்க்கை நெறி, வள்ளுவர் உளவியல் அறிந்த மாமருத்துவர்

"புல்லும் மரனும் ஓரறிவினமே

பிறப்ப உளவே அக்கிளைப் பிறப்பே"

என்ற மனிதர்களுக்கும் பிற உயிர்களுக்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் முதல் திருவள்ளுவர் வரை அனைவரும் உடல் உளநோய் தீர்க்கும் சித்தர்களே.

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான்என்று

அப்பால்நாற் கூற்றே மருந்து"

நோயாளி, மருத்துவன், மருந்து, துணையாளி என்ற நான்கும் மருத்துவத்தின் கூறுகளாகும்.

உணவைக் கட்டுப்படுத்துதலே உண்மையான நோய்க் கட்டுப்பாடு என்ற வள்ளுவரின் கூற்றே மருத்துவர்களின் கூற்றாகும்.

**குறிப்பு நூல்கள்**


1. குணபாடம்(பொருட் பண்பு நூல்), வைத்திய இரத்தினம், க.ச முருகேசி முதலியார், இந்திய மருத்துவம், ஓமியோட்சித்துறை, சென்னை 600 106.
2. குணபாடம், தாது சீவ வகுப்பு, டாக்டர், ஆர். தியாகராஜன், இந்திய மருத்துவம், ஹோமியோட்சித்துறை, சென்னை
3. சித்த வைத்தியத் திரட்டு, மரு.க.நா குப்புசாமி முதலியார், மரு.க.சு உத்தமராயன் இந்திய மருத்துவம், ஹோமியோட்சித்துறை, சென்னை
4. திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Vasanthi M. K., (2021) Medicine in Thirukkural, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:339-343. Cauvery College For Women, Trichy.

**குறள்.கோ.பங்கயம்**
பட்டதாரிஆசிரியை, (தமிழ்)
அரசுஉயர்நிலைப்பள்ளி,
கத்தேரி, 638183
சங்ககிரிவட்டம்,
சேலம் மாவட்டம்.

# பொருட்பாலில் திருவள்ளுவரின் பன்முகத்தன்மை

**ஆய்வுச்சுருக்கம்**

உலகமக்களுக்கு பொதுவான அறநெறிக் கருத்துக்களை அளித்துள்ள தெய்வப்பெருமான் என்று அழைக்கப்படும் திருவள்ளவரின் உலகப்பொதுமறையாம் திருக்குறள் என்னும் அறநூல் மிகவும் புகழ்வாய்ந்தது. இவ்வாற தமிழ் இலக்கியங்களில் ஒரு அறநெறிக் கருத்தை பத்துவிதமாகக் கூறிய ஓரே தமிழர் திருவள்ளுவர் ஆவார். ஆகவே பொருட்பாலில் திருவள்ளுவரின் பன்முகத்தன்மையை இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

‘**திரைகடலோடியும் திரவியம் தேடு**’

என்றஔவையாரின் ‘கொன்றைவேந்தன்’ பாடல் வரிக்கேற்ப, இவ்வுலகவாழ்க்கைக்கும் பொருள் மிக அவசியமாதலால், அப்பொருளை அலைகடல் தாண்டிச் சென்றாவது ஈட்ட வேண்டும். அதையும் நல்வழியில் ஈட்டவேண்டும் என்பதை,

**‘அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**

**தீதின்றிவந்தபொருள்’**

**-குறள் எண்.754**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க தெளிவுகிடைக்கின்றது. சேர்க்கும் திறம் அறிந்துதீமை ஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும்: இன்பத்தையும் கொடுக்கும் ஆகவே, தன் வாழ்நாளில் இறுதிவரை, ஒருவன் ஒழுக்கம் முதலானஅறச் செயல்களில் ஈடுபட்டு, நல்வழியில் பொருளீட்டி,செல்வத்தைப் பெருக்கி, காமததுப்பாலில் கூறப்பட்டுள்ளவற்றை அனுபவித்து, இல்லறவாழ்வில் மனைவிமூலம் நன்மைகளைப் பெற்றுவாழ்வாங்கு வாழவழிவகுத்துக் கொண்டு இன்பமாக வாழ்வோமாக! இவ்வாய்வின் அடிப்படையி;ல் பொருட்பாலில் திருவள்ளுவரின் பன்முகத் தன்மை குறித்துவிரிவாகக் காணலாம்.

**அறிமுகவுரை:**

திருவள்ளுவ பெருமான், முதல் பாலான அறத்துப்பாலுக்கும் பிறகு பொருளீட்டலின் உள்ளார்ந்த கருத்துகளை மக்கள் மனதிற்கு ஊட்ட “பொருட்பாலை ” வைத்துப் பாடியுள்ளார். சிறப்புவாய்ந்த பொருட்பாலில் 70 அதிகாரங்களில் 700 குறட்பாக்களைத் தந்துள்ளார். அவைமுறையே39 இறைமாட்சியாகிய அரசாட்சியின் சிறப்பு முதல் கல்வி, பெரியாரைத் துணைகோடல், செங்கோன்மை, ஊக்கமுடைமை, வினைசெயல்வகை, அவையறிதல், பொருள் செயல்வகை, நட்பு, பகைத்திறம் தெரிதல், கள்ளுண்ணாமை, சூது ,குடிமை ,பண்புடைமை உழவு, இரவச்சம் ,108,கயமைவரை பொருளீட்டுதலும், இடையில் ஏற்படும் இடையூறுகளும் அவற்றைக்களையும் முறைகளையும் பற்றியும் மிக அழமான சிந்தனைகளுடன் வள்ளுவர் அமைந்துள்ள விதத்தைஎன்ன வென்றுரைப்பது?

**ஆய்விற்கானதரவுகள்:**

பொருட்பாலில்திருவள்ளுவரின்சிந்தனைகளைஆராய்ந்துநோக்குங்கால்,பன் முகத்தன்மைகொண்டுவிளங்குவதாகஉள்ளது. பன்முகத் தன்மைகளை உலகிற்கு நவரத்தினமணிகளாகச் சூட்டுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

**1.அறிவின் திறவுகோலாக!**

**2.தீவினை நீக்குவதாக!**

**3.நற்பண்புப் பெட்டகமாக!**

**4.நட்பின் கருவூலமாக!**

**5.உழவைப் போற்றுவதாக!**

**6.வறுமையை ஒழிப்பதாக!**

**7.வினையூக்கியாக!**

**8.பொருட்சிறப்பின் சான்றாக!**

**9.தொலைநோக்குப் பார்வையாக!**

**1.அறிவின் திறவுகோலாக!**

**'அறிவேதுணை'**

**'தொட்டனைத்துஊறும் மணற்கேணிமாந்தருக்குக்**

**கற்றனைத்துஊறும்அறிவு'**

**-குறள் எண்.396**

தோண்டும் அளவுக்குமணல் ஊற்றில் நீர் பெருகுவதுபோலமக்கள் தொடர்ந்துபடிக்கும் அளவுக்குஏற்றவாறுஅறிவுபெருகும். மக்கள் தாங்கள் வாழும் காலச் சூழலுக்குக்கேற்ப,

**'எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

**கண்என்பவாழும் உயிர்க்கு'**

**-குறள் எண்.392**

என்றுபயன் தரும் கணக்குமுதலானஅறிவியல் நூல்களும், இலக்கண இலக்கிய நூல்களும்,எண்ணும் எழுந்தும் என்றுசான்றோரால் போற்றப்படக் கூடியவைகளைக் கற்றுத் தேர்ந்து 'அறிவுக்கண்" பெற்றவர்களாகவாழ்தல் சிறப்புஎன்றுவள்ளவபெருமான் பொருட்பாலில் கல்விபெறுதல்,கல்லாமையினதீங்கு,அறிவுடைமை,தெரிந்துதெளிதல், அவையறிதல்,அவையஞ்சாமை,சான்றாண்மைஆகியஅதிகாரங்களை அமைத்துப் பாடியுள்ளார்.

**2.தீவினை நீக்குவதாக!**
**'சூதும் வாதும் வேதனைசெய்யும்'**

**-கொன்றைவேந்தன்**

என்பதற்கேற்பதீயஎண்ணங்களும்,தீச்செயல்களுமேஒருமனிதன் கெட்டழியக் காரணமாகின்றன. தீச்செயல்கள் புரியத்தூண்டுவதுமதிமயக்கும், மது அருந்தும் பழக்கத்தின் போழ்துஆகும். ஆகவே,

**'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**

**சான்றோர் முகத்துக் களி'**

**-குறள் எண்.923**

எதுசெய்தாலும் மகிழும் பெற்றதாயின் முன் கள்ளுண்டுகளித்தல் அவளுக்குதுன்பம் தரும்.அப்படியானால்,குற்றம் புரியாதசான்றோரின் முன் அதுஎன்னவாகும்?

**‘கயறியாமைஉடைத்தேபொருள் கொடுத்து**

**மெய்யறியாமைகொளல் ‘**

**-குறள் எண்.925**

கலலைகொடுத்து,கள்ளுண்டுதன் உடம்பைத் தான் அறியாதநிலையைமேற்கொள்ளுதல்,செய்வுதஇன்னதென்றுஅறியாத அறியாமைஉடையதாகும்.

கள்ளுண்டஒருவன் சூதில் நிச்சயம் அகப்படுவான்.,

**‘உடைசெல்வம்ஊன்ஒளிகல்வியென்றஐந்தும்**

**அடையாவாம் ஆயங் கொளின்’**

**-குறள் எண்.939**

சூதாடுதலைஒருவன்மேற்கொண்டால்புகழ்,கல்வி,செல்வம்,உணவு,உடை,ஆகியஅவனைச் சேராமல் ஒதுங்கும்.

ஆகவே,வள்ளுவனார்,கள்ளுண்ணாமைக்குஅடுத்து சூது அதிகாரத்தைவைத்து இயற்றியுள்ளார்.மேலும் சிற்றினர் சேராமை,வெருவந்தசெய்யாமை,பொச்சாவாமை (மறதி இல்லாதிருத்தல்),மடியின்மை, இகல்,பெரியாரைப் பிழையாமை,யெண்வழிச்சேரல்,வரைவின் மகளிர்,போன்றஅதிகாரங்களில் தீவினைஅகற்றும் விதமாகவிளக்கிக் கூறியுள்ளார்.

**3.நற்பண்புப் பெட்டகமாக!**

**‘எண்பதத்தால் எய்தல் எளிதென்பயார்மாட்டும்**

**பண்புடைமைஎன்னும் வழக்கு’**

**-குறள் எண்.991**

எவரும் தன்னைஎளிதாகக் கண்டுபேசும் நிலையில் வாழ்ந்தால் பண்புடைமைஎன்னும் நல்வழியைஅடைவதுஎளிதுஎன்றுசான்றோர் கூறுவர்.

**‘பண்விலபிலான் பெற்றபெருஞ்செல்வம் நன்பால்**

**கலந்தீமையால்திரிந்தற்று’**

**-குறள் எண்.1000**

நல்லபண்பு இல்லாதான் அடைந்தபெருஞ்செல்வம்,பாத்திடக் கேட்டால்,அதிலுள்ளநல்லபால் கெட்டுப் போவதும் போகலாம். ஆகவே,உலகமாந்தர் அனைவரும்நற்பண்புச் செயல்களிலேஈடுபட்டுதெற்வமாகலாம்.

**“நற்பண்புச் செயல்களேஅறச் செயல்களாகும்”**

**4.நட்பின் கலுவூலமாக!**

நட்புஎன்றால் என்ன?

யாருடன் நட்புகொள்வது?

“அகநகநட்பதுநட்பு”

**‘முகநகநட்பதுநட்பன்றுநெஞ்சத்து**

**அகநகநட்பதுநட்பு’**

**-குறள் எண்.786**

**‘மருவுகமாசற்றார்கேண்மைஒன்றீத்தும்**

**ஒருவுகஒப்பிலார் நட்பு’**

**-குறள் எண்.800**

மனத்தில் மாசு இல்லாதவர்களையேநண்பர்களாகப் பெறவேண்டும். மாசுஉள்ளவர்களின் நட்பை,விலைக் கொடுத்ததுவிலக்கிடவேண்டும். நட்புஎன்பதுவாழ்நாள் முழுவதும் தொடரும் உன்னதஉதவாகும். ஆகவேதான் தெய்வப்புலவர்,நட்புபற்றிநட்பு,நட்பாராய்தல்,தீநட்பு, கூடாநட்பு,எனநான்குஅதிகாரங்களில் அழகாய் கூறியுள்ளார்.

**5.உழைப்பைப் போற்றுவதாக!**

**‘உண்ணஉணவும்,உடுக்கஉடையும்**

**தருவதுஉழவுத் தொழில்’**

எனஉழவின் சிறப்புகுறித்துவள்ளுவர் “உழவு” அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

**‘சுழன்றும் ஏர்பின்னதுஉலகம் அதனால்**

**ஊழந்தும் உழவேதலை’**

**-குறள் எண்.1031**

உலகம் பலதொழில் செய்துசுழன்றாலும் ஏர்த்தொழிலின் பின் நிற்கின்றது.அதனால் எவ்வளவுதுன்புற்றாலும் உழவுத் தொழிலேசிறந்தது. மேலும்,

**உழுவார் உலகத்தார்க்குஅணி**

‘திருவள்ளுவர் வரையறுத்தகோட்பாடுகள்என்றமுனைவர்.கு.மோகனராசுஅவர்களின் நூலில் உழவுசார் கோட்பாடுகுறித்துகுறிப்பிட்டுள்ளார். நாட்டைஆளும் அரசன் ஒருவன்.

**‘படைகுடி கூழ்அமைச்சுநட்புஅரணாறும்**

**உடையான் அரசருள் ஏறு’**

**-குறள் எண்.381**

படை, குடி,உணவு,அமைச்சர்,நண்பன்,கோட்டைஆகியஆறும் மார்ச் மாதத்தில் ஏற்பட்ட (கோவிட்-19) ‘கொரானா’ நோய் பரவியபோது,தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள, இல்லத்திலேயேஅடைப்பட்டு,உடுத்து,உண்டு,உறங்கி,வாழ்ந்தனர்.

**“உண்டிக் கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”**

**6.வறுமையை ஒழிப்பதாக!**

உழவிற்குஅடுத்ததாகநல்குரவுஅதிகாரத்தைவைத்துள்ளார். ஏனெனில் உழவுசிறப்பில் நல்குரவுஎன்னும் வறுமைநீக்கப்படுவதால்,மேலும் வறுமைநீக்கஇரத்தல் வேண்டப்படும். அந்தஇரத்தலும் முறையானவைகள் என்பனபற்றியும் கூறியுள்ளார்.அதற்குஅடுத்ததாக இரவச்சம் பிறரிடம் கேட்டுப்பெறும் போதுதன்மானம் இழக்காதிருத்தல்,ஆகவே,

**“தெண்ணீர் அடுபுற்கைஆயினும் தாள்தந்துத**

**உண்ணலின் ஊங்குனியது இல்”**

**-குறள் எண்.1065**

தெளிந்தநீரில் காய்ச்சியபுல்லரிசிக் கூழானாலும் ஒருவன் தன் உழைப்பால் ஈட்டியபொருளால் உண்ணுவதைக் காட்டிலும் வேறுவகைதருவதுவேறுஎதுவும் இல்லை. மேலும் முதற்பாவலர்,

**“இடும்பைக்கு இடும்பைபடுப்பர்இடும்பைக்கு**

**இடும்பைபடாஅதவர்”**

**-குறள் எண்.623**

என்றுதாக்கத்திலும் ஊக்கம் தரும்படி,‘இடும்பைக்கு இடும்பைபடுப்பர்’ எனக் கூறியுள்ளார்.

**7.வினையூக்கியாக!**

**“எண்ணமேசெயல்”**

என்பதற்கேற்பநாம் எதைவிரும்புகின்றோமோஅதைஅடையலாம்.

**“எண்ணியஎண்ணியாங்குஎய்தும் எண்ணியர்**

**திண்ணியர் ஆகப் பெறின்”**

**-குறள் எண்.666**

ஒருசெயலைநிறைவேற்றத் திட்டமிடுபவர் செயல்திறம் வாய்ந்தவராகஇருத்தல் வேண்டும். மேலும்,

**“பொருள் கருவிகாலம் வினைஇடனொடுஐந்தும்**

**இருள்தீரஎண்ணிச்செயல்”**

**-குறள் எண்.675**

ஒருசெயலைமேற்கொள்ளும்போதுபொருள்,கருவி,காலம்,செய்முறை,இடம் ஆகியஐந்தையும் தெளிவாகஆராய்ந்துநிறைவேற்றவேண்டும்.

**8.பொருட்சிறப்புடையதாக!**

**“அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**

**தீதின்றிவந்தபொருள்”**

**-குறள் எண்.754**

சேர்க்கும் திறம் அறிந்துதீமைஒன்றும் இல்லாமல் சேர்க்கப்பட்டுவந்தபொருள் ஒருவனுக்குஅறத்தையும் கொடுக்கும் என்றுபொருளைஅறவழியில் சேர்ப்பதே இன்பம் என்கிறார்.

**“நச்சப்படாதவன் செல்வம் நடுவூருள்**

**நச்சுமரம்பழுத் தற்று”**

**-குறள் எண்.1008**

பிறர்க்குஉதவாதகாரணத்தால் ஒருவராலும் விரும்பபடாதவனுடையசெல்வம் ஊர் நடுவில் நச்சுமரம் பழுத்தார் போன்றதுஎன்றுநன்றியில் செல்வம் குறித்துக் கூறுகிறார்.

**9.தொலைநோக்குப் பார்வையாக!**

குறட்பாக்களின்கருத்துக்கள் எல்லார்க்கும்,எந்நாட்டவர்க்கும்,அரசருக்கும்,ஆண்டிக்கும்,அமைச்சுக்கும்,குடும்பத்திற்கும்,ஆணுக்கும்,பெண்ணுக்கும்,குழவிக்கும்,முதியவருக்கும்,காதலனுக்கும்,காதலிக்கும்,அரண்மனைக்கும்,அலுவலகத்திற்கும்,மாற்றுத்திறனாளருக்கும்,நோயாளிக்கும், வாழ்க்கையின்அனைத்துசூழலுக்கும் கருத்துகள் பகர்ந்துள்ளதால் “திருவள்ளுவர் ஒருதொலைநோக்குப் பார்வையாகக் கொண்டு இயற்றியுள்ளார்” என்பதனைஅறியலாம்.

**ஆய்வின் தீர்வு:**

இவ்வாய்வுக்கட்டுரையிலிருந்துதீர்வாகக்கிடைக்கும் பொருட்பாலின் பன்முகத்தன்மைப் பயன்கள்

1. பல்துறைஅறிவுபெருகும்
2. தீவினை அகன்றுநல்வினைபுரியச் செய்யும்
3. நற்பண்புகள் 108-ம் வளரும்
4. ஆழ்ந்த உன்னதமானநட்புபாராட்டும்
5. உயிர் காக்கும் உழவுசிறக்கும்
6. பசிக் கொடுமைநீங்கி,வறுமைஒழியும்
7. நல்வினைகளைபெருகச் செய்துஊக்கப்படுத்தும்
8. பொருட்ச் செல்வம் உயர்ந்தோங்கும்
9. எக்காலத்துக்கும் வழிகாட்டியாய் விளங்கும்

**தொகுப்புரை**

தன் வாழ்நாளில் ஒருவன் ஒழுக்கம் முதலானஅறச்செயல்களில் ஈடுபட்டு,நல்வழியில் பொருளீட்டி,செல்வத்தைப் பெருக்கி,காமத்துப்பாலில் கூறப்பட்டுள்ளவற்றைஅனுபவித்து, இல்லறவாழ்வில் மனைவிமூலம் நன்மக்களைப் பெற்று,வாழ்வாங்குவாழ,வழிவகுத்துக்கொண்டு,இன்பமாய் வாழ்வோமாக! இவ்வாய்வுக் கட்டுரை மூலம் பொருட்பாலில் திருவள்ளுவரின் பன்முகத் தன்மைகுறித்துவிரிவாகக் கண்டோம்! சங்க இலக்கியங்கள் படைத்ததில் மிகச்சிறந்த தமிழர் திருவள்ளுவர் ஒருவரே!

**பார்வை நூல்கள்**


1. திருவள்ளுவர் வரையறுத்தகோட்பாடுகள் - முனைவர்.கு.மோகனராசு
2. திருக்குறள் நூல் - முனைவர்.பா.வளனரசு
3. இனியநீதி நூல்கள்- கவிஞர்.பத்மதேவன்



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Bangayam G., (2021) Multidimension in Thiruvalluvar's Porutpal, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:344-349. Cauvery College For Women, Trichy.

**முனைவர் பெ. வைரமூர்த்தி,**
இணைப்பேராசிரியர்,
(அண்ணாமலைப்பல்கலைக்கழகம்)
தமிழாய்வுத்துறை,
அரசு கலைக்கல்லூரி,
அய்யர் மலை - 639 120
குளித்தலை, கரூர் மாவட்டம்

# தலைக்காப்பியம் காட்டும் தமிழர் தடங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழரின் முதற்காப்பியமாகவும் தலைக்காப்பியமாகவும் உள்ள சிறப்புமிக்க நூல் சிலப்பதிகாரம். இந்நூல் அக்கால மக்கள் வாழ்வியலை எடுத்துரைப்பதில் சிறந்து விளங்குகின்றது. அறத்தையும், பொருளையும், இன்பத்தையும் எடுத்துக் கூறும் நூல். இந்நூலில் அறநெறிச் சிந்தனைகள் மிகுந்து உள்ளன. அதில் அறம், கற்பு, சமூகச்சிறப்பு, நற்பண்புகள், கலை, இலக்கியம், துறவு, நம்பிக்கைகள் ஆகியவற்றை எடுத்துச் சொல்லும் பல்சுவை நூலாக உள்ளதை எடுத்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். நற்சமூகச் சிந்தனைகளை வளர்ப்பதும் பெருக்குவதும் தலைக் காப்பியம் காட்டும் தமிழர் தடங்கள் என்னும் இக்கட்டுரையின் அடிப்படையாகும்.

**முன்னுரை**

மனித வாழ்க்கையின் வாழ்வியல் கூறுகளைப் பிரதி பலிக்கும் கண்ணாடியாக இலக்கியங்கள் திகழ்கின்றன. அவற்றில் காப்பிய இலக்கியங்கள் வாழ்வியல் அறம் கூறுவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. அதில் ஐம்பெருங்காப்பியங்களில் முதலாவதாக வைத்து போற்றப்படும் நூல் சிலப்பதிகாரம். சீத்தலைச் சாத்தனாரின் 'அடிகள் நீரே அருளுக' என்ற வேண்டுகோளுக்கிணங்க அரசத் துறவி இளங்கோவடிகளால் அருளப்பட்ட நூலாகும். இந்நூல் இயல் இசை நாடகம் என்ற முத்தமிழின் அடிப்படையில் அமையப் பெற்றதைக் காணலாம். முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம், ஒற்றுமைக் காப்பியம் போன்ற பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. கண்ணகி, கோவலன், கவுந்தி அடிகள், பாண்டிய மன்னன், ஐயை, மாதிரி போன்ற கதாப்பாத்திரங்கள் வழியாக பல வாழ்வியல் நெறிகளை இளங்கோவடிகள் கூறியுள்ளார். வாழ்வியலின் அடிப்படைகளைச் சித்தரிக்கும் சமூக காப்பியமாக சிலப்பதிகாரம் விளங்குகின்றது.

**தமிழர் வாழ்வில் சமயம்**

சிலப்பதிகாரத்தில் சைவம், வைணவம், சாக்கதம், கௌமாரம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் இடம் பெறுகின்றன. இதில் கடவுள் வழிபாட்டு முறை சிறப்பாக கூறப்பட்டுள்ளது. முருகன், சிவன், செவ்வேள், திருமால், கொற்றவை, கடல் தெய்வம், மதுராவதி தெய்வம், போன்ற பல தெய்வ வழிபாடுகள் பற்றி போற்றிக் கூறப்பட்டுள்ளது. இதில் சமயங்களைப் பற்றியும் சமயச் சான்றோர் கூறும் கருத்துகள் பற்றியும் இளங்கோவடிகள் கூறியுள்ளார். சமய விழாக்கள் மூலமும், நற்கருத்துகள் மூலமும் அறக்கருத்துகளை எடுத்துரைத்துள்ளார்.

**முப்பெரும் உண்மைகள்**

> "அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்
> உரைசால் பத்தினியை உயர்தோரேத்துவர்
> ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"1

அரசியல் செய்தவர்கள் அறத்தைக் முதன்மையானதாக கருத வேண்டும் என்றும், பெண்கள் பத்தினித் தன்மை கொண்ட பெண்கள் உயர்ந்தவர்கள் என்றும் அவர்களைப் போற்ற வேண்டும் என்ற முப்பெரும் உண்மைகள்; மூலம் இன்றையக் காலத்திற்குப் பொருந்தும் வகையில் தன் கருத்துகளைப் பதிவு செய்துள்ளார்.

**மானச் சிறப்பு**

மதுரைக்குச் செல்ல நினைத்த கோவலன் சோழ நாட்டுக்குத் திரும்பவும் வரப் போவதில்லை என்ற முடிவுடனே செல்கின்றான். கோவலன் சிறந்த தன்மானம் கொண்டவன். "பாடமை சேக்கைப் பள்ளியுள் புகுந்தான்" என்கிறது சிலப்பதிகாரம். கோவலனோ கண்ணகியோ தன் தாய் தந்தையரிடம் சென்று தஞ்சம் அடைந்திருக்கலாம். அல்லது உதவி கேட்டிருக்கலாம். ஆனால் அதனைச் செய்யாமல் ஊரைவிட்டு இருவரும் கிளம்பிச் சென்றது மானத்தின் பொருட்டுதான்.

**கற்பின் சிறப்பு**

கோவலன் மாதவியோடு சென்ற போதும், மாதவியிடமிருந்து பிரிந்து வந்து கண்ணகியிடம் தஞ்சம் புரிந்த போதும் கோவலனை மன்னித்து கண்ணகி ஏற்றுக் கொள்கிறாள். அவன் மதுரைக்குச் செல்லலாம் எனும் போதும் உடனே சம்மதித்து உடன் செல்கிறாள். கணவனின் முன்னேற்றத்திற்கு தனது கால் சிலம்பைக் கொடுத்து வாணிகம் செய்து வர அனுப்புகிறாள். தன் கணவன் கொலையுண்டான் என்ற செய்தி கேட்டு பாண்டிய மன்னனிடம் நீதி கேட்பதும், மதுரையை எரித்ததும் கண்ணகியின் கற்பின் திறத்தைக் காட்டுகிறது. இவ்வாறு கணவனுக்கு ஏற்ற நல்ல மனையாளாக கண்ணகி வாழ்கிறாள்.

**கோவலனின் நற்பண்புகள்**

சிலப்பதிகாரத்தில் கோவலன் மண் தேய்ந்த புகழினை உடையவனாக குறிப்பிடப்பட்டுள்ளான். முருகனைப் போன்ற அழகுடையவன். அடைக்கலக் காதையில் மாடலன் என்பவன் கோவலனது புகழினைக் கூறுவது போல இளங்கோவடிகள் கூறியுள்ளார். கருணை மறவன் (அடைக்கலக்காதை53) இல்லோர் செம்மல் (அடைக்கலக்காதை90) செல்லாச் செல்வன் (அடைக்கலக்காதை75) என்ற இடங்களில் சிறப்பிக்கப்படுகின்றான்.

"மண்தேய்ந்த புகழினான் மதிமுக மடவார்தம்

பண்தேய்ந்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்

கண்டு ஏத்தும் செவ்வேள் என்று இசை போக்கிக்காதலால்

கொண்டு ஏத்தும் கிழமையான் கோவலன்"2

இவ்வாறு கோவலன் இங்கு மிகச்சிறந்த பண்பாளனாகப் பேசப்பட்டுள்ளான்.

**துறவறம் பேணல்**

கணிகையர் குலத்தில் பிறந்தவளாக இருந்தாலும் கற்பில் சிறந்தவள் மாதவி. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடுடன் வாழ்ந்தவள். கோவலனையே தெய்வமாகக் கருதி வாழ்ந்தவள். கோவலன் இறந்துபட்டான் என்ற செய்தி கேட்டு தன் அழகை அழித்துக் கொண்டவள். ஆடல் பாடல் கலைகளை விட்டு வந்து பௌத்த சமயத்தில் சேர்ந்து துறவியானாள். தான் மட்டுமல்லாது தன் மகள் மணிமேகலையையும் பௌத்த சமயத்தில் சேர்த்து துறவியாக்கினாள். இவ்வாறு பல சிறப்புகளை உடையவளாகத் திகழ்கிறாள் மாதவி.

**சமூக வாழ்வு**

சிலப்பதிகாரச் சமூகம் அரசர், அந்தணர், வேளாளர், என்ற அமைப்பு முறையிலும் குழுநிலையில் குறவர், ஆயர், வேட்டுவர் என்ற நிலையிலும் பேசப்பட்டுள்ளனர். கோவலனும் கண்ணகியும் பெரு வணிக குல மாந்தர். மாதவி கணிகையர் குலம். இதில் அப்பம் விற்போர், பிட்டு விற்போர், பூவிலையாளர்,

இறைச்சி விற்போர் பற்றியும் பேசுகின்றார் இளங்கோவடிகள். பொன்கடைவீதி, தானியம் விற்கும் கூல வீதி, இரத்தினக் கடைவீதி, துணி விற்கும் அறுவை வீதி, நாளங்காடி, அல்லங்காடி போன்ற சமுதாய அமைப்புக் காணப்பட்டது. சமூகம் தொழில் சார்ந்ததாக இருந்தது. அனைவரும் பொது என்ற பொதுவுடைமைக் கோட்பாட்டைக் அமைத்துள்ளார் இளங்கோவடிகள்.

**கலை**

சிலப்பதிகாரத்தில் கலைச் செல்வங்கள் கொட்டிக் கிடக்கின்றன. நாகரீகத்தின் வெளிப்பாடே கலை. இயல், இசை, நாடகம், கூத்து, கோயிற்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை போன்ற கலைகள் சிறப்பு பெற்றுத் திகழ்ந்தன. அரங்கேற்றுக்காதை தமிழரின் சிறந்த இசை மற்றும் நாட்டியக் கலைக்கு சிறந்தச் சான்றாக விளங்குகின்றது. மாதவி ஆடல் மூலம் 11 வகைக் கூத்துகள் பற்றி அறிய முடிகின்றது. மாதவி அணிந்த அணிகலன்கள் பற்றியும், நுண்கலைகள் பல இருந்ததுப் பற்றியும் அறிய முடிகின்றது. மாதவி வாங்கிய தலைக்கோல் பட்டம் பற்றியும், நாட்டிய அரங்கத்தின் அமைப்பு, அதன் சிறப்பு பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**நம்பிக்கைகள்**

பெண்களுக்கு இடக்கண் துடித்தால் நன்மையும், வலக்கண் துடித்தால் தீமையும் ஏற்படும் என்பது நம்பிக்கை. கோவலன் கொல்லப்பட்ட போது தயிர் உறை பால் உறையாது போனது சகுனமாகக் கருதப்பட்டது. கோவலன் கண்ணகி தாயாரின் மறுபிறப்புப் பற்றிய செய்தி, இறைவனுக்கு விழா எடுக்கவில்லை என்றால் தீமை நிகழும் என்பன போன்ற பல நம்பிக்கைகள் உலவி வந்தன.

"கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்

உள்நிறை கரந்து அகத்து ஒளித்து நீர் உகுத்தன

எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன"3

மேற்கண்ட வரிகளில் பிரிந்திருந்த கண்ணகியின் வரிகளும், கூடியிருந்த மாதவியின் கண்களும் கண்ணீர் சிந்தின. ஆனால் துடிக்கும் போது கண்ணகிக்கு இடக்கண்ணும், மாதவிக்கு வலக்கண்ணும் துடித்தன. கண்ணகி தன் கணவனை மாதவியிடமிருந்து பெறப் போகின்றாள், மாதவி கோவலனை இழக்கிறாள் என்பதை இதன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழர் வாழ்வில் இது போன்ற பல சகுன நம்பிக்கைகள் நிலவி வந்ததனை சிலப்பதிகாரத்தின் வழி அறியலாம்.

**அறம் செய்தல்**

கோவலனைப் பிரிந்த காலத்தில் தன்னால் அறம் செய்ய இயலவில்லை என்று கண்ணகி வருந்திக் கூறுகின்றாள். இல்லற வாழ்வு வாழும் கணவன் மனைவி இருவருக்கும் நான்கு முக்கிய அறங்கள் செய்ய வேண்டும் என்று முன்னோர் கூறியதை கண்ணகி நினைவுபடுத்தி வருந்துகிறாள். அவை,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"4

அதாவது அறம் செய்வோர்க்கு உதவுதல், அந்தண மரபினைப் போற்றுதல், துறவிகளை எதிர்கொண்டு அவர்களுக்கு வேண்டுவன செய்தல், விருந்தினரைப் பாதுகாத்தல் போன்ற அறங்களைத் தான் தனித்திருப்பதால் செய்ய முடியவில்லை என்று வருந்துகிறாள். தனித்து வாழ்வது சிறப்பல்ல என்ற அடிப்படை இல்லற வாழ்வியல் கோட்பாட்டை திருவள்ளுவரும்,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை"5

துவ்வாதவர், இறந்தவர், துறந்தார் ஆகிய மூவருக்கும் இல்வாழ்க்கை வாழும் கணவன் மனைவி உதவ வேண்டும் என்கிறார்.

**முடிவுரை**

மக்கள் வாழ்க்கைக்கு ஒளி ஏற்றும் ஓர் பன்முக காப்பியமான சிலப்பதிகாரத்தில் பல வாழ்வியல் தடங்கள் அழகான கலை அமைப்புடன் காட்டப்பட்டுள்ளது. தமிழரின் தலைக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் மக்களின் வாழ்வியல் கூறுகள், மனித நடத்தைகள், உளவியல் செயல்பாடுகள், நீதி, மனிதநேயம், காதல், ஒற்றுமை, நம்பிக்கைகள், கற்புநெறி, கலை, இலக்கியக் கோட்பாடுகள், சமூகப் பண்புகள் போன்ற பல வாழ்வியல் சிறப்புத் தடங்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் தமிழரின் வாழ்வியல் சிறக்கவும், சீர் பெறவும் உரிய வழிகளை சிலப்பதிகாரம் சுட்டுவதை நாம் அறிந்து கொள்ளவும் முடிகின்றது. இன்றும் என்றும் எக்காலத்திற்கும் ஏற்புடைய தமிழர் வாழ்வியல் தடங்களை உலகிற்குப் பறைசாற்றும் நோக்கில், உலக தலைக் காப்பியமாக அமையக் கூடிய சிலப்பதிகாரம் தமிழன்னையின் கழுத்தில் மணியாரமாக தவழ்வது தமிழறிஞர்கள் கண்டு உணர்ந்த உண்மையாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், சிலப்பதிகாரம் பதிகம் - 55
2. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்,மங்கல வாழ்த்துப்பாடல் வரிகள் 36-39
3. இளங்கோவடிகள்,சிலப்பதிகாரம்,இந்திரவிழா ஊர்எடுத்தகாதை வரிகள் 238-240
4. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை வரிகள் 71-73
5. திருவள்ளுவர், திருக்குறள், குறள் எண் - 41

**பார்வை நூல்கள்**


1. சிலப்பதிகாரம் மூலமும் உரையும்,

   புலியூர் கேசிகன் உரை,

   கௌரா பதிப்பகம், திருச்சி

2. திருக்குறள் மூலமும் உரையும்,

   மு.கருணாநிதி உரை,

   திருமகள் நிலையம், சென்னை


**Cite this book Chapter:** S. Ramalakshmi and Vairamoorthy P., (2021) The Evidence of Tamil people in Thalai Kappiyam, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:350-353. Cauvery College For Women, Trichy.

**முனைவர். மீ.தௌலத் பேகம்**
தமிழ்த்துறைத்தலைவர்
மு.சா.ச.வக்பு வாரியக் கல்லூரி
கே.கே.நகர், மதுரை

# இஸ்லாமிய இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

இஸ்லாம் என்பது கீழ்படிதல் அல்லது அடிபணிதல் என்பது பொருளாகும். ஓரிறைக் கோட்பாடு என்ற கோட்டினுள் கொள்கை ரீதியான தன்னுடைய பயணத்தை அமைத்துக் கொண்டு பயணிக்கும் ஒரு மார்க்கம் தான் இஸ்லாமிய மார்க்கம். எத்தனையோ நபிமார்கள் எத்தனையோ தூதர்கள் இந்த மண்ணுலகில் இறங்கி சமூகத்தின் மத்தியில் பாவங்களை நீக்குவதற்காக பல தருணங்களில் தன்னுடைய சிறந்த மார்க்க கருத்துக்களை எடுத்து முன் வைத்த நிலையிலும், முழுமையான வளர்ச்சி அடையாத இஸ்லாத்தின் உச்சநிலை நபிகள் பெரும்பானாருடைய வருகைக்கு பின்பும், தூதுவத்திற்கு பின்பும் பெரும் பயணத்தை நோக்கிச் சென்றது. நபிகளாரின் சிறப்புக்களையும் மாண்புகளையும் தனது கவித்துவமான வரிகளில் யாவரும் அறிந்த தமிழ் கூறும் நல்லுலகில் தனக்கென தனியிடம் பெற்ற வரிகள் மு.மேத்தாவின் கவி வரிகள் 'நாயகம் ஒரு காவியம்' என்னும் படைப்பாக்கத்தின் சிறந்ததொரு பதிவை எடுத்துரைக்கின்றார். தமிழ் இலக்கியப் பரப்பை பொறுத்துவரை அகம் புறம் என்ற இரு பிரிவுகள் தன்னுடைய இலக்கிய பயணத்தை அமைத்துக் கொள்ளக்கூடிய பழமை நம்முடைய தமிழ் மரபிற்கு உண்டு. அந்த வகைமையில் தன்னுடைய புறம் சார்ந்த கருத்துக்களையும், நபிபெருமானார் தான் கண்ட போர் முறைகளையும் மிக அழகிய தெளிந்த நடையில் உவமை கருத்துக்களோடு தன் காவியத்தில் கவிஞர் மு. மேத்தா பதிவிட்டுக் காட்டுகின்றார்.

ஆக உலகம் என்பது போரினது நிலையில் நின்று உயிர்களை மாய்க்கச் செய்யும் ஒரு பெரும் கொடூரம் என்று எடுத்துச் சொன்ன நபிகள் பெருமானார். அவரே சில தருணங்களில் ஆயுதங்களை எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அவர் எடுத்துக் கொண்ட ஆயுதம் என்பது எதிரியினுடைய உயிரை அழிப்பதற்காக அல்ல. மாறாக தன்னை சார்ந்திருக்கக் கூடிய ஈமான் கொண்டவரை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. ஆயுதத்தின் கையெடுப்பு அல்லது போரின் வகைமை என்று தான் கொள்ள வேண்டும். முடிசார்ந்த மன்னர்களும் தம் படை அமைப்பின் மூலமாக தமிழகத்தின் பகுதியை, தன் மொழியினது சிறப்பை எப்பொழுது எல்லாம் அவசியப்படுகின்றதோ அப்போது போர்களின் மூலமாக சந்தித்த வரலாறு பல தருணங்களில் நாம் காண முடிகின்றது.

தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் இப்படியாக, சேரர்களும், சோழர்களும், பாண்டியர்களும், தன்னுடைய படை அமைப்பையும், தன் படையின் திண்மையையும் பெருக்குவதற்காக பல தருணங்களில் போராட்டங்களை நடத்த வேண்டிய வரலாறு நம் தமிழ் புலமும் அறிந்தது. இந்த வகையில் நபிபெருமானாரின் போர்களையும் போர் குறித்த சிறப்பு அம்சங்களையும் போரின் மாண்புகளையும், போரில் கடைபிடித்த சட்டதிட்ட ஒழுக்கங்களையும் தன்னுடைய தன் கவி வரியின் மூலமாக காவியத்தின் மூலமாகப் பதிவிடுகின்றார். தமிழரது மரபை எடுத்துச்சொல்லக் கூடிய வீரத்தை கூறக் கூடிய புறம் சார்ந்த கருத்துக்கள் கவிஞரின் கவி வரிகள் மூலம் வெளிப்படுகின்றது. இப்படிப்பட்ட கவி வரிகளை ஆய்வதே கட்டுரையின் நோக்கம்.

**முன்னுரை**

இஸ்லாம் என்பத சிறந்த வாழ்வியல்களையும், சிறந்த வழித்தடங்களையும் கற்றுத் தரக்கூடிய உயர்ந்த மார்க்கம். இப்படிப்பட்ட மார்க்கத்தினுடைய ஓரிறை

இறைவனாகக் கருதப்படுபவர் அல்லாஹ். இறைவனின் உயர்ந்த தூதுவத்தை எடுத்தியம்ப வந்தவர்களுள் இறுதியாக வந்தவர் தான் நபிகள் நாயகம். இவரது சிறப்புகளை பாடாத கவிஞர்களோ, எழுதாத பேனாக்களோ இல்லை என்றுதான் கூற வேண்டும். அந்த அளவிற்க நபிகள் பெருமானாருடைய வாழ்வியல் சிறப்புகள் பதிவு செய்யப்படுகின்றது. இதன் வழித்தடங்கள் ஆங்காங்கு இலக்கியங்களாக செறிவூட்டப்படுகின்றது. சீறாப்புராணத்தை தொடர்ந்து பல படைப்புகள் தோன்றப்பட்டு வந்துள்ளது. அந்த வரிசையில் மு.மேத்தா நாயகம் ஒரு காவியத்தின் மூலமாக நபிகளாரின் சிறப்புகளை தம் கவி வரிகளில் பதிவு செய்கின்றார். குறிப்பாக ஈமான் என்னும் இறை நம்பிக்கையானது மக்களை உயர்பாதையில் அழைத்துச் செல்லும் அப்படி நம்பிக்கை கொண்ட மக்கள் போர் நிலையிலும் நடுநிலையாக நின்று செயல்படவேண்டும் என்றும் போருக்கான வழிமுறைகளையும், தந்திரங்களையும், வைப்பு முறைகளையும், கவிஞர் பதிவு செய்துள்ளதை இக்கட்டுரையின் மூலம் காணலாம்.

**இஸ்லாம் காட்டும் வாழ்வியலும் போர்முறைகளும்**

சிறந்த கோட்பாட்டையும், நல்லதொரு கொள்கைகளையும் கொண்டிருக்க கூடிய மார்க்கம் இஸ்லாம் ஆகும். ஒரே வழித்தடத்தில் ஓரிறைக் கோட்பாட்டில் பயணப்படக்கூடியது. வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை தன்னுடைய வாழ்வை எப்படி அமைத்துக் கொள்வது என்றும், வாழ்வியல் பொருள் சார்ந்த கருத்துக்களையும், பல்வேறு தத்துவங்களையும் பதிவு செய்கின்றது. இப்படி உயர்ந்த கருத்துக்களை தன்புறத்தில் இருந்து சொல்வதற்காக இலட்சக்கணக்கான இறைத்தூதர்களை இறைவன் அனுப்பி வைத்தான். அப்படி அனுப்பிய இறைத்தூதருள் இறுதித்தூதர் மாநபி முகம்மது நபி. நபிகளாரின் வருகையும், நபிகளாரின் தூதுத்துவமும் சில தருணங்களில் சில சூழ்நிலையில் பலருடைய உள்ளத்தைக் கவர்ந்தாலும், சில மக்களின் உள்ளத்தில் ஓரிறைக் கோட்பாடு பெரும் நெருடலை ஏற்படுத்தியது. நெருடலை ஏற்படுத்தியவருடைய உள்ளம் அமைதி கொண்டது. நெருடலின் உச்சிக்கு சென்ற உள்ளமானது அவரின் உயிரைப் பறிக்கும் அளவிற்கு சென்றது. எத்தனையோ எதிர்ப்புகள் வந்தாலும் நபிகளார் தன் தூதுத்துவத்தை பதிவு செய்து வந்தார்கள். நபிகளாருடைய உடம்பில் கல்லடிப்பட்டு இரத்தம் சிந்தினால் கூட சொட்டிய இரத்தம் தரையில் சிந்தவிடாது மேனியில் தேய்த்துவிட்டு ஓடிக்கொண்டே இருந்தார்கள்.

இறைவன் ஒருவன் அவனுடைய கருத்துக்களும், கோட்பாடுகளும் உயர்ந்தது என்ற கருத்துக்களை பதிவிட்டுக் கொண்டே சென்றார்கள். இதனை நம் படைப்பாளர் மு.மேத்தா தன் காவியத்தில்

**“ஓரிறைவன்! ஒன்று குலம்! மக்கள் எல்லாம்**

**உடன்பிறந்தார்! உயர்வில்லை! தாழ்வும் இல்லை!**

**பேரருளாளன் இறைவன்! அவனையன்றிப்**

**பிறர் எவரம் வணக்கத்திற் குரியார் இல்லை”**[1]

என்று சிறந்த முறையில் பதிவிட்டு காட்டுகிறார். அதுமட்டுமல்ல சார்ந்தத்தையும் அமைதியையும் தனக்குள் கொண்டிருக்கக்கூடிய நபிகளாருடைய இந்த இயல்பு பலருடைய உள்ளத்தை ஈர்த்தது. இந்த இயல்பின் காரணமாக பலர் இஸ்லாத்தில் இயல்பாக இணைந்து வாழத் தொடங்கினார்கள். இஸ்லாமிய வாழ்வியல் சூழலை தொடர்ந்து மக்கமா நகரில் தனி மார்க்கத்தை மட்டும் விரும்பி இருக்கக் கூடிய மக்கள் இஸ்லாத்தை சார்ந்த மக்களை துன்புறுத்தல் செய்தல் போய் அவர்களை கொலை செய்யும் அளவிற்கு கொண்டு சென்றது. இந்நிலையில் தற்காப்பிற்காக தன்னையும், தன் தோழர்களையும் மக்காவில் இருந்து அப்புறப்படுத்தி மதினமா நகர் நோக்கி சென்றார்கள். இந்நிலையில் போரிடுவதற்கான சூழ்நிலை இல்லை. போரிடுதல் என்பது நிலையற்றது என்பதால் தன் தோழர்களை அழைத்து தான்

செல்வதற்குமுன் அவர்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கு ஒரு சூழலை ஏற்படுத்தி கொடுத்தார்கள்.

**"தன்னுயிர் பெரிதாய்க் கருதாது**

**தன்னை நம்பி வாழ்ந்திருக்கும்**

**மண்ணுயிர் பெரிதாய்க் கருதும் நபி**

**மார்க்கத் தோழர் அனைவரையும்**

**இன்னுயிர் காக்க அனுப்பி வைத்தார்**

**இனிய யத்ரிப் நகருக்கே"[2]**

என்று கருத்தாக்கத்தைப் படைப்பாளர் பதிவு செய்து இருக்கின்றார்.

**இஸ்லாம் காட்டும் போரும் போரின் அறங்களும்**

நபிகள் பெருமானாரை பொறுத்த வரை தொடர்ந்த சில போர்களை சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தன்னுடைய கரங்களில் வாளைப் பற்றிப் பிடிக்கக் கூடிய காரணம் என்பது எதிரிகளை வீழ்த்துவதற்கு அல்ல. தன்னைச் சார்ந்தவர்களை பாதுகாப்பிற்காக என்ற வரியின் தொடர்ச்சியாக தன் பயணத்தை போரை நோக்கி அமைத்துக் கொண்டார்கள். வெறும் 313 நபர்களை மட்டுமே கொண்டு மேற்கொண்ட இந்த போருக்கு பத்ரு போர் என்று பெயர். பத்ரு போர் நிகழ்ந்த காலக்கட்டம் என்பது இஸ்லாமியர்களின் வறுமை சூழ்நிலை என்றுதான் கூற வேண்டும். புதிய இடத்திற்கு சென்ற இஸ்லாமியர்களுக்கு நல்ல வரவேற்பை மதினா நகர் மக்கள் தந்தாலும், அவர்களது வாழ்க்கை நிலைபட்டதாக அமையவில்லை. மாறாக பொருளாதாரத்தில் சற்று பின் தங்கி இருந்த நிலையிலும் இறைவனுடைய தூதுவர் போர்க்களத்திற்கு அழைத்தார்கள் என்ற பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் ஓடிவந்த மக்களினுடைய உடலில் அதிகப்படியான வறுமையின் தடம் மட்டுமே பதிவிடப்பட்டு இருந்தது.

**"ஒரு கொள்கை வீரரின்**

**வாழ்க்கைச் சாலையில்**

**வறண்ட பாலையில்.....**

**இது ஒரு சோலை......**

**எதிரிகளுக்கு விடுக்கப்பட்ட**

**எச்சரிக்கை ஓலை"[3]**

நம்முடைய பாதுகாப்பிற்காக இந்த போர் உகந்தது என்ற நிலையில் இறைவன் நம்மோடு இருக்கிறான். இப்போரை நாம் சந்திப்போம் என்று இறைத்தூதர் வழங்கிய உயர்ந்த போதனையின் மூலமாக போருக்கு தயாரானார்கள் மேலும் போர் என்பதும், போருக்கான அற நெறிகள் என்பதும் சற்று உயர்ந்ததாவே அமைத்துக் கொண்டது இஸ்லாம். போர் என்பது முதுகிற்கு பின் காட்டக்கூடியது அல்ல.தந்திரத்திற்குப் பின் மேற்கொள்ளக்கூடியது அல்ல. மாறாக நபி உரிமைக்காக தன் மக்களின் வாழ்விற்காக நேரடியாக மோதக்கூடியது.

**"முன்னூற்றுப் பதின்மூன்றுபேர்**

**ஒரு வரலாற்றின்**

**முன்னுரையை எழுதினார்கள்**

**அதற்கு மையாகப்**

**பதினான்கு பேர் தங்கள்**

**பச்சை ரத்தம் முழுவதையும்**

**பரிமாறினார்கள்"[4]**

தன் உயிர் போனாலும், துச்சமாக மதித்துக் கொண்டு தன்னை போரில் முழுமையாக அர்ப்பணித்தார்கள் என்ற செய்தி வெளிப்படுகின்றது. போர்களை பொறுத்தவரை யாருடைய உயிரையும் எடுப்பதற்காக அல்ல. பலருடைய உயிரையும் எடுக்கப்படாமல் இருப்பதற்காக என்ற நிபந்தனையை மீண்டும் வலியுறுத்தும் வலியுறுத்தல் ஒவ்வொரு இஸ்லாமிய உள்ளத்தில் பதிந்து இருப்பதை இந்த பத்ரு யுத்தம் காட்டுகிறது.

**நபிகளாரும் அவர் சந்தித்த போர்களும்**

நபிகளார் நல்ல குணம் உடையவராக இருந்தார்கள். அதுமட்டுமல்லாது தன்னை சார்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் அழகிய வாழ்வை அமைத்துத் தர வேண்டும் என்ற எண்ணத் தோடும் இறைவனோடு இரண்டற கலக்க வேண்டும் என்ற எண்ணம் மிகுந்து இருந்தது. மேலும் இறைவன் தந்த இந்த தீனுள் இஸ்லாத்தை உலகம் முழுக்க அனுப்பி அதை ஒளிரச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அலர் உள்ளத்தில் ஓடிக் கொண்டிருந்தது. அதே சமயம் இந்த செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தன்னை நோக்கி வரக்கூடிய அந்த எதிரிகளை வென்றாக வேண்டிய கட்டாயம் நபிகளார் கையில் இருந்தது. ஆதலால் தன் கையில் எடுத்துக் கொண்ட வாளினை கீழே நழுவ விடாமல் தொடர் பணியாக பல போர்களை செய்ய வேண்டியக் கட்டாயம் ஏற்பட்டது. பத்ரு போரை தொடர்ந்து பல போர்களை சந்திக்க கூடிய இந்த பயணம் இஸ்லாமிய பரிமாணத்திற்கு ஒரு பேருதவியாக இருந்தது. பொதுவாக ஒரு போரின் வெற்றியைப் பொறுத்தவரை வெற்றி என்பது யாருக்கு என்பதைவிட அந்த போரினுடைய காரணம் யாருக்கு என்பதை சுட்டக் கூடிய விதத்தில் தான் அந்த போரானது அமைய வேண்டும். போரின் பயணம் என்பது இஸ்லாமியர்களுக்கு பெரும் வெற்றியைத் தருவதாக இருந்தது. அந்த சுழலில் சில சகாபக்கள் உலக பொருள்களின் மீது ஆசைப்பட்டு விட்டுச்சென்ற எதிரிகளின் பொருட்களை எடுக்க முயன்றார்கள். அந்நிலையில் சுற்றி வளைத்த எதிரிகள் மலைகளின் பக்கமாக நபிகளாரையும் அவர்களின் தோழர்களையும் தாக்கத் தொடங்கினார்கள். இந்தக போரில் தன்னுடைய பற்களையும் அழகிய திருவதனத்தின் செந்நீரையும் சிந்த வேண்டிய நிலை பெருமானாருக்கு எற்பட்டது.

**"கைப்பற்றிக் கொணர்ந்திருக்கம் செல்வம் தன்னைக்**

**கண்ணெடுத்தும் நான் பாரேன் என்றார் வள்ளல்"[5]**

ஆக உலகப் பொருட்கள் மீது ஆசையும், பற்றும் கொண்டு போர் மேற்கொண்டால் இறைவனுடைய உதவி நம்மை விட்டு போய்விடும். நமக்கு தோல்வி கிட்டியது. அதனால் இந்தப் போரின் தோல்விக்கு காரணம் யாரையும் சார்ந்தது அல்ல. உங்களையும், உங்கள் உள்ளத்தையும் சார்ந்தது. உலகின் மீதான ஆசையை விட்டுவிடுங்கள். இறைவனுக்கான பயணத்தை அமைத்தும் கொள்ளுங்கள் என்ற முறையில், தான் சார்ந்த போர்களின் பல தருணங்களை தன்னுடைய தோழர்களுக்கும் ஈமான் கொண்ட மக்களுக்கும் எடுத்து இயம்பி கொண்டே வந்தார்கள். இந்த வழித்தடத்தில் பல போர்களை சந்தித்த அந்த பயணமானது இஸ்லாத்தினுடைய உறுதிக்கு பேருதவியாக இருந்தது என்பதை அறியமுடிகின்றது.

**படைகள் அமைப்பும் தாக்குதல் தன்மைகள்**

படைகள் என்பது தனக்கான தனி அமைப்புகளையும், தனக்கான தன்மையோடு படை எடுத்துச் செல்லும் சிறப்புகளையும் கூறுகின்றது.

**"நெடுநல் யானையும் தேரும் மாவும்**

**படையமை மறவரும் உடையம் யாம்"[6]**

என்ற பாடல் வரிகள் மூலம் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை நாற்படைகளை இணைத்து படை எடுத்துச் சென்ற நிகழ்ச்சியை அறிய முடிகிறது. இதைப் போலவே அண்ணலாரும் தன் படையில் அமைப்புகளையும், அணி வகுப்புகளையும் தனித்தனியாக பிரித்து வைத்திருந்தார்கள். குறிப்பாக தமிழ் மரபில் யாரும் எதிரியை

முதலில் தாக்க கூடாது. எதிரி தன்னை தாக்கிய பின்பு தான் அவர்களை தாக்க வேண்டும் என்று கூறுவது மரபு. அந்த வகையில் எதிரியின் தாக்குதலுக்காக காத்திருந்தார்கள்.

**“பெருமானார் தம்முடைய படைவீரர்க்குப்**

**பிறப்பித்தார் கட்டளைகள் “கூச்சல் வேண்டாம்”**

**“ஒருபோதும் முதலில் நீர் தாக்க வேண்டாம்**

**உயிர்ப்பகைவர் தாக்கிய பின் தாக்கு வீரே”[7]**

தானாக முன் சென்று கையில் வைத்திருக்கும் ஆயுதத்தைக் கொண்டு எதிரிகளை தாக்கும் எண்ணம் இல்லாதவர்களாக இருந்தார்கள். இந்த எண்ணத்தின் சிறப்பு, படை அமைக்கும் திறன், நபி பெருமானாரின் ஒட்டுமொத்த தனித்தன்மையையை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

**“தலைவராய் எந்த நாளும்**

**தமை அவர் நினைத்த தில்லை**

**தலைவருள் தலைவர் என்றால்**

**சரித்திரம் மறுத்த தில்லை”[8]**

இந்த வரிகளின் மூலம் ஒரு படைத்தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்திக் காட்டுகின்றார்.

**பாசறையின் சிறப்புகள்**

இஸ்லாம் என்பது சிறந்த உயர்ந்த குணங்களையும், பண்புகளையும் எடுத்தியம்பக் கூடியது. இப்படிப்பட்ட சிறந்த பண்புகளை இஸ்லாமிய இறைத்ததூதர் பெற்றிருந்தார். மக்கா- மதினாவாசி இருருக்கும் இடையே போர் ஏற்பட்டது. தன்னுடைய படையோடு ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கி இருந்தார். அப்படி தங்கி இருந்த இடமானது நல்ல நீருற்று உடைய பகுதியாக இருந்தது. இச்சூழ்நிலையில் எதிரிகளின் படைகள் தங்கி இருந்த பகுதியில் நீர் வறண்ட நிலை காட்சியளித்தது. இதை அறிந்து கொண்ட நபி பெருமானார் தன்னுடைய தோழர்களை அழைத்து அவர்களுக்கு நீர் தருவதற்கான ஏற்பாடு செய்தார்கள்.

**“ஏராளமாய் இங்கே தண்ணீர்! அங்கே**

**எதிரிகளின் பாசறையில் தாகம்! வள்ளல்**

**தாராளமாய் அங்கே அனுமதித்தார்**

**தண்ணீரைப் பகைவீரர் எடுத்துச்செல்ல!”[9]**

அவர்களை எதிரிகள் என்று நபிகளார் பார்க்க முடியவில்லை. முடிந்த அளவிற்கு அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து உதவினார்கள். மறுநாள் தன்னோடு மோதக் கூடிய காழ்ப்புணர்ச்சி அவருடைய உள்ளத்தில் ஏற்படவில்லை என்ற செய்தியை தன் கவி வரியின் மூலம் மு.மேத்தா வெளிப்படுத்துகின்றார்.

மேலும் நாளை நடைபெற இருக்கும் போருக்காக பாசறையில் தூங்கிக் கொண்டு இருக்கக் கூடிய தோழர்களை, சகோதரர்களை அழகிய முறையில் கவனித்துக் கொண்டார்கள். அவர்களை எல்லாம் உறங்க வைத்து தான் ஒருவன் மட்டும் விழித்து இருந்தார்.

**“தோழர்களை வீரர்களைத் தூங்க வைத்தார்**

**துளிப்பொழுதும் தூங்காமல் தாம் விழித்தார்**

**கோலமுகம் பிறை நெற்றி தரை பதித்தார்**

**குளிர் இரவில் தொழுதிறைவன் புகழ் லுதீத்தார்”[10]**

தலைவன் பாசறையில் பாதுகாக்க கூடியனவாகவும் தன்னை சார்ந்து இருக்கக்கூடிய வீரர்களுக்கு சேவகம் செய்பவனாகவும் எதிரிகளுக்கு கருணைக் காட்டக்கூடியவனாகவும் திகழக் கூடிய நிலையில் அவனே சிறந்த தலைவன். இந்த சிறப்புகளை நபிப் பெருமானார் பெற்றிருந்தார்கள். இந்நிகழ்ச்சி தலையானங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற மன்னனின் சிறப்புகளை நினைவு கூறத்தக்கதாக உள்ளது.

**"நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்**

**சிலரோடு திரிதரும் வேந்தன்**

**பலரொடு முரணிய பாசறைத் தொழிலே"[11]**

தன் மனைவியை தன் இல்லத்தில் விட்டு விட்டு தன் படைகளுக்கு சிறந்த வழி காட்டுதல்களை ஏற்படுத்த போர்க்களத்திற்கு சென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் இரவு நேரங்களில் உறங்காது பாசறையில் உறங்கக் கூடிய தன் படைகளுக்கு பாதுகாப்பதாக சுற்றி வருகையில் நெடியவாடையானது நல்வாடையாக தோன்றியது. அதுபோல நபி பெருமானார் தன்னை சார்ந்த தோழர்களுக்கு இரவு நேரத்தில் அவர்களுக்கு தேவையான அத்தனை சிறப்புகளையும் செய்து கொடுத்தார்.

### கருணை நபியும் கைதிகளும்

தன்னுடைய தோழர்களை சிறந்த முறையில் போர்க்களத்தில் ஈடுபடுத்தியதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு போர் வழிமுறைகளையும் போர் தந்திரங்களையும் கற்றுத் தந்தார். ஆனால் இந்த போரின் நோக்கம் என்பது பொருளுக்காகவோ தன் நாட்டின் வளர்ச்சிக்காகவோ இல்லை. மக்களின் பாதுகாப்பிற்காக இந்த போரை நாம் மேற்கொள்வது சரியா என்ற நிலை அவருடைய உள்ளத்தில் அவ்வப்போது ஏற்படுவது வழக்கம். அவர் தான் மேற்கொண்ட போரில் பிணையாமாக பல கைதிகள் கிடைத்தார்கள். அப்படி கிடைத்த கைதிகள் யாரையும் கொள்ளாமல் அவர்களின் வாழ்க்கையை சீரழிக்காமல் சில நிபந்தனைகளை மட்டும் வழங்கினார்கள்.

**"கைதிகளில் பணம் செலுத்த வசதி யில்லார்**

**கற்றிருந்தால் கல்லார்க்குக் கல்வி நல்குச்**

**செய்தார்! பின் விடுதலையும் செய்தார்! கல்வி**

**செல்வத்தும் செல்வமெனச் சிறப்புச் செய்தார்"[12]**

என்ற கவி மூலம் நிபந்தனைகளின் அடிப்படையில் நீங்கள் கற்ற கல்வியை எம் படையில் இருக்கும் ஒவ்வொரு போர் வீரருக்கும் கற்றுக் கொடுங்கள்.அவர்கள் கற்றுக் கொண்டபின் உங்களை நான் விடுதலைச் செய்து உங்கள் நாட்டிற்கு அனுப்பி வைக்கிறேன் என்றார்கள். இவ்வார்த்தை தன்னுடைய எதிரிகளிடம் இருக்கக்கூடிய திறமைகளையும் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கும் முத்தாய்பாய் செயல்பட்டார் என்பதை அறியமுடிகின்றது. மொழிகளையும் வாள் வீசும் தன்மையையும், கல்வியையும் சிறந்த முறையில் கற்றுக் கொடுக்கும் கைதிகளை எந்த விதமான துன்பங்களும் துயரங்களும் இன்றி விடுவிக்கப்பட்டார்கள். இப்படியாக போர்களும், போரின் வெளிப்பாடுகளும் உள்ளத்தில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

### ஆயுதம் காட்டிய அகிம்சை

ஆயுதம் என்பது ஒரு மனிதனின் உயிரைப் பறிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரு வன்மையான பொருள். உயிரைப் பறிக்கப் போகிறோம் என்பது ஆயுதத்திற்கு புரியாது. ஆனால் ஆயுதத்தை பயன்படுத்துவோருக்கு புரிந்தால் மட்டும் ஆயுதத்தின் பயன்பாட்டை நிறுத்த முடியும். ஆனால் அந்த ஆயுதமே அகிம்சையை கையாள நாம் தயாராவோம் என்ற எண்ணத்தை கொண்டு வரக்கூடிய அளவிற்கு ஆயுதங்களை அதிகப்படியாக போர்க்களத்திற்கு நாம் பயன்படுத்துகின்றோம்.

**"ஆயுதம் ஏந்திய பின்தான்**

அவர்களுக்குப் புரிந்தது
அஹிம்சையின் பலம்"[13]

ஆயுதம் ஏந்தி போரிடுவது சிறப்புக்குரியது தான். ஆனாலும் அது பல உயிர்களை கொல்லும் போது வருத்தத்திற்கு உரியது. இதை தடுப்பதற்கான வழியை செவ்வனே செய்வது தான் மாண்புடையது. இதன் வாயிலாக தன்னுடைய தூதுவத்தை நிறுவதோடு மட்டுமல்லாமல் தன்னுடைய ஆயுதங்களை எதிர்த்து போராடிய தன் படைவீரர்களை செவ்வனே சரியான அகிம்சைப் பாதையில் செயல்படுத்துகிறார். தனக்கென ஒரு சரியான அரியாசனத்தை அமைத்துக் கொண்ட வள்ளல் நபிகளின் சிறப்புகளை தம் கவி வரிகளில் பதிவு செய்கின்றார் கவிஞர்.

**முடிவுரை**

இஸ்லாம் என்பது அடிப்படையில் வாளால் பரப்பப்பட்ட மார்க்கம் என்ற ஒரு தவறான புரிதல்களானது நம் சமூகத்தில் நிலவிக் கொண்டு இருக்கின்றது. அடிப்படையில் மக்களைப் பாதுகாப்பதற்காக பயன்பட வாளைத் தவிர அந்த வாள் மக்களின் உயிரைக் குடித்து இஸ்லாத்தை நிலை நாட்டுவதற்கு என்று உருவாக்கப்பட்டது அல்ல. இப்படிப்பட்ட இஸ்லாத்தினுடைய பயணம் என்பது சிறந்த வாழ்வியல்களை கற்றுக் கொடுக்கின்றது. மார்க்கத்தினுடைய எத்தனையோ வலிமார்கள் வந்து சென்று இருக்கின்றார்கள். இறுதியாக இருக்கக் கூடிய நபிபெருமானாருடைய தூதுத்துவம் என்பது 1400 ஆண்டுகளைக் கடந்தும் இன்றளவிலும் உலக அளவில இஸ்லாமானது பரவி செல்கின்றது. இஸ்லாமானது போர் முனையில் பரப்பப்பட்டது அல்ல. உண்மையில் அது உயர்ந்த மாண்புகளால் பரப்ப்பட்டது. வாளால் பரப்பப்பட்டது அல்ல. அன்பால் பரப்பப்பட்ட மார்க்கம். கவிஞரைப் பொறுத்தவரை தன்னுடைய படைப்புகளில் படைப்பின் சாரங்களை தாம் சொல்ல வந்த கருத்துக்களை முழுமையாக சொல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் கவிஞர் மு.மேத்தா. இவர் ஆளுமையாக எடுத்துக் கொண்ட நாயகம் ஒரு காவியம் என்னும் இக்காவியத்தில் நபிகளாரையும் அவர் வாழ்வியலையும் இஸ்லாம் சார்ந்த உயர்ந்த மாண்புகளையும் தன் கவி வரிகளில் சிறப்பாகக் கூறியுள்ளார். போர்கள் என்பது அறம் சார்ந்து இருக்க வேண்டுமே தவிர அது மறத்தைச் சார்ந்ததாக இருக்கக் கூடாது. மறம் சார்ந்ததாக இருந்தாலும் அதில் அறம் சார்ந்தே இருக்க வேண்டும் என்ற கருத்தை தன் கவி வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார். காலம் கடந்தாலும் இவருடைய கவி வரிகள் வைர வரிகளாக நிலைத்து இருக்கக்கூடியது என்பதே கட்டுரையில் உயிர் அமைப்பு எனக்கூறலாம்.

**சான்றெண் விளக்கம்**


1. நாயகம் ஒரு காவியம், மு.மேத்தா, ப.எ 226
2. மேலது ப.எ 167
3. மேலது ப.எ 285
4. மேலது ப.எ 289
5. மேலது ப.எ241
6. புறநானூறு,ஔவை துரைசாமிப்பிள்ளை, பா.எ 72
7. நாயகம் ஒரு காவியம், மு.மேத்தா, ப.எ 262
8. மேலது ப.எ 219
9. மேலது ப.எ 261
10. மேலது ப.எ 261
11. நெடுநல்வாடை, நாராயணப்பிள்ளை, பா.வ 186 – 188
12. நாயகம் ஒரு காவியம், மு.மேத்தா, ப.எ 280
13. மேலது ப.எ 287

**துணைநூற் பட்டியல்**


1. மு.மேத்தா,நாயகம் ஒரு காவியம், இரண்டாம் பதிப்பு – 1995, திருமகள் நிலையம், 55,வெங்கட் நாராயணா ரோடு, தி.நகர், சென்னை -17.
2. முனைவர் சிலம்பொலி, சு.செல்லப்பனார், இசுலாம் இலக்கியச் சாரல், முதற்பதிப்பு – 2011, நேஷனல் பப்ளிகேஷன்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை - 17
3. சீறாச் செல்வச் சிலம்பொலி, சு. செல்லப்பனார், நெஞ்சையள்ளும் சீறா, மீரா பப்ளி கேஷன், யுநு – 103, அண்ணா நகர், சென்னை - 4, முதற்பதிப்பு - 1985
4. ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, ஐந்தாம் பதிப்பு - 1967
5. வித்துவான் எம்.நாராயண வேலுப்பிள்ளை, பத்துப்பாட்டு, முல்லை நிலையம், 43 புதுத்தெரு, மண்ணடி, சென்னை, இரண்டாம் பதிப்பு – 1999.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Thoulath Begam M., (2021) The Trace of Tamil people in Islamism Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:354-361. Cauvery College For Women, Trichy.

**முனைவர் த.அமுதஜோதி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர் 613005

# சிலப்பதிகாரத்தில் தமிழர்களின் அடையாளங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழின் தேசியக் காப்பியம் என்றும் குடிமக்கள் காப்பியம் என்றும் போற்றப்படும் சிலப்பதிகாரத்தில் தமிழர்களின் அடையாளங்களாக இயற்கை வழிபாடு - மாலை வழிபாடு- திருமண சடங்குகள்- மன்றங்கள்- களவுமணம் இவை போன்ற தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் என இயற்கையை வணங்கியமை எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் மலை, காடு, வயல், கடல் என நானிலத்திலும் நான்கு வகை தெய்வங்களுக்கும் வழிபாடுகள் நடைப் பெற்றமை சுட்டப்பட்டுள்ளன. சிலப்பதிகார பெண்கள் மாலை காலத்தில் முல்லை மலரை நெல்லுடன் தூவி மாலை வழிபாடு நடத்தியமை விளக்கப்பட்டுள்ளன. நாள், நட்சத்திரம் பார்த்து திருமணம் நடத்தும் தமிழரின் அடையாளம் சுட்டப்பட்டுள்ளன. சிலம்பில் குறவர், பரதவர் ஆகிய குலங்களுள் திருமணம் ஆகாத ஆடவர்களும், பெண்டிர்களும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் காதல் கொண்டமை விளக்கப்பட்டுள்ளன. ஐவகை மன்றங்கள் இருந்தமையையும் அம்மன்றங்கள் குறை தீர்த்தமையையும் சுட்டப்பட்டுள்ளன.

தமிழின் முதல் காப்பியம் என்றும் முத்தமிழ் காப்பியம் என்றும் போற்றப்படும் சிலப்பதிகாரத்தில் தமிழர்களின் அடையாளங்கள் நிறைந்து காணப்படுகிறது. இயற்கை வழிபாடு, மாலை வழிபாடு, திருமண சடங்குகள்,மன்றங்கள், களவுமணம், ஆகியவை சிலம்பில் தமிழரின் அடையாளங்காளாக இருந்தமையை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

**இயற்கைவழிபாடு**

மனிதன் உலகில் தோன்றிய காலத்தில் இயற்கையாகிய ஐம்பூதங்களையும் வணங்க தொடங்கினான். இடி, மின்னல், தீ, காற்று, ஆகியவற்றை கண்ட மனிதன் அச்சத்தின் காரணமாக இயற்கையை வணங்கத் தொடங்கினான். சிலப்பதிகாரத்தின் தொடக்கத்தில் இளங்கோ வடிகள் இயற்கையை வணங்குகிறார்.

**திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!**

**கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றுஇவ்**

**அம்கண் உலகுஅளித்த லான். 1**

திங்கள், ஞாயிறு, மழை, பூம்புகார் என இயற்கையை வணங்குவதனை காண் முடிகிறது. இவ்வாறு காப்பிய தொடக்கத்திலேயே தமிழனின் அடையாளமான வழிபாட்டு முறையை காணமுடிகிறது.

பழந் தமிழர்கள் முல்லை,குறிஞ்சி,மருதம், நெய்தல் எனும் நான்கு நிலங்களாகப் பாகு படுத்திக் கொண்டனர். அந்நிலங்களில் திருமால்,முருகன், இந்திரன், வருணன் ஆகிய தெய்வங்களை முறையே உருவாக்கிக் கொண்டனர். இதனைத் தொல்கப்பியர்,

**மாயோன் மேய காடுறை உலகம்**

**சேயோன் மேய மை வரை உலகம்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகம்**

**வருணன் மேய பெருமணல் உலகம் 2**

என்ற நூற்பாவின் மூலம் நானிலத்திலும் நான்கு வகை தெய்வங்கள் இருந்தமையைக் காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து பழந்தமிழர்கள் இறைப்பற்று உடையவர்களாக விளங்கினர் என அறிய முடிகிறது. எல்லாவற்றையும் கடந்து நின்ற முழு முதற் கடவுள் ஒருவனைப் பற்றிய கோட்பாட்டினை உடையவர்களாக விளங்கினர் என அறிய முடிகிறது. சிலப்பதிகாரத்தில் நானிலத்திலும் நான்கு வகை தெய்வங்களுக்கும் வழிபாடுகள் நடைப் பெற்றமையை காணமுடிகிறது

**மாலை வழிபாடு**

மாலை வழிபாட்டை சாயங்கால பூசை என்றழைப்பர். பகலவன் மறைவதற்கு முன்னும் பின்னும் நடைபெறும் வழிபாட்டில், ஆண்களைக் காட்டிலும் பெண்கள் மிகுதியாக கலந்து கொண்டுள்ளனர். சங்க காலந் தொட்டு பெண்டிர்கள் மாலைக் காலத்தில் இல்லங்களில் விளக்கேற்றி தங்கள் இல்லுறை தெய்வங்களை நெல்லும் மலரும் தூவி வழி பட்டனர். இதனை நெடுநல்வாடை, குறுந்தொகை, மதுரைக்காஞ்சி,முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. சிலப்பதிகார பெண்கள் மாலை காலத்தில் முல்லை மலரை நெல்லுடன் தூவி வழிபட்டமையை

**சிறுகாற் செல்வன் மறுகில் தூற்ற**

**எல்வளை மகளிர் மணி விளக்கு எடுப்ப 3**

மேலும்,

மலர் அணிவிளக்கத்து மணிவிளக்கு எடுத்து, ஆங்கு

**அலர்,கொடி-அறுகும்,நெல்லும் வீசி**

**மங்கலத் தாசியர் தம்கலன் ஒலிப்ப 4**

எனும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன. இதனை பின்பற்றியே இன்றும் இல்லங்களில் மகளிர் மாலைக் காலத்தில் வழிபாடு செய்வதனைக் காணமுடிகின்றது.

**திருமணம்**

மனித சமூகத்தில் நாகரிகம் வளர வளர அவனின் பண்பாடும் வளரத்தொடங்கியது . நாடோடிகளாய்த் திரிந்த மனிதர்கள் ஒரு சமுதாயமாய் வாழ அடிப்படையாய் இருந்தது திருமணம். ஒரு குடும்பம் என்ற நிலையில் பல குடும்பங்கள் சேர்ந்து சமூகமானது. சங்க காலத்தில் களவு மணம் அதிகமாக காணப்பட்டது. இதனைச் சங்கப்பாடல்கள் பலவற்றின் மூலம் அறியலாம்.

திருமணமுறை, சடங்காக உருவெடுத்தன. இதனையே தொல்காப்பியர்,

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப 5**

சிலப்பதிகாரத்தில் கூறப்படும் திருமண நிகழ்ச்சியில் கோவலனின் பெற்றோர்களும், கண்ணகியின் பெற்றோர்களும் ஒரு நல்ல நாளில் மணவிழா காண வேண்டி மிக சிறப்பான முறையில் திருமணம் நிகழ்த்தினர் என்பதை,

**நீல விதானத்து , நித்திலம் பூம் பந்தர்க்கீழ்,**

**வான்ஊர் மதியம் சகடு அணைய, வானத்துச்**

**சாலி ஒருமீன் தகையாளைக்,கோவலன்**

**மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்**

**தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பு என்னை ! 6**

எனும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன. நாள், நட்சத்திரம் பார்த்து திருமணம் நடத்தும் தமிழரின் அடையாளத்தை காணமுடிகின்றது.

**திருமணச் சடங்குகள்**

சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப் பட்ட ஒரு வரன்முறை ஆகும். மனிதனும் மனித சமூகமும் வாழ்க்கையை நெறிபடுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒரு வழிமுறை என்று கூட கொள்ளலாம். அவ்வகையில் திருமணத்திற்கு முன்பு செய்யும் சடங்கு முறைகள் சில உள்ளன. அவற்றுள் ஒன்று முளைப்பாரி வைத்தல் ஆகும்.திருமணத்திற்கு முன்பு ஒன்பதாம் நாள் பதியமிடுவர். அது நல்ல முறையில் வளர்ந்து செழித்திருப்பது போல மணமக்களின் வாழ்வும் செழிக்கும் என்பது பழந்தமிழர்களின் நம்பிக்கையாகும்.

நலங்கு வைத்தல் என்றொரு முறையும் பின்பற்றப்படுகிறது. மணப்பெண்ணை மனையில் அமரச் செய்து மங்கலப் பொருட்களான மஞ்சள்,குங்குமம், பூ ஆகியவை வைத்து அவளது திருமண வாழ்வு வளம் பெற்று சிறந்த முறையில் அமைய மங்கல மகளிர் வாழ்த்துவர். இதே போன்று சிலம்பில் கோவலன்,கண்ணகியின் திருமண நிகழ்ச்சியில் மகளிர் மங்கலப் பொருட்களை ஏந்தியவராக விளங்கினர் என்பதை

**விரையினர், மலரினர், விளங்கு மேனியர்,**

**உரையினர், பாட்டினர், ஒசிந்த நோக்கினர்**

**----------------------------------------------------------**

**போதொடு விரிகூந்தற் பொலன் நறுங்கொடி அன்னார் 7**

எனும் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.இச்சடங்குகளை வழி வழியாக இன்றும் நாம் பின்பற்றி வருகின்றோம்.

**களவு மணம்**

சங்க காலந் தொட்டே களவு மணம் வழக்கில் இருந்து வந்துள்ளது. சிலம்பில் குறவர், பரதவர் ஆகிய குலங்களுள் திருமணம் ஆகாத ஆடவர்களும், பெண்டிர்களும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் காதல் கொண்டதைக் காணலாம்.

குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த குறமகளிர் குருவி, கிளி முதலிய பறவைகளை ஓட்டுவதற்காகத் தினைப் புனத்திற்குச் சென்று வருங்கால் மலை நாட்டு வெற்பர்களைச் சந்திப்பர். குறமகளிரும் வெற்பர்களும் காதல் கொண்டனர் 8

நெய்தல் நிலக் காதலர்கள் தங்கள் காதலியர்க்கு முத்துக்களை கையுறையாக காதற்பரிசாக அளிப்பர்.9 களவின் போது காதலர்கள் தம்முள் புணர்வது நிகழும்.

தமிழர்களின் களவு வாழ்க்கை இவ்வாறு இருந்தமையை சிலம்பின் வழிஅறிய முடிகிறது.

**மன்றங்கள்**

அக்காலத்தில் ஒவ்வொரு கிராமத்தின் நடுவே மன்றங்கள் வைத்து இருந்தனர். சிலம்பில் ஐவகை மன்றங்கள் இருந்தது என்பதை அறியலாம். அவையாவன வணிகர்கள் பலரும் தங்கள் பண்டங்களை பாதுகாக்கும் வெள்ளிடை மன்றம், நோயினால் பாதிக்கப்பட்டோரும்,உடல் ஊனமுற்றோரும் நீராடும் பொய்கையின் அருகேயுள்ள இலஞ்சி மன்றம் , பித்தர்கள் பெருந்துன்பம் அடைவோர், பேயினால் துன்ப படுவோர் போன்றோரின் துன்பங்களைப் போக்கும் நெடுங்கல் நின்ற மன்றமும், பிறருக்கு துன்பம் செய்யும் மனிதர்களை புடைத்துதின்னும் பூதச் சதுக்க மன்றம், அரசியலில் அநீதி வரும் பொழுது துன்பக் கண்ணீர் விடும் பாவை மன்றம் என ஐவகை மன்றங்கள் இருந்தமையைக் காண முடிகின்றது.

இம் மன்றத்தில் மறவர்கள் தாங்கள் கவர்ந்து வந்த ஆநிரைகளைப் பகிர்ந்து கொண்டனர். இவ்வகைப்பட்ட மன்றங்கள் அனைத்தும் மரத்தடியின் கீழ்

அமைந்திருந்தன. வழிச் செல்வோர் தங்கள் களைப்பினை போக்கும் இடமாகவும்,பாதிக்கபட்ட மக்களுக்கு நீதி வழங்கும் இடமாக இம்மன்றங்கள் இருந்தன.

நம் முன்னோர்கள் காரண காரியத் தொடர்போடு எல்லாச் செயல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

**அடிக் குறிப்பு:**

1. சிலப்பதிகாரம்: 1,1-3
2. தொல் .பொருள்.நூ-5
3. சிலப்பதிகாரம்:5,18-19
4. மேலது நூல் கா.6: 123-125
5. தொல் கற்பு : 145
6. சிலப்பதிகாரம் 1,49- 54
7. மேலது நூல் 1:55-6
8. மேலது நூல் 24: 4-6
9. மேலது நூல்,7:6
10. மேலது நூல் 7:29

**துணை நூற் பட்டியல்:**


1. சிலப்பதிகாரம் புலியூர் கேசிகன் உரை
2. தொல்காப்பியம் இளம்பூரணர் உரை



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Amuthajothy T, (2021) Identity of Tamilians in Silapathikaram, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:362-365. Cauvery College For Women, Trichy.

**முனைவர்.ஆ.இரா.பாரதராஜா,**
பேராசிரியர், தமிழ்த்துறை (EFL),
எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம்,
இராமாபுரம், சென்னை-600089.

# திருக்குறளில் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள் என்ற தலைப்பின் கீழ் "திருக்குறளில் தமிழர் அடையாளங்கள்" என்ற தலைப்பில் இந்த ஆய்வுக்கட்டுரை அமைகிறது. தமிழர்கள் தங்களுக்கான அடையாளங்களாகப் பலவற்றை நிறுவிச் சென்றாலும், வள்ளுவர் வாயிலாகச் சிலவற்றை மட்டும் ஆய்வு எல்லை கருதி விளக்கப்பட்டுள்ளது.

இந்த அடையாளப்படுத்தும் தமிழர் பண்பாட்டியல் கூறுகளாக அன்புடைமை, இனியவை கூறல், ஒழுக்கம் உடைமை, கல்விச்சிறப்பு-கல்லாமை இழிவு, அழுக்காறாமை, புறங்கூறாமை, ஈகை, இன்னா செய்யாமை, கொல்லாமை-புலால் மறுத்தல், மானம்-புகழ், மருந்து, விருந்தோம்பல் ஆகிய உட்தலைப்புகளில் திருக்குறள் கொண்டும் இணைச் சான்றாதாரங்கள் கொண்டும் விளக்கப் பெற்றுள்ளன. இத்தலைப்புகட்கு உட்பட்ட செய்திகள், அக்காலத்தமிழர்கள் உயிரெனப் போற்றிய உயர்குணங்கள் அவர்களுடைய வாழ்வியல் அடையாளங்களாக் அன்று மட்டுமின்றி இன்றும் தொடர்கின்றன.

எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது என்ற வாழ்வியல் வழிகாட்டும் அடையாள நெறிமுறைகள் தமிழ் இலக்கியங்களில் மிகுந்து கிடக்கின்றன. அவற்றை முழுதும் பட்டியலிட இயலாது என்பதால் தேவையான சிலவற்றைச் சான்று காட்டப் பெற்றுள்ளது. திருக்குறள் தமிழர் தம் வாழ்வியல் அடையாளம் என்ற நோக்கோடு அவற்றுள் சிலவற்றை மட்டும் கொண்டு இந்த ஆய்வில் நிறுவப்பெற்றுள்ளது.

**பண்பியல் அடையாளம்**

தமிழர்களின் வாழ்வியலில், பண்பியல் என்ற நற்குணவியல் பிரிக்க முடியாத அடையாளங்களுள் ஒன்றாகும். மற்றைய நாட்டினர், மொழியினரிடம் இல்லாத உயர் பண்புகள் தமிழர்களின் தனித்த அடையாளங்களாக அன்று முதல் இன்றுவரை அடையாளப் படுத்தப்பட்டு வருகின்றன. இதனையே

**"தமிழன் என்றோர் இனமுண்டு!**

**தனியே அவற்கொரு குணமுண்டு!**

**அமிழ்தம் அவனுடை மொழியாகும்!**

**அன்பே அவனுடை வழியாகும்"- என**

என- நாமக்கல் வெ.இராமலிங்கனார் நவின்றுள்ளார்.

பண்பியல் என்பதன் உள்ளடக்கங்களாகக் கீழ்க் காண் தலைப்புகளில் விளங்கக் காணலாம்.

**அன்புடைமை**

உலகில் உள்ள உயிரினங்களைப் போற்றுகின்ற உயர்ந்த உத்தமக் குணத்திற்கும், அனைத்துச் சமயங்களின் மூலக்கருத்திற்கும், துணை நிற்பது அன்புடைமையே! அஃது எல்லா இலக்கியங்களிலும் போற்றப்படுகின்றன எனினும் திருக்குறளில் ஓர் அதிகாரம் முழுவதும் சிறப்பித்துப் போற்றப்பட்டுள்ளது. அன்பின் சிறப்பை அந்த அதிகாரத்துள் பல குறட்பாக்களில் கூறப் பெற்றிருப்பினும்,

**அறத்திற்கே அன்புசார்பு என்ப, அறியார்**

**மறத்திற்கும் அஃதே துணை - (திருக்குறள்:76)**

என்ற குறள், "அன்பு அறம் செய்தலுக்கு மட்டும் துணையாக உள்ளது என்பர். இஃது அறியாதவர் கூற்று. மறம் என்று சொல்லக் கூடிய வீரச் செயல்களுக்கும், மாற்றானிடம் கருணை காட்டக் கூடிய பண்பாகிய அன்பே துணை நிற்கிறது" என்பார் வள்ளுவர். இது **"மறத்திலும் அறம்"** என்ற தமிழரின் தனித் தன்மைக்கு அடையாளச் சான்றாகும்.

**"இல்லானுக்கு அன்பு இங்கு, இடம் பொருள் ஏவல் மற்றும்**
**எல்லாம் இருந்தும், அவர்க்கு என் செய்யும்?" -(நன்னெறி:15:1-2)**

இஃது, அன்பு இல்லாதவரிடத்து இடம், பொருள், ஏவலாளர் முதலிய எல்லா வசதிகள் இருந்தும் அவற்றால் என்ன பயன்? – என்பதாம். இந்த அன்பு தமிழரின் முதன்மை அடையாளங்களில் ஒன்று.

**இனியவைகூறல்**

ஒருவன் எவ்வளவு நற்செயல்களைச் செய்தாலும் இனிய சொல் பேசாமல் கடுஞ்சொற்களைக் கூறுவது, இனிக்கும் இனிய கனி இருக்கும் போது, புளிக்கும் காய்களைப் போன்ற கடுஞ்சொற்களைப் பேசுவது ஏன்? – என வள்ளுவர் வினவுகிறார்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்**

**கனியிருப்பக் காய் கவர்ந்தற்று -(திருக்குறள்:100)**

இன்சொல்யாருக்கும் இன்னல் விளைக்காது. இதனை,

**"இன்சொல் இடர்ப்படுப்பது இல்"- (பழமொழி-277:4.)**

சான்றோர் பழிக்கக் கூடிய சொற்களைப் பேசாதே என்பதனை

**"பழிப்பனபகரேல்"- (ஆத்திசூடி-77)** எனக் கூறுகிறது.

**ஒழுக்கம் உடைமை**

ஒழுக்கம் என்பது நற்பண்புகளின் தொகுப்பாகும். ஒழுங்குடன் நேர்நெறி நின்று வாழ்வதாம்.

**"ஒழுக்கம் என்பது பிடித்த நன்நெறிகளை மறவாமல் மரணாந்தம் (சாவுவரை) மட்டும் கொண்டு ஒழுகுதல்"**

**(பரிமேலழகர்-அற இலக்கியக் களஞ்சியம்-281)**

**நன்றி அறிதல் பொறையுடைமை, இன்சொல்லோடு**

**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை-கல்வியோடு**

**ஒப்புரவு ஆற்ற அறிதல், அறிவுடைமை,**

**நல் இனத்தாரோடு நட்டல்-இவை எட்டும்**

**சொல்லிய ஆசாரவித்து-(ஆசாரக் கோவை-1) ஆசாரம்-ஒழுக்கம்**

"நற்பண்புகள் பொருந்திய உயர் குணமாகிய ஒழுக்கம் உடைமையே எல்லோருக்கும், மேன்மையைத் தருவதால், அதனை உயிரினும் மேலானதாகக் கருதிக்காக்க வேண்டும், என வள்ளுவர் விளக்குவார்.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப் படும் - (திருக்குறள்:131)**

**கல்விச்சிறப்பு-கல்லாமை இழிவு**

**கல்வியின் சிறப்பு, கல்லாமையின் இழிவு, கேள்வி ஞானம், அறிவுடைமை**-என நால்வகைத் தலைப்புகளில் கல்வி அறிவின் சிறப்புகளை எடுத்துரைப்பார் வள்ளுவர். வேதக்காலந்தொட்டு-அரசர் காலந்தொடர்ந்து இக்காலம் வரையில் கல்வியறிவின் தேவைகளும் சிறப்புகளும் எடுத்துரைக்கப்படுகின்றன. கல்வி அறிவின் சிறப்பை எடுத்தியம்பாத இலக்கியங்களோ, பெருமக்களோ இல்லை எனலாம். **அந்த அறிவுறுத்தல்களின் அடையாளமே இன்றைய தமிழகத்தின் கல்வி வளர்ச்சியும் எழுச்சியும் ஆகும்**. கல்வி அதிகாரத்தில் உள்ள எந்தக் குறளும் ஒதுக்கிவிட முடியாத பெருமைபெற்றவை! நல்ல நூல்களைக் கற்றலும், கற்றவழி நிற்றலும் நன்று என்று வள்ளுவர் கூறுவார். அதனை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக - (திருக்குறள்:391)**

என மொழிவார்.

**கல்விக் கழகு கசடற மொழிதல் - (வெற்றிவேற்கை-2)**

கல்லாதவர்கள் விலங்குகளுக்கு ஒப்பாவார் என்பதனை வள்ளுவர்,

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**

**கற்றாரோடு ஏனை யவர் -(திருக்குறள் -410)**

**ஓதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம்-(கொன்றைவேந்தன்-91)**

செல்வங்களில் சிறந்தது செவிச் செல்வமாகும் என்பதனை வள்ளுவர்,

**செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**

**செல்வத்துள் எல்லாம் தலை -(திருக்குறள்-411)**

**கற்றலின் கேட்டலே நன்று -(பழமொழி-143:4)**

அறிவுள்ளவரே எல்லாச்சிறப்புகளையும் உடையவராவர்

அறிவற்றவர்கள் எச்செல்வம் உடையவராயினும்

அவர் ஒன்றும் இல்லாதவரே என வள்ளுவர் நிறுவுவார்.

**அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**

**என்னுடைய ரேனும் இலர்- (திருக்குறள்-430)**

**திருவினும் திட்பமே நன்று -(பழமொழி-136:4)**

**அழுக்காறாமை (பொறாமைக்குணம்)**

தீயகுணங்கள் எல்லாவற்றிலும் மிகத்தீய குணமாக **அழுக்காறு** எனப்படும் பொறாமைக்குணத்தை வள்ளுவர் கடிந்துரைக்கிறார். "பிறருக்குக் கொடுப்பதைப் பார்த்துப் பொறுக்காமல், கொள்ளும் கொடிய பொறாமைக் குணம் அவனை அழிப்பது மட்டுமன்றி, அவனுடைய சுற்றத்தாரும் உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாமல் கெட்டு அழிவர்" – எனக் கூறுகிறார். அத்தகைய கொடிய தீக்குணம் பொறாமையாகும்.

**கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**

**உண்பதூஉம் இன்றிக் கெடும்- (திருக்குறள்:166)**

இதனை ஔவையார், **ஔவியம் பேசேல்-(ஆத்திசூடி-12)** என்பார்

பொறாமை கொண்டு பேசாதே என்பதே இதன் பொருளாம்..(ஔவியம்-பொறாமை)

**மன அமைதி உடல் நலம் தரும்**

**பொறாமையோ எலும்புருக்கியாகும் -விலியநீதிமொழி-14:30)**

**புறங்கூறாமை**

பண்டைக்காலத்தில் புறங்கூறுதல் பெருங்குற்றமாகவும், மாபாதகங்களுள் ஒன்றாகவும் சுட்டப் பெற்றது,

**“யாவரையும் இகழ்ச்சியானவற்றைப் புறத்து உரையாமை” – மணக்குடவர் (அ.இ.க-பக்-191)**

“**புறங்கூறுதல் மிகவும் கொடுமையான இழிசெயல்**” என்பதனை,

“ஒருவன் புறம்பேசி வாழ்வதைவிட, (அந்த இடத்தில் இல்லாத ஒருவரைப்பற்றி இழிவாகப் பேசுதல்) செத்துப் போதல் சிறந்தது. அச்செயல் அறநூல்கள் கூறும் நன்மையைக் கொடுக்கும்” – என வள்ளுவர் வழுத்துவார். **“புறங்கூறலைவிடச் செத்துப்போ**” என வள்ளுவர் கூறுவது, அச்செயலின் இழிவை நன்கு புலப்படுத்துகிறது. இதனையே ஔவையார்,,

**பிறர்மேல் பழிதூற்றுதலை அகற்று என்பார்**

**கௌவை அகற்று -(ஆத்திசூடி-43) (கௌவை-பழிச்சொல்)**

**புறஞ்சொல் போற்றுமின்-(சிலம்பு -வ.கா:186)**

**ஈகைப்பண்பு (கொடைத்தன்மை)**

**“இல்லையென யாசித்துவந்தோர் அனைவருக்கும் நிறுத்தாது கொடுத்துக்கொண்டே இருப்பது ஈகை”-மணக்குடவர் -(அ.இ.க.பக்:479)**

இல்லார்க்கு ஈவதே கை என்பார் வள்ளுவர்

**ஈகை, கொடை, அறம், ஐயம், வேளாண்மை, தானம், வழங்கல், அளித்தல்**- எனப் பலவாறு சொல்லப்பெறுகின்ற வழங்கும் கொடைக் குணம் கடையேழுவள்ளல்களின் வாழ்வியல் பண்பை கொடைக்குணக் கொள்கையை நிலைநிறுத்தும். பண்டைய அரசர்கள் கொடை கொடுத்தலை அறத்தொழிலாக, கடமையாகக் கருதிச் செய்தனர். தமிழ் இலக்கியங்களும் ஈகை குணத்தைப் பெரிதும் போற்றின. இன்றைய கால கட்டத்திலும் கொடுக்கும் குணம் பெரிதும் போற்றப்படுகிறது. **வெள்ளம், வறட்சி, பஞ்சம், பசி, நோய், இயற்கைச் சீற்றங்கள், கல்வி, மருத்துவம்** போன்ற பல காரணிகளால் அவதியுறுவோர்க்கு அரசு, தனியார் தொண்டு நிறுவனங்கள், தனிநபர் எனப்பலவகையிலும் உதவி செய்து ஈகைக் குணம் – இறந்து விடவில்லை என்பதை நிறுவிக் கொண்டிருக்கின்றனர். இதை அன்றே வள்ளுவர்,

**சாதல் போலத்துன்பம் ஏதும் இல்லை. ஆனால், வறியவர் ஒருவர் யாசிக்கும் போது இல்லை எனச் சொல்லும் கொடிய நிலைவருமானால், சாதல் கூட இனிமையான செயலாக இருக்கும்** – என்பார்.

அதாவது, இரப்போர்க்கு இல்லை என்பதை விட இறந்து மடிவது இனிமையானது-எனக்கூறி ஈகையின் மேன்மையை நிறுவுவார்.

**சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**

**ஈதல் இயையாக் கடை -(திருக்குறள்:230)**

**தானம் செய்மின் –(சிலம்பு-வ.கா:190)**

**அறம் செய விரும்பு-(ஆத்திசூடி-1)**

**இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தார்- (நல்வழி-2:3)**

**‘ஈவது நன்று தீது ஈயாமை’ – (சிறுபஞ்சமூலம்-99:1)**

கொடுக்காத கருமியிடம் கிடைத்த செல்வம், நாய் பெற்ற முழுத் தேங்காய் வீணாவது போன்றதாகும்.

**நாய்பெற்ற தெங்கம்பழம்-(பழமொழி:151-4)**

கொடுக்கக் கொடுக்கக் குறையும் என்று நினைப்பவர்கள்

**இறைக்க இறைக்கக் கிணறு நீர்சுரக்கும் என்பதை அறியார் போலும். கிணறுபோல் செல்வமும்**

**கொடுக்கக் கொடுக்கப் பெருகும் என்பதாம்.**

**"இறைத்தோறும் ஊறும் கிணறு-(பழமொழி:44-4)**

**"ஒருவன் முயற்சி செய்து சேர்க்கும் பொருள்யாவும்**

**இல்லார்க்கு ஈந்து உதவுவதற்கே" – என வள்ளுவர்**

**'செல்வத்தின் பயனே ஈதல்'- என்று விளக்குவார்.**

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**

**வேளாண்மை செய்தற் பொருட்டு -(திருக்குறள்:212)**

மேற்காண் கருத்துகள் யாவும் ஈகையின் சிறப்புகளை, தமிழரின் வாழ்வியல் அடையாளங்களை நிறுவுகின்றன.

**இன்னா செய்யாமை:**

ஒருவர் நமக்கு எவ்வளவு தீமை செய்யினும் நாம் அவருக்குத் தீங்கு செய்யாமலிருத்தலே சிறப்பு. அதைவிட அவர் செய்த தீமைகளை மறத்தலும் மன்னித்தலும் நன்மை செய்தலும் மிகுந்த சிறப்புடைமையாம். மனிதகுலம் மட்டுமன்றி எந்த ஓர் உயிர்க்கும் தீங்கு செய்யாமையே அறம் ஆகும்.

ஓர் உயிருக்குத் துன்பம் நேரும்போது அவ்வுயிர்படும் அவதியைக் கண்டு வருந்தி, தன் உயிருக்கு ஏற்பட்ட துன்பம் போல் எண்ணிக் காப்பாற்றாதவன், அறிவுடையவனாக இருந்தும் என்ன பயன் உண்டு? (எதுவுமில்லை) இதனை,

**அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்**

**தந்நோய்போல் போற்றாக் கடை -(திருக்குறள்:315)**

என வள்ளுவர் வினவுவார். மேலும் தவறு ஒருவன் செய்தால் அவனுக்கு உடனே தண்டனை தானே கிடைத்துவிடும் என்பார்.

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**

**பிற்பகல் தாமே வரும் -(திருக்குறள்-319**)

**முற்பகல் கண்டான் பிறங்கேடு, தங்கேடு**

**பிற்பகல் கண்டுவிடும் -(பழமொழி-130:3-4)**

இவையாவும் இன்னா செய்யாத தமிழரின் அடையாள அறிவுறுத்தல்களாம்.

**கொல்லாமை-புலால்மறுத்தல்**

எந்த உயிர்களையும் கொல்லாமை, உயிர்களைக் கொன்று உண்ணாமை ஆகியன ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாம்.

**'ஐயறிவு உடையன முதல் ஓரறிவு உடையன ஈறாய் உயிர்களைச் சோர்ந்தும் கொல்லுதலைச் செய்யாமையே கொல்லாமை – (பரிமேலழகர் (அ.இ.க.பக்க.568)**

**ஊன் உண்டலை ஒழித்தலே – புலால் மறுத்தல் -(பரிமேலழகர்-(அ.இ.க.பக்:572)**

மேற்காண் கூற்றுகள் மூலம் உயிர்க்கொலையும் இறைச்சி உண்ணலும் பெரும்பாதகச் செயல்களாகக் கொள்ளப் பட்டுச் சொல்லப்பட்டுள்ளன. **புத்தம், சமணம்** போன்ற சமயங்கள் உயிர்க்கொலையைப் பெரிதும் வெறுக்கின்றன.

தான் உயிர் தப்பிக்கலாம் என்ற நிலைவந்தாலும், தன் உயிர்போகும் நிலை வந்தாலும் எவ்வுயிரையும் கொல்லக்கூடாது என்பதனை வள்ளுவர்,

**தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது**

**இன்னுயிர் நீக்கும் வினை – (திருக்குறள்:327)**

இது "எவ்வுயிரையும் கொல்லாதவனை, புலால் உண்ணுதலை மறுத்தவனை உயிர்கள் யாவும் கைகூப்பி வணங்கும்" என்பதாம்..

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைக்கூப்பி**

**எல்லா உயிரும் தொழும் -(திருக்குறள்:260)**

**ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்- (சிலம்பு-வ.கா:190)**

**மானம் – புகழ்**

தமிழர்களின் தனிச்சொத்து தன்மானம். அஃது இல்லையேல் இறப்பதே சிறப்பு என எண்ணினர். **போரானாலும், வாழ்வானாலும்** மானத்தையே உயிரெனப் போற்றினர். வள்ளுவரும் இதனைப் பெரிதும் போற்றியுள்ளார்.

**"தன்நிலையிலிருந்து தாழாமையும், தெய்வத்தால்**

**தாழ்வு வந்துழி வாழாமையும் மானம் ஆம்" -(பரிமேலழகர்-அ.இ.க.பக்:612)**

மானம் இழக்கின்ற அளவிற்குத் தமக்குக் கேடு வந்து விட்டதே, என நினைத்து உயிரை இழந்தவர் புகழை, உலகம் எந்நாளும் போற்றும்.

**இளிவரின் வாழாத மானம் உடையார்**

**ஒளிதொழுது ஏத்தும் உலகு – திருக்குறள்:970**

உயிரை விடவும் உடலை விடவும் மானமே பெரிது"- என நீதிநெறிவிளக்கம் கூறுகிறது.

**மானம் பெரிதென உயிர்விடுவான்**

**மற்றவர்க் காகத் துயர்படுவான்**

**தானம் வாங்கிடக் கூசிடுவான்**

**தருவது மேல் எனப் பேசிடுவான் -(நாமக்கல் வெ.இராமலிங்கனார்)**

இக்கருத்துகள் தமிழர்கள் மானத்தின் அடையாளங்களை நிலை நிறுத்துகின்றன.

புகழோடு வாழ்வதற்கு நற்பண்போடு நற்செயல்களையும் ஆற்றினால் மட்டுமே புகழ் பெற முடியும். **"நிலையற்ற உலகத்தில் நிலையாக இருக்கக் கூடியது புகழ் ஒன்றே"** என்பார் வள்ளுவர். இதனை,

**ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**

**பொன்றாது நிற்பதொன்று இல் – (திருக்குறள்-233)**

எனக் கூறி உள்ளார்.

**இசையின் பெரியது ஓர் எச்சம் இல்லை -(முதுமொழிக்காஞ்சி 6:8)**

**மருந்து**

தமிழர்க்கென மருத்துவம் உண்டு. **சுமார் 2000-**ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இருந்த **சித்த மருத்துவம்** இன்றளவும் செயல் முறையில் உள்ளது. **மத்திய, மாநில அரசுகள்** அதி முன்னுரிமை அளித்துப் போற்றுகின்றன. நோயின் தன்மை அறிந்து, அதன் காரணத்தை அறிந்து, அதைப் போக்கக் கூடிய வழியை அறிந்து ஏற்ற மருத்துவத்தைச் செய்ய வேண்டும். மருந்தென எதுவும் தேவையில்லை; சரியான உணவை முறைப்படி அருந்தினால் நோயே வராது; **உணவே மருந்து** போன்ற அரிய செய்திகளைத் தமிழர்கள் விட்டுச் சென்றுள்ளனர். இதனையே வள்ளுவர்,

**நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்**

**வாய்நாடி வாய்ப்பச் செயல் – (திருக்குறள்-948)**

**நோய்க்கு இடம் கொடேல் – (ஆத்திசூடி-76)**

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**

**அற்றது போற்றி உணின் -(திருக்குறள்-942)**

**மீதூண் விரும்பேல்-(ஆத்திசூடி-91)**

**அளவுக்குமிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு – (பழமொழி)**

**விருந்தோம்பல்**

வீட்டுக்குப் புதிதாக வருவோரையும், பசியால் வருவோரையும், விழாக்காலத்தும் உண்மை அன்போடு உணவிட்டு உபசரித்தலே விருந்தோம்பலாம். **விருந்தோம்பலைப் பண்பாட்டின் அடையாளமாக, அன்பின் உச்சமாகப் போற்றி வந்தனர்**. இதை எல்லா இலக்கியங்களும் இயம்புகின்றன. வள்ளுவர் ஓர் அதிகரத்தையே படைத்து அளித்துள்ளார். அரசர்கள் விருந்தளித்து உபசரித்தலின் தொடர்ச்சியாக இன்றைய அரசுகளும் விருந்தோம்பலைப் போற்றி உபசரிக்கின்றன.

அக்காலத்தில், வந்த விருந்தினரை உரிய விருந்தளித்து, உபசரித்து அனுப்பிவிட்டு, அடுத்த விருந்தினர் எப்பொழுது வருவார் எனக் காத்திருப்பார்களாம். என்னே ஓர் உயரிய பண்பாட்டுப் பரிணாம அடையாளம் தமிழர்களுடையது! இதனை,

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத்த வர்க்கு –(திருக்குறள்-86)**

இப்படி, உயர்குணம் உள்ளவர்களை வானுலகத் தேவர்கள் நல்விருந்தினர்களாக எதிர்பார்த்துக் காத்திருப்பராம். இதனையே வள்ளுவம் நிறுவுகிறது.

**விருந்து இல்லோர்க்கு இல்லை, பொருந்திய ஒழுக்கம் -(கொன்றை வேந்தன்-83)**

**நிறைவுரை:**

தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளங்களாக, திருக்குறளில் தமிழர் அடையாளங்கள் என, சில முக்கியத் தலைப்புகளில் கருத்துகள் பதிவு செய்யப் பெற்றுள்ளன. மேற்காண் திருக்குறள் க்ருத்துகளுக்கேற்ப வேறு சில இலக்கியச் சான்றாதாரங்களும் தரப் பெற்றுள்ளன. ஒவ்வொரு தலைப்பின் சாரங்களும் இன்றும் தமிழர்தம் இதயங்களில் பதிவிடப் பெற்றுள்ளன. **வெளிநாடு வாழ் தமிழர்களால் – தம் மரபியல் பண்பாட்டு அடையாளங்களைப் பொங்கல், ஆயுதபூஜை, இறைவழிபாடு, சடங்குகள், சம்பிரதாயங்கள் யாவும் இன்றும்** பின்பற்றப்பட்டுக் கொண்டாடப் பெற்று வருகின்றன. **ஏறுதழுவல் (ஜல்லிக்கட்டு)** பற்றிய வீரச் செய்திகள், போற்றப்பெறுவதே, தமிழர்களின் வாழ்வியல் அடையாளங்களாம். அவை இலக்கியங்கள் வாயிலாகவே தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன எனின் அவை மிகை ஆகா என்பதே உண்மை.

**சொல் விளக்கம்**:

அ.இ.க. – அற இலக்கியக்களஞ்சியம், சிலம்பு.வ.கா - வரந்தருகாதை

**துணைநின்ற நூல்கள்:**


1. திருக்குறள் பொக்கிசம்- மதுரை காமராாசர்பல்கலைக்கழகம்-2002
2. அற இலக்கியக் களஞ்சியம் – க.ப.அறவாணன், தமிழ்க்கோட்டம், சென்னை-29 – 2008.
3. நீதிநூல்கள்-வளர்மதி-பூமகள் பதிப்பகம், கரூர்-2001
4. சிலப்பதிகாரம் : புலியூர்க்கேசிகன், கங்கை புத்தக நிலையம், சென்னை- 17-2012.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Bharatharaja A.R., (2021) Identity of Tamilans in Thirukural, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:366-373. Cauvery College For Women, Trichy.

**முனைவர்.கோ.விஜயலெட்சுமி.**
உதவிப் பேராசிரியர்.
தமிழாய்வுத் துறை.
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி.
திருச்சிராப்பள்ளி-2.

# கம்பராமாயணம் புலப்படுத்தும் போர் நெறிகள்

**ஆய்வுச்சுருக்கம்:**

கம்பன் என்றொரு மானிடன் பிறந்த பெருமைக்குரியது.தமிழ்நாடு என்று பெருமைப்பட்டுக் கொள்கின்றான் பாரதி .ஆம்! கம்பன் மானுடத்தைப் பாடிய கவிஞன்! “மானுடம் வென்றதம்மா” ! என்று பாடுகின்றான்.மனிதன் வெற்றி பெற வேண்டும் என்பது கம்பனின் குறிக்கோள்! கம்பன் தனது பாத்திரங்களைச் சராசரி மனித உணர்வுகளுடைய பாத்திரங்களாகப் படைத்துள்ளான். போர்க்களத்தில் மாயா ஜாலங்கள் பேசப்பட்டாலும் மானுடமே உயர்ந்து விளங்குகின்றது.

மறத்தையும் அறத்தையும் இரு கண்களாக படைக்கப்பட்ட இராமாயணத்தில் இரண்டுமே உயிர் உடல் போல கம்பர் அமைத்துள்ளார் என்பது உண்மை.

மனித இனமாகிய பயிரை வளர்க்கின்ற நதியாக தம்முன்னே அறநெறிக் கருத்துக்களையும் வாழ்வியல் கூறுகளையும் கொண்டதாகத் திகழும் இராமகாவியம்.

**“அறத்தின் வடிவாகிய இராமன் மட்டுமல்லாது மறத்தின் பாற்பட்ட அரக்கர்களும் அறவொழுக்கம் பற்றி பேசுகின்றனர்.இது காப்பியத்தின் தனிச்சிறப்பாகும்”** .(1)

போர் வீரர்கள் போரில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் போர் புரிவதற்கு முன் வஞ்சினம் கூறும் திறன் பகைவனை அழிக்காமல் மன்னித்தருளும் மாண்பு போர் தொடங்கும் முன்னர் எதிரியின் பக்கம் நியாயம் தெரிய அனுப்பும் தூது. பெண்ணுடன் போர் புரிதல் பேதமை அடைக்கலம் என்று வந்தாரை கடைசி வரை காக்கும் பண்பு போர்க்கலையின் பல்வேறு நிகழ்வுகளைப் படம் பிடித்துக்காட்டி அறம் உரைக்கிறார் கம்பர்.(2)

**முன்னுரை:**

**“கல்தோன்றி மண்தோன்றா காலத்தே**

**வாளொடு முன் தோன்றிய மூத்தக்குடி”**

என்ற வரிகள் தமிழரின் இரு கண்களுள் வீரமும் ஒன்று என்பதை குறிப்பாக உணர்த்துகின்றன.இந்த வீரத்தின் அடிப்படையில் நிகழ்வதே போராகும்.

தருமத்திற்கும் அதருமத்திற்கும் நடக்கின்ற போரே இராமாயணமும் மகாபாரதமும் ஆகும். இரண்டிலும் அறப்போர் முறைப் பறிறியும் போர் நெறிகள் பற்றியும் நிரம்பப் பேசப்படுகிறது. நமது நாட்டில் போர்கள் நிறைய நடந்தன. ஆயினும் நமது அரசர்கள் நடத்திய போர் முறையில் நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன.

இராமகாதையிலும் பல போர்கள் நிகழ்ந்துள்ளன.எல்லா போர்களும் அறநெறிப் போர்களே ஆகும்.(3)“உலகில் போர் தவிர்க்க முடியாததுஎன்ற கருத்தினை அறப்போரைக் காட்டிலும் வேறு சிறப்பு அரசனுக்கில்லை என்று கீதை மொழிகின்றது.”(4) இன்றைய காலக்கட்டத்தில் அறிவியல் வளர்ச்சியினால் போர்க்கருவிகளும் போர் நுணுக்கங்களும் பெருமளவு வளர்ந்துக் கொண்டே இருக்கின்றன.இருந்த போதிலும் மரபு ரீதியான போர்களே பெரும்பாலும்

போற்றப்படுகின்றன. இனி “கம்பராமாயணம் புலப்படுத்தும் போர் நெறிகள்” குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**போர் அறம்**

பண்டைத் தமிழர் போர் மேற்கொள்ளும் போது அறவழியிலே நிகழ்த்தினர். போர்க்களத்தில் பகைவரோடு போரிடும் போது அறநெறிகளையே பின்பற்றினர்.போர் நடக்கும் காலத்தில் அஞ்சி முதுகு காட்டிச் செல்பவர்இநடுங்கும் உள்ளம் உடையவர், படைக்கலம் இழ்ந்தோர்.தலைமயிர் குலைந்தோர். போரில் புண்பட்டோர். தம்மினும் இளையோர். ஆகிய இவர்கள் மீது பண்டைத் தமிழ் வீரர்கள் அம்பினைச் செலுத்தமாட்டார்கள். (5)

போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பே பசு, அறவோர், பெண்டிர், பிணியுடையோர், புதல்வரைப் பெறாதோர் முதலானோரைப் பாதுகாப்பான இடம் நோக்கிச் ; செல்லுமாறு அறிவிப்புக் கொடுக்கும் அறப்போர் முறையும் அன்றிருந்தது. இதனை,

**“ஆவும் மானியற் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**

**தென்புல வாழ்நர்க் கருங்கட ளிறுக்கும்**

**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்**

**எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்”** (6)

என்ற புறநானூற்றுப் பாடல் மூலமாக சிறந்த போர் வீரன் கடைபிடிக்க வேண்டிய நெறிகளாகும்.

“படை எடுக்கும் வேந்தன் படையெடுப்புக்குஆளாகும் நாட்டிலுள்ள அறப்பண்பு மிகுந்த உயிரினங்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லும்படி அறிவிப்பது அந்நாளைய போர் அறமாகக் காட்டப்படுகிறது.”(7) கம்பன்காவியத்தில்,சீதை தனிமையில் இருக்கம் பொழுது அவளைத் தூக்கிச் செல்லசூர்ப்பணகை முற்படும் பொழுது,

**“நில் அடிஇ என கடுகினன் பெண் என நினைத்தான்**
**வில் எடாது அவன் வயங்கு எரிஆம் என விரிந்த**
**சில்வல் ஓதியைச் செங்கையில் திருக்குறப் பற்றி**
**ஒல்லை ஈர்த்து உதைத்து ஒளிகிளர் சுற்றுவாள் உருவி”** (8)

என்ற பாடல் வாயிலாக இலக்குவன் சூர்ப்பணகை பெண் எனற காரணத்தால் கொல்லாமல் விட்டதை அறியலாம். மேலும்,

யுத்த காண்டத்தில் இராவணன் தேரில் மூச்சற்றுக் கிடக்கிறான். மாதலி இராமனிடம் இராவணனை கொல்ல தூண்டும் பொழுது,

**“படை துறந்து மயங்கிய பண்பினான்**

**இடை பெறும் துயர் பார்த்து இதழ் நீதியின்**

**நுடை துறந்து உயிர்கோடலும் நன்மையோ**

**கடை துறந்து போர் என் கருத்து என்றான்”** (9)

என்ற பாடல் மூலம் இராமன் மூச்சற்றுக் கிடக்கும் இராவணனைக் கொல்வது நீதியன்று என்று கூறுகிறான்.

**தூது**

பழங்காலத்தில் போர் நடைபெறுவதற்கு முன் தூது அனுப்பவது வழக்கம். புகைவன் மனம் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும். எதிரியின் பக்க நியாயம் என்னவென்று தெரிந்து கொள்வதற்காக அனுப்பப்படுவது

தூது.போர்க்கலையின் ஒரு பகுதியாகும். இராமாயணத்தில் "அங்கதன் தூதுப் படலம்" என்று கம்பன் வடிவமைத்திருக்கிறான். தூது என்பது புறத் தொடர்ப்பிற்குரிய ஒரு முக்கிய நிகழ்வாகக் கம்பராமாயணத்தில் அமைகிறது. தூது நிகழ்ச்சிகள் காப்பியம் முழுவதிலும் பரவலாகக் காணப்படுகின்றன. சிறையிலிருந்த சீதையிடம் இராம தூதனாக அனுமன் செல்வதும்இ போருக்குமுன் இராவணனிடம் அங்கதன் தூதாகச் செல்வதும் மிகச் சிறப்பாகப் பேசப்படுகின்றன.

இராமகாதையில் சீதையைத் தேடிப் போன அனுமன் எதிர்பாராத விதமாகத் தூதுவனாகவும் மாறினான்.அனுமன் இராவணனிடம் தன்னைத் தூதன் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.தனது தலைவன் பரம்பொருள் மண்ணில் பிறந்து நடமாடும் பரம்பொருள் என்று குறிப்பிடுகின்றான்.அறநெறி சார்ந்த முயற்சி பலனளிக்கவில்லை.அனுமன் தன் வாலில் வைக்கப்பட்ட தீயைக்கொண்டு இலங்கை எழில்களை அழித்துவிட்டு இராமனிடம் மீண்டான். இதனை,

**"எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல் தன்**

**மெய்கழல் தொழுகிலன் முளரி நீங்கிய**

------------------------------------------------------------------------------------------

**ஐவயகம் தழீஇ நெடிது இறைஞ்சி வாழ்த்தினான்"** (10)

என்ற பாடல் வாயிலாக இராமனிடம் மீண்ட அனுமன் இராமன் முன்னிலையில் சீதையிருந்த திசை நோக்கித் தொழுத நிலையினை அறியமுடிகிறது.

**வஞ்சினம் கூறல்**

போருக்குச் செல்லும் முன் வேந்தனும். வீரரும் வஞ்சினம் உரைத்துச் செல்வர். தூம் எண்ணிய இலக்கை அடைவதற்கும். உள்ள உறுதி குலையாமல் இருப்பதற்கும் வஞ்சினமொழி பயன்பட்டது. பண்டைத் தமிழர் போர் முறையில் இது சிறப்பிடம் பெற்றிருந்தது.(11) கம்பராமாயணத்தில் இராம,இலக்குவரோடு போரிட வரும் இந்திரசித்தன் மகரக்கண்ணன், கும்பகருணன் ஆகியோரும் இராம இலக்குவரும் வஞ்சினம் கூறிப் போரிடுகின்றனர். இந்திரசித்தன் "எம்பியைக் கொன்றவன் யாக்கையை நீக்கியல்லால் இலங்கைக்கு வாரேன!வாழ்வும் வேண்டேன். இலக்குவனைப் போரில் கொல்வேன். அன்றெனின் செங்கண்மால் முதலான தேவர்களாகிய என் பகைவர் என்னைக் கண்டு நகைக்கட்டும். நான் இராவணன் மைந்தனுமல்லேன். பகை வெல்லாவிடின் சோறு உவந்து வாழேன்" என்று பல வஞ்சின மொழிகளைக் கூறினான். இராமாயணத்தில் போர் நடவாவிடினும் குகப்படலத்தில் பரதன் படையுடன் வருவதைத் தவறாக உணர்ந்ததை,

**"ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ**

**வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில்லாளோ"** (12)

என குகன் கூறிய வீரவுரை வஞ்சினத்திற்குச் சான்றாகும்..மேலும்இ

கும்பகருணன் வதைப்படலத்தில் இலக்குவனைச் சந்திக்கும் பொழுது,

**"பெய் தவத்தினோர் பெண் கொடி**

-----------------------------------------------------

**கைத் தவத்தடைக் கிடந்து வென் காக்குதி"** (13)

என்ற கும்பகருணன் கூற்றின் வாயிலாக வஞ்சின மொழியினை அறியலாம்.

**கம்பனில் போர் நெறிகள்**

கம்பன் தன் காப்பியத்தின் கதை வளர்ச்சியிலும், தாடகை வதை, வேள்வி காக்க அரக்கர்களுடன் போர்.பரசுராமர் போர்.கரன் வதை. வாலி வதை .சடாயு போர் இராவணப்போர் இவை போன்ற பல போர்கள் இடம் பெற்றுள்ளன. கம்பர் பின்பற்றும் புறத்திணை மரபுகளை யுத்தகாண்டத்தில் நன்கு அறியமுடிகிறது. கம்பர் காட்டும் போர்கள் வான்மீகி காட்டும் போர்களிலிருந்து வேறுபட்டுத் தமிழர் போர்முறையை ஒட்டி அமைகின்றன.

**தாடகை வதம்**

பாலகாண்டத்தில் தாடகை வதைப்படலத்தில் இராமனின் வீரம் காட்டப்படுகிறது.இது ஒரு வேள்விப்போர் ஆகும். விசுவாமித்திரர் தன் யாகத்திற்கு இடையூறு செய்து வந்த தாடகையை வதைக்கும் பொருட்டு இராமனிடம் கேட்ட போது இராமன் சற்று தயங்கினான். பெண் என்பதனால் இராமன் கணை தொடுக்கவில்லை.வீரச்செம்மல் இராமன் என்ற போதும் அறவழியை நாடுவதாகக் கம்பன் காட்டுகிறார். இதனை,

**“அண்ணல் முனிவர்க்கு அது இருந்து என்னும் ஆவி**

**உடன் என வடிக்கணை தொடுக்கிலின் உயிர்க்கே**

-

------------------------------------------------------------------------------------

**பெண் என மனத்திடை பெருந்தகை நினைத்தான்”** (14)

என போர் செய்வதிலும் அறத்தைக் கடைபிடிக்கும் பண்பு காப்பியத்தில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

**சடாயு போர்**

சடாயு அறவழிப்போரை நடத்துகிறான். என்னால் முடிந்த அளவு போரிட்டு தடுத்தேன். ஆனால் அறத்தை ஒதுக்கிய இராவணன் வஞ்சகமாக மாயையினால் போர் செய்தான். இறுதிவரை அவனோடு நேருக்கு நேராக வீரத்தைக் காட்டிய சடாயு வைப் பற்றி வாலிவதைப்படலத்தில் காணும் பொழுது,

**“சிந்தை நல் அறத்தின் வழிச் சேறலால்**

------------------------------------------------------------------------------------

**ஏந்தையும் எருவைக்கு அரசு அல்லவோ”** (15)

ஏன்று அறவழியிலேயே உள்ளம் சென்றதால் சீதையின் துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டு கொடிய போர்த்துறையில் தன் திறமையைக் காட்டினான் என்று சடாயுவின் வீரத்தை அறப்போராகக் கம்பர் சுட்டுகிறார்.

**வாலி வதை**

வாலிக்கும் சுக்கீரிவனுக்கும் இடையே நடந்த போரில் அறத்தின் நாயகனாக விளங்கக்கூடிய இராமன் பிறன்மனை நயந்த தவறினைப் போக்கவும் , மறைந்து இருந்து வாலியைக் கொல்கிறான். இராமனின் வீரத்தை அறப்போராகக் காட்டத் தன் சொல்லாட்சியைக் கம்பர் பயன்படுத்துகிறார்.வாழ்க்கைத் தத்துவத்தை மக்கள் உணரும்படியாக இராமன்-வாலி போரை அறப்போராக கம்பர் தன் சொல்லாட்சியில் சித்தரித்துக் காட்டுகிறார்.

**இராவணப் போர்**

இலங்கையில் நடந்த இராம-இராவண முதல் நாள் போரில் இராவணன் ஆயுதங்களையும், சேனைகளையும் இழந்து நின்றதைக் கண்ட இராமன் இப்படி யாவும் இழந்து இருக்கினறவனைக் கொல்லலாகாது என்று கருதி சென்று படைகளையும், ஆயுதங்களையும் சரி செய்து கொண்டு நாளைக்குப் போரில் விருப்பமிருந்தால் வா என்று இரக்கத்தோடு கூறியனுப்பியதை,

**“ஆளையா உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த**
**பூளை யாயின் கண்டனை இக்று போய் இபோர்க்கு**
**நூளைவா என நல்கினான் நாகிளங் கமுகின்**
**வாளைதாவுறு கோசலை நாடுடை வள்ளல்”** (16)

என்கிறார் கம்பர். இதனால் இராமனின் வீரத்தில் கருணையைக் காணமுடிகிறது. மேலும் “இன்று போய் நாளை வா” என்று இராமன் கூறும் சொல் அவனைப் போர்க்களத்திலும் வள்ளலாக விளங்கச் செய்துள்ளதை உணர முடிகின்றது.

**முடிவுரை**

பண்டைய தமிழரின் போர் முறையினை நினைவிற்கு கொண்டு வருவது போல் உள்ளது.பெண்ணாக இருந்தால் போர் செய்வது அறமாகாது என சுட்டப்படுகிறது. உலகில் அமைதி நிலவ வேண்டும்.சமாதானம் தழைத்தோங்க வேண்டும்.நன்னெறி படரவேண்டும் .பகை கொள்ளாமல் வாழ்ந்து போரைத் தடுத்து உயிர்களைக் காக்க வேண்டும்.மக்கள் சமுதாயத்தின் அழிவுக்குக் காரணமாக உள்ளது பகை அதனை ஒழிக்க.கம்பன் “யாரொடும் பகை கொள்ளக் கூடாது” என்ற வாழ்க்கை நெறியை வலியுறுத்துகின்றான். பகைமையைத் தவிர்த்தால் “போர் ஒடுங்கும்” என்பது கம்பன் கருத்து. போர் ஒடுங்குவதால் பாருக்கும் புகழ் குறையாது என்று உறுதி கூறுகின்றான்.

**அடிக்குறிப்பு**

1. கம்பராமாயணம் - ஆய்வு மலர்க்கொத்து (தொகுதி-11) - ப.4852
2. காசில் கொற்றத்துக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் - ப.364
3. கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம் -தவத்திரு குன்றக்குடி அடிகளார்- ப.55
4. புறநானூற்றில் பெண்பாற்புலவர்களின் வீரமும் விவேகமும் - இரா.குமார் - ப.59
5. தமிழகப் பெரும் புலவர்கள் கட்டுரைகள் -கோ.தனபாலன் -ப.235
6. புறநானூறு – பா.915
7. தமிழர் பழக்க வழக்கங்களும் -க.காந்தி–ப.330
8. கம்பராமாயணம் -சூர்ப்பணகை வதைப்படலம் -பா.2921
9. கம்பராமாயணம் -இராவணன் வதைப்படலம் -பா. 10இ018
10. கம்பராமாயணம் சுந்தர காண்டம் -பா.6147
11. புறநானூற்றில் பெண்பாற்புலவர்களின் வீரமும் விவேகமும் -ப.60
12. கம்பராமாயணம் -கங்கை காண் படலம் - பா.- 2405
13. கம்பராமாயணம் -கும்பகர்ண வதைப்படலம் பா. 7633
14. கம்பராமாயணம் -தாடகை வதைப்படலம் -பா.395
15. கம்பராமாயணம் -வாலிவதைப்படலம் -பா.4156
16. கம்பராமாயணம் -முதற்போர் புரி படலம் -பா. 7398

**துணைநூற்பட்டியல்**

1. கம்பராமாயணம் - உ.வே.சா.நூல் நிலைய வெளியீடு

2.பதிப்பாசிரியர்கள் - காசில் கொற்றத்துக்கவிச்சக்கரவர்த்தி கம்பன்
கபிலன் பதிப்பகம் முதற்பதிப்பு -2013
புதுச்சேரி.

3. பதிப்பாசிரியர்கள் - கம்பராமாயணம்-ஆய்வு மலாக்கொத்து (தொகுதி- 11)
தமிழ்த்துறை (அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்).

4.தவத்திரு குன்றக்குடி அடிகளார் - கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல், சமூகம்

பூாவை பப்ளிகேஷன்ஸ் ஜானி ஜான்கான் சாலை இராயப்ோட்டை சென்னை-14.

5.இரா. குமார் - புறநாநூற்றில் பெண்பாற்புலவர்களின் வீரமும் விவேகமும்
நல்நிலம் பதிப்பகம், தியாகராயநகர், சென்னை-17.

6.கோ.தனபாலன்- தமிழகப் பெரும் புலவர்கள் கட்டுரைகள் கௌரா பதிப்பகம்

7.ஔவை துரைசாமி -புறநானூறு மூலமும் எளிய உரையும்
தமிழ் மண் பதிப்பகம் சென்னை.

8. க.காந்தி - தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Vijayalakshmi G, (2021) Projection of War ethics in Kambaramayanam, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:374-379. Cauvery College For Women, Trichy.

**முனைவர் வ.கோபாலகிருஷ்ணன்**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேலம் - 636 005.
கைபேசி: 9488181733

# நம்மாழ்வார் பாசுரங்களில் தமிழ்ச்சொல்லும் பொருளும்

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு மொழிக்கு அழகு சேர்ப்பது சொற்கள். இவை மிகச் செறிவாக ஒரு மொழியில் அமைகின்றபோதுதான் சொல் வளமும் பொருள் வளமும் மிகுந்து அமைந்துவிடுகின்றது. இதனால் மொழியானது மேம்பட்டு பல்வேறான இலக்கிய இலக்கண வகைமைகள் தோன்ற வழிவகுக்கின்றது. மொழிக்கும் செம்மை சேர்க்கின்றன. இத்தன்மையை நுட்பமாக ஆராய்ந்து சொல்வதே மொழியியல் ஆய்வுகளேயாகும். அவ்வகையில் தமிழ்மொழிக்காகவே ஏராளமான ஆய்வுகள் எழுந்துள்ளன. இவ்வாய்வுகள் இலக்கியம், இலக்கணம், சிற்றிலக்கியம், காப்பியம் எனப் பல்வேறுபட்ட களங்களில் தோன்றியுள்ளன. அவ்வகையில் வைணவத்தில் தோன்றிய பாசுரங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, சொற்களின் செறிவு, பொருளினை எடுத்துரைப்பதற்கு விரிவான விளக்கத்தைக் கையாளுதல், விளக்கத்திற்குப் பயன்படுத்தும் சொற்கள், வினாவிடை அமைப்பு, உரையாடல் நயம், சொற்பொருள் நயம், உவமை நயம் காட்டி விளக்கும் முறை, இலக்கணப் பயன்பாடு முதலிய பல்வேறுபட்ட நுட்பங்கள் புலப்படுகின்றன. இதனைக் காணும்போது வைணவ சமய காலகட்டத்தில் மொழியானது பயணித்த விதம், சொற்பொருள் பயன்படுத்திய விதம் முதலானவை எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்:** மணிப்பிரவாள நடை, சொல்லாற்றலும் பொருளாற்றலும், சொல் நயம், பொருள் நயம்,

## முன்னுரை

சமய இலக்கியங்களில் சொல்லாய்வு என்பது மிக முக்கியமான கருத்தாக்கமாக உள்ளது. இதுகுறித்து ஆய்வுலகில் பெரிதும் பேசப்படாமல் உள்ளது எனலாம். தமிழ் மொழிக்கான சொற்களை அடையாளம் கண்டு இதுபோன்ற ஆய்வுகள் பல்கிப் பெருகுமாயின் நம் தமிழ்மொழியும் தமிழினமும் இன்னும் மேம்பட்டு விளங்கும் எனலாம். இவ்வெண்ணத்தை ஓரளவு மெய்பிக்க இதுவொரு தொடக்கப் புள்ளியாக இருக்கும் என்றே சொல்லலாம். அவ்வகையில் பன்னிரு ஆழ்வார்களில் பெருமதிப்புக்குரிய நம்மாழ்வாரின் திருவாசிரியம் மற்றும் பெரிய திருவந்தாதி ஆகியவற்றையும் இதற்கு உரையெழுதிய பெரியவாச்சான் பிள்ளையின் உரையும் கொண்டு இவ்வாய்வுத் தலைப்பினை இனிக் கொண்டு செல்லும்.

## மணிப்பிரவாள நடை - தோற்றம்

பக்தியிலக்கிய காலகட்டத்தில் வடமொழியானது பரவத்தொடங்கியது எனலாம். இதற்கானச் சான்றுகள் கல்வெட்டுக்களில் அதிகம் காணப்படுகின்றன. இவ்வாறாக வடமொழியானது தமிழ்மொழியில் சிறிது சிறிதாக கலக்கத் தொடங்கியது. இதன் விளைவாகத்தான் மணிப்பிரவாள நடை தோன்றியது என்பதை அகராதிகள் தருகின்ற பொருளின் அடிப்படையில் அறிகின்றோம். இத்தகைய நடையினைக் குறித்து, "மணி என்பது முத்து: பிரவாளம் என்பது பவளம். முத்தையும் பவளத்தையும் மாறி மாறி ஒரு மாலையிற் கோத்தது போல வடசொற்களையும் தமிழ்ச் சொற்களையும் சரிக்குச்சரி கலந்து எழுதிய தொடர்மொழி நடையென்பது அதன் பொருளாகும்."[1] என்று வி.செல்வநாயகம் குறிப்பிடுகிறார். பலதரப்பட்;ட

மொழிகளைப் பேசுகின்ற மக்கள் ஓர் இடத்தில் கூடிவாழுகின்றபோது அவர்கள் பேசுகின்ற மொழி மற்றொரு மொழிபேசுகின்ற மக்களோடு கலப்பது என்பது இயற்கையாகும். எனவே, மணிப்பிரவாள நடையானது இயற்கையாகக் கலந்தவொன்று எனலாம். இத்தகைய நடைக்கான சான்று புறநானூற்றில் உள்ளது என்பதை, "சங்ககால தொடக்கமாக வடமொழியாளரும் பாகத மொழியாளருமாகிய பிராமணர், சமணர், பௌத்தர் என்போர் தமிழ் நாட்டிற் குடியேறித் தமிழ் மக்களோடு கூடி வாழ்ந்து வந்திருக்கின்றனர். எனினும் அவர்கள் பேசிய மொழிச்சொற்கள் முற்காலத்தில் ஏட்டு வழக்குத் தமிழிற் பெருந்தொகையாகச் சென்று கலக்க இடம் பெறவில்லை. ஒரு சில சொற்கள் தமிழுருவம் பெற்றுத் தமிழோடு கலந்துவிட்டன என்பதற்குப் புறநானூற்றுச் செய்யுட்கள் சான்றாக உள்ளன."[2] என்ற கூற்றின் வாயிலாகவும் இந்நடை குறித்து மேலும் அறிந்துகொள்ள முடிகிறது. இதன் மூலமாக மணிப்பிரவாள நடையினைத் தமிழர்கள் ஆதரித்து வந்துள்ளனர் என்பதையும் அறியலாம்.இக்கருத்தின் மூலம் மணிப்பிரவாள நடைக்குப் பல்லவராட்சிக் காலத்தில் ஆதரவு இருந்ததையும், வடமொழிப் பேச்சு வழக்கற்ற மொழியாக இருப்பதால் தமிழ்மொழியோடு எளிமையாகக் கலந்துவிட்டன என்பதையும் மேற்கண்ட கூற்றின் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

**சொல்லாற்றலும் பொருளாற்றலும்**

நாலாயிர திவ்யப் பிரபந்தம் என்பது ஆழ்வார்களால் இறையருள் பெற்று படைக்கப்பட்டவையாகும். இதேபோல் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு எழுதப்பட்ட உரைகளும் இறையருளால் உண்டாக்கப்பட்டவை என்று கூறலாம். அதனாலே நாலாயிர திவ்யப் பிரபந்தம் இறைத்தன்மைக் கொண்டதாக விளங்குகின்றது. அதோடு பிரந்த உரைகளும் அருமை பெருமை உடையதாக சிறப்புற்று விளங்குகின்றது எனலாம். இதற்கு மிக முக்கிய காரணமாக ஒன்றைக் கூறலாம். நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு ஈடு இணையாக அதனுடைய உரைகளும் விளங்க தென்மொழி, வடமொழி ஆகிய இரண்டிலும் வல்லமை கொண்டவர்களே உரை இயற்றியதாகும். இதனால்தான் பிரபந்த உரைகள் இறைத் தன்மைக்கு நிகராகப் போற்றப்படுகிறது. வியாக்கியானங்கள் என்று அழைக்கப்படுகின்ற இந்நாலாயிர திவ்யப் பிரபந்த உரைகள் மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளது. பாசுரங்களைப் பாடப்பாட எவ்வாறு நம் உள்ளத்தினுள் இறைவன் குடிகொள்வதை உணர்கின்றோமோ! அதேபோன்ற உணர்வை வியாக்கியானங்களைப் படிக்கின்றபோதும் ஆராய்கின்றபோதும் உணரலாம். ஏனெனில் அவற்றில் சொல்லாலும் பொருளாலும் சொல்லப்பட்ட கருத்துக்களும், சொல்லப்படுகின்ற விதமும் மிகச்சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாலாயிர திவ்யப் பிரபந்த பாசுரங்கள் நயம் கொண்டதாக உள்ளன. அதாவது, உரையினை கற்போருக்கு மொழி இன்பத்தையும், சொல்லாற்றல், பொருளாற்றல் ஆகியவற்றைக் கண்டு வியக்கும் தன்மையும் ஏற்படுகின்றது. அதே சமயத்தில் சுருக்கமாகக் கூறவேண்டிய இடத்தில் வள்ளுவரின் குறளமைப்புப் போன்று சுருங்கச் சொல்லியும், விளக்கமாகச் சொல்லவேண்டிய இடத்தில் விளங்க வைத்தும் செல்வதும் உரை நயத்தின் ஒரு சிறப்பாகும். அதனாலே திவ்யப் பிரபந்த உரைகளை இறைத் தன்மைக்கு நிகராகவும், பரம்பொருளுக்கு மேலாகவும் வைணவப் பெரியோர்கள் கருதுகின்றனர். இத்தகு உரைநயத் தன்மையினைக் குறித்து, "கூறப்புகும் பொருளை விளக்குவதற்குக் காட்டப்பெறும் மேற்கோள்கட்குப் பொருள் கூறும் முறை எத்தகையோரும் வியக்கத்தக்கது. பதச்சாரம் கூறுவதில் ஈட்டாசிரியர் பண்டைய உரையாசிரியர்களாகிய நச்சினார்க்கினியர், பேராசிரியர், பரிமேலழகர் ஆகியோரையும் விஞ்சி நிற்பதை உரையை ஆழ்ந்து கற்பதால் அறியலாம்."[3] என்று பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் கூறுவதிலிருந்து மிகத் தெளிவாக அறிந்துகொள்ளமுடிகிறது. எனவே, மேற்கண்ட செய்தியின் மூலமாக வைணவ உரை நயமானது சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், சொல்லாற்றல், பொருளாற்றல் போன்ற அமைப்புகளைக் கொண்டுள்ளதை அறிகிறோம்.

**சொல் நயம்**

ஆழ்வார் பாசுரங்களில் சொல் நயத்தினைக் காணலாம். சொற்கள் என்பது ஆற்றல் வாய்ந்தவையாக உள்ளன. திருமாலின் பெருமையைப் பற்றி பெரிய அளவில் எடுத்துச்சொல்வதற்காக,

“மெய்பெற நடாய தெய்வம் **மூவரில்**

**முதல்வனாகி**” (திருவாசிரியம்.3)

எனும் பாசுர வரியினை நம்மாழ்வார் பாடியிருக்கின்றார். அதாவது, சிவனையும் பிரம்மனையும் பிரளயகாலத்தில் தன்னுடைய வயிற்றில் வைத்து காத்தமையாலும், இவ்விருவருக்கும் முதல்வனாக அமைந்திருப்பவர் திருமால் என்பதையும், அதே சமயத்தில் அக்கடவுளின் உடலையும், ஆத்மாவையும் பாதுகாப்பவனும் திருமாலே. மேலும் பிரம்மன், சிவன், இந்திரன் என மூவரையும் காலங்காலமாக வரிசை முறைப்படி கூறிவருவதாலும் இம்மூன்று தெய்வங்களுக்கும் முழு முதல்வனாகத் திருமால் விளங்குகின்றார் என்பதை பெரியவாச்சான் பிள்ளை உரை வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

திருமாலே எல்லாவற்றிற்கும் முதன்மையானவர் என்பதனை நிறுவிக்காட்டுவதற்காகப் பெரியவாச்சான் பிள்ளை,

“.......தெய்வ நான்முகக் **கொழுமுளை**

யீன்று முக்க ணீசனோடு தேவு பல” (திருவா.4)

எனும் திருவாசிரிய அடிகளைக்கொண்டு தக்க காரண காரியத்தோடு விளக்க முற்படுகிறார் என்று திருமாலை முன்னிலைப்படுத்தி உரையெழுதியுள்ளார். தெய்வங்களில் ஒருவனாக விளங்கும் கொழுமுளை என்றழைக்கப்படுகின்ற பிரம்மனுக்கு படைத்தல் சக்தியைத் திருமால் தந்திருக்கின்றார். இப்புவியில் உயிரினங்களைப் படைப்பதற்காக மட்டுமே பிரம்மனை திருமால் படைத்துத்தந்துள்ளார். அவ்வுயிரினங்களுக்கு முடிவு என்ற ஒன்றைத் தருவதற்காகச் சிவனையும் படைத்துத்தந்துள்ளார். இச்சிவபெருமானுக்கு உதவியாகவும், உயிரினம் வாழ்வதற்கான ஆதாரங்கள் யாவையும் தருவதற்காக இந்திரன், வாயு, வருணன், யமன், அக்னி முதலானவர்களோடு தேவர்கள் பலரையும் உண்டாக்கினார் திருமால் என்பதே பெரியவாச்சான் பிள்ளையின் காரண காரிய தக்க உரையாகும்.

‘நெடியோன்’ எனும் சொல் பொதுவாக திருமாலை குறிக்கும். ஆனால், திருவாசிரியத்தில் இடம்பெறுகின்ற,

“**நெடியோய்**க் கல்லது மடியதோ வுலகே” (திருவா.5)

எனும் பாசுர வரிக்கு, தன்னிடம் உள்ள குறை நீங்கவில்லை என்பதாலே இவனை (திருமாலை) நீண்டநேரம் நினைத்துக்கொண்டிருக்கிறோம் என்று உரை தருகிறார். இச்செய்தியை கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் என்பவரும், “நினைத்து வெள்கி ஒன்றும் செய்யாதவனாய், தன் குறையை நினைத்து இவனுக்குச் செய்ய வேண்டியவற்றை நீள நினைப்பவன் என்னும் கருத்துடைத்து ‘நெடியோன்’ என்னும் பதம்.”[4] என்று குறிப்பிடுகின்றார். எனவே, ‘**நெடியோன்**’ என்பதற்கு **வெகு நீண்டநேரம் சிந்திப்பது** என்றும், திருமால் என்றும் இவ்விடத்தில் பொருள் கொள்ளப்படுகின்றது. மேலும்,

“..........................**தானறி**

**தெய்வம்** பேணுதல்..........” (திருவா.6)

என்னும் பாசுர வரிகளில் ‘பேணுதல்’ எனும் சொல்லுக்கு நயமான பொருள் தருவதையும் உரையில் காணமுடிகின்றது. ‘தானறி தெய்வம்’ என்ற சொல்லுக்கு வீடுபேறு அளிக்கின்ற கடவுள் எனும் பொருளாகும் என்பதை முன்புள்ள பாசுரங்கள் விளக்கிச்சென்றுள்ளன. அதனைத் தொடர்ந்து வருகின்ற ‘பேணுதல்’ எனும் சொல்லுக்கு ‘பனியிருங்குழலன்’ என்ற இணையான சொல்லினைப் பயன்படுத்தி

அதற்கு பொருள் விளக்கத்தையும் காணலாம். இதனை, "அவை தனக்கென்னவொரு உத்கர்ஷமில்லாமையாலே, மொட்டைத்தலையனை 'பனியிருங்குழலன்' என்று கவிபாடுவாரைப்போலே ஆஸ்ரயிக்கிற இவனுக்கே பரமாயிற்று அத்தேவதைகளுக்கு ஈஸ்வரத்வம் ஸம்பாதித்துக் கொடுக்கையும்"5 என்று உரை எழுதியுள்ளார் பெரியவாச்சான்பிள்ளை. பேணுதல் என்பதனை பனியிருங்குழலன் என்று கூறியுள்ளார். இச்சொல்லிற்கு இயற்கையில் எந்தவொரு தேவைகளையும் செய்து கொள்ளாமல் இருக்கின்ற மொட்டைத்தலையன் என்று பொருள் கூறுகின்றார். இதைக் கூறுவதற்கான காரணம் தன்னிடம் எதுவும் இல்லையென்றாலும் திருமாலை நினைத்து வழிபாடு செய்கின்றபோது வழிபடுகின்றவரை திருமால் காத்து நிற்பார் என்ற கருத்தினையே வலியுறுத்தி '**பனியிருங்குழலன்'** என்னும் புதிய சொல்லினை இப்பாசுர உரையில் எடுத்தாண்டுள்ளார்.

'பண்பு' எனும் சொல்லுக்கு நயத்தக்க உரை செய்துள்ளதைக் காணலாம். பேரிய திருவந்தாதியில், "..........**பருகலாம், பண்புடையீர்**......"[6] என்ற பாசுரத்தில் பருகலாம் என்பதற்கு திரவம் மற்றும் நீர்மையுடையவர் என்ற பொருளுண்டு. பாசுரத்தில் உள்ள பண்பு என்பது சுவைப்பதற்கான பொருள் என்பதாகும். ஆகவே, இனிமையான தேன், பால், நெய் முதலிய திரவங்கள் சுவையைத் தருவதால் 'பருகலாம் பண்பு' என்று உரை தருகின்றார். அதாவது திருமாலின் இனிமையைப் பார்க்கும்போது வாயாலே பருகக்கூடிய சுவையுடைய திரவப்பொருள் போலே இருந்தார். எனவே 'பண்பு' என்பது **'சுவைப்பதற்கான பொருள்'** என்று அச்சொற்களுக்குப் பொருள் நயத்தைத் தருகின்றார். அதே சமயத்தில், திருமாலை விட்டு அகல்பவர்களெல்லாம் 'அயோக்யன்' என்று கூறும் வழக்குச் சொல்லையும் உரையில் காணமுடிகிறது. இதை,

"நீயன்றே யாழ்துயரில் வீழ்விப்பான்......" (பெரிய திருவந்தாதி.12)

என்கிற பாசுர வரியில் ஆழ்துயர் என்பது திருமாலை விட்டு அகல்கின்ற அயோக்யர்களுக்கு நேர்கின்ற துன்பத்தைக் குறிப்பதாகும். இவ்வாறான வழக்குச் சொல்லினையும் உரையில் காணமுடிகின்றது.

'தானறி தெய்வம்' எனும் சொல்லுக்கு பொருள் நயம் தந்ததுபோல '**தானே தனித்தோன்றல்'** எனும் சொல்லுக்கு நயவுரை அளிப்பதனையும் வைணவ உரையில் காணமுடிகின்றது. இதனை,

"தானே தனித்தோன்றல் தன்னளப்பொன்......" (பெரிய.திரு.24)

அதாவது, திருமால் மட்டுமே ஒப்பற்ற அவதாரங்களைச் செய்பவனாவான். மனிதர்களைப் போல கர்மத்தால் (செய்வினையால்) பிறக்காமல் தன் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் உயிர்களைத் தோற்றுவிப்பதால் 'தனித்தோன்றல்' எனத் திருமாலின் பெருமையினை உரை வாயிலாகக் காட்டுகின்றார். மேலும், 'அவனாம் இவனாம் உவனாம் மற்றும்' எனும் பாசுர வரிக்குப் பொருள் கூறுகின்ற விதம் சிறப்பான இடத்தைப் பெறுவதையும் இவ்வுரை வழி அறியலாம். திருமால் என்பவர் திருப்பாற்கடல் நாயகனாகவும், அர்ச்சாவதாரம் கொண்டவனாகவும் விளங்குகின்றான். யோகிகளுக்கு எளியவனாகவும், மற்றவர்களுக்கு எட்டாதவனாகவும் இருப்பவனோ என்கிறார். இதில் அவன், இவன், உவன் எனும் சொற்களுக்கு நயமான பொருளினையும் இவரது உரையில் காணமுடிகின்றது. 'அவன்' எனும் சொல் தூரத்திலிருப்பவனைக் குறிப்பதால் திருமால் அணுகுவதற்கு அரியவன் என்றும், 'இவன்' எனும் சொல் அருகிலிருப்பவனைக் குறிப்பதால் திருமால் அணுகுவதற்கு எளியவன் என்றும், 'உவன்' எனும் சொல் இடைப்பட்ட தூரத்தினைக் குறிப்பதால் திருமால் அணுகுவதற்கு அரியனாகவும், எளியவனாகவும் இருக்கின்றான் எனும் விதத்தில் அவருடைய உரை அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

**பொருள் நயம்**

ஒரு சொல்லுக்கு ஆழமாகக் கருத்தினைத் தந்து விளக்கும்போது பொருள் நயமும் பிரதிபலிக்கின்றது. இத்தகைய பொருள் நயம் நம்மாழ்வார் பாடிய பாசுரங்களில் நிரம்பியுள்ளது எனலாம். குறிப்பாக, திருவாசிரியம் இரண்டாவது பாசுரத்தில் சிறந்த சொற்பொருள் நயத்தைப் பார்க்கமுடிகிறது. அதாவது,

"………திருவொடு மருவிய

இயற்கை மாயாப் பெருவிற லுலகம்" (திருவா.2)

எனும் பாசுரவரிகளில், துன்பம் ஏற்படுகின்றது என்று உலகில் சில செயல்கள் இருந்தாலும் அவற்றையும் விரும்புகின்ற மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படிப்பட்ட அறிவிலிகளைப் பற்றியோ நான் பேசுகின்றேன்? தெளிவான அறிவுடைய அறிவாளிகள் இவற்றை மனதாலும் ஏற்றுக்கொள்ள நினைப்பார்களோ? ஐஸ்வர்யத்தோடு எப்போதும் இருப்பவனாகவும் அதை அனுபவிக்கக்கூடிய பலத்தை உடையவனாகவும், மூன்று உலகங்களையும் தனக்கே உரிமை உடைது என்று கொண்டவனாகவும் இருந்தாலும் ஐஸ்வர்யம் என்பது அற்பமான நிலையாகவே கருதப்படுகிறது. ஒருவனுக்கு ஐஸ்வர்யம் இயற்கையாகவே கிடைத்திருந்தாலும் அதனை அனுபவிக்கமுடியாமல் இருந்தால் ஐஸ்வர்யத்தினால் ஒரு பயனும் இல்லை. மேலும், ஐஸ்வர்யத்தை அனுபவிக்கும் சக்தி ஒருவனுக்கு கிராமத்தளவிலோ, தேசத்தளவிலோ அடங்காமல் மூவுலகத்திற்கு அதிபதியாய் இருந்து அனுபவிக்கும் சக்தி கிடைத்தாலும் அறிவாளிகள் அதனை ஏற்கமாட்டார்கள் என்று பெரியவாச்சான் பிள்ளை இப்பாசுர வரிக்கு நீண்டதொரு உரை விளக்கம் தந்துச்செல்கிறார். இவ்வுரையின் கருத்தானது செல்வத்தைக்கொண்டு இயங்கும் இவ்வுலகில் இறைவனை உணர்ந்தவர்கள் செல்வத்தைத் தேடிச் செல்லாமல் இறைவன் அளிக்கும் வீடுபேற்றை நோக்கிச் செல்வார்கள் என்பதையே பெரியவாச்சான்பிள்ளை நமக்கு உணரச்செய்ய திரு, இயற்கை, உலகம் எனும் மூன்று சொற்களை வைத்து பொருள் விளக்கத்தைக் கூறுகிறார். திருமாலை உணர்த்துவதற்காகவும், இறைவன் என்பவன் எத்தகைய தன்மை வாய்ந்தவன் என்பதை வலியுறுத்துவதற்காகவும் பொருளாழம் கொண்ட உரையினை மற்றுமொரு இடத்தில் காணமுடிகின்றது. இதனை,

"ஓஓ உலகின தியல்வே, **ஈன்றோ ளிருக்க**

**மணைநீ ராட்டி**ப், படைத்திட" (திருவா. 6)

என்னும் பாசுர வரிகளுக்கு, இறைவன் என்பவன் தாய் போன்றவன் என்பதைக் கூறுவதற்காகவே மிக விரிவான பொருளுரையினை ஆசிரியர் தந்திருக்கின்றார். அதாவது, திருமால் இருக்கின்றபோது வேறொரு கடவுளை வணங்குவது பெற்ற தாயை புறந்தளுவதற்குச் சமமாகும் என்னும் பொருளாழம் கொள்ளும் வகையில் இவரது உரை அமைந்துள்ளது. அதாவது, திருமால் இருக்கின்றபோது பிற மதக்கடவுளை வணங்குகின்ற செயலானது பெற்ற தாயை பின் தள்ளி செய்கின்ற நற்காரியங்கள் போலாகும். நம்மை பெற்றெடுப்பதற்காக முன்பே விரதம் இருந்து, பிறகு நிறைமாத காலத்திலே பத்துமாதம் நம்மை தாங்கியிருந்து பிரசவ வேதனையை அனுபவித்து குழந்தையைப் பெற்றெடுத்தப் பிறகும் வெறுந்தரையில் படுத்து பாலூட்டியும் சீராட்டியும் தான் மெலிந்து நம்மை பலப்படுத்தியவள். அப்பிள்ளை பெரியவனாகி அறிவு பெற்று தாயின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயல்படும் தருணம் வந்தபோதிலும் அவள் செய்த செயல்களையெல்லாம் மறந்துவிட்டு அறிவில்லாதவனாகச் செய்கின்ற செயல்களெல்லாம் வீணாகும். எவ்விதத்தாலும் குறைவற்ற உறவாக இருக்கும் எம்பெருமானை (திருமாலை) விட்டு ஓர் உறவும் அல்லாத மற்ற தெய்வங்களைக் கொண்டாடுகிறார்களே! என்று உரை எழுதிச் செல்கின்ற திறனையும் இங்கு காணலாம். ஆகவே '**ஈன்றோளிருக்க மணைநீராட்டி**' என்ற சொற்றொடருக்கு பெரியவாச்சான்பிள்ளை தக்க பொருள் நயத்தை எடுத்துக்காட்டுவது சாலச்சிறந்ததாகும்.

தாய்க்கு நிகராக திருமாலை குறிப்பிட்டு பின் திருமால் எத்தகைய அருளைத் தருகின்ற கடவுள் என்பதை மற்றொரு பாசுரத்திற்கான உரை விளக்கத்திலும் காணலாம். திருவாசிரியத்தில் "தானறி தெய்வம்" (திருவா. 6) என்பதற்கு வீடுபேற்றைத் தருகின்ற கடவுள் திருமால் மட்டுமே எனப் பொருள் விளக்கம் தருவதைக் காணலாம். எனவே, தன்னை அறிந்துகொள்ள வேண்டுமானால் வீடுபேறு நல்கும் திருமாலை பரவவேண்டும் என்பதே ஆசிரியரின் கூற்றாகும். ஆரோக்கியத்தைப் பெற வேண்டுமென்றால் சூரியபகவானை வழிபடவேண்டும். செல்வத்தைப் பெற வேண்டுமென்றால் அக்னி தேவனை வழிபடவேண்டும். ஞானத்தைப் பெற வேண்டுமென்றால் சிவனை வழிபடவேண்டும். அதேபோன்று வீடுபேற அடையவேண்டும் என்றால் திருமாலை வணங்கவேண்டும் என்ற பகவத் கீதையின் செய்தியை எடுத்துக்கூறி விளக்குவதையும் உணர்கிறோம். எனவே, 'தானறி தெய்வம்' என்னும் சொல்லுக்கு வீடுபேற்றை அளிக்கும் திருமால் என்று பொருள் தந்து உரையாசிரியர் விளக்கியிருப்பதையும் காண முடிகின்றது. மேலும், 'மால்' என்னும் சொல்லிற்குப் பொதுவாக திருமால் என்றே அனைவரும் பொருள்கொள்வர். ஆனால் உரையாசிரியரோ,

"எங்கண்மால் செங்கண்மால் சீறல் நீ தீவினையோம்

எங்கண்மால் கண்டா யிவை." (பெரிய. திரு 2)

எனும் பாசுரத்தில் இடம்பெற்றுள்ள 'மால்' என்னும் சொல்லிற்கு பெரியவன், அன்புடையோன், மயக்கம் என மூன்று விதமான பொருளினைக் கையாள்வதைக் காணமுடிகின்றது. ஆகவே, மால் என்றால் பெரியவன் என்னும் பொருளை உரைக்க அபரிச்சேத்யனானவன் என்ற சொல்லையும், அன்புடையவன் என்னும் பொருளைக் கூறுவதற்கு வைலக்ஷண்யம் என்ற சொல்லையும், மயக்கம் என்னும் பொருளை எடுத்துச்சொல்ல அயோக்யன் எனும் சொல்லையும் உரையாசிரியர் கையாண்டிருப்பதைக் கீழ்க்கண்ட பாசுரத்தின் வாயிலாக அறியமுடிகின்றது.

"............கடல்புரையும், சீலப்

பெருஞ்சோதிக் கென்னெஞ்சாட் பெற்று" (பெரிய. திரு 4)

எனும் பாசுர வரியில் உள்ள 'புரை' எனும் சொல்லிற்கு ஒன்றாகக் கலந்திருக்கும்; தன்மை எனப் பொருள் தருகிறார். எனவே, நாலாயிர திவ்யப் பிரபந்த உரைகளுக்குப் பெரியவாச்சான் பிள்ளை சிறந்த முறையில் சொற்பொருள் நயத்தை வடிவமைத்திருப்பது புலாகின்றது.

சொற்பொருள் நயமானது நம்மாழ்வாழ்வார் பாசுரங்களிலும் மற்ற ஆழ்வார்களின் பாரசுரங்களிலும் விரவி கிடக்கின்றது. இவற்றுள் சில ஆய்வின் தரவு முடிவுகளாகப் பின்வரும் தொகுப்புகளை எடுத்துக்கொள்ளலாம். 'தெய்வம் மூவரில் முதல்வனாகி' எனும் தொடரில் சிவன், பிரம்மன், இந்திரன் ஆகிய மூவருக்கும் முதல்வனாக இருப்பவன் திருமால் என்றும், 'கொழுமுளை' என்றால் பிரம்மன் என்றும், பிரம்மன் படைத்தால் சிவன் அழிப்பவராகவும், இதற்கு இடைப்பட்ட நிலையில் காத்தல் தொழிலை திருமாலே செய்கின்றார் என்றும், 'நெடியோன்' எனும் சொல்லுக்கு திருமால் என்றும் நீண்ட நேரம் அவனையே நினைத்திருப்பதாகும் என இரண்டு விதமான பொருளைக் கூறுவதையும், 'பேணுதல்' எனும் சொல்லுக்கு இணையாக 'பனியிருங்குழலன்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதையும், 'பண்பு' என்ற சொல்லுக்கு நீர்மமான திரவங்களைக் கூறுவதையும், திருமாலை நீங்கி துயரில் இருப்பவர்களை 'அயோக்யன்' என்ற வழக்குச் சொல்லில் கூறுவதையும், அவன், இவன் மற்றும் உவன் என்ற சுட்டுச்சொற்களும், 'திரு, இயற்கை, உலகம்' எனும் மூன்று சொற்களும் இடம்பெற்றுள்ள பாசுரவரிக்கு ஓர் இணைப்பு உண்டாகும்படி பொருள் நயம் உரைத்திருப்பதும், 'ஈறோளிருக்க மணைநீராட்டி' என்ற பாசுர சொல்லுக்குத் தாய்மையின் உணர்வைக் குறித்து விளக்கியிருப்பதும், 'தானறி தெய்வம்' எனும் சொல்லுக்கு மோட்சத்தை அளிக்கின்ற இறைவன் என்றும், 'மால்' எனும் சொல்லிற்கு மூன்று விதமான பொருள் ஆழத்தை உரையாசிரியர் உரைத்திருக்கின்ற விதமும் நம்மாழ்வார் பாசுரங்களில் மிகநுட்பமாகக் காணமுடிகிறது. இதுபோன்று

தமிழரையும் தமிழினத்தையும் விரிவுபடுத்த இதுவும் பேருதவி புரியும் என்பதில் ஐயமில்லை எனலாம்.

**சான்றெண் விளக்கம்**

1. வி.செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, ப.33.

2. டாக்டர்.கே.ஆர்.விட்டல்தாஸ்,ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும், ப.242.

3.பேராசிரியர் ந.சுப்புரெட்டியார், வைணவச் செல்வம் (தொ-1), ப. 487.

4. எஸ்.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த திருவாசிரிய

வ்யாக்யானம், ப.64.

5. மேலது, ப.75.

6. எஸ்.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த பெரிய திருவந்தாதி, பாசுரம்-8.

**துணைநூற்பட்டியல்**


**1. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,எஸ். (உ.ஆ)** - **பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த திருவாசிரிய வ்யாக்யானம்**
ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம்
3, புத்தூர் அக்ரஹாரம்
திருச்சி-17
1947

**2. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,எஸ். (உ.ஆ)** - **பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்த பெரிய திருவந்தாதி வ்யாக்யானம்**
ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம்
3, புத்தூர் அக்ரஹாரம்
திருச்சி-17
1947

**3. சுப்புரெட்டியார்,ந.பேராசிரியர்.** - **வைணவச் செல்வம் (தொ.1)**
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
முதற்பதிப்பு
2010

**4. செல்வநாயகம்,வி.** - **தமிழ் உரைநடை வரலாறு**
36, 39-வது ஒழுங்கை
வெள்ளவத்தை, கொழும்பு - 6
இலங்கை
2000

**5. விட்டல்தாஸ்,கே.ஆர்.டாக்டர். - ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும்**
பழனியப்பா பிரதர்ஸ்
கோனார் மாளிகை
25, பீட்டர்ஸ் சாலை
சென்னை-600 014
2002

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Gopalakrishnan V., (2021) Tamil Vocabularies and Glossarics used in Namazhvar's Tamil Pasuram , Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:380-387. Cauvery College For Women, Trichy.

**முனைவர் சு.அனுலெட்சுமி**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 02

# பெரியபுராணத்தில் தமிழர் அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர் மிகவும் தொன்மை வாய்ந்த ஓர் இனத்தைச் சார்ந்தவர்கள் பாரம்பரியப் பெருமை உடையவர்கள். உலக நாகரிகங்களில் இடம் பெறத்தக்க உயரிய நாகரிகத்தை உடையவர்கள். அவனது அடையாளங்களே அவனை உலகிற்கு உயர்த்தி காட்டுவன சமயச் சிந்தனைகளை மக்களிடம் ஊட்ட வேண்டும் என்ற நோக்கத்திலும், சமுதாயத்தை நல்வழியில் வாழ வழிகாட்டும் பொழுதும், இறைப்பற்றினை வெளிப்படுத்தும் போதும் கூட தமது அடையாளங்களை பதிவிட்டு சென்றுள்ளனர். பெரியபுராணத்தில் நாயன்மார்களின் வரலாற்றை எடுத்துரைக்கும் சேக்கிழார் பெருமானார் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களான பழமொழி, பழக்கவழக்கங்கள், சடங்குகள், நம்பிக்கைகள் போன்வற்றை சுட்டிக்காட்டியுள்ளார்.

**முன்னுரை**

மனதில் தோன்றும் கருத்துக்களை மற்றவர்க்கு உணர்த்தும் கருவியாக மனிதன் படைத்துக் கொண்டது மொழி அவனது வாழ்க்கையை, வழக்கங்களை, வளர்ச்சியை உணர்த்தும் ஒப்பற்ற நிலையை அடைந்தது. ஒவ்வொரு மொழியும் அம்மொழி பேசும் மக்களின் வாழ்வியலை உணர்த்துவதாயிற்று. தமிழனின் வாழ்வியலை பண்பாட்டை நாகரிகத்தை உணர்த்தக் கூடிய கருவியாக நம் தமிழ்மொழியின் கண் அமைந்துள்ள இலக்கிய இலக்கணங்களிலே தொன்மை மிக்கது தொல்காப்பியம் ஆகும். மற்றவர்க்கு ஒன்றைச் சொல்ல விழையும் போது சொற்களின் பயன்பாட்டில் பண்பாடு காத்த தமிழனின் தனித்தன்மைக்கு சான்றாக அமைந்துள்ளது.

**“ அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்”** 1 (தொல்.சொல்.நூ-46)

எனும் நூற்பா நன் மக்களிடையே கூறப்படாத சொற்களை மறைத்து பிற சொற்களைப் கூறுதல். படிப்படியாக பழக்கவழக்கங்களில் சிறந்து வளர்ந்து மேம்பட்ட பண்பாட்டினால் உலகிற்கே உன்னதமான பண்பாட்டு சீர்மையை உணர்த்தும் உயர்நிலையை அடைந்ததும் நம் தமிழினம். அத்தகைய தமிழரின் அடையாளங்களை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மங்கலச் சொற்கள்**

மங்கலச் சொற்கள் என்பது தமிழரின் பண்பாட்டை உணர்ச்சியை அறிவுறுத்துவது ஆகும். பொது இடங்களில் கூறத்தகாத வார்த்தைகளை களைந்து அதற்குரிய மங்கலச் சொற்களைப் பயன்படுத்துவது நம் மரபாகும். பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் அத்தகைய மங்கலச் சொல்லைக் கையாண்டுள்ளார். என்பதை,

**“உலகு எலாம் புகழ்ந்து போற்றும்”** 2 (பெ.புரா.1:1)

**“உலகு எலாம் வியப்ப”** 3 (பெ.புரா.1130:2)

**“உலகு எலாம் உய்ய வந்த”** 4 (பெ.புரா.2546:2)

போன்ற அடிகளில் ‘உலகு’ என்னும் சொற்கள் பயின்று வந்துள்ளன. இவை மங்கல மொழிகளில் மிகச் சிறந்தது உலகு. அத்ததைய உலகு என்ற சொல்லை தமிழ்

புலவர்கள் தாம் தொடங்கும் நூலின் தொடக்கத்தின் முதற்சீரிலேயோ இறுதியிலேயோ வைத்துப் பாடும் பண்பினையுடையவர்.

**“வடவேங்கடம் தென்குமரியாயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்” 5 (தொல்.1)**

**“உலகம் உவப்ப” 6 (திரு.முருக. 44)**

**“ஆதிபகவன் முதற்றே உலகு” 7 ( குறள்.1 )**

போன்ற இலக்கிய அடிகள் மங்கலச் சொற்களில் அதிகம் உலகு என்ற சொல் பயின்று வருவதைக் காணலாம். தமிழரிடையே மங்கலச் சொற்கள் மீது அதீத நம்பிக்கையுடனும் உணர்வுபூர்வமான வழக்கமாகவும் தங்களின் வாழ்வில் பயன்படுத்தி வந்துள்ளனர்.

**பழமொழிகள்**

பழமொழி என்பது ஏதாவது ஒரு செய்கையை குறிக்கவோ ஒரு செயலுக்கு விளக்கம் தரவோ பயன்படுகிறது. பபழமொழிகள் அனுபவத்துடன் சேர்ந்து அறிவுரையும் சொல்லக்கூடியது.

**“பெருகு தெண்கடல் உற்று உண் பெருநசை**

**ஒரு சுணங்களை ஒக்கும் தகைமையேன்” 8 (பெ.புரா.6:3-4)**

அதாவது அறிதற்கரிய சிறப்பினை கொண்ட திருத்தொண்டர்களது ஒப்பற்ற பெருமையை யான் சொல்லத் தொடங்கியது என்பது ஊர்ச் சுற்றித் திரியும் நாயானது பேராசை கொண்ட நாவினால் நக்கிக் குடித்து விடும் செயலுக்கு ஒப்பாகும் என்கிறார். மேலும்,

**“உற்ற நோய் தீர்ப்பது ஊனுக்கு**

**ஊன் எனும் உரைமுன் கண்டார்” 9 (பெ.புரா.177:7-8)**

சிவபெருமானின் கண்களில் சிந்திய புண்ணீருக்கு பச்சிலை பிழிந்தும் நிற்காமல் பெருகியது. இச்செயலைக் கண்டு பதறிய திண்ணனார் ‘ஊனினால் வரும் நோயைத் தீர்ப்பது ஊனே” என வேடர்கள் கூறிய வாக்கானது நினைவில் வந்தன. மேலும்

**“தான் நோய்க்குத் தானே மருந்து” 10 (குறள். 1102)**

**“முள்ளினால் முள் களையும் ஆறு” 11 (பழமொழி.54:4)**

போன்ற பழமொழிகள் தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பினணந்துள்ளன என்பதை வெளிக்காட்டுகின்றன.

**விளையாட்டுக்கள்**

விளையாட்டு ஓரினத்தின் வீரத்தையும், பண்பையும் வெளிப்படுத்துகின்றன. உடல்திறன் வளர்க்க உள்ளத்தில் ஆர்வத்தை ஏற்படுத்த மகிழ்ச்சியில் திளைக்க விளையாட்டு உதவுகின்றது. விளையாட்டுகளில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லா நிலையில் உள்ளோரும் ஈடுபடுகின்றனர். விளையாட்டை ஆண்கள் விளையாடுவது பெண்கள் விளையாடுவது என பாகுபடுத்தியுள்ளனர்.

**“அயல் ஆமை அடுப்பு ஏற்றி**

**ஆரக் குஆம்பல் நெருப்பு ஊதும்**

**வயல்மாதர் சிறுமகளிர்**

**விளையாட்டு வரம்பு எல்லாம்” 12 (பெ.புரா.66:4-8)**

என்ற அடிகள் வயல்வெளியில் உள்ள உழத்தியரின் சிறுபெண்கள் அங்கே ஆமை ஒடுகளான அடுப்பில் செவ்வாம்பல் மலரை தீயாக வைத்து அடுப்பூதுகின்ற

செய்கையைச் செய்து வயல் வரப்புகளில் விளையாடுகின்ற விதத்தை எடுத்தியம்புகிறார். மேலும்

**“பாடும் அம்மனைகள் எங்கும்**

**பயிலும் அம்மனைகள் எங்கும்”** 13 (பெ.புரா.83:3-4)

காவிரியின் அழகினைக் கூறும் இடத்தில் அங்குச் சிறுபெண்கள் விளையாடும் அம்மானைக் காய்களைப் பற்றியும் திருநாட்டுச்சிறப்பு என்ற பகுதியில் சேக்கிழார் காட்சிப் படுத்தியுள்ளார். மேலும்

**“செம்பொன் நாண் அரையில் மின்னத்**

**தெருவில் தேர் உருட்டும் நாளால்”** 14 (பெ.புரா.150:7-8)

ஐம்படையும், சதங்கையும், அணியப்பெற்று அழகிய மணிகள் கொண்ட சுட்டியையும் அணிவித்து செம்பொன் நாண் அரையில் விளங்க வைத்து தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடும் சுந்தரரின் சிறுபருவ அழகினைச் சுட்டுகிறார்.

**“ஆடும்மென் கழங்கும் பந்தும்**

**அம்மனை ஊசல் இன்ன”** 15 (பெ.புரா.281:3-4)

பரவையாரின் இளமைப் பருவத்தினைக் கூறுமிடத்தில் இனிய அழகு பொருந்திய தன்மை நாளுக்கு நாள் மேன்மேல் வளர்ந்து அதிகரித்திட ஆடுகின்ற மெல்லிய கழற்சிக் காய்களும், பந்தும், அம்மனையும், ஊசல் போன்ற விளையாட்டுக்களை பரவையார் தன் தோழியருடன் விளையாடிய அழகினைக் குறிப்பிட்டுள்ளார். மேலும்

**“மனை அகத்து மணிமுன்றில்**

**மணல் சிற்றில் இழைத்து மணிக்”** 16 (பெ.புரா.884:3-4)

மானக்கஞ்சாற நாயனாரின் மகள் தன் வீட்டின் முற்றத்தில் மலர் போன்ற மென்மையான கைகளினால் மணலினால் சிறுவீடு கட்டியும், கழற்காய், பந்து போன்றவற்றை ஆடும் சிறுவிளையாட்டுக்களைக் காட்சிப்படுத்துகிறார் சேக்கிழார்.

**சடங்குகள்**

தமிழர்களின் விழாக்களும் சடங்குகளும் முக்கியமான தனிச் சிறப்புகள் உண்டெனில் அது மிகையாகாது. உலகத்தாரிடையே தமிழனை அடையாளப்படுத்த கூடிய தளங்களுள் இவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மரபு வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிப்பிட்ட சில செயல் முறைகளின் தொகுப்பே சடங்காகும். அத்தகைய சடங்கு முறைகள் பற்றிய குறிப்புகளை சேக்கிழார் தான் படைத்த பெரியபுராணத்தில் ஆங்காங்கே பதிவிட தவறவில்லை.

**“நீள்முளை சாத்தினார்கள்”** 17 (பெ.புரா.157:8)

தடுத்தாட் கொண்ட புராணத்தில் சுந்தரரின் திருமணத்திற்கு முன்னர் முளைப்பாரிக்குச் செய்யும் சடங்கினையும், மணமகளுக்கும், மணமகனுக்கும் திருமணத்தின் போது கட்டப்பெறும் காப்பின் சிறப்பையும் அத்தகைய சடங்குகள் முறையே பரவையாருக்கும் சந்தரருக்கும் திருமண பந்தலில் நடைப்பெற்றமையை விவரிக்கிறார். அதே போன்று நம்மிடையே கண்ணேறு கழித்தல் என்பதை நாம் இன்றளவும் செய்து வருகிறோம். குழந்தைகளுக்குப் பிறருடைய கண்ணேறு பட்டுவிடக்கூடாது என்பதற்காக நடத்தப் பெறுபவை

**“அலர்பகல் கழிந்த அந்தி**

**ஐயவிற்ப புகையும் ஆட்டிக்”** 18 (பெ.புரா.676:1-2)

திண்ணனாருக்குப் பகல்பொழுது கழிந்திட அந்தி பொழுதின் போது குறவர் குலத்தில் உள்ள முதுகுறத்தியர்கள் திண்ணனாருக்கு கடுகு புகையினால் கண்ணுறு கழித்தமையைச் சுட்டுகிறார். மேலும்,

**"காப்பு அணியும் இளங்குழவிப்" 19 (பெ.புரா.883:1)**

குழந்தையைக் காண்போரின் கண்ணேறு நீங்கிட நெற்றியில் பொட்டு வைத்தும், காப்பணிந்தும் குழந்தையைப் பாதுகாத்த தன்மையைக் குறிப்பிட்டுள்ளார்.

**பழக்கவழக்கம்**

தனிமனிதன் ஒருவன் பழகிப் போன முறையில் திரும்ப திரும்பச் செய்துவரும் ஒரு குறிப்பிட்ட செயலைப் பல மனிதர் ஒன்றாகச் சேர்த்து செய்கின்ற பொழுது அது வழக்கம் எனப் போற்றப் படுகிறது. போருக்குச் செல்லும் வீரர்களை ஒன்று சேர்க்க பறையொலி எழுப்பினர்.

**"வந்து உறச் சேனை தன்னை**

**வல் வரைந்து எழமுன் சாற்ற" 20 (பெ.புரா.579: 3-4)**

எறிபத்த நாயனார் புராணத்தில் பகைவருடன் போரிடச் செல்லும் முன் தன் சேனை கூட்டங்களை ஓரிடத்தில் விரைவாகச் சேரும்படி பறையறிவித்தனர். வீரர்கள் தங்களின் கால்களில் வீரக்கழல் அணியும் வழக்கமானது இருந்தன.

**"கால்கழல் கட்டிய மள்ளர்கள்" 21 (பெ.புரா.623:1)**

காலில் வீரக்கழலைக் கட்டியிருக்க கூடிய படைவீரர்கள் தங்களின் உடல்கள் உள் அடங்க ஒளிமிகுந்த கேடகங்களைத் தங்களின் கைகளில் ஏந்திக் கொண்டு படைகளின் முன்பு நின்று போரிடத் தயாராகினார்கள் என்ற செய்தியைக் காணமுடிகிறது. குழந்தைப்பேற்றினை வேண்டி முருகனை வணங்கித் தொழுதனர் அவ்வாறு தொழும்போது

**"வாரணச் சேவலோடும்**

**வரிமயில் குலங்கள் விட்டுத்" 22 (பெ.புரா.660:1-2)**

முருகனை வழிபடும் போது சேவற் கோழிகள், மயிற் கூட்டங்களைக் காணிக்கையாகச் செலுத்தினர். தோரணங்களைக் கட்டியும், கடப்ப மலர்மாலைகளைத் தொங்கவிட்டும், குரவைக் கூத்தினை நிகழ்த்தியும் வழிபட்டனர். மேலும் சமணர்களை கழுவேற்றும் வழக்கமானது காணப்பட்டதை,

**"வாதில் தோற்ற அமணரை வன்கழுத்**

**தீது நீங்கிட ஏற்று வித்தார் திறம்" 23 (பெ.புரா.1710: 1-2)**

வாதத்தில் தோல்வியுற்ற சமணர்களை கழுமரத்திலே ஏற்றிய செயலை குலச்சிறையார் புராணத்தில் காணமுடிகிறது. இறந்தவர்கள் வீட்டில் பெரியோர்கள், சான்றோர்கள் உணவருந்த மாட்டார்கள் என்பதை அப்பூதியடிகள் புராணத்தில்

**"அறஇது தெரியா வண்ணம்**

**அமுது செய்விப்போம் என்று" 24 (பெ.புரா.1816:5-6)**

வாகீசர் அமுது செய்வதற்குத் தடை ஏற்பட்டுவிட்டதே என்ற வருத்தத்தை வெளிக்காட்டினர். பெரியோர் அமுது செய்யாமல் செல்ல இச்செயல் தடையாகும் எனக் கருதி தன் மூத்த மகன் இறந்த செய்தியைக் கூறாமல் அவனை வீட்டில் மூளையில் கிடத்திவிட்டு அமுது படைக்க தயாராகினர். இவை போன்ற சில பழக்கவழக்கங்கள் நம்மிடையே இன்றளவும் உள்ளமையைக் காணமுடிகிறது.

**தொகுப்புரை**

கரடுமுரடான நிலத்தைச் சீர்திருத்திப் பண்படுத்துவது போலக் கருத்து வளமற்ற அறியாமை நிறைந்த உள்ளத்தைப் பண்படுத்துவது சமயச் சிந்தனைகளே ஆகும். இறைப்பற்றினை நம்மிடையே போதிக்கும் போது கூட பண்பாட்டு அடையாளங்களைத் தவறாது பயன்படுத்திய பாங்கினைக் காணமுடிகிறது.

உலகத்தாரே வியந்து போற்றும் நம் அடையாளங்களைப் பேணி காப்பது நம் கடமையாகும்.

**சான்றெண்விளக்கம்**

1. இளம்பூரணர்(உ.ஆ).,தொல்காப்பியம் சொல்லதிகாரம் ப.45
2. புலவர் பி.ரா.நடராசன்(உ.ஆ)., பெரியபுராணம் மூலமும் உரையும் ப.30
3. மேலது ப.80
4. மேலது ப.485
5. இளம்பூரணர்(உ.ஆ).,தொல்காப்பியம் எழுத்ததிகாரம் ப.5
6. ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ).,பத்துப்பாட்டு மூலமும் உரையும் ப.28
7. வ.சுப.மாணிக்கனார் (உ.ஆ)., திருக்குறள் தெளிவுரை ப. 5
8. புலவர் பி.ரா.நடராசன்(உ.ஆ)., பெரியபுராணம் மூலமும் உரையும் ப.37
9. மேலது ப.158
10. வ.சுப.மாணிக்கனார் (உ.ஆ)., திருக்குறள் தெளிவுரை ப. 227
11. ச.வே.சுப்பிரமணியன்(பதி.ஆ).,பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும் ப.208
12. புலவர் பி.ரா.நடராசன்(உ.ஆ)., பெரியபுராணம் மூலமும் உரையும் ப.79
13. மேலது ப.89
14. மேலது ப.138
15. மேலது ப.216
16. மேலது ப.567
17. மேலது ப.143
18. மேலது ப.440
19. மேலது ப.566
20. மேலது ப.389
21. மேலது ப.413
22. மேலது ப.430
23. மேலது ப.373
24. மேலது ப.424

**பார்வை நூல்கள்**


| | | | |
|---|---|---|---|
| 1. | புலவர் பி.ரா.நடராசன் | - | பெரியபுராணம் மூலமும் உரையும்<br>உமா பதிப்பகம், சென்னை – 01 |
| 2. | இளம்பூரணர் | - | தொல்காப்பியம்<br>சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி |
| 3. | ஞா.மாணிக்கவாசகன்; | - | பத்துப்பாட்டு மூலமும் உரையும்<br>உமா பதிப்பகம், சென்னை - 01 |
| 4. | வ.சுப.மாணிக்கனார் | - | திருக்குறள் தெளிவுரை<br>மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 8 |
| 5. | ச.வே.சுப்பிரமணியன் | - | பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்<br>மூலமும் உரையும்<br>மணிவாசகர் பதிப்பகம்,<br>சென்னை – 8 |



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Anulakshmi S., (2021) Identity of Tamilians in Periyapuranam, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:388-392. Cauvery College For Women, Trichy.

**முனைவர் மு.ஜெயலெட்சுமி**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி – 18

# பெண்ணடியார்களின் பக்தியுணர்வு

**ஆய்வுச் சுருக்கம்:-**

சைவ மதத்தின் மேன்மையை உலகிற்கு உணரச் செய்த பொற்காலம் பல்லவர் காலம் எனலாம். சங்கம் மருவிய காலத்தில் தான் சைவ மதம் வளர்ச்சி பெற்றது. இறைவன் குறித்து பாமாலைகள் பாடி மக்களிடையே ஆன்மிக நெறியை வித்திட்டு சைவமதத்தினை வளர்ச்சியடையச் செய்தவர்கள் நாயன்மார்கள். அறுபத்து மூன்று நாயன்மார்களில் பெண்நாயன்மார்கள் மூவர் இவர்களுள் கி.பி 3 – ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் மூத்தவர் ஆவார். இரண்டாமவர் கூன்பாண்டியனின் மனைவி " மங்கையர்க்கரசி ஆவர். மூன்றாவது அடியார் இசைஞானியார் ஆவார் ". இவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும், மனவலிமையையும் நோக்கும் போது பெண்களாலும் இறைவழிபாட்டில் முழுமையாய் ஈடுபட முடியும் என்பது புலனாகிறது. அதுமட்டுமின்றி இறைவனால் அம்மையே என்ற அழைக்கப்பட்ட சிறப்புடைய காரைக்காலம்மையர் நாட்டையே தன் மனவுறுதியால் சைவமதத்திற்கு மாற்றிய மங்கையர்க்கரயார் வாழ்நாள் முழுக்க ஆழ்ந்த சிவபற்றுடன் திகழ்ந்த இசைஞானியார் ஆகிய மூவரின் பக்திவுணர்வின் ஆழம் அடையாளங்களின் ஆணிவேராய்த் திகழ்கிறது.

**முன்னுரை :**

மனிதனாகப் பிறந்ததன் பயனே பிறரின் நலம் நாடி இன்பம் பெறுவது ஆகும். "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்று பிறருக்குத் தொண்டாற்றி அதன் வழி இறைவனை அடைதலே பேரின்பம் ஆகும். இவ்விரு தங்கள் வாழ்கையை அர்பணித்து பக்திநெறியைக் கடைபிடித்து பிறருக்கு வழிகாட்டியாய் வாழ்ந்தவர்கள் (அடியவர்கள்) நாயன்மார்கள் என்றால் மிகையாகாது.

மனிதனின் வாழ்க்கையில் நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றும் உணர்வே பக்தியாக மலர்கிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற ஒற்றை வார்த்தையில் தமிழனின் பரந்துபட்ட உலகளாவிய பயணத்தை உணரலாம். அங்ஙனம் நோக்கின் சைவ சமய பெரியவர்களான நாயன்மார்கள் அனைத்து ஊர்களுக்கும் சென்று பக்திப் பாசுரங்கள் பாடியும் தொண்டாற்றியும் இறைநெறி பரப்பி மக்களை நல்வழிபடுத்தினர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் மூவர் பெண்ணடியார்கள். பக்தியுணர்விர்க்கு ஆண், பெண் என்ற பேதம் கிடையாது.

இன்றைய சமூகத்தில் பெண்களுக்கான உரிமைகளும், சுதந்திரமும் எண்ணிலடங்காதவை.ஆனால் பக்திஇலக்கியங்களும், இயக்கங்களும் தோன்றிய காலக்கட்டத்தில் பெண்களுக்கான உரிமைகளும் சுதந்திரமும் மிகக்குறைவே. அத்தகைய சூழலிலும் தங்களின் பக்திநெறியால், தூயசிந்தனையால், மனவுணர்வுகளால் இறைமையை உலகுக்கு உணர்த்தி தங்கள் வாழ்வினை தமிழர் அடையாளங்களாய் பதிவு செய்த பெண்ணடியார்களின் பக்தியுணர்வை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

**சைவத்தின் மேன்மை**

சமயம் என்ற சொல் பக்குவப்படுதல் என்னும் பொருளினைக் குறிக்கும். ஓர் ஆன்மா சிவனோடு மனம், வாக்கு, காயங்கள் இவற்றால் தொடர்பு கொண்டு , தன்னைப் பயன்படுத்திக் கொள்ளும், ஆற்றலைத் தரும் சமயமாக சைவசமயம் திகழ்கிறது. சைவசமயம் என்பது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட

சமயம் சைவம் என்ற சொல்லுக்குச் சிவனோடு சம்மந்தம் ஆகுதல் என திருமூலர் பொருள் தருகின்றார். சைவசமயம் காலம்கடந்த தொன்மையுடையது.

“அமர்கட்கும் வியன்தாளைத்

தென்னவன் பெயரிய துன்னருந் துப்பின்

தொன்முது கடவுட் பின்னர் மேய

வரைத்தாழ் அருவம் பொருப்பிற் பொருந.” – [1]

என்கிறது மதுரைக்காஞ்சி.

இயற்கைச் சீற்றங்களுக்கு அஞ்சிய மனிதன் இயற்கையை வழிபட தொடங்கினான். பின்னர் நிலத்திற்கு ஏற்றவாறு தெய்வங்களை வகுத்து நிறுவி வழிபட்டு வந்தான் என்பதற்குச் சான்று பகர்கிறது தொல்காப்பியம்.

“மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை, குறிஞ்சி, மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.” – [2]

என்கிறது தொல்காப்பியம்.

பின்னர் அறிவின் முதிர்வின் வழி தெய்வங்கள் பல என்றும், தெய்வங்களுக்கு எல்லாம் முதன்மையாய் விளங்குபவன் சிவன் என்றும் உணர்ந்தனர். சிவனுக்கு அடையாளம் வகுத்தனர்.

சிவன் என்ற சொல்லின் வேர்ச்சொல் “சிவம்” என்பதாகும். இதற்குச் சாந்தம், மங்கலம் என்று இரு பொருளும் உண்டு. உருவமாகவும், அருவமாகவும் விளங்குபவன் சிவன். இறைவனின் உருவம் என்பது உடற்கூறுகளோடு கூடிய முழுமைத் தன்மை உடையதாக கண்ணிற்கு புலப்படும் நிலையாகும். கண்ணிற்குப் புலப்படாத நிலை அருவம் ஆகும். அதாவது உடல் உறுப்புகள் இல்லாமல் ஒரு அடையாளமாய் தோன்றும். இத்தகைய அருவுருவத்தினைச் சதாசிவம் அல்லது லிங்க வடிவம் என்பர்.

பல்லவர்களே சிவன்கோயில்களைக் கட்டினார்கள்.பல்லவர் காலத்தில் சிவநெறியே சமயமாக இருந்தது. பல்லவர்களது கல்வெட்டில்தான் முதன்முறையாக “சைவ சித்தாந்தம்” என்ற தொடர் காணப்படுகிறது. பல்லவர் காலத்தில் சிவன் அடியார்களாக நாயன்மார்கள் வாழ்ந்தனர். இக்காலத்தில் தான் மக்களிடையே சிவவழிபாடும், சைவ சித்தாந்த கருத்துக்களும் பரவிக் காணப்பட்டன.

பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் தாங்கள் சிவபெருமானிடம் கொண்டிருந்த அன்பினையும், சிவவழிபாட்டின் நெறிமுறைகளையும், தங்களின் பாடல் வழி உணர்த்தினர். இப்பாடல்கள் அனைத்தும் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டன. சைவசமயத்தின் உயர்வினை திருமுறைகளின் வழி உணரமுடிகிறது.

**நாயன்மார்கள்:**

சிவன் மீது அதிகப் பற்றுக்கொண்டு சிவனன்று உலகில் வேறு ஏதுமில்லை என்ற அளவிற்கு முழுமையான சரணாகதி உணர்வுடன் பக்திமார்க்கத்தில் ஈடுபட்ட முக்தியடைந்த பெரியவர்களே நாயன்மார்கள் என்று போற்றப்படுகின்றனர். சைவசமயத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் உள்ளனர். இவர்களைப் பெரியபுராணம் என்னும் நூல் சைவ அடியார்கள் என்று குறிப்பிடுகிறது.

நாயன்மார்கள் காலம், குலம், நாடு, இயற்பெயர், காரணப்பெயர் என பலவகைகளில் வகைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

இறைவன் மீது அன்பு செலுத்துவதற்கு ஆண், பெண் என்கிற பேதம் ஏதுமில்லை. அனைவரையும் கடவுள் ஏற்றுக்கொள்வார் என்பதற்குச் சான்றாக மூன்று பெண்ணடியார்கள் திகழ்கிறார்கள். காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், சமண மதத்திலிருந்த தன் கணவரையும் தன் நாட்டையும் சைவமதத்திற்கு மாற்றி பெருந்தொண்டாற்றினார். இசைஞானியார் சைவகுரவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் அன்னை ஆவார்.

இம்மூன்று பெண்ணடியார்களும் அன்பே சிவம் என்பதை உணர்ந்து அதனையே உலகிற்கு உணர்த்தினர்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்

அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே." – [3] (திருமந்திரம் – 270)

என்று திருமூலர் அன்புதான் கடவுள் என திருமந்திரத்தில் வலியுறுத்தினார். பெண்ணடியார்களும் இவரினைப் போன்றே அன்பின் வழியில் மனவுறுதியுடன் சைவம் தழைக்க தம் வாழ்வையே அர்ப்பணித்தனர் என்கிறது வரலாறு. காரைக்காலம்மையார்:

அடியவர்களில் மூத்தவர் இவர். சோழநாட்டில் கடற்றுரைப் பட்டினமாகக் கொண்டு திகழும் காரைக்கால் என்னும் ஊரில் தனதத்தன் என்ற வணிகருக்கு மகளாகத் தோன்றினார். பேரழகும், அன்பும், பண்பும் கொண்டு ஊரார் வியக்கும்படி நற்குணங்களைப் பெற்றிருந்தார். இவரின் இயற்பெயர் புனிதவதியார். இவர் மணல் வீடு கட்டி விளையாடும் சிறுபிள்ளைப் பருவத்திலேயே சிவனின் திருவடிகளை வணங்கும் பக்தியுணர்வுடன் திகழ்ந்தார்.

"வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்

அணிகிளர்மெல் அடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே

பணிஅணிவார் கழற்கடிமை பழகிவரும்பாங்கு பெறத்

தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரும் மொழியின்றார்." – [4]

என்ற பாடல் இவர் பிறப்பின் சிறப்பையும், இளம்பருவத்திலேயே நல்ல சொற்களைப் பேசும் நல்ல பண்புடையவர் என்பதையும் எடுத்தியம்புகிறது.

காரைக்கால் அம்மையார் பரமதத்தன் என்பவரை மணந்து இல்லற வாழ்வில் ஈடுபட்டார். ஒரு சமயம் பரமதத்தன் தனது கடையிலிருந்து வியாபாரியிடம் பெற்ற மாங்கனிகளை தன் இல்லத்திற்குக் கொடுத்தனுப்பினார். அந்த நேரத்தில் அவரின் இல்லத்திற்குச் சிவனடியார் ஒருவர் வந்தார். காரைக்கால் அம்மையார் அவரை இன்முகத்துடன் வரவேற்றார். தயிர் கலந்த அன்னத்தையும், தன் கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனியில் ஒன்றை வைத்து அடியாரை உபசரித்தார். தமிழர்களின் தலையாயப் பண்புகளில் ஒன்று விருந்தோம்பல் என்பது. இங்கும் அம்மையார் வந்த அடியாரை வணங்கி, வரவேற்று விருந்தோபால் செய்தார்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு." – 5

என்கிறது குறள். மதிய உணவு வேளையில் இல்லம் வருகிறார் பரமதத்தன். பல வகை பதார்த்தங்களுடன் அன்னம் பரிமாறிய காரைக்கால் அம்மை சிவன் அடியார்க்குப்

படைத்தது போக மீதியிருந்த ஒரு மாங்கனியை அவருக்குத் தருகிறார். அதன் சுவையின் அருமையால் இன்னொரு மாங்கனியையும் தருமாறு கேட்கிறார் கணவர். திகைத்து விட்ட அம்மையார் சமையலறைக்குச் சென்று சிவபெருமானிடம் வேண்டுகிறார். ஒரு மாங்கனி அவர் கையில் கிடைக்கிறது. இக்கனியின் சுவை மிக அதிகமாக அம்மையாரிடம் வினவுகிறார் தத்தன். நடந்த உண்மையறிந்த மெய்சிலிர்த்த பரமதத்தன் தெய்வப் பெண்ணுடன் இல்லறம் நடத்தும் சிந்தனையை விடுத்து வணிக நோக்குடன் கப்பலில் ஏறி பயணம் செய்கிறார்.

இங்கு கணவரே தன் மனைவியை தெய்வப்பெண் என்று போற்றினார் என்ற செய்தி காரைக்கால் அம்மையின் ஆழ்ந்த பக்தியுணர்வினை வெளிப்படுத்துகிறது. மேலும் கணவனுக்காக இறைவனிடம் மாங்கனி வேண்டி பெற்ற செயல் அவர் சிவனின் மீது வைத்திருந்த அளவற்ற நம்பிக்கையை உணர்த்துகிறது

"............ மதுரமிக வாய்ந்த கனி தனைநுகர்ந்த இனியசுவை ஆராமைத்தார் வணிகன் இனையதொரு ஒரு பழம் இன்னும் உளதனை இடுக என" – [6]

வேண்டிய மாங்கனி பெற்ற அம்மையின் மனவுறுதி மெய்சிலிர்க்க வைக்கிறது. சிறிது காலத்திற்குப் பின் கணவனைக் காண உறவினர் சுற்றத்தாரோடு சென்றார் அம்மையார். அங்கு பரமத்தனுக்கு மறுமணமாகியும் ஒரு பெண் குழந்தை இருந்ததையும் கண்டார். அம்மையாரைக் கண்ட

பரமதத்தன் மனைவி மக்களோடு காலில் விழுந்து வணங்கினார். கணவனின் செயலை ஏற்றுக்கொள்ள முடியாத அம்மையார் தன் இளமையைத் துறக்க வேண்டி சிவபெருமானிடம் கைதொழுதார்.

"ஈங்குகிவன் குறித்த கொள்கை இதுஇனி இவனுக்காகத்

தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதித்த கழத்திங் குன்பால்

ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவ அடியேனுக்குப்

பாங்குற வேண்டும் என்றுபரமர் தாள்பரவி நின்றார்." – [7]

என்று பாடல் வரிகளின் வழி காரைக்காலம்மையார் தன் இளமை நீங்க வேண்டுமென சிவபெருமானிடம் வேண்டினார்.

பெண்கள் எப்போதும் இளமையுடன் இருக்க வேண்டும் என்றே விரும்புவர். ஆனால் இங்கு புனிதவதியாரோ உடம்பில் தசையும் அதனை இடமாகக் கொண்டு புனைந்த அழகுகள் நீங்க வேண்டினார் என்பதன் வழி பெண்ணின் மனவுறுதி எதையும் சாதிக்கும் என்பது புலனாகிறது. அவரின் வேண்டுதல் ஏற்று சிவபெருமானும் அவ்வரத்தினை நல்கினார்.

இங்ஙனம் சிவவழிபாட்டிற்காக தன் வாழ்வையே அர்பணித்த அம்மையார் அவரின் பக்தியுணர்வு புலப்பட அற்புதத்திருவந்தாதி, திருவிரட்டை, மணிமாலை, திருவாலங்காட்டு, மூத்தத்திருப்பதிகம் ஆகிய மூன்று நூல்களை படைத்தருளினார்.

ஆதியும் அந்தமுமாய், எங்கும் நீக்கமற நிறைந்தவன் இறைவன். உலகப்பொருள்களில் எல்லாம் கலந்து நின்றும், விலகி நின்றும் அவற்றின் உண்மைத்தன்மையை அறிபவன். ஐம்பூதங்களின் வடிவானவர். இவ்வாறு உலகத்தோடு இரண்டறக் கலந்த இறைத்தன்மையை

"அவனே யிருசுடர்தீ யாகாசம் மாவான்

அவனே புவிபுலன்காற் றாவான் அவனே

இயமான னாய்அட்ட மூர்த்தியுமாய் ஞான

மயனாகி நின்றானும் வந்து." – [8]

என்ற பாடலின் வழி உலகிற்கு உணர்த்தியுள்ளார். எங்கும் இறைவனைக் கண்டும், உணர்ந்தும், மகிழ்ந்தும் இறைசிந்தனையுடனே வாழ்ந்தவர் காரைக்காலம்மையார்.

இறைவன் தன்னைத் துதிபவர்களிடம் தாய் போல்

அன்பு காட்டும் தயாளன். இதனையே

"நாயிற்கடையாய்க் கிடந்தஅடியேற்குத் தாயிற்சிறந்ததாயாவான தத்துவனே" – [9]

என்ற வரிகள் மூலம் மாணிக்கவாசகர் தாய்க்கு நிகரான தயாபரன் இறைவன் என்கிறார். இங்ஙனம் இறைவனிடம் ஆன்மாவோடு ஒன்றினால் மட்டுமே இறையருளை உணரமுடியும். என்று தம் செயலால் உணர்த்தியவர் அம்மையார் என்பதற்குச் சான்றாக அமைகிறது அவர் கயிலை மலை சென்ற நிகழ்ச்சி.

கொன்றை மாலை சூடிய சூலம் ஏந்திய சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கயிலை மலையை சென்றடைந்த அம்மையார் மிகவும் புனிதம் வாய்ந்த கயிலை மலையில் காலால் நடந்து செல்வது தவறு. அவ்வாறு செய்வது அதன் புனிதத்தைக் குலைக்கும் எனக் கருதி அம்மையார் காலால் நடக்காமல் தனது இரு கைகளால் நடந்து சென்றதனை

"படரொளி கைலை வெற்பின் பாங்கு எனை தாங்கும் காலின்

நடையினை தவிர்ந்து பார்மேல் தலையினால் நடந்து சென்றார்" - [10]

என்ற பாடலடி உணத்துகிறது. இக்காட்சியைக் கண்டு அம்மையாரின் ஒப்பற்ற பக்தியை உணர்ந்து இறைவனே புனிதவதியாரை "அம்மையே" என்ற தம் பக்தியுணர்வால் அழைத்தார். இங்ஙனம் ஒப்பில்லா பெருமை பெற்று உலகின் அனைத்து பெண்களிலும் முதன்மையானவராகத் திகழ்கிறார் காரைக்காலம்மையார்.

**மங்கையர்க்கரசியார் :-**

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இரண்டாமவர் மங்கையர்க்கரசியார். சோழனின் திருமகளான இவர் இளம்வயது முதலே சிவபக்தி கொண்டவர். காணி என்பது இவருடைய இயற்பெயர். பெண்களுக்கெல்லாம் தலைவியாக பேறு பெற்றதனால் ஞானசம்பந்தரால் மங்கையர்கரசி என்று சிறப்பிக்கபடுவர். மேலும் சேக்கிழாரால் "மங்கையர்க்குத் தனியரசி" என்றும் புகழப்பட்டவர். இவர் கூன்பாண்டியனை மணந்து குளத்திற்குப் பெருமை சேர்த்தவர். மன்னன் சமண மதம் மீது தீராக் காதல் உடையவன். தன் கணவனை சைவ மதத்திற்கு மாற்றவேண்டும் என மனவுறுதி கொண்டார் மங்கையர்கரசியார்.

ஒரு முறை பாண்டிய மன்னனுக்கு வெப்புநோய் ஏற்பட்டது. எந்த மருந்துவமும் பலனளிக்கவில்லை. அச்சமயம் மிகுந்த மனவேதனையடைந்த மன்னன் எந்த மதம் என்னுடைய வெப்புநோயைப் போக்குகிறதோ அம்மதத்தையே உயர்ந்த மதமாக நான் ஏற்றுகொள்கிறேன் என்று கூறினார். அனைத்து மதமும் தோல்வியடைந்தது சைவமே வென்றது என்பதை

"செப்புவதியாம் என்னறிந்து தென்னர் கோமான்

மாசில்புகழ் நெடுமாறன் தனக்குத் சைவ

வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிபின்னை

ஆசில்நெறி அமர்ந்திருக்க அருளும் பெற்றார்." – [11]

என்ற வரிகள் எடுத்தியம்புகிறது. பாண்டிய நாட்டில் சமண இருள் போக்கி சைவ ஒளியேற்றியவர் மங்கையர்கரசியார். இவர் நெடுங்காலம் கணவருடன் இணைந்து சைவத் தொண்டாற்றி சிவபெருமானின் திருவடியில் கலந்தார். ஒரு நாட்டையே சைவத்திற்கு மாற்றி உய்வித்த இவரின் மனவுறுதியும், பக்திவுணர்வும் இன்றளவும் தனித்தன்மையாய்த் திகழ்கிறது.

**இசைஞானியார் :-**

பெண் நாயன்மார்களில் மூன்றாமவர் இசைஞானியார். இவர் சடையநாயனாரின் மனைவி சுந்தரருக்குத் தாயார். சடையனாரும் இசைஞானியாரும் அறம் பலபுரிந்து அடியவர்களின் அடிபோற்றி சிவபெருமானின் திருவடி தொழுது அன்பின் வழி "அன்பே சிவம்" என்ற நெறிபற்றி வாழ்ந்து வந்தனர் என்பதனை

"இசைஞானி காதலன் திருநாவலூர்க் கோன்

அன்னவனால் ஆரூரன் அடிமைகேட் டுவிப்பார்

ஆரூரில் அம்மாறுக் கன்பரா வாரே" – [12]

என்ற பாடலடி குறிப்பிடுகிறது. தவம் பல புரிந்து சுந்தரரை புதல்வராய்ப் பெற்றனர். பன்னிரண்டாம் திருமுறையில் ஏழாம் தேவாரம் இயற்றியவர். சமயக் குரவர்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாரை பெற்றமைக்காகவும், சைநெறியில் நின்றமைககாகவும் அவரது பெற்றோர்கள் சடையநாயனர் இசைஞானியார் இருவரும் நாயன்மார்களின் வரிசையில் சேக்கிழாரால் சேர்க்கப்பட்டனர்.

**நிறைவுரை :-**

மூன்று பெண் நாயன்மார்களின் வாழ்க்கையையும் உற்றுநோக்குங்கால் ஆண்களுக்கு இணையாக பெண்களும் ஆன்மீக தொண்டாற்றி முக்தியடைந்துள்ளர்கள் என்பதை மெய்பிக்கிறது. பெண்களுக்கு எவ்வித உரிமைகளும், சுதந்திரமும் இல்லாத காலம் இவர்கள் வாழ்ந்த கிபி – 3ம் நூற்றாண்டு இருப்பினும் தன் மனவலிமையால் பக்திவுணர்வால் அம்மையே என இறைவனால் போற்றப்பட்ட காரைக்காலம்மையாரும் தன் முயற்சியால் நாட்டையே சைவ மதத்திற்கு மாற்றிய மங்கையர்க்கரசியாரின் ஆற்றலும், சுந்தரமூர்த்தி நாயனாரைப் பக்திமார்கத்தில் ஈடுபடச் செய்த இசைஞானியாரும் பக்தியின் அடையாளங்களாய் தமிழ்வுலகில் என்றும் நிலைத்திருப்பர் என்பது உறுதியாகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. மதுரைக்காஞ்சி – பாடல் அடி (38 – 42)
2. தொல்காப்பியம் (பொருளதிகாரம்) – பா.எண் – 34
3. திருமந்திரம் – பா.எண் – 270
4. காரைக்கால் அம்மையார் புராணம் – பா.எண் – 1740
5. திருக்குறள்- பா.எண் – 81
6. காரை அம்மையார் புராணம் - பா.எண் – 1740
7. காரை அம்மையார் புராணம் - பா.எண் - 1765
8. அற்புதத் திருவந்தாதி – பா.எண் – 1
9. திருவாசகம் - பா.எண் – 64
10. காரை அம்மையார் புராணம் - பா.எண் - 1771
11. மங்கையர்க்கரசியார்புராணம் - பா.எண் – 21
12. சிவன் அருள் திரட்டு - பா.எண் – 31

**துணைநூற்பட்டியல்**


1) மு.வரதராசனார்
திருக்குறள்
142, ஜானி ஜான் கான் சாலை
இராயப்பேட்டை சென்னை – 14
முதற்பதிப்பு டிச 2005
2) திருமந்திரம் மூவாயிரம் (உரையுடன்)
கழக வெளியீடு
முதற்பதிப்பு 1942
சென்னை – 18
3) தொல்காப்பியம் பொருளதிகாரம்
கழக வெளியீடு
சாரதா பதிப்பகம்
இராயப்பேட்டை
சென்னை
4) சோமசுந்தரனார் . பொ.வே
மதுரைக்காஞ்சி( பத்துப்பாட்டு)
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
சென்னை – 600 018
5) காரைக்கால் அம்மையார் படைப்புகள் மூலமும் உரையும்
சாரதா பதிப்பகம்
இராயப்பேட்டை
சென்னை
6) பெரியபுராணம்
முல்லை நிலையம்
பாரதிநகர்
சென்னை
7) திருவாசகமும் மூலமும் உரையும்
சாரதா பதிப்பகம்
இராயப்பேட்டை
சென்னை



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Jeyalakshmi M., (2021) Piety of Women Diciples, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:393-399. Cauvery College For Women, Trichy.

**திருமதி செ.புனிதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
அண்ணாமலை நகர்
திருச்சி - 18.

# சிவவாக்கியர் பாடல்களில் வாழ்வியல் சிந்தனைகள்

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்கள் வரலாறுகளை பதிவுசெய்வதாற்காக மட்டும் படைக்கப்படவில்லை. வரலாறாக வாழ்ந்துக்காட்ட உதவும் சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்கின்றன. சித்தர் இலக்கியங்கள் மாந்தர்கள் தம் சிற்றின்பத்தைத் துறந்து பேரின்பத்தை அடைய துணைபுரிகின்றது. சித்தர்களுள் சிறந்த சித்தர் சிவவாக்கியர் ஆவார். அவர்தம் பாடல்களுள் உடம்பால் மனிதன் பெறும் இன்பம் சரீரசந்துஷ்டி, ஆன்மாவின் நிம்மதி ஆத்மசந்துஷ்டி. உடம்பையும் மனதையும் மறதிக்குள்ளாக்கி அனுபவிக்கும் ஆத்ம இன்பமே நிலையானது என்றும், மூடநம்பிக்கைகளுள் சிக்குண்டு தவிக்காமல் , சாதி மத பேதங்களால் முரண்பட்டு நிற்காமல் , நிலையில்லாத பொருள்களை நிலையானவை என்றெண்ணி காலத்தை வீணே கழிக்காமல், உடல் நலனைப் பேணுவதில் யோகத்தின் பங்கு என்ன என்ற உண்மையை நன்கு அறிந்து, பக்குவப்பட்ட வாழ்க்கையை மேற்கொள்ள உதவும் பல ஆலோசனைகளைத் தன் பாடல்களில் பதிவு செய்துள்ள சிவவாக்கியரின் வாழ்வியல் சிந்தனைகளை உலகறியச் செய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

மனிதர்களால் கட்டமைக்கப்பட்ட இவ்வாழ்வியல் அமைப்பு முறையில் மனம் தடுமாறி கட்டுப்பாட்டை இழந்தும், தளர்த்தியும் தவறிழைப்பது மனிதர்கள் தான். இதனால் மனிதர்களுக்குள் பல்வேறு விதமான பூசல்கள் உண்டாகி பிளவுபட்டு நிற்கின்றனர். இதனை சீர்செய்ய தனிமனித ஒழுக்கம் தான் கைக்கொடுக்கும் என்று அறிவால் விரிவடைந்த ஆன்றோர்களும் பண்பால் நிறைவடைந்த சான்றோர்களும் தங்களின் படைப்புகளின் வாயிலாக வலியுறுத்தியுள்ளனர். நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் தந்திரங்களைத் தன் படைப்பில் தெளிவுப்படுத்தியுள்ள சிவவாக்கியரின் தகவமைவுகளை இக்கட்டுரையில் காண்போம்.

**யோகத்தின் பயன்**

யோகத்தை சித்தர்கள் பிராணாயாமம் என்றும் வாசியோகம் என்றும் அழைப்பர். இது உடல் நலத்திற்கும் தன்னலத்திற்கும் அடித்தளமாக அமைந்துள்ளது. பிராணாயாமம் பயில்வோர்க்குச் சாவேயில்லை என்பதும் மறுபிறப்பில்லை என்பதும் சித்தர்கள் கூற்றாகும். வாசியோகத்தால் இளமையை மீட்டுருவாக்கம் செய்ய இயலும் என்பதை,

**'உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்**

**கத்தினால் இருத்தியே கபாலம் ஏற்றவல்லீரேல்**

**விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்**

**அருள்தரித்த நாதன்பாதம் அம்மைபாதம் உண்மையே'1**

என்ற இப்பாடலில் மாதொருபாகன் மீதும், பார்வதியின் மீதும் ஆணையிட்டு உண்மையை விளக்க முயன்றுள்ளார்.

வாசிப்பயிற்சியினால் அனைத்து வல்லமையும், தனமும் கிடைக்கும். இதனை,

**‘வன்மையான வாசியுண்டு வாழ்த்தி யேத்த வல்லிரேல்**

**தண்மை பெற்றிருக்கலாம் தனமும் வந்து சேரும் ’ 2**

என்ற பாடலும்,

மூச்சை அடக்கும் வித்தையினால் நாம் செய்த கொடிய வினைகளை விரட்டிடமுடியுமென்பதை,

**‘மையிலங்கு கண்ணிபங்கன் வாசிவானிலேறி முன்**

**செய்த வல்வினைகளுஞ் சிதறுமஃது திண்ணமே’3**

என்ற இவ்வரிகளின் வாயிலாகவும்,

வாசியோகத்தை நாள்தோறும் கடைபிடிப்பவர்கள் மனதில் இறைவன் குடியிருப்பான் என்பதை அறியாமல் இருப்பவர்களை,

**‘மண்ணதிர விண்ணதிர வாசியை நடந்திடில்**

**நண்ணியெங்கள் ஈசனும் நமதுடலில் இருப்பேனே’4**

இறையைத் தேடி அலையும் மூடர்கள் என்றுச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இக்கருத்துக்களை அடியொற்றி தான்,

**‘உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**

**உடம்புள்ளே உத்தமன் கோயில்கொண் டானென்று ’5**

உடலை இயக்குகின்ற யோகமாகிய உறுபொருளைக் கண்டுகொண்டால் அதனுள் இருக்கும் இறைவனையும் கண்டடையலாம் என்கிறார் திருமூலர்.

**‘வாயு வழக்கமறிந்து செறிந்தடங்கில்**

**ஆயுட் பெருக்கமுண்டாம்’6**

என்னும் இக்குறளின் வாயிலாக மூச்சைக் கட்டுப்படுத்தி இயக்கும் ஆற்றலுடையவர்களின் ஆயுட்காலம் அதிகரிக்கும் என்று தெளிவுப்படுத்தியுள்ளார்.

எனவே யோகத்தால் தனம் பெருகும், முன் செய்த கொடிய வினைகள் அகலும், இளமை திரும்பும், இறைவனை கண்டு உய்த்துணர முடியும் என்ற உண்மையை சிவவாக்கியர் பாடல்களின் வழி அறியமுடிகின்றது.

**அறியாமையை அகற்றல்**

செயல் ஒன்று, எதிர்ப்பதம் இரண்டு. இரண்டு எதிர்விளைவுகளுள் நிலையானது எது? நிலையில்லாதது என்று பகுத்தறியும் ஞானிகளே சித்தர்கள். பருவநிலை மாற்றங்களால் சீர்குழைந்துவிடக்கூடாதென்று எண்ணி உறையுளுக்கும், உடலுக்கும் பாதுகாப்புத் தேடி அலையும் மானிடர்களே! உடலும் உயிரும் பிளவுபட்டுப்போனால் , பிணம் என்று சுட்டெரிப்பார்களேத் தவிர, சுட்ட மண்ஓட்டை உடைந்தாலும் உதவும் என்றெண்ணி பத்திரப்படுத்துவது போல் பாதுகாக்கமாட்டார்கள். எனவே உடலும் உயிரும் நிலையில்லாதது என்பதை ,

**‘நாடுபெற்ற நடுவர்கையில் ஓலைவந்து அழைத்திடில்**

**ஓடுபெற்ற அவ்விளை பெறாதுகாண் இவ்வுடலமே’7**

என்னும் இப்பாடலும்,

**‘நடுவன் வந்து அழைத்த போதுநாறும் இந்த நல்லுடல்’8**

நாடிகள் செயலிழந்த பின் நாற்றம் எடுக்கும் இந்த உடலை, நிறத்தின் அடிப்படையில் போற்றுவது வீண் என்பதை, என்னும் இப்பாடலின் வாயிலாகவும் தெளிவுபடுத்தியுள்ளார் சிவவாக்கியர்.

பல்வேறு வகையான உடல்களாலும் உயிர்களாலும் நிரப்பப்பட்டுள்ள இந்த உலகமானது இயற்கையின் பேரிடர்களை எதிர்கொள்ள இயலாமல் உருண்டோடிவிடும் தன்மையுடைத்து. ஆனால் மனிதர்கள் இதை உணராமல் இருப்பதை,

**'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே**

**பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்**

**நில்லா வுலகம் புல்லிய நெறித்தே'9**

என்று தொல்காப்பியரும்,

**'நில்லாதவற்றை நிலையின என்றுணரும்**

**புல்லறி வாண்மைக் கடை'10**

என்று திருவள்ளுவரும்,

ஆறறிவுடைய மனிதர்களாக பிறந்திருப்பினும் ஓரறிவு பெற்ற புல்லுக்கு ஒப்பானவர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர்.

எனவே நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டிய இடம் அறிந்து, அறியாமை என்னும் இருளை அகற்றி, பகுத்தறிவோடு செயல்பட வழிகோலியுள்ளார்.

**சாதி மறுப்புக் கொள்கை**

மன ரீதியாக தாழ்மை மனப்பான்மையை உண்டாக்கவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை விட, நிற பாகுபாடே பெரிது என்று கிளர்ச்சியூட்டி கலகத்திற்கு வழிவகுக்க கையாளப்பட்ட பெரிய மந்திரம் தான் சாதிபாகுபாடு. இதனை பல ஆன்றோர்களும் சான்றோர்களும் எதிர்த்த வண்ணம் இருந்தாலும் தீர்வுகிடைத்தபாடில்லை. நாம் அனைவரும் மனிதசாதி என்ற எண்ணம் எழாதவரை இச்சிக்களுக்குத் தீர்வு இல்லை. எனவே அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் சித்தர்கள் தத்தம் கருத்துக்களை பதிவிட்டுள்ளமையை,

**'சாதி பேதம் இல்லை'11**

என்று அகப்பேய்ச் சித்தரும்,

**'சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்'12**

என்று பாம்பாட்டிச் சித்தரும்,

**'சக்திஏது சம்புஏது சாதிஏது பேதம் அற்றதேது'13**

என்று சிவவாக்கியர் வினாயெழுப்பியுள்ளதோடு,

**'இறைச்சி தோல் எழும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ'14**

இவர்கள் இன்னின்ன சாதி என்று மனிதர்களின் தோல்களிலும் எலும்புகளிலும் இலட்சினைப் பொறிக்கப்பட்டிருக்குமோ! என்ற ஐயமும் சிவவாக்கியருக்கு ஏற்பட்டுள்ளமையை பதிவுசெய்துள்ளார்.

எனவே மண்ணில் வாழும் வரை நாம் அனைவரும் மனிதர்கள் என்ற ஒற்றுமையுணர்வுடன் வாழவேண்டுமேயொழிய சாதிபேத முரண்பாடுகளோடு வாழக்கூடாது என்று சிவவாக்கியர் வலியுறுத்தியுள்ளார்.

**உருவ வழிபாடு**

இறைவன் அன்பின் மறுஉருவமாகத் திகழ்கிறான். இதை ஏற்பதிலும் நிராகரிப்பதிலும் தான் சிக்கல் நீடிக்கிறது. உள்ளத்தில் களங்கத்தை சுமந்து கொண்டு இச்சிக்கல்களுக்குத் தீர்வு காண இயலாது. உடலையும் உள்ளத்தையும் துலக்கித் தூய்மையாக வைத்திருப்பவர்களால் தான் உருவழிபாட்டை விட, அன்புவழிபாடே ஆகச்சிறந்தது என்பதை உய்த்துணரமுடியும் .

உருவ வழிபாட்டால் உங்கள் தொல்லைகள் இடம்பெயராது. என்பதை,

**‘கல்லுவெள்ளி செம்பிரும்பு காய்ந்திடும் தராக்களில் வல்லதேவ ரூப பேதம் அங்கமைத்துப் போற்றிடில் தொல்லையற் றிடம்பெரும் சுகம்தருமோ சொல்லுவீர்’15**

என்னும் இப்பாடலின் வாயிலாக உணர்த்தியுள்ளார்.

எனவே மக்களுடைய உள்ளுணர்வை வளர்க்காமல் , செம்மைப்படுத்தாமல் புறச்செயல்களையும் சடங்குகளையும் வளர்ப்பதால் பயனில்லை. எனவே பொய்மை உணர்வுகளையும், வெற்றுச் சடங்குகளையும் வளர்த்துவிட்ட சமயவாதிகளைச் சாடியுள்ளார் சிவவாக்கியர்.

**முடிவுரை**

இங்ஙனம் சிவவாக்கியர் காட்டிய நெறியில் வாழ முயற்சி செய்தோமேயானால் வன்முறையயற்ற, நிதானமான உலகை உருவாக்கலாம் என்பது திண்ணம்.

**சான்றெண் விளக்கம்**

1. சிவவாக்கியர் - பா.எண் - 5
2. சிவவாக்கியர் - பா.எண் - 441
3. சிவவாக்கியர் - பா.எண் - 443
4. சிவவாக்கியர் - பா.எண் - 444
5. திருமூலர் - பா.எண் - 725
6. ஔவையார் - ஞானக்குறள் - கு.எண் - 49
7. சிவவாக்கியர் - பா.எண் - 26
8. சிவவாக்கியர் - பா.எண் - 6
9. தொல்காப்பியம் - பொருள் - புறத்திணையியல் - நூ.எண் - 76
10. கு.எண் - 331
11. அகப்பேய்ச் சித்தர் - பா.எண் - 68
12. பாம்பாட்டிச்சித்தர் - பா.எண் - 123
13. சிவவாக்கியர் - பா.எண் - 45
14. சிவவாக்கியர் - பா.எண் - 44
15. சிவவாக்கியர் - பா.எண் - 520

**குறிப்புச்சொற்கள் (Key words)**

1. சரீரசந்துஷ்டி - சிற்றின்பம்
2. ஆத்மசந்துஷ்டி - பேரின்பம்
3. பிராணாயமம், வாசியோகம் - மூச்சைக் கட்டுப்படுத்துதல்
4. உறுபொருள் - தானே வந்தடையும் பொருள்(அ) குடிமக்களிடமிருந்து பெறப்படும் வரி

**துணைநூற்பட்டியல்**


1. சிந்தனைக்குத் தெளிவு தரும் சித்தர் பாடல்கள் - ஆசிரியர் எஸ்.சூரியமூர்த்தி

   நர்மதா பதிப்பகம்,

   10 நானா தெரு,

   பாண்டிபஜார்,

   தியாகராயநகர்,

   சென்னை - 600 017

2. தொல்காப்பியம் - பொருளதிகாரம்
   இளம்பூரணர் உரை,
   சாரதா பதிப்பகம்,
   சென்னை - 600 014
3. திருக்குறள் - பரிமேலழகர் உரை, பதிப்பாசிரியர் - ச.மெய்யப்பன்
4. ஞானக்குறள் - ஆசிரியர் - ஔவையார்
   ஜெய் நகர், அருகம்பாக்கம், சென்னை - 600 106


**Cite this book Chapter:** S. Ramalakshmi and Punitha S, (2021) Lifetime Philosophy in Sivavakkiyar's Songs, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:400-404. Cauvery College For Women, Trichy.

**முனைவர் இர.கீர்த்தனா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 18

# சித்தர்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய சரித்திரத்தில் சித்தர் நூலுக்குச் சிறப்பான இடம் உண்டு. உண்மை பற்றிய அறிவும் தன்னை உணரும் தெளிவும் வாய்க்கப் பெற்றவர்கள் சித்தர்கள். சித்தி பெற்றவர்களைச் சித்தர்கள் என்பர். சித்தி என்னும் சொல் அறிவைக் குறிக்கும். எல்லாச் சக்தியையும் கைவரப் பெற்றவர்கள்.

"செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற

சித்தர் பிறந்த தமிழ்நாடு" - பாரதியார்

மனித குலத்தின் வாழ்வியல் நெறியை முறைப்படுத்தியவர்கள், இயற்கையின் ஒழுங்கு முறைகளைத் தம் வாழ்வில் கடைப்பிடித்து மக்கள் தொண்டாற்றியவர்கள், மருத்துவம், மந்திரம், இரசவாதம், யோகம், ஞானம் முதலிய பல்வேறு துறைகளில் கரை கண்டவர்கள், அன்பினும் உயர்ந்த மதமோ, உண்மையினும் மேலான சமயமோ இல்லை என இயம்பியவர்கள். எளிய தமிழில் யாப்பு மற்றும் சந்தங்களில் பாடல்களை இயற்றித் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள். சமுதாயத்தில் நிலவிய கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் மூட நம்பிக்கைகளையும், பொருளற்ற செயல்களையும், போலிச் சடங்குகளையும் சாடியவர்கள். உடலின் இன்றியமையாமையை வலியுறுத்தியவர்கள். மனமது செம்மையானால் வீடு பேறு அடையலாம் என்பதை வலியுறுத்தியவர்கள் சித்தர்கள். இவர்கள் பதிவுசெய்துள்ள வாழ்வியல் சிந்தனைகளை இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

**முன்னுரை**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது பழமொழி. அந்த குறைவற்ற செல்வத்தைப் பெறுவதில் மனிதன் போதிய விழிப்புணர்வு கொள்வதில்லை. பல்வேறு அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு மத்தியில் நோய்களும் பெருகி வருகின்றன. செந்தமிழ் நாட்டுச் சிந்தனையாளர்களாகிய சித்தர்களே முதல் புரட்சியாளர்கள். ஆம், சமயப் புரட்சியாளர் என்றுக் கூறினால் பொருந்தும். சாத்திரச் சந்தடிகளிலே தோத்திரக் குழப்பங்களில் கொள்கைக் குறிக்கோள்களை மறந்து வாழ்ந்த மக்களைச் சிந்திக்கத் தூண்டிய சிந்தனைச் சிற்பிகள். நமது தொன்மையான சிந்தனைக் கோட்பாடுகள் கீழை மேலை நாடுகளைக் கவர்ந்திருக்கின்றன. தத்துவ ஞானத்தின் தொன்மையான வழிகாட்டிகள் சித்தர்களே. தங்கள் பாடல்களின் வாயிலாக உயிர்நாடியின் சூட்சமங்களையும், வாழ்வின் நிலையாத் தன்மையையும், உயரிய சிந்தனைகளையும் புலப்படுத்தியுள்ளனர். மனித சமுதாயம் இன்பத்துடன் துன்பமின்றி நலமாக வாழ்வதற்காக வாழ்வியல் நெறிகளையும், மெய்ஞான ஆராய்ச்சிகளையும் ஆராய்ந்து வகுத்தவர்கள் சித்தர்கள். அவர்கள் கூறிய தத்துவக் கோட்பாடுகளையும் வாழ்வியல் சிந்தனைகளையும் மனித சமுதாயம் இன்னும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கின்றது. மனிதன் தன்னிறைவான வாழ்வு வாழ சித்தர்கள் கூறும் வழிமுறைகளை அறிந்து ஆய்ந்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**சித்தர்கள்**

தமிழ் மொழியில் இலக்கியங்கள் உருவாக மூலக் காரணமாய் இருந்தவர்கள் சித்தர்கள். தொல்காப்பியம் தொடங்கி பல இலக்கியங்களில் சித்தர்கள் பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன. அவையாவன,

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**

**மறைமொழி தானே மந்திரமென்ப"** 1

என தொல்காப்பிய நூற்பா நிறைமொழி மாந்தர் எனக் கூறுவது சித்தர்களைத் தான் என்பதைத் தெளிக.

**"அறிவின் அறவோன் அறிவு வரம்பு இகந்தோன்**

**செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்**

**சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி" 2**

என்னும் சிலப்பதிகார வரிகள் சித்தர்களைப் பற்றியும் அவர்கள் பெற்ற எட்டு சித்துக்களைப் பற்றியும் எடுத்துக்காட்டுகின்றது.

**"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**

**மறைமொழி காட்டி விடும்" 3**

என்னும் குறட்பா பலிக்கும் சொற்களைச் சொல்ல வல்ல மாந்தர்களே சித்தர்கள் என புலப்படுத்துகின்றது.

பொதுவாக சித்தர்கள் அரசர்களையும், பணம் படைத்தவர்களையும் பொருட்படுத்துவதே இல்லை. ஏழை, எளிய மக்களோடு அவர்கள் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். தாம் பெற்ற ஆற்றல்களை மனித குலம் அடைய வேண்டும் என ஓயாமல் உபதேசித்தார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கடவுள் கொள்கையுடையவர்கள். சித்தர் நெறி என்பது வாழ்வியல் நெறி, வாழ்விற்கு ஒளிவிளக்காகும் வழி ஆகும்.

**மனத்தூய்மை**

மனத்தூய்மையே அனைத்திற்கும் ஆதாரமாக அமையும் என்பதையே,

"**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**

**ஆகுல நீர பிற" 4**

என்ற குறட்பா சுட்டிக்காட்டுகின்றது. நன்னிலையில் வாழ்ந்து, அகத்தூய்மை செய்யச் சொல்கிறது.

**"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" 5**

தன்னை உணர்ந்து மனம் அமைதியுற்று பேரின்பம் அடையும் நிலையை எடுத்துரைக்கின்றது.

**தன்னையறிதல்**

தன்னையறிதலே சித்தியின் முதல் நிலை. தன்னை அறியாதவர்க்குத் தந்தையாகிய சிவனும் இல்லை. தாயாகிய சக்தியும் இல்லை என்பார் அழுகணிச்சித்தர்.

**" தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**

**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**

**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**

**தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே"6**

என்னும் பாடல் ஆன்மா தன்னை அறிந்தப்பின் கருவி கரணங்களோடு பொருந்தி மயங்க வேண்டிய நிலை வராது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

**"தன்னை அறிய வேண்டும் - அகப்பே**

**சாராமல் சாரவேண்டும்**

**பின்னை அறிவதெல்லாம் - அகப்பேய்**

**பேயறி வாகுமடி" 7**

என்னும் பாடல் தன்னை அறிந்து தீய நெறியிலே பிளவை, பிரிவை, உண்டாக்கும் வழியிலே சேராமல் உண்மை நெறியிலே சேரவேண்டும் என்று உணர்த்துகின்றது.

**ஆன்ம ஒருமைப்பாடு**

சித்தர்கள் பிற உயிரினங்களையும் தம் உயிரைப்போல் போற்றித் தொண்டு செய்துள்ளனர். அடுத்தவருடைய பணியை, துன்பத்தை எப்படியாவது தீர்ப்பது அவர்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். அன்பு நிலை ஒழுக்கமே ஆன்ம அறிவு. இதனையே,

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்" 8**

என்று கணியன் பூங்குன்றனார் சுட்டிக்காட்டுகின்றார்.

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்**"9

என்று வள்ளலார் கூறுவதும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டினைத் தான் என்பது புலப்படுகின்றது.

**" உயிர்க்கு உயிராய் நிற்றல் ஒண்ஞானப் பூசை**

**உயிர்க்கு ஒளிநோக்கல் மகாயோக பூசை"10**

என்னும் பாடல் வரிகள் உயிர்க்கு உயிராய் நிற்றல் என்பது எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணுவதை உணர்த்துகின்றது. தன்னைப் போல் பிறரையும் நேசி என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**வாழ்வியல் சிந்தனைகள்**

விஞ்ஞானம் எட்டிப் பார்க்காத, எந்த ஒரு வானவியல் ஆராய்ச்சிக் கருவியும், கண்டறியப்படாத காலத்தில், எங்கோ அடர்ந்த காடுகளிலும், மலைக்குகைகளிலும் வாழ்ந்தபடி இந்த பிரபஞ்சத்தைப் பற்றிய உண்மைகளை துல்லியமாகச் சொன்னவர்கள் சித்தர்கள்.

**"ஆசை கொண்டு அனுதினமும்**

**அன்னியர் பொருளினை**

**மோசம் செய்து அபகரிக்க**

**முற்றிலும் அலைபவர்" 11**

என சிவவாக்கியர் ஆசை கொண்டு அலைபவர்கள் இறைவழிபாடு செய்தாலும் நரகப் பலியிலிருந்து தப்பமுடியாது என்றுரைக்கின்றார்.

**" வேடிக்கையும் சொகுசும் மெய்ப்பகட்டும் பொய்ப்பகட்டும்**

**வாடிக்கை எல்லாம் மறந்திருப்பது எக்காலம்?"12**

என்னும் வரிகள் சுகபோக வாழ்வினை மறந்து எளிய வாழ்வினை வாழ வலியுறுத்துகின்றது.

**"பிச்சை எடுத்தாலும் அகப்பேய்ப்**

**பிறவி தொலையாதே**

**இச்சை அற்றவிடம் அகப்பேய்**

**எம்மிறை கண்டாயோ"13**

பேயாக அலையும் மனதை அடக்கி, ஆசையற்ற பெருவாழ்வு வாழ வழிவகுக்கின்றார் அகப்பேய்ச் சித்தர்.

**சிந்திக்க வைக்கும் சிந்தனைகள்**

கட்டையில் செய்தே வரும், கல்லினால் செய்தே வரும், மட்டையில் செய்தே வரும், மஞ்சளால் செய்தே வரும், சட்டையால் செய்தே வரும் பொய்ம்மைகள் வட்ட வெளியதன்றி வேறு தெய்வம் இல்லை என்பதே உண்மை.

**" கோயிலும் மனத்துள்ளே குளங்களும் மனத்துள்ளே**

**கோயில் பள்ளி ஏதடா வாயினால் தொழுது நின்ற**

**மந்திரங்கள் ஏதடா?"14**

என இறைவன் இருக்கும் இடம் மனம் என்பதை சிவவாக்கியர் சுட்டிக்காட்டுகின்றார்.

**" படமாடக் கோயில் பகவற் தொன்றீயின்**

**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**

**நடமாடக் கோயில் நம்பர் கொன்றீயில்**

**படமாடக் கோயில் பகவற்க தாமே"15**

என்னும் பாடல் கோயிலுக்கு நீ கொடுப்பது நேரடியாக இறைவனை சென்றடையாது. அடியார்களுக்கு கொடுப்பது, அவர் உள்ளத்தில் உள்ள இறைவனை சென்றடையும் என்பதை உணர்த்துகின்றது.

**"சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே!**

**வேர்த்திரைப்பு வந்த போது வேதம் வந்து உதவுமோ?"16**

என்று வேதத்தையும் அதை ஓதுகின்றோரையும் கேள்விக்குட்படுத்துகின்றார்.

சாதியச் சனாதன மறுப்பு மிகத் துலக்கமாக வெளிப்படுத்தும் சித்தர் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை,

**"சாதி பேதம் இல்லை அகப்பேய்"17**

மேலும்

**"சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்"18**

**என்றும்**

**"சமய பேதமும் ஆசையடி கங்கா**

**ஸ்நான பூசையும் ஆசையடி" 19**

இவ்வாறு சமயத்துறையில் சித்தர்கள் பலரும் புரட்சிகரமான கருத்துக்களை எடுத்துரைப்பதை காணமுடிகின்றது.

**முடிவுரை**

மக்கள் நல்வாழ்க்கை வாழ்வதற்கான நடைமுறைகளைச் சித்தர்கள் கூறிச் சென்றுள்ளனர். விஞ்ஞான வளர்ச்சியில் நாம் உய்த்துணரும் பல்வேறு கருத்துக்களைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சித்தர்கள் அறிவுறுத்தியுள்ளனர். அவர்கள் அனுபவித்த மெய்ஞ்ஞானமும் எல்லா நாட்டு மக்களுக்கும் எல்லா மதத்தவர்க்கும் பொதுவானவையாகும். மனிதர்களின் மன ஆசையைப் போக்குவதே சித்தர்களின் தொழிலாகும். அவர்கள் வழங்கிய ஞானச் செல்வங்கள் நம்மை மென்மேலும் நல்ல நெறியில் அழைத்துச் செல்லும். தன்னலமற்றவர்களாக வாழ

வேண்டும் என வலியுறுத்தினர். மனித நேயம் மிக்கவர்கள் சித்தர்கள். எப்படி வாழ வேண்டும் ? எப்படி வாழக்கூடாது? என்று சிந்தனையை தெளிவாக விளக்கியுள்ளனர். 'கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவை இல்லை' என்பது போல வாழ்வியல் சிந்தனையில் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் எவற்றையெல்லாம் கடைபிடித்தல் கூடாது என்பதை நம்மை அறியச் செய்வதே இக்கட்டுரையாகும். சித்தர்களை பற்றி சொல்லிக்கொண்டே போக செய்திகள் ஏராளம் அவர்தம் பாடல்களில் உள்ளன. சித்தர்கள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் எக்காலத்திற்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

**சான்றெண் விளக்கம்**

1. தொல்காப்பியம் நூ.எண் - 480
2. சிலப்பதிகாரம் – பாடலடிகள் 180 - 182
3. திருக்குறள் – கு.எண் - 28
4. மேலது - 34
5. திருமந்திரம் - பா.எண் - 1577
6. திருமந்திரம் – எட்டாம் தந்திரம் – பா.எண் - 1
7. அகப்பேய் சித்தர் – பா.எண் - 68
8. புறநானூறு - பா.எண் – 192
9. திருவருட்பா – பா.எண் - 3471
10. திருமந்திரம் - பா.எண் - 1444
11. சிவவாக்கியர் – பா.எண் - 536
12. பத்திரகிரியார் – பா.எண் - 235
13. அகப்பேய் சித்தர் – பா.எண் - 78
14. சிவவாக்கியர் - பா.எண் - 35
15. திருமந்திரம் - பா.எண் - 1857
16. சிவவாக்கியர் – பா.எண் - 14
17. அகப்பேய் சித்தர் - 60
18. பாம்பாட்டிச்சித்தர் - 123
19. ஞானக் கும்மி - 144

**துணை நூற்பட்டியல்**


1. சித்தர் பாடல்கள் மூலமும் உரையும்

   அறிவொளிவர்த்தமான்ன் பதிப்பக வெளியீடு, சென்னை - 2007

2. திக்குறள்

   பரிமேலழகர் உரை

   சாரதா பதிப்பகம்

3. திருமந்திரம்

   திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

   சென்னை - 2009

4. தொல்காப்பியம்

   திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை - 2001

5. பரசுராமன்.பி.என்.

   சித்தர்கள் வாழ்க்கை

   விகடன் பிரசுரம் சென்னை

6. புலியூர்க்கேசிகன் -

சிலப்பதிகாரம் மூலமும் உரையும்
பாரிநிலையம்   சென்னை
7. புறநானூறு மூலமும் உரையும்
பாரி நிலையம் சென்னை

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Sathyavathi V., (2021) Structure and Meaning in the books of Attrupadai, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:405-410. Cauvery College For Women, Trichy.

**முனைவர் இரா.குணசேகரன்**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி(தன்னாட்சி)
திருச்சி.

# காப்பியங்களில் கடிதம்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் மொழி தொன்மைக்குச் சான்றாக அமைவது தமிழ் இலக்கியம். இலக்கியம் பல்வேறு கூறுகளையும் உத்திகளையும் உள்ளடக்கியது. அவ்வுத்திகளில் ஒன்று கடிதம் வரைதல். தூது இலக்கியம் அஃறிணைப் பொருட்களையும் உயர்திணைப் பொருட்களையும் தூதாக அனுப்பியது. இது கடிதப் போக்குவரத்தின் ஒரு வகையாகும். கடிதம் வரைதல் பல்வேறு காலக்கட்டங்களில் வெளி வந்த இலக்கியங்களில் வெளிப்படுவதைக் காணலாம். இதில் காப்பியங்களில் கதையின் ஓட்டத்திற்கும் கதையின் திருப்புமுனைக்கும் கடிதம் முக்கியமான பாடுபொருளாக அமைந்துள்ளதை காணலாம். சிலப்பதிகாரம்,சீவகசிந்தாமணி, பெருங்கதை,சூளாமணி போன்ற இலக்கியங்களில் கடிதம் பற்றிய செய்தியை இக்கட்டுரை ஆராய்கிறது.

**முன்னுரை**

காப்பியம் என்பது இலக்கிய வடிவங்களில் ஒன்றாகும். அறம், பொருள், இன்பம் ,வீடு என்பவனவற்றோடும் வாய்மொழி இலக்கியம் தன்னுணர்ச்சிப் பாடல்கள் கதைபொதி பாடல்கள் என்று இது விரிந்து வளர்கிறது. தமிழ் இலக்கிய வகைமையில் தொன்மையானதாக கருதப்படும் காப்பியப் பண்புகளில் ஒன்றாக கடிதத்தின் மூலம் கருத்துக்களைத் தெரிவிக்கும் மரபு இருந்தது தெரிய வருகிறது. அதைப் பற்றிய கருத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்

**கடிதக் கலை**

எட்ட இருக்கும் போது மனதில் உதிக்கும் எண்ணங்களை எழுத்தில் எழுதி அனுப்புவதே கடிதம். இதனை மடல்,முடங்கல், திருமுகம் எனவும் கூறுவதுண்டு. எண்ணங்களுக்கு உணர்வூட்டித் தருவது கடிதம்.அதில் தற்சார்புக் கடிதங்கள் ஒரு வகையாகும். இதனால் கடிதம் எழுதப்பட்ட அவ்விருவருக்கே தவிர பிறருக்கு ஏதும் பயனில்லை. மற்றொரு வகையான தற்சார்பில்லாத கடிதங்கள் எல்லார்க்கும் எக்காலத்திற்கும் பயன்படக் கூறுவதால் ஒரு கவர்ச்சியும் சுவையும் பெறுகிறது எனலாம். எனவே இஃதோர் உத்தியாகக் கொண்டு உள்ளக் கருத்துக்களை உணர்த்தி விடலாம். அப்படி அமைந்த புகழ் பூத்த மடல்கள் சில உண்டு. அவை நேரு மகள் பிரியதர்சினிக்கு எழுதியவை, அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள் என்பனவாம். ஆங்கிலத்தில் வில்லியம் கூப்பர், கிரே, வால் போல் செஸ்டர் பீல்டு ஆகியோரின் கடிதங்கள் குறிப்பிடத்தக்கன . லத்தீனில் சிசரோ, ஜெர்மனில் சில்லர், பிரெஞ்சில் மதாமெதே செவிஞ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்

**சிலம்பில் கடிதம்**

இயல்,இசை,நாடகம் என்ற மூன்றும் ஒருங்கே இணைந்த முத்தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். இதனை இயற்றிவர் இளங்கோவடிகள். முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரத்தில் மடல்கள் இரண்டு. இரண்டு மடல்களும் காப்பிய நாயகனுக்குக் காதலி நடன மங்கை மாதவி அனுப்பியன. ஒன்று வேனிற் காதையிலும் மற்றொன்று புறஞ்சேரியிருத்த காதையிலும் காட்டப்பட்டுள்ளது.

**கடிதம் எழுதும் முறை**

மாதவி கடிதம் எழுதிய காலம் ஏடு, எழுத்தாணி கொண்டு கடிதமெழுதிய காலம். கலை ஆர்வம் மிகுந்த பெண் என்பதற்குச் சான்றாக தமது கடிதத்தை எழுதுவதற்குப் புது முறையைக் கையாண்டாள். கடிதம் எழுதும் முறையில் யாருக்கு மடல்கள் எழுதுகிறோம் என்பதைப் பொறுத்தும், எந்த மனநிலையில் எழுதுகிறோம் என்பதைப் பொருத்தும் அதன் அமைப்பும், பொருளும்,அழகும் இருக்கும். மாதவி எழுதியது தன் கண்மணி அனையாற்கு ஆகையால் கலை நயத்தோடும் மிகுந்த ஈடுபாட்டோடும் முதற் கடிதத்தை எழுதுகிறாள்.மாதவி தன் மாலையின் நடுவிடத்தே தொடுக்கப்பட்டிருந்த முதிர்ந்த வெள்ளைத் தாழம்பூவின் இதழைக் காகிதமாகக் கொள்கிறாள். அதற்கு அருகிலிருந்த பித்திகையின் கூரிய முனையை எழுத்தாணியாகக் கொண்டு அதனைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து எழுதுகிறாள்.முதல் கடிதம் எழுதிய போது மாதவி காம உணர்வோடு இருந்ததால் அவளின் கலை ஞானத்தைப் பயன்படுத்தி அழகு நயம் மிக்க மடலை பல அலங்காரங்களோடு அனுப்பினாள். இரண்டாம் கடிதம் உண்மை நிலையை உணர்த்துவதாக மட்டும் இருந்தது. அலங்காரம் தவிர்த்து கவிக்கு அழகு கூட்டி எழுதினாள்.

**சீவக சிந்தாமணி**

குவளை மலரிதழில் எழுதிய போது அதன் தாளே சலாகையாக இருந்தது சலாகை என்றால் இரும்புக் கம்பி என்று விளக்கம் தருகிறார் சோம சுந்தரனார். மேலும் இலச்சினை இட்டதையும்.

**" ஏட்டின் மேல் தீட்டித் திருவெழுந்திட்டாங்" 1**

**"ஆலங்குரக் காரரக் கிட்டதன் மீமிசைப் பூங்குழ்நுடியாற் பொறி யொற்றுப்பு"2**

என்றும் முத்திரையாக திருவெழுத்திட்டதையும்,அரக்கிட்டு மூடி பூங்குழயால் இலச்சினை இட்ட செய்தியையும் தெரிவிக்கிறது.

**பெருங்கதை**

அரக்கிடும் போதும் மணம் பொருந்திய அரக்கினை இட்டதையும் தலை சிறந்த இலச்சினை இட்டதையும் பெருங்கதை,

**" அரக்கு பொறி யொற்றி யானையிற்போக்கி" 3**

என்னும் பெரும் பொறியண்ண லரும் பொறி யொற்றி என்றும் கூறுகிறது.

பிரச்சோதன மன்னை; உதயணனுக்கு எழுதிய ஒலை என்பதை

**" பிரச்சோ தனனென்னும் பெருமக னோலை**

**உரைச்சேர் கழ்ற்கா லுதயணன் காண்க".4**

என்றடிகள் மூலம் கடிதம் பெறுபவரின் சிறப்பைச் சுட்டுவதைக் காணலாம். உதயணன் மானனீகைக்கு எழுதிய காதல் கடிதத்தில்,

**"ஒடியா விழுச்சி ருதயான னோலை**

**கொடியேர் மருங்கிற் குயின் மொழிச் செவ்வாய்**

**மானனீகை காண்க" 5**

என்றடிகள் மூலம் தான் காதல் கொள்வதற்குக் காரணமான மானனீகையின் அழகைக் கூறுகின்றான். அவனது காதலை இரந்து நிற்கும் தன் தன்மையையும் வெளிப்படுத்துகிறான். கோசல மன்னன் வாசவதத்தைக்கு அனுப்பிய ஒலை என்பதை,

**"கோசலத் தரச னோலை மங்கை" 6**

வாசவ தத்தை காண்க என்றடிகளால் அறியலாம்

**சூளாமணி**

சூளாமணி இரதநூபுர நகரத்தை அரசாட்சி புரிகின்ற கவலனசடி மன்னன் போதன நகரத்து அரசனாகிய பயாபதிக்கு எழுதியதை.

**"போதனத் திறைவன் காண்க விரத நூபுரத்தை**

**காதுவேன் மன்ன னோலை"7**

என்றடிகளால் சுட்டுகிறது.

**பதினோராந்திருமுறை:-**

சிவபெருமான் சேரமானுக்கு பாணபத்திரருக்காக எழுதிய செய்யுள் பாசுரத்தில் தான் யார் என்பதையும், சேரமான் எப்படிப்பட்ட மன்னன் என்பதையும், பாணபத்திரது திறனையும் கூட்டி விளக்கமாக எழுதியதன் மூலம் பரிந்துரை செய்பவன் உயர் நிலையில் உள்ளவராக இருக்க வேண்டுமென்பதை அக்கடிதம் மூலம் அறியலாம்.

**"மதிமலி புரிசை மாடக் கூடற்**

**பதிமிசை நிலவ பால் நிற வரிச்சிற**

**கன்னம் பயில் பொழில் ஆலவாயில்**

**மண்ணிய சிவன்யான் மொழி தருமாற்றம்"8**

என்றடிகள் பரிந்துரைப்பவராகிய சிவபெருமான் கூடலென்றும்,ஆலவாயென்றும் அழைக்கப்பெறும் மதுரை மாநகரில் ஆட்சி புரிந்து அனைத்துயிர்களையும் பாதுகாக்கும் தன்மையுடையவர் என்பதைச் சுட்டுகிறது.

**திருவிளையாடற் புராணம்**

பாண்டிய மன்னனை,தன் அமைச்சராகிய மாணிக்கவாசகருக்குப் பரி வருவதற்குக் காலதாமதமேன் ? என்று கேட்டுக் கடித மெழுதிய போது.

**" தென்னவ னரச னோலை தென்னவன் பிரமராயன்**

**என்று நல்லமைச்சன்காண்க"9**

என்று நல்லமைச்சனே என அரசனே குறிப்பிடுவதைக் காணலாம்.

**முத்திரையிடல்**

ஓலையில் எழுதிய கடிதங்களை யாரும் அறியாவண்ணம் அரக்கு முத்திரையிட்ட செய்தியையும் அவரவருக் கென்று தனி இலச்சினை இருந்ததையும் இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம் . சிலம்பில் மாதவி தான் இரண்டாவது கடிதத்தைச் சுருளாக்கி மண்ணால் மூடி அதில் கூந்தலிலுள்ள பொறியால் முத்திரை இடுகின்றாள். இதை 'மண்ணுடை முடங்கல்' என்பதாலும் அறியலாம். வடநாட்டு மன்னர்களுக்கு சேரன் வருகின்ற செய்தியைத் தெரிவிக்கும் கடிதத்திலும்,

**" தென்றமிழ் தன்னாட்டுச் செழுவிற்கயற்புலி 10**

மண்டலை யேற்ற தென்னாட்டு மூவேந்தர்களின் வில், கயல், புலி முத்திரைகளைப் பொறிக்கின்றனர்.

**மன்னிப்புக் கடிதம்**

மாதவியின் இரண்டாவது கடிதம் கோவலனிடம் மன்னிப்பு கேட்பதாகவும், அதே கடிதத்தை அவன் தன் பெற்றோர்க்கு அனுப்புவதன் மூலம் கோவலன் தன் பெற்றோரிடம் மன்னிப்புக் கேட்பதாகவும் அமைகிறது.

**" அடிகள் முன்னர் யாடை வீழ்ந்தேன்**

**வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்**

**குறவர் பணி அன்றியும் குலப்புறப் பாட்டியோடு**

**இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது**

**கையறு நெஞ்சம் கடியில் வேண்டும்"11**

இவ்வாறு கடிதங்கள் இலக்கியங்களில் கதையோட்டத்திற்கு ஓர் உத்தியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

**முடிவுரை**

இலக்கியங்கள் காட்டும் கடிதங்கள் மூலமாக அக்கால கடிதக் கலைகளும் அக்கடிதக் கலையை இலக்கிய ஆசிரியர்கள் நயம்பட கையாண்ட திறனும் நம் முன்னோர்களின் கலைத்திறனுக்குச் சான்றாகின்றன. இன்று எழுதப்படும் கடிதங்களுக்கு அன்று எழுதிய கடிதங்களே முன் மாதிரிகளாக இருந்ததை உய்த்துணரலாம். அக்காலக் கடிதங்கள் யார் யாருக்கு எழுதியது என்பதை முதலிலும், அதனை அடுத்துச் செய்தியையும், இறுதியில் எழுதியவர்களின் தனித்தன்மை வெளிப்படும் வண்ணம் இலச்சினையிட்டதையும், பின் சுருளாக்கி யாரும் எளிதில் பிரித்திடா வண்ணம் அரக்கு முத்திரையிட்டுச் செய்தியைப் பாதுகாத்ததையும் அறிய முடிகிறது.

**சாறெண் விளக்கம்**


1) சீவகசிந்தாமணி – 362
2) சீவகசிந்தாமணி – 485
3) பெருங்கதை – 125
4) பெருங்கதை – 201
5) பெருங்கதை – 219
6) பெருங்கதை -227
7) சூளாமணி – 111
8) பதினோராந்திருமுறை – 213
9) திருவிளையாடற் புராணம் - 423
10) சிலப்பதிகாரம் - 412
11) சிலப்பதிகாரம் – 415



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Gunasekaran R., (2021) Letters in Epics, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:411-414. Cauvery College For Women, Trichy.

**முனைவர் அ. மலர்விழி**
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி
சென்னை-51

## கம்பராமாயணத்தில் தசரதனின் ஆட்சிக்கோட்பாடு

**ஆய்வுச்சுருக்கம்**

கம்பராமாயணத்தில் தசரதன் ஆட்சி முறைகளைக் குழந்தையைப் பெற்ற தாய் எவ்வளவு பாதுகாப்புடனும் கடமை யுடனும் பார்ப்பாளோ அவ்வாறே தசரதனும் தன் நாட்டு மக்களை சீரும் சிறப்புமாக பாதுகாத்துவந்தான். மக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை எல்லாம் தன்னுடைய துன்பங்களாகக் கருதி செய்து வந்தான். இறைவனாகிய பரம்பொருள் மக்கள் அனைவரையும் ஒன்றாகபாதுகாப்பது போல தசரதனும் தன் நாட்டு மக்களை எந்த வேற்றுமையும் இல்லாமல் ஒன்றாகவே பாதுகாத்து வந்தான். அவன் ஆட்சி செய்த முறைகளும். அரசியல் சார்ந்த சிந்தனைகளும். மக்களின் வாழ்வியல் ஒழுகலாறு களும். வாழ்வியல் நியதிகளும் நீதியைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. எனவே இத்தலைப்பு ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

### முன்னுரை

காப்பியங்களுள் தலைசிறந்து விளங்கும் கம்பராமாயணம் ஆறு காண்டங்களாக வகுக்கப்பெற்றுள்ளது. இதனை தமிழில் இயற்றிய பெரும்புலவர் கம்பர். அவரது கவிச் சிறப்பு தமிழிலக்கிய வரலாற்றில் தலைச்சிறந்ததாக அறிஞர்களால் போற்றப்படுகிறது. கவிச்சக்கரவர்த்தி கம்பரைப் பற்றி மகாகவி பாரதியார் தமது சுயசரிதையில் கம்பர் என்றொரு மானுடம் வாழ்ந்ததும் என்று குறிப்பிட்டுள்ளார். கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு என்றும் அவர் பாராட்டியுள்ளார். அவரது கம்பராமாயணத்தில் முதல் காண்டம் ஆகிய பாலகாண்டத்தில் இடம்பெற்றுள்ள அரசியல் படலத்தில் கோசல நாட்டின் மன்னனான சக்கரவர்த்தியினது ஆட்சிச் சிறப்பைக் கூறுவதோடு அவரது பெருமை.கொடை ச்சிறப்பு அரசு செய்யும் திறம். ஆட்சி கோட்பாடு ஆகியவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தசரதனின் தனிப்பெரும் சிறப்புகள்

கோசல நாட்டின் சக்கரவர்த்தியாகவும் ஏழு உலகங்களிலும் சிறப்பான ஒப்பில்லாத செங்கோல் ஆட்சி ஆகிய ஆட்சியைச் செய்தவன் தசரதன்.

மெய்யறிவும்.. அருளும். அறநெறி தவறாமையும். சாந்த குணமும். வீரமும். கொடையும். நீதியின் கண் நிற்றலும். போன்ற நற்பண்புகள் யாவும் தசரத மன்னனுக்கே ஏவல் கேட்டு நிற்பன வாக இருந்தன.

### தசரதன் மக்களிடம் கொண்ட அன்பு

தானம் செய்பவனாகவும். யாகங்கள் வேறு எவரும் செய்ய இயலாத வகையில் செய்துள்ளான். அவன் குடிமக்களிடம் அன்பு செலுத்துவதில் பெற்ற தாய்க்கு ஒப்பாவான். நன்மை செய்வதில் தவத்தை போன்றவன் ஆவான். சேவகன் ஆகவும் மன்னனாகவும். மகனாகவும் மருந்து போன்றவன் ஆகவும் விளங்கினான். தன் செங்கோல் ஆட்சியால் அறம் தவறாது தம் மக்களை பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து புகழோடு கோசல நாட்டை ஆண்டு வந்தான்.

**வெண்கொற்றக் குடையின் சிறப்பு**

வின்மதி விண்ணில் நின்று தேரய்தலும் வளர்தலும் உடையதாய் உலகின் புற இருள் போக்கி தன் ஒளிபரப்பும் தகைமை உடையதாக விளங்கியது. இடை மதியோ தேய்தலும் வளர்தலுமின்றி மண்ணிடை யும் விண் விடையும் வாழும் உயிர்கள் எல்லாவற்றின் உடைய அக புற இருள் களை நீக்கி தன் நிழலை பரப்புவதை போன்று மாமன்னன் வெண்கொற்றக் குடையின் சிறப்பும் விளங்குகின்றது என்கிறார் கம்பர். இதனை.

மண்ணிடை உயிர் தோறும் வளர்ந்து தேய்வு இன்றி

தண் நிழல் பரப்பும் இருளைத் தள்ளவும்

அண்ணல்தன் குடை மதி அமையும் ஆதலான்

விண்ணிடை மதியினை மிசை இது என்பவே

என்ற பாடல் அடிகளின் மூலம் உணரலாம்.

**அரசு செய்யும் திறம்**

சிங்கம் போன்ற வலிமை உடைய தசரதன் மன்னுயிர் அனைத்தையும் தன் உயிர் போல கருதி வருபவனாக விளங்குகின்றான். இதனைக் கம்பர்.

குன்றன உயரிய குவவுத் தோளினான்

வென்றி அம்திகிரி வெம்பருதி யாம் என

ஒன்றென உலகிடை உலாவி மீமிசை

நின்று நின்று உயிர்தொறும் நெடிது காக்குமே.

என்கிறார்.

பரம்பொருள் ஒன்றாக நின்று உயிர்களை காப்பது போல தசரதன் நாட்டு மக்களைக் காத்து வந்தான்.

மலை போன்று வளர்ந்து ஓங்கிய திரண்டதோள்களைக் கொண்ட தசரதனுடைய வெற்றி மிக்க ஆணைச்சக்கரம் ஆனது வெம்மை உடைய சூரியனோ என்று எண்ணும்படி மிக உயரமான வானிலே நின்று ஒளி தருவது போலவும் எவ்விடத்திலும் விரைந்து எழுகின்ற பகைவர்கள் இல்லாமையால் போர்த் தொழிலே பொறாமைக் கொண்டதாகவும் மத்தளம் போன்ற திரண்ட தோள்களை உடைய அவ்வரசன் உலகில் வாழும் உயிர்கள் அனைத்தையும் வறியவன் தனக்குள்ள ஒரே வயலைக் கண்ணும் கருத்துமாக பாதுகாப்பது போல பாதுகாத்து இனிமையான ஆட்சி செய்து வந்தான் என்கிறார் கம்பர். இதே கருத்தை வள்ளுவரும்,

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்

உடையான் அரசரு ளேறு(குறள்_381)

ஒரு அரசன் படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரனும் ஆகிய ஆறு அங்கங்களையும் என்கிறார். நடுநிலைமை தவறாதவன்

தசரதன் தன்னை நாடி வருபவர்களுக்கு பொருள் கொடுத்து அனுப்பும் இயல்புடையவன் உயர்ந்த நூல்களை கற்றுத் தெளிந்த அறிவுடையவன் எத்தனை பகைவர்கள் திரண்டு வந்தாலும் வீரத்தோடு எதிர்த்து நிற்பவன். சக்கரவாள கிரி மலையை மதில் ஆகவும் நிலப்பரப்பு பெரிய கடலாகவும் அயோத்தி தலைநகரம் விளங்கியது. அத்தகைய அயோத்தி நகரை தன் வெண்கொற்றக் குடையின் கீழ் சீரும் சிறப்புமாக இளமை தவறாமல் காத்து வந்தான். இதனை வள்ளுவர், தன்கீழ் வாழ்வார் குற்றம் செய்தால் அக்குற்றத்தை கண்டறிந்து நடுநிலைமையோடு செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்படுபவனை மக்கள் தெய்வமாக கருதுவர் என்கிறார்.

**தசரதனின் வீரம்**

எதிர்த்து வரும் பகைவர்களுக்கு ஈடுகொடுத்து நேருக்கு நேர் நின்று போர் செய்யும் ஆற்றல் படைத்தவன். மக்களைக் காப்பதில் பேராற்றல் மிக்கவனாக திகழ்ந்ததால் அவனது வாள் தேய்ந்து காணப்படும் என்றும் பகைவர்கள் அவனது காலில் வீழ்ந்து வணங்குவதால் அவனது வீர கழல்கள் தேய்ந்து காணப்படும் என்று தசரதனின் வீர சிறப்பைப் புகழ்கின்றார். இதே கருத்தை வள்ளுவரும்,

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை

முறைகாக்கும் முட்டா செயின்(குறள்_547)

உலகத்தை எல்லாம் அரசன் காப்பான். அவன் தன்னை செங்கோலே காக்கும். எந்த இடையூறு வந்தாலும் இந்து செயல்படுவான் என்கிறார்.

தசரதன் மன்னுயிர் அனைத்தையும் தண்ணி தன்னுயிர் போல கருதி காத்து வந்தான். அதோடு மக்களுடைய துன்பங்களை போக்குபவன் ஆகவும் அன்பாலும் அருளாலும் உயிர்கள் அனைத்தின் விருப்பம் நிறைவேறுகின்றன உடலாகவும் இருந்து மக்களின் வாழ்வுக்காக வேல் வாழ்ந்து காட்டுகிறான்.

**தசரதனின் புகழ்**

அரசர்களுக்கெல்லாம் அரசனாக நீக்க முடியாத பெரும் புகழ் படைத்த தசரதனின் ஆட்சியானது தண்ணீரும், பறவைகளும், விலங்குகளும், விலைமாதர் உள்ளமும் ஒரே வழியில் செல்லாமல் இருப்பதைப் போன்று தம் மக்களுக்காக ஒரே வழியில் தம் எல்லையைக் கடக்காமல் பல வழிகளைத் தேடி மக்களுக்காக செயலாற்றி தன் புகழ் நிலைத்து நின்றான். இதனை வள்ளுவர்,

குடிப்புரங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்

வடுவன்று வேந்தன் தொழில்(குறள்_549)

மக்களை பிறர் நலியாமல் காத்துத் தானும் நலியாது பேணிஅவர்மாட்டுக் குற்றம் நிகழின் அதனை ஆய்ந்து நடப்பவனே அரசன் என்கிறார்.

**மக்களுக்கு எளியவன்**

மக்களின் அன்புக்குக் கட்டுப்பட்டவன் தசரதன். உலகில் வாழும் உயிர்கள் அனைத்தையும் கண்ணும் கருத்துமாக தூங்காமல் துணிவோடு மக்களின் எளியவனாக இருந்து காத்து வந்தான். இதனை வள்ளுவர்,

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்

நீங்கா நிலளாள் பவற்க்கு(குறள்_385)

நிலத்தை ஆளும் மன்னனுக்கு தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்காமல் இருக்க வேண்டும். அக் காரியங்களில் விரைவுடைமையும் அவை அறிதற கேற்ற கல்வி உடமையும் ஆண்மை உடமையும் என்கிறார்.

**முடிவுரை**

கம்பராமாயணத்தில் தசரதனின் ஆட்சி சிறப்புகளை கம்பர் தெள்ளத்தெளிவாக சித்தரித்துக் காட்டுகின்றார். மக்களை காக்கும் அரசன் எந்தெந்த நிலைகளில் வாழ வேண்டும் என்ற தன்மைகளையும், தனக்காக அல்லாமல் மக்களுக்காக வாழ்பவனே சிறந்த அரசன் என்பதையும், மிக அழகாக கோட்பாட்டு சிந்தனையோடு விளக்கியுள்ளார்.

**சான்றெண் விளக்கம்**


1. கம்பராமாயணம்_ ராமாவதாரம்
   பால காண்டம்
   கம்பன் அறநிலை
   கோவை.
2. கம்பராமாயணம்_ பால காண்டம்
   டாக்டர். பூவண்ணன் உரை
3. கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்
   தவத்திரு. குன்றக்குடி அடிகளார்
4. கம்பனின் அரசியல் கோட்பாடு
   டாக்டர். எஸ். அப்துல் ரகுமான்.
5. திருக்குறள் தெளிவுரை
   டாக்டர் மு வ
   சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம்
   சென்னை.
6. திருக்குறள்
   பரிமேலழகர் உரை.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Malarvizhi A., (2021) Administrative Principles of Dhasaradha in Kambaramayana, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:415-418. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ஜா.பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 2

# ‘கிறிஸ்து மொழிக் குறள்’ கூறும் மானுட அடையாளங்கள்

**ஆய்வுச்சுருக்கம்**

கிறித்தவர் அல்லாத இலக்கியப் படைப்பாளரின் உன்னதப்படைப்பே ‘கிறிஸ்து மொழிக் குறள்’ என்னும் கிறிஸ்தவ இலக்கிய நூலாகும். வழித் துணையாய் சமரச சன்மார்க்கத்தைக் கொண்ட தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்படும் திருவாரூர் விருத்தாச்சல கல்யாணசுந்தரனார் என்பவர் மனிதன் ஈடேறுவதற்கான வழிமுறைகளைச் சொன்ன இறைமகன் இயேசு கிறிஸ்துவின் போதனைகளால் கவரப்பட்டு போதனைகளைச் சுருக்கி குறள் வடிவில் படைத்துள்ளார். ஒரு படைப்பு என்பது தமிழுக்கும் தமிழரின் விழிப்புணர்ச்சிக்கும் பண்புக்கும் வடிகாலாக இருக்க வேண்டும். அதுவே உண்மையான மறுமலர்ச்சி ஆகும். அவ்வகையில் தமிழனுக்குரிய அடையாளத்தை கிறிஸ்து மொழிக் குறள் எடுத்துக் கூறுகிறது. மனிதத் தன்மையே மனிதனுக்குரிய சிறந்த அடையாளமாகக் கொண்டு அன்பு, இரக்கம், மன்னிப்பு, உண்மை, நீதி, தூய்மை, முன்மாதிரிகை, எளிமை, நற்பேறு ஆகியவற்றை ஆசிரியர் திரு.வி.க. எடுத்துக் கூறியுள்ளார். பொழிவு, மலைப்பொழிவு என இரு பெரும்பிரிவாக கிறிஸ்து மொழிந்த மொழிகளை குறள் உருவில் ஆசிரியர் எங்ஙனம் எடுத்தாண்டுள்ளார் என்பதைப் பற்றிக் கட்டுரையில் காண்போம்.

முக்கியச் சொற்கள்

மானுடம் – மனிதத்தன்மை – மலைமொழி – மணிமொழி – மந்தணம்

**1.0 முன்னுரை**

‘விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்’ என்று சிலப்பதிகார கதைநாயகன் கோவலனை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். உலகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விருப்பத்திற்கு அடிமையாக வாழ்ந்து கொண்டு வருகின்றான். அது அடிப்படைத் தேவையாக இருக்கலாம் அல்லது ஆடம்பரத் தேவையாக இருக்கலாம். அதேசமயம் மனிதர்கள் இப்படித்தான் வாழ வேண்டுமெனவும் இலக்கியங்கள் கூறுகின்றன. பற்றற்ற நிலையில் வாழ வேண்டும் என சித்தர் இலக்கியமும் இறைத்தேடலோடு இயங்க வேண்டும் என பக்தி இலக்கியமும் வாழ்வியலை இரசித்து வாழ வேண்டுமென சங்க இலக்கியமும் அறவியலை முன்னிலைப்படுத்தி வாழ வேண்டும் என அற இலக்கியமும் எதையும் அழகியல் பண்போடு அணுக வேண்டுமென தற்கால இலக்கியமும் கற்றுக்கொடுக்கின்றன. ஆயிரம் கற்றுக் கொடுத்தாலும் அடுத்த நொடியே மறந்துவிடும் மறதி என்கின்ற நோய் மனிதனுக்கு இருக்கும்வரை இதுபோன்ற இலக்கியங்கள் மண்ணில் உலவிக் கொண்டே இருக்கும். அந்த வரிசையில் கி.பி.19 ஆம் நூற்றாண்டில் திருவாரூர் விருத்தாச்சல கல்யாணசுந்தரனாரின் கைவண்ணத்தில் 1948 – ஆம் ஆண்டில் குறள் வடிவில் இயேசுகிறிஸ்துவின் போதனைகளைத் தொகுத்து அழகுத் தமிழில் ‘கிறிஸ்து மொழிக்குறள்’ என்ற தலைப்பில் புத்தகமாக வெளியானது. கிறித்தவருக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் அவருடைய போதனை ஏற்புடையதாகும். இயேசுகிறிஸ்து கூறிய மலைப்பொழிவையும் மற்ற பொழிவுகளில் சிலவற்றைத் தழுவியும் எழுதப்பட்ட இந்நூலில் எம்மதப் பிரிவைச் சார்ந்தவராக இருந்தாலும் அவருக்குத் தேவையான, அவரை மனிதராக அடையாளப்படுத்தும் மனிதத்தன்மைமிக்க அடையாளங்களான மன்னிக்கும் பண்பு, பகிர்தல் மற்றும் சகமனிதரை நேசிக்கும் தன்மை, தாழ்ச்சி, பொறுமை ஆகியவை குறித்தச் செய்திகளின் பதிவையும் அதுகுறித்தப் பார்வையையும் இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

1.1 **மானுடம்**

“மானுடம் போல் ஒரு மெய்மை இல்லை அதுவே இயற்கையின் எதிரொலிச் சின்னம்”1 என்ற உலோகாயுதச் சித்தரின் கூற்றிற்கிணங்க மானுடம் என்னும் மனிதத்தன்மையானது அனைவராலும் உண்மைத் தன்மையாய்ப் பார்க்கப்படுகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி மானுடம், மானிடம் என்றால் மனிதத்தன்மை (Humanity) என்று பொருள் விளக்கம் தருகிறது. மானுடம் > மானிடம் > மானிடன் > மனிதன் என்ற வளர்நிலையில் மனிதத்தன்மையுடன் வாழும் மனிதனை மானுடம் என்ற சொல் குறித்து நிற்பதாகக் கொள்ளலாம். மானுடம் தழைத்தது என்று சொல்வோமானால் மக்கள் மனிதத்தன்மையோடு வாழ்ந்து வருகிறார்கள் என்று அர்த்தம்.

1.2 **மனிதத்தன்மை**

மனிதனுக்கு மிகவும் முக்கியமாக இருக்க வேண்டிய குணங்களை உள்ளடக்கியத் தன்மையே மனிதத்தன்மையாகப் பார்க்கப்படுகிறது. அன்பு என்ற ஒற்றைச் சொல்லுக்குள் மனிதத்தன்மை முழுவதையும் அடக்கி விடலாம். அன்பு, இரக்கம் போன்ற பண்புகளைக் கொண்டிருக்கும் மனிதத்தன்மையை ஆங்கிலத்தில் Human quality, Humanity என்று அழைப்பர்.

1.3 **அடையாளங்கள்**

அடையாளம் என்பது ஒன்றின் நிலைத்தக் குறியீடு ஆகும். ஒன்றை மற்றொன்றிலிருந்து வேறுபடுத்த அடையாளம் உதவுகிறது. அடையாளம் என்பதற்குச் சுவடு (Trace), தடம் (Way), ஒருவரை அல்லது ஒன்றினை இனம் கண்டறிய உதவும் குறி (Identification) என விக்சனரி அகரமுதலி கூறுகிறது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி. அகத்தின் ஆரோக்கியத்தை முகமாகிய அடையாளம் வெளிப்படுத்துகிறது. முகமாக குணநலன்களைச் சொல்லலாம். ஒருவரது பண்புகளை வைத்துக் கொண்டு அவரது மன ஓட்டத்தைத் தெரிந்து கொள்ளலாம். என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள் என இறைமகன் இயேசுகிறிஸ்து கூறியதாக யோவான் எழுதிய நற்செய்தியில் அதிகாரம் பத்து, திருவசனம் முப்பத்து எட்டு கூறுகிறது.

1.4 **கிறிஸ்து மொழிக் குறளின் அமைப்பும் சிறப்பும்**

இந்தியாவில் முதன்முதல் தொழிற்சங்கம் அமைத்தவரும் பல்வகை நூல்களை எழுதியவருமான திருவாரூர் விருத்தாச்சல கல்யாணசுந்தரனார்

குறள் வடிவில் எழுதிய நூலே கிறிஸ்து மொழிக் குறளாகும். கிறிஸ்துவின் அருளறம் எங்கும் பரவ வேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட இந்நூலில், நூலின் தோற்றம் குறித்தக் குறிப்பு, மலைமொழி, மணிமொழி என்று மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாடு மத்தேயு நற்செய்தியில் அதிகாரம் ஆறு, ஏழு, மற்றும் எட்டில் இடம்பெறும் போதனைகளை மலைமொழி என்றும் இயேசு கூறிய மற்ற பொழிவுகளைத் தொகுத்து மணிமொழி என்றும் கூறுகிறார். மனிதநேயம் வெளியாகும் இயேசுவின் போதனைகளின் வழி இப்படித்தான் மனிதன் வாழ வேண்டும் என்ற அடையாளத்தையும் அதற்குத் தேவையான குணங்களையும் இந்நூலின்வழி விளக்குகிறார்.

1.5 **மலைமொழியில் மானுட அடையாளங்கள்**

மலைமொழியில் மொத்தம் இருபத்து ஐந்து உட்தலைப்புகளில் மனிதனுக்குத் தேவையான அடையாளங்களாம் குணங்கள் குறித்துக் கூறுகிறார். மலைமொழி என்பது மலைப்பிரசங்கத்தைக் குறிக்கிறது.

**1.5.1 பேறு**

அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களும் இறுதி வாழ்வுக்குப் பிறகு விண்ணக வாழ்வை அடைய வேண்டுமெனவே நினைக்கின்றார்கள். கடவுளின் சாம்ராஜ்யத்தில்

இருக்க வேண்டும் என்றே ஆசைப்படுகின்றார்கள். இறைவனின் சன்னிதானத்தில் அமர வேண்டும் என விரும்புபவர்களுக்காக ஓர் அடையாளத்தைத் தருகிறார்.

**“ஆவி எளிமை அடைந்தவர் வாழிபரம்**

**மேவரசன் னாருடைம மேல்” (திரு.வி.க.,1948)**

பரலோக அரசை ஒருவர் தனதாக்க வேண்டுமென்றால் உலகப் பொருள் மீது அளவற்ற ஆசை கொள்ளாமல் மனதைப் பற்றற்ற நிலையில் வைத்திருக்க வேண்டும் எனக் கூறுகிறார். ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று புத்தர் கூறுவதை ஒப்பு நோக்க வேண்டும். பேராசைக்கு இட்டுச் செல்லும் ஆசை கூடாது எனப் பொருள் கொண்டால் கருத்து மயக்கம் ஏற்படாது.

### 1.5.2 ஒளி

இப்படியாக இருக்க வேண்டும் என அடையாளப்படுத்தாமல் இப்படித்தான் மனிதர்கள் இருக்கிறார்கள் என அடையாளப்படுத்திக் கூறியிருப்பது மனித இனத்தின் மீது இயேசு கொண்டிருந்த பேரண்பையும் நேர்மறை எண்ணத்தையும் வெளிப்படுத்துகிறது.

**“ உலகுக் கொளியாய் ஒளிர்கின்றீர் ஓரூர்**

**மலைஇலங்கின் ஏது மறைவு” (திரு.வி.க.,1948)**

உலகிற்கு ஒளியாய் இருக்கும் மனிதர்கள் மலை மேலிருக்கும் ஊர் போல் எந்தவொரு மனிதருக்கும் மறைவில்லாமல் அனைவருக்கும் ஒளியைக் கொடுக்க வேண்டும். அதாவது மனிதன் என்பவன் பிறர்க்கு வழிகாட்டியாக, மற்றவர் வாழ்வில் ஒளி ஏற்றுபவராகத் திகழ வேண்டும் என திரு.வி.க. கூறுகிறார்.

### 1.5.3 நீதி

மனிதனுக்குரிய மிகச் சிறந்த அடையாளங்களுள் ஒன்று நீதியுடையவனாக இருப்பது. நீதி என்பது நிதிக்காகவே என்று சொல்லும் அளவுக்குத் தற்காலம் பீடு நடை போட்டுக் கொண்டிருக்கிறது. நீதி என்பது நிதிக்காக வளைந்து கிடக்கும் இவ்வேளையில், நீதிக்கு உயிரூட்டம் அளிக்கும் வகையில் கிறிஸ்து மொழிக் குறள் அடையாளப்படுத்துகிறது.

**“ பகர்கின்றேன் கேளும் பரிசேயர் வேதர்**

**செகநீதி மேலொழுகல் சீர்” (திரு.வி.க.,1948)**

கல்வியிலும் வேதங்களிலும் வல்லவரான தெய்வபயம் அற்ற யூதர்களான பரிசேயர்கள், மறைநூல் அறிஞர்களான வேதர்கள் ஆகியோரைக் காட்டிலும் மக்களின் நீதி சிறந்திருக்கட்டும், அப்போதுதான் மனிதர்கள் அடையாளப்படுத்தப்படுவார்கள் எனக் கூறுகிறார்.

### 1.5.4 மனத்தூய்மை

மனிதனை மாண்புறச் செய்யும் காரணிகளுள் ஒன்று மனத்தூய்மையாகும். அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் என்ற குறளுக்கேற்ப உண்மை என்பதை உரைகல்லாகக் கொண்டு மனதைத் தூய்மைப்படுத்த வேண்டும். உண்மை என்ற உபதேசத்தை ஊருக்கு மட்டுமே சொல்லாமல் உள்ளுக்குள்ளும் ஒவ்வொரு மனிதனும் சொல்லிக்கொள்ள வேண்டும். அவ்வாறு கடைப்பிடித்தால் எந்தக் குற்றமும் நிகழாது. குறிப்பாக பாலியல் வன்முறை நிகழாது எனக் கூறுகிறார்.

**“ஒருத்தியை இச்சையுற ஊன்றியே பார்த்தால்**

**கருத்தினில் கற்பழிவு காண்” ( திரு.வி.க.,1948)**

ஒரு பெண்ணை இச்சையுடன் நினைத்துப் பார்த்தாலே மனதளவில் அவளை பலவந்தப்படுத்தியமைக்குச் சமம் என்று கூறுவதிலிருந்து மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வழி முறையையும் கூறுகிறார். அவ் வழிமுறையிலிருந்து

வழுவாமல் பார்வையைப் பக்குவப்படுத்த வேண்டும் எனவும் இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

**1.5.5 வாடா மலர்**

மலர்கள் மலர்ந்தால் கருகி விடும். ஆனால் மலர்ந்தாலும் கருகாத பூ ஒன்று உண்டு, அதுவே மன்னிப்பு என்ற மிகப் பெரிய வாடா மலராகும். இயேசு கிறிஸ்து மன்னிப்புக்குத் தனி இலக்கணம் வகுக்கிறார். வலக் கன்னத்தில் அறைந்தால் இடதுபுற கன்னத்தையும் காட்டு என்ற இயேசுவின் புரட்சிகரமான சிந்தனையை உள்வாங்கிக் கொண்டு

**“ஒருவனொரு கன்னத்தில் ஓங்கி அறைந்தால்**

**மறுகன்னங் காட்டி மகிழ்” (திரு.வி.க.,1948)**

**“மாற்றாரை நேசியுங்கள் வாழ்த்துங்கள் சூளரைப்**

**போற்றார்க்கும் ஆற்றுங்கள் போற்று” (திரு.வி.க.,1948)**

என திரு.வி.க. கூறுகிறார். பழிக்குப்பழி உணர்வை விடுத்து பிறர் நமக்குச் செய்த தீமைக்குப் பதில் தீமை செய்யாமல் பொறுமை காத்து நன்னயம் செய்து விட வேண்டும். அதுவே மனிதனுக்குரிய மிகச் சிறந்த அடையாளம் எனக் கூறுகிறார்.அதுமட்டுமல்ல பகைவரிடமும் அன்பு காட்ட வேண்டும் எனவும் கூறுகிறார். எங்களுக்கு எதிராக் மிகுதியானச் செயல்கள் செய்தோரை நாங்கள் மன்னிப்பது போல எங்களிடமுள்ள குற்றம் குறைகளை நீர் மன்னித்தருள வேண்டுமென இறைவனிடம் வேண்டுதல் செய்யக் கற்றுக்கொடுக்கிறார்.

**“மற்றவர் மீச்செயல்யாம் மன்னிப் பதுபோல்**

**உற்றதெம்பால் மன்னிக்க ஓர்ந்து” (திரு.வி.க.,1948)**

இதைத்தான் வள்ளுவரும் “இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்” (பரிமேலழகர்(உ.ஆ.),2013) எனக் கூறுகிறார்.

**1.5.6 மந்தணம்**

மந்தணம் என்ற சொல் மறைபொருள் (Secret) என்று பொருள் தருகிறது. மனிதர்கள் தங்களைத் தாங்களே அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டாம். மாறாக அவர்தம் செயல்களே அவர்களுக்கான அடையாளத்தை ஏற்படுத்தும்.

**“வலக்கை வழங்கல் வயங்குமிடக் கைக்குப்**

**புலப்படா வாறு புரி” (திரு.வி.க.,1948)**

தர்மம் செய்யும்போது வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதவாறு செய்ய வேண்டும் என்கிறார். அதாவது விளம்பரம் தேடாது செயல்களை மந்தணமாகச் செய்ய வேண்டும் எனக் கூறுகிறார்..

**1.6 மணிமொழியில் மானுட அடையாளங்கள்**

மணிமொழியில் உள்ள இருபது உட்தலைப்புகள் மனிதனுக்குரிய இன்றியமையாப் பண்புகளைக் கூறுகிறது. மணிமொழி என்ற பிரிவானது மலைப்பிரசங்கம் தவிர கிறிஸ்துவின் போதனைகளைத் தாங்கி வருகிறது.

**1.6.1** அன்பு

மனிதனைப் புனிதனாக மாற்றும் மானுட அடையாளங்களுள் தலைமையானது அன்பு என்ற கருவியாகும். அன்பு என்ற மூன்றெழுத்து மந்திரத்தினால் இவ்வுலகம் சீராக சுழல்கிறது எனக் கூறலாம். அன்பு இல்லையெனில் சகப்பிணைப்பில் உறுதியாய்ச் சுழலும் பூமிப் பந்தானது உருக்குழைந்துப் போகும். ஒருவன் தன் மேல் ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாய் அன்பு செய்வதுபோல் அடுத்து இருப்பவரிடமும் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

**" நானன்பு கூர்வதுபோல் நாளுமே உங்களிடம்**

**வானன்பு கூர்கஉம்முள் வாய்ந்து" (திரு.வி.க.,1948)**

**" ஒருவர்க் கொருவர்நீர் ஓங்கன்பு கூர்ந்தால்**

**கருதுவரென் சீடரெனக் கண்டு" (திரு.வி.க.,1948)**

**" அடுத்ததுன் மாட்டுநீ அன்புகூர் தல்போல்**

**மடுத்துக்கூர் மற்றவர் மாட்டு" (திரு.வி.க.,1948)**

**1.6.2 அருமருந்தாய்..**

நலம் குன்றியவர்களை நலமும் பலமும் வளமும் மிக்கவர்களாக மாற்றும் பணியே சிறப்புறு பணியாகும். அகநோய் புறநோய் நீக்கும் மகத்தானப் பணியைச் செய்யும் மருத்துவர்கள், ஆலோசனையாளர்கள், ஆண்மிகவாதிகள் என பணம் பெற்றுக் கொண்டு செயல்படும் வீரர்களை விஞ்சி ஒவ்வொரு மனிதனும் இலவசமாய் அப்பணியைச் செய்ய வேண்டும் என இயேசு மொழிந்ததை உள்வாங்கிக் கொண்டு தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

**" நோயர் பிணிபோக்கும் நொந்தார் உயிரெழுப்பும்**

**பேயழுகல் நோய்தீரும் பேர்த்து" (திரு.வி.க.,1948)**

**" இலவசமாய்ப் பெற்றீர் இலவசமா ஈயும்**

**நிலவளச் செந்நெறியில் நின்று" (திரு.வி.க.,1948)**

**" கச்சையிற் பொன்வெள்ளிக் காசுகளைக் கட்டாதீர்**

**பச்சையாய்ச் செல்லும் பரிந்து" (திரு.வி.க., 1948)**

**1.6.3 சாரமற்ற வாழ்க்கை..**

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று கூறுவதற்கிணங்க உப்பின் தன்மையாம் உயிர்ப்பும் உயிர்த்தன்மையும் இல்லையெனில் அப்பொருளின் வாழ்நாள் வீணே. இக்கருத்து இரண்டு திணைகளுக்கும் பொருந்தும். மகத்தான அடையாளம் மனிதருக்கு இருக்க வேண்டுமெனில் அவரிடத்தில் உயிர்ப்பு இருக்க வேண்டும். அதாவது ஒரு இயந்திரம் உயிர்ப்புத்தன்மை இல்லாமல் பழுதாகிக் கிடந்தால் அதனால் அந்த இயந்திரத்துக்கும், அதை வைத்திருப்பவர்க்கும் எந்தப் பயனுமில்லாமல் போகிறது. அதுபோல் நாமிராது நம்மையும் பிறரையும் உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும்.

**"உப்புடைய ராகுங்கள் ஓங்குசமா தானத்தில்**

**ஒப்புரவுக் கேற்க உழைப்பு" (திரு.வி.க.,1948)**

**1.6.4 உண்மையுள்ளவராய்..**

சிறிய பொறுப்புகளில் உண்மையுள்ளவன் பெரிய பொறுப்புகளிலும் உண்மையுள்ளவனாக இருப்பான். சிறிய பொறுப்புகளில் உண்மையாய் இருந்தால் பெரிய பொறுப்புகள் தானாய் வரும் என்று தெரிய வருகிறது. ஆகவே உண்மை என்பது மனிதனை உயர்த்தக் கூடிய உன்னத அடையாளமாயிருக்கிறது.

**" சிறிதிலே மெய்யன் பெரிதிலும் மெய்யன்**

**சிறுநேர்மை சேர்க்கும் பெரிது" (திரு.வி.க.,1948)**

**1.7 தொகுப்புரை**

தமிழிலக்கியமாம் கிறித்தவ இலக்கியத்தில் குறள் வெண்பா வடிவில் எழுதப்பெற்ற கிறிஸ்து மொழிக் குறள் என்னும் நூலில் பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் இயேசுவின் போதனைகளான மனிதனைப் பாவச் சேற்றிலிருந்து

மீட்கும் உயர் குணங்களாம் அன்பு, பொறுமை, உண்மை, நீதி, மன்னிப்பு ஆகியவைகள் பகுப்பாய்ந்து தரப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**


1. ஆரோக்கியசாமி.இர(1948), கிறித்தவ இலக்கிய வரலாறு (மு.ப.) பூரண ரீத்தா பதிப்பகம், தஞ்சாவூர்- 613 006
2. கார்த்திகேசு சிவத்தம்பி,(1983), தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும், (மு.ப.), தமிழ் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை- 600 005
3. திரு.வி.க. (1948), கிறிஸ்து மொழிக் குறள் (நா.ப), பூம்புகார் பதிப்பகம், சென்னை -600 108
4. பரிமேலழகர் (உ.ஆ.) (2013), திருக்குறள் (ஒ.ப.), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -600 014
5. http://stalinguru.blogspot.com பார்வை நாள்:17.08.2021



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Benjamin Aron Titus J, (2021) Human Sybolism in Christs' Verse, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:419-424. Cauvery College For Women, Trichy.

**முனைவர்.அ. இரா.கோமதி**
தமிழாய்வுத் துறை
இணைப்பேராசிரியர்
காவேரி மகளிர் கல்லுரி(தன்னாட்சி)
திருச்சி. 18

# ஆண்டாளின் பக்தி நெறி

**ஆய்வுசுருக்கம்**

ஆண்டாள் பக்தித் திறத்தினால் இறைவனையே கணவனாக அடையும் பேறுபெற்றவள் இறைவனையே ஆண்டதால் ஆண்டாள் எனப் பெயர் பெற்ற இவள், ஆண்கள் மட்டுமே பக்தி இலக்கியத்தில் தழைத்தோங்கிய காலத்தில் ஒரு பெண்ணாக தனது பக்தி நிலையை உலகிற்கு பதிவு செய்தவள். ஆண்டாளின் பாசுரங்களில் பாவை நோன்பின் சிறப்பும், நோன்பு வைக்கும் முறையும், கண்ணபிரானின் வரலாறும் சிறப்புற பாடப்பட்டுள்ளது. பாவை நோன்பின் மகத்துவத்தை அனைவருக்கும் அறியச்செய்து, ஆண்டாளின் பக்தி நிலையை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

இலக்கியங்கள் பக்தியினை சைவம் வைணவம் என இரு நிலைப்படுத்துகின்றன. தமிழ் மொழியினை, சமயங்களின் மொழி, சமயங்களை வளர்த்த மொழி எனவும் கூறலாம். சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், வைணவ ஆழ்வர்களின் நாலாயிரத் திவ்விய பிரபந்தமும் பக்தி இலக்கியத்தின் முன்னிலை எனலாம். மக்களிடையே வைணவ பக்தி இயக்கத்தை பரவச்செய்தவர்கள் ஆழ்வார்கள்.

திருமால் வழிபாடு தொல்காப்பியம், கலித்தொகை, பரிபாடல் போன்ற சங்க நூல்களில் இடம் பெறுகின்றன. திருமாலை மட்டுமே கடவுளாகக் கொண்ட சமயம் வைணவம். வைணவத்தில் வடகலை, தென்கலை என இரு பெரும் பிரிவுகள் உள்ளன கம்பராமாயணம், வில்லிபாரதம், நளவெண்பா, பள்ளுப்பாடல், இவற்றில் எல்லாம் வைணவக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளது.

திருமாலின் திருக்குணங்களில் ஆழ்ந்து மகிழ்ந்த வைணவ அடியார்கள் ஆழ்வார்கள் எனப்பட்டனர். பன்னிரு ஆழ்வார்களில் பெண்பக்தையாக (ஆழ்வார்) விளங்குபவள் ஆண்டாள். திருமாலைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் எண்ணி, நாச்சியார் திருமொழி (40 பாடல்கள்) திருப்பாவை (30 பாடல்கள்) என்ற நுல்களை படைத்துள்ளார். திருப்பாவைக்கு ஆண்டாள் வைத்த பெயர் சங்கத் தமிழ் மாலை முப்பது என்பதாகும்.

**ஆண்டாள்**

ஸ்ரீவில்லிபுத்துரில் பெரியாழ்வருடைய துளசி தோட்டத்தில் குழந்தை பேறு இல்லாத பெரியாழ்வாரால் கண்டு எடுக்கப்பட்டவள் கோதை எனும் பெயரிட்டு வளர்த்து வந்தார்.

இறைவனுக்கு சூடவைத்திருந்த மாலையை தன் பெண் அணிந்தது தவறு என வருந்த, வடபெருங் கோயியலுடையான் கனவில் தோன்றி, அம்மாலையே தனக்கு உகந்தது எனவும் கோதை சூடிக்களைந்த மாலையே வேண்டும் எனவும் பணித்தார். அன்று முதல் பெரியாழ்வார் (விஷ்ணுசித்தர்) எம் பெருமானின் தேவிகளில் ஒருத்தி என நினைத்து ஆண்டாள் எனவும் பெயரிட்டார் கோதை அணிந்த மாலை இறைவனுக்கு அணிந்த காரணத்தினால் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் அழைத்தார்.

ஆண்டாள் எட்டாம் நூற்றாண்டைச்சேர்ந்தவர், அவதாரம் செய்த நாள் – நள வருடம் ஆடிமாதம் பூரநட்சத்திரம்.

சிறுவயது முதல் வைணவ சமயம் சார்ந்த தனக்குத் தெரிந்த அனைத்தையும் பெரியாழ்வார், சொல்லிக் கேட்ட. ஆண்டாளுக்கு கண்ணன் மீது அளவு கடந்த பக்தி பெருகி, போகப்போக அது கண்ணன் மீது காதலாக மாறியது.

பாவை நோன்பு என்பது கன்னிப்பெண்களுக்கானது. தனக்கு ஏற்றார் போல் வாழ்க்கைத் துனணயை அடையவும், திருமணம் ஆன பெண்கள் மன வாழ்வு நீட்டிக்க வேண்டியும், குடும்பநலன் கருதியும் இவ்விரதம் மேற்கொள்கின்றனர்.

பக்தியின் மிகுதியால் தன்னையும் ஆயர் பாடியில் பிறந்த ஒரு பெண்ணாக பாவித்து, தான் மிகவும் நேசித்த கடவுளான கண்ணனையே பாவை நோன்பு மேற்கொண்டு ஆண்டாள் பாடிய பாடல்களே திருப்பாவை. கண்ணன் மீது கொண்ட பக்தியை அவளால் காதலாகவும் வழங்க முடிந்தது.

**இப்பாவை நோன்பினை**

நேரிழை மகளிர் வார் மணல்

இழைத்த வண்டல் பாவை என நற்றினையும் 1

வண்டல் பாவை வரிமணல் பாவை என்று அகநானூறும் 2 கூறுவதோடு கடற்கரையில் நெய்தல் நில மகளிர் மணலால் பாவை செய்து விளையாடியதை உணர்த்துகின்றது..

**மார்கழியின் சிறப்பு**

மனிதர்களுக்கு ஓர் ஆண்டு என்பது, தேவர்களுக்கு ஓர்நாள். இந்த ஒரு நாளின் வைகைறை பொழுதாக பிரம்ம முகூர்த்தத்தில் உருவாவதனால் மார்கழி விசேஷமான மாதமாக போற்றப்படுகின்றது.

பாவையை பூக்களால் அலங்கரித்து வைணவக் கன்னியர்கள் கவுரி தேவியாகவும், சைவக் கன்னியர்கள் பார்வதி தேவியாகவும் போற்றி வழிபடுகின்றனர். பாவை நோன்பு 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. பெண்களால் பெண்களுக்காகவே எடுக்கப்படும் நோன்பு.

கண்ணனை மணக்க வேண்டி மார்கழி மாதத்தில் பாவை நோன்பு இருந்த ஆண்டாளுக்கு அருள் புரிந்த பெருமாள் பங்குனி உத்திரத்தில் ஆண்டாளை மணந்து கொண்டாள்.

**திருப்பாவை – பெயர்க்காரணம்**

திரு என்றால் மரியாதைக்குரிய என்று பொருள். பாவை என்றால் பெண் தெய்வப் பெண்ணான ஆண்டாள் பாடிய பாமாலையே திருப்பாவை.

**பாவை பாட்டு வகைகள்**

ஒவ்வொரு பாசுரத்தின் இறுதியில் ஏலோர், எம்பாவாய் என முடிகிறது. முப்பதாம் பாசுரம் மட்டும் இன்புறுவர், எம்பாவாய் என நிறைவடைகிறது. ஐந்து முதல் ஒன்பது வயதுடைய பெண்கள் இந்நோன்பினை நோற்றதாகத் திருப்பாவை பாடல்கள் குறிப்பிடுகின்றன.

**திருப்பாவை அமைப்பு முறை**

திருப்பாவை மொத்தம் 30 பாடல்களைக் கொண்டது. முதல்பாடல் திருப்பாவையில், தொகுப்பு பாடப்பட்டதன் நோக்கத்தையும், 2 முதல் 5 வரையான பாடல்களில், பள்ளி கொண்ட பெருமாளின் சிறப்பும், 6 முதல் 15 வரையான பாடல்கள் ஆழ்வார்களுக்கு ஒப்பாக பெண் தோழியர்\களை கற்பனை செய்து கொண்டு அவர்களை எழுப்பி நிராடி விட்டு கோவிலுக்கு செல்வதையும், அடுத்து வரும் 15 பாடல்களும் உன்னையே கணவனாகக் கொண்டுள்ள என்னை ஏற்றுக் கொள் என்று, கண்ணனை நினைத்து உருகிப் பாடுவதாக அமைந்துள்ளது,.

**பாடல் பாடும் முறை**

மார்கழி மாதம் அதிகாலை 4.30 மணிக்குள்ளாக எழுந்து நிராடி கோவிலுக்குச் சென்றோ அல்லது வீட்டில் இருந்தோ திருப்பாவைப் பாடல்களை மூன்று முறை பாராயணம் செய்தல் வேண்டும். மார்கழி 29 நாட்கள் என்பதால் முதல் நாள் ஒரு பாடல் வீதம் பாடி 29ம் நாள் இரண்டு பாடல்களாக மும்முறை பாடி முடிக்க வேண்டும்

**திருப்பாவைச சிறப்பு**

வைணவ சமய வழிப்பாட்டில் ஒன்றறக்கலந்து விட்ட, ஒன்று திருப்பாவையாகும். மாதவனாகிய எம் பெருமானுக்கு உகந்த மார்கழி மாதக் காலை வேளையில் அனைத்து வைணவக் கோயில்களிலும் இசைக்கப்படுவதே இதன் தனிப் பெரும் சிறப்பு. மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணனால் முன்மொழியப்பட்ட மாதம் மார்கழி ஆகும்.

**திருப்பாவையில் குறிப்புப் பொருள்**

திருப்பாவையில் எளிதாக விளங்கும் பொருளும், ஆழ்ந்து நோக்கின் உள்ளுறைப் பொருளும் உண்டு. துயில் எழுப்புதல், நிராட அழைத்தல், மழை வேண்டியும். நல்ல கணவன், வேண்டியும் கிடைத்த கணவன் நன்றாக இருக்க வேண்டியும் பாவை நோன்பு நோற்றல், நோன்பில் கடைப்பிடிக்க, வேண்டியவை திருமாலை சிறப்பித்தல் முதலியன இடம் பெறுகின்றன.

**தோழியரை நீராட அழைத்தல்**

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்

நீராடப் போது வீர் போதுவீர் போதுமினோ நேரிழையீர் ....

............ ....... ....... ....... ....... ............

நாராயணனே நமக்கே பறை தருவான்

பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய் - 3

அழகிய அணிகலன்களை அணிந்த கன்னியரே, சிறப்பு மிக்க ஆயர் பாடியில் வசிக்கும் செல்வ வளமிக்க சிறுமிகளே, மார்கழியில் முழுநிலா ஒளி வீசும் நல்ல நாள் இது. இன்று நாம் நீராடக் கிளம்புவோம் நாராயணனின் அம்சமான கண்ணபிரான் நமக்கு அருள் தர காத்ததிருக்கிறான் அவனை நாம் பாடிப் புகழ்ந்தால் இந்த உலகமே நம்மை வாழ்த்தும்.

**பாவை நோம்பு முறை**

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் **பா**வைக்குச்

செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்

பையத்துயின்ற பரமன் அடிபாடி

நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி - 4

ஆயர் பாடியில் வாழும் சிறுமிகளே நாம் இவ்வுலகில் இருந்து விடுபட்டு பரந்தாமனின் திருவடிகளை அடைவதற்காக, **பா**வையை வணங்கி விரதமிருக்கும் வழிமுறைகளைக் கேளுங்கள். அதிகாலையே நீராட வேண்டும். நெய் உண்ணக்கூடாது. பால் குடிக்கக் கூடாது. கண்ணில் மை இடக் கூடாது, மலர் சூடக் கூடாது, (மார்கழி பூக்கள் மாதவனுக்கே சொந்தம்) தீய சொற்கள் சொல்லக் கூடாது பிறறைப்பற்றி கோள் சொல்லல் ஆகாது எளியோர்க்கு போதும் என்று சொல்லுமளவு தர்மம் செய்ய வேண்டும்,

**நோன்பு முறை (மாண்பு)**

மாயனை மண்ணு வடமதுரை மைந்தனை

தூய பெரு நீர் யமுனைத் துறைவனை

..............................................................................

வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க

தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய் - 5

வியப்பிற்குரிய செயல்களைச் செய்பவனும். பகவானும். மதுராபுரியில் அவதரித்தவனும். பெருகியோடும் தூய்மையான நீரைக் கொண்ட யமுனை நதிக்கரையில் விளையாடி மகிழ்ந்தவனும், ஆயர் குலத்தில் பிறந்த அழகிய விளக்கு போன்றவனும், தேவகி தாயாரின் வயற்றுக்குப் பெருமை அளித்தவனும், இவனதுப் சேஷ்டை பொறுக்காத யசோதை தாய் இடுப்பில் கயிறைக்கட்ட அது அழுத்தியதால் ஏற்பட்ட தழும்பை, உடையவனுமான கண்ணனை, தூயமையாக நீராடி, மலர்களுடன் காண புறப்படுவோம். அவனை மனதில் இருத்தி அவன் புகழ் பாடினாலே போதும் செய்த பாவ பலன்களும் செய்கின்ற பாவ பலன்களும் தீயினில் புகுந்து தூசு போல காணாமல் போய்விடும்.

**தோழியரை எழுப்புதல்**

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயிலில்

வெள்ளை விளிசங்கின் பேர்ரவம் கேட்டிலையோ

..................................................................................................

உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்

அன்புத்தோழியே! நீ உடனே எழுந்திரு பறவைகள், அதிகாலையில் எழுந்து கீச்சிடும் ஒலி எம்பிரானின் கோயிலில் வெள்ளை நிற யானை எழுப்பும் முழக்கம் யோகிகளும், முனிவர்களும், ஹரி ஹரி என்றழைக்கும் குரல் எட்ட வில்லையா!

வலியன் குருவிகள் கீச்சிடும் குரல், பெண்கள் மத்து கொண்டு தயிர் கடையும் ஓசை, அவர்கள் கழுத்தில் அணிந்துள்ள அச்சுத்தாலி – ஆமைத்தாலி இணைந்து எழுப்பும் ஒலி கேட்கவில்லையா!

கிழக்கு வெளுத்து எருமைகள் மேய்ச்சலுக்காக நிற்கின்றன. எல்லாப் பெண்களும் நீராடுவதற்கு வந்து விட்டார்கள். அவர்களைத் தடுத்து உன்னைக் கூவிக் கூவி அழைக்கின்றோம். விரைவில் வருவாயாக, உன் வீட்டுக்கதவைத் திற, இன்னும் உறங்கும் மர்மமென்ன. எழுந்து வாருங்கள் என்கிறாள். மேலும், கோயில் காப்பவன், வாயில் காப்பவன், நந்த கோபன் யசோதை, நப்பின்னை கண்ணன், பலராமன் ஆகியோரையும் துயில் எழுப்புகின்றாள்.

**சமூகச் சிந்தனை**

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல் -7

மலைக்கண்ணா, நாங்கள் நோன்பு நோற்கிறோம், எங்களுக்கு நல்ல மழை, தாருங்கள் பார்கள் செழிக்கட்டும், பால் வளம் பெருகட்டும், என நாட்டு மக்களுக்காகவும் ஆண்டாள் வேண்டி நிற்கின்றாள்.

**திருமால் பெருமைக்கு நிகர் எது!**

கண்ணன் கரிய வேலைக்கொண்டு காவல் காக்கும், கொடுந்தொழிலை மேற் கொள்ளும் நந்த கோபனுடைய மகன். அழகிய கண்களையுடைய யசோதையின் இளம் சிங்கம். கரிய திருமேனி, சிவந்த கண்கள் கொண்டு ஒளிக்கும் கதிரோனாகவும் குளிர்ச்சிக்கு முழுமதியோனாகவும் காட்சிதருபவன்.

கூர்வேல் கொடுன்தொழிலன் நந்த கோபன் குமரன்

ஏரார்ந்த கண்ண யசோதை இளஞ்சிங்கம்

கார் மேனிச்செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்

நாராயணனே நமக்கே பறை தருவான்

பாரோர் புகழ்ப படிந்தேலோர் எம்பாவாய் – 8

பாவை நோன்பிற்கு பறை என்னும் வாத்தியம் தேவை அதை நாராயணனே நமக்குத் தருவான் அவனால் மட்டும் தான் தரமுடியும். ஏனெனில் அவனிடம் ஆரா அன்பு செலுத்தி பாவை நோற்கும் நமக்கு மட்டுதான் அருள் செய்வான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி

நாங்கள் நம் பாவைக்குசாற்றி நீராடினால்

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து

.........................................................................................

வங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்

நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய் - 9

பிறருக்காகத் தன் வடிவைக் குறுக்கித் தேவர்களையும், மனிதர்களையும் வாழ்வித்த திறத்தால் நெடுமால் உத்தமன் ஆகின்றான். அவன் அருளால் உலகம் முழுவதும் மாதம் மும்முறை மழை பெய்து தண்ணிர் பெருகவும், வயல்களில் செந்நெல் செழித்து வளரவும், மீன்கள் வயலில் பாய்ந்தோடி மகிழவும், வண்டுகள் தேன் குடிக்கவும், பசுக்கள் பாலை நிரம்பத்தருவதற்கும், வற்றாத செல்வத்தைத் தருவதற்கும் காரணமாக அமைகின்றன. மேலும்

தீயுனுள் தெறல் நீ பூவினுள் நாற்றம் நீ

கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ - 10

தீ உமிழ் திறலொடு முடிமிசை அணவர - 11

தீர் செங்கண் - 12

என பரிபாடலில் திருமலின் புகழ் பேசப்படுகின்றது.

தொல்காப்பியர் காலத்தில் முல்லை நிலத்தெய்வமாக மட்டும் விளங்கிய திருமால், பரிபாடல்களில் காலத்தில் எல்லா மக்களாலும் வழிபடப் பெற்று திணை கடந்த தெய்வமானார் என்பதை அறிய முடிகின்றது.

திருப்பாவையில் முதற்பாசுரம் முதலாக இருபத்தாறாம் பாடல் முடிய உள்ளவற்றில் பெருமாள் திருநாமங்களாகக் கூறப்படுவன நாராயணான், கிருஷ்ணன், பத்மநாபன், தாமோதரன், விக்கிரமன், ஹரி கேசவன், மாதவன், கோவிந்தன், பெருமாளே என்பவை ஆகும்.

வாழ்க்கையை உண்மையான இறைக்காதல் நோன்பிற்கு இட்டுச்செல்லும் பாலமாக, பாவை நோன்பின் நிறைவில். அவன் அருளால்

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா உன்தன்னைப்

பாடிபாறைக்கொண்டு யாம் பெறு சம்மானம்

நாடு புகழும் பரிசினால் நன்றாக

சூடகமே தோள் வளையே தோடே செவிப்பூவே

பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்

ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற் சோறு

மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்

கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம் பாவாய் – 13

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு

உற்றாமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்

மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். - 14

எதிரிகளை வெற்றிக்கொள்ளும் கோவிந்தனே, உன்னை நாங்கள் பாடி அருள் பெற வந்தோம். அருளோடு – பொருளும் தருவாயாக, கையில் அணியும் சூடகம் தோளில் அணியும், பாஹுவலயம், காதில் அணியும் தோடு, கர்னப்பூ, காலில் அணியும் பாடகம், ஆகிய அணிகலன்களை எங்களுக்குக் கொடு, புத்தாடைகளை வழங்கி. பின்னர் விரதத்தை நிறைவு செய்யும் வகையில் கூட்டமாக உன்னுடன் அமர்ந்து கையில் நெய் வழிய பால் சோறு உண்போம்.

ஏழு பிறவிகளிலும் நீ எங்கள் குலத்தில் பிறக்க வேண்டும். எங்களை உன் உறவினர்களாக ஏற்கவேண்டும். உனக்கு மட்டுமே சேவை செய்யும் பாக்கியத்தைத் தர வேண்டும். இது தவிர மற்ற விருப்பங்களை யெல்லாம் நீயே அழித்து விடு.

**முடிவுரை**

மனம் மெய் மொழி என்ற மூன்றாலும் இறைவனை வழிபடும் போது, தம் பிழைகள்யாவும் அகன்று முழுமையாக இறைவனை உணர முடியும் என்பதை திருப்பாவையால் அறிய முடிகின்றது.

ஆண்டாள் அருளிய திருப்பாவை வாழும் வாழ்க்கைக்கு ஒரு தனி விளக்கத்தை ஏற்படுத்துவதோடு, ஆங்காங்கே அறம் சார்ந்த நெறிமுறைகளையும், அறிவியலையும் தாங்கியிருக்கின்றது.

**சான்றென் விளக்கம்**

**சான்றென் விளக்கம்**

1. நற்றினை 191
2. அகநானுறு 330
3. திருப்பாவை 1
4. திருப்பாவை 5
5. திருப்பாவை 6
6. திருப்பாவை 4
7. திருப்பாவை 1
8. திருப்பாவை 4
9. பரிபாடல் 3
10. பரிபாடல் 1
11. பரிபாடல் 4
12. திருப்பாவை 27
13. திருப்பாவை 29

**துணைநூற் பட்டியல்**

நற்றிணை – பார்த்திபன் பதிப்பகம், திருச்சி.

அகநானுறு - பார்த்திபன் பதிப்பகம், திருச்சி.

திருப்பாவை - கௌதம் பதிப்பகம், சென்னை.

பரிபால் - கௌதம் பதிப்பகம், சென்னை.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Gomathy A.R., (2021) Devotional Principles of Andal, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:425-430. Cauvery College For Women, Trichy.

**முனைவர் கு.புஷ்பாவதி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த் துறை,
சீதாலெட்சுமிஇராமசுவாமி கல்லூரி.
திருச்சி – 2.

# தமிழர்களின் அடையாளம் காட்டும் திருமந்திரம்

**ஆய்வுச் சுருக்கம்**

ஆதி முதல் மனித குலத்திற்கு நல்வழிகளைக் காட்டி மனிதன் மனிதனாக வாழ வழி செய்யும் பக்தி இலக்கியம், தமிழர்களின் அடையாளங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமைகின்றது. நெற்றியில் பூசிக்கொள்ளும் திருநீறு தமிழர்கள் அடையாளமாக விளங்குகிறது. அவற்றின் சிறப்பை பக்தி இலக்கியங்கள் சிவநெறியில் நின்று போற்றுகின்றன. மனித நேயம், இல்லறச் சிறப்புகள்,, விருந்தோம்பல், மக்கட் பேறு பற்றி பேசாத இலக்கியங்களே இல்லை. சைவ இலக்கியங்களும் இதன் சிறப்பைப் பேசுகிறது. இவற்றில் திருமந்திரம் பல செய்திகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது என்பதை ஆராய்வதே இக் கட்டுரை நோக்கமாகும்.

**முன்னுரை**

**“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**

**தன்னை நன்றாகத் தமிழ்**

**செய்யு மாறே” (திருமந்திரம் - 25)**

என்ற திருமூலரின் இவ்வரிகள் தமிழின் பெருமையை உணர்த்துவது மட்டுமன்றி, இவர் தமிழ் மீதும், இறைவன் மீதும் கொண்ட ஆர்வத்தையும் உணரலாம். இறைவனால் முழுமையாக ஆட்கொண்ட இவர், ஒரு பாடலைப் பாடுவார். மீண்டும் தவத்தில் மூழ்கிவிடுவார். ஒரு வருடம் முடிந்ததும் தாம் பெற்ற அனுபவத்தை ஒரு பாடலாகப் பாடுவார். இவ்வாறு மூவாயிரம் ஆண்டுக்கு ஒரு மந்திரமாய்ப் பாடி மூவாயிரம் திருமந்திரப் பாடல்களால் தொகுக்கப்பட்டதே திருமந்திரம். இனி திருமந்திரம், தமிழர்களின் அடையாளமாக எவ்வாறு திகழ்கின்றது என்பதைக் காணலாம்.

**பக்தி இலக்கியம்**

சமயத்தையும் பக்தியையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்த பக்தி இலக்கியம் வெறும் இறையுணர்வை ஊட்டும் இலக்கியம் என்ற நிலையில் மட்டும் அமையாது, அது தோன்றிய காலத் தமிழகத்தின் சமுதாய, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளைக் காட்டும் காலக்கண்ணாடியாகவும் விளங்குகிறது. மேலும் பொருளாதாரச் சமத்துவச் சிந்தனைகளை மக்களிடத்து வெளிப்படுத்தும் புரட்சி இலக்கியமாகவும் விளங்குகிறது. அவை மட்டுமன்றி பக்தி இலக்கியம் நமது கண்ணால் காணப்படும் உலகத்தையும், அனுமானத்தையும் அறியத் தகுந்த ஆன்மாவினையும், இறைவனையும் இனிது காட்டும் ஞான ஒளியாக விளங்குகிறது. நம் முன்னோர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைகளில் இறைவனின் அருளைப் பெற்றது மட்டுமன்றி, சமுதாயத்திற்கு நல்வழி காட்டியும் சென்றுள்ளனர் என்பதை உணர முடிகின்றது. இன்றைய காலம் இயந்திரமயமானதாக அமைகின்றது. இக்கால கட்டத்தில் மனித மனங்களை ஒருமுகப் படுத்துவது என்பது கேள்விக்குரியதாகவே அமைகின்றது. ஆனால் இவ்வகைக் காலத்திலும் மனிதனிடத்து ஒற்றுமையையும்,

ஒருமைப்பாட்டுணர்வையும் வெளிப்படுத்துவதில் வழிபாட்டு முறையில் பக்தி இலக்கியம் சிறப்புற்று விளங்குகிறது.

**திருமந்திரத்தின் சிறப்பு**

**“தேவர் குறளும், திருநான்மறை முடிவும்**

**மூவர் தமிழும், முனிமொழியும் - கோவை**

**திருவாசகமும், திருமூலர் சொல்லும்**

**ஒருவாசகம் என்று உணர் - (ஔவையார் - நல்வழி. பக். 101)**

திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் ஆகிய 11 நூல்களின் கருத்தும் மனிதரைப் புனிதம் ஆக்கும் ஒரே வழியையே காட்டுகின்றன என்ற ஔவையாரின் பாடல் திருமந்திரத்தின் சிறப்பை உணர்த்துவதாகவே உள்ளது. திருமந்திரம் சைவ சமய நூலாக மட்டுமன்றி அறத்தையும், ஆன்மீகத்தையும், மருத்துவத்தையும் எடுத்துரைக்கும் நூலாகவே அமைகின்றது.

‘நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்னும் உயர் நோக்கில், தான் பெற்ற ஞானத்தை நமக்கு அளித்து மகிழ்ந்தார் திருமூலர். மேலும் இவரது வரலாற்றையும், பொதுமைச் சிந்தனைகளையும் பெரியபுராணத்தில் சேக்கிழார் பாடிய பாடல்களின் வழி உணரலாம்.

**தமிழர்களின் வழிபாட்டு நெறி**

எல்லா உயிர்களையும் நேசிக்க வேண்டும். ஏழைகளுக்கு ஒரு கவளம் உணவு தர செய்வது, துன்பத்திள் உள்ளவர்களுக்கு ஆறுதல் சொல்வது, பெற்றோரைக் காப்பது போன்றன தர்மங்களாகும். இவற்றை எல்லோரும் பெற்று பயனடைய வேண்டும் என்ற மனிதனின் பக்திக்கான அடையாளத்தைத் திருமந்திரம் காட்டுகின்றது. ஏனெனில், மனிதன் இயற்கையை தெய்வமாகத் வழிபடுகின்ற காலத்து மனிதன் மனிதனாகத் திகழ்ந்தான். இன்று இயற்கையை அழித்து, மாசுபடுத்துவதால் இயற்கை பேரிடர்கள் உருவாகின்றன. மனிதன் இயற்கையின் சீற்றத்தில் சிக்கித் தவிக்கிறான். வழிபாடு என்பது தமிழர்களின் முக்கியமான அடையாளமாகக் காணப்பட்டது. வழிபடுதல் முறையில் நம் முன்னோர்கள் மனதை ஒருநிலைப்படுத்தி மிகுந்த பயத்துடன், நாடு செழிக்க, பின்வரும் தலைமுறைகள் சிறப்புற்று இருக்க இறைவனை வணங்கி நின்றனர். அதனாலே பல கோடி சொத்துக்களைச் செலவு செய்து திருக்கோயில்களைக் கட்டினர். ‘கோயில் இல்லா ஊர் பாழ்’ என்ற வரிகளை உணர்ந்து கொண்ட முன்னோர்கள் விலை மதிப்பில்லா பொருள்களையும், இடங்களையும் கொடுத்து மகிழ்ந்தனர். ஆனால் இன்று முன்னோர்கள் விட்டுச் சென்ற பொருள்களை அபகரிப்பதே நோக்கமாக பலர் உலகத்தில் திரிகின்றனர். அதனாலே இன்று இயற்கை வளம் குன்றிப் போகும் படி மழையை இழந்து, துன்பங்களை மட்டுமே அனுபவிக்கிறோம். இதைத் தான் அன்று திருமூலர்,

“ஆற்றரு நோய்மிக்கு அவனிமழை இன்றிப்

போற்ற அருமன்னரும் போர்வலி குன்றுவர்

கூற்று உதைத்தான் திருக்கோயில்கள் எல்லாம்

சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே” (திருமந்திரம் - 517)

சிவபெருமான் திருக்கோயில்களில் நெறிநூலும் துறைநூலுமாகிய வேத ஆகமங்களில் விளம்பும்படி நாள்வழிபாடு, சிறப்பு வழிபாடுகள் தவறாது செய்தல் வேண்டும். இல்லையேல் கொடிய நோய்கள் உண்டாகும், மழை பெய்யாது, மன்னன் செங்கோல் வலிமை குன்றி மறமும், மானமும் இழந்து சீரழிவர். இது மட்டுமன்றி,

“மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்

கன்னங் களவு மிகுத்திடுங் காசினி

என்னரு நந்தி எடுத்துரைத் தானே” (திருமந்திரம் - 501)

மழை பெய்யாது, களவு பெருகி, களவு எடுக்க சுவரில் தோண்டுங்கருவி மிகுந்திடும் என்றும், எனவே இறை வழிபாட்டைத் தமிழர்கள் சிறந்த முறையில் மேற்கொள்ள வேண்டும் என்கிறார்.

இந்த இறை வழிபாட்டில் பிற உயிர்களைப் பழி கொடுப்பதை எதிர்க்கின்றார் திருமூலர்.

“பற்றுஅய நற்குரு பூசைக்கும் பன்மலர்

மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்

நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்

உற்றுஅரும் ஆவி அமர்ந்து இடம் உச்சியே” (திருமந்திரம் - 197)

பூசைக்குரிய பொருளாகிய மலர்களைத் தூவி இறைவனை வணங்கினால் போதுமானதாகும். ஆனால் பிற உயிர்களைக் கொன்று அதன் வழியே இறைவன் அருளைப் பெறுவது தவறு. பிற உயிர்களைப் பாதுகாத்து அவற்றின் வழியே இறைவனின் அருளை எளிமையாகப் பெறலாம்.

வழிபாட்டு முறைகளில் முக்கியமாக இறைவனை வணங்கும் முறையைக் கூறுகின்றார். தெய்வம் உனக்குள் இருக்கையிலே நீ வெளியே தேடி அலைவது வீணே என்கிறார். எனவே இருகரம் கைகூப்பி, மனதை ஒருநிலைப்படுத்தி மனதிற்குள் இறைவனை வரவழைத்து வணங்க வேண்டும் என்று கீழ்வருமாறு கூறுகிறார்.

“தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ

வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்!

தேனுக்குள் இன்பம் செறிந்திருந் தாற்போல்

ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந் தானே! (திருமந்திரம் - 170)

மேலும் வழிபாட்டு நெறி முறைகளில் மனிதர்கள் ஏனைய மனிதர்கள்பால் செலுத்தும் அன்பில்தான் உலகம் நிலைத்து நிற்கின்றது. அது மட்டுமன்றி அவ்விடத்தே இறைவனும் குடி கொண்டிருப்பான். இதைத் தான் நீங்கள் பிறர் மீது அன்பு செலுத்தினால் இறைவன் உங்கள் மேல் அன்பு செலுத்துவார் என்று பக்தி அடையாளத்தைத் திருமூலரும் வலியுறுத்தியுள்ளார்.

“அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்

அன்பே சிவம்ஆவது ஆரும் அறிகிலார் ...” (திருமந்திரம் - 270)

இறைவனை அடைவதற்கு இரண்டு முறை உண்டு. ஒன்று அக வழிபாடு, மற்றொன்று புற வழிபாடு. புற வழிபாடு என்பது இன்றைய காலக் கட்டத்தில் அடிப்படை வசதியில்லாத ஏழை மக்கள், உணவு இல்லாது வறுமையில் வாடி நிற்க, அதை உணராது இறைவனுக்குப் பூஜை செய்வதும், பால் அபிசெகம் செய்தும் இறைவனின் அருளைப் பெற நினைப்பவர்கள். இந்தப் புற வழிபாட்டை எதிர்த்து அகவழிபாட்டிற்கு முக்கியத்துவம் தந்தவர் திருமூலர்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்

வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்

தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்

கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே” (திருமந்திரம் - 1792)

என்கிறார். மலர்களைக் கூடை கூடையாகக் கோயிலுக்கு பூஜை செய்வதை விட, உள்ளன்போடு கடவுளை வணங்கினால் போதுமானது இறைவனன் அருளைப் பெறலாம், இதையே,

அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி

என்போன் மணியினை எய்த ஒண்ணாதே – (திருமந்திரம் - 272)

என்கிறார்.

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாச் சிவனை வானவர்கள் ஆயிரம் திருநாமங்கள் பாடி வழிபடுகின்றனர். அச் சிவபெருமானை வழிபட்டால் அகமகிழ்ந்து வணங்க வேண்டும் என்று எண்ணினாலே உனக்கு அருள் செய்வார் என்பதை,

"அண்ணலை வானவர் ஆயிரம் பேர் சொல்லி

உன்னுவர் உள்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்

கண்ணவ னென்று கருது மவர் கட்குப்

பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே" (திருமந்திரம் - 1478)

பாடல் வழி உணரலாம்.

**தமிழர் போற்றும் மருத்துவம்**

விண்வெளியையும், கோள்களையும் ஆராய்ந்து கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் நவீன வாழ்வில் தன்னை யார் என்பதை முதலில் உணர்ந்து, பின்பு மற்றவர்களின் நிலையை உணர வேண்டும் என்கிறார். உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம். உயர்ந்தாலும், தாழ்ந்தாலும் யாருக்கும் தலை வணங்காமல் வாழலாம் என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப முதலில் உன்னை நீயே அறிந்து கொள், அவ்வாறு அறிந்து கொண்டால் அனைத்தும் அறியலாம் என்கிறார் திருமூலர்.

"என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்

என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்.." (திருமந்திரம் - 2366)

ஆன்மீகமும் அறிவியலும் வேறன்று. இரண்டும் ஒன்றே. இதையே திருமூலரும் வலியுறுத்துகின்றார். ஆன்மீகத்தின் வழி தான்பெற்ற அறிவியல் கருத்துக்களை விதைத்தார். இன்றைய அறிவியலாளர்களும் வியக்கும்படியாக மருத்துவக் குறிப்புகள், அறிவியல் அற்புதங்கள் போன்றவற்றை இவருடைய பாடல்களில் காணலாம். 'கரு உற்பத்தி' என்னும் தலைப்பில் உள்ள இவர் பாடல்கள் மகப்பேறு மருத்துவ அறிவியலுக்கு முன்னோட்டமாக அமைகின்றது. சான்றாக, பெண்ணின் வயிற்றில் மலம் மிகுந்திருந்தால் பிறக்கும் குழந்தை மந்தமாகவும், சிறுநீர் அதிகமாக தேங்கியிருந்தால் குழந்தை குருடாகவும், செவிடாகவும் பிறக்கும் என்ற அறிய செய்திகள் கீழ்வரும் பாடல்களின் வழி உணரலாம்.

"விஞ்ஞானர் ஆணவ கேவல மேவுவோர்

விஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்

அஞ்ஞானர் அச்சக லத்தர் சகலராம்

விஞ்ஞான ராதிகள் ஒன்பான்வே றுயிர்களே." (திருமந்திரம் - 481)

இறைவன் மனிதனுக்கு மட்டுமன்றி ஓரறிவுயிர்கட்கும், பிறவுயிர்கட்கும் சிவபெருமான் இன்பம் நல்குவான் என்பதையும் தம் பாடல்கள் வழி விளக்குகின்றார்.

**திருநீற்றின் மகிமை**

"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு" என்று ஞானசம்பந்தர் திருநீற்றுப்பதிகத்தில் மந்திரச் சொற்களுக்கு நிகரானதாக திருநீற்றின் சிறப்பைக் கூறுகிறார். சைவர்களால் நெற்றியில் இடும் புனித அடையாளம் இது. 'நீறில்லா நெற்றிப் பாழ்' என்பது ஔவையின் வாக்கு. அவ்வகைச் சிறப்புப் பெற்ற திருநீறு தமிழர்களின் அடையாளமாகவும், புனிதச்சின்னமாகவும் கருதப்படுகிறது. 'நீறு' என்றால் சாம்பல். திருநீறு என்றால் மகிமை என்று பொருள். பிறப்பு, இறப்பு என்னும்

கொடுமையான பிறவிச் சூழலிலிருந்து விடுவித்து, ஈசனின் திருவடிகளில் நம்மைக் கொண்டு சேர்க்கும் மாமருந்து திருநீறு என்கிறார் ஞான சம்பந்தர். இவருடைய கருத்தையொட்டியே,

"பத்தர் சரிதை படுவோர் கிரியையோர்

அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்

சுத்த வியாதி சாதகர் தூயோகர்

சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே" (திருமந்திரம் - 1419)

பத்தர், நோன்பு நெறியில் செல்வோர், சித்தர், சிவயோகர், சிவஞானியர் போன்றோர் இறைவனின் நாமத்தைக் கூறி நெற்றியில் திருநீறு அணிந்து செல்லும் திருக்கோலமுடையவர்கள். இவர்கள் அடக்கம், நடக்கை, இருக்கை, நினைவு, சமாதி போன்ற நிலைகளை அடையும் தன்மையுடையவர். ஏனெனில் உலகின் மேல் பற்றற்ற ஒரு நிலையை உருவாக்கும் இத்திருநீறு. அதனாலே எங்கும் காண முடியா பக்தி நெறியைக் கொண்ட தமிழர்களின் அடையாளமாக திருநீறு திகழ்கின்றது.

**விருந்தோம்பல்**

தமிழர் பாரம்பரியங்களில் தலையாயப் பண்பு விருந்தோம்பல். உலகத்தில் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாத வந்தோரை உபசரித்து வழி அனுப்பும் பண்பு தமிழர்களுக்கு மட்டுமே உரியது. மற்றவர்களை உபசரித்தல், அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்தல், அன்பாக உரையாடுதல் போன்றவை விருந்தோம்பலில் சிறந்த பண்பாகக் கருதப்படுகிறது. இச் செயலால் நம் மனம் மட்டுமன்றி இறைவனின் அருளையும் பெறலாம் என்பது தமிழர்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையே பக்தி இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் காரணமாகின்றது. இன்று விருந்தோம்பல் பண்பு அருகி போய்விட்டது. அடுத்தவர்களை உபசரிக்கும் பண்பு குறைந்து போய், உறவுகளிடையே ஒற்றுமையில்லா போலி வாழ்க்கையை பலர் இன்று வாழ்ந்து வருகின்றனர். 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்று உலகுக்கு சொன்ன எம் இனம் நெறி தவறி செல்வது கண்டு மனம் வேதனை கொள்கிறது.

சங்க காலத்தில் விருந்தோம்பல் பண்பு மக்களிடையே முக்கிய பண்பாடாகக் கருதப்பட்டது.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு" (திருக்குறள் - 81

என்ற வள்ளவரின் வாக்கிற்கிணங்க, விருந்தோம்புபவரின் செல்வம் நல்வழிப் படுதலால் மகிழ்ச்சியும் விளையும், வீடுபேறும் கிடைக்கும்.

அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்

கற்றன போதங் கமழ்பவர் மானிடர்

உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்

பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே" (திருமந்திரம் - 110)

என்ற வரிகளில் திருமூலர் இதே கருத்தைச் சற்று மாறுபட்ட கோணத்தில் வலியுறுத்துகின்றார். இல்லற வாழ்க்கையைத் துறந்து துறவு வாழ்க்கையை மேற்கொண்ட ஞானிகளுக்கு உண்ண உணவளிப்பதே மேலான தருமமாகும். தன் இல்லத்தை நாடி வரும் ஞானிகளுக்குத் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தல் வேண்டும். ஐந்தறிவு படைத்த காகம் சிறிதளவு உணவுக் கிடைத்தாலும், தன் இனங்களை அழைத்து உணவைப் பகிர்ந்து உண்டு வாழும். அதுபோல் மனிதன் உணவு மற்றும் பிற பொருள்களையும் பகிர்ந்து உண்டு வாழ்ந்தால் இறைவனின் அருளைப் பெறலாம். இவ்வாறு வாழத் தெரியாதவர்கள் வாழும் காலத்தில் மிகுந்த துன்பத்தை அனுபவிப்பர் என்கிறார் திருமூலர்.

"தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே" (திருமந்திரம் - 216)

திருவடியுணர்வு கைவந்த நல்லோர் செல்வத்தின் உண்மையினைத் தெளிவிக்கத் தெளிந்து, 'செல்வம் ஆறிடும் மேடும் மடுவும் போலாம்' தன்மைத்தது என்பதையும் உணர்ந்து, செல்வத்தின் மீது மோகம் கொள்ளாது, பிறருக்குத் தேவையான உதவிகளைச் செய்தல் சிறப்பு. உலக வாழ்க்கையை விட்டுவிட்டு சிவலோகம் செல்லும் போது நாம் செய்த பாவ புண்ணியங்கள் மட்டுமே கூட வரும் என்பதைக் கருத்தில் கொண்டு இருக்கின்ற வரை பிறருக்குத் தேவையானப் பொருள்களைத் தரவேண்டும். தன்னை நாடி வருபவர்களுக்கு இல்லையெனாது வாரி வழங்க வேண்டும். ஞானிகளுக்கு இன்முகத்துடன் பணிவான வார்த்தைகளைக் கூறி உபசரித்தல் என்பது மனிதனின் தலையாயப் பண்பாகும்.

**முடிவுரை**

தோத்திரத்திற்கு திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்பது சான்றோர் கருத்து. இதன் படி பத்தாம் சைவத் திருமுறையாக விளங்கும் திருமந்திரம் திருவாவடுதுறையிலிருந்து எழுதப்பட்டதாகக் கருதுவர். தூய்மையாக இருத்தல், நேர்மையுடன், பொறுமையுடன், காமத்தை வெறுத்து, களவை வெறுத்து, கொலை செய்யாமலும் இருத்தல் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய முறையாக மந்திரம் விளக்குகின்றது. இவ்வாறு வாழ்க்கை வழிகாட்டி நூலாகவும், சாத்திர நூலாகவும், மனித வளர்ச்சிக்கு உகந்த தியானம், குண்டலினி யோகம், மருத்துவம், நல்லொழுக்கம் போன்றவற்றை விளக்கும் அரிய நூலாக அமைவது திருமந்திரம். பிறப்பு முதல் இறப்பு வரை தமிழன் கடைப்பிடிக்கும் அனைத்துமே தமிழர்களின் அடையாளமாக விளங்குகின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு மனிதன் வாழும் முறையை அழகுடன் விளக்குகின்றது திருமந்திரம் என்றால் அது மிகையாகாது.

**தமிழ் வாழ்க! தமிழன் வாழ்க! மந்திரம் போற்றுக!**

---------------------------------

**துனண நூற் பட்டியல்**


1. திருமந்திரம் மூவாயிரம் - திருமூலர் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்- பதிப்பு:1994
2. பண்பாட்டுச் சிந்தனைகள் - முனைவர் வே. முத்துலக்குமி, அனிதா பதிப்பகம் - பதிப்பு 2002
3. பன்னிரு திருமுறைகள் - வ.த.இராமசுப்பிரமணயம், வர்த்தமானன் பதிப்பகம், நா.மகாலிங்கம் 90 வந்து பிறந்த நாள் சிறப்பு வெளியீடு



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Pushapavathi K., (2021) Identity of Tamilians Shown in Thirumandhira, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:431-436. Cauvery College For Women, Trichy.

**முனைவர். க. கரும்பாயி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி
திருச்சிராப்பள்ளி -2

## தமிழன் மறந்த வளரி

**ஆய்வுச் சுருக்கம்**

வளரி வீசுதல் பண்டைத் தமிழரின் தற்காப்புக் கலையாகும். பண்டையத் தமிழர்கள் பயன்படுத்திய தொன்மையான ஆயுதங்களில் ஒன்று வளரி. வளரி வேட்டையின்போது பயன்படுத்தும் ஒரு ஆயுதமாகும். பண்டைய போர் வகைகளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சீனர்கள் தங்களுடைய தற்காப்பு கலைகளில் பயன்படுத்தும் அதே வேளையில் தமிழர்களின் பாரம்பரிய தற்காப்பு கலையும் ஆயுதங்களும் பயன்பாட்டில் இல்லாமல் வெறும் கண்காட்சி பொருளாக மட்டுமே ஆகிப்போயுள்ளது. வளரி குறித்த செய்திகளை விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**முன்னுரை**

வளரி என்பது ஓடித்தப்பிப்பவர்களைப் பிடிப்பதற்கும், கால்நடைகளைத் திருடிச்செல்லும் திருடர்களைப் பிடிக்கவும் பண்டைய தமிழரால் பயன்படுத்தப்பட்ட ஒருவகை வளைதடி போன்ற ஆயுதம் ஆகும். ஆஸ்திரேலிய ஆதிவாசிகளால் உபயோகப்படுத்தப்பட்ட பூமராங் வகை ஆயுத வடிவமைப்பை உடையது. பூமராங் எறிந்தவனுக்கே திரும்பி வந்துவிடும். அதைப்போலவே தமிழனால் பயன்படுத்தப்பட்ட வளரியும் சரியான சுழல் வீச்சில் இலக்கைத் தாக்கிவிட்டு திரும்பும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**வளரி**

வளரி மரத்தாலும், இரும்பினாலும் ஆன எரிதடியாகும். இதை வலையர்தடி என அழைக்கின்றனர். வலையர்கள் ஆதிகாலத்தில் வேட்டையின்போது மான், புலி, கரடி போன்ற கொடிய மிருகங்களைக் காலில் தாக்கி, ஓடவிடாமல் தடுக்கப் பயன்படுத்தினர்.

**வளரியின் பெயர்கள்**

வளைதடி, வளையாம், சுழல்படை, திகிரி, பாறாவளை, சுழல்படை, படைவட்டம், கோலெறி, எரிகோல், குறுங்கோல், தடி என பல பெயர்களில் வளரி குறிக்கப்படுகிறது.

**வளரி வகை**

வளரி மரத்தாலும், இரும்பினாலும் ஆனவை. மரத்தில் ஆன வளரி மிகவும் பழமையாகும். வலையர் வீடுகளில் மட்டும் உள்ளது. மரவளரி ஆதியில் பயன்படுத்தப்பட்டவை. இரும்பு வளரி வலையர் சமூகத்தினர் கோவில்களிலும், அருங்காட்சிகளிலும் காணமுடிகிறது.

**மரவளரி**

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள கிராமத்தில் வலையர் சமூகத்தினர் வீட்டில் மரத்தில் ஆன வளரியை வைத்துள்ளார். இது வலையர் சமூகத்திற்கும் வளரிக்கும் உரிய தொடர்பை அறியமுடிகிறது.

**வளரி வீசுதல்**

ஓடுபவர்களை உயிருடன் பிடிக்க, மரத்தால் ஆன வளரியைப் பயன்படுத்துவது உண்டு. கால்களுக்குக் குறிவைத்து சுழற்றி, விசிறி, வீசி விட வேண்டும். சிலவற்றை இரும்பிலும் கூட செய்வார்கள். பட்டையான கூரான வளரியை வசீனால் சுழன்று கொண்டே சென்று, வெட்டுப்படக்கூடிய இலக்காக இருந்தால் சீவித்தள்ளி விடும். வளரியை கனமற்ற நுனியைக் கையில் பிடித்துக் கொண்டு தோளுக்கு மேலே பலமுறை வேகமாகச் சுழற்றி விரைவாக இலக்கினை நோக்கி எறிந்திட அது இலக்கினைத் தாக்கிவிட்டு எறிந்தவரிடமே திரும்பவும் வந்து சேரும். எதிரியைத் தாக்கி எறிந்தவரிடமே வந்து சேரக்கூடிய அற்புதமான ஆயுதம். திரும்ப வரும்பொழுது கவனமாகக் கையில் பிடித்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் வீசியெறிந்தவரைத் தாக்கும் வாய்ப்பு உள்ளது.

**புதுக்கோட்டையில் வளரி**

புதுக்கோட்டை மாவட்டத்தில் வளரி அதிகமாக காணப்படுகிறது. ஆலங்குடி, திருமயம், பொன்னமராவதி, வலையப்பட்டி, தொட்டியம்பட்டி. தேனிமலை, தெம்மாவூர் போன்ற பல ஊர்களில் வளரியின் அடையாள சின்னங்களும், வளரிகளும் உள்ளது. பொன்னமராவதி அருகே வலையப்பட்டி என்னும் ஊரில் அமைந்துள்ள வலையப்பட்டி சுவாமி அடைக்கலம் காத்த ஐய்யனார் கோவில் வாயிலில் அமைந்துள்ள குதிரை சிலையினுள் பல வலையர் வீரர்கள் சிலை உள்ளது. அவற்றுள் ஒரு வலையர் ஒரு கையில் துப்பாக்கியும், மறு கையில் வளரியும் வைத்துள்ளார். இவ்வலையரின் சிலை வேட்டையை குறிக்கும். வகையாகவும், காவலை குறிக்கும் வகையாகவும் அமைந்துள்ளது. என்பது தமழர் வரலாற்றில் போற்றுதலுக்குரிய வரலாற்றுதல் ஒன்றாக உள்ளது.

**வளரி பயன்பாடு**

முற்காலத்தில் போர்புரியும் வீரர்கள் தம் கொண்டையில் வளரியைச் சொருகி வைத்திருப்பர். போர் மூளும்போது கொண்டையிலிருந்து உருவி வளரியின் மூலம் எதிரிகளைப் போரிட்டு வீழ்த்துவர். பூசைக்குரிய பொருளாக வளரியைப் பயன்படுத்துகின்றனர். வளைதடியை அனுப்பிப் பெண்ணைக் கொண்டு வரும் வழக்கமும் இருந்துள்ளது.

**இலக்கியங்களில் வளரி**

மகாபாரதப்போரில் கிருஷ்ணன் பயன்படுத்திய சுதர்சனச் சக்கரம் தமிழர்களிடையே வழங்கி வந்த என்னும் ஆயுதமாகும். இச்சுதர்சன என்னும் சக்கராயுதம் குறித்துச் சங்க நூலான கலித்தொகை சுட்டுகிறது.

“மல்லரைமறம் சாய்த்த மலர்த்தண்தார் அகலத்தோன்

ஒல்லாதார் உடன்று ஓட உருத்துஉடன் எறிதலின்

கொல்யானை அணிநுதல் அழுந்திய ஆழிபோல்

கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலின் - (134 பாடல்)

என்னும் அடிகள் மூலம் அறியலாம்.

**புறநானூறு**

"எரிகோல் அஞ்சா அரவின் அன்ன" (புறம். 89)

எரிகோல் என்பது வளரியைச் சுட்டும்.

"குறுங்கோல் லெறிந்த நெடுஞ்செவிக் குறுமுயல்" (புறம். 339)

"அகுதைக் கண் தோன்றிய பொன்புனை

திகிரியிற் பொய்யாகியரோ" (புறம் 233)

அகுதை என்ற குறுநிலத் தலைவன் ஒருவன் பொன்புனை திகிரி (உலோகத்தாலான சக்ராயுதம்) என்ற ஆயுதத்தைக் கண நேரத்துக்குள், கண்டது உண்மையோ பொய்யோ என்று மருளும் வண்ணம் கண்பார்வைக்குத் தோன்றி மறைந்து விடக்கூடிய வகையில் விரைந்து செலுத்தவல்ல ஒரு வீரன் என்று கூறுகிறது.

**ஐங்குறுநூறு**

"மாலை வெண்காழ் காவலர் வீச

நறும்பூம் புறவின் ஒடுங்கு முயல் இரியும்" (421)

வெண்காழென்றது மாலைக்காலத்து முயலெறியும் தடியை என்னும் வளரியாகிய வளை தடியாகும்.

**கலிங்கத்துப்பரணி**

"களித்த வீரர் விரட்ட நேமி

கண்டு வீசு தண்டிடைக்

குளித்த போழ்து கைப்பிடித்த

கூர்மழுக்கள் ஒக்குமே" (418 பாடல்)

**நைடதம்**

"கொடுங் குணில் பொருந வெற்றிப்

போர்ப் பறை குளிற வெம்போர்க்

கடுந்திறல் வாயவ் வில்நாண்

புடைப்பொலி கடலின் ஆர்ப்பது" (நைடதம் 729)

எனும் அடிகளில் காணமுடிகின்றது. குணில் என்பதற்கு வளைந்த குறுந்தடியால் ஆக்கப்பெற்ற வெற்றியைக் கொடுக்கின்ற போர் முரசு ஒலிக்க என்பதாகும் என்றும் போர்க்களத்தில் நிறைய பேர் இறக்கும்படிச் செய்யும் போர்ப்பறையை அடிப்பதனால் குணில் என்னாது கொடுங்குணில் என்றனர்.

**சிலப்பதிகாரம்**

“பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்

மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்நதன்

மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்

பொரு படையா னென்பரால்”

சோழ மன்னன் பொன்னால் செய்த அழகிய வளரி என்னும் போர்ப்படையை உடையவன்.

**ஆங்கிலேயர் அஞ்சிய வளரி**

ஆங்கிலேய அதிகாரிகள் தமிழகத்தில் அதிகம் அஞ்சிய ஒரு ஆயுதம் உண்டென்றால் அது வளரி தான். ஜேம்ஸ் வெல்ஷ் என்ற ஆங்கிலேய கேணல் தனக்கு கோலெறியும் பயிற்சியைக் கற்றுக்கொடுத்தது சின்ன மருது என்றும் அதில் வித்தகரான சின்ன மருது 300 அடி வரை உள்ள இலக்கைத் துல்லியமாக வளரி கொண்டு தாக்கும் தன்மை தெரிவிக்கிறார். பெரிய மருதுவும் வளரி வீச்சில் வல்லவர் என்கிறார். ஆங்கிலேயர்கள் மருதிருவர் மரணத்திற்கு பிறகு 1801 ல் ஆயுத தடை சட்டம் கொண்டு வந்து வளரி போன்ற ஆபத்தான ஆயுதங்கள் வைத்திருந்தால் மரண தண்டனை என்ற சட்டம் கொண்டு வந்தனர். அப்படி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட வளரிகளின் எண்ணிக்கை 22000.

**முடிவுரை**

போரில் பயன்படுத்திய பண்டைய கலைகளான, சிலம்பம், களரி, போன்றவற்றை ஒரு வீர விளையாட்டாகவும் தற்காப்பு கலையாகவும் கற்று வருகின்றனர். அதுபோல மக்கள் வளரி வீசுதல் என்னும் தற்காப்புக் கலையைப் புதுப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஆராயப்பட்டுள்ளது.

**துணை நூற் பட்டியல்**

1. ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும் - டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, ஆறாம் பதிப்பு.
2. கலித்தொகை – உரையாசிரியர் பேராசிரியர் புலவர் அ. மாணிக்கம் – வர்த்தமானன் பதிப்பகம், சென்னை -17.
3. புறநானூறு - – உரையாசிரியர் பேராசிரியர் புலவர் அ. மாணிக்கம் - வர்த்தமானன் பதிப்பகம், சென்னை -17.
4. கலிங்கத்துப்பரணி – உரையாசிரியர் ஞா.மாணிக்கவாசகன், சென்னை 600 001, முதற்பதிப்பு. டிசம்பர் 1998.
5. நைடதம் - அதிவீரராமபாண்டியன்- பாரி புத்தக நிலையம், சென்னை-108.
6. சிலப்பதிகாரம் - உரையாசிரியர் முனைவர் ச.வே.சுப்பிரமணியன், கங்கை புத்தக நிலையம், தியாகராய நகர், சென்னை-600 017. முதற்பதிப்பு மார்ச் 1998.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Karumbayi K., (2021) Unremembered Tamil Martial Art Valari, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:437-440. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ம. மணிமேகலை**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி
திருச்சிராப்பள்ளி -2

# பக்தி இலக்கியங்களில் பண்பாட்டு அடையாளங்கள்

**ஆய்வுச் சுருக்கம்**

பழந்தமிழரது வழிபாடு ஆரம்ப காலத்தில் இயற்கைச் சார்ந்ததாக அமைகிறது. குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை, என்னும் ஐந்து வகை நிலத் தன்மைகளுக்கேற்ப மக்களிடம் கடவுள் வழிபாடு அமையப் பெற்றது. மனித இனம் தோன்றி நீண்ட கால வளர்ச்சிக்குப் பிறகு குழுவாக வாழத் தொடங்கிய நிலையில் தமது கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ள மொழியையும், தமது அச்சத்தைப் போக்கிக் கொள்வதன் பொருட்டாகவோ கடவுள் வழிபாட்டையும் மேற்கொண்டனர். பழங்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் பக்தி இலக்கியங்களின் வாயிலாக பண்பாட்டையும் பலவாறு அறிந்து கொண்டனர்;;;. என்பதை இக்கட்டுரையின் வாயிலாக எடுத்து இயம்பப் படுகிறது

**முன்னுரை**

இறைவன் தன்னை தமிழில் பாடவே என்னைப் படைத்தான் எனக்கூறும் திருமூலர் மூலமே சில தமிழ்சொற்கள் மந்திரம்போல் வாழ்க்கையை நெறிப்படுத்துவதாக அமைந்துள்ளன. கடவுளை வணங்க பக்தி தேவை இல்லை. சங்கத் தமிழ் இலக்கியம் தெரிந்திருந்தால் போதுமானது. அந்த அளவுக்கு பக்தி உணர்வுடன் கூடியதாக சங்கத் தமிழ் இலக்கியங்கள் உள்ளன. ஆன்மிகமும் கடல் போன்றது அதில் மூழ்கிக் குளிக்கலாம். சங்க கால திருமணங்களில் தந்துபி, வெண்சங்கு, சல்லபிபல்லவி, மத்தளம் ஆகிய இசைக்கருவிகள் பயனபடுத்தப்பட்டதை ஆண்டாள் பாடல் மூலம் அறிய முடிகிறது. அந்த இசைக்கருவிகளின் ஒலி துன்பம் தீர்க்கும் மந்திரமாக இருந்ததையும் அறியலாம். இறைவன் அருட்கடலில் மூழ்கினால் தமிழால் அமிழ்தம் பருகலாம். குழந்தைகளுக்கு சங்கத் தமிழைக் கற்பித்தால் பண்பாடும் தன் ஆளுமையும் வளரும் என்பதை உணரலாம்.

ஒரு நாட்டில் மக்களால் பேசப்படும் மொழிவளமை, விருந்தோம்பல் பாங்கு கலைவளம் ஆகியவற்றை வைத்தே அந்த நாட்டின் பண்பாட்டை அளவிட இயலும். ஏனெனில் மொழி, விருந்தோம்பல், கலை, மனித சமூகத்தின் பரிணாம வளர்ச்சியின் உயிர்நாடியாக இருந்து வந்துள்ளது. ஓர் இனத்தையும் அவ்வினத்தின் அடையாளங்களையும் அழித்து விட வேண்டுமென்றால் அந்த இனத்தின் மீது இரத்தத்தை உறைய வைக்கும் அணுகுண்டுகளை வீசத் தேவையில்லை. அந்த இனத்தின் மொழியை மட்டும் அழித்தால் போதும். அந்த இனம் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் என்பார்கள். அவ்வாறு ஒரு மொழி தன் ஆற்றலை இழக்கும்போது அம்மொழி பேசும் மக்களின் கலைகள் கலாச்சாரப் பதிவுகள் வாழ்க்கை அனுபவ பதிவுகள் கொஞ்சம் கொஞ்சமாக மங்கத் தொடங்குகிறது.

பக்தி இலக்கியம் ஒரு தனி உலகம். இதில்தான் எண்ணிலடங்கா ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும், அருளாளர்களும் தோன்றி மண் நிறைந்த இந்தப் பூமியைப் புண்ணியபூமியாய் புனித பூமியாய் மாற்றி இருக்கின்றார்கள். வாழ்கையில் வறுமை வாட்டுகின்றது. நோய் துயரம் செய்கின்றது. வயது மூப்பு முதுமையாக்குகிறது. மரணம் அச்சுறுத்துகிறது. உண்மைதான் ஆனால் அதற்காக ஒதுங்குவதா? ஓடுவதா? இது கூடாது. இன்பமும், துன்பமும் இறையருளே தீமை,

நன்மை முழுவதும் அவன் செயலே. வறுமையும் செல்வமும் அவன் இன்னருளே நோயைத் தருவதும், அந்நோயை நீக்கி நம்மை ஆட்கொள்வதும் அவன் கடமையே.

இலைகள் காய்ந்து சருகாவது போல் மூப்பும் இயற்கையானதுதான். மரணத்தைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும். இன்று முதல் கொண்டே இறைவனை வழிபட்டால் அவன் நம்மிடம் வந்து காத்தருள்வான் என்பதே அவர்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கைதான் பக்தியின் பண்பாடு. தொல்காப்பியக் காலத்தில் இறைவன் உருவ வழிபாடு என்னும் பக்தி நம்பிக்கைகள் இல்லை. முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பென மொழிப நிலம், பொழுது இரண்டுக்கு மட்டுமே தமிழ்ப் பண்பாட்டில் முக்கியத்துவம் இருந்தது.

ஆழ்வார், நாயன்மார் பாடல்களில் துறவறம் பழிக்கப்படவில்லை. இல்லறம் வெறுக்கப்படவில்லை. நிலையாமை உணர்த்தப்படுகின்றது. கலைகளும் போற்றப்படுகின்றது. இந்த உலக இன்பங்களை நுகர்ந்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம் என்ற தெளிவைப் பக்தி இலக்கியம் தருகிறது. உலக வாழ்வைக் கண்டு அஞ்சும் அச்சம் நீங்கி, மக்கள் கூடி கூட்டு வழிபாடு செய்து பக்தி உணர்ச்சியில் திளைத்திருக்க ஊக்கமூட்டுகிறது. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்கிறது.

சமணத்துறவியாக, துறவிகளின் தலைவராக இருந்து சைவ சமயத்திற்குத் திரும்பியவர் என கூறப்படும் திருநாவுக்கரசர் பாடியுள்ள பின்வரும் இயற்கை தரும் இன்பங்களும் கலை இன்பங்களும் எல்லாம் இறைவன் தரும் இன்பங்களே என்ற உண்மை விளங்குகிறது. ஆழ்வார், நாயன்மார்களின் பக்திப் பாடல்கள் விளைத்த புரட்சி ஒன்று. கடவுளுக்கு முன் மக்கள் எல்லோரும் சமமானவர்கள். கடவுள் ஒருவரே எல்லா மக்களுக்கும் தலைவர் என்ற கருத்தைப் பரப்ப அந்தப் பாடல்கள் உதவின. அதனால் அரசர்களையும், செல்வர்களையும் பாடுவதற்கு மட்டுமே பயன்பட வேண்டும் என்ற கொள்கை வளர்ந்தது. அரண்மனையில் நிகழ்ந்துவந்த விழாக்கள் பல கோயில்களில் கடவுளுக்கு உரிய திருவிழாக்களாக மாறின திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்கள் எண்ணாயிரமும் தேவாரம் என்ற பெயரால் சிறந்த பக்தி இலக்கியமாக விளங்குகின்றன. இன்ன பண் என்று குறிப்பிடப்பட்டு அவை பாடப்படுகிறது. இவ்வளவு பழமையான இசைச்செல்வம் வேறு மொழிகளில் இல்லை எனலாம். திருநாவுக்கரசர் தாண்டவம் பாடுவதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

உருக்கமான திருவாசகப் பாடல்களே பாடிய மாணிக்கவாசகர், அக்காலத்தில் மக்களிடையே இருந்த சில நாட்டுப்பாடல் வடிவங்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். சிறப்பாக இளம்பெண்கள் ஆடிப் பாடும் பாடல் வடிவங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் விளையாடல்களுடன் பக்தி உணர்வை கலந்து அமைத்துத் தந்திருக்கிறார். திருவாசகத்தில் உள்ள திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தேள்ளேணம், திருத்தோணோக்கம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் ஆகியவை அவ்வாறு பாடப்பட்டது.

**வழிபாட்டு முறை.**

மக்கள் இறைவன் மீது “அவன் இன்றி அணுவும் அசையாது” என்ற நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். மனித வாழ்க்கையில் இறை நம்பிக்கையை ஏற்படுத்தி நன்னெறியில் செலுத்தும் இயல்பினைப் பெற்றனர். இந்நம்பிக்கை மாந்தர்கள் வாழ்வுக்கு நல்வழி காட்டும் இறை நம்பிக்கையே தேவார பதிகங்களில் திருநாவுக்கரசர் எடுத்துரைப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகிறது. இறை நம்பிக்கை என்பது “நம்பிக்கையின் அடிப்படையில் வழிபாடு ஆற்றுவதும், கடமை உணர்ந்து செயல் ஆற்றுவதும், கடவுள் உணர்வு பெற்று வாழ்வது சமயப் பண்பாட்டிற்கு அடித்தளமாக அமைகிறது. சமுதாய வாழ்வுக்கு வழிகாட்ட வல்லதாகவும் வாழ்வுக்கு உரிய ஒழுக்கத்தை அறிவுறுத்தக்கூடியதாகவும் இருக்கக் கூடிய ஆற்றலைப்பெற்றுள்ளது.”

மனித வாழ்வில் ஏற்படும் துன்பங்களையும், எதிர்வரும் இடர்களையும் களைந்து காப்பவன் இறைவன் சிவபெருமான். இவ்விறைவன் மீது நம்பிக்கை கொண்டு மனதில் மாசில்லாமல் தம் குறைகளை விண்ணப்பித்து அருளுமாறு வேண்டுதல் வேண்டும் என்னும் நம்பிக்கையை,

"அள்ளலைக் கடக்க வேண்டில்

அரனையே நினை மின்னீர்கள்"

என்ற பாடல் உணர்த்தும்.

எத்தொழில் செய்தாலும் இறையாகவே காணும் அடியார்களின் அன்புக்கு ஈசன் அடியவனாகவே உள்ளான். வழிபாட்டு முறை அறிந்திடாமல் கண்ணப்பர் செய்த பூசையில் மகிழ்ந்து, பிறப்பும், இறப்புமற்ற ஈசன் 'கண்ணப்ப' என்றழைத்தார். செருப்புக் காலால் சிவனுக்குச் சூட்டப்பட்ட மலர்களைத் தள்ளுதல், வாயில் நீரெடுத்து வந்து நீராட்டல் சூடிய மலரைச் சூட்டுதல், ருசி பார்த்த உணவைப் படைத்தல், அன்பினால் நினைத்து முகமும், அகமும் மலர்ந்து கூறும் மொழிகள் என கண்ணப்பரின் எல்லாச் செயல்களுமே ஈசனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வேதங்களைக் கற்றுணர்ந்தவர் மட்டுமே அவனருள் பெறமுடியும் என்பதன்றி உண்மையான அன்பைக் காட்டுதலே அவனருள் பெறும் வழிபாட்டு முறை என்பது புலனாகின்றது.

**பாவை நோன்பு**

பழங்காலத் தமிழகத்தில் நடைபெற்ற நோன்புகளில் 'மார்கழி நோன்பும்' ஒன்று. திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் பொய்கைக் கரைக்குச் சென்று நீராடி மண்ணால் செய்த பாவையை வைத்து வழிபாடு நடத்திப் பாடுவது 'பாவைப்பாட்டாகும்'. திருப்பாவையில் மூன்று இடங்களில் மட்டுமே "பாவை நோன்பு" நோற்றதற்கான குறிப்பு காணப்படுகிறது.

"பாவைக்குச் செய்யும் கிரிசைகள்"

"பாவைக்குச் சாற்றி நீராடினால்";

"பிள்ளைகளெல்லோரும் பாவைக் களம்புக்கார்"

என்ற பாடல் வாயிலாக அறியமுடிகிறது.

சாதி, தொழில், பொருளாதாரம், ஊர், காலம், ஆண், பெண், வயது பாகுபாடில்லாமல்,

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்

மன்னியசீர் சங்கரன்தாள் மறவாமை பொருள்"

என வாழ்ந்த சீர்மிகுப் பண்பாளர்களை உலகம் உணர்ந்துகொள்வதற்குக் கிடைத்த பக்தி, பண்பாட்டுக் கருவூலம்; ஆகும்.

**அன்பே வெல்லும்**

வறுமையுற்றபோதும் காதலில் செழித்து வாழ்ந்து, ஒருப்பட்ட மனத்தினராய் உயர்ந்து நின்ற தம்பதியர்கள் காப்பியத்துள் போற்றப்படுகின்றனார். மழைபொழியும் நள்ளிரவில் அரிசியும் காயும் இல்லாதபோதும் மாறநாயனார் மனைவியும், இளமையால் தவறு செய்து வந்த தன கணவரிடம் எம்மைத் தீண்டுவராயின் திருநீலகண்டம் என்று சபதமிட்ட மனைவியை, மதித்து எந்நாளும் உன்னை மட்டுமின்றி எப்பெண்ணையும் மனதினாலும் தீண்டேன் என வாழ்ந்த திருநீலகண்டரும் வாழ்க்கைத் துணை நலம் போற்றிய மாண்பினர் ஆவர்;.

**முடிவுரை**

பக்தி இலக்கியங்கள் வாயிலாகத் தமிழரின் பண்பாட்டு அடையாளங்கள் குறித்து வழிபாட்டு முறை, பாவைநோன்பு, அன்பே வெல்லும,; என்ற தலைப்புகளிலிருந்து ஆராய்ந்துணரப்படுகிறது.

**துணை நூல் பட்டியல்**


1. தமிழ் வளர்ச்சிக்குச் சமயங்களின் பங்கு பதிப்பாசிரியர் . மருத்துவர் பொ. செல்வராஜ் செம்மூதாய்ப் பதிப்பகம், நெ. 17,தாகூர் தெரு எம்.எம்.டிஏ நகர் சிட்லபாக்கம், சென்னை - 64
2. பன்முகப் பார்வையில் சமய இலக்கியங்கள் - தொகுதி 2, தமிழ்த்துறை, இலயோலா கல்லூரி, (தன்னாட்சி), சென்னை - 34



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Manimegalai M., (2021) Trace of Culture in Spiritural Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:441-444. Cauvery College For Women, Trichy.

**முனைவர். சி. ஜஸ்டின் செல்வராஜ்**
உதவிப் பேராசிரியர் & தலைவர் (பொ.)
நுண்கலைகள் மற்றும் அழகியல் துறை
நிகழ்த்துககலைப் புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625021

# வலங்கை மாலையில் காணலாகும் இடம்பெயர்தலும், சமகால இடப்பெயர்வும்

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரையானது *வலங்கை மாலை என்னும் நாட்டுப்புறக் கதைப்பாடலில் காணலாகும் இடம்பெயர்தலையும், இன்றைய* தமிழகத்திலுள்ள நாடார்களின் இடம்பெயர்த*லினையும், அதன் விளைவாக சமூகப் பண்பாட்டுத் தளத்தில் ஏற்பட்ட* அமைப்பியல் மாற்றத்தினை *வரலாறு மற்றும் இனவரைவியல் தரவுகளின் அடிப்படையில் ஆராய்கிறது.* நாடார்கள் தமிழகத்திலுள்ள கன்னியாக்குமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய தென்மாவட்டங்களில் பெரும்பான்மை சமூகமாக வாழ்ந்து வருகின்றனர். மேலும் மதுரை, தேனி, சேலம், கோவை, தஞ்சாவூர், தென் மற்றும் வடஆற்காடு பகுதிகள், சென்னை போன்ற மாவட்டங்களில் குறைவான அளவிலும் காணப்படுகின்றனர்.

தமிழகத்தின் வடமாவட்டங்களில் நாடார்கள், 'கிராமணி' என்றும் அழைக்கப்படுகின்றனர். நாடார் சமுதாயத்தில் இந்துக்களும், கிறித்தவர்களும் காணப்படுகின்றனர். பெரும்பான்மையோர் 'இந்து' சமயத்தோடு இணை*க்கப்பட்டி*ருந்தாலும் அதிலிருந்து *முற்றிலும்* மாறுபடுகின்ற அய்யாவழி சமயத்தைப் பெரும்பாலும் பின்பற்றுவோர் நாடார் சமூகத்தவர்களே. கிறித்தவர்கள் அதிகமாகக் காணப்படும் மாவட்டங்களாக திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அறியப்படுகின்றன. *நாட்டுப்புற மக்களின் ஓர்மையும், வரலாற்று ஆவணங்களே என்னும் முறையியல் நிலைப்பாட்டைக் கவனத்தில் கொண்டு, இக்கட்டுரையானது நாட்டுப்புற வழக்காறுகள் குறிப்பாக கதைப்பாடல்களில் காணலாகும் கருத்துக்களை எவ்வாறு ஆதாரங்களாகக் கொள்ளலாம் என்ற முறையியல் சார்ந்த கேள்வியை முன்வைத்து, மாற்று ஆய்வு வரலாற்று முறையியல் அணுகுமுறையில் வாய்மொழி வரலாற்றின் முக்கியத்துவத்தையும் பேசுகின்றது. அதனோடு இடப்பெயர்வு குறித்த கருத்துக்களினை வரலாற்றுத் தகவல்களோடும், இனவரைவியல் தகவல்களோடும் இணைத்து இவ்வாய்வுக் கட்டுரையில் விவாதிக்கப்படுகின்றன. மேலும் இங்கு நாட்டுப்புற மக்கள், ஓர்மையின் வெளிப்பாடாக இருந்து வரும் வழக்காறுகள், அவர்களின் வாய்மொழி மரபு போன்றவை குறித்த தெளிவினைக் காணவும் இக்கட்டுரை முயற்சிக்கின்றது.*

***கலைச் சொற்கள்***: *கதைப்பாடல், இடப்பெயர்வு, சாதியமைப்பு, நாடார், மரபு*

## ***முன்னுரை***

நாட்டார் வரலாறு (அ) வாய்மொழி வரலாறு என்று சொல்லும் போது அதில் ஒரு குழுவின் பங்களிப்பு இருப்பதனைக் காணமுடியும். இன்னுமோர் உதாரணமாக, வாய்மொழி வரலாற்றில் தரவுகள் சேகரிக்கும் முறையைக் குறிப்பிட வேண்டுமென்றால், ஒரு தொழிற்சாலை தோன்றினது, அழிந்தது அல்லது ஒரு படையெடுப்பு நடந்தது என்பன இதுபோன்ற நிகழ்வுகளை மக்களின் வாய்மொழி மரபிலிருந்து சேகரிப்பது ஆகும். நன்றாக சொல்லுவதென்றால் வாய்மொழி வரலாறு என்பது சமூக அறிவியல் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள அனைத்து ஆய்வாளர்களால் மாற்று வரலாற்று முறையியலில் பயன்படுத்தும் சொல்லாகவே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு குழுவின் தோற்றம் குறித்தும், சாதியின் இடப்பெயர்ச்சி

குறித்தும், புராணங்களும், கதைகளும் நாட்டார் வரலாறுக்கு வலு சேர்க்கிறது. அதுமட்டுமில்லாது உலகில் வாழும் அனைத்து இனக்குழுக்களும் தாங்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதற்கான கதைகளையும் வைத்துள்ளார்கள். சாதியின் இடப்பெயர்ச்சி, ஒரு சில சாதிகள் சில பொருட்களைப் பயன்படுத்தாமல் இருக்கிறது. இவை அனைத்தும் இனவரலாற்றிற்கான அடிப்படைத் தரவுகளாகக கொள்ள முடியும். சாதிகளின் இடப் பெயர்ச்சியை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்போது பின்புலமாகத் தெரியவருவது பாலியல் கொடுமைகள், வேலைக்காக ஓரிடம் விட்டு ஓரிடம் வந்தவர்கள், வறுமைகாரணமாகப் பிழைப்புத் தேடி வந்தவர்கள் என்றும் காரணங்கள் அதிகமாக இருப்பதனைக் காணமுடியும். இதனை நாடார்களின் தோற்றக்கதைகளைக் குறிப்பிடும் வெங்கலராசன் கதையும் அது குறித்தப் பதிவுகளைக் கொண்டுள்ளது. மேலும், வாய்மொழி வரலாறு என்பது குறிப்பிட்ட சாதிகளுக்கான வரலாறு என்று மட்டும் சொல்லிவிட முடியாது. வாய்மொழியாகக் கூறியது என்பது ஒரு சில சாதிகளாக இருக்கலாமே தவிர, வாய்மொழி வரலாறு என்பது சாதி வரலாற்றினைத் தேடும் முயற்சி என்று சொல்வதாய் இருக்க முடியாது. நாட்டுப்புற மக்களின் ஓர்மை பல்வகைப்பட்டது. உதாரணமாக ஒரு தொழிலைச் செய்யமாட்டோம், இன்னொருத் தொழிலைத் தேர்ந்தெடுப்போம் என்பதிலும்; அரசு விதித்த வரியினால் ஓரிடத்திலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்வது என்பதும் இடம்பெயர்தல் குறித்த ஓர்மைகளைக் குழுவினரிடம் காண முடியும். இடப்பெயர்ச்சி என்பதை ஒரு குழுவினர் இன்னொரு குழுவினை ஒடுக்கியதால்தான் நடக்கிறது என்று பொதுவிதியாகக் கூறிவிட முடியாது. பகைமையை இன்னொருவர் ஏற்படுத்தி வைத்திருப்பர். இந்தப் பகைமை யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பதனை ஆய்வாளர்கள் கண்டுபிடிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் நமது நாட்டில் ஏராளமான மதமாற்றங்கள் (Conversion) நடைபெற்றிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, பெருந்திரளாக மக்கள் தங்களின் சமயம் மாறிய நிகழ்வும் வரலாற்றிலும் சரி அது குறித்தப் பதிவுகள் மக்கள் மரபில் பாடலாகவும், கலை வெளிப்பாடாகவும் கிடைக்கின்றன.

### *I.* மக்களும் இடம்பெயர்தலும்

இடம்பெயர்தல் என்பது ஆதிகாலம் தொட்டு மனிதனோடு பின்னிப்பிணைந்துள்ள ஓர்செயல்பாடாகும். இந்த இடம்பெயர்தல் என்பது பல்வேறு சூழ்நிலைகளில் இன்றும் நிகழ்வதைக் காணமுடிகின்றது. குறிப்பாக தொழில் வழியாலும், இயற்கை சீற்றங்களான வெள்ளப்பெருக்கு, பூகம்பம், கொள்ளை நோய்களின் தாக்கம், பஞ்சம் ஆகியவற்றினாலும், அரசியல், சமூகக்காரணங்களாலும் இடம்பெயர்தல் நிகழ்கிறது. சுருக்கமாகக் கூறுவதெனில் மனிதன் தன் வாழ்க்கை நலன் கருதி இடம்மாறுதலினை மேற்கொள்கிறான். இடம்பெயர்தல் என்பது ஒரு கூட்டு செயல்முறை. இந்த செயல்முறையானது மக்கள் குடியமர்வதற்காகவோ அல்லது வேறு பல காரணங்களுக்காகவோ மக்களின் இடம் பெயர்தல் இடம்விட்டு இடம் நடைபெறுகின்றது. மேலும், வேலை வாய்ப்புக்காகவும் வாழ்வியல் பிரச்சனைகளுக்காகவும் இடம் பெயர்தல் நடைபெறுகின்றது.[i] தமிழகத்தில் ஒவ்வொரு அரசகாலங்களில் ஏற்பட்ட படையெடுப்பு, சமயப் பரப்புதல், வாணிகம் போன்றவற்றால் காலந்தோறும் ஏற்பட்ட மக்களின் இடம்பெயர்வால் தமிழகத்தின் மக்கள் தொகை அமைப்பே மாற்றம் பெற்றுள்ளது.[ii]

### *II.* நாடார்களின் இடப்பெயர்வு

திருச்செந்தூர், திருநெல்வேலி, சிவகாசி, கமுதி, தூத்துக்குடி, அருப்புக்கோட்டை, இராமநாதபுரம், திருச்சி ஆகிய பகுதிகளிலிருந்தும் மற்றும் அதைச் சார்ந்த ஊர்களிலிருந்தும் 'நாடார் சமூக வணிகர்கள்' விருதுநகர் பகுதியில் குடியேறியுள்ளனர். இதன் விளைவாகவே விருதுநகர் நாடார் சமூகத்தில், சுமார் *257* வகையறாக்கள் உருவானது என்பது கவனிக்கத்தக்கது.[iii] பண்டைய தென் திருவிதாங்கூரில் 'தலைவரி' விதிக்கப்பட்ட சாதிகள், குறிப்பாக நாடார்கள் (முன்பு சாணார்கள் என்று அறியப்பட்டனர்) தங்களது எதிர்ப்பை இடம்பெயர்தல் மூலமாகக் காட்டியுள்ளனர். அவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள் அண்டை பகுதியான திருநெல்வேலி

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் குடியேறியுள்ளனர்.[iv] அவ்வாறு இடம்பெயர்ந்த நாடார்களின் கிராமங்கள் 'விளை' என்று முடியும் படியான பெயர்களாக இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.[v]

### கதைப்பாடல்களில் இடப்பெயர்ச்சி

நாடார்களின் இடப்பெயர்ச்சியைக் குறிப்பிடும் நாட்டார் கதைப்பாடல்களான, குலசேகர ராஜாகதை (மக்கள் வழக்கில் ஐவர் ராசாக்கதை என்று அறியப்படுகிறது), உலகுடை பெருமாள் மற்றும் சரியகுல பெருமாள் கதை, சிவனணைஞ்ச பெருமாள்கதை, வெங்கலராசன் கதை, குமாரசாமி நாடான் கதை போன்றவைகளில் நாடார்கள் குறித்த இடப்பெயர்வுத் தகவல்கள் அதிகமாகவே கிடைக்கப்பெறுகின்றன. கதைப்பாடல்களில் சொல்லப்படும் இடப்பெயர்வு என்பது திருமணம் எனும் நிலையில் மகள் மறுத்தல் (வெங்கலராஜன் கதை) மற்றும் பிறரின் தூண்டுதலை ஏற்கமறுத்தல் (குலசேகர ராஜாகதை) ஆகியவற்றால் குடும்பமே வேறு இடத்திற்குக் குடிபெயர்ந்ததாக அறியமுடிகிறது. அதற்கடுத்தாற்போல் பிற சாதியினரோடு கொண்ட திருமணம், மனைவிக்கு துரோகம் செய்ததின் விளைவால் அந்தக் குடும்பம் மற்றும் சமூகம் முடிவெடுத்துத் தண்டிப்பதன் மூலமும் குடும்பம் தண்டித்ததன் அடிப்படையில் பங்காளிகள் சண்டை மேலும் வளர வேண்டாமென்று வேறு இடங்களுக்குச் செல்வதையும் கதைப்பாடல்கள் வழி அறிய முடிகின்றது (உதாரணமாக... சிவனணைஞ்சபெருமாள் கதை, குமாரசாமி நாடான் கதை போன்றவற்றைக் கூறலாம்). மேற்கூறிய கதைப்பாடல்களின் வழி அறியப்படும் கருத்து என்னவென்றால், கதைகளுக்கான கதைமாந்தர்கள் பெரும்பாலும் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் இடமானது 'தேரிக்காடுகள்' ஆகும் (இன்றைய திருச்செந்தூர் வட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தின் ஒரு சில பகுதிகள், சாத்தான்குளம் மற்றும் நாங்குனேரி வட்டத்தின் நிலப்பரப்பைக் குறிக்கிறது).

கதைப்பாடலில் சொல்லப்படும் இடப்பெயர்ச்சிக் குறித்தப் பகுதிகள் பெரும்பாலும் தெற்கு மற்றும் மேற்கு நோக்கியதாகவே காணப்படுகிறது. கதைப்பாடல்களுக்கான காலம் என்று நோக்கும் பொழுது பதினாறாம் மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் நடந்தேறப்பட்டதாகவே அறிய முடிகிறது.[vi]

### சாதியின் அமைப்பியல் மாற்றம்

மேற்கூறப்பட்ட கதைப்பாடல்கள் வழி இடப்பெயர்வுகள் மற்றும் காலனியக் காலத்தில் ஏற்பட்ட வாணிபத்திற்கான இடம்பெயர்தல் என்பது சுமார் இருநூறு முதல் முந்நூறு வருடகால மாற்றத்தை நமக்கு உணர்த்துகிறது. அதன் வழிசாதியின் ஒட்டு மொத்த அளவிலும் சரி, தனிநபர் நிலையிலும் சரி இடப்பெயர்வால் சமூக-பண்பாடுகளில் ஏற்பட்ட மாற்றம் குறித்த ஆய்வு என்பது மிகவும் அவசியமாகிறது. இக்கட்டுரையானது சாதியின் அமைப்பியலையும் அதனில் ஏற்பட்ட மாற்றத்தினையும் சில களப்பணித் தரவுகளோடு ஆய்வு செய்கிறது.

1. நாடார்களின் மத்தியில் ஏற்பட்ட குறிப்பிட வேண்டிய முதல் மாற்றமே பூர்வீகத் தொழில் என்று அறியப்படும் 'பனையேற்றம்' என்பதை விட்டு புதிய தொழில் நோக்கிய நகர்வே ஆகும்.

2. இடம் பெயர்ந்த நாடார்கள் மத்தியில் ஏற்பட்ட இரண்டாவது மாற்றம், சமூக மாற்றமாகும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் கண்டபின் அவர்கள் செய்தது சமூக நிலையில் மேம்பாடடைய தங்களுக்கான புராணங்களில் புதிய உள்ளடக்கங்களை ஏற்படுத்தியதேயாகும். அதாவது தங்களைச் சத்திரியர்கள் எனவும், மேல்நிலையாக்கத்தைத் தழுவியதையும் குறிப்பிடலாம்.[vii]

இவ்வாறு புதிய சாதிய நிலைக்கு மாறத்துவங்கும் முன்னும், மாறிய பின்னும் அவர்களுக்கான அமைப்புகளை நிறுவி வந்துள்ளனர். நாடார் மகாஜன சங்கம் (1910), தக்ஷிணமாற நாடார் சங்கம் (1948) போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும், பல சிறிய அமைப்புகள் தங்கள் கிராமத்தின் பெயரிலும், தாங்கள் சார்ந்த மாவட்டத்தின் பெயரிலும் உருவாயின. இச்சங்கங்கள் சமூகத்தின் ஒருமைப்பாட்டிற்கும் மற்றும்

சமுதாயத்தின் பல முன்னேற்ற நடவடிக்கைகளுக்கும் முக்கியப் பங்காற்றியது. ஆகவே நாடார்களின் வளர்ச்சி, வரலாறு, பண்பாடு குறித்த ஆய்வுகள் தொடங்கு முன், பின் வருமாறு கொண்ட பகுப்பைக் கொள்ளுதல் அவசியம் எனப்படுகிறது.

1. மரபுநிலைக் காலக்கட்டம் (ஆரம்பக்காலம் /மரபானகாலம்)
2. ஒருமைப்பாட்டுக் காலம்
3. பன்முக நிலைக்காலம்

இனி ஒவ்வொரு காலத்தினைக் குறித்த விளக்கத்தினைக் காணலாம்.

**மரபுநிலைக் காலக்கட்டம்**

நாடார் சமுதாயமானது ஐந்து பெரும் அகமணக் குழுக்களாக அறியப்படுகிறது. அதாவது நிலமைக்காரர், கருக்குமட்டை, நட்டாத்தி, கொடிக்கால், சிறுகுடி நாடார் போன்ற பிரிவுகள். இதனையே பெரும் பிரிவாகக் கூறவேண்டுமாயின் 'நிலக்கிழார்கள்' மற்றும் 'பனையேறிகள்' என்ற இரு பெரும்பிரிவாகக் கூற முடியும். இந்த மரபுநிலைக் காலக்கட்டத்தைக் குறிப்பிடும் பொழுது இராபர்ட் ஹார்ட்கிரேவ் கூறுவது யாதெனில் "நாடார்கள் மத்தியில் ஒற்றுமை குறித்த நனவு என்பது இல்லாதிருந்தது" என்பதே ஆகும்.[viii] மேலும், நிலக்கிழார்கள் மத்தியில் காணப்பட்ட ஒரு அரசியல் விழிப்புணர்வு பனையேறும் நாடார்கள் மத்தியில் இல்லை என்பதும் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். தேரிக்காடுகளைத்தான் நாடார்கள் தங்களின் பூர்விகமாக அடையாளப்படுத்திக் கொண்டனர். அதற்கு அவர்கள் கொண்டிருந்த கதைப்பாடல்களே சாட்சியம் எனலாம்.

**ஒருமைப்பாட்டுக்காலம்**

இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கு முன்னர் ஐரோப்பிய மிசனரிகள், சமூகத்தில் மிகவும் பின் தங்கிய நிலையிலிருந்தவர்களைக் கண்டறிந்து அவர்களிடம் பணிசெய்யலாம் என்ற எண்ணத்தில் தென் தமிழகத்தில் பணி செய்யத் தொடங்கினர். அதன் விளைவாகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பக்காலக்கட்டத்தில் நாடார்கள் மத்தியில் கிறித்தவ சமயத்தழுவல் என்பது 'கூட்டம் கூட்டமாக' நடைபெற்றது. இதனையே ஹார்டுகிரேவ் 1840-களில் அதிகப்படியான மதமாற்றத்தைத் திருநெல்வேலி சந்தித்தது என்கிறார். இதில் குறிப்பிட வேண்டிய *கருத்து* என்னவென்றால், இதேகாலக்கட்டத்தில் வழங்கப்பட்ட கல்வி வாய்ப்பும் நாடார்க*ளுக்குப்* புதிய பொருளாதார வாய்ப்புகளைத் தேட வழி வகுத்தது.

போக்குவரத்து வசதிகள் அறிமுகமும் உறுதுணையாகவே இருக்கவே நாடார் வணிகர்களின் இடப்பெயர்வை அதிகப்படுத்தியது. தெற்கிலிருந்து அதிக எண்ணிக்கையிலான நாடார்கள் வடக்கு நோக்கி குறிப்பாக, இன்றைய விருதுநகர், மதுரை பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்து வாணிபம் செய்யத் துவங்கியவர்களுக்குத் தாங்கள் புதிய இடங்களில் சிறுபான்மைக் குழுக்களாக உணரத் தொடங்கியவுடன் பேட்டைகளை உருவாக்குகின்றனர். பொருள்களைப் பாதுகாக்க பேட்டைகளையும் கூடவே சமூக உறுப்பினர்களைப் பாதுகாக்க 'உறவின்முறை' என்ற அமைப்பையும் அதனை வலுப்படுத்த 'மகமை' என்ற நிதியமைப்பு முறையையும் உருவாக்குகின்றனர்.

**உறவின்முறை – மகமை**

நாடார் சமுகம் தமது சமுதாய நலன்களை ஒருமித்துப் பேணிக்கொள்ளவும் பிற சமூகத்தினரால் அவ்வப்போது ஏற்படும் ஆபத்துகளிலிருந்து தமது சமூக மக்களைப் பாதுகாக்கவும் திட்டம் இடப்பட்டது.[ix] ஆக தம் நலன்களில் அக்கறைகாட்டவும், வளர்க்கவும் அமைத்துக் கொண்ட நிறுவனமே "உறவின்முறை" ஆகும். உறவின் முறையை வளர்க்க அவர்கள் அமைத்த சிறந்த பொருளியற் கோட்பாட்டுத் திட்டமே "மகமை" என்பதாகும். மகமை என்பது தருமக்கொடை, தருமநிதி என்றும் அழைக்கப்படுகிறது.

உறவின்முறை என்ற சொல் ஒருவர் ஒருவருடன் வாழத்தலைப்பட்டனர் என்பதை வெளிப்படையாகக் காட்டுகின்றது. '**உறவின்முறை**' மற்றும் '**மகமை**' குறித்து பு. இராசதுரை, "உறவின்முறை, மகமை அமைப்புகளும் தமிழகத்தே இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே எழுந்தனவாகும்" என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.[x] கோவில்பட்டி *வட்டத்திலுள்ள* வைப்பாற்றிற்குத் தெற்கில் வாழ்ந்த நாடார்கள் தம்மை தக்ஷிணமாற நாடார் என்றும் வடக்கில் வாழ்ந்தவர்கள் உத்திர நாடார் எனவும் கூறிக் கொள்ளுகின்றனர். இதன்படியே தெற்கில் உள்ளோர் அமைத்த வர்த்தக தலங்களைத் தக்ஷிண மாற நாடார் மகமைப் பேட்டைகள் என்றும் வடக்கில் உள்ளோர் அமைத்தவற்றை உத்திர மாற நாடார் மகமைப் பேட்டைகள் என்றும் அமைத்துக் கொண்*டதன் மூலம்* அறிய முடிகிறது.

ஆக, உறவின்முறை அமைப்பு மிகப் பயனுள்ள ஒன்றாகக் கருதப்பட்டதால், நாடார்கள் செல்லுமிடங்களிலெல்லாம் இத்தகைய முறையைத் தொடர்ந்து வளர்த்தெடுக்கவே செய்துள்ளனர். பொருளாதார தளத்தில் தங்களை வளப்படுத்திக் கொண்ட நாடார்கள் சடங்கியல் தளத்திலும் வளப்படுத்த வேண்டி, மேல்நிலையாக்க நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டனர். இதனைத் தொடர்து தனது சமூகத்தின் தோற்றம் குறித்த விசயங்களைப் புராணாங்கள் வாயிலாக உருவாக்கினர். நாடார்களின் தோற்றம் குறித்த புராணாங்கள் ஏராளமாகக் கிடைக்கப் பெறுகின்றன. அவைகளில் ஏழு கன்னிமார்கதை, பத்திரகாளியம்மன் கதை, வலங்கையர் மாலை (அ) வலங்கைக்கும்மி / வலங்கைப்பாடல், வெங்கலராசன் கதை என்ற வடிவங்களில் அறியப்படும் நாட்டார் கதைப்பாடல்களும் குறிப்பிடத்தக்கவை. இறுதியாக, மேல்நிலையாக்க முயற்சியின் மூலம் தங்களைச் சத்திரியர்கள் என்றும் கூறிக்கொண்டனர்.

**பன்முக நிலைக்காலம்**

தெற்கிலிருந்து இடம்பெயர்ந்த நாடார் வணிகக் குழுக்களைப் போன்றே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மீண்டுமொரு இடப்பெயர்வு அறியப்படுகிறது. குறிப்பாக பண்டைய திருநெல்வேலி பகுதிகளிலிருந்து இன்றைய சென்னை, மதுரை பகுதிகளுக்குக் குடியேறுகின்றனர். இவை பெரும்பாலும் *1914*க்குப் பிறகே நடைபெறுகின்றது என்று அறிய முடிகின்றது.[xi] இவ்வாறு நடந்த இடம்பெயர்*வி*ன் விளைவால் நாடார்கள் சிறு சிறு குழுக்களாகவும் அதே சமயத்தில் பிற குழுக்களுடனும் தொடர்பில்லாத தன்மையிலேயே அவர்கள் காணப்பட்டனர். மண உறவுகள் தங்களின் பூர்வீகப் பகுதிகளோடு தான் ஆரம்பக்காலத்தில் கொண்டிருந்தனர்.[xii] பின்னர் மெதுவாக 'உறவின்முறை' முக்கியத்துவம் வலுப்பெற்றதும், புலம்பெயர்ந்த நாடார்களுக்கு உள்ளூர் அளவில் ஒரு அமைப்பும் (உறவின்முறை) அவைகளையெல்லாம் இணைக்கின்ற பொதுவான அமைப்பாக அதுவும் பேரமைப்பாக நாடார் மஹாஜன சங்கம் உருவெடுத்ததன் விளைவாகவும் புலம் பெயர்ந்த நாடார்களின் பூர்வீக ஊரின் தொடர்பானது மெதுவாகத் துண்டிக்கப்படுகிறது. ஆக, சாதியத்தின் புதிய நிலையாக்கமானது புலம்பெயர்ந்த பகுதிகளில் உருப்பெற்றது என்பதை மேற் கூறியவற்றிலிருந்து பெற முடிகின்றது. இக்காலக்கட்டத்தில் தான் அரசியல் ரீதியாக சமுதாயத்தின் பெயரை *"சாணான்" என்பதிலிருந்து* "சாணார்" *என்றும்; "சாணார்"* என்பதிலிருந்து "நாடார்" என்று மாற்*றியதும்* இப்பொழுதுதான் நடைபெறுகின்றது.

***III.* அமைப்பியல் மாற்றமும் சாதிய நிலைப்பாடும்**

மேலே விவாதித்த மூன்று நிலைக் காலக்கட்டத்தைப் பின்வருமாறு பொருத்திப் பார்க்கலாம்.

1. முதலாம் நிலையான மரபு நிலையில் சாதிக்கென்று எந்த அமைப்பும் இருந்ததாக அறிய முடியவில்லை. அமைப்பு ரீதியான ஒருங்கிணைவு என்பது இல்லாததைப் பார்க்கிறோம். சிதறிய நிலையிலேயே சமுதாயம் உணரப்படுகிறது.

2. இரண்டாம் நிலையான ஒருங்கிணைவு பெற்றக்காலத்தில் 'நாடார்' என்ற ஒற்றை அடையாளம் அவர்களுக்குத் தரப்படுகிறது. மரபு நிலையில் அறியப்பட்ட அவர்களின்

அகமணக்குழுக்களான ஐந்து பிரிவுகள் இப்பொழுது தற்காலிகமாக நீங்கி, 'நாடார்' என்ற ஒற்றை அடையாளம் பெறுகின்றது. மேலும் பொருளாதார நிலையிலான மாறுபாடுகள் இக்காலக்கட்டத்தில் தான் வலுப்பெற்றது எனலாம்.

*3.* மூன்றாவது கட்டமான பன்முக நிலைக்காலம் என்பது புவியியல் ரீதியிலான மாறுபாடுகளை ஏற்படுத்தியது எனக் கொள்ளலாம்.

எவ்வாறென்றால், இடம் பெயர்ந்த நாடார்கள் அரசு ஊழியர்கள், வணிகர்கள், தினக்கூலிகள் மற்றும் இன்ன பிறதொழில் முனைவோர்களாக அறியப்பட்டாலும் இடம் பெயர்ந்த நாடார்கள் வடக்கு நாடார்கள்/ உத்திர நாடார்கள் எனவும், தங்களது நிலத்திலேயே தொடர்ந்து இருந்தவர்கள் தெற்கு நாடார்கள் எனவும் அழைக்கப்படுகின்றனர். இதற்கு உறவின்முறை குறித்துக் கூறும் பொழுது பு.இராசதுரை அவர்கள் குறிப்பிட்ட 'வைப்பாறு' அடையாளம் என்பது இங்கு நினைவு கூர்வது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு புதிய 'உறவின்முறை' அமைப்புகள் உருவாகும் பொழுது அவை நகரின் புதிய பகுதியாகப் பார்க்கப்பட்டது. அதே நேரம் புவியியல் ரீதியான வட்டார அடையாளம் என்பது இங்கு மேலோங்குகிறது.

இங்கு குறிப்பிடப்படவேண்டியது என்னவென்றால், மேற்கூறிய மூன்று வடிவங்களும் ஒரு சமூகத்தில் தொடர்ச்சியாக நடைபெற வேண்டுமென்பது இல்லை. மரபு நிலையிலிருந்து பன்முக நிலைநோக்கி நகரவும் முடியும். ஆக, இங்கு சாதியானது இரண்டு நிலைப்பாடு பெற்றதாகப் பார்க்க முடிகின்றது. சாதியானது கிராமத்தில் கொண்டுள்ள நிலைப்பாடு, மற்றும் அதேசாதி, புலம் பெயர்ந்த பகுதிகளில் *கொள்ளும்* நிலைப்பாடு என்பது ஆகும். கிராமத்தில் இருந்த சாதியின் கொள்கை, மரபு என்பதுவரை முறைகளுக்குட்பட்டும், சடங்கியலுக்குட்பட்ட ஒன்றாகத்தான் காணமுடியும். அதுவே புலம் பெயர்ந்த பகுதிகளில் அதுவும் நகரமயமாக்கச் சூழலில் ஒரு குழுவாக மாறி அகமணக் குழுக்களின் ஆதிக்கம் குறைந்து இருப்பதைக் காணமுடிகின்றது. சாதி என்பது இங்கு ஒரு பல இனகுழுக்களைக் கொண்ட ஒரு பகுதியில் ஒற்றை அடையாளமாகத்தான் உருவெடுக்கிறது. உதாரணமாக, அமெரிக்காவில் 'இனம்' என்னும் அடையாளம், ஆப்பிரிக்காவில் 'பழங்குடிகள்' என்னும் அடையாளம்.[xiii] இவ்வாறு நாடார்களிடம் அடிப்படையிலேயே ஒருவித நெருக்கத்தையும், இறுக்கத்தையும் உருவாக்கிய சாதியமைப்பு, நகரமயச்சூழலில் தனது குழுக்களிடம் ஒரு சுய-நனவு நிலையை உருவாக்கி விட்டுச் செல்லுகின்றது.

நாடார்கள் மத்தியில் காணப்படுகின்ற சாதிய நடத்தைச்

சார்ந்த நடவடிக்கைகள் அதிகம் காணப்படும் பொழுது அவர்களின் மரபுநிலையான பூர்வீகம், வட்டாரம், சாதி என்ற நிலையில் இருப்பதையும், அகமணமுறை அதிகமாக ஆதரிக்கப்படுவதையும் காணமுடிகிறது. உதாரணமாக தென் மாவட்டங்களில் குறிப்பாக திருநெல்வேலி, கன்னியாக்குமரி, தூத்துக்குடி பகுதிகளில் வாழும் நாடார்கள் மத்தியிலுள்ள அகமணமுறை, பூர்வீகம், வட்டார நிலைப்பாடு. இதுவே உத்தர நாடார்கள் மத்தியில் நடத்தை சார்நிலையைவிட பொருளியல் நடவடிக்கையின் அதாவது வர்க்கநிலைப்பாடே முதன்மையாகிவிடுகிறது. ஆக, இங்கு சாதி நடத்தை முறையைத் தாண்டி, பொருளியல் நடவடிக்கையானது முதன்மைப் பெற்றுவிடுகிறது. *அது* புலம் பெயர்ந்த நாடார்களிடம் காணப்படும் பொருளாதார அளவுகோல் என்பது திருமணங்களில் முன்னிலைப்படுத்தப் படுவதைக் காணமுடிகிறது.

தென்பகுதி நாடார்கள் மத்தியில் அதாவது திருநெல்வேலி, கன்னியாக்குமரி, தூத்துக்குடி பகுதிகளில் காணப்படுகின்ற வரதட்சணைமுறை என்பது திருமணத்திற்கு முன்பே அனைத்தும் வழங்கப்பட்டுவிடும். ஆனால் அதுவே உத்திரநாடார்கள்/ வடக்கு நாடார்கள் என்று சொல்லப்படும் சிவகாசி, விருதுநகர், திருத்தங்கல், மதுரை, தேனி, சென்னை போன்ற பகுதிகளில் காணப்படும் வரதட்சணை முறைகளை ஆராய்ந்தோமென்றால் திருமணத்திற்குப் பின்னும் அது தொடர்கிறது. அதாவது, தவணை முறையில் தருவதாகவே இருக்கும். புலம் பெயர்ந்த

நாடார்களோடு திருமண உறவு மேற்கொள்ளுவதில் அதிக அக்கறைகாட்டுவதில் குறைந்தாலும் சாதி அடையாளம் என்பது குறைய வாய்ப்பில்லை என்பதைத்தான் காணமுடிகிறது. ஏனென்றால் 'உறவின்முறை' அமைப்புகள் உருவாகத் தொடங்கியதே நாடார்'என்ற ஒற்றை அடையாளத்துடன் என்ப*தே காரணம்.* இவ்வாறு உறவுமுறை, திருமணம் குறித்த வழக்காறுகளைப் பண்பாட்டு நோக்கில் ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுதும், மேற்கூறிய அமைப்பியல் மாற்றக் கூறுகளைக் கவனத்தில் கொள்ளும் பொழுதும் சாதியின் அடிப்படையான இயங்கியல் தன்மைகளையும், அதனைத் தொடர்ந்த சமூக அமைப்பில் ஏற்படும் மாற்றங்களையும் புரிந்து கொள்ளவாய்ப்புள்ளது.

**பின்குறிப்புகள்**

[1] S.N. Tripathy: 2005
[1]கீ. நாச்சிமுத்து: 2005
[1]நா. ஜகன்னாதன், 2007: 7-14
[1] G. Patrick: 2003: 66
[1]மு. இராமசந்திரன், உடன்குடி, தூத்துக்குடிமாவட்டம். (களப்பணித் தரவுகள்)
[1]பயோ. தங்கசாமி, 1993: 7 &ஆ. தசரதன், 2001: 17
[1] Robert L. Hardgrave, 1991: 265
[1]Ibid. 299
[1]பு. இராசதுரை, 1983: 93
[1]மேலதுபக்.97
[1] Robert L. Hardgrave, 1969: 95-97
[1]நா. சீனிவாசன், கல்பாக்கம் (சென்னை). (களப்பணித் தரவுகள்)
[1] J.C. Mitchell, 1974: 1-36

**பார்வை நூற்கள்/கட்டுரைகள்:**


**பு. இராசதுரை**, *உறவின்முறை: கல்லூரணி ஷத்திரிய நாடார்கள் உறவின்முறை பற்றிய ஒரு சமூகவியல் பார்வை*, விருதுநகர்: இளமாறன் பதிப்பகம், 1983

**ப.யோ. தங்கசுவாமி**, *குமாரசுவாமி நாடான்: வில்லுப்பாட்டுக் கதை*, சென்னை: தங்கம் பதிப்பகம், 1993

**ஜாய் ஞானதாசன்** (மூ.ஆ), பொன். கிருஷ்ணசுவாமி (தமிழில்), *ஒரு மறைக்கப்பட்ட வரலாறு: தென் திருவாங்கூர் மிஷனரி இயக்கம் மற்றும் மக்களின் விடுதலை சரித்திரம்*, மதுரை: இந்தியக் கல்விக்கழகம், 1998

**பொன்னீலன்**, *தெற்கிலிருந்து*, சென்னை: மக்கள் வெளியீடு, 2001

**அழகிய நாயகி அம்மாள்**, *கவலை*, பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், 2002 (இரண்டாம் பதிப்பு)

**தெ.வே. ஜெகதீசன்**, *பத்திரகாளியின் புத்திரர்கள்: வலங்கை-சாதி வரலாறு*, சென்னை: யுனைடெட் ரைட்டர்ஸ், 2004

**ச. பிலவேந்திரன்** (ப.ஆ), *சனங்களும் வரலாறும்: சொல்மரபின் மடக்குகளில் உறையும் வரலாறுகள்*, புதுச்சேரி: வல்லினம், 2004

**சி. ஜஸ்டின் செல்வராஜ்**, *மக்கள் இடம்பெயர்வும் வரலாறும்: கான்சாபுரம், பர்கிட்மாநகரம் கிராமங்கள் ஓர் ஆய்வு*, (அச்சிடப்படாத முதுகலைப்பட்ட ஆய்வேடு), பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் துறை, 2007

**நா. ஜகன்னாதன்**, *விருதுநகர் வரலாறு, தொகுதி I*, விருதுநகர்: அன்பு பயிற்சி நிலையம், 2007

**ஆர்.எஸ். ஜேக்கப்**, *பனையண்ணன்*, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2009

**டி. தருமராஜன்**, *தமிழ் நாட்டுப்புறவியல்: பெண்கள், கலைஞர்கள் & தெய்வங்கள்*, சென்னை: புலம், 2011

**பொன்னீலன்**, *தென்குமரி வட்டார வழக்குகள்*, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2013

**Robert L. Hardgrave**., JR., *The Nadars of Tamilnad: The Political Culture of a Community in Change*, Berkeley: University of California Press, 1969

**G. John Samuel** (Ed.), *The Dateless Muse: The Story of Venkalarajan*, Madras: Institute of Asian Studies, 1988

**J.C. Mitchell**, Perceptions of Ethnicity and Ethnic Behaviour: An Empirical Exploration, Tavistock, 1974

**John A. Jacob**, *A History of The London Missionary Society in South Travancore 1806-1959*, Nagercoil: Diocesan Press, 1990

**Robert L. Hardgrave**., JR., "Urbanization and the Structure of Caste" in *A Reader in Urban Sociology*, By M.S.A. Rao, Chadrashekhar Bhat & Laxmi Narayan Kadekar (Eds.), Hyderabad: Orient Longman, 1991. Pg.264-273

**Templeman, Dennis**, *The Northern Nadars of Tamil Nadu: an Indian Caste in the Process of Change*, Oxford University Press, 1996

**A. Thasarathan**, A Social-History of Manavira Valanadu, Chennai: Centre for Preservation of Tamil Palm-Leaf Manuscripts, 2001

**G. Patrick**, *Religion and Subaltern Agency: A Case Study of Ayya Vali – A Subaltern Religious Phenomenon in South Tiruvitankur*, Chennai: Department of Christian Studies, University of Madras, 2003

**Aafke E. Komter**, *Social Solidarity and the Gift*, Cambridge: Cambridge University Press, 2005

**C. Sarada Devi**, *The History of the Nadars*, Coimbatore: Ms.Vanathi Maheswaran. 2010

**Ulrike Schroder**, "No religion, but ritual? Robert Caldwell and The Tinnevelly Shannars", in *Ritual, Caste, and Religion in Colonial South India*, Michael Bergunder, Heiko Frese & Ulrike Schroder (Eds.), Delhi: Primus Books, 2010. Pg.131-160

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Justin Selvaraj C., (2021) Migration and Contemporary Migration seen in the Valangai Malai, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:445-452. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ச.புனிதா**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சி – 02

# முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் பழமொழிகளின் ஆளுமை

**ஆய்வுச்சுருக்கம்**

பழமொழிகள் ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக்குறிப்புகளாகும். நம் மக்கள் எதற்கு எதை பயன்படுத்த வேண்டுமோ, அதற்கு அதை பயன்படுத்தாமல், அதை வேறு ஒரு விஷயத்திற்கு பயன்படுத்துவார்கள். கிராமப்புறங்களில் ஒரு சில செய்கையை குறிக்கவும், அதன் மூலம் கருத்து சொல்லவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நம் முன்னோர்கள் பழமொழிகளைச் சொல்லி வந்தனர். அத்தகைய பழமொழிகள் தமிழ் இலக்கியத்தில் சிறப்புற்று விளங்கும் முக்கூடற்பள்ளில் ஆளுமை பெற்றுள்ளன. இதில் கதைத் தலைவனான பள்ளன் என்பவன் இரு மனைவிகளை மணந்து கொள்கிறான். இதனால் மூத்தப்பள்ளியின் ஏச்சுக்களுக்கும் பேச்சுக்களுக்கும் ஆளாகிய இளைய பள்ளயின் வீட்டிலேயே தங்கி விடுகிறான். இதனை அறிந்த மூத்த பள்ளி பண்ணையாரிடம் முறையிடுகிறாள். இருவரும் சந்திக்கும்பொழுது ஒவ்வொருத்தரும் தன்னுடைய ஊரின் சிறப்பினை பழமொழிகளால் பரிமாறிக்கொள்கின்றனர். பண்ணையாரின் மிரட்டலுக்குப் பயந்து பள்ளன் என்பவன் முறைப்படி திருமணம் செய்து கொண்ட மூத்த பள்ளியுடனே வாழ ஆரம்பத்துவிட்டான். இதனைப் முக்கூடற்பள்ளு இலக்கியத்தின் பாடல் வரிகளில் அறிந்து கொள்ள முடிந்தது.

**முன்னுரை**

தமிழ் இலக்கியத்தின் மூல ஊற்று நாட்டுப்புற இலக்கியம். நாட்டுப்புற இலக்கியம் தலைமுறை தலைமுறையாக வாய்மொழியாய் வழங்கி வருவனவாகும். இதனை ஆங்கிலத்தில் என்கின்றனர். இதற்கு நாட்டு மக்கள் அல்லது நாட்டுப்புற மக்களின் அறிவு அல்லது அவர்களைப் பற்றிய அறிவு எனப் பொருள்படும். பன்னெடுங்காலமாக இம்மக்களிடையே வளர்ந்து வரும் நாகரிகச் சின்னங்களைப் பற்றியது என்று பொருள் கொள்ளலாம். பல்லாண்டுகளாக மக்கள் பலரால் ஒரு சமுதாயத்தில் வாழையடி வாழையாக வழங்கப்பட்டு வந்ததே இந்தப் பழமொழி. இத்தகைய பழமொழிகள் முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் பயன்பட்டுள்ள விதத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பழமொழிகள் தோற்றம்**

> **“கல்தோன்றி மன்தோன்றாக் காலத்தே வாளொடு**
>
> **முன் தோன்றிய மூத்தக்குடி தமிழ்க்குடி”**
>
> **“வடவேங்கடம் தென்குமரி ஆயிடை**
>
> **தமிழ் கூறும் நல்லுலகம்”**

என்ற சிறப்பு நம் தமிழரையும் தமிழ் மொழியையும் சாரும் என்பர் அறிஞர் பெருமக்கள். அத்தகைய தமிழ்மொழி தோன்றிய பொழுதே பழமொழியும் தோன்றிவிட்டது எனலாம். பழமொழிகள் மக்கள் மனதில் தோன்றிய இனிய மலர்கள். பழமொழிகள் பழுத்த பட்டறிவின் அடிப்படையில் தோன்றிய அறிவுரையாகவும், சிந்தனையின் திரண்ட சாரமாகவும் விளங்கி வருகின்றன. திறவுகோலைக் கொண்டு பெட்டியைத் திறப்பது போல பழமொழிகளைக் கொண்டு ஒரு நாட்டின் பண்பாட்டு பெட்டகத்தைத் திறக்க இயலும். பாமரர் என்று தள்ளப்படும் பழமொழியாளர்கள் வரைந்தளிக்கும் வாழ்க்கைத் தத்துவம் வாய்மொழி இலக்கியத்தின் ஆற்றலை உணர வைக்கிறது.

"கதைகள் கூறி மகிழ்வது தொன்தொட்டுத் தமிழ்க்குடி மக்களிடையே இருந்து வரும் பழக்கமாகும். சங்க இலக்கியத்தில் பாரத இராமாயணக் கதைக்குறிப்புகள் உள்ளன. இக்காவியங்களுக்கு அடிப்படையே அவைகள் நூலாக எழுதப்படுவதற்கு முன்பு வழங்கிய கதைகளே எனலாம். அவை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டும் இருக்கலாம். கற்பனையில் உதித்தவைகளாகவும் விளங்கலாம். கதைகளைக் கூறிவிட்டு இறுதியில் "அதற்குத் தான் கூடி வாழணும்னு சொல்றது" என்று ஒரு பெரியவர் முடிப்பார். அவர் இறுதியில் சொன்ன நீதிச்சொற்கள், நாளடைவில் கதை பரவ பரவக் கூடவே பரவுகின்றன. பிறகு அந்தத் தொடரே வளர்ந்து 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற பழமொழியாக மலர்கின்றது. இடையே அந்தக் கருத்தை மொழிந்தவர்களும், தொடக்கத்தில் அதைச் சொன்னவர்களும் பழமொழியை உருவாக்குகிறார்கள்.

முதலில் ஒருவர் ஒன்றைச் சொல்ல, அவருக்குப் பின் வருகிற மக்கள் திரும்பத் திரும்ப அதைக்கூறி தேய்த்துத் தேய்த்துச் செதுக்கிச் செதுக்கி அதைப் பழமொழியாக உருவாக்குகிறார்கள். எனவே தான் பழமொழிக்கு ஆசிரியர் கூற இயலாது போகின்றது. இப்போதும் ஒரு பழமொழியைக் கூறிவிட்டு 'அந்தக் கதையாக இருக்கின்றது' என்று கூறுவார்கள். அதாவது அவர் சொன்ன அந்தப் பழமொழிக்குப் பின்னே பண்டைக்காலத்தில் ஒரு கதை இருந்திருக்கிறது என்பது பொருள் ஆகும். கதையின் பின்னே பழமொழி கருக்கொண்டு வளர்கின்றது. அதைப் போலவே பல பழமொழிகளுக்குப் பின்னையும் மக்களால் கற்பனையாகப் பல கதைகளும் புனையப்படுகின்றன."1 தமிழ் மரபின் தாக்கம் காரணமாகவும் பல்வேறு தமிழ்ப் பழமொழிகள் தோன்றியுள்ளன.

- பழமொழியைப் போல் மனதில் பாய்ந்து பதியக்கூடியது வேறு எதுவும் இல்லை.
- மணலில் முத்துகளைப் போலவும், சுரங்கத்தில் தங்கத்தைப் போலவும், சரித்திரத்தில் பழிமொழிகள் இருக்கின்றன.
- வியாபார உலகில் தங்க நாணயங்கள் எப்படியோ, அப்படிச் சிந்தனை உலகில் பழமொழிகள். இரண்டும் அளவில் சிறியவை. எல்லா மக்களிடத்தில் புழக்கத்தில் உள்ளவை.

பழமொழி என்பது ஏதாவது ஒரு செய்கையை குறிக்கவோ, ஒரு செயலுக்கு விளக்கம் தரவோ சொல்லப்படுகிறது. பழமொழிகள் அனுபவத்துடன் சேர்த்து, அறிவுரையும் சொல்லும். பழமொழியினைக் குறிக்கும் ஆங்கிலச்சொல் proverb என்பதாகும். இது proverblum என்னும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். பழமொழிகள் குறுகியவை. எளிதாக நினைவில் வைத்துக்கொள்ளக் கூடியவை. ஒரு பரம்பரையிலிருந்து அடுத்த பரம்பரைக்கு வாய்மொழியாக அனுப்பப்படுவையாகும்.

"பழமொழி எனப்படுவது உலகுக்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கிக் கூறுவது ஆகும். பழமொழி முழுமையாக இல்லாவிடினும் அதை விளக்கிக் கூறும்; போது முழுக்கருத்தும் வெளிப்படக் கூடிய வாய்ப்புள்ளது. பழமொழி தமிழில் பழமொழி, முதுமொழி, முதுசொல், சொல்விடை, நெடுமொழி, உலகமொழி, சொல்விடை என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.

gonkhop = goik + nkhop இதைப் பண்புத்தொகையாகக் கொண்டு பழமையான மொழி எனக்கூறலாம். gonkhop = gok; + nkhop உவமைத்தொகையாகக் கொண்டு பழம் போன்ற இனிமையான மொழி எனவும் கூறலாம்"2 பழமொழியானது காலத்தால் தொன்மையானது; சுவையினால் பழம் போன்றது; வினைவினால் பயனுள்ளது; வாயினால் மொழியப்படுவதாகும்.

**தமிழில் பழமொழியின் வேறு பெயர்கள்**

பழமொழியைக் குறிக்கத் தமிழில் பல சொற்கள் உள்ளன. அவையாவன, மூதுரை, தொல் கிளவி, கட்டுவாக்கியம், வழக்குச்சொல், நீதிமொழி, பெரியவன் சொல், பெரியவன் பழமொழி, பழைய வாக்கு, பழவார்த்தை, வழக்குச் சொல்,

முதுமொழி, வையகத்தார் வழக்கு, முதுசொல், பழஞ்சொல், முன்சொல், உலகந்தி, வழக்கு என்பனவாகும்.

**அறிஞர்களின் கருத்து**

- "பழைய மொழியே காலத்தால் பண்பட்டது. அவை, பழமையும் எளிமையும் இனிமையும் நிறைந்தவை. பழமொழிகளைக் கொண்டு மக்களின் பண்பாட்டையும், நாகரித்தையும் அறியலாம் என திருமதி. கிருஷ்ணா சஞ்சீவி பழமொழிக்கு விளக்கம் தருகிறார்.
- ரோஜாவிலிருந்து அத்தர் பிறந்தது போன்று வாழ்வின் சிறப்பிலிருந்து துள்ளித்தெறிந்த இரசம் தோய்த்த மாதுளை முத்துக்கள் பழமொழி என திரு.சுகி.என்.சுப்பிரமணியம் கூறுகிறார்.
- சீன நாட்டவர் பழமொழியைப் "பொது மக்களின் பேச்சு" என்பர். அரேபிய நாட்டவர் பழமொழியை "உணவுக்கு உப்பு எப்படியோ, பேச்சுக்குப் பழமொழி அப்படி" என்கின்றனர். பழைய சொற்கள் அறிவுக் களஞ்சியங்கள் என்றும் கூறும் அமெரிக்கா "இருளில் தீவர்த்திகள் எப்படி பயன்படுகிறது. அது போல பேச்சில் பழமொழிகள் பயன்படுகிறது என்று சொல்கின்றனர்.
- பழமொழிகள் அறிவின் வளர்ச்சியில் பிறப்பவை. சுருக்கம், தெளிவு, பொருத்தம், ஆகிய சிறப்புகளைப் பெற்றிருப்பவை. நாள் தோறும் இறந்து கொண்டிருக்கும் இவ்வுலகில் என்றும் இறவாமல் வாழ்கின்றன பழமொழிகள் என அரிஸ்டாட்டில் சுட்டிக்காட்டுகிறார்."3

**பழமொழியும் பொருளும்**

1."அகப்பைக் குறைத்தால் கொழுப்பை அடக்கலாம்

அகப்பையான இரைப்பைக்குச் செல்லும் உணவை அளவு மற்றும் திறனறிந்து குறைத்தால் மட்டுமே கொழுப்பை அடக்கலாம்.

2.உப்பு அறியாதவன் துப்பு கெட்டவன்

உணவில் அளவோடு உப்பு சேர்த்தால் பசியைச் சீராக்கும். ஜீரணிக்கும். அதிகப்பட்டால் உமிழ்நீரை அதிகரித்து குமட்ட வைக்கும்.

3.வாழை வாழ வைக்கும்

வாழைப்பழம் உடலைத் தேற்றும் வாழைக்காய் மந்தம் என்றாலும் அளவறிந்து சாப்பிட்டால் உடலுக்கு ஊட்டம் தரும். சிறுநீரகக் கல்லை வாழைப்பூ நீக்கும். சிறுநீரை வாழைத்தண்டு பெருக்கும்

4.கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது

கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி நிவாரணியாக செயல்படும்."4

**பழமொழியும் விளக்கங்களும்**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு சமுதாயத்தில் ஒரு பண்பாட்டில் உருவான நம்பிக்கைகளை, புத்திமதிகளை, எண்ணங்களை, கருத்துக்களை, அனுபவங்களை நறுக்குத்தெரித்தாற்போல நாலு வார்த்தைகளில் சொல்வதே பழமொழி. இது இலக்கிய நயமான சொற்களில் இருக்க வேண்டிய அவசியமில்லை. கிராமத்தான் சொற்களிலும் இருக்கலாம்.

"**திருநீறிட்டார் கெட்டார்; இடாதார் வாழ்ந்தார்"**

கடவுளின் திருநீற்றை அணிந்தவன் யாரும் கெட்டுப்போவதில்லை. இடாதவர்கள் யாரும் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை என்பது இதன் பொருளாகும்.

**"மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே"**

உண்மையிலே “மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே” என்பதே சரி. மண்குதிர் என்பது ஆற்று நீரின் சுழற்சியால் ஏற்படும் மணல்மேடுதான். இது பாறை போல் காட்சியளித்தாலும் அதன் மீது ஏறினால் அது நீரில் அமிழ்ந்து விடும். குதிர் என்பது குதிரை என திரிந்து விட்டது.

**“ஆயிரம் முறை பொய் சொல்லி கூட ஒரு கல்யாணம் பண்ணலாம்”**

ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணம் பண்ணலாம் என்பதல்ல. ஆயிரம் முறை போய் சொல்லி ஒரு கல்யாணம் பண்ணலாம். அதாவது நம் உறவினர்கள்,நண்பர்கள் ஆகியோருடன் நாம் பகைமைக் கொண்டு நம் வீட்டில் நடக்கும் கல்யாணம் போன்ற சுபதினங்களில் நாம் அழைக்காமல் இருப்போம். ஆனால் அவர்களை விட்டுவிடாமல் ஆயிரம் முறை போய் சொல்லியாவது அவர்களை அழைத்து நம் வீட்டில் திருமணம் நடத்த வேண்டும். அப்படி நல்ல நோக்கத்திற்காகச் சொல்லப்பட்ட பழமொழிகள் பின்னாளில் மருவி அல்லது மாறி இப்போது உள்ளதுபோல் ஆகிவிட்டது.

**“அடியாத மாடு படியாது”**

மாட்டின் கால்களுக்கு லாடம் அடித்தால் தான் அதனால் கடுமையான வேலைகளை செய்ய முடியும். மேலும்,

**“நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**

**ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**

**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**

**ஏது முதலிய பழமொழி என்ப”**(தொல்.பொரு.479)

என்று தொல்காப்பியம் பழமொழியின் நுண்மையான சிறப்பினை எடுத்துரைக்கிறது. அதாவது கருதிய பொருளை விளக்கும் வகையில் நுண்மை, சுருக்கம், தெளிவு, மென்மை ஆகிய இயல்புகள் விளங்கும் தன்மை உடையது பழமொழியாகும். தொல்காப்பியர் நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை ஆகிய இயல்புகளுடன் குறிப்பிட்டப் பொருளை காரணத்துடன் உணர்த்த வல்லது என பழமொழிக்கு வரையறை செய்கிறார். ஒரு கருத்தை உணர்த்துவதும், அது காரணத்துடன் அறிவுக்கு ஏற்றதாகவும் நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை உடையதாகவும் இருக்க வேண்டும். “கூரியதாய்ச் சுருக்கி விழுமியதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்தப் பொருளை முடித்தற்கு காரணமாகிய பொருளினைக் கருதுவன முதுமொழி என்ப” எனப் ரோசிரியர் பழமொழிக்கு விளக்கம் தருகிறார்.

**பழமொழிகளின் சிறப்பு**

**“நன்று செய் மருங்கில் தீது இல் என்னும்**

**தொன்றுபடு பழமொழி”(அகம்:101)**

என்று அகநானூறு தான் முதலில் ‘பழமொழி’ என்ற சொல்லைக் குறிப்பிடுகிறது. ‘தொன்றுபடு பழமொழி’ என்பதால் நூல் எழுதப்பட்டச் சங்க காலத்திற்கு முன்னரே பழமொழி வழக்கில் இருந்ததை இவ்வடிகள் உணர்த்துகின்றன.

மேலும்,

**“பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்**

**வாயே யா முதல் வாய்த்தனம் தோழி” (அகம்.66)**

என்ற தொடரின் வழியாகப் பழமொழி பொய்க்காது என்ற உண்மையைக் கூறுகின்றது.

**“இரக்குங்கால் முகனும் தாம்**

**கொடுக்குங்கால் முகனும் வேறாதல்” (கலித்தொகை)**

என்ற கலித்தொகைப் பாடல் அடிகளின் கடன் பற்றிய பழமொழி இடம் பெற்றுள்ளது.

பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார் 'பழுமரம் உள்ளிய பறவை போல' என்ற பழமொழியைக் கையாளுகின்றார். இதே பழமொழி உருத்திரங்கண்ணனாரின் பெரும்பாணாற்றுப்படையிலும் மாங்குடி மருதனாரின் மதுரைக் காஞ்சியிலும் காணப்படுகிறது. அவை,

**"தண்கடல் வரைப்பிற் தாங்குநர்ப் பெறாது**

**பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்**

**பழுமரந் தேரும் பறவை போலக்**

**கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்"(பெரும்.18-21)**

**"பழுந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்**

**கொழுங்குடிச் செல்வரும் பிறகு மேஎய"(மதுரை.57:6-7)**

இத்தகைய பழமொழிகள் பள்ளு இலக்கியத்தில் ஆளுமை செய்வதே காண்போம்.

**பள்ளர்களின் பெருமைகள்:**

மருதூரில் வாழ்கின்ற இளைய பள்ளியானவள் வயலில் இறங்கி நாற்று நடவு செய்தால் ஒரு போத்துக்காகச் (போகம்) செய்த பயிரில் ஐந்து போகம் விளைச்சல் கிடைக்கும் என்று பெருமிதம் கொள்கிறாள்.

**"பள்ளிமரு தூரிளையாள்**

**சோதிமுக மள்ளருக்கே தோன்றிவய லுற்றுநட்ட**

**போதிலொரு பூவில்ஐந்து பூவும் பயிராமே" (பாடல்.9)**

இவளைப் போலவே மூத்தப்பள்ளியும்,

**"அத்தனை காலமுந் தொட்டு**

**இத்தனை காலமுங் கண்டு**

**அடியடி வாழையான**

**குடியில் வந்தேன்"(பாடல்.13)**

என்கிறாள். அதாவது தன்னுடைய குடும்பத்தின் பழமையான பரம்பரையை பழமொழி வாயிலாக எடுத்துரைக்கிறாள். இத்துடன் பள்ளனோடு தனக்குள்ள உறவு பற்றிக்கூற வருகையில்,

**"பத்திலே பதினொன்றாக**

**வைத்தா னில்லை குடும்பன்**

**பண்டே சரடு கட்டிக்**

**கொண்டான் என்னை"(பாடல்.13)**

என்று தன் பெருமையை எடுத்துரைக்கிறாள்.

**மழைக்குறி**

மழைப்பெய்வதற்கான அறிகுறிகள் தென்படுவதால், அங்கு வாழக்கூடிய பள்ளர்கள் அனைவரும் இரவு நேரம் என்றும் நள்ளிரவு நேரம் என்றும் யோசனை செய்யாமல் தாமிர பரணியில் வெள்ளம் வரும் போது இந்தக்கரைப் பக்கம், அந்தக்கரைப் பக்கம் என்று சிந்தனை செய்யாமல் புறப்பட்டுச் செல்ல வசதியாகத் தகுதியுள்ள படகினைப் படகுத் துறையில் பத்திரமாகக் கட்டி வையுங்கள். அடைப்பதற்குப் பயன்படும் படல், மழையில் நனையாமல் காத்து கொள்ளப் பயன்படும் தாழைமடல்களால் செய்யப்பட்ட குடை, கொங்காணி ஆகியவற்றை

எடுத்து வையுங்கள். கரைகளை அடைக்கப் பயன்படும் கழிகளை விரைவாக வாங்கி வையுங்கள். வெளிச்சத்திற்காகப் பயன்படும் துணி சுற்றப்பட்ட தீப்பந்தத்தையும், பந்தம் கொளுத்துவதற்கான விளக்கெண்ணையினையும் தயாராக வைத்திருங்கள் என்று தங்களுக்குள்ளேயே ஆலோசனைச் செய்து கொள்கின்றனர். இதனை,

**“இக்கரைக் காலிற் பொருநை**

**யக்கரைக் காலின் - மழைக்**

**கேமமின்றிச் சாம மின்றி**

**நாமல்லோ வோவோம்**

**----------பந்தமும் விளக் கெண்ணெயும்” (பாடல். 36)**

என்ற வரிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**பண்ணையாரிடம் முறையிடுதல்**

பள்ளன் பண்ணையில் வேலைச் செய்வதாகச் சொல்லிவிட்டு, இளையப்பள்ளியின் வீட்டிற்கு சென்று அங்கேயே தங்கி விடுகிறான். இதனால் பண்ணையில் வேலைகள் எல்லாம் அப்படியே தங்கிவிடுகிறது. இதனை கண்ணுற்ற மூத்த மனைவி பண்ணையாரிடம் எச்செயலையும் சரியான காலத்தில் செய்யாவிட்டால் பின் என்ன பாடுபாட்டாலும் அதனை நிறைவேற்ற முடியுமா? என்ற பழமொழியை முன்நிறுத்தி பள்ளனைப் பற்றி முறையிடுகிறாள்.

**“தூக்குணிப் பள்ளன் - ஏய்க்கிற ஆட்டத்தைத்**

**துக்குணிக் கேளும் - முக்காலுஞ் சொன்னேன்**

**காக்குங் காலணை – பார்க்கவுஞ் செய்யான்**

**காலஞ் செய்வது – கோலஞ் செய்யுமொ” (பாடல்.56)**

**மூத்தப்பள்ளியின் புலம்பல்**

**“தானுட்கை போலுஞ் - சளஞ்செய்து**

**மீனுக்கு வாலும் - பாம்புக்குத்**

**தலையையுங் காட்டி – எனக்காசை**

**வலையையும் பூட்டித்**

**தேனுக்குள் பாலாய் - அவள் மஞ்சள்**

**மேனிக்கு மாலாய்ப் - பணமெல்லாம்**

**சிந்தியே கெட்டான் - எனையின்று**

**சந்தியில் விட்டான்”(பாடல் - 87)**

அதாவது பள்ளன் இவ்வாறு செய்வதற்கெல்லாம் இளையபள்ளி உடந்தையாக இருக்கிறாள் என்றும், மாயம் செய்து மீனுக்கு வாலையும், பாம்புக்குத் தலையையும் காட்டும் விலாங்கு மீன்போல அவள் மேல் அன்பு வைத்துக் கொண்டு எனக்கும் ஆசை வலை விரித்தான். தேனும் பாலும் ஒன்றாய்க் கலந்தது போல இளைய பள்ளியின் மஞ்சள் நிற உடம்புக்கு மயக்கம் கொண்டு பணத்தையெல்லாம் செலவு செய்து கெட்டுப்போனான். என்னையும் தெருவுக்குக் கொண்டு வந்துவிட்டான். என் வீட்டில் காலைக் கூட வைக்க மாட்டான். ஆனால் அவளைக் கனவில் கூட பிரியமாட்டான் என்று பண்ணையாரிடம் தன் நிலைமையைச் சொல்லி புலம்புகிறாள். மேலும்,

**“ஆனைக் குட்டியைப் போல் - எருமையை**

**ஞானிச் செட்டி கைக்கே – பணம் பதி**

**னைஞ்சுக்குக் கொடுத்தான் - கொழுந்தியார்**

**குஞ்சுக்கிட் டெடுத்தான்**

**மீனைக் கொண் டளிப்பான் - கருவாட்**

**டூனைக் கொண் டொளிப்பான் - நான் சொன்னால்**

**வீம்புகள் அடிப்பான் - அவள் சொன்னால்**

**பாம்பையும் பிடிப்பான்" (பாடல்.89)**

யானைக் குட்டியைப் போல் இருந்த எருமையை ஞானிச் செட்டியிடம் பதினைந்து பணத்திற்கு விற்று அதில் கிடைத்த பணத்தை அவனுடைய கொழுந்தியார் குஞ்சு என்பவளுக்குச் சீர்வரிசை செய்துவிட்டான். அவளுக்கு மீனைக் கொண்டுபோய்க் கொடுப்பான். எனக்குக் கருவாட்டைக் கூடக் காட்டமாட்டான். நான் ஏதாவது சொன்னால் எதிர்வாதம் பேசி என்னைப் போட்டு அடிப்பான். ஆனால் அவள் சொன்னால் பாம்பைக் கூடப்பிடிப்பான் என்றும் புலம்புகிறாள்.

மேலும், பள்ளன் திட்டு வாங்குவதற்கென்றே பிறந்தவனோ? அவனுக்கு வெட்கம் என்பது சிறிது கூட இல்லை. பள்ளியின் இளமையில் மட்டுமே அவனது கவனம் இருக்கிறது. வயது கூடும் என் இளமை நலத்தையும் பறித்துக் கொண்டான். எல்லை மீறிப் போனபின் இனி என்ன பேச்சு வேண்டி இருக்கிறது? வயலில் உழவு செய்வதைப் பற்றிச் சற்று நினைத்துப் பார்ப்பதுமில்லை. என் மீது ஆசை கொண்டு கிளர்ச்சியாகக் குரல் எழுப்புவதும் இல்லை. தீயால் சுட்ட புண் ஆறிவடும். ஆனால் அவனால் நான் வெற்ற பழிச் சொற்கள் புண்ணாகப் புரையோடிப் போயிருக்கின்றன. அவனை மனதில் இருந்து ஒதுக்கிவிட்டேன். மரத்தில் விளைந்த கணுவை வெட்டினால் தான் போகும். அவன் பயப்படும்படி விடாமல் பிடித்து தொழுவத்தில் அடைத்து வையுங்கள் பண்ணைக்காரரே என்று புலம்புகிறாள். இதனை,

**"ஏச்சுக்குப் பிறந்தான் - வரவரக்**

**கூச்சத்தை மறந்தான் - இளையவள்**

**இளமையைக் குறித்தான் - முதிருமென்**

**வளமையைப் பறித்தான்**

**நீச்சுக்கு மேலே – நிலைப்பென்ன**

**பேச்சுக் கையாலே – உழச் சற்றே**

**நினைப்பதுமில்லை – எனைத்தேடிக்**

**கனைப்பது மில்லை**

**தீச்சுட்ட தாறும் - பழித்திடும்**

**நாச்சுட்ட தேறும் - அவனை முன்**

**சீயென்று போட்டேன் - நான் இனி**

**வாயொன்றுங் காட்டேன்**

**பேச்சிட்டுப் பாரும் - மரக்கணு**

**வாச்சிக்குத் தீரும் - பயப்படப்**

**பிடித்தது பிடியாய்க் - குட்டையில்**

**அடித்திடு மாண்டே" (பாடல்.90)**

என்ற பாடல் அடிகள் எடுத்துக்காட்டியுள்ளது.

**இளயைபள்ளியின் புலம்பல்**

**"பழிகாரி முக்கூடற் பள்ளி – சரடு செய்த**

**பள்ள ளென்றுமுகம் பாராமல்**

**வழியே போகுங் களவெல்லாம் - தலையின் மேல்**

**வலித்திட்டுப் பற்றுக் குறித்தாள்**

**கொழிய லரிசி யிட்டாலுங் - குப்பை கிண்டும்**

**கோழி என்பதைப் புதுக்கினாள்**

**அழியாத காசழியுமோ நான் - ஏது செய்வேன்" (பாடல். 94)**

பழிகாரியான முக்கூடலில் வாழும் மூத்தப்பள்ளி தாலிகட்டிய கணவன் என்று கூடப் பாராமல் எங்கிருக்கும் பழிகளையெல்லாம் உன் தலையில் சுமர்த்தி விட்டு உன்மேல் கொண்ட அன்பைக் காட்டிவிட்டாள். தீட்டப்படாத வளம்மிக்க அரிசியைப் போட்டாலும் கோழி கிளறித்தான் தின்னும் என்னும் பழமொழியை நிரூபித்து விட்டாள். செல்லாது என ஒதுக்கப்பட்ட காசு மீண்டும் செல்லுமோ? இனியா அவள் உன்னை ஏற்றுக்கொள்ளப் போகிறாள்? இனி நான் என்ன செய்வேண்டும் என்று இளையபள்ளி புலம்புவதாகப் இப்பாடல் அமைந்துள்ளது.

**பள்ளன் தேற்றுதல்**

**"முடுகவா ராசிய முண்டு – குண்டுணிக்காரி**

**மூத்த பள்ளி பார்க்க வருவாள்**

**நடுவே தெய்வஞ் சோதிச்சுதையோ – பண்ணை**

**நயினார்க்குஞ் செவிகண் ணாச்சே**

**கடுகநீ போய்விடு சும்மா – சகதியிலே**

**கல்லெறிந்த கதை யாக்காதே**

**வடுவந்தால் மறைக்கப் போமோ – வருவதெல்லாம்**

**வந்துதீரும் மருதூர்ப் பள்ளி"(பாடல்.95)**

இளையபள்ளியே என்னிடம் விரைந்து வருவாயாக, ரகசியம் ஒன்று இருக்கிறது. பொய் சொல்கின்றவளான மூத்தபள்ளி என்னைப் பார்க்க வருவாள். இதற்கு இடையில் கடவுள் என்னைச் சோதித்து விட்டான். பண்ணைக்காரருக்குக் காதும் கண்ணைப் போன்றது. நீ இங்கிருந்து விரைவாகப் போய்விடு. சகதியில் எறிந்த கல்போல அனைவருக்கும் நம் பழக்கத்தைத் தெரியப்படுத்திவிடாதே. காயம் பட்டால் அதனால் உண்டான தழும்பை மறைக்க முடியுமோ? வருவது வந்தே தீரும் என்று அவளைத் தேற்றுகிறான்.

**மூத்தபள்ளியின் வருத்தம்**

உன்னை மருந்திட்டு வசியம் செய்த கள்ளத்தனமான மருதூரில் வாழும் இளையபள்ளியை விட்டு நீ வந்த பின், திருந்துவதற்காக நான் சொன்ன வார்த்தைகளைக் கேட்கவில்லை. நான் என்ன சொன்னாலும் அதற்கு எதிராகத்தான் செயல்பட்டாய். பெருந்துன்பம் கொண்டு குழியில் அகப்பட்ட யானை போல மரத்தில் கட்டுண்டாய். அவரவர் செய்தவினை அவரவர்களைத் தண்டித்தே தீரும். பலிக்காமல் போகுமோ? என்று பள்ளனிடம் பேசுகிறாள். இதனை,

**"மருந்துக் கள்ளி மருதூரிற் பள்ளி**

**வடகரை விட்டு வந்த பிறகு**

**திருந்துப் பேசின வார்த்தையுங் கேளாய் நான்**

**தெற்கே பார்த்தால் வடக்கே நீ பார்ப்பாய்**

**பருந்தாட்டங் கொண்ட கொப்பத்தில் ஆனை**

**பட்டாப் போல் அகப்பட்டாய் மரத்தில்**

**பொருந்தத் தன்வினை தன்னைச் சுற்றும் விதி**

**பொய்க்குமோ சொல்லாய் மூக்கூடற் பள்ளா"(பாடல்.98)**

என்ற அடிகள் எடுத்தியம்புகின்றன.

**பள்ளினின் வேண்டல்**

முடிந்துபோன செயல்களைப் பற்றி எதற்காகப் பேச வேண்டும்? விருந்து உபசரித்தபின் விருந்தினர்களைத் தண்டிப்பவர்கள் உண்டா? சிறுமையான பேச்சுகளைப் பேசாதே. வாயில் கொண்ட நீரைக் குடித்தாலும் குடிக்கலாம். வெளியே உமிழ்ந்தாலும் உமிழலாம். அதுபோல்தான் நீ என்னை விடுவிப்பதும் விடுவிக்காமல் போவதும். பஞ்சில் பற்றிய நெருப்பு உள்ளிருந்து அதனை எரிப்பதுபோல் உன் மனதில் பழைய பகையை வளர்க்காதே. பண்ணைக்காரரிடம் கெஞ்சி மன்னிப்புக் கேட்டு விடுவிப்பாய் மூத்தபள்ளியிடம் பள்ளன் பேசுவது போல் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

**"மிஞ்சிப் போனதை ஏன்சொல்ல வேணும்**

**விருந்து விட்டபின் வெட்டினா ருண்டோ**

**கொஞ்சப் பேச்சுகள் சொல்லாதே வாய்த்தண்ணீர்**

**குடித்த லுங்கொப் புளித்தாலும் ஆமே**

**பஞ்சில் பற்றும் நெருப்புப் போல் நெஞ்சில்**

**பழம்பகை யின்னும் பற்றவை யாதே**

**கெஞ்சிப் பண்ணை நயினாரை மன்னிப்புக்**

**கேட்டுப் பாரடி மூக்கூடற் பள்ளி" (பாடல்.99)**

**பண்ணைக்காரரிடம் மன்னிப்புக் கேட்டல்**

**"தன்மத்துக் கிந்தப் பிழையைப் பொறும் எங்கள்**

**ஆண்டே – முலை**

**சாய்ந்தால் வயிறல்லோ தாங்க வேணும் பண்ணை**

**ஆண்டே**

**வன்மத்தைப் பார்த்தால் அவன் இலக் கல்லவே**

**ஆண்டே**

**மருதூரிற் பள்ளியால் வந்தபொல் லாப்புக்காண்**

**ஆண்டே"(பாடல். 104)**

தருமமாக நினைத்துப் பள்ளன் செய்த குற்றங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எங்களுக்குக் காவலாக இருக்கும் பண்ணைக்காரரே! முலை தளர்ந்து போனால் அதை வயிறுதான் தாங்கிக் கொள்ள வேண்டும். பள்ளன் செய்த குற்றங்களை மனதில் கொண்டு தண்டிக்க அவன் எதிரி அல்ல. தென் மருதூரில் வாழும் இளையபள்ளியால் ஏற்பட்ட குற்றம் தன் பண்ணைக்காரரே என்று தன் பள்ளனுக்காகப் பண்ணைக்காரரிடம் மூத்தபள்ளி மன்னிப்புக் கேட்கிறாள்.

**இளையபள்ளியின் பொறுமை**

**"உழக்கிற் கிழக்கு மேற்கோ**

**மூக்கூடற்பள்ளி – மறித்து**

**உன்னைக் கொண்டான் என்னைக் கண்டென்**

**னூரிலே வந்தான்"(பாடல்.155)**

உழக்கிற் கிழக்கு மேற்கோ மூக்கூடற்பள்ளி. நமக்குள் என்ன வேறுபாடு இருவருக்கும் அவன் கணவன் தானே, மறித்து உன்னைக் கொண்டான். பள்ளனின் மாமன் மகள் என்று உன்னை பிறருக்கு மணம் முடிக்கவிடாமல் தானே மணந்து கொண்டான். என்னை என் அழகைப் பார்த்து என் ஊருக்கு வந்து என்னுடன் தங்கிக்கொண்டான் என்று இளையபள்ளி மூத்தபள்ளியிடம் பேசுவதை இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது.

**நிறைவுரை**

வாய்மொழி இலக்கியங்களில் மிகப்பழமையான பழமொழிகள் மக்கள் மனதைப் பிரதிபலி;ப்பன. சமுதாயத்தின் அறிவினை வெளிப்படுத்துவன. அனுபவத்தின் சாரம், அதன் அடிப்படையில் எழுகிறது. குறுகிய வடிவமுடையது. மனிதன் நினைக்கின்றவை பழமொழிகளாக வெளிப்படுகின்றன. தினந்தோறும் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களின் திரட்டே பழமொழியாகும். அவை மக்கள் பேசும் மொழியில் அமைந்துள்ளன. பழமொழி என்ற சொல்லே மிகப் பழமையானவற்றை உணர்த்துவதாகும். பலருடைய அறிவையும் ஒருவரது நுண்ணுணர்வுகளையும் அறியமுடிகின்றது. மொத்தமாக அறிவின் சுருக்கமே பழமொழி என்றால் மிகையாகாது.

**சான்றெண் விளக்கம்**

1. எஸ்.சௌந்தர பாண்டியன், தமிழில் பழமொழி இலக்கியம், பக் - 15-17

2. இரா. சந்திரமோகன், ப.சரவணன், கொங்கு நாட்டாரியல் பழமொழி ப.31

3. மேலது. 32-34

4. எ.சோதி, பழிமொழிக்கதைகளும், பழமொழி விளக்கக்கதைகளும், பக்.23-25

**பார்வை நூல்கள்**

1. விசுவநாதன்.அ(உ.ஆ.,) **கலித்தொகை**
நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்
41-பி. சிட்கோ, இன்டஸ்ரியல்
எஸ்டேட்
அம்பத்தூர்
சென்னை
முதற்பதிப்பு – 2004

2. சந்திர மோகன்.இரா., **கொங்கு நாட்டாரியல் பழமொழி**
தூய சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை
முதற்பதிப்பு – 2007

3. சௌந்தர பாண்டியன்.எஸ் **தமிழில் பழமொழி இலக்கியம்**
தமிழினி பதிப்பகம்
67, பீட்டர்ஸ் சாலை, ராயப்பேட்டை
சென்னை – 14
முதற்பதிப்பு – 2004

4. **வேங்கடசாமி நாட்டார்.ந.மு.,** **அகநானூறு**
அமுத நிலையம் பிரைவேட் லிட்
சென்னை
இரண்டாம் பதிப்பு – 1997

5. **சோதி.எ.,** **பழமொழிக் கதைகளும் பழமொழி விளக்கக்கதைகளும்**
நன்மொழிப் பதிப்பகம்
16, கங்கை வீதி, வசந்த் நகர்
புதுச்சேரி – 605 003
இரண்டாம் பதிப்பு – 2011

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Punitha S., (2021) Influrence of Proverb in Mukkurdarpallu Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:453-463. Cauvery College For Women, Trichy.

**ச.சந்திரா மேரி**
ஆங்கில பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
வில்லிபத்திரி,
அருப்புக்கோட்டை ஒன்றியம்,
விருதுநகர் மாவட்டம் – 626109,

# பாரம்பரியம் போற்றும் பாட்டி வைத்தியம்

**ஆய்வுச் சுருக்கம்**

சமீபகாலமாக துரித உணவின் பயன்பாடு அதிகரித்து வருவதால் மாணவர்கள் அடிக்கடி நோய்வாய்படுதல் இயல்பாகி விட்டது. உடல் நலக்குறைவினால் படிப்பின் மீது ஆர்வம் குறைந்து காணப்பட்டது. கிராமங்களில் கூட பெற்றோர்கள் ஆங்கில மருத்துவத்தை நாடிச் செல்லும் அவல நிலை காணப்படுகிறது. இதனால் ஏற்படும் பக்க விளைவுகளும் மாணவர்களை அடிக்கடி பள்ளிக்கு விடுப்பு எடுக்கும் துயர நிலை ஆசிரியரை இந்த ஆய்வை மேற்கொள்ள உந்திதள்ளியது. பாட்டி வைத்தியத்தை மீட்டெடுக்க மேற்கொண்ட முயற்சிதான் இந்த ஆய்வுக் கட்டுரை. ஆய்வின் நோக்கத்திற்கு ஏற்ப இலக்கிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு தலைப்பானது உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கேற்ப தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அதனூடாகப் பெறப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் விடயங்கள் கலந்தாராயப்பட்டுள்ளன.

**முன்னுரை**

"உடம்பினை முன்னும் இருக்கென்று இருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே !"

-திருமூலர்

மன் + இதன் = மனிதன். மன் என்றால் நிலைத்திருப்பது , இதன் என்றால் இன்புற்றிருப்பது. அப்படியானால் மனிதன் என்ற சொல் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக வழங்கப்பட்ட சொல். ஆனால் இன்றைய மனிதனிடம் இன்பம் இல்லை. காரணம் நோய்.

நம் முன்னோர்கள் இயற்கை தாவரங்களை நோய்க்கான மருந்தாகப் பயன்படுத்தினர். அதுவே தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வந்தது. இதனைக் குடும்பத்திலுள்ள மூத்தவர்கள் எடுத்துச் சொல்லியதால் பாட்டி வைத்தியம் என்று பெயர் பெற்றது.இயற்கையிலிருந்து கிடைக்கும் தாவரங்களை மருந்தாகப் பயன்படுத்துவதால் இயற்கை வைத்தியம் என்று கருதப்படுகிறது.

இயற்கை வைத்தியம் இயற்கை நமக்கு அளித்த பரிசு. நாம் அன்றாட உணவில் நமக்கு அதன் மருத்துவ குணம் எதுவும் தெரியாமலே உட்கொண்டு அதன் மருத்துவ பலன்களை நாம் பெற, நம் முன்னோர்கள் அறிந்து இருந்தார்கள். ஆரோக்கியத்துடன் வளமாக வாழ்ந்தார்கள். இதில் மருந்து, அறுவை சிகிச்சை மற்றும் பக்க விளைவுகள் எதுவும் இல்லை. நமக்காக நம் பாட்டிமார் அளித்த கொடைதான் இது.

வீட்டில் நம் பாட்டிமார் நமக்கு சிறுவயதில் சொல்லிகொடுத்ததே இயற்கை வைத்தியம். அதுவே செவிவழிச் செய்திகளாகப் பெறப்பட்டு நமது முன்னோர்களின் வாழ்வில் ஒரு அங்கமாகத் தொன்று தொட்டு காலங்காலமாக வைத்திய முறைகளாக

இருந்து வந்துள்ளன. இன்றைய தனிக்குடித்தன வாழ்வில் பாட்டிமார்களே குடும்பங்களில் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

பாட்டிகள் நமக்கு எடுத்து கூறிய ஒவ்வொரு விஷயங்களும் அரிய மருத்துவப் பொக்கிஷங்களே. இயற்கையோடு இணைந்த்தே நம் உடல். நம் உடலுக்குள்ளேயே ஒரு மருத்துவச் சுழற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பொதுவாகப் பிறந்த குழந்தைகள் மலம் கழிக்கவில்லை என்றால் அதற்கு ஒரு வைத்தியம், குழந்தைகள் சிறுநீர் ஒழுங்காகப் போகவில்லை என்றால் அதற்கு ஒரு கைப்பக்குவம் என பாட்டிமார்கள் அடிப்படையில் மருத்துவர்களிடம் செல்லாமலே குழந்தைகளின் நலனைக் காத்து வந்தனர். முடியாத பட்சத்திற்கு தீராத வியாதி என்றால் மட்டுமே கிராமங்களில் ஆங்கில மருத்துவத்தை நாடுவார்கள்.

ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. குழந்தைகள் லேசாக இருமினாலே, ஏதோ மிகப்பெரிய வியாதியாகக் கருதி மருத்துவரிடம் அழைத்துச்சென்று விடுகிறோம். அதற்கேற்றாற்போல் புதிது புதிதாய் நோய்களும் உருவாகக் காரணங்கள் பல உள்ளன.

எனவே இயற்கையோடு இணைந்த பக்க விளைவில்லாத பாட்டி வைத்திய முறையை நான் மேற்கொண்ட ஆராய்ச்சியில் இருந்து இக்கட்டுரையில் கூற விளைகிறேன்.

**இலக்கியங்களில் பாட்டி வைத்தியம்:**

" நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

என நோயில்லாத தன்மையையே நம் முன்னோர்கள் மிகப்பெரிய செல்வமாக கருதினர். ஒரு நாட்டில் தட்பவெப்ப நிலைகளால் ஏற்படும் நோய்களுக்கு அந்தந்த நாட்டில் கிடைக்கும் மூலிகைப் பொருட்களைக் கொண்டு பாமர மக்கள் தம் பட்டறிவால் செய்து வந்த மருத்துவத்தை தொல்காப்பியர் இவ்வாறு கூறுகிறார்.

" வாயுறை வாழ்த்த வயங்க நாடின்

வேம்பும் கடுகும் பூபால வெஞ்சொல்"

இஃது வாயால் சொல்லப்பட்ட மருந்து என்பதாகும். காயப்பட்ட புண்ணுக்குப் பஞ்சு வைத்து கட்டும் மருத்துவ வழக்கும் அக்காலத்தில் இருந்தது என்பதாகும். இதனை

" பஞ்சியும் களையாப் புண்ணர்"

( 353, வரி.16)

என்று புறநானூறு கூறுகிறது. பழமொழி நானூறு என்ற நூலில் புழைக்கடைப் பச்சிலை பற்றி ஒரு பாடல் உள்ளது.

" அல்லல் ஒருவற்கு அடைந்தகால் மற்றவர்க்கு

நல்ல இளைகள் எனப்படுவார் – நல்ல

வினைமரபின் மற்றதனை நீக்கு மதுவே

மனைமரம் ஆய மருந்து" - (பா.53)

அக்காலத்தில் வீட்டுக்கொல்லைப் புறத்தில் மூலிகைச் செடிகளை வைத்து வளர்த்தார்கள் என்பது இப்பாடலிலிருந்து புலனாகிறது.பழந்தமிழர் மூலிகைகளைக் கொண்ட மருத்துவ முறைகளை நன்கு அறிந்திருந்தனர் என்பதை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா ஊரெடுத்தக் காதை 43,44 ல் கூறியுள்ளார்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களான திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் ஆகிய மூன்றும் தம் பெயரிலேயே மருத்துவ குறிப்புகளைக் கொண்டு நாட்டு மருத்துவ நூல்களாகத் திகழ்கிறனர். மக்களிடையே நீரழிவு நோய் பெருகிவிட்ட இக்காலச் சூழ்நிலையில் நெல்லிக்காய் அருமருந்தாகப் பயன்படுகிறது. அதற்கு

வாழ்நாளைக் கூட்டும் மருத்துவக் குணம் அதிகம். அதனால் தான் அதியமான் அவ்வைக்கு நெல்லிக்கனி கொடுத்தார்.

" உன்னுடைய சாவைக் கூடக் கருதாமல் நீண்டநாள் வாழ வேண்டும், என்று அதை எனக்குக் கொடுத்தாயே"

என்று அவ்வை பாட்டி அதியமானை புகழ்கிறார்.

( (புறநானூறு) 91: 6-9)

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாஅது

மருந்தாய்ந்து கொடுத்த அறவோள்" ( நற் – 126)

என்று நம் பாட்டி மருத்துவச்சியை புகழ்கிறது நற்றிணை பாடல்.

சங்கப்புலவர் மருத்துவர் தாமோதரனார் திருவள்ளுவமாலையில் 11 ஆம் பாடலில் சீந்திற் சருக்கரையும் சுக்குப்பொடியும் தேனுங்கலந்து மோந்தால் தலைக்குத்து நீங்கும் என்பதை இவ்வாறு பாடுகிறார் பாவாணர்.

"சீந்தினீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்

மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்...."

-திருவள்ளுவமாலை செய்யுள் : 11

திருவள்ளுவர் திருக்குறளில் மருந்து என்ற அதிகாரத்தில் முறையான, சீரான, நெறிப்படுத்தப்பட்ட உணவு உண்பது பற்றி கூறுகிறார். புகை, மது போன்ற கெட்ட உணவுகளைத் தவிர்க்குமாறு அறிவுறுத்துகிறார்.

**ஆன்மீகத்தில் பாட்டி வைத்தியம்:**

" கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்"

என்று கருதி வாழும் பெண்களுக்கு உண்ணா நோன்பின் மகத்துவத்தை எடுத்துரைக்க சோம வார விரதம் இருந்தால் கணவனுக்கு நல்லது என்று கூறி அறிவியல் உண்மையை உட்புகுத்துவது நம் ஆன்மீகம்.

" பூமி தன் கனியை தரும்; நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு அதில் சுகமாய் குடியிருப்பீர்கள்" – லேவி 25.19

என்று பைபிள் கூறுகிறது.

நமது உடலில் சேரும் அழுக்குகள், கழிவுகளை வெளியேற்றவும் உடல் தூய்மையடையவும் நோய் வரும் முன் காப்பதற்கும் தான் ஒவ்வொரு மாதத்திலும் சஷ்டி, கார்த்திகை, ஏகாதசி, அமாவாசை,பௌர்ணமி போன்ற நாட்களை ஆன்மீகத்தின் அடிப்படையில் விரத நாட்களாக்கினார்கள் நம் பாட்டிமார்கள்.

**மனிதனுக்கு ஏற்படும் பொதுவான நோய்கள்:**

நீரழிவு, சிறுநீரகக்கோளாறு, ரத்த அழுத்தம், ஆஸ்துமா, புற்றுநோய், மாரடைப்பு, நரம்புத்தளர்ச்சி, தைராய்டு, உடற்பருமன், கொலஸ்ட்ரால், மூட்டுவலி, ஆண்மைக்குறைவு,இருமல் , விக்கல் , நெஞ்சு சளி, தலைவலி, தொண்டை கரகரப்பு, வாயு தொல்லை, வயிற்றுவலி, சரும நோய்கள்,மூக்கடைப்பு, கண் எரிச்சல், உடல் சூடு, பற்கூச்சம், வயிற்றுக்கடுப்பு, கபம், தாய்ப்பால் சுரக்காமை, தலைக்குத்து போன்றவைகளாகும்.

**ஒற்றைச் சொல்லில் பாட்டி வைத்தியம்:**

ஆண்மைக் குறை நீங்க முருங்கை.

இரத்தக்கொதிப்பிற்கு அருகம்புல்.

காமாலைக்கு கீழாநெல்லி.

சிறுநீர்க் குறைபாடு போக்க பீர்க்கங்காய்.

சிறுநீரகக் கற்களை நீக்கும் வாழைத்தண்டு.

நினைவாற்றல் பெருக அரசு.

மார்புச்சளிக்கு தூதுவளை.

மாரடைப்புக்கு மாதுளம்பழம்.

முடி உதிர்வதைத் தடுக்க புடலங்காய்.

முகப்பொலிவிற்கு திராட்சைப்பழம்.

மூட்டு வலிக்கு முடக்கறுத்தான்.

மூல நோய்க்கு சப்போட்டாப்பழம்.

புற்றுநோய்க்கு சீத்தாப்பழம்.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் கீழ்கண்டவாறு உணவு உண்ண பாட்டி சொன்ன வைத்தியத்தை இயற்கை வைத்தியம் இப்படியாக கூறுகிறது.




**நெஞ்சு சளி**

தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுட வைத்து ஆர வைத்து நெஞ்சில் வைக்க சளி குணமாகும்.

**தலைவலி**

ஐந்தாறு துளசி இலைகளும், சிறு  துண்டு சுக்கு, 2 இலவங்கம் நன்கு அரைத்து நெற்றியில் பற்றுப்போட்டால் தலைவலி நீங்கும்.

**தொண்டை கரகரப்பு**

சுக்கு, பால், மிளகு, திப்பிலி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து பாலில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.

**வாயுத்தொல்லை**

வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில் உட்கொண்டால் வாயுத்தொல்லை நீங்கும்.

**வயிற்றுவலி**

வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் கலந்து குடிக்க வயிற்றுவலி நீங்கும்.

**சரும நோய்கள்**

கமலா ஆரஞ்சு தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து உடம்பில் தேய்த்துக் குளித்தால் சரும நோய்கள் நீங்கும்.

**மூக்கடைப்பு**

மஞ்சளை சுட்டு மூக்கில் வைத்து நுகர்ந்தால் மூக்கடைப்பு நீங்கும்.

**கண் எரிச்சல், உடல் சூடு**

வெந்தயத்தை இரவில் ஊறவைத்து வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடல் சூடு, கண் எரிச்சல் போயே போய்விடும்

**பற்கூச்சம்**

புதினா விதையை வாயில் போட்டு மென்று கொண்டிருந்தால் பற்கூச்சம் போய்விடும்.

**வயிற்றுக்கடுப்பு**

புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும் வெண்ணையும் சேர்த்துக் குடித்தால் வயிற்றுக்கடுப்பு நீங்கும்.

**கபம்**

வால்மிளகின் தூளை ஒரு சிட்டிகை தேனில் குழைத்து சாப்பிட கபம் நீங்கும்.

**தாய்ப்பால் சுரக்க**

அரிசியுடன் வெந்தயத்தை சேர்த்து கஞ்சியாக்கி காய்ச்சி பருகி வந்தால் தாய்ப்பால் சுரக்கும்.

இந்த கணிணி காலத்தில் கூட கலியுகத்தில் கொசுக்கள் மூலம் பரவிய டெங்கு காய்ச்சலுக்கு ஆங்கில மருத்துவ முறை கையை விரித்த நேரத்திலும், பாட்டி வைத்தியம் மூலம் நிலவேம்பு கசாயம் இலவசமாக விநியோகம் செய்து காய்ச்சலை கட்டுக்குள் கொண்டு வந்தனர். கால்நடைகளை வாட்டி வதைத்த கோமாரி நோய்க்கும் கூட மூலிகை மருந்தே ஆறுதலாக அமைந்தது.

**முடிவுரை:**

வெளிநாட்டு குப்பை உணவைத் தவிர்த்தால், தொப்பை இல்லாத வாழ்க்கை வாழலாம். பாரம்பரிய உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பாட்டி வைத்தியம் பாரம்பரிய முறைப்படி வாழவே பரிந்துரைக்கிறது. பாட்டி வைத்திய முறை மீட்டெடுக்கப்பட வேண்டும். அது காலத்தால் அழிக்க முடியாத பொக்கிஷம். பாரம்பரியத்தோடு விஞ்ஞானமும் சேர்ந்தால் வெற்றி நிச்சயம்.

"தாத்தாக்களை விடச் சிறந்த ஆசிரியர்கள் இல்லை

பாட்டிகளை விடச் சிறந்த மருத்துவர்களும் இல்லை."

**துணைநூல் பட்டியல்:**


1. உலக நல்வாழ்வு ஆசிரமம், கல்யாணிபுரம் சிவசைலம் , ஆழ்வார்குறிச்சி. அம்பாசமுத்திரம் வட்டம். தென்காசி மாவட்டம்.

2. திருமதி. சீ. பாலம்மாள் பாட்டி, வில்லிபத்திரி, அருப்புகோட்டை ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.

3. தொல்காப்பியம் – சேனாவரையனார்.

4.புறநானூறு – சங்க இலக்கியங்களுக்கு விளக்கவுரை

- முனைவர். பிராபாகரன்

5. பழமொழி நானூறு – அடியார்க்கு நல்லார் உரைதிறன்

6.சிலப்பதிகாரம் – இந்திரவிழா ஊரெடுத்த காதை

7. திரிகடுகம் – உரையாசிரியர். பாலசங்கர். எம்.ஏ , பி. எட்

8.ஏலாதி – Tamil e Book Org

9. சிறுபஞ்ச மூலம்- தமிழ் விக்கிமூலம்

10. பழமொழி – கிராமத்து பழமொழிகள் – திருநாவுக்கரசு

11. நற்றிணை – தமிழிணையம் மின் நூலகம்

12. திருவள்ளுவ மாலை - விக்கிபீடியா

13. பைபிள் – லேவியராகமம்

14. திருக்குறள் – தங்க. பழமலை

15. இயற்கை உணவின் அதிசயம் ,ஆரோக்கிய உணவின் ரகசியம்

- பேராசிரியர்.டாக்டர். மூ. ஆ. அப்பன், இயற்கை உணவு ஆராய்ச்சியாளர்.

16. டாக்டர். கௌசல்யா , BSMS., MD (Sitha) , MD (alternate Medicine),

சுபா கிளினிக் ,விருதுநகர்



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Chandramary S., (2021) Traditionally popular Grandma’s Remedial Treatment, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:464-469. Cauvery College For Women, Trichy.

**Mrs. Rajane Uthayasegaran,**
Head Teacher,
Coventry Tamil Welfare Association,
London

# நாட்டுப்புற இலக்கியம் காட்டும் தமிழர் அடையாளங்கள்

### முன்னுரை

நாட்டுப்புற இலக்கியம் என்பத மக்களின் இலக்கியம். அது தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூற முடியாது. ஒரு நாட்டின் வாழ்வையும் வரலாற்றையும குறைகளையும் நிறைகளையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். நாட்டுப்புற மக்களின் உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம். இவைகள் ஏட்டிலும் எழுத்திலும் பாட்டிலும் இடம் பெறாவிடினும் நம் நெஞ்சில் இருந்து மட்டும் நீங்காது நிற்கும். நாட்டுப்புறம் என்பது கற்காத கிராமியப் பகுதியையே குறிக்கும். இவர்களை கிராமத்தான், பட்டிக்காட்டான், பாமரன், நாட்டுப்புறத்தான் என பலவாறு பெயரிட்டு அழைக்கின்றனர். இவை அனைத்தும் கிராமப்புறங்களில் வாழும் மக்களை குறிக்கும். இவர்களைப் பற்றிய இலக்கியங்கள் வாய்மொழி இலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன.

இவ்வகை இலக்கியங்களுக்குத் தனித்த ஆசிரியரும் இல்லை. படிக்கின்ற வாசகனும் இல்லை. படிப்போரும் படைப்போரும் மக்களே. தலைமுறை தலைமுறையாக வளர்ந்த வருகின்ற தாய்மொழி இலக்கியங்கள். நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயல் நாட்டுப்புறவியல் ஆகும். தமிழ் மக்களின் நாட்டுப்ற புற வாழ்வியல் கூறுகளை ஆயும் இயலே தமிழர் நாட்டுப்புறவியல் ஆகும். இலங்கையில் இத்துறை தமிழா நாட்டாரியல் என்று பெரிதும் அறியப்படுகிறது. தமிழர் நாட்டுப்புற வழக்காற்றியல் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. தமிழரின் அன்றாட வாழ்வில் பெரும்பாலும் வாய்மொழியாக வழங்கி வந்த பாட்டுக்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள் ஆகியவையும் பார்த்துச் செய்தல் மூலம் பகிரப்பட்ட ஆடல்கள் , கூத்து, இசை, விளையாட்டுக்கள், வழக்கங்கள், கைத்தொழில்கள், நுட்பங்கள் மற்றும் கலைகள் ஆகியவையும் தமிழர் நாட்டுப்புறவியலில் அடங்கும். இவற்றில் சிலவற்றை நாம் தனித்தனியே நோக்குவமாயின்.

### நாட்டுபுறப் பாடல்கள்

மடியில் கண்விழித்து மரணத்தில் கண் மூடும் வரை மனிதனோடு நாட்டுப்புற மக்களோடு அவை விண்ணையும் மண்ணையும் விரித்து பாடுகின்றன. மலைகளும் பொழில்களும் அதில் நிழலாடுகின்றன. மனித மனங்கள் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. பிறந்த குழந்தையைத் தாலாட்டி தூங்க வைக்கும் தாலாட்டுப் பாடல்கள், கைதட்டி மகிழ்ச்சியைக் கொண்டாடும் கும்மிப்பாடல்கள், கோலாட்டப் பாடல்கள், தொழிற்பாடல்கள், காதல் பாடல்கள், சடங்குப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், என நாட்டுப்புறப் பாடல்கள் கிராம மக்கள் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் ஒன்று கலந்து அதன் வெளிப்பாடாகப் பாடப்படுகின்றது.

### நாட்டுப்புறக் கதைகள்

கதை சொல்வதும் கேட்பதும் மனிதர்களின் இயல்பு. மனித வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கதையாகிறது. மனிதனின் ஆசைகள், அவலங்கள், தேவைகள், விருப்பு வெறுப்புகள், கனவுகள், கற்பனைகள் அனைத்தும் கதைகளாகின்றன. வாழ்க்கையில் ஏற்பட்ட பாதிப்பு, நடந்த நிகழ்ச்சிகள், உயர்வு தாழ்வு மனப்பான்மை, அறமுரைத்தல் மகிழ்வூட்டல், வேடிக்கை, நீதிகளை எடுத்துரைத்தல், வாழ்வில் நடக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டல், தவறு செய்தவரை

திருத்துதல், இவை போன்ற பல கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கும். நாட்டுப்புறக் கதைகள் குறிப்பிட்ட ஒருவரால் எழுதப்படாதன.ஏட்டில் இடம்பெறாதன. வாய்மொழியாக வாழ்வன, உருவம் தேய்ந்தும் வளர்ந்தும் நிலையற்ற வடிவம் கொண்டது.

நீதிக் கருத்துக்கள், தீமையை அளித்தல் கருணை, உதவி செய்தல் தவறான நடத்தைகள், ஆசைகள், கோபம், பொறாமை போன்ற பண்புகளை வெளிப்படுத்துவதாகவும் இக்கதைகள் அமைந்திருக்கும். கதை மாந்தர்களாக சாதாரண மனிதர்கள் முதல் துறவிகள், கிழவிகள், கள்வர்கள், மந்திரவாதிகள், தெய்வங்கள், போன்றோர் கதை பாத்திரங்களில் வருவார்கள். இவர்களோடு பறவைகள் விலங்குகள் உயிரற்ற பொருட்கள் முதலானவை பேசுவது போலவும் அமைந்திருக்கும் இவையே நாட்டுப்புறக் கதைகள் எனப்படும்.

**பழமொழிகள்**

மூதோரிலிருந்து தோன்றிய மொழி பழமொழி ஆகும். நாகரிகம் வாய்ந்த மக்களிடமும் நாகரிகத்தில் முன்னேறாத இனக்குழு மக்களிடையிலும் சுருங்கிய வடிவம் கொண்ட உருவாக பண்புடைய அறிவுக் கூர்மையான பழமொழிகள் காணப்படுகின்றன.நினைப்பிற்கும் எட்டாத காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதைப் பழமொழியிலுள்ள மொழி என்னும் சொல் உறுதிப்படுத்துகிறது. பழமொழி எனப்படுவது உலகிற்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கி கூறுவது ஆகும். பழ மொழியானது வெளியில் கவனிக்கக்கூடிய சேகரிக்கக்கூடிய தொன்மை வாய்ந்த கருத்தாகும். இருப்பினும் எளிதில் புரிந்து கொள்ளக் கடினமானதும் ஆகும். தமிழில் பழமொழிக்கு, மூதுரை, முதுமை, மொழிமை, முன் சொல், முதுசொல், பழஞ்சொல் எனப்பல்வேறு பெயர்கள் உள்ளன. நாள்தோறும் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களின் திரட்டே பழமொழிகள் ஆகும். பழமொழிகள் அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தவை. அறிவின் சுருக்கமே பழமொழிகள் எனலாம். வாழ்க்கையில் உயிர்ப்பும் உணர்வுப்பண்பும் அறிவுப்பண்பும் பழமொழிகளில் கருவாக அமைந்த வாய்மொழி இலக்கியங்களில் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. பழமொழி சிந்தனைக்கு ஆற்றலுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெரும் துணையாக உள்ளது.

பல மொழிகளை உலகில் உள்ள அனைத்துச் சமுதாயங்களும் பயன்படுத்துகின்றன. அறக்கோட்பாடுகளை வலியுறுத்தவும், தவறு செய்யும் போது இடித்துரைக்கவும், சமுதாயத்தில் இதனைச் செய்யக்கூடாது. என்று கட்டளையிடவும், பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர். மக்கள் வாழ்வில் அனுபவித்த சாரம் என்பதால் மக்களிடையே அதற்கொரு செல்வாக்குண்டு. “பழமொழி பொய்யின்னா பழயதும் சுடும்” என்பதிலிருந்து மக்கள் பழமொழி மீது வைத்துள்ள நம்பிக்கை புலனாகின்றது.

**விடுகதைகள்**

விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது. மறை பொருளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டிய கதையே விடுகதையாகும். வினா எழுப்பும் வகையாகவும், விடைகொடுக்கும் தன்மையாகவும் விடுகதைகள் உள்ளன. தமிழில் புதிர்ப் பண்பை அடிப்படையாகக் கொண்டு எதிர்மறையில் பெரும்பாலும் விடுகதைகள் தோன்றுகின்றன. அறிவு ஊட்டுவதும், சிந்தனையை தூண்டுவதும், விடுகதையின் குறிக்கோளாகும். இது கதைக்கு ஆதாரமாகவும், செய்யுளுக்கு உயிராகவும், பொழுதுபோக்குச் சாதனமாகவும் உள்ளது. பெரியோருக்கும் சிறியவர்களுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துகிறது. விடுகதை என்ற சொல் வினைத்தொகையில் அமைந்துவிட்ட கதை, விடுகின்ற கதை, விடும் கதை என்று முக்கால பொருளையும் தருகிறது. விடுகதை என்ற சொல்லிலே ஒரு புதிருக்கான பொருள் அடங்கிக் கிடக்கிறது. புதிர் கொண்ட கூற்றே விடுகதையாகும். விடுகதை என்பது விடுவிக்க வேண்டியது பெயருக்கேற்ப அதில் புதிரும் அடங்கி இருக்கின்றது. அதை கண்டுபிடிக்கும் முயற்சி சிந்தனைக்கு ஒரு பயிற்சி. அறிவுக்கு உரைகல்லாகும்.

சிந்தனைக்குத் தூண்டுகோலாகவும் அது நிலவி வருகின்றது. கேள்வி விடுபவன் விடையை மனதில் வைத்துக் கொண்டு விடை கொடுப்பவனைத் திண்டாட செய்து அவனுடைய திண்டாட்டத்தைக் கண்டு மகிழ்வது இதன் நோக்கமாகும். நாட்டுப்புறங்களில் சிறுவர்கள், வயது முதிர்ந்தோர், கற்றோர், கல்லார் எனப் பேதமின்றி விடுகதை போடுவார். மாணவர்கள் பள்ளிக்கூடம் முடிந்த நேரங்களில் புதிர்கள் போடுவர். பெரியோர்கள் பொதுச்சாவடியிலம், அரசமரத்து மேடையிலும் உட்கார்ந்து பொழுது போக்கும் நேரங்களில் பொடியோடு போடுவது புதிர்கள் ஆகும். சிறுமிகள் பல்லாங்குழி ஆடும் போது நடுத்தர பெண்மணிகள் தங்கள் மச்சினிகளுக்கும், அண்ணிகளுக்கும் உறவு முறையாக வந்திருக்கும் காலங்களில் அவர்களைக் கேலி செய்கையில், மாப்பிள்ளைமார்கள் பண்டிகைகளுக்கு வந்திருக்கும் காலங்களில் விடுகதைகள் போடுவார். விடுகதைகள் சிந்தனைக்கு விருந்து ஆகின்றன, செயலுக்கு மருந்தாகின்றன. இவைகளே நாட்டுப்புற இலக்கியம் காட்டும் தமிழர் அடையாளங்கள் ஆகும்.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Punitha S., (2021) The Trace of Tamil people shown in Folk Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:470-472. Cauvery College For Women, Trichy.

**தமிழ் மணி புலவர் முனைவர் நிர்மலா சிவராசசிங்கம்**
பட்டதாரி தமிழ் ஆசிரியர்
சுவிஸ் பாடசாலை
சுவிட்சர்லாந்து

# புகலிட நாடுகளில் ஈழத்து தமிழர்களின் அடையாளங்கள்

புகலிட நாடுகளில் தமிழர் குடியேற்றம் பல்வேறு காரணங்களால் இடம் பெற்று உள்ளது .அதில் இலங்கையில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர் குடி பெயர்ந்தமைக்குக் காரணம் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனப் பிரச்சனை என்றே கூறலாம் .ஆரம்ப காலத்தில் அகதிகளாக அகதி முகாம்களில் தங்கி இருந்து தமக்கான வாழ்விடத்தையும் இருப்பதற்கான அனுமதி உரிமைகளையும் பெறுவதற்காகப் போராடினார்கள் .காலப் போக்கில் அவைகள் எல்லாம் கிடைத்த பின்பு மொழியை வாழும் நாட்டில் தமிழ் மொழியை வளர்க்க முன் வந்தனர்.

வாழும் இடங்களில் அயலில் வசிக்கும் நண்பர்களுடன் சேர்ந்து தமிழ்ச் சங்கம் உருவாக்கினார் . பற்பல இடங்களிலும் சங்கங்கள் உருவாகி பல்வேறு பெயர்களுடன் இயங்கத் தொடங்கின .இச் சங்கங்கள் தங்கள் இடங்களில் வாழும் சிறுவர்களுக்குத் தாய்மொழிக்கல்வி அவசியம் எனக் கருதி உதவி நிறுவனங்களின் உதவியோடு பள்ளிக்கூடங்களில் மாலை நேரத்தில் தமிழ்ப் பள்ளிகள் ஆரம்பமாகின .தாய் நாட்டில் கற்பித்த ஆசிரியர்கள் ஆரம்பத்தில் இலவசமாகக் கற்பித்தனர் .இவை மெல்ல மெல்ல விருட்சமாக வளரத் தொடங்கின .பாடசாலைகளில் ஆண்டு தோறும் தேர்வுகள் வைத்து வகுப்பேற்றங்களும் செய்யப்பட்டன .பள்ளிகள் எல்லா இடங்களிலும் இருப்பதால் போக்குவரத்துச் சிக்கல்கள் ஏதும் மாணவர்களுக்கு இருக்கவில்லை. இதனால் பல மாணவர்கள் ஆர்வமாக தாய்மொழியைக் கற்கத் தொடங்கினார் .

தாய்மொழிக் கல்வியோடு இசை, நடனம் போன்ற கலைகளும் வாத்தியக் கருவிகள் மிருதங்கம் .வயலின் ,வீணை போன்ற வகுப்புகளும் ஆரம்பமாயின .இவையும் தாய்மொழி வளர வித்திட்டன .ஆண்டு தோறும் ஆண்டு விழாக்கள் ,முத்தமிழ் விழா போன்ற விழாக்கள் சங்கங்கள் வைக்கத் தொடங்க அதில் பட்டிமன்றம் ,கவியரங்கம் ,இசை ,நடனம் நாடகம் போன்ற நிகழ்வுகள் வைத்தனர் .இவையும் தமிழர்களின் அடையாளத்தை பல்வேறு மக்கள் காண்பதற்கு ஏதுவாக இருந்தன .இவற்றை விட கலைகளில் போட்டி நிகழ்வுகள் பல்வேறு இடங்களில் நடைபெற்றன . தமிழர்களின் பண்டிகைகளைக் கொண்டாடுவதில் தமிழர்கள் மும்முரமாக ஈடுபட்டனர் .பொங்கல் விழா எல்லோரும் கூடி கொண்டாடுவதையும் காணலாம் அவற்றிலும் யாவரும் ஆர்வமாக கலந்து கொண்டனர் .

தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு' என்று தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும் தமிழருக்கும் உண்டு. காரணம் மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதனை விட எப்படி வாழக் கூடாது என்று வாழ்வியலை கற்றுக் கொடுத்த தமிழரின் பண்பாட்டு அடிச்சுவடுகள் இன்றும் உலகம் முழுவதிலும் தடம் பதித்து இருக்கிறது என்றால் உயர்ந்த சிந்தனைகளையும், உயர்வான எண்ணங்களையும் சமூகம் எனும் மணற்பரப்பில் விதைத்துச் சென்றிருக்கிறது என்று தானே அர்த்தம்.

புகலிட நாடுகளில் வேறுபட்ட கலாச்சாரம் பண்பாடுகளில் இணைந்து வாழ்ந்தாலும் தமிழர்கள் ஒன்றாக கூடும் விழாக்கள் .திருமண நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொள்ளும் போது தமது பாரம்பரிய ஆடைகளை பெண்கள் சேலை ,ஆண்கள் வேட்டி விரும்பி அணிந்தனர் . பாரம்பரிய உணவுகளை ஒன்றாக சேர்ந்து சமைத்து உட் கொண்டனர் .

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு

(அதிகாரம்:விருந்தோம்பல் குறள் எண்:86)

வந்த விருந்தினரைப் போற்றி, இனிவரும் விருந்தினரை எதிர் பார்த்திருப்பவன், வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான் என்பது போல புகலிட நாடுகளிலும் விருந்துக்கு வந்த அனைவரையும் அன்பாக கவனித்து உணவு கொடுத்து மகிழ்வாக அனுப்பி வைப்பார்கள் இவற்றைக் கண்டு மேலை நாட்டவர் வியந்தும் எம் உணவுகளை விரும்பியும் உண்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது .

தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல்.

குறள் 227:

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்

தீப்பிணி தீண்டல் அரிது.

தான் பெற்ற உணவை பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்பத் தமிழர்கள் இல்லத்துக்கு வரும் விருந்தினர்களின் மனம் மகிழ்வுறும்படி நடந்து கொள்வார்கள் இல்லம் தேடி வரும் விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்று அனிச்சப்பூ போல் வாடாமல் தேநீர் கொடுத்து உபசரிக்கும் பழக்கமும் தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறது .வீதியில் தமிழர்கள் ஒருவரையொருவர் கண்டால் வணக்கம் சொல்லும் மரபும் பல்வேறு நாடுகளில் இருக்கிறது .அதே போல நட்புடனும் அன்புடனும் அனைவரும் பழகினார்

குறள் 788:

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு.

உடைநெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக்காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

இன்பத்தில் மட்டுமல்ல துன்பத்தில் நண்பர்கள் மட்டுமல்ல அயலவர்கள் எல்லோரும் சேர்ந்து உதவி செய்யும் பழக்கமும் தமிழர்களின் அடையாளத்தைக் காட்டுகிறது,

ஆலயங்கள் பல இடங்களில் அமைத்தனர் .அங்கு தினமும் பூசைகள் , .சமய விழாக்கள் போன்றவையும் நடைபெற்றன .தேவார போட்டிகள் .திருக்குறள் மனனம் போன்ற போட்டிகளும் நடைபெறுகின்றன ..இவை எமது இளைய சமுதாயம் பக்தி கொள்வதற்கும் வழி அமைத்தன .ஆலயங்களில் பண்பாடுகள் கலாச்சாரங்கள் பேணப்பட்டன .பூசை முடிந்தவுடன் எல்லோருக்கும் உணவு வழங்கும் நிகழ்ச்சி மூலம் அனைவரும் ஒற்றுமையாகவும் ஒன்றாக கீழே அமர்ந்து உண்ணுதலும் எமது பண்பாட்டை அழியாமல் காக்கின்றன.

இணையவழித் தளங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் நவீன கவிதைகள் ,மரபு கவிதைகள் துளிப்பாக்கள் ,சிறுகதைகள், நாவல்கள் கட்டுரைகள் ,பழந்தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்தல் போன்ற பல்வேறு வகைப்பட்ட கோணங்களில் எழுதும் ஆற்றல்கள் அதிகரித்து வருகின்றனர் .அதனால் பல் வேறு வகையான நூல்களாகவும் மின்னிதழ்களாவும் வெளியிடுவதிலும் தமிழர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் . ஆகவே தமிழர்கள் இலக்கியத்துறையில் ஆழமாக தடம் பதித்து வருவதையும் காணக் கூடியதாக இருக்கிறது ..

தீதும் நன்றும் பிறர்தர வாரா எனும் உயரிய பண்பாட்டை உரக்கச் சொல்லியதும் தமிழினம் தான் . நாம் என்ன செய்கிறோமோ அது தான் நம்மிடம் திரும்பிவருகிறது. நாம் எதை விதைக்கிறமோ அது தான் முளைத்து நமக்கு பலன் கொடுக்கிறது. நல்லது நினைத்தால் நல்லதே நடக்கும். கெட்டது நினைத்தால்

கெட்டதே நடக்கும்; இது தான் வாழ்வியல் யதார்த்தம். ஆக நமக்கு நடக்கும் நல்லவற்றிற்கும், கெட்டவற்றிற்கும் பிறரைக் குறை கூறாதீர்கள்.அது உன்னிடம் இருந்து தான் முளைக்கப்படுகிறது என தமிழ்ப்பண்பாடு தான் கற்றுக்கொடுத்தது. அத்தகைய ஒழுக்கத்தோடு வாழ்பவர்கள் பலர் உள்ளனர் .மாறாக தீய வழியில் செல்பவர்களையும் அறிவுரைகள் கூறி திருத்துபவர்களும் இருக்கின்றனர் .இரு வேறு கலாச்சாரங்களுக்கு மத்தியில் வாழும் இளையோர்கள் சிலர் திசை மாறிச் சென்றாலும் உரிய பருவத்தில் திருந்தி தமிழர்களின் வாழ்வியலுடன் ஒத்துப் போவதையும் காணலாம்

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று ஒற்றுமையில் தமிழர்கள் ஒன்று கூடி வாழ்ந்தாலும் ஆங்காங்கே ஏற்றத் தாழ்வுகள் வேறுபாடுகளுக்கு ஊடாக சிற்சில இடங்களில் வெடிக்கத்தான் செய்கிறது .காலப் போக்கில் இவை மறைந்து விடவும் வாய்ப்பு இருக்கிறது .பழந்தமிழ் இலக்கியங்களிலும் இத்தகைய மோதல்கள் இருப்பதையும் காணலாம் .வள்ளுவனின் கருத்து

குறள் 409:

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்

கற்றார் அனைத்திலர் பாடு.

கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்விக் கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே.

ஆகவே எல்லோரும் கற்று உயர் பதவியில் இருந்தால் மோதல்களுக்கு வழியேதும் இல்லை.

மேலும் தமிழர்கள் வானொலி சேவைகள் ஆரம்பித்து அதன் ஊடாகவும் தமிழர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர் .கொரானா நோய் பரவும் இக் காலக்கட்டங்களில் இணைய வழி ஊடாக கவியரங்கம் ,பட்டி மன்றம் ,கருத்தரங்குகள் நூல் வெளியீட்டு நிகழ்வுகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளின் ஊடக தமிழர்கள் தடம் பதித்து வருகின்றனர்

தமிழர்களின் புகழ் இன்று உலகெங்கும் பேசப்பட்டு வருகிறது ,கைகளை வீசிக்கொண்டு புகலிட நாடுகளில்

தஞ்சம் புகுந்தாலும் இன்று தம் மொழியை ஓங்கச் செய்து புகழுடன் வாழ்கின்றனர் .

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று

(அதிகாரம்:புகழ் குறள் எண்:236)

ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழோடு தோன்ற வேண்டும்; அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்குத் தோன்றுவதைவிடத் தோன்றாமலிருப்பது நல்லது.

**ஆய்வுச் சுருக்கம்**

தலைப்பு - புகலிட நாடுகளில் ஈழத்து தமிழர்களின் அடையாளங்கள்

புலம் பெயர்ந்த காரணம்

ஆரம்பகால வாழ்வு

தாய்மொழி கற்றல்

கலைகள்

இலக்கியம்

பண்பாடு

**சான்றுகள்**

திருக்குறள் -86. 227 .778 , 409 ,236

மு.ஜெயமணிஉதவிப்பேராசிரியர்இராமசாமி தமிழ்க்கல்லூாரிகாரைக்குடி அவர்கள் தினமலரில் எழுதிய "தரணி போற்றும் தமிழர் பண்பாடு"கட்டுரை

தமிழ் ஆசிரியர் நிர்மலா சிவராசசிங்கம்

தமிழ்மணிப்புலவர் .

Doctor of Literature

சுவிற்சலாந்து

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Nirmala Sivarasasingam., (2021) Identities Ezha Tamilians in Refugee Countries, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:473-476. Cauvery College For Women, Trichy.

**வே. சிவக்குமார்**
உதவிப்பேராசிரியர்
அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
புதுச்சேரி

# தமிழிலக்கியத்தில் முல்லைத்திணை பொருளாதார வாழ்வில் பாலின வேறுபாடு: சு.தமிழ்ச்செல்வியின் 'கீதாரி' நாவலை முன்வைத்து

**ஆய்வுச்சுருக்கம்**

மனித வாழ்க்கைக்குப் பொருளே ஆதாரம். அதுவே பொருளாதாரம் என்ற சொல்லாக்கத்தின் அடிப்படையாகும். மக்களின் வாழ்க்கைத்தரம் பொருளாதாரத்தின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. மனிதன் சமூக மதிப்பீட்டைப் பெறவும் குடும்பத்தை வழி நடத்தவும் பொருளாதாரம் என்பது மிக முக்கியமானதாகும். சமுதாயத்தில் வாழும் மக்களைப் பல்வேறு காரணிகள் அடிப்படையில் பாகுபடுத்தும் நிலை உள்ளது. பொருளாதாரத் தேவைகளும் மாறுபட்டு அமைகின்றன. அத்தகையத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே அவை சமுதாயச் சிக்கல்களாக உருவெடுக்கின்றன. அச்சமுதாயச் சிக்கல்கள் நாவல்களில் பிரதிபலிக்கின்றன. சு.தமிழ்ச்செல்வி தனது நாவலான ' கீதாரி' நாவலில் திணை சார்ந்து வெளிப்படுத்தும் பொருளாதாரத் தன்மையினை வெளிப்படுத்துகிறார்.

ஐந்திணை அமைப்பியல் கொண்ட தமிழர்களின் வாழ்வியலில் தொல்காப்பியர் முன்வைக்கும் முல்லை திணை மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் சங்க இலக்கியக் குறிப்பினை காணமுடிகிறது.

ஊர் ஊராக கிடைபோட்டு நாடோடி வாழ்க்கை வாழும் ஆட்டிடையர்களின் பொருளாதார வாழ்வினைச் சுட்டுவதாக கீதாரி நாவல் அமைகிறது. வலசையில் பைத்தியக்காரப் பெண்ணொருத்தி சிவப்பி, கரிச்சா என்கிற இரட்டைப் பெண் குழந்தை பெற்றுவிட்டு இறந்துவிடுகிறாள். கரிச்சாவை இராமு கீதாரி - இருளாயி தம்பதியினர் தன் சொந்த மகளைப் போல வளர்க்கிறார்கள். வெள்ளைச்சாமி என்பவன் கீதாரியால் சிறுவயது முதல் எடுத்து வளர்க்கப்பட்டவன் கரிச்சா வெள்ளைச்சாமியை சித்தப்பா என்றே அழைத்தாள். கீதாரிக்கு வயதாகிவிட்டதால் வெள்ளைசாமிக்கு தனியாக கெடைகெட்டி அவனுக்கு உதவியாக கரிச்சாவை விட்டுவிட்டார். வெள்ளைச்சாமி, கரிச்சா இவர்களின் வாழ்க்கையானது ஆடுகளுடன் வாழ்வதோடு மட்டுமில்லாமல் இவர்களின் பொருளாதார வாழ்வும் ஆடுகளை நம்பியே அமைந்து விடுவதாக நாவலாசிரியர் சுட்டுகிறார். இதே நிலையினை சங்க இலக்கியத்திலும் காணமுடிகிறது.

**முன்னுரை:**

மனித வாழ்க்கைக்குப் பொருளே ஆதாரம். அதுவே பொருளாதாரம் என்ற சொல்லாக்கத்தின் அடிப்படையாகும். மக்களின் வாழ்க்கைத்தரம் பொருளாதாரத்தின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. மனிதன் சமூக மதிப்பீட்டைப் பெறவும் குடும்பத்தை வழி நடத்தவும் பொருளாதாரம் என்பது மிக முக்கியமானதாகும். சமுதாயத்தில் வாழும் மக்களைப் பல்வேறு காரணிகள் அடிப்படையில் பாகுபடுத்தும் நிலை உள்ளது. பொருளாதாரத் தேவைகளும் மாறுபட்டு அமைகின்றன. அத்தகையத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே அவை சமுதாயச் சிக்கல்களாக உருவெடுக்கின்றன. அச்சமுதாயச் சிக்கல்கள் நாவல்களில் பிரதிபலிக்கின்றன. சு.தமிழ்ச்செல்வி தனது நாவலில் திணை சார்ந்து வெளிப்படுத்தும் பொருளாதாரத் தன்மையினை இக்கட்டுரையில் காணலாம்.

**முல்லைத்திணை பொருளாதார வாழ்வு:**

"ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்

ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே"[1]

என்ற நூற்பாவின் வழியாக முல்லை நிலத்தில் ஆண்களை உணர்த்தும் திணைப்பெயராக ஆயர், வேட்டுவர் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார். இப்பெயர்கள் தொழிலின் அடிப்படையாகவும் அதன் வழியாக அவர்கள் அமைத்துக் கொண்ட வாழ்வினை வெளிப்படுத்துபவையாக உள்ளதினை அறியமுடிகிறது. ஆடு, மாடுகளை மேய்க்கும் தொழில் முல்லை நிலத்தவரின் தலையாய தொழிலாகும். இடையர்கள் ஆடுகளையும், மாடுகளையும் மேய்த்து அதில் இருந்து வரும் பொருள்களையே தங்கள் பொருளாதார வாழ்க்கைக்காண ஆதாரமாக் கொண்டனர் என்பதினை,

"படுமணி மிடற்ற பயநிரை ஆயம்

கொடு மடி உடையர் கோற் முகைக் கோவலர்

கொன்றை அம்குழலர் பின்றைத் தூங்க"[2]

என்னும் வரிகளில் வழியாக அறியலாம். மழையானது இடைவிடாது பெய்தமையால் இடையர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தனர். அதனால் தங்களுடைய காட்டை உழுதனர் என்பதினை,

"பழமழைக் கலித்த புதுப்புன வரகின்

இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை"[3]

என்று இடம்பெறும் அடிகளில், உழுத புன்செய் நிலத்தில் வரகுப் பயிரை விதைத்ததையும், விதைக்கப்பட்ட வரகானது நன்கு வளர்ந்து வந்ததையும், அறுவடை செய்யப்பட்ட கதிர்களின் இளந்தளிர்களை மான்கள் உண்ணுவதையும் காண முடிகிறது. முல்லை நில மக்கள் தரிசாகக் கிடக்கும் நிலத்தை உழுது, அவற்றில் புதுப்பயிர் செய்து மாலையில் வீடு திரும்பினார்கள். ஒரே நிலத்தில் ஆயர்கள் பலமுறை வரகு விதைத்தனர். பலமுறையும் வரகு முதிர்ந்த நிலையிலேயே காணப்பட்டது. இவ்வாறு சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை மக்களின் பல்வேறுவிதமான பொருளதார வாழ்க்கையினை காணமுடிகிறது.

**கீதாரி நாவலில் முல்லை வாழ்வியல்:**

ஊர் ஊராக கிடைபோட்டு நாடோடி வாழ்க்கை வாழும் ஆட்டிடையர்களின் பொருளாதார வாழ்வினைச் சுட்டுவதாக கீதாரி நாவல் அமைகிறது. வலசையில் பைத்தியக்காரப் பெண்ணொருத்தி சிவப்பி, கரிச்சா என்கிற இரட்டைப் பெண் குழந்தை பெற்றுவிட்டு இறந்துவிடுகிறாள். கரிச்சாவை இராமு கீதாரி - இருளாயி தம்பதியினர் தன் சொந்த மகளைப் போல வளர்க்கிறார்கள். வெள்ளைச்சாமி என்பவன் கீதாரியால் சிறுவயது முதல் எடுத்து வளர்க்கப்பட்டவன் கரிச்சா வெள்ளைச்சாமியை சித்தப்பா என்றே அழைத்தாள். கீதாரிக்கு வயதாகிவிட்டதால் வெள்ளைசாமிக்கு தனியாக கெடைகெட்டி அவனுக்கு உதவியாக கரிச்சாவை விட்டுவிட்டார்.

"ச்சூ...ச்சூ...த்தே...த்தே..." என்று ஆடுகளை வேகமாய் விரட்டிக் கொண்டிருந்தாள். கம்பால் தரையை அடித்து சிதறி ஓடிய ஆடுகளை வளைத்து ஓட்டினாள். ஆடுகளை "நீங்க நூத்தம்பது பேர் இருக்குறிய. நான் மட்டும் ஒண்டியாதான இருக்குறன். மின்னாடி போறாத பாக்குறதா பின்னாடி வரத்த பாக்குரதா? பொழுது வேற பேயிட்டு இருட்டுரதுக்குள்ள ஓங்களயெல்லாம் கொண்டுபோயி பட்டில அடைக்க வேண்டாமா? அதுக்கு மேல வெளக்கு கொளுத்தி அடுப்பு மூட்டி எப்ப சோறு, கொளம்பு ஆக்கி திங்கிறது என்று ஆடுகளிடம் நியாயம் கேட்டபடியே வந்தாள்"[4] இவ்வாறாக வெள்ளைச்சாமி, கரிச்சா இவர்களின் வாழ்க்கையானது ஆடுகளுடன் வாழ்வதோடு மட்டுமில்லாமல் இவர்களின்

பொருளாதார வாழ்வும் ஆடுகளை நம்பியே அமைந்து விடுவதாக நாவலாசிரியர் சுட்டுகிறார். இதே நிலையினை சங்க இலக்கியத்திலும் காணமுடிகிறது.

முல்லை நிலத்தில் ஆடுகளை மேய்க்கும் இடையன், ஆடுகள் ஒன்று சேர்ந்து கூட்டமாக கூடுவதற்கு வேற்று இடம் நோக்கிச் செல்லாமல் இருப்பதற்கு நாவை மடித்தபடி 'வீளை' ஒலியை எழுப்புவான். இரவில் உறங்கும் தன் படுக்கையை பனை ஓலைப் பாயொடு ஆட்டுக்கிடை அருகிலேக் கட்டிலில் உறங்குவான். இடையன் பால் கரந்து ஊர் மக்களிடத்தில் விலைக் கூறி விற்று வருவான்.

"பறிப் புறத்த இட்ட பால் நொடை இடையன்" [5]

"பாலொடு வந்த கூழொடு பெயரும்

ஆடுடை இடைமான் சென்னி" [6]

என ஆயர் குலப்பெண்கள் அந்தி காலைப் பொழுதிலேப் பறவை எழும் முன்பே துயில் எழுபவர்கள். மோர் கடைந்து அருகில் உள்ள ஊரில் சென்று விற்கக் கூடியவள். அதற்கு இணையான உணவுகளைப் பெற்றுவருவாள். ஆயர் குலப் பெண்கள், தான் பெற்ற பணத்திற்கு ஈடாகப் பசுக்களை வாங்கி வளர்ப்பார்கள். தங்கம் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ள மாட்டாள்[7] என்பதினை சங்க வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

**பொருளாதாரத்தை உற்பத்தி செய்யும் திருமண வாழ்க்கை**

வெள்ளைச்சாமியின் மனைவியானதால் தாங்கமுடியாத சந்தோசம் கொண்டாள். வெள்ளைச்சாமியும் கரிச்சாவும் ஒருவர் மீது ஒருவர் அன்பும், அக்கரையும், காதலும் கொண்டிருந்தனர். "இப்படியெல்லாம் நடக்குமுன்னு நீ நெனச்சிபாத்தாயா சின்னாயா? இல்ல வேற எங்கயாச்சும் ஒன்னக் கட்டிக்குடுத்திருந்தா என்ன செஞ்சிருப்ப? நாஞ் செத்துப் போயிருப்பேன்" என்றாள். பதிலுக்கு வெள்ளைச்சாமியும் "'நீயில்லாட்டி நானும் ரொம்ப நாளக்கி இருக்கமாட்டன்"[8] என்றான் வெள்ளைச்சாமி. திருமண வாழ்க்கை தங்களுக்குள் அன்பை உணர்த்தியது மட்டுமல்லாது கீதாரி வெள்ளைச்சாமிக்கும் கரிச்சாவிற்கும் தனியாக ஆடுகளை ஒதுக்கிவிட்டார். தனியாக கிடை போடுவதற்கும் வழிவகை செய்தார். வெள்ளைச்சாமி கரிச்சாவின் கடின உழைப்பால் கிடை பெருகிறது. அவர்களின் வாழ்வில் பொருளாதாரம் உயர்ந்தது.

உளுந்தூர்பேட்டையை அடுத்துள்ள கோட்டைக்காட்டிற்கு சென்று கிடைபோட்டார்கள். இங்குவந்து நான்கு வருடமாகிறது. இங்கு வருவதற்கும் கரிச்சா தான் காரணமானாள். இந்த நான்கு வருடத்தில் இயல்பான வாழ்க்கையில் பல மாற்றங்கள், கல்யாணமாகி நான்கரை வருடமாகியும் கரிச்சாவிற்கு குழந்தை பிறக்கவில்லை. இதுவே, பெரும் குறையாக இருந்தது. இவர்களது பொருளாதார வளர்ச்சியினைக் கண்ட வெள்ளைச்சாமியின் அண்ணன் மனைவியும், அவள் அண்ணன் ஓடையப்பனும் எப்படியாவது வெள்ளைச்சாமிக்கு தன் தங்கையை திருமணம் செய்துவைத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தினால் கரிச்சாவை குழந்தை இல்லாத காரணம் காட்டி துன்பப்படுத்தினார்கள்.

வெள்ளைச்சாமி இப்போதெல்லாம் கரிச்சாவிடம் முகம் கொடுத்து பேசுவது இல்லை. தனக்கு வரும் பணத்தையெல்லாம் தன் அண்ணன் குடும்பத்திற்கே செலவு செய்தான். தன் குடும்பம் பற்றியும் கரிச்சா பற்றியும் நினைத்துப்பார்ப்பதே இல்லை. இதையெல்லாம் நினைத்து நினைத்து கரிச்சாவிற்கு மனம் பாரமானது. யாரிடம் சொல்லி முறையிடுவது என்று தெரியவில்லை. வெள்ளைச்சாமிக்கு ஓடையப்பனின் இரண்டாம் தங்கச்சியை திருமணம் செய்ய முடிவு செய்து கரிச்சாவையும் வெள்ளைச்சாமியையும் பிரிக்கத்திட்டமிட்டு கரிச்சாவின் மனம் நோகும்படி பேசிக்கொண்டே இருந்தார்கள். வெள்ளைச்சாமி எதையுமே கண்டுக்கொள்ளாமல் இருந்தான். சிதம்பரத்தை அடுத்துள்ள குமாரமங்கலத்தில் மையமான ஓரிடத்தில் வலசை கட்டியிருந்தான் வெள்ளைச்சாமி. இவர்களின் கொடுமையைத்தாங்காமல், "இரண்டு நாட்களாய் அன்ன ஆகாரம் ஏதுமின்றி வங்கொலையாய் பட்டினி கிடந்தாள் "[9] இரண்டு நாட்களாய் பச்சைத் தண்ணியைப் பல்லில் ஊற்றாமல் கிடப்பது

தெரிந்தும் கூட கட்டிய புருசன் அவளை திரும்பியும் பார்க்கவில்லை. யாருமற்றவளாக உணர்ந்த கரிச்சா கீதாரியைவிட்டால் தனக்கு போக்கிடம் வேறுயில்லை என்பதனால் கீதாரியிருக்கும் இடம் தேடிச் சென்றாள்.

**பாலினம் சார் பொருளாதார மீட்டுருவாக்கம்**

வெள்ளைச்சாமியுடனான திருமண வாழ்வில் உடன் உழைத்து தன் குடும்பத்தின் பொருளாதாரத்தை வாழ்வினை உயர்த்திய பொழுதும் கரிச்சாவிற்கு அது பயனளிக்கமால் போய்விடுகிறது. இதனால் தன் தந்தையான கீதாரியிடம் சென்று விடுகிறாள். அங்கு கீதாரியின் மனைவியான இருளாயியை மருத்துவமனையில் சேர்த்து இருந்தனர். அப்பொழுது கூடவே கரிச்சாவும் இருந்தாள். இருளாயினைப் பரிசோதிக்கவரும் நர்சிடம் தனக்கு அடிக்கடி தலைசுற்றுவதாகவும் தலைச்சுற்றல் நிற்கும்படி மருந்து ஏதாவது தரும்படி கூறினாள். கரிச்சாவை சோதித்துப் பார்த்த மருத்துவர், மூன்று மாதம் கர்ப்பமாக இருப்பதாக கூறினார். அவளால் நம்பமுடியவில்லை அவளுக்கு வியப்பாகவும் சந்தோசமாகவும் இருந்தது. கீதாரி மற்றும் அவரைச் சார்ந்தவர்களும் சந்தோசப்பட்டதுடன், கரிச்சாவை வெள்ளைச்சாமியுடன் சேர்த்துவிட வேண்டும் என முடிவு செய்தார்கள். ஆனால் கரிச்சா, இனி ஒருபோதும் தான் வெள்ளைச்சாமியுடன் சேர்ந்து வாழவே மாட்டேனென்று சத்தியவாக்கு செய்து கொடுத்தாள். இருளாயி உடல்நிலை மோசமானதால் மருத்துவப் பயனின்றி இறந்துப்போனாள். கரிச்சாவிற்கு ஆண்குழந்தைபிறந்தது. வெள்ளைச்சாமி இதுவரை வந்து பார்க்கவில்லை.

வைராக்கியமும் உழைப்பும் தன்னகத்தேக் கொண்ட கரிச்சா தனது வாழ்வில் பொருளாதாரத்தை உயர்த்திக்கொள்ள அப்பாவான கீதாரியுடன் வாரத்திற்கு ஆடுகளை வாங்கி தனியாக கிடை கட்டினாள். ஆட்டுக்காரர்களிடம் பெற்று வரும் ஆடும் அவைபோடும் குட்டிகளையும், மறுவருடம் ஆட்டுக்காரரிடம் ஒப்படைக்க வேண்டும் ஆடுகள்போடும் புளுக்கையே இவர்களுக்கு சொந்தம். அந்த புளுக்கையை விற்று வாழ்ந்து வந்தார்கள். கரிச்சா தன்மகன் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தாள். தன் அப்பாவிடம் என்னைப்போல் ஆடுமேய்க்க விடமாட்டேன் அவனை பள்ளியில் சேர்த்து படிக்க வைக்கப்போவதாகவும், என் பிள்ளை எல்லோரைப்போலவும் இருக்கமாட்டான் அவன் படிப்பான் என்று மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தாள். ஆடுகளை கண்ணும் கருத்துமாக பகலெல்லாம் மேய்த்துவிட்டு இரவுசாப்பாடு முடிந்து கூண்டிற்குள் தன் குழந்தையுடன் படுத்துக்கொண்டிருந்தாள்.

அடைமழையாய் பொழிந்தால் கூண்டிற்குள் தண்ணீர் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. அதனை, வெளியே தள்ளினால் குழந்தை நனையாதபடி கூண்டிற்குள் பாதுகாப்பாய் வைத்தாள். தண்ணீரை கையால் தள்ளிக்கொண்டே இருந்தாள். எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. தண்ணீரை வெளியே தள்ளிக் கொண்டிருந்த கரிச்சாவின் கையில் ஏதோ கடித்தது. பனைமட்டைத்தான் குத்தியிருக்கும் என்று நினைத்து தண்ணீரை வெளியேற்றினாள். கரிச்சா தண்ணீரை ஏத்தியபோது அடிபட்ட குட்டிப் பாம்புதான் கரிச்சாவின் விரலில் கடித்திருந்தது. இருட்டில் பனையோலைக்கும் பாம்புக்குட்டிக்கும் வித்தியாசம் தெரியாத கரிச்சா மழைவிட்டதும் பழையபடியே சம்மம்பாயை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்துவிட்டாள். விரலில் விஷம் ஏறியதிலிருந்து தலைவலியும் தலைச்சுற்றலும் அதிகமானது பக்கத்து வலசைப் பெண்களிடம் ஓடிப்போய் கூறினாள் அவர்கள் மழைபெய்கிறது விடியட்டும் பார்த்துக் கொள்ளலாம் நீ போய் தூங்கு என்றனர். தலைக்கு குளித்துவிட்டு தலை ஆறாமல் மழையில்வேறு நனைந்தோம் எது ஆனாலும் ஆகட்டும் காலையில் பார்த்துக் கொள்ளலாம் என்று பிள்ளையுடன் படுத்துக்கொண்டாள். கரிச்சாவின் கூண்டிலிருந்து விடியற்காலையில் விடாமல் பிள்ளை அழும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. நீண்ட நேரமாகியும் குழந்தையின் அழுகை அடங்காமல் இருக்க பக்கத்து வளசைக்காரர்கள் ஓடிப்போய் பார்த்தனர். "வளசைக்குள் அசைவற்றுக் கிடந்தாள் கரிச்சா. பக்கத்தில் படுத்திருந்த பிள்ளை மட்டும் அழுது கொண்டிருந்தது"[10] கரிச்சாவின் மீண்டெழுந்த பொருளாதார வாழ்வும் பயனளிக்காமல் போய்விட்டது.

**குறிப்புகள்**

1. தொல்காப்பியர். அகம் நூ. 23
2. அகநானூறு, பா.எ. 54, வரி 9-11
3. குறுந்தொகை, பா.எ. 220, வரி 1,2
4. சு.தமிழ்ச்செல்வி, கீதாரி, ப.எ.10
5. நற்றிணை, பா.எ.142, வரி 4)
6. குறுந்தொகை, பா.எ. 221, வரி 3,4
7. குறுந்தொகை, பா.எ. 210, வரி 2, 3.
8. சு.தமிழ்ச்செல்வி, கீதாரி, ப.எ. 103
9. மேலது, ப.எ. 152
10. மேலது, ப.எ. 174

**உசாத்துணை நூற்கள்**


1. **சுப்பிரமணியன், ச.வே.,** தொல்காப்பியம் (தெளிவுரை), மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108, சன.2003.
2. **சுப்பிரமணியம், ச.வே., (உ.ஆ.),** அகநானூறு (மூலமும் உரையும்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108, 2010.
3. **தமிழ்ச்செல்வி, சு.,** கீதாரி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-B, சிட்கோ இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098, 2008
4. **பாலசுப்பிரமணியம்,கு.வெ., நற்றிணை (மூலமும் உரையும்),** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-B, சிட்கோ இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை – 600 098, 2011.
5. **பிரேமா, இரா (உ.ஆ.),** குறுந்தொகை மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், தி.நகர், சென்னை- 600 017, 1999.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Sivakumar V., (2021) Mullaithinai in Tamil Literature, Gender Discrimination in Economics, based on S. Thamilselvi's "Geethari", Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:477-481. Cauvery College For Women, Trichy.

**ஜ.ஜான்சிராணி,**
ஆய்வு வளமையர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# மலேசியத் தமிழர்களின் வாழ்வியல் சிறுகதைகளின் ஊடாக....

**ஆய்வுச்சுருக்கம்**

மலேசியாவில் சிறுகதை இலக்கியத்தில் பெண் படைப்பாளர்களின் படைப்புகளில் மலேசியத் தமிழர்களின் வாழ்வியலை ஆய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கம். இல்லச்சூழல், பணிச்சூழல் எனப் பெண்கள் இருவகைச் சூழல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. புலம்பெயர்ந்த பெண்கள் வேறு வகையான சிக்கல்களையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அத்தகைய சூழலைச் சந்திக்கும் பெண்கள், தங்களின் மன உணர்வு, எழுச்சி, ஆற்றல், சோர்வு, அழுத்தம், சிக்கல் ஆகியவற்றின் வடிகாலாக சிறுகதைகளைப் படைக்கின்றனர். இத்தகைய சிறுகதைகளில் வெளிப்படும் தமிழர் வாழ்வியல் பதிவுகள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. மலேசியா வாழ் புலம்பெயர்ந்த பெண்களின் சிறுகதைப் படைப்புகள் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டுள்ளன. அவற்றில் மலேசியத் தமிழர்களின் வாழ்வியலை ஆய்வதாக 'மலேசியத் தமிழர்களின் வாழ்வியல் சிறுகதைகளின் ஊடாக...' என்ற இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

மனிதனைப் பிற உயிர்களின் வாழ்வியல் முறைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவர்கள் கொண்டிருக்கிற பண்பாட்டுக் கூறுகளே ஆகும். தொன்மைச் சிறப்புமிக்க தமிழர் பண்பாடு உலகத்தில் தலைசிறந்த பண்பாடாக அனைவராலும் போற்றத்தக்கது. தமிழர்கள் பல்வேறு காரணங்களுக்காக உலகெங்கும் பல நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அதிலும் குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மலேசியாவிலுள்ள இரப்பர் தோட்டங்களுக்குக் கூலித் தொழிலாளிகளாகப் பணியமர்த்துவதற்காக அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்கள் தற்போது அந்நாட்டின் மண்ணின் மைந்தர்களாக வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் தங்களின் தாய்மொழியையும் பண்பாட்டையும் கலையையும் தக்கவைத்துக் கொண்டு உலக நாடுகளில் வாழும் தமிழர்களில் மலேசியத் தமிழர்கள் தனிச்சிறப்புடன் திகழ்கின்றனர். அத்தகைய சிறப்புமிகு மலேசியத் தமிழர்களின் வாழ்வியலை மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் அதிலும் குறிப்பாகப் பெண் படைப்பாளர்களின் சிறுகதைகளின் ஊடாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் தமிழர் வாழ்வியல்**

தமிழர் பண்பாட்டை ஈராயிரத்து அறுநூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் இலக்கியங்களும் கவின்கலைகளும் எடுத்துக்காட்டுகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பெரும்பான்மையாகப் புலம்பெயர்ந்த மலேசியத் தமிழர்கள் தங்களது வாழ்வியலோடு தமிழர் பண்பாட்டினை இரண்டறக் கலந்துள்ளனர். இதனை, "ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மலாயாவுக்குக் குடியேறியவர்களின் பழக்க வழக்கப் பண்பாட்டுக் கூறுகள் யாவும் தென்னகத்திலிருந்து வந்து குடியேறியவர்களோடு ஒன்றியது. புலம்பெயர்ந்து வருவோர் தொகை பெருகவே அவர்கள் யாவரும் கூட்டங்கூட்டமாகத் தோட்டப்புறங்களில் வாழலாயினர். மற்றவரோடு பழகும் வாய்ப்பின்றித் தனித்தே வாழ்ந்தனர். தாய் நாட்டின் பழக்க வழக்கங்களைப் பண்பாட்டு முறைகளைத் தொடர்ந்து பின்பற்றினர்"[1] என்பதிலிருந்து அறிய முடிகிறது. மேலும், தங்களின் உணவுமுறை, ஆடைகள், மொழி, மத, இன, பழக்கவழக்கம், சாதி, திருமணம்,

வழிபாட்டு முறைகள், பிறப்பு இறப்புச் சடங்கு முறைகள், முடியிறக்குதல், காதுகுத்தல், மஞ்சள் நீராட்டுதல் முதலியயாவும் தமிழகத்தைப் போன்றே தொடர்ந்தன.

அவற்றைத் தங்களது இலக்கியங்கள், கலைகள் வாயிலாகப் பதிவு செய்தும் வைத்துள்ளனர். அதிலும் குறிப்பாக, மலேசியத் தமிழ் இலக்கியங்களில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள சிறுகதை இலக்கியத்தில் தமிழர் வாழ்வியல் முறைகள் பரவலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

**தாய்மொழிப்பற்று**

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'எழுதாத ஒப்பந்தம்' என்ற சிறுகதைத் தொகுப்பில் நாகேசுவரி சுப்ரமணியத்தின் 'சுதந்திர ஏதிலிகள்'[2] என்ற கதை இடம்பெற்றுள்ளது. 'சுதந்திர ஏதிலிகள்' என்னும் தலைப்பு மலேசியத் தமிழர்களைச் சுட்டுவதாக அமைகிறது. கதைசொல்லியாக வரும் பெண் தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதில் இச்சிறுகதை வெற்றி பெறுகிறது. மலேசியத் தமிழர்களின் இன்றைய நிலையை இக்கதை எடுத்துக்காட்டுகிறது. ஒரே மலேசியா, தமிழ்மொழிக் கல்வி, பெண் அடிமை, பிறமொழி மோகம் என மலேசியாவின் இன்றைய சமூக நிலைகுறித்து கோபம், வருத்தம், கவலை, எள்ளல் எனத் தன் உணர்வுகளை மனக் கொதிப்போடு கதைசொல்லி கூறுவது போல் கதை அமைந்துள்ளது.

காலையில் நடைப்பயிற்சிக்குச் செல்லத் திட்டமிடும் ஒரு பெண் மழையின் காரணமாக வெளியில் செல்ல முடியாமல் வானொலி கேட்கிறாள். அதில் அறிவிப்பாளர் "வணக்கம்... ஒரே மலேசியா" எனக் கூறுவதைக் கேட்டு அவளின் நினைவு அதை நோக்கிச் செல்கிறது. 'ஒரே மலேசியா' என்பது வரவேற்கக்கூடியது என்றாலும் தங்கள் இனத்தின் தாய்மொழியை மறந்து ஒரே மொழி ஒரே நாடு என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா? ஆங்கிலேயரிடமும் ஜப்பானியரிடமும் அடிமையாக இருந்து பாடுபட்டுக் காடுகளை அழித்து நாடாக, மக்கள் வாழும் இடமாக மாற்றியும் பால் மரங்கள் நட்டு நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்டு உலகமே திரும்பிப் பார்க்கச் செய்த மலேசிய நாட்டின் உருவாக்கத்தில் தமிழரின் பங்களிப்பினை மறந்து விட முடியுமா? அப்படி நம் முன்னோர் உருவாக்கிய நாட்டின் மீது பற்று இல்லாமல் போய்விடுமா? ஆனால், அதற்காகத் தாய்மொழியை மறக்க முடியுமா? என்று அவள் சிந்தனை ஓட்டம் செல்கிறது.

எண்ணங்கள் தமிழ்மொழி மேல் ஓடிக்கொண்டிருக்கும் நேரத்தில் மகாகவி பாரதியின் கவிதைகளை எடுத்துக்கொண்டு வெளியில் ஊஞ்சலில் அமர்ந்து கொண்டாள். பக்கத்து வீட்டு ஐந்து வயது சிறுமி ஓடிவந்தாள். "டாவுன் கறி கொடுங்கள் என் அம்மா வாங்கி வரச்சொன்னார்" என்று கூறுகிறாள். கோபத்துடன் சிறுமியை உற்று நோக்க... அவளும் விழித்துக் கொண்டு நின்றிருந்தாள். அவளை அவள் அம்மா சீனப் பள்ளியில் தான் சேர்த்திருந்தாள். சீன மொழியில் படித்தால் உடனே வேலை கிடைத்துவிடும் என்று நம்பிக்கை. 'டாவுன் கறி' என்றால் தமிழில் என்னவென்று தெரியுமா? எனக் கேட்டதற்குத் தெரியாது என்றாள் அந்தச் சிறுமி. சீனமொழியில் தெரியுமா? எனக் கேட்டவுடன் கண்கள் தெரிந்து மகிழ்ச்சியுடன் ஓ... தெரியுமே! என்று ஏதோ கூறினாள். ஒன்றும் புரியவில்லை. அவளை முறைத்துப் பார்த்து விட்டுக் கறிவேப்பிலையை ஒடித்து நெகிழிப்பையில் போட்டு அணிச்சல் துண்டு ஒன்றையும் கொடுத்தனுப்புகிறார் கதைசொல்லி பெண் (அணிச்சல் என்றால் ரிப்பன்).

தமிழ்ப் பள்ளியில் சேர்க்காமல் ஏதேதோ காரணங்களைக் கூறி வேற்று மொழிகளைப் படிக்க வைக்கும் நம் இனத்தவர்களைப் பற்றி எண்ணிக்கொண்டே மீண்டும் பாரதியின் கவிதைகளுக்குள் மூழ்க சட்டென்று கண்ணில்பட்டது அப்பாடல். 'கும்மியடி பெண்ணே கும்மியடி... ஆனந்தச் சுதந்திரம் அடைந்து விட்டோமென்றே' என்னும் பாடலில் மகாகவி பாரதி பெண் விடுதலையையும் நாட்டின் விடுதலையையும் ஒருசேர பாடிச் செல்கிறார். என்னே அவரது கவித்திறமை என்று பாடலில் திளைத்துக் கொண்டிருக்கும்போதே, பக்கத்து வீட்டு முனியம்மா பாட்டியின் சத்தம் காதைக் கிழிக்கிறது. ஏன் இப்படி சத்தம் போடுகிறார்? எனக் காது

கொடுத்தால், நாராசமாக பாட்டியின் குரல். "எந்தச் சிறுக்கீன்னு தெரியல! நா நட்டு வச்சிருந்த அறுவவாம்பட்சி' செடியிலே தீட்டோட கை வச்சிருக்கா! நேத்து வரைக்கும் நல்லா தளதளன்னு இருந்த செடி இன்னைக்கு வாடி வதங்கி போயிட்டது! எவடீ அவ எஞ்செடிய தீட்டோட தொட்டது?" என்று முனியம்மா பாட்டி கொச்சை மொழியில் கத்தியது கேட்டு உடல் கூசிப்போய் கையிலிருந்த பாரதியின் கவிதைப் புத்தகம் கீழே நழுவியது. புத்தகத்தை எடுக்க மனமின்றி நம் இனத்துப் பெண்களின் நிலையை எண்ணிக் கண்களில் நீர் ததும்பியது. இன்னும் எத்தனை காலம்... பெண் அடிமையாக இருந்து இத்தகைய ஏச்சுப்பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமோ? பெரியாரும் பாரதியும் வழிவந்த இந்த இனம் இன்னும் கூடவா இதுபோன்ற மூடக்கழிவுகளைச் சுமந்து கொண்டிருக்கிறது.

கேள்விகள் கணைகளாய் மனதில் பாய்ந்து கொண்டிருந்த போது, தெருவில் இரண்டு சீனப் பெண்கள் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டும் இடையிடையே சிரித்துக் கொண்டும் செல்கிறார்கள். ஏதோ நகைச்சுவை சொல்லிச் சிரிக்கிறார்கள் என்று மட்டும் புரிந்தது. இந்த மண்ணில் தானே நாங்களும் வாழ்கிறோம். எங்கள் உடல்சார்ந்த மாற்றங்களுக்கு மட்டும் ஏன் இந்தச் சமுதாயம் இத்துணை ஆர்ப்பாட்டங்கள், இத்துணை கேலிக் கூத்துகளையும் நடத்துகிறது? 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையினைக் கொளுத்துவோம்' என்றார் பாரதி. இது மடமை இல்லையா? என்று மனம் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கும்போதே வெளியில் யாரோ அழைப்பு மணியை அழுத்த, யார் என்று எட்டிப் பார்த்தவுடன் பழக்கப்படாத முகங்களாக ஐவர் வாசலில் நின்றிருந்தனர். "கோவில் திருவிழாவிற்காக வசூலிற்காக" என்று கூறினர். அவர்களுக்கு ஐந்து வெள்ளியினை நன்கொடையாகக் கொடுத்து விட்டு, அழைப்பிதழைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்று பார்த்தால் இரண்டாயிரத்தொரு வெள்ளி தொடங்கிக் கிட்டத்தட்ட நாற்பதுக்கும் மேற்பட்டோர் பணமாக நன்கொடை கொடுத்திருப்பது போக, அரிசி மூட்டைகள், எண்ணெய்ப் புட்டிகள், உருளைக்கிழங்கு, வெங்காயம், பூசைப் பொருள்கள் என்று நன்கொடை கொடுத்தோரின் பெயர் பட்டியல் நீண்டிருந்தது.

அப்போது சென்ற மாதம் நடந்தது நினைவில் வந்தது. இதேபோல், சீனர்கள் பத்து பதினைந்து பேர் வந்திருந்தனர். நன்கொடை வாங்க வந்திருப்பதாக நினைத்து இரண்டு வெள்ளியினை எடுத்துக் கொண்டு போனால் நன்கொடை வேண்டாம். எங்கள் இனத்தவர்கள் நன்கொடை வழங்கி ஒரு சீனப்பள்ளி கட்டியுள்ளோம். அதன் திறப்பு விழாவிற்கான அழைப்பு கொடுக்க வந்தோம் என்று அழைப்பிதழைக் கொடுத்தனர். தாங்கள் நன்கொடை கொடுக்க விரும்பினால் பள்ளியில் வசதியற்ற மாணவர்கள் கல்விக்காக ஒரு உண்டியல் வைக்கப்பட்டுள்ளது அதில் செலுத்தலாம் என்று கூறிச் சென்றனர்.

குறிப்பிட்ட நாளில் சீனப் பள்ளி திறப்புவிழாவிற்குச் சென்று பார்த்த போது, ஒரு அறுநூறு, எழுநூறு பேர் அங்குக் கூடியிருப்பார்கள். ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு சிறிதும் இன்றி அனைவரும் ஒரே இனமாய் கைகோர்த்து நின்று 'வெற்றிக் களிப்பு' என்று பொருள்படும் அணிச்சலை (ரிப்பனை) வெட்டினர். கூடியிருந்தவர்களின் கைத்தட்டல் வானைப் பிளந்தது. மனதில் இன்னும் ஆவணமாக அந்நிகழ்வு பதிந்துள்ளது. பள்ளித் தலைமையாசிரியர் உரையாற்றும்போது, "இது ஒரு தனிப்பட்டவரின் வெற்றியல்ல நம் இனத்தின் வெற்றி!" என்று கூறினார். ஐம்பது வெள்ளிகளை அங்கிருந்த உண்டியலில் செலுத்திவிட்டு வீடு வந்து சேர்ந்த நினைவு ஓடிக்கொண்டிருந்தது.

கதைசொல்லி இங்கு சொல்லவருவதை மறைமுகமாக உணர முடிகிறது. தமிழர்கள் எங்கு சென்றாலும் அங்குக் கோயிலை முதலில் கட்டி விடுவர். அதற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை நம் தமிழ்மொழிக் கல்விக்குக் கொடுத்தால் அரசையே எதிர்நோக்கிக் காத்திராமல் தமிழ்ப் பள்ளிகளை நாமே வளர்த்தெடுக்கலாம் என்பதே அப்பெண்ணின் மனவோட்டமாக இருந்தது.

எண்ணங்கள் இப்படித் தமிழ்மொழிக் கல்வியின் வளர்ச்சி குறித்து ஓடிக் கொண்டிருக்கும் போதே, மணி இரவு பதினைந்து நாற்பத்தைந்தாகி விட்டிருந்தது.

பன்னிரண்டு மணியானால் ஆகத்து 31ஆம் நாள். மலேசியாவின் விடுதலை நாள். வானவேடிக்கையுடன் தலைவர்கள் வாழ்த்து, உரை என கொண்டாட்டங்களுடன் ஒவ்வொரு ஆண்டும் கடந்து செல்லும். ஒவ்வொரு ஆண்டும் தாய்மொழிக்கான போராட்டம், கூடுதல் பள்ளிக்கூடங்களுக்கான விண்ணப்பங்கள், நம் இனத்தவரிடமே, "உங்கள் பிள்ளைகளைத் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்புங்கள்" என்ற கெஞ்சல், என நடந்து அடுத்த ஆண்டு விடுதலை நாளும் வந்திருக்கும். ஆனால், எதுவுமே மாறப் போவதில்லை. நாம் மாறினால் அன்றி... என்ற ஏக்கத்துடன் கதைசொல்லியான பெண் சிறுகதையினை முடிக்கின்றார்.

உண்மையில் இது மலேசியத் தமிழர்களின் இன்றைய நிலையைக் காட்டும் சிறுகதை. கோபம், வருத்தம், கவலை ஆகியவற்றை இச்சிறுகதை உள்ளடக்கி இருந்தாலும் சில இடங்களில் எள்ளலையும் காண முடிகின்றது. அதுவே, இச்சிறுகதைக்குச் சிறப்புச் சேர்க்கின்றது. இச்சிறுகதையின் ஒட்டுமொத்த கருத்தையும் அறிந்து கொள்ள இதன் இறுதிப் பத்தியைப் படித்தாலே போதுமானது.

பாவையின் 'தங்கக் கூண்டில் தாமரை மலர்'[3] என்ற சிறுகதையில் தன் மகன் ஆசையாக வளர்த்த நாய்க்குட்டியைப் பார்த்தவுடன், "இதுக்குப் பேரு என்னடா வச்சிருக்க?..." என்று கேட்கிறார் தாய். அதற்கு மகன் உற்சாகமாய், "முந்தி வளர்த்தவங்க ஜிம்மின்னு வச்சிருந்தாங்க, அது ரொம்பப் பழைய பேரா இருக்குன்னு, லக்கின்னு கூப்புடுறோம்" என்றதைக் கேட்கையில் சும்மா இருக்க முடியாமல் சிலிர்த்தது மனக்குரங்கு.

"ஏன்டா... வெற்றி - வெள்ளை - வீரன்னு ஒரு தமிழ்ப்பேரு வச்சிருக்காம்ல..." என்ற போது தலையைச் சொறிந்தவனைப் பார்த்து மௌனமானேன். பிள்ளைகளுக்கே தமிழில் பெயர் வைக்காதவர்கள் வளர்ப்புகளுக்கா வைப்பார்கள்? என்று அந்தத் தாய் எண்ணுவதாக ஆசிரியர் சுட்டுகின்றார்.

**உணவுமுறை**

பண்டைத் தமிழர்களின் உணவுமுறை அவர்களின் வாழ்வியலோடு கலந்திருந்தது. "உணவே மருந்து; மருந்தே உணவு" என்ற கோட்பாட்டோடு வாழ்ந்தனர். உணவு முறையிலும் தங்களுக்கென தனிக்கோட்பாடுகளையும் கட்டுப்பாடுகளையும் வகுத்திருந்தனர். இன்று காலத்தின் மாற்றத்தால் பண்டைத் தமிழரின் உணவு முறைகளிலிருந்து நாம் விலகி வந்திருக்கிறோம் என்பதே உண்மை. இதில் மலேசியத் தமிழர்கள் மட்டும் விதிவிலக்கல்ல. ஆனால், இன்றைய காலத்தில் தமிழகத்தில் நாம் மேற்கொண்டிருக்கும் உணவுப் பழக்கவழக்கங்களும் மலேசியத் தமிழர்களின் உணவுப் பழக்கவழக்கங்களும் பெரும்பாலும் ஒன்றுபட்டதாகவே இருக்கின்றன என்பதைப் பல சிறுகதைகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

தேவராணி கிருஷ்ணன் அவர்களின் 'அந்த மனிதர்'[4] என்ற சிறுகதை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. வேலையின் காரணமாக ஊர் மாற்றலாகிப் புதிய ஊருக்குச் செல்லும் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சுவைபட விவரிப்பதாக இந்தக் கதை அமைந்துள்ளது. "வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்ற கருத்தை முன்னிறுத்துவதோடு அதனால் ஏற்படும் பின்விளைவுகளையும் தெளிவுபடுத்துகின்றது கதை. இக்கதையில் புதியதாகக் குடிவந்திருக்கும் குடும்பத்தினருக்கு வலிய வந்து உதவி செய்யும் பக்கத்து வீட்டுக்காரர். அவரது கனிவான பேச்சும் உதவும் மனமும் இவர்களைக் கவர்கிறது. அவரின் நல்ல மனதை உணர்ந்து அவரது எட்டு வயது மகன் மனவளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பதை எண்ணி மனம் வருந்துகின்றனர். பின்பு தான் தெரியவருகிறது. அந்தப் பெண்மணி அவரது தம்பியை ஏமாற்றி அந்த வீட்டைப் பெற்றிருப்பதையும் அதனால் அவருடைய தம்பி மனச்சிதைவு ஏற்பட்டு ஊரைச் சுற்றுவதையும் அறிய முடிகிறது.

இக்கதையில், புதியதாக இடம்பெயர்ந்து வந்திருக்கும் குடும்பத்தினர் வீட்டை ஒழுங்கு செய்யத் தாமதமாகும் என்ற காரணத்தால், அவர்களுக்குப் பக்கத்து வீட்டுக்காரரான திலகவதி தேத்தண்ணியும் உளுத்தம் வடையும் செய்து கொண்டு

வந்து தருகிறார். தேத்தண்ணி என்றால் தேநீர். உளுந்த வடையும் தேநீரும் தமிழகத்தில் தற்போதும் வழக்கத்தில் உள்ள உணவுப்பண்டங்கள். மேலும், இது “ரெடிமேடா நீங்களே ஊற வைச்சி ஆட்டினதா?” என்று கேட்டவுடன், “நமக்கு ரெடிமேட் ஒத்து வராதுக்கா வீட்டு வேலைகளை முடிச்சிட்டா சும்மா தானே இருப்பேன். நானே உளுந்தை ஊரப்போட்டு ஆட்டுக்கல்லை ஆட்டி சுட்டதுக்கா ஆட்டுக்கல்லு மாமியார் விட்டுப் போனது” என்று பெருமையாகச் சொன்னார். இதிலிருந்து தமிழர்களின் உணவுமுறை மலேசியத் தமிழர்களிடமும் இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**இளைஞர்களின் நிலை**

பல்லினச் சூழலில் அமையப்பெற்ற வாழ்க்கையை இளைய தலைமுறையினர் எவ்வகையில் வாழ முற்படுகின்றனர்; தெளிந்து சீரிய முறையில் அமைத்துக் கொள்கின்றனர்; எவ்வாறு தடம்மாறிச் செல்கின்றனர் என இளைஞர்களின் வாழ்வியல் நிலையை மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் மிக அழகாகப் பதிவு செய்துள்ளன என்றே கூறலாம்.

ஆதிலட்சுமியின் ‘செல்வம்’ என்ற கதையில்[5] லட்சுமி என்ற ஏழைத்தாயின் மகன் செல்வம் தீயபழக்கங்கள் கொண்ட நண்பர்களுடன் பழக்கம் கொள்கிறான். அவர்கள் செய்யும் கடத்தல் தொழிலில் இவனும் கூட்டாளி என்ற சந்தேகத்தின் பேரில் செல்வம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறான். படிக்கச் சென்ற பையன் சிறையில் காவலர்களிடம் அடிஉதை வாங்கிச் சுருண்டுக் கிடப்பதைப் பார்த்துத் தாய்க் கதறி அழுவதாகக் கதை தொடங்குகிறது.

என்ன செய்வதென்று அறியாமல் நிலை தடுமாறி கிள்ளான் பேருந்து நிறுத்தும் இடத்திற்குச் செல்லும் வழியில் மாரியம்மன் கோயில் வாசலில் வந்து நிற்கிறாள். அம்மன் அவளை ‘வா’ என்று அழைப்பதைப் போல் உணரவே கோயிலுக்குள் செல்கிறாள் லட்சுமி. உள்ளே சென்றவள் அழுது புலம்பி மயங்கி விழுகிறாள். விழுந்தவளை அருகில் இருந்தவர்கள் தூக்கிச் சுவரில் சாய்த்து உட்கார வைப்பதற்குள் அம்மனைப் பார்த்ததும் மருள் வந்துவிட்டதோ, என்று எண்ணி குருக்கள் திருநீறு தட்டுடன் ஓடி வருகின்றார். அதற்குள் இன்னொருவர் லட்சுமியின் முகத்தில் தண்ணீர் அடித்து, மயக்கம் தெளிவித்து, குடிக்கத் தண்ணீரும் கொடுக்கிறார்.

மயக்கம் தெளிந்த லட்சுமி, “என் மகன் திருடப் போகல... அய்யோ அவனைப் புடிச்சுக்கிட்டுப் போயி அடியோ அடினு அடிச்சு சித்ரவதைப் பண்றாங்களே...” என்று கதறுகிறாள்.

புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து, அங்குள்ள வீடுகளெல்லாம் ஒருநாள் தீப்பற்றிக் கொண்டபொழுது... குடிபோதையில் வீடு எரிவதும் தெரியாமல் படுத்துக்கிடந்த லட்சுமியின் புருசனும் தீயில் வெந்து கருகிப்போக அதோடு எல்லா உடமைகளையும் இழந்த நிலையில், அரசாங்கம் கொடுத்த ‘ரூமா பாஞ்சாங்’ வீட்டில் இருந்து கொண்டு இரண்டு, மூன்று பங்களாக்களில் வீட்டு வேலை செய்பவளுக்கு இதற்கு மேல் தன் மகனை எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்று புரியாமல் தவிக்கும் போது, அவள் வேலை செய்யும் வீட்டுக்காரர் சிவா கோயிலுக்கு வருகிறார்.

லட்சுமி உட்கார்ந்து புலம்புவதையும் அவளருகில் பலர் கூடியிருப்பதையும் பார்த்த சிவா, அவளின் அருகில் வந்து என்ன பிரச்சினை என்று விசாரிக்கிறார். விசயம் அறிந்ததும் கவலைப்படாதே உன் மகனை நாளை ஜாமீனில் வெளியில் கொண்டு வந்துவிடலாம் என நம்பிக்கை அளிக்கிறார் வழக்கறிஞரான சிவா.

மறுநாள் நீதிமன்ற வாசலில் பதற்றத்துடன் நிற்கிறாள் லட்சுமி. சொன்னதுபோலவே சிவா அங்கு வந்துவிடுகிறார். இருவரும் சென்று செல்வத்தைச் சந்திக்கின்றனர். அவனிடம் லட்சுமி விசாரிக்கின்றாள். “சொல்லுடா யாரு... அந்த ரங்கன். உனக்கும் அவனுக்கும் என்ன சிநேகம்” என்று லட்சுமி கேட்க அவளின் கண்ணீரைப் பார்த்துப் பேசத் தொடங்கினான் செல்வம். “ரங்கன் என் தோழன்” எனத் தொடங்கி அவனைத் தான் சந்தித்ததையும் நட்பு வளர்ந்ததையும் சொன்னான்.

ரங்கன் சிலம்பம், தெக்குவாண்டோ உள்ளிட்ட தற்காப்புக் கலைகளும் கற்று வைத்திருந்தான். ஆனால், இக்கலைகள் அவன் திருடுவதற்கே பயன்பட்டன. ரங்கன் ஒரு கதாநாயகனாக, வீரனாக செல்வத்தின் மனதில் பதிந்திருந்தான். சிவா சொல்லும் அறிவுரைகள் செல்வத்தின் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை. நீதிமன்றத்தில் சிவா செல்வத்திற்காக வாதாடி அவனுக்கு விடுதலைப் பெற்றுத் தருகிறான்.

வெளியில் வந்த செல்வம் தன் தாயைப் பார்த்து அழுகிறான். அவனுடைய நிலையையும் தோற்றத்தையும் பார்க்கையில் சிவாவிற்கு வருத்தமாக இருந்தது. பாரதி கூறியதைப் போல, "மாநிலம் பயனுற நாம் வாழ முடியாவிட்டாலும் இவன் ஒருத்தனை வாழ வைக்கத் தன்னால் ஆன முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அவனது கைகளைச் சிவா ஆதரவாகப் பிடித்துக் கொள்ள ஒன்றும் புரியவில்லையாயினும் அவரது கைக்குள் அடைக்கலமாகிறான் செல்வம்" என்பதாக இந்தக் கதை முடிகிறது.

எந்தச் சூழலுக்குள் நாம் சிக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறியாமலே தன் வாழ்க்கையில் தடம்புரண்டு விடுகின்றனர் இளைஞர்கள். அவர்களை நல்வழிப்படுத்துவது ஒவ்வொருவரின் கடமை என்பதை அழகாக எடுத்துரைத்துள்ளார் ஆதிலட்சுமி.

### தொகுப்புரை

- தாயகத்தை விட்டுச் சென்று நூற்றாண்டுகள் கடந்தாலும் தாய்மொழியின் மீது கொண்ட பற்று மலேசியத் தமிழர்களுக்குச் சற்றும் குறையவில்லை. தங்களது தாய்மொழியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் எண்ணம் நிறைந்து காணப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.
- பாரம்பரிய உணவுப் பழக்கங்கள் நம்மிடையே மாறியிருந்தாலும் தற்போது தமிழகத்தில் உள்ள உணவுப் பழக்க முறைகளில் பயன்பாட்டில் உள்ள உணவுப் பொருள்கள் மலேசிய மக்களிடத்திலும் புழக்கத்தில் உள்ளன.
- தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்று நான்கு, ஐந்து தலைமுறைகளைக் கடந்துவிட்ட மலேசியத் தமிழர்களின் இளம்தலைமுறையினரான பல்லினச் சூழலில் வாழும் இளைஞர்களின் வாழ்வியல் பல சிக்கல்கள் நிறைந்ததாக அமைந்துள்ளது என்பதைச் சிறுகதைகளின் வழி உணரமுடிகிறது.

### நிறைவுரை

மலேசிய மண்ணின் மைந்தர்களாகத் திகழும் தமிழர்களின் வாழ்வியலில் தாய்மொழிப்பற்று, உணவுமுறை, இளைஞர்களின் நிலை என்ற மூன்று பொருண்மைகளை மலேசியப் பெண் படைப்பாளர்களின் சிறுகதைகளின் ஊடாக இக்கட்டுரையில் ஆராய்ந்ததன் மூலம் மலேசியத் தமிழர்களின் வாழ்வியலை நம்மால் அறிய முடிகிறது. தமிழ் உணர்வினை பெண் படைப்பாளர்களின் எழுத்துகள் உணர்த்துகின்றன. மேலும், பெண் படைப்பாளர்கள் நுணுக்கமான, தனித்துவமிக்க மலேசியத் தமிழர்களின் வாழ்வியலைத் தமிழ்ச் சிறுகதைகளின் வழி தொடர்ந்து ஆழமாகவும் அழுத்தமாகவும் பதிவு செய்ய வேண்டும் என்ற விருப்பத்துடன் இக்கட்டுரை நிறைவு செய்யப்படுகிறது.

### துணைநூற்பட்டியல்


1. அ.இராமானுஜம், மலேசிய வாழ் தமிழர்களும் தமிழும், முனைவர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், நவம்பர், 2012, பக்.86-87.
2. எழுதாத ஒப்பந்தம், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க வெளியீடு, முதல் பதிப்பு: 2011, மலேசியா
3. நாமா சயா செல்வி, மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க வெளியீடு, முதல் பதிப்பு: 2011, மலேசியா, ப.32-40
4. மேலது. ப.64-71
5. ஆதிலட்சுமியின் சிறுகதைகள், ஆதிலட்சுமி, கோலாலம்பூர், 2008, மலேசியா.

**வீட்டு முகவரி**

ஜ.ஜான்சிராணி,

மனை எண்.3அ, மருத்துவர் ஆர்.வி.தோட்டம்,

ஆலாத்தூர், திருமால்புரம் (அஞ்சல்),

மதுரை - 625014.

அலைபேசி எண்: 8110016911

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Jansirani J., (2021) Life Style of Tamil Malasians Through Short Stories, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:482-488. Cauvery College For Women, Trichy.

**சு.செல்வகுமாரன்**
இணைப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்
அரசு கலைக் கல்லூரி,
பரமக்குடி – 623701

# ஈழத்தமிழர்களின் துயர வாழ்வைப் புலப்படுத்தும் வ.ஐ.ச.ஜெயபாலனின் ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்து கவிஞர்களில் முக்கியமானவர் வ.ஐ.ச.ஜெயபாலன். அவரின் ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும் எனும் குறுங்காப்பியத்தை (1987) மையப்படுத்தி போர் எவ்வாறெல்லாம் ஈழத் தமிழர்களின் வாழ்வை துயரப்படுத்தியுள்ளன என்பதை புலப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது. காப்பியத்தில் வ.ஐ.ச.ஜெயபாலன், ரதி உள்ளிட்ட சில முக்கியமானப் பாத்திரங்களின் ஊடாகத் தமிழீழ விடுதலைப்போரின் வெற்றிக்கு பன்மைத்துவ தேவையின் அவசியத்தையும், தமிழீழ விடுதலை இயக்கங்களின் அதிகாரத்துவம் சார்ந்த பன்மைத்துவ மறுப்பையும் அடையாளப்படுத்துகின்றார். மேலும் போர் சார்ந்த சமூக அவலங்களின் நிலையினை விவரிக்கின்ற போது போர் எவ்வாறெல்லாம் பெண்ணுக்கான இருப்பினை சுதந்திரமற்றதாக ஆக்கியுள்ளது என்பதனையும் வலியுறுத்துகின்றது. அதுபோலவே சமூகத்தில் சாதி, மதம், மூடநம்பிக்கைகள் உள்ளிட்டவை எத்தகைய பேரவலத்தை மக்களிடம் உருவாக்குகின்றன என்பதான விமர்சனங்களாகவும், விவசாயத்தின் தேவையினை முதன்மைப்படுத்துகின்ற ஒன்றாகவும் காப்பியம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

ஈழத்து கவிஞர்களில் முக்கியமானவர் வ.ஐ.ச.ஜெயபாலன். அவரின் ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும் எனும் குறுங்காப்பியத்தை (1987) மையப்படுத்தி போர் எவ்வாறெல்லாம் ஈழத் தமிழர்களின் வாழ்வை துயரப்படுத்தியுள்ளன என்பதை புலப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**காப்பியம் - விளக்கம்**

தமிழிலக்கியம் தொடக்க காலத்தில் தனிப்பாடல் இயற்றுதல், கதைசொல்லல், எனும் நிலைகளில் இயங்கின. ஒரு கட்டத்தில் இந்த தனிப்பாடல்கள் தொடர்நிலைச் செய்யுள் எனும் புதிய வடிவத்தை அடைந்தன. அதன் தொடர்ச்சியான இயங்குதலுக்கு கதைகள் பெரும் பங்களிப்பு செய்தன. கதையை மையப்படுத்தி வெளிவந்த இவ் இலக்கிய வகைமையைத் தொடர்நிலைச் செய்யுள் அல்லது கதைப்பாடல் என அழைக்கலாயினர். இவையே பின்னர் “காப்பியம்” எனவும் குறிப்பிடப்பட்டது. காவியம் என்பது கவி என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது கவிஞர்களிடமிருந்து தோன்றியது என்பது இதன் பொருள். இதுவே காப்பியம் என்று தமிழில் திரிந்து வளரலாயிற்று என்பதே தமிழறிஞர்களின் கருத்தாகின்றது. இத்தகைய நிலையிலேயே காப்பிய இலக்கியங்கள் ஐம்பெரும் காப்பியங்களாகவும், ஐஞ்சிறுகாப்பியங்களாகவும், நவீனக் காப்பியங்களாகவும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன.

**ஈழத்துமண்ணும் எங்கள் முகங்களும் கதையும் - மையமும்**

இலங்கையிலுள்ள பாலியாற்றின் கரையினை களமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இக்காப்பியமானது காப்பியத்தை ஆசிரியர் எட்டுப்பிரிவாக கட்டமைத்துள்ளார். இலங்கை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மல்லாவிக்குளம் எனும் கிராமம் சிங்கள இராணுவத்தால் தாக்கப்பட்டபோது மறைந்துபோன ஒரு

பெண்போராளி ரதி காப்பியத்தின் முதன்மை கதை மாந்தராக வருகிறாள். ரதி பாலியாற்றின்கரையில் உள்ள ஒரு மணல் முகட்டில் தோன்றி ஆசிரியரோடு உரையாடுவதாகக் காப்பியம் காட்சிப்படுத்தப்படுகின்றது. ரதியின் போரின் மூலமாக துயரத்துக்குள்ளான ரதியின் வாழ்வியல் மூலம் ஒட்டு மொத்த ஈழத்தமிழர்களின் இருப்பு இனங்காணப்பட்டுள்ளது. கதையில் வரும் பண்டாரவன்னியன் காப்பியத்தின் நாயகனாக விளங்குகிறான். இவன் வன்னி மண்ணின் விடுதலைப்போரில் முதன்மையான ஒரு போராளியாக விளங்கியவன். 1803 - ல் கற்சிலை மடுப் போர்களத்தில் வெள்ளையரை வீழ்த்தியவனாக அறிமுகப்படுத்தப்படுகின்றான். பண்டாரவன்னியனும் பாலிஆற்றின் மண்முகட்டிலேயே தோன்றி மறைபவனாக படைக்கப்பட்டுள்ளான். இங்கு மண்ணுள் மறைந்துபோன இரு போராளிகள் காப்பியத்தின் முதன்மை மாந்தர்களாக விளங்குகின்றனர். காப்பியத்தின் சிறப்பாக மண்ணும், மரங்களும், குதிரையும் நாயும், ஆறும் மறைந்த போராளிகளின் கூற்றும் திகழ்கின்றன. இக்கூற்றுகள் தமிழின் மரபிலக்கியமான சங்கப் பாடல்களின் கூற்றுகளோடும் பொருத்திப் பார்க்கத்தக்கன.

“நூறு நூறாண்டுகள் இதே இதே கரைகளில்
வேரும் விழுதுமாய் வாழ்பவர் நாங்கள்
நூறு நூறாண்டாய் உன்வரலாறு
நமக்குத் தெரியும்” **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-245)**

என்பதாக மருதமரங்கள் பேசுவதும்

“விடுதலைப் போரில்
நாம் தனித்திடல் என்ற பேச்சே இல்லை” **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-248)**

என மறைந்து போன போராளிகள் பேசுவதும் மரங்கள், ஆறு என்பனவற்றோடு மண்ணுள் புதைந்த போராளிகளுக்கும், மேலும் மக்களுக்குமான தொடர்பு முன்வைக்கப்படுகின்றது. காப்பியத்தில் ரதிதேவி பற்றி குறிப்பிடுகின்ற போது,

“பெண்கள் விடுதலையும் எங்கள் தாய்
மண்ணின் விடுதலையும் - இரு
கண்கள் என வாழ்ந்தாள் நமது
காலத்தை வென்றுவிட்டாள்” **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-249)**

என்பதாக பதிவு செய்வதன் மூலம் காப்பியத்தின் நோக்கம் புலப்படுத்தப்படுகின்றது. மட்டுமின்றி வன்னி மண்ணின் வரலாறு, யாழ்பாணத்தாரின் மேலாதிக்க நிலை, சுமார் 1950 - களிலிருந்தே மிகக்கடுமையாக தமிழ்மக்கள் மீது சிங்கள அரசு எந்திரம் போரைத் திணித்த வரலாறு, மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டமை, 1970-களில் கொண்டுவரப்பட்ட கல்விதரப்படுத்தல் சட்டத்தின் மூலமாக தமிழ் மாணவர்களை ஒடுக்கியமை மற்றும் எதிர்நிலையிலான போராட்டங்கள், தமிழ் முஸ்லீம்களை வேறுபடுத்திப்பார்த்தல் என்பதாக அது நீள்கிறது. அத்துடன் பெண்பற்றிய ஆண் சமூகத்தின் மதிப்பீடுகளும் அதனை விவாதத்தின் மூலம் கட்டுடைப்பு செய்தலும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மண்சார்ந்த சடங்குகளும் உணவுமுறைகளும் நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைச் சார்ந்த அவலங்களும் போரில் நிலை மாறும் வாழ்வும் இயக்கங்களின் மக்கள் விரோதப்போக்கும் என ஒன்று விடாது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இத்தன்மை குறுங்காப்பியமாயினும் ஈழம் குறித்த முழுமையான புரிதலுக்கு வழிவகை செய்கிறது.

“போரின் உள்ளும்
மரணத்துள்ளும்
ஆயிரத்துன்ப சுமைகளினுள்ளும்
வாழ்வுதான் எத்தனை இனிமையானது.” **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-309)**

என்பதும்,

"தொலை தூரத்துக் கிராமங்களிலே
சேவல் கூவும்" **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-320)**

என்பதுமாய் வெளிப்படும் வரிகள் போரியல் சூழலையும் தாண்டி வாழ்வின் மீது ஒரு நம்பிக்கையினை உருவாக்குவதோடு விடியல் எனும் சொல்லின் ஊடாய் வெளிச்சத்தை குறியீடாக்கி காட்டுகிறார். இது பெருங்காப்பிய இலக்கணக் கூறுகளின் அம்சங்களையும் பிரதிபலிப்பதாய் உள்ளது.

**விவசாயம் குறித்த பதிவுகள்**

மக்கள் வாழ்வின் ஆதாரமாகத் திகழ்வது விவசாயம். அந்த விவசாயமானது போர்ச்சூழலால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பது குறித்தும் காப்பியத்தில் வ.ஐ.சா பேசுகின்றார். அந்த வரிகள் மிக முக்கியமானவையாக அமைகின்றன.

"வயல்களை நீங்கள் கைவிட்டு விட்டால்
வரலாறெம்மை கைவிட்டுவிடுமே
ஏர் நடக்காதே எங்கள் விடுதலைப் போர்
நடக்காதே என மனம் நொந்தேன்" **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-269)**

தொடர்ச்சியாக போரின் உக்கிரத்தால் விளைவித்த பொருளிற்கு சந்தையில்லாத நிலையும் பொருள் விளைவிப்பதற்கு தேவையான இடுபொருள் அல்லது மூலப்பொருள்கள் இன்மையும் விடுதலை இயக்கங்கள் நடத்துகின்ற வரி வசூல் வேட்டையும் வாழ்வின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுகின்ற விவசாயிகளின் இருப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை விவசாயம் சார்ந்த மக்களின் வாழ்வை பெருத்த கேள்விக்குள்ளாக்குகின்றது.

**சமூக விமர்சனங்கள்**

வட்டாரம், சாதியம் குறித்த மக்களின் மனப்பான்மைகளையும் யாழ்ப்பாணத்து கந்தசாமி வாத்தியாரின் கூற்றாக காப்பியத்தில் ஆசிரியர் முன்வைக்கின்றார்.

"ஈழத்தமிழ் ஒற்றுமை முழங்குவர்
மாடு மேய்க்கும் வன்னிப்பயலுக்கு
கல்வி எதற்கென கிண்டலும் பண்ணுவார். **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-268**)

இது தமிழ் தேசியம் பேசுபவர்களின் முரண் மனநிலையை அடையாளப்படுத்துகின்ற சமூக விமர்சனமாக அமைகின்றது.

மேலும், காப்பியத்தில் ரதியின் வாழ்வியல் பேசப்படுவதின் ஊடாக அவளது பாட்டனின் வாழ்வியல் பேசப்படுகின்றது. ரதியின் பாட்டனும் கண்ணகை அம்மன் கோவில் பூசாரியுமான குஞ்சுத்தம்பியின் முதல் மனைவி இறந்து போகிறாள். இரண்டாவது மனைவிக்கு குழந்தையில்லை. கண்ணகை அம்மனிடம் வேண்டியும் பலனில்லை. இந்நிலையில் கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் திருவிழாவில் குறிசொல்லும் குஞ்சுத்தம்பி அதிகம் குழந்தைகள் பெற்றிடும் வன்னியசிங்கம் பரம்பரையில் ஒரு பெண்ணை எடுத்திட மனதினுள் தீய எண்ணம் கொள்கின்றான். மக்களின் கேள்விகளுக்கு குறிசொல்லும் குஞ்சுத்தம்பி,

நல் மழை பெய்யும், நானிலம் செழிக்கும் பால்வளம் சுரக்கும், காட்டில் மறைந்த புதல்வன் மீளுவன், கழனிகள் தோறும் பொன்னாய்க் குவியும், என்கிறவாறு நற்குறி உரைத்தவன் ஊடாகவே தன் தீய எண்ணத்தை செயல்படுத்த வன்னிய சிங்கம்! வன்னிய சிங்கம்! இதோ உன் அழகிய மகள் செல்லமுத்துவுக்கு கண்ணகைத்தாயின் கருணை என்றவன் மின்னலாய்த் தனது வேட்டியுள் இருந்தொரு தாலியை எடுத்து அவள் கழுத்தில் சூடினான். செல்லமுத்து ஒருகணம் துணுக்குற்று உறைந்து இடிந்து போகிறாள். கனவுகள் நிறைந்த அந்த சின்னம் சிறுபெண் முந்தானைத் தலைப்பால் தன் முகத்தை மூடி கண்களில் பொங்கிய கண்ணீர்

துடைத்தாள். பதறிப்போன வன்னியசிங்கமோ தாலியைப் பிய்த்து எறிய முனைகையில் பொறு பொறு என்று தடுத்தனர் முதியோர் சிலபேர் ஊரழிவுக்கு இடம் கொடுக்காதீர் கண்ணகி சித்தம் இதுவா இருக்கையில் மனிதர் மோதிக் கொள்வதில் என்ன நியாயம் என்றனர். செயலிழந்து போகிறார் வன்னியசிங்கம் என்பதாக பதிவு செய்வதன் மூலம் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் தெய்வ நம்பிக்கையின் அவலத்தை காப்பியத்தில் சுட்டுகின்றார்.

மேலும், குறிசொல்லுதல் எனும் நாட்டுப்புற நம்பிக்கை மீதான அவலமும், பூசாரி, பெரியவர்கள் எனும் முக்கியஸ்தர்களின் அவலமுமாக இணைந்து ஒரு பெண்ணுக்கு நிகழ்ந்த பேரவலத்தைக் காப்பியத்தில் ஜெயபாலன் அடையாளப்படுத்திக் காட்டுகின்றார். செல்லமுத்துவுக்கும் ஐந்து ஆண்டுகள் குழந்தை இல்லாமல் போகிறது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த வேலன் என்பவனின் தொடர்பு செல்லமுத்துவுக்கு கிடைப்பது குறியீடாய் காட்டப்படுகின்றது. பின்னர் செல்லமுத்து ஏராளமாக குழந்தைகள் பெற்றுக் கொள்கின்றாள். இந்நிகழ்வு தமிழ்ச் சமூக பண்பாட்டுக்கு எதிரானதாக விளங்குகிறது. எனினும் தலித்திய, பெண்ணியச் சிந்தனை சார்ந்த எழுத்தாக வாசிக்கிறபோது சமூக மாற்றத்தின் அவசியமாகவும் எண்ணிப்பார்க்க வேண்டியதாய் உள்ளது. இந்நிலையில் வேலனுக்கும் செல்ல முத்துவுக்கும் பிறந்த ஏழாவது குழந்தையாக ரதியின் தாய் எழிலி தங்கம்மாள் காட்டப்படுகிறார். இப்பெண்ணையும் ஆசிரியர் ஆணுக்கு நிகரான ஜனநாயகத்தன்மை கொண்ட ஒரு பெண்ணாக சித்தரித்துக் காட்டுகின்றார். ரதி தனது தாயாரின் திருமணம் தொடர்பாக கூறுகையில்,

“இலங்கை மக்களை விடவும் என் அம்மா
துணிச்சல் மிக்கவள்
கண்காணாதவன் தேவன் எனினும்
கழுத்தை நீட்டேன் என்று நிமிர்ந்தவள்” **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-261)**

என்பதாகக் குறிப்பிடுகின்றார். இப்பதிவு பெண்கள் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் செயல்படவேண்டிய அவசியத்தை ஒரு பெண்ணியவாதியைப் போலவே இப்பாத்திரம் மூலம் எடுத்துரைக்கப்படுகின்றது. இன்னொரு நிலையில் ஆசிரியர் ரதியுடன் நிகழ்த்துகின்ற உரையாடலில் பெண்ணைப் பற்றிய ஆண்மனம் மற்றும் சமூகமனத்தை கட்டுடைத்துக் காட்டுகின்றார்.

“பார் பார் போராட்டத்தில் ஆண் வதைப்பட்டால் தியாகம் என்பதும் பெண் வதைப்பட்டால் கற்பிழப்பென்பதும் ஆண்தலைப்பட்ட சமூக நியாயம்”

**(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-251)**

மேலும் காப்பியத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து தமது சொந்த ஊரான வன்னிக்கு ஆசிரியர் வருகைதந்த போது சோமசுந்தரத்தார் உடனான நலம் விசாரிப்பில் கறுப்பி அக்கா சுகமா என்ற கேள்விக்கு ஊரெல்லாம் சாவு வீடும், ஒப்பாரிப் பாட்டும் கறுப்பிக்கு மட்டும் என்ன கலியாண வீடும் தெம்மாங்குப் பாட்டுமா இருந்துவிடப் போகிறது? அடுக்களைக்குள்ளே உறியைப்போல அவள் இருக்கிறாள் என்பதான சோமசுந்தரத்தாரின் பதில் ஈழத்துப்போர்ச் சூழலில் பெண்ணின் சமூக அவலம் சார்ந்த இருப்பு குறித்த சமூக முக்கியத்துவம் வாய்ந்த பதிவாகிறது.

**போர்சார் சமூக அவலம்**

காப்பியத்தில் ரதியின் சொந்த மண்ணான வன்னிக்குளத்தில் சிங்களவர்கள் ஒரு அணை எழுப்புவதும், தமிழர்பகுதியின் வளம் அதன் மூலம் திட்டமிட்டு தடுக்கப்படுவதையும் பார்க்க முடிகின்றது. மேலும் வன்னிப்பகுதியில் தமிழர்களை இனஅழிப்பு செய்து 1958 - ல் சிங்களவர்களை குடியேற்றிய கலவரத்தில் ரதியின் தாய் இறந்து போவதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரதி தாயில்லாத பிள்ளையாக தன் மாமி வீட்டில் அடைக்கலமாகின்றாள். அங்கு மாமிமகன் மாப்பாணனும் ரதியும்

ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு வளர்ந்து வந்தனர். யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி பெறும் ரதி கல்லூரி வாழ்வில் ஒரு போராளியாக மாறிப்போகிறாள். ஒருமுறை போராளியான மாணவத் தலைவன் குண்டடிப்பட்ட நிலையில் விடுதியில் ரதியின் அறையில் நடு இரவு ரகசியமாகக் கொண்டு சேர்க்கப்படுகின்றான். இது அவளின் வாழ்வினை இன்னொரு விதமாக மாற்றி விடுகிறது. ரதி, கிருபா இருவருக்கிடையிலும் காதல் ஏற்படுகிறது.

"அச்சுறுத்தப்பட்ட அவனது இருப்பும்
சாவு நிழலாய்த் தொடர்கின்ற வாழ்வும்
எனது நெஞ்சினை இரக்கப்படுத்தும்
கருணையினால் எனை அவனிடம் இழந்தேன்" **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-296)**

போர்ச்சூழல். இயக்க விதிமுறைகள், இயக்கச் செயல்பாடுகளின் இடர்பாடுகள் காரணமாக காதல் உச்சத்தைத் தொடும் நிலையில் கிருபா தம்மை மறந்துவிடக் கூறுகிறான். பெண்கள் தொடர்பை அவன் சார்ந்து இருக்கும் புலிகள் இயக்கம் முற்றிலும் நிராகரிப்பதையும், மீறினால் மரணதண்டனையின் உறுதிப்பாடும் அவன் அந்த நிலையை எடுக்கவேண்டிய திணிப்புக்குள்ளாகிறான். இங்கு இயக்க அதிகாரத்தின் இறுக்கமும், இயக்கத்திற்குள் பெண்கள் இரண்டாம் தரப் போராளியாகப் பார்க்கப்படும் சமத்துவமற்ற அவலமும் புலப்படுத்தப்படுகின்றது.

ஈழத்தமிழர் வாழ்வை இயக்குகின்ற சக்திகளில் இரண்டு மையங்கள் முதன்மையானது. ஒன்று சிங்கள அரசு எந்திரங்களில் ஒன்றான ராணுவம். இன்னொன்று ஈழத்தமிழ் விடுதலை இயக்கங்கள். சிங்கள அரசு எந்திரத்தின் வன்மம் காப்பியத்தில் சுட்டப்பட்டிருப்பினும் அவை மிக அதிகமாக காட்சிப்படுத்தப் படவில்லை. மாறாக ஈழத்தமிழர்கள் சார்ந்த உள்விமர்சனங்களே காப்பியத்தில் ஆசிரியரால் அதிகமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

"துப்பாக்கிகள் ரவைகளை மட்டுமே அறிவீர் நீங்கள் உங்கள் உலகம் உமது முகங்களாய் சுருங்கிப்போனது எதிரியை விடவும் உமது கண்களுக்கு சக இயக்கத்தவர் சத்துருவானார்" **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-271)**

இது இதற்கு முன்னரும் பின்னரும் சேரன், சி.புஷ்பராஜா, ஷோபாசக்தி போன்ற பல படைப்பாளிகளால் பேசப்பட்டிருப்பினும் இந்த உள்விமர்சனப்போக்கு தமிழீழ விடுதலையில் தொய்வை ஏற்படுத்துகின்ற ஒரு முயற்சியாக இனங்காணத்தக்கது.

மேலும், ரதியின் மூலமாக இயக்கத் தோழர்களிடம் பேசும் போது தம்பி நீங்கள் ஒற்றுமைப்பட்டால் உயிரும் தருவார் எமது மக்கள். ஏன் உட்கொலைகள்? ஏன் சக இயக்கங்களோடு மோதல் என்பதாக வைக்கப்படும் கேள்விகளும், சோமசுந்தரத்தார் மூலமாக பேசும் போது, இளைஞர்கள் நீங்கள் ஆயுதம் தரித்தீர் வலது காலால் எங்கள் எதிரியை உதைத்தீர் என்பதனாலே இடது காலால் எங்களை மிதிக்க உரிமை தந்தது யார்? என்பதாக வைக்கப்படும் கேள்விகளோடு முள்ளிவாய்க்கால் இறுதிப்போரின் தோல்வியும், கருணாவின் பிரிவும் முதன்மைக் காரணிகளாக தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியதாகிறது.

மேலும், ஈழப் போராட்டத்தின் இன்றைய தேக்கங்களுக்கு முக்கிய காரணங்கள் என்ன என்ற ஒரு கேள்விக்கு சேரன் அளிக்கும் பதிலானது, காப்பித்தில் தமிழீழ விடுதலை இயக்கங்களின் விமர்சனம் சார்ந்து முதன்மை பெறுகின்றது.

"ஈழப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களிலும் அதற்குச் சற்றுப் பின்னரும் எமது போராட்டத்தில் தார்மீக வலுவும் தார்மீக மேலாட்சியும் எமக்கே இருந்தது. நான் முன்பும் விபரித்தபடி அநியாயங்கள், திட்டமிட்ட பொதுமக்கள் படுகொலைகள், கருத்து வேறுபாடுகளை அழித்தொழிப்பு மூலமாகத் "தீர்த்து" வைப்பது என்பன பெருமளவுக்கு இடம்பெறவில்லை. அப்படி இடம்பெற்றாலும் அவை பற்றிய விமர்சனங்கள் வாதங்களை எழுப்பக் கூடியதாக இருந்தது. இந்த நிலை விடுதலைப்புலிகள் மேலாதிக்க சக்தியாக எழுந்தமையுடன் முற்றுப்

பெற்றுவிடுகிறது. ஒரு நியாயமான விடுதலைப் போராட்டம் என்ற நிலையில் உலகின் பல பகுதிகளிலும் எமக்கு இருந்த தார்மீக ஆதரவை இப்போது பெருமளவுக்கு நாம் இழந்துவிட்டோம். சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள் மீறல், மனித உரிமைகள் மீறல் என்ற தளங்களிலும் எமக்காக வாதிட்ட பல சர்வதேச வாதிகள் இப்போது பின்வாங்கி விட்டார்கள். உமது தரப்பிலும் விடுதலைப் புலிகள் புரியும் படுகொலைகளை மறைத்துவிட்டு இலங்கை அரசை மட்டுமே குற்றம் சாட்டி (அளவிலும், தரத்திலும் அரச வன்முறை எவ்வளவோ மடங்கு அதிகம் எனினும்) உலக அரங்கில் சிறுபான்மை மக்களின் உரிமைகள், மனித உரிமைகள் மீறல் என வாதிட நேர்வதில் எமது தார்மீக பலம் குன்றிவிட்டது" **(கண்ணன், சிங்கத்தின் நகங்களும் அசோகச் சக்கரமும், ப–95, காலச்சுவடு, முதல்பதிப்பு, டிசம்பர் 2009)**

இயக்கம் குறித்த ஜீலி - ரதியுடனான உரையாடலில் விடுதலை அமைப்புகள் ஒற்றுமைப்படவும், மேலும் இயக்கங்கள் மக்களுக்குள்ளே இயக்க முதன்மையை நிறுவ முயல்வதை விடுத்து இயக்கத்துக்குள்ளே மக்கள் முதன்மையை நிறுவுவதற்கு முயற்சிக்க உணர்த்தப்படுகின்றது. அத்துடன் இரண்டாம் தர போராளிகளாய் பெண்களைத் தாழ்த்தும் போக்கைத் தகர்க்கவும் என அனைத்திற்கும் மாதர் எழுச்சியே வழி என்று குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் பெண்களின் விடுதலைக்கும், ஈழமண்ணின் பன்முகப்பட்ட விடுதலைக்கும் பெண்எழுச்சியின் அவசியம் குறித்து வலியுறுத்தப் படுவதும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகிறது.

காப்பியத்தின் இறுதியாக வன்னி செல்லும் ரதி காலவெளியின் வெறுமைச் சுவர்களைத் தகர்த்தெறிந்து மாப்பாணனை திருமணம் செய்து கொள்கிறாள். கிராமிய மணம் கமழ தொடர்ந்த உல்லாச வாழ்வின் எதிர்ப்புறமாய் படர்ந்து கிடந்த போரின் உக்கிரத்தில் ஒருநாள் முறுகண்டி பகுதியிலே இராணுவ இரயில் ஒன்று தகர்க்கப் பட்டத்தின் எதிரொலியாய் நடந்த இராணுவத் தாக்குதலில் வயலுக்குச் சென்றிருந்த மாப்பாணன் சாகடிக்கப்படுகிறான். இது ரதியின் வரலாற்றில் மீளவும் ஒரு இருள் நிறைந்த பகுதியாக மாறுகிறது.

போரின் துயர வாழ்வில் இரத்தினபுரம் கிராமம் சார்ந்த ஒரு பதிவினை வெளிப்படுத்தும் தீபச்செல்வன் "போரினால் இந்த மக்கள் மூன்று முறை இடம்பெயர்ந்தார்கள் எப்பொழுதும் அழிவுக்கும் படையெடுப்புக்களுக்கும் முகம் கொடுத்த கிளிநொச்சி நகரத்தின் சனங்கள் இவர்கள். கடந்த வன்னி யுத்தத்தின் பொழுது கையிலிருந்த துரும்பைக் கூட முள்ளி வாய்க்காலில் ஒட்டுமொத்தமாக விட்டு விட்டு முகாம்களுக்குச் சென்றிருக்கிறார்கள். இங்குள்ள பல குடும்பங்கள் யுத்தம் காரணமாக பல்வேறு இழப்புக்களை சந்தித்திருக்கிறார்கள் உயிர்களையும் அங்கங்களையும் இழந்திருக்கிறார்கள். பல உறவுகள் காணாமல் போயிருக்கிறார்கள். இந்த கிராமத்தில் உள்ள ஊனமடைந்த தமிழவன் என்ற குழந்தை தன் தந்தையை ஷெல்லுக்கு பலிகொடுத்திருக்கிறான். தாயாரின் தலையிலும் ஷெல்துண்டுகள் இருக்கின்றன. போரில் காணாமல் போன சுதர்ஜகன் என்ற தன் பிள்ளையை இராணுவ முகாம்கள் தோறும் தேடிக் கொண்டிருப்பதாக தாயார் புவனேஸ்வரி சொல்கிறார். இப்படிப் பல கதைகள் இரத்தினபுரம் கிராமத்திலிருந்து" **(தீபச்செல்வன், தமிழர் பூமி, ப – 22, எதிர் வெளியீடு, சென்னை, முதல்பதிப்பு, டிசனம்பர் 2016) என்பதாக குறிப்பிடுகிறார்.**

. "நினைவை இழந்தேன்
மாப்பாணனைச் செருவில் இழந்தேன்
எமது மதலையைக் கருவில் இழந்தேன்
தனித்த மரமாய் நெடுநாட்கிடந்தேன்" **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-312)**

எனும் காப்பியம், ரதியை ஈழத்துப் போர்ச்சூழலில் ஒரு சூழ்நிலைக் கைதியாய், வாழ்வில் தொடர்ச்சியாக துயரத்தை அனுபவித்து வரும் ஒரு பெண்ணாகக் காட்சிப்படுத்திடினும் இப்பதிவு பெண்ணிய நோக்கு சார்ந்தும், ஈழப்போர் சார்ந்தும், குறிப்பாக மக்கள் – விடுதலை இயக்கங்கள் சார்ந்தும் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்றாகிறது.

ரதிதேவியை ஜெயபாலன் காப்பியத்தில் சமூகம் உருவாக்கித் தந்த கட்டமைப்பு சார்ந்த இருப்பினை தகர்த்து சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொரு பொழுதும் புதிதாய் வாழ்வை தகவமைத்துக் கொள்கின்ற ஒரு பெண்மணியாக படைத்துக் காட்டுகின்றார். இந்த பாத்திர உருவாக்கம் பெண்ணின் வெற்றியை உறுதிப்படுத்துவதோடு ஈழத்து மக்களின் வெற்றியையும் உறுதிப்படுத்துகிறது. இங்கு,

“குடும்பம், அரசியல், பொருளாதாரம், பாலுறவு ஆகியவற்றில் ஆண்கள் தங்களது வலிமையையும் மேலாதிக்கத்தையும் வன்முறைகள் வாயிலாக நிலை நிறுத்தி வருவது உலகறிந்த உண்மை நிலை, சமூக மறு உற்பத்தி, தாய்மை, மென்மை, பெண்மை போன்றவை பெண்ணை அடிமை இருட்டறையில் இட்டு வைத்திருப்பன. குடும்பம் என்னும் நிறுவனத்தில் ஆண் முதலாளி போலவும், பெண் அவனது அடிமைத் தொழிலாளி போல ஊதிய மதிப்பற்ற உழைப்பாளியாகவும் உழன்று வருகிறாள். அத்தகைய நிலையிலிருந்து பெண் மீட்சி பெறல் வேண்டுமெனில் சுயவருவாய் உடையவளாகத் தற்சார்புடையவளாகப் பெண் மாற்றம் கண்டிட வேண்டும்.” **(வாசுகி ஜெயரத்தினம், பெண்ணியச் சுவடுகள், ப - 7)** எனும் கருத்து ஏற்புடையதாகிறது.

மேலும், இறுதியாக கவிஞனுக்கான கொதிப்பினோடும் மாணவப் பருவத்துக்கானத் துடிப்பினோடும் ஒரு பெண்ணாய் துர்க்கை போல் எழுந்தேன் எனக் குறிப்பிடும் ரதியின் செயலில் முரண்களற்ற மிகப் பெரிய மாற்றத்தை அல்லது ஒரு புரட்சியை ஜெயபாலன் நிகழ்த்திக் காட்டுகிறார்.

“எல்லா விடுதலை இயக்கத்தவர்க்கும் எனது வீடு ஆதரவானது. நடுச்சாமத்தில் யார் யாரோ வருவார் அடுப்பை மூட்டுவேன், ஆயுதங்களைப் பதுக்கி வைப்பேன், கிழிந்துபோன உடைகள் தைப்பேன், தகவல் மையமாய், வைத்திய சாலையாய், உணவு விடுதியாய் எத்தனை புதிய பரிமாணங்கள் எனது வீட்டுக்கு.” **(வ.ஐ.ச.ஜெ.பா.கவி,பக்-313)**

கால நகர்தலில் இயக்கத் தளபதி காஸ்ரோ ஒருவர் ஒருநாள் வீட்டிற்கு வருவதாய் இயக்கத்தோழர்கள் கூற அங்கு கிருபா வருகிறான். இதனால் கிருபாவுடனான நட்பு மீண்டும் தொடர்வதும், கிருபா இயக்கத்தில் இப்போது காதல் செய்ய தடையில்லை என்பதும், ரதிக்கு மாப்பாணன் குறித்த கனவுகள் வருவதும் சமூக இயங்கியலையும் மாற்றத்தையும் பிரதிபலிக்கிறது. தொடரும் உரையாடலில் போராட்டம் பற்றி குறிப்பிடுகையில்,

“நாடுகள் என்று இணைதலும் பிரிதலும்
சுதந்திரமாக
மானிட இருப்பை உறுதி செய்திடவே” (வ.ஐ.ச.ஜெ.பா.கவி, பக்-315)

என்கிறார். இவை உலகில் ஒவ்வொரு பொழுதிலும் ஒவ்வொரு திசையிலும் நடைபெறும் போராட்டங்களும் போட்டிகளும் சூட்சுமங்களும் அந்தந்த மனிதனின் தற் சுதந்திரமான ஒரு இருத்தலுக்காகவே என்பதை அறிய இயலுகிறது. இங்கு மனிதன் கழிவிரக்கம் கொள்ளப்பட வேண்டியவன் என்ற அவலமே முன்நிற்கின்றது.

**முடிவுரை**

காப்பியத்தில் வ.ஐ.ச.ஜெயபாலன், ரதி உள்ளிட்ட சில முக்கியமானப் பாத்திரங்களின் ஊடாகத் தமிழீழ விடுதலைப்போரின் வெற்றிக்கு பன்மைத்துவ தேவையையும், இயக்கங்களின் அதிகாரத்துவம் சார்ந்த பன்மைத்துவ மறுப்பையும் அடையாளப்படுத்துகின்றார். மேலும் போர்சார்ந்த சமூக அவலங்களின் ஊடாக பெண்ணுக்கான சுதந்திரமற்ற இருப்பு, சாதி, மதம், மூடநம்பிக்கை உள்ளிட்ட விமர்சனங்களும், விவசாயத்தின் தேவையையும் முதன்மைப்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளமை காப்பியத்தின் சிறப்புக்குரிய காரணிகளாக அமைகின்றன.

**துணை நூல்கள்**


1. கைலாசபதி . க - சமூகவியலும் இலக்கியமும், குமரன் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, ஏப்ரல் 2002.
2. சுப்பிரமணியன் வ.அய் – காப்பியக்கட்டுரைகள், மிரானிய அச்சகம், நெல்லை, முதல் பதிப்பு, -1952
3. செல்வகுமாரன் சு. - வலிகளை எழுதும் ஈழத்துக் கவிதை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2017
4. சேரன் - நீ இப்பொழுது இறங்கும் ஆறு, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், முதல்பதிப்பு, ஆகஸ்டு 2000.
5. புஷ்பராஜா. சி - ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம், அடையாளம், திருச்சி, முதல்பதிப்பு, டிசம்பா; 2003.
6. வாசுகி ஜெயரத்தினம், பெண்ணியச் சுவடுகள், அறிவுப் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு – 2019
7. வில்வரத்தினம்.சு, உயிர்த்தெழும் காலத்திற்காக, விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், முதல்பதிப்பு- மே 2001.
8. வையாபுரிப்பிள்ளை, காவிய காலத்தமிழ், ப–7) முத்து புக்ஸ், சென்னை, முதல்பதிப்பு – 2013.
9. ஜெயபாலன். வ.ஐ.ச - வ.ஐ.ச ஜெயபாலன் கவிதைகள் (பெருந்தொகை) ஸ்சிநேகா பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, ஏப்ரல் 2002.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Selvakumaran S., (2021) The Projection of pathetic life Ezha Tamilians' V.J.S. Jayabalan's, "Elathumanum Engal Muhangalum", Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:489-496. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ப.விக்னேஸ்வரி**
உதவிப்பேராசிரியர்
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவை 641 105

# தாலாட்டுப் பாடல்களும் தாய்மை உணர்வும்

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து சடங்கு முறைகளுக்கும் பாடல்கள் உள்ளன. தாலாட்டில் சிறந்த கற்பனைகளைக் காணலாம். அக்கற்பனை ஆகாசக் கோட்டைகள் என்றாலும், அன்னையவள் காட்டும் அன்பு கோட்டைகளாகும். மக்களின் பழக்க வழக்கங்கள் பலவற்றைத் தாலாட்டில் பார்க்க முடிகிறது. தாலாட்டுகளில் தாய் மாமனுக்குத் தான் முதன்மையான இடம். குழந்தையின் அனைத்துச் சிறப்பு விழாக்களிலும் அவர் சிறப்பிக்கப்படுகிறார். குறிப்பாக, தந்தை, சகோதரன், கணவன் ஆகியவர்களைப் பெருமையுடன் போற்றுவதுண்டு.

**முன்னுரை**

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து சடங்கு முறைகளுக்கும் பாடல்கள் உள்ளன. ‘பாட்டினைப்போல் இன்பம் பாரின்மிசை இல்லையடா’ என்றார் பாரதி. நாட்டுப்புறப் பாடலைப் பல வகையாகப் பாகுபடுத்துகின்றனர். அவற்றுள் முதன்மையானதும் முக்கியமானதுமான தாலாட்டுப் பாடல்களில் தாய்மை உணர்வை பன்முகப் பார்வையில் காண்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**இல்லறம்**

“நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம்” என்ற முதுமொழிக்கு ஏற்ப குடும்பம் என்றால் கணவன், மனைவி, மக்கள் என அனைவரும் ஒருவரை ஒருவர் அனுசரித்து வாழ்வதாகும். இத்தகைய இல்லறமே சிறந்த இல்லறம் என செந்நாபோதகர் கூறுகின்றார். இல்வாழ்க்கையில் தொடங்கி புகழ் வரை உள்ள இருபது அதிகாரங்களில் அழகாக விளக்கியுள்ளார்.

இல்வாழ்க்கையில் உள்ளவர்கள் அன்பு, ஒப்புரவு, ஈகை, புகர் வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு, விருந்தோம்பல், செய்நன்றியறிதல், இனியவை கூறல், நடுவுநிலைமை, அன்புடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் சொல்லாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, தீவினையச்சம், பயனிலை சொல்லாமை, புறங்கூறாமை போன்ற குறட்பாக்களின் கருத்துக்களை பின்பற்றி நடந்தால் வாழ்க்கை சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போன்று இனிக்கும்.

**தாலாட்டுப் பாடல்களில் தாய்மை உணர்வு**

தாலாட்டு கேள்வி ஞானம் பெற்ற தாய்மார்களால் பாடப்பெற்று கேள்விச்செல்வம் பெற்ற தாய்மார்களால் வளர்ந்த இசைத் தொகுப்பாகும். தாலாட்டு என்பது மக்களின் வாழ்க்கையோடும் அவர்களின் உணர்வுகளோடும் பிண்ணிப் பினைந்த பாடலாகும். தாலாட்டுப் பாடல்கள் இனிமையான இசையைத் தன்னகத்தே கொண்டது.

தாயின் நாவசைவில் தாலாட்டு என்னும் நல்முத்துப் பிறக்கின்றது. எனவே தான் ‘தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் பரிசு தான் தாலாட்டு’ என்பார் தமிழண்ணல். தாய் ஆழம் காணமுடியாத அன்புக் கடலில் விளைந்த வலம்புரிச் சங்கே தாலாட்டாகும். தால் என்பது நாவைக் குறிக்கும். நாவினால் ஒசை எழுப்பிப் பாடுவதாலும், நாவை ஆட்டிப்பாடுவதாலும் தாலாட்டு என்று வழங்கலாயிற்று.

குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் பாடப்படும் பாட்டு தாலாட்டாகும்.

தாலாட்டின் தொடக்கத்திலும் இடையிலும் முடிவிலும் ராராரோ, ஆராரோ, ஆரிராரோ என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டு நீலாம்பரி என்ற இன்பமூட்டும் இராகத்திலேயே தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பாடப்படுகின்றன. தாயின் அன்பையும், சேயைச் சுற்றி எழும் கற்பனையையும் பாடலாக வழங்கும் பாட்டு வடிவமே எனலாம்.

குழந்தையின் அழுகையை நிறுத்தவும் தூங்க வைக்கவும் பாடப்படும் பாட்டு தாலாட்டாகும். தாலாட்டுப் பாடல்களில் குழந்தையின் அருமை, விளையாட்டுப் பொருட்களின் சிறப்பு, அழுகைக்கான காரணங்கள், மாமன் பெருமை, தாய்மாமன் சிறப்பு, குலப்பெருமை, தாய்மாமன் சீர்வரிசைகள் தாலாட்டுப் பாடல்களின் வாயிலாக வெளிக்காட்டுவதாக அமைகின்றது.

தாலாட்டுப் பாடல்கள் தாயின் இன்ப துன்பங்களுக்கு வடிகாலாக அமைகிறது. தாய் தன் குழந்தையை உயிராகவும் உணர்வாகவும் கருதி வளர்க்கிறாள். எத்தடைகள் வந்தாலும் தன் குழந்தையின் நலன் வேண்டி நிற்பவளாகவும் விளங்குகிறாள் என்பதனை திருவள்ளுவரும்,

“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்”1

என்ற குறட்பாவின் வாயிலாக செந்நாப்போதகர் அழகாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

**தாலாட்டின் பல்வேறு பெயர்கள்**

தாலாட்டை ராராட்டு, தாலேலோ, தாராட்டு, ஓராட்டு, ஓலாட்டு, ரோராட்டு, தொட்டில் பாட்டு, திருத்தாலாட்டு எனப் பல்வேறு பெயர்கள் இன்றைய உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் வழங்கி வருகின்றன. மலையாளத்தில் தாராட்டு என்றும், தெலுங்கில் ஊஞ்சோதி என்றும், கன்னடத்தில் ஜோகுல என்றும் கூறுவர்.

**இலக்கியங்களில் தாலாட்டு**

இலக்கியத்துக்கே இலக்கியமாகத் தாலாட்டுப் பாடல்கள் விளங்குகின்றன. இவற்றில் இலக்கியச் சுவைகளையும், இலக்கிய ஒப்புமைகளையும் இலக்கியக் குறிப்புகளையும் காணலாம்.

“ஊமன் தாராட்ட உறங்கிற்றே” 2

என்ற மேற்கண்ட இலக்கிய வரிகள் முத்தொள்ளாயிரத்தில் தாலாட்டு “தாராட்ட” என்று அழைக்கப்பட்டதை உணரமுடிகிறது.

கம்பர் கம்பராமாயணத்தில் தாலாட்டு என்ற சொல்லை

“பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை” 3

என்றும் தாலாட்டுப் பாடல் ஓசை இனிமை மிகுந்தது என்பதை திருஞானசம்பந்தர்,

“பண்ணமரும் மென் மொழியார்

பாலகரைத் தாலாட்டும் ஓசைகேட்டு

விண்ணவர்கள் வியப்பெய்தி

விமானத்தோடும் இயும் மிழலையாமே” 4

என்று கூறியுள்ளதை அறியமுடிகிறது.மேலும்

“காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்

பாட்டின் சுவையதனை பாம்பறியும் என்றுரைப்பர்” 5

என்ற வரிகள் தாலாட்டுப் பாடலின் சுவையினை குழந்தை தானாகவே அறிந்து கொள்ளும் என்று மகாகவி பாரதியார் கூறுகிறார். மேலும் கண்ணதாசனும் தன் கிருஷ்ண கானத்தில்

"ஆயர் பாடி மாளிகையில்

தாய் மடியில் கன்றினைப்போல்

மாயக்கண்ணன் தூங்குகிறான்

தாலேலோ" 6

என்ற பாடல் தெளிவுபடுத்துகின்றன.

"மாணிக்கம் கட்டி

வயிரம் இடைக்கட்டி

ஆணிப் பொன்னால் செய்த

வண்ணச் சிறுதொட்டில் பேணி

உனக்கு பிரம்மன் விடுதந்தான்

மாணிக் குரலனே தாலேலோ

வையம் அளந்தானே தாலேலோ" 7

என்று பெரியாழ்வார் கண்ணனை குழந்தையாக பாவித்துப் பாடியுள்ளதைக் காணலாம்.

புண்ணியத் தலங்களுக்குச் சென்று குழந்தை வரம் வேண்டி இறைவனின் அருளால் குழந்தை பிறந்ததையும் தாலாட்டுப்பாடலில் பக்தியுடன் கூறியுள்ளாள். ஏழைத்தாய் தன் குழந்தை செல்வமும் சிறப்பும் நிறைந்த வீட்டில் பிறந்திருந்தால் அவன் வாழ்வு செழிப்பாகவும் சிறப்பாகவும் என்று எண்ணியதை

"முத்துச் சிரிப்பழகா

முத்து பல்வரிசை அழகா

வெத்துக் குடிசையிலே

விளையாட வந்தாயே" 8

ஏழைத்தாய் வேதனைகளைக் காணலாம்.

**தாலாட்டு - இலக்கியப் பார்வை**

நடையழகில் ஜெயங்கொண்டானையும், இனிமையில் இளங்கோவையும், கற்பனையில் கம்பனையும், சொல்லாட்சியில் மணிவாசகரையும், நாகரீக விளக்கத்தில் சங்கப் புலவர்களையும், ஒப்புமையாகப் பெற்று பெருமையுடன் விளங்குகிறது தாலாட்டு.

இலக்கியத்துக்கே இலக்கியமாகத் தாலாட்டுப் பாடல்கள் விளங்குகின்றன. இவற்றில் இலக்கியச் சுவைகளையும், இலக்கிய ஒப்புமைகளையும் இலக்கியக் குறிப்புகளையும் காணலாம். தாலாட்டில் சிறந்த கற்பனைகளைக் காணலாம். அக்கற்பனை ஆகாசக் கோட்டைகள் என்றாலும், அன்னையவள் காட்டும் அன்பு கோட்டைகளாகும்.

**முடிவுரை**

மக்களின் பழக்க வழக்கங்கள் பலவற்றைத் தாலாட்டில் பார்க்க முடிகிறது. தாலாட்டுகளில் தாய் மாமனுக்குத் தான் முதன்மையான இடம். குழந்தையின் அனைத்துச் சிறப்பு விழாக்களிலும் அவர் சிறப்பிக்கப்படுகிறார். குழந்தை குடும்பத்துக்கு முக்கியமான உறவு. தாய், தந்தை, பிள்ளை மூன்றும் சேர்ந்ததை குடும்பம் என்றும் அழைப்பர். எனவே தான் குழந்தைக்காகத் தவமிருக்கின்றனர். தாய்

தன் தாலாட்டில் சிலரைப் புகழ்கிறாள். குறிப்பாக, தந்தை, சகோதரன், கணவன் ஆகியவர்களைப் பெருமையுடன் போற்றுவதுண்டு.
தாலாட்டுப் பாடல்கள் குறித்தும், தாலாட்டுப் பாடல்களின் வேறு பெயர்கள் பற்றியும், தாலாட்டுப் பாடல்களின் அமைப்புக் குறித்தும் இலக்கியப் பார்வை, எனப் பல்வேறு வகைகளில் அணுகலாம் என்பதை அறியலாம்.

**துணைநூற்பட்டியல்**


1. திருக்குறள் எளிய உரை., புலவர்.சி.இராசியண்ணன், குறள் - எண் 69
2. முத்தொள்ளாயிரம் மூலமும் உரையும்., டி.கே.சிதம்பரநாத முதலியார் , பாரி நிலையம் ,சென்னை , பாடல் எண் - 62
3. கம்பராமாயணம் ,அயோத்திய காண்டம், டாக்டர் பூவண்ணன், பாடல் எண்; 13
4. தேவாரம், முதல் திருமுறை, பாடல் எண் 10
5. குயில்பாட்டு, பாரதியார், குயிலும் குரங்கும் , பாடல் எண் 60
6. ஆயர்பாடிமாளிகையில், கண்ணதாசன், குறுஞ்சி
7. நாலாயிரதிவ்ய பிரபந்தம், பெரியாழ்வார் திருமொழி, மூன்றாம் பாசுரம் திருமொழி - 1
8. நாடு போற்றும் நாட்டுப்புறப் பாடல்கள்,முனைவர். நல்லாமூர் கோ.பெரியண்ணன், (டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்றவர்), ஜோதி புக் செண்டர், சென்னை.



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Vigneshwari P., (2021) Lullabies and Motherhood, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:497-500. Cauvery College For Women, Trichy.

**முனைவர் ந . சுபா**
இணைப்பேராசிரியர் தமிழாய்வுத்துறை
காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி - 18

# குடும்ப விளக்கு காட்டும் மனையறம்

**ஆய்வுச் சுருக்கம்**

நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். குடும்பம் என்பது சமூகத்தின் சிறிய அங்கம். தனிமனித ஒழுக்கமே சமுதாய ஒழுக்கம். அந்த நல்லொழுக்கத்தை மனிதனுக்குப் பசுமரத்தாணியாய் இளம் வயதில் புகட்டுவதில் தலையாய பங்காற்றுவது குடும்பம். குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் அன்பினை ஆதாரமாகக் கொண்டு பிணைக்கப்பட்ட குடும்பத்தில் ஒவ்வொருவருமே தத்தமது கடமைகளைப் புரிந்துகொண்டு வாழ்ந்தால் இல்லறம் நல்லறமாகின்றது.

" வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் " – 1

எனக் குறுந்தொகை கூறுகின்றது. ஆனால் இன்று வினையும் மனையும் இருவருக்கும் உரித்தானது. ஆண்களை விடப் பெண்கள் அதிகமாக ஊதியம் பெறும் நிலையிலும், தங்களுக்குரிய கடமைகளைத் திறம்பட ஆற்றவில்லை எனில் குடும்பம் எனும் கட்டுக்கோப்பு சீர்குலைந்து போகும். கூட்டுக்குடும்பம் தனிக்குடும்பம் என்னும் நிலை கடந்து தனிமனித நிலைக்குத் தள்ளப்படும். பெண்கள் முன்னேற்றத்தை முன்னெடுத்துச் சென்ற பாரதிதாசன் குடும்ப விளக்கில் பெண்களின் கடமைகளைத் துல்லியமாகக் காட்டுகின்றார் . கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம் என்றவர் அக்கல்வி வாழ்வின் மேன்மைக்குப் பயன்பட வேண்டும் என்பதையும் இங்கு பதிவிடுகின்றார்

**முன்னுரை**

உலகம் தோன்றிய காலம் தொட்டு மக்கள் இனக் குழுவாக பிரிந்து அவரவர்களுக்கு என சில பண்பாடு, நாகரிகங்களை வடிவமைத்துக் கொண்டனர். வாழும் இடமும் பின்பற்றும் பண்பாடுகளுமே அவர்கள் ஒற்றுமையுடனும் கூட்டுறவுடனும் வாழ உதவியது. அவ் இனக்குழுச் சமூகத்தின் பல்வேறு பணிகள் தடையின்றியும் மோதல் இன்றியும் நிகழ குடும்பம், கல்வி, பொருளாதாரம், அரசியல், சமயம் ஆகிய நிறுவனங்கள் உதவின. மக்கள் தங்களுக்குத் தாங்களே வடிவமைத்துக் கொண்ட கட்டுப்பாடுகளும் பண்பாடுகளும் அவர்களை வேறு இனக் குழுவில் இருந்து பிரித்து தனித்து அடையாளம் காட்டியது.

லெமூரியாக் கண்டம் தோன்றிய காலம் தொட்டு, நிலை பெற்றுள்ள தமிழ்ச்சமூகம் தனக்கென சில தனித்த அடையாளங்களைக் கொண்டுள்ளது. நாணல் போல் வளைந்து கொடுத்து தங்களை நிலை பெறச் செய்வதில் குடும்பம் பெரும் அங்கம் வகிக்கின்றது. இந்நிறுவனம் சிதையாது இருத்தலே தமிழர்களின் நாகரீகம் நிலைத்திருக்க அடிப்படைக் காரணம். குடும்பத்தின் அடிப்படை அலகாகத் திகழ்பவள் தலைவி. அந்த அச்சாணி குடும்பம் எனும் சக்கரத்தையும் சமுதாயம் என்னும் தேராகிய பெரும் நிறுவனத்தையும் சிறப்புற நகர்த்திச் செல்கிறது.

**தமிழரின் அடையாளங்கள்**

தனிமனிதனின் அடையாளத்தை சுட்டுவதில் முதன்மை இடம் வகிப்பது அவனுடைய முகச் சாயலும் பெயரும் ஆகும். தோற்றம் இயல்பாக மரபில் வருவது. குடும்ப விளக்கில் பாரதிதாசன் தன் பாத்திரங்களுக்கு வடமொழி கலவாத தூய

தமிழ்ப் பெயர்களைச் சூட்டியுள்ளார். மணவழகன், தங்கம், மாவரசு, மலர்க்குழல், நாவரசு, நகைமுத்து, வேடப்பன், அமிழ்தம்மை, இளஞ்சேரன், சின்னான், கருப்பண்ணன், பொன்னி என்ற பெயர்கள் தமிழரின் பெயர் சார்ந்த அடையாளங்கள்.

சமூகத்தின் அடையாளத்தைச் சுட்டுவது அவர்தம் பண்பாடும் வாழ்வியல் நெறிகள். ஓர் இனத்தின் பண்பாடு என்பது அவ்வினத்தின் கலை, நாகரிகம், கடவுள் நம்பிக்கை, உணவு, பழக்கவழக்கங்கள் அனைத்தையும் உள்ளடக்கியது. "தமிழன் குழுவாக வாழ்க்கை நடத்திய காலம் முதற்கொண்டே போர்அறம் மிக்கவன்: காதல் வலி அறிந்தவன்: களவும் கற்பும் அவன் கண்டறிந்த வாழ்வியல் நெறிகள் ஆகும் அன்பு, கொடை, இரக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பன வாழ்வியல் நெறிகளாகும். இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தவன் அகப்புற இலக்கியங்களில் முழுமை கண்டவன்.தனித்தியங்கும் பிற மொழிகளுக்குத் தலைமை தாங்கும் பக்குவமும் வழிகாட்டலும் கொண்டவன்."2

**இல்லறமே நல்லறம்**

இல்லறத்தை நல்லறமாக துறவறத்தினும் மேலாகக் கண்டவன் தமிழன். குடும்பத்தில் ஒரு பெண் சிறப்புற விளங்கினால் குடும்பம் விளக்காக ஒளிரும் என்கிறார் பாரதிதாசன். தமிழரின் மதமாகிய இந்து மதம் துறவறத்தில் இருந்து பாவம் செய்வதைக் காட்டிலும் இல்லறத்தில் இருந்து தன் கடமையை சிறப்புற ஆற்றுவது வேள்வியைவிட உயர்ந்தது என்கிறது.

" ஞாலத் தொடர்பினால் நல்லின்பம் காணலன்றி

ஞாலத்துறவில் இன்பம் நிலைப்பதும் ஏலுமோ " – 3

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை வாழ்க்கையில் அறநெறிப்படி வாழ்ந்து பிறரையும் அவ்வழி வாழச் செய்பவன் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுவான்

**தாலாட்டு**

இல்லறத்தின் பயனாக மக்கட்பேறு பெற்றவுடன் தாலாட்டு பாடுதல் தமிழர்தம் மரபு. நாவினை அசைத்துத் தமிழ்த் தேன் குழைத்து தமிழர் தம் பெருமையைப் பறைசாற்றி தாலாட்டுப்பாடல் பாடுவதாகக் காட்டியுள்ளார் பாவேந்தர்.

"பாடினியார் நச்செள்ளை பார்புகழும் மூதாட்டி.......

......முன்தோன்றிய மூத்த குடியின் திருவிளக்கே" - 4

என்ற தாலாட்டுப் பாடலின் மூலம் வரலாற்றுப் பெருமைகளும் மூத்தோரின் சிறப்புகளும் கூறப்படுகின்றன. இளம்பிராயத்தில் இருந்து புகட்டப்படும் இந்த நற்சிந்தனைகளே நம்பண்பாடு இன்று வரை நிலை பெறக் காரணமாகியுள்ளது. பொருளாதார முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு பணிக்குச் செல்லும் பெண்கள் இக்கருத்தை மனதில் கொண்டு குடும்பத்தை வடிவமைப்பதிலும் சற்று கவனத்தைச் செலுத்துவதும் ஆண்கள் அவர்களுக்கு துணை நிற்றலும் சிறந்ததொரு சமுதாயம் உருப்பெற வழிவகுக்கும்.

**காதல்**

தமிழர் அக வாழ்வின் இரு கூறுகள் களவு,கற்பு. தொல்காப்பியர் எண் வகை மணங்களைச் சுட்டுகின்றார். ஆனால் சங்க இலக்கியம் களவு, கற்பு மணத்தை மட்டுமே மையப்படுத்துகின்றது. குறுந்தொகை காதலர் உள்ளம் இரண்டறக் கலந்ததனை,

" செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே " – 5

என்று உரைக்கின்றது. கம்ப ராமாயணத்திலும் திருமணத்திற்கு முன்பே ராமன் சீதை இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர் என்கிறார் கம்பர்

"கண்ணொடு கண் இணை கவ்வி ஒன்றை ஒன்று

உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் " – 6

பாரதிதாசனும் எளிய உவமை மூலம் களவுக் காதலை கண்முன் நிறுத்துகிறார்.

"வாட்டிய பசி நோயாளி வட்டித்த சோற்றிலே கண்

நாட்டுதல்போல என்மேல் கண்நாட்டினான் இமைத்தலின்றி " - 7

என்று நகைமுத்து வேடப்பன் காதலைக் காட்டுகின்றார்.

**முதியோர் காதல்**

குடும்ப விளக்கு இளையோர் காதலை மட்டுமின்றி முதியோர் காதலையும் கண்முன் நிறுத்துகிறது. அறுபது ஆண்டுகாலம் நிறைவுற்ற பின் குழந்தைகள் பெற்றோர்களை மணக்கோலத்தில் நிறுத்திப் பார்க்கும் மரபு இன்றைய தமிழர்களின் மரபாக உருவெடுத்துள்ளது. இளமையில் ஒருவர் உள்ளத்தில் ஒருவர் அன்பை விதைத்ததால் முதுமையில் உயிருடன் இருக்கும் இருப்பிலேயே இன்பம் காணவிழைகின்றது.

"புதுமலர் அல்ல காய்ந்த புற்கட்டே அவள் உடம்பு.....

.........எது எனக்கு இன்பம் நல்கும் இருக்கின்றாள் என்பது ஒன்றே " -8

என்று மணவழகர் உரைக்க மூதாட்டி தங்கம்,

"அறம்செய்த கையும் ஓயும் மக்களை அன்பால் தூக்கி....

..........சுமக்கும் என் மனம் மட்டும் ஓய்தல் இல்லை " - 9

என்ற மூதாட்டி கூறுகிறார். முதுமையிலும் இணைந்து வாழும் தமிழர் பண்பாடு உலகம் போற்றும் பண்பாடாக என்றும் பார்க்கப்படுகின்றது.

**திருமணம்**

பெற்றோரின் சிறு ஊடலுக்குப் பின் களவு கற்பாக நிலை பெறுகின்றது. மணமகன் வீட்டில் மாலை மாற்றிட இருவருக்கும் திருமணம் நடந்தேறியதும்

"இற்றைநாள் போல் என்றைக்கும் மகிழ்க

மேலும் உம் வாழ்வே ஆலெனச் செழித்து

அறுகுபோல் வேர்பெற! குறைவில்லாத மக்கட்பேறு மல்குக" - 10

என்ற உயர்ந்தவர்களுடைய வாழ்த்தோடு சந்தனம், வெற்றிலைபாக்கு, விருந்து படைத்தல் ஆகிய தமிழர் பண்பாடு காட்டப்படுகின்றது. திருமணம் முடிந்த பின் பொறுப்புகளை ஏற்க வேண்டி தனிக்குடித்தனம் வைக்கும் தமிழர் மரபு சிலப்பதிகாரத்தைப் போலவே இந்நூலிலும் படைத்துள்ளார் பாரதிதாசன்.

" எங்கள் மனம் முடித்து

தட்டாமல் ஈக தனி இல்லம் " – 11

என்று பெண்ணே முன்மொழிவது போல் சுட்டுகின்றார் புரட்சிக்கவி. திருமணத்திற்குப் பின் பொறுப்புணர்வு, சுதந்திரம் என்னும் அடிப்படையில் தனிக்குடித்தனம் வலியுறுத்தப்படுகிறது. சிறிது காலத்திற்குப்பின் பெற்றோர் முதுமை எய்தியதும் கூட்டுக் குடும்பமாய் வாழும் தமிழர் மரபு முழுமையாக சித்திரிக்கப்பட்டுள்ளது .

**விருந்தோம்பல்:**

தமிழரின் சிறந்த பண்பாடு அடையாளங்களில் ஒன்று விருந்தோம்பல் இல்லத்தரசி என் கடமையாக விருந்தோம்பல் வேறு எந்த இனமும் கூறவில்லை.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு." - 12

என்கிறது வள்ளுவம்.

குடும்ப விளக்கின் தலைவிக்கு மாமனார் உரைக்கும் வாசகங்கள் விருந்தோம்பலை மட்டுமின்றி முன்னொரு சொல் பொன்னேபோல் போற்றும் தமிழனின் அடையாளத்தை காட்டுகின்றது விருந்தினரை உபசரிக்கும் முறையை நான்கு பக்கங்களில் பட்டியலிட்டு மாமியார் உரைப்பதுவும் செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருக்கும் தமிழனின் அடையாளம். திருமணம் முடிந்தபின் தலைவாழை இலை போட்டு விருந்து படைத்த தமிழர் மரபும் சுட்டப்படுகிறது.

தமிழகத்தின் அடையாளங்களாக திகழும் அவர்களுடைய பண்பாட்டுக் கூறுகளை உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் பரவிக் கிடந்தாலும் அவர்களை ஒருங்கிணைய செய்கின்றன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக காத்து வந்த தமிழர்களின் உயரிய பண்பாடுகள் இனிவரும் தலைமுறை யால் காக்கப்படும் போது தமிழர் மென்மேலும் மேன்மை அடைவர்.

**சான்றெண் விளக்கம்:**

1. www.tamilvu.org/http - குறுந்தொகை பாடல் எண் – 135
2. வாழ்வியல் பண்பாட்டுத் தாளிகைகள் – முனைவர் ச.வனிதா ப – VIII
3. குடும்ப விளக்கு மூன்றாம் பகுதி – பாரதிதாசன் ப – 57
4. மேலது ப – 74,75
5. http://sangacholai.in – குறுந்தொகை பாடல்.எண் – 40
6. http://dinamalarnellai.com கம்பராமாயணம்
7. குடும்ப விளக்கு மூன்றாம் பகுதி – பாரதிதாசன் ப – 11
8. மேலது ப – 100,101
9. மேலது ப – 104,105
10. குடும்ப விளக்கு முதல் பகுதி – பாரதிதாசன் ப – 40
11. மேலது ப - 31
12. https://www.valaitamil.com திருக்குறள் 81
13. குடும்ப விளக்கு முதல் பகுதி – பாரதிதாசன் ப – 42
14. குடும்ப விளக்கு மூன்றாம் பகுதி – பாரதிதாசன் ப – 41

**துணைநூற் பட்டியல் :**


1) பாரதிதாசன்
குடும்ப விளக்கு
பாரி நிலையம், சென்னை - 108

2) முனைவர் ச.வனிதா
வாழ்வியல் பண்பாட்டுத் தாளிகைகள்
முதல்பதிப்பு 2015, காவ்யா பதிப்பகம்



**Cite this book Chapter:** S. Ramalakshmi and Subha N., (2021) Domestic Ethics in "Kudumba Vilakku", Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:501-504. Cauvery College For Women, Trichy.

**முதுமுனைவர் மு.ஐயப்பன்,**
பல் துறைத் தமிழியல் ஆய்வாளர் மற்றும் பேராசிரியர் (உதவி),
தமிழ்த்துறை, வ.உ.சிதம்பரம் கல்லூரி,
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு – 628008.

# ஆபிரகாம் பண்டிதரின் ஆதித் தமிழிசை ஆய்வு மீட்டெடுப்புகள்

## ஆய்வுச்சுருக்கம்

'தமிழிசை ஆய்வுகளை இந்திய-தமிழக அளவில் முதன் முதலாகத் தொடங்கி வைத்தவர் ஆபிரகாம் பண்டிதர்' என்ற கருதுகோளின் அடிப்படையில் "ஆபிரகாம் பண்டிதரின் தமிழிசை ஆய்வுகளும்-ஆய்வு மீட்டெடுப்புகளும்" எனும் தலைப்பில் எழுதப்பட்ட இந்த ஆய்வுக் கட்டுரை,ஆபிரகாம் பண்டிதரின் ஆய்வுச் செயற்பாடுகள் வழிநின்று,

1) தமிழ் மொழிக்கு இயற்கையான இசைமரபு உண்டு.

2) தமிழ் மொழியில் மரபான இசைத் தமிழ் நூல்கள் உண்டு,

3) பிறமொழி இசை மரபின் வளர்ச்சி என்பது தமிழிசை மரபினை உள்வாங்கியே வளர்ச்சி பெற்றிருக்கிறது.

என்ற வரலாற்று உண்மைகளை ஆய்வுலகிற்கு வெளிப்படுத்தும் விதமாகவே மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

## முன்னுரை

'கருணாமிர்த சாகரம் மற்றும் கருணாமிர்த சாகரத் திரட்டு' என்ற இரு தமிழிசை நூலாய்வுக் களஞ்சியங்களைத் தமிழுலகிற்கு தந்து, இவற்றின் வழியாகவே தமிழில் இசைத்தமிழ் வரலாற்று ஆய்வுகளையும்,ஆய்வு மீட்டெடுப்புகளையும்,தமிழிசை ஆய்வு மறுகட்டமைப்புகளையும் இந்திய-தமிழக அளவில் முதன் முதலாகத் தொடங்கி வைத்தவரும்,தாய்த்தமிழ் இசையே வடக்கில் பெருமளவில் இந்துஸ்தானி இசையாக மரபாக உருவெடுத்தது என்று யாரும் மறுக்கவியலாதபடி தீர்க்கமான ஆய்வுகளின் வழிநின்று உரைத்தவரும்,சிலம்பில் காணப்படுகிற தமிழிசை குறித்த தகவல்கள் தான் இன்றையக் கருநாடக, இசை, இலக்கண நூல்களுக்கான அடிப்படை ஆதார மூலங்களாகி இருக்கின்றன என்று நிறுவியதுடன்,நமது பழந்தமிழ் இசை மூலங்களை அடியொற்றித் தான் உலகின் வழக்காகியிருக்கிற இசை மரபுகள் அனைத்தும் உருவாக்கப்பட்டன என்று ஆணித்தனமாக முறையான ஆய்வுகளின் வழிநின்று அறிவியல் பூர்வாக அறிவித்த
வருமாகிய தஞ்சை தமிழ்த்திரு ஐயா ராவ்சாகேப் ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் தமிழிசை சார்ந்த வரலாற்று ஆய்வுகளையும்-ஆய்வு மீட்டெடுப்புகள் மற்றும் மறு கட்டமைப்புகளையும் குறித்து விரிவாக

மீளாய்வு செய்யும் நோக்கில் இந்தக் கட்டுரைப் பின் வருமாறு நகர்கின்றது.

- தமிழ் மொழிக்கு இயற்கையான இசைமரபு இல்லை,
- தமிழ்மொழியில் மரபான இசைநூல்கள் இல்லை,
- பிற மொழியிலிருந்து இசை சார்ந்து தமிழன் யாசகம் பெற்றவையே மிகுதி

என்றெல்லாம் ஒரு காலகக்கட்டம் வரையிலும் குருட்டுத் தனமாகக் கூறப்பட்டு வந்தது. இக் குருட்டுக் கருத்துகளுக்கு முடிவு கட்டும் வகையில், பழமரபு இசைத்தமிழின் வளர்ச்சியையும், அதன் கலையியல் நுட்பங்களையும் உலகிற்கு எடுத்துரைக்கும் விதமாகத் தமிழ்த்தாத்தா ஐயா உ.வே.சாமிநாதையர் 1892-இல் முதல் பெருங் காப்பியமானச் சிலப்பதிகாரத்தை அச்சில் பதிப்பித்து வெளியிட்ட நிகழ்வு இயல்பாக நடந்தேறியது.

முத்தமிழ்க் காப்பியமான இந்நூலுக்கு பின்னர் எழுந்த அரும்பத உரை, அடியார்க்கு நல்லார் உரை போன்ற பிற உரை நூல்களும் நமது இசைத்தமிழின் காலப் பழமை மிகுந்த தனித்துவ அடையாள மரபின் சிறப்புகளை உலகிற்கு எடுத்து உணர்த்தின. இயல், இசை, நாடகமென்ற மூன்றையும் அகத்தே கொண்ட பெருங்காப்பியமானச் சிலப்பதிகாரத்தையும் அதற்கே உரித்தான அரும்பத உரை, அடியார்க்கு நல்லார் உரை போன்ற உரை நூல்களையும் ஆய்வுக்களமாகக் கொண்டு தான் முதன்முதலில் மரபு இசைத்தமிழ் மீட்டெடுப்பு மற்றும் மறுக் கட்டமைப்புச் சார்ந்த ஆய்வுகள் பரவலாகத் தோன்றின.

இவ்வகையில்,

- தமிழில் இசைத்தமிழ் வரலாற்று மீட்டெடுப்பையும் மறு கட்டமைப்பு நோக்கிலான ஆய்வுகளையும் முதல் நபராகத் தொடங்கி வைத்தவரும்,
- தாய்த்தமிழ் இசையே வடக்கில் பெருமளவில் இந்துஸ்தானி இசையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும்,
- சிலப்பதிகாரத்தில் காணப்படும் தமிழ் இசை குறித்த தகவல்கள் தான் இன்றைய கருனாடக இசையில் உள்ள மூல இலக்கணங்களாகி இருக்கின்றது என்றும்,
- நமது பழந்தமிழ் இசை இலக்கணத்திலிருந்தே உலகின் வழக்காகியிருக்கிற பிற இசைமரபுகள் அனைத்தும் வந்தன என்றும் ஆணித்தனமாக யாரும் மறுக்கவியலாதபடி முறையான ஆய்வுகளின் வழி நின்று அறிவியல் பூர்வகமாக அறிவித்தவர் தான் தஞ்சை தமிழ்த்திரு ஐயா ராவ்சாகேப் ஆபிரகாம் பண்டிதர் அவர்கள்.

இவர் தன் வாழ்நாள் முழுமையிலுமாக ஆய்வுகள் செய்து அதன் பயனாக எழுதி வெளியிட்ட "கருணாமிர்த சாகரம்" என்ற நூல் தான் தமிழிசையை மையமிட்ட இன்றையச் சமகாலத் தொடர் ஆய்வுகளுக்கு எல்லாம் முதல் முன்னோடி வழிகாட்டி நூலாக விளங்குகிறது. மட்டுமின்றி, இசைத்தமிழ் ஆய்வினைத் தொடங்கி வைத்ததோடு நின்றுவிடாமல் தமிழில் இசைப் பயிற்சி நூல்கள் இல்லை என்ற வரலாற்று வாதத்தை உடைக்கும் விதமாகத் தமிழில் உள்ள பண்கள், இராகங்களுக்கான இசைக் குறிப்புகளுடன் கூடிய பயிற்சிப் பாடல்கள் அடங்கிய "கருணாமிர்த சாகரத் திரட்டு" என்ற நூலையும் கூடுதலாக தமிழிசை உலகிற்கு இசைக் களஞ்சியமாகவே உருவாக்கி வழங்கினார்.

தமிழிசை ஆய்வுலக வரலாற்றின் முதல் முன்னோடி என்கிற அடையாளம் மட்டும் இவருக்குரியது அல்ல.

ஆங்கிலேயர்களிடம் அடிவருடிகளாக, அல்லக்கைகளாக, கைக்கூலிகளாக இருந்தவர்களுக்கும், இன்ன பிற ஜமீன்தார்களுக்கும் மட்டுமே கொடுக்கப்பட்ட ராவ்சாகேப் போன்ற உயரிய கௌரவப் பட்டத்தை, வேளாண்மைக் கண்டுபிடிப்புகளுக்காகப் பெற்ற நம் தமிழ்நாட்டின் முதல் முன்னடையாள விவசாயி

என்கிற அடையாளமும் தான் ஐயா ஆபிரகாம் பண்டிதருக்கு உரியதென்பது குறிப்பிடத்தக்கது. பண்டிதர் ஐயா அவர்கள் அன்றையத் திருநெல்வேலி மாவட்டம், (இன்று தென்காசி மாவட்டம்) தென்காசி வட்டத்தில் உள்ள சாம்பவர் வடகரை என்னும் ஊரில் தமிழ்த்திரு ஐயா முத்துச்சாமி - தமிழ்த்திரு அம்மா அன்னம்மாள் தம்பதிகளுக்கு முதல் மகனாக 2.8.1859 இல் பிறந்தார்.

இளம் வயது முதலாகவே தனக்கே உரித்தான இயல்பானப் பாரம்பரியத் தன்னறிவின் எழுட்சியால் உலகிலேயே அதிகச் சுவை நிறைந்த வணிகப் பயிராகிய "ராஜகரும்பு" எனும் புதியக் கரும்பு வகையை உருவாக்கியதாலும், முற்றிலும் இயற்கை முறையில் விவசாயத்தில் அதிக மகசூல் உற்பத்தியைத் தரும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்ததாலும் ஆங்கிலேய அரசு நம் தஞ்சை மண்ணின் விவசாயியாகிய இருந்த ஐயா ஆபிரகாம் பண்டிதருக்கு ராவ்சாகேப் என்ற உயரிய பட்டத்தை கடந்த நூற்றி அறுபத்து இரண்டு (162) ஆண்டுகளுக்கு (படம் 1917 ) முன்பே வழங்கி கௌரவித்திருக்கிறது.

முழுமையாக நூற்றி அறுபத்தி இரண்டு (162) வருடங்களுக்கு முன்னால், பல்வேறுபட்டத் துறைகளிலும் ஆழங்கால் பட்ட அனுபவ மேதையாகத் திகழ்ந்து வெவ்வேறானச் சரித்திரச் சாதனைகளையும், புதிய புதியக் கண்டுபிடிப்புகளையும் நிகழ்த்திக் காட்டியப் புகழோங்கியத் தமிழர் தான் ஐயா ஆபிரகாம் பண்டிதர்.



பண்டிதர் அவர்களின் குடும்பம்



பிறப்பு : 02-08-1859
இறப்பு :31-08-1919 (அகவை 60)

இவர் ஈடுபடாத துறைகளே இல்லை எனும் படிக்கு,

1) இயற்கை விவசாயம்,

2) இயற்கை மருத்துவம்,

3) தமிழ் ஆசிரியர்,

4) வானியல்ஆய்வாளர்,

5) சோதிடர்,

6) பாரம்பரியச் சித்த மருத்துவர்,

7) சித்த மருந்து உற்பத்தி நிபுணர்

8) புத்தகப் பதிப்பாளர்,

9) அச்சக உரிமையாளர்,

10) புகைப்படக் கலைஞர்,

11) சிறந்தப் பாடலாசிரியர்,

12) பன்மொழிப் புலவர்,

13) இசைக்கருவி வடிவமைப்பாளர்,

14) நிலத்தியல் அறிஞர்

15) அரசின் உயரிய விருதுகளைப் பெறும் அளவிற்கான வேளாண்மை விஞ்ஞானி

என மிக நீண்டதொரு பல்துறை அறிவு சார்ந்த ஆற்றலைத் தன் சுய ஆராய்ச்சித் தேடலோடும், அதன் வழிப்பட்ட ஆதாரப்பூர்வமானக் கண்டுபிடிப்புகளுடன், உண்மை ஆய்வுத் தகவல்களோடும் நிருபித்து தனக்கேயான ஆழமான முத்திரைகளை கால் பதித்த இடங்களிலெல்லாம் பொறித்திருந்தார். இப்படியான ஆற்றலுடையப் பன்முக ஆளுமையாளராக வாழ்ந்து தமிழிசை மரபை மீட்டெடுத்து மீண்டும் கட்டமைத்த ஐயா பண்டிதர் அவர்களுக்கு நம் தமிழ்கூறு நல்லுலகம் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.



**கருணாமிர்த சித்த மருத்துவக் கூடம்**

இவர் வழியாகத் தான் தமிழிசைத்துறையில் இன்று ஏழிசைவானர் ஐயா ந.மம்மது ஐயாவில் தொடங்கிப் பல்வேறு அறிஞர் பெருமக்கள் தோன்றி எண்ணற்ற ஆக்கப்பூர்வமான ஆய்வுகளையும், அதன் வழிப்பட்டப் பல்வேறு கண்டுபிடிப்புகளையும் வெவ்வேறு வடிவங்களில் தருவதன் வழியாகத் தொடர்ந்து தமிழிசைக்கே உரியப் புதிய வரலாற்றுக் கட்டமைப்புகளை மேம்படுத்தியும், மீட்டமைத்தும் வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு துறைகளில் மேதையாக இருந்து பல்வேறு சாதனைகளையும் புதியக் கண்டுபிடிப்புகளையும் நிகழ்த்திக்காட்டியத் தமிழிசை ஆய்வறிஞர் ஐயா ஆபிரகாம் பண்டிதர்.அவருடைய நினைவு நூற்றாண்டில் நாம் நம்மைத் தமிழிசைஆய்வுகளை நவீனத்துவ நோக்கில் கட்டமைத்துக் கொள்ளும் விதமாகத் தயார் படுத்திக் கொள்வதே ஐயாவிற்கு செய்கிற சரியான நன்றிக்கடனாக இருக்க முடியும் என்பதை இங்கு வலியுறுத்த விழைகிறேன்.

ஒரு மிகச்சிறந்த இசைக்கலைஞராகத் தன்னை வளப்படுத்திக் கொண்ட ஐயா ஆபிரகாம் பண்டிதர் ஏராளமானப் பண்களிலும், ராகங்களிலும் ஆழமான ஆய்வுகளை நிகழ்த்திக் கொண்டே இருந்தார். இதனால் ஏறக்குறைய நூறு ராகங்கள் வரையிலும் தனது சுய உழைப்பின் வழி முழுமையாக அறிந்திருந்தார்.

இப்படி ஓய்வின்றித் தமிழிசை மீட்டெடுப்பை தமிழிலக்கிய-இலக்கணங்கள் வழி நின்று இவர் நிகழ்த்த, கர்னாடக இசையின் போதாமையையும் போலிப் புனைவு வரலாறுகளையும் நன்கு உணர்ந்தது தான் பிரதானக் காரணமாகிறது.

இந்த உணர்தலை, நம் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் அரசவையில் இருந்த கோவிந்ததீட்சிதர் என்பவர் மகன் வேங்கிடமகி என்பவர் 300 வருடங்கள் முன் எழுதிய சதுர்த்தண்டிப் பிரகாசிகை எனும் நூலில் மேளகர்த்தா ராகங்கள் 72 இருக்கிறது என்று எடுத்துக் காட்டி உரைத்தக் கருத்தைக் குருட்டுத் தனமாக நாயக்க மன்னர்கள் ஏற்றுக்கொண்டச் செயல் என்பது மேலும் கூர் தீட்டியது.

திண்டுக்கல்லில் ஐயா அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அன்றையச் சூழலில், இசையை முறையாகக் கற்றுக்கொண்டார். பின் காலத் தொடர்ச்சியில் தஞ்சை மண்ணிற்கு வந்தப் பிறகு தமிழிசையின் மீதுள்ளத் தீராக்காதலினால் பல்வேறு வாத்தியங்களை இசைப்பதிலும் தேர்ச்சிப் பெறுகிறார்.

இயல்பாகவே எதையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்திடும் பண்டிதருக்கு கர்னாடக இசையின் அடிப்படைகள் குறித்து சதுர்த்தண்டிப் பிராகாசிகை நூலில் வேங்கிடமகி சொல்லிய 72 ராகங்கள் இருக்கிறது என்ற கருத்தின் மீதும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்வதின் மீதான மனோபாவம் மீதும் பல்வேறு கேள்விகள் இவருக்குள் வெகு யதார்த்தமாக எழுகிறது.

எங்கெங்கோ இது குறித்த வரலாற்றுச் சான்றுகளைத் தேடி நீண்ட ஆய்வுத் தேடலைச் செய்கிறார். பின் தன் நெடியத் தேடலில் எதுவும் ஆதாரப்பூர்வமாக கிடைக்காமையால், அதற்கான விடைகளைத் தேடி நம் தமிழ்ப் பெருங்காப்பியமானச் சிலப்பதிகாரத்தை முன் வைத்து ஆராய முற்படுகிறார்.

இதன் மூலம் சிலப்பதிகாரம் என்பது வெறும் கதைப் பனுவல் மட்டும் அல்ல,அது இசை மற்றும் நடனம் குறித்த விரிவான வரலாற்றுத் தடயங்களைக் கொண்டி ருக்கும் நிகரற்ற பெருங்காப்பியம் என்பதையும் உள்வாங்கிக் கொண்டு, அதில் உள்ள மாதவியின் நடன அரங்கேற்றக் காதைப் பகுதியிலும்ஆய்ச்சியர் குரவை மற்றும் வட்டப்பாலை போன்ற இன்னபிற பகுதிகளிலும் நுட்பமான ஆய்வுகளை மேற்கொள்கிறார்.

இதன் இறுதியில் தான் கர்னாடக இசை சொல்லும் 72 மேளகர்த்தா (தாய்ப்பண்கள்) ராகங்களுக்கு அறிவியல்பூர்வமாக ஒரு போதும் வாய்ப்பில்லை என்பதைக் கண்டறிகிறார். மேலும், ராக-தாள வகைகளில் இருக்கிற சுத்த மத்திமம், பிரதி மத்திமம் என்ற இரண்டிலும் தலா ஒவ்வொன்றிலும் 16 ராக-தாளங்கள் கிளைகளாக இருக்க மொத்தமாக 32 தாய்ப் பண்களுக்கே வாய்ப்பி ருக்கிறது என்ற ஆய்வு உண்மையை வெளிப்படுத்தினார். இதோடு விட்டுவிடாமல், இந்த 32 தாய்ப் பண்களில் (ராகங்கள்) உருவாகக்கூடிய ஜன்ய ராகங்கள் எனும் சேய்ப் பண்கள் உருவாகும் முறை குறித்தும் விரிவானத் தளத்தில் தொடர் ஆய்வுகளையும் மேற்கொள்கிறார்.

இப்படியான நெடிய ஆய்வுகளின் இறுதியில் தான் தமிழ்ப் பண்களுக்குள் நுட்பமாக ஒளிந்திருக்கும் கணித முறையை உற்று நோக்குகிறார்.அதற்கு தகுந்த ஆய்வின் வழி நின்று அந்தக் கணித முறையை விரிவுசெய்து புதிய ராகங்களை எப்படி உருவாக்கிட முடியும்? என்பதற்கான விடையைக் கண்டறிகிறார்.

கண்டடைந்ததை ஒரு கணிதச் சமன்பாட்டு வடிவில் உருவாக்கிப் பின் அதற்கு “ராகப் புடக் கணிதம்” என்று பெயர் சூட்டினார். பண்டிதர் அவர்கள், தான் கண்டறிந்த இந்தக் கணித முறையை முழுமையாகப் பயன்படுதினால் பழையத் தமிழ் இசையாசிரியர்கள், சொல்வது போலப் புதியப் பல்வேறு ராகங்களை ஆயிரக் கணக்கில் உருவாக்கிட முடியும் என நிறுவினார்.

தமிழிசைக்குரிய இலக்கணத்தினை இலக்கிய-இலக்கண நூல்களின் வழி நின்று தமிழிசை மீட்டெடுப்பு மற்றும் கட்டமைப்பிற்கான விஞ்ஞான வழியை வகுத்த பெரும் இசை அறிவியல் - ஆய்வியல் பேரறிஞர் ஆபிரகாம் பண்டிதர் ஐயா அவர்கள் கிட்டத்தட்ட 12,000 தனித்துவமான ராகங்கள் தமிழிசையில் உள்ளன எனத் தமிழ் இலக்கிய - இலக்கண நூல்கள் குறிப்பிடுவது உண்மை என நிறுவி முடிப்பதற்குள் பொல்லாத காலம் அவரை 1919 ஆகஸ்ட் 31 அன்று தன்வசம் ஏற்று இயற்கைக்குள் இருத்திக் கொண்டது. குறிப்பிடுவது உண்மை என நிறுவி முடிப்பதற்குள் பொல்லாத காலம் அவரை 1919 ஆகஸ்ட் 31 அன்று தன்வசம் ஏற்று இயற்கைக்குள் இருத்திக் கொண்டது.




தமிழுலகத்திற்கும் தமிழிசைக்கும் மட்டுமன்றி உலக இசை மரபிற்கே பேரிழப்பை உணர்த்தி விட்டு ராவ்சாகேப் ஆபிரகாம் பண்டிதர் ஐயா அவர்கள் அவர் உருவாக்கியப் பண்டிதர் தோட்டத்திற்குள் வரலாற்றுப் புகழோடு நெடிய துயில் கொண்டு வருகிறார்



சங்கீத வித்யா மகாஜன சங்கம்
27-05-1912

நாமோ அவரின் ஈடு இணையற்றத் தமிழிசை ஆய்வு மீட்டெடுப்பு மற்றும் வரலாற்றுக் கட்டமைப்பு அர்ப்பணிப்புகளை நன்றியோடு நினைத்துப் பார்த்து அவருடைய நினைவைக் கொண்டாடி நம்மைத் தமிழிசை மீட்டெடுப்பு மற்றும் மறு கட்டமைப்பு சார்ந்த ஆய்வுகளை நோக்கிக் கூர்மைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.



இரண்டாம் இசை மாநாடு 1913

இதன் படி, ஐயா ஆபிரகாம் பண்டிதரின் தமிழிசை வரலாற்று மீட்டெடுப்புகளெனச் சில முக்கியத் தடயங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. பத்தொன்பதாம் (19) நூற்றாண்டின் இறுதியில் பெரும் பகுதி மங்கியிருந்தத் தமிழிசை மரபைத் தனக்கே உரித்தானத் தமிழ் இலக்கிய ஆய்வு அறிவுடன் கட்டமைக்க முயன்றது.

2. தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இந்திய இசை ஆராய்ச்சி மற்றும் இலக்கிய ஆராய்ச்சியின் வழியாகத் தமிழிசையே இன்று தமிழ்நாட்டிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் வெவ்வேறு வடிவங்களில் வழங்கி வரும் இசை என்ற தெளிவான உண்மையினைக் கண்டடைந்தது.
3. திண்டுக்கல் வித்துவான் சடையாண்டி பட்டரிடம் இசைபயின்ற பண்டிதர், பின் தஞ்சையில் ஒரு நாதஸ்வர வித்வானிடமும் இசையைக் கற்றுத் தேர்ந்தார். மேலும் பல இசைக் கருவிகளை இசைக்கவும் பயின்ற பண்டிதர், ஆர்மோனியம், வீணை, பிடில், முதலிய வாத்தியங்களில் புலமைப் பெற்றிருந்தார். இவ்வாறு எல்லா நிலைகளிலும் பெற்றப் புலமையின் வழி நின்று தமிழகத்தில் தெலுங்கு, சமஸ்கிருதம் மொழியை முக்கியமாகக் கொண்டு கர்நாடக சங்கீதம் என்ற பெயரில் பிரபலமாக இருக்கும் இசைமரபு உண்மையில் பழந்தமிழ் இசைமரபே என்பதை ஆணித்தனமாக உணர்ந்து, உணர்த்தவும் தலைப்பட்டது.
4. தான் உற்று உணர்ந்தத் தமிழிசையின் பன்னெடுங்காலத் தொன்மையை, அதன் வரலாற்றுப் நீட்சியை மெய்ப்பிக்கும் வகையில்,ஓய்வறியாது பழந்தமிழ் இசை நூல்கள் அனைத்தையும் கற்றுணர்ந்துடன் ஐரோப்பிய இசை வல்லுநரானப் பேராசிரியர் தஞ்சை ஏ.ஜி. பிச்சைமுத்து அவர்களிடம் மேற்கத்திய இசையையும் கற்றுத் தேர்ந்தார்.தமிழிசையே உலக இசைகளுக்கெல்லாம் மூத்தது என்ற முடிவை வலுப்படுத்த இப்படியான இசைப் பங்கெடுப்புகளோடு கூடிய ஆய்வு உற்றுநோக்குதலை முன்னெடுத்தது.
5. தமிழ் இசை மரபை மீட்டெடுக்க வேண்டும் என்ற தீராத வேட்கையினால் 1910 முதல் 1914 வரையிலானக் காலகட்டத்தில் ஆறு இசை மாநாடுகளைத் தஞ்சையில் நடத்தியது.
6. 1912-ஆம் ஆண்டு மே மாதம் 27-ஆம் நாள் தஞ்சையில் சங்கீத வித்யா மகாஜன சங்கத்தை தமிழிசை மரபு மீட்டெடுப்பை மனதில் கொண்டு நிறுவியது.
7. இந்த மகாஜன சங்கத்தின் வழி உலகின் பல்வேறு பாடகர்களையும்,இசை நிபுணர்களையும், மேற்கத்திய இசை வல்லுநர்களையும் அழைத்து வந்து விரிவாகத் தாம் கொண்ட உள்ளக் கருத்தை முன்னிறுத்தி உரையாடியது.
8. தமிழிசை மரபை மீட்டெடுப்பதற்காகவே தனிப்பெரும் இசை மாநாடுகளை முழுக்க முழுக்கத் தன் சொந்தச் செலவில் நடத்தியது.
9. பரதரின் *நாட்டிய சாஸ்திரம்* சாரங்க தேவரின் *சங்கீத இரத்தினாகாரம்* முதலியப் பிற மொழி இசை நூல்களையும், சிலப்பதிகாரம், சங்க இலக்கியங்கள், கல்லாடம், தண்டியலங்காரம் உள்ளிட்டப் பண்டையத் தமிழ் இலக்கிய-இலக்கண நூல்களையும் விரிவாகக் காற்றும்,நுணுக்கமாக ஆராய்ந்தும் ஆதித் தமிழிசை வரலாற்றுக் கட்டமைப்பை மிகச் சரியாணத் திசையில் வலுப்படுத்தியது.
10. சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் இசைகுறித்த செய்திகளே இன்றையக் கருநாடக (தெலுங்கு/சமஸ்கிருதம்) இசைக்கு மூல இலக்கணங்களாக இருக்கிறது என்று ஆய்வுப் பூர்வமாக எடுத்துரைத்தது.
11. இன்றையச் சாஸ்திரியச் சங்கீதப் பெருமரபு இசை வழக்கில் இருக்கிற ராகங்கள் தான் அன்றைய ஆதித் தமிழிசை மரபில் பண்களாக, ராகங்களாக இருந்தன என்று சுவரங்களின் மூலத்தை மையமிட்ட ஆய்வுகள் மூலம் வெட்ட வெளிச்சமாக்கியது.
12. பழந்தமிழ் இலக்கணங்களின் வழி நின்று, வெவ்வேறு இராகங்களை உருவாக்குகிற முறையைக் கொண்டு வந்தது.
13. ராகங்களையும் பண்களையும் அடிப்படையில் எப்படி முறையாகப் பாடுவது என்பது குறித்து நீண்டதொரு ஆய்வு செய்து,தான் அறிந்ததைக் காலங்கடந்தாலும் யாவரும் பயன்படுத்தும் படி நிகழ்த்துதல் முறையில் விளக்கியும் காட்டியது.

14. ஆதித் தமிழிசையே திசைகள் பல கடந்து வடக்கில் இந்துஸ்தானி இசை என்ற பெயரில் விளங்குகிறது என்று மறுக்கமுடியாமல் ஆய்வு ரீதியாக நிரூபித்தது.
15. 20/3/1916 - 24/3/1916 வரை நான்கு (4) நாட்கள் பரோடாவில் நடைபெற்ற அகில இந்திய இசை மாநாட்டிற்குச் சென்று தன் நீண்ட கால ஆதித் தமிழிசை வரலாற்று ஆய்வின் தீர்க்கமான முடிவுகளைப் பற்றித் தெளிவக உரையாற்றியது.
16. தமிசை சார்ந்தத் தனது இசைப் பண்கள், ராகங்கள், பாடல்கள் போன்ற கண்டுபிடிப்புகளை, தனது இரு மகள்கள் வீணையில் இசைத்துக் காட்ட அதன் இணையற்றத் தனித்துவத்தை மற்ற இசையறிஞர்களிடம் நிரூபித்தது.
17. தனக்கிருந்த அகில இந்திய இசையுலகத் தொடர்புகளை,தனது தமிழிசை ஆய்வு மீட்டெடுப்பிற்கானத் தொடர்புக் களமாகப் பயன்படுத்தி முதன்முதலாக அகில இந்திய இசை மாநாட்டைத் தஞ்சாவூரில் நடத்தியது.
18. தொடர்ந்து ஆறு தனிப் பெரும் இசை மாநாடுகளைத் தனது சொந்தச் செலவில் நடத்தியது.
19. வாழ்நாள் முழுமையிலுமாக ஆதித் தமிழிசை வரலாற்று கட்டமைப்பு மற்றும் மீட்டெடுப்பு என்ற நோக்கில் பண்டிதர் செய்த நெடிய ஆய்வுகளின் விளைவாக,உலக மொழிகளிலேயே இணையற்ற இசை ஆராய்ச்சி முதல் நூலாகக் *கருணாமிர்த சாகரத் திரட்டு* என்பது தமிழ் இசை வரலாறு, தமிழ் மருத்துவம், இசைவானர்கள் என்பன போன்ற பல்வேறு தரவுகள் அடங்கிய ஒரு கலைக்களஞ்சியமாக இன்று நமக்கு கிடைத்திருக்கிறது என்பது.
20. இசையறிவு உடையவர்களிடையே கூடப் பெரிதும் அறியப்படாமல் இருந்த எண்ணற்றத் தமிழிசை இராகங்களை ஆராய்ச்சி செய்து,ஏறக்குறைய 95 பாடல்களாக அவற்றை உருவாக்கி வெளியிட்டது.
21. தன்னால் உருவாக்கப்பட்ட பாடல் ஒவ்வொன்றுக்கும் சுயமாக இசையமைத்து அவற்றின் சுவரங்களையும் கூடுதலாக வெளியிட்டது.
22. இசையின் வரலாறு, அறிவியல், இலக்கியம், இசைவாணர்கள் குறித்த தகவல்கள் என பலப் பிரிவுகளில் ஏராளமான வரலாற்றுச் செய்திகளை விரிவாகவும் நுபமாகவும் அலசி ஆராய்ந்து 1250 க்கு மேலானப் பக்கங்கள் கொண்ட நூலைத் தந்தது.என ஏராளமான ஆய்வுச் செயற்பாடுகள் வரிசையிட்டுக் கொண்டே இருக்கின்றன.

ராவ்சாகேப் ஆபிரகாம் பண்டிதர் ஐயா வகுத்துத் தந்த ஆதித் தமிழிசை மீட்டெடுப்பு மற்றும் மறு கட்டமைப்புச் சார்ந்த ஆய்வுத் தடத்தில் பயணித்து ஒவ்வொரு இசை ஆய்வாளர்களும் பண்டிதரின் வழியில் தொடர்ந்து மீட்டெடுப்பு மற்றும் மறு கட்டமைப்பு நோக்கில் நம் ஆதித் தமிழிசையை இன்னும் தீவிரமாக வலுப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த அறிமுக ஆய்வைத் தற்காலிகமாக நிறைவு செய்கிறேன்.

## துணை நூற்ப்பட்டியல்

1. மு.அருணாசலம்,
தமிழ் இசை இலக்கிய வரலாறு,2009.

2.ஏழிசைவானர் நா.மம்மது,ஆபிரகாம் பண்டிதர்-சாகித்ய அகாதெமி வெளியீடு/தமிழிசை வேர்கள்-எதிர் வெளியீடு மற்றும் ஆபிரகாம் பண்டிதர் குறித்த பிறக் கட்டுரைகள்.

3.வி.டி. செல்லத்துரை,
தென்னக இசையியல்,வைகறைப் பதிப்பகம்,திண்டுக்கல்,2009.

4) மாத்தளை சோமு,
வியக்க வைக்கும் தமிழர் அறிவியல்,தமிழ்க்குரல்
பதிப்பகம்,திருச்சி,2005.

5) அ.சண்முகதாஸ்,
தமிழின் பா வடிவங்கள்,உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம்,சென்னை,1998

6) கூகுள் மற்றும் விக்கித் தரவுத் தளத்தில் பெற்ற ஆபிரகாம் பண்டிதர்
குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் காட்சிப் படங்கள்.

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Iyappan M., (2021) Research Retrieval of Pandit Abraham’s Ancient Tamil Poerty, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:505-514. Cauvery College For Women, Trichy.

**மா. மணி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திண்டிவனம்

**முனைவர். திருமதி. பரமேஸ்வரி,**
தமிழ்த்துறை தலைவர்,
புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திண்டிவனம்

## தமிழ் இலக்கியங்களில் சிறுகதையின் மொழி ஆளுமைப் பண்புகள்

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கியங்களில் சிறுகதையின் மொழிநடை ஆளுமை மிகவும் சிறப்பான முறையில் அமைகிறது. மொழிநடை என்பது கவிஞர்கள் படைப்பின் தரத்தினால் வெற்றி அடைகின்றனர். ஆளுமை என்பது கதை சொல்லும் முறைக்கும், கருத்துப் புலப்பாட்டிற்கும் பயன்படுத்தப்படும் சொற்றொடர் அமைப்பாகும். வள்ளுவரும், கம்பரும், பாரதியும் கவிதைத் தமிழ்மொழி வரலாற்றில் மொழி ஆளுமையைத் திறம்படச்செய்துவெற்றி கண்டவர்களாவார்கள்.

அறுதியிட்டுக் கூற இயலாதது கதை இலக்கியத்தின் தோற்றமாகும். கதை சொல்லும் மரபு மனித குலம் தோன்றிய நாள் முதலே வளர்ந்து வந்ததை அறியலாம். ஆதிகாலத்தில் இயற்கையையும், மிருகங்களையும் கண்டு அஞ்சிய நிகழ்வை குழுவினரிடம் எடுத்துக்கூறும் முறையே கதைசொல்லும் மரபின்தொடக்கமாகக் கூறலாம். தொடர்ந்து நாகரீக காலத்தில் அனுபவங்களை கேட்போருக்கு ஏற்றாற்போன்று இன்பதுன்ப உணர்வுகளை உள்ளவாறே உணர்த்த கற்பனையையும், நகைச்சுவையையும் சேர்த்துக் கூறுவர்.

பொருள் மரபில்லா பொய்மொழி யானும்

பொருளோடு புணர்ந்த நகைமொழி யானும்

(தொல். செய். 173.)

என்று கூறியுள்ளார்.

வாய்மொழியாக வழங்கப்பட்டு வந்த கதைகள், நாளடைவில் செய்யுள் இலக்கியத்திற்கான மையப் பொருண்மைகளாக அமைந்தன. மிக நீண்ட கதைவடிவங்கள் காப்பியங்களாகவும், மிகச்சிறிய கதை நிகழ்வுகள் தனிப்பாடல்களாகவும் உருப்பெற்றன. இதனை "பழங்காலத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பெற்றிருந்த இடத்தை இக்காலத்தில் சிறுகதை என்ற இலக்கிய வகை பெரும்பாண்மை பங்குபெற்றுள்ளன.

### தமிழ் இலக்கியங்களில் கதை மரபுகள்:

ஐரோப்பிய வருகைக்குப் பின்பு குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு யதார்த்தம் எனப்படும் நடப்பியல் கூறுகள் இலக்கியங்களில் முதன் முதலில் கையாளப்பட்டன என்று கருதுவர். ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களை அணுகும்போது அதிலுள்ள புனைவுகளையும் கற்பனைகளையும் விலக்கி அதனை ஆராய்வோமெனில், அவ்விலக்கியங்கள் நடப்பியலை உள்ளது உள்ளவாறே பதிவுசெய்துள்ளமையை அறிந்து கொள்ள முடியும். சான்றாக, சங்க இலக்கியங்களில் வரும் அகப்பாடல்களில் தலைவன், தலைவி இடையே நிகழும் நிகழ்வுகளைச் சொல்லலாம். அந்நிகழ்வுகளுக்குச் சொல்லப்படும் உவமைகள் மிகுந்த கற்பனை வளத்தோடு சொல்லப்பட்டிருக்குமேயொழிய அவர்கள்

இருவருக்குமிடையிலான நிகழ்வுகள் நடப்பியல் தன்மையோடு பதிவு செய்யப்பட்டிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தலைவன் தலைவி அக நிகழ்வுகளைப் புலவர்கள் தம்முடைய பாட்டில் சொல்லியதன் அவசியம் அக்காலத்திலே நடப்பியலோடு கூடிய அறிய கதையை அல்லது ஒரு சிறு நிகழ்வைச் செய்யுளாகச்சொல்ல முயன்றனர் என்றெண்ணுவதற்கு இடமளிக்கிறது. இதே நிலையினைச் சங்க இலக்கிய புறப்பாடல்களிலும் காணமுடியும். காதலைச்சொல்ல முற்பட்ட நிகழ்வுகளைப் போலவே, வீரம், கொடை, அறம் ஆகியவற்றைச்சொல்லுமிடங்களையும் சிறுகதைக் கூறுகளாகவே கொள்ள இடமுண்டு.

**எளிமையான நடை:**

படைப்புகள் எளிய நடையில் அமையவேண்டும். படைப்பாளன் தான்சொல்லக் கருதியவற்றில் ஒருதெளிவும் உண்மையும் உறுதியும் வரையறையும்பெற்று இருந்தால் அப்படைப்பு எளிமையாக அமையும் என்று மு.வரதராசன் கூறுகிறார். மானுடம்வெல்லும் கதையில் "சீச்சி பைத்தியக்காரா! உனக்குப் பிடிச்சிருந்தாப் போதுமா? பரிமளத்தைக் கேள்ரா நெதானமாகக் கேளு! அவசரமே இல்லை. மாப்பிள்ளைத்தான் நிச்சயம் பண்ணி ஒரு வருசங்கழிச்சு கல்யாணத்தை வச்சிரலாம்ங்கிறாரே! கேசவன் புருவங்கள் கேள்விக்குறியாக வளைந்தன. இதனைப்போன்று ஆசிரியர்கள் தங்கள் கதைகளில் எளிமையான பேச்சு வழக்கினைக் கையாளுகிறார்.

நடை என்பது படைப்பாளரின் ஆளுமையைப் புலப்படுத்துகின்ற ஒன்று மட்டுமன்று. அவருடைய அறிவுக் கூர்மையையும், ஆன்மீக உணர்வுகளையும் வெளிப்படுத்தும் முறையினைக் கொண்டுதான் அமையும் என்கிறார்.

**சிறுகதை மரபு:**

பழந்தமிழ் இலக்கியங்களில் நீண்ட கதைகளும் சிறிய கதை வடிவங்களும்செய்யுள்களாகத்தொடர்ந்து வந்த நிலையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பியரின் வருகையால் ஏற்பட்ட மாற்றம் மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. உரைநடை, கவிதை, கதை ஆகியவற்றின்பொருண்மை சரர்ந்தும், வடிவம் சார்ந்தும் குறிப்பாக நாவலைக் காட்டிலும் சிறுகதை இலக்கியத்தின் மீது வாசிப்பாளனின் ஆர்வம் மேலோங்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**பழமொழி:**

பழமொழி மக்கள் அனுபவத்தின் திரண்டசாறு மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி. "பழமொழியை நீண்ட அனுபவத்தில் பிறந்த குறுகிய வாக்கியங்கள்" என்று சொவன்டசு கூறுவதாக த. தட்சிணாமூர்த்தி கூறுகிறார். முடிவரையறை இல்லாதசெய்யுள் வகைகளுள் ஒன்றாகப் பழமொழியைத் தொல்காப்பியர் அடக்குகிறார்.

> நுண்மையும் சுருக்கமும் ஒளியுட மையும்
>
> மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
>
> குறித்த பொருளை முடித்ததற்கு வருஉம்
>
> ஏது நுதலிய முதுமொழி – (தொல் 180)

என இலக்கண வரையறையும் கூறுகிறர் புலியர்க் கேசிகன்,

"அடி உதவறாப்பல அண்ணன் தம்பி கூட உதவ மாட்டாங்க" (ப.236)

"கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல" (ப.238)

"எலி வளைன்னாலும் தனி வளையே மேல்" (ப.238)

"பேய்க்கு வாக்கப்பட்டா புளியமரம் ஏறித்தானே ஆவனும்" (ப.247)

"கள்ளிக்குப் புள்ள சாக்கு கத்தாழைக்கு வேறு சாக்கு" (ப.254)

போன்ற திலகவதியாரின் பழமொழிகள் பாமர மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் முறையில் கருத்துக்களை படிப்போரிடம் கொண்டு செலுத்துகிறார்கள்.

**முன்னோடிகள்:**

சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளாகப் பலரைக் குறிப்பிடலாம். அவ்வகையில் வ.வே.சு. ஐயர், மாதவய்யர், ராஜம் ஐயர், பாரதி, வேதநாயகம் பிள்ளை, வரகநேரி வேங்கடசுப்பிரமணி ஐயர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். முன்னோர்களின் அரிய வழிகாட்டுதலின் பேரில் இருபதாம் நூற்றாண்டின் எண்ணற்ற சிறுகதை ஆசிரியர்கள் உருவெடுத்துள்ளனர். மேலும், புதுமைப்பித்தன், பார்த்தசாரதி, கு. அழகிரிசாமி, கு.ப.ரா, சு. சமுத்திரம், ஜெகநாதன், ஜெயகாந்தன், நாரணதுரைக்கண்ணன், விந்தன், அகிலன், அசோகமித்திரன் ஆகியோர் முன்னோடிகளின் வழியைப் பின்பற்றி, அவர்களின் அடிதளத்தைக்கொண்டு சிறுகதைக்கான கதைக் களங்களை அமைத்தனர்.

**உவமைகள்:**

படைப்பாளன் தன் உள்ளத்துள் எழுந்த உணர்வின் ஊற்றுகளையும் எழுச்சிகள் நிறைந்த இன்ப துன்ப உணர்வுகளையும் சிதைவின்றி மக்களுக்குத் தெரிவிக்க உவமையைப் பயன்படுத்துகின்றனர். அணிகளின் தாய் எனப்போற்றப்படும் உவமைக்குத்தொல்காப்பியர் ஓர் இயல் அமைத்திருப்பதிலிருந்து உவமையின் சிறப்புப் புலனாகிறது. உவமையைத் தொல்காப்பியர் தொழில், பயன், நிறம், வடிவம் ஆகிய நான்காகப் பாகுபடுத்துகிறார்.

"உலகுக்கெல்லாம் ஒளிதரும் சூரியனை
அடுப்புக்கு நெருப்பாக்கியது போல" (ப.109)

"சந்திரன் வீட்டுக்கு விளக்காக்கியது போல" (ப. 109)

எனச் சூரிய சந்திரர்களை உவமையாகக் காட்டும் திலகவதியின் திறன் போற்றத்தக்கது. சக்கர வியூகம் கதையில் இளம் விஞ்ஞானி சரளாவின் பரந்து பட்ட அறிவை உலகிற்கு எடுத்தியம்ப முடியாத நிலையை விளக்கிக்காட்ட இவ்வுவமைகளைத் திலகவதி பயன்படுத்துகிறார்.

**பொதுவுடைமைச் சிந்தனைகள்:**

ஆரம்பகாலத்தில் சிறுகதைகள் காதல், வீரம்,கொடை, ஆன்மீகம் ஆகிய பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்தன. ஆனால் இக்காலச் சிறுகதைகள்,தொழிலாளா நிலை, வறுமை, அரசியல், தேசப்பற்று, காதல், சாதி, பெண்ணியம், சமத்துவம், தலித்தியம் போன்ற பொதுவுடைமைச் சிந்தனைகளைப் பிரதிபலிப்பதாக அடைகின்றன.

**இலக்கியப் பாடல்கள்:**

படைப்பாளர்கள் தம்முடைய நடையிலே இன்பமும் சுவையும் தரக்கூடிய முன்னோர் இலக்கியத்தைப் புகுத்தி வாசகரைக் கவருகின்ற ஒரு வகையான உத்திமுறையும் பயன்படுத்தி வருகின்றனர்.

"ஒரு இலையில் ஒரு காயில்
தீமை காணின்
உயர் காய்கள் அத்தனையும்
வெறுப்பதுண்டோ?" (பாரதிதாசன்)

என்பது புரட்சிக் கவிஞரின் சொல்லோவியம். இப்பாடல்வழித் தாய் தந்தையைப் புரிந்து கொள்ளாத மனநிலையை உடையபெண்ணைக் குறிக்கிறார்.

**பெண்ணியச் சிந்தனைகள்:**

18ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் பல பெண்கள் ஒன்றாகச் சேர்ந்து பெண்ணுரிமைகளைக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் விளைவாகப் பெண்களுக்கென்று பல உரிமைகளைப் பெற முடிந்தது.பெண்களுக்கு எதிராக ஏற்படும்கொடுமைகள், ஆணாதிக்கம், பாலியல் கொடுமைகள் என்ப பல இன்னல்களுக்கு எதிராகபெண் எழுத்தாளாகள் உருவாகினார்கள், படைப்புகளும் வெளிவரத் தொடங்கின.

**தொகுப்புரை:**

19ம் நூற்றாண்டுக்குப் பிறகு மேலை நாட்டரின் உரைநடை வடிவத் தாக்கத்தினால் சிறுகதை என்று புதிய மரபு பரவலாக்கப்பட்டது. காதல், வீரம், ஆன்மீகம், ஆகிய பொருண்மையை பழைய இலக்கியம் எடுத்துரைத்தன. தற்காலச் சிறுகதைகள், அறிவியல், பொதுவுடைமை சமத்துவம் ஆகியவை உணர்த்தும் வகையில் வெளிவருகின்றன. படைப்பாளி இனிமையுற எளிய நடை, பழமொழியை ஆளுதல், உவமை கூறுதல், கதைக்கேற்ற முன்னோர் மொழிகளைப் பயன்படுத்துதல் போன்றவை இலக்கியப் படைப்பாளியின் பரந்துபட்ட அறிவைப் புலப்படுத்தும். இவ்வகைகளில் படைப்பாளர்களின் படைப்பு தனித்தன்மை பெற்று விளங்குகிறது.

**துணை நூல்கள்**

1. தொல்காப்பியம் – புலியூர் கேசிகன்
2. மானுடம் வெல்லும் – மு. வரதராசன்
3. பழமொழிகள் - திலகவதியார்
4. சக்கர வியூகம் – திலகவதியார்
5. சொல்லோவியம் – புரட்சிக் கவிஞர்

**Cite this book Chapter:** S. Ramalakshmi and Mani M. & Parameshwari, (2021) The commandable qualities of Language of short stories in Tamil Literature, Chapter. In Tamil Identities in Tamil Literature, Edited by Sasireha P., Yasodha A., Jesintharani A., Prema M., Elizabethrani G., Vol. 1:515-518. Cauvery College For Women, Trichy.